கங்கை கொண்ட சோழன்

(சரித்திர நாவல்)

பாகம்-4



பாலகுமாரன்

கங்கை கொண்ட சோழன்

(சரித்திர நாவல்)

(நான்காம் பாகம்)

பாலகுமாரன்

மின்னூலாக்கம் : செல்லா

விசா பப்ளிகேஷன்ஸ்

சுகான்ஸ் அபார்ட்மெண்ட்ஸ்,

பழைய எண்: 28, புது எண்: 13, சிவப்பிரகாசம் சாலை,

தியாகராய நகர், சென்னை - 600 017.

தொலைபேசி: 24342899, 24327696

e-mail: enquiry@thirumagalnilayam.com

மின்னூலாக்கம்
செல்லா
www.minnoolakam.blogspot.com

முதற் பதிப்பு : ஏப்ரல், 2014

உரிமை : ஆசிரியருக்கு

❖ Title GANGAI KONDA CHOZHAN - PART IV

❖ By **Balakumaran**

❖ First Edition April, 2014

❖ Paper Book Print 11.6

❖ Total No. of Pages : 656

விலை : ரூ. 420/-

திருமகள் நிலையம்
சுகான்ஸ் அபார்ட்மெண்ட்ஸ்,
எண்: 13, சிவப்பிரகாசம் சாலை,
தியாகராய நகர், சென்னை - 600 017.
தொலைபேசி: 24342899, 24327696
e-mail: enquiry@thirumagalnilayam.com

Typesetting **RVK DESIGNERS,**
Chennai - 2. Mobile: **9710329866**
rvkdesigners@yahoo.co.in

Printed by Manju Offset, Chennai - 5.

சமர்ப்பணம்

சோழர் பாகம் ஒன்று
இரண்டு என்று விரிவாய்
எழுதி, தமிழருக்கு சரித்திர
விருப்பம் ஏற்றுவித்த
ஸ்ரீமான் கே.ஏ. நீலகண்ட சாஸ்திரியாருக்கு
இந்த நான்காம் பாகம்
சமர்ப்பணம்

என் உரை

பரமானந்தமாக இருக்கிறது.

எழுதி முடித்துவிட்டோம் என்று உணர்ந்தவுடன் பரவசமாகவே இருந்தது. கடவுளே, கடவுளே என்று அரற்றத்தான் தோன்றியது. சற்குருநாதா என்று மனதிற்குள்ளே கைகூப்பி தொழுதல் ஏற்பட்டது. போர்த்திக் கொண்டு சுருண்டு படுத்து விடலாமா. சிறிது நேரம் அப்படியே கிடக்கலாமா என்ற அயற்சி வந்தது. நிஜமாகவே எழுதி முடித்துவிட்டோமா. எப்படி முடிந்தது என்ற வியப்பு ஏற்பட்டது.

நான் கூடுதலாக அரற்றவில்லை. அலட்டவில்லை. இந்த நாவல் எழுத ஆரம்பித்ததும் எனக்கு ஏற்பட்ட இடைஞ்சல்கள் கொஞ்சநஞ்சமல்ல. முதன் முறை உடல் நலம் க்ஷீணித்தது. மரணத்தின் விளிம்பு வரை போய் வர நேரிட்டது. பயணம் செய்யவே முடியாது. வீட்டில் ஒரு அறையில் கட்டிலோடு கிடக்க வேண்டிய வாழ்க்கை தான் உனக்கு என்று தெளிவாகச் சொன்னார்கள். கையெழுத்து வாங்கிக் கொள்ளுங்கள். எப்பொழுது வேண்டுமானாலும் மரணம் நேரும் என்று தெரிவித்தார்கள். நான் மருத்துவர்களை குறை சொல்லவே இல்லை. அவர்கள் பெரிதும் உதவி செய்தார்கள். ஆனால் அவர்கள் பயமுறுத்தும் படியான ஒரு நிலையில் இருந்தேன் என்பதும் உண்மை. எப்படி மீண்டேன் என்றும் தெளிவாகச் சொல்ல முடியவில்லை.

ஆனால் நான் மனதிற்குள் என் சற்குருவோடு பேசினேன். மூச்சுவிட கஷ்டமாக இருக்கிறது. நுரையீரல் இரண்டும் தொற்று நோயால் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. நுரையீரலில் கால் பகுதிதான் வேலை செய்கிறது. உணர்ச்சி மிகுந்தால், ஒன்றுக்கு போக எழுந்து நின்றால் மூச்சு வேகமாக இரைக்கிறது. இழுப்பு வருகிறது. விலா எலும்புகள் துருத்திக் கொண்டு இருமல் நேரிடுகிறது. வேகமாக பிராணவாயுவை உள்ளே அழுத்தி அனுப்புகிறார்கள். அதில் மூச்சுத் திணறல் குறைகிறது. பிறகு அந்த வேகத்தை குறைக்கிறார்கள். பிராணவாயுவோடே

இரு என்று சொல்கிறார்கள். நான் அப்பொழுது குருவிடம் பேசினேன். 'போதுமா. வந்துவிடட்டுமா. இன்னும் எழுத வேண்டியது, நீங்கள் கட்டளை இட்டப்படி செய்ய வேண்டியது இருக்கிறதே. எதற்கு இப்படி மல்லாக்க போட்டு இருக்கிறீர்கள். நீங்கள் சொல்லுங்கள் கிளம்பி வந்துவிடுகிறேன்.' நான் மரணத்தை முழு மனதோடு வரவேற்க தயாராக இருந்து அவரிடம் பேசினேன்.

நன்கு வாழ்கின்ற மகள். அவளுக்கு ஒரு மகன். மிக கெட்டிக்காரனாய் வளர்ந்து நிற்கின்ற என் மகன். வாழ்க்கையில் சாதிக்கின்ற முனைப்பில் அவன் போட்டிருந்த பெரும் திட்டங்கள் எல்லாமும் எனக்கு பிடித்தவையாக இருந்தன. சாந்தா கெட்டிக்காரி. ஆனால் கமலாவைப் பற்றிய கவலை இருந்தது. கமலா உன்னை விட்டுப் போகிறேனே அதுதான் கவலை என்ற வேதனை வாட்டியது. இவையெல்லாம் நெல் முனையளவு கூட பொய் சேர்க்காத நிஜம். ICU விலிருந்து வார்டுக்கு கொண்டு வந்தார்கள். மறுபடியும் உடல்நிலை மோசமாக ICU விற்கு தடதடவென்று எடுத்துப் போனார்கள். No hope என்றார்கள். வெளியே என் சத்சங்கத்தினர் அலறி அழுதார்கள். எப்பொழுது என்ன மாற்றம் நடந்தது என்பதை என்னால் தெளிவாகச் சொல்ல முடியவில்லை. ஆனால் ஒரே இரவில் ஒரு புரளல் ஏற்பட்டது போல, சட்டென்று தொற்று நோய் குறைய ஆரம்பித்துவிட்டது.

மருந்துகளுக்கு அந்த நோய்க் கிருமிகள் பணிந்தன. குறைந்தன. விலகின. இதற்கு ஏழு நாட்களுக்குப் பிறகு நான் வீட்டிற்கு வந்துவிட்டேன். அப்பொழுதும் தலைமாட்டில் ஆக்ஸிஜன் சிலிண்டர் இருந்தது. அப்பொழுதும் அவ்வப்போது மூச்சுத் திணறல் ஏற்பட்டது. உண்பதற்கு, குளிப்பதற்கு மெல்ல நடப்பதற்கெல்லாம் என் சத்சங்கத்தார் உதவி செய்தார்கள். மிக கவனமாக பக்குவப்படுத்தப்பட்ட உணவையே என் வீடு எனக்கு கொடுத்தது. நரகமான நாட்கள் அவை.

அதற்கு முன்பு ஆறு முறை கங்கை கொண்ட சோழன் எழுதி கிழித்து போட்டு விட்டேன். ஏழாவது கையில் இருந்தது. ஒரு மாதம் கழித்து ஏதேனும் செய்யலாம் என்று மெல்ல ஏழாவதாக எழுதிய நூற்று சொச்ச பக்கத்தைப் படித்து பார்த்தேன்.

என் எழுத்து எனக்கே அபத்தமாய் இருந்தது. கோபமாய் தூக்கி தரையில் போட்டேன். பாக்கியலஷ்மி பதறினார். இப்படியே செய்து கொண்டிருந்தால் என்ன அர்த்தம். எப்படி எழுதுவது என்றார். நான் யோசிக்கிறேன், இது இல்லை என்று மறுதலித்தேன். பாக்கியலஷ்மி அதை நான் வைத்துக் கொள்கிறேன் என்றார். இல்லை, அதை கிழித்துப் போடு. அது வெளிவரக் கூடாது என்று கொஞ்சம் கோபமாகச் சொன்னேன். மனமே இல்லாமல் என் உதவியாளர் பாக்கியலஷ்மி அதை கிழித்துப் போட்டார்.

கங்கை கொண்ட சோழன் எழுதுவேனா, இல்லையா. எனக்குத் தெரியவில்லை. இதை யோசிக்க முடியுமா. இதற்காக படிக்க முடியுமா. இதற்காக பயணப்பட முடியுமா. எப்படி முடியும். சாந்தாவிற்கு என்மேல் கடுங்கோபம். கமலா கையெடுத்து கும்பிட்டாள். தயவு செய்து எனக்கு புருஷனாக மட்டும் இருங்கள். வேறு எதுவும் வேண்டாம் என்று கண்ணீர் விட்டு கெஞ்சினாள். எனக்கு புரிந்தது. ஆனால் வெறும் புருஷனாய் இருக்க என்னால் இயலுமோ என்ற கேள்வியும் எழுந்தது.

மறுபடி மறுபடி குருநாதரிடம் கெஞ்சினேன். மருத்துவ மனையிலிருந்து கொண்டு வந்தாயே. இன்னும் முழுவதுமாய் வெளியே மீட்டு எடுத்துவிடேன். படிக்க வேண்டுமே. பயணப் பட வேண்டுமே என்று அவரோடு தினம் தினம் பேசினேன்.

என் குருநாதர் சத்ய சொரூபம். உள்ளே இன்னும் தீவிரமாக கங்கை கொண்ட சோழனிற்காக நான் பேசியபோது சட்டென்று உடம்பில் மாற்றம் ஏற்பட்டது. **தயவுசெய்து இதைப் புரிந்து கொள்ளுங்கள்.** முயற்சி செய்யுங்கள். நான் அவரோடு பேசிய க்ஷணத்தில் நோயாளி. பேசி முடித்த பிறகு ஒரு அமைதி. அதற்கு அடுத்த நொடி நான் சரியாகிவிட்டேன். மூன்று நொடிகளில்தான் இந்த மாற்றம் நடந்தது. இதை நீங்கள் நம்பத்தான் வேண்டும். இது என் தெளிவான, பரிபூரணமான அனுபவம்.

அட, மூச்சு சரியாக வருகிறதே என்று சுவாசத்திற்கான பயிற்சிகள் செய்யும்பொழுது முன்போலவே திணறாமல் மூச்சு நெஞ்சாழம் வரையில் இடிப்பது தெரிந்தது. படி ஏறலாமா. ஏறி பார்த்தேன். நடக்கலாமா. நடந்து பார்த்தேன். பிறகு மூன்று நாள்

கழித்து கங்கை கொண்ட சோழனுக்காக நான் நீலகண்ட சாஸ்திரியார் படிக்கத் துவங்கினேன்.

இதை என் இடத்திலிருந்து தயவுசெய்து நீங்கள் பார்க்க வேண்டும். அறுபத்தாறு வயது. நீரிழிவு நோயாளி. இரண்டு முறை பைபாஸ் நடந்தது. திண்மை இல்லாத உடற்கூறு. ஒவ் வொரு படியாகத்தான் இறங்க வேண்டும். நிதானமாகத்தான் நடக்க வேண்டும். கங்கை கொண்ட சோழன் கதையோ பிரம் மாண்டமான வாழ்க்கை. ஏகப்பட்ட புத்தகங்கள் படிக்க வேண்டும்.

என்னுடைய நண்பர் குடந்தை சீதாராமன் உதவி செய் வதாக வாக்களித்தார். நிறைய தகவல்கள் அனுப்பினார். புத்த கங்களெல்லாம் என்னவென்று பட்டியலிட்டார். நான் பல புத்த கங்கள் நண்பர்களை வாங்கி வரச் சொன்னேன். என்னுடைய கட்டிலில் அமர்ந்தவாறே கட்டில் மீது ஒரு சாய்வு மேஜை போட்டு படிக்கத் துவங்கினேன். நோய் வந்தது நல்லதாயிற்று. வெளியே எங்கும் போவது இல்லை. தொலைக்காட்சி பெட்டி பிரியமில்லை. எனவே நிறைய படித்தேன். குறிப்புகள் எடுத்துக் கொண்டேன். என்னுடைய அறையை சுற்றி மர பீரோக்கள் இருக்கும். அந்த மர பீரோக்களில் எல்லாம் வெள்ளை பேப்பர் ஒட்டினேன். நான் எடுத்த குறிப்புகள் எல்லாம் அதில் எழுதி னேன்.

மயிலாப்பூர் பங்குனி உற்சவத்தில் அதிகார நந்தியை பார்த்து விடுவது என்னுடைய விருப்பமான வழக்கம். அந்த கூட்டத்தில் போனால் மறுபடியும் தொற்று நோய் வந்துவிடும். கூடாது என்று வீடு மறித்தது. ஆனாலும் செல்வி ரம்யா இடுப்பு உயர சிலிண்டரை நெஞ்சோடு அணைத்துக் கொண்டு பின் னால் வர, அதிலிருந்து ட்யூப் வந்து என் முகத்திற்குள் முகமூடி யோடு சேர, அந்த பிராண வாயுவை சுவாசித்துக் கொண்டே நான் அதிகார நந்தியை தரிசனம் செய்தேன். மயிலாப்பூர் மக்கள் கூட்டம் சுற்றிச் சுற்றி வந்து கண்ணில் நீர்விட்டது. என்ன ஸ்வாமி இப்படி ஆயிற்று. எதற்கு ஸ்வாமி வெளியே வருகிறீர் என்றெல் லாம் பிரியமுள்ளவர்கள் பரிதாபமாக பேசினார்கள். அதிகார நந்தி இன்னொரு தெம்பு கொடுத்தது. வழக்கம் போல இந்த முறையும் சத்சங்கம் அன்னதானம் செய்ய வேண்டும் என்று நான் கட்டளை இட, நிச்சயம் செய்கிறோம். ஆனால் நீங்கள்

வரக்கூடாது என்று சொல்லிவிட்டார்கள். அவர்களே முன் நின்று அன்னதானம் செய்தார்கள். நான் இல்லாது அன்னதானம் நிறைவேறியது. அதற்குப் பின்பு மேலும் தெம்பு கூடியது.

நான் எழுதியவற்றை திரும்பத் திரும்ப மனதில் படித்து பார்த்து மனதில் தேக்கிக் கொண்டேன். புத்தகமாக இருப்பது மனதில் பதிவதை விட போக வர, பீரோ முன் நின்று நான் எழுதியவற்றை நானே அடிக்கடி படித்து பார்த்துக் கொள்கிற போது பல்வேறு விஷயங்கள் மனதில் ஆழ பதிந்துவிடும். இது ஒரு யுக்தி. ஆகவே எல்லா இடங்களிலும், சுவர்களிலும் வெள்ளைப் பேப்பர் ஒட்டி குறிப்புகள் எழுதப்பட்டன. மறுபடியும் எழுதத் துவங்கினேன்.

மாலை நேரம் இரண்டு மாடி ஏறி மேல் தளத்தில் நடக்க முடிந்தது. தளத்தின் குறுக்கும், நெடுக்கும் நடந்து சுவாசப் பயிற்சிகள் செய்து- கீழே இறங்கி வெந்நீரில் குளித்துவிட்டு, கொஞ்சம் சாப்பிட்டு விட்டு நன்றாக உறங்க முடிந்தது. உறங்கி பனிரெண்டு, பனிரெண்டரை மணிக்கு இரவு நேரம் எழுந்து மறுபடியும் படிப்பதும், குறிப்புகள் எடுப்பதும் தொடர்ந்தன. ஒரு நல்ல நாளில் எழுத ஆரம்பித்தேன். மடமடமட வென்று அத்தியாயங்கள் எழுதி முடிக்கப்பட்டன. திரும்பியும் படுத்துக்க போறீங்களோன்னு பயமா இருக்கு. ஐந்து மணி வரைக்கும் தூங்காம இருந்தா உடம்புக்கு என்னாகும். சாந்தாவும், கமலாவும் முணுமுணுப்பாய் எதிர்த்தார்கள். ஆனால் வெறுமே எப்படி கிடப்பது என்று கேட்டபோது பதில் சொல்லவில்லை. பார்த்து எழுதுங்கள் என்று உதவினார்கள். பாக்கியலட்சுமி டேப்ரெகார்டிலிருந்து கேஸட் எடுத்துக் கொண்டு போய் அவர் வீட்டில் உட்கார்ந்து எழுதிவிட்டு மறுநாள் காலை கொண்டு வந்து கொடுப்பார்.

அடுத்தது என்ன எழுதப் போகிறேன். எப்படி இந்த கதை வளரும். சௌம்யா, பாக்கியலஷ்மி, ஜெயலஷ்மி ஆகியோர் உட்கார நான் அந்த கதையை விவரித்துச் சொல்வேன். அவர்கள் ஹா என்று கேட்டுக் கொண்டிருப்பார்கள். மணிக்கணக்கில் நான் பேசுவதை செவிமடுத்து எதிரொலிப்பார்கள். அவர்கள் முகத்தினுடைய பாவங்களை புரிந்து கொண்டு, மனதில்

வாங்கிக் கொண்டு நான் டேப்ரெகார்டரில் கதை சொல்லு வேன். இவர்கள் எவரும் இலக்கியவாதிகள் அல்ல. சாதாரண குடும்பத்து பெண்கள். சாந்தாம்மா நீங்க செய்ற வத்தக் குழம்பு நல்லா இருக்கு. எப்படி பண்றீங்க என்று பேசுபவர்கள். என்னை வெளியே ஹாலில் உட்கார வைத்துவிட்டு என் அறையை துடைத்து, பெருக்கி, மெழுகி, புத்தகங்களை அடுக்கி வைத்து விட்டு போகிறவர்கள். சாந்தாம்மா நீங்க கடைக்கு போகா தீங்க. என்ன வேணும் சொல்லுங்க. நாங்க வரும்போது வாங்கிட்டு வருகிறோம். தினமும் வருகை செய்வதால் சாந்தா வின் வேலை பளுவை குறைக்க அவர்களே கடைக்குப் போய் வேண்டியவற்றை வாங்கி வந்து வீட்டில் சேர்ப்பார்கள்.

இதெல்லாம் போன ஜென்மத்துப் புண்ணியம். குருநாதரின் ஆசி. காசு பற்றிய கவலை இல்லாது உதவிக்கு பல ஆட்கள் நிறைந்து, என்னுடைய கதை போக்கையும் காது கொடுத்து கேட்டு பேருதவிகளை என் சத்சங்கம் செய்தது.

நோயுற்றவன் அல்லவா. குரு என்று கொண்டாடுகின்ற மனிதனல்லவா. எனவே வாரத்திற்கு ஒருமுறையாவது பார்க்க வேண்டும் என்று ஞாயிற்றுக்கிழமைகளில் வந்துவிடுவார்கள். விதம் விதமாக பேசுவார்கள். உள்ளே போராடிக் கொண்டிருந் தீர்கள். வெளியே நாங்கள் எவ்வளவு அவஸ்தைபட்டோம் தெரியுமா. உங்களுடைய நுரையீரலுக்குள் குழாய் செலுத்தி ஸிஸ்டாஸ்கோப் மூலம் சோதித்தார்கள். மயக்க மருந்தே கொடுக்கவில்லை. ஆனால் நீங்கள் நன்றாக ஒத்துழைத்தீர்கள். அந்த நேரம் கண்ணாடி வழியே நின்று கொண்டு எல்லோரும் உங்களை பார்த்து அழுது கொண்டு இருந்தோம். என்னால் மறக்கவே முடியாது என்று செல்வி ரம்யா (இப்பொழுது திருமதி ரம்யா) சத்தமாக பேசினார். இவர்கள் கொடுத்த உற்சாகத் தில், செய்த உதவிகளில் உடல் தேறியது. நடந்தே ஆக வேண் டும் என்று இழுத்துக் கொண்டு போய் விடுவார்கள். உட்கார்ந் தால் எழுந்திருங்கள் நடங்கள் என்று கட்டளை இடுவார்கள். கோபித்துக் கொண்டால் பொறுத்துக் கொள்வார்கள். அவர்கள் அன்புக்கு கட்டுப்பட்டு நான் நடந்து என் நுரையீரலை பலப் படுத்தினேன். சற்குரு யோகி ராம்சுரத்குமார் துணை வந்தார்.

படித்தது போதாது. பயணப்பட வேண்டும். கீழை சாளுக்கியம் நோக்கி, மேலை சாளுக்கியம் நோக்கி, சோழ தேசம் நோக்கி பிறகு ஒட்ட தேசம் வழியாக கங்கை கரை நோக்கி பல்வேறு விதமாக பயணப்பட்டேன். கங்கை கடலோடு சேரும் இடம் போனேன். அங்கிருந்து குலுத்தா நாடு என்று அழைக்கப் படுகின்ற அஸ்ஸாமிற்கு போனேன். பிரம்மபுத்ராவையும், காமாக்யாவையும் தரிசித்தேன். ஒவ்வொரு பாகமாக வெளி வந்தது. நடுவே எதனாலேயோ சோர்வு ஏற்பட்டது. வேறு என்னென்ன சேர்க்க வேண்டும், என்ன வேண்டாம் என்ற எண்ணம் வந்தது. சரியாக வருகிறதா என்ற கவலை வந்தது. இரண்டு பாகங்களை படித்துவிட்டு பல பேர் சரியாக இருக் கிறது என்று சொன்னதும் தொடர்ந்து மூன்றாம் பாகம் வந்தது.

ஸ்ரீவிஜயம், காம்போஜம் போக வேண்டும் என்று ஆசை. ஆனால் இயலவில்லை. எனக்குத் துணை இரண்டு பேராவது வேண்டும். என்னுடைய மருத்துவர், நண்பர், டாக்டர் மகேஷ் கங்கை கரை வரை துணை வந்தார். தன்னுடைய முக்கியமான பொறுப்புகளிலிருந்து விடுப்பு எடுத்துக் கொண்டு எனக்காக பயணப்பட்டார். அம்மாதிரி எல்லா நேரமும் செய்ய முடியுமோ. எனவே ஸ்ரீவிஜய பயணம் செய்யவில்லை.

ஆனாலும் எங்கெல்லாம் இராஜேந்திர சோழன் போயிருக் கிறானோ அந்த இடங்களிலெல்லாம் என் அறுபதுக்கு முன்னா லேயே போயிருக்கிறேன். சிங்கப்பூரும், மலேயாவும், பேங் காக்கும் வேறு விஷயங்களுக்காகப் போனேன். அங்கு போய் இறங்கும் போதெல்லாம் நான் சோழர்களைத் தான் நினைத்துக் கொண்டிருந்தேன். அலையற்ற சிங்கப்பூரின் கிழக்கு கடல். இந்த இடம் இவன் நிச்சயம் இறங்கியிருப்பான் என்று எனக்குத் தோன்றியது. எனக்குப் பிடித்த இடமாக இருந்தது. அதேபோல் யாழ்ப்பாணத்தில் பல இடங்கள் சுற்றியபோதும் அந்த உணர்வு தோன்றியது.

கோதாவரிக் கரையில் சினிமா படப்பிடிப்புக்காக ஆறு நாட்கள் தங்கியிருந்தேன். அது நடனக் காட்சி. ஆனால் எனக்கு வேலை பளு குறைவாக இருந்தது. நான் படகு மூலம் அந்த நதிக்கரையின் பல பகுதிகளை சுற்றிப் பார்த்தேன். பாய்மரம் விரித்த படகில் போவது எப்படி என்பது எனக்கு புரிந்தது.

மூங்கில் காடுகள், மூங்கிலால் செய்யப்பட்ட தெப்பங்கள், பெரிய கப்பல்களிலிருந்து அங்கே அதில் இறக்கப்படும் பொருள் கள் என்று பலதும் கவனித்தேன்.

கங்கை நதிக் கரையின் பல பகுதிகளை டைமன் ஹார்பர் உட்பட ஏறி இறங்கினேன். உடம்பு நன்றாக ஒத்துழைத்தது. மூன்றாம் பாகம் வெளிவந்தது. இவைகளையெல்லாம் மன துக்குள் தேக்கி சுருட்டி நான்காம் பாகத்தையும் எழுதி முடித்து விட்டேன்.

முதல் மூன்று பாகங்களும் புத்தக கண்காட்சியில் அடுக் கடுக்காக விற்பனை ஆவதை அருகே இருந்து பார்த்து ஆனந் தித்தேன். நன்றாக எழுதினால், சுவையாக விளக்கினால் தமிழ் கூறும் நல்லுலகம் நிச்சயம் ஆதரிக்கும் என்று தெரிந்தது. இந்த வேகம் எனக்கு நாலாம் பாகத்தை கொண்டு வரவும் உதவி செய்தது.

உடையார் எழுதியதின் மூலம் எனக்கு நிறைய சரித்திர ஆர்வலர்கள் சேர்ந்தார்கள். சசிதரனும், ரமேஷ் முத்தையனும் அதில் முக்கியமானவர்கள். அவர்கள் கங்கை கொண்ட சோழன் பற்றி தகவல் கொடுத்தார்கள். சிங்கப்பூர் நண்பர் சக்திஸ்ரீ என்பவரும், கடாரம் என்ற நாவலை எழுதிய மாயா என்கிற எழுத்தாள பெண்மணியும் தொலைபேசி மூலம் பல தகவல் களை சொன்னார்கள். என் சந்தேகங்களை தீர்த்தார்கள்.

சென்னை கடல்சார் தொல்லியல் துறை உயர் அதிகாரி ஸ்ரீ ராஜவேலு அவர்கள் வெகுநாள் நண்பர். அவரும் நேரே பேசி அந்த கடற் படையெடுப்பு பற்றி பல தகவல்கள் சொன் னார். நண்பர் சுந்தர் பரத்வாஜ் அவ்வப்போது தகவல்கள் தந்து ஆதரித்தார்கள்.

பலமுறை கங்கை கொண்ட சோழபுரம் போய் ஊரி னுடைய பல பகுதிகளை சுற்றி சுற்றி பார்த்து, கோவிலின் பல பகுதிகளுக்குப் போய் கவனித்து குறிப்புகள் எடுத்துக் கொண் டேன். செங்கமேடு அருகே இருந்த சாளுக்கிய, கலிங்க காளி சிலைகளை தரிசித்தேன். எண்ணெய் தடவி விட்டு வந்தேன். சந்தன குங்குமம் இட்டேன். அதையெல்லாம் இராஜேந்திர சோழனுக்காக செய்கிறோம் என்ற நினைப்பிலேயே செய்தேன்.

கங்கை கொண்ட சோழபுரத்தில் திரு. ராஜாராம் கோமகன் என்கிற PWD எஞ்ஜினீயர் இராஜேந்திர சோழனாகவே வாழ் கிறார். அவர் நினைப்போடேயே இருக்கிறார். விதம் விதமான தகவல்களை சொல்கிறார். அவரோடு அந்த இடத்தின் பல பகுதிகளுக்கு போய்விட்டு வந்தேன். கொள்ளிடத்திலிருந்து எப்படி கால்வாய் பிரிகிறது, எங்கு வருகிறது, கருவாட்டு ஓடை என்று இருக்கின்ற இந்த கால்வாய்க்கு அப்பொர்ழுது என்ன பெயர் என்றெல்லாம் அவர் விவரித்தார்.

அவர் வேலை பளு மிகுந்த ஒரு அரசு அதிகாரி. ஞாயிறு கூட ஓய்விருக்காது. நான் வந்ததும் சகலத்தையும் கீழே போட்டு விட்டு என்னோடு சுற்றியது சந்தோஷமாக இருந்தது. கங்கை கொண்ட சோழ பெருவுடையார் அவருக்கு ஆதர்சன தெய்வம். அது ஜென்ம ஜென்மாதி உறவு. அவரை சந்தித்தது அதிர்ஷ்டம்.

மீன்சுருட்டி வழியாக விருத்தாசலம் பெண்ணாடமும், மீன்சுருட்டியிலிருந்து எசாளமும், எசாளத்திலிருந்து காஞ்சி புரமும் போகிற வழியெல்லாம் நான் பயணப்பட்டேன். உடை யாளூர் மறுபடியும் போய் வந்தேன். பூம்புகார், நாகை என்று அலைந்தேன். இப்பொழுது அங்கு ஒன்றும் இல்லை. இராஜேந் திர சோழனின் எந்தத் தடயமும் இல்லை. ஆனால் இங்கு அவன் இருந்திருக்கிறானே. அந்த நினைப்பே சந்தோஷமாக இருந்தது. காயாரோஹணர் கோவிலுக்குள் நுழைந்திருக் கிறானே. அதுவே நிறைவாக இருந்தது.

இராஜேந்திரர் எங்கு இறந்து போனார். காஞ்சிபுரத்திற்கு அருகே உள்ள பிரம்மதேசத்தில். அப்படியா போவோமே. கடும் கால்வலி. இரண்டு தொடைகளிலும் நரம்பு எடுத்ததின் விளை வாக இரத்த ஓட்டம் கீழே போகிறதே தவிர மேலே வரும் போது திணறுகிறது. அதாவது ஒன் வே டிராஃபிக்காகிவிட் டது. அதனால் வலி ஏற்படுகிறது. அதைப் பார்த்தால் முடியுமா. தோள் பிடித்துக் கொண்டு கொம்பு ஊன்றிக் கொண்டு பிரம்ம தேயம் போனேன். மனது மிகவும் கனத்து அழுதது. இந்த கோவிலிலே படி ஏறியிருக்கிறான். இதை சுற்றி வந்திருக் கிறான். இந்த மண்டபத்தில் உட்கார்ந்திருக்கிறான் என்று அந்த இடத்தை சுற்றி சுற்றி வந்தேன். அந்த நந்தியை தடவி கொடுத் தேன். அந்த சிவலிங்கத்திற்கு அபிஷேகம் செய்தேன். சந்தன,

குங்குமம் இட்டு வஸ்திரம் சாத்திவிட்டு வந்தேன். அந்த ஊர் மக்கள் சூழ்ந்து கொண்டபோது, இங்கு சக்கரை பொங்கல் படையல் செய்யுங்களேன் என்று கேட்டுக் கொண்டு ஐநூறு ரூபாய் காசு கொடுத்தேன். அந்த பெண்மணிகளுக்கு பெரும் சந்தோஷம். நிச்சயம் செய்கிறோம் என்று சத்தியம் செய்தார்கள்.

எங்கே இருக்கும் சிலை. எங்கே இருக்கும் அவன் சமாதி. இதுதான் ராஜா சமாதி. இது என் தந்தையார், தாத்தா சொல்ல கேட்டிருக்கிறேன். இராஜேந்திர சோழர் அடக்கம் செய்யப்பட்ட இடமாக இருக்கலாம் என்று ஒரு மேடு காட்டினார்கள். புதர் மண்டி இருந்தது. நடுவே சிவலிங்கம் இருந்தது. சசிதரன் உதவி செய்ய, பிரபுதேவா துணைக்கு வர, பாக்கியலஷ்மி அதற்கு அபிஷேக ஆராதனைகள் செய்ய கும்பிட்டுவிட்டு வந்தேன். ஆனால் பிரம்மதேயத்தின் சந்திர மௌலீஸ்வரர் கோவில் கொடுத்த சந்தோஷம் இந்த இடத்தில் இல்லை.

அங்குள்ள விஷ்ணு கோவில், செல்லியம்மன் கோவில் இவைகளையும் பார்த்து வந்தோம். அங்கும் அவன் கல்வெட்டுகள் இருக்கின்றன. கங்கை கொண்ட சோழபுரம் என்ற அற்புதமான இடத்தை விட்டு இந்த ஊரில் இறந்து போயிருக்கிறானே என்ற வேதனை வந்தது.

ஒருநாள் முழுவதும் அந்த ஊரை சுற்றி அலைந்தோம். ஒரு கட்டத்தில் என்னால் அவன் இங்கு வந்து இறந்ததை தாங்க முடியவில்லை. கோவிலிலேயே சுருண்டு படுத்து விட்டேன். பல்வேறு விஷயங்கள் அப்போது புரிந்தன. ஏன் இங்கு வந்து இறந்தான் என்று தெரிந்தது. மகனை விட்டு நகர்ந்து வந்திருக்கிறான். ஏதோ வேண்டுதலாக இங்கே வந்து இறங்கியிருக்கிறான் என்றெல்லாம் தோன்றியது.

கிட்டத்தட்ட பல மாதங்கள் பித்து பிடித்தது போல இராஜேந்திர சோழனையே நினைத்துக் கொண்டிருந்தேன். இலக்கிய கூட்டங்களுக்கு போனால் மனம் சிதறுகிறது என்பதால் கூட்டங்களுக்கு போவதைக் குறைத்துக் கொண்டேன். சினிமா பார்ப்பதும் மூச்சுத் திணறலை ஏற்படுத்தியது. அதனால் சினிமாவும் பார்க்கப் போவது இல்லை. ஆக, எல்லா நேரமும் இராஜேந்திர சோழனோடேயே வாழுகின்ற நிர்ப்பந்தம் எனக்கு ஏற்பட்டது. சந்தோஷமாக வாழ்ந்தேன்.

என்னுடைய அறையில் பிரிண்டருக்கு கீழே கங்கை கொண்ட சோழன் பற்றிய புத்தகங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும். அதற்கு மேலே மருந்து பாட்டில்கள் இருக்கும். சுவர் முழுவதும் குறிப்புகள் ஒட்டப்பட்டு இருக்கும். கண்ணுக்கு எதிரே இராஜேந்திர சோழன் மாதிரி இலச்சினை இருக்கும்.

எசாளம் திருஎந்தளூர் போன்ற செப்பேடுகளை பார்க்கின்ற ஆவல் ஏற்பட்டது. செப்பேடுகளை காக்கின்ற தொல்லியல் துறை உதவி செய்தது. அங்குள்ள நண்பர்கள் ஆவலோடு அழைத்து, அவைகளை தொடும்படி காட்டினார்கள். தடவித் தடவி படிக்க முடிந்தது, பரவசமாக பார்க்க முடிந்தது. இவையெல்லாம் புதிய உற்சாகத்தை கொடுத்தன.

சரித்திர நாவல் என்பது தகவல் களஞ்சியம் அல்ல. ஆய்வு கட்டுரை அல்ல. அது ஒரு உணர்வு பெருக்கு. அப்படிச் சொன்னால்தான் வாசகருக்கு நன்கு போய் சேரும். பல ஆய்வு கட்டுரைகளை படிப்பது அதன் தேவை உள்ள எனக்கே அயற்சியாக உள்ளது. அந்த ஆய்வுக் கட்டுரைகளை எழுதியவர் நேரில் பேசுகிறார் என்று ஓடிப் போய் பார்த்தால் அது இன்னும் தொய்வாக இருக்கிறது. ஆய்வு கட்டுரைகளை சமர்ப்பிக்கிறவர்கள் அதை சுவாரஸ்யமாக கொடுப்பதில்லை. எனவே, ஒரு சரித்திர புதினம் எப்படி இருக்க வேண்டும் என்பதை நான் தெளிவாக தெரிந்து கொண்டேன். அது ஒரு கதை போல இருக்க வேண்டும். நான் போரிட்டது இல்லை. யாரையும் வெட்டிக் கொன்றது இல்லை. ஆனால் மனதிற்குள் போரிட்டிருக்கிறேன். வெட்டிக் கொன்றிருக்கிறேன். பல ஆங்கில திரைப் படங்களில் இந்த வன்முறையையும், குதிரை ஓட்டத்தையும், யானை ஓட்டத்தையும், அம்புகள் வீச்சையும் சாகச செயல்களையும் பார்த்திருக்கிறேன். அவைகள் உள்ளே தங்கியிருக்கின்றன.

இராஜேந்திர சோழனின் வளர்ச்சியை அவன் கல்வெட்டுகள் மூலம் அடுக்கி தெரிந்து கொண்டேன். எதற்காக அவன் ஸ்ரீவிஜயம் போனான். ஏன் கடல் கடந்தான் என்ற ஒரு விஷயம் யூகமாகத்தான் சரித்திர ஆசிரியர்களால் சொல்லப்பட்டு இருக்கிறது. வணிகர்களுடைய தொல்லையை நீக்க வேண்டும் என்பதுதான் ஒரு அரசனுடைய குறிக்கோளாக

இருக்க முடியும். ஸ்ரீ விஜயம் முரண்டு செய்தது என்பது சூசக மாகத் தெரிகிறது. அதனால்தான் அங்கு படை எடுத்திருக்க வேண்டும். சீனத்து வாணிபத்தை சோழ தேசத்து வணிகர் கள் தொடர்ந்து செய்வதற்காக அந்த உதவி செய்திருக்கிறான். இது என்னவிதமாய் நடந்திருக்கும் என்று நான் யோசிக்க ஆரம்பித்தேன். அதை எழுதினேன்.

வீரமாதேவி உடன்கட்டை ஏறினாள். ஏன். புருஷன் மேல் இருக்கின்ற பிரியம் என்பது போதுமா. இல்லை என்று தோன்றியது. ஆனால் எங்கோ ஒருவர் ஒரு மூலையில் இராஜேந் திர சோழன் எண்பதாவது வயதில் திருமணம் செய்து கொண் டான் என்ற தகவல் இருக்கிறது என்று சொல்ல, அதை பற்றிக் கொண்டேன். அது காரணமாக இருக்கலாமோ என்று யோசித் தேன். அரசர்கள் வாழ்க்கையில் பல நூறு திருமணங்கள் என்பது இயல்பு. இந்த திருமணங்கள் தாண்டியும் அவர்களுக்கு நடன மாதர்களோடு தொடர்பு இருந்தது. அவன் சொடுக்கினால் வந்து நிற்க வேண்டியிருந்தது. இது அந்த கால வாழ்க்கை.

ஆனால் சோழ தேசத்தில் இதையும் மிக நாகரீகமாகவே செய்தார்கள். அரசியல் திருமணங்களும், விருப்பத் திருமணங் களும் அழகாக நடைபெற்றன. பரவைக்காக அவள் உயரம் குத்து விளக்கு ஏற்றி மிகப் பெரிய மரியாதை அவன் செய்திருக் கிறான். அவளோடு தேர் ஏறி திருவாரூரில் வலம் வந்திருக் கிறான். இது கல்வெட்டு செய்தி. இதற்குள் புகுந்து யோசிக்கும் போது பெரிய விவரிப்பு கிடைக்கிறது.

உடையார் படித்துவிட்டு ஆறு பாகமும் அனுபவித்து விட்டு என் வாசகர்கள் உடனடியாக செய்த காரியம் தஞ்சை பெரிய கோவில் போனது. கல் கல்லாய் தடவிப் பார்த்தது என்று பல அன்பர்கள் எழுதியும், பேசியும் இருக்கிறார்கள். கங்கை கொண்ட சோழபுரத்திற்கும் அவ்விதமாகவே ஜனங்கள் போக வேண்டும். அலை அலையாய் மக்கள் கூட்டம் இறங்க வேண்டும். கங்கை கொண்ட சோழபுரத்தை செழிப்பாக்க வேண்டும் என்பது என் ஆசை. இது நிச்சயம் நிறைவேறும். அவன் வெட்டிய பொன்னேரியை நமது தமிழ் மக்கள் போய் பார்க்க வேண்டும். உடையார்குடி (காட்டுமன்னார் கோவில்) போக வேண்டும். அங்குள்ள சிவன் கோவிலில் துரோகிகளான

எல்லா கோவில் படிகளிலும் உட்கார்ந்து உளம் உருகி, உண்மை தேடித் தான் இராஜராஜனையும் இராஜேந்திரனையும் எழுதினேன். குருவருள். இரண்டாவது பைபாஸுக்கு பிறகு, எடுத்த புகைப்படம்.

இரவிதாஸன், பரமேஸ்வரனைப் பற்றி படிக்க வேண்டும். சோழ வம்சம் பற்றி தெரிந்து கொள்ள வேண்டும்.

ஆதித்த கரிகாலன் மரணம், உத்தம சோழன் ஆட்சி, இராஜராஜரின் தீவிரம், இராஜேந்திரனுடைய வளர்ப்பு, அவன் தந்தையிடமிருந்து பிரிதல், பிறகு கங்கை கொண்ட சோழபுரத்திற்கு நகர்ந்து பெரிய நகரம் அமைத்து அற்புதமான கோவில் எழுப்பி எங்கோ பிரம்மதேயம் என்ற சிறிய கிராமத்தில் மரணமடைதல் என்பவற்றை தெரிந்து கொள்ள வேண்டும்.

எது சோழர்கால கற்றளி என்பதை பார்த்தவுடன் புரிந்து கொள்ள வேண்டும். சோழர் கால சிற்பம் எப்படி இருக்கும். அந்த தூண் எப்படி இருக்கும். பல்லவர் காலத்திற்கும், சோழர் காலத்திற்கும் என்ன வித்தியாசம் என்றெல்லாம் சாதாரண மக்கள் கூட தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆவலைத் தூண்டத்தான் இந்த நாவல் எழுதப்பட்டு இருக்கிறது. படிக்க சுவாரஸ்யமாக இருப்பதற்காகத்தான் இந்தக் கதை வடிவம் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறது. எது கற்பனை. எது சரித்திரம். உங்களுக்குத் தேவையில்லை. என்ன நடந்தது. இதுவும் நடந்திருக்கக்கூடும் என்ற விஷயமேதான் ஒரு புதினமாக மாறுகிறது. இது நடந்தது என்ற கல்வெட்டின் மீது கால் வைத்து தான் இது நடந்திருக்கக்கூடும் என்பது எழுதப்படுகிறது.

வடக்கே முஸ்லீம்களின் படையெடுப்பு நடந்தபோது இவன் கங்கை கரையை தொட்டிருக்கிறான் என்று சொல்லப்படுகிறது. ஒருவேளை கஜினி முகமதுவை நோக்கி இராஜேந்திர சோழன் படையெடுத்து சென்றிருந்தால் துருக்கர்கள் வரவு இன்னும் ஒரு நூற்றாண்டுகள் தள்ளிப் போடப்பட்டிருக்கும். நடக்காதது விதியின் பிழை.

விடுமுறையில் ஊட்டிக்கும், கொடைக்கானலுக்கும் போகாமல் தஞ்சை, கும்பகோணம் முழுவதும் சுற்றினோம் என்று வாசகர்கள் சொல்வது மிகப்பெரிய சந்தோஷமாக இருக்கிறது. வெகு நிச்சயமாய் சரித்திரம் பற்றிய ஆர்வம் என் எழுத்துக்கள் ஊட்டியிருக்கின்றன. உடையார் ஆறு பாகம் எழுதிய போது இது விற்குமா என்று என் பதிப்பாளர் கவலைப்பட்டார். இன்று அவர் மிகுந்த சந்தோஷத்தில் இருக்கிறார். உடையார்

பனிரெண்டாவது பதிப்பு வெளிவந்துவிட்டது. இது பெரிய சாதனை. ஆனால் இதற்கெல்லாம் அரசியல் தலைவர்களழைத்து கூட்டம் போட்டு நான் நெஞ்சில் பதக்கம் குத்திக் கொள்ள விரும்ப வில்லை. என்னுடைய விஷயம், தமிழ் மக்களை சரித்திரம் பாற்பட்டு திருப்புவதே. சோழ தேசத்தின் மேன்மையை சொல் வதே. அது செவ்வனே நடந்திருச்கிறது. இந்த கங்கை கொண்ட சோழன் மூலம் அது மேலும் வலுப்பெறும். தமிழக மக்கள் வெகு நிச்சயம் சோழர்களுடைய மேன்மையை தெரிந்து கொண்டு, தமிழர்களுடைய மேன்மையை தெரிந்துகொண்டு அதைப் பற்றி சிலாகித்துப் பேசுவார்கள். இன்னும் சில தலைமுறைகளுக்கு கொண்டு செல்வார்கள்.

தமிழ் என்று வெறுமே உளறிக் கொண்டிருப்பதும் தாகமே மேகமே என்று எழுதுவதும் போதாது. நம்முடைய மூதாதையர் களுடைய வரலாறு தெரிய வேண்டும். எப்பேர்ப்பட்ட இனம் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். அந்த சண்டேஸ்வரர் சிலையை இன்று யாராவது செய்ய முடியுமா என்ற கேள்வி வர வேண்டும். இத்தனை உயரம் க்ரேன் இல்லாத காலத்தில் எழுப்பி இருக்கிறானே எப்படி என்ற கேள்வி வர வேண்டும். களிமண்ணை பிசைந்து செய்வது போல கல்லில் செய்திருக் கிறானே. என்ன இரும்பு, என்ன கைவண்ணம் என்று தமிழர் கள் உரக்க முழக்கமிட வேண்டும், வடக்கே போய் சொல்ல வேண்டும்.

வடக்கேயிருந்து வரும் யாத்ரீகர்கள் கங்கை கொண்ட சோழபுரத்தையும், பெரிய கோவிலையும் நிச்சயம் பார்க்க வேண்டும்.

அரசியல்வாதிகள் தமிழ் தமிழ் என்று தன்னைப் பற்றியே பேசிக் கொள்கிறார்கள். அந்த மாயையிலிருந்து தமிழக மக்கள் விடுபட வேண்டும்.

இந்த நாவலுக்காக நான் தேர்ந்தெடுத்த விஷயங்கள் பல நூறு இருக்கின்றன. பல சரித்திர புத்தகங்களை படித்தபோது அவர்கள் நூற்றுக்கணக்கான பெயர்களை அந்த சரித்திர நாவலில் கொண்டு வந்து இருக்கிறார்கள். அதில் பாதி பெயர் கூட மனதில் தங்காது. ஞாபகம் வைத்துக் கொள்ள முடியாது. தமிழர் வாசிப்பு திறன் குறைவு. அதில் உள்ளவர்களுக்கு இம்மாதிரி

ஆய்வுக் கட்டுரைகளில் வருவது போல நூற்றுக்கணக்கான பாத்திரங்களை கொடுத்தால் அது புத்தகத்தை கீழே போட்டு விட வழிவகுக்கும். எனவே, எவ்வளவு சொல்ல வேண்டும் என்பதை சரித்திர புதினத்தில் முக்கியமாகக் கருத வேண்டும். இதைச் சொல்வதில்தான் ஒரு நாவலுடைய வெற்றி இருக்கிறது.

நடை என்பது மிக முக்கியம். பல சரித்திர நாவல்களில் இது பெரும் சிக்கலாக இருப்பதை நான் கவனித்திருக்கிறேன். கல்கியின் பொன்னியின் செல்வனுடைய தாக்கம் பல நாவலாசிரியர்களிடம் இருக்கிறது. இப்பொழுது ஆழ்வார் கடியானை விட்டுவிட்டு வந்தியத்தேவரை பின்தொடர்வோம் என்று கல்கி இட்டுக் கொண்டு போவார். அவருடைய பாணி அது. ஆரம்பத்தில் அது மிகச் சுவையாக இருந்தது. ஆனால் அதையே மற்றவர்கள் பின்தொடரும் பொழுது அலுப்பு ஏற் பட்டுவிடும். ஒவ்வொரு சரித்திர ஆசிரியரும் தனக்கென்று ஒரு பாணியை பின்பற்றிக் கொள்ள வேண்டும்.

எனவே, கல்கியினுடைய சாயல் சிறிதும் இல்லாதவாறு நான் என்னுடைய சரித்திர நாவலை அமைத்துக் கொண்டேன். அது மிகப் பெரிய வெற்றி பெற்றது. இது கல்கி அவர்களுக்கு எதிரான விஷயம் அல்ல. வேறு தளத்திற்கு தமிழ் நாவலை அழைத்துப் போகும் முயற்சி.

'ஓ... அவள் எவ்வளவு அழகாக இருந்தாள்' என்று எழுதுவது ஜெயகாந்தன் அவர்கள் பாணி. இதை பல நண்பர் கள் கடிதங்களில் கூட பின்பற்றினார்கள். மற்ற எழுத்தாளர்கள் தங்கள் கதைகளில் சேர்த்தார்கள். ஆனால் நான் அதை விட்டு விலகி இருந்தேன். இப்பொழுது அவ்விதமாக எழுதினால் சிரிப்பாகக் கூட போய்விடும். அந்த பாணி பலமாக கைப்பற்றப் பட்டு, உயர்வாக எழுதப்பட்டு பல பேரால் பாராட்டப் பெற்ற பிறகு அதன் வலிவை, மணத்தை அது இழந்துவிடுகிறது. வேறு ஒரு மணமும், வலிவும் தேவைப்படுகிறது. அதைத்தான் ஒரு எழுத்தாளன் கண்டுபிடிக்க வேண்டும்.

என்னுடைய சரித்திர நாவலில் என்னுடைய பாணி தனித்த விஷயம். அவை செவ்வனே கையாளப்பட்டு இருக்கிறது. இது என் குரு எனக்கு கொடுத்த வரம். என் தாய் சுலோச்சனா அவர்கள் எனக்கு கொட்டிக் கொடுத்த தமிழின் மணம்.

என் வீடு பேருதவி செய்தது. என்னை சகித்துக் கொள்ளத் தனித்த குணம் வேண்டும். என் மூத்த மனைவி கமலாவிற்கும், இரண்டாவது மனைவி சாந்தாவிற்கும் அது இருந்தது. நான் திடமாக இருந்தபோதும், நோயுற்றபோதும் என்னை அவர்கள் கவனமாக பார்த்துக் கொண்டார்கள். வெறும் புருஷன் என்ற மரியாதைக்கு அப்பால் என்னைச் சுற்றி உள்ளவர்களின் மேன்மையை அறிந்து அவர்களையும் மிகவும் நேசித்தார்கள். பாக்கியலஷ்மி இல்லாமல் சாந்தா எந்த புடவை கடைக்கும் போனதில்லை. பாக்கியலஷ்மி கைபிடித்துத்தான் கமலா கோவிலுக்கு போவாள். வீடு ஒழிக்க வேண்டும் என்றால் பலபேர் ஓடி வந்து விடுவார்கள். குறைந்தபட்சம் ஏழெட்டு பேராவது வேலை செய்வார்கள். என் வீடு அவர்களோடு கொஞ்சி பேசியும், சோறு பரிமாறியும் சந்தோஷப்படும். அவர்கள் வீட்டு விசேஷத்திற்கு ஓடிப்போய் நிற்கும்.

என்னுடைய சத்சங்கம் யோகி ராம்சுரத்குமார் புகழ் மட்டும் பாடவில்லை. எனக்குப் பேருதவி செய்தது. என்னைக் குளிப்பாட்டியது. துடைத்தது. கை, கால்களுக்கு எண்ணெய் தடவியது. சோறு பிசைந்து ஊட்டியது. கால் பிடித்து தூங்க வைத்தது. நான் தூங்கும்போது அருகே நாற்காலி போட்டு என் சத்சங்கமும் தூங்கியது. நான் கண்களில் நீர் துளிக்க கை கூப்பி, அவர்களுக்கு வந்தனம் சொல்கிறேன். எந்த ஜென்மத்தில் என்ன உதவி செய்தேனோ அது எனக்கு இப்பொழுது கிடைக்கிறது என்று நினைத்துக் கொண்டேன். அவர்களோ இந்த உதவி செய்ய நான் புண்ணியம் செய்திருக்க வேண்டும் என்று சொல்லுவார்கள். குரு என்றுதான் என்னை வணங்குவார்கள். ஒரு எழுத்தாளனுக்கு இவ்வளவு பெரிய ஒரு குழு அமைவது என்பது ஆச்சரியமான விஷயம். பொறாமைத் தரும் விஷயம்.

திருச்சியிலிருந்து இறங்கி பிறகு தஞ்சாவூர், கும்பகோணம் போகும்போது ஒரு வாசக நண்பர், பாண்டியன் சுற்றுலா கம்பெனி நடத்துகிறவர் எனக்கு வண்டி கொடுத்து உதவி செய்வார். இதுவரை அவர் காசு கேட்டதும் இல்லை. நான் கொடுத்ததும் இல்லை. என் வீட்டில் உள்ள மூன்றடி உயர ஐம்பொன் சிலை யோகி ராம்சுரத்குமாருடையது அவருடைய அன்பளிப்பு. ஐயா, உங்களால் என் வாழ்க்கை சீராயிற்று. அதற்கு பதிலாக இவை

யெல்லாம் ஒன்றுமே இல்லை. ஏற்றுக் கொள்ளுங்கள் என்றுதான் வேண்டுவார்.

ஊர் நண்பர்கள் பலபேர் தன் வாழ்க்கை மாற்றத்திற்கு என் புத்தகம் காரணம் என்று சொல்வார்கள். சந்தோஷமாக இருக்கும். என் வாழ்க்கை அர்த்தமுள்ளதாக இருக்கிறது என்ற நினைவு வரும். முகம் தெரியாத பல பேருக்கு என் எழுத்துக்கள் உதவி செய்து அவர்களை சீரும், சிறப்புமாக வைத்திருக்கின்றன என்பது ஆனந்தமான விஷயம்.

நான் பட்ட இளம் வயது வேதனைகள் எவருக்கும் வரலாகாது என்று நான் எழுதிய புதினங்கள் பலருடைய வாழ்க்கையை செப்பனிட்டு இருக்கின்றன. இதுதான் ஒரு எழுத்தாளனுடைய பணி. இதுதான் அவன் பிறந்ததற்கான அர்த்தம். அதை நான் செவ்வனே நிறைவேற்றியிருக்கிறேன். என் குரு யோகி ராம்சுரத்குமார் அதற்கு துணை நிற்கிறார்.

இன்னும் சில விஷயங்கள் எழுத வேண்டும். அவைகளை மனதில் குறித்து வைத்திருக்கிறேன். தொடர்ந்து எழுதுவேன். அடர்ந்து இருள் படர்ந்து அழகாய் இருக்குது காடு. நான் கொடுத்த வாக்குகள் உண்டு காப்பதற்கு. தொடர்ந்து போக வேண்டும். இன்னும் பல காதம் கடந்து போக வேண்டும்.

மன நிறைவுடன் வணங்குகின்றேன்.

என்றென்றும் அன்புடன்,

பாலகுமாரன்.

23-02-2014.
மயிலை

யோகி ராம்சுரத்குமார் யோகி ராம்சுரத்குமார்
யோகி ராம்சுரத்குமார்
ஜெயகுருராயா

யோகி ராம்சுரத்குமார்

கங்கை கொண்ட சோழன்

நான்காம் பாகம்

அத்யாயம்

86

ஐப்பசி மாதம் பெய்ய வேண்டிய மழை கார்த்திகை மாதம் மத்திமத்திற்குத் தள்ளிப் போயிற்று. எதனாலேயோ வடகிழக்கு பருவ மழை தாமதமாயிற்று. இந்நேரம் இரண்டு சுழற்காற்றாவது அடித்திருக்க வேண்டும். நீர்நிலைகள் சுருங்கிக் கொண்டு வந்தன. கடல் பக்கம் காற்று முன்பின்னாக இருந்ததே தவிர, சுழல் ஏற்படவில்லை. சோழ தேசத்தின் தெற்கே சுள்ளென்று வெய்யில் அடித்தது. 'இந்த முறை மழை பொய்த்தால் வேறு எங்காவது போய்விட வேண்டியதுதான்' என்று மக்கள் பேசிக் கொண்டார்கள்.

''இது எப்பொழுதோ எழுதிய பஞ்சாங்கத்தில் போட்டிருக் கிறதே. மழை தள்ளிப் போகும். சூறைக்காற்று வீசும் என்று சொல்லியிருக்கிறதே. செவ்வாய் நாயகன் என்கிறபடியால், இந்த வருடத்தின் சேனாதிபதி என்கிறபடியால், மழை பொய்க் கும். கால்நடைகள் சாகும். பயிர் பச்சை வீணாகும் வாய்ப்பிருக் கிறது என்று சொல்லியிருக்கிறார்களே.'' ஜோதிடர்கள் ஓலைச் சுவடியை தட்டி காண்பித்தார்கள்.

ஆனால் நல்லவேளையாக கார்த்திகையில் அங்கொன் றும், இங்கொன்றுமாய் மழை பெய்தது. புல், பச்சைகள் கிளறி எழுந்தன. இந்த மாதிரி புற்கள் வளர்க்கிற மழை மிக முக்கியம். இல்லையெனில் ஆடுகள் தவித்துவிடும். மாடுகள் சோர்ந்து விடும். பழ மரங்கள் பொய்த்துவிடும். பூக்கள் குறைவாக பூக்கும். ஏற்கனவே கார்த்திகையில் வாசனை பூக்கள் இருக்காது.

இந்த முறை இன்னும் குறைவாக இருக்கும் போலிருக்கிறது. ஜனங்கள் எங்கு சந்தித்தாலும் மழை பற்றியே பேசிக் கொண் டார்கள். 'வருண ஜபம் செய்துவிடலாமா' என்று அந்தணர்கள் யோசித்தார்கள். ஒரு கிராமத்தில் ஒன்று கூடி வருண ஜபம் செய்ய வும் செய்தார்கள்.

குளத்தில் நீர் இல்லாதபடியால், தொட்டிகள் ஏற்படுத்தி அதில் நீர் நிரப்பி, அந்தணர்கள் உட்கார்ந்து கொண்டு ஜபம் செய்தார்கள். பெரும் யாகம் வளர்த்தார்கள். துளசி தோட்டங் களுக்கு நீர் வார்த்தார்கள். யானைகளை குளிப்பாட்டினார்கள். குதிரைகளுக்கும், பசுக்களுக்கும் நீர்தொட்டி காட்டினார்கள். நீரில் கஞ்சி கலந்தார்கள்.

இன்னொரு கிராமத்தில் பெண்கள் கோவிலுக்குள் நிர்வாணமாக வலம் வந்தார்கள். இரவு நேரம் கோவிலுக்கு வெளியே ஆண்கள் காவல் காத்தார்கள். புல்வெளியில் புற்கள் குறைய ஆடுகளை மலைகள் நோக்கி ஓட்டிப் போனார்கள். மலைக்கு அந்த பக்கம் இருக்கும் காட்டிலிருந்து ஆடுகளின் வாசனை அறிந்து சிறுத்தைகளும், ஓநாய்களும் வந்தன. ஆடு களை கவனமாக கிராமத்து கொட்டிலில் வந்தடைக்க, சிறுத் தைகள் கிராமத்திலும் ஊடுருவின.

''என்னவோ புசுபுசுன்னுதே முகத்திலேன்னு எழுந்து பார்க்கிறேன். கட்டிலில் சிறுத்தை உட்கார்ந்துட்டு இருக்கு. அந்த பக்கம் திண்ணையில் படுத்திருக்கும் என் பையன் 'யப்பேய்'ன்னு கத்தினான். அதற்கு பயந்து சிறுத்தை ஓடிப் போய்விட்டது. அவன் கத்தாமல் இருந்திருந்தால் ஒரு அடி போட்டிருக்கும்.''

ஊர் பயத்தோடு சிரித்தது.

அரசுக்கு செய்தி போயிற்று. பத்து வீரர்கள் கிராமத்திற்கு வந்து, காசு கொடுத்து தானியம் வாங்கி அவர்களே ஐந்து, ஐந்து பேராய் முறை மாற்றி காவல் காத்தார்கள். அவர்களே சமைத்துக் கொண்டார்கள். அன்று வெட்டிய ஆட்டின் கறியை கிராமம் பங்கு போட்டுக் கொண்டு மீதம் உள்ள எச்சங்களை தெருவில் குவித்து வைத்தது. பசித்த சிறுத்தை மறுபடியும் ஓடிவந்தது. சீழ்கை ஒலியால் வீரர்கள் ஒருவரை ஒருவர் எச்சரித்துக் கொண் டார்கள். கிராமத்தின் மறுமுனை நோக்கி, சிறுத்தையை விரட்ட

முயற்சிக்க, சிறுத்தை பயந்து ஓடிப் போய் விரிக்கப்பட்ட வலையில் சிக்கிக் கொண்டது. சிறுத்தையின் பின் கால்களை கட்டி மரத்தின் கிளையில் உயர்த்தி கட்டினார்கள். பிரம்பால் விளாறினார்கள்.

''அவனவன் சோற்றுக்கே வழி இல்லாமல் இருக்கான். உனக்கு ஆடு கேட்குதோ.'' கிராமவாசிகள் அருகே வந்து முகத்தில் அடித்தார்கள். முதுகு முடியை பிடித்து உலுக்கினார்கள்.

''இந்த சிறுத்தையை என்ன செய்யலாம்.''

''கொன்றுவிடலாம்.''

''எனக்கு இந்த தோல் வேண்டும்.'' ஒருவன் எகிறினான்.

''நீயா பிடித்தே. அதன் தோல் கேட்பதற்கு.''

''காசு கொடுத்து விடுகிறேனபா.''

''உன் காசு யாருக்கு வேணும். யார் கணக்கில் வைப்பாய். பிடித்தது சோழ வீரர்கள்தானே. அவர்கள் பங்கு போட்டுக் கொள்ளட்டும்.''

''பிடித்தது நம் ஊரு. அதற்கு என்ன பங்கு.'' தேவையில்லாமல் விடியற்காலையில் விவாதம் நடந்தது. அடுத்த ஊர் அந்தணரிடம் கேட்கப்பட்டது.

''அப்படியே வலையில் சுருட்டிக் கொண்டு போய் மலைப் பக்கம் விட்டுவிடப்பா. நமக்கு அரசு இருக்கிறது. அரசு கொடுத்த தானியம் இருக்கிறது. ஏதோ சாப்பிட்டுக் கொண்டு இருக்கிறோம். அதற்கு என்ன வழி. உண்ண இங்குதானே வரும்'', என்று அன்பாக பேசினார்.

''இவரிடம் போய் ஏனய்யா கேட்டீர்கள். அரிசி தின்கிற சிறுத்தை, வாழைக்காய் தின்கிற சிறுத்தையா இருந்தா இவர் விடுவாரா. கொன்று போடு என்பார்.''

''பெரியவங்க சொல்லிவிட்டாங்க. எடுத்துக் கொண்டு போ.''

சோழ வீரர்கள் குதிரையின் முதுகில் வலையோடு சேர்த்து கட்டப்பட்ட சிறுத்தையை கொண்டு போய், நிதானமாக கட்டவிழ்த்து, பிறகு வலையை விடுத்து பதுங்கி, பயந்துபோய்

பார்த்துக் கொண்டிருந்த சிறுத்தையை அடித்து விரட்ட, சிறுத்தை கானகத்திற்குள் போயிற்று. அந்த சிறுத்தையின் மீது வைத்த இரக்கமோ அல்லது வேறு ஏதாவதோ, அல்லது ஜாதக கட்டமோ அன்று பிற்பகலில் மழை துவங்கியது. இரவு முழுவதும் பெய்தது. விடியலில் வானம் வெளுத்தது. தெருவில் நீர் புரண்டு ஓடியது. அது முக்கியமான பாதை என்பதால் ஊர் நிர்வாகிகள் நீர் வடித்து பாதையை செம்மையாக்கினார்கள். 'எல்லா பக்கமும் மழை இருக்கும் போல' என்று வானம் பார்த்து பேசிக் கொண்டார்கள்.

மறுபடியும் பிற்பகலில் இருட்டியது. பறவைகள் தாழப் பறந்தன. கொக்குகள் சுற்றி சுற்றி அலைந்து கூடுகளை தேடின. பட் பட் என்று மிக வேகமான தூறல் கூரையை தாக்கிற்று. மக்கள் திண்ணையில் ஏறி உட்கார்ந்து, துணியால் உடம்பை போர்த்திக் கொண்டு ஆவலோடு மழையை பார்த்தார்கள். தென்னை மட்டைகளில் செய்த பாய்மர படகுகளை குழந்தைகள் கையில் ஏந்தி, இன்னும் மழை பெய்ய காத்திருந்தார்கள்.

இப்பொழுதெல்லாம் விளையாட்டுகள் மாறிவிட்டன. செம்மறி ஆடுகள் மீது தேர் போல சக்கரங்கள் கட்டி அதில் சிறு பையன்கள் ஓட்டி வந்தார்கள். வில்லும், அம்பும் தரித்து உரக்க கத்திக் கொண்டு ஓட்டி வந்தார்கள். ஒருவன் நாய் கட்டிய தேரை முயற்சி செய்தான். ஆனால் எல்லோருக்கும் பிடித்தது தென்னம்பாளையில் செய்த பாய்மர நாவாய். பாளைக்கு குறுக்காக வளைந்த மூங்கிலை சொருகி, வளைந்த மூங்கிலில் இரு பக்கமும் நெட்டியை சொருகி, பாய்மரம் போல துணிகளை கட்டி, குளத்திற்கு நடுவே கொண்டு போய் விட்டுவிட்டு வந்தார்கள். மெல்லிய நூலில் நுனியை கட்டி மெல்ல இழுத்தார்கள். அந்த பாய்மரத்தில் புலிக்கொடி பறந்தது.

மறவர்குல குழந்தைகள் பன்றிகளை விரட்டி விளையாடினார்கள். 'ஒரு பன்றிக் கூட்டம் வருகிறது' என்று ஒருவன் சொல்ல, அவர்கள் வில் அம்புகளையும், கூரிய முனையுள்ள மூங்கில்களையும் எடுத்துக் கொண்டு வேட்டைக்கு புறப்பட்டார்கள். எங்கோ வேடிக்கை பார்ப்பது போல நின்றிருந்தார்கள். பன்றிக் கூட்டம் தாண்டியதும் 'ஓ' என்று கத்திக் கொண்டு அதை அடித்து துரத்தினார்கள். மூங்கில்களால் குத்தினார்கள்.

நாலாபக்கமும் நின்று மடக்கினார்கள். பன்றிகள் தப்பித்து ஓட, 'வெற்றி வெற்றி' என்று முழங்கினார்கள். ஒரு பெரிய யுத்தம் செய்த வெறியும், களைப்பும், ஆரவாரமும் அவர்களிடம் இருந்தன. பிற்பகலிலும் மழை பலத்து பெய்தது. இரவு தொடர்ந்தது. விடியலில் வானம் மந்தகாசமாக இருந்தது. குளிராக இருந்தாலும் வியர்த்தது.

'காற்று காணோம். புயல் வரப்போகிறது. புயல் வரப் போகிறது. மைனாக் குருவியை பார். சுத்தி சுத்தி அலையுது. இரவு ஆந்தை சத்தத்தை காணோம். கவனித்தாயா. நேற்றைக்கும் பருந்து இல்ல. இன்றைக்கும் பருந்து இல்ல. எங்க போச்சோ தெரியவில்ல. எறும்பு மேலே ஏறுது. நேற்றைக்கே ஈசல் வந்து விட்டது. பாம்பு இடம் மாறுது. நேற்றைக்கு தோட்டமெல்லாம் பாம்பு போன தடம். இன்றைக்கும் அதிகம் இருக்கும்.''

''எப்போ புயல் வரும்.''

''கடல் பக்கம் ஆள் அனுப்பி பரதவரிடம் கேட்டால் சொல்லிவிடுவார்கள்.''

இரண்டு ஆட்கள் குதிரையில் கடல் பக்கம் ஓடினார்கள். நடுநிசியில் திரும்பினார்கள்.

''பேய்மழை. சூறைக்காற்று. இரண்டு நாளில் வரும். நிச்சயம்.'' ஊர், ஊருக்கு செய்தி பரிமாறப்பட்டது. வயல்களை பற்றி கவலைப்பட்டார்கள். தண்ணீர் ஏற்கனவே முழங்கால் அளவிற்கு இருந்தது. இன்னும் மழை பெய்தால் கதிர் வரை நீர் தேங்கிவிடும். அது நல்லதல்ல. பயிர் அழுகிவிடும். அவர்கள் பாளைக் குடையோடு வயல்வெளிக்கு போய் உற்று பார்த்தார்கள். நீரை வடிப்பதற்கு என்னவெல்லாம் வேலை என்று ஆராய்ந்தார்கள். கால்வாய்களில் நீர் புரண்டு நாலாபக்கமும் போயிற்று.

புல்வெளிக்கு நீரை திருப்பினார்கள். காவிரி ஜலம் உள்ளே வராது இருக்க, கொள்ளிடம் பக்கத்திலிருந்து நீர் வராது இருக்க மேடு அமைத்தார்கள். கொட்டும் மழையில் வேறு வழியே இல்லை என்று விரைவாகச் செய்தார்கள். அந்தி சாயும் நேரத்திற்கு ஒரு பெரும் சூறைக்காற்று கங்கை கொண்ட சோழபுரத்தை தாண்டிப் போயிற்று. மரங்களூடே போன காற்று

பெரும் கூச்சல் எழுப்பியது. அந்த சப்தம் மக்களிடையே எதிரொலித்தது. மாடுகள் மிரண்டன. யானைகள் பிளிறின. மறுபடி அமைதியாயிற்று. இந்த முறை மேகங்கள் வெகு வேக மாக ஊரின் மீது ஓடின. கங்கை கொண்ட சோழபுரத்திலிருந்து ஒரு மேகத்தின் மீது ஏறினால் அரைநாழிகையில் குடந்தையை அடைந்துவிடலாம் என்று சொல்லப்பட்டது. 'இப்படி மேகத்தில் ஏற முடியுமா. இவ்வளவு வேகமாக போகிறதே', என்று அந்தண சிறுவர்கள் வியப்போடு வானம் பார்த்தார்கள். இருட்டி வர, கோவிலுக்குள்ளும், மண்டபத்திற்குள்ளும் மக்கள் தஞ்சம் புகுந்தார் கள். அவர்களுக்கு அங்கேயே உணவு வழங்கப்பட்டது. மறவர் கள், இந்த குளிருக்கு மீன் ஆகாது. கறிதான் சிறப்பு என்று தங்கள் வீடுகளில் கறி ரசம் வைத்து உறிஞ்சி குடித்தார்கள். சாதத்தில் சிறு துண்டு கறிகளை பிசைந்து கொண்டு மென்று விழுங்கினார்கள். கம்பு உருண்டையும் அந்த ரசத்திற்கு சரியாக இருந்தது. தானியங் களை மிக பத்திரமாக பார்த்துக் கொள்ள உத்தரவிடப்பட் டிருந்தது. ஏற்கனவே மேட்டுப் பகுதிகளில் இருந்த அரசாங்க குதிர்கள், அந்த மேடு நோக்கியும் தண்ணீர் வராதபடி கருங்கல் கரை எழுப்பப்பட்டு நீர் வரத்து தடுக்கப்பட்டது.

நடு ஜாமத்தில் காற்று சுழன்று வீசியது. மரங்கள் முறிந் தன. விமானத்தில் காற்று மோதி பெரும் சப்தத்தை எழுப்பியது. கோவில் சுற்று மதில் சுவரில் இருந்த நந்தி ஒன்று தலைகீழாக சேற்றில் விழுந்தது. ஒரு மாளிகையின் உச்சிக் கலசம் உடைந்து தொங்கியது. ஒரு வைக்கோல் போர் சிதைந்து காற்றில் பறந்து ஊர் முழுவதும் பரவியது. பெறும் ஊர் பறவைகள் தான் வேதனைக்குள்ளாயின. கங்கை கொண்ட சோழபுரத்து விமானத் தில் ஒரு அசைவு கூட இல்லை. ஒரு யானை சங்கிலி எடுத்துக் கொண்டு கோட்டை வாசலை நோக்கி ஓடியது. 'திறந்துவிடு, திறந்துவிடு' என்று கத்தினார்கள். உள்ளுக்குள் சேதம் ஏற்படுத்தி விடப்போகிறது என்று கோட்டைக் கதவை திறந்துவிட்டார்கள். யானையின் சங்கிலி இழுபட, ஒரு கோர சப்தம் ஏற்படுத்திக் கொண்டிருக்க, யானை கிழக்கு நோக்கி போயிற்று. எவன் என்ன கதி ஆகப்போகிறானோ என்று கோட்டைக் காவலர்கள் கவலைப் பட்டார்கள்.

விடிந்த பிறகு மழை வரவில்லை. ஆனால் புயல் நிற்க வில்லை. இருட்டில் தெரியாத சேதமெல்லாம் வெளிச்சத்தில்

தெரிந்தன. வாசலிலிருந்து கோவிலுக்குப் போகும் பாதையில் மரங்கள் முறிந்து கிடந்தன. யானை கிழக்கு பக்கம் இருக்கின்ற உடையார்குடி சிவன் கோவிலில் புகுந்துவிட்டதாகவும், சிவன் கோவிலின் கருவறையில் அந்தணர் கதவை சாத்திக் கொண்டு உரக்க கத்திக் கொண்டிருப்பதாகவும், உள்ளே போய் யானையை வெளியே கொண்டு வர எவருக்கும் தைரியம் இல்லையென்றும் சொல்லப்பட்டது. கரும்புகளை வெட்டி வாசலில் போட, யானை வெளியே வந்தது. எல்லோரும் தொடை தட்டிக் கொண்டார்கள். ஆனால், கரும்புகளை ஒன்றுதிரட்டி ஒரு பெரிய கட்டாக எடுத்துக்கொண்டு யானை மறுபடியும் கோவிலுக்குள் போய் விட்டது. யானையை எல்லோரும் கண்டமேனிக்கு திட்டினார்கள்.

''அது பழக்கப்படுத்தப்பட்ட யானையடா. காட்டு யானையா. கரும்பு தின்ன வந்தால் அப்படியே போய்விடும் என்று நினைப்பதற்கு. என்ன சீராக வேலை செய்கிறது பார். யானை பிடிக்க ஒரே ஒரு வழிதான் இருக்கிறது.'' சமாதானப் படுத்தியவன் தொடர்ந்து பேசினான்.

''என்ன வழி.''

''தயிர் சாதம் பிசைந்து வந்து கவளம் கவளமாக வாயில் ஊட்டினால் நம் பேச்சுக்குக் கட்டுப்படும்.''

''நான் தயிர் சாதம் பிசைந்து வருகிறேன். ஊட்டுவது யார்.'' ஒருவன் கேட்க, எல்லோரும் வழித்து கொண்டுச் சிரித்தார்கள்.

''ஓலை போட்டு பார்த்துவிடுவோம்.'' ஒருவன் சொல்ல,

''அதில் உன் பெயர் இருக்காதே. எனக்கு தெரியுமடா உன் சூழ்ச்சி,'' என்று மற்றொருவன் சொல்ல, மீண்டும் குதூகலித் தார்கள்.

''கலிங்கத்தையே ஜெயித்து வந்த மாவீரர்கள் கோவிலுக்குள் போன யானைக்கு சோறு ஊட்டாமல் உட்கார்ந்திருக் கிறார்கள்.''

யானையை தேடிக்கொண்டு கங்கை கொண்ட சோழபுரத் திலிருந்து பத்து வீரர்கள் வந்தார்கள். உடையார்குடி கோவில் அமர்க்களப்படுகிறது என்று கேள்விப்பட்டு அங்கு திரும்பினார் கள்.

"தயிர் சாதம் கொடுத்துவிட்டால் யானையை மீட்டு வந்துவிடலாம். அதேபோல தென்னம் மட்டையும் வேண்டும்."

மழையில் நனைந்தபடி ஊர் கூட்டம் நாலாபுறமும் பறந்தது. பெரிய மரத்தொட்டியில் தயிர் சாதம் பிசைந்து வர, அதை உருட்டி உருட்டி சில வீரர்கள் முன்னே வைக்க, ஒரு சோழ வீரன் முன்னே போனான். அவனுக்கு பெயர் ஜெயந்தன். யவன வீரன் சோனகன் பரஞ்சோதியின் மகன். தேவரடியார் களை பாதுகாத்து நிற்கின்ற பொறுப்பில் அந்த யவன வீரன் பரஞ்சோதி இருந்தான். அவனுக்கும் தஞ்சை தேவரடியார்க் கும் பிறந்த மகன் ஜெயந்தன். பரஞ்சோதியைப் போலவே துடிப்புள்ளவன். ஆனால் சைவ வழியில் நிற்பவன். யவன னுடைய பெயரும் இல்லாது இந்து மத பெயரும் இல்லாது பரஞ்சோதியின் மனைவி அவனுக்கு ஜெயந்தன் என்ற தேவனின் பெயர் வைத்தாள்.

ஜெயந்தன் உள்ளே போய் யானையோடு பேசினான். "வெளியே வா" என்றான். ஒரு உருண்டை சோற்றை கைப்பிடி சுவர் மீது வைத்தான். யானை வழித்து வாயில் போட்டுக் கொண்டது.

"வா. வா. இன்னும் தருகிறேன்", என்று கூப்பிட, மெல்ல தலையசைத்து அவனை நோக்கி வந்தது. அவன் பின்னே நகர்ந் தான். ஊர் மொத்தமும் வீடுகளுக்குள் ஒண்டிக் கொண்டது. ஒருவன் மரத்தில் ஏறி வேடிக்கை பார்த்தான். யானை கோவிலை விட்டு வெளியே வந்ததும் மரத்தில் ஏறியவன் மதில் சுவர் மீது சாய்ந்து, அங்கிருந்து கீழே குதித்து மெல்ல நடந்து போய் கோவில் கதவை சாத்த முயன்றான். யானை அந்த சப்தம் கேட்டு திரும்பி வேகமாக அவனை நோக்கி ஓடிற்று. அவன் அலறி அடித்துக் கொண்டு கருவறை நோக்கி ஓடினான். அர்ச்சகர் வேகமாக கதவைத் திறந்தார். தடுக்கென்று நுழைந்து தாளிட்டுக் கொண்டான்.

"நீ அந்தணனா." அவர் கேட்டார்.

"உயிர் போகிற நேரத்தில் கேள்வியைப் பார்." என்று அந்த மறவன் பதிலுக்கு சீறினான்.

"மிக பத்திரமாக இருப்பதாக நினைப்போ. வந்து எட்டி ஒரு

உதை உதைத்தால் நீயும், நானும் சிவலிங்கத்தைத்தான் தழுவிக் கொள்ள வேண்டும். சிவன் வருவாரா என்று தெரியாது.''

''மகாபாவி, உள்ளே நுழைந்ததுமல்லாமல் ஈசனை பற்றி கேலியா செய்கிறாய்'' என்று அவர் உரக்க கத்தினார்.

யானை கதவுக்கு பின்னால் போய் நின்றுகொண்டது. வெளியே ஆட்கள் அதிகம் இருந்ததால் மிரண்டது. மழை வலுத்ததால் மண்டபத்திற்குள் போயிற்று. ஜெயந்தன் மறுபடி முன்னேறினான். தன் வீரர்களுக்கு தன்னை யானை தாக்கினால் என்ன செய்ய வேண்டும் என்று பதிலுக்கு தாக்குதலை ஏற்பாடு செய்தான். கவண் கல்லாலும், அம்பாலும் யானையை தாக்க வேண்டும் என்று எச்சரித்தான். சோற்று உருண்டையை பெரிதாக உருட்டிக் கொண்டு போய், யானைக்கு அருகே நின்று நீட்டினான். யானை சோறு மட்டும் வாங்கிக்கொண் டது. சுவைத்து உண்டது. மறுபடியும் வெளியே வந்து இன் னொரு சோற்றுக் கவளம் நீட்ட, ஒரு பூசணிக்காய் அளவு இருந்த அந்த சோற்றுக் கவளம் துதிக்கையில் தரப்பட்டது. இந்த முறை உள்ளே போகாமல் வாசலுக்கு அருகே நின்று சோற்று கவளத்தை நீட்ட, யானை மெல்ல வெளியே வந்தது.

கூட்டத்தினர் 'வருது வருது' என்று கத்த, சோழவீரர்கள் அவர்களை பாய்ந்து சுவரில் அடித்தார்கள். 'போங்கடா உள்ளே.' என்று கத்தினார்கள்.

''உயிரை பணயம் வைத்து உள்ளே போய்க் கொண் டிருக்கிறான். உட்கார்ந்து கொண்டு கூத்தா. வெத்தலை வாய் களா'' என்று திட்டினார்கள். அந்த பரபரப்புக்கு இன்னும் நான்கு வெற்றிலை இருந்தால் நன்றாகத்தான் இருக்கும் என்று தோன்றியது. பட்டென்று வெற்றிலை கிழித்து, கள்ளிப் பாக்கு நறுக்கி வாயில் அதக்கிக் கொண்டு வேகமாக சென்றார்கள். காரநீர் தொண்டையில் இறங்க, இந்த போராட்டத்தையே ஆவலோடு வேடிக்கை பார்த்தார்கள்.

நாளை ஊருக்கு சொல்ல வேண்டுமல்லவா. இதோ, இவ்வளவு அருகில் இருந்தது யானை என்று பொய் பேச வேண் டும் அல்லவா. அவர்கள் பரபரத்தார்கள்.

யானையின் கண்களில் கோபம் இல்லை. காதுகள் வீசி

யதில் நன்றி இருந்தது. வால் நீட்டவில்லை. அடங்கி இருந்தது. முன் கால்களை தூக்கவில்லை. அமைதியாக இருந்தது.

''என்ன. என்ன கோவம் உனக்கு. உன்னை யார் வீட்டை விட்டு வரச் சொன்னது. அத்தனை யானைகளும் சாப்பிடு கின்றன. வாழைப்பழமாக தின்கின்றன. நீ கேவலம் இங்கு உட் கார்ந்து கொண்டு சொத்தை கரும்பை சாப்பிட்டுக் கொண் டிருக்கிறாய்.'' என்று அவன் பேச, யானை, 'ஆமாம்' என்று தலையாட்டியது. அவன் துணிந்தான். பெரிய சோற்றுக் கவளம் எடுத்துக் கொண்டான். அருகே போனான். யானையை வாய் திறக்கச் சொன்னான். யானை வாய் திறந்தது. அந்த வாய்க் குள் சோற்றை திணித்தான். யானை பெரிதாய் பிளிறியது. அது சந்தோஷம் என்று அவனுக்கு தெரிந்தது. அவன் எகிறி யானை யின் கன்னங்களை தடவி கொடுத்தான். கண்ணுக்குக் கீழே வருடி கொடுத்தான். கழுத்தை தடவினான். காதுகளை பிடித்து ஆட்டினான். யானை சந்தோஷமாக அவனை சுற்றிக் கொண் டது. மெல்ல யானையின் காது பிடித்து இழுத்து வந்தான். கூட்டம் மறுபடியும் பதுங்கியது. கோவில் வாசலில் உள்ள பாறாங்கல்லில் ஏறி யானைக்குத் தாவினான். அங்குசம் வேண் டும் என்று சைகையில் கேட்டான். ஊரில் ஒருவாறு தேடி அங்குசம் கொண்டு வந்து கொடுத்தார்கள். அதை யானையின் காதில் மாட்டினான். யானை அந்த அங்குசம் பட்டவுடன் மிருது வாயிற்று. அது பழக்கப்படுத்தப்பட்ட யானை. அங்குசம் அங்கு இருக்கிறது என்று தெரிந்தவுடன் பயந்து பணிந்தது. அவன் மெல்ல யானையை ஊர் சுற்றி நடத்தி வந்தான். உடையார்குடி என்கிற அந்த பெரிய கிராமம் சந்தோஷப்பட்டது. 'சோழம் சோழம்' என்றது. யானைக்கு தேங்காய்களும், காய்கறிகளும், கரும்பு துண்டங்களும், வெல்ல அரிசியும் தரப்பட்டன. யானை திரும்பி கங்கை கொண்ட சோழபுரம் நோக்கி போயிற்று. கங்கை கொண்ட சோழபுரத்து தேவரடியார்களின் தலைவனாக இருந்த ஜெயந்தன் மிக கம்பீரமாக வரவேற்கப்பட்டான். 'நம்ம ஆளு' என்று தேவரடியார்கள் குதூகலித்தார்கள். புஷ்ப பந்தை உருட்டி அவன் மீது எறிந்தார்கள். வாழைப் பழங்களை வீசி போட்டார்கள். குடிப்பதற்கு மொந்தை நீரை கேட்டு வாங்கிக் கொண்டான். யானை காலை பிணைத்துவிட்டு குளிப்பதற்குப் போனான்.

அவனை குளிப்பாட்டுவதற்காக அவனுக்கு பிரியமான தேவரடியார்கள் தொடர்ந்தார்கள். அவன் மழைக்கு நடுவே பெண்கள் முதுகு தேய்த்து குளிப்பதை ஊரில் வேலை இல்லாமல் இருந்த சிலர் உட்கார்ந்து வேடிக்கை பார்த்தார்கள்.

பூம்புகார் என்ற இந்த நகரம் முன்பு ஒருமுறை கடற்கோள் ஏற்பட்டு அழிந்ததாக ஒரு காவியத்தில் இருக்கிறது என்று கேள்விப்பட்டிருக்கிறேன். படித்ததில்லை. கடற்கோள் என்பது வெறும் புயல் காற்று அல்ல. கடல் பொங்கி உள்ளே நுழைவது. செம்படவர்கள் இருக்கின்ற இடங்கள் எல்லாம் அழிந்துவிட்டன. அந்த ஜனங்கள் மேட்டுப் பகுதிக்கு வந்துவிட்டார்கள். குதிரைகளின் கொட்டகைகளை திறந்துவிட்டு குதிரைகளை வெளியே அனுப்பிவிட்டு மக்கள் பாதுகாப்பாக இருக்கிறார்கள். இரண்டு நாளாயிற்று. சீறல் நிற்கவே இல்லையே.

இராஜேந்திர சோழர் கவலையோடு பார்த்தார்.

ஒருவேளை ஊருக்குள் நுழைந்துவிடுமோ. பூம்புகார் தாண்டி மற்ற கிராமங்களின் நிலை என்ன. எதுவும் தெரியவில்லை. தனக்குத்தானே பேசியபடி இராஜேந்திரர் அலுத்துக் கொண்டார்.

''இப்பொழுது மரக்கலம் எடுத்தால் எப்படி இருக்கும்.''

மூலையில் இருந்தவனை வீரமாதேவி கேட்டாள். இரண்டு சுற்று போர்வையால் தன்னை மூடிக் கொண்டிருந்தாள். அவள் வாய் வரை போர்த்தியிருந்தாள். உள்ளங்கால்கள் சில்லிப்பு ஏறி தொடைகள் நடுங்கிக் கொண்டிருந்தன.

''ஒரு திசையாக போக முடியாதம்மா. வடகிழக்கு பருவ காற்று தென்திசை நோக்கி நகருவது போல் இல்லை. இது சுழற் காற்று. கிழக்கு, மேற்கு, தெற்கு என்று எப்படி வேண்டுமானாலும் வளையும். சுற்றி சுற்றி வரும். ஏதாவது செய்து கொள் என்று தரையோடு உட்கார்ந்து கொள்ள வேண்டியதுதான். தரை என்றால் மரக்கல தளம். தளத்தோடு உட்கார்ந்து கொள்ள வேண்டியதுதான்.''

''பிறகு எப்போது நிற்கும்.''

''அதனுடைய விருப்பம். நம்மிடம் என்ன இருக்கிறது. எப்பொழுது மரக்கலனை செலுத்திக் கொண்டு கடலுக்குள்

நுழைந்துவிட்டோமோ, எது வேண்டுமானாலும், எப்பொழுது வேண்டுமானாலும் நடக்கும். கரை ஏறுவது என்பது கடவுளின் விருப்பம்.'' அவன் அழகாகப் பேசினான். நாகப்பட்டினத்து நாவாய்களில் முக்கியமானவன் என்று சொல்லப்பட்டது.

''மரக்கலம் கவிழ்ந்துவிடுமா.''

''கவிழும் நிலையும் வரும். ஆட்டத்தில் அது தெரிந்து விடும். தெரிந்த பிறகு முதுகில் ஒரு கூடை கட்டிக் கொள் வோம். அந்த கூடையில் வறுத்த மாமிசங்களும், பழங்களும், அரிசியும் இருக்கும். கரும்பு துண்டங்கள் இருக்கும். வெல்லம் நன்றாக இலையில் சுற்றப்பட்டு இருக்கும். நீர் குடுவை இருக்கும். மார்பு பக்கம் பெரிய மரப்பலகை இருக்கும். முதுகில் கூடையும், மார்பில் பலகையும் ஒன்றாக சுற்றிக்கொண்டு மரக்கலம் சாயும்பொழுது கடலில் குதித்துவிட வேண்டியதுதான். மரக் கலம் தள்ளி மரப்பலகையில் மிதந்து நீந்த வேண்டியதுதான். ஏனென்றால் பாய்மரக் கப்பலின் தடி தாக்கிவிடக் கூடாதல் லவா. அப்படி தாக்கினால் எழ முடியாதல்லவா. காற்றின் வேகத் தில் மரக்கலத்தின் தூண் மிக வேகமாக வந்து இடிக்கும். எனவே விலகி நகர்ந்துவிட வேண்டும்.

''மார்பு பக்கம் பலகை என்கிறாய். பிறகு எப்படி நீந்துவது. நீ முதுகு பக்கம் விழுந்துவிட்டால் என்ன செய்வாய்.''

''நேரே மாமிசங்களுடன், பழ வகைகளுடன் சொர்க்கம் போக வேண்டியதுதான். பின்னே இருக்கும் கூடையும் கனமாக இருக்கும். புரண்டு நிமிர முடிந்தால் சந்தோஷம். இல்லையென் றால் மாமிச வாசனைக்கு மீன்கள் வந்துவிடும். சிறிய மீன்கள் கடலுக்கு அடியில் பதுங்கிக் கொள்ள சுறா மீன்கள் துள்ளி குதிக்கும். உங்கள் கூடையில் மாமிசம் இருப்பது தெரிந்துவிட் டால் நீங்களும் உங்கள் மாமிசமும் ஒரே கடியில் கபளீகரம் செய்யப்படும்.''

''இந்த மீன்களை எப்படியும் விரட்ட முடியாதா.'' வீரமா தேவி வியப்போடு கேட்டாள்.

''கெஞ்சி கேட்டுக் கொள்ளலாம்.'' அந்த வீரன் பதில் சொல்ல, இடி போன்று இராஜேந்திரர் நகைத்தார்.

''சிறிய படகுகள் நாவாயில் இருக்கும். அதில் வறுத்த மாமிசங்களும், பானைக்குள் அரிசி வைத்து இறுக முடியும்,

குடிநீர் பானை மூடி போட்டு கட்டப்பட்டதும் இருக்கும். அந்த படகில் ஏறி உட்கார்ந்து கொண்டு மாமிசம் தின்றும், வேக வைக்காத அரிசியை தின்றும் சிறிது நாள் சமாளித்துக் கொள் ளலாம். ஆனால் எந்த புயலும் இரண்டு நாளைக்கு மேல் இருப்பது இல்லை. மழை அதிகமாய் ஏழு நாட்களுக்குள் பெய்யும். அது மிகவும் அரிது. மழை பெய்தால் கவலை யில்லை. உடம்பு மழைக்கு பழக்கப்படுத்திக் கொள்ளும். ஒருவரை ஒருவர் அணைத்துக் கொண்டு சூடேற்றிக் கொள்ள முடியும். ஆனால் புயலுக்கு எதுவுமே செய்ய முடியாது. படகு கரகரவென்று சுற்றும். வயிறு பிரட்டும். யோசிக்கவே முடியாது. அப்படியே குனிந்து மரப்பலகையை பிடித்துக் கொண்டு அழ வேண்டியதுதான்.'' அவன் நடித்து காண்பித்தான். சிரிப்பாக இருந்தது.

''ஏதோ பாட்டு பாடுவீர்களாமே.''

''ஆமாம். ஐயா.'' அவன் பணிவோடு சொன்னான்.

''பாட்டு பாடு.''

''நின்று பாட முடியுமா. புயல் அடிக்கிறது இல்லையா. குனிந்துதான் பாட வேண்டும்.''

''எப்படி.''

அவன் முதுகு வளைத்து மண்டியிட்டான். மரப்பலகை போல் ஒன்றை பிடித்துக் கொண்டான்.

''கடல் அரசே, கடல் அரசே, காலை பிடித்து கெஞ்சுகின் றேன். கருணையோடு வழி காட்டு. காப்பாற்றி கரை சேரு என்று பாடுவோம்.'' அவன் பாடினான். அப்பொழுதும் சிரிப்பு தான் வந்தது.

''வீரமாதேவி இப்பொழுது சிரிக்கிறாய் அல்லவா. பார். இதே கதி நமக்கு ஏற்படப் போகிறது. நீ அப்பொழுது என்ன பாடுகிறாய் என்று கேட்கப் போகிறேன்.''

''அவனுக்கு தெரிந்ததை அவன் பாடினான். நான் வேறு பாட்டு பாடுவேன்.''

''என்ன பாட்டு.''

''தோடுடைய செவியன் விடையேறித்
தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப் பொடிபூசி என்
உள்ளம் கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முன்னநாள்
பணிந்து ஏத்தருள் செய்த
பீடுடைய பிரமாபுரம் மேவிய
பெம்மான் இவன் அன்றோ.''

''அது ஏன் இந்தப் பாட்டு.''

''தூவெண் மதிசூடி. ஒரு பிறை நிலவு. குளுமையான நிலவு தெரியும்.''

''அப்படியென்றால்.''

''மேகம் இல்லை. மழை இல்லை. பிறை நிலவே தெரி கின்ற அளவுக்கு வானம் சுத்தமாக இருக்கிறது. நெற்றியில் விபூதி தரித்திருக்கிறேன். அது குளிர் காற்றினாலோ, மழை யினாலோ அழிந்துவிடவில்லை. தெள்ளத் தெளிவாக இருக் கிறது. மனதில் கவர்ந்து அவனே வந்து குடிவந்திருக்கிறான். நான் கூப்பிடவில்லை. அவன் திருடன். எனக்குள் புகுந்து கொண்டான். பிரம்மனுடைய புரம் எது, பூமி, அங்குதானே வாழ்க்கை இருக்கிறது. அங்குதானே வளர்ச்சி இருக்கிறது. எனவே பிரமாபுரத்திற்கு என்னை அழைத்துப் போ என்று கெஞ்சுகிறேன்.''

''அடேயப்பா. புது விளக்கமாக இருக்கிறதே.'' அவர் மனைவியை அணைத்துக் கொண்டார். மழை நின்றபாடில்லை. அவர்கள் பகலிலேயே உறங்கப் போனார்கள்.

''தஞ்சை தாண்டி மதுரை வரை பேய்மழையாம். சுழற் காற்றாம். இங்கே ஒரு துளி மழை கூட பெய்யவில்லை. ஆனால் கூதற்காற்று உடம்பை குடைகிறது.'' நாஞ்சில் நாட்டு படை வீரர்கள் ஒரு மலைச் சரிவில் ஒன்றுகூடி பேசிக் கொண்டிருந் தார்கள். சோழப்படைகள் வருகிறது என்றால் அங்கிருந்து தெளி வாகத் தெரியும். கிழக்கும், வடக்கும், மேற்கும் கண்ணுக்கு எட்டிய வரையில் தெரிகின்றன.

அப்படி படைகள் வருவது தெரிந்தால் போரிடுவது முறையல்ல. இப்போதைக்கு போர் அல்ல. மலையின் சரிவில் இறங்கி, அடுத்த மலையில் ஏறி ஒளிந்து கொள்ள வேண்டியது தான். மேற்கு தொடர்ச்சி மலை வழியாக கேரளத்திற்கு போய் விட வேண்டியதுதான். சேர தேசத்து கிராமங்களில் குடியேற வேண்டியதுதான். அந்த எல்லையில் இருந்தபடி பாண்டிய தேசத்தை கவனித்து வர வேண்டியதுதான். அவர்கள் கொஞ்சம் அலுப்போடும், துக்கத்தோடும் என்ன வழி என்ற கேள்வி யோடும் உட்கார்ந்திருந்தார்கள்.

''கிட்டத்தட்ட நான்கு வருடங்களுக்கும் மேலாக இப்படி குத்திட்டு இருக்கிறோம். எப்பொழுது மதுரையை தாக்கு வோம். எப்போது வசமாக்குவோம். எப்போது பாண்டிய வம்சம் மதுரையில் செங்கோல் பிடித்து ஆளும் என்று தெரியவில்லை. சொக்கநாதரை பார்க்காமல் ஒரு மாதிரி இருக்கிறது. ஒரு வேளாளனாக போய் பார்த்துவிட்டு வரலாம் என்று தோன்று கிறது.''

''மாட்டிக் கொண்டால் பிரம்பால் அடித்து சாகடிப்பார் கள். வடக்கே கங்கை கரை வரை போய் ஜெயித்து வந்திருக் கிறான். வெட்டுவதும், குத்துவதும் சோழப்படைக்கு எளிதாகி விட்டது. கொலை செய்யாத மறவனே இல்லை என்பதாகி விட்டது. எத்தனை பேரை வெட்டினேன் என்று தொடையை கீறி கணக்கு வைத்துக் கொண்டிருக்கிறான்.''

''புரியவில்லையே.''

''எப்படி கணக்கு வைத்துக் கொள்வது. ஓலை நறுக்கிலா எழுதிக் கொள்ள முடியும். மெல்லிய கத்தியால் தொடையின் மேலிருந்து கீழ் வரை கோடு போட்டிருக்கிறான். இப்பொழுது தழும்பாக, தெளிவாக தெரிகிறது. நூற்றுப் பதினேழு என்று ஒருவன் கணக்கு வைத்திருக்கிறானாம்.''

பாண்டிய வீரர்கள் பல் கடித்தார்கள். வேலால் தரையில் குத்தினார்கள். முன்னும், பின்னும் அலைந்தார்கள்.

''நூற்றி பதினெட்டு என்று அந்த நாயின் தொடையில் போட்டுவிட்டு தலையை சீவ வேண்டும்.'' ஒருவன் உரக்க கத்தினான். பலர் ஆமோதித்தார்கள். ஆனால் அது வெற்றுக் கூச்சலாக இருப்பது அவர்களுக்கே தெரிந்தது!

"நானூற்று ஐம்பது பேர் கொண்ட இந்தப் படை சோழப் படையை என்ன செய்ய முடியும். வெற்றிக் களிப்பில் இருக் கிறார்கள். விதம் விதமான மது வகைகளை அருந்துகிறார்கள். விதம் விதமான பெண்களை சுகிக்கிறார்கள். கடத்தி வந்த தேவரடியார்களை ஒன்று சேர்த்து நெடுக குடிசை போட்டு அங்கே தனியே வேளம் அமைத்து பொதுமகளிர் குடியமைப் பாக மாற்றிவிட்டார்கள்.

உழவுக்கும், மற்ற தொழிலுக்கும், கோவில் வேலைகளுக் கும், கற்பாறைகளை கொண்டு வருவதற்கும் நிறைய ஆட்கள் இருக்கின்றார்கள். அதில் நன்றி உள்ளவர்களுக்கு கையில் வேல் கொடுத்திருக்கிறார்கள். அந்தவிதமான படை திரட்டி னாலே மிக கனமான ஒரு படை திரண்டுவிடும். ஒட்டர்களும், உத்திரலாட, தட்சிணலாட வீரர்களும் கையில் வாள் கொடுத்து நாஞ்சில் நாட்டுக்கு போ என்று அனுப்பினால் நாம் எல்லோ ரும் சர்வ நாசம். ஆளுக்கு ஒரு பாண்டிய வீரன் தலையை கொண்டு வந்தால் பத்து கழஞ்சு என்று அறிவிப்பார்கள். குறைந்தபட்சம் ஒருவன் முப்பது கழஞ்சாவது சம்பாதிக்க மாட் டானா. நம் தலைகள் விலை போகாதா. எனவே, இந்த எண் ணிக்கையை வைத்துக் கொண்டு சோழப்படையை மிரட்டுவது என்பது அபத்தம்."

"ஏன் சேரன் துணைக்கு வர மாட்டேன் என்கிறான்."

"அதற்கு சோழ கேரளன் என்கிற இராஜேந்திர சோழனின் மகன் காரணம். இரவியின் மகனை ஸ்நேகம் வைத்துக் கொண்டு அவனிடம் எதிர்ப்பு செய்ய மாட்டேன் என்று சத்தியம் செய்திருக்கிறான். காந்தளூர்சாலை வேறு அடிபட்டு நொறுங்கிப் போயிற்று. அந்த சாலையை குமரிமுனையில் மறுபடியும் நிறுவி இருக்கிறார்கள். கொட்டகை போட்டு சண்டை போடாமல் குழி நோண்டி அதற்குள் சண்டை போடு கிறார்கள்."

"ஆமாம். கேள்விப்பட்டேன்."

"செம்மண்ணில் இரண்டு ஆள் ஆழத்திற்கு பெரிய இடம் வெட்டி, அதற்குள் இறங்கி அங்கே களரி வீரத்தையும், கம்பு வித்தையையும், கத்தி வீச்சும் கற்பிக்கிறார்களாம்."

"வெளியே பார்வைக்கு தெரியக்கூடாது என்றா."

"இல்லை. அது முக்கியமில்லை. உடம்பு சூடாக வேண்டும் என்று. உடம்பு உறுதிபட வேண்டும் என்று. பூமியின் வெப்பம் மேலே தாங்க வேண்டும் என்று. நரம்புகள் முறுக்கேற வேண்டும் என்று. பிறகு மேலேறி வந்தால் நீர் மோரும், சோற்றுக் கஞ்சியும் சாப்பிடுகிறார்கள். எளிதில் ஜீரணமாக வயல்கள் நோக்கி ஓடுகிறார்கள். குளித்துவிட்டு மறுபடியும் பயிற்சிக்கு வருகிறார்கள்."

"அங்கே எத்தனை பேர் தேறுவார்கள்." ஒருவன் கேட்க, தலைமையாய் இருந்தவன் வாய்விட்டு சிரித்தான்.

"சொல்லட்டுமா" என்றான்.

"சொல்லுங்கள். ஒரு.."

"ஒரு எல்லாம் இல்லை. பதினைந்து வீரர்கள்தான். அங்கு பயிற்சி மேற்கொள்கிறார்கள்."

"அடச்சே." பாண்டிய வீரர்கள் அலுத்துக் கொண்டார்கள்.

"அவர்களுக்கே பயிற்சி தரப்படுகிறது."

"ஏன் மற்றவர்கள் சேரவில்லை."

"சேர்க்கவில்லை."

"ஏன்."

"இந்த பதினைந்து வீரர்களுக்கு கடும் பயிற்சி அளித்து இவர்களை வெளியே அனுப்பி சேர தேசத்திலிருந்து இளைஞர்களை திரட்டி வர வேண்டுமென்பது ஆசை. ஆக, இது முதல் படி. ஆசிரியர்களை பயிற்சி செய்யும் விதம்."

"இன்னும் ஒரு வருடத்தில் அந்த இடத்தில் நூறு பேர்கள் இருப்பார்களா."

"இல்லை. ஆயிரம் பேர் இருப்பார்கள்."

"அடேயப்பா. அது போதுமா."

"அது போதுமே." ஒரு வீரன் கொக்கரித்தான்.

"அப்பொழுது பாண்டியர்களாக நாம் எத்தனை பேர் திரட்ட வேண்டும்."

''ஒரு வருடத்திற்குள் இரண்டாயிரம் பேர் திரட்ட வேண்டும்.''

''எங்கிருந்து.''

''பாண்டிய தேசத்திலிருந்துதான்.''

''எப்படி, நீ வந்திருக்கிறாய் என்பது மறுநாள் தெரிந்துவிடும். கோழி அமுக்குவதுபோல் அமுக்கிவிடுவார்கள். நடு சந்தியில் நிற்க வைத்து, பிரம்பால் அடித்து, இஞ்சியை நசுக்கி, மஞ்சளை பொடித்து அடித்த இடத்திலெல்லாம் தடவுவார்கள். அலறி அலறியே உயிர் போகும். உன் அலறல் கொடுத்த பயத்தில் ஊர் ஒரு எதிர்ப்பும் காட்டாது. இரண்டாயிரம் வீரர்கள் நமக்கு ஒரு வாய்ப்புதான் இருக்கிறது.''

''என்ன. என்ன வாய்ப்பு.''

''நம்மை விட ஈழம் தளர்ந்திருக்கிறது. இலங்கை அரசன் தெற்குப் பக்கம் ஓடிவிட்டான். அவனோடு ஒரு படை ஓடி இருக்கிறது. குமரியிலிருந்து இலங்கையின் தெற்கு பக்கம் போய் அங்கு ரோகணத்தில் உள்ளே புகுந்து, அங்குள்ள மன்னனிடம் நம் நிலைமையைச் சொல்லி, அங்கிருந்து ஆயிரம் வீரர்கள் வந்தால் அது பெரும் பாதுகாப்பு. இதற்கே நமக்கு ஒரு வருடம் ஆகும்.

எளிதில் இதை இலங்கை அரசன் ஏற்றுக்கொள்ள மாட்டான். நாம் போகிறோம் என்றால் ஈழத்து கடற்படை, சோழ தேசத்து கடற்படை நம்மை மறித்து தாக்கும். இதுவும் எளிதல்ல.

அப்படி ஆயிரம் பேர் இந்த நாஞ்சில் நாட்டில், கோட்டை துறைமுகத்தில் குமரி கண்டத்தில் ஒரு ஆயிரம் பேர், சேர தேசத்தில் ஒரு ஆயிரம் பேர் என்று மூவாயிரம் பேர் சேர்ந்தால் அடுத்த வருட மழைக் காலத்தில் மதுரையை தாக்கலாம். அதுவும் போரல்ல. இரவோடு இரவாக தாக்குதல். தீ வைத்தல். நம் ஊருக்கு நாமே தீ வைத்து சோழர்களை விரட்ட வேண்டும். இது எவ்வளவு பெரிய வேதனை தெரியுமா.'' அவன் சொல்ல, இன்னும் அயர்சி அதிகமாகியது.

''ஏதோ படை வருகிறது,'' உச்சியில் இருந்தவன் உரக்க கத்தினான். வீரர்கள் எழுந்து பார்த்தார்கள். கிழக்கிலிருந்து நூறு பேர் கொண்ட குதிரைப்படை வந்து கொண்டிருந்தது. அதில்

கொடிகள் பறந்து கொண்டிருந்தன. உற்று கவனிக்க வெள்ளைக் கொடியும், நீலக்கொடியும் தெரிந்தது. இன்னும் கவனிக்க மீன் சின்னங்கள் இருந்தன.

''சுந்தர பாண்டியன் வருகிறாரோ.'' ஒருவன் கேட்க, ''மறைந்து கொள்ளுங்கள்.'' தலைவன் உத்தரவிட்டான்.

அவர்கள் காடுகளுக்கு ஊடே போய் மறைந்து கொண்டார்கள். அங்கே ஒரு கிழவனும், கிழவியும் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். படை அவர்களை நோக்கி வந்தது. அவர்கள் தனியே இருந்த கிழவர்களை வேடிக்கைப் பார்த்தார்கள். ஒருவன் கொம்பூதினான். அது சுந்தர பாண்டியன் சங்கு. அவன் ஒலி, காடுகளுக்குள் மறைந்திருந்தவர்களுக்கு தெரிந்தது.

சுந்தர பாண்டியன் ஒரு பாறை மீது ஏறி நின்றான். ''வாருங்கள். வாருங்கள்.'' என்று சப்தம் போட்டான். தொலைவில் இருந்தவர்களுக்கு அவன் குரல் மெல்லியதாய் கேட்டது.

மஞ்சள் நிறத்து மீன் கொடியை உடைய நாஞ்சில் நாட்டு பாண்டியன் கீழ் இறங்கினான். அவனுக்கு அணைப்பாக அவன் படை போயிற்று.

பாறை மீதிருந்த சுந்தரபாண்டியன் கீழே குதித்தான். எதிரே வந்தவனை இனம் கண்டு கொண்டான். வேகமாக ஓடினான். தாவி அணைத்துக் கொண்டான். நாஞ்சில் நாட்டு பாண்டியன் தழுவிக் கொள்ள அவர்கள் கைகள் பிணைத்துக் கொண்டு வெகுநேரம் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டிருந்தார்கள். இருவர் கண்களிலும் கண்ணீர் வழிந்தது.

''அனாதையாய் போகிறோமே அய்யா.'' சுந்தரபாண்டியன் பிளிறினான்.

''தெருத் தெருவாய், கிராமம் கிராமமாய், காடு காடாய் அலைந்திருக்கிறோமே அய்யா.'' என்று மறுபடி கத்த, அவனை விட வயதில் பெரிய நாஞ்சில் நாட்டு பாண்டியன் அவன் முதுகில் தடவிக் கொடுத்தான். இருவரும் விக்கி அழுதார்கள். வீரர்களும் அழுதார்கள். எல்லார் அழுகைக்கும் பின்புலமாக கடும் கோபம் இருந்தது. ஒரு வெறி பரவி இருந்தது.

சட்டென்று சுந்தர பாண்டியன் முகத்தை துடைத்துக் கொண்டான்.

"ஏதாவது செய்ய வேண்டும். உடனடியாக செய்ய வேண்டும்."

"இப்பொழுதுதான் அதைப் பற்றி பேசிக் கொண்டிருந்தோம்."

"உடனடியாக என்ன செய்வது."

"அடுத்த வருட இறுதியில் ஒரு மூவாயிரம் வீரர்களோடு இரவு தாக்குதல் நடத்தலாம் என்று இப்பொழுதுதான் பேசிக் கொண்டிருந்தோம்."

"அடுத்த வருட முடிவிலா. இல்லை. இன்னும் அடுத்த பத்து நாட்களில் நடத்த வேண்டும்."

"எப்படி அய்யா முடியும். கோபம் மட்டும் இருந்தால் போதுமா. செயல்திறன் வேண்டாமா." நாஞ்சில் நாட்டு பாண்டியன் வேகமாகப் பேச, சுந்தரபாண்டியன் 'அமர்ந்து பேசலாம்' என்று சொல்ல, அவர்கள் உட்கார்ந்தார்கள்.

"வெகு தொலைவிலிருந்து வருகிறீர்கள். என்னிடம் பெரிதாக எதுவும் இல்லை. குரும்பாடு வெட்டச் சொல்கிறேன். பனங்கள் இருக்கிறது. ஆடு நிறைய கிடைக்கும். கள் அதிகம் இல்லை. எனினும் வாங்கி வரச் சொல்கிறேன்."

அவர்கள் தரையில் உட்கார்ந்து கொண்டார்கள்.

"இராஜேந்திர சோழன் ஜெயங்கொண்டத்தில் இல்லை. ஜெயங்கொண்டத்திற்கு புதிய பெயர் வைத்திருக்கிறார்கள். கங்கை கொண்ட சோழபுரம்."

"கேள்விப்பட்டோம். இராஜேந்திரன் எங்கே."

"கடற்கரையோரம் நகர்ந்துவிட்டதாகவும், மரக்கலன்களை செப்பனிடப் போவதாகவும் சொல்லப்பட்டது. அவனோடு அவன் மனைவி வீரமாதேவியார் போயிருக்கிறார்."

"நாகைக்கா."

"இல்லை. இப்போதைக்கு பூம்புகார். பிறகு நாகை நோக்கி நகரலாம்."

"அதாவது..."

''அதாவது அடுத்த படை எடுப்பு துவங்கிவிட்டது. அந்த படையெடுப்பின் ஆரம்பமாக நாகை. நாகையிலிருந்து கொற்கை என்று தென்திசை கடல்வழியே இராஜேந்திரன் வரலாம். குமரி முனை வரையிலும் வரலாம். பெரும் நாவாய் களை தொலைவில் நிறுத்திவிட்டு படகுகளில் குமரி முனை நோக்கி வந்து அங்கிருந்து உள்ளுக்குள் நுழையலாம்.'' அவன் சொல்ல, எல்லோரும் திடுக்கிட்டார்கள்.

''அவன் ஸ்ரீ விஜயம் நோக்கி போவதாக அல்லவா சபதம் எடுத்துக் கொண்டிருக்கிறான்.''

''அதற்கு முன் உங்களை சும்மா விட முடியுமா.''

''நம் இருப்பு அவனுக்குத் தெரியுமா.''

''தெரியாது போகுமா. நன்றாகத் தெரியும். நாம் இணைந் திருக்கிறோம் என்று தெரியும். நம்மிடமிருந்து தொந்தரவு எப்பொழுது வேண்டுமானாலும் வரும் என்று தெரியும். ஆகவே, பத்து நாட்களுக்குள் நாமே மதுரையை தாக்குவது. நீங்கள் சொன்னது போல இரவு நேர தாக்குதல் நடத்திவிட்டு திரும்பி ஓடிவிடுவது என்று சொல்லலாம். நம் மதுரையை நாமே அழிக்க வேண்டும் என்பதுதான் இதில் வேதனை. ஆனால் வேறு வழி இல்லை.

இப்போதே கிளம்பினால்தான் நாம் மதுரையின் எல்லைக் குள் பதுங்கி பதுங்கி நுழைய முடியும். ஒரு படையெடுப்பு போல விரைவாக போக முடியாது. ஒரு குதிரை வேகமாக போனால் இரண்டு குதிரைகள் உன்னை பின்தொடர்கின்றன. அருகே வந்து நெருங்கி நிற்கச் சொல்கின்றன. இழுத்து கீழே இறக்கி விசாரிப்பு நடக்கிறது. ஒரு பதில் தவறாக இருந்தாலும் கை, கால் களை கட்டி ஓரமாக நிற்க வைத்து விடுகிறார்கள். இல்லை யெனில் அடிக்க துவங்கி விடுகிறார்கள். ஆக, ஒரு கிராமம் கடக்கவே நமக்கு பல மணி நேரங்கள் ஆகும்.

மாட்டு வண்டிகளில் படுத்து மேலே வைக்கோல் போட்டு நாம் போக வேண்டும்.''

அவர்களுக்கு பனங்கள் தரப்பட்டது. ஆடு தசைகளை குச்சியில் குத்தி, நெருப்பில் வதக்கி, மேலே நெய் விட்டு பொரித்தது போல கொடுத்தார்கள். இலையில் கறியை பிடித்துக்

கொண்டு சூடு தாங்கிய வண்ணம் அதை ஊதி ஊதி வந்த பாண்டியர்கள் சாப்பிட்டார்கள். கிட்டத்தட்ட நல்ல விருந்தே அங்கு நடந்தது.

''அந்த கிழவனும், கிழவியும் எங்கே.'' சுந்தரபாண்டியன் திடீரென்று கேட்டான். மற்றவர்களும் தேடினார்கள்.

''அவர்கள் இந்த ஊர்க்காரர்கள்தான். மலையில் மூலிகை பறிக்க வருவார்கள். அந்த கிழவன் ஒரு வைத்தியன். எங்கள் கால் வலிகளுக்கெல்லாம் மருந்து காய்ச்சி கொடுத்திருக்கிறான்.''

''அது சரி. அவன் எங்கே.'' சுந்தர பாண்டியன் கேட்க, நாஞ்சில் நாட்டு பாண்டியன் படைகள் விழித்தன.

''நீங்கள் சரியான பாதுகாப்பில் இல்லை என்று தோன்றுகிறது.'' சுந்தரபாண்டியன் சீறினான்.

அந்த கிழவனும், கிழவியும் கோவேறு கழுதைகளில் ஏறி கிழக்கு நோக்கி, கருவேல மர காடுகளூடே நகர்ந்து கொண்டிருந்தார்கள். மறுநாள் கொற்கை துறைமுகத்தில் இந்த விஷயம் சொல்லப்பட்டது.

கடல் வழியே போக முடியாது என்று கடற்கரை வழியே பத்து குதிரைகள் பறந்தன. அன்று மாலையே இராஜேந்திர சோழருக்கு மூன்று பாண்டியர்களின் ஒற்றுமை தெரிவிக்கப் பட்டது.

ஜெயித்த இடத்தில் அதிகம் ஒற்றர்கள் வைப்பது சோழர்களுக்கு கைவந்த கலை.

★ ★ ★

அத்யாயம் 87

நீர் நிரம்பிக் கிடந்தது. முக்கால் திட்டத்திற்கு வெட்டிய ஏரியில் இந்த வடகிழக்கு பருவமழை காரணமாக, காவிரியில் வெள்ளம் ஏற்பட்டதன் விளைவாக, கொள்ளிடத்தில் பிரிந்து, கொள்ளிடத்திலிருந்து கால்வாயில் இறங்கி, அந்த கால்வாய் ஜலமும், மழை ஜலமும் ஒன்றாகக் கலந்து அந்த ஏரி மிகப் பெரிதாக பரந்து கிடந்தது. 'சோழ கங்கம்' என்று அதற்கு பெய ரிட்டது மிகச் சரியான விஷயம் என்று தோன்றியது.

கங்கையின் பரப்பு எப்படி கண்ணுக்கு தெரியவில்லையோ அப்படி எதிர்கரை தெரியாது இந்த ஏரி இருந்தது. போர் வீரர்கள் தங்கள் குடும்பத்தினருக்கு, ''இவ்வளவு தூரம் இருக்கும், கங்கையினுடைய கிளை நதியே. கங்கை இன்னும் பிரம்மாண் டம். ஏரி அமைதியாக இருக்கிறதல்லவா. இல்லை இரவு நேரம் கங்கை அலை அடித்துக் கொண்டு போகும் சப்தம் கேட்கும். நல்ல மழை நாளில் சீறலாகவே போகும். இப்படி ஒரு கட்டை போட்டால் அந்த வேகத்திற்கு கட்டை போகும்.'' தன் வலக் கையை நீட்டி விரைவாக அவன் விரித்துக் காட்டினான்.

''ஒரு குதிரையின் வேகம் இருக்குமா.'' ஒரு பையன் ஆவ லாகக் கேட்டான்.

''நிச்சயம் இருக்கும். பொங்கி புரண்டு ஓடும். எதிர்க்கவே முடியாது. ஆற்றோடே போய் ஏறலாம், அதுவே மிகக் கடினம்.''

''ஏன்.''

''உருட்டி உள்ளே சொருகிவிடும். முதலைகள் ஏராளமாக இருக்கும். இப்பொழுது இந்த படகில் எவ்வளவு நிம்மதியாக பயணம் செய்து கொண்டிருக்கிறோம். அந்தப் படகு வேகம் அதிகம். அது தவிர, முதலைகள் சூழ்ந்து அடிக்காது இருக்க வேண்டுமே என்ற கவலை இருக்கும்.''

''முதலைகள் சூழ்ந்து அடிக்குமா. யாரை.''

''படகை.'' அந்த பையன் கேட்க, மத்திம வயது வீரன் பதில் சொன்னான்.

''படகுக்கு ஏன் முதலை வருகிறது.''

''மென்று தின்பதற்குத்தான்.''

''யாரை.''

''யார் ஏறி இருக்கிறார்களோ. அவரை.''

''அப்படி வருமா.''

''ஆமாம். முதலைகள் வேட்டையாடும், மனிதர்களின் கறி மிகவும் பிடிக்கும். படகுக்கு அருகே வந்து படீரென்று வாலின் உதவியால் பக்கபலகையை அடிக்கும். அடியில் புகுந்து மேலே தூக்கி கீழே இறக்கும். நிலைகுலைந்து யாராவது விழ மாட்டார் களா என்று காத்திருக்கும். இங்கே ஒரு கதை உண்டு.''

''என்ன கதை.''

''அடுத்த கிராமத்திலிருந்து இந்த கிராமத்திற்கு நாற்பது, ஐம்பது பேர் ஒரு படகிலே பிரயாணம் செய்து கொண்டிருந்தார் கள். கோதுமை மூட்டைகள் அடுக்கப்பட்டிருந்தன. படகு ஆற்றின் ஓட்டமாகவே எதிர்கரைக்கு பயணித்தது. அதாவது நேர் குறுக்காக போகாது, ஆற்று ஓட்டம் எந்த பக்கம் இருக் கிறதோ அந்த பக்கமே நகர்ந்தது. ஆனால் அதிகம் விலகாமல் இருக்க கோல் வைத்து திருப்பியும், துடுப்பு வைத்து திருப் பியும் படகை செலுத்திக் கொண்டிருந்தார்கள். திடீரென்று படகை சுற்றி முதலைகள். ஒன்றிரண்டா, பலநூறா, ஆயிரமா. கணக்கு தெரியாது. படேர் படேர் என்று அடித்தன. எப்பொழுது வேண்டுமானாலும் நீரில் ஊறிய மரம் உதை வாங்கி உடையும் என்று தோன்றியது. அந்த படகோட்டி நாலாபுறமும் பார்த்தான். யார் யார் இருக்கிறார்கள் என்று பார்த்தான். நிறைய வாலிபர் கள். அவர்கள் கோல்களால் முதலைகளை அடித்து விரட்ட முயற்சி செய்து கொண்டிருந்தார்கள். அதிகம் பேர் பெண்கள். திருமணமாகி, திருமணமாகி குழந்தை பெற்று என்று அதிகம் பெண்கள். அந்த படகோட்டி வேகமாக முன்னேறினான். ஒரு பெண்மணியின் மடியில் ஆறு வயது பையன் அமர்ந்திருந்தான்.

அவனை நோக்கி படகோட்டி ஓடி அவனை பிடித்து இழுத்தான். அந்த பெண்மணி பயத்தில் கத்தினாள். எதிர்பக்கம் இழுத்துக் கொண்டு போனான். படகில் தளத்தில் நின்றவாறு அந்த பெண்மணியை நோக்கி கத்தினான். 'இது உன் குழந்தையா.' 'ஆமாம்.' என்று அவள் பதில் கூறினாள். 'கடைசியாக பார்த்துக் கொள். இவனை கங்கையில் போடப் போகிறேன். வேறு குழந்தை பெற்றுக் கொள்' என்று கூறி, அந்த பையனை தொலைவே வீசி அடித்தான். அந்த குழந்தை, ஆறு வயது சிறுவன் சற்று தள்ளி நீரில் விழுந்தான். முதலைகள் ஒரே பாய்ச்சலில் அந்த பையன் மீது பாய்ந்தன. ரத்தம் கொப்பளித்தது. கை வேறு, கால் வேறாக வெளியே தெரிந்தது. முதலைகள் ஆவலாக சாப்பிட்டன. அவைகளுக்குள் அடித்துக் கொண்டன.

அவன் படகை வேகமாக தள்ளி, பலரையும் துடுப்பு போடச் சொல்லி கரைக்கு வந்தான். கரையில் வேகமாக இறங்கினார்கள். முதலைகள் பின்தொடர்ந்து பிறகு நீரோட்டத்தில் மிதந்து போயின.

அந்த படகோட்டியை தலைவரிடம் சமர்ப்பித்தார்கள்.

'ஐம்பது பேரை பலியாவதை தடுப்பதற்காக இந்த ஆறு வயது சிறுவனை வீசினேன். இல்லையெனில் ஐம்பது பேரும் பலியாகி இருப்போம். இதைத் தவிர எனக்கு வேறு வழி இல்லை. அந்த தாயின் மீதோ அந்த சிறுவன் மீதோ எனக்கு எந்த தீங்கும் இல்லை. எந்த தண்டனை கொடுத்தாலும் வாங்கிக் கொள்கிறேன்.' என்று கைகட்டி சொன்னான். தலைவன் அவனை மன்னித்து விடுவித்தான். அந்த பெண்மணிக்கு நிலம் வாங்கிக் கொள்ள காசு கொடுத்தான். அவள் துக்கம் கண்டு ஊராரும் அவரவர்க்கு முடிந்த அளவு உதவி செய்தார்கள். அந்த படகோட்டியை எல்லோரும் பாராட்டினார்கள்.

அவன் செய்தது சரியா, தவறா. திகைத்திருந்தபடி படகில் இருந்த மக்கள் தண்ணீரை பார்த்தார்கள்.

நல்லவேளை இந்த ஏரியில் முதலை இல்லை. சந்தோஷப்பட்டார்கள். கங்கைக்கு எப்படியாவது போய் அதன் ஓட்டத்தை, முதலையை, கரையில் நிற்கும் கோவில்களை பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டார்கள். மிகச் சீரான பாதை இருக்கிறதாமே என்று வியந்தார்கள்.

அந்த படகு திரும்பி வந்தது. கரை முட்டியது. தப்பித்து வந்தவர்கள் போல படகில் இருந்தவர்கள் கரையில் குதித்தார் கள். தரைதான் பத்திரமான இடம். தண்ணீர் அப்படி இல்லை என்று சொல்லிக்கொண்டார்கள்.

அருண்மொழிப்பட்டனும், அரையன் ராஜராஜனும் சிறு படையோடு ஏரிக்கரைக்கு வருவது தெரிந்தது. ஜனங்கள் விலகி வழிவிட்டார்கள்.

'சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜேந்திர தேவர் வாழ்க' என்று முழக்கமிட்டார்கள். வீரர்கள் மெல்ல விலக்க, அந்த குதிரைகள் இரண்டும் கரையோரம் வந்து நின்றன. செயற்கரிய செயல்கள் செய்த அந்த இரண்டு வீரர்களும் தரையில் இறங்கி னார்கள். இடுப்பில் கை வைத்து ஏரியை பார்த்தார்கள்.

''ஒரு சுற்று போய் வரலாமா,'' படகோட்டியை அரையன் ராஜராஜன் கேட்டார்.

''சித்தமய்யா. எத்தனை பேர் வரப்போகிறீர்கள்.''

''நானும், அருண்மொழிபட்டன் மட்டும் வரப் போகிறோம்.''

''பாதுகாப்பிற்கு வீரர்கள் வேண்டாமா.'' இன்னொரு தளபதி முன்வந்து கேட்டான்.

''வேண்டாம் நண்பா. சில இரகசியங்கள் பேச வேண் டியது இருக்கிறது.'' அவர் இடுப்பிலிருந்து பை உருவி ஒரு பொற்கழஞ்சு எடுத்து படகோட்டியிடம் நீட்டினார்.

''அய்யா, இது என்ன. உங்களிடம் காசு வாங்க மாட்டேன்.''

''நெடுநேரம் நாங்கள் அங்கு நிற்கும்படி இருக்கும். எனவே வாங்கிக் கொள். இலவசமாக எவருக்கும், எதுவும் தர வேண்டாம். அப்படி செய்தால் அது கையூட்டாக போய்விடும். உனக்கு உண்டான கூலி உனக்கு. யாராக இருந்தாலும் கூலி கொடுத்தே ஆக வேண்டும்.'' அவர் அவன் கையை பிடித்து இழுத்து அழுத்தினார். படகோட்டி வெட்கப்பட்டான்.

'கையில் காசு இல்லை. அக்கரைக்கு கொண்டு போய் விடு', என்று இலவசமாக ஏறிக் கொள்வது என்பது சோழ தேசத் தில் பிரசித்தம். காசு கொடுத்து இடரிக வாங்குவார்கள். ஆனால் படகோட்டிக்கு தர விருப்பம் இல்லாது இருப்பார்கள். 'ஒற்றை

செப்பு இல்லைய்யா', என்று உதறி காட்டுவார்கள். ஆனால், தலைப்பாகையில், கைக்கோலில், கோமணத்தில் சுருட்டி வைத்திருப்பார்கள். ஒரே ஒரு செப்பு காசுக்கு நெஞ்சு உடைய படகு தள்ளிக் கொண்டிருந்த காலங்களெல்லாம் உண்டு. ஆனால் இப்பொழுது மாறிவிட்டது. ஒரு கழஞ்சு கொடுக்கின்ற வீரர்கள் அதிகம் இருக்கிறார்கள்.

ஒரு வீரன் முன்னேறி அந்த படகோட்டியிடம் ஆயுதங்கள் இருக்கிறதா என்று தடவி பார்த்தான். இல்லையென்று அரையரை நோக்கி தலையசைத்தான். இன்னொருவன் முன்னேறி இரண்டு பஞ்சு உருண்டையை அந்த படகோட்டியின் காதில் திணித்தான். பிறகு தலைப்பாகையை இறுக கட்டிக் கொள்ளச் சொன்னான். பளிச்சென்று அவனை திருப்பினான். அவன் தாயை வில்லங்கமாக அழைத்தான். படகோட்டிக்கு எதுவும் காதில் விழவில்லை. கூட்டம் சிரித்தது. படகோட்டியும் சிரித்தான். அவனுக்கு காதில் விழவில்லை என்பது உறுதியாயிற்று.

முழங்கால் நீரில் அருண்மொழி நடந்து படகை பிடித்துக் கொள்ள, கரைப்பகுதியில் நின்ற படகு விளிம்பில் காலில் நீர் படாமல் அரையன் ராஜராஜன் ஏறிக் கொள்ள, அருண்மொழியும் தாவி ஏறினான். படகோட்டி பிறகு ஏறி கொம்பு ஊன்றி படகை உள்ளே தள்ளினான். படகு நிதானமாக துடுப்பு போட, உள்ளே நகர்ந்தது. ஜனங்கள் கரையிலிருந்து கை வீசினார்கள். அரையரும் பதிலுக்கு கை வீசினார். அருண்மொழிபட்டன் கைகூப்பினான்.

ஜனங்கள் கலைந்து போவதை பார்த்தார். கிட்டத்தட்ட ஏரிக்கு நடுவே படகு நின்றது.

''எதற்கு இவ்வளவு தனிமையான இடத்தில் போக வேண்டும் என்று ஆசைப்பட்டீர்கள்.'' அருண்மொழிபட்டன் கேட்டான். மேல் துண்டால் கால்களை துடைத்துக் கொண்டான். சற்று நீரில் நனைத்து துண்டால் முகம் துடைத்துக் கொண்டான். பளிச்சென்று இருந்தான். செந்தூர திருமண் இட்டு அந்த இடம் தழும்பாகப் போயிருந்தது. அதுவே நாமம் போலும் காட்சி கொடுத்தது.



வங்காளத்து பாலர் கலை கணபதி. முதலாம் இராஜேந்திர சோழனால் கொண்டு வரப்பட்டது. குடந்தை நாகேஸ்வரர் கோவிலில் இன்றும் வழிபாட்டில் இருக்கிறது.

அடர்த்தியான குடுமி, ஒரு நரைமுடி கூட இல்லை. லேசான தாடி. சங்கிலியில் மார்பு குறுக்காக போட்டு அதில் கத்தியை தொங்கவிட்டிருந்தான். சங்கிலி தோலில் உறுத் தாமல் இருக்க, அதைச் சுற்றி துணி கட்டப்பட்டிருந்தது.

அருண்மொழிபட்டனின் வாள் உறை மரப்பட்டையால் ஆனது. அதன்மீது இறுக்கமான துணியால் தைக்கப்பட்டிருந்தது. அது குறுவாள் அல்ல. நீண்ட முதுகு வாளும் அல்ல. இரண் டுக்கும் நடுவே உண்டானது. பிடியில் வேலைப்பாடுகள் இல்லை. ஆனால் உறுதியாக பளபளக்கின்ற தன்மையோடு இருந்தது. அருண்மொழிபட்டன் எப்பொழுதும் வாளோடு தான் இருக்கிறான். அது தவிர, ஒரு சிறு கட்டாரி அவனுடைய நடு முதுகில் வேட்டியோடு மறைத்து கட்டப்பட்டிருக்கும். ஒருவேளை கத்தி பறிக்கப்பட்டாலும் கட்டாரி எடுத்து வீச அவனால் முடியும். இடுப்பு கட்டாரி மட்டுமல்ல. அவனுடைய செருப்பின் நீண்ட தோல்வார் நடுவே சிறிய இரும்பு சக்கரங்கள் இருக்கும். அவைகள் முனை கூரியதாய் இருக்கும். அவைகளை பிடுங்கி வீசவும் அவனால் முடியும். அவனுடைய குடுமியை இறுக்க சுற்றி ஒரு கொண்டை ஊசியை போட்டு அழுத்தி யிருப்பான். அந்த கொண்டை ஊசி கையில் இருந்தால் போதும், அவனை யாராலும் நெருங்க முடியாது. கையிலே கங்கணம். அவை எங்கோ அழுத்தினால் கூரிய முனைகள் தோன்றும். கையில் இருந்த கங்கணத்தை எடுத்து உள்ளங்கையில் அதக்கிக் கொண்டு அதனால் அருண்மொழிபட்டன் தாக்குவதை அரையன் ராஜராஜன் பார்த்திருக்கிறார். மறவர்களுக்கே உண்டான வீரக் கழல் அருண்மொழிபட்டன் அணிந்திருக்கிறான். அது சிங்க முகம். எவர் முகத்தையாவது தாக்கினால் மண்டை சிதறுவது நிச்சயம். அருண்மொழிபட்டனிடம் இருப்பது விரைவு. உயிர் வாழ எந்தவித போர் தந்திரங்களையும் செய்யலாம் என்பது அவன் போர்விதி. எடுத்தவுடன் மண்ணை அள்ளி முகத்தில் போட்டு விடுகின்ற சூட்சமமும் அவனிடம் உண்டு. எதிராளியை உணர்ச்சிவசப்பட வைத்து, அலைக்கழித்து சோர்வானபோது ஒரு மிருக தாக்குதல் நடத்தி கீழே சாய்ப்பான். எதிராளியிடம் பேச்சு கொடுத்து உணர்ச்சிகளை எழுப்பி தாக்குவதும் அவன் வழி. 'பன்றி மாதிரி இருக்கிறாயே, உன் தாயும் அப்படித்தானே இருப்பாள். பொது மகளீரா. உன் எதிரேயே பல பேரை...' என்று பேச ஆரம்பிப்பான்.

அவன் வெறி ஆவான், வேகமாவான். அவனை தாக்கவிட்டு அயற்சி ஆக்கி பிறகு வெகு எளிதாக அவனை மடக்கி போடு வான்.

ஆனால் அருண்மொழி கொல்வதில்லை. மிக வேகமாக முடமாக்குவான். கொல்லாமல் இருக்கவே முயற்சிப்பான். தரையில் அடித்து மூளையை கலங்கடித்தலும், முதுகை முறித் தலும், முழங்கால்களை கத்தியின் பட்டையால் அடித்து நொறுங்க வைப்பதும், இரண்டு கணுக்காலிலும் ஏறிக்கொண்டு இரண்டு உள்ளங் கைகளையும் கத்தியால் குத்துவதும் அருண் மொழி செய்வதை பார்த்திருக்கிறார். இரண்டு கைகளும் இல்லை. இரண்டு கால்களும் இல்லை. வெறுமே மல்லாந்து கிடக்க வேண்டியதுதான் என்பதாக செய்துவிடுவான். அருண்மொழி அந்தணன். ஆனால் மறவனை விட, மிக வேகமாக, மிக ஆர்வமாக மிகக் கொடூரமாக போர் செய்வதில் விருப்பம் உள்ளவன்.

'இந்த குணம் எப்படி வந்தது அருண்மொழி' என்று கேட்க,

''என் மௌனத்தில் நான் சம்பாதித்தது,'' என்று அருண்மொழி பட்டன் பதில் சொன்னான்.

''மௌனத்தில் சம்பாதிப்பதா. எனக்கு புரியவில்லையே.'' அரையன் கேட்டிருக்கிறார்.

''உலகம் என்று ஒன்று இருந்தால் அதில் ஒருவருக்கு இருவர் இருந்தால், நட்பு என்பதும் எதிரி என்பதும் நிச்சயம் உண்டு. இரண்டாவது மனிதன் இருந்தாலே அவன் இந்த இடத்தில் ஏதாவது ஒரு பக்கம் நிற்க வேண்டும். நேற்று நண்பன். இன்று எதிரி. இன்று எதிரி, நாளை நண்பன் என்று இந்த உறவு மாறிக் கொண்டிருக்கும். நான் யார் என்பது இந்த மௌனத்தில் தேடுகிறபோது நான் என்பது மிக முக்கியம் என்பதை தெரிந்து கொண்டேன்.''

''இன்னும் தெளிவாகச் சொல்.''

''நான் இல்லாவிட்டால் இந்த பூமி இல்லை. நான் இல்லா விட்டால் இந்த வானம் இல்லை. நான் இல்லாவிட்டால் இந்த ஏரி, இந்த நதி, இந்த காடு, இந்த அரசு எதுவும் இல்லை. நான் என்று ஒருவன் இருப்பதாலேயே இவையெல்லாம் அர்த்தப்

படுகின்றன. இவையெல்லாம் அர்த்தப்பட வேண்டுமென்றால் நான் இருந்தாக வேண்டும். எனவே இந்த உலகில் யார் முக்கியம். எது முக்கியம். நானே முக்கியம். எனக்காகவே இந்த உலகம்.

நான்தான் முக்கியம் என்றால் இந்த உலகம் எனக்கு கீழ்ப் படிய வேண்டும்.''

''அடேய், அருண்மொழி, இது அசுரத்தனமாக அல்லவா இருக்கிறது.''

''ஆமாம். இதற்கு பெயர்தான் அசுரம். சுரம் என்றால் காடு. அசுரம். காடு அல்லாதது. அதாவது வெறும் வெட்டவெளி. அந்த வெட்டவெளியில் நான் மட்டுமே புள்ளி. நானே முக்கியம். தானே உன்னதம். அடுத்தவர் எவரும் இல்லை.''

''உனக்கு தலைவர் இல்லையா.''

''நான் ஏற்றுக் கொண்டால் தலைவர். எனக்கு இதமாக இருந்தால் தலைவர். எனக்கு பிடித்திருந்தால் தலைவர். என்னை மதித்தால் தலைவர்.''

''கொஞ்சம் அலட்டலாக இல்லை.''

''அலட்டல் என்று சொன்னால்தான் புரியும். இதை ஏன் சொல்ல வேண்டும்.''

''இதுவும் புரியவில்லை அருண்மொழி.''

''யோசிக்க மறுக்கிறீர்கள் அரையன் ராஜராஜரே. தலைவனாக இருப்பது ஒரு சௌகரியம் என்றால் தலைவனாக இல்லாது இருப்பதும் ஒரு சௌகரியம். என்னையும் பாதுகாத்து, அவனையும் பாதுகாக்க வேண்டிய அவசியம் அவனுக்கு உண்டு. அப்படி அவன் என்னை பாதுகாக்கவில்லையென்றால் அவன் எனக்கு தலைவன் இல்லை. நான் என் தலைவனை பாதுகாக்கிறேன். என் தலைவன் என்னை பாதுகாக்கிறான். ஒருவேளை இந்த தலைவன் என்னை மறுத்துவிட்டால் நான் என்னை காத்துக் கொள்ள வேண்டி வரும். என்னை காத்துக் கொள்ள என் தலைவன் இடைஞ்சல் செய்தால் அவனை அகற்ற வேண்டி வரும்.''

''அடேய், என்ன முரட்டுத்தனமடா இது.''

''இது உண்மை. சிறு புழுவுக்கும் இதுதான் நிலைமை. உற்றுப் பார்த்தால் உன்னை பார்த்து வணக்கம் சொல்லிவிட்டு புழு நகர்ந்துவிடும். தொட்டு பார்த்தால், வேண்டாம் தொடாதே என்று விலகிப் போகும். வழி மறித்தால் நச்சென்று ஒரு கொட்டு வைக்கும். அதனுடைய ஆயுதம் எதுவோ அதை தவறாது தெளிவாக உன்மீது பிரயோகிக்கும்.

சிறு புழுவிற்கும் இதுதான் விதி எனில் ஆறு அறிவு படைத்த மனிதனாகிய நாம் எப்படி இருக்க வேண்டும்.''

''உன்னுடைய நாராயண தத்துவமெல்லாம் என்ன ஆயிற்று.''

''மதம், தத்துவம், கடவுள் நம்பிக்கை, காதல், மனைவி, மக்கள் இவையெல்லாம் சமாதான காலத்து செல்வங்கள். இருட்டு, பகல் என்று இரண்டாக பிரிவது போல, அரையன் ராஜரே, வாழ்க்கை அமைதியானது, அமைதியற்றது என்று இரண்டாக பிரியும்.

கலிங்கத்தில் நுழைந்து கொண்டிருக்கிறோம். மனைவியின் பிருஷ்டத்தையா நினைத்துக் கொண்டிருப்பது. இல்லையே. உள்ளுக்குள்ளே போய் உயிரை பணயம் வைத்து சூறையாடப் போகிறோம். குழந்தைகளையா மனதிற்குள் தூக்கிக் கொண்டு கொஞ்சிக் கொண்டிருப்பது. தகப்பனின் மீது பிரேமையோடா வணங்கிக் கொண்டிருப்பது. என்னையும் காத்துக் கொண்டு என் எதிரியையும் அழிப்பதுதான் என்னுடைய லட்சியம். அடித்து வீழ்த்திய பிறகு பெரும் செல்வத்தோடு நாம் ஊர் திரும்புகிறபோது முதல் மனைவி, இரண்டாம் மனைவி, மூன்றாம் மனைவி, தாயார், தந்தையார், குழந்தைகள், உறவினர்கள், மைத்துனர்கள், வீட்டு வேலைக்காரர்கள் என்று சகலமும் ஞாபகம் வரும். என் மூட்டையின் உள்ளே என் வீட்டு வேலைக்கார கிழவிக்கு கூட நான் தங்கச் சங்கிலி வைத்திருக்கிறேன். அவள் நிச்சயம் கேட்பாள். வெந்நீர் விளாவி, முதுகில் ஒற்றி, பீர்க்கண் சுருணையால் முதுகு தேய்த்து விடப்போகிறவள் இல்லையா. மொக்கை கத்தியால் உடம்பு அழுக்கை சுரண்டி எடுக்கப் போகிறவள் அல்லவா. அவள் சந்தோஷத்திற்கு ஏதாவது தர வேண்டுமே. வைத்திருக்கிறேன்.

வேலைக்கார கிழவிக்கே தங்கச் சங்கிலி என்றால் மனைவிக்கு, கழுத்திலிருந்து தொப்புள் வரை இருபத்தியோரு வரிசையில் கோர்த்த முத்து ஆபரணம். எதுவுமே மேலே உடுத்திக் கொள்ள வேண்டாம். அந்த முத்து ஆபரணத்தை கழுத்தில் போட்டுக் கொண்டால் போதும். அத்தனை அழகாக இருப்பாள். இரண்டு விரல் அகலத்திற்கு இடுப்பிற்கு குரங்குச் செறி புடவை நழுவாது பிணைத்துக் கொள்ளலாம். வங்கி. பாகு வளையம். நெத்திச் சுட்டி. காது குழை. காது வளையம். அதில் நீண்ட சங்கிலி. காரை என்ற அட்டிகை. காசு மாலை. கை வளையல்கள். சங்கினால் பத்து. முத்தினால் பத்து. பட்டை யான தங்கத்தில் பத்து என்று அடுக்கி வைத்திருக்கிறேன். அத்தனையும் அவள் போட்டுக் கொள்ளட்டும். அல்லது யாருக் கேனும் கொடுக்கட்டும். இதெல்லாம் போர் முடிந்த பிறகு வரும் எண்ணங்கள். இரவு வந்துவிட்டது. படுக்க பெண் வேண் டும் அல்லவா என்பது போன்ற செயல்.''

''நீ அந்தணனே இல்லை.''

''உங்களுக்கு புரியவில்லை. தன்னை நேசி என்பதுதான் மிகச் சிறந்த விஷயம். தன்னை நேசிக்கிற போதுதான் பிறரை நேசிக்க முடியும். தலைவலியா. அடடா. எனக்கும் நேற்று வந்தது. இப்பொழுது சரியாகிவிட்டது. அவரிடம் மருந்து கேள். நான் வழிப்படுத்துவேன். பசிக்கிறதா. பசி பற்றி எனக்கு தெரியும். மூன்று நாட்கள் உணவே இல்லாமல் காடு கடந் தோம் அல்லவா. இப்பொழுது சாப்பிடு. வாரி வழங்க எனக்கு தெரியும். என் பசியை, என் வலியை உணர்ந்ததாலேயே நான் அடுத்தவர் பசியை, அடுத்தவர் வலியை உணர்ந்து கொள் கிறேன்.

என்னை தடுக்காமல் விட்டிருந்தால் ஒட்டதேசத்திற்கு பரிசுகள் கொடுத்திருப்பேன். ஒட்ட அரச குமாரனுக்கு வித்தை கள் கற்று கொடுத்திருப்பேன். முட்டாள். வெறும் திமிர், அகங் காரம். அதெப்படி என் ஊருக்குள் உன் குதிரை நுழையும் என்கிற அலட்டல் பேச்சு. பெட்டை கர்வம். அடித்துப் பார். அடிப்பேன் என்பது நம்முடைய கர்வம். நம்முடைய கர்வத்தின் விளைவு என்ன. ஐந்தரை லட்சம் படைகள். எந்த ஊர் தாங்கும். எவன் எதிர்த்து ஜெயிக்க முடியும். ஐந்தரை லட்சம் படைகளும்

வெறும் ஆட்களா. இல்லையே. சக்ரவர்த்தியார் பட்டம் ஏற்றதி லிருந்து போர் பயிற்சி செய்திருக்கிறோமே. பாண்டியன் உள்ளே வர முதுகெலும்பை முறித்திருக்கிறோமே. கீழை சாளுக்கி யத்தில் பங்கு கேட்க தலையில் அடித்து துரத்தினோமே. அந்த கர்வமெல்லாம் சேர்ந்து கங்கை கரைக்கு கொண்டு வந்தது.

கங்கை இங்கு வந்தாக வேண்டும் என்று என்ன கணக்கு. அவசியம் இல்லை. அவன் திமிரும், நம் திமிரும் மோதியதில் கங்கை நீர் கொண்டு வந்து அபிஷேகம் செய்யப்பட்டது.

மனிதனுடைய வளர்ச்சிக்கு காரணம் மனிதனுடைய இருப்புக்கு காரணம் இந்த கர்வமே. கர்வம் இல்லாது போனால் அழிந்தே போய்விடுவோம். யார் கர்வம் உயர்த்தி என்று தெரிந்து விடும். ஒரு போரில் முடிந்துவிடும்.''

''வாழ்க அருண்மொழிபட்டர். வைஷ்ணவ குல திலகம். வாழ்க. வாழ்க.'' அரையன்ராஜர் கேலியாக உரக்க கத்தினார்.

''இதில் என்ன கேலி இருக்கிறது. எங்கள் நாராயணரும் கதாயுதபாணியாக, சங்கு, சக்ரதாரியாக இருக்கிறான். வெற்றி வெற்றி வெற்றி என்று அவன் சங்கு முழங்குகிறான். பாஞ்ச சன்யம் போல கர்வம் உலகத்தில் எதுவும் இல்லை. சண்டைக்கு வா என்று அதுதான் சொல்கிறது. ஜெயித்துவிட்டேன் என்று அதுதான் சொல்கிறது. இந்து மதம் தெளிவானது. இலையும், பூவும் வைத்துக்கொண்டு அது பேசுவதே இல்லை.''

''ஆனால் உனக்கு பௌத்தம் பிடிக்குமே.''

''இங்கு எவனும் தலைவனல்ல என்கிறது பௌத்தம். உடலாக உன்னை கருதினால் உன் வாழ்க்கை வேறானது. நீ உடலல்ல. உள்ளுக்குள் இருக்கின்ற விஷயத்தை புரிந்தால் உன் வாழ்வு எளிதாகும். போர் என்பதே தேவையில்லை என்பது தெரியும். இயற்கையை எதிர்த்து உயிர் வாழ்வதே மிகப் பெரிய விஷயம் என்பதை அது சொல்கிறது. கத்தி எடுத்து, ஈட்டி எடுத்து யானையோடும், குதிரையோடும் போகிற உன்னை, ஒரு பேரலை வந்து, கடல் பொங்கி வந்து காணாமல் அடிக்கும். பனி மழையில் நடுங்கி உள்ளுக்குள் புதைய வைக்கும். இரவு, பகல் பாராது ஏழு நாட்கள் மழை பெய்தால் போதும். எல்லாம் முடிந்து போகும். எரிமலையிலிருந்து தீக்கங்குகள் விழுந்து உன்

மேட்டை பள்ளமாக்கும். மிகப்பெரிய இயற்கையோடு நீ திணறி நிற்க, உள்ளுக்குள் ஏன் நடித்துக் கொள்கிறாய். உனக்குள் இருக்கும் வலிவை தூண்டிவிடு. அப்பொழுது வாழ்வு என்பது எப்படி என்பது புரியும்.''

''புரியவில்லை அருண்மொழி.''

''வேண்டாம். இதற்குள் எல்லாம் நுழையாதீர்கள். மிக அருமையாக படை நடத்தி, மிகச் சிறப்பாக வீரர்களை ஊக்குவித்து, தாக்கி, தந்திரங்கள் செய்து தங்கமும், வைரமும், முத்தும், மாணிக்கமும் கொண்டு வந்து, அழகிய பெண்களை அபகரித்து வந்து, இன்று இவள், நாளை அவள், பிறகு இவள் என்று சுட்டிக் காட்டி, வரிசைப்படுத்தி, புணர்ந்து, உண்டு, மலம் கழித்து இறந்து போங்கள். என்ன நடந்தது என்று நோயுற்றபோது யோசித்து பாருங்கள். நடந்தது எதுவுமே நிறைவு இல்லை என்பது புரியும்.''

''அப்போது நிறைவு வேண்டுமா.''

''ஆமாம். நிறைவு தேடித்தான் போரும், புணர்தலும். போரிலும் நிறைவு இல்லை. புணர்தலிலும் நிறைவு இல்லை. உண்பதிலும் நிறைவு இல்லை. உறங்குவதிலும் நிறைவு இல்லை. மலஜலம் கழித்தலிலும் நிறைவு இல்லை. பிறகு எது நிறைவு, எது நிஜ சந்தோஷம்.''

''என்னவோ புரிவது போல் இருக்கிறது.''

''விட்டு விடுங்கள். இத்தோடு நிறுத்திவிடுங்கள். இது பார்ப்பன புத்தி. எல்லாவற்றையும் கேள்வி கொண்டிருக்கிற புத்தி. மறவர்கள் போர் வெற்றிகளோடு நிறுத்திக் கொள்கிறார்கள். அது உன்னதம். நான் சாதாரணனாகப் பிறந்தேன். சக்ரவர்த்தியாக வாழ்ந்தேன். இது போதும் என்று மரண நேரத்தில் தன்னைத் தானே தட்டிக் கொடுத்துக் கொண்டு மரணமடைந்தவரை நான் அறிவேன். 'அடுத்த ஜென்மத்திலும் சோழ தேசத்திலேயே பிறக்க வேண்டுமடா' என்று இறந்து போனவனையும் எனக்குத் தெரியும். 'கயிலாயத்தில் என்னடா இருக்கிறது. வெறும் பனிப் பாறைகள். வெண் கரடிகள். இதுதானேடா கயிலாயம். இதுதானே சொர்க்கம். கருங்கல் மாளிகை. கருங்கல் கோவில். கட்டழகான பெண்கள். நல்ல ஆகாரம். அற்புதமான தானியங்கள்.

நறுமண பூக்கள். தேன். மது. புரண்டு வரும் ஆறு. தென்றல் காற்று. தொன்னூறு வயதாகிறது. இப்போதுதான் தளர்வு தெரிகிறது. தளர்வு முற்றுவதற்குள் செத்துப் போய்விட வேண்டும். இறந்த பிறகு எங்கே போகப் போகிறோம். பதில் தெரியவில்லை. அட, எங்கு வேண்டுமானாலும் போகலாம். நாம் போகாத காடா. நாம் ஏறாத மலையா. நாம் இறங்காத பள்ளத்தாக்கா. நாம் பார்க்காத வாழ்வா என்று அடுத்த வாழ்விற்கும் நான் தயாராக இருக்கிறேன். ஏழு சுரம் அறுத்து சேர தேசத்திற்குள் போகவில்லை. அப்பொழுது எப்படி ஆவல் இருந்ததோ. அதேமாதிரி ஆவல் மரணத்தை நோக்கியும் எனக்கு இருக்கிறது. நான் மறவனடா. எதற்கும் அஞ்சேன்.''

''யார் என்று ஞாபகம் இருக்கிறதா.''

''தெரியும். பழுவேட்டரையர். பெரிய பழுவேட்டரையர்.''

அந்நேரம் பல விஷயங்கள் அருண்மொழிபட்டனோடு அரையன் ராஜன் பேசியிருக்கிறார். இப்பொழுது வேறு பேச்சு.

''எதற்கு இந்த நதிநீர் பயணம்.'' அருண்மொழிபட்டன் ஆரம்பித்தான்.

''இப்பொழுது இராஜேந்திரசோழர் கடற்கரை நோக்கி போய் விட்டார்.''

''ஆமாம் அரையரே.''

''அது எனக்கு பிடிக்கவில்லை.''

''அதுபற்றி அவருக்கு எந்த அபிப்ராயமும் இல்லை. உமக்கு பிடித்த காரியங்களே அவர் செய்ய வேண்டும் என்று எதிர்பார்த்தால் அது உங்கள் தவறு.''

''இல்லை. நம்மிடம் ஒரு வார்த்தை சொல்லியிருக்கலாம்.''

''சொல்லாததற்கு ஏதேனும் காரணம் இருக்கும். விவாதம் ஆரம்பிக்கும். இதை நீங்கள் விவாதிப்பதில் அவருக்கு விருப்பம் இல்லை. நேரடியாக உத்தரவு போட்டால் கொஞ்சம் வலிக்கும். கங்கை வரை வென்று வந்தவனை கேலி செய்வது போல் ஆகும் என்பதால் உமக்கு எந்த உத்தரவும் கொடுக்காமல் விலகி விட்டார்.''

''ஏன் உத்தரவு தரவில்லை. ஓலையில் எழுதி வந்தது அல்லவா.''

''அது உத்தரவு அல்ல. தகவல். ஒரு விவரம், விளக்கம். அவ்வளவே.''

''நான் விவாதிக்கக் கூடாதா.''

''இல்லை. அவர் முடிவு செய்துவிட்டார். உங்கள் விவாதம் தேவையில்லை.''

''நீ இதை எப்படி ஏற்றுக்கொள்கிறாய்.''

''வேறு வழியில்லை அரையன் ராஜராஜன் அவர்களே. நான் தலைவன் என்று ஒருவரை ஏற்றுக்கொண்டு விட்டேன். பிறகு எப்படி பின்னடைவது. அவர் என்ன சொன்னாலும் சரி.''

''இவர் இப்படி போனது பற்றி உனக்குள் ஒரு அபிப்ராயம் இருக்குமல்லவா.''

''இருக்கும். இருக்கிறது.''

''அது என்ன. சொல்லேன்.''

''உங்களிடம் சொல்லமாட்டேன்.''

''ஏன்.''

''நாளை சக்ரவர்த்தியிடம் போட்டு கொடுத்துவிட்டால். தலையெழுத்தா எனக்கு. உம்மை நம்ப மாட்டேன்.''

''நீ மஹிபாலன் பக்கம் இல்லாது போனாயே.''

''ஏன் உங்களுக்கு என்ன அந்த ஆசை.''

''உன்னை நான் வெட்டி வீழ்த்தியிருக்கலாம் அல்லவா. இவ்வளவு தந்திரக்காரனை அடித்து நொறுக்குவது ஒரு சந்தோஷம் அல்லவா.''

''என் ரோமத்தை கூட உங்களால் அசைக்க முடியாது. ஒரு பெரிய படையின் தலைவராக பார்த்தால் நீர் அற்புதமானவர். ஆனால் தனி ஒரு மனிதனாக பார்த்தால் நீர் வெறும் நெட்டி பொம்மை.''

''அடேய்.'' அவர் சீறி எழுந்தார்.

அருண்மொழிபட்டன் அசையாது இருந்தான்.

''படகு கவிழும். உங்களால் தாங்க முடியாது. கரைக்கு நீந்தி போகும் அளவிற்கு உம்மிடம் வலிவு இல்லை. ஆனால் நான் நீந்தி போய்விடுவேன். இப்பொழுது உம்மையும் சுமந்து போகவேண்டும் என்ற நிலைமையை தயவு செய்து ஏற்படுத்தாதீர்கள். வந்த விஷயம் என்ன.''

''உன்னை அதிகம் கொண்டாடி, என்னை இழிவுபடுத்துகிறார் சக்கரவர்த்தி என்பது என் அபிப்ராயம்.''

''இதைச் சொல்லவா இவ்வளவு தூரம்.''

''நான் விலகிவிடப் போகிறேன்.''

''எங்கே.''

''சோழ தேசத்தை விட்டு.''

''எங்கே என்று கேட்கிறேன்.''

''நான் கீழை சாளுக்கியம் போய் அங்கேயே தங்கிவிடப் போகிறேன்.''

''எதனால்.''

''சோழ தேசத்தை விட கீழை சாளுக்கியம் செழிப்பாக இருக்கிறது. ஒட்ட தேசத்தை முற்றிலும் அழித்துவிட்ட பிறகு, மேலை சாளுக்கியம் மட்டுமே அதாவது மேற்கே மட்டுமே பலவீனமாக இருக்கிறது. மக்கள் வெகுளிகளாக இருக்கிறார்கள். சிவாலயங்களும், வைஷ்ணவ ஆலயங்களும் இருந்தாலும் சண்டை ஏதும் இல்லை. பௌத்தர்கள் அறவே இல்லை. ஆறேழு நதிகள் இருக்கின்றன. அற்புதமான மலைகள் இருக்கின்றன. கறவைகள் அதிகம் இருக்கின்றன. ஒரு அளவு உயர்ந்த பிறகு சோழ தேசத்தில் இருப்பது கடினம்.''

''என்ன கடினம் என்று நான் சொல்லட்டுமா.''

''சொல் அருண்மொழி. ஏதாவது நீ சொல்வாய் என்று தான் இங்கு அழைத்து வந்திருக்கிறேன்.''

''உங்களால் சக்ரவர்த்தி இராஜேந்திரர் தலைமையை ஏற்க முடியவில்லை.'' அரையன் ராஜராஜன் மௌனமாக இருந்தார்.

''செயற்கரிய செயலை செய்தது அரையன் ராஜராஜன். கங்கையிலிருந்து நீர் கொண்டு வந்தது அரையன் ராஜராஜன்.

கடினமான உத்தரலாட போரில் ஜெயித்தது அரையன் ராஜராஜன். ஒட்ட தேசத்து அரசனை சூழ்ந்து தாக்கி மிகத் தந்திரமாக போர் நடத்தியது அரையன் ராஜராஜன். எந்த கலவரமும் இன்றி கோசல தேசத்தின் வழியாக போனதும், மற்ற தேசங்களுக்கு விஜயம் செய்ததும் அரையன் ராஜராஜன். இரவு, பகலாக நெடுந் தூர பயணம். கடுமையான போர். விடிந்தால் உயிரோடு இருப் போமோ என்று தெரியாத நிலைமையில் வாழ்ந்த காலங்கள். இதையெல்லாம் தாண்டி, திரும்பி வேங்கிக்கு வரும்போதே உங்கள் பேச்சும், நடையும் மாறிவிட்டது, அரையன் ராஜராஜரே.''

''நான் துரோகம் செய்யவில்லையடா.''

''இல்லை. உங்களுக்கு துரோகம் வராது. நீங்கள் வெகுளி. ஆனால்...''

''ஆனால்.''

''பேராசைக்காரர். இவ்வளவு பெரிய விஷயத்தை வாரி சக்ரவர்த்தி இராஜேந்திரர் சோழர் தலையில் கொடுக்க உங்க ளுக்கு விருப்பமில்லை.''

அரையன் ராஜன் திரும்பி நீரையே வெறித்துக் கொண் டிருந்தார்.

''அதுவல்லயடா.''

''அதற்குண்டான மரியாதை உங்களுக்கு தரப்படவில்லை என்ற கோபம்.''

''கோபம் இருக்கிறதடா.''

''இந்த செயலுக்கு ஈடாக தன்னை மட்டும் ஈடுபடுத் தாமல் இங்கு அருண்மொழிபட்டன் என்பவனையும், அருண் மொழிபட்டனை மட்டும் ஈடுபடுத்தாமல் அவனுக்கு துணை யாக வீரமாதேவி என்பவரையும் அனுப்பி, கடல் வழியே உத்திர லாடத்தில் இறக்க வைத்து, ஏழு நதிகளையும் தாண்டி, கோசல தேசத்திற்கும், தட்சிணலாடத்திற்கும் அனுப்பி, இப்பொழுது இந்த வெற்றி யார் சொத்து என்று தெரியாதபடி செய்துவிட் டாரே, அதை கண்டு கொஞ்சம் வெறுப்பு. முகச் சுணக்கம்.''

''ஒருவகையில் ஆமாம் அருண்மொழி. நான் கொண்டாடப் பட வேண்டியவன் அல்லவா.''

''இதற்கு மேல் உங்களை எப்படி கொண்டாடுவது. சோழ தேசத்தை இரண்டாக பிரித்து தென் சோழம், வட சோழம். வட சோழத்திற்கு அதிபதி இராஜேந்திர சோழர். தென் சோழத்திற்கு அதிபதி அரையன் ராஜராஜன், என்று வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளலாம். சரிப்படுமா.''

''ச்சே. சோழ தேசத்தை துண்டாடுவதையெல்லாம் நான் நினைத்து பார்க்கக்கூட இல்லை. ஒரு பார்ப்பனனைப் போல பேசுகிறாய். தந்திரம் செய்கிறாய்.''

''இப்படி சொன்னாலும் தப்பு. அப்படி சொன்னாலும் தப்பு. என்ன செய்வது. நீங்கள் எங்கே இருக்கிறீர்கள் என்று நீங்கள் தானே தேடி பார்க்க வேண்டும்.''

''எனக்குத் தேடத் தெரியவில்லை.''

''அப்பா. முதன் முதலாக சத்தியம் பேசியிருக்கிறீர். தெளிவாக கால் எடுத்து வைத்திருக்கிறீர்.

என் தந்தை பிரம்மராயருக்கு சோழ தேசத்தில் நூறு வேலி நிலம் இருக்கிறது. அமண்குடி என்கிற அந்த கிராமம் முழுவதும் அவருடைய சொந்தம். ஊருக்குள் கேணிகள் அதிகம். காவிரி வாய்க்காலில் ஊடறுத்து போகும். இரண்டு போகம் நிச்சயம். மூன்று போகம் முயற்சித்தால் முடியும். சுற்றிலும் வயல்கள். நடுவே கிராமம். கனத்த அக்ரஹாரம். அவர் கட்டிய உயர்ந்த இராஜராஜேஸ்வரம் என்ற கோவில். அவருடைய நிலத்தில் வேலை செய்வதற்கு என்று ஆயிரக்கணக்கில் ஆட்கள் உண்டு. குதிர் குதிராய் வந்து நெல் கூடைகளில் கொண்டு வரப்படும். அதை கொண்டு வந்த விவசாயி, 'இது அய்யன் வீட்டு நெல்' என்று சொல்வானே தவிர, தான் உழுது செய்த நெல் என்று சொல்ல மாட்டான். அந்த அய்யன் விரல் நுனி கூட சேற்றில் பட்டிருக்காது. ஆனால் அது யார் சொத்து. அய்யன் என்று அழைக்கப்படுகிற அமண்குடி தலைவரான கிருஷ்ணன் ராமன் என்கிற பிரம்மராயரின் சொத்து, சோழ தேசம் சக்ரவர்த்தியின் சொத்து. நீங்கள் அவருடைய வேலைக்காரர். அவ்வளவே, நீர் எத்தனை அறுத்துக் கொண்டு வந்தாலும், எப்படி புரட்டிக் கொண்டு வந்தாலும் அது அய்யன் நிலம். சக்ரவர்த்தி இராஜேந்திர சோழனின் தேசம். அவருக்குண்டான மரியாதை. இந்த வெற்றி அவருக்குண்டானது.''

“நான் பாராட்டப்படவில்லை என்று சொல்கிறேனே தவிர, சக்ரவர்த்தி பதவி கேட்கவில்லை.”

“இதற்கு மேல் பாராட்ட மாட்டார்.”

“ஏன்.”

“சக்ரவர்த்தி பட்டம் கேட்டுவிட்டால்.”

“அடேய். உன்னை அடித்து நொறுக்க வேண்டுமடா. என்னை இழிந்த பிறப்பாக செய்வதில் உனக்கு அவ்வளவு ஆசை. நீ ஒரு பார்ப்பன...” அவர் நிறுத்திக் கொண்டார்.

“இன்னொரு முறை நீங்கள் என் ஜாதியை பற்றி பேசினீர்கள் என்றால், நான் உமது ஜாதியை பற்றி பேசுவேன். நிறுத்திக் கொள்ளும்.

இந்த வெற்றியின் பெரும்பகுதி வீரமாதேவிக்கு போய்விட்டது. உமது கையிலிருந்தும், எமது கையிலிருந்தும் அந்த விஷயத்தை பிடுங்கி வீரமாதேவியின் கையில் கொடுத்துவிட்டார். உமக்கு பட்டம் கொடுக்கும்போதும், எனக்கு பட்டம் கொடுக்கும்போதும் இருந்த கைதட்டலை விட, வீரமாதேவிக்கு கிடைத்த பட்டத்தின்போது ஜனங்கள் பேயாய் கூச்சலிட்டார்கள். தளபதிகள் ஆரவாரித்தார்கள். அவரால்தான் என்பது போல் இருந்தார்கள். உங்கள் முகம் இருண்டது. எனக்கும் வருத்தமாய் இருந்தது.

இது மன்னரின் மிகப் பெரிய தந்திரம். வீரமாதேவி வராமல் செய்திருக்க என்னால் முடியும். ஆனால் உங்களுக்கு பெயர் போய்விடக் கூடாது என்பதற்காக நான் அவரை என்னுடன் வர சம்மதித்தேன்.”

“நீ திருடன் என்று தெரியும்.”

“ஏன் பார்ப்பன நாய் என்று சொல்லிவிடுங்கள்.”

“வேண்டாம் அருண்மொழி. உன்னோடு சண்டையிட நான் இங்கு வரவில்லை, சோழ தேசத்தை விட்டு விலகப் போகிறேன் என்று சொல்லி, உன் ஆலோசனை கேட்பதற்காகவே இங்கு வந்திருக்கிறேன்.”

“நினைத்தேன்.”

''என்ன. நிம்மதி அல்லவா உனக்கு.''

''விலகாதீர்கள்.''

''ஏன்.''

''இங்கு எல்லோரும் நிம்மதி இல்லாமல் இருக்கட்டும்.''

''என்ன உளறுகிறாய்.''

''ஆமாம், நீங்கள் சோழ தேசத்தில் இருந்தால் மற்ற எந்த தளபதிக்கும் எந்தவித மரியாதையும் கிடைக்காது. எவர் செயலும் பாராட்டப்படாது. உம்மை கேட்டுக்கொண்டுதான் சக்ரவர்த்தி எதுவும் செய்ய வேண்டியிருக்கும். அது சக்ரவர்த்திக்கும் அவ்வளவு உவப்பாக இருக்காது. எனவே, சோழ தேசத்திலும் அமைதியாக இருக்க வேண்டுமென்றால்...''

''என்னை விட்டு வைத்திருக்கிறாரே. இங்குதானே இருக்கச் சொல்கிறார்.''

''வரும். ஓலை வரும். உங்களை தொலைதூரம் அனுப்ப ஓலை வரும்.''

''தொலைதூரம் என்றால் எங்கே.''

''ஒருவேளை தென்குமரி நோக்கி அனுப்பலாம். நாஞ்சில் நாடு அனுப்பலாம். சேர தேசத்திற்கு அனுப்பலாம். அல்லது மறுபடி மேலைசாளுக்கியத்தில் ஊடுருவி ஜெயசிம்மனை கொன்று விட்டு வா என்று அனுப்பலாம்.''

''நாம் கங்கே யாதவையே கொல்லவில்லையே. எப்படி ஜெயசிம்மனை கொல்லப் போகிறோம்.''

''ஜெயசிம்மனுக்கு அற்புதமான மகன். வீரமான மகன். ஆகமவல்லன் என்ற பெயருள்ள மகன். முஷ்டி சண்டையிலும், மல்யுத்தத்திலும் பெயர் பெற்ற மகன். தந்தையைவிட கொடுமையானவன். கடுமையானவன். உறங்குவதற்கு தவிர மற்ற எதற்கும் குதிரையை விட்டு இறங்கக்கூடாது என்று உண்ணுதலையும் குதிரையிலேயே முடித்து, ஆற்றங்கரையில் உட்கார்ந்து எழுந்து உடம்பை துடைத்துக் கொண்டு மறுபடியும் குதிரை ஏறி, ஆறு நாட்கள் இடைவிடாது பயணம் செய்வதை,

மாதத்திற்கு ஒருமுறை செய்வதை தன்னுடைய வழக்கமாக, தன்னுடைய படைகளுக்கு பயிற்சியாக அந்த ஆகமவல்லன் செய்து வருகிறான்.

ஏதாவது புரிகிறதா.''

''புரிகிறது.''

''இப்பொழுது ஒளிந்துக் கொண்டிருக்கும் இடத்திலிருந்து அவனுக்கு தொண்டை தேசம் வர, மயிலை, திருவல்லிக்கேணி வர ஆறு நாட்கள் பிடிக்கும். இரவும், பகலுமாக குதிரை ஓட்டிக் கொண்டு வரவேண்டும்.''

''அதற்கு பயிற்சி எடுக்கிறான்.''

''ஆமாம். ஒத்துவராத குதிரைகளை உதைத்து அனுப்பி விடுகிறான். இதற்கு ஒத்துவராத வீரர்களை கொன்றுவிடுகிறான்.''

''அடேய், ஏன் அப்படி, குதிரைகளை விரட்டுவது போல் அவர்களையும் விரட்ட வேண்டியதுதானே.''

''இல்லை, அயருகிறவன் தேவையில்லை. நடுவே விழுந் தால் கொன்றுவிடுவான் இளவரசன் என்று தெரிந்து வீரர்கள் முழு முயற்சி செய்கிறார்கள்.''

''எப்படியடா இப்படியெல்லாம் யோசிக்கிறாய்.''

''நானொரு பார்ப்பன நாய்,'' நிதானமாக அருண்மொழி பதில் சொன்னான்.

''மன்னித்துக் கொள் அருண்மொழி. இனி அந்த வார்த் தையை பிரயோகம் செய்ய மாட்டேன். உன்னுடைய சிந்தனை கள் அற்புதமானவை. இப்பொழுது சொல். சக்ரவர்த்தியிடம் சொல்லிவிட்டு கீழைசாளுக்கியம் போகவா. அல்லது சொல் லாமல் போகவா.''

''அரையரே, என்மீது எத்தனை கோபம் இருந்தாலும் நீர் எனக்கு நண்பர். சோழ தேசத்து விசுவாசி. வடக்கேயிருந்து நான் வருகிறேன் என்று தெரிந்து, என்னை நோக்கி மஹிபாலன் போக, நீர் தாமதித்து இருந்தால் அடிபட்டு சாகட்டும் இந்த அருண்மொழிபட்டன் என்று நினைத்திருந்தால், வீரமாதேவி குத்தி கொலை செய்யப்படட்டும் என்று நினைத்திருந்தால்

நான் உங்களோடு பேசியிருக்க முடியாது. என்னைவிட துரித மாக படைகளை தெற்கிலிருந்து வடக்கு நோக்கி கொண்டு வந்து மஹிபாலனின் பின்பக்கம் வெற்றிச் சங்கு ஊதினீரே. அப்பொழுது உயிர் வந்தது, என் தகப்பனை விட பெரிய மனிதர் நீர்தான் என்பதை உணர்ந்தேன். உங்களை இழிப்பது என் நோக்கம் அல்ல. உங்களை கேலி செய்வதில் எனக்கு இஷ்டமில்லை. இந்த வெற்றி உம்முடைய வெற்றி. உம்முடைய சொத்து. அதில் எனக்கு எந்தவித தயக்கமும் இல்லை. இங்கே சொல்ல ஆட்சேபணை இல்லை. ஆனால் சபையில் சொல்ல மாட்டேன்."

"நீ..." கோபத்தோடு அரையன் கத்தினார்.

"பார்ப்பன நாய்", நிதானமாக அருண்மொழிபட்டன் பதில் சொன்னான்.

"இல்லை. உன்னை நாய் என்றோ, பார்ப்பனன் என்றோ நான் பார்க்கவில்லை. எதிராளி மனதை இவ்வளவு துல்லிய மாக அறிவது எனக்கு வேதனையாக இருக்கிறது. என்னை தோலுரித்து காட்டிக் கொண்டிருக்கிறாய் என்பது பெரிய பதட் டமாக இருக்கிறது."

"பதட்டத்தை விடுங்கள். நான் உங்கள் நண்பன்தானே. அவரிடம் சொல்லாமல் நீங்கள் நகர்ந்தால் ஒருவேளை கீழை சாளுக்கியத்தை அபகரித்துக் கொள்ளக் கூடும். இராஜநரேந் திரனை ஒதுக்கிவிட்டு, அம்மங்காதேவியை கொன்றுவிட்டு ஆட்சியை பறித்துக் கொள்ளக்கூடும் என்கிற பயம் சக்ரவர்த் திக்கு வரலாம். எனவே, ..."

"எனவே....?"

"காத்திருங்கள். அமைதியாக உங்களுக்கென்று ஒரு படை திரட்டி, நீங்கள் இராஜ நரேந்திரனுக்கு துணையாக அம்மங்காதேவிக்கு பாதுகாப்பாக, மேலைசாளுக்கியத்திலிருந்து கீழை சாளுக்கியத்திற்கு எவரும் வராதவண்ணம் தடுப்பாக இருப்பேன் என்று சத்தியம் செய்துவிட்டு போங்கள்.

அங்கு இராஜநரேந்திரன்தான் அரசன். ஆனாலும் அரையன் ராஜராஜன் அங்கிருந்தால் அரையன் ராஜராஜனை கேட்காமல்

ஒரு துரும்பு கூட அசையாது. மறைமுகமாய் அரையன் ராஜராஜன் தான் கீழை சாளுக்கியத்தின் சக்ரவர்த்தி.''

''போட்டுக் கொடுத்து விடுவாயடா நீ.''

''உண்மையை சொன்னால் பயம், பொய்யை சொன்னால் பிடிக்கவில்லை.''

''பாண்டிய தேசம் அனுப்புவாரா.''

''மாட்டார்.''

''ஏன்.''

''அங்கு சுந்தர சோழ பாண்டியன் இருக்கிறார். அவர் பெற்ற மகன் இருக்கிறார். நீர் அங்கு போனால் உம்மையல்லவா உய ரத்தில் வைக்க வேண்டும். சுந்தர சோழ பாண்டியன் கை கட்டி உம்மிடம் அல்லவா ஆலோசனை கேட்க வேண்டும். அப்படி ஒரு நிலைமையை தன் மகனுக்கு தரமாட்டார். தானே தள்ளி வைக்க வேண்டும் என்று நினைக்கும்போது இந்த சனியனை தன் மகன் பக்கம் தள்ளுவாரா.''

''ஏய், கேவலமாக பேசாதே.''

''அப்படி நினைக்கக்கூடும் என்று சொல்கிறேன். அபபடி அவர் எடை போட்டு வைத்திருப்பார்.

பாண்டியர்கள் ஒன்றுகூடி விட்டார்கள் என்றும், அதை தடுக்க அரையன் ராஜராஜன் போகவேண்டும் என்று சொன் னால் நன்றாகத்தானே இருக்கும்.''

''அது பொடி வேலை.''

''நீங்கள் வருகிறேன் என்று சொன்னாலே அவர்கள் படகு களில் ஏறி ஈழத்திற்குப் போய்விடுவார்கள்.''

''ஈழத்திற்குப் போனால்,''

''தெற்கே நகர்ந்து ரோகணத்திற்கு போய்விடுவார்கள்.''

''ரோகணத்தையும் வளைத்து தாக்கினால்..''

''இலங்கையின் அதிபதியாக வாழ்நாள் முழுவதும் இருக் கலாம்.''

''அடேய், எனக்கு இலங்கை பிடிக்கவில்லை. வெறும் காட்டு பூமி. பெண்களோ, ஆண்களோ அழகாகவே இல்லை.

ஒரு தட்டை முகமாக இருக்கிறார்கள். மாடுகள் போல் இருக்கிறார்கள். கீழைசாளுக்கியம் அழகிய பெண்களும், உயர்ந்து உறுதியான ஆண்களும் நிறைந்தது. பெரும் மடி கொண்ட கறவைகள். சுகமான தேசம். வெய்யில் கடுமை. அப்பொழுது ஏதாவது மலைவாசம் போக வேண்டியதுதான்.

''அதிகம் உண்டு.''

''புரிகிறது.''

''அங்கே வெகு நிச்சயம் மரியாதை கிடைக்கும். சுந்தர சோழ பாண்டியனாவது சிணுங்குவான். இராஜநரேந்திரன், அழகாக, அமைதியாக அடிமைப்பட்டுக் கிடப்பான்.

ஆனால் அம்மங்காதேவி உங்களை அனுமதிப்பாரா என்பது சந்தேகம். அம்மங்காதேவி சிறு பெண் இல்லை. வீரமாதேவி வளர்த்தவள். வீரமாதேவி சுற்றம் மொத்தமும் அம்மங்காதேவியிடம் இருக்கின்றன. அம்மங்காதேவி நல்ல லட்சணங்கள் உடைய ஒரு அரசகுமாரி. திடமான, தெளிவான மனம் உடையவள். அவரை பற்றி ஜோதிடர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள் தெரியுமா. மகாலக்ஷ்மி என்று சொல்லியிருக்கிறார்கள். வயிற்றின் அடிப்பகுதியில் சக்கரங்கள் இருக்கின்றனவாம். சோழ தேசத்தில் வீரமாதேவிக்கு இணையான உயரம் உள்ளவர் இவரே. முதுகிலே மூன்று மச்சங்கள் இருக்கின்றனவாம். மிகச் சிறந்த மன்னனுக்கு தாய் ஆவார் என்று சொல்லியிருக்கிறார்கள்.

அதனால் அந்த பெண்மணிக்கு தன் வாழ்வின் மீது பெரிய நம்பிக்கை இருக்கிறது. தன் வாழ்வின் பெரிய நம்பிக்கை உள்ள எந்த மனிதரும் அடுத்தவரின் தலைமையை ஏற்க மாட்டார்கள். உங்களை அம்மங்காதேவி உள்ளே வரவிட மாட்டாள். அப்படி மீறி நீங்கள் வந்தாலும்...''

''வந்தாலும்.''

''மேலைசாளுக்கியத்தின் எல்லையில் குடியிருக்க வைப்பார். வேங்கிக்குள் வரவிட மாட்டார்.''

''இப்போது நான் என்ன செய்வது.''

''கீழை சாளுக்கியம்தான் உங்களுடைய சரியான இடம். ஆனால் வேங்கி அல்ல. மேலை சாளுக்கியம் நோக்கி போகின்ற

வழியில் நீங்கள் உங்களுக்கென்று ஒரு கோட்டையும், கொத்தள மும், படைப் பயிற்சி களமும், உண்மையில் அங்கு ஒரு கடிகை யும் நீங்கள் ஏற்படுத்த வேண்டும். போர்ப் பயிற்சி சொல்லிக் கொடுக்கின்ற அந்த கடிகை உங்கள் பெயரோடு சிறந்து விளங்க வேண்டும்.

சேர தேசத்து நம்பூதிரிகளின் துணையில்லாது இடங்கை வீரர்களுடைய வீரம் செறிந்த மடமாக இருக்க வேண்டும். இடங்கை வீரர்கள் உன்னதமானவர்கள். உங்கள் பின்னே இடங்கை வீரர்கள் கீழைசாளுக்கியம் வந்துவிட்டால், சோழ தேசத்தில் இடங்கை, வலங்கை போர் குறையும்.

கடற்கரையோரம், வயல் ஓரம், கோதாவரி ஓரம் நீங்கள் குடியிருக்கலாம். அங்கே நீங்கள் மணிமுடியும் தரித்துக் கொள்ள லாம். அரையரே இன்னொரு விண்ணப்பம்.''

''என்ன.''

''தூங்கிக் கொண்டிருந்த மூன்று தளபதிகளை குத்திக் கொன்றவன் அந்த கங்கே யாதவ். உங்கள் தலைமையில் போன மூன்று தளபதிகளை அடித்து துவைத்தவன் அந்த கங்கே யாதவ். அவன் உயிரோடு இருக்கிறான். ஆனால் எங்கே இருக் கிறான் என்று தெரியவில்லை.

ஆகமவல்லன் என்ற ஒரு கொழுத்த காளை தலைதூக்கு கிறது என்றால் அது சோழ தேசத்திற்கு இழுக்கு. ஆகமவல்லனை அடித்து துவைக்க வேண்டும். மேலை சாளுக்கியத்தை இடை யறாது தொந்தரவு கொடுத்துக் கொண்டிருக்க வேண்டும். அப்பொழுது கங்கே யாதவ் துணைக்கு வருவான். அந்த கங்கே யாதவை நெருப்பில் வதக்கி, அலற வைத்து, கண்களை குருடாக்கி, கால்களை முடமாக்கி தவிக்க வைக்க வேண்டும். கயிற்று ஊஞ்சலிலேயே கட்டி வைக்க வேண்டும். மிக கோர மான மரணம் அவனுக்கு ஏற்பட வேண்டும். இது என் ஆத்திரம். இது உங்களுக்கும் வர வேண்டும்.''

''இருக்கிறது அருண்மொழி. நேரே வந்து சண்டையிட் டால் இழுத்து போட்டு மிதிக்கலாம். தப்பித்து ஓடுகின்ற நரியை என்ன செய்வது.''

''தேடிக் கண்டுபிடியுங்கள். வேங்கி நோக்கி போவதன் காரணம், கீழை சாளுக்கியத்தில் நுழைவதற்கான காரணம், அங்கு தங்கி இருப்பதற்கான காரணம் இதுவே என்று சொல்லுங்கள். இது உத்தமமானது, மற்றது எது சொன்னாலும் பயம் வரும்.''

''ஓ. ஓ.'' அவர் நிதானமாக யோசிக்கத் துவங்கினார்.

''நாம் கரைக்கு போகலாமா. இருட்டாகி வருகிறதே.'' அந்த படகு படகோட்டியால் கரை நோக்கி செலுத்தப்பட்டது.

மூன்று வீரர்களோடு இராஜ நரேந்திரன் அங்கு காத்துக் கொண்டிருந்தான்.

''என்ன நரேந்திரா.'' ஆவலோடு அருண்மொழி கீழ் இறங்கினான்.

''கங்கே யாதவ் மேலைச்சாளுக்கியம் வந்துவிட்டானாம். தகவல் வந்தது.'' உரத்த குரலில் சொன்னான்.

''ச்சு. இரகசியமாகப் பேசு.'' அருண்மொழிப்பட்டன் கட்டளை இட்டான். கவலையானான்.

★ ★ ★

அத்யாயம்

88

"என் பாசமிகு தந்தையீர், பண்டித சோழர், கங்கை கொண்ட சோழர், மும்முடிச் சோழர், ஸ்ரீ உடையார் ஸ்ரீ இராஜேந்திர சோழர் செந்தாமரை பாதங்களுக்கு சிரம் பதிய வைத்து உங்கள் அன்பு மகள் அம்மங்காதேவியின் வணக்கம் மிகுந்த ஓலை.

நான் நிதமும் வணங்கும் ஆத்தாளை, நிசும்பசூதனியை, பலமுறை வணங்கி, மேன்மேலும் நீங்கள் வெற்றிகள் பெற வேண்டும். நலமாக நீடூழிகாலம் வாழ வேண்டும் என்ற வேண்டுதலோடு இந்த கடிதத்தை எழுதுகிறேன்.

அடுத்த வேலைக்கு உத்வேகம் கொண்டு எழுந்துவிட்டீர்கள் என்பதை பலர் வாயிலாக அறிந்தேன். உங்கள் மனைவி பரவையார் சோர்ந்து போய் உட்கார்ந்திருக்கிறார்கள். 'எனக்கு ஒரு வார்த்தை சொல்லக்கூடாதா', என்று உங்களை அல்ல, என் அன்புத்தாய் வீரமாதேவியிடம் மனதிற்குள் சண்டை போடுகிறார்கள்.

கங்கை கொண்ட சோழபுரம், அரசர் அடுத்த வேலைக்கு போய்விட்டார் அல்லவா. நீங்கள் உங்கள் வேலையை பாருங்கள் என்று சுதாரித்துக் கொண்டிருக்கிறது. ஆனாலும் அங்கங்கே என்ன, எப்போது, வேறு என்ன என்றெல்லாம் கேள்விகள் எழும்பிக் கொண்டிருக்கின்றன. இந்த கடிதத்தின் நோக்கம் என்னை பற்றியது. என் எதிர்காலம் பற்றியது. அதாவது என் புருஷனை பற்றியதும் கூட. வெற்றிக் களிப்பு அவருக்குப் புரிபடவில்லை. உங்களைப் போலவே நடித்துக் கொண்டிருக்கிறார். சில சமயம் சிரிப்பாகவும், சில சமயம் வருத்தமாகவும் இருக்கிறது. அவரவர், அவரவர் இயல்பிலேயே இருந்தால் மிக நன்றாக இருக்கும்.

தன்னை பற்றி அறியாது அடுத்தவரை தானாக நினைத்துக் கொள்ளும்போது கொஞ்சம் அசட்டுத்தனம் தெரிகிறது. நீங்கள் தேடி திருமணம் செய்து வைத்த என் கணவர் நல்லவர்தான். ஆனால் வல்லவர் என்று சொல்ல முடியாது. தன்னுடைய மாமியார்களுடன் உணவு உண்டபடியே அரட்டை அடிப்பது அவருக்கு பெரிய மகிழ்ச்சி. சக்ரவர்த்தி எப்படி நிற்பார், எப்படி உட்காருவார், என்ன சாப்பிடுவார், எப்போது தூங்குவார், எதற்கு வேகமாக இயங்குவார் என்றெல்லாம் கேட்டு, தங்களுக்கு பிடித்த பாகற்காய் சாதத்தை தானும் சாப்பிட கற்றுக் கொண்டிருக்கிறார். 'இவ்வளவு கசப்பு எதற்கு சாப்பிட வேண்டும்' என்று அவ்வப்போது கேட்டுக் கொள்கிறார். ஒன்று சாப்பிடாமல் இருக்க வேண்டும் அல்லது எதையும் கேட்காமல் சாப்பிட வேண்டும். இரண்டுமே செய்யத் தெரியவில்லை. இது போல பல.

என் திருமணம் காதல் திருமணம் அல்ல. நீங்கள் பரவைக் காக ஏங்கியது போல, திருவாரூரில் தேர் ஏறி சுற்றியது போல, எனக்காக யாரும் ஏங்கவில்லை. தேர் ஏறி ஊர் சுற்றி, ஆள் உயர விளக்கு காதல் நினைவாக தரவும் இல்லை. சோழ தேசத்து மறவர் குல அரச குமாரி, அவளுடைய திருமணத்தை நிச்சயம் தீர் மானிக்க முடியாது. இது இயல்பு. வாடிக்கை. உங்கள் பட்ட மகிஷியாகிய முக்கோணக் கிழானடியாருக்கும், உங்களுடைய அருமை மனைவியாகிய பரவைக்கும் இடையே இருபத்தைந்து வருடங்கள் வித்தியாசம் இருக்கிறது. பட்டமகிஷி மடியிலே பரவை படுத்துத் தூங்குகிறபோது சக்களத்திகளாக தெரிய வில்லை. தாயும், மகளும் போல இருக்கிறார்கள். இது நீங்கள் பெற்ற பேறு.

ஆனால், அரசியல் காரணங்களுக்காக நான் இராஜநரேந் திரனுக்கு வாழ்க்கைப்பட்டிருக்கிறேன். வேங்கியை காப்பது தான், தொண்டை மண்டலத்தையும், நடுநாட்டையும், திரு முனைப்பாடியையும், சோழ தேசத்தையும், பாண்டிய தேசத் தையும் காப்பது என்பதை தெரிந்து அங்கு கட்டமைந்த ஒரு அரசியலுக்காக நான் தாரை வார்க்கப்பட்டிருக்கிறேன். என் குடித்தனத்தில் குறையேதும் இல்லை. கூடலில் வஞ்சனை இல்லை. ஆனால் எதிர்காலம் என்ன என்று கவலைப்படாத

புருஷனுக்கு வாழ்க்கைப்படுவது கொஞ்சம் அலுப்பான விஷயம். ஆமாம் தந்தையே, எனக்கு அலுப்புத்தான் வருகிறது. அடுத்த வேலைக்கு அரசர் போய்விட்டார் என்பது தெரிந்ததும் இங்கே எப்படி பதற வேண்டும். இந்த அதிகாரிகள் என்ன செய்ய வேண்டும். என் புருஷன் உட்பட எவருக்கும் அடுத்த வேலைக்கு போகத் தெரியவில்லை. எனக்கு ஆசையாக இருக் கிறது. என் அடுத்த வேலை என்ன என்று கேள்வி வருகிறது. குடந்தையோ, தஞ்சையோ என்னுடைய இடம் அல்ல. இந்த புதிய நகரமான கங்கை கொண்ட சோழபுரமும் அல்ல. மீன்சுருட் டியோ, எசாளமோ அல்ல. காஞ்சியும், மயிலை, திருவல்லிக்கேணி யும் அல்ல. என்னுடைய இடம் வேங்கி. அதுவே என் தேசம். இது பிடித்துப் போய் நான் சொல்லவில்லை. இது என் பொறுப்பு என்று உணர்ந்து சொல்கிறேன். என் குழந்தை அங்கு கிடக்க நாங்கள் எப்படி இங்கு கும்மாளம் அடிக்க முடியும். எந்த தாயால் அவ்விதம் செய்ய முடியும். வேங்கிக்கு நான் தாய் என்று கருது கிறேன்."

இராஜேந்திர சோழர் ஓலையை தன் நெஞ்சில் வைத்துக் கொண்டார். கண்ணிலிருந்து நீர் பெருகி கன்னம் வழிந்தது.

"என்னுடைய குழந்தைகள் போல அற்புதமானவர்கள் வேறு எவருக்கும் பிறந்திருக்க முடியாது." அந்த ஓலையை வீரமாதேவியிடம் கொடுத்துவிட்டு அடுத்த ஓலையை எடுத்துக் கொண்டார்.

"குழந்தைகளை விட்டு இவ்வளவு தூரம் இங்கு இருப்பதே தவறு. இதில் உல்லாசம் அபத்தம். எனவே, நான் என் குழந்தை களை பார்க்க போவதற்கு நீங்கள் அனுமதி அளிக்க வேண்டும் என்று விரும்புகின்றேன். அனுமதி என்பது எனக்கல்ல. என் புருஷனுக்கு. வேங்கியின் அரசனாக பட்டம் சூட்டப்பெற்ற இராஜ நரேந்திரனுக்கு நீங்கள் அன்பான அனுமதி கூடிய உத்தரவு பிறப்பிக்க வேண்டும். எனக்கு இங்கு இருப்பு கொள்ள வில்லை. அவருக்கு குடந்தைக்கும், தஞ்சைக்கும் போகும் ஆவல் இருக்கிறதே தவிர, வேங்கியைப் பற்றி அதிக அக்கறை இல்லை. செய்திகள் வந்தால் கேட்டுக் கொள்கிறாரே தவிர, என்ன செய்ய வேண்டும் என்று யோசிப்பது இல்லை. அரையன் பார்த்துக் கொள்வார். அருண்மொழி பார்த்துக் கொள்வார்.

எல்லோருக்கும் மேலே சக்ரவர்த்தி ஸ்ரீ இராஜேந்திர சோழர் பார்த்துக் கொள்வார் என்று மெத்தனமாக இருக்கிறார். நான் எடுத்துரைத்தால், 'நீ எதற்கு அலட்டிக் கொள்கிறாய். அங்கு உதய திவாகரன் இருக்கிறார். என்ன கவலை' என்று வாயை அடக்கிவிடுகிறார்.

பயிற்சிகள் எதிலும் ஈடுபடவில்லை. அருண்மொழி பட்டரை உதாரணம் காட்டினேன். இந்த வருடம் மழை அதிகம். குளிரும் அதிகமல்லவா என்கிறார். இதுதான் அலுப்பாக இருக் கிறது. அவருக்கு தலையாட்டும் வீரர்களை வைத்துக் கொண்டு பேரிரைச்சலாக சிரிக்கிறார். மீசை இன்னும் கருப்பாக வளர, போகம் இன்னும் சிறப்பாக அனுபவிக்க மருந்துகள் சாப்பிடு கிறார். புருஷனைத்தான் பெண் போகத்தில் சந்தோஷப்படுத் துவாள் என்பது அவருக்கு தெரியவில்லை. நான் புருஷன் என்பது கணவன் என்ற அர்த்தத்தில் அல்ல. பௌருஷம் நிரம்பி யவன் என்ற அர்த்தத்தில் சொல்கிறேன். வீரமாதேவி உங்க ளுடன் நெருங்கி இருந்த சந்தோஷத்தை எனக்கு விளக்கி இருக் கிறார். என் புருஷனை வெகுநாள் தங்க வைத்தால் கங்கை கொண்ட சோழபுரத்தின் தலைவன் தான் என்ற எண்ணம் வந்துவிடுமோ என்று பயமாக இருக்கிறது. இது சக்ரவர்த்தியின் இடம் என்று சொன்னாலும் காது கொடுத்து கேட்பதில்லை. 'அருண்மொழியும், அரையன் ராஜராஜனும் இந்த சோழ தேசத்தை நிர்வகிக்கிறார்கள் என்றால் அவர்கள் அதிகாரிகள், நான் அரசன் அல்லவா' என்கிறார். அதிகாரம் செய்யத் தெரிந் தவன்தானே அரசன். செய்யத் தெரியாதவனுக்கு என்ன பெயர். தெரியவில்லை.

எனவே, பொறுப்பற்று இருக்கும் என் புருஷனுக்கு பொறுப்புகள் கொடுத்தால் நலமாக இருக்குமோ என்று தோன்று கிறது. உடனடியாக கீழை சாளுக்கியம் போ. வேங்கியை சீர்ப் படுத்து, எல்லைகளை பலப்படுத்து. அம்மங்காதேவியையும் அழைத்து போ. மொத்த கீழை சாளுக்கியத்தையும் சுற்றி வா. மலை ஏறி இறங்கு என்று நீங்கள் கட்டளையிட்டால் மாறுதல் நடக்குமோ என்று தோன்றுகிறது.

அருண்மொழிபட்டர் தளபதிகளின் தகுதி பார்த்து சோழ தேசம் முழுமையும் பரவி இருக்கும்படி செய்து அரசு, மக்களை

நெருக்கமாக கவனிக்கும் திட்டங்களை வைத்திருக்கிறாராம். அப்பொழுது என் கணவருக்கு இங்கு என்ன வேலை. தானும் அப்படி செய்ய வேண்டும் என்று தோன்ற வேண்டும் அல்லவா. தோன்றவில்லை. நான் இதுபற்றி பேசினேன். கோபம் வந்து விட்டது. 'என் தாயார், சக்ரவர்த்தியின் தங்கை குந்தவை எனக்கு கொடுத்த வேதனைகள் போதாதா. அவர் அதிக அதிகாரம் எடுத்துக்கொண்டு என் தந்தையை வதைத்த கதைகள் போதாதா. இராஜேந்திர சோழருடைய மகளாகிய நீ என் வாழ்க்கை யில் புகுந்து என் தாய் என்னை சித்ரவதை செய்தது போல நீயும் ஆரம்பிக்கிறாயா. சக்ரவர்த்தியின் பெயரைச் சொல்லி பய முறுத்துகிறாயா. அவர் மகள் என்று எனக்கு உத்தரவு போடு கிறாயா. எனக்கு ஆலோசனைகள் சொல்லித் தருகிறாயா. நான் இதை பொறுக்க மாட்டேன்' என்று உரக்க கத்தினார். அரண் மனையில் எல்லோருக்கும் தெரிந்துவிட்டது. நான் கொள் ளிடக் கரைக்கு போய் உட்கார்ந்து அழுதேன். என்னமோ ஒன்று தவறு. ஏதோ ஒன்று பிடிக்கவில்லை. என்னவென்று சொல்லத் தெரியவில்லை. நான் ஊர் மாறினால் சந்தோஷமாக இருக்கும் என்று நினைக்கிறேன். எனவே உதவி செய்யுங்கள். கொஞ்சம் நிம்மதி தாருங்கள். என்னையும், என் புருஷனையும் நாடு கடத்தி விடுவது போல் சில ஆயிரம் வீரர்களோடு வேங்கிக்கு அனுப்பி விடுங்கள். நான் அழுகிறேன் என்று பரவைக்கு தெரியும். 'இது அரச குடும்பத்து பெண்களின் அவலமடி. என்ன செய்வது', என்று அவரும் அழுகிறார்.

என் அன்பு தந்தையே, என் ஆசானே, உங்களை வணங்கி, உங்கள் மகள் சுயமாய் வாழ உதவி கேட்கிறாள். வாழ வழி செய் வீர்கள் என்று நம்புகிறாள். ஒரு உதறலில் இராஜநரேந்திரனை நான் உதறிவிட முடியும். அது சோழ தேசத்திற்கு அவமானம். மேலைசாளுக்கியத்திற்கு சிரிப்பு. கீழைசாளுக்கியத்தில் இழிவு. 'நான் இருக்கிறேன் என்று ஒரு விண்ணப்பம் போடட்டா' என்று ஆகமவல்லன் சிரிக்கக்கூடும். எனவே, இந்த பூசல்களை பெரிது படுத்தாது நடக்க வேண்டிய காரியங்களை யோசிப்பது நல்லது என்று நினைக்கிறேன். அதற்காகவே நீண்ட இந்த ஓலையை எழுதுகிறேன். விரைவில் பதில் சொல்வீர்கள் என்று நம்பு கிறேன்.

குதிரை ஏறி கடற்கரை பக்கம் வந்துவிட வேண்டும் என்று ஆசையாக இருக்கிறது. வீரமாதேவியை மட்டும் அழைத்துப் போகிறீர்களே எங்களையெல்லாம் அழைத்துப் போங்களேன் என்று கேட்கத் தோன்றுகிறது. ஆனால் என் அன்னை வீரமா தேவியைப் போல அவ்வளவு தெளிவு யாருக்கு வரும். அவர் என்னை பெற்ற தாய் இல்லையெனினும் என்னை வளர்த்த தாய். என் மனம் எங்கும் அவர் நிரம்பியிருக்கிறார். அவர் பாத விரல்களை நான் முத்தமிடுகிறேன் என்று சொல்லுங்கள். வேங்கிக்கு போன பிறகு நான் அவரைப் போலவே கவசம் அணிவேன் என்று சொல்லுங்கள். உங்களை மறக்கவே முடியாத மகள், உங்கள் உயர்வு கண்டு பெரும் பூரிப்பு அடை யும் மகள், உங்களை என் ஆசானாக, வழிகாட்டியாக, ஏன் தெய்வமாகக் கொண்டிருக்கிற உங்கள் மகள், மீண்டும் அனந்த கோடி நமஸ்காரங்கள் செய்து என்னை வாழ்விக்குமாறு பணி வுடன் கேட்டுக் கொள்கிறேன். அம்மங்காதேவி.' என்று முற்றுப் புள்ளி வைத்திருந்தது.

இராஜராஜ நரேந்திரனின் மாதேவியார் என்று அதில் சொல்லவேயில்லை என்பது இராஜேந்திர சோழருக்கு புரிந்தது. வருத்தமாக இருந்தது. அந்த ஓலையும் வீரமாதேவியிடம் படிக்க கொடுத்தார். வீரமாதேவி எழுந்து, அந்த இரண்டு ஓலை களையும் எடுத்துக்கொண்டு மூங்கில் குழலில் பூட்டி பத்திரப் படுத்தினாள்.

'நீங்கள் சற்று தனித்திருங்கள்.' என்று இராஜேந்திரரிடம் சொல்லிவிட்டு வெளியே போனாள்.

சக்ரவர்த்தி இராஜேந்திரருக்கு தூக்கம் வந்தது. மனம் அயரும் போது தூக்கம் வருவது இயல்பு. என்ன செய்ய வேண்டும் என்று யோசிக்கும்பொழுது, கொஞ்சம் ஓய்வெடுக்க வேண்டும் என்பதே சரி. அவர் கண்மூடினார். கடும் தூக்கம் வந்தது. மெல்ல உறங்கிப் போனார். பணிப்பெண் அவருக்கு போர்த்திவிட்டாள். விசிறு கின்ற பெண்கள் வந்தார்கள். மெல்ல விசிறினார்கள். நறுமணப் புகையை கூடுதலாக்கினார்கள். மன்னர் தூங்குகிறார் என்று வெளியே இருக்கும் காவலுக்கு செய்தி அனுப்பினார்கள். அக்கம் பக்கம் கூட்டம் இல்லாதபடியும், சப்தம் எழாமல் இருக்கும்படியும் அவர்கள் ஏற்பாடு செய்தார்கள்.

வீரமாதேவி ஒரு சிறு படையை வேங்கி நோக்கி அனுப்பி, அங்குள்ள நிலவரங்களை கவனித்து வரும்படி கட்டளையிடும் போது செய்தி வந்தது. கங்கே யாதவ் சாளுக்கியம் வந்துவிட்டான்.

சிதம்பரத்திலிருந்து மன்னருக்கு பாதுகாப்புக்காக வந்த பெரும் படையிலிருந்து இரண்டு வீரர்களை தேர்ந்தெடுத்து அருண்மொழிபட்டனுக்கு ஓலை கொடுத்தாள். அந்த ஓலையில் சில வரிகளே இருந்தன. 'வேங்கி வெற்றிடமாக இருக்கிறது. அங்கே யாரை விட்டு நிரப்பப் போகிறீர்கள். எப்போது. தெற்கே சுந்தர சோழன் சகலமும் பார்த்துக் கொள்வான். சுந்தர சோழனின் தலைமை எல்லா கலகங்களையும் அடக்கும். வேறொருவர் புகுந்தால் குழப்பம் ஏற்படும். சேர தேசத்தின் நட்புக்கு ஏதேனும் செய். ஒரு ஆரம்ப கட்டமாக தொண்டைநாட்டு மயிலாபுரி தலைவன் சீராளனை வேங்கி நோக்கி அனுப்ப முடியுமா பாருங்கள். மறுபடி ஓலை அனுப்புகிறேன்.'' வீரமாதேவி.

என்று கையெழுத்திட்டாள்.

வீரர்கள் பறந்து ஓடினார்கள்.

சீராளனுக்கு கடுமையான காய்ச்சல் ஏற்பட்டது. மூச்சு திணறியது. எதனாலேயோ முதுகு வலித்தது. உள்ளங்கால்கள் கனத்திருந்தன. நடக்க முடியவில்லை. படுத்தால் எழுந்திருக்க முடியவில்லை. உட்கார்ந்தால் இடுப்பு பிடித்துக் கொள்கிறது. எந்நேரமும் ஒரு சாய்மானத்தில் இருக்கின்ற ஆசை வந்தது. என்ன இப்படி என்று தவித்தான். மருந்துகள் சாப்பிட்டு பழக்கமில்லை. ஆனாலும் வேறு வழியில்லை. வைத்தியர்களை வரவழைத்தான். அவர் மருந்து கொடுத்தார். கொடுத்த ஒரு நாழிகையில் கபம் வெளியே வந்தது. கபத்தோடு ரத்தம் தெரிந்தது. மருத்துவர் மறுபடியும் வந்தார்.

''நுரையீரல் சரியில்லையே. கடும் தொற்று ஏற்பட்டிருக்கிறதே. இனிமேல் அதிகம் பயணம் செய்யாதீர்கள். கண்டபடி சாப்பிடாதீர்கள். நேரத்திற்கு தூக்கம். நேரத்திற்கு உணவு. நிம்மதியான வாழ்க்கை என்று இருந்தால் இன்னும் இருபது வருடம் இருப்பீர்கள். தொடர்ந்து இப்படியே பயணித்தால் இரண்டு

வருடம் தாங்க மாட்டீர்கள்.'' என்று அழுத்தம் திருத்தமாகச் சொன்னார்.

அவன் இரண்டு பணியாட்களோடு அவன் மனைவி குடியிருந்த கோவிலிற்கு வந்தான். கருவறை வாசலில் அமர்ந்தான். 'போதுமா. வந்துவிடட்டுமா' என்று கைகூப்பி கேட்டான். அந்த நடுகல் அசையாது இருந்தது. அந்த நடுகல்லுக்காக திருவல்லிக்கேணி வணிகர்கள் அழகிய முகக் கவசம் செய்திருந்தார்கள். நாகம் உள்ள கிரீடத்தோடு, பெரிய கண்களோடு கூடிய மூக்குத்தி அணிந்த, உதடு பிரித்து சிரிக்கின்ற ஒரு அழகான உலோகத்தை அங்கு வைத்திருந்தார்கள். அபிஷேகம் முடிந்ததும் கல்லுக்கு பின்னே கயிறு கட்டி, அந்த கவசத்தை வைத்து அலங்கரிப்பார்கள். மாலை பூஜைக்காக இப்போது கவசம் கழட்டப்பட்டிருந்தது. அவன் மனைவியினுடைய அத்தை மகன் அங்கு தலைமை பூசாரியாக இருந்தான். அவளே கட்டளையிட்டு வரவழைத்ததாக கனவு சொன்னான். மிகச் சிறப்பாக கோவில் முழுவதும் சுத்தம் செய்து, மேற்கூரையை இறுக்கமாக வைத்து அதன்மீது பூப்பந்தல் கட்டி, உச்சியில் அபிஷேகமும், இரவு ஆராதனைகளும் ஒரு நல்ல வழி வகுத்துக் கொண்டு செய்தான். அந்தணர்கள் அவனுக்கு எப்படி பூஜை செய்வது என்று சொல்லிக் கொடுத்தார்கள்.

அந்த கோவிலுக்குள் நுழைபவர்களெல்லாம் மிக சந்தோஷமாக உணர்வதாக சொன்னார்கள். 'வயிற்றுக்குள் இரண்டு குழந்தைகள் இருப்பதாகச் சொன்னார்கள். பதறிப் போய்விட்டேன். நல்லபடியாக பெற்று பிழைக்க வேண்டும் என்று என் மகள் சார்பாக இவளிடம் வேண்டிக் கொண்டேன். அங்கப் பிரதட்சணம் செய்வதாக வேண்டிக் கொண்டேன். இரண்டு குழந்தைகள். ஆணும், பெண்ணுமாக. கொள்ளை அழகு. இவள் கருணை. முண்டகக்கண்ணி கருணை.' ஒரு பெண் குதூகலிக்க, ஊர் திடமாய் நம்பிற்று.

சுற்றி தளம் போட்டது. இழுத்து சமன் செய்தது. மேலே காரை ஊற்றி மெழுகிற்று. பலர் அங்கப் பிரதட்சணம் செய்தார்கள். 'சக்ரவர்த்தி இராஜேந்திர சோழர் ஊத்தை அடையாமல் திரும்பி வந்தால் நூற்றியெட்டு முறை அங்கப் பிரதட்சிணம் செய்வதாக வேண்டிக் கொண்டேன். காலையில் ஆரம்பித்தேன்.

பத்து பத்தாக செய்தேன். உச்சியில் முடித்துவிட்டேன். உடம்பு வலிக்கிறது. ஆனாலும் அவள் சரி செய்துவிடுவாள்,' என்ற நம்பிக்கையோடு ஒரு மத்திம வயது ஆள் வணங்கிவிட்டு போனான்.

சாக்த உபாஸகம் சோழ தேசம் முழுவதும் பரவ, இதை ஏற்கனவே கைக்கொண்டிருந்த தொண்டை தேசம் இன்னும் சிறப்பாக இதை கொண்டாட ஆரம்பித்தது. அவன் பலி கூடாது என்று சொல்லிவிட்டான். கோவில் முழுவதும் ரத்தச் சேறாக்கி விடுவார்கள் என்று அதை தவிர்த்தான். இடையறாது குங்கிலியப் புகை போட்டுக் கொண்டிருக்க வேண்டும் என்று சிலர் சொல்ல, சம்மதித்தான். அவள் நீரில் மூழ்கி குளிர குளிர இறந்தாள் அல்லவா. அவளுக்கு வெப்பம் வேண்டும் அல்லவா. எனவே சட்டி அடுப்பு எரிந்து கொண்டிருக்கட்டும். குங்கிலியப் புகை வீசிக் கொண்டிருக்கட்டும். அகிற் கட்டைகள் எரிப்பதற்கும் ஒரு இடம் இருக்கட்டும். அந்த இடமே தகிப்பாக இருக்கிறது என்று பலர் சொன்னார்கள்.

அவன் அங்கு உட்கார அவன் நெஞ்சு வலி குறைந்தது. மூச்சு விடுதல் எளிதாயிற்று. வைத்தியர் அவனைத் தேடி மறுபடி வந்தார்.

''இது ஒரு நல்ல இடம் அல்லவா. இது உன் மூச்சை சரி செய்து விடுமே. மூலிகை புகையும் போடலாமே. நாயுருவி, சீகந்திக் கொடி, அருகம்புல், ஆலமொக்கு இவைகளையும் ஹோமம் செய்து இடலாமே. அந்த புகையும் நோய் தீர்க்குமே.'' அவர் சொல்ல, ஊர்மக்கள் அதை குறித்துக் கொண்டார்கள். அந்தணர்களோடு பரிமாறிக் கொண்டார்கள்.

அவன் எழுந்து வெளியே வந்தான். வாசற் பக்கம் இருக்கின்ற பெரிய அரச மரத்தின் அடியில் நாற்காலி போட்டு அமர்ந்தான். சக்கரை பொங்கல் சாப்பிட்டான். இருந்தாலும் ஒரு துடிப்பு வரவில்லை. மெல்ல வேளாளர்களை வரவழைத்தான். நான்கு முக்கியமான வேளாள தலைவர்கள் வந்தார்கள். நதிப்படுகை நிர்வாகம், காசு நிர்வாகம், கழனி நிர்வாகம். ஊர் மக்கள் பஞ்சாயத்து என்று பல பதவிகளை கொண்டிருக்கிறார்கள்.

''எனக்கு போதும் என்று நினைக்கிறேன். நான் இதுவரை பிரம்மச்சாரி என்று நினைத்துக் கொண்டிருந்தேன். சன்யாசியாக

வேண்டும் என்ற விருப்பம் இருக்கிறது. ஒரு சன்யாசிக்கு கடவுள் தேடல் தவிர வேறு வேலை இருக்கக்கூடாது. நான் சன்யாசி யாக விரும்புகின்றேன்.'' தலைவர்கள் ஆட்சேபணை தெரிவித் தார்கள்.

''இராஜேந்திரர் கொடுத்த பதவியை எப்படி உதறுகிறாய். அவர் சம்மதம் வேண்டாமா.''

''சன்யாசிக்கு யார் சம்மதமும் தேவையில்லை.''

''நீ சன்யாசி ஆகவில்லையே.''

''எப்பொழுது உடல்நலம் சீரழிந்ததோ அப்போதே அந்த எண்ணம் தோன்றிற்று. தோன்றிய க்ஷணமே நான் கடைபிடித் தாக வேண்டும். இன்று மாலை என் கடுக்கண்களை கழற்றி விட்டு கை வளையங்களை, மோதிரங்களை அகற்றிவிட்டு நீண்ட முடியை குறைத்துக் கொண்டு ஒற்றைக் காவி வேட் டிக்கு மாறப் போகிறேன்.

இது என் மனைவி எனக்கு விடுத்த அழைப்பு. அவள் தூண்டுதலால் இந்த நோய் ஏற்பட்டிருக்கிறது. இந்த நோய் தொடராது இருக்க வேண்டுமென்றால் நான் சன்யாசம் பெற்றாக வேண்டும். எனவே, ஊருக்கு இதை தெரிவித்து விடுங் கள். இனி நான் வீட்டிற்கு போக மாட்டேன். எந்த நிர்வாகத் திலும் ஈடுபட மாட்டேன்.'' அவன் உறுதியாகச் சொன்னான்.

''சக்ரவர்த்தி கொடுத்த பதவி அல்லவா இது. அவரிடம் ஒரு வார்த்தை சொல்லிவிட்டு செய்யலாமே.''

''சன்யாசம் என்ற எண்ணம் வந்த பிறகு தாமதம் என்பது பொய்யான விஷயமாகிவிடும். தோன்றிய க்ஷணத்திலேயே நிறைவேற்ற வேண்டும். நான் வேறு பதவிக்கு போனால் தானே சக்ரவர்த்தி வருத்தப்படுவார். நான் வேறு தேசம் போனால் தானே தவறு என்று வரும். எந்த பதவியும் வேண்டாம் என்று துறவு கொள்வதில் யாருக்கு வருத்தம் வரும். யாரால் மறுக்க முடியும். இப்போது தோன்றிவிட்டது. இனி பின் வாங்க மாட்டேன். ஊருக்கு அறிவித்து விடுங்கள்.''

வாசற் பக்கம் இருந்த பெரிய அரச மரத்தடியில் அவன் கிழக்கு பார்த்து அமர்ந்து கொண்டான். அவன் முதுகு பக்கம் அவன் மனைவியின் கோவில் இருந்தது.

பிற்பகலிலிருந்து மக்கள் கூடத் துவங்கினார்கள். அவனை தொட்டு வணங்கினார்கள். அவனை கட்டி தழுவிக் கொண்டு கன்னங்களில் முத்தமிட்டார்கள். பிறகு இப்படி தொட முடியா தல்லவா என்று கூடுதலாக தொட்டார்கள். ஊர் மக்கள் அவன் முடிவை சரி என்றும் தவறு என்றும் விவாதித்தார்கள். அவன் அமைதியாக உட்கார்ந்திருந்தான். அவன் தலைமுடியை கழுத்து வரை துண்டிக்க நாவிதர் வந்திருந்தார். காது கடுக்கண் களை அகற்ற குறடோடு ஒரு பொற்கொல்லர் வந்திருந்தார். அவன் வீட்டிலிருந்து அரிசியும், புதிய காழகங்களும் வந்தன. அவன் சொத்து முழுவதும் அவனுடைய சகோதரர்களுக்கு எழுதி வைத்தான். கோவில் என்ற சொத்து மயிலாபுரியினுடைய மக்களுக்கு என்று எழுதி வைத்தான். தலையில் நீர் ஊற்றி சொட்ட, சொட்ட ஈரத்துணியோடு, வெள்ளை வேட்டியோடு உட்கார்ந்திருந்தான். காவி வஸ்திரம் மடித்து வைக்கப்பட்டிருந் தது. அந்தணர்கள் வேதம் ஓதினார்கள். பெண்கள் குலவை யிட்டார்கள். தேவாரங்கள் பாடப்பட்டன.

பசுக்கள் தானம் கொடுத்தான். ஆடுகள் தானம் கொடுத் தான். அவனுடைய வீட்டு குளத்தில் மீன் பிடித்துக் கொள்ள பரதவர்களுக்கு உரிமை கொடுத்தான். பலதும் இலவசமாக வழங்கினான். அவனுடைய மனைவியின் நகைகளை அவன் உறவுக்கார பெண்களும், அவள் சினேகிதிகளும் கேட்டு வாங்கிக் கொண்டார்கள். இனி கொடுப்பதற்கு ஒன்றுமில்லை என்று அவன் அமர, நாவிதர் நெருங்க, வீரமாதேவியிடமிருந்து ஒரு உத்தரவு வந்திருக்கிறது என்று செய்தி வந்தது. வீரர்கள் நெருங் கினார்கள். மற்றவர்களை விலகிப் போகச் சொன்னார்கள். ஒரு ஓலையை நீட்டினார்கள். 'கீழைசாளுக்கியம் போ. அங்கு காவல் இரு'' என்று வீரமாதேவியின் ஓலை சொல்லிற்று.

அவன் தலையசைத்து மறுத்தான். ஊர் மக்களிடம் காட்டி னான்.

''வேண்டாமப்பா. அரசு உத்தரவு வந்திருக்கிறது. இப் பொழுது வேண்டாம்'' என்று எல்லோரும் சொன்னார்கள். அவன் நாவிதரின் கத்தியை வாங்கி தானாக தன் முடியை கழுத்து வரை அறுத்து எறிந்தான். நீண்ட கூந்தல் தரையில் விழுந்தது. நாவிதர் அதை எடுத்துக் கொண்டார். கடுக்கண்கள் வெட்டி அகற்றப்

பட்டன. வலக்காதில் ரத்தம் வந்தது. மருந்து தடவப்பட்டது. மறுபடியும் தலைக்கு தண்ணீர் ஊற்றப்பட்டது. அவன் எழுந்து நின்று வேட்டியை அவிழ்க்க, அவன் இடுப்பின் மீது காவித் துணி போடப்பட்டது. அவன் கோமணத்தை உருவி எடுத்து விட்டு, காவி கோமணத்தை கட்டிக் கொண்டான். ஊர்மக்கள் தலைகுனிந்து பிறகு தலை நிமிர்த்தினார்கள். கை வளையங் களையும், கால் கழல்களையும் கழற்றினான்.

''வீரமாதேவியிடம் என் மன்னிப்பை சொல்லுங்கள். நான் துறவறம் வாங்கிக் கொண்டேன் என்று சொல்லுங்கள். எனக்கு இறைவழியே இனிய வழி. நான் அரசியலிலோ, அதிகாரத்திலோ, குடும்பத்திலோ இல்லை. நான் வேளாளனாக வாழப் போவ தில்லை. வெறும் ஆளாக இருக்கப் போகிறேன். ஜாதி, மதம் தாண்டி இருக்கப் போகிறேன். என் மனைவி இருக்கும் இடமே என் இடம்.

இந்த தோப்பிலிருந்து சற்று தள்ளி வேறு இடத்தில் நான் குடியிருப்பேன்'' என்று சொன்னான்.

வீரர்கள் திகைத்தார்கள். தலையை சொறிந்து கொண்டார் கள்.

''சரி, தகவலை தெரிவித்து விடுகிறோம்'' என்று திரும் பினார்கள். மயிலை அவர்களை மறுநாள் போய்க் கொள்ளலாம் என்று தடுத்து உணவும், உறங்கும் இடமும் தந்தது.

அன்று இரவு கருவறை வாசலில் அவன் அமர்ந்திருக்க, அவன் மனைவி வந்து, அவன் மடியில் அமர்ந்தாள்.

''அற்புதம் அய்யா நீர். சூட்சமம் அய்யா நீர். சுந்தரன் அய்யா நீர்'' என்று கொண்டாடி முத்தமிட்டாள். அவன் சிரித்தபடி பேசாது இருந்தான்.

''இன்னொரு உலகம் இது. இறந்த பின் தோன்றும் உலகம் இது. ஒரு துறவி இறந்தவனைப் போல் ஆகிறான். செத்தாரைப் போல் திரிகிறான். இதை நான் உமக்கு சொல்லித் தருகிறேன். நிம்மதியாக இரும். இப்பொழுது தூங்கும்.'' கண் தடவினாள். அமர்ந்த வண்ணமே அவன் தூங்கினான். அது ஆனந்தமயமான தூக்கமாக இருந்தது.

முதலாம் இராஜேந்திரன் செய்து வைத்த பத்ரகாளி என்கிறார் டாக்டர் நாகசாமி. மன்னன் செய்ததா மற்ற ஊர் சிலைகளோடு ஆஸ்பெஸ்டாஸ் கொட்டகையில் கிடக்கிறது. ஏன் புறக்கணிப்பு. என்ன கதை. காலம் மட்டுமே அறியும்.

அப்படியானால் திருமயிலை, திருவல்லிக்கேணியிலிருந்து திருவொற்றியூர் வரை தலைமையில்லாத பலமில்லாத ஒரு இடமாக இருக்கும். சீராளன் போல முழுவதுமாக தன்னை ஒப்புக்கொடுத்த ஒரு மனிதன் அங்கிருப்பதுதான் அந்த பகுதிக்கு நல்லது. இல்லையெனில் தொண்டை மண்டலம் பலவீனப்படும். ஒருவன் துறவியாகப் போகிறேன் என்றால் எப்படி மறிப்பது. அது அவன் சொந்த விஷயம்.

ஆனால் ஒன்று புரிகிறது. கீழைச்சாளுக்கியத்துக்கு யாரை யாவது அனுப்பி, உடனடியாக காவல் காக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும். பத்து, பதினைந்து தினங்களுக்குள்ளாக இது நடைபெற வேண்டும்.

யார், யார் கீழைச்சாளுக்கியம் போவது. வீரமாதேவியாரும், இராஜேந்திர சோழரும் இடைவிடாது யோசித்தார்கள்.

''யாரோ ஒருவர் என்று சொல்லிவிடக்கூடாது. ஏனெனில் இராஜநரேந்திரன் அங்கு அனுப்பப்பட வேண்டும். இராஜ நரேந்திரனை இயக்கும் விதமாக ஒருவர் இருக்க வேண்டும். அருண்மொழியை அனுப்பலாமா. எந்த ஒரு நிலைமையையும் சமாளிக்கக் கூடியவன், அருண்மொழி மட்டுமே. ஆனால் அருண் மொழியை அங்கு அனுப்பிவிட்டு சோழ தேசத்தை யார் வைத்து நடத்துவது.''

''உதயன் திவாகரன் அங்கு இருக்கிறான் அது போதுமா.''

''அவன் கடற்கரை பகுதியில் கவனம் வைத்திருக்கிறான். மேற்கே யார் இருப்பார்கள். ஒருவேளை மேலை சாளுக்கியம் எல்லை தாண்டி கீழைசாளுக்கியம் வந்தால் யார் நின்று தடுப்பார்கள். அரையன் ராஜராஜனை போ என்று சொன்னால் என்ன செய்வார்.

முகம் சுணக்கி கொண்டிருப்பது போல் தோன்றுகிறது. தன்னுடைய வெற்றி தன்னுடையதாக பேசப்படவில்லை என்ற எண்ணம் இருக்கிறது. அருண்மொழியோடு ஏரி கரைக்கு போய் தனியாக பேசியிருக்கிறார். அவர்கள் இருவரும் மட்டுமே பேசியிருக்கிறார்கள்.

அப்படி என்ன பேச்சு.

ஆனால் அருண்மொழி வருத்தத்தில் இருக்கிறார் என்று மட்டும் விஷயம் சொல்லியிருக்கிறான். என்ன வருத்தம் என்று புரிகிறது. இதற்கு மேல் கொண்டாட முடியாது. ஏதேனும் ஒரு பகுதிக்கு சக்ரவர்த்தியாக அவரை வைக்க முடியாது. இப்படி கேட்டதும், நினைத்ததும் பிசகு.

இப்படி ஆள் ஆளுக்கு ஆரம்பித்தால் சோழ தேசத்தையே பங்கு போட வேண்டியிருக்கும்.

கங்கே யாதவ் மேலை சாளுக்கியத்தில் சுகமாக இல்லை. அவன் தளபதிகள் இரண்டாக பிரிந்துவிட்டார்கள். ஆகம வல்லன் பிரித்துவிட்டான். என் பக்கமா அவன் பக்கமா என்று கேட்டு மிரட்டி, காசு கொடுத்து மாராயா, அசூகி இரண்டு பேரையும் வாங்கி விட்டான். கங்கே யாதவை விட அதிகம் கவலை தரக்கூடியவனாக ஆகமவல்லன் வளர்ந்து வருகிறான் என்பது ஒரு கெட்ட செய்தி. ஜெயித்து வருவது பெரிதல்ல. ஜெயித்ததை காப்பது பெரிது. ஜெயித்த நமக்கு இருக்கின்ற வேகத்தை விட அதிக வேகம் தோற்ற மக்களுக்கு இருக்கும். அவர்கள் கோபம் இயல்பு. எனவே, யுத்தம் மறுபடியும் ஆரம்பிக்கும்.

தெற்கே ஐந்து பாண்டியர்கள் ஒன்றாகிவிட்டார்களாம்.

ஐந்தாக பிரிந்ததே சிரிப்பு. இதில் ஒன்றாகி என்ன செய்யப் போகிறார்களாம். பாண்டியர்கள் ஒன்றாக இருந்ததாக சரித்திரமே இல்லை. ஒவ்வொரு பகுதியிலும் இருப்பவர்கள் தன்னை பாண்டியர்கள் என்று சொல்லிக் கொள்கிறார்கள். இதுதான் அவர்கள் பலவீனம். இப்போது அவர்கள் படையெடுக்க மாட்டார்கள். ஆனால் சிறிய கலவரங்கள் செய்வார்கள். தங்கள் படையினரை உற்சாகப்படுத்த சில கிராமங்களை கொளுத்துவார்கள். பிடிபட்டது பாண்டிய தேசம் என்று கூக்குரலிடச் சொல்வார்கள். சுந்தர சோழ பாண்டியன் இதை கவனித்துக் கொள்வான். ஆயினும் அந்த பிள்ளைக்கு இது வீண்தொல்லை. நிம்மதியாக இருக்க முடியாத நிலை. அவனுக்கு மட்டும் நிம்மதி இல்லையா. எனக்கும் நிம்மதி இல்லை.''

இராஜேந்திர சோழர் அலுத்துக் கொண்டார்.

மகளின் புத்திசாலித்தனத்தை மறுபடி மறுபடி ஓலை எடுத்து படித்து புரிந்து சந்தோஷப்பட்டார்.

''இங்கு வரவழைத்து அம்மங்காதேவிக்கு யுத்த பயிற்சி கொடுக்கலாமா.''

''என்ன பேச்சு இது,'' சக்ரவர்த்தி இராஜேந்திரரின் பேச்சுக்கு கடும் எதிர்ப்பாக வீரமாதேவி பேசினாள்.

''பிறகு என்ன ஆகும். அவள் புருஷன் அனுமதிப்பானா. அவனுக்கு எதிராக தூண்டிவிடுவதாக நினைக்க மாட்டானா. ஏற்கனவே அவன் இரண்டும் கெட்டான் பிள்ளை. இப்படியெல் லாம் யோசித்து அவள் வாழ்க்கையை பாழாக்கிவிடாதீர்கள்.

திருமணத்திற்கு முன்பே யுத்த பயிற்சி கொடுத்திருக்க வேண்டும். இப்பொழுது குதிரை ஏற்றம் தெரியும் என்பது தவிர, அவளுக்கு வேறு பயிற்சி இல்லை.

இனி தரவும் முடியாது. அவள் இவ்வளவு தெளிவாக இருக்கிறாள் என்பதே மிகுந்த சந்தோஷமாக இருக்கிறது. அவள் படைத்தளபதி அல்ல. நிர்வாகி. இராஜராஜ நரேந்திர னுக்கு படைக்கலப் பயிற்சி கொடுங்கள். அரையன் ராஜராஜ னுக்கு இணையாக அவன் வரவேண்டும் என்று சொல்லுங்கள்.

ஆனால் அது இயலாத காரியம். அரையன்ராஜராஜன் பிறவி மறவன். பதினைந்து வயதிலிருந்து போரில் ஈடுபடு பவன். இராஜ நரேந்திரன் அம்மாவின் பின்னால் ஒளிந்து கொண்டிருந்த பிள்ளை. இப்பொழுதுதான் மூச்சு சரியாக வருகிறது அவனுக்கு. அடுத்தவர் அபிப்ராயம் கேட்காமல் சுயமாக சிந்திக்க முடிகிறது. எனினும் குருவித் தலையில் பனங் காய் வைக்க முடியாது.''

''இராஜாதிராஜனை அனுப்பலாமா. வீர இராஜேந்திரன் மட்டும் போதுமா.''

''இல்லை. நான் கடலோடி போக வேண்டுமென்றால் என் இடத்தில் இன்னொரு அரசன் இருக்க வேண்டும். ஒருவேளை நமக்கு ஏதேனும் ஆனால் உடனடியாக அங்கு மணிமுடி தரிக்க, செங்கோல் ஏந்த அங்கு இராஜாதிராஜன் வேண்டும். வீர இராஜேந்திரன் அவனுக்கு துணையாக இருக்க வேண்டும். கூட்டி கழித்துப் பார்த்தால் அரையன் போவதே நல்லது.''

இங்கிருந்து அரையனுக்கு உத்தரவு அனுப்புவதா, அல்லது ஒருமுறை கங்கை கொண்ட சோழபுரம் போய் வருவதா.

பெரும் மரங்கள் அறுக்கப்படுகின்றன. பலகைகள் துளையிடப்பட்டு கயிறுகள் தயாராகி நாவாய்கள் கட்டும் பணி துவங்கி துரிதமாக நடந்து கொண்டிருக்கிறது. சதுரங்கபட்டிணத்தில், தெற்கே நாகையில் இவைகள் வேகமாக நடைபெறுகின்றன. நாகை கட்டுமானம் மிக நன்றாக இருக்கிறது. பெரிய படகுகளை அற்புதமாக செய்கிறார்கள். நடுவே ஒற்றை பாய் மரம். அதற்கு பக்கத்தில் பெரிய மூங்கிலை வளைத்து இரண்டு பக்கமும் மரம் அமைத்து எந்த புயலுக்கும் படகு கவிழாமல் ஒரு அமைப்பு செய்கிறார்கள். பெரிய பாய்மரம். சிறிய படகு என்பதால் துரிதம் அற்புதமாக இருக்கிறது, நாவாய்களை சுற்றி சுற்றி வருகிறது. பெரிய நாவாய்களை மட்டுமல்லாது நாவாய்களை சுற்றி படகுகளில் போகலாம் என்று பரதவர்கள் சொல்கிறார்கள். நாவாயிலிருந்து உணவு சமைத்து படகுகளுக்கு அனுப்ப வேண்டும். படகுகளில் வீரர்களும், எரி அம்புகளும், ஈட்டிகளும் இருக்க வேண்டும்.

குதிரைகளுக்காகவும், யானைகளுக்காகவும், வீரர்களுக்காகவும் நாவாய்கள். பரதவர்கள் படகுகளில் வருவார்கள். அவர்களும் நல்ல வீரர்கள்தான். நூற்றி ஐம்பது நாவாய்கள் வேண்டும். உத்திரலாடத்தில் இருந்து வந்தவை. தட்சிணலாடத்திலிருந்து மடக்கி வந்தவை என்று கணக்கு போட்டால் ஒட்ட தேசத்து நாவாய்களோடு தொண்ணூற்றியாறு நாவாய்கள் இருக்கின்றன. வடக்கிருந்து தெற்கு நோக்கி ஒரு நேரம் அத்தனை நாவாய்களும் போவதை கரையிலிருந்து பார்த்தால் பெரிய யானைப்படை நகர்ந்து போவது போல் இருக்கிறது. நாவாய்கள் மினுமினுவென்று இருக்கின்றன. கரையில் தளபதிகள் ஒன்றுகூடி அந்த கலன்கள் எப்படி இயங்க வேண்டும் என்று வகுப்புகள் நடத்துகிறார்கள்.

தாக்கு, நிறுத்து, இடப்பக்கம் போ. வலப்பக்கம் போ. வேகமாகப் போ. நிதானமாகப் போ. நிறுத்து, என்றெல்லாம் கொடி அசைவிலும், இரவு நேரத்தில் வெள்ளை பலகை அசைவிலும் உத்தரவுகள் தரப்படுகின்றன. கடைநிலை படகோட்டி வரை அந்த உத்தரவுகளை புரிந்து கொள்ள வேண்டும். புரிந்து கொள்ளாதவர்கள் கரையிலேயே விடப்படுவார்கள். கழுத்திலிருந்து, இடுப்பு வரை அப்படியே தலைவழியாக மாட்டிக் கொள்ளும்படி

மாட்டுத்தோல் உடைகள் தரப்படுகின்றன. அதை பழக்கிக் கொள்ள வேண்டும்.

தாகம் அடக்க, பசி அடக்க பரதவர்கள் காஞ்சனம் என்ற மூலிகையைப் பயன்படுத்துவார்கள். சுருட்டி வாயில் அதக்கிக் கொள்வார்கள். ஊற வைத்து சாறு உறிஞ்சுவார்கள். அது அப்போதைக்கு தீர்வே தவிர, பிற்பாடு செயலற்றுப் போகச் செய்துவிடும். ஒருவரும் காஞ்சனம் என்ற இலையை உபயோ கப்படுத்தக் கூடாது. வேம்பு சாறு, துளசி கஷாயம் குடிக்க பழக்கிக் கொள்ள வேண்டும். குமட்டும். வாந்தி வரும். ஆனால் உடம்புக்கு நல்லது. ஒரு நோயும் வராது.

"ஸ்ரீவிஜயம் எங்கிருக்கிறது தெரியுமா. இந்த இடத்தி னுடைய ஊர் பெயர் தெரியுமா. இது மாபாளம். இது லங்கா சோகம். இது கடாரம். இது இந்த இடத்தில் காம்போஜம்." அவர் களுக்கு படம் வரைந்து காட்டப்பட்டது.

"இப்படியா இருக்கிறது நம் பூமி. இதற்கு பிறகு என்ன. பள்ளமாக இருக்கும் என்றல்லவா நினைத்தேன்."

"இல்லை. பூமி உருண்டையானது."

"சொல்லியிருக்கிறார்கள். புரியவேயில்லை."

"புரிந்துகொள். பூமி உருளையானது. இங்கிருந்து ஆரம் பித்து நீ சுற்றி வந்தால் மறுபடியும் மேற்கு கரையில் வந்தடை வாய். இப்படி இலங்கைக்கு நடுவே புகுந்தால் மறுபடியும் நாகை வருவாய்."

"இங்கெல்லாம் யார் இருக்கிறார்கள்."

"மனிதர்கள் இருக்கிறார்கள். வெவ்வேறு தேசத்தவர்கள் இருக்கிறார்கள். வெவ்வேறு நாகரீகம் இருக்கின்றன என்று சோழவீரர்கள் சொல்லி இருக்கிறார்கள்."

"யவனர்களா."

"ஆமாம். அவர்கள் நெடும் பயணம் மேற்கொண்டவர்கள். உலகம் பற்றி நன்கு அறிந்தவர்கள். முழங்கால் ஆழ பனியில் நன்கு நடந்து போனவர்கள். கொதிக்கின்ற சுடுமணலில் நடக்க தெரிந்தவர்கள், நல்ல குதிரைகள் தேடி பல்வேறு தேசங் களுக்குப் போய் வந்திருக்கிறார்கள். அங்கிருந்து ஒரு காசுக்கு வாங்கி நமக்கு நூறு காசுக்கு விற்கிறார்கள்.

இப்பொழுது சுழற்காற்று வந்தால் என்ன செய்வது, சுழற் காற்று எப்படி கண்டுபிடிப்பது, புயல் வரும் என்று எப்படி அறிவது, பருவ மழை மாற்றம் நமது நாவாயை என்ன செய்யும். என்றெல்லாம் அறிந்துகொள்ளப் போகிறீர்கள்.''

இராஜேந்திரரும், வீரமாதேவியும், வணிகர்களும், பரதவர் களும் சொல்வதை செவிமடுத்தார்கள். திரும்ப திரும்ப அது பற்றி பேசி நெஞ்சில் பதித்துக் கொண்டார்கள்.

ஒரு பயிற்சி யுத்தம் நடத்தினார்கள். அவர்களே இரண் டாக பிரிந்து ஒரு நாவாயை முட்டி தாக்குவது பற்றி தெரிந்து கொண்டார்கள். ஒரு நாவாய் பாய்மரங்கள் மாற்றி, இன் னொரு நாவாயை சுற்றி சுற்றி வந்து வயிற்றுப் பகுதியை இடித்து தாக்கி இரண்டாக உடைத்தது. கொக்கிகள் கட்டிய கயிறை வீசி, நாவாயை பிணைப்பது பற்றி பாடம் நடந்தது. எரி அம்புகளை உபயோகப்படுத்துவது பற்றி கற்றார்கள். பாய்மரங்களை நோக்கி வீசினார்கள்.

காற்று எதிர்பக்கம். நாவாயோ அந்தப் பக்கம். அம்பு போகுமா. தழலோடு போகுமா. போக வேண்டும். என்ன செய்வது. வில்லின் உயரத்தை அதிகரித்தார்கள். நாணை இறுக்கக் கட்டி னார்கள். பிரம்பை மெல்லியதாக்கினார்கள். நுனியில் கற்பூர தைலம் அதிகம் ஊற்றினார்கள். அடித்து காட்டினார்கள். நேரே அடிக்காமல் உயர்த்தி அடித்தால் மேலே செங்குத்தாகப் போய் அப்படியே கீழே இறங்குகிறது.

நூறு நாவாய்கள் ஒன்று சேர்ந்து பூம்புகாரிலிருந்து அப்படியே நாகைக்கு போயிற்று. ஒருநாள் நாகையில் தங்கி மறுநாள் கிளம்பி பூம்புகாருக்கு வந்தது. பூம்புகாரிலிருந்து காற்று எதிர்த்து சதுரங்கப்பட்டிணம், திருக்கடல்மல்லை போயிற்று. நாவாய்கள் கடல் முழுவதும், கரை முழுவதும் ஊடாடின.

ஜெயசிம்மன் அரசவையில் சிங்காசனத்தில் அமர்ந்திருக்க, வெகு அருகே தகப்பனின் சிங்காசனத்தை விட பளபளப்பான சிங்காசனத்தில் ஆகமவல்லன் உட்கார்ந்திருந்தான். கருத்த முடி. தடித்த உதடு. பருத்த தேகம். மாநிறமாக உடம்பு. பெரிய விழிகள். முறுக்கிய மீசை. சதா தாம்பூலம் மென்ற வாய். குதிகாலை தட்டி கழல் ஒலி ஏற்படுத்திக் கொண்டிருக்கின்ற

தன்மை. எல்லா விரல்களிலும் மோதிரம். தடித்த சங்கிலி. நடுவே ஒரு மடக்கு மது அருந்தாமல் இருக்க முடியவில்லை. கங்கே யாதவை அவன் வரவேற்கவில்லை. கங்கே யாதவ் அவன் வாசலில் வந்து நின்றபோதும், 'எனக்கு தூக்கமாக இருக்கிறது. பிறகு சந்திக்கிறேன்' என்று திருப்பி அனுப்பிவிட்டான்.

கதவின் பின்புறமிருந்து ஒரே பெண்கள் கூச்சல் கேட்டது. இவன் வேண்டுமென்றே அவமானப்படுத்துகிறான் என்ற கோபத்தோடு கங்கே யாதவ் திரும்பினான். 'நான் செய்த தியாகங்கள் எவ்வளவு தெரியுமா', என்று ஆகமவல்லன் தளபதிகளிடம் பட்டியலிட்டான். உடனே செய்தி ஆகமவல்லனுக்கு போயிற்று.

''எல்லாவற்றுக்கும் வெகுமதி காத்திருக்கிறது என்று போய் சொல்லும்,'' என்று அவன் வாய்விட்டு சிரித்தான். கங்கே யாதவிற்கு மெல்லியதாய் ஒரு பயம் பற்றிக் கொண்டது. ஆகம வல்லனை தாண்ட முடியாதோ என்ற கவலை ஏற்பட்டது. அவன் தீவிரமாக யோசிக்கத் துவங்கினான்.

உத்திரலாடத்தில் சோழர்கள் கொள்ளை அடித்து வந்த இடத்திலிருந்து கிடைத்ததை பொறுக்கி வந்து ஒரு கூடையில் நிரப்பி அதை பட்டுத் துணியால் மூடி ஆகமவல்லனுக்கு பரிசளிப் புக்காக கொண்டு வந்தான்.

அதுவே வினையாயிற்று.

★ ★ ★

அத்யாயம் 89

ஆனால் சோழ தேசத்தின் ஆண்களில், படை எடுத்துச் சென்ற வீரர்களில் பாதி பேர் மறுபடியும் படையெடுப்புக்கு சித்தமாக இல்லை. அடித்துக் கூப்பிட்டால் போகலாம் என்ற எண்ணத்தில் திடமாக இருந்தார்கள். என்ன காரணம் சொன்னால் மறுபடியும் அழைக்க மாட்டார்கள் என்று யோசிக்கத் துவங்கினார்கள். மறவர் குலம் வேறு வழியில்லை என்று அமைதியாக இருந்தது. போர்தான் வேலை. அதில் திரட்டிய செல்வம் தான் வாழ்க்கை. செத்துப் போயிருந்தால் வீடு நாறிப் போயிருக்கும். அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் உதவுவார்கள். ஆனாலும் அடுத்த தலைமுறை நிமிர்ந்து வாலிபனாக வாழும் வரை முன், பின்னுமாகத்தான் இருக்கும். பசியில் வாட விட மாட்டார்கள். ஆனால் சோறு மட்டுமா வாழ்க்கை. வீட்டுக் கூரை சரிந்தால் நிமிர வைக்க வேண்டுமல்லவா. பசு மாடுகள் அதிகம் வேண்டுமல்லவா. மேய்ச்சலுக்கு ஓட்டிப் போகச் சொல்லி, பால் எடுத்துக் கொள்ள கட்டளையிட்டு, ஒரு சொம்பு நிறைய பால் வீட்டிற்கு வைத்துக் கொண்டு, விற்ற பாலுக்கு காசு வாங்கிக் கொண்டு, அந்த காசுக்கு அரிசியும், பருப்பும், நெய்யும், எண்ணெய்யும் வாங்கி, வதக்கி, வறுத்து, அவித்து ஆக்க வேண்டும் அல்லவா. குழந்தைகள் வயிறு நிறைய சாப்பிட வேண்டும் அல்லவா. இதெல்லாம் நிச்சயம் குறைவுபடும். தகப்பன் இருக்கிறான் என்பதே பெரிய உற்சாகம். இல்லாத வீடு அவஸ்தைதான் பட்டது.

''கீழை சாளுக்கியத்திலேயே கங்கே யாதவ் கையால் இறந்து போனார் அம்மா. மூன்று தளபதிகள் இரவு நேர தாக்குதலில் மரணமடைந்தார்கள். கூடவே காவல் இருந்த வீரர்களில் இவரும் ஒருவர். இவர் நெஞ்சிலும் அம்பு தைத்து சில விநாடிகள் மயக்கமாகி இறந்து போனார். இதோ, அவருடைய கைவேலும்,

வாளும், பாதரட்சைகளும் கொண்டு வந்திருக்கிறோம். உடனே அனுப்பியிருப்போம். ஆனால் அடுத்தடுத்த போரால் செய்ய இயலவில்லை.

அம்மா, உங்கள் புருஷன் கங்கை கரை தாண்டும் முன்பு மஹிபாலனோடு ஏற்பட்ட போரில் குறுவாள் நெஞ்சில் சொருகப்பட்டு கிடந்தார். யார், எப்போது தாக்கினார்கள் என்று தெரியவில்லை. கடைசியில் பேசியது எதுவும் நாங்கள் கேட்க வில்லை. குதிரைகளும் மிதித்து துவைத்திருந்தன. கத்தி யிலேயே மரணம் ஏற்பட்டிருக்க வேண்டும். அங்கேயே தகனம் செய்துவிட்டோம். இது, அவருடைய உடைவாள். அவர் நெஞ்சில் சொருகியிருந்த குறுங்கத்தி, இதில் உத்திரலாடத்து சின்னம் பொறிக்கப்பட்டிருக்கிறது. எனவே, மஹிபாலனின் வீரர் களில் ஒருவர் இதை செய்திருக்கலாம்.''

அவர்கள் சிறிது நேரம் வாசலில் உட்கார்ந்திருந்தார்கள். உள்ளே இழவு வீடு ஆரம்பமாகியது. புரியாத வகையில் தான் குடித்தனம் செய்த அழகை, அவன் கொஞ்சிய விதத்தை அந்த பெண்மணி அறற்ற துவங்கினாள். அக்கம் பக்கத்து வீடுகளி லிருந்து பெண்கள் ஓடிவந்து உள்ளே புகுந்தார்கள். ஆண்கள் வந்து திண்ணையில் தூசு தட்டி அமர்ந்து கொண்டார்கள். மறுபடி மறுபடி கேட்டார்கள். சொன்னதையே பலமுறை திரும்பச் சொல்ல வேண்டி வந்தது.

''அன்று என்ன திதி தெரியுமா.'' ஒரு வீரன் இந்த கணக்கை ஒரு ஓலையில் பதிய வைத்திருந்தான். அவனிடம் ஆயிரக்கணக்கான ஓலைகள் இருந்தன. அகர வரிசைப்படி அடுக்கி இருந்தான். இவன் பெயரை தேடி எடுத்தான்.

''அன்று தசமி திதி, கிருஷ்ணபட்சம், ஐப்பசி மாதத்தின் மூன்றாம் தேதி. அனேகமாக அந்த போருக்கு பிறகு போர் நடக்கவில்லை. அந்த போரில் பிழைத்திருந்தால் மறுபடியும் சோழ தேசம் வந்திருப்பார்.'' இன்னும் உரத்த குரலில் அழுதார்கள்.

தகவல் சொன்ன வீரர்கள் மெல்ல எழுந்தார்கள். இறந்த வருடைய பத்து வயது பையன் ஓடிவந்தான். அவர்கள் கால் களை தொட்டுக் கும்பிட்டான். அவர்கள் பை பிரித்து செப்புக் காசுகளும், பொற் கழஞ்சுகளும் எடுத்து அவன் கையை இழுத்து

அதில் வைத்தார்கள். ஒருவன் வெள்ளி அரைஞாண் எடுத்து கொடுத்தான்.

'இது மஹிபாலன் தேசத்தில் பறித்தது. உன்னுடைய தகப்பனார் எனக்கு அருகேதான் வந்தார். எனக்கு நண்பனாக இருந்தார். உன்னைப் பற்றி பேசினார். திருமணம் முடித்து வெகுநாள் கழித்துதான் நீ பிறந்தாயாம். அவர் உன்னிடம் ஒன்று கேட்டுக் கொண்டார்.''

உள்ளே அமைதியாயிற்று. உறவினர்கள் சூழ்ந்து கொண் டார்கள். கிராமத்தார்கள் நெருங்கி வந்தார்கள்.

''உன்னை மறவனாக இருக்க வேண்டாம் என்றும், ஆயுதம் தூக்க வேண்டாம் என்றும், ஆயுதம் தூக்குவோருக்கு உதவி செய் என்றும், வேளாளனாக இரு என்றும் கட்டளையிட்டிருக் கிறார். உன்னை விட்டால் அடுத்தது இரண்டு பெண்களாம். வம்சம் வளராதாம். ஒருக்காலும் நீ போருக்கு போகக்கூடாது என்று சொன்னார். இது அவரின் கட்டளை.''

அவர்கள் அந்த வீடு பார்த்து வேல் ஊன்றி வரிசையாக நின்றார்கள். கிராமம் அந்த வீரர்களை நோக்கி குலவையிட்டது.

''தெய்வத்திற்கு சமமானவர்கள் இல்லையா அவர்கள். இறந்தவனின் திதி எழுதி வைத்திருக்கிறார்களே. சாதாரண விஷயமா இது. இறந்தவனோடு பயணப்பட்டிருக்கிறார்களே. அவனை தகனம் செய்திருக்கிறார்களே. எவ்வளவு புண்ணிய சாலிகள். இந்த வீடு கடன்பட்டிருக்கிறதய்யா. இந்த வீடு கடன்பட்டிருக்கிறது. என் புருஷனை கரையேற்றினீரே. என் வீடு கடன்பட்டிருக்கிறது. என் பிள்ளை கடன்பட்டிருக்கிறான்.'' உறவினர்கள் கதற அந்த வீரர்கள் ஈட்டியை தரையில் ஊன்றி தலைகுனிந்து அழுதார்கள். உள்ளிருந்த அந்த பெண்மணி ஓடிவந்தாள். நெஞ்சில் அடித்துக் கொண்டாள். அவள் சேலை நாலு பக்கமும் பறந்தது. இடுப்பு வரை தெரிந்தது. ஆனால் யாருக்கும் அதுபற்றி கவலையில்லை. அதையெல்லாம் தாண்டி துக்கம் நின்றது. அவள் மண்ணில் புரண்டு அழுதாள். நகர்ந்து வந்து அவர்கள் கால்கள் தொட்டு கண்ணில் ஒற்றிக்கொண்டாள்.

''எனக்கு சந்தோஷம். எனக்கு சந்தோஷம். எனக்கு சந்தோ ஷம்'' என்று அந்த துக்கத்தின் நடுவே கதறினாள். ஊர் விக்கி, விக்கி அழுதது.

''என்ன கொடுமை இது. இறந்துபோன வீட்டில் சந்தோஷமா. அது எப்படி.''

''ஆமாம். எங்கோ இறந்து போயிருக்கிறார், என்றோ மரண மடைந்திருக்கிறார். என்ன கன கரிசனமாக அவருக்கு தகனம் செய்து, எரியூட்டி அவரிடம் இருந்த உடைமைகளை மிக பத்திரமாக பாதுகாத்து இங்கு கொண்டு வந்து கொடுத்திருக் கிறார்கள். திதியை எழுதி வைத்திருக்கிறார்கள். அவருடைய கடைசி கட்டளையை கொண்டு வந்து கொடுத்திருக்கிறார் கள். இதற்கு என்ன நன்றி சொல்வது. எப்படி நன்றி சொல்வது.'' அவள் மெல்ல எழுந்து, தள்ளாடி, தூண் பிடித்து படி ஏறி உள்ளே போனாள். உள்ளே இருட்டாக இருந்தது.

அவர்கள் நகர்ந்ததும் அந்தணருக்கு அவள் உறவினர்கள் ஆள் அனுப்பினார்கள். அந்தணர் வந்தார். நீத்தார் கடன் செய்ய வேண்டுமே. நாவிதர் வந்தார். அவனுக்கு முடி எடுக்க வேண்டுமே. நெசவாளர் வந்தார். அவனுக்கு இடுப்பில் புது கோவணம் கட்ட வேண்டுமே. அவன் புதுக் கோவணமும், மொட்டை தலையுமாய் வீட்டின் அக்னி மூலையில் அமர்ந்தான்.

முழங்கை உயரமுள்ள கருங்கல் கொண்டு வந்தார்கள். அது செதுக்கப்பட்ட கருங்கல். அது பாதை தெரிவதற்காக நடப் பட்ட கல் போன்றும் இருந்தது. பூஜை செய்வதற்குண்டான முகமுமாய் இருந்தது. குழி தோண்டி அதை பாதி அளவு புதைத்தார்கள். இனிமேல் அதுதான் அந்த வீட்டு தலைவ னுடைய முகம். அதுதான் அவனுடைய இடம். அவன் மகன் அந்த கல்லுக்கு தண்ணீர் ஊற்றினான். அவன் மனைவி அந்த கல் எதிரே நின்று அழுது கொண்டிருந்தாள். அவளை பல வயதான பெண்கள் சமாதானப்படுத்திக் கொண்டிருந்தார்கள். அந்த கல் எதிரே அவர் எடுத்துக் கொண்டு போன பல ஆயு தங்கள் வைக்கப்பட்டது. படையல் சமர்ப்பிக்கப்பட்டது.

விலகி வந்ததும் காக்கைகள் தரை இறங்கி, படையல் இட்ட வெள்ளைச் சோறை, கறிகூட்டை, ருசித்தது. நாய்கள் கவவின. ஒரு பசுமாடு ஓடிவந்து இலையோடு அந்த படை யலை தின்றது.

''அடடா, அந்த மறவனின் மனக்கேதம் தீர்ந்துவிட்டது.

அவன் வீடு கொடுத்த கடைசி உணவை விருப்பத்தோடு சாப்பிட்டுவிட்டான்,'' என்று கிராமமே சொல்லியது.

'வீரமரணம் என்று அரசாங்கத்திடம் எப்படி செய்தி சொல்வது,' என்று சொல்ல, கிராமத் தலைவர் வந்தார். எத்தனை பேர் என்று குறித்துக் கொண்டார்.

''உடனடியாக ஐந்து கழஞ்சு கொடுக்கச் சொல்லி உத்தரவாகியிருக்கிறது. இறந்தவர் வீட்டில் எவருக்கும் பாரபட்சம் இல்லாமல் ஐந்து பொன் கழஞ்சு. அவரவர் யோக்யதையை நிர்ணயித்து, அவர் சண்டையிட்ட விதத்தை கருதி, அவருக்கு நிலமும், வேறு பொருள்களும் தரப்படும். அரசாங்கத்திற்கு சொல்லி வரவழைக்கிறேன்'' என்று உறுதி கூறிவிட்டு போனார்.

அன்று இரவு அந்த வீரனின் மகன் அவன் அம்மாவை அணைத்தபடி கேட்டான்.

''நான் பயிற்சிக்கு போக வேண்டாமா அம்மா.''

''வேண்டாமப்பா. மறவனாக இருக்க வேண்டாம். ஒன்று நாம் நிறைய மாடுகள் வளர்ப்போம். அல்லது நிலம் வாங்கி நதிக்கரையோரம் பயிர் பச்சை செய்வோம். கங்கை கொண்ட சோழபுரம் மறவர்களுடைய இடம். நாம் இந்த இடத்தை வேறு எவருக்கேனும் விற்றுவிட்டு அவர் வாடகைக்கு குடியிருக்க, நாம் கொள்ளிடக் கரைக்கு போய்விடுவோம். அங்கு நிலத்தை சீர்செய்து, கால்வாய் எடுத்து காய்கறி தோட்டம் அமைப்போம். நீர் உள்ளே வந்தால் பயிர் பாசனம் செய்வோம்.'' அவள் திட்டமிட்டாள். புருஷனோடு கூடிய நாட்கள் ஞாபகம் வந்தன. அவள் மெல்ல புரண்டு படுத்தாள். தொடர்ந்து கனவு கண்டாள். அதை எந்தப் பெண்ணாலும் தவிர்க்கவே முடியாது.

அவள் பிள்ளை எழுந்து வெளியே போய் திண்ணையில் பாய் விரித்து, தலைக்கு மரப்பலகை வைத்து படுத்துக் கொண்டது.

''ஏண்டா, அங்கே போற, காத்து, கருப்பு படப்போகிறது.'' உள்ளிருந்து குரல் கொடுத்தாள்.

''பக்கத்திலேயே அப்பா இருக்காரம்மா.'' அந்த பிள்ளை விக்கியபடியே பதில் சொல்லியது. அவளுக்கு சிரிப்பு வந்தது. 'மறவன் மற[illegible]தான்', என்று சொல் கிள[illegible]

அவர் கருமார். அரை நாழிகையில் உலை ஏற்றி, துருத்தி பொருத்தி, தழல் கிளப்பி வெறும் கருந்துண்டங்களாய் இருந்த இரும்பை பெரிய இருப்புச் சட்டியில் போட்டு உருக்கி அம்பு அச்சில், ஈட்டி அச்சில் ஊற்றி ஒன்றரை நாழிகையில் முப்பது அம்புகளும், இருபது வேல் முனைகளும் செய்துவிடுவார்.

''இத்தனையும் இரும்பு துண்டங்களா.'' வீடு வியந்தது.

''இல்லையடி. அத்தனையும் தங்கம்.''

''என்ன.'' திகைத்தது.

''பெரிதாய் கூவாதே.'' நாலு முழங்கை நீளத்திற்கு மூன்று விரல் அகலத்திற்கு ஒரு விரல் தடிமனுக்கு தங்கத் துண்டுகள் இருந்தன.

''தங்கம் கருப்பாகவா இருக்கும்.''

''இல்லை. நான் மேலே வர்ணம் தடவி இருக்கிறேன்.''

''ஏன்.''

''மறவர்கள் பிடுங்கிக் கொள்வார்கள்.''

''இவை எங்கிருந்து கிடைத்தது.''

''வழி நெடுக மறவர்கள் கொள்ளை அடித்து போனார்கள். இறந்து போனவர்களை தூக்கி வைக்கும்போது அவர்கள் இடுப்பில், குதிரை சேணத்தில் இம்மாதிரியான தங்கக் கட்டிகளும், நகைகளும் இருந்தன. போர் நடந்த வீட்டிலிருந்தும் நாங்கள் உள்ளே போய் ஏதேனும் அபகரித்து வருவோம். தடுப்பதற்கு ஆளே இல்லை. கோவில் கருவறையிலிருந்து இராஜேந்திரர் பார்க்க வேண்டும் என்று பெரிய தெய்வச் சிலைகளை பெயர்த்து வந்தார்கள். அதற்கு கீழே என்ன இருக்கும் என்று பார்க்க மறந்துவிட்டார்கள். குனிந்து பார்த்தவர்களுக்கு வெறும் மண்தான் தெரிந்தது. அவர்கள் பத்து காதம் போன பிறகு நாங்கள் உள்ளிருந்த மண்ணை அப்புறப்படுத்தினோம். வைர, வைடூரியங்கள், பெரிய தங்க பாளங்கள், யந்திரங்கள் இருந்தன. அவைகளை தூசு தட்டி சுத்தமாக்கி, அடையாளம் தெரியாமல் உருக்கி அதன் மீது இப்படி தடவி எடுத்து வந்துவிட்டோம்.

ஒரு சிறிய கோவிலில் ஒன்றும் கிடைக்காது என்று வீரர்களும், மற்ற கருமார்களும் போய்விட்டார்கள். நான் எல்லோரும் போகட்டும் என்று காத்திருந்தேன். பக்கத்திலேயே உலை போட்டு இன்னும் அம்புகள் செய்கிறேன் என்று உட்கார்ந்தேன். உடன் ஒரு பிள்ளை இருந்தான். அவன் வேளாளன். பதினேழு வயது, தலையில் தட்டி கூட்டி வந்துவிட்டார்கள். அவனுக்கு போர் செய்ய பயம். அதனால் என்னோடு ஒட்டிக்கொண்டான். நானும், அவனும் அந்த குழியில் கைவிட்டு மண் தோண்டினோம். கைகளாலேயே மண்ணை அகற்றினோம். கடப்பாரை போட்டால் வைரங்களோ, மாணிக்கங்களோ சிதறககூடும். ரத்தம் வர கிளறினோம். பட்டை பட்டையாய் தங்கங்கள் கிடைத்தன. உருளை உருளையாய் கிடைத்தன. மாணிக்கம், வைரம் எல்லாம் கிடைத்தன. அள்ளி எடுத்து வந்து தங்கங்களை உலையில் போட்டு உருக்கி, பட்டையாக்கி எடுத்து வைத்துக் கொண்டோம். அவன் ஒரு பட்டை எடுத்துக் கொண்டு போனான்.''

''ஒரு பட்டையா. இவ்வளவு தடியா. ஏன் கொடுத்தீர்கள்.'' அவர் பிள்ளை சீறினான்.

''சும்மா இருடா. அவன் உழைத்த உழைப்புக்கு அந்த ஒரு பட்டை ஒன்றுமில்லை. இத்தனை விஷயங்களையும் கழுதையில் ஏற்றிக் கொண்டு வந்தது அவனே. கொடுக்காவிட்டால் மறவர்களிடம் மாட்டிவிடுவான். எனவே அவனுக்கு கொடுத்தாக வேண்டும். இவனுக்கு கொடுத்ததற்கே ஹா என்று வாயை பிளக்கிறாயே, மறவர்கள் எத்தனை பட்டைகள், எத்தனை நகைகள் எடுத்துப் போகிறார்கள் தெரியுமா. தங்கச் சட்டியடா. கோவிலிலிருந்து இவ்வளவு அகலம்.'' அவர் இரண்டு சாண் அகலத்திற்கு ஒரு பானை வடிவை காண்பித்தார்.

''சொக்கத் தங்கம். எடுத்துக் கொண்டு போய் தளபதியிடம் கொடுத்துவிட்டான். அனேகமாக இராஜேந்திரரிடம் சேர்ந்திருக்கும். தங்க குத்து விளக்குகள், மாட விளக்குகள், வீட்டு வாசலில் தங்கத்தால் வேப்பிலை தோரணம் செய்திருக்கிறார்கள். அது பத்து கை நீளம் இருக்கிறது.

வீட்டு வாசலை பெயர்த்தாலும் தங்கமும், நகைகளும் கிடைக்கின்றன. பெண்டிரிடமிருந்து வீரர்கள் பறித்த நகை

கொஞ்ச நஞ்சமல்ல. நாலு பலகைக்கே இப்படி சொல்கிறாயே, ஒவ்வொரு வீரனும் மூட்டை மூட்டையாய் எடுத்துப் போகிறான். துணிமூட்டை கிழிந்துவிடும் என்று ஓலை பெட்டியில் வைத்து, ஓலை பெட்டியில் துணி மூட்டைகள் வைத்து மிக காபந்தாக எடுத்துப் போகிறான். அரசுக்கு கொடுத்து மீதியே மூட்டையாக இருக்கிறது. அப்பொழுது அரசுக்கு எத்தனை பொருள்கள் போயிருக்கும். திணறுகிறதாமே. எங்கே வைப்பது என்று தெரியவில்லையாமே. எனவே, கூச்சலிடாமல் கொஞ்சம் கொஞ்சமாக இந்த தங்கத்தை உருக்கி எடுத்து தருகிறேன். அதிகம் ஆரவாரம் இல்லாமல் செலவு செய்யுங்கள்.''

அவர் துண்டு எடுத்து மகனை அறுக்கச் சொன்னார். அவன் காலில் அந்த துண்டை நிற்க வைத்து அரத்தால் நிதானமாக அறுத்தான். அந்த பதினாறு வயது பையனின் திண்ணிய தோள்கள் அவருக்கு உற்சாகம் கொடுத்தன.

''அடேய் நில்.'' அவர் சொன்னார். அவன் நிறுத்தி தந்தையை பார்த்தான். அவர் வீடும் அவரை பார்த்தது.

''போர் பயிற்சி எடுத்துக்கொள்ளடா. ஏதேனும் ஒரு ஆயுதத்தால் சண்டையிட பயிற்சி எடுத்துக் கொள். மறுபடியும் போர் வரும். தெற்கே, மேற்கே வரும். வரும்போது நீ வெறும் கருமாராக போகாதே. சம்மட்டி எடுத்து நெஞ்சு வேக போகாதே. நீ வீரமுள்ள, விவேகமுள்ள போர் வீரனாக இரு. பெரிய மாளிகைகள் கட்டிக் கொள்ளலாம். உனக்கு கீழ் நூறு பேர் வேலை செய்வார்கள். அதில் நிச்சயம் பத்து கருமார்கள் இருப்பார்கள். எனவே, கருமாராகவே மரணமடையாதே. என்னுடைய காலம் முடிந்துவிட்டது. இனி எனக்கு ஓய்வு, நீ போர் பயிற்சி எடுத்துக் கொள்.'' அவன் ஆவலாக தலையசைத்தான். அவன் வீடு சிரித்தது. அவன் தலையை தடவி கொடுத்தது.

''அது ஆபத்தல்லவா.'' அவர் மனைவி மெல்ல சொன்னாள்.

''ஆபத்துதான். என் மீதும் ஒரு அம்பு விழுந்திருக்கலாமே. என்னையும் ஈட்டியால் குத்தியிருக்கலாமே. நான் இங்கு உட்கார்ந்திருக்க அரைக்காத தூரத்தில் போர் நடந்து கொண்டிருக்கிறது.

ஒருமுறை சோழப்படை பின்வாங்க நான் என்ன செய்வதென்று தெரியாமல் எழுந்து நின்றேன். என்னை கடந்து மஹிபாலன் படை போயிற்று. என்னை மடக்கி சீவிவிடுவார்கள் என்று நினைத்தேன். மெல்ல மரம் ஏறி உட்கார்ந்து கொண்டேன். அவர்கள் தாண்டிய விதத்திலேயே பின்னடைந்தார்கள். சோழப்படை வேகமாய் முன்னேறி அவர்களை விரட்டிப் போனது. பிறகுதான் தெரிந்தது போக்கு காட்ட, எத்தனை வீரர்கள் என்று கணக்கிட, எதிரியின் பலத்தை தெரிந்துகொள்ள அவர்கள் பின்னடைந்திருக்கிறார்கள் என்று. முட்டாள்கள். சோழர்களின் தந்திரம் புரியாதவர்கள். எருமைகள். சோழர்கள் எளிதாக வந்து விட்டார்கள்.

எதிரியின் இடத்தில் எதிரி தாண்டி சூழ்ந்து கொண்டபோது இடையறாது வேலும், வாளும் செய்து கொண்டிருந்தேன் என்று என் பெயரை குறித்துக் கொண்டார்கள். ஹா, அந்த மறவர்களின் மிரட்டலும், எகிறலும், கள் குடியலும், பெண் போகமும் இன்னும் என் கண் முன் நிற்கிறது. கொடுக்கு மீசை மறவன் தான் வைத்துக் கொள்ள வேண்டுமாம். நெருப்பில் வேலை செய்பவருக்கு மயிர் எதற்கு, சிறியதாக நறுக்கிக் கொள், என்று கட்டளை வேறு இட்டார்கள். வேறு வழி.

கோட்டு மீசையாக வைத்துக் கொண்டேன். எதிரியின் போர் வாள்கள் மட்டும் இருபது கழுதைகளில் மூட்டைகளாக ஏற்றியிருக்கிறோம். கிட்டத்தட்ட நாற்பது, நாற்பத்தைந்து மூட்டைகள். வாட்கள் மட்டுமே இத்தனை. ஈட்டி முனைகள் எடுத்து வந்தார்களா தெரியாது. எடுத்து வந்திருந்தால் அது பலநூறு மூட்டைகள் இருக்கும். இந்த வாட்களையெல்லாம் மறுபடியும் உருக்கி, தட்டையாக்கி வாட்கள் செய்ய வேண்டும். அல்லது பிடி அகற்றிவிட்டு வேறு பிடி மாற்ற வேண்டும்.

இருக்கிறது. இன்னும் வேலை இருக்கிறது, ஆனால் நான் போருக்கு போகப் போவதில்லை. இங்கேயே உட்கார்ந்து செய்து கொடுக்கிறேன் என்று சொல்லிவிடப் போகிறேன். நெஞ்சு வலிக்கிறது என்று உட்கார்ந்துவிடப் போகிறேன். போர் எனக்கு பயமாக இருக்கிறது.'' அந்த கருமார் சொல்ல, அந்த வீடு ''உச்'' கொட்டி ஆமோதித்தது.

''ஆனால் உங்கள் பிள்ளையை அனுப்புகிறேன் என்று சொல்கிறீர்களே.''

''சம்பாதிக்க வேண்டும் என்ற ஆசை இருந்தால் அவன் போகட்டும். இல்லையென்றால் என்னைப் போல் இரும்பு அடித்துக் கொண்டு இருக்கட்டும். இது அதிர்ஷ்டம். கிடைத்தது. எல்லா கருமாரும் இப்படி எடுத்து வந்திருக்கிறார்கள். இது தந்திரத்திற்கு கிடைத்த பரிசு. ஒரு ஊரில் வெற்றித் தூண் நட்டிருக்கிறான். சாய்த்துவிட்டு போயிருக்கிறார்கள். அவ்வளவு தான் அவர்களுக்கு தெரிந்தது. மீதி என்வேலை அல்லவா. சாய்த்த இடத்தை நோண்டி என்ன இருக்கிறது என்று இரவோடு இரவாக பார்த்து விடுவேனே.''

இப்பொழுது வீடு சிரித்தது.

''அந்த வேளாளப் பையன் வாய் திறக்க மாட்டான். திறந்தால் அவனுக்குத்தான் நஷ்டம். இப்பொழுது நெல் வயல்கள் வாங்கப் போயிருக்கிறான். அவனும் மறுபடி போருக்கு போக மாட்டான். இந்த பட்டைகள் நமது வீட்டிற்குள் இருக்காது. மாதுளம் செடி எடுத்து வந்திருக்கிறேன். அந்த செடி நடப் போகிறேன். அதற்கு கீழே மண்ணுக்குள்ளே இந்த தங்க பட்டைகள் இருக்கும். தேவையானபோது எடுத்துக் கொள்ளலாம்.''

''செப்புத் தவலைகள் வேண்டுமா.'' சோழ வீரர்கள் சாண் உயர செப்பு சொம்புகளை கொண்டு வந்தார்கள். வீடு ஆவலாயிற்று. அவர் அவர்களை முறைத்து பார்த்தார். வெய்யிலில் அந்த செப்பு தவலைகளை கவனித்தார்.

எனக்கு எந்த உபயோகமும் இல்லை அய்யா. நான் கருமான். உடைந்த வாட்கள் இருந்தால் கொடுங்கள். உருக்கித் தருகிறேன். அல்லது செப்பனிட்டு தருகிறேன். மற்றபடி செம்பினால் எனக்கு ஆகக்கூடியது ஒன்றும் இல்லை.''

''இரவு கொண்டு வருகிறோம்.'' அவர்கள் போய்விட்டார்கள். அவர் திரும்பி வீட்டை நோக்கி சீறினார்.

''முட்டாள்களே. என்னமோ சந்தேகப்படுகிறார்கள். செப்பு கொடுத்தால் நான் வாங்கிக் கொண்டு அதை தங்கத்தில் கலந்து ஆபரணம் செய்வேன் என்று நினைக்கிறார்கள். தங்கம்

என்னிடம் இருக்கிறது என்று தெரிந்து கொண்டு இப்படி செய்கிறார்கள். எனக்கு செம்பே வேண்டாம். இரும்பு போதும். புரிகிறதா.''

மகன், மகள், மனைவி என்ற அந்த குடும்பம் தலையசைத்தது, வாய் பொத்தி இருக்க வேண்டும் என்று தீர்மானித்தது.

அந்த கருமார்களும் கங்கை கொண்ட சோழபுரத்தை விட்டு, கொள்ளிடத்திற்கும், கங்கை கொண்ட சோழபுரத்திற்கும் நடுவே உள்ள ஒரு இடத்தில் கிராமம் அமைத்து தங்கிவிடலாம் என்று தீர்மானித்தார்கள்.

''எதற்கு கொள்ளிடத்தின் வடகரை பக்கம் போவது, தென் கரை போய்விட்டால் நல்லதல்லவா. அங்கு உழுபணிகள் அதிகம் நடைபெறுகின்றன. இரும்பு வேலைகள் செய்ய வேண்டுமல்லவா. நாம் நிலம் வாங்கிக் கொள்ளலாம். நல்ல வீடு கட்டிக் கொள்ளலாம். நிலத்தை திருத்தி பயிர் பச்சை செய்யச் சொல்லலாம். அந்த இடத்தில் வேறு சில கருமார்களை, உழவர்களை குடி அமர்த்தலாம். பஞ்சமர்களுக்கு இடம் ஒதுக்கலாம். ஊருக்குள் கொள்ளிடத்திலிருந்து கால்வாய் வரவழைக்கலாம். பெரிய கேணி வெட்டலாம். அற்புதமான ஒரு கிராமத்தை அங்கு உருவாக்கி விடலாம். கொள்ளிடத்தின் வடகரையா, தென்கரையா. இதுதான் யோசிக்க வேண்டும்.

வடகரையில் அதிகாரிகள் நடமாட்டம், மறவர்கள் நடமாட்டம் அதிகம் இருக்கும். எனவே தென்கரைக்கு போய்விடுவோம்.

மாதுளம் செடியை முன்னும் பின்னும் பார்த்தார்கள். சந்தேகம் இல்லாமல் அப்படியெல்லாம் கேட்க மாட்டார்கள். அரசுக்கு தெரிந்து விட்டால் அடித்து பேச வைத்து விடும். நாம் நகர்ந்து விடுவோம்.'' மிகச் சரியான ஒரு பொய்யை சொல்லி விட்டு அந்த கருமார் குடும்பத்தோடு கங்கை கொண்ட சோழபுரம் விட்டு வெளியேறினார். தனக்கு ஒதுக்கப்பட்ட வீட்டை வாடகைக்கு விட்டார். அந்த இடத்தில் வெளியூரிலிருந்து கங்கை கொண்ட சோழபுரம் வரவேண்டும் என்று ஆவலாய் இருந்த ஒரு கருமார் உட்புகுந்தார்.

''எப்படி சரி என்று சொல்லி விட்டார்கள்.'' மனைவி வியந்தாள்.

''நித்த வினோதப் பெருந்தச்சன் வில் செய்ய கற்றுக் கொடுத்தார். அதை செய்யப் போகிறேன், இன்னும் பெரிய துருத்தி வேண்டும். விறகு கட்டைகள் வேண்டும். புகை அதிகம் எழும். எனவே கங்கை கொண்ட சோழபுரத்தை பாழாக்காது நான் சற்று தள்ளிப் போய் விடுகிறேன். பெரிய் இரும்புச் சட்டி வாங்கப் போகிறேன். வில்லுக்கு தனியாக மண் அச்சில் செய்ய வேண்டும்.''

''நமக்கு எதற்கடா வில். வில் மூங்கில்தானே செய்வார்கள்'' என்று கேட்டார்கள்.

''அந்த வில் அல்ல. வண்டி வில், தேருக்கு உண்டான வில் சிறியதாக இருக்கும். பெரிய மாட்டு வண்டிகளுக்கு வில் வைப்பது என்பதை அவர் சொல்லியிருக்கிறார். சிலைகள் எடுத்துவர அந்த மாட்டு வண்டிகள் பயன்படுகின்றன. அச்சுக்கு மேலே, கூண்டுக்கு கீழே கண் போன்று மேலே ஒரு வளைவும், கீழே ஒரு வளைவும் இரண்டு வளைவு இருக்கும். ஒரே வளைவாக இல்லாது அடுக்கு வளைவு இருக்கும். இந்த அடுக்கு வளைவு செய்வதற்கு அவர் படம் போட்டு சொல்லிக் கொடுத்திருக்கிறார். எனவே, நான் அங்கு போய் செய்யப் போகிறேன்.

''அடடா, புதிதாக இருக்கிறதே. உனக்கு ஏதேனும் வேண்டுமா.''

''ஆமாம். இரும்பு சட்டி வாங்க காசு வேண்டும். அல்லது இரும்பு சட்டி வேண்டும்.''

''இரும்பு சட்டி இல்லை, அதையும் நீயே செய்து கொள். எவ்வளவு வேண்டியிருக்கும்.''

''எனக்கு தெரியவில்லையே.''

''ஒரு முப்பது கழஞ்சு போதுமா.''

''முயற்சிக்கிறேன். போதவில்லையெனில் மறுபடியும் கேட்கிறேன்.'' அவன் கை கூப்பினான்.

''தாராளமாக கேள். பொன்னுக்கு குறைவில்லையடா.''

''மிக்க நன்றி.'' அவன் பணிவாக வெளியே வந்தான்.

''இந்த வில் வேலையை எங்கே கற்றுக் கொண்டீர்கள்.'' அவன் மனைவி கேட்டாள்.

''இது தண்டபுத்தியில் பார்த்தேன். அரசருடைய குதிரை வண்டி பெரிதாக அதாவது ஒரு ஆள் படுத்துக் கொள்ளும் வண்ணமாக இருக்கிறது. இரண்டு குதிரைகள் இருக்கின்றன. பயணப்படும் போது அரசர் பெண்டிரோடு படுத்துக் கொள் வதற்காக மேடு, பள்ளங்கள் தெரியாது இருப்பதற்காக இது கட்டப்பட்டு இருக்கிறதாம் அந்த வில் வண்டியை உற்றுப் பார்த்து படம் எழுதி வந்து விட்டேன். அந்த துணி தனியாக மடித்து வைத்திருக்கிறேன்.

நித்த வினோதப் பெருந்தச்சனிடம் காட்டினேன். ஹா. நன்றாக இருக்கிறதே. 'செய், செய்' என்று உற்சாகப்படுத் தினார். அவருக்கு ஏகப்பட்ட வேலைகள். அதனால் அதிகம் ஆர்வம் காட்டவில்லை. ஆனால் இது மிகச் சரியானபடி வேலைக்கு வரும் என்று எனக்கு தெரிந்துவிட்டது. இராஜேந் திர சோழர் வரை இது போகும்.

''என் புருஷன் மாதிரி கெட்டிக்காரர் எவரும் இல்லை.'' அவள் விலகி நின்று வெட்கப்பட்டபடி சிரித்தாள்.

''என் புத்திசாலித்தனத்திற்கு உன் அப்பன் கால் தூசு காணானடி'' அவள் வெட்கப்படுவதை ரசித்தபடி அவள் தகப் பனை வேண்டுமென்றே இழிவுபடுத்தினான். இது ஆண்கள் குணம். அவள் எதிர்ப்பே காட்டவில்லை. இது பெண்கள் தந்திரம். எப்பொழுது எதிர்க்க வேண்டும். எப்படி இயங்க வைக்க வேண்டும் என்று அவளுக்கு தெரியும்.

பன்றி கறியை எங்கு வாங்கலாம். யோசித்தாள், பன்றி கறி உடம்பிற்கு குளுமை. உடம்பிற்கு உரம். நல்ல விதமாக சமைத்து போட்டால் புருஷன் சந்தோஷமாக அனுபவிப்பான்.

''அப்பா இது என்ன.'' வியப்போடு ஒரு துணியை பிரித்து அவன் மகன் கேட்டான்.

''இது நங்கூரமடா.''

''இதை எடுத்தா சண்டை போடுவார்கள்.''

''இது சண்டை போடுவதற்கு அல்ல. இது நாவாயி லிருந்து இறக்கி நாவாயை ஆடாமல் வைப்பது. பெருத்த சங்கிலிகள் இதில் இருக்கும். படத்தில் பார்க்க சிறிதாக இருக் கிறது. இது ஒரு ஆள் அகலம். ஒன்றரை ஆள் உயரம். கரைக்கு நாவாய் வருகிறபொழுது இதை இறக்கி மண்ணில் புதைய வைத்து நாவாயை நிலை நிறுத்துவார்கள். இதையும் செய்ய வேண்டும். ஆனால் இது எப்படி சரியாக வரும் என்று தெரிய வில்லை. முதலில் ஊரை விட்டு போகும் வேலையை பார்ப் போம்.''

அந்த குடும்பம் மடமடவென்று, இயங்கியது. இரண்டு மாட்டு வண்டிகள் விலை கொடுத்து வாங்கியது. இரண்டு வாடகைக்கு எடுத்தது. பெரிய படகுகளில் வண்டிகளை ஏற்றி கொள்ளிடத்தின் மறுகரைக்கு கொண்டு போனது, கொள்ளிடத் தின் மீது மனிதர்களும், குதிரைகளும் நடந்து போக மூங்கில் பாலம் உறுதியாக கட்டியிருந்தார்கள். ஆனால் மாட்டு வண்டி களும், யானைகளும் போக முடியாது. அவற்றுக்கு பெரிய படகுகளை ஏற்பாடு செய்திருந்தார்கள். அந்த படகுகளிலும் பாய்மரங்கள் இருந்தன. நிதானமாக துடுப்பு போட்டு மறு கரைக்கு கொண்டுபோய் இறக்கினார்கள். வண்டியை அப்படியே முழங்கால் நீரில் இறக்கினார்கள். மாடுகள் கட்டி மேலே இழுத் தார்கள். அப்படி இழுத்து மேலே போவதற்கு வசதியாக சாய்வு சாலைகள் இருந்தன. அவன் குடும்பம் தென் கரையிலிருந்து திரும்பி வடகரையை பார்த்தது. கை உயர்த்தி கும்பிட்டது.

''மாமன்னர் இராஜேந்திர சோழர் வாழ்க, சக்ரவர்த்தி இராஜேந்திர சோழர் வாழ்க. அவர் குலம் வாழ்க. அவரால்தான் இந்த முன்னேற்றம்.

வெறுமே சுத்தியாலும், உளியும் ஊற்றிக் கொண்டிருந் தேன். எப்பொழுதாவது கத்திகள் செய்வேன். இப்பொழுது விதம் விதமான வேலைகள் தெரியும். இன்னும் அதில் முன் னேற்றம் எனக்கு வந்துவிட்டது. நித்த வினோதக பெருந்தச்சன் கல்லில் வேலை செய்பவன் மட்டும் தானா. இரும்பிலும் ஒரு நித்த வினோதப் பெருந்தச்சன் வருவான். அது இராஜேந்திரர் வரை தெரிய வரும். இந்த சந்தர்ப்பத்தை விட மாட்டேன்.'' அவன் சூளுரைத்தான்.

இரண்டு பக்கமும் சரிவாக உள்ள கொள்ளிடக் கரை பூமி ஒன்றை தேர்ந்தெடுத்தான். அந்த கிராமத்தின் கிழக்கு புறமும், மேற்கு புறமும் வளைந்து ஒரு கால்வாய் ஓடும்படி ஒரு படம் வரைந்து கொண்டான். இரண்டு கால்வாய் வெட்ட இரண்டு வருடம் ஆகும். இரண்டு கால்வாய் இருந்தால் கிராமம் செழிப் பாகிவிடும். அந்த கிராமத்தில் மறவர்கள் வந்து புகுந்துவிட் டால் மறவர்கள்தான் ஆட்சி செய்வார்கள். எனவே, பிள்ளையை மறவனாக்கி விட்டால் வேறு இடம் போய்விடுவார்களே தவிர இங்கு வரமாட்டார்கள். இது கருமார்களுக்கான கிராமம். ஆனால் கருமாரில் ஒரு மறவன் வெளிவரப்போகிறான். அவன் திட்டங் களை வானத்திலிருந்து தேவர்கள் ஆசிர்வதித்தார்கள்.

தொழில் மாறியது. இடங்கள் மாறின, புதிய குடியிருப்புகள் தோன்றின. புதிய கருவிகள் கண்டு பிடிக்கப்பட்டன. உழைப்பு அதிகமாக இருந்தது. உழைப்புக்கு ஏற்ற உல்லாசமும் அதிகமாக இருந்தது. பகலில் உழைப்பு. இரவில் பாடல், நாட்டியம், மது, மங்கை என்று எல்லா இடங்களிலும் வளர்ச்சி ததும்பியது. இது போர் கொடுத்த வரம்.

அவன் பிள்ளையை சேர தேசத்திற்கு அனுப்பலாம் என்று முதலில் நினைத்தான். இல்லை. அங்கு நல்ல ஆச்சாரியார்கள் இல்லை. இருப்பவர்களும் சோழர்களுக்கு கற்றுக் கொடுப்ப தில்லை. ஏமாற்றி விடுகிறார்கள். நாகையில் ஒரு கடிகை இருக் கிறது. அந்த கடிகையில் மிக அற்புதமாக சொல்லித் தருகிறார் கள். அவர்கள் யாரும் சேரர்கள் இல்லை. நம் மக்கள் அதிகம் சொல்லித் தருகிறார்கள். அது சோழர்களுக்குண்டான கடிகை.

அவன் பயணப்பட்டபோது வீடு அழுதது. அவனும் கண்ணீர் சிந்தினான். மகனை அணைத்துக் கொண்டான். நெற்றியில் முத்தமிட்டான்.

"இதோ பார். இனி உட்கார்ந்து சோம்பி இருந்தால் வாழ்க்கை நகராது. என் தகப்பன் தகப்பனுக்கு தகப்பனெல்லாம் இப்படியே தான் இருந்தார்கள். எப்பொழுது இராஜராஜர் தலையெடுத் தாரோ அப்பொழுது சோழதேசம் மாறிவிட்டது. எப்பொழுது வேறு தேசம் படையெடுக்கிறோமோ அப்பொழுது அவர்கள் நாகரீகம் நமக்குள் வந்துவிட்டது. இந்த கடும் உழைப்புதான் சோழ தேசத்தை வளர்த்துக் கொண்டிருக்கிறது. வளர்ச்சியடையாது

வெறும் புளியமரம் போல் இருப்பவன் கடைசியில் வெட்டுப் பட்டு தகனத்திற்குத்தான் பயன்படுவான். அப்படியல்ல. மூங்கில் போல் இரு. நிறைய மூங்கிலை உற்பத்தி செய். உன்னை சுற்றி புதர் புதராய் மூங்கில்கள் வளர வேண்டும்'' என்று தலையில் கை வைத்தான்.

''அடுத்த தலைமுறை எப்படி இருக்கும்.'' அந்தணர் வீட்டு திண்ணையில் உட்கார்ந்து கொண்டிருந்தவர்கள் ஒரு விவாதம் போல பேசக் கிளம்பினார்கள்.

அவர்கள் வெளியிலிருந்து பார்த்தால் வெறுமே உண்டு விட்டு காலையிலிருந்து உச்சிவரை உரக்க பேசி சிரித்துவிட்டு மறுபடியும் தூங்கப் போகிறவர்கள் போல் தோன்றும். ஆனால் அப்படியல்ல. அவர்களே சோழ தேசத்தின் அச்சாணியாய் இருந்தார்கள். அடுத்தது சோழதேசம் என்ன செய்யவேண்டும் என்ற யோசிப்பு அங்கிருந்துதான் கிளம்பியது.

''காலை அறுத்து எடுத்துவிடப் போகிறேன். விடியற் காலையிலிருந்து உச்சிவரை சிறிது சிறிதாய் உனக்கு மதுவும், மருந்தும் கொடுத்து தூங்க வைத்துவிடப் போகிறேன். நினைவு தப்பிவிடும். காலை ரம்பம் கொண்டு அறுத்துவிடப் போகிறேன். மருந்து போட்டு கட்டிவிடப் போகிறேன். இடது பாதம் உனக்கு இருக்காது. இருந்தால் தொடைவரை சீழ்பரவி, கடும் ஜீரமும், வலியும், மரணமும் ஏற்படும். பலது செய்திருக்கிறேன். ஆனால் இந்த அறுவை சிகிச்சையில் ஒரு சிக்கல் இருக்கிறது. எவ்வளவு தூரம் உன்காலில் சீழ் பரவி இருக்கிறது என்று தெரியவில்லை. முழங்கால் வரை பரவி இருந்தால் அதுவரை வெட்ட வேண்டும். அது கத்தி வைத்தபிறகுதான் தெரியும். ஒரே வெட்டாக வெட்டுவதா அல்லது அறுத்து எடுப்பதா என்பது இன்னொரு பிரச்சனை. வலிக்கவே வலிக்காது கவலைப்படாதே. ஒரு பத்து நாள் பிறகு லேசாக வலி இருக்கும். மெல்ல மெல்ல அதை குறைக்க நான் மருந்துகள் கொடுப்பேன்.'' அவன் வீடு அறற்றியது.

திண்ணையில் உட்கார்ந்து பேசியவர்களுக்கு அந்த விஷயம் தெரிவிக்கப்பட்டது.

''செவ்வாய் கிழமையில் அறு. செவ்வாய் ஓரையில் அறு. மிக உன்னதமான விஷயம் அது, வரும் செவ்வாய் மிக திடமான

விஷயமாக இருக்கிறது. சனியும் நல்ல நிலையில் இருக்கிறான். குருபார்வையும் இருக்கிறது. எனவே, அது அறுவை சிகிச்சைக்கான நாள். உனக்கு உதவிக்கு வேண்டும் என்றால் நாங்கள் வருகிறோம். என்ன உதவி வேண்டும்.''

அந்தணர்கள் எழுந்தார்கள்.

''உங்களால் பார்க்க முடியாது. வாழ்நாள் முழுவதும் அது நினைவில் இருக்கும். பயமுறுத்தும். அவன் உயிர் வாழ பிரார்த்தனைகள் அவசியம். அவன் மன தைரியம் பெறவேண்டும். இன்றிலிருந்து மூன்று நாட்கள் அவன் வீட்டிற்கு போய் அவன் நோய் தீர பிரார்த்தனை செய்தால் அந்த தைரியத்தில் அவன் இதை எதிர்கொள்வான். என் சிகிச்சையைவிட அவன் தைரியம் முக்கியம்.''

அந்தணர்கள் உடனே எழுந்தார்கள். புத்தபிட்சு தானும் அவனை தனியாக சந்திப்பதாகச் சொன்னார். அவர் பிட்சு அல்ல. ஆனால் சமணர்களோடும், புத்தர்களோடும் இருப்பவர். அந்த கிரந்தங்களை படிப்பவர்.

''மயில் இறகால் வருடினால் வலி போகும், நான் முயற்சிக்கிறேன்.'' அவர் அந்த வீரனை மாலை நேரத்தில் மயில் இறகால் வருடி தூங்கச் செய்தார்.

அந்தணர்கள் விடியற்காலையில் அவன் வீட்டு வாசலில் நீர் தெளித்து கோலம் போடச் சொல்லி அதில் விளக்கேற்ற வைத்து அவனுக்காக பிரார்த்தனை செய்தார்கள்.

நடுப்பகலில் ஊர் பெரியவர்கள் சட்டியில் கங்குகள் பரப்பி, அதில் குங்கிலியம் போட்டு அவன் வீட்டை சுற்றி வந்தார்கள். வீடு வாசனையாக வந்தவர்களை வரவேற்க சுத்தமாக இருந்தது. அவன் ஜன்னல் வழியே தன் வீட்டு வாசலை எட்டி பார்த்துவிட்டு சந்தோஷப்பட்டான். வலி குறைந்திருக்கிறது என்றான். அதற்கு மருந்து காரணம் என்று ஞானசம்பந்தன் சொல்லவில்லை. அவன் மனைவி நாகரத்தினம் நிறைய மருந்துகள் அரைத்தாள். குளிகைகள் தயார் செய்தாள். அந்த வீரனின் நாடி துடிப்பை காலையிலும், மாலையிலும் போய் சோதித்து விட்டு வந்தாள்.

செவ்வாய் அறுவை சிகிச்சை துவங்கியது. அந்த வீரன் கடும் மயக்கத்தில் இருந்தான். கத்தி வைத்தபோது சிறிது முனகினான். சரசரவென்று ரம்பத்தால் அறுத்து துண்டாக்கி, எடுத்து துணியில் சுற்றி குழி தோண்டப்பட்டிருந்த இடத்தில் அதை புதைத்து மண்மூடி பாறாங்கல் வைத்தான். முழங்காலில் அழுத்தி பார்த்தான். வெட்டிய இடத்திலிருந்து சீழ் வடிந்தது.

ஞானசம்பந்தன் தவறு என்று அலுத்துக் கொண்டான். மறுபடியும் முழங்காலுக்கு மேல் அரத்தை வைத்தான். மனைவியை பார்த்தான். அவன் மனைவி நாடி குறைந்து கொண்டு வருகிறது என்று சொன்னாள். ''கவனித்துக் கொள்'' என்று சொல்லி விட்டு, வெகு வேகமாக முழங்காலுக்கு மேல் அறுத்தான். அழுத்தி பார்த்தான். ரத்தம் வந்தது. சந்தோஷமானான். மருந்துகள் வைத்து அடைத்தான். துணி சுற்றினான். அந்த துண்டத்தையும் எடுத்துக் கொண்டு போய் ஆழ புதைத்தார்கள்.

ஞானசம்பந்தன் வெளியே வந்து வீட்டு பின்பக்கம் தயாராய் இருந்த சுடுநீரில் தலைக்கு குளித்தான். அவன் மனைவியும் குளித்தாள். வீரனுள் உள்ள கிருமிகள் தங்களை தாக்கக் கூடாதல்லவா என்று சொல்லிக் கொண்டார்கள். புது உடை போட்டுக் கொண்டார்கள்.

''நாளை காலைக்குள் அவன் இருப்பு தெரிந்துவிடும். என் மனைவி அவன் நாடியை பார்த்தபடி இருப்பாள். மருந்துகள் போட்ட வண்ணம் இருப்பாள். கவலை வேண்டாம்'' என்றான்.

தளர்ந்து நடந்தபடியே அவன் வீடு நோக்கி போனான். அவனை ஊர் பாராட்டிற்று, கை கூப்பி வணங்கியது. ஞானசம்பந்தன் எண்ணம் எல்லாம் அந்த வீரன் மீதே இருந்தது.

மறுநாள் காலை கண் விழித்து விட்டான் என்றும், குடிக்க நீர் கேட்டான் என்றும், பசிக்கிறது என்று சொன்னான் என்றும் செய்தி வந்தது. கைகளை உயரே கூப்பி, ''நமச்சிவாயம் நமச்சிவாயம் நமச்சிவாயம்'' என்று கதறினான்.

''நின்னடியார் இடர்களையாய் நெடுங்களம் மேயவனே.'' என்று பிதற்றினான். ஓடி வந்தான். நாடி பார்த்தான். சுத்தமாக இருந்தது.

இன்னும் மூன்று நாள் தூங்கினால் போதும், கால் தூக்கி பார்த்தான். சிறிதளவு மலம் போயிருந்தது. அவன் மனைவியை விட்டு துடைக்கச் சொன்னான். வேறு உடை மாற்றச் சொன்னான். அவனுக்கு குடிப்பதற்கு அரிசி கஞ்சியும், உப்பிட்ட மோரும் கொடுத்தார்கள். கொஞ்சம் கரும்பு சாறு ஊட்டினார்கள். பிழைத்து விடுவான் என்று ஞானசம்பந்தனுக்கு தோன்றியது. பிழைத்து விட்டான் என்று ஊர் சொல்லியது, அது அருண்மொழிப்பட்டன் வரை எட்டியது.

அருண்மொழி ஞானசம்பந்தனையும் அவன் மனைவி நாகரத்தினத்தையும் பார்க்க ஆசைப்பட்டான். ஆள் அனுப்பினான். இருவரும் ஓடி வந்தார்கள். தூரத்தில் விழுந்து வணங்கினார்கள். அருகே போய் அருண்மொழியின் முழங்காலை தடவி நெற்றியில் இட்டுக் கொண்டார்கள். 'நலமா' என்று கேட்டார்கள்.

''உன்னை மறந்தே போய்விட்டேன் ஞானசம்பந்தன். மன்னித்துக் கொள் நாகரத்தினம். உங்களை தனியே பாராட்டி இருக்க வேண்டும். வேலை பளுவில் மறந்து விட்டேன்.''

''சும்மா இருங்கள். நீங்கள் யாரை மறப்பீர்கள். எப்படி மறப்பீர்கள். உங்களால் அல்லவா இவ்வளவு புகழ் சோழ தேசத்திற்கு. உங்களால் அல்லவா இந்த வெற்றி கிடைத்தது.''

''அடேய், சும்மா இருடா.'' அருண்மொழி சீறினான்.

''இருக்கிற பிரச்சனை போதாது என்று நீ வேறு கிளப்பி விடாதே.''

''ஏன். இது இல்லையென்று யாராவது சொல்கிறார்களா.''

''அரசாங்கத்தில் முன்னும் பின்னும் அபிப்ராயங்கள் இருக்குமடா.''

''ஏன் அரையன் ராஜராஜனுக்கு பொறாமையா.''

''இல்லையடா, இதுபற்றி பேசாதே, நான் உன்னை அழைத்தது முக்கியமான விஷயம்.''

''உடம்பிற்கு ஏதேனும் கேடா.'' அவன் அவர் இடது கையை திருப்பி நாடி பார்த்தான். இடது கன்னத்தில் விரல் வைத்து இரத்த ஓட்டம் கவனித்தான். நெஞ்சடியில் கை வைத்து

இருதயத்தின் ஓசையை கவனித்தான். கால்களில் உள்ள நாடி யும் அவன் மனைவி கவனமாக பார்த்தாள். 'மிகச் சரியாக இருக் கிறது' என்றாள்.

''ஆமாம். கொஞ்சம் இரத்த கொதிப்பு இருக்கக் கூடும். நல்ல தூக்கம் இல்லை என்று கண்களில் தெரிகிறது. நாக்கு மஞ்சள் ஏறி இருக்கிறது. பித்தம் இருக்கும். ஒரு நாள் உணவு இல்லாமல் நீராகாரமாக சாப்பிடுங்கள்.'' அவர்கள் அறிவுறுத் தினார்கள். அவன் சரி என்றான்.

''உன்னைப் பற்றி கேள்வி பட்டேன். அற்புதமாக அறுவை சிகிச்சை செய்து காப்பாற்றி விட்டாயாமே.''

''ஆமாம். என்னுடைய அற்புதம் அல்ல. கடவுளுடைய அற்புதம். அவர் செய்த கருணை, இந்த ஊரே கூடி நின்று துணை செய்தது. அதுவும் காரணம். ஒரு புத்த பிட்சு அவன் வலியை நீக்கிவிட்டார். அவன் கதறி அசைந்திருந்தால் ரணம் பெரிதாகியிருக்கும். அவன் ஆழ்ந்து தூங்குகின்றான். இதைப் பாராட்டவா அழைத்தீர்கள்.''

''இல்லை. ஞானசம்பந்தா. உனக்கு என்ன உதவி செய்ய வேண்டும் என்று எனக்கு தெரியவில்லை. ஒரு உதவி செய்ய லாம் என்று தோன்றுகிறது. கலந்து பேசவே அழைத்தேன்.''

''சொல்லுங்கள்.''

''மூலிகைகள் இருக்கின்றனவா.''

''நிறைய வெளி ஊரிலிருந்து பெட்டி பெட்டியாக கொண்டு வந்துவிட்டேன். கடற்பயணம் மேற்கொள்ளப் போகிறார் என்று தெரிந்து நுரையீரலுக்கான விஷயங்களையும் நான் எடுத்துக் கொண்டு வந்துவிட்டேன். பீனிசம் வரக்கூடாது என்று மருந்துகள் தயாரிக்கவும் ஆரம்பித்து விட்டேன் இதற் காகவா அழைத்தீர்கள்.''

''இல்லை. ஞானசம்பந்தா. இதைத் தாண்டி ஒரு விஷயம்.''

''என்ன.''

''உனக்கு கீழே எத்தனை பேர் வேலை செய்கிறார்கள்.''

''ஒரு நூறு பேர் இருக்கும். வெவ்வேறு இடத்தில் இருக் கிறார்கள். வெவ்வேறு வகுப்பினர் இருக்கிறார்கள். பஞ்சமர் களுக்கும் நான் இதுபற்றி கற்று கொடுத்திருக்கிறேன். அவர்கள்

மிகவும் சந்தோஷமடைந்து விட்டார்கள். இது இராஜேந்திர சோழரின் கட்டளை என்று சொல்லிவிட்டேன். ஆனால்..''

''இராஜேந்திர சோழரின் கட்டளை இல்லை என்கிறாயா.''

''கருமார்களுக்கு அவர் எப்பொழுது உயர்வு கொடுத்தாரோ அப்பொழுதே எல்லா ஜாதியினரும் நிமிர்ந்து நிற்க தொடங்கி விட்டார்கள். பஞ்சமர்களும் செருப்பு போட்டுக் கொண்டு போக லாம் என்ற தெளிவு வந்துவிட்டது. என்னுடைய சீடர்களை அதிகரிக்க வேண்டும் என்பதற்காகவா அழைத்தீர்கள்.''

''ஆமாம். ஆனால் வெறுமே ஆட்களை அனுப்புவது அல்ல என் எண்ணம்.''

''பிறகு''

''ஏதேனும் ஒரு இடத்தில் தோட்டமும், தோட்டத்திற்கு நடுவே மாளிகையும், உன்னுடைய மாளிகை சுற்றி ஒரு பெரிய ஆதுரச் சாலையும் அமைக்க வேண்டும் என்பது என்னுடைய விருப்பம். நீ இடம் தேர்ந்தெடுத்து கொடுத்தால் நான் இந்த வேலையை துவங்கி விடுவேன்.''

''கடவுளே, என் தெய்வமே. எப்படி யோசிக்கிறீர்கள். நானே உங்களுக்கு ஒரு விருப்பம் அனுப்பலாம் என்றிருந்தேன்.''

''எதற்கு.''

''பல்வேறு மூட்டை விதைகளும், கூடையில் சில காய் களும், சில வேர்களும் வெறுமே என் வீட்டு வாசலில் அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. என் வீட்டில் ஒரே ஒரு அறை தவிர மற்ற எல்லா இடங்களும் மருந்துகளே இருக்கின்றன.

மருந்துகளை ஊறவைத்து அரைப்பதைக் கூட நாங்கள் தோட்டத்தில் வைத்துதான் செய்து கொள்கிறோம். மழை பெய் தால் கடினமாக இருக்கிறது. மருந்து மூட்டைகள் வைக்க எனக்கு இடம் வேண்டுமய்யா.''

''உடனடியாக ஏற்பாடு செய்கிறேன். ஒரு அழுத்தமான கொட்டகை போட்டு விடுகிறேன். அது தற்போதைக்கு, அடுத்த படி, மிகப் பெரிய ஆதுரச் சாலையை எங்கு அமைக்கலாம். எப்படி.''

''குடந்தையில் அமைக்கலாமா.'' அவன் தயங்கியபடி கேட்டான்.

"ஏன் குடந்தை."

"நீர் வேண்டுமே."

"எதற்கு."

"ஒரு மருத்துமனை என்றால் அது தினமும் ஒருமுறை கழுவிவிடப் படவேண்டும். நோயாளிகள் இருக்கும் இடம் சுத்தமாக இருக்க வேண்டும். நீர் நிரம்பி இருக்கும் இடம்தான் நல்லது. பெரிய மாட்டு வண்டிகளில் பீப்பாய் பொருந்தி அதில் நீர் நிரப்பி அந்த நீரை கொண்டு வந்து தொட்டியில் நிரப்பி, அந்த தொட்டியிலிருந்து குடம் குடமாக நீர் எடுத்து வந்து ஆதூரச்சாலையை கழுவ வேண்டும். சில இடங்களில் வெந்நீர் விட்டு கழுவ வேண்டும்."

"புரிகிறது. அப்படி செய்வதை கவனித்து இருக்கிறேன்."

'இதற்கு குடந்தை நல்ல இடம் அல்லவா. காவிரி இருக்கிறதே. கொள்ளிடத்தில், காவிரி மிஞ்சினால் தானே தண்ணீர் போகும்."

"உனக்கு தண்ணீர் வேண்டும். அவ்வளவுதானே."

"ஆமாம்."

"அவ்வளவு தள்ளி ஏன் போகிறோம்"

"பிறகு"

"உடையார்குடி போய்விடு. வீரநாராயண ஏரி, காவிரியில் கூட நீர் பொய்க்கும். அதில் பொய்க்காது. வீரநாராயணபுரம் ஏரியில் ஏற்றம் அமைத்து உன் ஆதூரச்சாலைக்கு குழாய் வழியே நீர் வந்து கிணற்றிலோ, தொட்டிலோ நிரம்பும், கிணற்றிலிருந்து நீர் இறைத்து உன்னுடைய ஆதூரச்சாலையை கழுவிக் கொள்ளலாம். இதற்கு தனி ஆட்களை நான் நியமிப்பேன். உடையார்குடியில் ஒரு இடம் பார். ஏரிக்கரையோரம் பார். மேடாக பார். இன்னும் உயர்த்தி கட்டு. தரையிலிருந்து பதினைந்து படிகளாவது இருக்க வேண்டும். சில சமயம் நோயாளிகள் வர சிரமப்பட்டார்கள் எனில் கயிறு கட்டி பரண் அமைத்து அவைகளை மேலே ஏற்றும்படியாக ஒரு அமைப்பு செய்."

"ஆஹா, இது நன்றாக இருக்கிறது."

"கீழே குதிரைகள் நிறுத்துகின்ற இடத்தில் நீ மருந்துகள் வைத்துக்கொள். குதிரைகளோ, பசுக்களோ அருகில் இல்லாது

சற்று தொலைவாக இருக்க ஏற்பாடு செய். ஜன்னல் வழியே காற்றும், வெளிச்சமும் வரவும், அதே சமயத்தில் பூச்சிகள் வராது இருக்கவும் வலைகளால் மூடப்பட்டிருக்கும். பெரிய பலகணைகள் உள்ள, பெரிய ஜன்னல்கள் உள்ள கட்டிடமாக நான் அதை செய்யப் போகிறேன். இரண்டு தளமாக இருக்கும். உன் வீடு சற்று தள்ளி இருக்கும். என்ன வேண்டுமானாலும் பயிர் செய்து கொள்.''

அவன் அருண்மொழிபட்டன் பேசியவுடன் சந்தோஷ மானான். மறுபடி விழுந்து வணங்கினான்.

''எத்தனை படுக்கைகள் இருந்தால் நன்றாக இருக்கும்.'' அருண்மொழிபட்டன் யோசித்தான்.

''ஒரு இருபது.'' நாகரத்தினம் தொடங்கினாள்.

''இல்லை, நூறுபேர் கொண்ட படுக்கைகளாக அந்த ஆதூரச்சாலை இருக்கும்.'' அருண்மொழிபட்டன் சொன்னதும் அவர்கள் திகைத்தார்கள்.

''அத்தனை பேர் எனக்கு உதவியாளராக வேண்டுமென் றால்.''

''அவர்களுக்கும் குடியிருப்புகள் கட்டி தரப்படும். ஒரு தனித்த கிராமமே உருவாகும். சோழ தேசத்தின் எல்லா இடத் திலிருந்தும் கடும் நோயாளிகள் உன்னை தேடி வருவார்கள். மிகச்சிறந்த மருத்துவமனையாக, வீரமாதேவியார் ஆதூரச்சாலை யாக அது இருக்கும்.''

அவன் சந்தோஷமானான். கைகூப்பி கண்மூடி உட்கார்ந் தான்.

''இறை அருள் எவ்வளவு பெரிது. இராஜேந்திர சோழர் வெற்றி என்னவெல்லாம் செய்கிறது.'' அவன் மனதுக்குள் தான் கொண்டு வந்த மருந்து மூட்டைகளை அந்த மாளிகைக்குள் அடுக்க ஆரம்பித்தான். அந்த வீரனுக்கு வலியே இல்லாததற்கு காரணம் காஞ்சன விதைகள். அவைகளை கொதிக்க வைத்து வடித்து, வடித்ததை வஸ்த்ரகாயம் செய்து கொஞ்சம் வெல்லத் தோடு உருட்டி குளிகைகளாக கொடுத்தது. அம்மாதிரி இனி பலது செய்ய முடியும்.

அவன் சந்தோஷமானான்.

★ ★ ★

அத்யாயம்

90

நான்கு பெண்கள் ஓடிவந்து விளையாட்டாய் பொய் சொல்ல, அது பெரிய வினையாயிற்று, சோழதேச மக்களுக்கு பொழுது போகவில்லை என்பது வெகு நன்றாய் தெரிந்தது. அடுத்தடுத்து வேலை செய்ய அடிமை ஆட்கள் இருந்தார்கள். அதனால் சோழதேசத்து மக்கள் எல்லோரும் எஜமானர்களாய், எஜமானிகளாய் திகழ்ந்தார்கள். இந்த சந்தோஷத்தை பருவம் அடைந்த பருவம் அடையாத இளம் பெண்கள் வேறுவிதமாக அனுபவித்தார்கள். அவர்கள் கூட்டமாய் நடந்து போனார்கள். கூச்சலிட்டு பேசினார்கள். ஹா ஓ, என்று அதிசயித்தார்கள். எது பார்த்தாலும் அதைப் பற்றி அபிப்ராயம் சொல்லியபடி நின்று பார்த்தார்கள். அவ்வப்போது கேலியும் செய்தார்கள். கங்கை வரை போன வீரர்களை மடக்கி எப்படி இருந்தது கங்கை. என்ன செய்கிறார்கள் அங்கே. என்னை மாதிரி இளம் பெண்கள் உண்டா, என்னை விட அழகா என நச்சரிப்பார்கள்.

''எல்லா ஊரிலும் நல்லது கெட்டது நடக்கிறது. எல்லா ஊரிலும் மனிதர்கள் இருக்கிறார்கள். எனவே அதிகம் அலட்டாமல் என் இடம்விட்டு நகர்ந்துவிடு' என்று ஒரு வீரன் சொல்ல,

'அய்யோ கோபித்துக் கொள்கிறாரடி, தலை சுற்றுகிறதடி, மயக்கமாக வருகிறதடி, நான் இங்கேயே படுத்துக்கொள்ளட்டுமா' என்று நாடகம் ஆடினார்கள். இப்படிச் செய்தால் சம்பந்தப்பட்டவர் பதறுவார் என்று நினைத்தார்கள். ஆனால் அந்த வீரன் உறுதியாக இருந்தான்.

''நாள் தவறாது நாடகம் பார்க்கிறீர்கள் அல்லவா. அந்த வசனம்தான் இப்போதும் வருகிறது. அந்த நடிப்புதான் நிஜம் போல் நடிக்கிறீர்கள். விலகிப் போங்கள். அடக்கமான பெண்களாக இருங்கள். உன் தாய் இப்படித்தான் சுற்றினாளா. நீ ஏன் சுற்றுகிறாய் தன்னந்தனியாக. போ. வீடு நோக்கி போ.''

''உனக்கு பிள்ளை இருக்கிறானா கிழவா சொல், அவனை இழுத்து வந்து என்னை காதலிக்க வைத்து பிறகு அம்மணமாக ஓட வைக்கிறேன்' என்று ஒரு பெண் சபதமிட்டாள். அந்த வீரன் எழுந்து அடிக்க வந்தான். அவர்கள் ஓடிப்போய் எதிர் பக்கம் நின்று கொண்டார்கள். கருங்குரங்கு என்றார்கள். காட்டெருமை என்றார்கள்.

'ஏனப்பா அவர்கள் விஷமக்கார பெண்களாய் இருக்கிறார்கள். அவர்களிடம் வாய் கொடுப்பானேன். அவர்களை அதிகம் கண்டு கொள்ளாதே, கோபித்துக் கொள்வதுகூட அவர்கள் மீது அக்கறை செலுத்துவது போலத்தான். நீ பாட்டுக்கு உன் வேலை செய்து கொண்டிரு,' என்று சொன்னதும் அந்த வீரன் மரம் பிளக்க ஆரம்பித்தான்.

சிறிது நேரம் கேலி செய்துவிட்டு அவர்கள் வேறு பக்கம் போனார்கள்.

அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு இதெல்லாம் சட்டென்று காணாமல் போயிற்றே ஏன், ஏன் பெண்களுக்கு இந்த துணிச்சல் வந்தது. இது சோழ தேசத்து பெண்களுடைய வழக்கமல்லவே, பாண்டிய தேசத்து பெண்கள் சிலபேர் இப்படி ஒரு குழுவாக இருக்கும்பொழுது கேலி செய்வார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். தனியாக வரும்பொழுது தலை நிமிர மாட்டார்கள் என்று சொல்வார்கள். ஆனால் சோழ தேசத்தில் தனியாக இருந்தாலும், கூட்டமாக இருந்தாலும் அமைதியாக இருப்பது தானே வழி, இவர்களுக்கு என்ன ஆயிற்று என்று வருத்தப்பட்டான். நல்ல வேளை அவள் கேட்டது போல மகன் இல்லை. நல்லபடியாய் வளர்ந்த மகன் இருக்கிறான். திருமணம் செய்து கொண்டிருக்கிறான். அழகாக பிள்ளை பெற்றுக் கொண்டிருக்கிறான். பிள்ளை மீது உயிராக இருக்கிறான். அந்த மருமகள் நிதானமான பெண்மணி. மிகவும் கெட்டிக்காரி, ஏன் இப்படி இளம் பெண்கள் அலைகிறார்கள். என்ன மாற்றம் ஏற்பட்டுவிட்டது என்று அவளிடம் கேட்க வேண்டும். அவன் தீர்மானித்துக் கொண்டான்.

''விறகு வேண்டும். தருகிறீர்களா.'' பின்னால் ஒரு குரல் கேட்டது. குதிரை மீது ஆஜானுபாகுவாக ஒரு வீரன் உட்கார்ந்து கொண்டிருந்தான்.



நிசும்பசூதனி, தஞ்சை

"வீட்டில் சமைக்கச் சொல்லி சத்தம் போட்டேன். விறகே இல்லை என்று சொல்கிறாள். விறகு கொண்டு வந்து போட்டேன். அது ஈர விறகு என்கிறாள். உம்முடைய விறகு காய்ந்ததாக இருக்கிறது. இது சமையலுக்கு உதவுமா. எனக்கு எல்லாம் மறந்து போயிற்று. ஏழு வருடங்கள் அய்யா ஊருவிட்டுப் போய். இந்த விஷயங்கள் மண்டையிலிருந்து ஓடிவிட்டன. விறகு தருகிறீரா." அவர் மிகப் பண்பான, இறைஞ்சிய குரலில் கேட்டார். அந்த உடம்பிற்கு, அந்த உடைவாளுக்கு, அந்த குதிரையில் உட்கார்ந்த கம்பீரத்திற்கு அதட்டிக் கேட்டாலும் பதில் சொல்லத்தான் தோன்றியிருக்கும். ஆனால் அன்பாக கேட்ட போது இன்னும் ஒரு நெருக்கம் வந்துவிட்டது.

"இறங்கி உட்காரும். மொத்த விறகும் வேண்டுமா. இன்றைக்கு மட்டும் வேண்டுமா, நானும் என் வீட்டிற்காகத்தான் விறகு உடைத்துக் கொண்டிருக்கிறேன்."

"இப்போதைக்கு என் வீட்டிற்கு ஒருவேளை சமையலுக்குண்டான விறகை கொடுங்கள். மிச்சம் பிறகு வந்து வாங்கிக் கொள்கிறேன்." அவன் ஒரு பொற்கழஞ்சு எடுத்துக் கொடுத்தான்.

"இவ்வளவு கொடுத்தால் நான் என்ன செய்வேன்."

"ஏன் இன்னும் வேண்டுமா," மறுபடியும் பையில் கைவிட,

"இல்லை, அதுவே அதிகம். இந்த மொத்த மரத்தின் விறகுமே உங்களுக்கு கொடுத்துவிடலாம். ஆனால் எனக்கும் உபயோகிக்க வேண்டியிருக்கிறது." என்று அந்த விறகு வெட்டி சொல்ல, அந்த வீரன் திண்ணையில் அமர்ந்து கொண்டான்.

"யார் நீங்கள்." விறகு வெட்டியவன் கேட்டான்.

"என்னை சடையன் என்று அழைப்பார்கள். வலங்கை வீரன். அருண்மொழியார் படையில் உபதளபதியாக இருக்கிறேன். தளபதியாக பதவி உயர்வு கொடுத்திருக்கிறார்கள். இன்னும் சின்னங்கள் வரவில்லை. வந்தால் மாட்டிக் கொள்ளலாம். உத்தரலாடம் தாண்டி காமாக்யா வரை போனேன்."

"அடேயப்பா, அவ்வளவு தொலைவு பயணப்பட்டு விட்டீர்களா."

''ஆமாம்.''

''நீங்கள் எதுவரை வந்தீர்கள்.'' வீரன் விறகு வெட்டியை கேட்டான்.

''என்னை கோதாவரிக் கரையிலிருந்து திருப்பி அனுப்பி விட்டார்கள். கால்வலி இருந்தது. அதையும் தவிர சந்தன மரங்கள் கிடைத்தன. அவற்றை வெட்டி, செதுக்கி, உருளை துண்டங்களாய் மயிலைக்கும் பிறகு காஞ்சிபுரத்திற்கும் கொண்டு போய் கொடுக்கச் சொன்னார்கள். இங்கே கங்கை கொண்ட சோழபுரத்திற்கும் ஆறு சந்தன கட்டைகள் எடுத்து வந்தேன். கிட்டத்தட்ட மூன்று மரங்கள் அறுத்து செதுக்கி கொண்டு வந்தேன். அந்த மரங்கள் கிடைக்காதிருந்தால் இங்கே அனுப்ப வேண்டும் என்ற துடிப்பு அருண்மொழிக்கு இல்லாமல் இருந்திருந்தால் நானும் கோதாவரி தாண்டி போயிருப்பேன்.''

''சடையரே எப்படி இருந்தது உங்கள் பயணம்.'' விறகு வெட்டி கேட்டான். சடையர் சிரித்துக் கொண்டார்.

''முன்படையாக இருந்தீரோ. மரங்களை சீர் செய்யும் சாரணராக இருந்தீரோ.''

''ஆமாம். நாங்கள் காடு வெட்டிகள்தான்.''

''தாகத்திற்கு ஏதாவது சாப்பிடுகிறீரா. எங்கள் இல்லத்தில் சாப்பிடுவீரா.''

''வேளாளர்தானே. சாப்பிடுவதற்கென்ன. ஏதாவது கொடுங்கள்.'' அவன் உள்ளே குரல் கொடுக்க, அவன் மனைவி வெளியே வந்தாள். அவளும் மூன்று வயது குழந்தையை இடுக்கி இருந்தாள். தூளியில் இன்னொரு குழந்தை உறங்கிக் கொண்டிருந்தது.

''அது இரண்டாவதா.''

''அய்யோ இல்லை.'' அந்தப் பெண்மணி வெட்கம் தாழ்ந்த குரலில் கூறினாள்.

''பிறகு.''

''இது என் மகன். மூன்று வயது'' குழந்தையை இறுக்கிக் கொண்டாள்.

''அப்படியா. மகனுக்கு திருமண வயது ஆகிவிட்டது. நீங்களும் குழந்தையோடு இருக்கிறீர்கள் இல்லையா.''

''ஆமாம். போருக்கு புறப்பட்டு போகிறேன் என்றார். எனக்கு அழுகை பொங்கிவிட்டது. சரி. எப்படி வருவீரோ என்னமாய் வருவீரோ என்று இறுக்க அணைத்துக் கொண்டேன். குழந்தையை கொடுத்துவிட்டு ஊருக்கு போய்விட்டார். திரும்பி வரும் வரை பெயர் வைப்பதில்லை என்று சங்கல்பம் செய்து கொண்டிருந்தேன். வந்து பெயர் வைத்தார்.''

''நல்லது. என்ன பெயர்.''

''அருணன்.''

''அட, வடமொழி பெயராக இருக்கிறதே.''

''ஆமாம். இவர் காஞ்சிபுரம் கோவிலில் தனக்கு குழந்தை பிறந்ததை கேள்விப்பட்டு அந்த குழந்தைக்கு இன்னும் பெயர் வைக்கவில்லை என்பதை இவர் நண்பர் சொல்ல, கூட, இருந்த அந்தணர் கேட்கும்போது, அந்த அந்தணர்தான் இந்த குழந்தைக்கு இந்தப் பெயர் வை. சரியாக இருக்கும் என்று சொன்னார்.

நமது அரசகுலம் சூரியகுலம். அவர்களோடே இவனும் சூரியன். பிரகாசமாய் இருப்பான்.''

''ஏதேனும் கொண்டு வந்தாரா.''

''ஆமாம். காசுகள் கொண்டு வந்தார். வீடு சரி பண்ணி, திண்ணைகள் தூக்கி மெழுகி, சமையலறை சரி செய்து மருமகளுக்கு நகைகள் செய்து நானும் இந்த தாலிக்கொடி செய்து கொண்டேன்.'' அவள் பருத்த முலைகளுக்கு நடுவே மேல் துணி மீது கனத்த தாலி இருந்தது. அவர் அதை நோக்கி கையெடுத்து கும்பிட்டார். அவள் அதை எடுத்து கண்ணில் ஒற்றிக் கொண்டாள்.

அந்த வேளாளரோடு அந்த மறவருக்கு எதனாலேயோ ஒரு இனிய ஸ்நேகிதம் உண்டாயிற்று. வேளாளர் விறகு வெட்டுவதின் மீதே கவனமாக இருந்ததால், அவருடைய மனைவியோடு அந்த மறவருக்கு பேச வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

''வாழ்க்கை எப்படி இருக்கிறதம்மா.'' பொதுவாகக் கேட்டார்.

''எங்கள் வீடு பொறுத்த வரையில எந்த சண்டையும் இல்லை. சச்சரவும் இல்லை. என் கணவர் மிக நல்லவர். கண்டபடி அலையமாட்டார். அவர் மகனும் அப்படியே வளர்ந்திருக்கிறான். சொன்ன சொல் தவற மாட்டான். நல்ல மாடுகள் வாங்கி விவசாயம் செய்து கொண்டிருக்கிறோம். வாழை போட்டிருக்கிறோம். நெல்லைவிட, கரும்பைவிட வாழைக்கு நல்ல மவுசு. தண்டு, இலை, காய், கனி எல்லாமும் நன்றாக வருகிறது. நீர் கொஞ்சம் பார்த்து ஊற்ற வேண்டும். கன்று கிளைத்து வருவதால் மரங்கள் தொடர்ந்து வளருகின்றன. சாண உரம் போடுவதுதான் தட்டுப்பாடாக இருக்கிறது. மாடுகள் அதிகம் இருந்தாலும் சாண உரம் சேகரிக்க இப்பொழுதெல்லாம் பெண்கள் போவதேயில்லை. எல்லோரும் ஊர் சுற்றக் கிளம்பி விடுகிறார்கள்.''

''அதை கவனித்தீர்களா.''

''எதை.''

''நான்கைந்து பெண்கள் ஒரு தெருவில் கேலி செய்து கொண்டு போகிறார்களே.''

''இப்படி, ஒரு கூட்டமா. ஒரு நாளைக்கு பத்து கூட்டம் வருகிறது. ஏதோ இரண்டு கெட்டான்கள். இப்பொழுதான் முலை தடித்த பெண்கள் என்றால் பரவாயில்லை. நன்கு முற்றி முதிர்ந்து குழந்தை பெற்றவள் கூட இப்படி கும்பலாக வந்து வருவோர், போவோரை கேலி செய்து கொண்டு போகிறார்கள். மரியாதையே போய் விட்டது.''

''எதனால் அம்மா இது.''

''காசு கொழுப்பு.'' பளிச்சென்று பதில் சொன்னாள்.

''என்னம்மா சொல்கிறாய்.''

''ஒரு தேசத்தில் இவ்வளவு காசு நடமாடக் கூடாதய்யா. வேலை செய்ய ஆட்கள் இருக்கிறார்கள். கையில் பொற்காசுகள் இருக்கின்றன. அந்த பொற்காசுகளுக்கு என்ன வேண்டுமானாலும் வாங்கலாம். மனைவியோடு சுகித்திருக்க, இந்த பெண்களை வெளியே அனுப்ப அவர்கள் கையில் பொற்காசுகள் கொடுத்து அனுப்பி விடுகிறார்கள். செப்பு காசுக்கே என்ன

வாங்க வேண்டும் என்று தெரியாது. பொற்காசுக்கு எப்படி செலவு செய்யவேண்டும் என்று தெரியவில்லை. வீட்டில் சோறு தின்பதே இல்லை. அந்தணக் கடைகளுக்குப் போய் ஏதேனும் வாங்கி, சட்டியில் அடைத்துக்கொண்டு மண்டபத்தில் மாந்தோப் பில் அமர்ந்துகொண்டு வண்ணமாய் தின்கிறார்கள். அங்கேயே தூங்குகிறார்கள். ஆற்றில் குளிக்கிறார்கள். மறுபடியும் ஊர்சுற்றி விட்டு வறுத்த நிலக் கடலையோடு நாடகம் பார்த்துவிட்டு இரவு நேரம் வீட்டிற்கு திரும்புகிறார்கள். யாரும் கேட்பதில்லை.''

''கெடுதல் ஏதும் வரவில்லையா.''

''வராது.''

''எப்படி சொல்கிறீர்கள்.''

''சோழ தேசத்து வீரர்களைக் கண்டு பயம். அந்நியர் அதிகம் இருக்கிறார்கள். ஆனாலும் அவர்கள் சோழப் பெண்கள் மீது கண் வைப்பதோ, கை வைப்பதோ இல்லை. சோழ வீரர் களுக்கோ உற்சாகத்திற்கு ஏகப்பட்ட விஷயங்கள் இருக்கின் றன. உங்களைப் போல மறவர்களுக்கு விதம் விதமான மதுக் கஷாயங்கள் இருக்கின்றன. கும்பல் கும்பலாய் ஓட்டிக்கொண்டு வந்திருக்கிறீர்களே. அவைகள் இருக்கிறதே. போதாதா.''

''மாடுகளைச் சொல்கிறீர்களா.''

''இல்லை, பெண்களைச் சொல்கிறேன். மீன்சுருட்டிக்கும், ஜெயங்கொண்டத்திற்கும் இடைப்பட்ட இடங்களிலெல்லாம் தனித்தனி வேளங்கள் அமைத்திருக்கிறீர்களே. கர்நாடகத்துப் பெண்கள், கீழைசாளுக்கியத்துப் பெண்கள், கலிங்கத்துப் பெண்கள் என்று விதம்விதமாய் வைத்திருக்கிறீர்களே. ஒரே கூச்சலாக இருக்கிறது என்று கேள்விப்பட்டேன். அங்கு போய் ஆடியும், பாடியும் காசு செலவழிக்கிறபோது இப்படித்தான் வீட்டுப் பெண்கள் அலைவார்கள்.

இது ஒருமாதிரி புத்தி கொழுப்பு. சதை திமிர். காலையில் எழுந்திருந்து இரவு வரை அலைவதற்கு அந்த உடம்பு சம்மதிக் கிறது. அப்படி தூக்கம் வந்தால் தூங்குவதற்கு வழியே சத்தி ரங்கள் இருக்கின்றன. சுத்தம் செய்யப்பட்ட மண்டபங்கள் இருக்கின்றன. வீட்டு திண்ணையிலே கூ' தூங்கி விடுகிறார்கள்.

மேலே போர்த்திக் கொள்ள பெரிய துணி வைத்திருக்கிறார்கள். குளிராது. கொசு கடிக்காது, நிம்மதியான தூக்கம்.''

''இது சரியா தாயே.''

''சரி, தவறு என்று நாம் பேச வேண்டிய நிலைமையில் இல்லை. இனிமேல் இப்படித்தான். இது மோசமாக ஆகாமல் இருக்க வேண்டுமே என்பதுதான் கவலை. நான் அவனை பார்த்திருக்கிறேன். இவனை பார்த்திருக்கிறேன். எனக்கு இத்தனைப்பேர் தெரியும் என்று சொல்லிவிடப் போகிறார்களோ என்ற பயம் வருகிறது. நல்லவேளை எனக்கு அடுத்த பிள்ளை இல்லை. ஒரே ஒரு பிள்ளைதான். அவனுக்கு மிகச் சிறந்த பெண்மணி மனைவியாகக் கிடைத்திருக்கிறாள். இந்த கழிசடை யெல்லாம் என் வீட்டு படியைக்கூட மிதிக்காது.''

தொலைவே கூக்குரல் கேட்டது. விறகுவெட்டி நின்று கவனித்தான். ஆண்களும், பெண்களுமாய் ஓடி வந்தார்கள். அங்கங்கே உள்ள வீடுகளில் தஞ்சம் புகுந்தார்கள். இந்த இளம் பெண்களின் வேகம் மிக துரிதமாய் இருந்தது. அவர்கள் வீடு தாண்டி ஓடினார்கள். சட்டென்று நின்றார்கள். உள்ளுக்குள்ளே எந்த அனுமதியும் பெறாமல் அந்த ஐந்து பெண்களும் அந்த வீட்டிற்குள் புகுந்தார்கள். கடைசியாக வந்த ஒருவள் படலை சாத்திக் கொண்டாள்.

தெரு அமைதியாக இருந்தது. திடீரென்று இரண்டு ஆண்கள் ஓடிவர, பின்னே ஒரு ரிஷபம் துரத்திக் கொண்டு வந்தது. மஞ்சள் நிறம் கொண்ட ரிஷபம். வெறும் எருது இல்லை. ரிஷபம். பெரிய திமில் கொண்ட, முரசுக்கு தயார் செய்த அல்லது கோவிலுக்கு நேர்ந்துவிட்ட ஆண் காளை, பொலி காளை. அது வேகமாக தெருவில் தூசு பறக்க ஓடி வந்தது. வந்தவர்கள் படல் தாண்டி வீட்டிற்குள்ளும், மரங்கள் மீதும் ஒளிந்து கொண்டார்கள். முன்னும், பின்னுமாய் ரிஷபம் அலைந்தது. ஓடிப்போய் ஒரு வேலிப் படலை முட்டியது. சிகப் பாய் விரித்த குறியுடன், நுரை பொங்குகின்ற மூச்சுடன், உறும லுடன், மிரண்ட கண்களுடன் நாலாபக்கமும் பாய்ந்து, சீறியது. எதிர்வீட்டு வாசலில் மணல் கொட்டி கிடந்தது ரிஷபத்திற்கு சந்தோஷமாயிற்று, தன்னுடைய கொம்புகளை ஆழ அதில் பதித்தது, தூக்கிப் போட்டது, மண்ணை கிளறியது. தலை

அரிப்புக்கு, திமிர் கொண்ட மண்டைக்கு தீனி தருவது போல இன்னும் மூர்க்கமாய் படல்களை தாக்கியது. வேளாளர் கையில் கோடாரியை தூக்கி 'ஏய்' என்று உரக்கக் கத்தி கோடாரி உயரத் தூக்கி காட்டினார். நின்று ரிஷபம் அதை கவனித்தது. முழு வேகத்தில் வந்து படலை முட்டியது. படலில் மூங்கில் பழுத்துப் போய் கிடந்ததால் நைந்திருந்ததால் ஒரே முட்டலில் உடைந்தது. படல் சாய்ந்தது. படல் மீது ஏறி வந்தால் அது நேராக வேளாளரைத் தான் முட்டும். பிறகு வீரனை தாக்கும். அவர்கள் இரண்டு பேரும் எழுந்து நின்றார்கள், உள்ளுக்குள்ளே பெண்கள் அரவம் பெரிதாய் கேட்டது. குழந்தைகள் அழுதன.

அந்த தெருவின் எல்லா பக்கங்களிலிருந்தும் வெகு கவனமாய், திண்ணையிலும், கூரையிலும், படலுக்கு பின்னால் உட்கார்ந்து கொண்டும் 'ஆய் ஊய்' என்று காளையை நோக்கி கத்திக் கொண்டிருந்தார்கள். காளை எங்கே எதிரி என்று நாலாபக்கமும் தேடிக் கொண்டிருந்தது. அது சோழ தேசத்து வளர்ப்பு அல்ல. வெகு நிச்சயமாய் கங்கை கரையிலிருந்தோ அதற்கு அப்பாலிருந்தோ கொண்டு வந்திருக்க வேண்டும். அரசனுடைய முரசு ஏற்றவோ அல்லது கோவில் ஊர்வலத்தில் முன்னால் வரவோ உபயோகப்படுத்தி இருக்க வேண்டும். பொலி காளையாக பழக்கப்படுத்தியிருக்க வேண்டும். அந்த காளைக்கு இப்பொழுதும் காமவெறியால்தான் இந்த முரட்டுத்தனம் ஏற்பட்டிருக்கிறது. காமத்தை தீர்க்க வழியில்லாது அது போவார், வருவோரை சீண்டத் துவங்கியிருந்தது.

முன்னங்கால்களை மணலில் நோண்டிய வண்ணம் பூமியை சொறிந்து கொடுப்பது போல அழுத்தி இழுத்துக் கொண்டு சாய்ந்த படலையே பார்த்தது. அப்பால் இருக்கின்ற மறவரையும், வேளாளரையும் கவனித்தது. வேகமாக ஓடி வந்து படலை மறுபடியும் முட்டியது. படல் சுத்தமாக சாய்ந்தது. வேளாளர் வேகமாக நகர்ந்து வீட்டிற்குள் நுழைந்து கொண்டார். இந்த காளை இதே வேகத்தில் ஓடிவந்து வீட்டிற்குள் நுழைந்து வாசற்படியை இடித்தால் இந்த வாசற்படி பெயர்ந்துவிடக் கூடும். மண்ணால் சுவர் எழுப்பி, மரத்தால் வாசல் கட்டி, செங்கல்லால் தரை அமைத்த வீடு அது. மேலே தென்னம் ஓலையால் வேயப்பட்டிருந்தது. இடதும், வலதுமாக பெரிய கூடம் இருக்க, அடுத்த

படி வாசற்கால் வைத்து, அங்கு திறந்தவெளி ஏற்படுத்தி, இடப் பக்கம் கூரை அடித்து சமையல் அறையும் வலப்பக்கம் பெண்கள் புழங்குகின்ற இடமாகவும் இருந்தது.

இந்த காளை முயற்சித்தால் கொல்லை வரை இடித்து நாசம் பண்ணிக் கொண்டு வீட்டை தரைமட்டமாக்கும்படி போய்விடும். ஆனால் என்ன இருக்கிறது இந்த வீட்டை இடிப் பதற்கு, ஏதேனும் காரணம் உண்டா, அல்லது வெறும் வெறி யாட்டம்தானா. அந்த மறவர் அந்த காளையின் முகத்தையே கவனித்தார். கொஞ்சம் கண்ணில் நீர் கோர்த்துக் கொண் டிருந்தது. மூக்கிலிருந்து சளி வழிந்தது. துருத்தி துருத்தி மூச்ச விட்டதால் அது நுரைத்து காணப்பட்டது. வாயிலிருந்தும் உமிழ்நீர் வழிந்தது. தாடைகளை அசைத்துக் கொண்டிருந்தது. உடம்பை உதறி, உதறி திமிறிக் கொண்டிருந்தது. அடிக்கடி சிலிர்த்தது.

மறவர் படல் தாண்டி போனார். கையில் உள்ள நீண்ட துணியை உதறி நீண்டதாகச் செய்து மளமளவென்று சுற்றி முறுக்கினார். இப்பொழுது துணி முறுக்கப்பட்டு கையில் ஒரு கனத்த சவுக்குபோல் இருந்து. வளைந்து உறுதியாக இருந்தது. 'வா, வா மகனே' என்று காளையை நோக்கிக் கூப்பிட்டார். அவருக்கு காளையின் செயகை கோபம் கொடுத்தது. ஆனாலும் அந்த கோபம் சண்டையிடப் போதாது. இன்னும் சீண்டி காளை எகிறிமுட்டி வர அப்பொழுது இன்னும் கோபம் வரும்.

'வெறுமே அடிவாங்கிக் கொண்டு ஓடுகிறாயா. அல்லது தரையோடு தரையாக தேய்த்து விடட்டுமா.' என்று கறுவிக் கொண்டார். காளை விரைவாக அவ்வரை நோக்கி முட்ட வந்தது. சட்டென்று நகர்ந்து கொண்டார். முதுகில் பலம் கொண்டபடி ஒரு அடி வைத்தார். படேர் என்ற சத்தம் கேட்டது. பெண்கள் 'ஓ' என்று அலறினார்கள். காளை தடுக்கில் போய் நின்றது. பிறகு அங்கிருந்து விடுபட்டு வீதிக்கு வந்தது. அவரை முறைத்த படி பார்த்தது. வெகு வேகமாக வர, அவர் சட்டென்று நகர்ந்து கொண்டார். இந்த முறை அவருக்கு காளையினுடைய பிருஷ் டம்தான் கிடைத்தது. அங்கு ஓங்கி அடி வைத்தார். அடி பலமாக இருந்தது. மறுபடி காளைவர தயாரானார். இந்த முறை அது நிதா னித்தது. குறி பார்த்தது. இடது நகர்ந்தாலும், வலது நகர்ந்தாலும்

அதுவும் நகரும் என்று தெரிந்தது. அவர் வேகமாக எகிறி குதித்தார். அவர் வானத்தில் நிற்கும்போது காளை கடந்து போயிற்று. தரையில் இறங்கினார். இந்தமுறை உன்னை நேரடியாக எதிர் கொள்வேன் என்று சொல்லி, அந்த முறுக்குத் துண்டை இடுப்பில் கட்டிக் கொண்டார். தொடை தட்டினார். 'வா' என்றார். காளை அருகில் வந்தது. தலையை மேல்நோக்கி ஆட்டிற்று. அதாவது ஒவ்வொரு ஆட்டலும் ஒவ்வொரு குத்தாக இருந்தது. இன்னும் நெருங்கினார். காளை சரியான தருணம் பார்த்து அவர் வயிற்றில் கொம்பு சொருக காத்திருந்தது. அவர் படேர் என்று முகத்தில் அடித்தார். மிக பலமான அடி. காளை துடித்து பின்வாங்கிற்று. சட்டென்று போய் கொம்புகள் பிடித்துக் கொண்டார். காளைக்கு அது வாட்டமாக இருந்தது. அவரை அப்படியே நகர்த்தியது. மிக வலுவுள்ள மிருகம் அவரை சுவர் நோக்கி அழுத்தி நசுக்கி விட தீர்மானித்தது. அவர் தன் மனதை உறுதி செய்து கொண்டார். எதிரியை எப்படி கையாள்வது என்று தீர்மானித்துக் கொண்டார். அதன் கொம்புகளை இறுக்க பற்றினார். அழுத்தினார். இப்பொழுது கொம்புகளுடைய அடிப் பாகம் வெளியே திமிறி வரத் துவங்கியது. அவர் இன்னும் நெருக்கினார். கொம்பு மேலே நெருக்கப்பட உள்ளே கடும் வலி ஏற்பட்டது. கொம்பினுடைய ஆரம்பம், முகத்தில் உள்ள எலும்புகளெல்லாம் வலித்தன. தாடையை அசைக்க முடியவில்லை. இன்னும் அழுத்தினார். நேரே செலுத்தினார். வேகமாக காளை பின் வாங்கியது. இப்பொழுது முன்னேற முடியும் என்றபோது அழுந்தி நின்றது. முன்னேற தலைப் பட்டது. மறு கணம் மறவர் முன்னும், பின்னும் அலைந்தார். அவர் இதற்கு மேல் விடக்கூடாது என்று தீர்மானித்தார். பிடியை இன்னும் இறுகப் பற்றினார். கொம்பாக இருந்தாலும் அதற்குள் இரத்த ஓட்டம் இருந்தது. அது வலியை கொடுத்தது. அதன் ஆரம்பப் பகுதி தசையோடு சேர்ந்திருந்தால் தசை விண்ணென்று வலித்தது. காளைக்கு தலை சுற்றியது. பலம் கொண்ட மட்டும் தூக்க முயன்றது. கழுத்தை தூக்கியது. அவர் கழுத்தின் கீழே அழுத்தினார். தலையை திருப்பினார். வெகு வேகமாக திருப்பினார். காளை அந்த அழுத்தத்தை தாங்க முடியாமல் சுழன்றது. அவர் அழுத்த அதே வேகத்தில் அது நகர, அந்த அழுத்தம் முழுவதும் காளையின் கழுத்தில் படவில்லை. காளை அந்த

அழுத்தத்தை அதன் நகர்வின் மூலம் சமாளித்தது. அவர் முன்னேறினார். காளையை வெகுவேகமாக அழுத்தினார். தலையை திருப்பினார். காளை இப்பொழுது முகம் மட்டும் கோணலாக இருக்க, அதனுடைய கால்கள் நேரே நிற்பதற்கு தவித்தன. இன்னும் அழுத்த இடம் பக்கம் கால்கள் மேலே எகிறி மறுபடியும் தரை தொட்டன.

வீட்டிற்குள் இருந்தவர்கள் எல்லோரும் மெல்ல வெளியே வந்தார்கள். காளையை மெல்ல அவர் தளர விட்டார். நிமிர்ந்து ஓடி விடலாம் என்று காளை நினைத்தபோது அவர் இன்னும் இறுக்கப் பிடித்தார். காளையை மடேர் என்று தரையில் சாய்த் தார். காளை இடதுபக்கம் விழுந்தது. மறுபடி எழுந்து நிற்க முயன்றபோது அவர் அதன் முகத்தில் பலம் கொண்ட மட்டும் குத்தினார். தாடை உடையும் சத்தம் கேட்டது. மறுபடி காளை எழுந்திருக்க முயன்றபோது அவர் கொம்பை இறுக்க பிடித்து தலையை வானம் பார்க்க திருப்பினார். காளையினுடைய உடம்பு நேராக இருக்க தலை வானம் பார்த்து இருந்தது. மளுக் கென்ற சத்தம் கேட்டது. காளையின் கழுத்து உடைந்தது. அவர் தளரவிட்டு பின்னடைந்தார். காளையால் தலையை நிமிர்த்த முடியவில்லை. எங்கோ உடைந்துவிட்டது. தள்ளாடியது, நாலு பக்கமும் அலைந்தது. கண்கள் சொருகின. மூக்கிலிருந்து இரத்தம் வடிந்தது. காளை தடுமாறி நின்றது. அமைதியாக இருந் தது. மெல்ல மண்டியிட்டது. பிறகு வலப்பக்கம் சாய்ந்தது. காளையின் கண்கள் நெட்டுக் குத்தி நின்றன. மூச்சு மட்டும் வேகமாக இருந்தது. மெல்ல மூச்சு அடங்கியது. அவர் காளையை பார்த்துக் கொண்டேயிருந்தார், காளையின் உயிர்த் துடிப்பு அடங்கியது.

''போ. அடுத்தபடி வேறு ஜென்மத்தில் வேறு ஏதேனும் ஒரு இடத்தில் நாம் மறுபடியும் சந்திக்கலாம். இப்போது போய் வா.'' அவர் விடை கொடுத்தார்.

தெருவிற்குள் வீட்டிலிருந்த ஜனங்கள் பெருங்கூச்ச லோடு துணிகளை விசிறியபடி ஓடி வந்தார்கள்.

காளை உயிர் பிரிந்து ஒரு உலுக்கலில் அமைதியாயிற்று.

வாலிபர்கள் நெருங்கி வந்து மறவரின் கன்னத்தில் முத்த மிட்டார்கள். புஜங்களை பிடித்துக் கொண்டார்கள். அவருக்கு

தோள்பட்டையும், புஜங்களும் வலித்தன. கை விரல்களில் கடும் வலி இருந்தது. இறுக்கி காளையை பிடித்ததால் உடம்பு முழுவதும் ஒரு அயர்ச்சி இருந்தது. உட்கார்ந்து கொள்ள வேண்டும் என்று தோன்றியது. அவர் மெல்ல வேளாளர் வீட்டிற்குள் நகர்ந்து திண்ணையில் அமர்ந்து கொண்டார். வேளாளர் மனைவி குடிக்க தண்ணீர் கொடுத்தாள். உள்ளுக் குள் ஒட்டிக் கொண்டிருந்த பெண்கள் வெளியே வந்தார்கள். அவரை ஆவலுடன் பார்த்தார்கள்.

''அப்பா. என்ன வலிவு. என்ன வலிவு,'' ஒரு பதிமூன்று வயது பெண் வியந்தாள்.

''நீங்கள் சோழ தேசத்தின் பொக்கிஷம். சோழ தேசம் உங்களைப் போல் வீரர்கள் இருக்கும் வரை எந்த கவலை யும் இல்லாமல் நிம்மதியாக இருக்கும்.'' இன்னொரு வாயாடி வசனம் பேசினாள்.

அவருக்கு நிறைய சிரிப்பும், கொஞ்சம் கோபமும் வந்தது. அடிப் போங்கடி என்ற அலட்சியம் வந்தது.

மூன்றாவது பெண் தானும் ஏதோ சொல்ல வேண்டும் என்று ஆசைப்பட்டாள். வார்த்தைகள் சரியாக வரவில்லை. தத்தி, தடுமாறி பேசினாள்.

''நீங்கள் மாவீரர். உங்களை கண்டால் எனக்கு வணங்க வேண்டும் போல் தோன்றுகிறது, நீங்கள்தான் சோழதேசத்தின் காவலர். உங்களால் தான் சோழதேசம் பெருமையடைகிறது'' என்று பேச, 'ச்சூ' என்று ஒரு அதட்டல் போட்டார்.

அந்த பெண்கள் கூட்டம் நகர்ந்தது. இப்பொழுது ஆண் கள் கூட்டம் ஆரம்பித்தது.

''இதைச் செய்யவில்லையெனில் கிட்டத்தட்ட ஒரு நூறு பேரையாவது இந்த காளை கொன்றிருக்கும். ஒரு முன்னூறு பேரையாவது முடமாக்கியிருக்கும். நீங்கள் மடக்கி அடக்கி விட்டீர்கள். கத்தியால் குத்தவில்லை. ஈட்டியால் சொருக வில்லை. அரிவாளால் வெட்டவில்லை. உலக்கையால் அடிக்க வில்லை, கைகளாலேயே கழுத்தை முறித்து கீழே போட்டு விட்டீர்கள். இவ்வளவு பெரிய காளையை எப்படி மடக்கி அடிக்க முடியும். அப்பொழுது காளையை விட உங்கள் கைகளில்

வலிவு இருக்கிறதல்லவா. மனதில் திண்மை இருக்கிறதல் லவா.'' அவர்கள் ஆச்சரியப்பட்டார்கள்.

வீட்டின் படலை நிமிர்த்தி வைத்து இன்னும் ஆழ புதைத்து தளர்ந்த மூங்கில்களை இறுக வேளாளர் கட்டினார்.

''உம்மோடு ஏற்பட்ட சந்திப்பு மிக அற்புதமானது. பாதி மரம் வெட்டிவிட்டேன். உங்கள் வீட்டில் நானே கழுதை மீது ஏற்றி வந்து போட்டுவிடுகிறேன். வீடு எங்கிருக்கிறது என்று சொல்லுங்கள்.'' அவர் வாய் திறக்கும் முன், குதிரை வீரர்கள் ஆறேழு பேர் ஓடிவந்தார்கள். எங்கே எருது என்று பார்த்தார்கள். வீரர்கள், யார் அதை கொன்றது என்று பார்க்க, ஜனங்கள் வெகு வேகமாக அந்த மறவரை சடையரை காட்டினார்கள்.

''எந்தப் படை.''

''அருண்மொழியின் ஆபத்துதவிப்படை. என்ன வேண் டும்.''

''அவருடைய காளையை கொன்றுவிட்டீர்களே.''

''எவருடைய காளையை.''

அவன் கைகாட்டினான். அந்த முகம் எங்கோ பார்த்தது போல் இருந்தது.

''யார் அவர்.''

''நடு நாட்டில் வசிக்கிறார். அங்கு கைக்கோளப்படைக்கு தலைவராக இருக்கிறார். போன வாரம்தான் அவருக்கு குதிரைப் படை தலைவராக பதவி ஏற்பு கொடுத்தார்கள். அவர் இந்தக் காளையை மிகச் சிரமப்பட்டு கங்கை கரையிலிருந்து ஓட்டி வந்தார். பறித்துக் கொள்ளாமல் இதன் உரிமையாளனுக்கு பத்து பொன் கொடுத்து ஓட்டி வந்தார்.''

''வருத்தமாகத்தான் இருக்கிறது. என்ன செய்ய.'' சடையன் விட்டேத்தியாகப் பேசினார்.

''காளையை கொன்றுவிட்டு வருத்தமாகத்தான் இருக் கிறது என்றால் என்ன அர்த்தம்.

''காளை முட்ட வந்தது.''

''ஒதுங்கிப் போங்களய்யா.''

"காளை பலபேரை முட்ட வந்தது."

"அத்தனை பேரும் ஒதுங்கி போயிருக்க வேண்டும். இப்படிப்பட்ட காளை கிடைக்குமா. என்ன தோல். என்ன திமிர். என்ன மூச்சு. இது பொலி காளையய்யா. இம்மாதிரி பல காளை களை உருவாக்கியிருக்கலாம்."

"இருக்கலாம். தொழுவத்தில் அடைத்து வைக்க வேண்டி யதுதானே. தெருவில் விட்டு வேடிக்கை பார்த்திருக்கிறீர்களே. ஜனங்களை முட்ட வருகிறதே."

"காளைக்கு முட்டத்தான் தெரியும். ஜனங்கள் ஒதுங்கி போக வேண்டும்."

"ஜனங்களை காயப்படுத்துகின்ற ஒரு விலங்கை வேறு என்ன செய்வது, கொல்லத்தான் வேண்டும்."

"கொல்ல வேண்டுமா. உன்னை கொன்று விடுவேன்." அந்த குதிரைப்படை தலைவன் வாளை உருவினான்.

சடையர் திகைத்தார். அவர் வாளின் மீது இடக்கை இருந் தது. வலக்கை சாதாரணமாக இருந்தது.

"என்னை எதற்கு வம்புக்கு இழுக்கிறீர்கள். எனக்கு காளையை கொல்ல வேண்டும் என்ற எண்ணம் இல்லை. இந்த படலை சாய்த்து என்னை முட்ட வந்தது. இவரை முட்ட வந்தது." வேளாளரை காட்டினார்.

"பலபேரை முட்ட வந்தது. ஊரை கேளும்." வேளாளர் கூவினார்.

"யாரையும் கேட்க மாட்டேன். இந்த காளைக்கு உரிய பணத்தை கொடு."

"என்ன பணம். எப்படி தருவது. எதுவும் தர முடியாது." அங்கு பலத்த வாய்ச்சண்டை முற்றியது. காளை முட்ட வந்தது என்ற பலபேர் சொன்னார்கள். அப்படி முட்ட வந்த காளையை அவர் கொன்றது சரி என்று பேசிய வாலிபனை அந்த குதிரைப் படைத் தலைவன் ஓங்கி அடித்தான். அவன் அடிவாங்கிக் கொண்டு அழுதபடியே ஓடிப்போனான்.

"காளையை கொன்றதற்காக எனக்கு ஆயிரம் பொன் கழஞ்சுகள் நீங்கள் தர வேண்டும்."

''ஆயிரம் பொன் கழஞ்சுகளா.'' ஊர் திகைத்தது.

''முட்டாள்தனமாக இருக்கிறது.'' அந்த வேளாளர் சொன்னார்.

''குத்திக் கொன்றுவிடுவேன்.'' அந்த குதிரை வீரன் வாளை வேளாளர் கழுத்தில் வைத்தான். வேளாளர் அசையாது நின்றார். வாள் மிகக் கூர்மையாகத் தீட்டப்பட்டிருந்தது. அந்த வாளின் பிடியில் கை வைத்து சடையர் தள்ளிவிட்டார். வாள் மறுபக்கம் போயிற்று. இப்பொழுது வேளாளருக்கு குறுக்கே அவர் நின்று கொண்டார்.

''இன்னொருமுறை இந்த வாள் எவர் மீதாவது பட்டால் உன் கை துண்டிக்கப்படும்'' என்று சடையர் சொன்னார்.

''வா. என் கையைத் துண்டித்துப் பார். என் காளையையும் கொன்றுவிட்டு என் கையையும் துண்டிப்பாயா. அவ்வளவு திமிரா. வா. துண்டித்துப்பார். வா.'' அவன் எகிறினான். வாளை நாலாபுறமும் சுழற்றினான். சுற்றி வந்து வாளை தரையில் ஊன்றி வா சண்டைக்கு என்று சவால் விடுவதுபோல் என்று போல் கால் அகட்டி நின்றான்.

அவர் வாளை உருவினார். மேலே தூக்கி வானத்திற்கு காட்டினார். நெற்றிக்கு எதிரே வைத்துக் கொண்டார். முன்னேறினார்.

ட்ட்ட்னார்... என்று இரண்டு வாட்களும் மோதிக் கொண்டன. எதிரே உள்ளவனுக்கு வாள்வீச்சு தெரிந்திருந்தது. வெட்டி பழக்கப்பட்டவன் போல. வெகு வேகமாக வாள் கழுத்தருகே வந்தது. எல்லா இடங்களிலும் தடுக்க வேண்டியதாயிற்று.

இவனை தாக்கிவிடலாம். எளிது. ஆனால் இவனை கண்டிப்பாக தண்டிக்க வேண்டும். அவர் வேகமாக முன்னேறினார். நாலாபுறமும் கத்தியை தடுத்துக் கொண்டு அவன் கையையே கவனித்துக் கொண்டிருந்தார். அந்தக் கை தாழ்ந்தபோது பளிச்சென்று வாளின் பக்கப் பட்டையால் அவன் கையை தாக்கினார். ஆள்காட்டி விரலும், அடுத்த இரண்டு விரலும் நொறுங்கின. அவன் வாளை உதறிவிட்டு பேய்போல அலறினான். அவர் வாளை தன்னுடைய உறையில் போட்டுக் கொண்டார்.

''நகர்ந்து போ. இந்த வேலையெல்லாம் இங்கே செல் லாது'' என்று சடையர் சொன்னார்.

அவன் சட்டென்று இடது கையால் உடன் வந்த தன் னுடைய குதிரைப்படை ஆளின் வாளை இடுப்பிலிருந்து உருவினான். அது வாள்கூட அல்ல. ஒரு கட்டாரி. வெகு வேக மாக அவரை நோக்கி பாய்ந்து வந்தான். அவர் நகர்ந்து கொண் டார். மறுபடியும் வாளை உருவி அவனை தடுக்க தயாரானார். இந்தமுறை அவன் தாக்க வரவில்லை. பின்னடைந்தான். தொலைவிலிருந்து வாளை, கட்டாரியை வேகமாக அவர் மீது எறிந்தான். மின்னலென கட்டாரி வந்தது. சட்டென்று நகர்ந்து கொண்டார். கட்டாரி ஓலைக் கரையில் போய் சொருகி நின்றது. மேலே பட்டிருந்தால் நிச்சயமாக முகம் கிழிந்திருக்கும். அவர் கோபமானார். முன்னேறி தன் வாளால் அவனுடைய தொடையைத் தாக்கினார். முன்னேறி தோளைத் தாக்கினார். தலையில் அடித்தார். வலக்கை விரலை உடைத்தது போல இடக்கை புஜத்தையும் உடைத்தார். அவன் மல்லாக்க தரையில் விழுந்தான். தன் செருப்புக் கால்களுடன் அருகே போனார். அவன் முகத்தில் கால் வைத்து அழுத்தினார். குறுக்கும், நெடுக் குமாக அவன் நெற்றியில் கோடு போட்டார். ரத்தம் கொப்ப ளித்தது. ஒரு கோணல் ரத்த வடுக்கள் நெற்றியில் இருந்தன. இவன் தவறு என்று சொல்வது போல ரத்தம் பொங்கி அவன் முகத்தை நனைத்தது.

தொலைதூரத்தில் குதிரைகள் இன்னும் வருவது தெரிந் தது. அவர்கள் அரையனுடைய ஆபத்துதவிகள். கருப்பு உடை யில் இருந்தார்கள். புலிக் கொடியுடன் வந்தார்கள். கீழே இறங் கினார்கள்.

''என்ன நடக்கிறது இங்கே, என்ன சண்டை'' என்று உரத்த குரலில் அதட்டினார்கள். சடையரை பார்த்து, ''என்ன சடையரே, தெருச் சண்டையை ஆரம்பித்துவிட்டீரா. சும்மா இருக்க மாட்டீரா'' என்று கேட்டார்கள்.

''தெருச்சண்டை நான் ஆரம்பிக்கவில்லை, அவர் ஆரம் பித்தார்.'' ஆனால் அவன் நினைவின்றி கிடந்தான். அவன் மூச்சு இழையோடிக் கொண்டிருந்தது. அவனை அள்ளிக்கொண்டு

மாட்டுவண்டியில் படுக்க வைத்து ஆதுரச் சாலைக்கு அழைத்துப் போனார்கள்.

''சடையரே, உங்களை கைது செய்கிறோம்.'' சடையர் மறுக்க முயற்சித்தபோது வேளாளர் உள்ளே புகுந்தார்.

''என்ன விளையாடுகிறீர்கள். இந்த காளை ஊரை நாசம் செய்து கொண்டிருந்தது. இதை மறித்து அவர் ஜனங்களை காப்பாற்றினார். அதற்கு விலை கொடுக்க வேண்டும் என்று அந்த நடு நாட்டு இளைஞன் வந்து கத்தினான். வீணாக கட்டாரியை இவர் மீது வீசி எறிந்தான். இவர் கம்பீரமாக சண்டை போட்டு அவனை தரையில் சாய்த்தார். இவர் நினைத் திருந்தால் அவனை கொன்றிருக்க முடியும். இப்படி இவரை கைது செய்கிறீர்களே. இவர் நல்லவர்.'' கைது செய்யாதீர்கள் என்பதுபோல் குறுக்கே நின்றார்.

அவரை வெகு எளிதில் அந்த வீரர்கள் புறம் தள்ளினார்கள்.

''என்ன செய்ய வேண்டும் என்று எங்களுக்குத் தெரியும். போ. சோழ தேசத்தில் திமிர் எடுத்து ஆடுகிறீர்களா. விவசாயி தானே நீ. நீ என்ன நியாயம் பேசுகிறாய். மறவன் பொன் கொடுக்கிறான் என்றால் என்ன வேண்டுமானாலும் சொல் வாயா.'' என்று சொல்லி, சடையரை பின் கை கட்டி இழுத்துக் கொண்டு போனார்கள். அவர் குதிரையில் ஏற்றி உட்கார வைத்தார்கள்.

''வேளாளரே, இங்கு வாரும். என் இடுப்பில் இருக்கின்ற இந்த பொற்கிழியை எடுத்துக் கொள்ளுங்கள்.''

வேளாளர் எடுத்துக் கொண்டார். உள்ளே பத்து, பதி னைந்து பொற் கழஞ்சுகள் தென்பட்டன.

''இந்த விறகை என் வீட்டில் கொடுத்துவிடுங்கள். அவள் சமைக்க வேண்டுமல்லவா. நான் அரசால் கைது செய்யப்பட் டிருக்கிறேன். நியாயம் சொல்லி விரைவில் வெளியே வருவேன் என்று சொல்லுங்கள்.

ஆனால் இவர்கள் முறைப்பை பார்க்கும்போது, இவர்கள் குற்றச்சாட்டை பார்க்கும்போது இவர்கள் என்னை நாடு கடத்து வார்கள். அல்லது வேறு ஏதேனும் போர்முனைக்கு அழைத்துப்

போவார்கள். எனவே, இந்த பொன்கழஞ்சுகளை என் வீட்டில் கொடுத்து விடுங்கள். போக, வர கவனித்துக் கொள்ளுங்கள். எந்த உதவியாக இருந்தாலும் செய்து கொடுங்கள். நான் வந்து உங்களை மரியாதை செய்கிறேன்.'' என்று மடமடவென்று பேசினார்.

அந்த கூட்டம் நகர்ந்தது. வேளாளர் திகைத்துப் போயிருந் தார். குதிரைகள் போய் காலியாக இருந்த இடத்தில் அந்த காளை மாட்டை வேறு ஒரு இழுப்பு வண்டி கொண்டு வந்து அதில் ஏற்றி கொண்டு போனார்கள்.

''நல்ல தோல். பெரிய முரசு தயாரிக்கலாம்'' என்று ஒருவன் சொல்ல, தெரு ஜனம் மெல்ல மெல்லக் கலைந்தது. வீட்டில் உள்ளோர் வெளியே வந்தார்கள். 'என்ன அநியாயம் இது' என்று பேசிக் கொண்டார்கள். ஆனால் அடுத்த அரை நாழிகையில் மறந்து போனார்கள். இந்தச் செய்தியை மற்ற இடங்களுக்கு சொல்வதற்காக ஜனங்கள் நகர்ந்து போவது தெரிந்தது. வேளாளர் துக்கமானார். மனைவியை திரும்பி பார்த்தார்.

''என்னமோ நடந்துவிட்டது. அவரை தண்டித்து விடு வார்களா. அவர் பக்கம் நியாயம் இருக்கிறதே.'' கவலையோடு கேட்டார்.

''அரசாங்கம் என்ன செய்யும். யாருக்கு தெரியும்.''

''அரசாங்கம் இந்த விஷயத்திற்கு ஏதோ ஒரு விதமாக காரியம் செய்யும். அது தண்டிக்கலாம். தளர விடலாம். இதை இப்போதைக்கு நிர்ணயிக்கவே முடியாது.''

''அந்த குதிரை இளைஞர் இறந்துவிட்டாரா.''

''இல்லை. தூக்கி அணைத்தபடி குதிரையில் போய்க் கொண்டிருக்கிறார்கள். சரியாகிவிடும்.''

''அதனாலேயே தண்டனை இருக்காதல்லவா.''

''சொல்ல முடியாது. அடி வாங்கியவன் ஓவென்று அழுதால் இவர் மீது கோபம் திரும்பும். காளையையும் கொன்று, ஆளையும் கொல்ல முயற்சித்து என்றெல்லாம் பேச்சு வரும்.''

''அய்யோ பாவம். அவர் வீடு எங்கே இருக்கிறது. நானும் வருகிறேன்'' என்று அவள் சொன்னாள்.

அவர்கள் வீட்டை பூட்டிக் கொண்டு, இரண்டு குழந்தை களையும் எடுத்துக் கொண்டு, கழுதையில் காய்ந்த விறகு களை தள்ளிக்கொண்டு சடையர் வீடு நோக்கி போனார்கள். அந்த வீடு செய்தி தெரிந்து 'ஓ' வென்ற அலறலோடு வாயிலில் ஒரு பெண் அழுது கொண்டிருந்தாள். வேளாளர் வந்ததும்,

''என்ன நடந்ததய்யா. என்ன நடந்தது.'' என்று அந்த வீடு சுற்றி நின்று கேட்டுக் கொண்டது. அந்த மறவர் தெருவில் உள்ள வர்கள் கோபமடைந்தார்கள்.

''நடு நாட்டு ஆள் இங்கு வந்து கத்தி நீட்டுவான். நாங்கள் பார்த்துக் கொண்டிருப்போமா. உடன் துணைக்கு வந்தால் கேவலமாகி விட்டோமா. என்னடா நினைத்துக் கொண்டிருக் கிறீர்கள். நீங்களா ஜெயித்தீர்கள். ஜெயித்தது சோழப்படை யடா. வேளாளரே, நீங்கள் சாட்சி, ஒரு பொழுதும் அநியாயத் திற்கு பணிந்துவிட வேண்டாம். வேறு யாராவது பொற்கழஞ்சு கொடுத்து உங்களை மாற்றி பேசச் சொன்னால் தயவுசெய்து அப்படியெல்லாம் பேசி விடாதீர்கள்.''

''சத்தியமாக பேச மாட்டேன். என் குழந்தைகள் மீது ஆணையாக பேச மாட்டேன். உங்கள் நண்பருக்கு ஆதரவாகத் தான் இருப்பேன்'' என்று சொல்ல, அந்த மறவர் கூட்டம் கட்டிக் கொண்டது. அந்தப் பெண்மணியும் வேளாளரின் மனைவியை கட்டிக் கொண்டாள்.

''சோழ தேசத்து வீரர்களை மெல்ல எகிறிப் பார்க்க ஆரம் பித்து விட்டார்கள். இது தொடர்ந்து நடக்கும் பாரேன்'' என்று ஒரு இளைஞன் சொல்ல, மற்ற கிழவர்கள் ஆமோதித்தார்கள்.

ஒரு பிளவு, ஜாதிப் பிளவுபோல ஒரு படைப்பிரிவு அங்கு ஏற்பட்டது.

நடுநாட்டு மக்களுக்கு இது தெரிய வந்தது, சோழ தேசத்து படைகளை கடந்து கொண்டு இறந்து போனவர் களின், குடும்பங்களும் காயம்பட்டவர்களும், மிகுந்த பொரு ளோடு திரும்பியவர்களும் ஒன்று சேர்ந்து பேசத் துவங்கி னார்கள். 'சோழ தேசத்தின் அநியாயத்திற்கு அளவே இல்லையா.' என்று ஆரவாரித்தார்கள்.

அருண்மொழிபட்டனுக்கு சகலமும் போயிற்று, அரையன்

ராஜராஜன் கைது செய்யப்பட்ட அருண்மொழிபட்டனின் தளபதியை ஓங்கி கன்னத்தில் அறைந்தார்.

''பெரிய வீரனா நீ. வா. வாளெடு. உனக்காயிற்று, எனக் காயிற்று. பார்த்து விடுவோம்.'' என்று அவன் கைக்கட்டை அவிழ்த்தார்.

கை வலித்தது. சடையர் கையை உதறிக் கொண்டார்.

''அரையரே, நான் தவறு செய்யவில்லை.''

''சவுக்கு பிய்யும்படி அடிப்பேன். முகத்தை கோரமாக்கி யிருக்கிறாய். நெற்றியில குறுக்கு கோடு போட்டு இருக்கிறாய். என்ன விளையாடுகிறாய். முத்திரை பதிக்கிறீர்களா. நடுநாட்டு ஆள் உங்களுக்கு தேவை இல்லையா. ஜெயித்தால் உங்க ளுக்கு எல்லோரும் அடிமையா. இந்த ஆட்டம் இன்றோடு நிற்க வேண்டும்.''

அருண்மொழிபட்டன் தளபதி அங்கு இருந்தான்.

''விசாரிக்காது அவரை அடிக்காதீர்கள் அரையரே'' என்று சொன்னான்.

அவர் திரும்பி அவன் மீது பாய்ந்தார். அவன் சட்டையை பிடித்து கிழித்தார். முகத்தில் குத்தினார்.

''அவ்வளவு கொழுத்துவிட்டதாடா. நாய்களா. அருண் மொழிபட்டன் ஆட்கள் என்று ஆடுகிறீர்களா.'' இப்பொழுது பிளவு வேறு திசை நோக்கி விரிந்தது.

அருண்மொழிபட்டன் இராஜாதிராஜனோடு உட்கார்ந்து கொண்டிருந்தான். இராஜேந்திரருடைய மூத்த மகனான இராஜாதிராஜனுக்கு இளவரசு பட்டம் கட்டப்பட்டமையால் சோழ தேசத்தின் முழு பொறுப்பும் அவன்மீது இருந்தது. ஆனால் எதையும் தானே செய்யாது, அரையரையும், அருண்மொழிபட் டனையும், கிருஷ்ணன் ராமனான பிரம்மராயரையும், மற்ற சேனாதிபதிகளையும் கலந்து கொண்டுதான் அவன் காரியம் செய்ய வேண்டியிருந்தது. அருண்மொழிபட்டனை அவன் மிகவும் நேசித்தான். அரையரிடம் கர்வம் கொப்பளிப்பதை அறிந்து வைத்திருந்தான். சக்ரவர்த்தி உடையார் இராஜேந்திர சோழரைத் தவிர, வேறு யாரையும் நான் மதிக்க வேண்டிய

தில்லை என்று அரையர் பேசியிருப்பது பலமுறை பல இடங்களில் அவன் காதில் விழுந்திருந்தது, அதற்கு இராஜாதிராஜனை நான் மதிக்க வேண்டியதில்லை என்பதாகத்தான் அர்த்தம் இருந்தது. அருண்மொழிப்பட்டன் எனக்கு கீழே வேலை செய்கிறவன் என்றும் அரையர் பேசியிருந்தார். அதுவும் படைவீரர்களுக்கு இடையே சலசலப்பை ஏற்படுத்தியிருந்தது. அருண்மொழிப் பட்டனுக்கு இதில் வருத்தம் இருந்தது.

''என்ன நடந்தது'' இராஜாதிராஜன் கேட்டான். நடந்ததை விவரித்தார்கள்.

''இங்கு அழைத்து வாருங்கள். ஏன் அரையரிடம் விட்டு விட்டீர்கள்.''

''அரையர் விசாரித்துக் கொண்டிருக்கிறார். அரையரிடம் தான் புகார் தரப்பட்டது.''

''என்ன புகார்.''

''நடு நாட்டை சேர்ந்த குதிரைப்படை தளபதி இந்த இடத்தை சேர்ந்த ஒரு சடையன் என்ற சோழ தேசத்து அருண்மொழிப்பட்டன் மெய்க்காவல் படையில் உள்ளவனால் தாக்கப் பட்டான். நடுநாட்டான் காளை அவரால் கொல்லப்பட்டது.''

அந்த கொல்லப்பட்டது என்று சொல்லும் வார்த்தை கத்தியால் குத்தப்பட்டது என்பது போலத் தான் எல்லோருக்கும் தெரிந்தது.

''காளையை ஏன் குத்துகிறார்கள்.'' என்று இராஜாதிராஜன் கேட்க, அதற்கு சட்டென்று பதில் சொல்லவில்லை. வேறு கூக்குரல்கள் எழுந்தன. இராஜாதிராஜன் அமைதிபடுத்தி விட்டு, ''அந்த சடையரை இங்கு அழைத்து வாருங்கள்.'' என்று கட்டளையிட்டான்.

தான் விசாரித்துக் கொண்டிருக்கும்போதே இராஜாதிராஜன் கட்டளையிட்டது அரையருக்கு பிடிக்கவில்லை.

''உடன் அருண்மொழிபட்டன் இருக்கிறான் அல்லவா. உதடு பிரிக்காமல் அவருக்கு சொல்லி கொடுத்திருப்பான். நீங்கள் விசாரியுங்கள் என்று தூண்டிவிட்டிருப்பான்.'' அவர் கோபமானார்.

''பின் கை கட்டுங்கள்'' என்று கட்டளை இட்டார். சடையர் மறுபடியும் கட்டப்பட்டார். குதிரையில் ஏற்றப்பட்டார். அவரை இராஜாதிராஜன் இடம் நோக்கி அழைத்துப் போனார்கள். அது இராஜேந்திரருடைய அரண்மனை. சிங்காசனத்தில் கம்பீரமாக இராஜாதிராஜன் வீற்றிருந்தான். எதனாலேயோ அரையன் ராஜராஜனுக்கு கோபம் வந்தது.

'என்ன செய்துவிட்டாய் நீ, கூடவே வந்தாய் என்பதால் உனக்கு சிங்காசனமா,' என்று உள்ளுக்குள்ளே ஒரு குமுறல் ஏற்பட்டது.

இராஜேந்திரருடைய மகன் அவ்வளவுதானே. போர்முனை விஷயங்கள் என்ன தெரியும் உனக்கு. சிறு பையன். எழுந்து நில். இல்லையெனில் நடப்பதே வேறு, என்று உள்ளுக்குள் உறுமியபடி அவர் சபைக்குள் நுழைந்து வந்தார்.

இராஜாதிராஜன் எழுந்து நின்றான். கை கூப்பினான்.

''வாருங்கள் அரையரே,'' என்றான். பின்னால் கை கட்டப் பட்டிருந்த அந்த சடையரை பார்த்தான்.

அருண்மொழி சடையரை பார்த்து திடுக்கிட்டான். அவருடைய கண்களின் கீழ் வீங்கியிருப்பது தெரிந்தது. அடித்திருப்பார்கள் என்று தெரிந்தது. வேகமாக முன்னேறினான். தன்னுடைய கட்டாரியால் அவருக்கு பின்னே போய் கட்டை அவிழ்த்தான்.

''யார் கட்டியது.'' என்று சீறினான்.

''நான் கட்டினேன். ஏன்.''

''இவர் என் உப தளபதி. என் ஆபத்துதவி படை, என்னுடைய மெய்க்காவல், இவரை கட்ட எவருக்கும் அதிகாரம் இல்லை.''

''அவர் குற்றம் செய்தவர்.''

''அதை தீர்மானிக்க வேண்டியது இளவரசர் அல்லது அரசர். நீங்கள் அல்ல. இதை கவனம் கொள்ளுங்கள் அரையரே.''

இந்தமுறை சண்டை நேருக்கு நேர் ஆரம்பித்துவிட்டது. வெற்றி பெற்ற தேசத்தில் இது சகஜம்தான். இதற்கு அடிநாதமாக இருப்பது யாரால் வெற்றி கிடைத்தது தெரியுமா என்ற கேள்வி

தான். இந்த கேள்வி நேரடியாக கேட்கப் படாது பூடகமாக, பல்வேறுவிதமாக வெளிப்படும். வேகமாக ஒலிக்கும். முரட்டுத் தனமாக பேசப்படும். நீ பெரிய ஆளா, நான் பெரிய ஆளா என்கிற கேள்வி வரும். நீ என்ன கிழித்து விட்டாய் என்ற இரகசிய மான கேள்விகளும் இதற்குள் உண்டு. எனவே, இதை ஆரம் பிக்காமல் அமைதியாக இருத்தலே சிறப்பு. ஆனால் இங்கே சபையை பிளந்து இந்த கேள்விகள் வெளியே வந்து நின்று விட்டன.

நிர்வாகிகளும், ஓலை நாயகமும், மற்ற அதிகாரிகளும் வியப்போடு இரண்டு தளபதிகள் சண்டை போடுவதை பார்த் தார்கள்.

கிருஷ்ணன் ராமனுக்கு செய்தி போயிற்று, வந்து உட் கார்ந்து கொண்டார். இராஜாதிராஜன் உள்ளுக்குள் பதறினான். இந்த ஒரு விஷயத்தை எப்படி எதிர்கொள்வது என்று அவ னுக்குத் தெரியவில்லை. இப்படி ஒரு அனுபவம் ஏற்பட வில்லை. சட்டென்று கிருஷ்ணன்ராமன் அருகில் போய் உட் கார்ந்து கொண்டான்.

''எனக்கு புரியவில்லை. இரண்டு பேரும் வெளிப்படை யாக சண்டை போட்டுக் கொள்கிறார்கள். என்ன செய்வது.''

கிருஷ்ணன் ராமன் சிரித்தார். அவன் முதுகை தட்டிக் கொடுத்தார்.

''மூண்டு விட்டது. முற்றட்டும். பார்த்துக் கொண்டிரு. அவர்களாக தீர்த்துக் கொள்ளட்டும். நீ வெறுமே வேடிக்கை பார். நான் சொல்கிறபொழுது இருவரையோ அல்லது இருவரில் ஒருவரையோ கைது செய்.'' என்று சொன்னார், அவன் வேக மாகப் போய் தன்னுடைய ஆசனத்தில் அமர்ந்து கொண்டான். அவர்கள் பேசுவதை கவனித்தான்.

எதிரே வாய்ச்சண்டை பலமாக ஆரம்பித்தது. அருண் மொழிப்பட்டன் கால் உதைத்தான். சீறிக் கொண்டு அரையன் ராஜராஜன் முன்பு போய் நின்றான்.

''இன்னொரு முறை இந்த அருண்மொழிப்பட்டன் ஆட்களை நீங்கள் கேவலப்படுத்தினால் நான் உங்களை தண்டிப்பேன். எனக்கு இணையானவர் நீங்கள். என்னை விட

உயர்வானவர் அல்ல, அப்படி ஒரு நினைப்பு இருந்தால் கிள்ளி எறிந்துவிடுங்கள். என்னை உங்களால் தாக்குப் பிடிக்க முடியாது. உங்களுக்கு வயதாகிவிட்டது, என் வாள் வேகமாகச் சுழலும், உங்களுக்கு எதிராகச் சுழலும், நிச்சயம் சுழலும். நான் ஒரு தர்மத்திற்கு கட்டுப்பட்டு உங்கள் ஆட்டங்களை பொறுத்துக் கொண்டிருந்தேன். இப்பொழுது அளவு மீறி போகிறீர்கள். இந்த வீரனை அடித்திருக்கிறீர்கள். பதிலுக்கு உங்கள் வீரனுடைய சிரத்தை கொய்வேன்.'' அவன் வாளை உருவினான். எங்கே அரையருடைய ஆள் என்று தேடினான். கிருஷ்ணன் ராமன் பின்னாலிருந்து,

'அருண்மொழி' என்று குரல் கொடுத்தார். அவரை திரும்பிப் பார்த்தான். 'கூடாது' என்று தலையசைத்தார். அவன் வாளை உறையில் போட்டான்.

இப்பொழுது அரையருக்கு கோபம் அதிகமாகியது.

'நான் பார்த்து வளர்ந்த நாய். பார்ப்பன நாய்' என்று உள்ளுக்குள் சீறினார். இதைச் சொல்ல வேண்டும் என்று தீர்மானித்தார். அந்த மோசமான வார்த்தை அந்த சபையில் விழாது இருக்க வேண்டும் என்று சோழ தேசத்தின் விதி கெஞ்சிக் கொண்டிருந்தது.

★ ★ ★

அத்யாயம்

91

இடங்கை வலங்கை என்று சோழதேசத்தில் எப்பொழுது படைவீரர்கள் பிரிந்தார்கள் என்று சொல்ல முடியவில்லை. விசாரித்துப் பார்த்ததில் முத்தரையர்களுக்கு முன்பாக சோழ தேசத்தில் பல்லவர்கள் ஆட்சி செய்த போது பல்லவர்களுக்கு அடங்கிய குறுநிலமன்னர்களாய் பலர் இருந்திருக்கிறார்கள். எது சோழதேசம் என்று எல்லைவகுப்பதிலும் பிரச்சனை இருந்தது. பல்லவர்கள் படை பயிற்சி கொடுக்க, பரஸ்பரம் மோதிக் கொண்டு வாள் வலிமையை காட்ட, சோழப் படையை இரண்டாகப் பிரித்தார்கள். பயிற்சி தருபவரில் இடக்கை பக்கம் இருப்பவர் இடங்கை வீரர். பயிற்சி தருபவரின் வலப்பக்கம் இருப்பவர் வலங்கை வீரர்.

இது ஒரு சௌகரியத்திற்காக, பொய்யான போர் முறைக்காக செய்யப்பட்டது. ஆனால் சோழப் படை ஒன்று என்றுதான் ஆரம்பத்தில் இருந்தது. போர் பயிற்சி என்பது ஆக்ரோஷமும், அலட்டலும் மிக்கது. இடங்கை பக்கத்திலிருந்து வந்து அடித்து வீழ்த்தி விட்டால் வலங்கை பக்கம் சோர்ந்து போவார்கள். இடங்கை பக்கம் எகிறி குதிப்பார்கள். வலது பக்கத்திலிருந்து வருபவர் ஜெயித்துவிட்டால் இடங்கை பக்கம் சோர்ந்து போகும். வலங்கை பக்கம் கொக்கரிக்கும். பயிற்சிக்காக பிரிக்கபபட்டது மெல்ல மெல்ல மனதுக்குள் வன்முறையாக, மிகப்பெரிய பிரிவினையாக, பெண் கொடுத்து பெண் எடுக்க மாட்டோம், பேச மாட்டோம், சிரித்து கொண்டாடமாட்டோம். போர் என்று வந்தால் இடது, வலதாகப் போவோம். ஒற்றுமையாய் சண்டையிடுவோம். எங்களுக்கு எதிரிதான் முக்கியம். எதிரில் எதிரி இல்லையெனில் இடங்கைக்கு வலங்கை எதிரி. வலங்கைக்கு இடங்கை எதிரி.

இடையறாது போரே வாழ்க்கை என்ற எண்ணம் கொண்ட வர்கள் எதிரி இல்லாது வாழ முடியாது. ஏதேனும் ஆத்திரமாக பேசுவதற்கு ஒரு ஆள் இல்லாமல் அமைதியாக இருக்க முடி யாது. பொழுது போனால் தெருச் சண்டைகளும் இவர்களால் நடைபெற்றன. ''சகுனம் சரியில்லை உட்கார்.'' ஒரு வீரன் தன் குடும்பத்தை உட்கார வைத்தான்.

''என்ன ஆயிற்று.''

''இல்லை, எதிரே இடங்கை சனியன்கள் வருகின்றன.'' என்று உரக்கச் சொன்னான். இடங்கை வீரர்களுக்கு அவமான மாய் போயிற்று. சட்டென்று ஓரமாக நின்றுகொண்டார்கள்.

''எங்கிருந்தாலும் புறப்படுவாய் அல்லவா. ஓடிப்போய் எதிரே வந்து வழித்து சிரித்துவிட்டு அப்புறம்தான் போகப் போகி றோம். நீ எப்பொழுது கிளம்பினாலும் சரி.''

அவன் அன்று முழுவதும் கிளம்பவில்லை. விடியற்காலை யில், இரவோடு இரவாக இருட்டு நேரத்தில் வீட்டை விட்டு அவன் கிளம்பிய போது சடேர் என்று அத்தனைபேரும் துள்ளி எழுந்து கொண்டு அவன் எதிரே போய் அவர்கள் சொன்னபடி வழித்துக் கொண்டுதான் சிரித்தார்கள். பெரிய கைகலப்பு மூண்டது.

''நாங்கள் பாட்டுக்கு போய்க் கொண்டிருந்தோம். இடது கை சனியன்கள் என்று சொல்கிறான். வருத்தமாக இருந்தது. அதனால்தான் உட்கார்ந்து விட்டோம்.''

''இந்த தெரு அவர்களுடையது இல்லை. வரவேண்டிய அவசியமே இல்லை. ஏன் வந்தார்கள் என்று கேளுங்கள்'' என்று இந்தப் பக்கத்திலிருந்து குரல் எழுந்தது.

அப்படி இவர்கள் வரக்கூடாத இடம், அவர்கள் வரக் கூடாத இடம் என்று இராஜேந்திரர் ஆட்சியில் இல்லை என்று கடுமையாக எச்சரிக்கப்பட்டார்கள்.

விஜயாலயர் காலத்தில், பராந்தகர் காலத்தில் இந்த மாதிரி சண்டைகளெல்லாம் கொடி கட்டி பறந்தன. இடங்கை, வலங்கை வீரர்களில் பலபேர் வெறுங்கை வீரர்களாக இருந் தார்கள். பல்வேறு விதமான பயிற்சிகள் செய்து மணல் மூட்டை

குத்தி மணல் மூட்டையிலிருந்து சிப்பிகள் இருக்கின்ற மூட்டை குத்தி, பிறகு இறுகிய களிமண் இருக்கும் மூட்டை குத்தி தங்கள் கரங்களை வலுப்படுத்திக் கொள்வார்கள். மணலில் குத்துவார்கள். பிரம்புத் தடியால் அடித்து கைகளில் வலுவேற்றிக் கொள்வார்கள். புஜங்களின் வலிமை கல் தூக்கியும், மண்மூட்டை தூக்கியும் அதிகரித்துக் கொள்வார்கள்.

அரண்மனையை ஒரு குரங்கு கூட்டம் முற்றுகையிட்டது என்று கேள்விப்பட்டு இடங்கை வீரர்கள் வரவழைக்கப்பட்டார்கள். பழையாறை அரண்மனையை சுற்றிக் கொண்டார்கள். குரங்குகளை சீண்டினார்கள். தாக்க வரும் குரங்குகளை கையால் அடித்தார்கள். முடமாக்கினார்கள். கழுத்தில் கயிறு கட்டி இறுக்கி, கால்களில் முள் குத்தி, கண்களை இலைகளை வைத்து மூடி கூண்டுகளில் தலைகீழாக வைத்து தொங்க விட்டுக் கொண்டு போனார்கள். வெகு தூரம் கொண்டுபோய் மலைப்பக்கம் பிரம்பால் அடித்து விரட்டினார்கள். ஒரு குரங்கு கூட பழையாறையில் இல்லாது போயிற்று. இடங்கை வீரர்களுக்கு மதிப்பு அதிகரித்தது.

இடங்கை வீரர்கள் ஆடி அலம்பல் செய்து கொண்டு ஊர்வலமாக வருவார்கள். அந்த ஊர்வலம் ஒட்டுமொத்தமாய் இருக்குமே தவிர ஒழுங்காக இருக்காது. அப்படி ஒரு ஊர்வலம் கடந்த பிறகு வேண்டுமென்றே வலங்கை வீரர்கள் மிக அழகான படை அணி வகுப்பு நடத்தினார்கள். கையும், காலும் ஒரே சீராக இயங்கின. எல்லோரும் மஞ்சள் தலைப்பாகையில் இருந்தார்கள். இடுப்பு வேட்டியை சுற்றி சிகப்புத் துணியும் பட்டையாக கட்டப்பட்டிருந்தன. வாள் படை, வேல் படை, விற்படை, கைக்கோளப் படை என்று அழகாக அவர்கள் நடந்தார்கள். பார்ப்பதற்கு பரவசமாக இருந்தது. இந்தப் படை அல்லவா ஜெயிக்கும் என்று மக்களுக்குத் தோன்றியது.

ஆனால் இடங்கையினரின் கும்மாளமான ஆட்டமும் சிலருக்கு பிடித்திருந்தது. இடங்கை வீரர்கள் மக்களோடு மக்களாக பழகினார்கள். அதிகம் அலட்டாது இருந்தார்கள். வலங்கை வீரர்கள் வீட்டிற்குள்ளும் தன்னை போர் மறவன் என்று காட்டிக் கொண்டார்கள். அதனால் சற்ற விலகியே இருந்தார்கள். ஒன்று

ஆரவாரம். ஒன்று அதீத அடக்கம். ஒன்று கட்டவிழ்ந்த குதூகல மான கூட்டம். ஒன்று கட்டுக்குள் முறைப்பாக இருக்கின்ற கூட்டம்.

ஒரு வாள் செய்ய வேண்டுமென்றால் இடங்கை வீரர் கம்மாளருக்கு அருகே உட்கார்ந்து கொண்டு துருத்தி அடித்து, நீர் கொண்டு வந்து ஊற்றி, மரக்கிளைகளை பிளந்து போட்டு என்று பல வேலைகள் செய்வார். அந்த வீட்டு பெண் களோடு குதூகலமாக பேசுவார். ஊர் கதைகள் சொல்லுவார். ஆனால், வலங்கை வீரர்களிடமிருந்து கட்டளைகள்தான் கிடைக்கும். காசு கிடைக்கும். ஆனால் அதிகம் பேச்சு இராது. 'என்ன வாள் செய்திருக்கிறாய். வேறொன்று செய்.' தூக்கிப் போட்டுவிட்டு போய்க் கொண்டே இருப்பார்கள். பின் தொடர்ந்து போய் தவறு என்ன என்று கேட்டு மறுபடியும் செய்ய வேண்டும். இந்த அகம்பாவமும், அலட்சியமும் கருமார் களை புண்படுத்தின.

''உனக்கு மனுதர்ம சாஸ்திரம் தெரியுமா. அதில் நான்கு வர்ணங்களை சொல்லி, பஞ்சமர்களை சொல்லியிருக்கிறார் கள் தெரியுமா. அதில் நான் க்ஷத்ரிய வம்சம். அரசனாகின்ற யோக்யதை எங்களுக்குத்தான் இருக்கிறது. எவர் போரில் சிறந் தவரோ, எவர் ராஜதந்திரத்தில் சிறந்தவரோ, எங்களில் எவர் நல்ல படிப்பாளியோ, எங்கு நீதி சாஸ்திரம் தெரிந்தவரோ அவர் குறுநில மன்னராகவோ பிறகு காலத்தின் உதவியால் சக்ரவர்த் தியாகவோ ஆகலாம். வேறு எவரும் ஆக முடியாது. எனவே, நாங்கள் மக்களிடமிருந்து ஒரு அடி விலகி இருப்பதுதான் நல்லது.

நேற்று கட்டி கொஞ்சினோமே அவனா அரசன். இவன் தகப்பன் என்னோடு ஒரே தேரில் பயணப்பட்டிருக்கிறானே அவன் பிள்ளையா இன்று அரசன் என்று நீங்கள் நினைத்து விடக் கூடாது. நீங்களும், நானும் ஒரே தேரில் பயணம் செய்ய முடியாது. ஆபத்து காலங்களில் நமது நட்பு நெருக்கமாக இருப்பதில் தவறேதும் இல்லை. அப்படி விலக்கு அறிவிக்கப் பட்டிருக்கிறது. அந்தணர்கள் தோள்மீது கை போட்டுக் கொள் ளலாம். பஞ்சமர்களை ஆற்றிலிருந்து கைபிடித்து இழுத்து வெளியே விடலாம். அவர்கள் தோளை பிடித்துக் கொண்டு

காயம்பட்ட போது மருத்துவமனைக்கு நடந்து போகலாம் என்றெல்லாம் விதிகள் தளர்த்தப் பட்டிருக்கின்றன.

ஆனாலும், உங்களோடு கூடி குலவிட முடியாது.'' வலங்கை வீரர்கள் நெஞ்சை நிமிர்த்தி சொல்வார்கள். நான்காவது வருணத்தினர் கைகட்டி கேட்டுக்கொள்வார்கள்.

அடேய் மக்களா இடங்கையர்கள் ஆரம்பிப்பார்கள்.

''நாங்களும் க்ஷத்திரியர்கள் தான். எங்களிலும் அரசனானவர் உண்டு. அரசராகப் போகிறவரும் உண்டு. போர்முனையில் நாங்கள் செய்த சாகசங்களை எவரும் செய்திருக்க மாட்டார்கள். எங்களின் வாழ்க்கையை லகுவாக எடுத்துக் கொள்ளச் சொல்லி, எங்களில் பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அரசராவது எப்படி என்று நாங்கள் திட்டம் போடுவதில்லை. அரசரானால் அரசராக இருப்போம். போர் என்றால் மறவராக இருப்போம். காலம் ஒருவனை அரசன் அல்லது மறவன் என்று தீர்மானிக்கும்.

சோழ சாம்ராஜ்ஜியம் எப்பொழுது ஒரு நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்புதானே முளைத்தது. விஜயாலய சோழன் காலத்தில் தானே கிடைத்தது. அதற்கு முன்பு முத்தரையர்கள் இல்லையா. அதற்கு முன்பு பல்லவர்கள் இல்லையா. அப்பொழுது இந்த உடையார்கள் யார். சோழர்கள் யார். எங்கிருந்து வந்தார்கள் என்ற கேள்வி வருகிறது அல்லவா. அதற்கு எப்போதோ முன்னால் கரிகாலன் அணை கட்டினான் என்று இவர்கள் சொல்வார்கள். இருக்கலாம். ஆனால் பலநூறு ஆண்டுகள் ஈட்டியை குத்திட்டு பிடித்துக் கொண்டு வெறுமே காவல் காத்தவர்கள்தானே. இந்த வலங்கை வீரர்கள். இன்றைக்கென்ன புதிய அலட்டல்.

மக்கள் முக்கியமய்யா. வாழ்க்கை முக்கியம். கம்மாளன் இல்லாது போர் செய்ய முடியுமா. ஒரு தச்சன் இல்லாது வீடு கட்ட முடியுமா. நகை ஆச்சாரி இல்லாது இந்த தங்கத்திற்கு என்ன மதிப்பு. இந்த பட்டையை எடுத்து தலையிலா அடித்துக் கொள்ள முடியும். நகையானால் பெண்டாட்டி கழுத்தில் மாட்டலாம். என் கையில் போட்டுக் கொள்ளலாம். யார் இழிவு. யார் உயர்வு. நான் ஏன் உன்னை தொடக்கூடாது. நான் ஏன் உன் வீட்டிற்குள் வரக்கூடாது. அப்படியெல்லாம் ஒன்றும் இல்லை. இவர்கள் அகம்பாவம் பிடித்தவர்கள்.''

''ஆனால் பஞ்சமர்களை நாங்கள் கூட சேர்ப்பதில் லையே.'' கருமார்கள் பேசினார்கள்.

''அது மிகப் பெரிய தவறு. சரித்திரத் தவறு. சமூக தவறு. பிற்பாடு இதனால் இந்த தேசம் படாதபாடு படப் போகிறது. பார்ப்பனர்களும், வணிகர்களும் செய்த சூழ்ச்சி அது, தங்கள் மூட்டையை தூக்கி வர ஆள் வேண்டுமென்று ஒரு குழு வையே உருவாக்கி விட்டார்கள். அவன் தலையில் தூக்கி வரு வானாம். கீழே இறக்கி வைத்ததும் இவர்கள் தண்ணீர் தெளித்து அதை சுத்தமாக்கி விடுவார்களாம். என்ன கொடுமைய்யா இது. நாளைக்கு அந்நியர்கள் இந்த தேசத்திற்குள் நுழைந்தால் அவர்கள் முதலில் அரவணைத்துக் கொள்ளப் போவது அந்த பஞ்சமர்களைத்தான். அந்த பஞ்சமர்கள் மிகக் கெட்டிக்காரர் கள். தொழில் வல்லுநர்கள். மிகுந்த வலுவுள்ளவர்கள், மன உறுதி உடையவர்கள். அவர்களை அந்நியர்கள் பிடித்துக் கொண்டால்...''

''யார் அந்நியர். மேலை சாளுக்கியமா.''

''இல்லை, உங்களுக்குத் தெரியவில்லை. இதை உங்க ளிடம் வலங்கை வீரர்கள் மறைக்கிறார்கள். தொலைதூரத்தில் பாலைவன தேசத்திலிருந்து யவனர்கள் வருகிறார்கள். துருக்கர் என்று அவர்களுக்குப் பெயர். சோனகர் என்றும் அழைப்ப துண்டு. மிகக் கோரமாக சண்டையிடுகிறார்கள். பகலில் சண்டையிட்டுவிட்டு இரவு பயணப்படுகிறார்கள். மறுபடியும் சண்டையிட்டு விட்டு அடுத்த இரவு பயணிக்கிறார்கள். நான்கு இரவுகள், நான்கு பகல்கள் ஓயாது ஓடுகிறார்கள். பிறகு பிணம்போல் தூங்குகிறார்கள். உயிர் வாழ்வதற்கு இந்த முறை முக்கியம் என்று அவர்கள் தெளிவாக உணர்த்திருக்கிறார்கள். அவர்கள் வந்தால் இங்கு எல்லோரும் எதிர்ப்பார்கள். அவர்கள் ஜெயித்தால் இந்த ஆயுதம் ஏந்தாத பஞ்சமர்களை அர வணைத்துக் கொள்வார்கள். அவர்களோடு பேசுவார்கள். மற்றவர்களை நம்ப மறுப்பார்கள். அப்பொழுது நிலைமை தலைகீழாக மாறும். பார்ப்பனனைத் தொடாதே போ என்று சொல்லும்படி ஆகும்.''

''அடேய். அநியாயமாகப் பேசாதே, ஒருகாலும் அப்படி மாறிவிட முடியாது. பஞ்சமர் அரசாள்வாரா.''

"ஆள்வார். நிச்சயம் ஒரு நாள் பஞ்சமர் அரசாள்வார்."

"கலியின் கொடுமையடா இது."

"இல்லை, நீங்கள் தவறாக பேசுகிறீர்கள். கலியினுடைய விதி இது. உயர்ந்தது தாழும், தாழ்ந்தது உயரும்."

"இடங்கை வீரர்களுக்கு இவ்வளவு தெளிவு இருக்கிறதே. ஆச்சரியமாக இருக்கிறது." ஒரு கருமார் வியந்தார்.

"எங்களுக்கு தெளிவு இருந்தால் முகத்தை உர்ரென்று வைத்துக்கொள்ள வேண்டுமா. பெரிய படிப்பாளி என்று கைகட்டிக் கொள்ள வேண்டுமா. எப்பொழுது வேண்டு மானாலும் ஒரு மறவனுக்கு மரணம் நேரலாம். யார் மடியில் வேண்டுமானாலும் நான் செத்துப் போகலாம். எந்தப் புல்வெளி யில் வேண்டுமானாலும் நான் அடக்கமாகலாம். ஒரு பஞ்ச மரின் மடியில் நான் படுத்துக்கொண்டு மெல்ல மெல்ல நீர் அருந்தி என் வீட்டிற்கு சொல்லிவிடப்பா என்று சொல்லி, என் கை மோதிரத்தையும், கங்கணத்தையும் கழற்றி அவரிடம் கொடுத்துவிட்டு, என் பையில் உள்ள கழஞ்சுகளை நீ வைத்துக் கொள். இவற்றை என் வீட்டில் கொடுத்துவிடு என்று சொன்னால் நிச்சயம் அந்த பஞ்சமன் செய்வான். அவனை நம்பி உயிர் துறக்கலாம்.

கருமாராக இருக்கலாம். பானை வனைபவராக இருக் கலாம். தேருக்கு சக்கரம் அடிக்கின்ற தச்சராக இருக்கலாம். காட்டுப்பாதையை சமன் செய்யும் கொத்தர். இவர்களால்தான் பல வீரர்கள் தகனம் ஆயிற்று. என் வாழ்நாட்களில் இவர்களை நான் மறப்பேனா. ஓடிப்போய் கொள்ளையடித்தப் பொருட் களை அவர்களுக்கு வாரி வழங்கினேன். இன்று நலமாக இருக்கிறார்கள். என்னைப் பார்த்ததும் அந்த தச்சர் குடும்பம் ஓடிவரும். வீடு கூடம் முழுவதும் மரச் சட்டத்தால் தூக்கி இருக் கிறார். ஓடு வேய்ந்திருக்கிறார். ஒரு காசு வாங்கவில்லை. ஒரு வீடு எப்படி இருக்க வேண்டும் என்று எனக்குத் தெரியாது. எனக்கு கட்டித் கொடுத்தது அவர். திமிசு கட்டையால் பாதை செய்பவர்தான் எனக்கு வீடு கட்டிக் கொடுத்தார். நான்கு தப்படி வீட்டைச் சுற்றி பள்ளம் எடுத்து காரை பூசி அகழி போல் ஒன்று இரண்டு முழங்கைக்கு ஏற்படுத்தினார்.

'எதற்கு இது தேவையற்ற வேலை என்றேன்.'

''இல்லை, உங்கள் வீட்டைச் சுற்றி மாமரங்கள் இருக்கின்றன. சிகப்பு எறும்புகள் அதிகம் இருக்கின்றன. உங்கள் வீட்டில் கறி சமைத்தால், மீன் சமைத்தால் அந்த வாசனைக்கு எறும்புகள் வந்துவிடும். வீட்டிற்குள்ளே சிகப்பு எறும்புகள் வந்துவிட்டால் கடித்து உடம்பு ரணமாகிவிடும். எனவே, எறும்புகள் நுழையா வண்ணம் பள்ளம் ஏற்படுத்தி இதில் நீர் தங்க வைத்து விடுவேன். பாம்புகள்கூட வராது என்றார். மரப்பாலம் அமைத்து அதை கயிறு போட்டு தூக்கிக் கொள்கின்ற விஷயத்தை கற்றுக் கொடுத்தார். சிறு குழந்தைகள் கூட பாலத்தை தூக்கிவிடும் வண்ணம் ஏற்பாடு செய்தார். மிகச் சௌகரியமான வாழ்க்கை உங்களைப் போல உழைப்பாளிகளால் ஏற்பட்டது.

இன்றைய சக்ரவர்த்தி இராஜேந்திரரின் பெருமையே உங்களையெல்லாம் உணர்ந்து கொண்டு உங்களுக்கு சகல மரியாதையும் தந்ததுதான்.''

''ஆமாம். என்ன அற்புதமான நாள் அது. எதிர்பார்க்கவேயில்லை. பூணூல் அணிந்து கொள்ளுங்கள் என்று சொல்லி விட்டாரய்யா. திகைத்துப் போனோம். தவறாக கேட்டுவிட்டோமோ. இது பிரச்சனை தருமோ. அல்லது சாபம் ஏற்படுமோ என்றெல்லாம் பயந்தோம். இரவு கூடி பேசினோம். யப்பா. இப்பொழுது நினைத்தாலும் பிரம்மிப்பாக இருக்கிறது.

தன்னுடைய கருங்குதிரையில் இராஜேந்திர சோழர் யாரும் துணையில்லாது தானே வந்து தழலுக்கு அருகே வந்து உட்கார்ந்து கொண்டார். யாரோ மறவர் என்று நினைத்தோம். திடீரென்று பலர் கூக்குரலிட்டார்கள். மன்னர் மன்னர் என்று கத்தினார்கள். சக்ரவர்த்தி இராஜேந்திர சோழர் வாழ்க என்றார்கள். திருமன்னி வளர என்று ஆரம்பித்தார்கள். யாருக்கும் முழுக்கச் சொல்லக் கூடத் தெரியாது. தடுமாறினார்கள். அவரே எடுத்துக் கொடுத்தார். சிரிப்பாக இருக்கிறது. என்ன கூட்டம். எதற்கு கூட்டம் என்று கேட்டார். நாங்கள் எங்கள் மனக் கிலேசத்தைச் சொன்னோம்.

பூணூல் அணிந்து கொள்ள வேண்டும் என்று கேட்டது தவறோ என்று தோன்றுகிறது என்று அழுதோம்.

''நீங்கள் கேட்கவேயில்லையே. உங்களுக்கு கேட்கத் தெரியாதே.'' அவர் அமைதியாகச் சொன்னார். என்ன என்று நாங்கள் திகைத்தோம். ''கிருஷ்ணன் ராமரோடு பேசி, கிருஷ் ணன் ராமர் வீட்டிற்கு வேலை செய்யும் மரத்தச்சர் தான் இதைக் கேட்டார். அவரை தூண்டிவிட்டது கிருஷ்ணன்ராமன். தூண்டி விடச் சொன்னது அடியேன். நீங்கள் யாருக்கும் இளைத்த வர்கள் அல்ல என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. அதை நிரூபிக்க வேண்டும் என்பதுதான் எனக்கு ஆசையாக இருந்தது. நீங்கள் தாழ்த்தப்பட்டவர்கள் நான் உயர்ந்தவன் என்ற விஷயமே அபத்தமாக இருக்கிறது, மரணம் கண் முன்னே நிற்கும்பொழுது யார் உயர்ந்தவர் யார் தாழ்ந்தவர். நெஞ்சிலே அம்பு பட்டு இறந்த பிறகு அவனை பஞ்சமர் என்று எப்படிக் கூறுவது. இறந்த வீரன் யானையின் காலில் மிதிபடாமல் இருக்க வாரி எடுத்துப் போய் ஓரம் போடுகின்ற உரிமையும், கடமை யும் மறவனுக்கு உண்டு. மற்றவர்களும் செய்திருக்கிறார்கள். எத்தனை தளபதிகளை, உப தளபதிகளை ஏன் என்னுடைய மகனையும் பஞ்சமர்கள் எடுத்துப் போய் தகனம் செய்திருக் கிறார்கள் அல்லவா. யார் யாருக்கு என்ன வேலை என்பதை பகிர்ந்து கொண்டோம். கம்மாளர் மணந்து கொண்டால் அவ னுக்கு மாமன் வித்தை சொல்லி கொடுப்பான் என்று சில வட்டங்கள் போட்டுக் கொண்டோம். ஆனால் நீ உயர்வு, நான் தாழ்வு என்று எப்படிச் சொல்வது.

வடதேசத்திலிருந்து வந்த பார்ப்பனர்கள் சூழ்ச்சியர். கற்றளி செய்ய பார்ப்பனருக்கு ஆகுமா. நீங்கள் கட்டியதால் அல்லவா பார்ப்பனர்கள் அதற்குள் புகுந்தார்கள். எனவே, இதற்கு நீங்கள் கலவரப்பட வேண்டாம் என்று சொல்வதற் காகவே வந்தேன். சோழ தேசத்தின் பார்ப்பனர்கள் இத்தனை வேற்றுமை காட்ட மாட்டார்கள். இது கங்கை தேசத்தின் கொடுமை. என்னோடு யுத்தத்திற்கு வா என்று சோழ அந்தண ரிடம் சொன்னதும் அவரவர் புல்லில் திரித்த லகானை குதிரைக்கு மாட்டி என்னோடு வந்துவிட்டார்களே. இப்படி வடதேசத்து அந்தணன் வருவானா. வரமாட்டான். பழமர்நேரி திருக்காட்டுப்பள்ளி அந்தணர்களை விட வேதத்தில் சிறந்த வர்கள் உண்டா, எவ்வளவு இளகிய மனது. எவ்வளவு தெளிவான

என்ன அழகு. எவர் செய்தது. எந்த ஊர் கோவில் எத்தனை பேர் வழிபட்டார்கள். இன்று கேட்பார் அற்று நிற்கிறாயே தாயி. வீரா ரெட்டித் தெருவில் உள்ள சிற்பம். சிதிலமாயிருக்கிறது.

புத்தி. மேலைச் சாளுக்கியம் நோக்கி போருக்கு நான் போவதற்கு முன்பு அவர்கள் போய்விட்டார்களே ஒற்றர்களாக, சேர தேசத்து வேதம் செய்யும் அந்தணர்களாக உருமாறினார்களே. உதவி செய்தார்களே. மறந்துவிட முடியுமா. ஜாதி வட்டம் தவறாக போனதற்குக் கரரணம் கங்கைக்கரை பார்ப்பனர்களை குடியேற்றியதுதான். அங்கிருந்து வந்தவர்கள் மிகப் பெரியவர்கள் என்று நம் அரசர்கள் நம்பியதுதான். கங்கை ஒரு வியப்பு. காசி ஒரு வியப்பு. அந்த ஊர் கோவில்கள் ஒரு வியப்பு. ராமர் ஒரு வியப்பு. கிருஷ்ணர் ஒரு வியப்பு. அந்த தேசத்திலிருந்து வந்திருக்கிறார்களே என்று அந்த அந்தணர்களை கண்ட வியப்பு, கிருஷ்ணருக்கும், ராமருக்கும், விஷ்ணுவிற்கும் சிவனுக்கும் நெருங்கியவர்களோ என்ற ஒரு பிரமை. கயிலாயம் மிகப் பெரிய விஷயமல்லவா என்று நாம் நினைத்துக் கொண்டிருக்கிற ஒரு பிரமை. இராமேஸ்வரம் ஒரு பெரிய வியப்பு என்று அவர்கள் யாரும் நினைத்துவிடவில்லை. அது ஒரு முக்கியமாக வணங்கும் இடமே தவிர, அது உயர்வானது என்று அவர்கள் கருதுவதில்லை, அப்படி ஒரு வழிமுறை வந்துவிட்டதால் ராமர் தேசத்திலிருந்து, கிருஷ்ணர் தேசத்திலிருந்து, கங்கை கரை யிலிருந்து, பிரம்ம புத்ராவிலிருந்து, மகாநதிக் கரையிலிருந்து அந்தண்ர்கள் வருவது சிறப்பாக இருக்கிறது என்று நாம் நினைத்துவிட்டோம். கோவிலே கட்டத்தெரியாத கும்பல் அது. திராவிட பிராம்மண, ஆரிய பிராம்மண கலப்பு ஏற்பட்டதால்தான் ஆச்சார குழப்பங்கள் அதிகமாகிவிட்டன. இது சமீபத்தில் ஏற்பட்டது அல்ல. மிகத் தொன்மையானது.

எனவே, இந்த ஆச்சாரங்களுக்கு நாம் மதிப்பு தர வேண்டாம். எல்லா ஆச்சாரங்களும் அகந்தையால் உண்டானவை. அகந்தையை கொடுப்பவை. உங்களுக்குள் இப்படி ஒரு அகந்தை இல்லாதிருக்கட்டும்.

இராஜராஜர் காலத்தில் சிற்பிகளுக்கு அகந்தை வந்ததல்லவா. பெரிய கொம்புகள் என்று சிற்பிகள் நினைத்துக் கொண்டார்கள் அல்லவா. உடனடியாக அது தீர்ந்து போயிற்றே. அப்படி இல்லை என்று உங்களுக்குள்ளேயே நீங்கள் தீர்மானித்துக் கொண்டீர்களே. திடமாய் இருந்தீர்களே. அப்படி இருக்கத் தெரியவில்லை.

உங்களுக்கு என்னுடைய ஒரு வேண்டுகோள். பஞ்ச மரை உதாசீனம் செய்யாதீர்கள். அவர்கள் சந்தோஷமான வர்கள். வெள்ளையானவர்கள். சொல்லுக்கு அப்பாற்பட்ட நல்லவர்கள். கெடுதல் செய்யத் தெரியாதவர்கள். உண்மை யான மனிதர்கள். இந்த சோழ தேசம் உங்களைவிட அவர்களை நம்பி இருக்கிறது என்று நான் கருதுகிறேன் என்று பேசினார்.

இராஜேந்திர சோழரின், இந்த வார்த்தையை நாங்கள் கட்டளையாகவே சிரமேற் கொண்டிருக்கிறோம். பஞ்சமர் களோடு மிகவும் அனுசரித்துப் போகிறோம். இராஜேந்திர சோழர் சொன்ன இன்னொரு விஷயமும் எங்கள் மனதில் பசுமரத்தாணிபோல் பதிந்தது. உண்மையில் இந்த சோழ தேசம், பாண்டிய தேசம் எல்லாம் பஞ்சமர்களின் சொத்தோ என்று தோன்றுகிறது. அவர்கள் ஆண்ட இடமோ என்று தோன்று கிறது. இராமயண காலத்தில் இல்லை அதற்கு முன்பு இங்கே ஊடுருவி வலிவு மிகுந்து அரசாண்டவர்களை கொன்று போட்டு அரக்கர்கள் என்று வெட்டிப் போட்டு அங்கே உழைக் கின்ற மக்களை நாம் ஆளுமை செய்ய ஆரம்பித்து விட்டோமோ என்று தோன்றுகிறது என்றார்.

யாருக்கும் பதில் சொல்லத் தெரியவில்லை, சேனாதிபதி கிருஷ்ணன் ராமனும் இதை ஆதரித்தாராம்.

ஒரு ஊசிமுனை புள்ளியில் நம் வாழ்நாள் இருக்கிறது. ஒன்றிலிருந்து நூறுவயது வரை இருக்கின்ற இந்த வாழ்க்கை ஒரு புள்ளிதான். பலநூறு புள்ளிகளுக்கு முன்பு வாழ்க்கை வேறு விதமாக இருக்கும். நம் உடம்பும், மூக்கும், கண்ணும், உதடும் ஆரிய சாயலுடையவை. ஆரிய தேசத்து சத்ரியர்கள். ஆரிய தேசத்து அந்தணர்கள், ஆரிய தேசத்து வணிகர்கள் என்று புகுந்து கொண்டோம். உண்மையில் இங்கு ஆண்ட வர்கள் அடங்கிவிட்டார்கள். ஆனால் இதுபற்றியெல்லாம் ஆராய்ந்து கொணடிருக்க முடியாது. எளிதாக ஒரே ஒரு வேலை செய்யலாம். நம்மை பாதுகாத்துக் கொள்ள, நம்மை எதிரிகள் தாக்காமல் இருக்க, நம் இன்றைய கலாசாரத்தை காக்க ஒற்றுமை யாக இருக்க வேண்டியது அவசியம், உங்களுக்கு நல்ல சமூக அந்தஸ்து கொடுத்து நீங்கள் மற்றவருக்கு கொடுக்க வேண் டும் என்பதற்குத்தான். இதை கவனத்தில் கொள்ளுங்கள் என்றார்.

அற்புதமான இரவு அது. பல நூறு இரவுகள் இதுபற்றி பேசி தெளிந்து விட்டோம். இதில் ஆச்சரியம் என்னவென்றால் சோழதேசத்து அந்தணர்கள் இதைச் சரியாக புரிந்து கொண் டார்கள்.

இப்படி பல்வேறு கோணங்களில் ஒன்றாக இருக்கிற பொழுது இடங்கை வலங்கை என்று ராணுவம் பிரிந்ததே இதுதான் வேதனையான விஷயம். ஒருவகையில் இது கடவு ளின் கூத்து என்று நான் நினைக்கிறேன்.''

கருமார்கள் பேச, மற்ற எல்லோரும் ஆதரித்தார்கள். சோழ தேசம் தன்னுடைய லட்சணம் என்ன என்பதை கூடி கூடி பேசி தெளிவுபடுத்திக் கொண்டது.

சேர தேசத்தில் அந்தணர் சொல்லே கட்டளையாக இருந்தது. பாண்டிய தேசத்தில் எது கூடி பேசினாலும் சண்டை யாக முடிந்தது. சோழ தேசத்தில் இது தெளிவாகப் பேசப் பட்டது. சோழ தேசத்தின் கூற்றை அப்படியே தொண்டை நாடு உள்வாங்கிக் கொண்டது. நடு நாடு இரண்டாக இருப்பதே சிறப்பு என்று சொல்லியது, சோழதேசம் எது செய்தாலும் நடுநாடு முழுவதுமாக ஆதரிக்காது. சோழர்களுக்கு இணை யானவர்கள் தாங்கள் என்பது நடு நாட்டு மக்களின் எண்ணம். இது மறவர்களின் குணம்.

சக்ரவர்த்தி இராஜேந்திர சோழரைப் போல ஒரு திறமை யான, விரைவான, தெளிவான மன்னர் இருப்பதால் பல்வேறு விஷயங்கள் அமுங்கிக் கிடக்கின்றன. ஆனாலும் சோழ தேசத் திற்குள் உட்பிரிவுகள் அதிகம் உண்டு. எந்த நேரமும் பகை வரைத் தாக்குகின்ற நிலைமையும் உண்டு. தெற்கே அடங்காத பாண்டியர்கள். மேற்கே குமுறிக் கொண்டிருக்கின்ற சேரர்கள். வடமேற்கே அடிவாங்கி அலறுகின்ற மேலை சாளுக்கியர்கள். நட்பாக இருந்தாலும் தனித்திருக்க ஆசைப்படுகின்ற கீழை சாளுக்கியர்கள். நேர் தெற்கே இலங்கையின் தெற்குப் பகுதி சிங்களவர்கள் வடக்குப் பகுதியை ஆக்கிரமிக்க வேண்டும் என்ற ஆவலோடு இருக்கிறார்கள். கிழக்கே மாடமாலிங்கம் லங்கா சோகம், ஸ்ரீ விஜயம் எல்லாவற்றிலும் சோழ வணிகர் களுக்காக காத்திருக்கின்ற கொள்ளைக் கூட்டம். அந்த கொள்ளை கூட்டத்தை ஆதரிக்கின்ற அரசுகள். சோழதேசம்

இவையெல்லாம் மறந்து சுபிட்சமாக இருப்பதுபோல காட்டிக் கொண்டது.

அதெல்லாம் நாளைய பிரச்சனை. இன்று சக்கரை பொங்கல் வை என்று சந்தோஷமாய் சோழதேசம் கூச்சல் போட்டது. மனித மனம் அன்றைய சந்தோஷத்தை ஆவலோடு விரும்புகின்ற வழக்கத்தை உடையது. நாடகங்களும், நடனங் களும் அதிகரித்தன. மது விற்பனை அதிகமாயிற்று. பழங்களை அரிந்து தேனில் ஊற வைத்து பிறகு கையால் நசுக்கி, நிறைய தண்ணீர் விட்டு அதன் தெளிவை இறக்கி, மண் ஜாடிகளில் ஊற்றி இறுக மூடி, வாழை இலையால் சுற்றி பூமிக்கடியில் புதைத்தார்கள். காஞ்சன இலையின் சாற்றை அளவாகப் பிழிந் தார்கள். எடுத்து குடிக்க மறுபடியும் பூமிக்குள் புதைத்து வைத்தார் கள். பத்து நாள் கழித்து எடுத்தால் காடி நெடி மூக்கை துளைத் தது. ஒரு சிறு குடுவை காடியை ஒரு பானையில் கலந்து பரண் களில் வைத்திருந்தார்கள். ஒருநாள் கழித்து விற்பதற்கு எடுத்து வந்தார்கள். இரண்டு மடக்கு குடித்ததுமே சடேர் என்று மூளை நரம்பு தெறித்தது. கண்கள் நிலைகுத்தி நின்றன. உடம்பு விறைத்தது, எகிறி கத்த வேண்டும் போல ஒரு சக்தி பரவியது.

இந்த நிலைமையில் உள்ளூர ஏற்கனவே இருக்கின்ற இந்த பிளவுகள் தாண்டி வடக்கிலிருந்து அரையன் ராஜராஜன் விருப்பத்தால் தெற்குப் பக்கம் வந்த அந்தணர்களாலும் மெல்லிய பிரிவுகள் ஏற்படத் துவங்கின. தொண்டை நாட்டு அந்தணர்களை வடதேசத்திலிருந்து வந்த தங்களை வடமர் என்று அழைத்துக் கொள்கிற அந்த அந்தணர்கள் மதிக்கவே யில்லை. நாங்கள் கற்றுக் கொள்ள வரவில்லை. கற்றுக் கொடுப் பதற்காக வந்திருக்கிறோம் என்று இன்னொரு குழு அவர் களினும் உயர்ந்ததாகக் காட்டிக் கொண்டது. தங்களை ஆசிரியர் கள் என்று கூறிக் கொண்டது. வாத்திமராம், அவர்கள் அலுத்துக் கொண்டார்கள்.

அடிமைகளாக அழைத்து சோழதேசத்தில் உழவு வேலைக் கும், கட்டிட வேலைக்கும் உள்ள கலிங்கர்களும், தட்சிண லாட, உத்தரலாட வீரர்களும், தண்டபுத்திக்காரர்களும் எப்போது இன்னும் தெற்கே போவது, எப்போது இராமேஸ்வரம் பார்ப்பது எப்போது பாண்டிய தேச வீரர்களோடு பேசுவது என்ற

ஆத்திரத்தில் இருந்தார்கள். இவையெல்லாம் இருக்க இராஜேந்திர சோழரின் மூத்த அதிகாரிகளான அரையன் இராஜராஜனும், அருண்மொழிபட்டனும் மிக வேகமாக ஒருவரை ஒருவர் சபை நடுவே வீரர்கள் பார்க்க, அதிகாரிகள் பார்க்க மோதிக் கொண்டார்கள். இது அரசாங்கத்திற்கு பலத்த சேதத்தை உருவாக்கும் வலிமையோடு இருந்தது.

இளவரசன் இராஜாதிராஜன் ஓலைநாயகத்தை அழைத்து வாய்மொழியாக நடந்தவற்றை இராஜேந்திரருக்கு ஓலையாக்கினான். அவனறியாது ஓலைநாயகம் தனியாக ஒரு ஓலை எழுதினார். இராஜேந்திர சோழர் நியமித்த உபதளபதி தனியாக ஒரு ஓலை கொடுத்தார். எல்லா ஓலையும் ஒரேமாதிரி விஷயத்தை சொல்லியிருந்தது என்றாலும் இரண்டு ஓலைகள் அரையன் ராஜராஜரை எதிர்த்து பேசியிருந்தன. இராஜாதிராஜனும், அந்த உபதளபதியும் அத்துமீறி அரையன் ராஜராஜன் நடக்கிறார் என்று சொல்லியிருக்க, ஓலைநாயகம் யார் பெரியவர் என்பதாக சண்டை வந்துவிட்டது என்று எழுதி இருந்தார்.

இராஜேந்திர சோழர் எரியும் நெருப்பில் அந்த ஓலைகளை தூக்கி எறிந்தார். அரசருக்கு முன்பு அதை படித்துவிட்டு வீரமாதேவி ஆவலோடு அரசன் முகத்தைப் பார்த்திருந்தாள்.

''எனக்கு இதுபற்றி எதுவும் தெரியாது. இதுபற்றி எந்த கவலையும் இல்லை. என் வேலை ஸ்ரீ விஜய படையெடுப்பு. என் வேலை கடற்படை, உள்ளூர் கூத்தில் தலையிட்டுக் கொண்டிருந்தால் இங்கு வேலைகள் நடக்காது. நான் இருக்கும் போதே வேலைகள் நிதானமாகத்தான் நடைபெறுகின்றன. சரியான கருவிகள் இல்லை. கருமார்கள் அதிகம் தேவை. எனவே, அதற்குண்டான வேலைகளை நான் செய்யப் போகிறேன்.''

''இராஜாதிராஜன் என்ன செய்வான்.'' வீரமாதேவி பதறிய குரலில் கேட்டாள்.

''இளவரசன் என்ற பட்டம் கொடுத்தாகிவிட்டது. என்னுடைய ஆசனத்தில் அமர உத்தரவிட்டாகிவிட்டது. இனி தீர்ப்பது அவன் வேலை, ஒவ்வொன்றுக்கும் போய் சொல்லிக் கொண்டிருக்க முடியாது. கிருஷ்ணன் ராமன் உதவட்டும். அல்லது

உதவாமல் போகட்டும். அவன் தன்னைத் தானே பலப்படுத்திக் கொள்ள வேண்டும். என்னையே சார்ந்திருக்க முடியாது. ஒருவேளை இராஜாதிராஜன் சோர்ந்து போனான் என்றால் அப்பொழுது நான் என்னுடைய தேசத்திற்குள்ளேயே வாள் ஏந்தி என் தேசத்திலேயே இருக்கின்ற எதிரிகளை சூறையாடு வேன். யார் எதிரி என்று எனக்கு இப்போது தெரியவில்லை. அந்த நேரம் தீர்மானிப்பேன்.

வேங்கியை நோக்கி இராஜராஜ நரேந்திரனை நகரச் சொல். அம்மங்காதேவிக்கு எந்த உத்தரவும் இல்லை. அப்படி கொடுத்தால் அவளின் காரணமாக நாம் நகருகிறோம் என்ற எண்ணம் இராஜராஜ நரேந்திரனுக்கு வரும். அது நல்லதல்ல. என் தேசத்தில் இராஜாதிராஜன் சௌகரியமாக இருக்க நீ நகர்வது நல்லது என்று ஓலை எழுதப்படட்டும். அடுத்த முகூர்த் தத்திலேயே அவன் படைகள் நகர்ந்துவிட வேண்டும். சோழ தேசத்து தளபதிகள் இரண்டு பேர் அடித்துக் கொள்வதை கீழை சாளுக்கிய வீரர்கள் தாம்பூலம் தரித்துக் கொண்டு ரசிக்க வேண் டாம். விரைவாக நகரச் சொல்.''

கோபமான குரலில் ஓலை நாயகத்திடம் கூறினார்.

''ஐந்து பாண்டிய மன்னர்கள் அல்ல. அறுபது பாண்டிய மன்னர்கள் இருந்தாலும் அடிபடுவார்கள். இந்த முறை எந்த மன்னனையும் தப்பவிட மாட்டேன். துரத்தி துரத்தி அடிப்பேன். என் பெரியப்பா ஆதித்த கரிகாலன் படுத்திருந்த பாண்டிய மன்னன் சிரத்தை கொய்தார் அல்லவா. அதைவிட மோசமாக அவர்கள் அடிபடுவார்கள் என்று அவனுக்கு எழுது, அந்த ஓலை ஒன்று நாஞ்சில் நாட்டு பாண்டிய மன்னர்களுக்கும் கிடைக்கும்படிச் செய்.

அதாவது, போர் வீரன் அல்லாத ஒருவன் இந்த ஓலையை எடுத்துப் போகட்டும். போர் வீரன் பாண்டியர்கள் கையில் சிக்கிக் கொள்ளட்டும். ஓலையை கொடுத்து ஓடி வரட்டும்.''

வீரமாதேவிக்கு திகைப்பாக இருந்தது, உட்கார்ந்த இடத் தில் எத்தனை தெளிவாக எவ்வளவு பெரிய விஷயங்களை எளிதாகவும், சீராகவும் பார்க்கிறார். மன்னராக இருப்பதற்கு பயிற்சி உதவாது. மன்னர் என்பவரை விதி தீர்மானிக்கிறது.

சோழ தேசத்தின் விதி சிறப்பாக இருப்பதால் சிறப்பான மன்னர் கிடைத்திருக்கிறார்கள்.

''நடு நாடும் சோழ தேசத்தில் பிரச்சனை செய்து கொண் டிருக்கிறதே.''

''கவனித்தேன். அந்த நடுநாட்டு வீரனை என்னுடைய ஆபத்துதவி ஒருவனை அனுப்பி இரவோடு இரவாக கொன்று விடச் சொல். அந்த தளபதி சோழ தேசத்து தளபதியை தாக்கி யது தவறு. மிகப்பெரிய குற்றம். இதை ஏன் அரையன் ராஜ ராஜன் உணரவில்லை என்பது எனக்குத் தெரியவில்லை. வலங்கை வீரன் என்பதால் இழிவாகிவிட்டது. அந்த நடுநாட்டு வீரன் உயிரோடு இருக்கக் கூடாது. சோழ தேசத்தில் சோழ தளபதியை நோக்கி வாள் தூக்கி வம்புக்கு அழைத்தவன் மிக மோசமான உதாரணமாவான். நடுநாடு திமிறிக் கொண்டிருக் கிறது. தொண்டை நாட்டுக்கு அதிகமான உதவிகள் செய்ய வேண்டும். மயிலை, திருவல்லிக்கேணியை வணிகர்களிடம் ஒப்படைக்க வேண்டும். தொண்டை நாடு முழுவதும் அவர் களுடைய ஆட்சிக்கு உட்பட வேண்டும்.

வேளாளர்கள் அடுத்தபடியானவர்கள், மயிலையில் திறமையான அந்த வேளாளன் பதவி இறங்கி விட்டான். அது அவன் விருப்பம். அந்த இடத்தை மறுபடியும் அந்தணர்கள் பிடித்துவிடக் கூடாது. எனவே, உணர்ச்சிவசப்பட்ட வேளாளர் களை விட்டு விட்டு கொஞ்சம் சீர்தூக்கிப் பார்க்கின்ற வணிகர் களிடம் அரசாட்சியை கொடுத்துவிடுவோம். தொண்டை நாடு சிறப்பானால் நடுநாடு வயிறு எரியும். எங்களுக்கு எங்களுக்கு என்று வரும். நீங்கள் சரியாக நடக்கவில்லையே என்று அப்போது சொல்லி உட்கார வைக்க வேண்டும். அந்த ஊர் மக்கள் அந்த ஊர் மறவர்களை அதட்டி பின்வாங்க வைக்க வேண்டும்.

நீங்கள் போருக்கு போய் என்ன கொண்டு வந்தீர்கள். வடக்கே தொண்டை நாடும், தெற்கே சோழ தேசமும் சிறப் படைகின்றன. நடுவே இருக்கின்ற நடுநாடு வெறுமே நக்கிக் கொண்டிருக்கிறோம் என்று பலர் ஏகடியம் பேச வேண்டும். அப்படி பேசுவதற்கு தொண்டை நாட்டு அந்தணர்களையே

ஏற்பாடு செய்ய வேண்டும். அவர் தொடையை தட்டிதட்டி பேசினார். தளபதிகள் அந்த வேலையை ஆரம்பித்தார்கள்.

அரையன் ராஜராஜன் அருண்மொழிப்பட்டன் சண்டை அப்படியே நின்றாலும் அது காட்டு தீப்போல் இடங்கை, வலங்கை வீரர்களிடையே பரவியது. இராஜாதிராஜன் தவித்தான். அவனுக்கு முழு மனதோடு கிருஷ்ணன் ராமன் உதவி செய்வதாய் தெரியவில்லை. 'நீ தானே அரசன். நீயே தீர்மானம் செய். இராஜேந்திர சோழன் என்னிடம் கலந்தாலோசிப்பாரே தவிர, முடிவு அவருடையதாக இருக்கும். என்ன முடிவு செய்ய வேண்டும் என்று என்னிடம் கேட்கிறாயே இது தவறு, இன்னொரு முறை கேட்காதே' என்று சொல்லி விட்டார்.

அருண்மொழிபட்டனை மந்திரியாய், சேனாதிபதியாய் அருகே வைத்துக் கொள்ளலாம். ஆனால் அவன் மீதுதான் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது. எனவே இந்த விஷயத்தில் அவனை முடிவு கேட்க முடியாது.

நம் பிராட்டியார் என்று அரண்மனையில் செல்லமாக அழைக்கப்படும் இராஜாதிராஜனுடைய மனைவி திரிலோகியம் உடையார் தன் கணவனை வரவேற்றாள். இராஜராஜனின் அனுக்கி பஞ்சமா தேவியைப் போலவோ, இராஜேந்திரருடைய வீரமாதேவியைப் போலவோ அவளுக்கு அரசியல் நாட்டம் அதிகம் இல்லை. கோவில்களை பராமரிப்பதிலேயே முழுக் கவனம் செலுத்தினாள், குறிப்பாக கங்கை கொண்ட சோழபுரம் சுத்தமாக இருக்க வேண்டும் என்றும் அந்த அரண்மனை வளாகம் மட்டும் பாதுகாப்பாகவும், நறுமணம் மிக்கதாகவும் இருக்க வேண்டும் என்றும் தேரில் ஏறி சுற்றி வந்தாள். அவளுக்கு அது விருப்பமாக இருந்தது. அதுமட்டுமே தன்னுடைய வேலை என்பதாய் அவள் நினைத்தாள்.

அன்று இரவு தூக்கம் வராமல் தன் புருஷன் இராஜாதிராஜன் அலைவதை கண்டு எழுந்து நின்றாள். என்ன என்று அவன் கேட்கும் வரை காத்திருந்தாள்.

''உம்முடைய நிலைமை எனக்கு புரிகிறது. உங்களுக்கு உதவி செய்ய வேண்டியது என் கடமை. ஆனால் இது எவ்வளவு தூரம் சரியென்று எனக்குத் தெரியவில்லை. என்னுடைய யோசனையாக ஒன்று கூறுகிறேன்.

இன்றைய நிலைமையை பார்க்கும்பொழுது அரையன் ராஜராஜன் அப்புறப்படுத்தப்பட்டால் ஒழிய அருண்மொழி அமைதியாக மாட்டான். யார் அப்புறப்படுத்தப்படுவார்கள் என்பதை நீங்கள் தீர்மானிக்க முடியாது. அது இராஜேந்திரருடைய செயல். இராஜேந்திரர் இங்கு திடமாக இருக்க, இளவரசரான நீங்கள் எந்த முடிவையும் வேகமாக எடுத்து விட முடியாது, உங்களுக்கு துணையாகவும் யாரும் வரமாட்டார்கள். ஆனால், உங்களுக்கு துணை தேவை, இராஜேந்திரரை கொண்டாடிய அல்லது இராஜராஜரை கொண்டாடிய எந்த அதிகாரியும் உங்களுக்கு சரிவர மாட்டார்கள். அதே நேரம் உங்களை விட சற்று வயதான உங்கள் மீது பிரியமான வேறு எவருக்கும் கட்டுப்படாத ஒரு வழிகாட்டி உங்களுக்குத் தேவை. நான் வளர்ந்த ஊர். என் மூதாதையர் வாழ்த்த ஊர் திருச்சீராப்பள்ளி.

காவிரிக் கரையில் மிகப்பெரிய மாளிகைகள் எங்களுக்கு இருக்கிறது. காவிரியைத் தாண்டிப் போனால் ஸ்ரீரங்கம். திருவரங்கத்திற்கு உள்ளே போனால் அந்த கோவில் நிர்வாகியாக திருவரங்கத்தை ஆளுபவராக ஒரு வைணவப் பெரியவர் இருக்கிறார். உங்களை விட பத்து வயது அதிகம் இருக்கும். கோவில் நிதி திரட்டும் பொருட்டு எங்கள் வீட்டிற்கு அவர் பலமுறை வந்திருக்கிறார். மந்திர, தந்திரங்களை செய்வதோடு மட்டுமல்லாமல் மிக அழகாக வைணவத் தத்துவங்களைப் பற்றி பேசுவார்.

இராஜேந்திர சோழர் கருமார்களுக்கு பூணூல் போட்டுக் கொள்கின்ற உரிமை அளித்தது பற்றி ஸ்ரீரங்கத்தில் பெரும் எதிர்ப்பு இருந்தது. ஒரே அதட்டலில் அடக்கினார்

'அவர்கள் அந்தணராக மாற முயற்சிக்கிறார்கள். உண்மை தான். நீங்கள் போர் மறவராக மாறுங்களேன். நாளையிலிருந்து வாள் பயிற்சி துவங்குங்களேன்' என்றார். கூட்டம் கலைந்து விட்டது. இரண்டு பேர் வந்து நாங்கள் வாள் பயிற்சி செய்கிறோம் என்று வந்தார்கள். கீழே இறங்கி பளீர் என்று அறைந்தார். அவர்கள் தாங்கினார்கள். 'அப்படியானால் நீங்கள் அந்தணர் இல்லை, கலைந்து போன அத்தனை பேரும் அந்தணர்கள். புரிந்துகொண்டு கலைந்து போனார்கள். ஐந்து நாட்கள் உண்ணா நோன்பு முடிக்காமல் நீங்கள் கோவிலுக்கு வரக்கூடாது

என்று சொல்லிவிட்டார். மறவர் அந்தணர் ஆகலாம். அந்தணர் மறவர் ஆகலாம். வைராக்யம் முக்யம்.

இராஜேந்திர சோழர் செய்த காரியத்திற்கு உண்மையான அர்த்தம் என்ன. பிறப்பினால் உயர்ந்தவர் என்று ஒரு பொழுதும் கருதிக் கொள்ளாதே. அந்த உயர்வு காண்பித்து சுக, சௌகரியம் தேடாதே. உன் பண்பினால் உயர்ந்தபடி இரு என்று சொல்கிறார். அதை புரிந்து கொள்ளுங்கள். உங்கள் பண்பினால் நீங்கள் உயர்ந்தவராக இல்லை என்பதுதான் இராஜேந்திரருடைய எண்ணம். அதை மாற்ற முயற்சி செய்யுங்கள். அது புரிந்து மறவராய் மாறுங்கள்.

நீங்கள் வாசுதேவ நாராயணன் பற்றி கேள்விப்பட்டிருக்கிறீர்களா.'' மிருதுவான குரலில் பேசினாள்.

இராஜாதிராஜன் திகைத்தான்.

''வரச் சொல், நான் அழைப்பதை விட நீ கூப்பிடு. அது உனக்கும் மரியாதையாக இருக்கும். நீ இப்படி பேசுவதே எனக்கு சந்தோஷமாக இருக்கிறது. நான் மனதிற்குள் வேறு ஒருவரை நினைத்திருந்தேன். அவரை வரச்சொல்லி ஓலை அனுப்பியிருக்கிறேன். அவரைப் பற்றி உனக்கும் தெரியும். கிட்டத்தட்ட என் வயது இளைஞன். அல்லது என்னைவிட ஒரு வயது சிறியவன். மாவலி வானவராயன்.''

''ஆமாம். நன்கு தெரியும். வந்திய தேவரின் உறவினர் அல்லவா. வந்திய தேவருக்கு சகோதரி மகன் அல்லவா. மருமகன் அல்லவா. நடு நாட்டில் செல்வாக்கு மிக்கவராக இருக்கிறாரே.''

''ஆமாம். சோழ தேசத்திலிருந்து ஒருவர் நெருக்கமாக இருந்தால் நடு நாட்டிலிருந்து ஒருவர் நெருக்கமாக இருக்க வேண்டும். அதுமட்டுமல்ல. தொண்டை நாட்டிலிருந்தும், கீழை சாளுக்கியத்திலிருந்தும் தெளிவான ஒருவர் வேண்டும், தொண்டை நாட்டில் பிள்ளை, பிள்ளையார் என்று அழைக்கப் படுகின்ற வல்லபதேவன் இருக்கிறார். தன்னை சோழ வல்லப தேவன் என்றே அழைத்துக் கொள்கிறார். வேளாளர். ஆனால் மிகச் சிறந்த போர்வீரர்.''

''அப்பிமையன். மகாராஜப்பாடி ஆயிரம் தண்டநாயகன். பெருத்தசேனை அவரிடம் இருக்கிறது. சோழ தேசத்திற்கு மிக உண்மையானவர். வல்லபனுக்கு நெருங்கிய நண்பர்.

இராஜேந்திர சோழரிடம் யார் நெருக்கம் என்று இவர்கள் பிளவுபட்டு நிற்கிறார்கள். என்னைப் பற்றி மறந்துவிடுகி றார்கள். என்னை நினைவில் வைத்துக் கொள்கின்ற, என் பொருட்டு சேவை செய்கின்ற வீரர்கள் எனக்கு வேண்டும். ஸ்ரீ வாசுதேவ நாராயணனை வரவழைக்க ஏற்பாடு செய். என் மீது அக்கறை கொண்டதற்கு நான் என்ன பதில் கைம்மாறு செய்யப் போகிறேன். உன்னை முத்தமிடுவது தவிர.'' இராஜாதி ராஜன் தன் மனைவியான த்ரைலோக்கியை இழுத்து அணைத்துக் கொண்டான்.

அவளை அரண்மனை முழுவதும், கங்கை கொண்ட சோழ புரம் முழுவதும் நம்பிராட்டியார் என்று செல்லமாக அழைத்தது.

ஆனால் அன்று அரச சபையில் நேருக்கு நேர் மோதிக் கொண்ட அந்த இரண்டு அதிகாரிகள் விஷயம் பெரிதாகத் தான் பரவியது. விரைவாக பரவியது. சபையிலிருந்து வாசலுக்கு வந்தது. வாசலிலிருந்து தெருவிற்கு வந்தது. தெருவிலிருந்து ஊர் ஊராய் பரவியது. அரையன் ராஜராஜனை தாக்கிவிட லாமா என்று வலங்கை வீரர்கள் உட்கார்ந்து திட்டமிட்டார்கள். ரகசியமாக அருண்மொழிப்பட்டனுக்கு அந்த செய்தி வந்து அவன் கோபமாகி கடுமையாக எச்சரித்தான்.

'எங்களுக்குள் பகை இல்லை. அபிப்ராய பேதம், சடையன் என்ற வீரன் செய்தது சரியா, தவறா என்றுதான் அபிப்ராய பேதம். சடையன் செய்தது தவறாக இருந்தால் நான் அதை அரையன் ராஜராஜனிடம் ஒப்படைத்திருப்பேன். சடையன் செய்தது சரி. அவர் மீது பிழை இல்லை. நடு நாட்டு தளபதி செய்தது பிசகு.

சோழப்படை வீரனை சோழ தேசத்தில் ஒருவன் தாக்க முடியும் என்றால் அவனுக்கு மரணதண்டனை விதிக்கப்பட வேண்டும். எனவே, நீங்கள் அமைதியாக இருங்கள். ஏனெனில் வந்த நடுநாட்டு வீரனுக்கு கிட்டத்தட்ட தண்டனை வழங்கி யாகிவிட்டது. அவனுடைய வலது கை விரலும், இடது கை புஜமும் உடைந்து போய் விட்டது. இனி என்ன சீர் செய்தாலும்

அதை வைத்து அவர் சண்டையிட முடியாது. அவர் தளபதி பதவியை இழக்கிறார். அவரை நடுநாட்டிற்கு திருப்பி அனுப்பு கிறோம். எனவே, மேற்கொண்டு இதை பெரிதுபடுத்தாதீர்கள்' என்று சொன்னான்.

அரையன் ராஜராஜன் ஆட்கள் குதித்தார்கள். அவர் எங்களவர் இல்லை. நடுநாடு தான். ஆனாலும் வலங்கை வீரன் அடித்தால் தாங்கிக் கொண்டிருக்க வேண்டும் என்பது நியாய மாகப் படவில்லை. இதே இடங்கை வீரனாக இருந்தால் அருண் மொழிபட்டர் என்ன தண்டனை தருவார்.' உள்ளூர புகைச்சல் இருந்தது.

நடுநாட்டு வீரர்களை சோழ தேசம் விட்டு கிளம்பி அவர்கள் தேசத்திற்கு போகும்படி கட்டளை வந்தது. இதுவரை விருந்தினராக இருந்த வீரர்கள் வரிசையாகி கொஞ்சம் வருத் தத்தோடே கங்கை கொண்ட சோழீஸ்வரம் சுற்றி பார்த்துவிட்டு மெல்ல வெளியேறினார்கள். தாங்கள் அவமானப்படுத்தப்பட் டதாக உணர்ந்தார்கள்.

அடுத்தபடி இராஜேந்திரரிடமிருந்து ஓலை வந்தது. இராஜ நரேந்திரன் தன்னுடைய மனைவி அம்மங்காதேவியுடன் சோழ தேசத்தை விட்டு அவருடைய ஊரான கீழை சாளுக் கியத்திற்குப் போய் மிகச் சரியான நிர்வாகம் செய்ய வேண்டும் என்று உத்தரவிடப்பட்டிருந்தது.

அம்மங்கை மகிழ்ச்சியில் துள்ளி குதித்தாள். தன் தமைய னான இராஜாதிராஜனோடு தனியே உட்கார்ந்து பேசினாள்.

''எனக்குத் துணை என் புருஷன் மட்டும் இருந்தால் போதாது. கீழை சாளுக்கியத்தை காப்பாற்ற ஒரு சோழ தளபதி வேண்டும்'' என்று விண்ணப்பித்தாள்.

''யார் வேண்டும்.''

''இருக்கின்ற நிலைமையைப் பார்த்தால் நான் அரையன் ராஜராஜனை அழைத்துக் கொண்டு போகலாம் என்று நினைக் கிறேன். வேங்கியில் குடியில்லாது சற்று தள்ளி மேலை சாளுக் கியத்தின் எல்லையில் அவர் பாடி அமைத்தால் நன்றாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

கிருஷ்ணை ஆற்றின் கரையில் பல செழிப்பான கிராமங் கள் இருக்கின்றன. நல்ல நகரமும் பல இருக்கின்றன. அவை களில் ஏதேனும் ஒன்றை அவர் தேர்ந்தெடுத்துக் கொள்ளட்டும். ஒரு நாள் ஓட்டத்தில் வேங்கியை அடையும்படியான தூரத் தில் இருக்கட்டும். இது என் எண்ணம். நீங்கள் நம் தகப்ப னாரை கேட்டுவிட்டு இந்த முடிவு செய்யுங்கள். நான் நகரு கிறேன்'' என்று பணிந்தாள்.

நடுநாட்டு கூட்டத்தை விட கீழை சாளுக்கிய கூட்டம் பெரிதாக இருந்தது. வரும் வழியில் தங்கிய வீரர்களைத் தவிர, சோழ தேசத்து கொண்டாட்டத்தில் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும், ஜெயங்கொண்ட சோழபுரத்தை சுற்றி பார்க்க வேண்டும், இராஜேந்திரர் எழுப்பிய கற்றளியை, தஞ்சையை கண்டு களித்துவிட்டு வரவேண்டும் என்று அவர்கள் வந்திருந் தார்கள்.

வரும்பொழுதே அவரவர் வீடுகளுக்கு கொண்டு வந்த பொருள்களை கொடுத்துவிட்டு ஒரு திரளாக யாத்ரீகர்கள் போல் வந்திருந்தார்கள். மிக கவனமாகவும், பண்பாகவும் கவனிக்கப் பட்டார்கள். ஸ்ரீமன் நாராயணரை குறித்து தம்பூரா வோடு பாடல்கள் பரடினார்கள். சோழ தேசத்தில் அந்தப் பாடல்கள் பரவலாயின.

இராஜராஜ நரேந்திரர் கிளம்புகிறார் என்றதும் அவர்களுக்கு ஊர் ஞாபகம் வந்துவிட்டது. ஒருவர் பாக்கியில்லாமல் கிளம்பி னார்கள். தஞ்சாவூரில் தட்டு முட்டு சாமான்களும், ஏர் கலப் பைகளும், வாசனை பொருட்களும், அரிசி கூடைகளும் ஏற்றிக் கொண்டார்கள். சேர தேசத்திலிருந்து வந்த கிராம்பு, ஏலம் இவை கொள்ளை விலைக்கு போயின. அவர்கள் அரசர் தொடருவார் என்று முன்னே நடந்தார்கள்.

ஒரு நல்ல நாளில் அம்மங்காதேவி தன் புருஷன் இராஜ ராஜ நரேந்திரனோடு குடி பெயர்ந்தாள். கங்கை கொண்ட சோழபுரம் சிறிது தூரம் அவளோடு போய் வழியனுப்பிவிட்டு வந்தது. பெற்ற மகளை திருமணம் செய்து புருஷனோடு அனுப்பிவிட்டு அழுதது. பரவை நாச்சியார் துடித்துப் போனாள்.

''யாருமேயில்லையே, யாருமேயில்லையே எனக்கு. வீரமா தேவி அப்படி ஓடிவிட்டாள். இவள் இப்படி ஓடிவிட்டாள். இங்கு

உட்கார்ந்து நான் என்ன செய்வது'' என்று மூச்சுத் திணறினாள். ஆனால் அங்குதான் இருக்க வேண்டும் என்பதும் அவளுக்குத் தெரிந்தது. இராஜாதிராஜனின் மனைவி திரைலோக்யமா தேவி, பரவையாரின் வீட்டுப் படியேறி, 'நான் இருக்கிறேன் பெண்ணே' என்று கொண்டாட கொஞ்சம் நிம்மதியானாள்.

ஆனால் ஒரு குதூகலமான சூழ்நிலை கங்கை கொண்ட சோழபுரத்தில் வரவில்லை. அவரவர் அவரவர் கடமைகளை செய்து கொண்டிருந்தார்கள்.

''நான் பராச்சாரியன்; வாசுதேவ நாராயணன். இராஜாதி ராஜனுக்கு என் வணக்கம். நீங்கள் நீடுழி வாழ வேண்டும். உங்களுடைய எல்லா செயல்களும் வெற்றி பெற வேண்டும். வாழ்வின் எல்லா ஆனந்தத்தையும் நீங்கள் அனுபவிக்க வேண் டும்.'' திருவரங்கப் பிராசாதமாக அவர் நெற்றியில் களபம் மூன்று கீற்றாக இருந்தது. நாற்பத்தைந்து அகவை நிறைந்த ஆஜானுபாகுவான மனிதராய் அவர் இருந்தார். தடித்த தங்க நகைகள், வைரக்கம்மல், கங்கணம், சரிகை உத்ரீயம், பூணூல் துளசி மாலை பட்டு சால்வை என்று சிங்காரமானவராய் அழகராய் இருந்தார்.

★ ★ ★

அத்யாயம் 92

இராஜாதிராஜன் பிரசாதக் களபத்தை கையில் வாங்கி நெற்றியில் திருநீறு போல பட்டையாக இட்டுக்கொண்டான். வைணவமும், சிவமும் சரிசமமாக அவன் நெற்றியில் இருந்தன. அதை விட அவன் செய்த ஒரு செய்கை அற்புதமாக இருந்தது.

‘‘உன் தம்பி இளவல் இராஜேந்திரன் இடுப்பிலிருந்து வாளை கழற்றி என் கையில் கொடுத்து கை கூப்பி வணங்கினான். தன்னுடைய வாளை தகப்பனிடமும், தாயிடமும் தவிர குருவிடம் தான் கொடுக்கலாம். அரசரிடம் கொடுப்பது கூட நான்காவது விஷயம்தான். நான் வாளை நெஞ்சில் அணைத்துக் கொண்டு வாராஹி மந்திரம் சொல்லிக் கொடுதேன். பரம சந்தோஷம், அவனுக்கும் வாராஹி மந்திரம் தெரிந்திருக்கிறது. யார் இந்த மந்திரத்திற்கு வழி நடத்தினார் என்று கேட்டேன், கருவூர்தேவர் என்று பதில் சொன்னான். கும்பாபிஷேகத்திற்கு வந்திருந்தாராமே. அவர் அறியாமல் அவரை பின் தொடர்ந்த போது தொண்டை நாட்டு எல்லையில் சந்தித்திருக்கிறான். அவன் நிறுத்தி விசாரித்திருக்கிறான். ஏன் சோழ தேசத்தை புறக்கணித்துவிட்டுப் போகிறீர்கள் என்று கேட்டிருக்கிறான். என்னால் சோழ மண்டலத்தை புறக்கணிக்கவே முடியாது. உனக்கு என்ன வேண்டும் கேள் என்று சொல்லியிருக்கிறார். சோழ மண்டலத்தை காப்பவனாக நான் இருக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறான். அதற்குண்டான பலம் வேண்டும் என்று வேண்டியிருக்கிறான். அப்பொழுது வாராஹி மந்திரத்தை உபதேசித்து இருக்கிறார். ‘‘உள்ளுக்குள் எப்பொழுதும் இருக்கட்டும். எந்த துன்பத்திற்கும் கலங்க வேண்டாம். வாராஹி கூடவே இருப்பாள். கடும் துன்பத்திலிருந்து மீட்டு கொண்டு வந்துவிடுவாள். துன்பம் நேர்வது இயல்பு. கைதூக்கி விடுவது கடவுளின் வேலை, அவளை கைத்தூக்கி விடச்சொல்லி நாம்

மனமுருகி கேட்க வேண்டும். வாராஹி உடனடியாக உதவிக்கு வரும் தேவதை. விடாது சொல்'' என்று ஆசிர்வதித்து திருப்பி அனுப்பியிருக்கிறார்.

என்னுடைய அபிப்ராயத்தில் இந்த கணம் உன்னைவிட வலிவுள்ளவனாகவும், அதேசமயத்தில் உன்மீது மிகுந்த நேசமுள்ளவனாகவும் அவன் இருக்கிறான். அவனே உனக்கு சேனாதிபதி, நான் உனக்கு குரு மட்டுமே. கிருஷ்ணன் ராமன் பிரம்மராயரைப் போல என்னால் வாள் எடுக்க முடியாது. அருண்மொழிப்பட்டனைப் போல படையெடுத்து இன்னொரு தேசத்திற்குள் நுழைய முடியாது. ஆனால் எப்பொழுது என்ன செய்ய வேண்டும் என்று உட்கார்ந்து யோசித்தால் தெளிவாகி விடும்.

உன் மனைவி என்னுடைய ஊரைச் சேர்ந்தவள். அவளுக்கு அவள் ஊர் அளித்த சீதனமாக நான் இங்கு வந்திருக்கிறேன் என்று நினைத்துக் கொள். இன்னும் ஒரு வார காலத்திற்குள் உன்னுடைய சபை என்று ஒன்று ஏற்படுத்து. அதை அறிவித்துவிடு. அது நல்லது. இளவரசனாக இருந்தாலும் அரசாட்சி உன் கையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்பொழுது உன் உத்தரவை நிறைவேற்ற இங்கு உன்னுடைய சேனாதிபதிகள் தேவை. யார் என்று விரைவாக முடிவு செய்.''

வாசுதேவ நாராயணன் சுருக்கமாக, ஆனால் தெளிவாக எதை பேச வேண்டுமோ அது மட்டும் பேசுபவராக இருந்தார். இராஜாதிராஜனுக்கு அது மிகவும் பிடித்திருந்தது. கிருஷ்ணன் ராமனைப் போல சூட்சுமமாக பேசவில்லை. அருண்மொழி பட்டன் போல படபடப்பாக இல்லை. நாலு வாக்கியங்கள். உலகமே புரிந்துவிடும் அளவுக்கு அமைதியாக பேசினார்.

த்ரைலோக்யமாதேவியை கட்டிக் கொண்டு மறுபடியும் நன்றி தெரிவித்தான். நல்ல மனிதரை அறிமுகப்படுத்தி விட்டாய் என்று சிலாகித்தான்.

அடுத்த சில வாரங்களில் வேகமாக காரியங்கள் நடந்தன. அருண்மொழிபட்டனுக்கும், அரையனுக்கும் வெவ்வேறு சபை நிறுவப்படுவது தெள்ளத் தெளிவாகத் தெரிந்தது. இடத்தை காலி செய்யுங்கள் என்பது புரிந்தது.

அருண்மொழிபட்டன் என்ன செய்வதென்று யோசித்தான். இராஜாதிராஜனிடம் போய் தான் இராஜேந்திரரோடு போவதாக விருப்பம் தெரிவித்தான். யோசித்து சொல்வதாக இராஜாதிராஜன் சொன்னதும் பின்வாங்கினான்.

தன்னை கீழை சாளுக்கியத்திற்கு அனுப்பி விடும்படி அரையன் ராஜராஜன் விருப்பம் தெரிவித்தார். உங்களை இழப்பதற்கு மனம் இல்லையே என்று வருந்தினான். எனக்கு துணை யார் என்று கேட்டான். அரையருக்கு லேசாய் கோபம் வந்தது. சிரிப்பும் வந்தது.

'உன்னுடைய துணைகளை தெளிவாக தேர்ந்தெடுத்துக் கொண்டு விட்டாய், என்னுடைய துணை வேண்டாம் என்றும் வந்துவிட்டது. நீ சொல்வது சரி, உன் தந்தையிடம் ஊழியம் செய்த நான் உனக்கு செய்ய வரும்போது கொஞ்சம் கருத்து வேறுபாடு இருக்கலாம். என் குரல் கொஞ்சம் ஓங்கி ஒலிக்கலாம். அது உனக்கு நல்லதல்ல. நீ தேர்ந்தெடுக்கின்ற பராச்சாரியார் வாசுதேவ நாராயணர் மிக கெட்டிக்காரர். கடுமையான வைணவ சம்பிரதாயம் உடையவர். கங்கை கொண்ட சோழீஸ்வரத்திற்குள் நுழைவாரோ மாட்டாரோ தெரியவில்லை. சோழீஸ்வரத்தை அவர்கள் புறக்கணிக்கவும் கூடும்.

அதனாலென்ன. சைவராக இருக்க வேண்டும் என்று சட்டமா. அரசியல் வேலைகளுக்கு யாராக இருந்தாலும் ஏற்றுக் கொள்ளலாம்.'' பொடி வைத்துப் பேசினார்.

அன்று மாலையே இளவல் இராஜேந்திரனுடனும், இராஜாதிராஜனுடனும், வாசுதேவ நாராயணன் கங்கை கொண்ட சோழீஸ்வரம் நுழைந்தார். உள்ளே போய் கைகூப்பி வணங்கினார். கருவறையை சுற்றி வந்தார்.

''என் நாராயணர் அவரே. பாம்புப் படுக்கையில் இருக்கும் பொழுது பூஜை செய்கிற விஷயம் சிவம். அவரே பூஜிக்கிற போது நான் எம்மாத்திரம். எனக்கு எந்த பேதமும் இல்லை.'' அன்று அவருடைய அபிஷேகம் நடந்தது. மிகப் பெரிய வேட்டி நன்கொடையாக வழங்கினார். சைவர்களோடு அமர்ந்து வேத பாராயணம் செய்தார்.

'அக்னியே புரோஹிதம்...''

அவர் குரல் தனியாக ஒலித்தது.

தனக்காக எந்த இடத்திற்கும் இறங்கி வரக் கூடிய தன்மையை கொண்டிருக்கிறார் என்பது சந்தோஷமாக இருந்தது. இராஜாதிராஜன் மெல்ல முணுமுணுத்தபடி நன்றி கூறினான்.

''அரையன் ராஜராஜனை வேங்கிக்கு அனுப்பி விடு.'' அவர் பதில் சொன்னார். அரையன் ராஜராஜன் வேங்கிக்கு போகலாம் என்கிற உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அரையன் ராஜ ராஜனுக்கு துக்கமாகவும் இருந்தது. சந்தோஷமாகவும் இருந்தது.

அவ்வளவுதான். சோழதேசம் உபயோகப்படுத்திக் கொண்டது. வெற்றி கிடைத்ததும் நகர்த்தி விட்டது, மனம் நொந்தார், ஆனால் இன்னும் எத்தனை நாட்கள் படையின் முன்வரிசையில் நிற்பது. இன்னும் தொடர்ந்து எப்படி பயணப்படுவது. மறுபடியும் மேலை சாளுக்கிய மலைகளில் ஏற முடியுமா. வடக்கில் நுழைய முடியுமா. வலு உண்டா. முயற்சித்தால் செய்யலாம். போதும் செய்தது என்று ஒரு நினைப்பு வந்தது.

கங்க தேசத்திலிருந்து பெரும் கங்கப்படையோடு சோழ மாராயன், சோழன் குமரன், பராந்தகமாராயன் என்று பட்டங்கள் பெற்ற நீலகங்கரையர் கங்கப் படைகளோடு உள்ளே நுழைந்தார். சாளுக்கிய சாயல் அவர்களிடம் இருந்தது. ஆனால் சாளுக்கியர்கள் மீது கடுங்கோபம் கொண்டவர்களாக இருந்தார்கள், கங்க தேசத்தை அடிக்கடி பாழ் செய்தவர்கள் மேலைச்சாளுக்கியர்கள் என்ற கோபத்தில் இருந்தார்கள்.

திருமுனைப்பாடி நாட்டிலிருந்து சோழ வல்லபதேவன் கட்டுக் கோப்பான ஒரு படையோடு வந்து சேர்ந்தார். மேலை சாளுக்கியத்தின் தெற்கு எல்லையிலிருந்து அப்பிமையன் வர பதினைந்து நாளாயிற்று. இடையறாது படைகள் வெளியேறிக் கொண்டிருந்தன. உள்ளே வந்தன. ஆட்சி மாற்றத்தில் அதிகாரிகள் மாறுவது இயல்பு என்பதை சோழமக்கள் நன்கு அறிந்திருந்தார்கள்.

கோட்டைக் காவலன் தலையில் அடித்துக் கொண்டான்.

"'இப்படி படைகள் மாறுகின்றனவே. யார் யார் எங்கிருக் கிறார்கள் என்றே தெரியவில்லை. நகரத்தின் எல்லா பகுதி களிலும் படைவீரர்கள் பரவி இருக்கிறார்கள். யார் எந்தப் பிரி வினர் என்பதும் சட்டென்று பிடிபடவில்லை. வெகுநிச்சய மாய் பாண்டிய வீரர்கள் ஊடுருவி இருப்பார்கள். எப்படி கண்டு பிடிப்பது என்று தெரியவில்லை. ஒவ்வொருவருக்கும் அடை யாள ஓலை தரலாமா. சல்லித்து எடுக்கலாமா. ஒரு வருடத் திற்கு எந்த மாற்றமும் இருக்கக்கூடாது என்று அரையன் ராஜராஜனிடம் கூறலாமா.'' 'முடியாது' என்று சொல்லிவிட்டார். அவன் அருண்மொழிபட்டனிடம் போனான்.

''நீ பேசுவது சரியாக இருக்கிறதே. அப்படி செய்தால் சரியாக இருக்குமே. ஒரு வருடம் ஏன் மாற வேண்டும். மாறக் கூடாது என்று கட்டளை இட்டால் என்ன. உபதளபதிகளை யும், தளபதிகளையும் கூப்பிட்டு நான் பேசுகிறேன். மூன்று நாட்களுக்குள் உனக்கு தகவல் சொல்கிறேன்.'' அவன் நல்ல விதமாகப் பேச, கோட்டை காவலன் குதுகலமானான்.

மறுநாளே அரையன் ராஜராஜன் நகர்வதாக செய்தி வந்தது. 'நிம்மதியாயிற்று, அருண்மொழிபட்டனை அணுகுவது எளிது. பிரச்சனையும் உடனடியாகத் தீரும்' என்று கோட்டை வாசல் பக்கம் எல்லோரும் பேசிக் கொண்டார்கள்.

ஆனால் அதற்கு அடுத்த நாள் அருண்மொழிபட்டர் கோட்டை வளாகத்தில் இருக்க மாட்டார். அவர் இராஜேந்திர சோழரை நோக்கிப் போகிறார் என்ற செய்தி வந்தது. 'பிறகு யார் இங்கு பேசுவார்கள். யாரிடம் அனுமதி கேட்பது.' 'இராஜாதி ராஜன்' என்று சொன்னபோது, எல்லோரும் சற்று துணுக்குற் றார்கள்.

''இளைஞனாயிற்றே. தெரியுமா. எப்படி அவருக்கு விஷ யத்தை புரிய வைப்பது. கேட்பாரா, புரிந்து கொள்வாரா,'' என்று பலகேள்விகள் இருந்தது. ஆனால் இதை எப்படி தெளிவு படுத்திக் கொள்வது என்ற எண்ணம் வந்தது. இந்த விஷயங் கள் பராச்சாரியர் வாசுதேவ நாராயணருக்கு தகவலாய் வந்து சேர்ந்தது.

தங்களை கங்கை கொண்ட சோழபுரத்திற்கு அறிமுகப் படுத்திக் கொள்ள வேண்டுமென்று வாசுதேவ நாராயணர்

தீர்மானித்தார், தேரில் ஏறி, குதிரைகள் ஒருவன் தேரை ஓட்ட, அவன் அருகில் புலிக்கொடி பறக்கின்ற கம்பை இறுகப் பிடித்த படி இருந்தார். அப்பிமையனும், வல்லபதேவனும், நீல கங்கை யரையரும், மாவலி வானவராயனும் குதிரையில் பின்தொடர்ந் தார்கள்.

இராஜாதிராஜன் தன் மனைவி த்ரைலோக்ய மாதேவி யோடு இன்னும் பெரிய தேரில் பவனி வந்தான். கும்பலாக கூடியிருக்கும் மக்களுக்கு நடுவே வந்த சேனாதிபதிகள் கீழ் இறங்கினார்கள். யார் கோட்டைத் தலைவர், என்னவென்று விசாரித்தார்கள். எப்படி இருக்கிறது வாழ்க்கை என்று பேசி னார்கள். முதலிய தயங்கிய சோழ தேசத்து மக்கள் பிறகு எளிதாக நெருங்கி வந்து பேச ஆரம்பித்தார்கள்.

''நிறைய கற்கள் அங்கங்கே கிடக்கின்றன. கோட்டை கட்டிய மிச்சம் என்று பாறைகள் அங்கங்கே சிதறிக் கிடக் கின்றன. சிலது முழங்கை உயரப்பாறைகள், சிலவை உருளை யான பாறைகள். எந்த வடிவும் இல்லாது ஒரு கன்றுக்குட்டி யின் கனம் இருக்கின்ற பாறைகள் என்று பலதும் இருக்கின் றன. அவைகள் அவசியமா இல்லை அப்புறப்படுத்த வேண் டுமா என்று தெரியவில்லை. இரவு நேரம் நடக்கும்பொழுது தடுக்கி விழும்படியாக இருக்கின்றன. தடுக்கி விழுந்து விடு வோமோ என்ற பயத்திலேயே தடவி தடவி நடக்க வேண்டி யதாக இருக்கிறது. இதற்கு ஏதேனும் செய்ய முடியுமா'' என்று மறவர்கள் கேட்டார்கள்.

''என்ன முட்டாள்தனமான கேள்வி. இதைக் கேட்டுக் கொண்டிருப்பானேன். யார் இந்த இடத்தின் தலைவர். இந்த இடத்தின் பொறுப்பு யார். அழைத்து வா, ஏன் இதை அப்புறப் படுத்தவில்லை'' என்று கேட்க,

''இரவியின் உத்தரவு இல்லாது இந்தப் பாறையை எப்படி அப்புறப்படுத்துவது என்று சந்தேகித்தோம்''

''இரவி வேண்டாம் என்றுதானே இப்பாறைகளைப் போட் டிருக்கிறான். பிறகு ஏன் அப்புறப்படுத்தக்கூடாது. அப்படி ஒரு கேள்வி இருந்தால் அதை நேரே பார்த்து கேட்க வேண்டியது தானே.''

''அவரை நேரே பார்ப்பதெல்லாம் கடினம். சற்று மனம் தளர்ந்த நிலையில் தனிமையாக இருக்கிறார்.''

''ஜனங்களுக்கு உதவி செய்யாத எந்த அதிகாரியும் ஏகாந் தமாய் உட்கார்ந்திருக்க முடியாது.'' வாசுதேவ நாராயணர் உரத்த குரலில் கேட்டார்.

''நான் அழைத்தேன் என்று உடனடியாக இரவியை அழைத்துவா.'' என்று கொஞ்சம் கூச்சலாகப் பேசினார். அவ ருடைய அதிகாரக்குரல் மக்களுக்கு பயத்தையும், சந்தோஷத் தையும் கொடுத்தது.

கங்கை கொண்ட சோழபுரத்திற்கு மட்டுமல்ல சுற்றி உள்ள கிராமங்களுக்கு அந்த ஐவர் குழு பயணப்பட்டது. இராஜாதிராஜன் தானே ஆட்சியாளர் என்பதை பல்வேறு விதத்தில் சோழ மண்டலத்தில் நிரூபிக்கத் தொடங்கினான்.

''பராச்சாரியாரே, இப்போது ஒரு யுத்தம் செய்ய வேண் டுமோ. அப்பொழுது மக்கள் இன்னும் தீரமிக்க அரசராக ஏற்றுக் கொள்வார்களோ.''

''உண்மைதான். ஆனால் இப்பொழுது தேவையில்லை.''

''தண்டனை கடுமையாக்கினால் பயப்படுவார்களோ.''

''இல்லை. அது தவறு.''

''மிக எளிதாகப் பழகினால் சாதாரணமாகி விடாதா.''

''ஆகாது.''

''என்ன செய்தால் எனக்கு மிகப்பெரிய மரியாதை கிடைக் கும். ஜனங்களிடம் ஒரு மெல்லிய அசிரத்தை காண்கிறேன். இராஜேந்திர சோழருக்கு கிடைத்த மாபெரும் வரவேற்பு எனக்கு இல்லையென்று தோன்றுகிறது. உடனடியாக உடனடியாக மனம் அந்த விஷயத்தை ஒப்பிட்டு பார்க்கிறது. இந்த இடத் தில் இராஜேந்திரர் இருந்தால் ஒரு எண்ணம் வருகிறது.''

''அற்புதம். நீ தெளிவாக இருக்கிறாய், கூர்மையாக இருக் கிறாய், உன்னை கண்டு பதற வேண்டியது மக்களல்ல. அதிகாரி கள். அதிகாரிகள் பதறினால் மக்கள் பதறுவார்கள். மக்களை நேரிடையாகப் பதறச் செய்தால் உன் மீது வெறுப்பு வந்துவிடும். ஒரு நல்ல அமைச்சர், அல்லது அரசர் அல்லது இளவரசர் திரும்பி

பார்த்தவுடன் அதிகாரிகள் பதற வேண்டும். அதற்கு என்ன செய்ய வேண்டும்.

அதிகாரிகளின் குற்றங்களை மக்கள் முன்னே போட்டு கிழித்தெறிய வேண்டும்.''

''அடேயப்பா. நன்றாக இருக்கிறதே இந்த யோசனை. ஒரு உதாரணம் சொல்லுங்கள்.''

''உதாரணத்திற்கு ஒரு தெருவில் எங்கே குப்பை மேடு இருக்கிறதோ, எங்கு, அந்தத்தெரு முழுவதும் ஜனங்கள் குப்பை கொட்டுகிறார்களோ அங்கு போங்கள். தேரை அங்கு நிறுத்தி இறங்கிக் கொள்ளுங்கள்.''

''குப்பை மேட்டிலா.''

''ஆமாம். குப்பை மேட்டில். மிகச் சுத்தமாக இருக்கிறது இந்த இடம். யார் இதற்கு அதிகாரி என்று கேளுங்கள். அவர் உடனடியாக சுத்தம் செய்துவிடுவதாகச் சொல்வார். நீங்கள் ஒன்றும் தெரியாதபடி எதை என்று கேளுங்கள். நீங்கள் ஜனங் களிடம் திரும்பி எதை சுத்தம் செய்யப் போகிறார் இவர் என்று கேளுங்கள். ஜனங்கள் நீங்கள் நின்று கொண்டிருப்பது ஒரு குப்பை மேடு என்பார்கள். அப்படியா, இதுவா குப்பைமேடு. குப்பைமேடு கூட அழகாக இருக்கிறதே. நல்ல அதிகாரியாக இருக்கிறாரே. என்று ஆரம்பியுங்கள். அதிகாரி இளிப்பார். தலை சொறிவார். திரும்பி தேரில் ஏறுங்கள்.''

''அவ்வளவு தானா.''

''இல்லை. ஒரு தெருவில் இவ்வளவு பெரிய குப்பை மேடு இருக்கிறது. இதை அதிகாரியான நீங்கள் கண்டுகொள்ள வில்லை என்றால் நீங்கள் சோழ தேசத்தை மதிக்கவில்லை என்று அர்த்தம். சோழ அரண்மனையை மதிக்கவில்லை என்று அர்த்தம், சக்கரவர்த்திகளையும் நீங்கள் குப்பை மேடாக பார்க் கிறீர்கள் என்று அர்த்தம். எனவே, இந்த குப்பை மேட்டை, இந்தப் பகுதியில் உள்ள மக்களே என் உத்தரவுப்படி சுத்தம் செய்வார்கள். நீங்கள் மூன்று நாள் வெறும் தண்ணீர் மட்டுமே குடித்து திண்ணையில் உட்கார்ந்து உபவாசம் செய்யுங்கள். நீங்கள் ஏதேனும் சாப்பிட்டது தெரிந்தால் பிரம்பால் அடிக்கச்

சொல்லி கட்டளையிடுவேன் என்று உரத்த குரலில் அறிவிப்பு செய்யுங்கள்.

அந்த தெரு அந்த குப்பை மேட்டை நீங்கள் திரும்பு வதற்குள் சுத்தம் செய்துவிடும். இப்படிப் குப்பையை போடுவது தெரு மக்களின் குற்றம். குப்பையை நீக்காது இருப்பது அந்த அதிகாரியின் குற்றம். அதனால் இரண்டு பேருமே தண்டிக்கக் கூடியவர்கள். கடுமையாக தண்டிக்கப்படுபவர் அதிகாரி, எச்சரிக் கப்படவேண்டியவர் மக்கள், இனி அந்த தெருவில் குப்பை மேடு என்பதே இருக்காது.''

''அற்புதம் அற்புதம் அற்புதம்.'' பராச்சாரியர் வாசுதேவர் கால் தொட்டு இராஜாதிராஜன் நெற்றியில் தடவிக் கொண்டான்.

சட்டென்று மாவலி வானவராயனை நோக்கி திரும்பினான்.

''வானவராயரே, அந்த எருது கொன்றானே அதனை விசாரித்தீரா, அது யாருடைய குற்றம். யார் தண்டிக்கப்பட வேண்டியவர். அது மெத்தனமாக, மேலோட்டமாகவே நிற் கிறதே'' என்று கேட்டான்.

பராச்சாரிய வாசுதேவர் புன்முறுவல் பூத்து சரியான கேள்வி என்று தலையசைத்தார். இது புலி. உடனே பாயத் தொடங்கிவிட்டது என்று சந்தோஷப்பட்டார்.

மாவலி வானவராயர் கொஞ்சம் மந்தமோ என்ற எண்ணம் அவருக்கு இருந்தது. என்ன செய்யப் போகிறார் என்ற ஆவலும் இருந்தது,

''அந்த குற்றம் நடு நாட்டு வீரனைச் சார்ந்தது, சோழ தேசத்து படை வீரனான அந்த சடையர் அந்த காளையிட மிருந்து மக்களைக் காப்பாற்ற அதை அதட்டி, மிரட்டி இருக் கிறார். காளை கொல்ல வந்திருக்கிறது, சடையர் தன் உயிரை இழக்க விரும்பவில்லை. ஓங்கி முகத்தில் அடித்து, கழுத்தை திருப்பி உடைத்துவிட்டார். அவ்வளவு வலிவு உள்ள அந்த காளையை சடையர் அடக்கி வீழ்த்தியது ஆச்சரியமான விஷயம். மிகுந்த வலிவும், மனத்திறனும் உள்ளவர்தான் அப்படி செய்ய முடியும். பதிலுக்கு சண்டை இழுத்த அந்த நடுநாட்டு தளபதி முட்டாள். இதை வழக்காடு மன்றத்தில் கொண்டு வந்து விட்டிருக்க வேண்டும். அரச சபையில் இந்த குற்றத்தை

சொல்லியிருக்க வேண்டும். இதை குற்றமா என்று சபை விசாரித்திருக்கும். தானே வாள் எடுத்து தட்டிக் கேட்க முடியும் என்றால் அதற்குள் மிகச் சரியான பதில்தான் அவர் கொடுத் திருக்கிறார். அடித்து வீழ்த்தியது மட்டுமல்லாமல் நெற்றியில் குறுக்கு கோடு போட்டது தான் கொஞ்சம் குரூரமாகப் போய் விட்டது. அந்தச் செயலை எச்சரிக்கை செய்ய வேண்டும். மற்றபடிக்கு இதில் சடையர் குற்றமற்றவர். நடு நாட்டு வீரன் குற்றமுள்ளவன்.

ஆனால் பிரச்சனை அங்கு இல்லை,''

''வேறு எங்கு இருக்கிறது,''

''அருண்மொழிபட்டனிடமும், அரையன் ராஜராஜ னிடமும் வந்து விட்டது. வந்ததுமே இரண்டு பேரும் சீறிக் கொண்டார்களே அப்பொழுது தான் இந்த பிரச்சனை பெரிதாகி விட்டது, காளை இறந்தது பெரிதாகப் போய்விட்டது, இல்லை யெனில் இது சரிதான் போ என்று போயிருக்கும். எனவே, இந்த குற்றத்தை வைத்து மிகைப்பட பேசி சபையில் பிரச்சனை உண்டு பண்ணிய அருண்மொழி பட்டனும், அரையன் ராஜனும் குற்றமுள்ளவர்கள்.

அந்த வழக்கை தனியே எடுத்து விசாரித்தால் அரையன் ராஜராஜன்தான் அதிகப் பிரசங்கித்தனமாக சோழ வீரனை பின்கை கட்டிக் கொண்டு வரச் சொல்லியிருக்கிறார். குறுக்கு கோடு நடுநாட்டு வீரன் நெற்றியில் ஏன் போட்டாய் என்று கேட்டிருக்க வேண்டும். அதை அந்தணர் கொண்டோ, மற்ற சபையினர் கொண்டோ விசாரித்திருக்க வேண்டும். இல்லாத பட்சத்தில் தானே தீர விசாரித்திருக்க வேண்டும். நடு நாடு வீரன் மீது திடீரென்று கருணை பொங்கி, அருண்மொழிபட் டனின் வீரன் வெட்டிவிட்டான் என்பதையே முக்கியமாகக் கொண்டு ஆத்திரமாக பேசியிருக்கிறார் அரையன் ராஜராஜன். அவன் அவருடைய ஆளாக இருந்திருந்தால் என்ன செய் திருப்பார் என்ற கேள்வி வருகிறது.''

''ஆஹா, ஆஹா, அருமை.'' இராஜாதிராஜன் குதித்தான்.

ஒற்றை விரலால் வாசுதேவ நாரயணர் அவனை அடக் கினார்.

''அவர் முடிக்கட்டும்'' என்று பொத்தாம் பொதுவாக கட்டளையிட்டார்.

''சபைக்கு நடுவே, இளவரசருக்கு எதிரே, கிருஷ்ணன் ராமனுக்கு முன்னே இடங்கை, வலங்கை வீரர்கள் அந்த சபை யில் நிறைந்திருக்கும் பொழுது அந்த இடங்கை வலங்கை பிரச்சனையை பெரிதாக எடுத்துக் காட்டும் வண்ணம் உரத்து சண்டையிட்டது, வாள் உருவி நின்றது அபத்தம். அசிங்கம். மிகப் பெரிய ஆரவாரம். கங்கை கரைக்கு போய்விட்டதால் கொம்பு முளைத்து விட்டது,

கங்கை கரை என்ன இமயமலை தாண்டி மறுபக்கம் போய் இறங்கக் கூடும். இறங்க எங்களால் முடியும். நான் மகாவீரன் என்று இதற்காஅலட்டிக் கொள்வது. ஆறு இடங்களில் தான் போர் நடந்தன. மற்ற இடங்களெல்லாம் தானாக வசமாயின. காடுவெட்டிகள் மிரட்டியே ஒரு தேசத்தை வழிக்கு கொண்டு வந்துவிட்டார்கள். அப்படியெனில் என்ன எதிர்ப்பு இருந்திருக் கும் என்று தெள்ளத் தெளிவாக தெரிகிறதல்லவா. இதற்கு மிகப் பெரிதாக இராஜேந்திரருடைய படை அலட்டிக் கொள்ளக் கூடாது. ஆனால் இதை நாம் சபையில் பேசக் கூடாது. உங்கள் எதிரே பேசலாம்.

ஏன் இதை பேசுகிறேன் என்றால் ஒவ்வொரு சோழ வீர னுக்கும் கங்கை கரை தொட்டு விட்டு வந்ததற்கு மிகப்பெரிய சாதனை செய்துவிட்டதாக நினைப்பிருக்கிறது. அரையன் ராஜராஜன் அதற்கு தலைமை தாங்கினேன் என்பதை வெவ் வேறு விதமாக வெளிக் காட்டிக் கொண்டிருக்கிறார். இராஜேந் திர சோழர் இருந்திருந்தால் இதை செய்திருப்பாரா. அல்லது நீங்கள் இருப்பதால் இதை செய்கிறாரா என்று எனக்குத் தெரிய வில்லை.''

''பிரமாதம். பிரமாதம்.'' இந்தமுறை வாசுதேவ பராச்சாரியார் கைதட்டினார், தன்னை மீறி பேசினார். இந்த முறை திரும்ப இராஜாதிராஜன் வாசுதேவ நாராயணரை பார்த்தான். சிரித்தான். 'நீர் கோட்டை விட்டுவிட்டீரே' என்று அவரை நோக்கி கண் சிமிட்டினான். அவர் வெட்கமடைந்தார்.

"நீல கங்கையரே, நீர் சொல்லும், இது பிரச்சனை என்று அருமையாக பிட்டு வைத்து விட்டார் நமது நண்பர் வானவ ராயன். நீர் சொல்லும். இதற்கு என்ன தீர்ப்பு, இந்த வழக்கு நாம் இருக்கும் சபையில் வந்துவிட்டது. என்ன தீர்ப்பு என்று நீர் சொல்லும்."

"அடிக்கடி முட்டுகின்ற கிடாக்களை என்ன செய்வார்கள்."

"என்ன செய்வார்கள்."

"கிடை மாற்றி போடுவார்கள். அதாவது ஒரு ஆட்டை வேறொரு கிடைக்கு தலைவனாக அனுப்பிவிடுவார்கள். இந்த ஆட்டை அந்த கிடையை சந்திக்கவே முடியாதபடி வேறொரு கிடைக்கு அனுப்பி விடுவார்கள். இரண்டு ஆடுகளும் பெட்டைகளோடு ஆடிக் கொண்டிருக்குமே தவிர, ஒன்றோ டொன்று முட்டிக் கொண்டிருக்காது. ஒரே இடத்தில் நிற்க வைத்தோமானால் பெண் ஆடுகள் பதறும் வகையில் அவை சண்டையிட்டுக் கொண்டிருக்கும். இதனால் உணவு உண்பது தடைபட்டுப் போகும். ஆடுகள் மெலிந்து இருக்கும். குட்டிகள் ஈன்றாது போகும்" என்று சொன்னார்.

"அதாவது, நடைமுறையில் நடக்க வேண்டியது இடைஞ் சலாகும். இந்த சண்டை தவிர்க்கப் பட வேண்டியது."

"அதுதான் தண்டனையா."

"இதுதான் தீர்வு,"

"நான் உங்களை தண்டிக்கச் சொன்னேனே."

"கங்கை வரை பெரிய படையோடு போய் இரவு பகலாக நடந்து, வாள் ஏந்தி யுத்தம் செய்து எப்பொழுது எதிரி தாக்கு வான் என்று தெரியாது, அயர்ந்து தூங்காமல், சரியாக சாப் பிடாமல் வெய்யிலிலும், மழையிலும், குளிரிலும் நடந்து வந்த அந்த தளபதிகளை நாம் தண்டிக்க வேண்டுமா. தண்டிக்க வேண்டிய அதிகாரம் நமக்கு இருந்தாலும் இதை யோசிக்க வேண்டாமா. அப்படி அவர்களை தண்டித்தால் அவர்களோடு சென்ற வீரர்களை தண்டித்தது போல் ஆகாதா, இந்த தண் டனை மேற்கொண்டு பிளவுபடாதா. இது ஒரு நன்றி கெட்டத் தனம். இந்த தேசத்திற்கு உழைத்தது தவறு என்று வீரர்கள்

நினைத்து விட மாட்டார்களா. நினைக்கும்படி தூண்டிவிட மாட்டார்களா. எனவே, தண்டிப்பது என்பது அறவே இல்லை,"

இராஜாதிராஜன் எழுந்தான். நீல கங்கையரை தழுவிக் கொண்டான். அவன் கண்கள் மெல்லியதாய் கலங்கின.

"நான் தனித்துவிடப் பட்டேனோ. எனக்கு தோழமை என்று யாரும் இல்லையோ. எனக்கென்று ஒரு தனி சபை உருவாகாதோ என்று கலங்கினேன். என் தந்தையாருக்கு கிடைத்தது போல சபை எனக்கு கிடைக்காதோ என் தாத்தா விற்கு எவ்வளவு அற்புதமான அதிகாரிகள் கிடைத்தார்கள். நான் தன்னந் தனியனோ என்று உழன்றேன். கங்கை கொண்ட சோழீஸ்வரத்திற்குள்ளேயே பெருவுடையாரை கெஞ்சினேன். எனக்கு கிடைக்க வேண்டிய இளவரசு பட்டம் தவறா. எனக்கு முந்தியவன் இருக்க நான் வந்துவிட்டது பிசகா. அவன் வழி மறிக்கவில்லை என்பதால் நான் அதிகம் அலட்டுகிறேனோ, என்ன செய்வது என்று தெரியாமல் தவிக்கிறேனே, இதை எப்படி நடத்துவது என்று தெரியாமல் ஆடுகிறேனே என்று கண்ணில் நீர் துளிர்க்கப் பேசினேன். அன்று இரவு நல்ல சொப்பனம். 'நான் இருக்கிறேன். நான் இருக்கிறேன்.' என்று இராஜ ராஜர் கட்டிக் கொள்கிறார். நான் வேடிக்கை பார்க்கிறேன். ஆனால் என்னை தழுவிக்கொள்வது எனக்கு தூரத்திலிருந்தே தெரிகிறது. நான் தழுவிக் கொள்ளப்படுபவனாகவும், தழுவிக் கொள்வதை வேடிக்கை பார்ப்பவனாகவும் இருக்கிறேன்.

பெருவுடையாரை கேட்டால் இராஜராஜர் கீழ் இறங்கி, எனக்கு நான் இருக்கிறேன் என்று சொன்னார். என்னவோ காலையில் பெரும் குதூகலம் ஏற்பட்டுவிட்டது. இப்போது அதற்கு அர்த்தம் தெரிகிறது.

அப்பிமையரே, நீர் சொல்லும். குற்றம் என்ன என்று தெளிவாகிவிட்டது. என்ன தண்டனை என்று நீர் சொல்லும்."

இராஜாதிராஜன் அந்த சத்திரத்து ஆசனத்தில் நன்கு சாய்ந்து கொண்டான். சாதாரண மர ஆசனம். ஆனால் அந்த சாய்வு மிக சொகுசாக இருந்தது,

வாசுதேவ நாராயணர் கிண்ணென்று உட்கார்ந்திருந்தார். நீல கங்கைரையர் கொஞ்சம் பருமனான உடல். அதனால்

கொஞ்சம் தளர உட்கார்ந்திருந்தார். வல்லப தேவன், அப்பி மையன் பிடிப்பாக உட்கார்ந்திருந்தார்கள். அப்பிமையன் எழுந்து நின்று கைகட்டிக் கொண்டான்.

''இருந்தபடியே பேசலாமே.''

''இல்லை, அப்படி பேசுவதற்கில்லை.'' அப்பிமையன் மறுத்தான். சபை ஆவலோடு அவனை பார்த்தது, அப்பி மையன் முப்பதைந்து வயது அந்தணன். சைவன்.

''நீங்கள் தான் எனக்கு எஜமானர், நீங்கள்தான் எனக்குத் தலைவர். இதில் நான் தெளிவாக இருக்கிறேன். இந்த சோழ மண்டலத்திற்கு சக்ரவர்த்தி இராஜேந்திர சோழர்தான். இதை மறுக்கவே முடியாது. எவரும் அவருக்கு அடிபணிய வேண்டி யதுதான். ஆனால் உங்களுக்கும் இராஜேந்திர சோழருக்கும் அபிப்ராய பேதம் வரும் எனில் நான் உங்கள் பக்கம்தான் நிற்பேன். அதாவது நான் இராஜேந்திர சோழரை எதிர்ப்பேன். இது நிச்சயம்.

இரண்டு எஜமானரிடம் ஒரு அதிகாரி வேலை செய்ய முடியாது. என்முதல் அதிகாரி இளவரசர் இராஜாதிராஜன் இரண்டாவது அதிகாரி பராச்சாரியார் ஸ்ரீமன் வாசுதேவ நாரா யணர். இவர்களுக்கில்லாமல் வேறு எவருக்கும் இந்த அப்பி மையன் கட்டுப்பட்டவன் அல்ல. இதற்கு அர்த்தம் இராஜேந் திரரை எதிர்ப்பது அல்ல. பெரியவர்களுக்குண்டான மரி யாதையை அந்த க்ஷணத்திலேயே, அந்த இடத்திலேயே கொடுத்துவிட வேண்டும். அவர்கள் கட்டளையிடும்போது யோசித்து செய்ய வேண்டும். இதுதான் என்னுடைய நிலைமை யாக இருக்கிறது.''

சபை திகைத்தது.

என்ன அற்புதமான பேச்சு. எந்த நேரத்தில் எதைப் பேச வேண்டுமோ, எப்படி சொல்ல வேண்டுமோ அப்படி சொல்லி விட்டானே. ஆந்திரத்து அந்தணன் அல்லவா. கீழை சாளுக்கிய பார்ப்பனனல்லவா. தெளிவாக, திடமாக பேசுகிறான். கோதாவரிக் கரை, கிருஷ்ணை ஆற்றின் கரைக்கு நடுவே பிறந்தவன். அந்த செழுமை புத்திக்குள் இருக்கிறது. பராச்சாரியார் வாசு தேவ நாராயணர் மனதிற்குள் பாராட்டினார். இராஜாதிராஜன்

பேசட்டும் என்று அமைதியாக இருந்தார். இராஜாதிராஜன் கொஞ்சம் ஒடுங்கிப் போயிருந்தான். மறுபடியும் தெளிவானான்.

"உங்கள் அன்புக்கு என் மனமார்ந்த நன்றி, இவை உங்களிடம் இருக்கும் என்று எனக்கு நன்கு தெரியும். அப்பிமையன் வார்த்தையாக்கி விட்டார். இதுதான் உங்கள் எல்லோர் மனதிலும் இருப்பது என்பதை நான் அறிவேன். அப்பிமையன் எழுந்து நின்று பேசிவிட்டார். நன்றி என்பதை ஒரு வாக்கியமாக சொல்லி விடலாம். நான் சொல்லப் போவதில்லை. மிகச் சரியான நேரத்தில், மிகச் சரியானபடி நீங்கள் கௌரவிக்கப்படுவீர்கள். உங்களை சோழதேசம் மறக்காது, என்னுடைய ஆட்சி வருகிறபோது அது மிகச் சிறப்பானதாக இருக்கும். இருப்பதற்கு நீங்கள் துணைபுரிவீர்கள். உங்களுடைய பதவிகள் உயர்த்தப்படும். உங்களுடைய அதிகாரங்கள் தெளிவாக்கப்படும். இப்பொழுதே நான் ஆரவாரிக்க வேண்டாம். இப்பொழுதே நான் எல்லாவற்றையும் எல்லோரிடமும் பேசிக் கொண்டிருக்க வேண்டாம். சக்ரவர்த்தி இராஜேந்திர சோழருடைய அடிமைகளாகவே இருப்போம். அவர் இட்ட கட்டளைப்படி மீறாது செய்பவராகவே இருப்போம். ஒரு வேளை எங்கள் இருவருக்கும் பிணக்கு வந்தால் உங்கள் பக்கம் நான் இருப்பேன் என்று அப்பிமையர் சொன்னது அழகு. ஆனால் அதெற்கெல்லாம் சந்தர்ப்பம் வந்து விடாது. ஏனெனில் என் தந்தையோடு நான் பிணக்குறப் போவதில்லை.

இராஜராஜரோடு இராஜேந்திர சோழர் பிணக்குற்று சில காரியங்கள் செய்தது எனக்குத் தெரியும். அதனால் சோழ தேசத்தில் குழப்பம் உண்டாயிற்று. மேலை சாளுக்கியம் தொடை தட்டியது. கீழை சாளுக்கியத்தில் குழப்பம் ஏற்படுத்தியது. இதுதான் சரியான சமயம், தந்தையும், மகனும் முரண்பட்டிருக்கிறார்கள் பிடிப்போம் கீழைச் சாளுக்கியத்தை என்று விதம் விதமான திட்டங்களோடு மேலை சாளுக்கியம் கீழை சாளுக்கியத்தில் இறங்கியது. பிணக்கு என்று கேள்விப்பட்டதால் தானே இந்த மாதிரி விஷயங்கள் நடைபெறுகின்றன. எனக்கும், என் தந்தைக்கும் பிணக்கு வராது. வர நான் விடமாட்டேன். எழுந்திரு என்றால் எழுந்திரு. உட்கார் என்றால் உட்கார். இளவரசனாக இரு என்றால் இளவரசனாக இருப்பேன். அவருடைய

இடத்தை அவரே விட்டுக் கொடுத்த பிறகுதான் நான் தலை நிமிர்வேன். சோழ தேசத்தின் பொருட்டு, சோழ வீரர்களின் பொருட்டு, இந்த நாகரீகம் சிறப்படைவதின் பொருட்டு நான் இந்த விஷயத்தில் தெளிவாக இருக்கிறேன்.''

பராச்சாரியர் வாசுதேவ நாராயணன் அவனை நோக்கி கைகூப்பினார்.

''இப்படிப்பட்ட இளவரசனல்லவா இந்த சோழ தேசத்திற்கு தேவை. இப்படிப்பட்ட இளைஞன் அல்லவா அரச சபையில் சிங்காசனத்தில் உட்கார வேண்டும். தன்னுடைய தலைமுறையைப் பற்றி தெளிவாக இருப்பவன் நிச்சயம் ஜெயிப்பான்.'' கைதூக்கி அவனை ஆசிர்வதித்தார்.

வணங்கி இராஜாதிராஜன் அதை ஏற்றுக்கொண்டான்.

''என்ன தண்டனை.'' விஷயத்திற்கு வேகமாக இராஜாதிராஜன் வந்தான்.

''ஒரு கிடையில் இரண்டு கிடாக்கள் இருந்தால் முட்டிக் கொண்டுதான் சாகும். கிடை பிரித்துப் போட வேண்டியதுதான். இரண்டு கிடாக்கள் சண்டை போட்டுக் கொண்டால் பெண் ஆடு பதறும். பயப்படும். கரு கலையும். சரியாக உண்ணாது நோஞ்சான் ஆகும். எனவே பெண் ஆடுகள் நிறைந்த ஒரு கிடைக்கு ஒரு கிடாவை பிரித்து போட வேண்டியதுதான். ஊரின் வட கோடியில் ஒரு கிடா இருந்தது என்றால் தென் கோடியில் ஒரு கிடா. நடுவே மந்தைவெளியில் கூட சந்திக்க முடியாத தொலைவு பிரித்துப் போட்டு விட வேண்டும். பெண் ஆடுகளின் மதி மயக்கத்தில் இந்த பகைமையை கிடாக்கள் மறந்து போகும். உலக வாழ்க்கையின் வேகததில் அருண்மொழிப்பட்டரும், அரையன் ராஜராஜனும் பிளவை எளிதாக மறந்து விடுவார்கள். ஒருவேளை பார்த்தால் மறுபடியும் முட்டிக் கொள்ளலாம். பார்க்காமல் வைப்பதே நல்லது. அந்த தொலைவுக்கு பிரித்துப் போட வேண்டும்.''

''வல்லபதேவரே நீர் சொல்லும், எவ்வளவு தொலைவுக்கு பிரித்துப் போட வேண்டும்.''

''இதில் ஒன்றும் பெரிய யோசனையே இல்லையே. கீழை சாளுக்கியம் அரையருக்குப் பிடிக்கும். கீழைசாளுக்கியத்திற்கு

அரையரை அனுப்பி உங்களுக்குத் துணையாக அருண்மொழி பட்டரை வைத்துக் கொள்ளலாம்.''

''இல்லை, எனக்குத் துணையாக அருண்மொழிபட்டர் இருக்கவே மாட்டார்.''

''அப்படியானால் இராஜேந்திர சோழருக்கு துணையாக அனுப்பி விடலாம்.''

''இதை ஏன் நீங்கள் முன்னமே சொல்லவில்லை.''

''உங்களுக்கு ஒருவேளை அருண்மொழிபட்டன் மீது ஆசை இருக்குமோ என்னவோ.''

''இல்லை. எனக்கு அருண்மொழிபட்டன் மீதோ அரையர் மீதோ, கிருஷ்ணன் ராமன் மீதோ, வந்தியத்தேவர் மீதோ, என் அப்பாவின் மீதோ வேறு எந்த தளபதியின் மீதோ எனக்கு எந்த பிடிப்பும் இல்லை. எனக்கென்று ஒரு படை. எனக்கென்று ஆபத்துதவிகள். எனக்கென்று ஒரு சபை. எனக்கு வேண்டும்.

நண்பர் சொன்னதுபோல நான் மதிப்பேன். ஆனால் கட்டளையிட்டால் யோசிப்பேன். இப்பொழுதே இதை ஆரம்பித்தால் தான் பிற்பாடு இது சரியாக வரும்.''

''பிற்பாடு என்றால்,'' அப்பிமையன் வழிமறித்துக் கேட்டான்.

''நான் அரசராகும்போது.'' சபை மௌனமாக இருந்தது.

''ஏன் மௌனமாக இருக்கிறீர்கள்.'' இராஜாதிராஜன் கேட்டான். அப்பொழுதும் சபை அமைதியாக இருந்தது.

''எப்பொழுது நீங்கள் அரசராவீர்கள் என்று கேட்கிறீர்களா. எனக்கு அது தெரியாது. தெரிய வேண்டிய அவசியம் இல்லை. ஒரு வேளை பராச்சாரியர் வாசுதேவ நாராயணர் இதற்கு பதில் சொல்லலாம்.''

''இருக்கிறது, வெகுதொலைவில் இன்னும் பதினைந்து வருடம் கழித்துதான் நீங்கள் அரசனாக முடியும். ஆனால்''

''என்ன ஆனால்''

''அதற்கு முன்னே நீங்கள் தான் எல்லா இடத்திலும் தீர்வு செய்பவனாக இருக்க முடியும். அதாவது...''

''அதாவது''

''உன் தந்தை ஓய்வெடுத்துக் கொள்வார். தன் மனைவியரோடு எசாளம், எண்ணாயிரம், காஞ்சிபுரம், திருமயிலை என்று நகர்வார். கீழை சாளுக்கியம் வரைபோய் மகள் இடத்திலும் இருந்துவிட்டு வரலாம். அப்பொழுது இந்த இடத்தில் எல்லா வித முடிவுகளும் நீங்கள்தான் ஏற்பாடு செய்ய வேண்டி இருக்கும்.''

''தந்தையின் ஆளுமை எதுவரை இருக்கும்.''

''அடுத்த பத்து வருடங்களுக்கு அசையாது இருக்கும்.''

''நாகையிலிருந்து தந்தை கிளம்பி ஸ்ரீவிஜயம் போய் விடுவாரா.''

''மிக எளிதாக வெற்றி பெறுவார், இன்னும் ஏழு வருடம் அவருக்கு வெற்றி நிச்சயம். கடற்கரை பயணம் முடித்துக் கொண்டு மிகக் கம்பீரமாக சோழ தேசத்திற்கு வருவார். வணிகத்திற்கு திறந்துவிட்டு விடுவார். மிகச் சிறப்பாக வணிகம் சீனத்தோடு நடக்கும். இலங்கையின் தெற்கு பக்கம் தாக்கப்படுவதால் அங்கு குதிரை வியாபாரம் மட்டுப்பட்டு, பாண்டிய நாட்டு கொற்கை துறைமுகத்தில் சோழர்கள் குதிரையை இறக்குவார்கள். ஆயிரக் கணக்கான குதிரைகள் வாங்கப்படும். அதற்கு நல்ல விலை கொடுக்க ஸ்ரீ விஜயத்து பொக்கிஷங்கள் உதவி செய்யும். எனவே, குதிரை கப்பல்கள் ரோஹணத்திலும் இறங்காது இன்னும் சற்றுத் தள்ளி ஸ்ரீ விஜயத்திற்கும் போகாது நேராக கொற்கை துறைமுகத்திற்கு அல்லது நாகைக்கு வரும். மிகப் பெரும் படைகள் மறுபடியும் உருவாகும், அவைகளை பயிற்றுவிக்க வேண்டிய கட்டாயம் உங்களுக்கு ஏற்படும். அதை உருவாக்கி தலைமை தாங்கி நடத்தி மறுபடியும் மேலை சாளுக்கியம் போக வேண்டியிருக்கும்.''

''மீண்டும் யுத்தம் வரும் என்கிறீர்களா.''

''ஒரு இடைப்பட்ட ஆறு வருடம் ஓய்வு கிடைத்தால் மறுபடையும் படை திரளாதா. எல்லா இடத்திலும் இது இயல்பு தானே. உன் தந்தை போய் வருவதற்கு இரண்டு வருடங்கள் ஆயிற்று என்றால் குதிரை வர இன்னும் ஒரு வருடம் ஆயிற்று என்றால், நாலு வருடம். நாலு வருடம் உங்களால் சும்மா

சென்னைக்கு அருகே உள்ள திருவாலங்காடு சிவன். சோழர்கால உலோக சிற்பத்து உன்னதம். ஒவ்வொரு அங்குலமாய் உற்றுப் பார்க்க கற்றுக் கொள்ளுங்கள்.

இருக்கவும் முடியாது, மேலை சாளுக்கியமும் சும்மா இராது. போர் நிச்சயம் மூளும். இதுதான் என் கணக்கு.''

''புரிகிறது, வாசுதேவரே,'' அவன் மறுபடியும் நெஞ்சில் கை வைத்து வணங்கினான்.

''நாம் அரசவையில் இல்லாது இப்படி ஒரு சத்திரத்தில் உட்கார்ந்து பேசுவது சரியாக இருக்குமோ.''

''அடிக்கடி உட்கார முடியாது. உட்கார்ந்தால் இந்த இடமும் வேவு பார்க்கப்படும். சமைப்பதற்கு புது ஆட்கள் வந்து சேர் வார்கள். நாம் சமைத்துப் போடுகிறேன் என்று சத்திரக்காரர் கள் வருவார்கள், வந்தவர் சமையற்காரராக மட்டும் இருக்க மாட்டார்.''

''அப்பொழுது என்ன செய்வது.''

''இடம் மாற்றிக் கொண்டே இருப்போம்.''

''உடனடியாக நம்முடைய வேலை என்ன.''

''பயணம் செய்தல்.''

''அப்பொழுது அருண்மொழி பட்டனையும், அரையன் ராஜராஜனையும் பிரிப்பது.''

''அவசரப்பட வேண்டாம். இந்தச் செய்தி இந்நேரம் இராஜேந்திர சோழரை எட்டியிருக்கும். இராஜேந்திர சோழர் உங்களுக்கு தொந்தரவு இல்லாது இந்த இடத்தை வைத்துக் கொள்ள வேண்டும் என்று நிச்சயம் எண்ணுவார். அவரே பிரித்துப் போடுவார்.''

''அருண்மொழிபட்டரை எனக்கு துணையாக வைக்க மாட்டாரா.''

''இல்லை, அவர் அருண்மொழிபட்டனை தன்னோடு அழைத்துப் போவார்.''

''ஏன் அப்படி சொல்கிறீர்கள்.''

''தனக்கு அடுத்தபடி படைநடத்த ஒருவர் இல்லாது அவர் நகர மாட்டார்.''

''வீரமாதேவி இருக்கிறார்களே.''

"இல்லை, வீரமாதேவியிடம் தலைமை பொறுப்பு தர முடியாது, அதற்கு ஏற்றவர் அல்ல அவர். அதற்கு அடுத்த தலைமை பொறுப்பு கிருஷ்ணன் ராமனின் மகனான அருண் மொழிபட்டனுக்குத்தான் வரும். கிட்டத்தட்ட சக்ரவர்த்திக்கு அடுத்த பதவி அந்த அந்தணனுக்கு கிடைக்கும். இது மிகச் சிறப்பு, அந்தணருக்கெல்லாம் பெருமை, ஆனால் நீ அவ் விதம் செய்யலாகாது."

"புரியவில்லையே."

"அடுத்த பதவி நீ எனக்கு கொடுக்கக் கூடாது."

"ஏன்"

"எனக்கு போர் தொழில் தெரியாது. அருண்மொழி போர் தொழில் தெரிந்தவன். கடலில் பயணப்படுகின்ற வலிவும், குதிரையில் பயணப்படுகின்ற திறனும் எனக்கில்லை. நான் இன்னும் அமைதியானவன்.

அதுவும் தவிர, உனக்கு அடுத்தபடி என்று நீ வைத்துக் கொள்ள வேண்டியது உன்னுடைய தம்பியை. அவன்தான் முக்கியம். இளவல் இராஜேந்திரனை நீ மிக முக்கியமாக கருத வேண்டும். உண்மையில் இந்த குழுவில் இளவல் இராஜேந் திரன் இருக்க வேண்டும், அவன் இல்லாது இந்த குழு இயங்கக் கூடாது.

அப்பொழுது அவன் வேறு ஒரு குழுவை ஏற்படுத்தும் நிலை போய்விடும். அவனுக்கு துணையாக நான்கு பேர்கள் வந்தார்கள் என்றால் அது சபை பிளவுபட்டது போல் ஆகும். எனவே, இவர்கள் என்னுடைய சபை என்று எங்களை நீ இராஜேந்திரனுக்கு அறிமுகப்படுத்த வேண்டும்.

இளவல் இராஜேந்திரனுக்கும் நான் ஆச்சாரியனாக, மாவலி வானவராயர் தோழனாக, நீலகங்கர் சேனாதிபதியாக, வல்லப தேவர் உற்ற துணையாக இருக்க வேண்டும். உனக்கு ஐந்து பேர் கொண்ட சபை துணையாக இருக்க வேண்டும். இது முக்கியம்,

இன்று நாள் நன்றாக இருக்கிறது. இன்றே நீ இராஜேந்திர னுக்கு உன் இளவலுக்கு உன் தம்பிக்கு எங்களை அறிமுகப்

படுத்தி விடு. சக்ரவர்த்தியை இராஜேந்திரர் என்று நாம் அழைப்பதால் உன் தம்பியான இராஜேந்திரனை நாம் இனி இளவல் என்றே அழைப்போம். இளவல் நம்மோடு கை கோர்க்கட்டும்.''

சத்திரத்து வாசற்பக்கம் மக்கள் கூடினார்கள். இராஜாதி ராஜன் எழுந்தான். சபையை புறக்கடை வழியே வெளியேறச் சொன்னான். அப்பிமையன் மட்டும் நான் அவருக்கு உடன் இருக்கிறேன் என்று சொல்ல, மற்ற மூவரும் விரைவாக வெளி யேறினார்கள். சற்று தூரம் நடந்து சிறுதேரில் வாசுதேவ நாரா யணர் ஏறிக் கொள்ள மற்ற இருவரும் தங்கள் குதிரைகளில் வேறு பக்கம் விரைந்தார்கள்.

சபையைச் சந்திக்க நூறு முழ தூரமே இருக்கும் என்ற நிலையில் அப்பிமையன் இராஜாதிராஜன் தோளில் கை வைத்தான்.

''என்ன.''

''மிக முக்கியமான விஷயம்.''

''முக்கியமா, சபை கலைந்து விட்டதே.''

''சபையில் சொல்லலாமா என்று தெரியவில்லை.''

''சொல்லுங்கள்.''

''எனக்கு ஒரு ஓலை வந்திருக்கிறது.''

''என்ன''

''கங்கே யாதவ் எழுதியிருக்கிறான்.''

''என்ன'' திடுக்கிட்டான்.

''கீழை சாளுக்கியத்திலிருந்து சோழ தேசம் போயிருக் கிறாயே, மேலை சாளுக்கியத்திற்கு உதவி செய்யக் கூடாதா. நாம் தாயாதிகள்தானே என்று கேள்வி போட்டு நிறுத்தியிருக் கிறான்.''

''எப்படி வந்தது ஓலை.''

''ஆள் மூலமாக.''

''ஆள் எங்கே.''

''நாளை மறுபடியும் சந்திப்பானாம்.''

"என்ன சொல்லப் போகிறீர்கள்."

"உங்கள் உத்தரவுக்காக காத்திருக்கிறேன்."

"சரி என்று சொல்லி விடுங்கள்."

"என்ன" அப்பிமையர் திகைத்தான்.

"கங்கே யாதவை பிடிக்க வேண்டும். நம்முடைய முக்கியமான வேலை அதுதான். அதனால் சரி என்று சொல்லி விடுங்கள். அதை உடனடியாகச் சொன்னால் சந்தேகம் வரும். என்னப்பா இது இப்படியெல்லாம் தொந்தரவு கொடுக்கிறீர்கள் என்று அலுத்துக் கொள்ளுங்கள்."

"உண்மையாகச் சொல்கிறீர்களா."

"ஆமாம்."

"ஏன்."

"எனக்கு நீங்கள் ஒருபோதும் துரோகம் செய்ய மாட்டீர்கள் என்று தெரிந்ததனாலேயே உங்களை அந்தப்பக்கம் அனுப்பி வைக்கிறேன்."

"இளவரசே." அவன் சட்டென்று கை கோர்த்துக் கொண்டான். குரல் தழுதழுத்தது,

"மக்கள் எதிரே உணர்ச்சி வசப்பட வேண்டாம். கங்கே யாதவோடு நேரடி சந்திப்பு பேச்சு ஏற்படுத்திக் கொள்ளுங்கள். விதம் விதமான தகவல் கொண்டு வாருங்கள். சொல்லி அனுப்புங்கள்." இராஜாதிராஜன் தெளிவாக கட்டளையிட்டான்.

அப்பிமையன் பின்னடைந்தான். அவன் மக்களை நோக்கி நடந்தான். ஆனால் அவன் மனம் கலங்கித்தான் இருந்தது.

இவை அனைத்தும் அந்த சத்திரத்தின் நேர் எதிர் பகுதியில் உள்ள வீட்டினுடைய கூரை கீழ் நின்றபடி கூரையில் தன் முகம் மறைந்தபடி பார்த்துக் கொண்டிருந்தான். அவன்தான் கங்கே யாதவிடமிருந்து கீழை சாளுக்கிய சேனாதிபதியான, தண்ட நாயகனான அப்பிமையனுக்கு செய்தி கொண்டு வந்தவன்.

ஒற்றர்களுக்கென்று சில பயிற்சிகள் உண்டு. கண்படும் தூரத்தில் இருந்தாலும் மனிதர் உதடு அசைவதிலிருந்து, முகத்தின் பாவங்களிலிருந்து என்ன சொல்கிறார் என்று கண்டு பிடித்து

விடக்கூடிய கூர்மையான திறன், அதற்குண்டான பயிற்சி அவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.

அவன் ஒருவாறு புரிந்துகொண்டான். ஓலை வந்ததை சபையில் சொல்லாது தனியாக அப்பிமையன் சொல்லியிருக்கிறான். சபை இங்கேயே பிளவுபட்டு விட்டது என்று சிரித்தான்.

போய் கலந்து கொள் என்று இராஜாதிராஜன் சொல்லியிருக்கிறார். நாடகமாடச் சொல்லியிருக்கிறார். நாளை வந்து அப்பிமையன் நாடகமாடுவான். அப்பிமையன் சத்திரத்திற்குள் போனான். சுற்றி வந்தான். சத்திரத்தினுடைய இடப்பக்கம் சுவருக்கும், புதருக்கும் இடையே நடக்கும் வழி இருந்தது. அதில் நடந்து போனான், நின்று கூட்டத்தை பார்த்தான். யார் இளவரசரை பார்க்காமல் பிரிந்து போவது என்று கவனித்தான். ஒரே ஒரு வீரன் மட்டும் எதிரேயிருந்து மெல்ல நழுவி நகர்வது தெரிந்தது, அத்தனை பேரும் இளவரசரை பார்க்க ஆவலாக இருக்கும்போது யார் இவன். அவன் உற்று நோக்கினான். அவன் நடையிலிருந்து அவன்தான் ஓலை கொண்டு வந்தவன் என்று தெரிந்துவிட்டது. பெரும் தலைப்பாகையால் முகத்தை மறைத்துக் கொண்டிருந்தான். ஆனால் முதுகும், பின்புற நடையும், காலின் அசைவும் அவன் வந்து போனதை நினைவுபடுத்தின. வெட்டுக்கிளியை ஓணான் விழுங்கும் என்றால் ஓணானை பாம்பு விழுங்கும்.

சக்ரவர்த்தி இராஜேந்திரரை சுற்றி எப்பொழுதும் ஆபத்துதவி படைகள் இருக்கும். ஆனால் இளவரசரோ எந்த ஆபத்துதவி படையும் இல்லாமல் தனியாக வருகிறார். தோளை தொட்டு பேசுகிறார். கன்னத்தை கிள்ளுகிறார். பட்டென்று அடிக்கிறார். இளம் பெண்களைக் கண்டால் ஆவேசம் வந்தது போல 'ஆஹா நீ எனக்கு சரியான துணையடி' என்று தொடை தட்டுகிறார். அவர்கள் வெட்கி ஓட, 'துரத்து துரத்து பிடி பிடி' என்று கத்துகிறார். ஒரே ஆரவாரமாக இருக்கிறது. இந்த சத்திரத்தின் வாசலிலும் இப்படித்தான் ஆரவாரம் உச்சகட்டத்தை எட்டியது,

''எப்படி இருக்கிறீர்கள். எப்படி இருக்கிறது வாழ்க்கை'' என்று இரண்டு, மூன்று பேரை மடக்கி விசாரித்தான். மூன்று பேரும் ஒரே நேரத்தில் பேச ஆரம்பித்தார்கள்,

''நீ சொல்.'' என்று ஒருவன் நெஞ்சில் கை வைத்தான்.

''மிக அற்புதமாக இருக்கிறதய்யா.''

''நீ யார்.''

''நான் மறவனய்யா.''

''என்ன அற்புதமாக இருக்கிறது.''

''வேலைக்கு உணவு கிடைக்கிறது. பசும்பால் கிடைக்கிறது. நெய் கிடைக்கிறது. ஓய்வு கிடைக்கிறது. பெரிய யுத்தம் போய் விட்டு வந்த பிறகு, வெற்றி பெற்ற பிறகு வாழ்க்கையினுடைய அனுபவமே வேறு மாதிரி இருக்கிறது.''

''உன் வீடு எப்படி இருக்கிறது.''

''மிக நன்றாக இருக்கிறதய்யா,''

''உண்மையை சொல்கிறாயா,''

''ஆமாம்.''

''நீ சோழபுரத்து வடக்குப் பக்கம் போவதில்லையா. வேளம் பார்த்ததில்லையா.'' ஜனங்களுக்கு தெரிந்துவிட்டது. ஆரவாரம் செய்தார்கள்.

''இரண்டு முறை போய் வந்தேனய்யா. எனக்கு பிடிக்கவில்லை.''

''ஏன்.''

''அவர்கள் மிகவும் அலட்சியம் செய்கிறார்களய்யா. போடா என்று துரத்துகிறார்கள். எனக்கு என் பெண்டாட்டி போதும்.'' மறுபடியும் கூட்டம் குதூகலித்தது.

''நீ சொல்.'' இன்னொருவர் தோளில் கை வைக்க, அவர் வயதானவராக விவசாயியாக இருந்தார்.

''சொல்லும் வேளாளரே, நீர் எப்படி இருக்கிறீர்''

''ஒரு குறையும் இல்லை. ஏகப்பட்ட நிலங்களில் உழ முடியாமல் தவித்துக் கொண்டிருந்தேன். இப்பொழுது நீங்கள் ஆட்கள் அதிகம் கொண்டு வந்து விட்டீர்கள். மிக பலமானவர்களை இரவி தேர்ந்தெடுத்து கல் புரட்டவும், கல் தூக்கவும், கோவில் வேலைக்கு மேலே ஏறவும், சாரம் கட்டவும் உபயோகப்படுத்திக் கொண்டார்.

கொஞ்சம் மெலிதானவர்களை மெல்லிய இளைஞர் களை, வயதானவர்களை உழவு வேலைக்கு திருப்பி அனுப் பப்பட்டார்கள். நான் அவர்களில் ஐந்து பேரை என்னோடு அழைத்துக் கொண்டேன். அரசாங்கம் ஐந்து பேரை எனக்கு உதவிக்கு அனுப்பியது, அவர்கள் உணவுக்கு எனக்கு காசும் கொடுத்தது. அதில் இரண்டு பேர் உத்திர லாடத்தை சேர்ந்த வர்கள். இரண்டு பேர் தட்சிணலாடத்தை சேர்ந்தவர்கள். ஒரு மத்திய வயது ஆள் தண்டபுத்தியை சேர்ந்தவர். அவர்கள் எல்லோருக்குமே அவரவர் மொழி தெரிந்திருக்கிறது. அவர்கள் முதுகில் அடிமை இலச்சினை குத்தப்பட்டு அதில் எண்ணிக் கையும் எழுதியிருக்கிறது. தோளில் அது தெரியாத வண்ணம் அவர்கள் மறைத்துக் கொள்கிறார்கள். ஆனால் பார்த்த உட னேயே சோழம் அல்ல என்று தெரிந்துவிடுவதால் ஜனங்க ளுக்கு அவர்கள் மீது ஒரு இளக்காரம் வந்துவிடுகிறது,

ஆனால் அவர்கள் எல்லோரும் நல்லவர்கள். தங்கள் விதியை நொந்து கொண்டு நான் என்ன சொன்னாலும் உதவி செய்கிறார்கள்.''

''உண்மையில் என்ன லாபம்.'' இராஜாதிராஜன் கூர்மை யாகக் கேட்டான்.

''எனக்கு தரிசாக பல நிலங்கள் இருந்தன. கண் எட்டும் வரையில் பல நிலங்களை நாங்கள் எங்கள் பெயரில் மாடு மேய்க்கும் புல்வெளிகளாக உபயோகப்படுத்தி வந்தோம். அந்த புல்வெளியில் பாதி இப்போது சமன் செய்து உழுது நெல் விதைக்க ஆரம்பித்து விட்டோம். புதுமண் என்பதால் உரம் அடிக்க வேண்டிய அவசியமே இல்லாமல் நெல் செழித்து வளருகிறது, கால்வாயிலிருந்து நீர் மொண்டு அவர்கள் ஊற்று கிறார்கள். நெல் அமோகமாக விளைகிறது, ஆனால் வாங்கு வதற்குத்தான் ஆள் இருக்காதோ என்ற பயம் வருகிறது. அறுவடை செய்து அவிக்க முடியாது போகுமோ என்று தோன்று கிறது. யாரும் உண்ணாமல் போகவா உழைக்கிறோம் என நினைவு எழுகிறது.''

மிகப் பெரிய பிரச்சனையை இராஜாதிராஜன் முன்பு அந்த வேளாளன் வைத்தான். இராஜாதி ராஜனுக்கு சொரேர் என்றது.

★ ★ ★

அத்யாயம் 93

யுத்த நேரத்தில் எதிரிகள் அசைவை, முன்னேற்றத்தை தகவலாக கொண்டு வந்து சேர்ந்தால் போதும். இதற்கு பலநூறு குதிரை வீரர்கள் இருக்கிறார்கள். சொல்லப்பட்டதை தெளி வாக வந்து சொல்லி விடுகிறார்கள். அல்லது ஓலை நறுக்கில் எழுதி கொடுக்கப்பட்டால் கொண்டு வந்து சேர்த்து விடுவார் கள்.

ஆனால் ஒற்றர்கள் என்பது வேறு, எதிரிகளோடு கலந்து அங்கு என்ன நடக்கிறது என்பதை யார் முக்கியம் என்பதை சொந்த நாட்டுக்கு அனுப்ப தனித்திறன் வேண்டும். இது மிக ஆபத்தான வேலை, தஞ்சைக்கு அருகே உள்ள பள்ளி அக்ர ஹாரத்தில், முன்பு பாடசாலையாக இருந்த ஒரு உறுதியான கட்டிடத்தில் ஒற்றர்களுக்கென்று தனியாக ஒரு கடிகை* இருந்தது. உயர்தரமான கல்வி கற்றுத்தரும் இடத்திற்கு கடிகை என்று பெயர். வாள்பயிற்சி, வேல் பயிற்சி, முஷ்டி சண்டை என்பதோடு இரவில் பதுங்கி சுவர் ஏறவும், கயிறு பிடித்து இறங் கவும், பறவைகள் போல் கத்தி விஷயங்கள் பரிமாறிக் கொள் ளவும் பல விஷயங்கள் பரிமாறப்பட்டன. வாயில் மூங்கில் வைத்த விரைகின்ற ஆற்றோடு போவதும், குளங்களில் மூழ்கி இருப்பதும் அவர்களுக்கு சொல்லித் தரப்பட்டது. உடும்புக் கட்டி ஏற அவர்கள் பழக்கப்படுத்தப் பட்டார்கள். உடம்பைத் தடவி கொடுத்து நான் உன்னை வீசப் போகிறேன் என்று உடும் புக்கு சொல்லி விட்டால் உடும்பு என்கிற அந்த விலங்கு தயா ராகி விடும். முதுகு வருடி கொடுத்தால் சிலிர்த்து தரையை உறுதியாக பற்றிக் கொள்ளும். வாலை பிடித்து தலைகீழாக தூக்கினால் கைகளையும் கால்களையும் பரப்பி எங்கும் போய் ஒட்டிக் கொள்வதற்கு அந்த விலங்கு தயாராகி விடுவது தெரியும். உடும்பை எறிவது எளிதல்ல. அதற்கு அடிபடாமல்

* கடிகை : கல்லூரி

அதேநேரம் வேகமாக சுவர் உச்சிக்கு அதை அனுப்ப வேண்டும். இந்த பயிற்சியில் சில உடும்புகள் அடிபட்டு செத்துப் போவது உண்டு. அதனால் உடும்புகளுக்கு எப்பொழுதும் அவசியம் இருந்தது.

வேடர்கள் சின்னஞ்சிறு குஞ்சுகளாக இருக்கும்பொழுதே உடும்புகளை கொண்டு வந்தார்கள். பெரிய உடும்பை தூக்கி வருவதும் கஷ்டம். வீசி எறிவதும் கஷ்டம். ஆனால் எப்பொழுது எந்த விதமான உடும்பு தேவைப்படும் என்று சொல்ல முடியாது. உடும்பை துணியில் சுற்றி தலை மட்டும் தெரியும்படியாக வெளியே விட்டு முதுகிலே கட்டிக் கொண்டு நடப்பார்கள். ஏதோ ஆயுதம் எடுத்துக் கொண்டு போவதுபோல் தோன்றும். துணியை பிரித்த பிறகுதான் உடும்பு என்பது தெரியும். சோழப் படையில் உடும்பு முக்கிய அங்கம் வகித்தது, அதுவும் ஒற்றர் படையில் அதற்கு நிச்சயம் தேவை இருந்தது. உடும்போடு ஸ்நேகம் கொள்ளாது ஒற்றர் படையில் சிறந்துவிட முடியாது. உடம்பை தொட மறுத்த சில பேர் புறாக்களில் நாட்டம் காட்டி னார்கள்.

கொண்டையுள்ள சில ஜாதி புறாக்கள் சீழ்கை சத்தத்தை புரிந்து கொண்டன. இருட்டிலும் தடம் மாறாமல் போயின. விடியற்காலையில் வந்து இறங்கின. மரங்களில் தங்கிவிட்டு பிறகு மெல்ல கட்டிடத்தில் இறங்கி, நீண்ட ரேழியின் கைப்பிடி யில் உலாவின. கால்களில் உள்ள சிறு குமிழியை கழட்டிய பின்தான் உண்பதற்கு பறந்தன. அதுவரை முன்னும், பின்னும் ஒரு அவஸ்தையோடு நடைபயின்றன.

அந்த பாடசாலைக்கு கிருஷ்ணன் ராமன் தலைமை தாங்கி னார். வயது முதிர்ந்த மறவர்கள் ஒற்றர்களாக வாழ்ந்தவர்கள் தெளிவான பாடம் நடத்தினார்கள். இராஜாதி ராஜன் கிருஷ் ணன் ராமனுக்கு தனக்கு ஒரு ஒற்றர்படைதேவை என்று சொன் னதும் பத்து பேர் அடங்கிய ஒரு சிறு படையை இராஜாதி ராஜ னுக்கு அனுப்பி வைத்தார். அவர்களுக்கு இராஜாதி ராஜன் ஒரே விதமான வெள்ளி மோதிரம் செய்து கொடுத்தான். அந்த மோதிரத்தின் பின் பகுதியில் கல் வைத்த இடத்திற்கு நேர் பின்னே நண்டு உருவம் இருந்தது. இந்த கடக மோதிரம் அவனை ஒற்றன் என்று சொல்லியது, ஒற்றன் நேரே நடக்க

மாட்டான். கடகமும் நேரே சொல்லாது. சட்டென்று பதுங்கும், மறுபடி வெளிவரும். ஒரு குழியில் இறங்கி இன்னொரு குழி யிலிருந்து மேலெழும். நண்டு பிடிப்பதற்கு எளிதான ஜந்து அல்ல. நண்டின் முதுகில் ஒரு வரி, இரண்டு வரி, மூன்று வரி என்று கோடுகள் இருந்தன. மூன்று வரி உள்ளவன் தலைவன். உபதளபதி, ஒரு வரி உள்ளவன் சேவகன் என்ற தெளிவு அரசாங்க அதிகாரிகளுக்கு இருந்தது.

ஒற்றர்கள் எல்லோரும் தங்களை ஒற்றர் என்று சொல்லிக் கொள்வதில்லை. வேறு ஏதேனும் தொழிலில் உட்கார்ந்திருப் பார்கள். வேறு ஏதேனும் ஒரு கூட்டத்தோடு சேர்ந்திருப்பார் கள். அனேகமாக பாணர் கூட்டத்தில் தலை சுமை தூக்கு பவராக நடந்து கொண்டிருப்பார்கள். சட்டென்று தலைச் சுமையை வைத்துவிட்டு மறைந்து விடுவார்கள். ஒற்றர்கள் தனியாக போவதில்லை. வணிகர் கும்பலோடோ, அல்லது பஞ்சமர்கள் பயணப்படும் போதோ அல்லது மறவர் கூட்டத் தோடோ கலந்து விடுவார்கள். அநேகமாக மறவர் கூட்டத்தோடு போகும்போது யானைக்கு அருகேயே நிற்பார்கள். யானையை பார்த்த பலபேர் அருகே நிற்கும் பாகனை கவனிப்பதில்லை. பாகனுக்கு உதவியாக இருப்பவனையும் கவனிப்பதில்லை.

கூத்தாடிகள் கூட்டத்தில் பெண்களையும், பாடுகின்ற ஆண்களையும் கவனிப்பார்களே தவிர, சுமை தூக்குபவனை விட்டு விடுவார்கள். வணிகர் கூட்டத்தில் கோவேறு கழுதை களையும், மட்ட குதிரைகளையும் இழுத்து வருபவராக இருப் பார்கள். வணிகர் தலைவர் ஒரு ஒற்றனை யார் என்று அறியா மல் 'திடீரென்று வருகிறாய் திடீரென்று போகிறாய் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாய், ஒழுங்கான கூலி வேண் டாமா.' என்று உரக்க க்த்தினார். அவரை தனியே அழைத்துப் போய் அவன் மோதிரத்தை காட்டினான். சட்டென்று முகபாவம் மாறிற்று.

''மன்னித்துக் கொள்ளுங்கள்'' என்று சொன்னார்.

''இல்லை. என்னை வழக்கம் போலவேத் திட்டுங்கள். அதுதான் எனக்கு வசதி'' என்று சொல்லிவிட்டுப் போக, அவரும் உரத்த குரலில் திட்டினார். பிறகு அந்த ஒற்றனுக்கு உண்டான சௌகரியங்களில் கவனமும் செலுத்தினார். அந்த

வணிகர் இதுவரை அருண்மொழிபட்டனையோ, இராஜாதி இராஜனையோ, அரையன் ராஜராஜனையோ, கிருஷ்ணன் ராமனையோ நெருக்கத்தில் கண்டதில்லை. தொலைவிலிருந்து கும்பலோடு கும்பலாய் கும்பிடுவதோடு சரி, ஆனால் எல்லா அதிகாரிகளையும், அரச வம்சத்தினரிடமும் நெருங்கி பழகும் ஒற்றர்களைக் கண்டு பல வணிகர்கள் வியப்படைந்தார்கள்.

''சக்ரவர்த்தி இராஜேந்திரரை நெருக்கமாக பார்த்திருக் கிறாயா.''

''கால் பிடித்து விட்டிருக்கிறேன்.''

''அடேயப்பா. எப்போது.''

''ஏதோ ஒரு இரவு, தகவல் வந்தது. கொண்டு போய் சொன்னேன். பல விவரங்கள் கேட்டார். எல்லாவற்றுக்கும் பதில் சொன்னேன். நாங்கள் சந்தித்துக் கொண்டது காட்டு வழிப் பாதை. நல்லது என்று சொல்லி தூங்கத் துவங்கினார். மறுபடி யும் கூப்பிட்டு அனுப்பினார். 'நீ இங்கேயே என் அருகில் படுத்துக் கொள். கொஞ்சம் கால் பிடித்து விடு. நான் அரை தூக்கத்தில் இருக்கிறேன். திடீரென்று ஏதாவது தோன்றினால் உன்னிடம் கேட்டு தெளிவு பெறுகிறேன்.' என்றார். நன்றாக தூங்குங்கள் என்று நான் கால் பிடித்துவிட்டேன். விடியும் வரை எழுந்திருக்கவேயில்லை. விடிந்த பிறகு குளிப்பதற்கு போனார். அப்பொழுதும் கூப்பிட்டு அனுப்பினார். முதுகு தேய்த்துவிடச் சொன்னார். பல கேள்விகள் கேட்டார். அங்கும் பதில் சொன் னேன்.''

''என்ன கேள்வி,''

''சொல்லலாகாதே,''

''ஆமாம். ஆமாம். அது அரசாங்க ரகசியம். அரையன் ராஜ ராஜனுக்கும் அருண்மொழி பட்டனுக்கும் சண்டை என்று சொல்கிறார்களே. வாள் உருவி மோதினார்களாமே.''

''அதெல்லாம் இல்லையய்யா. ஒரு விஷயம் பத்து விஷய மாக இறக்கை கட்டிக் கொண்டு வருகிறது. வாக்குவாதம் செய் தார்கள். அதுவும் இரண்டு வீரர்களின் பொருட்டு. அதுவும் அந்த இடத்திலேயே சுமூகமாக தீர்ந்துவிட்டதே.''

''இன்னும் ஒரு கேள்வி. இதற்கு மட்டும் பதில் சொல் கிறாயா.''

''அவசியமென்றால் பதில் சொல்லுகிறேன். இல்லையென்றால் என்னால் பொய்கூட சொல்ல முடியும்.''

''பொய் சொல்ல வேண்டாம். முடியாது என்று சொல்லிவிடுங்கள். இராஜாதி ராஜன் இளைஞனாக இருக்கிறாரே. சக்கரவர்த்தியின் அனுபவம், அவருடைய அறிவு இவருக்கு இருக்குமா. அனுபவம் இருக்காதுதான். அந்த அளவு சூட்சமம் உடையவரா. நீ நெருங்கி பழகியிருக்கிறாய் என்பதால் தேசம் பற்றிய கவலையோடு கேட்கிறேன்.''

அந்த ஒற்றன் சிரித்தான்.

''கடைசியாக சொன்ன வாக்கியம் நன்றாக இருந்தது. தேசம் பற்றிய கவலையோடு கேட்கிறேன் என்பதால் இதற்கு நான் அத்துமீறி பதில் சொல்கிறேன். இராஜேந்திரரை விட இராஜாதிராஜன் பலமடங்கு கெட்டிக்காரர். மிக வேகமானவர். மிகத் திறமையானவர். அதே சமயம் தந்தை இருக்க தான் ஆடக்கூடாது என்று அமைதியாக இருக்கிறார். இந்த பக்குவம் எல்லோருக்கும் வந்துவிடாது. உண்மையில் இந்த பக்குவம் இராஜேந்திரருக்குக் கூட இல்லை. வெகுவேகமாக ஊர் தெரிய இராஜராஜரை எதிர்த்தவர். தேசம் இரண்டுபட்டது. இந்த விஷயம் இனி இங்கு நடக்கக்கூடாது என்பதில் இராஜாதிராஜன் தெளிவாக இருக்கிறார்.''

''அப்படிப் போடு அரிவாளை, மிக நன்றாக இருக்கிறது நீ பேசுவது. மிக நிம்மதியாக இருக்கிறது. உனக்கு நான் ஏதேனும் பரிசு தர விரும்புகிறேன். என்ன தரட்டும்.''

''உங்களால் ஆனதை கொடுங்கள்.''

''இன்னொரு கேள்வி, தவறாக நினைத்துக் கொள்ளக் கூடாது.''

''கேளுங்கள்.''

''உனக்கு என்ன வருவாய், என்ன அளிக்கிறார்கள்.''

''மாதத்திற்கு ஐந்து கழஞ்சு. வீடு விட்டு வெகுதூரம் போய் வெளியே இருக்க வேண்டுமென்றால் அங்கு செலவுகளுக்கு என்று கைநிறைய ஏதேனும் கொடுப்பார்கள். குறைந்தால் அவசியத் தேவை ஏற்பட்டால் மறுபடி ஆள் அனுப்பி, ஒரு

ரகசிய ஓலை அனுப்பி வேண்டுவன கேட்டு வாங்கிக் கொள் வேன்.''

''அப்பொழுது காசுக்கு பிரச்சனை இல்லை என்று சொல்.''

''சோழ தேசத்தில் கோட்டை காவலர்களுக்கு முன்னணி மறவர்களுக்குக்கூடப் பிரச்சனை இருக்கலாம். ஆனால் காசு பிரச்சனை ஒற்றர்களுக்கு அறவே வராது. வரக்கூடாது என்று அரசர்களுக்குத் தெரியும்.''

''எங்கேனும் சிக்கிக் கொண்டிருக்கிறாயா. உயிர் ஆபத்து வந்ததுண்டா. முடியுமானால் பதில் சொல்.'' வணிகர் அருகே வந்து ஆவலாக கேட்டார்.

''ஒருமுறை கங்கே யாதவிடம் மாட்டியிருக்கிறேன்.''

''அடேயப்பா. மிகக் கொடுமையானவன் என்று கேள்விப் பட்டிருக்கிறேனே. அவனுடைய அரசு அதிகாரிகளையே சவுக்கால் அடிப்பான் என்று சொல்வார்களே.'' வணிகர் வியந் தார்.

''ஆமாம். அவனிடம்தான் மேலைசாளுக்கியத்தில் மாடு கள் வாங்க போகும்போது மாட்டிக் கொண்டேன். மாடுகள் வாங்குவது நோக்கமல்ல. கிருஷ்ணா நதிக்கரையில் உள்ள நகரங்களை, படைகளை பற்றி கணக்கெடுத்து வர வேண்டும். வரைபடம் தர வேண்டும். நான் கிருஷ்ணை நதி படம் வரைந்து அதன் இரு பக்கங்களிலும் உள்ள நகரங்களை வெள்ளை துணியில் குறித்துக் கொண்டு வந்தேன். அது சிக்கிவிட்டது. உனக்கெதற்கு, நீ யார் என்று காட்டுத்தனமாக அடித்தான். நான் இடையன் என்றும், இந்த இடங்களில் பசுக் கள் கிடைக்கும் என்றும், அந்த பசுக்களுக்காக கிருஷ்ணை கரையோரம் பயணப்பட வேண்டும் என்றும் எனக்கு சொல்லப் பட்டது. இது அதற்குண்டான வரைபடமே தவிர, வேறு ஒன்றும் தெரியாது என்று மூன்று நாள் அடிவாங்கியும் சாதித் தேன். என்ன தோன்றியதோ என்ன காரணமோ சட்டென்று விட்டு விட்டான்.

விடுதலையானால் உடனே சோழ தேசம் திரும்பக் கூடாது. அது எங்களுக்கு அடிப்படை பாடம்.''

''பிறகு.''

''இன்னும் தொடர்ந்து இடையனாகவே பசு வாங்கப் போனேன். என் பின்னே பத்து கிராமங்கள் தொடர்ந்து விட்டு மறுபடியும் மடக்கினார்கள். எங்கே போவதாக உத்தேசம் என்று கேட்க, நான் குடகு என்று பதில் சொன்னேன். அவர்கள் என்னை இரண்டு நாள் வைத்திருந்து என்னை முழுவதுமாக நம்பி விட்டு விட்டார்கள். நான் குடகு போவதாக போக்கு காட்டி விட்டு, கிருஷ்ணா நதிக்கரையில் செம்படவனாக மாறி தலை தொப்பியோடும், வலையோடும் பயணப்பட்டு கீழைச் சாளுக்கியம் வந்து அங்கிருந்து குதிரை ஏறி சோழ தேசம் வந்தடைந்தேன். நான் கொடுத்த தகவல்கள் இராஜேந்திர ருக்கு பேருதவியாக இருந்தன.

கிருஷ்ணா நதி வரையில்தான் எதிர்ப்பு பலமாக இருக்கும். பிறகு மெல்ல மெல்ல வலுவிழந்த இடமாகத்தான் மேலை சாளுக்கியம் இருக்கும் என்று தகவல் சொன்னேன். அவர் இன்னும் பலரிடம் இதை கேட்டு தெளிவுபடுத்திக் கொண்டார். எத்தனை படைகள் இருக்கும் என்று பலரிடம் கேட்டார். ஆனால் நான் சொன்ன கணக்கே சரியாக இருந்தது,

கங்கே யாதவ் எப்படி இருப்பான் என்று கீழை சாளுக்கியத்திலேயே பலருக்கு தெரியாது, நான் சொல்லச் சொல்ல ஓவியர் ஒருவர் படம் வரைந்து கொடுத்தார். அதுவே கங்கே யாதவின் அடையாளமாக பல தளபதிகள் வாங்கி பார்த்து நெஞ்சில் பதித்துக் கொண்டார்கள்.

அவனை பார்த்திருக்கிறார்கள், அவன் போரிடும்போது அவனை தேடியிருக்கிறார்கள். ஆனால் அவன் நரி. சிக்காமல் தப்பித்து விட்டான்.''

''பலமான அடியா.''

ஒற்றன் சிரித்தான்.

''அதேபோல் அடிவாங்கி காட்ட வேண்டுமா'' என்று சாதாரணமாகக் கேட்டான்.

''இல்லையய்யா, உங்கள் தொழிலை பார்த்தால் பயமாக இருக்கிறது. வணிகனான நானே பயந்து பயந்து பயணப்படு கிறேன். நீங்கள் தனி ஆளாக எப்படித்தான் போய் வருகிறீர் களோ. எனக்கு தெரியவில்லை. எல்லை தாண்டினால் வீடு

நினைப்பு வந்து விடுகிறது. உங்களுக்கெல்லாம் நினைப்பு வராதா. மனைவியின் அணைப்பு மனசு தேடாதா.''

''எல்லாரைப் போல நாங்களும் மனிதர்கள் தானய்யா. ஆனால் தேசத்திற்கென்று வாழ்க்கைப்பட்டு விட்டோமே. அரசருக்கென்று கடன்பட்டு விட்டோமே. அதனால் சகலத்தையும் மறந்து உள்ளுக்குள் இறங்குகிறோம்.''

''ஆனால் போர் வீரர்கள் பாராட்டப்படுவது போல ஒற்றர்கள் பாராட்டப்படுவதில்லையே.''

''ஒற்றர்கள் யார் என்று சோழப்படை வீரர்களுக்கே தெரியக் கூடாது. ஆனால் மிகக் கவனமாக பாராட்டுவார்கள்.''

''போரின் போதும் உடன் போவீர்களா.''

''போரின் போது போவோம். ஆனால் போருக்கு போக மாட்டோம். போர் நடக்கும் இடத்தை தாண்டி போவோம். அங்கு என்ன நடக்கிறது என்று அவதானிப்போம். இப்பொழுது கீழை சாளுக்கியம் நுழைந்தார் என்றால் கீழை சாளுக்கியனாகவே வேடம் போட்டு வடக்கிருந்து வந்தவர் போல வேர்க்க, விறு விறுக்க அவர்களுடன் சேர்ந்து கொள்வோம். அவர்கள் மொழியில் பேசுவோம். அந்த இடத்தின் லட்சணம் என்ன என்பதை இரவோடு இரவாக போய் தகவல் சொல்லிவிடுவோம். அந்த படையெடுப்புக்கு எங்கள் சேவை உதவி செய்யும்.''

''ஒரு பத்து பொன் கழஞ்சு கொடுக்கட்டுமா.''

''அது அதிகமய்யா. வணிகத்திற்கு உபயோகப்படுத்துங்கள். உங்களிடம் இருப்பதை கொடுங்கள். அதை வாங்கிக் கொள்கிறேன், என் மனைவிக்கு அது உதவும். ஆனால் உங்களிடம் நான் யாசிப்பது ஒன்று உண்டு.''

''என்ன.''

''சோழ தேசத்திற்கு கடன்பட்டிருங்கள். சோழ மன்னருக்கு வாழ்க்கைபட்டிருங்கள். இது மட்டுமே நீங்கள் செய்யும் பெரிய உதவி.'' அவன் கை கூப்பினான். வணிகர் கண்களிலிருந்து நீர் வழிந்தது.

'சோழ தேசம் யாரோ சில உபதளபதிகளால், தளபதிகளால் ஆனது அல்ல. அதுமிகப் பெரியவலைப் பின்னல். எங்கேங்கோ

சுருக்கு இருக்கிறது, எப்படி எப்படியோ இழுக்கப்படுகிறது. இராஜேந்திரருக்குத்தான் அது தெரியும். அரையன் ராஜராஜனும், அருண்மொழிப்பட்டனும் நடு சபையில் சண்டையிட்டுக் கொண்டது பிசகு. அவர்களா ஜெயித்தார்கள். இந்த வீரன் உதவியல்லவா தேவைப்பட்டிருக்கிறது.' வணிகர் மல்லாக்க படுத்துக் கொண்டு யோசித்தார். வலது பக்கம் திரும்பி அருகே படுத்துக் கொண்டிருக்கிறவன் கையை தடவி கண்ணில் ஒற்றிக் கொண்டார்.

அந்த ஒற்றன் சிரித்துக் கொண்டான்.

பத்து கழஞ்சு ஊருக்கு அனுப்பிவிட வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டான், அதை அனுப்பவதற்கெல்லாம் ஒற்றர்களுக்கு ஆட்கள் இருந்தார்கள். மிக மிக நம்பிக்கையான பஞ்சமர்கள் இருந்தார்கள். ஒரு சிறு கீறல் கூட இல்லாது தங்கக் கழஞ்சுகளை வீட்டில் சேர்த்துவிடுவார்கள். இரண்டு நாள் கொல்லைப் புறத்திலோ, வாசற்படியிலோ உட்கார்ந்து வீட்டின் தன்மையை புரிந்து கொண்டு பிறகுதான் சேர்ப்பார்கள்.

''நீ வந்து அமரும்போதே நினைத்தேன், ஏதோ தகவல் என்று. ஏதேனும் சாப்பிட்டாயா.'' என்று அந்த ஒற்றனுடைய வீடு விசாரிக்கும். குடிக்க மோரும், குழம்பு சோறும் கொடுக்கும். புதிய ஆடைகள் கொடுக்கும். வந்த வழி திரும்ப நெல் பொரியும், வெல்லமும் கலந்து மூங்கில் குழாயில் அடைத்து கொடுக்கும். வாய் அகன்ற மண் சட்டியில் நெற் பொரியை போட்டு, வெல்லத்தை நசுக்கி கொஞ்சம் தண்ணீர் தெளித்து ஊற வைத்தால் அற்புதமான உணவாகி விடும். திம்மென்று வயிறு அடைத்துக் கொள்ள ஒரு பகல் முழுவதும் நடக்க முடியும்.

அதே ஒற்றன் அவன் யாரிடம் அனுப்புவது என்று யோசித்தான். அப்படிப்பட்ட ஒரு ஒற்றன் அப்பிமையனுக்கு எதிரே வந்து நின்றான்.

''நீங்கள் அழைத்தீர்களாமே. உடனடியாக வந்து பார்க்கச் சொன்னீர்களாமே. இராஜாதிராஜன் கட்டளையிட்டார். வந்திருக்கிறேன். உங்களுக்கென்று தனியே என்னை பகுத்து அனுப்பியிருக்கிறார். உங்கள் உத்தரவின்படி நடந்து கொள்ளச் சொல்லியிருக்கிறார். என்ன உத்தரவு.''

''பெயர் என்ன.''

''என் பெயர் வீர நாராயணன்.''

''வைணவமா.''

''ஆமாம்.''

''எந்த ஊர்.''

''தொண்டைநாடு. என் தாத்தா மதுராந்தகம் ராமர் கோவிலுக்கு காவலாக இருந்தவர். பணி சுத்தம் பார்த்தவர். மூன்று முறை கும்பாபிஷேகத்தில் கலந்து கொண்டு நடத்தியவர். என் தகப்பனார் காலத்தில் அதாவது இராஜராஜ சோழர் காலத்தில் சோழ தேசத்திற்கு இடம்பெயர்த்து விட்டோம். தஞ்சைக்கு அருகே உள்ள பள்ளி அக்ரஹாரத்தில் தான் நாங்கள் குடியிருந்தோம். எல்லை காவல் பாடி என் தந்தையின் கட்டுப்பாட்டில் இருந்தது. நான் விருப்பப்பட்டு ஒற்றர் படையில் சேர்ந்தேன்.''

''பள்ளி அக்ரஹார கடிகை பற்றி உயர்வாக சொல்வார்கள். கிருஷ்ணன் ராமன் நேரே பாடம் நடத்துவாராமே.''

''ஆமாம். பறவையைப் போல பாடச் சொல்லித் தருவார். அந்த சப்தம் அவரால் மிக நன்றாக செய்ய முடியும்.''

''ஒரு ஆந்தை கத்தினால் இன்னொரு ஆந்தை கத்துவது போலவா.''

''அல்ல. ஆந்தை கத்தி எதிர்பக்கம் ஆந்தை கத்தினால் சந்தேகம் வரும்.''

''பிறகு.'' அப்பிமையர் வியந்தார். கீழை சாளுக்கியத்தில் இவ்வளவு செம்மையான நிர்வாகம் இல்லவே இல்லை. கிருஷ்ணன் ராமன் எது செய்தாலும் சீராக செய்கிறார்.

''ஒரு ஆந்தை கத்தியபிறகு ஒரு கிளி படபடக்கும். படபடத்து 'க்யோவ்' என்று ஒரு முறை கூவும். நீ சொன்னது புரிந்தது. இங்கே இருக்கிறேன் என்று அதற்கு அர்த்தம். எதிரி வருகிறான் என்றால் ஆந்தை கக் கக் கக் என்று கூறும். கிளி அதை வாங்கிக்கொள்ளும். சிறிது நேரம் கழித்து படபடவென்று சிறகு அடித்து திசை மாறுவது போல சப்தம் எழுப்பும். மறுபடி

கழுதை கூவல், குதிரை கனைப்பு, நரியின் ஊளை என்று பல்வேறு விஷயங்கள் இருக்கின்றன. உங்களுக்கு நான் என்ன செய்ய வேண்டுமென்று சொல்லுங்கள்."

"கீழை சாளுக்கியத்தில் மறவர்களையே ஒற்றர்களாக் குவோம். இங்கேதான் ஒற்றர்களுக்கென்றே தனிப்படை இருக் கிறது.

எனக்கு கங்கே யாதவிடமிருந்து ஒரு ஓலை வந்தது, உனக்கு படிப்பறிவு உண்டா." அவர் ஓலையை நீட்டினார். அவன் வாங்கி படித்தான்.

"தாயாதி என்று கொண்டாடுகிறார். உளவு பார்க்கச் சொல்லுகிறார்."

"ஆமாம், இதை நான் இளவரசரிடம் தெரிவித்தேன்."

"சொன்னார்."

"அவர் சொன்னதுபோல நான் கங்கே யாதவ் பக்கம் சாயப் போகிறேன். அந்த வீரன் எங்கிருந்து வருகிறான். எப்படி போய் நான் சொன்ன தகவலை கங்கே யாதவிடம் தெரிவிக் கிறான். கங்கே யாதவை எங்கே சந்திப்பான் என்ற தகவல் வேண்டும். கங்கே யாதவிடமிருந்து அவன் வந்தது போல என் பக்கமிருந்து நீ மேலை சாளுக்கியம் போக வேண்டி யிருக்கும்."

"மேலை சாளுக்கியம் போவது ஒன்றும் கடினமேயில்லை. ஒன்றும் கட்டுக் காவல் இல்லை. குறுக்கு வழியில் சிங்கங்கள் உலவும் காட்டு வழியாக நான் பாதைக்கு போய் இறங்கிவிடு வேன். ஆனால், இப்பொழுது கங்கை கொண்ட சோழபுரத்தி லிருந்து கிளம்பினால் நான்கு நாளாகும் போய் சேருவதற்கு, ஒரு தொலைவு வரை குதிரையில் போய்விட்டு பிறகு நடக்க வேண்டியதுதான். எல்லையை தாண்டி குதிரைக்குள் போனால் சந்தேகப்படுவார்கள். அங்கங்கே கிராமங்களில் நின்று விசாரிப் பார்கள். எனவே, கிராமங்களை தொடாது காடுகளூடே நடக்க கால்தான் வசதி. குதிரை தடுமாறும். காட்டி கொடுத்து விடும்."

"உடனடியாக போக வேண்டியிருக்காது, அவன் இங்கே, எங்கேயாவதுதான் உலவிக் கொண்டிருப்பான். இந்தமாதிரி உருவம்." அவன் ஒரு துணியை விரித்து காண்பித்தான்.

"இது வேண்டாம்."

"ஏன்"

"மறுபடியும் உங்களை சந்திக்க வரும்போது எனக்கு ஆள் அனுப்புங்கள்."

"ஏன் இதை வேண்டாம் என்கிறாய்."

"இந்த தோற்றத்தில்தான் இருப்பான் என்று சொல்ல முடியாது. உங்களை சந்திக்க வரும்போது இவ்வளவு பெரிய மீசை இருக்கும். நாலு தெரு தள்ளி போனால் மீசையை உருவி எடுத்து விடுவான். வேறு வடிவத்தில் இருப்பான்.

மேலை சாளுக்கியத்தில் இருக்கும் ஒற்றர்கள் திறமையானவர்கள். அதற்கு காரணம் கங்கே யாதவ். அவன் உங்களை தொடர்பு கொள்ளும்போது எனக்கு செய்கை செய்யுங்கள்."

"என்ன சைகை செய்வது."

"ஒரு தாம்பளத்தை எடுத்து தரையில் வீசுங்கள். அந்த சப்தம் எனக்கு கேட்கும்."

"நீ எங்கிருப்பாய்."

"அது உங்களுக்கும் தெரிய வேண்டாம்."

"ஏன்."

"அந்த திசை நோக்கி நீங்கள் பார்த்தால், நீங்கள் பார்ப்பதை அவன் பார்த்தால் நான் மாட்டிக் கொள்வேன். உங்களுக்கு அருகில்தான் இருப்பேன்."

"அடேயப்பா. என்ன தந்திரமடா இது."

"இதுதான் ஒரு படையின் கால்கள். ஒற்றர்கள் இல்லாது ஒரு படை நடக்கவே முடியாது. ஒரு முழம் கூட நடக்க முடியாது." அவன் கம்பீரமாகச் சொன்னான். கால் தொட்டு வணங்கினான்.

அவன் போவதை பார்த்தார். இறங்கி எட்டி பார்க்க அவன் தெருவின் வலப்பக்கம் திரும்பினான். இங்கே எதிரே இருப்பான் என்றான் இப்பொழுது போகிறானே என்று அவர் கவலைப் பட்டார். அந்த ஒற்றன் மடமடவென்று கோடி வீட்டு சுவர் ஏறி அந்த கொல்லைச்சுவர் ஓரமாகவே கீழ் இறங்கி, மேலேறி

பதினோரு வீடுகள் தாண்டி அவர் வீட்டை அடைந்தான். மரம் ஏறி அவர் வீட்டின் ஓட்டு பக்கம் பூனைபோல கால் வைத்து இறங்கினான். ஓடுகள் வேய போடப் பட்டிருந்த சட்டங்களில் கால் வைத்து, சுவர் பிடித்து மேல் தளம் ஏறி இன்னும் சற்று தாண்டி முதல் மாடியின் முதல் அறையில் ஓரமாக உட்கார்ந்து கொண்டான். அதில் பழைய மரச் சாமான்கள் இருந்தன. விருந்தினர் வந்தால் தங்குவதற்குண்டான இடமாக அது இருந்தது. மடியிலிருந்து வெற்றிலை பாக்கு எடுத்து பிரித்து நிதானமாக போட்டுக் கொண்டான். சாளரத்தின் வழியே தெரு தெரிந்தது. எதிர் வீடு தெரிந்தது. சட்டென்று எதிர் வீட்டில் மனிதர்கள் வர, அவன் சுவர் ஓரம் ஒதுங்கி கொண்டு அந்த பகல் நேரத்தில் எதிர்வீட்டை கவனித்தான்.

ஒரு ஆள் வெற்று மார்போடு இடுப்பில் சுற்றிய துண்டோடு மேல் தளத்திற்கு வந்து எட்டி பார்ப்பது தெரிந்தது. அந்த உருவம் போர் வீரன் உருவமாக இருந்தது. அவன் கழுத்தில் கயிறு தொங்கியது. கயிறின் கீழே ஒரு வெள்ளிப் பெட்டகம் கோர்க்கப்பட்டிருந்தது.

'அட, மேலை சாளுக்கியன். வீர சைவன். இங்கு உட்கார்ந்து கொண்டுதான் வேலை ஆரம்பிக்கிறாயா. நல்லது. எனக்கு எளிது,' என்று ஒரு மர ஆசனம் எடுத்து சாளரத்திற்கு அருகே போட்டுக் கொண்டான். ஒரு துணியை குறுக்கே விரித்தான். அந்த துணி வழியாக எதிரே நடப்பவை தெரிந்தன. துணிக்கு பின்னால் அந்த அறை இருட்டாக இருப்பதால் அவன் இருப்பு தெரியவில்லை.

'பகல் நேரத்தில் அவன் வரமாட்டான். இரவுதான் வருவான். எனவே தூங்குவோம்.' ஆசனத்தில் சாய்ந்தபடி, கட்டிலில் கால் வைத்த படி, மெல்ல வெற்றிலை பாக்கு அரைத்துக் கொண்டே ஆழ்ந்து தூங்கினான். அந்தி நேரத்தில் எழுந்து கொண்டான். வாயில் உள்ளதை மெல்ல உட்கார்ந்தபடி நகர்ந்து போய் சுவர் ஓரம் துப்பினான். பானையில் இருந்த நீர் மொண்டு குடித்தான். பிறகு மெல்ல அறைக்குள் உட்கார்ந்து கொண்டான், இருட்ட துவங்கியது. 'தடாங்' என்ற தாம்பாள சத்தம் கேட்டது. அவன் விரைவாக தளத்தின் பின்பக்கம் போய் ஓட்டுச் சரிவில் கால் வைத்து இறங்கி, மரம் பிடித்து சறுக்கி கீழே உள்ள சுவர் மீது

இறங்கி, சுவரிலிருந்து கொல்லையில் குதித்து கொல்லையி லிருந்து உள்ளே போனான்.

சமையல் அறை சமையற்காரி ஏதோ பேசிக் கொண்டிருந் தவள், அவனைப் பார்த்து சட்டென்று நின்றாள். வாயில் விரல் வைத்தான்.

''என் பெயர் வீர நாராயணன். ஒற்றன். சோழ தேசத்தின் முதற்படை. இன்று காலையில் நான் அப்பிமைய்யரை சந்தித் தேன்.''

''ஆமாம், பார்த்துக் கொண்டிருந்தேன். நீர் குடித்து விட்டுத் தானே போனீர்.''

''நல்லது. சரியாக நினைவு வைத்துக் கொண்டிருக்கிறாய். உள்ளே வந்து அப்பிமைய்யரை ஒருவர் சந்திக்கும்போது நான் அப்பிமைய்யருக்கு உணவு எடுத்து அல்லது தாகத்திற்கு நீர் எடுத்து போக வேண்டும். நான் இங்கிருக்கிறேன் என்று அப்பிமைய்யருக்கு சொல்ல வேண்டும்'' என்று சொல்லி, தன் சட்டையை களைந்து மடித்து வைத்தான். தலைப்பாகை கட்டிக் கொண்டான். கால் செருப்புகளை கழற்றி ஓரம் வைத்தான். வாய் கொப்புளித்து சீராக்கிக் கொண்டான். ஒரு தட்டில் சொம்பும் அதில் நிறைய நீரும், ஒரு குவளையும் எடுத்துக் கொண்டான்.

குடிக்க நீர் கொண்டுவா. அவர் குரல் கேட்கும் வரை காத்திருந்தான். கேட்டதும் தாமதித்தான். உள்ளே போனான். குனிந்து வணங்கினான். அவனை பார்த்து அப்பிமைய்யர் மெல்ல திகைத்தார். ஆனால் அமைதியாக இருந்தார்.

''இவருக்கு கொடு,'' என்று சொல்ல, அந்த அறை இருட்டில் அவனை உற்று கவனித்த பிறகு நீர் கொடுத்தான். அதுவரை குனிந்து நின்றான். பிறகு குவளையும், சொம்பும் வாங்கிக் கொண்டு பின்னே நகர்ந்தான்.

'நான் பின்னே இருப்பேன் என்றல்லவா நினைக்கிறாய். இல்லை.'' அவன் சமையற் காரியிடம் சைகை சொல்லிவிட்டு, விரைவாக அவன் மாடியின் பக்க வழியாய் முன்புறம் போனான். ஏறி திண்ணையில் அமர்ந்து கொண்டான். இப்பொழுது அவனை நீண்ட துண்டு அலங்கரித்தது. இடுப்பில் வேட்டியை

வேளாளன் போல கட்டி இன்னொரு துண்டு கட்டி இறுக்கி இருந்தான். தலைப்பாகை இல்லாது தலையை படிய தடவி, இடுப்பிலிருந்து வதங்கிய எலுமிச்சை பழங்களை எடுத்து வாயின் மேற் கடையோரமும், முன் பக்கமும் அதக்கி கொண்டான். ஒட்டியிருந்த கன்னம் புஸ்ஸென்று இருந்தது. தோளை சுற்றி பெரிய துண்டு போட்டபடியால் அவன் உருவம் அகண்டதாக காட்சியளித்தத. சுவரில் இருந்து சுண்ணம் எடுத்து நெற்றியின் நடுவே திருநீறு போல பூசிக் கொண்டான். காதுகளில் இருந்த வளையத்தை கழட்டினான். இடுப்பிலிருந்து குண்டலம் போல இருந்த ருத்ராட்சங்களை காது ஓட்டையில் மாட்டிக் கொண்டான். இடுப்பின் பக்கத்திலிருந்து பெரிய கங்கணம் எடுத்து அணிந்து கொண்டான்.

''அப்பிமையர் இருக்கிறாரா,'' என்று கனத்த குரலில் கேட்டு காவலாளியிடம் விசாரித்தான்.

''உள்ளே பேசிக் கொண்டிருக்கிறார், இரு'' என்று காவலாளி சொல்ல, திண்ணையைத் தாண்டி உள்ளே இருந்த முதல் அறையில் அமர்ந்து கொண்டான். அவர்கள் பேசுவது அவனுக்கு கேட்டது.

அவன் அருகேதான் இருக்கிறான் என்று அப்பிமையன் உணர்ந்து கொண்டு உரக்கப் பேசத் துவங்கினார்.

''என்னை வெட்டிக் கொன்று போடுவார்களய்யா. என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாய்.''

''உங்களால் உதவி செய்ய முடியும்.''

''உயிரோடு இருந்தால்தானே உதவி. என்னை வெட்டி கொன்று போடுவார்கள் என்று சொல்கிறேனே.''

''இல்லை. உங்களால் தப்பித்து எங்களுக்காக உழைக்க முடியும். உங்கள் சாமர்த்தியம் ஊர் அறிந்தது.''

''என் சாமர்த்தியத்திற்கு என்ன கேடு. ஆனால் எங்கும் மலர முடியவில்லை. எவனெவனோ மிகப் பெரிய சேனாதிபதியாக இருக்கிறான். நான் தண்டநாயகன். சோழப்படையில் முதலில் சேர்ந்திருந்தால் இந்நேரம் நான் முதல் சேனாதிபதியாக இருப்பேன். அரையன் என்ற கருங்குரங்கு அலட்டிக் கொண்டிருக்கிறது. என் ஜாதிக்கார பையன் அதற்கு மேல்

திமிராகப் பேசுகிறான். எனக்கெல்லாம் வாழ வாழ்க்கையே இல்லை. வாய்ப்பே இல்லை.''

''அப்படி சொல்லாதீர்கள். உங்களை கீழை சாளுக்கியத்தின் ஒரு பகுதிக்கு குறுநில மன்னனாக மாற்றுவதாக சொல்கிறார்.''

''எந்த பகுதிக்கு. வெறும் பாறையாக இருக்கின்ற திருமலை திருப்பதி பக்கமா. மிக்க சந்தோஷம். எனக்கு வேண்டாம் என்று சொல்லுங்கள்.''

''இப்படி எடுத்தெறிந்து பேசாதீர்கள்.''

''எனக்கு கங்கே யாதவின் மீது நம்பிக்கை இல்லை. அவ்வளவே. நீ உடனே கிளம்பு. என்னை மாட்டிவிடாதே.''

''என்ன வேண்டும் கேளுங்கள்.''

எனக்கு கோதாவரிக்கரை... இல்லை வேண்டாம். எனக்கு எதுவும் வேண்டாம்.'' சட்டென்று பேச்சை மாற்றிக் கொண்டார்.

''ஏன் தடுமாறுகிறீர்கள். கங்கே யாதவ் சத்தியத்திற்கு கட்டுப்பட்டவர்.''

''ஹா. ஹா. கேள்விப்பட்டிருக்கிறேன்.''

''ஏன் கேலியாகப் பேசுகிறீர்.''

''கங்கே யாதவை நம்ப முடியவில்லை.''

''நம்பிக்கை வரும்படி என்ன செய்ய வேண்டும்.''

'ஆயிரம் பொன் கழஞ்சுகள் வேண்டும்.''

''எப்போது.''

''வெகு விரைவில்.''

''எதற்காக.''

''எனக்கென்று ஒரு படை திரட்ட வேண்டும். கீழை சாளுக்கியத்திலிருந்து நான் முன்னூறு பேரோடு வந்திருக்கிறேன். அவர்கள் சோழப்படையோடு தனித்த அடையாளத்தோடு இருக்கிறார்கள். முன்னூறு பேர் கொண்ட படை போதாது. சோழ தேசத்தில் இருக்கும்போது நான் ஏதேனும் பெரிய திட்டங்கள் தீட்டினால் எனக்குத் துணையாக இன்னும்

முன்னூறு பேர் தேவை, அதற்கு முன் பணமாக நீங்கள் ஆயிரம் பொன் கழஞ்சுகள் தர வேண்டும்.''

''நிச்சயம் தருகிறேன்.''

''கங்கே யாதவிடம் கேட்க வேண்டாமா.''

''தேவையில்லை. எனக்கு அதற்கான உத்தரவு தந்திருக் கிறார்.''

''காசுக்கு எங்கே போவாய்.''

''கையில் வைத்திருக்கிறேன்.''

''இந்த தேசத்திலேயே பொற்காசுகள் இருக்கின்றன. உருண்டைகளாக இருக்கின்றன. கழஞ்சுகளாக இருக்கின்றன. நாணயமாக இல்லாது ஒவ்வொரு உருண்டையும் ஒவ்வொரு கழஞ்சாக இருக்கிறது.''

''எப்போது தருவாய்.''

''நீங்கள் சரியான பதில் தர வேண்டும்.''

''என்ன பதில்.''

''இன்றைய செய்தி என்ன.''

''தனியாக ஒரு சபை இராஜாதிராஜன் சேர்த்துவிட்டார். வாசுதேவ நாராயணன், நீல கங்கரையன், வானவராயன், வல்லப தேவன், நான் என்ற ஐந்து பேரும் அவருக்கு துணையாக இருப்போம் என்று சபதம் இட்டிருக்கிறோம்.''

''சட்டென்று மாறிவிட்டீர்களே.''

''சோழ தேசத்தில் வாழ வாய்ப்பில்லையே. கீழை சாளுக் கியம் போக வேண்டும். அதுவே என் பூமி.''

''இங்கு வரச் சொல்லி யார் அழைத்தார்கள்.''

''இராஜேந்திரர்.''

''ஏன் அழைத்தார்.''

''நான் அங்கிருந்தால் அவருடைய மகனுக்கு எதிராக கலகம் செய்வேன் என்று அவருடைய ஒற்றர்கள் சொல்லி யிருக்கிறார்கள். எனவே என்னை அழைத்துக் கொண்டு இந்த பக்கம் வந்துவிட்டார்.''

''ஆனால் நீங்கள் சமீபமாகத்தானே இங்கு வந்தீர்கள். இராஜாதிராஜன் ஓலை அனுப்பிதானே கங்கை கொண்ட சோழ புரம் வந்தீர்கள்.''

''இங்கு வந்து போதும் போதும் என்று சொல்லி உதறி விடுதலையாகி என் ஊருக்கு போன பிறகு எனக்கு கட்டளை போலும், பயமுறுத்தல் போலும் இராஜாதிராஜன் ஓலைகள் அனுப்பினான். அம்மங்கையும் அவளது புருஷனும் வேங்கிக்கு போய்விடுவார்கள். உங்களுக்கு அங்கு வேலை இல்லை. இங்கு வந்துவிடுங்கள் என்று சொன்னான். ஏதோ சாக்கு சொல்லி அப்போது தப்பித்தது போல இப்போது முடியவில்லை. குடும் பத்தோடு வர உத்தரவிட்டான். வந்துவிட்டேன். அது அன்பான அழைப்பு இல்லை. அதிரடியான அழைப்பு. வேறு வழியில்லை. வந்துவிட்டேன்.''

''உங்களுடைய எண்ணம் கீழை சாளுக்கியம்தானா.''

''அதுதான் என் உயிர்.''

''உங்கள் எண்ணம் அங்கு மன்னனாக இருப்பதா.''

''ஒரு சிற்றரசனாக இருப்பதற்கு எனக்கு யோக்கியதை இல்லை என்று நினைக்கிறாயா.''

''இருக்கிறது. சிற்றரசனாகலாம். உங்களால் ஊர் விட்டு ஊர் பெயர முடியுமா.''

''எதற்கு பெயர்வது.''

''நான் உங்களை சந்தித்தது போதாது. கங்கே யாதவ் உங்களைப் பார்க்க வேண்டும்.''

''எங்கே பார்ப்பார்.''

''கடற்கரை ஓரமாக பயணப்பட்டு திருமயிலை வந்து விடுங்கள். அங்கு பார்ப்பார்.''

''ஏன் அவ்வளவு தொலைவு.''

''இரண்டு நாட்களில் தொண்டை நாட்டு எல்லைக்குப் போய் அங்கிருந்து கீழைசாளுக்கியம் போய் அங்கிருந்து மேலைசாளுக்கியம் போய்விடலாம். அது எளிது. உள்ளே வந்து மாட்டிக் கொள்வதை விட அது சிறப்பு.''

''எப்போது சந்திக்கலாம்.''

''இன்று பௌர்ணமி. அடுத்த அமாவாசை அன்று. திரு மயிலையில்.''

''சரி. காசு.''

''நாளை காலை கொண்டு வந்து தருகிறேன்.''

அவன் தெரு இறங்கினான். அவன் வெளியே வர, வேகமாக அவன் மீது வீர நாராயணன் மோதிக்கொண்டான். உள்ளிருந்து வேகமாக வந்த ஒற்றன் தடுமாறினான். வீர நாரா யணன், 'மன்னித்துக் கொள்ளுங்கள்', என்று சொல்லி, அவன் தோளை பிடித்து நிமிர்த்தினான். ஆசுவாசப்படுத்தினான். அவன் மேல்துணி போர்த்தியிருந்தாலும் அவன் கவசம் அணிந் திருப்பதும், இடுப்பில் வாள் தரித்திருப்பதும், பின் முதுகில் கட்டாரி சொருகியிருப்பதும் வீர நாராயணனுக்கு தெரிந்து விட்டது.

சட்டென்று மடக்கி அப்பிமையரை இவன் அடித்திருந் தால்... இப்படி அப்பிமையர் சந்திக்கக் கூடாது என்று நினைத் தான். வந்தவன் வீர நாராயணனை முறைத்து பார்த்தான்.

உன்னை எங்கோ பார்த்திருக்கிறேனே என்பதுபோல் அந்த பார்வை இருந்தது. வீர நாராயணன் இடுப்பு வளைந்து குனிந்து வணங்கினான். உள்ளுக்குள்ளே ஒரு வேளாளன் போல அதிகாரியைச் சந்திக்க வரும் பொதுஜனம் போல ஓடி னான்.

வீரநாராயணனின் தோற்ற மாற்றம் அப்பிமையருக்கு திகைப்பைக் கொடுத்தது.

''எனக்கு விடை அளியுங்கள். நான் இப்பொழுதே திரு மயிலை செல்கிறேன். உங்களை அங்கே சந்திப்பேன். இவன் எங்கே காசு வைத்திருக்கிறான் என்பதை தெரிந்துகொள்ள வேண்டும். காசு எடுத்து வந்ததும் வாங்கிக் கொள்ளுங்கள். நான் இனி உங்களை தொடர்பு கொள்ள மாட்டேன். அவன் போகும் பாதையிலேயே அவனை பின்தொடர்ந்து மயிலையை அடைந்துவிடுவேன். ஒருவேளை அவனைத் தவறவிட்டாலும் என் பயணம் மயிலையில் முடியும்.

அவன் சொன்னது போல மேலைசாளுக்கியத்திலிருந்து உங்களை சந்திக்க சரியான இடம் திருமயிலைதான். பொன்னேரிக்குப் போய் அங்கிருந்து வளைந்து திரும்பி மேலை சாளுக்கியத்திற்குள் நுழைந்துவிடலாம். அவன் தந்திரம் எனக்கு புரிகிறது. ஒருவேளை உங்களை கைது செய்தும் அவன் கொண்டு போய்விடலாம். மேலைசாளுக்கியம் போகாமல் இருப்பதே நல்லது. அதை தடுத்து நிறுத்தும் வண்ணம் நானும் இருப்பேன்.'' காலை தொட்டு வணங்கினான். காணாமல் போனான்.

அரசாங்கம் என்னும் பெரும் சுழற்சியில் தானே விருப்பப் பட்டு உள்ளே நுழைந்திருக்கிறோம் என்பது தெரிய அவருக்கு சிரிப்பு வந்தது. 'வா மகனே வா', நான் விளையாடத் தயார் என்று தொடை தட்டிக் கொண்டார்.

இருட்டு அதிகரித்தது.

''அம்மங்கை கங்கை கொண்ட சோழபுரம் விட்டு நகர்ந்து விட்டார். ஒரு வாரம் கழித்து அரையன் ராஜராஜன் நகரப் போகிறார். அருண்மொழிப்பட்டன் உங்கள் உத்தரவுக்காக காத்திருக்கிறார். அதேசமயம் பாண்டிய தேசத்திற்கும், சேர தேசத்திற்கும், தஞ்சைக்கும், குடந்தைக்கும், நடுநாட்டிற்கும் படைகள் பிரித்து அனுப்பிக் கொண்டிருக்கிறார். கடற்படையில் ஈடுபட தனியாக ஆட்களை திரட்டிக் கொண்டிருக்கிறார்.

இராஜாதி ராஜருக்கு தனியாக ஒரு சபை அமைந்து விட்டது. திருச்சிராப்பள்ளி அடுத்து ஸ்ரீரங்கத்திலுள்ள வாசுதேவ நாராயணர் என்கிற பராச்சாரியரும், மாவலி வானவராயரும், வல்லப தேவர் என்கிற சேனாதிபதியும் கீழைசாளுக்கியத்தின் தொண்டை நாட்டு பக்கம் உள்ள அப்பிமையரும் சோழ தேசத்தின் தளபதி நீலகங்கரையரும் அவரோடு கை கோர்த்து இருக்கிறார்கள். அவர்கள் அவரிடமிருந்து பல அதிகாரங்களை பெற்றிருக்கிறார்கள். இன்னார் என்று அறிவிக்கப்பட்டு விட்டது. நிர்வாகங்கள் சிறப்பாக நடைபெறுகின்றன. இராஜாதி ராஜன் கங்கை கொண்ட சோழபுரம் முழுவதும் கிராமம் கிராமமாக சுற்றி வருகிறார். அவருடைய சபையினர் பல்வேறு இடங்களுக்குப் பயணப்பட்டு மாலை வந்துவிடுகிறார்கள். மறுபடி காலை பிரிந்து நகர்வலம் வருகிறார்கள். வெகு வேகமாக

காரியங்கள் நடைபெறுகின்றன. வரும் வாரம் இவர்கள் அனை வரும் குடந்தைக்கும் பிறகு தஞ்சைக்கும் போய் பார்த்து விட்டு வருவார்கள். சுந்தர சோழ பாண்டியனிடம் பேசுவதும் இராஜாதி ராஜனின் எண்ணமாக இருக்கும் என்று தோன்று கிறது. ஓய்ச்சல் இல்லாத பயணம் மேற்கொண்டிருக்கிறார்.

ஆனால் பராச்சாரியார் வாசுதேவ நாராயணரை இங்கு வரவழைத்தது இராஜாதி ராஜனின் மனைவி த்ரைலோக்ய மாதேவி என்பது தெரிய வருகிறது.

நித்த வினோத பெருந்தச்சன் இரவி கோவிலை நிறைவு செய்வதை முக்கிய பணியாக எடுத்துக் கொண்டிருக்கிறார். முன் கோபுரம் அமைக்க துவங்கிவிட்டார். ஏரியை வெட்டி பெரிதுபடுத்தும் பணி தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது.

மக்கள் அதிகமாக இருப்பதால் விவசாயப் பணிக்கு நிறைய பேர் ஈடுபட முடிகிறது. புல்வெளிகளெல்லாம் நன்செய் நிலங் களாக மாறிவிட்டன. காவிரியின் வெள்ளம் கொள்ளிடத்தில் திருப்பப்பட்டு கொள்ளிடத்து நீர் கால்வாய்களுக்கு மாறி கங்கை கொண்ட சோழபுரம் முழுவதும் சுற்றுகிறது. ஏற்றங்கள் அமைக்க கீழை சாளுக்கியத்தினர் சொல்லி கொடுத்திருக் கிறார்கள். கவட்டை போன்ற இரண்டு தூண்களுக்கு நடுவே கம்பு வைத்து அந்த கம்புக்கு நடுவே ஏற்றம் வைத்து முன்னும், பின்னும் இரண்டு பேர் நகர்ந்து மிகப் பெரிய இரும்பு சாலின் மூலமாக நீர் இறைக்கிறார்கள். சாலுக்கு அடியில் தோலாலான ஒரு விஷயம் இருக்கிறது. சாலின் அடிப்புறத்திலிருந்து நீரை வாங்கி அது கொட்டுகிறது. சில இடங்களில் சால் மேலே வர, அங்கிருந்து ஒரு ஆள் கவிழ்த்து அனுப்புகிறார். கவிழ்க்கப்பட்ட இடத்திலிருந்தும் நாலாபக்கமும் நீர் பாய்கிறது. இரண்டு நாழிகை யில் ஒரு பெரும் வயலுக்கு நீர் பாய்ச்சுகிறார்கள். விடியற் காலையில் நீர் ஊறும் என்பதால் கருக்கலிலே எழுந்து வந்துவிடு கிறார்கள்.

கம்மாளர்களுக்கு அம்மாதிரி பித்தளை சால் செய்யவும், இரும்பு சால் செய்யவும் நிறைய வேண்டுகோள்கள் வந்திருக் கின்றன. பாத்திரங்களில் நீர் நிரம்பி உறி போல் கட்டிக் கொண்டு காய்கறி தோட்டங்களுக்கு நீர் சாய்க்கிறார்கள். கத்தரிக்காய்கள் அமோகமாய் காய்க்கின்றன. கூடை கூடையாய் பறிக்கிறார்கள்.

தென்னை மரங்களுக்கு நீர் திருப்பி விடுகிறார்கள். அந்த ஏரி மிகவும் உபயோகமாய் இருக்கிறது. ஏரிக்கரை சுற்றி மெல்ல மெல்ல கிராமங்கள் உருவாகிக் கொண்டிருக்கின்றன.

அரையன் ராஜராஜன், அருண்மொழிபட்டன் சண்டை மெல்ல மெல்ல அமுங்கிவிட்டது. மக்கள் எப்போதாவது அதைப் பற்றி கேலியாக பேசுகிறார்கள்.

மீன்சுருட்டியிலிருந்து கங்கை கொண்ட சோழபுரம் வழியில் இருக்கும் வேளங்களை மெல்ல கங்கை கொண்ட சோழபுரத்திலிருந்து குடந்தை போகும் வழியில் மாற்றிவிட லாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறார்கள். அம்மங்கா தேவி இந்நேரம் நடுநாடு தாண்டியிருப்பார். மிகப் பெரிய படை என்பதால் அமைதியாக, ஆரவாரம் இன்றி நிதான மாகவே பயணப்படுகிறார்கள். அம்மங்காதேவி சோர்வாகக் காட்சியளிக்கிறார் என்று ஒற்றர்கள் சொல்கிறார்கள். பயணத் தாலோ, பிரிவாலோ அவர் மனம் வாடியிருக்கலாம் என்று தோன்றுகிறது.

சுந்தர சோழ பாண்டியர் பல ஊர்களுக்கு பயணப்பட்டு தன் படையை எந்நேரமும் தயார் நிலையில் வைத்திருக்கிறார். ஆனால் தெற்கே பதுங்கி பதுங்கி பாண்டியப் படைகள் முன்னும், பின்னும் அலைந்து கொண்டுதான் இருக்கின்றன. தாக்குவதற்கு வலுவில்லை. கலவரங்கள் செய்யலாம். அது செய்யவும் அவர்களுக்கு துணிவு இல்லை.

கங்கர்களும், குடகு தேசத்து மனிஜாவும் அவரவர் இடங் களுக்கு போய்விட்டார்கள். கீழை சாளுக்கியம் அமைதியாக இருக்கிறது. மேலைசாளுக்கியத்தில் மக்கள் அரசர் மீது வெறுப் பாக இருக்கிறார்கள். தோல்வி பயம் அவர்களை நிமிரவொட் டாமல் செய்திருக்கிறது. சோழர்களை சபித்து பாடல்கள் பாடிக் கொண்டிருக்கிறார்கள்.

ஒட்டதேசத்து இந்திரதத்தர் நேற்று முன்தினம் இராமேஸ் வரம் போய் அடைந்திருப்பார். அங்கு ஒரு வாரம் தங்கியிருப் பார். அங்கிருந்து குமரிமுனைக்கும் போவார் என்று சொல்லப் படுகிறது. நாஞ்சில் நாட்டில் குடியிருக்கும் பாண்டியர்கள் அவரை தொடர்பு கொள்ளக்கூடும். அவர் முன்னரே மறுத்து விட்டதால் கோபமாக இருக்கிறார்கள். எனவே, சுந்தர சோழ

பாண்டியன் மிகுந்த மரியாதையோடு வரவேற்று அவரோடு துணையிருக்கின்ற ஆயுதப் படையை மாற்றி தன்னுடைய படையை அதிகம் சேர்த்து புதிய படையை உருவாக்கி அனுப்பி இருக்கிறார். ஆயிரத்து எழுநூறு ஆட்கள் அவரோடு இருப்பார்கள். போகும் இடமெல்லாம் மக்கள் அவரை நல்ல படி வரவேற்பார்கள். இராமேஸ்வரத்தில் காவல் இருக்கும் சோழப்படை தகுந்த அந்தணர்களை தயார் நிலையில் வைத்து இருக்கிறது. இந்நேரம் இந்திரதத்தர் சடங்குகள் ஆரம்பித்திருக்கக்கூடும். இவைதான் சமீபத்திய செய்தி அய்யா.'' அந்த உபதளபதி விழுந்து வணங்கினான்.

இராஜேந்திர சோழர் அவன் தோளை தட்டிக் கொடுத்தார்.

''இதே செய்தியை வீரமாதேவியிடமும் சொல்லிவிடு'' என்று சொன்னார். குட்டன் கணவதி எங்கே என்று தேடினார். அவருக்கு தன் மகளை உடனே பார்க்க வேண்டும் என்று தோன்றியது. அதற்கு கடல் வழியே சிறந்தது என்று தீர்மானித்தார்.

★ ★ ★

அத்யாயம் 94

அந்த மேலைசாளுக்கிய ஒற்றனுக்கு பல மீசைகள் இருந்திருக்கக்கூடும். நின்று முகம் கழுவி துணியால் அழுந்த துடைத்துக் கொண்டு பிறகு மடியிலிருந்து ஒரு சுருக்குப் பையை எடுத்து அதிலிருந்து புருவத்தையும், மீசையையும் எடுத்து மாட்டிக் கொண்டான். திருநீறு பூசினான். இடுப்பி லிருந்த சிகப்பு துணியை தலையில் கட்டிக் கொண்டான். வேட்டி மீது வெள்ளைத் துணி கட்டிக் கொண்டான். பையி லிருந்து கையில்லாத சட்டையை மாட்டிக் கொண்டான். சட்டையிலுள்ள மெல்லிய கயிறுகளால் பிணைத்துக் கொண் டான். வேட்டியை பஞ்சகச்சமாக தளர்த்திக் கொண்டான். இப்பொழுது வேட்டி கணுக்கால் வரை இருந்தது. அடுத்தது அவன் செய்ததுதான் ஆச்சரியமாக இருந்தது. அவன் முன்னும் பின்னும் அசைந்து உட்கார்ந்து எழுந்து நடந்தான். அவன் நடை வேறுவிதமாக மாறிப் போயிற்று. இதுவரையிலும் இருந்த நடை முற்றிலும் இல்லை. மிக எளிதாக அவனுடைய நடை, உடை, பாவனையை அவனால் மாற்றிக் கொள்ள முடிந்தது. தேர்ந்த பயிற்சி இல்லாது இதை செய்ய முடியாது. கூர்ந்த புத்தி யில்லாது இதை வெளிக்காட்ட முடியாது.

தான் மாற்றிக் கொள்ள வேண்டுமா. தேவையில்லை. இவனை இப்படியே பின் தொடர்வோம். இவனை மறுபடியும் சந்திக்க நேர்ந்தாலும் பணிவாக வணக்கம் சொல்வோம். கங்கை கொண்ட சோழபுரத்திலிருந்து வடக்கே போகிறானே. நேரே மேலைசாளுக்கியம்தானா. அல்லது வேறு எங்காவதா. அவன் குதிரையில் ஏறிக்கொள்ள தொலைவில் நின்றிருந்த தன் குதிரையை மெல்ல அழைத்து ஒற்றன் வீர நாராயணனும் ஏறிக் கொண்டான்.

தீப்பந்தங்கள் நட்டு வேளங்களுக்கு போக வழிகாட்டியிருந்தார்கள். இரண்டு வேளங்களிலும் கூட்டம் அதிகம் இருந்தது. பொது மகளிரின் சிரிப்பும் கூச்சலும் அதிகம் கேட்டன. மூன்றாவது வேளம் இருட்டில் அதிக தூரம் நடக்க வேண்டியிருந்தது. எனவே கூட்டம் இருக்கிறதா என்பது தெரியவில்லை. போய்க் கொண்டிருந்த குதிரை சட்டென்று திரும்பியது. அவனும் பின்தொடர்ந்தான். குதிரை பல கட்டிடங்கள் உள்ள வேள குடியிருப்பு வாசலில் நின்றது. யாரிடமோ குதிரையின் சேணத்தை கொடுத்துவிட்டு அவன் உடையை மறுபடியும் சரி செய்து கொண்டான். ஒட்டு மீசைகளை அழுத்திக் கொண்டான். மாற்றிக் கொண்ட நடையிலேயே நிதானமாக நடந்தான். ஏதோ ஒரு வீட்டிற்குள் நுழைந்தான். அந்த வீடு சட்டென்று கதவு சார்த்திக் கொண்டது. ஒவ்வொரு வேளத்தின் வாசலிலும் குதிரை நிற்பதற்காக தனியே கொட்டில் அமைத்திருந்தார்கள். தங்குவதற்கு வாடகை வசூலித்தார்கள். அரசாங்க அதிகாரிகளுக்கு இனாம் என்றார்கள். வீர நாராயணன் தன்னை அதிகாரி என்று சொல்லிக் கொள்ளாது வேளத்தில் பெண்டுகளுக்காக வந்திருப்பதாகச் சொல்ல, அவர்களும் பல் சிரித்து ''வருக வருக, ஐந்து, ஆறு வீடுகள் தவிர மற்ற எல்லா வீடுகளிலும் அற்புதமான பெண்கள் இருக்கிறார்கள்.''

''ஏன் ஐந்து, ஆறு இல்லை.''

''ஐந்து, ஆறு சுமாரான பெண்கள்தான்.''

''எனக்கு சுமாரான பெண்கள் போதுமய்யா.''

''என்ன அப்படி சொல்கிறீர்கள்.''

''ஒரு தந்திரம் இருக்கிறது.''

''என்ன தந்திரம்.''

''அழகான பெண்களை அதிகம் அனுபவித்து இருப்பார்கள். நமக்கு நல்ல சரக்கு வேண்டுமென்றால் கொஞ்சம் முன் பின்னாக இருக்கின்ற பெண்தான் சரி.''

''அடாடா, உங்கள் ரசனையே தனி. ஆனால் ஐந்து, ஆறில் அதற்கும் இடம் இல்லை.''

நல்லவேளை சிதிலமாகவில்லை, மேலைசாளுக்கியம்? பிடுங்கிக் கொண்டு வந்த பொக்கிஷம். சிரிப்பு பாருங்கள். அசுரனா, எருமையா. இரண்டுதான்.

"என்ன."

"அவர்கள் அழகானவர்கள்தான்."

"பிறகு."

"ஏனோ வருவதில்லை."

"ஏன்."

"தெரியவில்லை. உடல்நலம் சரியில்லை என்று நினைக்கிறேன். என்னை பார்த்ததும் இருமினார்கள்."

"நடிக்கிறார்களோ."

"இருக்கலாம்."

"ஆனால் நண்பரே. ஆறாவது எண்ணிக்கையில் ஒருவர் போவதை பார்த்தேனே."

"அட, பார்த்துவிட்டீரா."

"ஆமாம்."

"அவர் பெருந்தனக்காரர். ஒரு பெண்ணுக்கு ஒரு இரவுக்கு ஒரு காசு கொடுத்தால் போதும். ஆனால் இவர் எனக்கே ஒரு பொன் காசு கொடுக்கிறார்."

"அப்படியா, அவ்வளவு பெரிய வணிகரா."

"ஆனால் வணிகர் மாதிரி தெரியவில்லை."

"எதை வைத்து சொல்கிறாய்."

"இங்கு சட்டை மாற்றினார். உடம்பு முழுவதும் தழும்புகள். பல போரில் கலந்து கொண்ட வீரர்களுக்குத்தான் அப்படியிருக்கும்."

"அப்படியானால் அவர் சோழ தேசத்து தளபதியா."

"அப்படியும் தெரியவில்லை."

"ஏன்."

"குதிரையிடம் வேறு பாஷையில் பேசுகிறார்."

"வேறு பாஷை என்றால்."

"வேண்டாமய்யா. எனக்கு தெரியவில்லை."

"நீ சோழ தேசத்தவன்தானே."

''ஆமாம்.''

''அப்படியென்றால் ஏன் சோழ தேசத்திற்கு எதிராக செயல் படுகிறாய்.''

''அய்யோ. அப்படியெல்லாம் இல்லை.''

''ஒரு ஆள் வேறு பாஷையில் பேசுகிறான் என்றால் விசாரிக்க வேண்டாமா.''

''ஒருமுறைதான் பேசினார். அதை வைத்துக் கொண்டு எப்படி விசாரிப்பது.''

''என்ன பாஷை.''

''கர்நாடகம். மேலைசாளுக்கியம் பாஷை.''

''அடேய். இது எவ்வளவு முக்கியம்.''

''ஏன் முக்கியம் என்கிறீர்கள். நம்மில் பல சோழ வீரர்கள் கீழைசாளுக்கிய பாஷை பேசுகிறார்கள். அந்த பெண்டுகளையே தேர்ந்தெடுக்கிறார்கள். அவர்களோடு கீழை சாளுக்கிய பாஷை யிலேயே கொஞ்சி குலாவுகிறார்கள். அப்படி இவரும் இருக்கக் கூடும் என்று நினைத்தேன்.''

''இது எந்த மாதிரி வேளம்.''

''கர்நாடக பெண்கள் இருக்கும் வேளம்.''

''ஓ. அப்பொழுது கர்நாடக மொழி அவனுக்கு தெரிந்திருக் கலாம். இங்கு உள்ளே நுழைந்ததும் வந்திருக்கலாம்.''

''நானும் அப்படித்தான் நினைத்தேன்.'' அவன் பல் தெரிய சிரித்தான். அந்த சிரிப்பில் ஒரு வெகுளித்தனம் தெரிந்தது. வீர நாராயணன் வேகமாக கணக்கு போட்டான். அங்கிருந்து பெண்டு களை கொண்டு வரும்போது கர்நாடக பெண்களை தனியாக வேளம் அமைத்து அது தங்களுடைய சுகத்திற்காக என்று சோழ தேசத்து படைவீரர்கள் நினைக்கும்போது அதே இடத்தை, அதே கர்நாடக மொழியை தன்னுடைய அடைக்கல இடமாக தன்னுடைய பாசறையாக, தன்னுடைய செய்தி பரிமாற்றமாக ஒரு ஒற்றன் ஏற்படுத்திக் கொள்கிறான். இது கெட்டிக்காரத் தனம். இவர்களை வடக்கே வைக்கக்கூடாது. இவர்களை தெற்கே அனுப்பிவிட வேண்டும். இத்தனை பேரையும் தெற்கே

அனுப்புவது என்பது எளிதா. அது நம்முடைய வேலை இல்லை, ஆனால் இந்த விஷயத்தை விளக்கி, இந்த வேளங்கள் அத்தனையும் கங்கை கொண்ட சோழபுரத்திலிருந்து குடந்தை போகிற வழியில் வைத்துவிட வேண்டும். கொள்ளிடக் கரையில் வைத்து விட வேண்டும். அங்கு கிராமங்கள் ஏற்படுத்திவிட வேண்டும். அவன் நினைத்துக் கொண்டு குதிரை விட்டு விலகி உள்ளே நடந்தான்.

''அய்யா.'' அந்த காவலாளி கூப்பிட்டான்.

''என்ன.''

''நீங்கள் ஒற்றரா.''

''என்னைப் பார்த்தால் அப்படியா தெரிகிறது.''

''ஒற்றர்கள்தான் இப்படி கேள்வி கேட்பார்கள். ஆழ்ந்து சிந்திப்பார்கள். நீங்கள் சிந்திப்பதை பார்த்தால் பெரிய திட்டங்கள் வைத்திருப்பது போல் தெரிகிறது.''

''நான் சோழ தேசத்தை சேர்ந்தவன். போதுமா உனக்கு.''

''போதும்.''

''மற்றபடி நான் யார் என்று விசாரிக்காதே.''

''இல்லை. விசாரிக்கவில்லை.''

''நீ சொல்கிற அந்த ஐந்து, ஆறு இலக்கம் உள்ள வீடுகள் எனக்கு சந்தேகத்தை கொடுக்கின்றன. பெரிய அதிகாரியை சந்தித்துவிட்டுப் போன அந்த வீரன் அந்த வீட்டிற்குள் நுழைந்திருக்கிறான். அங்கு என்ன நடக்கிறது என்று எனக்குத் தெரிய வேண்டும்.''

''சரி. நான் என்ன செய்ய.''

''உங்கள் குதிரை எகிறுகிறது. என்னவென்று தெரியவில்லை என்று கதவை தட்டிச் சொல்லு.''

''குதிரை நன்றாகத்தானே இருக்கிறது.''

''நீ போ. அந்த குதிரை அவஸ்தைப்படும். எகிறி குதிக்கும்.''

''அப்பொழுது என்ன ஆகும்.''

''அந்த வீரன் உள்ளே வந்துவிடுவான். நான் எங்கிருந் தாவது பதுங்கி அவர்கள் அசந்த சமயம் பார்த்து வீட்டிற்குள் போய்விடுவேன்.''

''அவரை பார்த்தால் முரடன் போல் இருக்கிறது, தெரிந் தால் சண்டை வருமே.''

''வந்தால் எதிர்கொள்ள வேண்டியதுதான். நீ செய்.''

''மறுபடியும் ஒரு கேள்வி.''

''என்ன.''

''நீங்கள் ஒற்றர்தானே.''

''இல்லை. சாதாரண படை வீரன். எனக்கு ஒரு உத்தரவு, இவர் யார் என்று விசாரிக்கும்படி. நேரே விசாரித்தால் சரியாக இருக்காது. அதனால்தான். இதற்கு மேல் ஒரு கேள்வியும் கேட்க உமக்கு அருகதையில்லை. அமைதியாய் இரும். இந்த காரியம் சரியாக முடிந்தால் தக்க சமயத்தில் சன்மானம் தருவேன்.''

அந்த குதிரை லாயக்காரன் கவலையடைந்தான். குதிரை சாதாரணமாக நின்று பிரித்துப் போடப்பட்டிருந்த புற்களை மேயத் தொடங்கியிருந்தது. அவன் அந்த வீடு நோக்கி போனான். வீட்டிற்குள் கால் வைத்ததும் அஸ்வ சாஸ்திரம் தெரிந்த வீர நாராயணன் குதிரையின் பிருஷ்டத்தில் இரண்டு, மூன்று நரம்புகளை சுண்டிவிட்டான். அது ஆண்குதிரை. சரியான இடத்தில் தாக்கியதால் குதிரை எகிறி குதித்தது. மற்ற குதிரையை மிதிக்க வந்தது. எகிறி கனைத்தது. வழியில் முன்னும், பின்னும் அலைந்தது. வீரநாராயணன் வேகமாக நடந்து ஐந்து, ஆறு வீடுகள் தாண்டி ஏழாம் வீட்டில் ஒண்டிக் கொண்டான்.

கதவு திறந்து யாரோ வெளியே வருவது தெரிந்தது. இவன் தமிழ் பேச்சும், எதிரே தடுமாறிய தமிழ் பேச்சும் தெரிந்தது. 'இதோ வருகிறேன்.' அவன் வாசலில் உள்ள தீப்பந்தத்தை கொளுத்திக் கொண்டு குதிரையை நோக்கி நகர்ந்தான். உள்ளே இருந்த இரண்டு பெண்கள் கீழே இறங்கி தெருவில் நின்று கொண்டார்கள். அவர்களும் வருவதாகச் சொன்னார்கள். வீரன் வேண்டாம் என்று அதட்டினான். அந்த அதட்டல் அந்த

பெண்கள் மீது உரிமையுள்ளவன் என்பது போல் இருந்தது. அந்த பெண்கள் பயந்து தயங்கினார்கள்.

திண்ணை விட்டு திண்ணை ஏறி அவன் அந்த ஆறாம் இலக்க வீட்டிற்குள் சட்டென்று நுழைந்து கொண்டான். 'யாரது' ஒரு பெண் குரல் கொடுத்தாள். வாசலில் நின்றவள் உள்ளுக்குள் வந்தாள். ஆனால் அவன் ஓரம் மறைப்பில் மறைந்து கொண்டான்.

''யாரோ உள்ளே போனது போல் இருந்ததே.''

''உனக்கு பயமடி. எதைப் பார்த்தாலும் பயம்.''

இந்த பேச்சு கர்நாடக மொழியில் இருந்தது. மிக சுத்தமாக பேசப்பட்டது. பூனைப் போல் பதுங்கி சுவர் ஓரமாக உள்ளுக் குள் போனான். உள்ளேயிருந்து குங்கிலிய வாசனை அடித்தது. புகையாக இருந்தது. இப்பொழுது தாழ்ந்து உட்கார்ந்தபடியே நடந்தான். அடுத்த கூடத்தை அடைந்தான். அந்த கூடத்தின் நடுவில் கட்டில் போடப்பட்டிருந்தது. அதில் பெரும் உடம்பில் போர்த்திய போர்வையோடு ஒருவன் படுத்திருக்க, இடுப்பு பாவாடை மட்டும் அணிந்திருந்த பெண் ஒருத்தி, படுத்திருந் தவன் முதுகை கட்டை விரல்களால் அழுத்திவிட்டாள். முதுகு வலிக்கு இதம் கொடுத்துக் கொண்டிருந்தாள். இன்னொருவள் கங்குகளை கிளறி புகை போட்டுக் கொண்டிருந்தாள். அந்த இடம் மறைவிடமாக இருந்தது. கொசுக்கள் வராது இருக்கவும், தலைவலி நீங்கவும் இம்மாதிரி புகை போடுவது வழக்கம். அப்படித்தான் ஏதோ வைத்தியம் நடந்து கொண்டிருக்கிறது. முதுகிலும் எண்ணெய் மினுமினுப்பு தெரிந்தது. ஒளிபடாத இடமாகப் போய் உட்கார்ந்து வந்து அவன் அங்குள்ள ஒரு அறையின் விளிம்பில் நின்று கொண்டான். அமர்ந்து என்ன நடக்கிறது என்று பார்த்தான். எதனாலேயோ வழக்கத்திற்கு மீறி ஒரு பதட்டம் இருந்தது. குத்துவாளை இருக்கிறதா என்று தடவி பார்த்துக் கொண்டான். பின்புறம் இருக்கின்ற சிறிய வாளையும், காலில், தொடையில் பிணைக்கப்பட்ட சிறு கத்தி களையும் சரி பார்த்துக் கொண்டான். இந்த சிறு சிறு கத்திகள் தப்பித்து ஓட உதவும். எதிரியை தாக்கிவிட்டு கண் சிமிட்டும் நேரத்தில் பறந்துவிடலாம். 'என்னுடைய குதிரையை அவன்

ஒன்றும் செய்யாமல் இருக்க வேண்டும். அந்த குதிரை காவலாளி உளராமல் இருக்க வேண்டும்.'

"திடீரென்று ஏன் இப்படி ஆடுகிறது. அடித்தாயா."

"நான் ஏனய்யா அடிக்கிறேன்." அவன் குதிரையை தடவினான். தீப்பந்தத்தால் எல்லா பக்கமும் பார்த்தான். பின் பக்கம் தொட்டவுடன் குதிரை எகிறிற்று.

"யாராவது பின்பக்கம் சவுக்கால் அடித்தார்களா."

"இல்லையே."

நீர் எடுத்து குதிரையின் பின்பக்கம் சுளீர் என்று வீசினான். குதிரை சமாதானம் ஆகியது. குடத்திலுள்ள நீரை குதிரையின் முதுகு முழுவதும் ஊற்றினான். அப்பொழுது அமைதியாகியது.

"யாரோ அடித்திருக்கிறார்கள். இல்லையென்று பொய் சொல்கிறாய்."

"இங்கேதான் நின்றிருந்தேனய்யா. யாரும் அடிக்கவில்லை."

"அது யார் குதிரை."

"இன்னொரு வணிகர் குதிரை."

"புதிதாக ஒரு குதிரை வந்திருக்கிறதே. அது யாருடையது."

"அதுவும் ஒரு வணிகருடையதுதான்."

"எந்த வீட்டில் இருக்கிறார்கள்."

"முதலாம் வீட்டில், இரண்டாம் வீட்டில் இரண்டு பேரும் இருக்கிறார்கள்."

"உனக்கு அவர்களைத் தெரியுமா."

"தெரியும். சோழ தேசத்தின் தளபதிகள்தான்."

"அப்படியா. வேறு யாரும் தாக்காமல் பார்த்துக் கொள்." அவன் தீப்பந்தத்தோடு திரும்பினான். தீப்பந்தம் வீட்டு வாசலில் வெளிச்சத்தை கொடுத்தது. அணைக்கப்பட்டது. வந்தவன் உள்ளே நுழைந்தான்.

"என்ன அது."

''ஒன்றுமில்லை.'' படுத்திருந்தவன் கேட்க, உள்ளே வந்தவன் பதில் சொன்னான்.

''என்ன சங்கடம்.'' தெளிவான மேலைசாளுக்கிய மொழியில் பேசப்பட்டது.

''அது, குதிரையை யாரோ அடித்திருக்கிறார்கள்.''

''யாரோ என்றால் யார்.''

''தெரியவில்லை. அடிபட்டது போல்தான் குதிரை அவஸ்தைப்படுகிறது. அதுவும் விரையில் அடித்திருப்பார்கள் போலிருக்கிறது.''

''அப்பொழுது யாரோ விஷமம் செய்கிறார்கள். யார் என்று தெரியாமலா உள்ளே வந்தாய்.''

''யாரும் இல்லையென்று அந்த குதிரை காவலாளி சத்தியம் செய்கிறான்.''

''இருக்காது. இந்த இடத்தை யாரோ நோட்டம் பார்க்கிறார்கள்.'' படுத்திருந்தவன் எழுந்திருந்தான்.

நல்ல உயரம். பின்பக்கம் குடுமி. கழுத்தில் சிவலிங்கப் பெட்டி. தோளில் கேயூரம். கைகளில் வளையம். கழுத்தில் கனத்த சங்கிலி. எழுந்து நின்ற வேகத்தில் இடுப்பு வேட்டி அவிழ்ந்து கோவணத்தோடு நிற்பது தெரிந்தது. அந்தப் பெண் நகர்ந்து கொண்டாள்.

''நான் இடம் மாறுகிறேன். இந்த இடம் பாதுகாப்பாக தெரியவில்லை. இவர்களுக்கு ஆளுக்கு இரண்டு பொன் கழஞ்சு கொடு. நான் வருகிறேன்.'' அவன் கோமணத்தை சரி செய்து கொண்டு, இடுப்பு வேட்டியை விரல்களால் மடித்து, இழுத்து சொருகிக் கொண்டு, பின்பக்கம் அழுத்திக் கொண்டு அதன்மீது துண்டு கட்டி இறுக்கி கை உடைய ஜரிகை மினு மினுக்கும் சட்டையை போட்டு, தலைப்பாகை கட்டி வாளை முதுகில் ஏந்திக் கொண்டான். சிறு சிறு கத்திகள் கொண்ட ஒரு பட்டையை குறுக்காக அணிந்து கொண்டான்.

''இவ்வளவு பதட்டப்பட வேண்டியதில்லை. உங்களுக்கு ஓய்வு கிடைப்பதே சிரமம். நல்ல ஓய்வாக இருக்கிறீர்கள்.''

''ஓய்வெல்லாம் பார்த்தால் வாழ்க்கையில் ஜெயிக்க முடியாது. நான் தோற்றுப்போக விரும்பவில்லை. ஜெயிக்க வேண்டும். ஜெயிக்க வேண்டும்.'' உளறலைப் போல பேசினான்.

''நீங்கள் காலையில் போங்களேன்.'' வந்தவன் தடுத்தான்.

''இல்லை. நீ போன காரியம் என்ன ஆயிற்று.''

''அப்பிமையன் ஒத்துக்கொண்டான். அவனை நீங்கள் சந்தித்தால் நலமல்லவா.''

''நான் அப்பிமையனை உடனே சந்திப்பது நலமல்ல. இங்கே, அங்கே என்று போக்கு காட்டி தொண்டை நாட்டிலோ, அல்லது நடு நாட்டிலோ சந்திக்கிறேன்.''

''ஆயிரம் பொன் கழஞ்சு கேட்கிறான்.''

''கொடு. உன்னிடம் இருக்கிறதல்லவா.''

''ஆமாம். மூன்று மூங்கில்களில் இருக்கின்றன. ஒன்றில் ஆயிரம் இருக்கும் என்று நினைக்கிறேன்.''

''நீயும் இந்த இடத்தை மாற்றிவிடு. இது சரியாக இருக்காது. நான் விடை பெறட்டுமா.''

அடுத்தது அந்த ஒற்றன் சொன்ன வார்த்தை வீர நாராயணன் மூச்சை அடைத்தது. இருமல் வந்துவிடுமோ என்று தோன்றியது.

''கங்கே யாதவ், நீங்கள் மிகப் பெரிய வீரன். உங்களுக்கு பணி செய்திருக்கிறேன் என்பது சந்தோஷமாக இருக்கிறது. நம்முடைய சாளுக்கிய தேசம் இவர்களால் நாசம் செய்யப் பட்டது. ஒவ்வொரு நாளும் சோழ வீதியில் நடக்கிறபோது நான் பலரை மனதால் கொன்று வருகிறேன். அதேசமயம் நல்லவனாக நடந்து வருகிறேன். உங்களால் எப்படித்தான் இந்த சோழ தேசத்தில் இருக்க முடிகிறது.''

''காலம் வரும் நண்பா. காலம் வரும். தயவு செய்து இந்த இருளில் இந்த பெண்கள் கேட்க என் பெயரை சொல்லி விடாதே. இன்னொரு முறை சொல்லாதே. எங்கேயும் சொல்லாதே. வருகிறேன். வாழ்க வராகக் கொடி. வாழ்க சாளுக்கியம். வாழ்க ஜெய்சிம்மன்.'' அவன் உரத்த குரலில் சொல்லிவிட்டு நகர்ந்தான். அவன் பின்னே அந்த வீரன் போக, தீப்பந்தம்

கொளுத்தப்பட்டதும் இருவர் நடந்து போவதும் தெரிந்தது. பெண்கள் வெளியேறி வழியனுப்பினார்கள். கொல்லைக் கதவை திறந்து அவன் கீழே இறங்கினான். வீரநாராயணன் கொல்லையினூடே நுழைந்து அடுத்த வீட்டு கொல்லைக் குள் புகுந்து ஒன்றாம் வீட்டின் பக்கச் சுவர் பக்கத்திலிருந்து வெளியே வந்தான். அவர்கள் இருவரும் தொலைதூரம் போய் இருந்தார்கள். ஓடிப்போய் தன் குதிரையை தேடினான். 'எங்கே குதிரை' லாயக்காரனிடம் கேட்டான்.

''இவர்கள்தான் உன் குதிரையை அவிழ்த்து விரட்டி விட்டார்கள். புதிதாக வந்தவன் உத்தரவு இட, அந்த வீட்டிற் குள் நுழைந்த படைவீரன் அதைச் செய்தான். உன் குதிரை இருட்டில் எங்கோ இருக்கிறது, சரியான அடி.'' வீர நாராயணன் நொந்தான்.

''இவர்களை எங்கே தேடுவது, எப்படி பிடிப்பது.''

இன்னொரு குதிரையில் கை வைத்தபோது அதை குதிரை காவலாளி தடுத்தான்.

''வேண்டாம். இவர் மிகப் பெரிய தளபதி. இவருக்கு பதில் சொல்ல என்னால் முடியாது. அதைத் தவிர அவர் கேள்வி கேட்டால் உங்களைப் பற்றியும் சொல்ல வேண்டியிருக்கும்.''

அது நியாயமாகப்பட்டது.

''சரி, இந்தா. இன்னொரு கழஞ்சு வைத்துக் கொள். என்னைப் பற்றி எவர் கேட்டாலும் சொல்லாதே. நான் குதிரையை தேடிக் கொள்கிறேன்.'' அவன் கிளம்ப, 'ஐயா' என்று குரல் கேட்டது. வீர நாராயணன் திரும்பினான்.

''நீங்கள் ஒற்றர்தானே.''

வீரநாராயணன் தயங்கினான்.

''ஆமாம். ஒற்றன்தான். ஆனால் இது என் முகம் அல்ல'' என்று லாயக்காரனிடம் சொல்லிவிட்டு ஓடத் துவங்கினான். அந்தக் காவலாளிக்கு சோழ தேசத்தைப் பற்றி ஒன்றுமே புரியவில்லை.

பின்பக்கம் அவிழ்ந்த வேட்டியோடு அப்பிமைய்யன் வெளியே வந்தார். இழுத்து சொருகிக் கொண்டார்.

''என்ன, இந்த நேரத்தில் கதவு தட்டுகிறாய்.''

''ஆமாம். ரகசியம்.''

''உள்ளே வா.'' அவர் உள்ளே அழைத்தார். காது கொடுத்தார்.

''என்ன, அவனா, எப்படி தெரியும்.''

''தயவு செய்து பெயர் சொல்ல வேண்டாம். அவனை குறிப்பிடும்போது வழுக்கை என்றே குறிப்பிடுவோம். முன் பக்கம் அவனுக்கு வழுக்கையாக இருக்கிறது. பின்பக்கம் பெரும் முடி இருக்கிறது. ஆச்சரியமான உருவம் அது. சின்ன சந்தேகத்திற்குக் கூட இடம் கொடுக்கவில்லை. கிளம்பி நகர்ந்து விட்டான்.''

விளக்குக்கு அருகே போனார். வெள்ளைத் துணி எடுத்தார்.

''இப்படி இருந்ததா அவன் உருவம்.'' கோட்டோவியம் வரைந்தார். கூரிய மூக்கு, உதடு, பெருத்த தோள்கள், வழுக்கை தலை, பின் குடுமி. குறுக்கே தோல் பட்டை போட்டு அதில் சிறுசிறு கத்திகளாக வரைந்தார்.

''நிச்சயம் இவன்தான். இப்படித்தான் தோல் பட்டை இருந்தது. இது அவனே கண்டுபிடித்தது, விஷமுள்ளது.''

''எந்த பக்கம் போயிருப்பார்கள். இன்னும் வடக்கேயா, கிழக்கேயா அல்லது தெற்கேயா.''

''தெரியவில்லை. மேற்கே போகவில்லை என்பது மட்டும் தெரியும்.''

''இவ்வளவு தூரம் வழுக்கை தலையன் இங்கு வந்திருப்பான் என்பது பதற அடிக்கிறது. உடனடியாக இதை இளவரசர் இராஜாதிராஜனுக்கு தெரியப்படுத்த வேண்டுமே.'' அப்பிமையர் பதறினார்.

முகம் கழுவி வாய் கொப்பளித்து வெற்றிலை போட்டுக் கொண்டார். தேர் தயாராகியது. ஏறி நின்று கொண்டார். தேரோட்டி குதிரையை செலுத்தினான். இரண்டு வீரர்கள் தீப்பந்தத்தோடு முன்னே போனார்கள். அவன் அவரை பின் தொடர்ந்தான்.

இராஜாதிராஜன் எழுப்பப்பட்டான். மாவலி வானவராயர் எழுப்பப்பட்டார். நீல கங்கரையருக்கு செய்தி போயிற்று. வல்லப

தேவன் கோயிலுக்கு வெளியே குடந்தையை நோக்கி போய் இருப்பதாக சொல்லப்பட்டது.

''என்ன செய்வது இப்போது. பறை அறிவித்து ஊரை எழுப்பிவிடலாமா.''

''கூடாது. கூடாது.'' மாவலி வானவராயர் தடுத்தார். இராஜாதிராஜன் பதட்டத்தோடு இருந்தான்.

'இது தந்தைக்கு தெரிந்தால் எப்படி இருந்தது தூக்கம், என்று கேட்பாரே, கேலி செய்வாரே' என்று உள்ளுக்குள் பதறினான்.

நன்றாக இருக்கிறது. நீ காவல் காக்கும் லட்சணம் என்று வீரமாதேவியார் எள்ளி நகையாடுவார். உள்ளே மருகினான். தூக்கம் முற்றிலும் கலைந்து போயிற்று. உள்ளே வந்த பரமாச்சாரியார் வாசுதேவ நாராயணனுக்கு சொல்லப்பட்டது.

''ஒருகாலும் பறை அறிவித்து விடக்கூடாது. அது வழுக்கை தலையனை வேகமாக்கிவிடும். தப்பித்து போக வைத்துவிடும். நமக்கு அவனைப் பற்றி அறவே தெரியாது என்று அமைதியாக இருக்க வேண்டும்.

அந்த மூன்றாம் இடத்திலுள்ள கர்நாடகத்து வேளைக்காரப் பெண்களை அப்படியே மாற்றிவிட வேண்டும்'' என்று அவர் சொல்ல,

''இல்லை. அதுவும் தவறு. அது வந்து போகும் இடமாக இருக்கிறது என்பது தெரிந்திருக்கிறது. இன்னும் யாரேனும் கூட இருக்கலாம். ஏன் ஜெயசிம்மனே கூட இருக்கலாம். எனவே, அந்த இடத்தை காவல் காக்க வேண்டும்.

போகத்திற்கு வந்தவர்களாக சிலரை அனுப்பி வீட்டிற்குள் உட்கார வைத்துவிட வேண்டும். அந்த இடத்தை யார் நிர்வாகம் செய்கிறார்கள். சாவூர் பரஞ்சோதியா.''

''இல்லை. சாவூர் பரஞ்சோதியின் மகன் ஜெயந்தன்.''

''அவன் சோனகனா.''

''இல்லை. பரஞ்சோதிதான் சோனகன். சோழ தேசத்தின் தளிச்சேரி பெண்ணுக்கும், பரஞ்சோதிக்கும் பிறந்த மகன் தான் ஜெயந்தன். அவன் சிவ பக்தன். அவன் தந்தையைப்

போலவே தளிச்சேரி பெண்களுக்கு காவலாகவும், ஆதரவாக வும் இருக்கிறான்.''

''அவன் எங்கே இருக்கிறான்.''

''வடக்குப் பக்கம்தான் இருக்கிறான்.''

''அவனை வரச் சொல்லி ஆள் அனுப்பு. காலையில் வந்து பார்க்கச் சொல். இவ்வளவு கெட்டிக்காரனா அந்த வழுக்கை. என்ன பார்க்க வந்திருப்பான்.''

''வந்தது வழுக்கைதானா என்பதை நாம் முதலில் தெரிந்து கொள்ள வேண்டும்.''

''அதை எப்படி தெரிந்து கொள்வது.''

''இரவோடு இரவாக அந்தப் பெண்களை தூக்கி வந்து விடுங்கள். அதற்கு ஜெயந்தனை தொடர்பு கொண்டு ஏற்பாடு செய்யுங்கள். அவர்கள் வந்து அவன் வழுக்கையன்தான் என்று தெரிந்துவிட்டால் நன்றாக இருக்கும்.

இப்பொழுது என்ன செய்வது.'' இராஜாதிராஜன் தவித்தான்.

''தூங்கப் போகலாம்.''

''எனக்கு இனி தூக்கம் வராது. நம் யாருக்கும் இனி தூக்கம் வராது. நமக்கு சோதனையான காலம் வந்துவிட்டது. இவ்வளவு தொலைவு கங்கே யாதவ் வந்து போனான். அவனை சிறைபிடிக்கவில்லை என்று இராஜேந்திரருக்கு தெரிந்தால் பெரிய ஆட்டம் ஆடுவார்.''

''இராஜேந்திரர் ஆடுவது இருக்கட்டும். உங்களை நோக்கி அரையன் இராஜராஜனும், அருண்மொழிப்பட்டனும் எகிறுவார் கள். என்ன செய்யப் போகிறீர்கள் என்று தெரியவில்லை.''

வாசுதேவ நாராயணர் ஆசனத்தில் சரிந்து உட்கார்ந்து கொண்டார். அவ்வளவு சோர்வாக இதுவரை யாரும் அவரை பார்த்ததில்லை. அந்த சபை தலையை கவிழ்த்துக் கொண்டு என்ன செய்யலாம் என்று யோசித்தது.

''இப்போதைக்கு தூங்கலாம். நான் இங்கேயே ஒரு ஓரமாக...'' என்று வாசுதேவ நாராயணர் ஆரம்பிக்க, இராஜாதி ராஜன் கட்டளையிட்டான்.

ஒரு பெரிய அறையின் ஜன்னல் கதவுகள் திறக்கப் பட்டன. காற்று உள்ளே வந்தது. கீழே பெருக்கி சுத்தம் செய்து பாய்களை விரித்தார்கள். இராஜாதி ராஜனுக்கு கட்டில் போட் டார்கள். குங்கிலியப் புகை எழுந்தது. தாதிகள் விசிறத் தொடங் கினார்கள். அந்த நான்கு சுமைதாங்கிகளும் சற்று நேரத்தில் அயர்ந்து தூங்கின.

''ஆயிரம் பொன்னை கொண்டு போய் அப்பிமைய்ய னுக்கு கொடு.'' அவன் கட்டளையிட்டான். 'சரி' என்று அந்த வீரன் தலையசைத்தான்.

''இப்பொழுது விடை பெறுகிறேன்.''

''எங்கு பயணப்படுகிறீர்கள் என்று கேட்கக் கூடாது.''

''உனக்கு தெரிய வேண்டிய அவசியமில்லை. சோழ தேசத்தின் எல்லா பகுதிக்கும் நான் பயணப்படுவேன். நான் குடந்தை போவதாக உத்தேசித்திருக்கிறேன். கங்கை கொண்ட சோழபுரத்தை ஊடறுத்துத்தான் போவேன்.'' அவன் கங்கை கொண்ட சோழபுரம் நோக்கி திரும்பினான்.

அந்த வீரன் மறுபடியும் அந்த வேளம் நோக்கி நடக்க, கங்கே யாதவ் குதிரை பாதையிலிருந்து விலகி புற்கள் ஓரமாக நடந்து காவிரிபூம்பட்டிணம் நோக்கி பயணப்பட்டது.

குளிர்ந்த காற்று, அரை நிலவு, துல்லியமான வானம். பனி. தலையிலிருந்து கால் வரை போர்த்தியவாறு ஒரு அரை தூக்கத்தில் கங்கே யாதவ் காவிரிபூம்பட்டிணம் நோக்கி நடந்தான். அங்கேதான் இராஜேந்திர சோழர் இருக்கிறார் என்று குழந்தைக்குக் கூட தெரியும்.

அப்பிமைய்யரின் எதிர் வீட்டில், வலப்பக்க வீட்டில், இடப் பக்க வீட்டில் வீரர்கள் உள்ளே புகுந்து உட்கார்ந்து கொண் டார்கள். குடிப்பதற்கு சூடான பானகமும், சுண்டலும் தரப்பட் டன. பெரிய மரத்தட்டில் கொட்டைப் பாக்கும், வெற்றிலை யும் சீவுவதற்கு வெட்டு கத்தியும் வைக்கப்பட்டன. தொலை விலிருந்து பார்ப்பவர்களுக்கு உள்ளே எழுபது வீரர்கள் உட் கார்ந்து வெற்றிலை போட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்ற சப்தமே வராது.

அப்பிமைய்யன் வெளியே அமைதியாக இருந்தாலும் வெளியே தவிப்போடு காத்திருந்தார். அந்த வீரன் பொன் கழஞ்சை மூங்கில் குழாயில் போட்டுக் கொண்டு வந்தான். தோளில் கனத்த தோலாடை இருந்தது. இப்பொழுது குடுமியை வேறுவிதமாக மாற்றியிருந்தான். தலைப்பாகை கட்டியிருந் தான். மீசை தொங்கியிருந்தது. மூக்கில் வளையம் இருந்தது. காதுகளில் வெறும் ஓலைக் குழல் இருந்தது. மாடு வாங்கும் கயிறை கையில் வைத்திருந்தான். இடுப்பில் வாள் வைத்து இருக்கிறானா என்று தெரியாமல் இருந்தது. அவன் தனியே வந்து அப்பிமைய்யர் வீட்டின் எதிர்பக்கம் நின்றுகொண்டான். அப்பிமைய்யர் வீட்டை நோட்டமிட்டான்.

அப்பிமைய்யர் உள்ளேயிருந்து வெளியே வந்து திண் ணையில் உட்கார்ந்து கொண்டார். அவன் இருப்பதை கவ னித்துவிட்டார். எழுந்து உள்ளே போனார். அவன் வெகு கவன மாக எல்லா பக்கமும் பார்த்தான். அந்த பகல் வேளையில் தெரு அமைதியாக இருந்தது. உள்ளே நுழைந்து அப்பிமைய் யருக்கு வணக்கம் சொன்னான். மூங்கில் குழலை கொடுத்தான்.

"இப்பொழுது உடைக்க வேண்டாம். இதில் ஆயிரம் கழஞ் சுகள் இருக்கின்றன."

"எப்படி நம்புவது."

"கொஞ்சம் தட்டிப் பாருங்கள்."

தட்டியதும் கற்கள் போல கழஞ்சுகள் வந்து விழுந்தன.

சோழ தேசத்தில் இப்படி கழஞ்சுகள் தருவது உண்டு. வியாபாரிகளுக்கு நடுவே இப்படி ஒரு பழக்கம் உண்டு.

"உங்களை என் தலைவர் சந்திக்க விரும்புகிறார்."

"யார் உன் தலைவர்."

எதிர்வீட்டு பக்கம் உள்ள ஆட்கள் மெல்ல பூனை போல் வந்தார்கள். அப்பிமைய்யர் வீட்டை சுற்றிக் கொண்டார்கள். இடது, வலது பக்கத்திலிருந்து ஆட்கள் வந்தார்கள். வாசலில் நின்று கொண்டார்கள். தள்ளி எங்கேனும் குதிரையை நிறுத்தி யிருக்கிறானா என்று பார்த்தார்கள். கடைசி வீட்டு பின் பக்கம் ஒரு குதிரை கட்டப்பட்டிருந்தது. அதை அவிழ்த்து இழுத்துக்

கொண்டு போனார்கள். குதிரை கனைக்காமல் இருக்க, சட்டென்று துணியை சுற்றி மூடி வாயை இறுக்க கட்டினார்கள்.

''சொன்னால் ஆச்சரியப்படுவீர்கள்.''

''இனிமேல் எனக்கு எந்த ஆச்சரியமும் இல்லை.'' அவர் அலட்சியமாக பேசியது அவனை துணுக்குற வைத்தது.

''கங்கே யாதவ் உங்களை சந்திக்க விரும்புகின்றார்.''

''எப்போது.''

''எனக்கு தெரியவில்லை. செய்தி அனுப்புவார்.''

''இப்பொழுது எங்கு இருக்கிறார்.''

''மூன்றாம் வேளத்தில் இருந்தார். ஆனால் அங்கு நடமாட்டம் நன்றாக இல்லை என்று தெரிந்து நகர்ந்துவிட்டார். குடந்தைக்கு போவதாக என்னிடம் சொன்னார்.''

''குடந்தை வழியாகவா. போயிருக்க முடியாதே. தடுத்து நிறுத்தப்பட்டிருப்பாரே.''

''இல்லை. அவர் வல்லவர். சோழ தேசத்து சேனாதிபதி போல உங்கள் கேயூரங்களை அணிந்து கொண்டு தப்பித்து விடுவார்.''

''எங்கள் கேயூரங்கள் அவருக்கு எப்படி கிடைக்கும்.''

''கேயூரங்கள் வைத்துத்தானே சோழ தேசத்து தளபதிகள் பெண்டுகளோடு போகம் அனுபவிக்கிறார்கள்.'' மறுபடியும் உள்ளே ஒரு அதிர்ச்சி பரவியது. அப்பிமைய்யர் தரையில் உட்கார்ந்திருந்தார்.

''உன் பெயர் என்ன.''

''அதற்கு என்ன அவசியம்.''

''சாளுக்கிய தேசத்தில் உன் தகுதி என்ன.''

''நான் ஒரு உபதளபதி. உம்மை கூட்டிக் கொண்டு போய் கங்கே யாதவிடம் நிறுத்திவிட்டால் தளபதியாகி விடுவேன்.''

''இல்லை. அதற்கு வாய்ப்பே இல்லை.''

''ஏன்.''

''நான் வந்தால்தானே.''

''ஏன் வர மறுக்கிறீர்கள். காசுக்கு ஒத்துக் கொண்டீர்களே.''

''எனக்கு பணத்தேவை ஒத்துக்கொண்டேன். இதற்காக கங்கே யாதவை சந்திக்க முடியுமா.''

''சரி. நான் சொல்லிவிடுகிறேன்.''

''நீங்கள் போக முடியாதே.''

''ஏன்.''

''இந்த வீட்டை சுற்றி காவல் இருக்கிறது.'' அவன் திகைத்தான். சட்டென்று வாளை உருவினான். பக்கத்து அறைகளிலிருந்து ஆறேழு வீரர்கள் உருவிய வாட்களோடு வந்தார்கள். வாசற் பக்கம் ஓட முயற்சித்தான். கதவு பூட்டப்பட்டிருந்தது. இடுப்பிலிருந்து கட்டாரியை எடுத்துக் கொண்டு கழுத்தில் வைத்துக் கொண்டான்.

''ஒரு இழுப்பு ரத்தம் சிதறி எனக்கு மரணம் வந்துவிடும்.''

''அவசரப்படாதே எதற்கு சாகிறாய். இளம் வயதுதானே. எங்கள் பக்கம் சேர்ந்துவிடு. இந்த ஆயிரம் கழஞ்சும் உனக்கு. சுதந்திரம் தருகிறேன். என் தாய் மீது சத்தியம். சோழ தேசத்தில் உனக்கு நல்ல பதவி தருகிறேன். இங்கு இல்லை. இன்னும் தெற்கே பாண்டிய தேசத்தில் தருகிறேன். கங்கே யாதவை எனக்கு காட்டிக் கொடு.''

அவன் ''முடியாது'' என்று கத்தினான். சோழ வீரர்கள் சுற்றி வளைத்துக் கொண்டார்கள். அவன் கட்டாரி அவன் கழுத்திலேயே இருந்தது.

''சொல்வதை தயவு செய்து கேள். ஆத்திரப்படாதே. உன்னை அடித்து சித்ரவதை செய்தால்தானே தற்கொலை பற்றி யோசிக்க வேண்டும். தற்கொலைக்கு முயல வேண்டும். உன் மீது ஒரு பிரம்பு கூட படாது. என் தாய் மீது சத்தியம் செய்கிறேன். மாதா, பிதா, குரு, தெய்வம் அத்தனை பேர் மீதும் சத்தியம் செய்கிறேன். உன்னை நான் அடிக்கவே மாட்டேன். இங்குள்ள எவரும் துன்புறுத்த மாட்டார்கள். எனக்கு அதாவது சோழ தேசத்திற்கு ஆதரவாக வந்துவிடு.''

அவன் கட்டாரியை கீழே போட்டான். சட்டென்று பாய்ந்து அவனை இறுக்கிக் கொண்டார்கள். பின் கை கட்டினார்கள்.

அவன் விசும்பத் துவங்கினான். அப்பிமைய்யர் அருகே போய் தோளில் கை வைத்தார்.

"நீ எடுத்தது நல்ல முடிவு. நீ மறுபடியும் இந்த தற்கொலை முயற்சிக்கு முயலக்கூடாது என்றுதான் பின் கை கட்டியிருக் கிறார்கள். உன்னை இப்பொழுது சோதிக்கப் போகிறோம்."

அவனை நிர்வாணமாக்கினார்கள். தோளிலுள்ள ஆயு தங்களை அவிழ்த்தார்கள். குறுக்கே உள்ள இடுப்பில் சொருகி யிருந்த கட்டாரியை அவிழ்த்தார்கள். கட்டாரியை சோதித்து பார்த்தார்கள். உறையிலிருந்து உருவினார்கள். அந்த கட்டாரி யில் கர்நாடக பாஷையில் ஏதோ எழுதப்பட்டு இருந்தது.

"என்ன இது." அப்பிமைய்யர் கேட்டார்.

"அடையாளச் சின்னம். நான் உபதளபதி. ஒற்றன் என்று எழுதியிருக்கிறது."

"நல்லது. இவருக்கு குடிப்பதற்கு பானகம் கொடு. சுண்டல் கொடு." அவனை உட்கார வைத்தார்கள். பானகத்தை ஒருவன் ஊற்றினான். இன்னொருவன் சுண்டலை ஊட்டி னான். அவன் நொய்மையான ஒரு நீண்ட ஆசனத்தில் உட் கார்ந்திருந்தான். இரவு வரும்வரை அவனை அங்கேயே உட்கார்த்தியிருந்தார்கள். நூறு பேர் கொண்ட படை வெளி யேறி நகர்ந்து போனது.

தெரு சாதாரணமாய் இருந்தது. திடீரென்று ஒரு படை நடந்து போனதை ஆச்சரியத்துடன் பார்த்தது. மறந்து போனது.

நன்கு இருட்டியதும் அவனை தேரில் ஏற்றி தேர் கொடி யோடு பிணைத்து அழைத்துக் கொண்டு போனார்கள். கொடியை அணைத்துக் கொண்டு ஒரு வீரன் போகிறான் என்றுதான் மக்களுக்கு தெரிந்தது. கட்டப்பட்டிருந்தது தெரிய வில்லை. அவனை சிறையில் அடைத்தார்கள். அங்கே அந்த கூடத்தில் கால் விலங்கிடப்பட்டு அவன் அமர்ந்திருக்க இராஜாதிராஜனும், மாவலி வானவராயரும், வல்லப தேவரும், நீலகங்கரையரும் சுற்றி நின்று பார்த்தார்கள். வாசுதேவ நாராயணர் வந்தார். மேலைசாளுக்கியத்தில் தங்கியிருந்த கங்க தேசத்து வீரன் மொழிபெயர்ப்பாளராக வந்திருந்தான்.

அவர்கள் கேட்ட கேள்விக்கு அவன் தெளிவாக, நிதான மாக பதில் சொல்லத் துவங்கினான். எதையும் மறைக்கவில்லை என்று அவன் குழந்தைகள் பேரில் சத்தியம் செய்தான். அப்பி மைய்யர் சத்தியத்தை ஞாபகப்படுத்தினான்.

''என்ன எண்ணத்தில் கங்கே யாதவ் இங்கு வந்திருக் கிறான்.''

''சோழ தேசம் குறிப்பாக கங்கை கொண்ட சோழபுரம் காவல் இல்லாமல் இருக்கிறது. எசாளம், எண்ணாயிரத்திலெல் லாம் வீரர்களே இல்லை. காஞ்சிபுரத்தில் சோழ வீரர்கள் ஆடு, புலி ஆட்டத்தில் சூதாடியும், கள் குடித்தும், வெறுமே ஊர் சுற்றியும் இருக்கிறார்கள். நடு நாட்டில் இரவு நேரம்தான் ஊர் விழித்துக் கொள்கிறது. பகலெல்லாம் தூங்குகிறது. தொண்டை தேசத்தில் மயிலை ஒரு விழிப்பான நகரமாக இருந்தது. அங்குள்ள ஒரு தலைவன் நகர்ந்த பிறகு, வணிகர்கள் பொறுப் பேற்ற பிறகு பகலிலே விழித்துக் கொண்டு இரவானதும் போர்த்திக் கொண்டு தூங்குகிறது. நாய்கள் கூட தெருவில் உலாவுவதில்லை. தூங்குகின்றன. பொதுமகளிர் இல்லங்களில் கூட பகலில்தான் கூட்டம். இரவில் இல்லை. மேலைசாளுக் கியத்திலிருந்து கீழைசாளுக்கியம் வந்து கீழை சாளுக்கியத்தி லிருந்து தொண்டை தேசம் வருவது மிக மிக எளிது. காஞ்சி புரம் வரை நிச்சயம் எதிர்ப்பு இல்லாது இருக்கும் என்று என் னிடம் சொன்னார்.''

''மறுபடி படையெடுப்பு இருக்குமா.''

''இல்லை. சாளுக்கிய தேசத்திற்கு அதற்கு வலு இல்லை.''

''பிறகு எதற்கு நோட்டம் பார்ப்பது.''

''பாண்டிய தேசத்து வீரர்களை சந்திக்க முடியுமா. கலவரம் நடத்த முடியுமா என்று பார்ப்பதற்கு. இராஜேந்திர சோழரை தேடுவது.''

''எதற்கு.''

''தொலைவிலிருந்து பார்த்து அம்பெய்து கொல்வதற்கு.''

அவன் பேசி முடித்ததும் சகலரும் அவன் மீது பாய்ந்தார் கள். அப்பிமையர் தடுத்தார்.

''நான் சத்தியம் செய்திருக்கிறேன். அவன் உண்மை சொல்லியிருக்கிறான். இதை கெடுத்துவிடாதீர்கள். தயவு செய்து பின்னடையுங்கள். எனக்கும் தாக்க வேண்டும் போல் தான் இருக்கிறது. ஆனால் இவனை தாக்கினால் பேச்சு நின்று விடும். அது தவறாகும்.'' அவர் அமைதிபடுத்தினார். எல்லோ ரும் யோசித்தார்கள்.

''என்னைக் கொன்றுவிடுங்கள்.'' அவன் கெஞ்சினான்.

''என்னால் சோழ தேசத்தோடு சேர முடியாது. சோழர்களை நான் வெறுக்கிறேன். அறவே வெறுக்கிறேன். என் தந்தையை, என் தமையனை, என் தம்பியை கொன்ற இவர்களை வெட்டி வீழ்த்தவே விரும்புகின்றேன். ஒவ்வொரு நேரமும் சோழ தேசத்து வீரர்களை பார்க்கும்பொழுது இவனை இப்படி கொல்ல வேண்டும், அவனை அப்படி கொல்ல வேண்டும் என்று விரும்புகின்றேன். என் எதிரே இருக்கும் உங்களையெல் லாம் சிரச்சேதம் செய்யவே விரும்புகின்றேன். இப்படிப்பட்ட என்னை இங்கு வைத்திருக்காதீர்கள். கொன்றுவிடுங்கள்.''

அப்பிமைய்யரை நோக்கி கதறினான். அப்பிமைய்யர் 'முடியாது' என்று சொன்னார். அவன் கைகளுக்கு விலங்கு போடச் சொன்னார். அவனை விலங்கு போட்டு அமர வைத்தார் கள். குடிக்க தண்ணீர் கொடுத்தார்கள்.

சித்திரக்காரர்கள் வரவழைக்கப்பட்டார்கள். கங்கே யாதவ் உருவம் வீர நாராயணனால் விவரிக்கப்பட அவர்கள் வரைந் தார்கள். ஏதோ ஒன்று மிகச் சரியாக இருந்ததென்று சொல்ல, அதையே பத்து சித்திரக்காரர்களும் வரைந்தார்கள். பிரதி எடுத்தார்கள். அவைகளை காட்டியபோது அந்த சாளுக்கிய தேசத்து ஒற்றன் மேலும் சில திருத்தங்கள் செய்தான். அதை சுருட்டியபோது மெல்ல சிரித்தான்.

''ஏன் சிரிக்கிறாய்'', என்று கேட்க,

''இது அவர் உருவம்தான். ஆனால் அவர் இப்படி இருக்க மாட்டாரே. மாறுவேடத்தில் அல்லவா இருப்பார்'' என்று சொன் னான். எல்லோரும் திகைத்தார்கள். ஆனாலும் சித்திரம் உதவும் என்று சொன்னார்கள்.

மறுபடியும் இராஜாதிராஜன் குழப்பத்தில் ஆழ்ந்தான். தான் இளவரசு பதவிக்குக் கூட லாயக்கு இல்லையோ என்று உதறல் உடம்பு முழுவதும் ஓடியது. கட்டிலில் படுத்துக்கொள்ள அவன் தோள்களை த்ரைலோக்யமாதேவி அழுத்தி பிடித்துவிட்டாள்.

''ஏன் கவலைப்படுகிறீர்கள். நீங்கள் மகத்தான வீரர். ஆனால் திடும்மென்று உங்களுக்கு உங்களை பற்றி அவ நம்பிக்கை வந்துவிடுகிறது. நான் துர்க்கை பூஜை செய்ய ஆரம்பித்து இருக்கிறேன். கோட்டையில் நீங்கள் கொண்டு வந்த துர்க்கையை தனியாக இடம் வைத்து பூஜை செய்ய சொல்லியிருக்கிறேன். நல்ல உயரம் உள்ள அந்த துர்க்கை இன்னும் வனப்போடும் இன்னும் சக்தியோடும் இருக்கிறாள். ஆடுகள் அவள் எதிரே வந்து நின்று வெட்டுங்கள் என்று தலைதாழ்த்தி நிற்கின்றன. அந்த இடம் விட்டு போக மறுக் கின்றன. ஒரு நாளைக்கு ஒரு ஆடு என்று பலி கொடுக்கிறார் கள். அங்கு சிரிப்பு சத்தமும், சலங்கை சத்தமும் கேட்பதாக மக்கள் சொல்கிறார்கள். அங்கே உள்ளே நுழையும்போது எனக்கு உடம்பெல்லாம் புல்லரிக்கிறது. ஒரு பெரிய சன்னதிக்குள் நுழைகிறோம் என்று தெரிகிறது. இந்த உணர்வு எனக்கு கங்கை கொண்ட சோழீஸ்வரத்திலும் பரவிற்று.

அந்த தாயிடம் நான் வேண்டியிருக்கிறேன். உங்கள் கவலை கள் யாவும் தீர வேண்டும். அதற்கு நான் காணிக்கை தருகிறேன் என்று வேண்டியிருக்கிறேன்.''

''கங்கே யாதவ் குறித்து அதிகம் கோபத்தில் இருப்பவர், அரையன் ராஜராஜன். அவர் படைகளை சாளுக்கிய தேசம் நோக்கி நகர்த்திவிட்டு, அரையன் ராஜராஜனை இரண்டு வீரர்களோடு சேர்ந்து தேடச் சொல்லுங்கள். ஒற்றையாய் ஒரு குதிரைவீரன் எங்கே போகிறான் என்று விசாரிக்கச் சொல் லுங்கள்.''

கோட்டை காவல்கள் பலப்படுத்தப்பட்டன.

''அட, உடையார்க்குடியிலிருந்து வருகிறேன். காய்கறி கள் கொண்டு வந்திருக்கிறேன். யானைகளுக்கு கரும்புகள் கேட்டிருக்கிறார்கள். ஒரு வாரத்திற்கு மூன்று முறை வருவதும் போவதுமாக இருக்கிறேன். இப்பொழுது திடீரென்று சோதனை

செய்கிறீர்களே. யார் என்ன என்று கேட்கிறீர்களே.'' ஒரு விவசாயி அலுத்துக் கொண்டார்.

''நன்றாகத் தெரியும். உன்னை அறிவோம். சோதனைகள் கடுமையாக இருக்கிறதென்று மக்களுக்கும், மற்றவருக்கும் தெரிவிக்க வேண்டும். உடைகளை அவிழ்த்துவிட்டு கோமணத்தோடு நில்.''

''இது மிகப்பெரிய அநியாயமய்யா.''

''அந்நியர்கள் உள்ளே புகுந்துவிடக் கூடாது என்பதற்காக இந்தக் கட்டுப்பாடு. தயவுசெய்து கட்டுப்படு.''

''பெண்களை என்ன செய்வீர்கள்.''

'அதிகாரிச்சிகள் இருக்கிறார்கள். உனக்கு அந்த கவலை வேண்டாம்.'' பெண்களுமே சோதிக்கப்பட்டார்கள். எல்லா மூட்டைகளும் பிரிக்கப்பட்டு, அழுத்தப்பட்டு உள்ளுக்குள்ளே ஊசியால் குத்தப்பட்டு சோதிக்கப்பட்டது. எசாளத்திலிருந்து வருகிறோம் என்ற அந்தணர்கள் கூட வாசலில் உட்கார வைக்கப்பட்டார்கள். திண்ணையில் உட்கார வைக்கப்பட்டார்கள்.

உள்ளுக்குள்ளிருந்து அந்தணர் வந்து உங்களை அடையாளம் காட்டினால் உங்களை உள்ளே அனுப்புவோம் என்றார்கள். உள்ளுக்குள்ளே இருக்கும் அந்தணர்களுக்கு ஆள் அனுப்பினார்கள். வெளியே உட்கார்ந்த அந்தணர்கள் நொந்து போனார்கள்.

''இராஜேந்திரர் வந்தாலும் இடுப்பு தடவி சோதிப்பீர்களா.'' ஒரு அந்தணர் கேட்க,

''வெளியே போ.'' நெட்டி தள்ளினார்கள். சிறிது நேரம் அவர் வாசலில் நின்றுவிட்டு வந்த வழியே எசாளம் திரும்பினார். கோட்டைக் காவல் மட்டுமல்ல சோழப்படையும் திடும் திடுமென்று சோதனைக்கு ஆயத்தமானது. எல்லா மக்களையும் யாராவது ஒற்றை வீரன் போனானா என்று கேள்வி கேட்டார்கள். யாரைத் தேடுகின்றார்கள் என்று ஜனங்களுக்கு புரியவேயில்லை. ஆனால் எதனாலோ கங்கை கொண்ட சோழபுரம் பரபரப்பாகி விட்டது. ஒருவேளை இராஜாதிராஜர் புதிதாக பதவி ஏற்பதால் இப்படியெல்லாம் செய்கிறார்களோ என்று ஜனங்கள் கேலியாக பேசிக் கொண்டார்கள். புது பூந்துடப்பம். ஊகா முள் என்றார்கள். தஞ்சை மக்கள் குணம் அப்படித்தான்.

நடுநிசியில் கூத்து பார்த்துக் கொண்டிருக்கும்போது மௌனமாய் அந்த கூத்து கூட்டம் சுற்றி வளைக்கப்பட்டது. வந்தவர்கள் எல்லோரும் எழுப்பப்பட்டார்கள். யார், என்ன, என்று தீப்பந்தத்தில் பார்த்து இன்னார் இன்னார் என்று பலர் சொல்ல அவர்களை நகர்த்தி உட்கார வைத்தார்கள். இரண்டு நாழிகை கழித்து கூத்து துவங்கியபோது கூத்து கூத்தாகவே யில்லை. ஏதோ ஒரு கலவரம் உள்ளுக்குள் வந்து தங்கிவிட்டது. அவரவர் வீட்டுக்கு போகவே ஆசைப்பட்டார்கள்.

பூம்புகார் மிகப் பெரிய பட்டிணமாக மாறி இருந்தது. அரசர் வருகையாலும், தச்சர் குடும்பங்களோடு வந்து இறங்கிய தாலும், படைகளின் நடமாட்டத்தாலும் புதிய வீடுகள் கட்டப் பட்டு அங்கு மக்கள் குடியேறினார்கள். மரங்கள் வரும், வண்டி உள்ளே வர வேண்டும் என்று தெருக்களை விசாலமாக அமைக்கச் சொன்னார்கள். பல்சக்கரப் பெருவண்டிகளில் நீண்ட மரங்கள் எடுத்துப் போகப்பட்டன. பாதைகள் தினந் தோறும் சரி செய்யப்பட்டன. மேடு பள்ளங்கள் சமன் செய்யப் பட்டன. அப்படிப்பட்ட வண்டிகளுக்கு முன்னும் பின்னும் காவலாய் வீரர்கள் போனார்கள். மக்கள் அதை நெருங்க விடாமல் விரட்டினார்கள்.

எல்லா ஊர் தளபதிகளுக்கும் உலோகக் குழலில் ஓலை கள் அனுப்பப்பட்டன. சித்திரத் துணி சுருட்டி அனுப்பப்பட்டது. மிக ரகசியம் என்று எழுதப்பட்ட, முத்திரையிடப்பட்ட ஓலைக் குழல் அனுப்பப்பட்டது. தளபதிகள் ஓலை வாசித்து திகைப் படைந்தார்கள்.

''சோழ தேசத்தில் கங்கே யாதவா'' என்று மருகினார்கள்.

காவிரி பூம்பட்டிணம் என்று அழைக்கப்பட்ட பூம்புகாருக் குள் நுழைவது கடினமாக இருந்தது. கங்கே யாதவ் குதிரையை விற்றான். வழியில்லாத வழியை தேர்ந்தெடுத்துக் கொண்டு ஒரு மரத்தின் பிசினை எடுத்து அதை சூடுபடுத்தி முகங் களில், கைகளில், கால்களில் தடவிக் கொண்டான். வெள்ளை சுண்ணத்தில் தெளிந்த நீர் எடுத்து தன் தலையில் தடவிக் கொண்டு அதை வெளுப்பாக்கிக் கொண்டான். மூக்கு வளை யத்தையும், காது வளையத்தையும் நீக்கி கனத்த தோடு கள் மாட்டிக் கொண்டான். திருநீறு பூசிக் கொண்டான்.

வெளுத்த மீசையை ஒட்டிக் கொண்டான். புருவத்தையும் வெண்மையாக்கிக் கொண்டான். முருங்கை பிசின்கள் அவன் தோலை வயதான, உறுதியான கிழவன் என்ற தோற்றம் காட்டியது. தோலில் சுருக்கம் இருந்தது. அவன் இடுப்பில் சிகப்பு வேட்டியும், மேலே கருப்பு சால்வையும், காலில் சேற்றுப்புண் வந்தவன் போல நடந்தும், கையில் கழி ஊன்றியும் நடந்து வந்தான்.

பூம்புகாருக்கு உள்ளே நுழைந்தவுடன் பெருத்த சோதனையில்லை. ஆனால் ஒவ்வொருவரையும் வீரர்கள் உற்று பார்த்துக் கொண்டிருந்தார்கள். வெறுமே அரட்டை அடித்துக் கொண்டிருக்காமல் கூர்மையாக இருந்தார்கள். கடற்கரையோரம் பல குடிசைகள் இருந்தன. பொதுமகளிர் பெரும் கூச்சலோடு புழங்கி வந்தார்கள். செம்படவர் இடங்கள் தனியாக இருந்தன. அங்கு மீன் வாசனை தூக்கலாக இருந்தது. அங்கு வறுத்த மீன்களுக்கும், வதக்கிய மீன்களுக்கும் பெரிய கூட்டம் சாய்ந்தது. கள்ளை புளிக்க வைத்து, வேறு ஏதோ கலந்து மிகுந்த போதை ஏற்றுகின்ற பானமாக செய்திருந்தார்கள். மரத் தொழிலாளர்கள் கூட்டம் கூட்டமாக போனார்கள். நீண்ட மரங்களை பெரிய ரம்பம் கொண்டு அறுத்தார்கள். பலகையாக்கினார்கள்.

''என்ன வேடிக்கை பார்க்கிறாய்.''

''நாவாய் கட்டுவது இவ்வளவு கடினமா'' என்று திக்கித் திணற குழறிய வாயோடு அவன் பேசினான். பயந்தவன் போல் நடித்தான்.

உண்மையில் கங்கே யாதவுக்கு கடல் என்றால் பயம். நாவாயில் பயணம் என்றால் பயம். மலையின் பள்ளத்தாக்கும், ஆற்றோரமும், புல்வெளியும் அவனுக்கு மிகவும் பிடித்தவை. கடல் எதனாலேயோ மிகப் பெரும் மிரட்சியாக இருந்தது. இங்கு விழுந்தால் எப்படித் தப்பித்துக் கொள்ள முடியும். எதுவும் செய்ய முடியாது என்று தோன்றியது. கங்கே யாதவுக்கு நீச்சல் தெரியும். ஆனால் இரண்டு கரைகள் உள்ள நதியில் நீந்தி தப்பித்துவிடலாம். கடலில் விழுந்தால் எப்படி தப்பிப்பது என்ற கேள்வி இருந்தது.

எத்தனை பேர் வேலை செய்தாலும் சுமை தூக்குபவர்களுக்கே பஞ்சம் இருந்தது.

''வா. இந்த மரப்பலகையை பின்பக்கம் தூக்கு. நான் முன்பக்கம் போகிறேன்.'' ஒரு மரத் தொழிலாளி கேட்க, அவன் உதவி செய்வதாகச் சொன்னான். சால்வையை மடித்து மரப் பலகை மீது போட்டுக் கொண்டான். மரப்பலகையை தலையில் வைத்துக் கொண்டான். நாவாய் கட்டும் இடத்தை நெருங்க இது உதவி செய்தது. அங்கும் சோதனை செய்தார்கள். முன்னே போகிறவனை பார்த்து, 'இது எத்தனை நடை' என்ற கேட்டு எத்தனை பலகைகள் என்று குறித்துக் கொண்டார்கள்.

மூங்கில் வேலி அமைத்த ஒரு பெரிய திறந்தவெளி கூடத்திற்கு கங்கே யாதவ் போனான். தொலைவில் ஒரு சிறு கூட்டம் இருந்தது. மரப்பலகையை இறக்கச் சொன்னார்கள். சிறிது நேரம் ஓய்வெடுத்துக் கொள் என்று சொன்னார்கள். அவன் நகர்ந்து போய் ஓர் இடத்தில் குத்திட்டு உட்கார்ந்தான்.

அந்த இடத்தின் கும்பலைத் தாண்டி ஒருவர் வெளியே வந்தார். பருமனாக இருந்தார். தலையில் வேலைப்பாடுகள் அமைந்த கிரீடம் இருந்தது. பெரிய பட்டு சால்வை போர்த்தியிருந்தார். கங்கணங்கள் மின்னின. இடுப்பிலும் தங்கப் பட்டை அணிந்திருந்தார். வளைந்த செருப்பு அணிந்திருந்தார். 'இவரை கூப்பிடு. அவரை கூப்பிடு' என்று கையில் ஓலை வைத்து பேசிக் கொண்டிருந்தார். கங்கே யாதவ் எழுந்தான்.

அவரா. அந்த மனிதர் தானா. அடேய் பேரழகனாக இருக்கிறானே என்று வியந்தான். 'திருமன்னி வளர..' திடீரென்று தளபதிகள் உபதளபதிகள் ஒன்று சேர்ந்து உரத்த குரலில் அவர் புகழ் பாடினார்கள். அவர் கை உயர்த்தி பாடியதை நிறுத்தினார். 'கங்கே யாதவ்' என்று அவர் சொல்லும் குரல் கங்கே யாதவுக்கு கேட்டது.

''எப்பேர்ப்பட்ட மனிதன். அவன் என் பெயரை உச்சரிக்கிறானே.'' சந்தோஷமாக இருந்தது.

நான்தான் இராஜேந்திரா, நான்தான் கங்கே யாதவ் என்று உரத்து கத்த வேண்டும் போல் இருந்தது. ஆனால் அடக்கிக் கொண்டான். நிற்காமல் குத்திட்டு உட்கார்ந்து அந்த மேட்டிலிருந்து இராஜேந்திர சோழன் அசைவை ரசிக்கத் துவங்கினான்.

★ ★ ★

அத்யாயம்

95

ஆதுரச்சாலை, மிருதுவாக இயங்கிக் கொண்டிருந்தது.

கங்கை கொண்ட சோழபுரத்தில் ஒரு வீட்டில் வைத்து ஒரு வீரனின் புரையோடிய காலை துண்டு பண்ணி இரத்த ஓட்டத்தை சரி செய்து காயங்கள் ஆறும் வரை கழுவி மருந்து போட்டு செய்து வந்த மாயா ஜால வேலை இவரிடம் பலிக்க வில்லை. இவருக்கு இடது கையில் வெட்டு விழுந்தது. விழுந்த போதே உடனடியாக வைத்தியம் செய்திருக்க வேண்டும். அவன் அதை அலட்சியம் செய்து, அந்த வெட்டை எல்லோருக்கும் காண்பித்தபடி வடக்கே ஊர் ஊராக பயணம் செய் திருக்கிறான். புண்ணை திறந்துவிடாமல் மருந்து போட்டு, கைக்கு எண்ணெய் தைலம் தடவி துணியால் கட்டிப் போட்டிருந்தால் இன்னும் ப்ர்வையாக இருந்திருக்கும். அவன் விரும்பியபடி எல்லோரும் விசாரித்திருப்பார்கள். புண்ணும் ஆறியிருக்கும். இவ்வளவு பெரிய வெட்டா. எப்படி நடக்கிறாய் என்று தளபதிகள் கேட்கும் அளவுக்கு அவன் அலட்டிக் கொண்டான். புண் உள்ளே புரையோடி விட்டது. எலும்பில் ஊடுருவி விட்டது. மஜ்ஜையெல்லாம் செத்து விட்டன. வெட்டித்தான் ஆகவேண்டும் என்று சொன்னபோது இவரை கேட்டுச் சொல்கிறேன், அவரை கேட்டுச் சொல்கிறேன் என்று ஒரு மாத காலம் வலியோடு அலைந்தான். காஞ்சன இலைகளை தின்றான். அந்த எண்ணையில் திரியில் ஊறவைத்து, பற்றவைத்து திரியிலிருந்து ஒரு புகையை சுவாசித்து மதிமயங்கி கிடந்தான். இதெல்லாம் வலியை மறக்கடிக்கச் செய்யுமே தவிர, நோயை குறைக்காது.

எப்போதேனும் வைத்தியர்கள் இந்த முறையை நோயாளிகளுக்கு ஏற்பாடு செய்வார்களே தவிர, தானாக ஏற்பாடு செய்து தினம் தினம் புகையை சுவாசிக்கக் கூடாது. அது உடல்

வலுவை, மன வலுவை குறைக்கும். இப்பொழுது இரண்டும் குறைந்த நிலையில் இங்கு வந்து கதறினான்.

ஞானசம்பந்தம் பார்த்த சில வினாடிகளில் கையை எடுத்துத் தான் ஆக வேண்டும் என்று சொல்ல, மிகப் பெரிய ரகளை செய்தான். வைத்தியரை கொடுமையானவர் என்பதாகப் பார்த் தான். இதெல்லாம் ஞானசம்பந்தத்திற்கு பழக்கம்தான். ஆனால் நாகரத்தினத்திற்கு கோபமாக இருந்தது.

''உன்னை எனக்குத் தெரியும். நீ அலட்டிக் கொண்டதை யும் அறிவேன். ஜெயித்துக் கொண்டு வந்து விடுவாய் என்று நினைத்தேன். இல்லை. நோயிடம் தோற்றுவிட்டாய், புண்ணை திறந்துவிட்டாய், அல்லது வேறு ஏதேனும் தொந்தரவு செய் திருக்கிறாய்.

உண்மை அதுதான். யார் யாரோ என்னென்னவோ உப்பு சொல்லியிருக்கிறார்கள். இந்த உப்பை போட்டு தேய். இந்த களிமண்ணை வை என்றெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். வாய்க்கு வந்தபடி சொன்ன வைத்தியம் அத்தனையும் நிறை வேறியிருக்கிறது. வைத்தியர் இடம் மட்டும் தாமதமாக வந்து சேர்ந்திருக்கிறான்.

வேறு வழியே இல்லை, உன்னை காப்பாற்ற வேண்டும் என்றால் இந்த கையை அகற்றித்தான் ஆக வேண்டும். இது எனக்கு புதிதல்ல, இதுவரை பல கைகளை, கால்களை நான் அகற்றி இருக்கிறேன். நன்றாக இருக்கிறார்கள். கவலைப் படாதே, ஒரு கை இருக்கிறது. ஊர் உன்னை காப்பாற்றும்.'' ஞானசம்பந்தம் அமைதியாகச் சொல்ல,

''இதற்கா நான் சோழ தேசத்தில் பிறந்தேன்'' என்று அறற்றினான்.

இருக்கலாம் என்று ஞானசம்பந்தம் சொல்ல, சீறி வலக் கையால் அடிக்க வந்தான். அவனை காவலாளிகள் பிடித்து ஓரமாக உட்கார வைத்தார்கள். இன்னும் ஒருமுறை பாய்ந்தால் தலையில் தட்டி அனுப்பி விடுவோம் என்று எச்சரித்தார்கள். அவன் மனைவியும், தமக்கையும், தாயும், பாட்டியும் அவனை சமாதானப் படுத்தினார்கள். மிகப் பெரிய பெண்கள் கூட்டத் திற்கு நடுவே அவன் சொகுசாக வீற்றிருந்தான். 'இதை எடு.

அதைக் கொடு' என்று ஏவிக் கொண்டிருந்தான். அந்த மறவர் குல பெண்கள் பதட்டப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அவர் களுக்கும் புத்தி இல்லை. இவனை சமாதானப்படுத்தத் தெரிய வில்லை. அவன் மனைவி பாவம் முன்னும், பின்னும் அல்லாடி னாள். யார் பேச்சை கேட்பதென்று தெரியவில்லை. அதே நேரம் புருஷனிடம் உயிராக இருந்தாள்.

''எனக்கு என்ன தெரியும். எனக்கு எதுவுமே தெரியாது. இவர் இல்லாவிடில் எனக்கு வாழ்க்கையே இல்லை. இவர் இருப்பதால்தான் எனக்கு குறைந்தபட்ச மரியாதையாவது கிடைக்கிறது, இவரும் இல்லையென்றால் என்னை சீந்துவார் யார். எனக்கு தாய் இல்லை. தகப்பன் இல்லை, உறவினர்கள் இல்லை. அதனால்தான் இவரோடு இவர் குடும்பத்தோடு ஒண்டி வாழ்கிறேன். எனக்கு வாழ்க்கை பற்றி எதுவும் தெரியாது. நான் எப்படி கங்கை கொண்ட சோழபுரம் வந்தேன். எந்த ஊரி லிருந்து வந்தேன், எது பாதை. எதுவும் தெரியாது, இன்று காலை என்ன தானியம் இருக்கிறது. எப்படி சமைக்க வேண்டும். இவர் தாய்தான் தீர்மானிக்க வேண்டும். இன்று என்ன உடுத்த வேண் டும் இவர் பாட்டிதான் சொல்வாள். எப்போது குளிக்க வேண்டும் இவர் தமக்கைதான் தீர்மானிப்பாள். நான் எதுவுமே தீர்மானித் ததில்லை, தீர்மானிக்க இவர்கள் விட்டது இல்லை, வீட்டில் இருக்கும் பல்லிக்கு என்ன தெரியும், வீடு தவிர, அதுபோல, மனிதர்கள் சூழ்ந்த இவர் வீடு தவிர எனக்கு வேறு எதுவும் தெரியாது. பல்லியோடு பல்லியாக நானும் வாழ்ந்து கொண் டிருக்கிறேன்.'' அவள் தனியே நாகரத்தினத்திடம் சொல்லிவிட்டு அழுதாள்.

மிகப் பரிதாபமாக இருந்தது. சோழ தேசத்தில் பல பெண் களுடைய வாழ்க்கை இப்படித்தான் இருக்கிறது. அவர்களுக்கு உலகம் பற்றி தெரியவில்லை. தனியே நிற்க தெரியவில்லை. தனியே நிற்க சோழ தேசமும் ஏன் உலகமும் கூட விடாது.

சோழ தேசத்து பெண்கள் மட்டும் இல்லை, பாண்டிய தேசத்து பெண்களும், சேர தேசத்து பெண்களும், கீழை சாளுக்கிய பெண்களும், ஒட்ட தேசத்து பெண்களும் இப்படித் தான் இருக்கிறார்கள். ஆதூரச் சாலை பெருகிவிட்டது. ஒட்ட தேசத்து பெண்கள் சுறுசுறுப்பானவர்கள். ஆதூரச்சாலை

வேலையில் ஆர்வம் காட்டுகிறவர்கள். ஒட்ட தேசத்து பெண்கள் வெளுப்பாகவும், குள்ளமாகவும், சற்று உதடு பருமன் உள்ள வர்களாகவும், நிதானமான நடை உள்ளவர்களாகவும், பெரிய விழி உள்ளவர்களாகவும், கனத்த குரல் உள்ளவர்களாகவும், இருந்தார்கள். அவர்களுக்கு குளிரோ, வெய்யிலோ அதிகம் சிரமப்படுத்தவில்லை. அவர்கள் அலட்டிக் கொள்வதில்லை.

ஒட்டதேசத்து வேளத்திற்குப் போய் அங்கு இம்மாதிரி தாதிகள் வேண்டும் என்று கேட்டபோது பல பெண்கள் ஆர்வ மாக முன் வந்தார்கள். நூற்றுக் கணக்கான பெண்களில் பதினாறு பெண்களை தேர்ந்தெடுத்து கங்கை கொண்ட சோழ புரம் அழைத்து வந்த அவர்களுக்கு அடையாளச் சீட்டு கொடுத்து உள்ளே ஆதூரச் சாலைக்கு அழைத்து வந்தார்கள். ஒட்ட தேசத்து ஆண்களே ஆதூரச் சாலை கட்டிடங்கள் செய் யவும் வேலை செய்தார்கள். ஒட்ட தேசத்து பாஷை ஆதூரச் சாலையில் அதிகம் புழங்கியது.

அந்த மக்களுக்கு உடல் நோய் வந்தபோது உடனடியாக ஒட்டதேசத்து பெண்களும், ஆண்களும் அந்த மக்களுக்கு உதவி செய்தார்கள். குழந்தை பேறு நடந்தபோது என்ன செய்ய வேண்டும் என்று கேட்டு ஒட்ட தேசத்து பெண்களே வேலை பார்த்தார்கள்.

நாகரத்தினம் பல்வேறு விதமான வேதனைகளை நேரில் பார்த்தாள். போர் என்பது எவ்வளவு கொடுமை என்று அவ ளுக்கு உள்ளுக்குள் தெரிந்தது. ஆனால் அவள் வெற்றி பெற்ற தேசத்து பெண்மணி. எனவே போர் பற்றி அதிகம் குறை சொல்லக் கூடாது என்று மௌனமாக இருந்தாள். ஆனால் போரின் கொடுமை கண்ணெதிரே பல்வேறு விதமாய் தாண் டவமாடிற்று. அதில் இந்த புரையோடிய கையும் ஒன்று.

அறுவை சிகிச்சைக்கு நாள் குறிக்கப்பட்டது. அவனுக்கு தெம்பான பழரசங்களும் கோழிக்கறி உணவும் கொடுக்கப் பட்டது. ஆனால் அவைகளை அவன் உடம்பு ஏற்கவில்லை. வயிற்றால் போயிற்று, நடக்க முடியாமல் தள்ளாடினான்.

உடம்பில் சக்தி இருந்தால்தானே இந்த அறுவை சிகிச் சையை ஏற்க முடியும். வேறுவிதமாக சோற்று குழையலும்,

காய்கறியை புணர்பாகம் செய்தும் கொடுக்கப்பட்டது. ஆனால் அதுவும் பெரிதாக சத்து கொடுக்கவில்லை. அவன் மெலிந்து கொண்டே வந்தான். உடம்பில் ஒரு ஜுரம் இருந்து கொண்டே இருந்தது. அறுவை சிகிச்சை நாளன்று விடியலில் ஞான சம்பந்தம் மிகவும் பதட்டமாக இருந்தான். மனைவியிடம் வந்து உட்கார்ந்தான்.

''இது சரியாக வரும் என்று நினைக்கிறாயா. விட்டுவிட்டால் கூட ஒரு மாதமாவது இருப்பான் இல்லையெனில் இன்று மாலையே மடிந்து போவான். என்ன செய்யலாம்.'' யோசித்தான்.

நாகரத்தினம் பரிதாபத்தோடு தொலைவில் தன் வீட்டிற்காக விறகை செதுக்கிக் கொண்டிருந்த பெண்ணை பார்த்தாள். இங்கு வந்ததிலிருந்து ஏதேனும் வேலை செய்து கொண்டிருக்கிறாள். மற்றவர்கள் மர நிழலில் ஆதூரச் சாலை திண்ணைகளில் படுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆதூரச்சாலை ஒரு பக்கம் கட்டி முடித்தாகிவிட்டது. இரண்டு அடுக்கு. ஒரு அடுக்கில் இருபது படுக்கைகள். மேலும் கீழுமாய் இரண்டு படுக்கைகள். மேலே ஆண்களுக்கென்றும் கீழே பெண்களுக்கென்றும் பிரித்து விடப்பட்டிருந்தன. பெண்கள் விரைவாக குணமாகி போனார்கள். உணவுக் கட்டுப்பாடோடு இருந்தார்கள். ஆண்களுக்கு தீராப் பசி இருந்தது. சில மருந்துகள் பசியை தூண்டும். ஆனால் அரை வயிறு சாப்பிட்டிருந்தால் நல்லது. ஆனால் இவர்கள் போடு போடு என்று சாப்பிட்டார்கள். இது வயிற்று உப்பசம் கொடுத்தது. வாயு தொந்தரவு நெஞ்சை அடைத்தது. கபத்தை அதிகரித்தது. கபத்தை சரி செய்ய மருந்து கொடுத்தால் ரணம் சீறியது.

'வெறும் நீராகாரமாக குடி, ரசமாக சாப்பிடு. கோழியை கொதிக்க வைத்த நீரில் உப்பும், மிளகும் போட்டு சிறிது சிறிதாக அருந்து' என்று சொல்லியும் புரியவில்லை, நாலே மடக்கு, ஒரு பானையை அப்படியே கவிழ்த்துக் கொள்கிற ஆத்திரம் அவர்களுக்கு இருக்கிறது.

பெண்கள் நிதானமாக இருந்தார்கள். அதுவும் தவிர ஏதோ வொரு குணமாகக் கூடிய திறன் இருந்தது. மாதாந்திர ரத்தப் போக்கு பழக்கப்பட்டதால் அவர்கள் வலி குறித்து அதிகம்

அலட்டிக் கொள்ளவில்லை. அமைதியாக அரைக் கண் மூடி தூங்கினார்கள். காஞ்சன இலை தேவைப்படவில்லை, கீழே யிருந்து வரும் புகையே போதும், ''அதை சுவாசிக்கும் பொழுதே மயக்கம் வருகிறது, எப்படி திரியை மூக்குக்கு அருகே வைத்து உறிஞ்சுகிறார்களோ தெரியவில்லை'' என்று ஒரு பெண் சொன் னாள்.

ஒரு இடத்தில் புகை போட்டால் கூட மற்ற இடத்தில் அந்த நெடி இருக்கத்தான் செய்தது. ஒட்டதேசத்து பெண்கள் முகத்தை துணியால் மூடி அலைந்தார்கள். அந்த புகையை அதிகம் சுவாசிக்காமல் சுறுசுறுப்பாக வேலை செய்தார்கள். அப்படி புகை போடுவதை வேறு இடத்திற்கு மாற்றிவிடலாமா. தனி இடம் ஏற்படுத்திவிடலாமா என்று கூட யோசிக்கப்பட் டது. ஆனால் அறுவை சிகிச்சைக்காக தனி இடம் ஒதுக்கப் பட்டது.

ஜன்னல்களில் கனத்த திரைச்சீலை இருந்தது. பெரிய முற்றம் இருந்தது. முற்றத்து வெளிச்சம்தான் சுற்றியுள்ள நடை பாதைகளுக்கும் அடுத்து உள்ள கூடங்களுக்கும் வந்தன. மருந்து அறையில் நிரந்தரமாக குத்துவிளக்குகள் எரிந்தன. வேப்பம் பூவால், கொழுந்து இலைகளால் குளிகைகள் தயார் செய்யப்பட்டு இருந்தன. அந்த குளிகைகளை வைத்தியம் பார்ப்போர் காலையிலும், மாலையிலும் எடுத்துக்கொண்டார் கள். கடும் கசப்பு இருந்தது. நோய் எதிர்ப்பு சக்தியை கொடுத்தது. வைத்தியத் துறையில் உள்ளவர்கள் தினமும் இரண்டு வேளை வெந்நீரில் குளிக்க வேண்டும் என்ற கட்டாயம் இருந்தது. நெற்றியில் சந்தன பட்டை போட்டுக் கொள்ள வேண்டும் என்ற உத்தரவுக்கு இருந்தது. அந்த சந்தனப்பட்டையை ஒட்ட தேசத்து பெண்கள் பட்டையாக போட்டுக் கொள்கிறார்கள். பார்த்ததுமே வைத்தியம் என்று தெரிந்து விடுகிறது. அந்த சந்தன கீற்றோடு நடமாடி சோழதேசத்து மக்களிடம் நல்ல அபிப்ராயத்தை பெற்றிருந்தார்கள். ஆனால் இந்த வேலை மிகக் கடினமான வேலை என்று சகலருக்கும் தெரிந்திருந்தது.

அவனை வெந்நீரால் துடைத்து அறுவை சிகிச்சை செய்யும் இடத்திற்கு கொண்டு வந்து போட்டார்கள். அவனை புளித்த காடியும், வேறு சில மருந்துகளும் கொடுத்து அயர்ந்து

தூங்க வைத்தார்கள். இடது தோள் மூட்டிலிருந்து கீழே ஒரு அடி தூரம் வரை புண் இருந்தது. ஆனால் மூட்டு வரை பரவி இருந்தது. மூட்டுக்கு பிறகு எதை எடுப்பது என்ற கேள்வி இருந்தது. வேகமாக ஞானசம்பந்தம் இடக்கையை இழுத்து மூட்டிலிருந்து சிறிது தள்ளி அறுத்தான். கையை துண்டாக்கினான். தொலைதூரம் எடுத்துக் கொண்டு போய் அந்த கையை புதைத்தார்கள். கையில் ரத்த சேதாரம் அதிக்ம் இருந்தது. நிறுத்தி கட்டு போட்டார்கள். கட்டு ரத்தத்தால் நனைய மறுபடியும் கட்டு போட்டார்கள். ரத்தம் அதிகம் சேதாரம் ஆகாமல் இருக்க ஒரு மருந்து அவனுக்கு புகட்டப்பட்டது. இன்னும் மறுமுறை புகட்டினார்கள். அவனை சரிவாக உட்கார வைத்தார்கள். அவன் வலியில் முனகினான். வலக் கையால் இடக் கையை எங்கே என்று தேடினான். இருதயம் பலவீனமாக இருந்தது. நாடித் துடிப்பு தாறுமாறாக இருந்தது. பிழைத்து விடுவான் என்ற நம்பிக்கையும் இருந்தது. சந்தேகமும் இருந்தது.

''இன்னும் ஒருநாள் போகட்டும். தெரிந்துவிடும்'' என்று ஞானசம்பந்தம் சொல்லிவிட்டு மிகுந்த சோர்வோடு வெளியே போனான். அந்தப் பெண் பின்னாலேயே ஓடிற்று.

''குணமாகிவிடும் அம்மா, கவலைப்படாதே, நீ அறுவை சிகிச்சை செய்த இடத்திலேயே இரு.'' அவன் ஆசுவாசப்படுத்தினான்.

மற்றவர்களை நெருங்க விடவில்லை. அவளை மட்டும் தன் கணவனுக்கு அருகே போக அனுமதித்தார்கள். அவன் அரை தூக்கத்தில் அவளை பார்த்தான். 'என் கை எங்கே. அதை நான் பார்க்க வேண்டும்' என்று சொன்னான். அவள் பதில் சொல்லாமல் 'தூங்குங்கள்' என்று நெஞ்சை தடவிக் கொடுத்தாள்.

''அவ்வளவுதானா, அவனிடம் வேறு எதுவும் பேச மாட்டாயா,'' நாகரத்தினம் கடிந்து கொண்டாள். தனியாக இருக்கும் பொழுதும் அவனிடம் இவள் பேசுவதற்கு ஒன்றும் இல்லையே என்று வருத்தப்பட்டாள். எந்நேரமும் தாயும், தமக்கையும், பாட்டியும் சூழ்ந்திருக்கும் அவனுக்கு மனைவி ஒரு மதிப்பாகவே தெரியவில்லை.

''பேசு. உன் மனைவியோடு பேசு.'' நாகரத்தினம் வற்புறுத்தினாள். அவன் கண்களைத் திறந்து அவளை பார்த்தான். திடீரென்று அழத் துவங்கினான்.

''உனக்கு நான் ஒருநாளும் உதவியாகவே இல்லை. உன்னிடம் அன்பாகவே இல்லை, உன்னை புரிந்துகொள்ளவேயில்லை, இவர்கள் திருமணம் செய்யச் சொன்னார்கள். திருமணம் செய்தேன். இவர்கள் கூடல் செய்யச் சொன்னார்கள் கூடல் செய்தேன். உன்னை நான் புரிந்து கொள்ளவேயில்லை. உனக்கு எந்த உதவியும் செய்யாமல் நான் இறந்துபோகிறேன். என்னை மன்னித்து விடு.'' அவன் இரண்டு கையையும் தூக்க முயற்சித்தான். பளிச்சென்று இரத்தம் பீய்ச்சி அடித்தது.

''அசையாதே, அசையாதே,'' நாகரத்தினம் கத்தினாள். அவன் சோர்வோடு சாய்ந்து கொண்டான். மறுபடியும் கட்டை உருவிப் போட்டு வேறு கட்டை மாற்றினாள். அந்தப் பெண் ரணம் பார்த்துவிட்டு வாயை பிளந்து கொண்டது.

''இதுதான் எலும்பா,'' என்று வெள்ளையான பகுதியை பார்த்து கேட்டது. ''ஆமாம்'' என்று சொன்னாள்.

''எனக்கும் வைத்தியம் கற்றுக் கொடுக்கிறீர்களா'' என்று கெஞ்சியது.

''இதுவா வைத்தியம் கற்றுக் கொள்ளும் நேரம். உன் புருஷன் என்ன ஆவான் என்று தெரியவில்லையே'' என்று நாகரத்தினம் பதில் சொன்னாள்.

''ஏன் அப்படி சொல்கிறீர்கள்,''

''கடினமாகத்தான் இருக்கிறது. இன்னும் இரண்டு நாள் போக வேண்டும்,''

''சரியாகிவிடும் என்று உங்கள் புருஷன் சொன்னாரே.''

''உனக்கு ஆறுதலுக்காகச் சொன்னார்,''

''அப்படியானால் மரணம் நிச்சயமா,''

''எல்லோரும் ஒருநாள் மரணமடைய வேண்டியதுதான்.''

''அது புரிகிறது. இந்த வயதில் என் புருஷன் இந்த வெட்டால் இறந்துவிடுவாரா.''

காஞ்சி, பிரம்மதேசம் வேறு கோணம்.

''ஆமாம் என்றுதான் நினைக்கிறேன்,''

''பிழைப்பதற்கு என்ன வழி,''

''இறைவன் ஒன்றுதான் வழி,'' அந்தப் பெண் வெளியேறி திருநீறு இட்டுக் கொண்டு வந்தது. முகத்தில் ஒரு கடுமை இருந்தது.

''எனக்கு முப்பது அகவை ஆகிவிட்டது. பதினோரு வயதில் திருமணம் செய்தார்கள். பதிமூன்று வயதில்தான் இவரோடு கூட முடிந்தது. எதனாலேயோ குழந்தை இல்லை. இவர் கூடல் சரியில்லை என்று என் வீட்டிலும், நான் சரியில்லை என்று அவர் வீட்டிலும் சொன்னார்கள். எனக்கு குழந்தையில்லை என்ற வேதனையைவிட இவர் என்னை புறக்கணிப்பது மிகுந்த வேதனையாக இருந்தது. எனக்கு எதுவும் தெரியக் கூடாது என்பதில் இவர் வீட்டார்கள் தெளிவாக இருந்தார்கள். ஒரு கதை கேட்பது, ஒரு நாடகம் அழைத்துப் போக மாட்டார்கள். வீட்டிலேயே இருக்க வேண்டும். வீட்டு வெளியே ஊர்வலம் போனால் உள்ளே போ என்று இவர் கர்ஜிப்பார். நான் உள்ளிருந்துதான் ஊர்வலத்தை கவனிக்க வேண்டும்.

இந்த ஆதுரச்சாலைக்கு வந்த பிறகுதான் நான் மக்களையே சரியாக பார்க்கிறேன். பெண்களை பார்க்கிறேன். பெண்கள் எவ்வளவு அழகாக உடுத்துகிறார்கள். எவ்வளவு நறுவிசாக இருக்கிறார்கள். நான் என்ன உடுத்தினாலும் குப்பை போல் இருக்கிறேன். எனக்கு சரியாக தலை வாரவும் தெரியவில்லை. இங்குள்ள ஒட்ட தேசத்து தாதிகள் எவ்வளவு சிறப்பாக தலை வாரி, பொட்டிட்டு, உடை உடுத்தி சுத்தமாக இருக்கிறார்கள். எனக்கு ஆதுரச் சாலையில் வேலை செய்ய வேண்டும் என்ற ஆசை வந்து விட்டது. ஆனால் இவையெல்லாம் எனக்கு செய்ய வராது. இவர்கள் எவ்வளவு தெளிவாக வேலை செய்கிறார்கள். இதைப்போல என்னால் செய்ய முடியாது. செய்யக் கற்றுக் கொடுக்க வில்லை. எல்லாம் தடுமாற்றம்தான்.

இவர் இறந்து போனால் அந்த வீடு என்னை படாத பாடு படுத்தும். இவர் இறந்து போனால் நான் இறந்து போனது போல் தான். இவர்களோடு இருப்பதை விட, நான் இறந்து போவதே உத்தமம். என்னை ஒன்றும் தெரியாமலே வளர்ந்தார்கள். ஒன்றும்

தெரியாமலே வாழ்க்கைப்பட்டேன். ஒன்றும் தெரியாமலே சாகப் போகிறேன். இவரைத் தவிர வேறு எதுவும் எனக்குத் தெரியாது. இவர் இல்லையெனில் என் வாழ்க்கைக்கு எந்த அர்த்தமும் இல்லை. நானும் செத்துப் போவேன். உடனடியாக வலியின்றி செத்துப்போவதற்கு ஏதேனும் மருந்து உண்டா,'' அந்தப் பெண் குரல் குழைய கேட்டது. நாகரத்தினம் மெல்ல போய் அவள் தலையை வருடிக் கொடுத்தாள். தோளை தட்டிக் கொடுத்தாள். அந்தப் பெண் பாய்ந்து கட்டிக் கொண்டாள். போனால் போகட்டுமென்று நாகரத்தினம் அந்தப் பெண்ணை இறுக்க தழுவிக் கொண்டாள். முதுகு தடவி கொடுத்தாள்.

''கடவுள் சொல்லும்வரை மரணத்திற்கு போகக்கூடாது. தற்கொலை செய்து கொள்ளக்கூடாது. ஏதேனும் ஒரு உபயோகம். ஏதேனும் ஒரு உயர்வு உனக்கு காத்திருக்கலாம். புரிந்து கொள்'' என்று தலையை நீவி விட்டாள்.

அவளை தழுவிக் கொண்டதற்காக உடைகளை களைந்து வெந்நீரில் நீராடினாள். மறுபடியும் வேறு உடையில் வந்தாள்.

அவனுக்கு ஜுரம் அதிகமாயிற்று. மறுபடியும் மனைவியை நோக்கி அவன் பிதற்றினான். ''என்னை மன்னித்துக்கொள்'' என்று கைகளை கோர்த்து நெஞ்சில் வைத்துக் கொண்டான். அவளை கனிவோடு பார்த்தான்.

''அடுத்து ஒரு ஜென்மம் இருந்தால் எனக்கு மனைவி யாக நீ வா. உன்னை அற்புதமாக கவனித்துக் கொள்கிறேன்'' என்று கண் மூடி சிரித்தான். ''வலிக்கிறது.'' என்றான். அவனுக்கு புகைமூட்டம் போட்டார்கள். தூங்கிப் போனான். அவள் புகை சுவாசித்து தள்ளாடி வெளியே வந்து உட்கார்ந்து கொண்டாள். அழுதாள். அவளை நோக்கி அந்த பெண்கள் வந்தபோது நாகரத்னம் ''வெளியே போங்கள்.'' என்று துரத்தி விட்டாள். படல் தாண்டி யாரும் வரவில்லை. தானாக அழட்டும், புலம்பட்டும் என்று ஏற்பாடு செய்தாள்.

மாலை நேரம் அவனுக்கு கடும் இருமல் வந்தது. அதனால் இடது தோளில் இரத்தக்கசிவு இருந்தது. மூச்சு திணறியது. நுரையீரல்கள் சரியாக இயங்கவில்லை. அதற்கு மேலாக மருந்து தடவியும் குறையவில்லை. அன்று விடியற்காலை அவன்

அதிகம் முனகினான். தாதிகள் வந்து நாகரத்தினத்தை எழுப்பினார்கள். நாகரத்தினம் அவன் படுக்கைக்கு கீழே தூங்கிக் கொண்டிருந்தவளை தட்டி எழுப்பினாள். பேசு பேசு என்றாள. அவள் அவனோடு பேச முயற்சித்தாள். ஆனால் அவனுக்கு கேட்க வில்லை. கண்ணை திறந்து ஒருமுறை பார்த்தான். போய் வருகிறேன் என்று தலையசைத்தான். அவள் வாய்விட்டு அலறினாள். அவளை தாதிகள் சமாதானப்படுத்தினார்கள். அவள் அலறல் வெளியே கேட்டது. அவர்களை யாரும் உள்ளே விடவில்லை. அவள் நெஞ்சு தடவினாள். 'போகாதே போகாதே' என்று நெஞ்சு தடவினாள். ஆனால் அன்று விடியற்காலையில் அவன் ஒரே ஒரு விக்கல் விக்கி இறந்து போனான்.

ஜுரம் அவனை கொண்டு போயிற்று, இறந்துபோன பிறகு அந்த கூட்டத்தை உள்ளே அனுமதித்தாள். அவர்கள் பார்த்துக் கொண்டிருக்க அவனை வெளியே எடுத்துக் கொண்டு போய் வாசல்பக்கம் உள்ள நடையில் போட்டாள். அந்தப் பெண்மணி தலையை கலைத்துப் போட்டு உட்கார்ந்தாள். நாகரத்தினம் அவளையே பார்த்துக் கொண்டிருந்தாள். மெல்ல படி இறங்கினாள். மறுபடியும் குளிக்க வேண்டும். விடிந்த பிறகா, இப்பொழுதா, அவள் தன் அறைக்குள் போனாள், ஒரு ஓலைச்சுவடி எடுத்து மெல்ல பாடல்களை நகர்த்திக் கொண்டு வந்தாள். பழைய ஓலைச் சுவடி இது, தனிப் பாடல்கள் பலதும் சேர்த்து வைத்த ஓலைச்சுவடி, அவை பல்வேறு விதமாக பிரிக்கப்பட்டிருந்தன. கைமை என்ற ஒரு கட்டு இருந்தது. அதை பிரித்து படித்த போது சட்டென்று ஒரு பாடல் அவள் தொண்டையில் நின்றது, அவள் உரக்க படித்தாள். யார் எழுதியது என்ற இடத்தில் தெரியவில்லை என்று இருந்தது.

கலம் செய் கோவே கலம் செய் கோவே
அச்சுடை சாகாட்டு ஆரம் பொருந்திய
சிறு வெண் பல்லி போலத் தன்னோடு
சுரம் பல வந்த எமக்கும் அருளி
வியன் மலர் அகல் பொழில் ஈமத்தாளி
அகலிது ஆக வனைமோ நலைந்தலை மூதூர்
கலம் செய் கோவே.

''என்ன படித்துக் கொண்டிருக்கிறாய்,'' விடியல் நேரத்தில் ஞானசம்பந்தம் குளித்துவிட்டு வந்தான். ஓலையை எட்டிப் பார்த்தான். ''என்ன கைமை பாட்டை எடுத்து கொண்டிருக்கிறாய். என்ன ஆயிற்று.''

''இறந்து விட்டான்.''

''எப்படி.''

''மார்புச்சளி அதிகமாகி தொண்டைக்குள் புகுந்து மூச்சை நிறுத்தி விட்டது.''

''ஆக, அறுவை சிகிச்சையால் அல்ல. இல்லையா.''

''என்ன பதில் சொல்வது உங்களுக்கு. அறுவை சிகிச்சை யால்தான் என்று ஊர் சொல்லப் போகிறது. அப்படியே விட்டிருக்கலாமே. தானாக ஆறியிருக்குமே என்று சொல்லத் துவங்கி விட்டார்கள். நீர் பாராட்டுகளை பெற்றதுபோல வசவுகளையும் பெற வேண்டியவராகிறீர்.''

''அது சரி. இது வழக்கம்தானே. இந்தப் பாட்டு என்ன சொல்கிறது.''

''பானை வனைபவனை கெஞ்சிக் கேட்கிறது.''

''எதற்கு பானை.''

''ஈமத் தாழி. செத்துப் போனவனை அடக்குவதற்கு பெரிய பானைகள் செய்வார்கள் அல்லவா. உள்ளே இறக்கி அவனை அவன் விரும்பிய பொருட்களோடு பூமியில் புதைப்பார்கள் அல்லவா. அம்மாதிரியான பெரிய பானை செய்பவரை நோக்கி இறந்தவன் மனைவி பாடுகிறாள்.

நான் வாழ்க்கை பற்றி ஒன்றும் தெரியாதவள். ஒரு சிறிய பல்லி வண்டி சக்கரத்தை ஒட்டிக் கொண்டு பல காடுகளை கடந்து பல காதம்தூரம் நடந்தது போல் நான் இவனோடு பல நாட்கள் வாழ்ந்து விட்டேன். பல்லிக்கு எப்படி பாதை தெரியாதோ, அதேபோல எனக்கும் வாழ்க்கை பற்றி ஒன்றும் தெரியாது, இவன் இல்லாமல் என்னால் வாழ முடியாது. அதனால் 'கலம் செய் கோவே' மண்பாண்டம் செய்பவனே, மண் பாண்டத்தை பெரிதாகச் செய், நானும் அதற்குள் வந்து அடங்கி விடுகிறேன்' என்று தொனிப்பதாக இந்த பாடல் இருக்கிறது.

என்னையும் உடன் புதைத்து விடுங்கள் என்று சொல்கிறது.'' இரண்டு பேரும் மௌனமாக தரையை பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

''அவ்வளவு வெகுளியா அவள்.'' அவன் மௌனத்தை கலைத்தான்.

''ஆமாம் பரம வெகுளி. ஒன்றும் தெரியவில்லை, ஒரு வெந்நீர் போடு என்று சொன்னால்கூட அவள் பதறுகிறாள்.''

''ஆதூரச்சாலைக்கு வந்து விடுகிறாளா என்று கேள்.''

''இந்த ஒரு வார்த்தைத்தான் சரியாக கேட்டாள். நான் வைத்தியம் கற்றுக் கொள்ளலாமா என்று கேட்டாள்.''

''கற்றுக் கொள்ளச் சொல், அவளுக்கு நன்றாக வரும். வேறு எந்த திக்கும், திசையும் இல்லாதவள் இல்லையா. வைத்தியம் ஒன்றே நாட்டமாக இருப்பாள். அந்த சேவை அவளுக்கு ஒரு சித்தியை கொடுக்கும். வாழ வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தும்.''

''ஆனால் அவள் வீடு விட வேண்டுமே.'' நாகரத்தினம் கவலைப்பட்டாள்.

அவனை கட்டை வண்டியில் இருத்தி இழுத்துக் கொண்டு போனார்கள். அந்த கட்டை வண்டியில் அவன் காலடியில் தலைவிரி கோலமாய் ஆடிக் கொண்டு போனாள். அவள் உறவு பின் தொடர்ந்தது. இந்த கட்டை வண்டி சவாரி தான் அவளுக்கு கிடைக்கும் கடைசி மரியாதை. இனிமேல் எங்கும் அவளை நடத்தித்தான் கூட்டிக்கொண்டு போவார்கள் என்று நாகரத்தினத்திற்கு தோன்றியது,

'கலம்செய் கோவே கலம்செய் கோவே' பாட்டு ஓடிற்று. எனக்கு பெரிய ஈமத்தாழி செய்து கொடு. நாங்கள் இருவரும் அதில் அடங்கிவிடுகிறோம். ஈமத்தாழியை பெரிது செய் என்ற பாடல் மனதுக்குள் ஒலித்தது.

''ஒருவேளை பெரிதாகச் செய்து இவள் விருப்பபடியே புதைத்துவிடுவார்களோ. கங்கை கொண்ட சோழீஸ்வரா, இந்த பெண்ணை காப்பாற்று.'' அவள் உள்ளுக்குள் இறைஞ்சினாள். அவளுக்காக பல நோயாளிகள் வெளியே இளம் வெய்யிலில்

காத்திருந்தார்கள். அவள் குளித்துவிட்டு ஆதூரச்சாலை நோக்கி நடக்கத் துவங்கினாள்.

மறவர் பெண்கள் வாழ்க்கை கொடிது, போர் கொடிது, போர் வீரர்கள் கொடியவர்கள். இப்படிப்பட்ட வெட்டை வாங்கிக் கொண்டு பைத்தியம் போல் திரிபவனை வீரன் என்றா சொல்வது. ஆனால் கோழை என்றும் சொல்ல முடியாது. ஆண்கள் எப்பொழுதுமே ஒரு இரண்டான் கெட்ட நிலையில் இருக்கிறார்கள். வீரம் என்று எகிறுகிறார்கள். நோவை, சாவை எதிர்க்க முடியாமல் திணறுகிறார்கள். ஏற்க முடியாமல் அழுகிறார்கள்.

போர் இல்லாத ஒரு உலகம் இருக்குமா, அப்படி ஒன்று இருக்குமா, புரியவேயில்லை. அவள் நொந்தபடி ஆதூரச்சாலை நோக்கி நடந்து போனாள்.

"**நா**வாய் வருகிறது, நாவாய் வருகிறது," கடற்கரையில் பெருங்கூச்சல் எழுந்தது, தொலை தூரத்தில் ஒரு புள்ளியென நாவாய் தெரிந்தது, அருகிலுள்ள சாரத்தில் ஏறிப் பார்க்க அந்த நாவாய் ஆறேழு பாய்மரங்களுடன் நீரை கிழித்துக் கொண்டு புகார் நோக்கி வருவது தெரிந்தது. சிறிய படகுகளில் ஒற்றை பாய் மரம் விரித்து அந்த நாவாய் நோக்கி வீரர்கள் போனார்கள்.

எந்த ஊர் என்று கேட்கும்போது காவிரிபூம்பட்டினம் புகார் என்று சொல்ல வேண்டும். வர முடியாது போனால் இழுத்துக் கொண்டு வர வேண்டும். வரும்படி வற்புறுத்த வேண்டும். உள்ளே கொக்கி போட்டு ஏற வேண்டும் என்று ஆறேழு மறவர்களுடன் அந்த சிறிய படகு ஒற்றை பாய்மரத்துடன் சாகசம் செய்து கடலுக்குள் போயிற்று, ஏழு அலைகள் தாண்டியதும் கடல் உள்ளே இழுத்துக் கொண்டது. பின்புறமாக வந்து தாக்குகின்ற அலையால் முன்னே போயிற்று, வடக்கு காற்று வேகமாக வீசுவதால் நேரே கிழித்துக் கொண்டு போயிற்று. ஆனால் எதிரே உள்ள மரக்கலம் வடக்கத்தி காற்றால் பாதித்ததாக தெரியவில்லை. அந்த மரக்கலத்தின் பாய்மரங்களை சரியாக திருப்பி வடமேற்கு நோக்கியே நடத்திச் செல்ல அவர்களுக்குத் தெரிந்திருந்தது. நீரையும், காற்றையும் கிழித்துக் கொண்டு அந்த மரக்கலம் வந்தது. ஆறு ஆறு பன்னிரெண்டு துடுப்புகள் போடப்பட்டன. மீதியுள்ள துவாரங்கள் காலியாக இருந்தன. கரைக்கு அருகே வரும்போது தரைக்காற்று மரக்

கலத்தை மோதும் என்பதால் சட்டென்று பாய்மரங்கள் இறக்கி விடப்பட்டன. ஒரே ஒரு பாய்மரம் மட்டும் வடக்கத்தி காற்றை ஒதுக்கிவிட்டது, மற்ற துவாரங்களிலிருந்தும் நீண்ட துடுப்புகள் இயக்கப்பட்டன. இப்பொழுது பன்னிரெண்டு பன்னிரெண்டு இருபத்திநாலு துடுப்புகள் இருந்தன. உள்ளே இருந்து குதிரை கனைக்கும் சத்தம் கேட்டது. கொக்கி போட்டு ஏற மேலே இருந்து நூல் ஏணி அனுப்பினார்கள்.

இது அரபு தேச நாவாய், துருக்கர்கள். எந்த சோனக தேசம் என்பது தெரியவில்லை, சோனகதேசம் பல்வேறு இடத்தில் பல குழுக்களாயிருக்கிறது, ஒருவருக்கொருவர் அடித்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் எந்த சோனக தேசம் என்று தெரியவில்லை.

நூல் ஏணியில் கொக்கி கயிற்றில் வீரர்கள் ஏறினார்கள். உள்ளே குதித்தார்கள். வாட்களை உருவினார்கள். தலையில் கயிறு சுற்றிய தலைப்பாகையுடன் ஒரு சோனகத் தலைவன் வெளியே வந்தான். குனிந்து வணக்கம் சொன்னான். வாட்களை உறையில் போட்டார்கள்.

''எதற்கு வந்திருக்கிறீர்கள்,'' விசாரித்தார்கள்.

''வியாபாரத்திற்கு,'' சைகை செய்தான்.

''என்ன கொண்டு வந்திருக்கிறீர்கள்,'' குதிரை போல கனைத்தான்.

''எத்தனை.''

விரல்களால் சைகை செய்தான். அறுபது குதிரைகள் இருக்கின்றன.

''மீதி எங்கே.''

அவன் ஸ்ரீலங்காவின் படம் மரச் சுவற்றில் வரைந்தான். ரோஹணத்தை சுட்டிக்காட்டினான்.

''எத்தனை விற்றாய்.''

''இருநூறு.'' அவர்கள் திகைத்தார்கள். ''சரி'' என்று சைகை செய்தார்கள்.

''மரியாதையாக நடத்த வேண்டும்.'' பலமுறை சைகை செய்தான்.

''கவலையே படாதே. எங்கள் ராஜா இருக்கிறார்'' என்று சொல்ல, அவன் திகைத்தான்.

''இராஜேந்திர சோழா.'' என்று தடுமாறி உச்சரித்தான். ''ஆமாம்'' என்றதும் அவன் வானம் பார்த்து கடவுளுக்கு நன்றி சொன்னான்.

நாவாய் மண்மேட்டில் லேசாய் உரசியது, பாய்மரத்தை இறக்கினார்கள். நங்கூரத்தை வேகமாக கீழே விட்டார்கள். கனத்த இரும்பு நங்கூரம் பெரிய சப்தத்துடன் கீழ் இறங்கி மண்ணில் புதைந்தது, பின்பக்கமும் நங்கூரம் இறக்கப்பட்டது, நாவாய் லேசாய் ஆடியபடி இருந்தது. பெரிய தட்டையான மூங்கில் மிதவைகளை நாவாய்க்கு அருகில் கொண்டு வந்தார்கள், நாவாயின் அடிப்பாக கதவை திறந்தார்கள். குதிரைகளை உள்ளிருந்து தள்ளிவிட்டார்கள். தண்ணீரில் குதித்த குதிரைகள் நீந்தி அந்த தட்டையான பலகைக்கு வந்தன. ஏறிக்கொண்டன. இன்னும் சரியாக அந்த மிதவையை நகர்த்த நேரடியாக மிதவையில் குதித்தன. இருபது இருபது குதிரைகளாக கரைக்கு வந்தன. இராஜேந்திர சோழருக்கு செய்தி போயிற்று.

இடையறாது ஸ்ரீ விஜயத்தின் வரைபடங்களை கவனித்து கொண்டிருந்தவர் நிதானமாக குளித்துவிட்டு, உணவருந்தி விட்டு புதிய உடை உடுத்தி பளிச்சென்ற திருநீறுடன் புதிய ஆபரணங்களுடன் வெளியே வந்தார். துணியாலும் ரத்தினங்களாலும் ஆன கிரீடத்தை தலையில் வைத்துக் கொண்டார். வீரமாதேவியையும் அலங்கரித்து வரச் சொன்னார். அவருடைய ஆபத்துதவிகள் பளீர் என்ற முகத்தோடும், நல்ல ஆபரணத்தோடும் ஆபத்தமாக இருந்தார்கள்.

வீரமாதேவியும், இராஜேந்திரரும் குதிரையில் ஏறிக் கொள்ள நிதானமாக பூம்புகாரின் பல்வேறு தெருக்களை அவர்கள் தாண்டினார்கள். ஜனங்கள் வாசலில் வந்து வாழ்த்து கூவினார்கள். செண்பக மாலையை ஒருவன் சரமாகக் கட்டி அவர் கழுத்தில் சூடினான். நெடி மூக்கை துளைத்தது. சிறிது நேரம் அதை அணிந்துவிட்டு அதை ஒரு வீரனிடம் கொடுத்து, ''இதை எல்லோருக்கும் பிரித்து வழங்கி விடு. எல்லோர் முகமும் செண்பகமாக மலரட்டும். வாசனை வீசட்டும்.'' என்றார். அவர் கடந்து போக பெரிய செண்பக வாசனை கடந்து போயிற்று,

ஒரு பெண் குழந்தை வேண்டும் என்று கேட்டபோது மூன்று பூக்கள் கொண்ட ஒரு துணுக்கை குனிந்து அந்த குழந்தை யிடம் நீட்டினார். அந்த குழந்தை அவர் கால்களை முத்தமிட்டு ஓடிப் போயிற்று. அவர் முகம் மலர்ந்தார்.

காலைப்பொழுது நன்றாக இருந்தது. செண்பக மலர்களா. அந்த குழந்தையா. படைவீரர்களா, நாவாய் வந்திருக்கிறது என்ற செய்தியா.

மரக்கலங்களில் சிறந்தது வங்கம். சோனக தேசத்தில் என்ன பெயரோ தெரியவில்லை. இங்கே இதன் பெயர் வங்கம். பல படுக்கையறைகள் கொண்டது. அமர்ந்து பேச சிறிய தளம் உண்டு.

அது நாவாய் அல்ல. வங்கம். மிகப்பெரிய வங்கம். வழி யிலேயே அது அரபுதேச வங்கம் என்று சொல்லிவிட்டார்கள். அறுபது குதிரைகள் என்று சொல்லிவிட்டார்கள். அருகே போனதும் இருநூறு ரோஹணத்தில் இறங்கியது என்று சொன் னார்கள். அவர் முகம் மாறினார்.

குதிரையில் இருந்தபடியே வங்கத்திலிருந்து வரும் சிறிய மரக்கலத்தை பார்த்தார். அதில் வெளேர் என்ற உடையோடு தலையில் தங்கக் கயிற்றால் கட்டப்பட்ட தலைப்பாகையோடு, தாடியோடும், மழித்த மீசையோடும் ஒரு தளபதி வந்து இறங் கினான். நீண்ட அங்கி அணிந்திருந்தான். அதை எடுத்து மடித்து மடியில் கட்டியிருந்தான். கனமான காலுறைகள் போட்டிருந் தான். மணலில் புதைய நடக்கத் தொடங்கினான். இராஜேந் திரரை பார்த்ததும் அங்கி தளர்த்தி குனிந்து வணக்கம் சொன் னான். மண்டியிடு என்று மறவர்கள் கத்தினார்கள். அவன் மேலே கை காட்டி முடியாது என்று மறுத்து விட்டான்.

இது அவர்களுடைய வழக்கம். கடவுளைத் தவிர வேறு எவருக்கும் மண்டியிட மாட்டார்கள். ஆனால் மிக மரியாதை யாக வணக்கம் சொல்வார்கள். அவன் உடம்பை மடித்து நெற்றி யில் கை வைத்து குனிந்து பலமுறை வணக்கம் சொன்னான். எழுந்து நின்றான். பின்புறம் பார்த்தான். அவனுடைய உதவி யாளர்கள் சிறு மூட்டையோடு வந்தார்கள். அந்த மூட்டையை பிரித்தார்கள். மூட்டையில் தங்கக் கட்டிகள் இருந்தன. கிராம்பு,

ஏலம் சிறு பையில் போடப்பட்டிருந்தது. மரத்தில் செய்த புத்தர் சிலை இருந்தது. ஒரு குதிரை இரண்டு கால்களில் நிற்பதுபோல இன்னொரு மர சிற்பம் இருந்தது, இன்னொரு மரப்பெட்டியை பிரிக்க அதில் அசையாது வாசனை திரவியங்கள் வைக்கப்பட்டிருந்தன. ஒன்று திறந்து மெல்லியதாக இராஜேந்திரர் மீது அவன் தெளித்தான். செண்பக வாசனை காணாமல் போயிற்று. மூக்கை துளைக்கின்ற ஒரு வாசனை கிளம்பிற்று,

''அடேயப்பா.'' என்று வீரர்கள் வியந்தார்கள். அந்த பெட்டியை இராஜேந்திரருக்கு அருகே வைத்துவிட்டு அவன் பின்னடைந்து மறுபடியும் குனிந்து வணங்கினான். கை கட்டிக் கொண்டான். சிரித்தான். இராஜேந்திர சோழர் அவனை பார்த்து சிரித்தார்.

மர மிதவை கரைக்கு அருகே வந்தது. குதிரைகள் தரையில் குதித்து கரை ஏறின. உடம்பை உதறிக் கொண்டன. இன்னும் குதிரையை முன்னே செலுத்தி மர மிதவையில் இராஜேந்திர சோழர் குதித்தார். வீரமாதேவிக்கு கை கொடுத்தார். வீரர்கள் தாவி ஏறிக் கொண்டார்கள். அவர் மரக்கலம் பார்க்க போகிறார் என்பது தெரிந்தது. அந்த சோனக தளபதி உடன் போக முயற்சிக்கும்போது தடுத்து நிறுத்திவிட்டார்கள். இராஜேந்திர சோழர் மரக்கலம் பார்த்து நின்றிருந்தார். மிதவை அருகே போயிற்று, நூல் ஏணிகள் அருகே போயின. எளிதாக மேலே ஏறினார். உள்ளே குதித்தார். வீரமாதேவியும் பழக்கப்பட்டவர் போல கயிறு பிடித்து ஏறினாள். உள்ளே இறங்கினாள். குதிரைகள் வைக்கப்பட்டிருக்கும் கொட்டகைக்கு போனார்கள். இரண்டு குதிரைகள் இருந்தன. அது வங்கக் கலபதியின் குதிரைகளாக இருக்கக் கூடும். அருகே தங்கக் கடிவாளங்கள் சேணங்கள் இருந்தன. தன் வீட்டிற்கு போக அந்த குதிரைகளை அவன் பயன்படுத்தக்கூடும் என்று சொல்லப்பட்டது. அவர் அந்த இரண்டு குதிரைகளையும் வெளியே கொண்டு போகும்படி உத்தரவிட்டார். மரக்கலம் முழுவதும் பார்த்தார். மிக நேர்த்தியாக இருந்தது. ''என்ன சிறப்பு'' என்று மரக்கலத்தின் மரங்களை பார்த்தார். மிக உறுதியாக இருந்தது. எண்ணெய் தடவப்பட்டு இருந்தது. உப்புக்காற்று ஒன்றும் செய்யாதபடி இரும்பு சட்டங்களுக்கு வர்ணம் அடிக்கப்பட்டு இருந்தது, பாய்மரங்களை

சுழன்று சுழன்று விரிக்கலாம் என்று தெரிந்தது. அதாவது வடக்கு பக்கம் இருக்கின்ற பாய்மரத்தை கீழே இருந்து இரண்டு பேர் கயிறோடு இழுத்து இறுக்கி தெற்கே இழுத்துப் போய்விட லாம். தெற்கே ஒரு பாய்மரம், வடக்கே ஒரு பாய்மரம் என்று பிரித்தால் அது எதிர்காற்றையும் தாண்டிக் கொண்டு போகும். பாய்மரத்தினுடைய பல்வேறு இடங்கள் மேலே உள்ள குறுக்கு கட்டையோடு மிக அழகாக நெய்யப்பட்டிருந்தன். கப்பிகள் கூடுதலாக இருந்தன. வளையங்கள் உறுதியாக இருந்தன. இரும்பு வளையம் அடிக்கப்பட்டிருந்த இடங்களின் மேலெல் லாம் கயிறு போட்டு இறுக்கியிருந்தது. ஒட்ட வைக்கப் பட் டிருந்தது. இரும்பு அடித்ததால் மரம் விரியக்கூடாது. விரியாமல் இருக்க வேலை செய்யப்பட்டிருந்தது. ஒவ்வொரு குறுக்கு சட்டத்தின் நுனியும் பிளவுபடாமல் இருக்க ஒரு முழத்திற்கு கயிறால் பிணைக்கப்பட்டிருந்தது. கயிறு சுற்றி கட்டி கடைசி நுனியில் சொருகி முடிச்சு போட்டு அதன் மீது பிசின் போன்று ஏதோ ஒன்றை தடவியிருக்கிறார்கள். அதனால் கயிறு பிரியாது, மரம் விரியாது. அந்த கயிறு வங்க தேசத்து கயிறு. அல்லது வேறு எங்கோ வங்க தேசத்து பயிர்களிலிருந்து கிடைத்த கயிறு.

அந்த நாவாய் தனக்கு வேண்டுமென்று இராஜேந்திர சோழருக்கு தோன்றியது. கணவதி ஓய்வெடுக்கும் இடத்தை பார்த்தான். சுற்றிலும் மெத்தை தைக்கப்பட்டு சுகமாக இருந்தது. வாசனை தூபம் போடுகின்ற இடமும், விளக்குகள் எரிகின்ற இடமும் மிகக் கவனமாக செய்யப்பட்டு இருந்தன. நாவாய் ஆடும்போது அசையாமல் இருக்க சுவற்றோடு பிணைக்கப்பட் டிருந்தன. விளக்குகள் இருக்கும் இடம் தாண்டிதான் மெத்தை இருந்தது. மிக அழகான, வழுவழுப்பான தளம், முதன்மை பகுதி சிங்கம் போன்ற அமைப்பில் இருந்தது. கீழே வீரர்கள் படுத்து உறங்க ஒரு தளம் இருந்தது. அதற்கு கீழே படகுக்கு துடுப்பு போடுபவர்களுடைய இடம் இருந்தது. அதைத் தாண்டிகீழே இறங்கினால் குதிரை கொட்டகை இருந்தது. எல்லா இடத் திலும் கொஞ்சம் குனிந்து தான் போக வேண்டும். பக்கவாட்டு மரங்கள் புதிதாக இருந்தன. கடலில் இறங்கி சில ஆண்டுகள் தான் ஆகியிருக்க வேண்டும். வேறு மொழியில் அது குறித்த வருட எண்ணிக்கை செதுக்கியிருந்தது. எந்த வருடம் என்று தெரிந்து கொள்ள முடியவில்லை. உணவு சமைக்கும் இடம்

சுத்தமாக இருந்தது. மாமிசங்கள் தொங்க விடப்பட்டிருந்தன. இரண்டு ஆடுகள் புற்குவியலுக்கு நடுவே அமர்ந்திருந்தன. திரும்பி போவதற்கான உணவுகளாக அவை இருக்கக்கூடும். ஆனால் இந்த மரக்கலம் அரபுதேசம் போகாது. பாலைவனத் திற்கு நகராது, இனி அதன் இடம் வேறு, அந்த மரக்கலத்தில் தன்னுடைய நான்கு வீரர்களை விட்டார். மற்ற எல்லோரையும் இறங்கச் சொன்னார். அந்த கலபதியின் வீரர்கள் மிதவையில் இறங்கினார்கள். தங்கள் உடைமைகளை, உடைவாட்களை, வில் அம்புகளை எடுத்துக் கொண்டார்கள். கரை நோக்கி வந்தார்கள்.

கலபதி திகைத்தான். அவர்களை நோக்கி கூச்சல் போட்டான். இராஜேந்திர சோழர் இறங்கி குச்சியால் என்ன விலை என்று வரைந்தார். அவன் தர மறுத்தான். மறுபடி மறுபடி என்ன விலை என்றே சொல்லப்பட்டது.

இவன் கலபதி. கப்பலுக்குச் சொந்தக்காரன். இறங்கி வாசனை திரவியம் தந்தவன் வியாபாரி. தர மறுத்தால் விலை யின்றி எடுக்கப்படும் என்று கலபதிக்கு தெரிந்துவிட்டது. 'நான் எப்படி என் ஊருக்கு போவேன்' அவன் நெஞ்சில் அடித்துக் கொண்டு அழுவதுபோல் நின்றான். அவனுக்கு ஒரு சிறு நாவாய் காட்டப்பட்டது. அவன் அது போதாது என்று தலையசைத்தான். வேறொரு நாவாய் காட்டப்பட்டது. அவன் சற்று முகம் தெளிந்தான். என்ன இப்படி செய்கிறீர்களே என்று முன்னும் பின்னும் அலைந்தான். காலை உதைத்தான். இராஜேந் திரர் அவனையே பார்த்துக் கொண்டிருந்தார். இது பகல் கொள்ளை, வழிப்பறி என்றான்.

''இல்லை. என்ன விலை,''

அவன் மிகப் பெரிய தொகை சொன்னான். அது அடிக்கப் பட்டு அதில் பாதி தொகை மணலில் வரையப்பட்டது. ஐந்தா யிரம் கழஞ்சுகள் என்று பேரம் முடிந்தது.

அவன் பயணத்திற்கு வேண்டிய எல்லா உதவிகளையும் செய்யுமாறு கட்டளையிட்டார். ஐந்தாயிரம் பொற் கழஞ்சுகள் அழகான மரப்பெட்டியில் போட்டு அவனிடம் கொடுக்கப் பட்டது. அவன் பெரிய துணி விரித்து ‿ தை தன் வீரர்களோடு

எண்ணத் துவங்கினான். நடுவே அடிக்கடி தங்கத்தை உரசி பார்த்தான். ஒரு காசுகூட தவறாக இல்லை, அவன் வேண்டிய படி மாடுகளும், பாத்திரங்களும், அரிசியும், துவரம் பருப்பும், காராமணி பருப்பும், காய்கறிகளும், பழங்களும் கூடை கூடை யாய் மிதவையில் ஏற்றப்பட்டன. அவை அனைத்தும் இலவசம் என்று இராஜேந்திரர் சொன்னார். அவன் குனிந்து வணங் கினான். தூங்க வேண்டும் என்றான். அவைகள் அவனுக்கு சொந்தமான நாவாயில் ஏறியதும் தன் உடைகளை களைந்து விட்டு காவிரியின் கடைமடை பகுதியில் முங்கி குளித்தான். இராஜேந்திர சோழர் குதிரைகளை விரட்டும்படி சொன்னார். குதிரைகள் சவுக்கால் அடிக்கப்பட்டு விரட்டப்பட்டன. அறுபது குதிரைகளில் நாற்பது குதிரைகள் மிகத் திறனுடையதாய் இருந்தன. இருபது என்ன விரட்டினாலும் ஓடாது இருந்தது. பல் பிடித்து, கால் குளம்பு பார்த்ததும் வயதானதும், நோயுற்றதும் தெரிந்தது. அவைகளை தனியே பிரித்தார்கள். வியாபாரி களுக்கு கொடுத்தார்கள். அவைகள் நிதானமான ஓட்டத் திற்கும், பொதி சுமக்கவும் என்று தீர்மானித்தார்கள். பெரிய கொட் டடையில் நல்ல குதிரைகள் ஏற்றப்பட்டன.

வணிகர் ஒருவர் அந்த வங்கத்திலிருந்து வந்த சீன இளைஞன் ஒருவனை அழைத்து வந்தார். ''சீன தேசத்தில் அடிமையாக இருந்தவன் அங்கிருந்து தப்பித்து மரக்கலம் ஏறி பல தேசங்களுக்கு போனவன். ஸ்ரீ விஜயத்தின் வடக்கே காம்போஜம் என்ற ஒரு ஊர் இருக்கிறது. அந்த ஊரில் சில வருடங்கள் வசித்தவன். அந்த ஊருக்கு மன்னன் சூரியவர்மன். மிகச் செழிப்பான தேசம். மிகத் துடிப்பான தேசம் என்று சொல் கிறான். அங்கு நிறைய குதிரைகள் இருக்கின்றன என்றும் அவை களை பொதி சுமக்க பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும், மலை ஏறுவதில் அவைகள் திறமையுள்ளவை என்றும் சொல் கிறான். நம்முடைய மொழியில் புரிந்து கொள்கிறான். ஏனெ னில் ஸ்ரீவிஜயத்தில் இருக்கிறான். துறைமுகங்களிலெல்லாம் தமிழ் பேசுவதை கேட்டிருக்கிறான். ஆனால் பேச வரவில்லை. சைகை அருமையாக இருக்கிறது. மிக எளிமையாக புரிய வைக்கி றான். அவன் நம்முடன் சேர நினைக்கிறான்.''

''ஸ்ரீ விஜயத்தின் ஒற்றனாக இருந்தால்.'' வீரமாதேவி கேட்டாள்.

''இருப்பதற்கு வாய்ப்பிருக்கிறது. இருக்கட்டுமே, நாம் அவனை பயன்படுத்திக் கொள்வோம். நம்மிடமிருந்து தகவல் போகாமல் இருக்க அவனை கொட்டடியில் வைப்போம்,'' இராஜேந்திரர் கட்டளையிட்டார். எந்த இடத்தில் எவ்வளவு குதிரைகள் இறக்கினான். குதிரைகள் எப்படி இருக்கின்றன என்று குதிரைகளை பார்த்தபடியே இருந்தார். அவன் ரோஹ ணத்தில் இறக்கிய குதிரைகளின் அம்சம் பற்றி சொன்னான். உயரம் காட்டினான். எத்தனை வேகம் ஓடும் என்று சொன்னான். கால் மாற்றி கால் மாற்றி நிற்பவை என்று சைகை சொன்னான். துடிப்பானவை என்று அர்த்தம் தெரிந்தது.

என்ன விலை கொடுத்து வாங்கினான் என்று கேட்கும் போது, ஒரு குதிரைக்கு இருபது பொன் கழஞ்சு கொடுக்கப் பட்டது என்று சொன்னான். அந்த பொன் கழஞ்சுகள் எங்கே என்று கேட்டதற்கு நங்கூரத்தோடு கீழே இறக்கப்பட்டு விட்ட தாகவும், நாவாயை நீங்கள் சுட்டி காட்டியபோதே வியாபாரி யின் வீரர்கள் கடலில் இறங்கி அந்த பொன் கழஞ்சு மூட் டையை நெட்டிமரம் போன்ற லேசான மரத்தில் ஏற்றி தரைக்குக் கொண்டு போகப்பட்டதாகச் சொன்னான்.

''பறித்துவிடலாமா.'' வீரமாதேவி கேட்டாள்.

''தேவையில்லை, மறுபடி அவன் இங்குவர பயப்படு வான். மறுபடி அவன் வேறு நாவாயோடு, குதிரையோடு இங்கு வரவேண்டும், அது அவனிடமே இருக்கட்டும். இவனை மட்டும் காசு கொடுத்து வாங்கிக் கொள்.'' அவன் காசு வேண் டாம் என்று மறுத்தபோதும் அவனுக்கு அந்த அடிமைக்காக ஐம்பது பொன் கழஞ்சுகள் கொடுக்கப்பட்டன. அவன் வணக்கம் சொல்லி ஊருக்குள் போக அனுமதி கேட்டான். அங்கு பெண்கள் இருப்பார்கள் என்பது அவனுக்குத் தெரியும். அவனுக்கு அனுமதி கொடுக்கப்பட்டது, மூன்று நாட்கள் மட்டும் தங்கியிருக்க வேண்டும் என்று ஓலையில் எழுதி தரப் பட்டது.

இராஜேந்திர சோழர் ஒரு குதிரையில் சேணம் இல்லாத போதும் ஏறி அமர்ந்து கொண்டார். சட்டென்று கடிவாளம் மாட்டினார். உதறி ஓட்டினார். குதிரை வேகமாக பறந்தது. இழுத்து நிறுத்தினார். பிறகு மறுபடியும் திருப்பி ஓட்டினார்.

குதிரைகள், காலில் இழுத்த இழுப்புக்கு ஏற்ப தெளிவாக நடந்தன. பின்பக்கம் போய் சட்டென்று காலை தூக்கிப் பார்த்தார். லாடம் அடிக்கப்படவில்லை. லாடம் அடிக்கப்படவேண்டும் என்று வீரர்களுக்கு கட்டளையிட்டார். அந்த குதிரைகள் நகருக்குள் ஓட்டிப் போகப்பட்டன.

அந்த சோனகன் அந்தக் கரையிலேயே சுமாரான நாவாய் வாங்கினான்.

“உன் தேசம் வரை தாங்குமா.”

“தாங்காது.”

“பிறகு ஏன் வாங்குகிறாய்.”

“ரோஹணம் போய் ரோஹணத்தில் பெரிய வங்கம் வாங்கிக் கொள்வேன்.”

“இந்த குதிரைகளுக்கு என்ன விலை.”

வியாபாரம் நடந்தது.

ரோஹணத்தில் வங்கங்களா. இராஜேந்திரர் சிந்தனை ஓடிற்று.

★ ★ ★

அத்யாயம்

96

இராஜேந்திர சோழர் காசு கொடுத்து வாங்கிய அந்த வங்கத்தில் மேல் தளத்தில் ஆசனம் இட்டு அமர்ந்திருந்தார். குறுக்கும், நெடுக்கும் கற்றாழை கயிறினால் நெய்திருந்த பாய் படர்ந்திருந்தது. அதன் மீது தளபதிகளும், உபதளபதிகளும் அமர்ந்திருந்தார்கள். ஆயுதங்களை இடுப்பிலிருந்து அகற்றி தரையில் வைத்திருந்தார்கள்.

''நம்முடைய சோழ வீரர்களில் சில ஆயிரம் பேர்கள் மட்டுமே கடற்பயணம் மேற்கொண்டிருப்பார்கள். நான் கடற்பயணம் மேற்கொள்ளாதவருக்காக ஒரு குறுகிய கடற்பயணம் மேற் கொள்ளலாம் என்று நினைக்கிறேன். அதாவது ஐந்து நாட் களுக்குள் நீங்கள் கரை இறங்கி விடுவீர்கள். இன்னொரு ஐந்து நாட்களுக்குள் கோட்டை நோக்கித் திரும்பிவிடுவீர் கள். பாண்டிய தேசத்தின் வழியாக சோழதேசம் போய் பிறகு அங்கே சிறிது நாள் தங்கி மிக நீண்ட கடற்பயணம் மேற்கொள் ளலாம் என்பது என் திட்டம்,

குட்டன் கணவதி, சிவ ஸ்வாமி போன்றவர்கள் கடலோடு இரண்டற கலந்து விட்டார்கள். அருண்மொழிக்கும், வீரமா தேவிக்கும் கூட அந்த கடல் பழக்கமாகி விட்டது. நானும் இன்னும் சரியாக பழகவில்லை. எனக்கும் ஒரு குறுகிய கடற் பயணம் தேவைப்படுகிறது. என் உடம்பு தாங்குமா என்ற ஒரு கவலை இருக்கிறது. இது வயதானதால் வந்த சிந்தனை அல்ல, கடற்பயணத்தில் வாலிபம், வயதானது என்ற எண்ணங்கள் இல்லை, உன் உடல் கடலோடு ஒத்துப்போக வேண்டும். சிலருக்கு என்ன செய்தாலும் கடலோடு ஒத்துப் போகாது. உன்னுடைய கணையம், இரைப்பை, குடல், நுரையீரல், ஏன் இருதயம் உட்பட கடல் ஜலத்தின் வெப்பத்தோடும், அந்த

முன்பின் ஆட்டத்தோடும் பழக வேண்டும். என்ன செய்தாலும் பழகாமல் போகின்ற வாய்ப்புகளே அதிகம்.

மனித உடல் வினோதமானது. பனி படர்ந்த மலையோ, சுடு மண் நிறைந்த பாறையோ, அல்லது சோழதேசம் போல செழிப்பான இரவு, பகல், குளிர், வெய்யில் என்கிற பூமியோ அது அனுசரித்துக் கொள்ளும். இந்த அனுசரிப்பு முதலில் மனோநிலையில் ஏற்பட வேண்டும். அந்த மனோநிலையில் பழக்கம் வர அந்த அனுபவத்தில் ஈடுபட வேண்டும். நீரில் குதித்தால் தான் நீச்சல் வரும். இன்னொரு விஷயம் ஞாபகம் வருகிறது. இது ஆற்று நீச்சல் போல, குளத்து நீச்சல் போல அல்ல. இந்த கடல் நீச்சல் வேறு நீச்சல். ஒரே விழுங்கில் உங்களை விழுங்கி விடுகின்ற சுறா மீன்கள் உண்டு. தற்காப்பு கலை, தாக்கும் கலை எதுவும் உதவாது. யானையோ, புலியோ, சிங்கமோ எதிரே வரும். கோலால் அடித்து, கத்தியால் குத்தி போரிடலாம். மீன்கள் கடலுக்கு அடியிலிருந்து விநாடி நேரத்தில் உங்களை கவ்வி மறுபடியும் அதே வேகத்தில் கீழே இழுத்துக் கொண்டு போகும். நீங்கள் மூச்சு திணறி இறந்த பிறகு மறுபடியும் வெளியே வந்து உங்களை விசிறி வான் வெளியே போட்டு நீங்கள் தலைகீழாக வரும்போது வாயை பெரிதாக திறந்து உள்ளுக்குள்ளே விழுங்கிக் கொள்ளும். உள்ளே இருக்கின்ற தசை நார்கள் உங்களை அழுத்தும். மீன் வலதும், இடதும் நகருகிறபோது உங்கள் எலும்புகள் உடைந்து போகும். மீனின் வயிற்றிலிருந்து மிக மோசமான அமிலங்கள் சுரக்கும். உங்களை அது விரைவாக ஜீரணம்செய்து விடும். மீன் உங்களை வேகமாக கீழே கொண்டு போகும்போது உங்களுக்கு மரணம் நேர்ந்து விடும். அதாவது பத்து, பதினைந்து நொடியில் எதிரி யார் என்று அடையாளம் காண்பதற்கு முன்பு நீங்கள் இறந்துபோவீர்கள்.

அமைதியாக இந்த நேரத்தில் வடகிழக்கு பருவமழை முடிந்து குளிர் எடுக்கின்ற காலத்தில் கடல் அலைகள் அதிகம் இல்லாதபோதே நங்கூரம் இட்ட பிறகும் ஒரு ஆட்டம் இருக்கிறது. பயணப்படும்போது எப்படி இருக்கும். முன்பக்கம் ஒரு கோல் ஆழ்ந்து மறுபடியும் ஒரு கோல் உயரும். இடதும், வலதும் அசையும். பாய்மரம் விரித்து பயணப்படும்போது அப்படி

இருக்கும் என்றால் சூறாவளியில், புயலில், வேகமான பருவ காற்றில் மழை கலந்து வருகின்ற நேரத்தில் எப்படி இருக்கும். இந்த மரக்கலத்தின் இந்த கோடியிலிருந்து அந்த கோடிக்கு நாம் வீசி அடிக்கப் படுவோம். கையில் கயிறு மாற்றி பிடிக்காது நடக்க முடியாது. தரையில் படுக்க முடியாது,

இதெல்லாம் ஓரளவிற்கு உங்களுக்கு தெரியும் என்றாலும் இதை அனுபவித்து பார்த்துவிட வேண்டும். என்ன செய்தாலும் குமட்டிக்கொண்டு வருவதை தவிர்க்க முடியவில்லையெனில் அவர் அடுத்த கடல் பயணத்திற்கு சேர்த்துக் கொள்ள மாட் டார். அய்யோ நம்மை தள்ளிவிட்டார்களே என்று வருத்தப்பட வேண்டாம். உங்கள் உடம்பு வாகு அப்படி பருமனாக இருப் பவர்களுக்கு மலை ஏறுவது சிரமமாக இருக்கும். மெலிதாக இருப்பவர்களுக்கு நல்ல உறக்கம் வராது. கால் மாற்றிப் போட்டே தூங்கிக் கொண்டிருப்பார்கள். விடிந்த பிறகும் சுறு சுறுப்பாக இருக்க மாட்டார்கள். பருமனாக இருப்பவர்கள் நன்கு தூங்கி துள்ளி எழுந்து விடுவார்கள். அதுபோலத்தான் இதுவும்,

பூம்புகாரிலிருந்து கொற்கை. கொற்கையிலிருந்து குமரி முனை. அல்லது முல்லைத்தீவு. யானை இரவு என்று நான் போகப் போகிறேன். ஒருவேளை சுற்றி ரோஹணத்திற்கும் நான் போகலாம்.''

''அப்பொழுது யுத்தம் வந்துவிட்டது.'' நீலன் வெண் காடன் தொடை தட்டி பேசினான்.

''கிழவா, அது யுத்தமல்லடா, வெறும் விளையாட்டு. மேலை சாளுக்கியத்தை தாக்கியதும், ஒட்டதேசத்தை தாண்டி யதும், தட்சிணலாடத்தையும், உத்தரலாடத்தையும் அடித்து உதைத்ததும் ஏன் மேலைசாளுக்கியத்தில் வெறி பிடித்து போர் செய்ததும் மறந்து விட்டதா. அவையெல்லாம் யுத்தங்கள். ரோஹணம் பலவீனமாக இருக்கிறது என்று தகவல் வந்திருக் கிறது, மறுபடியும் பலம் பெற வேண்டும் என்ற ஆத்திரம் இருக் கிறது. அதை அனுமதிக்க முடியாது. அவர்கள் பலம் அடைந் தால் பாண்டியர்களோடு கை கோர்த்து நம்மை நோக்கித்தான் வருவார்கள். கொற்கைக்கு அப்பால் ஊடுருவி போனால் ஐந்து பாண்டியர்கள் இருக்கிறார்களாம். ஒன்றாக கூடி பேசிக் கொள்கிறார்களாம். நம்மை ஜெயித்த பிறகு தங்களுக்குள்

அடித்துக் கொள்வார்களாம்.'' 'கெக்கெக்கே' என்று தளபதிகளும், உபதளபதிகளும் காலை நீட்டி, மடக்கி சிரித்தார்கள்.

இராஜேந்திர சோழர் நகைச்சுவை மன்னர் என்று அவர் களுக்குத் தெரியும். பெண்கள் யாரும் இல்லாதபோது வீரர் களுக்கு நடுவே பெண்களை பற்றி பேச ஆரம்பித்தால் காது குடையும் அளவுக்கு பேசுவார். புரண்டு புரண்டு சிரித்து வயிறு குழைந்து போகும். சில வீரர்களை நடித்து காண்பிப்பார். அச்சு அசலாக நடந்ததை அருகில் இருந்து பார்த்தது போல வர்ணிப் பார். நடப்பதும், நிற்பதும் விவரிப்பார். இவர் என்றைக்கு போயிருக்கிறார் எப்படி பார்த்திருக்கிறார் என்ற வியப்பு வரும். நேற்று கடற்கரையில் பெரிய விளையாட்டு ஒன்று நடந்தது, குட்டன் கணவதிபோலும், சில ஸ்வாமி போலும் நடித்து காண் பித்தார். அவர் நடித்தவுடன் பெயர் சொல்ல வேண்டும். குட்டன் கணவதியை எல்லோரும் சொன்னார்கள். அவன் முகம் புதைத்துக் கொண்டான்.

குட்டன் கணவதி குள்ளமாக இருப்பதால் அவன் தலை நிமிர்ந்தே இருக்கும். மேல் வாக்கிலேயே இருக்கும். அவனால் சமதளத்திற்கு இணையாகவோ அல்லது பூமியை நோக்கியோ இருக்கவே முடியாது. அது தேவையற்ற அலட்டலை கொடுக் கும். அப்படி இருந்தால்தான் மரியாதை என்ற நினைப்பும் அவனை அவ்விதம் நிற்க தூண்டியது. இதைச் சொன்னதும் அவன் திகைத்துப் போய் பார்த்தான்.

''ஆமாம். நான் உள்ளே அப்படித்தான் இருக்கிறேன். தலை தூக்கி இருந்தால் தவறா.''

''ஆமாம். தவறு. நீ மட்டும் அல்ல, யார் அப்படி தூக்கி இருந்தாலும் தவறு. யோசிப்பு பிழற்சியாகப் போகும், குட்டன் கணவதிக்கு உடலில் குறை இருக்கிறது. அதனால் அவர் அப்படித்தான் இருப்பார். ஆனால் மாணிக்கவாசகம், கருமாணிக் கம், உதய திவாகரன், புவனராஜன் இவர்களெல்லாம் எப்படி இருக்கிறார்கள். தலை தூக்கி வானம் பார்த்துதான் நிற்பார்கள். தான் என்கிற எண்ணம் இருப்பவர்கள்தான் தலை தூக்கி இருப் பார்கள் என்பது ஒரு மனோதத்துவ விதி, தன்னால் முடியும் என்ற நம்பிக்கை அளவுக்கு அதிகமாகிப் போய் என்னால் முடியும் என்ற நம்பிக்கையை எவர் மீதாவது திணிக்க வேண்டும்

என்ற என்ஜண ஓட்டம் வரும்போது முகவாய் மேலே தூக்கும். இடையறாது தன்னை நிரூபித்திக் கொண்டிருக்கும்போது யார் எளியவர்கள் என்றுதான் பார்க்கும். எளியவர்களை வதைப்பதே தன்னுடைய வெற்றியின் முதல்படியாக நினைக்கும். அவர்கள் பிரச்சனையை சமாளிப்பார்கள். போரிடுவார்கள். உயிருக்கு துணிந்து இறங்குவார்கள். எல்லாம் உண்மைதான், ஆனால் இதை உள்ளங்கைக்குள் அடக்கி வைத்துக்கொள்ள தெரிய வேண்டும். ஒரு சக்தியை வேண்டும் போது விடுவித்தும், வேண்டாம் என்கிறபோது சுருக்கியும் வைத்துக்கொள்ள தெரிய வேண்டும்.'' எல்லா வீரர்களும் தங்கள் முகத்தை சரி செய்து கொண்டார்கள்.

''அய்யா. நீங்கள் ஆசனத்தில் அமர்ந்திருக்கிறீர்கள். நான் தரையில் அமர்ந்திருக்கிறேன். இப்படி தலையை தூக்கித்தானே பார்க்க வேண்டியிருக்கிறது, நேரே பார்த்தால் உங்கள் அடி வயிறைத்தான் நான் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும்.'' உதய திவாகரன் சொல்ல, இராஜேந்திரர் குவளையை அவன் மீது எறிந்தார். நொங்கென்று அவன் மார்பில்பட்டு அதை கீழே விழாது அவன் பிடித்துக் கொண்டான். வீரர்கள் வாய் திறந்து சிரித்தார்கள்.

''கேவலமானவனே, பெண்களின் அடி வயிறு பார்த்து பார்த்து உனக்கு அந்த புத்தி வந்துவிட்டது. போகப்பொருளாக பெண்களை நினைக்கும்போது மார்பகங்களையம், அடி வயிற றையும் பார்க்கத்தான் தோன்றும். போகப் பொருளாக நீ தீர் மானித்துவிட்டால் அவளும் அதுதான் என்று இருந்துவிட்டால் அந்த போகம் சரியாக இருக்காது. பொது மகளிராக இருந் தாலும், பொட்டு கட்டிய தேவரடியாராக இருந்தாலும், பொட்டு அவிழ்த்து காது பெருக்கிய கணிகையாக இருந்தாலும், உன் னுடைய கூத்தியாக அல்லது இரண்டாம் மனைவியாக அல்லது மூத்த மனைவியாக இருந்தாலும் வா. வந்து என்னை அனுபவி, என்று அவளுக்கு பொங்க வேண்டும், அப்பொழுதுதான் போகம் சரியாக இருக்கும். அந்த போகத்திற்கு உன் உடம்பு சரியாக இருக்க வேண்டும். அந்த வரவேற்பை நீ முற்றிலும் அனுபவிக்க தகுந்தவனாக, மிதமான சூடு உள்ளவனாக இருக்க வேண்டும். குதிரை ஏற்றம் போலத்தான். குதிரைக்கு உன்னை

பிடிக்க வேண்டும். அதுதான் மிக முக்கியம். குதிரைக்கு உன்னை பிடிக்கவில்லையெனில் நீ என்ன சாமர்த்தியமாக ஓட்டினாலும் அது ஒரு முரண்டு செய்துகொண்டே இருக்கும். பிடித்த குதிரையின் மீது மிக அமைதியாக, ஆரோக்கியமாக அதை நேசித்துக் கொண்டே பயணம் செய்வது அற்புதமானது, கிட்டத்தட்ட இந்த வங்கத்தினுடைய நிலையும் அப்படித்தான்.''

''வங்கம் நம்மை நேசிக்குமா.''

''வங்கமல்லடா நேசிப்பது, கட்டில் நேசிக்குமா என்றா கேட்பாய். கடல் நேசிக்குமா என்று கேள். பூமி உன்னை நேசிக்கும் என்பதை உணர்ந்திருக்கிறாயா.'' அவர் கேள்வி கேட்டுவிட்டு அமைதியாக இருந்தார்.

வீரர்கள் திகைத்தார்கள். பூமி நேசிப்பதா, என்ன இது.

''ஆமாம். பூமி நேசிப்பது. எனக்கு வெய்யில் ஆகாது. வெய்யில் நிறைந்த பூமி எனக்கு விருப்பமில்லை. காலையில் எழுந்தவுடன் வியர்க்கத் துவங்கினால் எனக்கு ஒரு சிடுசிடுப்பு வந்துவிடும். என்ன வெய்யில் என்று அலுத்துக்கொள்வேன். அதாவது சூரியனின் கதிர்கள் கீழே பட்டு மேலே வருகிறபொழுது அவஸ்தைப் படுவேன். மரநிழல் மிக இதமாக இருக்கும். மலை சுகமாக இருக்கும். அதேநேரம் வெறும் கட்டாந்தரையாக பயணப்பட நேர்ந்தால் நான் கொஞ்சம் கோபமுள்ளவனாக மாறி விடுவேன். பூமியும் என்னை கோபிக்கும். எனக்கும் அந்த பூமிக்கும் அந்த நேரம் ஆகாது. எனக்கு பிடித்த இடம் எது. மலை உச்சி, தவழும் மேகங்கள். குளிர் காற்று, சால்வை படபடக்கின்றபோது சுருட்டி எதன் மீதாவது போட்டுவிட்டு வெறும் மார்போடு நிற்பது எனக்கு பிடிக்கும். என்னால் என் உடம்பால் குளிர் தாங்க முடியும். இதுதான் பூமி என்னை தொடர்புகொள்ளும் இரகசியம்.

ஏன் அருண்மொழி பட்டனை எடுத்துக் கொள்ளுங்கள். குளிர் என்றால் தவித்துப் போனான். வெய்யிலில் நிற்பான். அவன் சூரியனின் பிள்ளை. கர்ணனின் தம்பி. இருட்டு அவனுக்கு கொஞ்சம் பயம். எப்போது விடியுமடா என்று காத்திருப்பான். அருண்மொழியை கவனித்திருக்கிறீர்களா. இருட்டில் தூங்காத அருண்மொழி பல்தேய்த்து உடம்பை சுத்தப்படுத்திக்

கொண்டு குளித்துவிட்டு சூடாக ஏதேனும் ஆகாரம் அருந்து வான். அரிசி கஞ்சியோ, பால் கஞ்சியோ, அப்பங்களோ நன்கு உண்பான், இரண்டு பனை உயரத்திற்கு வெய்யில் வந்து விடும். அப்பொழுது அருண்மொழி நெஞ்சுவரை போர்வையை போர்த்திக் கொண்டு கட்டிலில் படுத்து தூங்கி விடுவான். இரண்டரை நாழிகை, மூன்றரை நாழிகை அயர்ந்து தூங்கு வான். பிறகு சுறுசுறுப்பாகி விடுவான். அதுதான் அருண்மொழி தூங்கும் நேரம்.

அதேபோல கடலின் உப்பங் காற்று உன் மீது படும் பொழுது நீ எதிர்க்காமல் இருந்தால் கடல் உன்னை நேசிக் கிறது என்று அர்த்தம். குட்டன் கணவதி சொல்லியிருக்கிறான். கடலில் விழுந்தவனை மீன்கள் காப்பாற்றி மிதவையில் ஏற்றி விடுமாம். மூக்கு நீண்ட மீன்களாம். குழந்தை போல சிரிக்கு மாம். கூட்டம் கூட்டமாக அலையுமாம். அவனை தலைக்கு மேலே மாற்றி மாற்றி தூக்கிக் கொண்டு வந்து மிதவை யில் போட்டதாம். பெரிய மீன் ஒரு பெரிய மரத்துண்டை எங் கிருந்தோ கொண்டுவந்து அருகே சேர்த்ததாம். அவ்வளவு காதலாம். இதுவும் கடல் நேசிப்பு உதாரணம்.''

சபை திகைத்து இவன் பண்டிதச் சோழன், மிகுந்த ஞானஸ்தன். எதை தொட்டாலும் அதைப் பற்றி விளக்கமாக பேசுகிறவன். காதலோ, காமமோ, போரோ, வாழ்வோ, இறை தரிசனமோ எது பற்றியும் அவனுக்கு அழகாக பேச முடியும். இந்த பேச்சு கவர்ச்சிதான் தலைவன் தகுதிக்கு முதன்மையாக இருக்கிறது.

எதிராளியின் மனதை ஊடுருவுகின்ற புத்தி இரண்டாம் தகுதியாகிறது. அவனை தன் பக்கம் இழுக்கக்கூடிய அந்த பேச்சுத்திறன் மூன்றாம் தகுதியாகிறது. வெறும் சொல் வீரனாக இல்லாத வலுஉள்ளவனாக, செயல் உள்ளவனாக, திட்டமிடு பவனாக, திட்டத்தை நிறைவேற்றுபவனாக இருப்பது அடுத் தடுத்த தகுதிகளாக மாறி விடுகின்றன.

உடையார் ஸ்ரீஇராஜேந்திர சோழ தேவர் எல்லாவிதமான தகுதிகளையுடைய மிகச் சிறந்த மன்னனாக சோழ தேசத் தின் மாமணியாக, சோழ கிரீடத்தில் மிகப் பெரிய வைரமாக ஜொலித்துக் கொண்டிருக்கிறார். அறுபது அகவை நெருங்கிக்

கொண்டிருந்தது. உடல் முன்பு இருந்தது போல முறுக்காக இல்லை. ஆனாலும் மனதின் முறுக்கு உடம்பில் பரவி அவரை கம்பீரமாகக் காட்டியது.

''அப்படியென்றால் நாம் இப்பொழுது போகின்ற பயணம் போரைச் சார்ந்ததல்ல என்று சொல்கிறீர்களா.'' புவனராஜன் கேட்டான்.

''அற்புதம். எங்கு சுற்றினாலும் பேச்சு எங்கு போகிறதோ அதன் மையத்தை நோக்கி நாம் திரும்பிவிட வேண்டும். பெண்களைப் பற்றி பேசினால் பெண்களையே நினைத்துக் கொண்டிருக்கக் கூடாது. உதறிவிட்டு எங்கு எப்படி பேச ஆரம் பித்தோம் என்பதை புரிந்துகொள்ள வேண்டும். புவனராஜன் என்னுடைய பாராட்டுகள்.''

அவன் எழுந்து நின்று சாஷ்டாங்கமாக விழுந்து வணங் கினான். அமர்ந்து கொண்டான்.

எல்லோருக்கும் சிறு குவளையில் மது கொடுக்கப்பட் டது. குளிருக்கு அது இதமாக இருந்தது. வீரர்கள் குடித்த அதே குவளையில், அதே அளவில் உடையார் ஸ்ரீ இராஜேந்திர தேவரும் மது எடுத்துக் கொண்டார். வீரர்கள் சந்தோஷமாக அதைப்பார்த்து சிரித்தார்கள். நானும், இராஜேந்திரரும் ஒரே குவளையில் மது அருந்தியிருக்கிறோம் என்று பிற்பாடு பேரப் பிள்ளைகளுக்கு சொல்லலாமல்லவா என்று நினைத்துக் கொண்டார்கள். இதுவும் ஒரு தலைவனுடைய வெற்றி ரகசி யத்தில் ஒன்று.

''ஒரு கணக்கு போட்டு பாருங்கள். நாம் முதன் முதலில் ஜெயித்தது எது. ஈழத்தை அல்லவா. ஈழம்தானே நம்முடைய முதல் போராக இருந்தது. ஈழப்போரில் கலந்து கொண்டவர் யார் யார்.''

விருக்கென்று பலர் எழுந்திருந்தார்கள்.

''அமர்ந்தபடியே சொல்லுங்கள். ஆஹா. பாதிபேர் இருக் கிறீர்கள். ஈழத்தில் ஒளித்து வைத்திருந்த பாண்டியன் மணிமுடி யையும், செங்கோலையும், உடையும் கொண்டு வந்தோ மல்லவா, அதற்குப் பிறகு நம்முடைய படைகள் ஈழத்தில் குடியேறி நிலையான ஆட்சி கொடுத்துக் கொண்டிருக்கிறது

அல்லவா. இப்பொழுது ரோஹணம் மறுபடியும் சிலிர்த்துக் கொண்டிருக்கிறது. ஆனால் வலு இல்லை. ரோஹணத்திற்கும், ஈழத்திற்கும் நடுவே உயரமான மலைகள், கடுமையான காடுகள். ஒரே ஒரு யானை போகின்ற பாதைதான் தொடர் பாதையாக இருக்கிறது. அல்லது கடல் வழியாக போக வேண்டியிருக்கிறது.

நாம் இன்னும் சில நாட்களில் பருவநிலை தோதாக இருக்கின்றபொழுது ரோஹணத்திற்குப் போய் உள்ளே நுழைந்து அடித்து துவைத்து விட்டு மறுபடியும் வெளியேறி விடுவோம். என்னுடைய அனுமானத்தில் ஒரே ஒரு நாள் போதும். ஒரு நகரத்தை தீக்கிரையாக்கிவிட்டு கிராமங்களை விட்டு விட்டு வர வேண்டும். கிராம மக்கள் நம்முடைய நோக்கம் அல்ல. ரோஹணம் என்கிற அந்த நகரம்.அந்த மாளிகை. தவிடு பொடியாக வேண்டும். அரசாங்கம் சீர்குலைய வேண்டும். படையெடுப்பது என்பதை யோசிக்க இன்னும் ஐந்து வருடங்கள் ஆக வேண்டும். அதையெல்லாம் விட...''

''அங்குள்ள குதிரைகள் வேண்டும்.'' தொலைவிலிருந்த ஒருவன் கத்தினான்.

''யாரது.'' அவர் எட்டிப் பார்த்தார். நாலு அடுக்கு வீரர்களுக்கு பின்னே அமர்ந்த குட்டன் கணவதி எழுந்து நின்றான். எழுந்து நின்றபோதும் அவன் தலை மட்டும்தான் தெரிந்தது.

''வாருமய்யா, என்ன அங்கு உட்கார்ந்து கொண்டிருக்கிறீர். இங்கே வந்து உட்காரும். முன் வரிசையில் உட்காருங்கள்'' என்று சொன்னார்.

''இல்லை. முன் வரிசையில் உட்கார்ந்தால் எழுந்து போவது சிரமம். அங்கு இருந்தால் நாவாய் ஆடும்பொழுது, சுக்காணை சமாளிக்க இன்னொரு நங்கூரம் இறக்க வசதியாக இருக்கும் என்று இங்கு உட்கார்ந்திருக்கிறேன்.''

''அட, அதுவும் உண்மைதான். அங்கேயே இரும். எப்படி உமக்கு அந்த குதிரைகள் வேண்டும் என்று தோன்றியது.''

''கிழக்கே போகிறோமல்லவா. அங்கே போவதற்கு குதிரைகள் வேண்டுமல்லவா. தரையில் இறங்கி விரைவாக குதிரைகள் இருந்தால்தானே நம்மால் உள்ளே நுழைய முடியும்.

அங்குள்ள நகரங்களை கைப்பற்ற முடியும். எனவே இம்மாதிரி வங்கமும், குதிரைகளும் அவசியம் தேவை. அவைதான் நமது வெற்றிக்கு அடிப்படை.''

''உண்மை. உங்களுக்கு எனது பாராட்டுகள். குட்டன் கணவதி மது அருந்தினீரா.'' அவன் அமைதியாக இருந்தான்.

''இல்லை. அவர் மறுதலித்து விட்டார்.''

''ஏன்.''

''அவர் அந்தணரல்லவா.'' இன்னொருவன் சொன்னான்.

''கணவதி, அந்தணன் என்றா மறுதலித்தாய்,''

''இல்லை, எனக்கு மது ஏற்புடையதாக இல்லை. போதையில் இருப்பது எனக்கு பிடிக்கவில்லை. தெளிவாக இருக்க வேண்டும். என் போதைக்கு பல்வேறு விஷயங்கள் இருக்கின்றன.''

''எது''

''கடற்பயணம், குதிரைஓட்டம், பறவைகள், பட்டயங்கள், எதிர்த்தவரை வெட்டி போடும் திறன், மரம் ஏறுவது. இவையெல்லாம் எனக்கு போதையான விஷயங்கள்.''

''ஏன் மரம் ஏறுவது.''

''நான் குள்ளமாக இருக்கிறேன் அல்லவா. உயரமான இடங்கள் எனக்கு பிடித்தனவாக இருக்கின்றன.'' அவன் சொல்லிவிட்டு தலை குனிந்தான். இராஜேந்திரர் வேறொரு வீரன் கையில் இருந்த குவளையை கேட்டு வாங்கிக் கொண்டார். அவனை நோக்கி முழு பலத்தோடு எறிந்தார். அவன் முதுகு திருப்பிக் கொண்டான். நொங்கென்று அந்த குவளை அவன் முதுகில் பட்டு எகிறியது. வேறு யாரோ அந்த குவளை கீழே விழாமல் பிடித்துக் கொண்டார்கள்.

''அவனுக்கு ஒரு குவளை மது ஊற்றுங்கள். நீ அந்தணனா. துடைத்து எறி. வைதீக வழியில் நிற்பவனா. எவன் சொன்னான். கடலோடி போய் விட்டு இப்பொழுது அந்தணன் என்று சொல்கிறாயே, மறவனாக இரு. கணவதி மறவனாக இரு. இரண்டும் கெட்டானாக இருக்காதே, ஒன்று அந்தணனாக அமர்ந்துவிடு. அல்லது மறவனாக மாறி விடு.'' என்று சொல்ல,

அவனுக்கு மது ஊற்றப்பட்டது. அந்தக் குவளை மதுவை முகர்ந்து பார்த்து நிமிர்ந்து பார்த்தான்.

''நாங்கள் ஐந்து முறை கத்துவோம். அடி, வெட்டு, குத்து, கொல்லு, சாவு என்று ஐந்து முறை கத்துவோம். அந்த சாவு என்றதும் நீ மடக்கென்று முழுங்கிவிட வேண்டும். சரியா. எல்லோரும் தயாரா. கையிலே குவளையை எடுத்துக் கொள். இன்னொரு முறை முகர்ந்து பார். சரி. எல்லோரும் கூவுங்கள்.''

அடி, வெட்டு, குத்து, கொல்லு அத்தனை பேரும் உரக்க கத்தினார்கள். சாவு என்று எல்லோரும் உரக்க கத்த, அவன் மொடக்கென்று அந்த மதுவை தன் வாயில் கவிழ்த்துக் கொண்டான். சூடாக அந்த திரவம் கீழே இறங்கி அவன் இரைப் பையை தாக்கியது. அவன் உட்கார்ந்து கொண்டான். கூட்டம் அவனையே பார்த்துக் கொண்டிருந்தது.

''ஒன்றும் நடக்கவில்லை மன்னா.'' என்று உரத்த குரலில் சொன்னான்.

''இப்படி சொல்வதே ஏதோ நடக்க ஆரம்பித்துவிட்டது என்று அர்த்தம்.'' என்று அவர் சொல்ல, மறுபடியும் வீரர்கள் எகிறி வாய்விட்டு சிரித்தார்கள்.

''ஏதோ நடக்கிறது மன்னா.''

''ஆமாம், மெல்ல நடக்கும். பிறகு பேயாட்டம் போடும்.''

''அப்படித்தான் தோன்றுகிறது மன்னா.''

''என்ன தோன்றுகிறது.''

''பேயாட்டம் போட வேண்டும் என்று தோன்றுகிறது.''

''அட, போடுமய்யா. வேறு எதற்கு மது அருந்தினீர்கள்.'' அவன் ஒரே எகிறலில் கரணம் அடித்து இராஜேந்திர சோழருக்கு முன்னே வந்து அமர்ந்து கொண்டான். அவரை பார்த்து சிரித்தான்.

''அடாடா, பேய் சிரிக்க ஆரம்பித்துவிட்டது.''

இராஜேந்திர சோழர் சொன்னதும் எல்லோரும் எகிறி எகிறி சிரித்தார்கள்.

''குள்ளப் பேய்'' என்று ஒருவன் சொன்னதும் அவன் எகிறி நின்று பளீர் என்று அடித்தான்.

''என்ன காரணம் கொண்டும் என்னை குள்ளன் என்று அழைக்காதே.'' என்று சீறினான். அதற்கும் எல்லோரும் சிரித்தார் கள்.

''மன்னா, நீங்கள் ஊற்றி கொடுத்து விட்டீர்கள். எனக்கு கட்டவிழ்ந்து போக வேண்டும் போலிருக்கிறது.''

''போயேன்.''

''எனக்கு உங்கள் எதிரே உட்கார முடியாது.''

''அதனாலென்ன.''

''நான் சுக்கானுக்கு அருகே போகிறேன்.''

''நாவாய் ஓடவில்லையே. எதற்கு சுக்கான்.''

''ஆமாம், நான் ஒன்று செய்யட்டுமா.''

''கோபித்துக்கொள்ள மாட்டீர்களா.''

''மாட்டேன்''

''உங்கள் கண்முன்னே நிற்காமல் ஓடிப்போகப் போகி றேன்.''

''எங்கு''

''கடலுக்குள்.'' அவன் எல்லோரையும் தாண்டிக் கொண்டு போய் நாவாய் விளிம்பில் ஏறி நின்று ''போய் வரு கிறேன்'' என்று கை அசைத்து சுளீர் என்று கடலுக்குள் பாய்ந் தான். ஒரு மீன் குஞ்சு அல்லது மீன் கொத்திப் பறவை சிறகடித்து பாய்வது போல அது இருந்தது.

வீரர்கள் கரகோஷம் செய்தார்கள். ஓடிப்போய் எட்டி பார்த்தார்கள். அவனைக் காணோம்.

''அய்யா. அவன் இல்லை.''

''என்ன விளையாடுகிறீர்கள். அவன் எங்காவது இருப் பான். அடியில் துழாவிக் கொண்டிருப்பான்.'' அவர்கள் எல்லோ ரும் எட்டி பார்த்தார்கள்.

''இல்லை, நிச்சயமாக இல்லை.''

கணவதி அடியில் குனிந்து மரக்கலம் தாண்டி மறுபக்கம் வந்து மெல்ல கயிறைப் பிடித்துக் கொண்டான். அப்படி குனிந்தது

அவன் போதையை சட்டென்று குறைத்தது. அதே சமயம் சந்தோஷமாகவும் இருந்தது.

குட்டன் என்று சொன்னார்கள் அல்லவா, இவர்களை ஏதேனும் செய்ய வேண்டும் என்று தோன்றியது. அவன் மெல்ல கயிறு பிடித்து ஒரு பல்லியைப் போல மரக்கலத்தோடு ஒட்டிக் கொண்டு ஏறினான்.

எல்லோரும் மரக்கலத்தின் இடப்பக்கம் பார்க்க, அவன் வலப்பக்கம் மேலேறினான். புரண்டு மரக்கலத்தில் படுத்துக் கொண்டான். சுருள் கயிறுகளும், பாய் மரங்களும் படுக்க வைக்கப்பட்டிருந்த இடத்தில் ஒளிந்து கொண்டான். ஒரு கையை தளர்த்தி இன்னொரு கையை இறுக்க பிடித்துக் கொண் டான். இறுக்க பிடித்துக் கொண்ட கயிறின் நுனியில் கனம் இருந்தது, அது மெல்லத் தாழ அது குட்டன் கணவதியை மேலே கொண்டு போயிற்று. பாய்மரம் கட்டப்பட்ட ஒரு கட்டையின் மீது விரைவாக ஏறி நடுத்தண்டை அடைந்தான். அங்கு ஒரு சிறிய தளம் இருந்தது. நடுத்தண்டு நடுவிலும் சிறிது நிற்பதற்கு மூன்று ஆள் நிற்பதற்கு ஒரு தளம் இருக்கும். அந்த தளத்தில் உட்கார்ந்து கொண்டான். அவன் உருவம் மிகச் சிறிதாக அங்கு அடங்கியது. அவன் இருப்பது யாருக்கும் தெரிய வில்லை. அவனுக்கு எல்லோரும் தெரிந்தது. வாயில் விரல் வைத்து இன்னொரு உள்ளங்கையை வேகமாக அசைத்து ஒரு கோட்டானைப் போல கூவினான். கடல் பகுதியில் ஏது கோட் டான். அதுவும் பகல் நேரத்தில், ஆனால் குரல் பயங்கரமாக இருந்தது. எங்கே எங்கே என்று தேடினார்கள். அவன் தளத்தில் தன்னை குறுக்கிக் கொண்டான்.

''கணவதி மேலே வந்துவிட்டான். தேடாதீர்கள்.'' இராஜேந் திர சோழர் சொன்னார்.

''எங்கிருக்கிறான் என்று தெரியவில்லையே.''

''அதுதான் அவன் சாமர்த்தியம். அதுதான் அவன் உருவம் அவனுக்கு கொடுத்த கொடை.'' இராஜேந்திர சோழர் சொன் னார்.

''இப்பொழுது அவன் கையில் வில்லும், அம்பும் இருந் தால் உங்களில் ஆறு பேரை அவன் வெகு எளிதில் கொன்று

விடுவான். அவன் உருவம் அதற்கு உதவி செய்கிறது. எனவே உருவம் கண்டு எள்ளல் வேண்டாம் என்பது ஒரு நல்ல வாக்கியம்.''

இப்பொழுது ஒரு கயிறை தேர்ந்தெடுத்தான். அந்த கயிறை சுற்றி தன் இடுப்பு துணியை போட்டான். பிரித்து காலிலிருந்து தலைவரை போர்த்திக் கொண்டான். நடுவே முடிச்சுகள் போட்டுக் கொண்டான். இப்பொழுது அவன் தொங்கினால் ஒரு ஆள் உயரம் இருப்பான். வேட்டியை இறுக்கிக் கொண்டான். இடுப்பு துணியை சுருக்காக மாற்றி அதில் தொங்கியபடியே ஊ... என்று கூச்சலிட்டான். எட்டி உதைத்தான். அவன் பறந்து வருகின்ற ஒரு பறவையைப் போல கீழே வர, அவர்கள் எல்லோரும் விலகி ஓடினார்கள். கையில் வாளை உருவினார்கள். அவன் மரக்கலத்தின் நேர் எதிரே, இராஜேந்திர சோழருக்கு பின்னே வந்து உட்கார்ந்து கொண்டான்.

''என்ன அது'' வீரர்கள் சற்று கலவரமாகி கத்தினார்கள்.

''கணவதி பேய் வேஷம் போட்டிருக்கிறான், இது மாலை நேரம். உங்களுக்கு கலவரம் இல்லை. இதே இரவு நேரம் வாயில் கொள்ளிக் கட்டையோடு வந்தால் பயந்து சாவீர்கள். என்ன ஆடுகிறான் பாருங்கள். ஒரு குவளை மதுவே இத்தனை ஆட்டம் செய்கிறது.''

அவன் கீழ் இறங்கினான். வேட்டியை எடுத்து தலைப்பாகை கட்டிக் கொண்டான். இடுப்பு துணியை கட்டிக்கொண்டான்.

''உடையார் ஸ்ரீ இராஜேந்திர சோழருக்கு வணக்கம். மது எனக்கு பிடித்திருக்கிறது, ஆனால் இதற்கு நான் அடிமையாகக் கூடாது, இது எனக்கு தேவையில்லை. என்னால் மதுவற்று வெய்யிலிலும், குளிரிலும், உடல்வலியும் தாங்கிக் கொள்ள முடியும். எனவே மறுபடியும் இந்த உத்தரவை எனக்கு பிறப்பிக்காமல் இருக்க வேண்டும் என்று தாழ்மையோடு கெஞ்சுதலோடு கேட்டுக் கொண்டு உங்களை வணங்குகிறேன்.'' நீண்ட நெடுஞ்சாண்கிடையாக இராஜேந்திர சோழரை வணங்கினான். எழுந்து பொத்தென்று விழுந்தான். அப்படியே தூங்கிப் போனான்.

அவனை அசைத்தார்கள். வாய்விட்டு சிரித்தார்கள். அள்ளிக் கொண்டார்கள். 'மறுபடியும் கடலில் போட்டுவிடலாமா' என்று கேட்க, இராஜேந்திரர் கூடாது என்று சொன்னார்.

என்ன தெளிவான மனிதன், இவன் இப்படி குறையோடு இருப்பதால்தான் தெளிவாக இருக்கிறானா என்று ஆச்சரியப் பட்டார். ஒரு இடம் தாழ்ந்தால் ஒரு இடம் விழித்துக்கொள்கிறது, செவிப்புலன் சரியாக இல்லையென்றால் கண் கூர்மையாகிறது. கண் கூர்மையில்லையெனில் செவிப்புலன் கெட்டியாகிறது. அடேய் மனிதர்கள் எவ்வளவு பலமானவர்கள், ஆச்சரியப் பட்டார். அவருக்கு உடனடியாக ரோஹணத்திற்கு பயணப்பட வேண்டும் என்று தோன்றியது. ஆனால் அருண்மொழி வர வேண்டும். அதற்கு முன்பு மயிலை திருவல்லிக்கேணியில் மரக்கலத்தில் போய் இறங்க வேண்டும். அல்லது கடல்மல்லை யில் இறங்கி அங்கிருந்து குதிரையில் ஏறி மயிலைக்கு போக வேண்டும். அம்மங்காவிற்கு விடை கொடுத்துவிட்டு திரும்பும் போது குலசேகர பட்டிணம் வர வேண்டும். மறுபடியும் பூம்பு காரிலோ, கொற்கையிலோ ஒன்று திரண்டு அங்கிருந்து ரோஹணம் நோக்கி போக வேண்டும். அதற்குள் நாகைக்கு படைவீரர்கள் வந்துவிட வேண்டும். நாகையில் ஏறலாமா அல்லது கொற்கையில் ஏறலாமா இதுதான் மிக முக்கியமான விஷயம். இது விஷயம் தெரிந்தவர்களோடு நாம் பேசவேண்டும்.

வடக்கு நோக்கி பயணப்படுவது என்பது கடினம், துடுப்பு போட வேண்டும். கடினமான வேலை வீரர்களுக்கு கொடுப்பது நல்லது. கடல் பயணத்திற்கு அந்த உடம்பு ஒத்துழைக்கும்.

வீரமாதேவி கொஞ்சம் நுரையீரல் தொந்தரவால் தூங்கிக் கொண்டிருக்கிறாள். மருந்துகள் நன்கு வேலை செய்கின்றன. இன்னும் வைத்தியர்கள் இந்த இடத்திற்கு வேண்டுமா என்று யோசிக்க வேண்டும். வேறு யாரையாவது யோசிக்கச் சொல்ல வேண்டும்.

உள்ளத்தில் நல்ல உள்ளம் உறங்காது, ஒரு தலைவனின் உள்ளம் இடையறாது சிந்தித்து கொண்டுதான் இருக்க வேண்டும். நடுநடுவே கேலியும், கிண்டலும் பேசி தன்னை நெகிழ்த்திக் கொண்டாலும் ம .டென்று அதிலிருந்து விலகி மும்முரமாக அடுத்தது என்ன என்று யோசிக்க துவங்க

வேண்டும். இந்த யோசிப்பு ஒரு நல்ல தலைவனுக்கு மரணத்தின் போதுதான் நிற்கும். ஒருவேளை மனம் அதற்குப் பின்னரும் யோசித்துக் கொண்டு அலையுமோ தெரியவில்லை. மரணம் எப்போது வரும் தெரியவில்லை. எப்படி வரும் தெரியவில்லை. வடக்கே கங்கை வரை போகாமல் ஏதோ காரணம் சொல்லி வேங்கி வரை நின்றாகிவிட்டது. நாகையை விட்டு புறப்பட்டால் மறுபடியும் நடுவே நிற்க முடியாது. ஸ்ரீவிஜயம் போய்த்தான் ஆக வேண்டும். ஸ்ரீ விஜயம் சுற்றியுள்ள மற்ற இடங்களுக்கும் பயணப்படத்தான் வேண்டும். எந்த இடத்தில் எனக்கு மரணம் எழுதி வைத்திருக்கிறதோ தெரியவில்லை. எந்த அம்பு நெஞ்சை துளைத்து மூச்சை அடைக்குமோ தெரியவில்லை. எது என் ருத்ரபூமி தெரியவில்லை. எந்த இடத்தில் என் உடம்பு சாம்பலாகும் புரியவில்லை.

கங்கை கொண்ட சோழபுரத்திலிருந்து நேர்கோடாக உடையார்குடி வழியாக பூம்புகாருக்கு இன்னும் ஒரு ஆயிரம் பேர் குதிரையில் வந்து இறங்கினார்கள். பூம்புகார் திணறியது. சோற்றுக் கடைகள் இரவும் பகலுமாக இயங்கின. காசு தாராளமாக புழங்கியது.

வலையை மணலில் போட்டு பின்னிக் கொண்டிருந்த கங்கே யாதவுக்கு மயிலை நோக்கி இராஜேந்திரசோழர் கடல் வழியே பயணப்படுகிறார் என்பது தெரிந்தது. இது ஒரு பயிற்சி என்பதை மக்கள் பேச்சில் புரிந்து கொண்டான். எப்படி போவது மயிலைக்கு, இராஜேந்திர சோழர் மரக்கலத்தில் துடுப்பு போடுபவனாக உட்கார்ந்து கொள்ளலாமா அல்லது குதிரை வாங்கி அப்படியே போய் விடலாமா. அவன் யோசித்தான். கடல் பயணம் வயிறு புரட்டும். வயிறு புரட்டினால் அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் நெருங்கி வருவார்கள். விசாரிப்பார்கள். ஒருவேளை யாராவது அடையாளம் கண்டு கொள்ளலாம். கண்டு கொண்டால் அங்கேயே வெட்டி போடுவார்கள். எனவே கடற்பயணம் வேண்டாம். இராஜேந்திரர் போவதற்கு முன்பு மயிலைக்கு போய் விடுவோம். மயிலையில் போய் என்ன செய்யப் போகிறாய் என்று மனதை அவன் கேள்வி கேட்டான். இராஜேந்திரரை கொல்லுவேன்.

இங்கு கொன்றால் ஆகாதா.

ஆகாது. இங்கு கொன்றால் எல்லை தாண்ட முடியாது. மயிலையில் தொலைவிலிருந்து அம்பு வைத்து கொன்றால் அதுவும் ஊதுகுழல் வைத்து விஷ அம்பு செலுத்தினால் உடனே குதிரை ஏறி கீழை சாளுக்கியம் நுழைந்து அங்கிருந்து மேலை சாளுக்கியத்திற்கு நகர்ந்து விடலாம். பின்தொடரு வார்கள். பார்த்துக் கொள்ளலாம். அவன் திட்டம் போட்டான்.

கடற்கரை சாலையோடு கடல்மல்லை வழியாக, திருவான் மியூர் வழியாக மயிலை திருவல்லிக்கேணியில் தங்கி பிறகு கீழை சாளுக்கியம் நோக்கி பெரும் படையோடு அரையன் ராஜராஜன் போகிறார் என்பது அவனுக்கு சொல்லப்பட வில்லை. அங்கே அதே இடத்தில் தன்னுடைய மீன் பிடிப்பவர் வேஷத்தை கலைத்துவிட்டு வலைகளை அங்கேயே விட்டு விட்டு அவன் மணலில் நெடுக நடந்து பாதை ஏறி வேறு உடைகள் வாங்கி தன்னை வணிகனாக அலங்கரித்துக் கொண்டு இருபது பொன் காசுக்கு நல்ல குதிரையை விலைக்கு வாங்கி, அதன் கால்களை, அடிவயிற்றை, நெஞ்சை தடவி சோதித்து அதில் ஏறிக்கொண்டான். வியாபாரம் முடித்து திரும்பு கின்ற வணிகன் போல இருந்தான்.

பித்தளை பாத்திரங்கள் விற்க வந்த மயிலை வணிகர் குழு முன்னால் போயிற்று, நல்ல இடைவெளி விட்டு பின் னால் தொடர்ந்தான். அவர்கள் போன சுவடுகள் தெளிவாகத் தெரிந்தன. நடுநாடு ஆரவாரமாக இருந்தது.சோழ தேசத்தை விட கங்கைகரை வெற்றியை பெரிதாகக் கொண்டாடியது, ஆட்டம் பாட்டங்கள் அதிகம் இருந்தன. ஒரு சொம்பு கங்கை நீரை கிணற்றில் கொட்டி விட்டு தினம் தினம் அதை குடத்தில் சேந்தி எடுத்து ஒரு செப்புக் காசுக்கு ஒரு குவளை என்று விற்றுக் கொண்டிருந்தார்கள். ஜனங்களும் வாங்கிக் கொண் டிருந்தார்கள். சடேர் சடேர் என்று மூங்கில் கழிகளால் நடுத் தெருவில் சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள். அடுத்த யுத்தத்திற்கு தயார் செய்கிறார்களாம். வாலிபர்கள் நிற்கும் போதும் நடக்கும்போதும் பெரும் வீரர்களாக வேடம் பூண் டார்கள். ஒரு வாலிபனை மடக்கி கழுத்து பக்கம் விரல்களால் நசுக்கி உடம்பை கோணலாக்கி விடும் ஆத்திரம் இருந்தது. ஆனால் தன் முகம் தெரிந்து போகும். எல்லா கோபங்களையும் அடக்கிக் கொண்டு கங்கே யாதவ் பயணப்பட்டான்.


INDIA
River Map
AFGHANISTAN
PAKISTAN
CHINA (TIBET)
NEPAL
BHUTAN
BANGLADESH
MYANMAR (BURMA)
SRI LANKA
NEW DELHI
Jhelum
Indus
Chenab
Ravi
Beas
Satluj
Sambhar
Ganga
Gomati
Ghaghara
Kosi
Lohit
Brahmaputra
Padma
Luni
Chambal
Yamuna
Son
Gulf of Kachchh
Narmada
Tapi
Gulf of Khambhat
Painganga
Mahanadi
Hugli
Mouth of Ganga
Godavari
Penganga
Sabari
Bhima
Krishna
Tungabhadra
Penner
Pulicat
Cauvery
Periyar
Vaigai
Palk Strait
Arabian Sea
Bay of Bengal
Lakshadweep Sea
Lakshadweep Is.
Andaman And Nicobar Is.
INDIAN OCEAN
LEGEND
International Boundary
National Capital
River
Map not to Scale
Copyright © 2012-13 www.mapsofworld.com
(Updated on 9th October, 2012)

செங்கல்பட்டி வழியாக திருவான்மியூரை அடைந்தான். உடல்நலம் பேணுகின்ற மருந்தீஸ்வரர் அங்கு இருந்தார். அவன் கோவிலுக்கு போய் அந்தணரை அழைத்து ஒரு பொற்காசு கொடுத்தான், தூங்குகின்ற இடம் வேண்டும் என்றான். குளத்தில் இறங்கி நீராடினான். எழுந்து வந்து அந்தணர் வீட்டில் அரிசி கஞ்சியும், மாங்காய் ஊறுகாயும் தொட்டுக் கொண்டு சாப்பிட்டான். பிறகு கோவிலை வலம் வந்தான். மருந்தீஸ்வரரை தரிசித்தான். திருநீறு இட்டுக் கொண்டான். பெரிய மண்டபத்தில் தியாகராஜர் சன்னதிக்கு அருகே அமர்ந்து கொண்டான். தர்ப்பைபாயையும், மரக்கட்டை பலகையையும் அந்தணர் கொண்டு வந்து கொடுத்தார். தியாகராஜ ஸ்வாமி பஞ்சலோகச் சிலையை சுற்றி நடப்பதற்கு வழி இருந்தது. வலப் பக்க வழியினூடே பாயை விரித்து பலகையை போட்டான். இரண்டு மூன்று பேர் சன்னதிக்கு நேர் எதிரே தூங்கிக் கொண்டிருந்தார்கள். ஆனால் காற்று இந்த வழியினூடே சிலுசிலுப்பாக இருந்தது. மேலே துணியை போர்த்திக் கொண்டு தலைப்பாகை இறுக்கி கட்டிக் கொண்டு அதையே தலையணையாக கருதி மரப்பலகையில் தலைவைத்து ஆழ்ந்து தூங்கினான்.

நடு நாட்டில் திருட்டு பயம் உண்டு. தொண்டை நாட்டில் இருக்காது. தூங்க ஆரம்பித்தபோது யாரோ ஒரு சிறுவன் வந்தான். என்ன என்று கேட்டதற்கு கால் பிடித்து விடுகிறேன். ஒரு செப்புக்காசு கொடுங்கள் என்றான், 'அட, நன்றாக இருக்கிறதே இது, நல்ல தொழிலாக இருக்கிறதே.' என்று மனதிற்குள் பாராட்டி ஒரு காசு எடுத்துக் கொடுத்தான். குரங்குப்பிடி. தொடையிலிருந்து கணுக்கால் வரை அழுத்தி அழுத்தி பிடித்து விட்டான். உருவி விட்டான். தசைகளை தேய்த்து விட்டான். கண் சொருகி தூக்கம் வந்தது. ஆழ்ந்து தூங்கிப் போனான். கண் விழித்தபோது மாலைநேரம் வரத் துவங்கியிருந்தது. அந்த சிறுவன் அங்கேயே இருந்தான்.

''என்ன காசு போதுமல்லவா.''

''அது போதும், குளத்தில் வந்து குளித்தால் நான் முதுகு தேய்த்து விடுவேன். உங்கள் முதுகு அழுக்காக இருக்கிறது. மொட்டைக் கத்தியை வைத்தும், பீர்க்கன் சுருணை வைத்தும்,

எண்ணெய் தடவியும், சீயக்காய் தடவியும் உடம்பு முழுவதும் அழுக்கு எடுத்து விடுவேன்'' என்றான்.

''எவ்வளவு கேட்கிறாய்.''

''இரண்டு செப்பு காசுகள்.''

''சரி செய்.'' அவன் வேலை தெரிந்தவன், மறுபடியும் அவன் விரல்கள் விளையாடின. தன் உடம்பு தனக்கே தாமரைப் பூ போல கங்கே யாதவுக்குப் பட்டது,

''நல்ல உணவு எங்கு கிடைக்கும் சொல்.''

''என் வீட்டிலேயே கிடைக்கும். என் தாயே செய்கிறாள்.''

''அப்படியா, உங்களுக்கு என்ன தொழில்.''

''நாங்கள் வேளாளர்கள். விவசாயம் செய்து கொண்டிருந் தோம். விவசாயத்தில் காசு பார்க்க மூன்று மாதம் ஆகும். நல்ல படியாக பயிர் வரவேண்டும். விவசாயத்தை விட சமையல் வேலை நன்றாக இருக்கிறது. அது நன்றாகப் போகிறது.''

''உன் தந்தை என்ன செய்கிறார்.''

''வண்டி மாடுகள் ஓட்டுகிறார். எங்களிடம் மூன்று வண்டி கள் இருக்கின்றன. என் தமையன் ஒரு வண்டியையும், கூலிக்கு ஒரு ஆள் வைத்து ஒரு வண்டியையும் ஓட்டுகிறோம். மயிலை யிலிருந்தும் திருவான்மியூரிலிருந்தும் கடல்மல்லை துறை முகத்திற்கு பித்தளை பாத்திரங்கள், மரச்சாமான்கள், இரும்பு கம்பிகள், ஏர் கொழுக்கள் போகின்றன. கத்தி, ஈட்டி போன்ற ஆயுதங்கள் தவிர, மற்ற எல்லா இரும்பு விஷயங்களையும் மயிலையில் செய்கிறார்கள். அவைகளுக்கு கங்கை கொண்ட சோழபுரத்திலும், குடந்தையிலும், தஞ்சையிலும், நாகையிலும் நல்ல வரவேற்பு இருக்கிறது. ஆணிகள் மட்டுமே பல கூடை கள் போகின்றன. ஆணிகள் என்றால் மெல்லியவை எல்லாம் உள்ளங்கை நீளம். நாவாய்க்கு பயன்படும். அதேபோல இரும்புப் பட்டைகளும் கேட்கிறார்கள். அதுவும் போகும்.''

''உங்கள் இல்லத்தில் அவ்வளவுதானா,''

''இல்லை, என் தந்தைக்கு மொத்தமும் ஆறு பேர். நான் என் தமையன், என் தம்பி. இரண்டு அக்காள், ஒரு தங்கை.''

''மற்றவர் என்ன செய்கிறார்கள்.''

''அக்காள்கள் இரண்டு பேரும் அம்மாவிற்கு துணையாக சமைக்கிறார்கள். ஒரு அக்காள் திருமணம் ஆகிவிட்டது. நேர் எதிரே நிலத்தில் கற்சுவர் எழுப்பி மேலே கூரை பேட்டு அங்கு ஒரு உணவு கூடம் அக்காள் தன் கணவரோடு நடத்துகிறாள். போட்டி கடையா என்று கேட்டார்கள். ஆமாம் என்று சொல்லி விட்டோம். ஆனால் போட்டியெல்லாம் ஒன்றுமில்லை. பரஸ் பரம் பரிமாறிக் கொள்வோம். அதே இடரிக, குழம்பும் இங்கிருந்து எதிர் கடைக்கு கொண்டு போய் விற்றால் இந்த கடை குழம்பு அற்புதமாக இருக்கிறது என்று பேசுவார்கள். அப்படி பேசும்படி யாக சிலரை வைத்து தூண்டிவிடுவோம். ஆமாம் ஆமாம் என்றுகூட இடரிக உண்டார்கள்.''

''தம்பிக்கு எத்தனை வயது.''

''எனக்கு பனிரெண்டு, என் தம்பிக்கு பத்து, அவன் ஜோசியம் சொல்கிறான்.''

''என்ன''

''ஆமாம், ஜோசியம் கற்றுக் கொண்டு ஜோசியம் சொல் கிறான்.''

''பத்து வயது பையன் ஜோசியம் சொல்வதா.''

''ஆமாம். என் வீட்டிற்கே பால ஜோசியம் வீடு என்று பெயர்.''

''இதற்கு பிறகு ஒரு பையனா.''

''இல்லை, ஒரு பெண்.''

''அவளுக்கும் ஏதேனும் தொழில் உண்டா.''

''உண்டு''

''என்ன தொழிலப்பா அது. என்ன வயது,''

''ஆறு வயது.''

''என்ன செய்வாள்.''

''ஓடிப் போய் குதிரைக்கு எதிரே வழிமறித்து நிறுத்து வாள்.''

‘‘ஆமாம். வணிகர்கள் குதிரையில் வருவார்கள் அல்லவா. கை மறித்து நிறுத்துவாள். என்ன என்று கேட்டார்கள். நல்ல உணவு இருக்கிறது, உண்டுவிட்டு போங்கள். நீங்கள் வந்து தான் ஆக வேண்டும். உங்களைப் பார்த்தால் என் மாமன் போல இருக்கிறீர்கள். என் அண்ணன் போல் இருக்கிறது, என்று கெஞ்சி, கூத்தாடி அவர்களை உணவு உண்ண அழைத்து வருவாள். ‘நீங்கள் கரும்புரசம் சாப்பிட்டு இருக்கிறீர்களா, எலுமிச்சை ரசம் சாப்பிட்டு இருக்கிறீர்களா, இளநீர் பாயஸம் சாப்பிட்டு இருக்கிறீர்களா.’ என்றெல்லாம் கேட்க அவர்கள் இறங்கி வந்து விடுவார்கள். வழிபோக்கரை மறித்து உணவு உண்ண அழைத்து வருவது அவள் வேலை. ஒரு நாளைக்கு ஐம்பது பேரையாவது அழைத்து வரவேண்டும்.’’

‘‘அழைத்து வந்தால்.’’

‘‘அவளுக்கு இரண்டு செப்பு காசுகள் தரப்படும். என்னை விட அவள் பணக்காரியாக இருக்கிறாள்.’’

‘‘அடேய். இது என்னடா, கொள்ளை கும்பலாக அல்லவா இருக்கிறீர்கள்.’’

‘‘இல்லையே, கடும் உழைப்பு அல்லவா. தொண்டை நாடு கொள்ளை அடிப்பதில் ஒரு போதும் ஈடுபடாது. ஆனால் நன்றாக சம்பாதிக்கும்.’’

‘‘இதற்கு என்ன காரணம் இருக்குமென்று நினைக் கிறாய்.’’ அவனை மிகப் பெரிய மனிதனாக நினைத்து கங்கே யாதவ் கேட்டான்.

‘‘வளமாக ஒரு சோழ தேசம் அருகே இருக்கும் வரை நடுநாட்டிற்கும், தொண்டை நாட்டிற்கும் எந்த கவலையும் இல்லை. திருமுனைப்பாடி நாடும், கங்க தேசமும் கூட சோழ தேசத்தால் மிக செழிப்பாக மாறிவிட்டன. இதில் உன்னத நிலையில் இருப்பது தொண்டை நாடுதான்.’’

‘‘காரணம் என்ன.’’

‘‘கீழை சாளுக்கியத்திற்கும் சோழதேசத்திற்கும் நடுவே சரிபாதி தூரத்தில் இருப்பது நாங்கள்தான். இங்கு ஒரு மூன்று நாள் தங்கி விட்டுத்தான் போவார்கள். மயிலையின் எல்லை திருவான்மியூர். இங்கேயே தங்கத் துவங்கி விடுவார்கள்.

நெல், அரிசி விற்பவர்கள் மயிலைக்கு போய் விடுவார்கள். மயிலையில் கூட்டம் அதிகம். இங்கு கூட்டம் குறைவு. நன்கு உறங்கிவிட்டு மயிலையில் ஒரு பகல் கழித்துவிட்டு கீழை சாளுக்கியம் நோக்கி நகர்ந்து விடுவார்கள்.''

''இவ்வளவு கெட்டிக்காரனாக இருக்கிறாயே.''

''அனுபவம்தானய்யா காரணம்.''

''என்ன படித்திருக்கிறாய்.''

''தமிழ் படிக்கத் தெரியும். எழுத வராது, நன்றாக படிப்பேன். பாடல்கள் பாடுவேன்.''

''இது யார் கற்றுத் தந்தது.''

''என் வீட்டில் அத்தனை பேரும் ஒன்று சேர்ந்து பாடுவோம். காலையில் எழுந்தவுடன் பல்தேய்த்து கொல்லைப்புறம் போய் வந்து எல்லோரும் உட்கார்ந்து கொண்டு பாடுவோம்.''

''என்ன பாடுவீர்கள்.''

''கை, கால் கூப்பித் தொழீர், கடி மாமலர் தூவி நின்று
பைவாய் பாம்பு அரையார்த்த பராந்தனை
கைகாள் கூப்பித் தொழிர்.
மூக்கே நீ முரலாய் முதுகாடுரை முக்கண்ணனை
வாக்கே நோக்கிய மங்கை மணாளனை மூக்கே நீ முரலாய்
வாயே வாழ்த்து கண்டாய் பதயானை உரி போர்த்த
பேய்வாய் காட்டகத்தாரும் பிரான்தனை வாயே வாழ்தது கண்டாய்

கங்கே யாதவுக்கு பாட்டு முழுதும் பரியவில்லை. அந்தத் தமிழ் கடினமாய் இருந்தது. ஆனால் சிறுவன் குரலில் பக்தி கொஞ்சியது. உணர்ந்து பாடுவது தெரிந்தது. என்ன பாட்டு இது அப்பர் சுவாமி பாடிய அந்தகமாலை. நெடுமூச்சு யாதவுக்கு எழும்பியது. தமிழும் சோழரும் தொன்மையானவை. பெரு நாகரிகம். பையன் தொடர்ந்து பேசினான். ''ஒவ்வொரு அங்கமும் இறைவனை சேவிக்க வேண்டும் என்றுதான் பாடுவோம். உடம்பை அப்படியே சிவனுக்கு அர்ப்பணிப்போம்.''

சட்டென்று ஒரு துக்கம் கங்கே யாதவை பற்றிக் கொண்டது.

''போருக்கு யாரும் போவதில்லையோ.''

''இல்லை அய்யா, நமக்கு போர் எதற்கு நாங்கள் சைவ வேளாளர்கள். சிவனே தெய்வம் என்று இருப்பவர்கள். நாங்கள் எதற்கய்யா போருக்கு போவது. அந்தணர்கள் போருக்கு போகிறார்களா. என்னுடைய வாழ்க்கை அந்தணர் வாழ்க்கை.''

''சோழ தேசம் தோற்றுப் போயிருந்தால்.''

''அதையும் அமைதியாக ஏற்போம். சோழதேசம் தோற்றதில்லையா என்ன. பதினைந்து வருடங்களுக்கு முன்பு கூட கீழை சாளுக்கியத்தின் வழியாக படையெடுத்து மயிலைக்கு வந்து மயிலை திருவல்லிக்கேணியை நாசம் செய்தார்களே. திருவான்மியூருக்கும் வந்துவிடுவார்கள் மேலை சாளுக்கியர்கள் என்று பயந்து நாங்களெல்லாம் வண்டிஏறி கடல் மல்லைக்கு தப்பித்தோமே.''

கங்கே யாதவ் உள்ளுக்குள் சிரித்துக் கொண்டான். அவன் திட்டம் அது. அவன் ஆணை அது. அவன் செய்த விந்தை அது. அவன் பெற்ற வெற்றி அது. சந்தோஷம் பொங்கியது.

''சரி. இத்தனை பேரும் சேர்ந்து இவ்வளவு சம்பாதித்து என்ன செய்வீர்கள்.''

''இன்னும் இரண்டு பெண்களுக்கு திருமணம் செய்து கொடுக்க வேண்டுமல்லவா. திருமணம் நாங்கள்தான் நடத்த வேண்டும். எங்கள் வழக்கம். மாப்பிள்ளை வீட்டார் பெண்ணுக்கு நகைகள் போடுவார்கள். பசுக்கள் கொடுப்பார்கள். அதை வைத்துக் கொண்டு அதற்கு நேர் எதிராக அதற்கு நிறைவு செய்யும் வண்ணம் நாங்கள் சீர்செய்ய வேண்டும்.''

''உனக்கு எப்போது திருமணம்.''

''அடுத்த வருடம் இருக்கும்.''

''பெண் பார்த்து விட்டீர்களா.''

''ஆமாம். பத்து வயது. மயிலையில் வசிக்கிறாள்.''

''அவர்கள் சைவ வேளாளரா.''

''ஆமாம்.''

''என்ன தொழில்.''

''வயல் இருக்கிறது, சொந்த உபயோகத்திற்கு நெல் விளைவித்துக் கொண்டு பெரும் காய்கறி தோட்டம் வைத்து இருக்கிறார்கள். கத்திரி, புடலை, அவரை, கீரை வகைகள் பயிரிடுகிறார்கள்.''

''ஏன். நெல் நல்ல விலை அல்லவா.''

''ஆமாம். வருடம் முழுவதும் தங்கள் சாப்பாட்டு நெல் அறுவடை செய்து கொள்கிறார்கள். இவையெல்லாம் உடனடியாக பணமாக மாறும் பயிர்கள். விதைத்து ஒரு மாதத்தில் கத்தரிக்காய் எடுத்து விடலாம். உடனே காசாகும். கத்தரியை அழித்துவிட்டு அந்த இடத்தில் உடனே புடலை படர விடலாம். பூசணி படர விடலாம்.''

''காய்கறிக்கு அத்தனை பெரிய பணமா இருக்கிறது. எல்லோர் வீட்டிலும் காய்கறி விளைச்சல் செய்வார்களே,''

''அந்த காலமெல்லாம் போய்விட்டது. குறிப்பாய் சோழ தேசத்தில், நடுநாட்டில் இதையெல்லாம் செய்வதில்லை. கடல்மல்லைக்கு போய்விட்டால், போதும். அங்கிருந்து வாங்கிக் கொண்டு போக வண்டிகள் வந்துவிடும். ஒரு கத்தரிக்காய் கடை ஒரு வாரம் தாங்கும், இரண்டு நாளில் நடுநாடு போய் விடும். திருமுனைப்பாடி நாடு ஒருநாளில் போய்விடும். போர் வீரர்கள் அதிகம் இருக்கும் இடத்தில் அந்த வீடு விவசாயத்தில் ஈடுபடுவது இல்லை. கையில் காசு இருக்கிறது அல்லவா. அதனால் காசை தூக்கிப் போட்டு பொருள்களை வாங்கிக் கொள்வார்கள், சில வயல்கள் தரிசாகக் கூட கிடைக்கின்றன. அல்லது பஞ்சமர்களுக்கு குத்தகைக்கு கொடுத்துவிடுவார்கள். உழுவது என்பது சோழ தேசத்தில் வேளாளர் குழு முழுவதுமாய் ஈடுபடுவதில்லை. காசுதான் பெரிய விஷயம். என் மனைவியின் வீட்டில் அற்புதமாக பயிர் செய்கிறார்கள்.''

''ஆனால் கடுமையாக உழைப்பு வேண்டியிருக்குமல்லவா.''

''ஆமாம். பூச்சிகள் தொந்தரவுதான் அதிகம். எங்கள் வீட்டிலிருந்து வேப்பம் விதைகளை மரக்கால் மரக்காலாக வாங்கிப் போகிறார்கள்.''

''[illegible]தை பயிர் செய்கிறீர்களா.''

''இல்லை. வேப்ப மரங்கள் காட்டுப் பகுதியில் இருக் கின்றன. அவைகளை இரவு நேரம் போய் நிலவொளியில் பொறுக்கிக் கொண்டு வந்து விடுவோம். வண்டி இங்கிருந்து காலியாகத்தானே போகும். மரக்கால் மரக்காலாக கொட்டை களை அனுப்புவோம். அவர்கள் அதை உலர வைத்து பொடி செய்து அதை நீரில் ஊற வைத்து தெளிப்பார்கள். பூச்சி, புழுக்கள் அண்டாது, நிலத்திற்கு உரமாகவும் போகும்.''

''வாழ்க்கை சுகமாக இருக்கிறதென்று சொல்.''

''ஆமாம், உடையார் ஸ்ரீ இராஜேந்திர தேவர் அருளால் எங்கள் வாழ்க்கை சுகமாகத்தான் போகிறது.''

''யுத்தத்திற்கு வரும்படி கட்டாயப்படுத்தினால், கையில் வேல் கம்பை திணித்தால்,''

''வாங்கிக் கொள்ள வேண்டியதுதான். அவர்களோடு நடந்து போய்விட்டு தொலைவே நின்று ஆ,ஊ என்று கத்தி விட்டு வரவேண்டியதுதான், எங்களுக்கு குத்தி கொல்லும் எண்ணம் இல்லை. குத்துபட்டு வீழ்ந்தவர்கள் இருப்பார்கள் அல்லவா. அவர்களை தூக்கிக் கொண்டு வருவதும், எதிரி யின் படைக்கலன்களை சேர்ப்பதும், குதிரைகளை மடக்கி கொண்டு வருவதும் எங்கள் வேலையாக இருக்கும். போர் வீரர்களுக்கு அடுத்தபடியான ஒரு நிலைமையில் நாங்கள் இருப்போம்.''

கங்கே யாதவுக்கு துக்கம் பொங்கியது, தனக்கு இப்படி ஒரு வாழ்க்கை வாழ முடியவில்லையே என்ற ஏக்கம் வந்தது. இவனும் சிவன் சொத்துதான். நானும் சிவன் சொத்துதான். எங்கேயோ நாய் மாதிரி அலைந்து கொண்டிருக்கிறேனே, யாரையோ பழிவாங்க உட்கார்ந்து கொண்டிருக்கிறேனே. இந்த சிறுவன் தாமரைப் பூவைப் போல இருக்கிறான். இவன் சிறுவ னும் அல்ல. இளைஞனும் அல்ல. ஆனால் அழகாக இருக்கிறான். தன் மனைவியை பற்றி சொல்லும்போது முகத்தில் சிவப்பு படர்ந்து விடுகிறது. நான் அப்படியாரையாவது நினைத்துக் கொள்கிறேனா. யாரிடமாவது காதல் வசப்பட்டிருக்கிறேனா. சட்டென்று கங்கே யாதவுக்கு பெண் வேண்டும். போகத்தில் ஈடுபட வேண்டும் என்ற எண்ணம் வந்தது.

அது அவன் தலை விதியை மாற்றியது.

★ ★ ★

அத்யாயம்

97

தன் மகள் அம்மங்காதேவியை நோக்கி, கடல் வழியாக இராஜேந்திர சோழர் நகர்ந்தார். இராஜேந்திர சோழரின் கட்டளைக்கு இணங்க அரையன் ராஜராஜன் மயிலை வழியாக கீழைசாளுக்கியம் நோக்கி நகர்ந்தார். எசாளம் எண்ணாயிரம் போன்ற இடங்களில் தங்கிவிட்டு நடுநாடு வழியாக தொண்டை நாட்டை அடைந்தார். அருண்மொழிபட்டனின் உத்தரவுக்கு இணங்க முக்கியமான தளபதிகள் பாண்டிய தேசத்திற்கு நகர்ந்தார்கள். சேர தேசத்தில் உள்ள சோழ வீரர்களை உள்ளே அழைத்து அதற்கு பதிலாக வேறொரு படையை அருண்மொழி பட்டன் சேர தேசத்திற்கு அனுப்பினான். மதுரை வழியாக மலைகள் ஏறி அவர்கள் அனந்தபுரம்* அடைவதற்கு ஏற்பாடு செய்தான். நடு நாட்டு வீரர்கள் சோழ தேசத்தின் பாதுகாப்பிற்காக கங்கை கொண்ட சோழபுரம் நோக்கி வந்தார்கள். மீன் சுருட்டியில் ஒரு பகுதியும், குடந்தையில் ஒரு பகுதியுமாக பிரித்து நிற்க வைக்கப்பட்டார்கள். இராஜாதிராஜனும் அவன் சபையும் கங்கை கொண்ட சோழபுரத்தை சுற்றிச்சுற்றி வந்தது. கடும் யுத்தப் பயிற்சிகளை மேற்கொண்டது.

நிலவளங்கள் பெருகிவிட்டன. முன்பு இருந்ததை விட ஒரு மடங்கு அதிகமாக நிலம் சீர் செய்யப்பட்டு நன்செய் நிலங்களாக மாற்றப்பட்டு விட்டன. எனவே, மீண்டும் ஒருமுறை நிலங்களை அளவு செய்ய வேண்டும் என்று தீர்மானித்தான். அதற்காக தனியே படைகளை நியமித்தான். கணக்கு புத்தகங்களை அதிகரித்தான். புத்தகம் எழுதுவோர், அவருக்கு மேலே உள்ள தலைவர், எல்லாவற்றிக்கும் மேலாக வேலையை கண்ணும் கருத்துமாக கவனிக்க வாசுதேவ நாராயணனை தீர்மானம்

---

* திருவனந்தபுரம்

செய்யும் அறிவிப்பும் ஏற்படுத்தினான். முன்பு அளந்த நிலம் எது இப்பொழுது அளக்க வேண்டிய நிலம் எது என்று ஒரே புத்தகத்தில் எழுத வேண்டியதை சபை ஆலோசனை செய்தது. பழைய புத்தகத்தை ஓரமாக வைத்துவிட்டு புதிய புத்தகத்தை வகைப்படுத்தி அதன் மூலம் வரி வசூலிக்க வேண்டும் என்று தீர்மானம் செய்தது. அளக்க வேண்டிய நிலம் அதிகம் இருக்கிறது. வருமானம் நிறைய வருகிறது அதனால் வரியை குறைக்க வேண்டும் என்று அவன் சபை தீர்மானித்தது. நீண்ட ஆலோசனைக்கு பிறகு அதுதான் சரி என்று முடிவுக்கு வந்தது. இராஜாதி ராஜர் வரியை குறைத்துவிட்டாராமே என்று வேளாளர்கள் சந்தோஷமானார்கள். விளைச்சலும் அதிகமாகி, வரியும் குறையும் என்றால் தானியம் அதிகம் தங்கும். தானியம் தங்குமென்றால் அரிசி விலை குறையும். அரிசி விலை குறைந்தால் எருமையின் விலையும், பசுவின் விலையும் குறையும். அப்பொழுது பொன் பொருள் விலையும் குறையும். மக்களுக்கு வாழ்க்கை எளிதாக இருக்கும். முன்பு ஒரு செப்புக் காசுக்கு ஒரு மரக்கால் நெல் கிடைத்தது. இப்பொழுது ஒரு செப்பு காசுக்கு இரண்டு மரக்கால் நெல் கிடைக்கும். தலை தட்டிக் கொடுத்தால் நல்லதாகும். குவித்துக் கொடுத்தாலும் பழுதாகி விடாது.

கருமார்களும், தச்சர்களும் பல ஊர்களிலிருந்து ஒன்று சேர்த்து நாகைக்கு அனுப்பப்பட்டார்கள். பாண்டிய தேசத்தில் உள்ள கருமார்கள் கொற்கைக்கு பயணப்பட்டார்கள். சேர தேசத்தில் உள்ள மிகச் சிறந்த மரத் தச்சர்கள் சோழ தேசம் வந்தார்கள். அவர்கள் வீடுகளுக்கு நிலப்படியும், சாளரமும், மரத்தால் சுவர் வேய்வதும், கூரை வேய்வதும் செய்பவர்கள். கட்டிலும், நாற்காலிகளும், உண்ணும் பலகையும் செய்பவர்கள். மரத்தை இழையோ இழை என்று இழைத்துவிட்டுத் தான் அவர்கள் வேலை துவங்குவார்கள். எண்ணெய் போட்டு இழைத்து மரத்தை சலவைக்கல் போல ஆக்குவார்கள். எந்த பலகையில் உட்கார்ந்தால் என்ன என்று சோழதேசம் இருக்க வில்லை. கேரளத்து இழைப்பு கேரளத்து இழைப்பு என்று புதிய விஷயத்தை கொண்டாடி வாங்கிக் கொண்டது. சோழதேசம் எப்பொழுதுமே அகம்பாவமாய், அலட்டலாய் இருக்கின்ற

தேசம். உலகில் மிகச் சிறந்தது தனக்கு இருக்க வேண்டும் என்ற ஆசை உள்ள மக்கள்.

படைகள் இடையறாது இடதும், வலதும் நகர்ந்து கொண்டிருந்ததால் வழியில் உள்ள கிராமங்களெல்லாம் செழிப்பாயின. 'பசிக்கிறது சோறு போடு,' மறவர்கள் பத்து குடிசைகள் இருக்கும் இடத்தில் உட்கார்ந்து கொண்டார்கள். ஒரு பொன் கொடுத்து ஒரு அடுக்கு சோறு வாங்கிக்கொண்டார்கள். மாமிசம் வாங்கி பருப்பு போட்டு அவர்களே குழம்பு செய்து கொண்டார்கள். மிளகை பொடித்து தூவினார்கள். மிக கவனமாக உப்பிட்டார்கள். எண்ணெய்யையும் இதர பொருட்களையும் போட்டு கிளறினார்கள். சோறு குவித்து அதன் தலையை சீவி குழி ஏற்படுத்தி குழம்பிட்டு, மீனும், துவையலும் தொட்டுக் கொண்டு காரசாரமாக உண்டார்கள். 'ஹா ஹா' என்று அனத்தியபடியே எழுந்தார்கள். சிறிது நேரம் கழித்து தேன்விட்டு மோர் குடித்தார்கள். முடிவாக அதிரசம் உண்டார்கள். குழம்பு சோறு, குடிக்க தேன் மோர், கடைசியில் அதிரசம் என்று மூன்று விஷயம் இருந்ததால் தூக்கம் அற்புதமாக வந்தது. வீரர்கள் நடமாட்டத்தால் எல்லா குடிசைகளும் சோற்றுக் கடைகளாயின. வேளாளர்கள் இதை திறம்பட கையாண்டார்கள். பார்ப்பனர்களின் இடரிகவும், துவையலையும், தேன் குழலையும், வெல்லப் பணியாரத்தை விட, அரிசிபுட்டு, தேங்காய் புட்டை விட இந்த அசைவ சாப்பாடு நன்றாக இருந்தது. வெற்றிலை பாக்கிற்கு மிகப் பெரிய தேவை ஏற்பட்டது. நன்கு உண்டு, நன்கு தூங்கி பிறகு தாம்பூலம் தரித்து, குதிரை ஏறி அசைந்து அசைந்து போவது சுகமாக இருந்தது. யார், எங்கு போகிறார்கள் என்ற கேள்வி எவருக்கும் எழவில்லை. புதிதாக வந்தவர்கள் யார் என்ற கேள்வி எழவேயில்லை. எல்லோரும் வரவழைக்கப்பட்டு, நன்கு உபசரிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டனர். அதில் காசு சேர்ந்தது.

இராஜேந்திர சோழரின் உத்தரவுப்படி நாகைக்கு பொற்கொல்லர்கள் வந்தார்கள். நாகையில் பெரிய அக்கச்சாலை இருந்தது. தஞ்சை பொற்கொல்லர்கள் அதை சுற்றி பார்த்துவிட்டு தங்களுக்கு சுவர் எழுப்பி மேலே ஓடு வேய்ந்து இன்னொரு அக்கச்சாலை ஏற்படுத்திக் கொண்டார்கள். அதுவரை

வெட்ட வெளியில் நகைகளை உருக்கி தங்கப் பாளங்களாக செய்து கொண்டார்கள். அக்கச்சாலை உருவாகியதும் மிக கவனமாக தடேர் தடேர் என்று நாணயங்கள் அச்சடிக்கத் துவங்கினார்கள். குழியில் வட்டமாக தங்கம் ஊற்றி அதன் மீது முத்திரை வைத்து பட்டென்று அடித்தார்கள். தெறிக்கின்ற தங்கத் துகளை கருப்பு துணியில் வாங்கினார்கள். கட்டாந் தரையை கழுவி, அலசி தங்கத் துகளை எடுத்து மறுபடியும் உருக்கினார்கள். அக்கச்சாலையிலிருந்து நெருப்பும், புகையும் இடையறாது எழுந்தன. எதற்கு இவ்வளவு வேலை என்று ஊர்மக்கள் ஆச்சரியப்பட்டார்கள. பெரிய கடற்பயணம் இருக் கிறதல்லவா. அங்கு எது விற்று எது வாங்குவது. அரிசியா எடுத்துப் போக வேண்டும். அதற்கு தேவை இருக்குமா. தங்கம் எங்கும் சொல்லுபடியாகும். எனவேதான் நாணயங்களை கட்டிக் கொண்டு மூட்டையாகவோ, மூங்கிலிலோ அடைத்து போகிறார்கள்.

இராஜாதிராஜன் சபையில் இந்தப் படைகள் நகர்வது பற்றியும் பேச்சு வந்தது. பணம் பரவலாகி எல்லா இடங்களிலும் புழங்குவது ஒரு நல்ல விஷயம் என்று சபை மகிழ்ச்சியை தெரிவித்தது. மக்கள் எல்லோருக்கும் நல்ல உடையும், நல்ல உணவும் நிச்சயம் கிடைக்கின்றன. வேளாளர்களுக்கு மட்டு மல்ல, பஞ்சமர்கள் வாழ்க்கையை நன்கு அனுபவித்தார்கள். பஞ்சமர்களின் தெருக்கூத்து இல்லாத ஊரே இல்லை.

அருண்மொழியால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு படை நாகையை நோக்கி போயிற்று. நாகையின் எல்லையில் நின்றது. அருண்மொழிப்பட்டன் குதிரை ஏறி தன் மனைவியோடும், குழந்தைகளோடும் தஞ்சைக்கு போனான். தந்தையை விழுந்து வணங்கினான். தாய்க்கு அருகே உட்கார்ந்து கொண்டான். அருண்மொழிபட்டன் வருகையை தெரிந்து வீட்டு வாசலில் பெரும் திரளான மக்கள் கூடினார்கள். அருண்மொழிபட்டன் வாசலுக்கு வந்து படியின் உச்சியில் நின்று கையசைத்தான். ஜனங்கள் கோஷமிட்டார்கள். தலைக்கு மேலே கைதூக்கி கும்பிட்டார்கள். சிலர் காலில் விழுந்து வணங்கினார்கள். அருண்மொழிபட்டனுக்கு இருக்கும் மதிப்பை பார்த்து அவன் தாய் சந்தோஷப்பட்டாள். கிருஷ்ணன் ராமனுக்கு பெருமையாக இருந்தது.

எல்லோரும் தஞ்சை பெருவுடையார் கோவிலுக்கு போனார்கள். சுற்றி வந்து கல்வெட்டு படித்தார்கள். இன்னும் ஏதாவது கொடுக்க வேண்டுமா என்று கோவில் நிர்வாகியை கேட்க, ''இல்லை மிதமிஞ்சி இருக்கிறது. எல்லா ஊர்களிலிருந்தும் நிறைய நெல் அனுப்புகிறார்கள். இது கடவுள் காசு கடவுளுக்குண்டான பங்கு என்று அனுப்புகிறார்கள். தேவையானவற்றை மட்டும் அரிசியாக குத்தி வைத்துக் கொண்டும் மற்றவற்றை தேவரடியார்களுக்கும், வாத்தியம் செய்பவருக்கும், வீணை வாசிப்பவருக்கும், ஓதுவாருக்கும், கோவில் இசைப்பவருக்கும் கொடுத்துவிடுகிறோம். கோவில் பணியாளர்களும் பங்கிட்டு கொள்கிறார்கள். இலவசமாக கொடுக்காமல் மிக மலிவான விலைக்கு கொடுக்கிறோம். அதுவும் உடனடியாக காசு கேட்காமல் பிற்பாடு அவர்களுக்குண்டான பங்கிலிருந்து எடுத்துக் கொள்கிறோம். கோவிலை எவ்வளவு சுத்தமாக வைத்திருக்கிறார்கள். பாருங்கள். ஆறுகால பூஜையும் மிகச் சிறப்பாக நடைபெறுகிறது. ஓதுவார்கள் இடையறாது குழந்தைகளுக்கு பாடம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். தேவார, திருவாசகங்கள் மனனம் செய்விக்கப்படுகிறது. பெண் குழந்தைகள் அதிகம் வருகிறார்கள். இராஜராஜர் கோவிலை இதுவரை பார்க்காது இன்னும் அதிசயமாக பார்க்கின்ற பாண்டிய தேசத்து மங்கையர்கள் வருகையும், மக்கள் வருகையும் அதிகமாக இருக்கிறது. ஒரு குறையும் இல்லை. அருண்மொழிபட்டரே'' என்று கைகூப்பினார்கள்.

முடிக்கப்பெறாத கரணங்களை அருண்மொழிபட்டன் தடவி பார்த்தான்.

''இது செய்யக்கூடாதா.''

''குஞ்சரமல்லர் கூடாது என்று சொல்லி விட்டார். அரசர் பார்க்காத ஒரு சிற்பம் வேறு யார் பார்க்க வேண்டும் என்று சொல்லி விட்டார். அது நியாயம்தான் என்று மக்கள் சொல்லி விட்டார்கள். எனவே அப்படியே நிற்கிறது. ஓவியங்களை மட்டும் சீர்செய்துக் கொண்டிருக்கிறார்கள்.''

அருண்மொழிபட்டன் தஞ்சையிலிருந்து அமண்குடிக்கும் போகிறவழியில் விஜயம் செய்தான். அதற்கு முன்பு குடந்தை

கோவிலை சுற்றி வந்தான். குடந்தை நிர்வாகிகளை கலந்து பேசினான். அமண்குடி துர்க்கைக்கு எதிரே கண்மூடி உட்கார்ந்து கொண்டான். கோவிலுக்குள் அவன் ஆபத்துதவிகள் யாரும் யாரையும் நுழைய விடவில்லை. அவன் கிராமம் அவன் வருகைக்காக அமைதியாக காத்திருந்தது.

அபிஷேகம் செய்யப்பட்டு மிக விரைவாக அலங்காரம் செய்யப்பட்டதும் கோவில் அர்ச்சகரை வெளியே கிளம்பு என்று சொல்லி விட்டான். அர்ச்சகர் தள்ளி விட்டது போல் வெளியே வந்து உட்கார்ந்துகொண்டார்.

'தாயே, நலமாய் இருக்கிறாயா. உன் அருளால் நான் நலம். ஊர் விட்டு ஊர் கொண்டு வந்து வைத்திருக்கிறோம். இன்னமும் கோபமுண்டா. நீ கலிங்கத்து தேவி, கையடக்கமான தேவி, ஒரு அரண்மனை வாசலில் அமர்ந்திருந்த தேவி, உன்னை இங்கு அழைத்து வந்தது வருத்தமுண்டா. நன்றாக கவனித்துக் கொள்கிறார்களல்லவா. பலிகள் சரியாக நடைபெறுகின்றன அல்லவா.வேத உச்சாடனங்கள் நடைபெறுகின்றன அல்லவா. காது குளிர அமர்ந்திருக்கிறாய் அல்லவா. தாயே, இதுவரை எந்த விண்ணப்பமும் நான் உன்னிடம் செய்ததில்லை. செய்யாமல் காப்பாற்றி இருக்கிறாய். இப்பொழுது கடல் கடந்து வெகுதூரம் நான் போக வேண்டும். வேறு ஒரு தேசம். வேறு ஒரு இடம். வேறு ஒரு வாழ்க்கையை நான் காணப் போகிறேன். அங்கிருந்து பத்திரமாக என்னை கொண்டு வந்து சோழதேசத்தில் சமர்ப்பிக்க வேண்டும். நான் இங்கேயே மரணம் அடைய வேண்டும் என்று விரும்புகின்றேன். அமண்குடியில் அல்லது கங்கை கொண்ட சோழபுரத்தில் இறக்க விரும்புகின்றேன்.

கடல் வலிமை உள்ளது. அது என் மீது சீற்றம் கொள்ளாது இருக்க வேண்டும். பிரபஞ்சம் முழுதும் ஆள்பவளே எனக்கு நீ துணை வர வேண்டும். நான் வந்ததும் பெரிய மதில் சுற்று எழுப்பி, உன்னை பலரும் வந்து தரிசிக்கும்வண்ணம் பாதைகளை சீராக்குகிறேன். என் நிலத்தில் ஒரு நல்ல பகுதியை உனக்கு எழுதி வைக்கிறேன். இரண்டு போகத்திலும் பங்கு தருகிறேன். எனக்கு துணை வா தேவி.' பிரார்த்தனை செய்தான். பிறகு கண்மூடி உள்ளே ஆழ்ந்தான். பிரார்த்தனை மறந்து

போயிற்று. தன் இருப்பு புள்ளியாய் தெரிந்தது. அந்த இருப் பிலேயே கிடந்தான். அதுவும் நகர்ந்தது. தூங்குகிறேனா. இல்லை. விழித்திருக்கிறேனா. இல்லை. எங்கேனும் சாய்ந்திருக்கிறேனா. இல்லை. மேலும் இல்லாது கீழும் இல்லாது, வலதும் இல்லாது இடதும் இல்லாது எங்கேயோ ஒரு இடத்தில் கிடக்கிறேன். இதுவே நான். ஐம்பது அகவை தாண்டிவிட்டது. இனி தளரும். எது தளர்ந்தாலும் உள்ளே இருக்கின்ற இது தளராது. இது அற்புதம். அதுவாக தாண்டிவந்து தன்னை காட்டுகிறது. இதுதான் நான். அவன் அவனையே கும்பிட்டான். மெல்ல கண் விழித்தான்.

அவள் உரக்க சிரிப்பதுபோல ஒரு தோற்றம் உண்டாகியது. தோற்றம் வாய் மூடிக்கொண்ட பிறகு சப்தம் பெரிதாக எழுந்தது. மின்னலுக்கு சிறிதுநேரம் கழித்து இடி இடிப்பது போல அவள் சிரித்து முடித்ததும் சப்தம் வந்து தாக்கியது. அவள் மிகப் பெரி யவள் என்ற எண்ணம் அதனால் உண்டாயிற்று. அருண்மொழி எழுந்து கை கூப்பி, விழுந்து நமஸ்கரித்து வெளியே வந்தான். ஊர்சுற்றி பார்த்தான். வேகமாக குடந்தைக்கு கிளம்பினான்.

பழையாறை அரண்மனையில் தங்கினான். அரண்மனை யில் நிறைய வேலை இருந்தன. பின்பக்க சுவர் விரிசல் விட்டு இருந்தது. இடித்து தரைமட்டமாக்கி வேறு அஸ்திவாரம் தோண்டி, உயர்த்த வேண்டும். என்ன செலவாகும். குடந்தை நிர்வாகிகள் ஓடிவந்து கணக்கிட்டார்கள். உடனடியாக காசு வழங்கப்பட்டது. அடுத்த முறை வரும்போது மிகச் சிறந்த கட்டடம் இருக்க வேண்டுமென்று கட்டளை இடப்பட்டது. அரண்மனையின் பல்வேறு இடங்கள் உத்திரங்களும், ஓட்டுச் சரிவுகளும், பரணைகளும், சாளர கதவுகளும், வாசல் கதவு களும், துணிமணிகள் வைத்துக் கொள்கின்ற மூடி போட்ட பலகை அடுக்கும் சரி செய்து தரப்பட்டன.

அரண்மனையில் ஊழியர்கள் தவிர வேறு யாரும் இல்லை. அவ்வப்போது பலர் வந்து தங்கும் இடமாக இருக்கிறது. உற்று கவனித்தால் புதிய அரண்மனைகளை விட இங்கு வசதிகள் குறைவு. எப்படித்தான் வாழ்ந்தார்களோ என்ற கேள்வியும் எழுந்தது. ஆனால் ஒரு பெரிய தலைமுறை இங்கிருந்து தான் கிளம்பி இருக்கிறது. அவன் தூண்களையும், கதவுகளையும் தடவி கண்ணில் ஒற்றிக் கொண்டான். வாசற்படிகளில் சாய்ந்து

கொண்டான். குனிந்து வாசற்படியை தொட்டு கண்ணில் ஒற்றிக் கொண்டான். எத்தனை பேர் தாண்டிய பூமி இது. எத்தனை மன்னர்கள் வாழ்ந்த பூமி இது என்று சந்தோஷப் பட்டான். பழையாறை அரண்மனையின் கொல்லைப்புறம் வந்தான். வேல்கள் நடப்பட்டிருந்தன. அந்த வேல்களெல்லாம் எண்ணெய் பூசப்பட்டு கம்பீரமாக பூமாலைகளோடு இருந்தன. அந்த வேலுக்குரியவன் இறந்துபோனால் அந்த வேலை வேறு யாரும் உபயோகப்படுத்துவது இல்லை. அவனுடைய வேல். எனவே கொண்டு வந்து இங்கே நட்டு விடுவார்கள், ஒன்று, இரண்டு, மூன்று என்று இருபது வேல்களுக்கு இருந்தது. முன்பு சிறிதாக இருந்த ஆலமரம் பெரிதாக இருந்தது. பல விழுதுகள் விட்டிருந்தன. ஒரு அமானுஷ்யமான அமைதி அங்கு இருந்தது. அங்குள்ள திண்ணையிலும் அருண்மொழிப் பட்டன் உட்கார்ந்தான். இங்குள்ள பெரியவர்கள் என்னை ஆசிர் வதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டான். ஒரு பழுத்த ஆலிலை தலையில் வந்து உட்கார்ந்தது. எடுத்து கண்ணில் ஒற்றிக் கொண்டு இடுப்பில் சொருகிக் கொண்டான்.

குடந்தையிலிருந்து குதிரை ஏறி புகார் நோக்கி தன் னுடைய குதிரையை செலுத்தினான். வழி எங்கும் அறுவடைக் காக நெற் கதிர்கள் காத்திருந்தன. பச்சையாகவும், பழுப்பாக வும் நடவுக்கு ஏற்றபடி வளர்ந்திருந்தன. காய்கறி தோட்டங்கள் ஏராளமாக இருந்தன. மாஞ்சோலைகளும், தென்னந் தோப்பு களிலும் மக்கள் புழங்கிக் கொண்டிருந்தார்கள். நிறைய பிஞ்சு விட்டிருக்கிறதய்யா. இந்தமுறை நல்ல பழங்கள் கிடைக்கும். மக்களாக முன்வந்து சொன்னார்கள். சில இளநீர் அப்படி ஒரு தித்திப்பு இருந்தது. இரண்டு மூன்று கேட்டு வாங்கி குடித்தான். காசு வாங்க மறுத்து விட்டார்கள். திணித்து விட்டு வந்தான். அவன் வீரர்களும் காசு கொடுத்து இளநீர் அருந்தினார்கள். வழியில் பல கிராமங்களில் உணவு எடுத்துக் கொள்ளும்படி கேட்டார்கள். மயில் ஆடும் துறையில் அவர்கள் தங்க நேர்ந் தது. வணிகர்கள் அரண்மனை பலதும் இருந்தன. ஒரு வணிகர் தன் அரண்மனையை ஒழித்துக் கொடுக்க அவனும் அவன் வீரர்களும் அங்கு தங்கி உணவு உண்டு உறங்கினார்கள். எந்த கவலையும் இன்றி உறங்கினார்கள். ஒரே ஒரு வீரன் இருந்தால் போதும். மற்றபடிக்கு எந்த பதட்டமும் இல்லை

என்று தோன்றியது. ஆனால் இந்த கூட்டத்திற்கு நடுவே கங்கே யாதவ் வந்து போயிருக்கிறான். அந்த செய்தி கொஞ்சம் கவலை யாக இருக்கிறது. எப்படி தேடுவது என்று தெரியவில்லை. ஒற்றையாக யார் பயணப்பட்டாலும் இழுத்து வந்து கேள் என்று சொல்லியும் ஒற்றை ஆளாக பயணப்பட்டவர்கள் எல்லாம் தஞ்சை ஆட்களாக இருந்தார்கள். வணிகர்களாக இருந்தார்கள். 'நாங்கள் எப்பொழுதுமே குழுவாகப் போவ தில்லை. திட்டமிட வேண்டும் என்று யோசிப்பதற்காக சில சமயம் ஒற்றை ஆளாக போவதும் உண்டு. ஒரு கூட்டமாக தங்கு வோமே ஒழிய இரண்டு மூன்று பேராகவும், தனியாகவும் ஒட்டுமொத்தமாகவும் நாங்கள் விருப்பத்திற்கு ஏற்ப பயணப் படுவோம்' என்று சொல்ல, ஒற்றையாக பயணப்படுபவனை தேடுவது கைவிடப்பட்டது.

அருண்மொழிபட்டன் மயிலாடுதுறையிலிருந்து திரு வெண்காடு அடைந்தான். கோவில் அற்புதமாக பராமரிக்கப் பட்டிருந்தது. மூன்று குளங்களில் குளித்து சிவ தரிசனம் செய் தான். உயரமும், அகலமும், உக்கிரமுமாய் இருந்த வீரபத்திரரை வணங்கினான். தடித்த மாலைகளை சாத்தினான், கோவிலி லேயே உணவு உண்டு புகார் நோக்கி விரைந்தான். சக்ரவர்த்தி உடையார் இராஜேந்திரரை பார்க்கப் போகிறோம் என்ற சந்தோஷம் நெஞ்சில் ததும்பிற்று. குதிரை வேகமாக ஓடிற்று.

அரையன் ராஜராஜன் திருவான்மியூரில் வந்து இறங் கினார். நல்ல உடல் வேண்டி மருந்தீஸ்வரரை வணங்கினார். கோவிலில் அவருக்கு ஆசனம் இட்டு பெரிய வாழை இலை பரப்பி, நாலு வெஞ்சினங்களுடன் சமைத்து போட்டார்கள். கத்தரிக்காய் கறி, தேங்காய் துவையல், புடலை கூட்டு, புளி யிட்ட காராமணிச் சுண்டல், பல காய்கறிகள் போட்ட குழம்பு, எலுமிச்சை ரசம், கெட்டித் தயிர் என்று பரிமாறினார்கள். உணவு சுவையாக இருந்தது. பசிக்கு சரியாக இருந்தது. பசிக்கு ஏற்றபடி நிதானமாக, அமைதியாக ரசித்து ரசித்து உணவு உண்டார். கை அலம்பி, வாய் கொப்பளித்து தியாகராஜர் மண்டபத்தில் மெல்ல நடந்தார். இரண்டு, மூன்று ஏப்பங்கள் வந்ததும் படியில் அமர்ந்து கொண்டார்.

கங்கே யாதவுக்கு கால் பிடித்துவிட்ட இளைஞன் அவரை அணுகினான். கை கூப்பி வணக்கம் சொன்னான். காவலர்கள் தடுத்தபோது அவரையே வேண்டுகோளாக பார்த்தான். என்ன வேண்டும் என்று கேட்டார்.

''கால் விரல் சொடக்கு எடுத்துவிடுவேன். வலி இருப்பின் போய்விடும்.''

''வலி இல்லையே.''

''அப்படியானால் இன்னும் உற்சாகம் பெறும். காலுக்கு தனித்த சுறுசுறுப்பு வந்துவிடும்.''

''நரம்பு வித்தை தெரிந்தவனா.''

''அப்படி சொல்லலாம். உங்களை சிறிது நேரத்தில் தூங்க வைத்து விடுவேன்.''

''தூக்கம் வருகிறதப்பா.''

''அப்பொழுது துணி விரித்து இந்த நார் கட்டிலில் தூங்குங்கள். நான் கால் பிடித்து விடுகிறேன்.'' அவருடைய ஆபத்துதவிகள் மறித்தார்கள். அவர் விடு என்று சொன்னார், அந்த இளைஞனை சோதித்தார்கள். அருகே அவனை உட்கார வைத்தார்கள். அவர் சாய்ந்துகொள்ள அவனுடைய முதல் பிடியே எங்கு வலி இருந்ததோ அங்கு பிடிக்கப்பட்டது. உள்ளங்கையை கத்தியாக்கி அவன் தொடையை கொத்துக்கறி போல வெட்டத் துவங்கினான். ரத்தம் மேலும், கீழும் விரைவாக பாய்ந்தது. தூக்கம் கண்ணை இழுத்தது. அவர் அற்புதமாக தூங்கிப் போனார்.

மாலை நேரத்தில் கோவில் கதவுகள் திறந்து மணி ஒலிக்க எழுந்து உட்கார்ந்து கொண்டார். கோவிலை சுற்றிப் போய் காட்டாமணக்கு செடிகளூடே உட்கார்ந்துவிட்டு பிறகு குளத்தில் இறங்கி கை, கால் கழுவி துடைத்துக் கொண்டார். அந்தப் பையன் பின்னால் நின்றிருந்தான். என்ன என்று கேட்டார்.

''முதுகு அரிக்கிறதா. சொரிந்து விடட்டுமா'' என்று கேட்டான். அவன் கையில் பீர்க்கன் சுருணை இருந்தது. கங்கே யாதவுக்கு செய்த அதே சிஷ்ருஷை இவருக்கும் செய்தான். முதுகு சுத்தமாகியது. உடம்பு துடைத்துக் கொண்டு திருநீறு

இட்டுக் கொண்டார். அவனுக்கு காசு கொடு என்று கட்டளை இட்டார். ஒரு பொன் கழஞ்சு என்று சைகை செய்தார். அவன் திகைத்தான். வாங்க மாட்டேன் என்றான்.

''ஏனப்பா. இன்னும் வேண்டுமா.''

''இல்லை. இல்லை. இது மிக அதிகம்.''

''எவ்வளவு வாங்குவாய்.''

''மூன்று செப்பு காசுகள் போதும். முன் தினம் வந்த வணிகர் மூன்று காசுகள் தானாகக் கொடுத்தார். இரண்டு கொடுத்தால்கூட இதை செய்து விடுவேன்.''

''என்னிடம் ஏன் வாங்க மாட்டேன் என்கிறாய்.''

''நீங்கள் அரையன் ராஜராஜன், அரசருக்கு ஒப்பானவர். உங்களிடம் காசு வாங்கலாமா. உங்களுக்கெல்லாம் ஊழியம் செய்ய கொடுத்து வைத்திருக்க வேண்டும்.'' சந்தோஷமாகச் சொன்னான். பல் தெரிய சிரித்தான்.

''வணிகர்கள் என்ன சொல்கிறார்கள்.'' அவர் எந்த நோக்கமும் இல்லாமல் பொதுவாக விசாரித்தார்.

''தொண்டை நாடு அவ்வளவு செழிப்பாகிவிட்டதா என்று சொன்னார்.''

''ஏன் தொண்டைநாடு செழிப்பாவதற்கு என்ன தடை. எதை வைத்து கேட்டார்.''

''என் வீடு பற்றி விசாரித்தார். என் வீட்டில் எல்லோரும் உழைக்கிறோம். எல்லோரும் சம்பாதிக்கிறோம் என்று சொன்னதற்கு ஆச்சரியப்பட்டார்.''

''யார் அவர், சோழ தேசத்தவரா.''

''இல்லை, சோழ தேசத்தவர் போல் அவர் பேச்சு இல்லை.''

''பாண்டியனா.''

''இருக்கக்கூடும். ஆனால் பாண்டியர்கள் இன்னும் உரக்க பேசுவார்கள். இவர் மிருதுவாக பேசுகிறார்.''

''எந்த நாடு என்று விசாரித்தாயா.''

''நடு நாடு என்று நானாக நினைத்து அமைதியாக இருந்தேன்.''

''எதை வைத்து நடுநாடு என்று உத்தேசித்தாய்.''

''மிக திடமாக இருந்தார். தனியாக பயணப்பட்டிருந்தார். நடு நாடு வீரர்கள்தான் தனியாக பயணப்படுவார்கள்.''

''முணுமுணுப்பாக பேசினாரா. நடுநாடு கத்துமே. எவருக்கும் முணுமுணுப்பாக பேசத் தெரியாதே.''

''அவரிடம் வேறு ஒரு விஷயம் இருந்தது.''

''என்ன''

''அவர் மார்பில் ஒரு வெள்ளி பெட்டி வைத்திருந்தார். அவர் தூங்கும்போது நான் திறந்து பார்த்தேன். காசு வைக்கும் பெட்டியோ என்று நினைத்தேன். இல்லை. அதில் சிவலிங்கம் இருந்தது.''

''யாரடா அது. மார்பில் சிவலிங்கம் தரிப்பது. சாளுக்கியர்கள் அல்லவா தரிப்பார்கள்.''

''ஆமாம். ஆமாம். இப்பொழுதுதான் எனக்கு அந்தப் பெயர் நினைவுக்கு வருகிறது. அப்படித்தான் அவர் இருந்தார்.''

''சாளுக்கியர் என்று எதை வைத்து சொல்கிறாய். மார்பு பெட்டியை வைத்தா.''

''இல்லை. சாளுக்கியர்கள் மார்பில் பெட்டி வைத்திருப்பார்கள் என்று எனக்கு தெரியாது.''

''புரிகிறது. என்ன மொழியாய் அவர் பேச்சு இருந்தது.''

''எனக்குத் தமிழ் தவிர வேறெதும் தெரியாது. அதனால் பதில் சொல்ல முடியவில்லை.''

யார் இங்கு தனியாக பயணப்படுவது. சட்டென்று அவர் மனம் நின்றது. ''எந்த இடத்தில் படுத்தார்.'' அவர் அந்த இடத்தை ஆராய்ந்தார்.

''என்ன தேடுகிறீர்கள்.''

''அந்த ஆள் ஏதேனும் விட்டுச் சென்றாரா. இருக்குமா என்று தேடுகிறேன்.''

''தரையில்தான் படுத்திருந்தார். எதுவும் விட்டுச் சொல்லவில்லை. ஆனால் அவர் காழகத்தை எனக்கு போர்த்தினார்.''

''எடு.''

''வீட்டில் இருக்கிறது.''

''எடுத்து வா.'' அவன் மின்னலென பறந்தான். அவர் குதிரை ஏறும்போது அந்த துணியை கொண்டு வந்து கொடுத்தான். அது தஞ்சை நெசவோ, தொண்டை நாட்டு நெசவோ அல்ல, கலிங்கத்துத்துணி. கலிங்கத்துக்கரை.

ஆனால் இந்த காழகம் எங்கு கிடைக்கிறது. இதை வைத்துக் கொண்டு என்ன முடிவு செய்வது. அந்த காழகத்தின் ஓரம் மஞ்சள் நிறமாக இருந்தது. அதை முகர்ந்து பார்த்த போது சந்தன வாசனை அடித்தது. சந்தனத்தை குழைத்து துணியில் அந்த இடத்தில் வைத்து நீரை வடிகட்டி கெட்டியான சந்தனத்தை உடம்பு முழுவதும் தடவிக் கொள்வார்கள். நெற்றியில் நாம கீற்றாக வைத்துக்கொள்வார்கள். அது யாதவர்களின் வழக்கம். விபூதியோ, திருமண்ணோ அல்ல. கிருஷ்ணரின் வம்சம் அல்லவா. சந்தனம் நாமமாக இருக்கும். அவர் மெல்லியதாக பதறினார். ஆனாலும் இது போதாது. துணியை தான் வைத்துக் கொண்டார். அவனுக்கு மூன்று செப்பு காசுகள் கொடுக்கும்படி கட்டளையிட்டார். அவன் செப்பு காசுகளை வாங்கிக் கொண்டான். அவன் தலையை தடவினார். ''தீர்காயுஷ்மான் பவ'' என்று வாழ்த்தினார்.

கோவில் வாசலில் அவருக்கு புகாரிலிருந்து ஒரு செய்தி வந்தது. மயிலைக்கு இரண்டு நாட்களில் இராஜேந்திரசோழர் கடல் மார்க்கமாக வந்து இறங்குவார். அம்மங்காவை சந்திப்பார். அப்போது அரையன் ராஜராஜனும் சந்திக்கலாம் என்று இருந்தது.

அடாடா, சக்ரவர்த்தி வருகிறாரா. அம்மங்காதேவி, இராஜ நரேந்திரன், நான் என்று சகலரும் ஒன்று கூடுகிறோமா. அதனால் கங்கே யாதவ் மயிலைக்கு பயணப்பட்டிருக்கிறானோ. தெரிந்து வந்திருப்பானோ. தனியாக வந்திருக்கிறானோ. படை இல்லாத தனியாக வருவானேன். மயிலை அவனுக்கு எளிதான இடம் அல்லவா. அங்கிருந்து கீழை சாளுக்கியம் போய் அரை நாளில் மேலை சாளுக்கியம் நுழைந்து விடுவானே. என்ன செய்வான். எதற்கு வந்திருக்கிறான். அவர் தன் படைகளோடு மயிலை திருவல்லிக்கேணி கிராமங்களுக்கு பறந்தார்.

மயிலை கூட்டம் தாளாது தவித்துக் கிடந்தது. இந்த கூட்டத்தில் கங்கே யாதவை எங்கே தேடுவது. அரையன் ராஜராஜனுக்கு கவலை வந்தது.

காற்றில் சில்லிப்பு ஏறியது. சீராளனுக்கு உடம்பு குளிர்ந்தது. விழிப்பு ஏற்பட்டவுடன் அவன் கண்விழித்து இருட்டை ஒருமுறை பார்த்துவிட்டு கண்கள் மூடிக்கொண்டான். உடம்பு தூங்குவதை மனம் வேடிக்கை பார்த்தது. மெல்ல மெல்ல தன் வசம் இழப்பதை கவனித்தது. அவன் தூங்குவதை வேடிக்கை பார்த்துக் கொண்டே விழித்தெழுந்தான். அந்த தூக்கத்தில் அவனுக்கு ஒரு கனவு வந்தது. ஒரு பெரிய பாம்பு தொண்டை நாட்டுக்குள்ளே ஊர்ந்து வந்தது. ஜனங்கள் அலறி அடித்துக் கொண்டு நாலாபுறமும் போனார்கள். அந்த பாம்பு மிக பிரம் மாண்டமானதாய் மாறிற்று. அவன் மனைவி ஓடி வந்தாள். அவனை நோக்கி போய் விடுங்கள் என்று கத்தினாள். அவன் அவளுக்காக கை நீட்ட, அவள் கை பிடிக்கும் நேரத்தில் அந்த பாம்பு ஓங்கி அ்வன் மனைவியை கொத்தியது. அவன் மனைவி நிறம் மாறிப் போனாள். கருப்பாகி போனாள். தணலானாள். சாம்பலானாள். அவன் அந்த பாம்பை கொல்வதற்காக ஓடினான். பல அம்புகள் அந்த பாம்பை குத்தி கொன்றன. அவன் தன் மனைவியை தேடினான். அவள் இடத்தில் ஒரு நடுகல் மட்டுமே இருந்தது. அவன் மூச்சு திணறி விம்மத் துவங்கினான். விழிப்பு வந்து விட்டது. என்ன இது. என்ன கனவு இது, என்ன பாம்பு மயிலைக்குள் நுழைகிறது. அவன் அவஸ்தை பட்டான். ஏதோ ஒரு கனவு விடு. மனம் சமாதானம் செய்தது. இல்லை. இது ஏதோ ஒரு செய்தி. யாரோ தவறானவர் மயிலைக்குள் நுழைந்து விட்டார்கள். அவன் தீர்மானம் செய்தான். எழுந்து உட்கார்ந்தான். பஞ்சாட்சர ஜபம் செய்யத் துவங்கினான். சாக்த உபாசகத்தின் மந்திரங்களை சொல்லத் துவங்கினான்.

அலைகடல் வீசுகின்ற ஒரு மண் மேட்டின் மீது அந்த கோவில் இருந்தது. மிக கெட்டியான அலைகளால் கரைக்க முடியாத மண் மேடு அது, அதன் மீது பாறைகளை வைத்து அடுக்கி, மதில் சுவர் உண்டாக்கி, அந்த மதில் சுவர் உள்ளே நல்ல மண்ணை கொட்டி, புல் தரை எழுப்பி அது கெட்டிப்பட்டவுடன் செங்கல்லால் ஆன சுவர் எழுப்பி, விமானம் கட்டி

உள்ளுக்குள்ளே கபாலீஸ்வரரை குடி வைத்திருந்தார்கள். பாறைச்சுவரில் அடித்த அலையானது எழும்பி தூசாக கோவில் முழுவதும் பரவியது. கோவிலின் எல்லா தூண்களிலும் உப்பு நீரின் பளபளப்பு இருந்தது. கடும் வெய்யிலிலும் அந்த இடம் குளுமையாகத்தான் இருக்கும் என்று தோன்றியது. காபாலிகர் கள் வழிபட்ட இடமாம். ஆனால் அருகே சுடுகாடு எதுவும் காணோம். சுடுகாட்டிலிருந்து உடல் உஷ்ணம் தணிக்க இங்கு காபாலிகர்கள் வந்துவிடுவார்களாம். கும்பலாய் அமர்ந்து கோஷம் செய்வார்களாம்.

கங்கே யாதவ் அந்தணனாக வேடம் போட்டிருந்தான். தடித்த பூணூலும், கரை போட்ட காழகமும், மேல் துண்டும், இறுக்கி முடிந்த குடுமியும், பட்டையாக விபூதியும், நான்கு ருத்ராட்ச மாலைகளும், தோளில், கையில் ருத்ராட்ச வளை யமும், இடுப்பில் சிவ நாமம் அச்சிடப்பட்ட தடித்த துணியும், அந்தணர்கள் அணியும் தட்சிணையாகத் தரப்படும் தங்க பாம்பு மோதிரமும் அணிந்திருந்தான்.

கருவறைக்கு அருகில் நின்று உரத்த குரலில் ருத்ரம் சொன்னான். 'தீட்சகரா, உள்ளே வாருங்களேன்.' கருவறைக்கு அழைத்தார்கள். இது வெற்றி. அந்தணன் என்று ஏற்றுக் கொண்ட வெற்றி. அவன் உள்ளே நுழைந்து சிவலிங்கத்தை தழுவிக் கொண்டான், எவரும் அறியாது அதை முத்தமிட் டான். குடத்து நீரை பொத்திக் கொண்டு கங்கை, யமுனை, காவேரி என்று எல்லா நதிகளையும் வரவழைத்து சிவலிங் கத்தின் சிரசில் கொட்டினான். அதே நீரை தலையில் தெளித்துக் கொண்டான். அதே நீரில் கையை நனைத்து திருநீற்றில் அழுத்தி பிறகு பட்டையாக அணிந்து கொண்டான். வெளியே வந்தான்.

கோவில் வாசலிலிருந்து அலை அடிக்கும் கடல் தெரிந் தது. மரக்கலங்கள் எதுவும் காணோம். சிறிய படகுகள் நகர்ந்து கொண்டிருந்தன. மறவர் கூட்டம் ஆற்றங்கரையில் குழுமி யிருந்தது. கோவில் பக்கம் காவலாளி கூட இல்லை. காபாலிகர் போல வேடம் கொண்ட சில நபர்கள் வாசலில் நின்றிருந்தார் கள். உடுக்கை அடித்து பிச்சை கேட்டார்கள். சில சமயம் அந்த பிச்சை அதிகார பிச்சையாக இருந்தது. கையில் இருந்த கம்பை

வழிமறித்து 'ம்' என்றார்கள், கம்பை ஒரு மிதி மிதித்து இடுப்பை உடைத்து விடலாமா என்று தோன்றியது. ஆனால் அந்தண னாக வேடம் இட்டதற்கு அவன் இடையூறு செய்ய விரும்ப வில்லை. பயந்ததுபோல பின் வாங்கினான். காசு கொடு என்று கேட்க, ஒரு செப்பு காசு கொடுத்தான். போகும் போது உன் இடுப்பை உடைத்துவிட்டு தானடா போவேன் என்று தீர்மானம் செய்து கொண்டான். அவன் வேடதாரி என்பது பல்வேறு விதங் களில் தெளிவாக தெரிந்தது.

இன்று முழுவதும் இங்கிருந்தபடியே கடலை கவனிப் போம். நாளை வேறு இடம் மாற்றிக் கொள்வோம். அடுத்து எங்கே தங்குவது. இன்னும் வடக்கே போய்விட வேண்டும். வெற்றிலை தோட்டங்கள் நிறைந்த கோவில் ஒன்று இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். நிறைய தோப்புகள் இருக்கின் றனவாம். பகலில் மரக்கிளைகளில் அமர்ந்துவிட்டு இரவில் கீழ் இறங்கி படுத்துக் கொள்ளலாம். இராஜேந்திரர் எங்கு வருவார் என்று தெரியவில்லை. அம்மங்கா எங்கு இருப்பாள் என்று தெரியவில்லை. இந்த பட்டிணம் புதிதாக இருக்கிறது. கிராமமாக இருந்தது சோழருடைய வெற்றிக்கு பிறகு பட்டிண மாக மாறியிருக்க வேண்டும், வணிகர் தெருவில் பெரிய கல் கட்டிடங்கள் இருக்கின்றன. மிகப் பெரிய புல்வெளி இருக்கிறது. ஆடு, மாடுகளுக்கு என்றே அங்கே புல் பயிர் செய் கிறார்கள். கவலையில் நீர் இறைத்து புல்லுக்கு ஊற்றுகிறார்கள். அதை பொழுது போக்கிற்காகவும், புண்ணியம் என்றும் செய் கிறார்கள். புற்கள் வளர்ந்தால்தானே பசுக்களின் உணவுக்கு ஏதுவாக இருக்கும்.

மயிலையில் மேலும் கூட்டம் நெரித்தது.

பத்தாயிரம் வீரர்களுடன் அரையன் ராஜராஜன் மயிலைக் குள் நுழைந்தார். வணிகர்கள் பூர்ண கும்பம் வைத்து வரவேற் றார்கள். அம்மங்காவை பற்றி விசாரித்தபோது ஊருக்கு நடுவே பெரிய மாளிகையை காட்டினார்கள். மாளிகையின் உச்சியில் சோழக் கொடி பறந்திருந்தது. அரையர் நாற்பது வீரர்களை மட்டும் அழைத்துக் கொண்டு மாளிகையை நோக்கி நகர்ந் தார். ஊர் மக்கள் சூழ்ந்து கொண்டார்கள். அவரே அரையன் என்று குழந்தைகளுக்கு சுட்டி காட்டினார்கள். வீரர்கள் முன்னே

வந்து கைகூப்பினார்கள். பெண்கள் மாளிகையின் மேல் தளத்திலிருந்தும், சாளரம் வழியாகவும், வீட்டு வாசலில் நின்றும் கைகூப்பி வரவேற்றார்கள். மலர்களை தூவினார்கள். ஒரு பத்து வயது சிறுமி ஓடிவந்து கழுத்தில் மாலை போட்டாள். மூன்று யானைகள் முன்னே வந்து பிளிறி வரவேற்றன. ஆனாலும் ஏதோ குறைவது போல் தெரிந்தது. அரையன் வருகிறான் என்றால் அந்த மடையன் இராஜராஜ நரேந்திரன் முன் வந்து வரவேற்க வேண்டாமா. நியாயத்திற்கு அம்மங்காவும் வர வேண்டுமே. என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் இவர்கள். உள்ளே ஒரு கோபம் எழுந்தது. சீறி விடலாமா என்ற எண்ணம் வந்தது. சீற வேண்டாம் கொஞ்சம் உறைக்கும்படி யாக சொல்வோம் என்ற தீர்மானத்திற்கு வந்தார்.

யார் இந்த சீராளன். அவனைப் பற்றி பெரிதாகப் பேசு கிறார்கள். அப்படி என்ன செய்து விட்டான் என்ற எண்ணமும் ஓடிற்று. அரையன் ராஜராஜனுக்கு இந்த கங்கை படையெடுப் பின் வெற்றி நிறைவு தரவில்லை. அந்த வெற்றி பலபேரால் பங்கீடு செய்யப்பட்டு விட்டது. அதற்கு காரணம் இராஜேந்திரர் என்று தோன்றியது.

நம்முடைய உண்மையான எதிரிகள் சாளுக்கியர்கள். அவர்கள்தான் தலைவலி நமக்கு, அவர்களை நாம் இன்னும் முழுதாக வெற்றி கொள்ளவில்லை. மூளியாக்கியிருக்கிறோம் அவ்வளவே என்று பேச்சோடு பேச்சாக மாமன்னர் சொன்னது நினைவுக்கு வந்தது. அது உண்மைதான் என்று கசப்பாக இருந்தது. இவனை ஜெயித்துவிட்டோம் அவனை ஜெயித்து விட்டோம் என்று பட்டியல் இட்டாலும் யார் உண்மையான தொந்தரவோ, யார் இடைவிடாது எகிறிக் கொண்டிருக்கிறார் களோ அவர்களை இதுவரை மண்டியிட வைக்க முடிய வில்லை. அவர்கள் பின்னடைந்து ஓடுவதும் முன்னேறி தாக்கு வதுமாக இருக்கிறார்கள். இன்னும் ஐந்து வருடத்திற்கு சாளுக் கியர்கள் எழுந்திருக்க முடியாது. ஆனால் ஐந்து வருடத்திற்கு பிறகு நிச்சயம் எழுந்து தாக்க வருவார்கள். கீழை சாளுக்கி யத்தின் வழியாக தொண்டை தேசத்திற்கு இப்படித்தான் நுழை வார்கள். திருவொற்றியூரும், மயிலையும், திருவான்மியூரும்

அவர்கள் வட்டம் கட்டி அடிப்பார்கள். முடிந்து போயிற்று என்று எந்த யுத்தமும் இல்லை, தற்காலிகமாக நின்றுபோயிற்று என்று தான் யுத்தத்தை சொல்ல வேண்டும். வெற்றியும் தற்காலிக மானதே.

சோழதேசம் செய்கின்ற அலப்பலை பார்த்தால் இன் னொரு யுத்தத்திற்கு இப்போதைக்கு தயாராகாது, என்றுதான் தோன்றுகிறது. அரையன் ராஜராஜன் படை சோர்வாகத்தான் இருந்தது. கிளம்பு கிளம்பு என்று கூவித்தான் இழுத்து வர முடிந்தது. இன்னும் சிறிது நாட்கள் சோழ தேசத்தில் கழிக்க வேண்டும் என்றுதான் அவர்களுக்கு ஆசை இருந்தது. திரு மயிலை, திருவல்லிக்கேணி கிராமங்கள் தாண்டி போகும் போது சோழவீரர்கள் இன்னும் துவண்டு போவார்களோ என்று பயம் இருந்தது. படையெடுக்கும் விருப்பம் இல்லாத படை யோடு போவது பெரும் கொடுமை. இத்தனை வெற்றிக்கு பிறகும் தான் ஏன் அமைதியாக இல்லை. இன்னும் ஏன் கனன்று கொண்டிருக்கிறோம். சட்டென்று அந்த கனலை அணைக் கின்ற குளிர்நீர் யாரிடம் இருக்கும். ஒரு சலிப்போடு அம்மங்கா தேவி இருக்கின்ற இடம்நோக்கி நகர்ந்தார்.

தோட்டத்தோடு கூடிய பெரிய மாளிகை அது. அம்மங்கா தேவி படியிலிருந்து வேகமாக இறங்கி ஒரு தோழியின் தோள் பிடித்துக் கொண்டு குபீர் என்று வாந்தி எடுத்தாள். கண், மூக்கு எல்லாம் நீர் வடிந்தது. அரையன் கீழ் இறங்கி நெருங்கி வர, இராஜ நரேந்திரனின் ஆபத்துதவி படைகள் அவரை சமாதானப் படுத்தின.

"அவர் உண்டாயிருக்கிறார் போலிருக்கிறது. காலையி லிருந்து இது மூன்றாவது முறை."

"அப்படியா. நிச்சயமாய் தெரிந்ததா."

"இல்லை. தாதிகள் சந்தேகப்படுகிறார்கள். இன்னும் உறுதி செய்யப்படவில்லை."

"நான் என்ன செய்வது."

"சிறிது நேரம் கூடத்தில் காத்திருங்கள். அவரை நான் அழைத்து வருகிறேன்." மரியாதையாக நடத்தினார்கள். அம்மங்கா தேவியை அப்படியே தூக்கிக்கொண்டு உள்ளே போனார்கள்.

மயிலை மருத்துவர்களும், தாதிகளும் வண்டியில் வந்து இறங்கி உள்ளே ஓடுவது தெரிந்தது.

''ஆமாம். அவர் உண்டாயிருக்கிறார் என்று நாடி சொல் கிறது.'' அருகில் இருந்த அரையன் ராஜராஜனுக்குத்தான் முதல் தகவல் சொல்லப்பட்டது. அம்மங்காதேவி படுத்திருந்த அறைக்குள் அரையன் ராஜராஜன் மெல்ல நுழைந்தார்.

''சோழ வம்சம் வளர்கிறதம்மா.'' கை கூப்பினார். இரண்டு கைகளையும் எடுத்து அவள் தலையில் வைத்து ஆசிர்வதித் தார். 'நமச்சிவாய நமச்சிவாய நமச்சிவாய' என்று உரக்கச் சொன்னார்.

''இந்த செய்தியை முதலில் நான்தான் கேள்விப்பட் டேன். எனக்கு பரம சந்தோஷம், இன்றிலிருந்து உங்களுக்கு பிள்ளைபேறு ஆகும் வரை, சுகப்பிரசவம் ஆகும்வரை நான் நமச்சிவாய மந்திரம் சொல்வேன்.''

இராஜநரேந்திரன் ஓடி வந்தான். திருவொற்றியூர் போய் இருந்ததாக சொல்லப்பட்டது. உள்ளே நுழைந்து அம்மங்காவை அணைத்துக் கொண்டான். முகம் வருடி கொடுத்தான். அரையன் இருப்பதை பார்த்து அவரிடம் குனிந்து வணக்கம் சொன் னான். அரையன் அந்த மரியாதையை ஏற்றுக்கொண்டு கைகூப் பினார்.

''முதன் முதலில் சொல்லுகிற உங்களுக்கு என் பரிசு. நீங்கள் செய்தது போல வீரச் செயலை தீரச் செயலை என் பிள்ளையும் பெற வேண்டும். உங்களால் என் மனைவி ஆசிர் வதிக்கப்பட்டிருக்கிறாள். குழந்தை ஆசிர்வதிக்கப்பட்டிருக் கிறது. அவன் சீரும், சிறப்புமாக இருப்பான். இதில் எனக்கு சந்தேகமே இல்லை. தந்தை ஆசிர்வதிப்பதும், தாத்தா ஆசிர் வதிப்பதும் மற்ற உறவினர் ஆசிர்வதிப்பதும் நடக்கத்தான் செய்யும். ஆனால் முதன் முதலில் நீங்கள் படி ஏறிவந்து இந்த செய்தியை கேட்டு என் மனைவியின் தலையில் கை வைத்து ஆசிர்வாதம் செய்தது எனக்கு சந்தோஷம். மிக நல்ல வீரரால் என் பிள்ளை தொடப்பட்டிருக்கிறான். அது எனக்கு மிகவும் சந்தோஷம். இது என் பரிசு.''

அவன் தன் பெருந்தனக்காரர்களை* வரவழைத்து விவரம் சொல்லி, உள்ளே இருந்து இரண்டு பொன் கங்கணங்களை கொண்டு வந்தான். இரண்டு கங்கணங்களையும் அவர் வலக் கையிலேயே அணிவித்தான். அந்த கங்கணங்களில் ரத்தின கற்கள் பதிக்கப்பட்டு இருந்தன.

''இது கீழைசாளுக்கியத்து நகை. என்னுடைய தந்தை யின் பொக்கிஷத்திலிருந்து எடுத்தது. இதை தடவும் போதெல் லாம் என் பிள்ளையின் ஞாபகம் வரவேண்டும். நான் உங்களை வணங்குகிறேன்.'' அவன் இப்போது விழுந்து வணங்கினான். அவர் காலை தொட்டு நெஞ்சில் வைத்துக் கொண்டான்.

சட்டென்று அரையன் ராஜராஜனுக்கு குளிர்ந்தது.

பெரிய சமுத்திரம் சோழ வம்சம். அதில் நான் ஒரு சிறு துளி. ஒரு முத்து. இதோ இந்த கங்கணத்தில் இருப்பது போல ஒரு மாணிக்க கல். பல மாணிக்க கற்கள் இந்த கங்கணத்தில் பதிக்கப்பட்டிருக்கின்றன. அதனாலேயே இந்த கங்கணம் சிறப் பாக இருக்கிறது. சோழ தேசமும் அப்படியே.

★ ★ ★

---

* பெருந்தனம்: உயர் அதிகாரிகள்.

அத்யாயம் 98

''அம்மா. சொல்லுங்கள்.'' இராஜாதிராஜன் கைகூப்பினான்.

இராஜேந்திர சோழரின் அனுக்கி பரவை நாச்சியார். அரண்மனையில் செல்வாக்கு பெற்றவர். அவனுக்கு எதிரே உள்ள அழகிய மர ஆசனத்தில் அமர்ந்திருந்தார். கைகட்டி இராஜாதிராஜனின் சபை நின்றிருந்தது.

''பெரியவர்களெல்லாம் ஏன் நிற்க வேண்டும். அவர்களும் அமரலாமே.'' அவள் ஆசனங்களை நோக்கி கை காட்டினாள்.

நீல கங்கனும், வாசுதேவ நாராயணனும் மற்றவர்களும் அமர்ந்தார்கள்.

''உன் தந்தை உடனடியாக கடற்பயணம் மேற்கொள்ள தீர்மானித்துவிட்டார் போலிருக்கிறது, சொல்லாமல் கொள்ளாமல் பூம்புகாருக்கு ஓடிப் போய்விட்டார்.''

''ஆமாம் அம்மா. என்னிடமும் சொல்லிக் கொள்ளவில்லை.''

''அது என்ன இப்படி மனிதர்களை அலட்சியம் செய்வது.''

''இல்லை அம்மா. அது மனிதர்களை அலட்சியம் செய்வது அல்ல. இங்கு அறிவித்தோம் என்றால், சிறிது நாள் இருந்து விட்டு போங்கள். இன்று போவதை விட நாளை மறுநாள் போவது நல்லது. இப்போது ஓரை சரியில்லை. அப்போது திதி சரியில்லை என்று ஏதாவது சொல்லி அவர் வேகத்தை நாம் மட்டுப்பட நினைப்போம். அவருக்கு அது பிடிக்காது. தன் வேகம் எதனாலும் குறையக்கூடாது என்ற கொள்கை உடையவர். இத்தனை தொலைவு பயணப்பட்டதே, கங்கை நோக்கி போனதே இந்த கடற் பயணத்திற்காகத்தான் என்று என்னிடம் பலமுறை பேசியிருக்கிறார். கடற்பயணத்திற்கு மிகச் சரியான

காரணம் இருக்கிறது. நமது வணிகர்களின் உள்ளங்கை சீவி ஒட்டவைத்து கட்டு போட்டு போ. சிவலிங்கத்தை கும்பிட்டுக் கொண்டே இரு. ஸ்ரீ விஜயம் வராதே என்று சொன்னதல்லவா சித்ரவதை செய்ததல்லவா. பொருள்களை கொள்ளை அடித்த தல்லவா. அந்த கூட்டத்தை அழிக்க அவர் சபதம் செய்திருக் கிறார். இத்தனை நாள் தோழமையாக இருந்துவிட்டு, இங்கு வந்து வியாபாரம் செய்யுங்கள் என்று சொல்லி விட்டு அதற் கேற்றபடி பங்கு வாங்கிக் கொண்டு சீனர்களையும் கேவலப் படுத்தி நம்மையும் கேவலப்படுத்தி ஸ்ரீ விஜயம் இந்த அட்ட காசம் செய்திருக்கிறது. சீனர்களுக்கு இந்த விஷயம் தெரிந்து சட்டென்று பின்வாங்கி விட்டார்கள். நாம் அதிகம் நம்பிவிட் டோம். கழுத்தறுத்து விட்டார்கள். பங்கு அதிகம் கேட்டிருக் கலாம். அல்லது இந்த பகுதிக்கு வராதே என்று சொல்லியிருக் கலாம். ஆனால் உள்ளே வரவிட்டு கொள்ளையடிப்பது என்பது அயோக்கியத்தனம். ஸ்ரீ விஜயத்து மக்கள் திருடர்கள், இழிவான கூட்டம்.

பதினைந்து வீரர்களோடு பத்து வணிகர்கள் ஒரு மரக் கலத்தில் பயணம் செய்வதால் மொத்த படையும் உள்ளே ஏறிக்கொண்டு அட்டகாசம் செய்கிறது. இந்த மரக்கலத்திற்கு சொந்தக்காரர் அந்த தேசத்து மன்னர் கையில் இருப்பதால் எதிர்க்க ஆளில்லை என்று நினைத்துக் கொண்டு ஆட்டம் போட்டிருக்கிறது. இதனை எதனாலேயோ சீனர்களும் தண்டிக்க வில்லை. காட்டு கூட்டம் என்று ஒதுங்கிவிட்டார்களோ அல்லது நமக்கு நஷ்டம் அதிகம் இல்லை என்று ஒதுங்கிவிட்டார்களோ தெரியவில்லை. நம்மோடு ஆவலாக பயணம் செய்த சீனர் களின் உறவு துண்டிக்கப்பட்டு விட்டது.

அம்மா, உங்களுக்கு தெரியுமா, இந்த உலகத்தில் மூன்றே மூன்று கூட்டம் தான் கடற்பயணம் மேற்கொண்டு வணிகம் செய்து செய்து கொண்டிருக்கிறது. அரபு தேசத்தில் ஒரு கூட்டம். சாங் என்கிற சீனதேசத்து வணிகர் கூட்டம். பிறகு நம்முடைய நானாதேசிகன். இதைத் தவிர மரக்கலன்களில் பொருட்கள் ஏற்றி விற்பதும், வாங்குவதும் எவரும் செய்வ தில்லை. குதிரைகள் கொண்டு வந்து கொடுத்து மயிற் தோகை யும், அகிற்பொடியும், பித்தளை பாத்திரங்களும், புத்தர் பஞ்சலோக

வார்ப்புகளும், ஏலக்காயும், கிராம்பும், சில மூலிகை பட்டை களும், மரத்திலிருந்து இறக்கப்பட்ட எண்ணெய்களும் அவர்கள் வாங்கி போகிறார்கள். அந்த குதிரைகளுக்கு ஈடாக என்ன வேண்டுமானாலும் தரலாம். அந்த குதிரைகள்தான் நம்முடைய படைபலம்.

எனவே, ஒரு தேசத்தின் அடிவேரை அறுப்பது போல இந்த வியாபாரத் தடை ஏற்படுகிறது. சீன தேசத்திலிருந்து குதிரைகள் வரவில்லையெனினும் இந்த கடற்பயணம் என்பதை தொந்தரவு செய்துவிட்டால் வேறு பக்கத்திலிருந்து வணிகர்கள் வரவே மாட்டார்கள். கடற்பயணம் செழிக்க செழிக்கத் தான் மனித நாகரீகம் வளரும். அதனால் வெகு நிச்சய மாக அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.

எனக்கு தெரியும் அம்மா. உங்கள் கோபம் அவர் கடற் பயணம் அல்ல. அவர் சொல்லாமல் போனது. ஆனால் அது ஒரு உத்வேகம் அம்மா. அது வந்துவிட்டால் படுக்க முடியாது, சோறு உண்ண முடியாது. வேறு எந்த செயலிலும் ஈடுபட முடியாது. அந்த உத்வேகத்தோடு போயிருக்கிறார். அந்த உத்வேகம் குறையாமல் இன்னும் இருக்கிறார். உங்களுக்கு என்ன வேண்டும் செய்வதற்கு நான் காத்திருக்கிறேன். ஒரு அடிமை போல செய்வதற்கு காத்திருந்து நீங்கள் எது கேட் டாலும் செய்வேன். ஆனால் தயவுசெய்து என்னால் எது இய லுமோ அதை கேளுங்கள்.''

''உன்னால் இயலாதது எதுவும் இல்லை. நான் கேட்பது நூறு படைவீரர்களை, சிற்பிகளை மரத்தச்சர்களை ஓவியம் தீட்டுபவர்களை எனக்கு கொடுத்தால் நான் இன்றே திருவாரூர் பயணப்பட்டு அந்த கோவிலை கற்றளியாக பெரிய மதிற் சுவரோடு கட்ட முயற்சிக்கப் போகிறேன். ஆரூரார் எனக்கு உதவி செய்வார். அதற்கு முன் இம்மாதிரியான சில சௌகரி யங்களையும் சோழ தேசத்து பண்டாரத்திலிருந்து சில பொற் காசுகளையும் எனக்கு தரவேண்டும். பதுமைகள் செய்ய உலோ கங்கள் வேண்டும். குறைந்த பட்சம் இரண்டு வருடமாவது ஆகுமல்லவா. அதுவரை கங்கை கொண்ட சோழபுரத்தில் நான் சோம்பி இருப்பானேன். அவர் வேலையை அவ்வளவு

உத்வேகமாக பார்க்கிற பொழுது நாம் வெறுமே உண்டு களித் திருப்பானேன். என்ற எண்ணம் தோன்றியது. அதே போல...'' பரவையார் சொல்லிவிட்டு நிறுத்தினாள்.

''அதேபோல...'' வாஞ்சையோடு தன் அன்னைக்கு நிகரான பரவையாரை கூர்ந்து நோக்கி கேட்டான்.

''பட்ட மகிஷியாரும் நினைத்திருக்கிறார். முக்கோணக் கிழானடிகளும் கோவில் பணி செய்ய ஆசைப்படுகிறார். அவர் திருவையாறு போக திட்டமிட்டுக்கிறாா. குடந்தையில் அற்புத மான பச்சை நிறத்தூண்கள். இறங்கி வெகு நாளாயிற்றாம். நுளம்பர் தேசத்துத் தூண்களாம். நல்ல வேலைப்பாடாம். நாற்பது தூண்களுக்கு மேல் இருக்கிறதாம்.

அங்கு சிறியதாக ஒரு சிவன் கோவில் எழுப்பி தனி சன்னதி வைத்து அதைச் சுற்றி நடை அமைத்து அந்த நடை மேலே இந்த தூண்களை நாட்டி மேல் தளம் அமைத்து இரா ஜேந்திரரின் வெற்றியாக அதைக் கொண்டாடப் போகிறாராம்.''

''நுளம்ப நாட்டிலிருந்து எப்போதோ ஜெயித்து கொணர்ந் தது அல்லவா.''

''ஆமாம், ஆனால் அந்த தூண்கள் வெறுமே இருக்கின் றனவே, இடித்து அங்கிருந்து ஆச்சரியமாக கொண்டு வந்த தூண்களை நாம் உபயோகப்படுத்தவே இல்லையே. அப்படி இருக்கக் கூடாது என்பது அவர் ஆசை. கோவிலிலிருந்து பறித்து கொண்டு வந்துவிட்டோம். குப்பையிலா போடுவதா. தவறல்லவா என்பது அவர் வாதம்.''

''மிகச் சரியான வாதம். அவருக்கும் நான் உதவி செய்ய தயாராக இருக்கிறேன் என்று சொல்லுங்கள். நீங்கள் சொன்னது போல சக்ரவர்த்தியார் தன்னுடைய வேலையில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போது சோழதேசம் வெறுமே இருக்கக் கூடாது. உங்களுடைய கோரிக்கை உடனடியாக நிறைவேற்றப்படும். ஆனால் நூறு வீரர்கள் போதுமா. கோவில் மிகப் பெரியது. இரவும் பகலும் காக்க வேண்டிய முக்கியத் துவம் வாய்ந்தது. நான் அறுநூறு வீரர்களை அனுப்புகிறேன். யாரை அழைத்துப் போகிறீர்கள். நித்த வினோதகப் பெருந் தச்சன் இரவியையா.''



கங்கை கொண்ட சோழப் பேரேரி. சோழ கங்கம் வறண்டிருக்கிறது. அருகில் மதகு. இதன் வழியே ஊருக்கு கால்வாய் பாசனம். மறுபுறம் கொள்ளிடம் பாசனம்.

"இல்லை."

"ஏன்"

"இரவி வேறு திட்டங்கள் வைத்திருக்கிறார்."

"அடிசக்கை எல்லோருமே கங்கை கொண்ட சோழபுரம் விட்டு நகர்வீர்களா."

"அப்படித்தான் தோன்றுகிறது."

"இரவி எங்கே போகிறார்."

"அவர் திருவொற்றியூருக்கு போக திட்டமிட்டிருக்கிறார். அங்கு வசந்த மண்டபம் அமைக்க வேண்டும். சோமாஸ்கந் தரோடு கூடிய சிவபெருமான் உமையோடு ஒரு ஐம்பொன் சிலை அமைக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறார். அரசர் ஊத்தை அடையாமல் வந்தால் இப்படி செய்வதாய் நேர்ந்து கொண்டாராம்.

"நல்ல விஷயம். நல்ல விஷயம். அது தவிர அவருக்கு இங்கிருப்பது பிடிக்காமல் போயிருக்கும்."

"ஆமாம் இராஜாதிராஜா சிறு தவறுகள் செய்து விட்டார். அது மன்னிக்க முடியாது. சோழ கங்கம் என்னும் பெரிய ஏரியை அதற்கு பிராயச்சித்தமாக வெட்டினாலும் இதுவரை அந்த கற் சிலைகளை வெறுமே போட்டிருப்பது வேதனையாக இருக் கிறது. கலிங்கத்திலிருந்து கொண்டு வந்ததும், வங்கத்தி லிருந்து வந்ததும், கீழை சாளுக்கியத்திலிருந்து எடுத்து வந்தது மான பல்வேறு கற்சிலைகள் வெறுமே மல்லாக்க கிடக்கின் றன."

"உண்மைதானம்மா. நீங்கள் சொல்வது போல் இருக்கின்ற கோவிலை சீரமைப்பதற்கே நமக்கு நேரம் போதவில்லை. புதிய சிலைகளை கொண்டு வந்திருக்க வேண்டாமோ. அருண் மொழி அவசரப்பட்டு விட்டாரோ என்பது என் கருத்து."

"அதுபற்றி எனக்கு சொல்லத் தெரியவில்லை இராஜாதி ராஜா ஆளுக்கு ஒரு சிலை எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னால் போதும். தாங்களாக மூங்கிலில் ஏணி கட்டி அழகாக அவர் கிராமங்களுக்கு எடுத்துக் கொண்டு போய் விடுவார்கள். அரசரின் வெற்றியை குறிக்கின்ற இந்த சிலைகள் நன்கு

பராமரிக்கப்படும். அரசர் புகழை இன்னும் உயர்த்தும். எந்த சிற்பியும் அதை தொடக்கூடாது என்று சொல்லிவிட்டான். என்ன செய்ய முடியும்.''

''அதை தீர்த்துக் கொள்ளலாம்மம்மா. இரவியை விட்டே நான் இதை செய்யச் சொல்கிறேன். நீங்கள் திருவாரூரை கவனி யுங்கள்.''

எவ்வளவு தரலாம் என்று அவன் வாசுதேவ நாராயணனை கேட்க, அவர் வேகமாக மனக் கணக்கு போட்டார். மிகப்பெரிய தொகையைச் சொன்னார்.

இராஜாதிராஜன் திகைத்தான்.

''அவ்வளவு வேண்டாம். இராஜாதிராஜா. அதில் பாதி போதும். மீதி என்னிடம் இருக்கின்ற நகைகளை உருக்கி காசாக அடித்து அவைகளை வைத்துக் கொண்டு செய்வேன். எனக்கு அவர் போட்ட தங்கச் சங்கிலி, கையில் போட்ட ஆறு வளை யல்கள். இடுப்பில் புடவை நெகிழாது இருக்க ஒரு குரங்கு செறி. தலையில் சந்திரப் பிரபை. சூரியப் பிரபை. போதும். ஒரு பானை நிறைய தங்க நகைகள் எனக்கு சக்ரவர்த்தியால் தரப்பட் டிருக்கின்றன. அவைகளை நான் எடுத்துப் போக வேண்டும்.''

''உங்கள் நகைகள். தாராளமாக எடுத்துப் போகலாம். ஒரு நல்ல நாள் பார்த்து நீங்கள் எப்பொழுது வேண்டுமானாலும் நகரலாம். ஆனால் உங்களுடைய இடம் இது என்பதை ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள். போய் வெற்றியோடு திரும்பி வாருங் கள்.'' அவன் எழுந்து நின்று கைகூப்பினான். புறங்காலை தொட்டு கண்களில் ஒற்றிக் கொண்டான். பரவை நெகிழ்ந்து போனாள்.

பிள்ளையிடம் அப்பனின் அசைவு அப்படியே ஒட்டி யிருந்தது. இராஜாதிராஜனுக்கு மத்திம வயது. இந்த மாதிரி வயதில்தான் அப்பொழுது இராஜேந்திரர் இருந்தார். தனியாக தேர் ஏறி திருவாரூர் வருவார். தன்னை பார்ப்பதற்கு முன்னும் பின்னும் அலைந்து முயற்சிகள் செய்வார். தனியே வீட்டின் படிஏறி வந்து பரவையின் தாயிடம் பரவையை நேசிக்கிறேன் என்று சொன்னார்.

''அய்யா. நாங்கள் தளிச்சேரி பெண்டுகள், உங்கள் ஆணைக்கு கட்டுப்படக் கூடியவர்கள். உங்களின் உத்தரவுக்கு எதிராக நாங்கள் எதுவும் செய்ய முடியாது.'' கண்ணில் நீர் பெருக அம்மை கூறினாள்.

'அப்படி அல்ல. தளிச்சேரி பெண்டு என்ற எண்ணத்தில் நான் இங்கு வரவில்லை. அவளுடைய ஆடலும் பாடலும் பேச்சும், பரிகாசமும், தமிழ் இலக்கியம் பற்றிய அறிவும், சிவ னடியார்கள் பற்றிய அவள் காதலும் என்னை பெரிதும் விரும் பின. பல்வேறு சிந்தனைகளில் உழன்று கொண்டிருக்கிற நான் சிவனடியார் பற்றிய அவள் நாடகங்களை பார்த்து மனம் நெகிழ்ந்து போகிறேன். உள்ளே லகுவாகிறேன். வாழ்க்கை மிகப் பெரியது என்பதை புரிந்து கொள்கிறேன். எனக்கு இப்படி ஒரு பெண் வேண்டும். அரசியல் ரீதியாக எனக்கு திருமணங் கள் நடந்திருக்கின்றன. இந்த தேசத்தின் உறவு தேவை என்பதை உறுதிபடுத்திக் கொள்ள அரசகுல பெண்களை மணந்திருக்கிறேன். ஆனால் காதல் திருமணம் என்று ஒன்று இப்போதுதான் என் நெஞ்சில் ஏற்படுகிறது. இரவெல்லாம் பரவையின் நினைப்பே இருக்கிறது. ஒரு உத்தரவில் உங்கள் அனைவரையும் அழைத்துப் போக முடியும் என்பது உண்மை யாயினும் அது பரவையை காயப்படுத்தும். ஒரு பெண்ணை முடமாக்கி அனுபவிப்பதில் எந்த லாபமும் இல்லை. பரவை போன்ற ஒரு மனைவி இல்லையெனில் எனக்கு பைத்தியம் பிடித்துவிடும்.''

''மனைவி என்றா சொல்கிறீர்கள்.'' பரவையின் தாய் நிதானமாகக் கேட்டாள்.

''ஆமாம், மனைவி.''

''ரகசிய உறவு என்பதெல்லாம் இல்லையா.''

''இல்லவே இல்லை. ஊர் அறிய நான் திருமணம் செய்து கொள்வேன்.''

''ஆனால் நாங்கள் தளிச்சேரி பெண்டுகள் ஆயிற்றே. எங்களுக்கு பரம்பரை என்று ஒன்று கிடையாதே.''

''அதனால் என்ன. அரசனின் நேசத்திற்கு உட்பட்டவள். இந்த ஒரு தகுதி போதாதா.'' இராஜேந்திரர் வெறுமே பேச

வில்லை. பொய் சத்தியம் செய்யவில்லை. அம்மை சரி என்று சொன்ன உடனேயே அலங்கரித்து வரச் சொன்னார். வந்ததும் தேரில் ஏறச் சொன்னார். இரண்டு பேருக்கும் நடுவே மெல்லிய உருளை கம்பத்தில் சோழர் கொடி பறக்க தேர் ஓட்டி திருவாரூர் முழுவதும் வலம் வந்தார்.

அந்தணர்கள் கைகூப்பினார்கள். அறிஞர்கள் சிரம் தாழ்த்தி வணங்கினார்கள். பொதுமக்கள் தங்கள் மேல் துண்டை மேலே விசிறி கரகோஷம் செய்தார்கள். அட இவள் நம் பரவை. திரு வாரூர் பரவை என்று கொண்டாடினார்கள். ஊருக்கு நடுவே அக்னி வளர்த்து மங்கல நாண் பூட்டி, காலில் மெட்டி அணி வித்து, கழுத்தில் தங்க நகைகள் போட்டு பரவையை பரவை நாச்சியார் என்று அழைக்கச் சொல்லி உத்தரவு போட்டு மிகப் பெரிய மரியாதையை கொடுத்தார். இது திருவாரூர் தியாகேச ரின் கருணை. அவன் அன்பு. ஒரு சொடுக்கில் அரசன் அழைத் தால் போய் நிற்க வேண்டும். குப்பை நாயாய் கிடக்க வேண் டும். ஆனால் அந்த மனிதன் அப்படி செய்யவில்லை. ஊர் அறிய மனைவி என்று உயர்த்தி வைத்தான். அனுக்கி என்ற பட்டம் கொடுத்தான். இரண்டு பேரும் சந்தித்த இடம் எது தெரியுமா என்று கேள்வி கேட்டு அந்த இடத்தில் நிற்க வைத்து, உன் உயரத்திற்கு ஒரு குத்துவிளக்கு செய்யச் சொல்லப் போகி றேன் என்று சொல்லி குத்துவிளக்கை கோவில் கருவறை யில் கொண்டு போய் வைத்தான். நெய்யும், திரியும் போட்டு எரிய வைத்தான். சந்தித்த இடத்தில் குத்துவிளக்கு கொடுத் ததாக கல்வெட்டு சாசனம் எழுதினான். எந்த தேவரடியாருக் கும் கிடைக்காத மிக உயர்வான விஷயம் இது.

விடைபெறாது போனது கூட மனதில் கிலேசமாக இல்லை. ஆனால் இந்த கடற்பயணம் மனதில் ஒரு பயத்தை கொடுக்கிறது. வயதாகிவிட்டதே. கடற் பயணம் தாங்குமா என்று கேள்வி வந்தது. ஆனால் கேட்க முடியாது. அவரவர்க்கு அவரவர் காரியம்தான் முக்கியம். நான் என்ன செய்வது என்று யோசித்தபோதுதான் அவருக்காக திருவாரூர் கோவிலை சீர் செய்யலாம் என்ற எண்ணம் வந்தது.

மிகப் பெரிய மதில் சுவர் கொண்டகோவில் அது. நந்த வனம் தாண்டி போக வேண்டும். இன்னும் ஒரு மதில்சுவர்

எழுப்பினால் என்ன. கருவறையை சீர் செய்தால் என்ன. அங்கே வசந்த மண்டபம் கட்டினால் என்ன என்றெல்லாம் தோன்ற சிற்பிகளுடன் விவாதிக்க அவர்கள் படம் வரைந்து காட்டினார்கள். இப்பொழுது இராஜாதிராஜன் மிகப்பெரிய கொடையை கொடுத்திருக்கிறான். இது போதும்.

நாள் குறித்தாள். மற்ற அரசியர்களும், உறவினர்களும், வீர இராஜேந்திரன் உட்பட அரச குடும்பத்தினரும் பொன், பொருள்களை வாரி கொடுத்தார்கள். வெண்கல கட்டைகளும், தாமிர கட்டைகளும், ஈய கட்டைகளும் தானமாக கொடுத்தார் கள்.

அன்று வாசுதேவ நாராயணன் வந்தார்.

''அம்மா நீங்கள் எடுத்துக் கொண்டிருக்கிற வேலை மிகப் பெரிய வேலை. சிற்பிகளோடும், தச்சர்களோடும் அரண்மனை வேலைக்காரர்களோடு பேசினேன். நல்ல பெருந்தனக்காரர் களைத்தான் உங்களுக்கு நிர்வாகத்திற்கு அனுப்பியிருக்கிறேன். சிறு தனக்காரர்களும் வருகிறார்கள். ஆனாலும் அரசர் வந்து சேருவதற்குள் நீங்கள் இந்தப் பணியை முடித்து விட்டால் நல்லது. ஏனெனில் அரசர் கங்கை கொண்ட சோழபுரம் வந்த பிறகு நீங்கள் அங்கே இருக்க முடியாது. இங்குதான் வந்தாக வேண்டும். நீங்கள் இங்கு வந்த பிறகு திருவாரூர் வேலை எவ்வளவு விரைவாக நடக்கும் என்பதை சொல்ல முடியாது. எனவே, ஒரு குதிரை விரைவில் யானை ஓட்டம் போல ஓடு ஓடு என்று இந்த செயலை நீங்கள் செய்து முடிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.''

அவளுக்கு அவர் பேசப் பேச அந்த வேலையின் பிரம் மாண்டம் புரிந்தது.

எல்லோரையும் விட வீரமாதேவி திகைத்துப் போனாள். ''நீயாவது புதிதாக கற்றளி எழுப்புகிறாய், அதற்கேற்றபடி கல் செதுக்கி கொள்ளலாம் அடுக்கி எழுப்பிக் கொள்ளலாம். நான் செய்ய நினைக்கும் வேலையே வேறுவிதம். எங்கோ, எதற்கோ எப்பொழுதோ செய்யப்பட்ட கற் தூண்கள். நம் அரசின் நினை வாக வைக்க வேண்டும். அளவு, மிகசரியான அளவு. அதை ஒரு இடத்திலே பொருத்த வேண்டும். இது சாதாரணமாக

கோவில் எழுப்புவதைவிட கடினமான வேலை. கல் தூண்கள் ஒரே அளவில் இல்லை. அது வேறு பிரச்சனை. தெரியாத்தன மாக ஏற்றுக்கொண்டு விட்டேனோ'' என்று புலம்பினாள்.

''நன்றாக இருக்கிறது. அவ்வளவு தொலைவு போய் வந்தாரே இவ்வளவு புலம்பியிருந்தால் செய்திருக்க முடியுமா. அவரை கொண்டாட நாம் இந்த காரியம் செய்கிறோம். எனவே எதுபற்றியும் கவலைப்பட்டது முழுமூச்சில் வேலையில் இறங் குங்கள். எவ்வளவு சீக்கிரம் போக முடியுமோ அவ்வளவு சீக்கிரம் நீங்கள் திருவையாறு போக வேண்டும்.'' பரவை துரிதப்படுத்தினாள். அரண்மனையின் அந்தப்புரம் அல்லோகலப் பட்டது.

பஞ்சவன் மாதேவியை உட்கார வைத்து விட்டார்கள்.

''எல்லோரும் போனால் கங்கை கொண்ட சோழபுரத்தை யார் கவனித்துக் கொள்வது. இருடி இங்கே'' என்று முக்கோணக் கிழானடி தீர்மானித்து விட்டாள். அரிந்தவன் மாதேவிக்கு நாகைக்கு போக வேண்டும். அவர் போய் வருவதை பார்க்க வேண்டும். அங்கேயே ஜபதபங்கள் செய்து கொண்டிருக்க வேண்டும். அவர் வருகையை எதிர்நோக்கி இருக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தது.

வடக்கு நோக்கி முக்கோணக்கிழானடி நகர, கிழக்கு நோக்கி திருவாரூருக்கு பரவை தன் படையோடு நகர கங்கை கொண்ட சோழபுரம் கொஞ்சம் வெறுமையானது. ஆனால் குடந்தையிலிருந்தும், தஞ்சையிலிருந்தும் வேறுபல ஊர்களி லிருந்தும் குறிப்பாக கீழை சாளுக்கியத்திலிருந்தும் ஜனங்கள் வந்து வேடிக்கை பார்த்துக் கொண்டு போனார்கள். ஆறேழு நாட்கள் வந்து தங்கி கோட்டையையும், கோவிலையும் பார்த்து விட்டு போனார்கள். காலம் பல்வேறு விதங்களில் பல்வேறு இடங்களில் தன் அசைவை சீராக வெளிப்படுத்திக் கொண் டிருந்தது. பகைவர்களின் பயம் இன்றி, படையெடுப்பு கவலை யின்றி சோழதேசத்து மக்கள் முழு வேகத்தில் பயிர் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். வெளியூரிலிருந்து ஆட்கள் வரும்போது உணவிட கூடுதலான ஆட்கள் தேவையாய் இருந் தது. பெரிய குதிர்கள் புதிதாக கட்டப்பட்டன. துவரையும், நிலக்கடலையும், கொண்டை கடலையும் அதிகம் கிடைத்தன.

காராமணியும் கிடைத்தது. வடகிழக்கு பருவகாற்று நின்று குளிர் குறைந்து காற்று அதிகம் அலையாமல் கனமாக இருக்கும் காலம் வந்தது. வெய்யில் தரை இறங்கியது. தரையில் ஈரமும், மேலே ஈரமும் உள்ள இடத்தில் தாவரங்கள் கிளர்ந்து வளர்ந் தன. பூக்கள் அதிகம் பூத்தன. மல்லிகையும், இருவாட்சியும், பிச்சிப்பூவும் மொட்டுவிடத் துவங்கின.

இராஜேந்திர சோழர் மகளை வழியனுப்ப வடக்கு நோக்கி பயணப்பட்டிருக்கிறார் என்ற செய்தி வந்தது. ஜனங்கள் சந்தோஷப்பட்டார்கள்.

ஆனால் திடீரென்று மரக்கலத்தில் ஒரு மாற்றம் தெரிந் தது. தூணியில் படுத்துக் கொண்டிருந்த சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜேந்திரதேவர் கீழ் இறங்கினார். மெல்லிய ஆட்டம் இருந்தது. சுவர் பிடித்து கதவு திறந்து மெல்ல வெளியே வந்தார். ஒரு மாலுமி மட்டும் சுக்கானை கவனித்துக் கொள்ள மற்ற வர்களெல்லாம் அந்த முதல் ஜாமப் பொழுதில் தூங்கிக் கொண் டிருந்தார்கள். குளிர்ந்தது. உள்ளே போய் சால்வை எடுத்து போர்த்திக் கொண்டு வெளியே வந்தார். அந்த மீகாமனை நோக்கி நடக்கத் துவங்கினார். படி ஏறினார். மரச் சத்தம் கேட்டு மீகாமன் திரும்பினான். அரசரை கண்டதும் சுக்கானை விட்டு விட்டு நீண்ட நெடுஞ்சாண்கிடையாக விழுந்து வணங் கினான். எழுந்து நின்று கைகட்டிக் கொண்டான்.

"சுக்கானை கவனி." அவர் கட்டளையிட்டார்.

"ஏதோ ஒரு மாற்றம் தெரியவில்லையா" என்று மீகாமனை கேட்டார்.

"ஆமாம் அய்யா. தெளிவாகத் தெரிகிறது."

"என்ன மாற்றம். எனக்கு கண்டுபிடிக்க முடியவில்லை."

"காற்று அடங்கி விட்டது."

"எந்த காற்று."

"வடகிழக்கு பருவகாற்று சுத்தமாக நின்று விட்டது."

"காற்று தெற்கிலிருந்து வீசுகிறதா."

"அதுவும் இல்லை."

"பிறகு"

''காற்று முன்னும், பின்னுமாய் அலைகிறது. பாய்மரம் உப்புவதும், அடங்குவதுமாய் இருக்கிறது, வெறுமே தொய்ந்து வருகிறது.''

''ஆனாலும் மரக்கலம் நன்கு நகர்ந்து கொண்டிருக்கிறதே.''

''ஆமாம் அய்யா. நீரோட்டத்தில் இறக்கி விட்டு விட்டேன். எனவே வங்க தேசம் வரை இது அழகாக போகும்.''

''நாம் எவ்வளவு விரைவாகப் போகிறோம்.'' அவன் தூர வீசப்பட்ட வெள்ளைப் பலகையை பார்த்தான்.

''பத்து காதம் வேகத்தில் போகிறோம்.''

''எப்பொழுது போய் மயிலையில் சேருவோம்.''

''நாளை முற்பகலில் போய்விடலாம். நாளை நன்கு விடிந்த பிறகு கடல்மல்லை கண்ணுக்குத் தெரியும்.'' பேச்சுக் குரல் கேட்டு வேறு சில வீரர்கள் விழித்துக் கொண்டார்கள். தள்ளாடி அருகே வந்தார்கள். கால் தொட்டு வணங்கினார்கள்.

போய் நம் நாலு பேருக்கும் மது எடுத்து வா என்று கட்டளையிட்டார்.

பழரசம் புளிக்க வைக்கப்பட்டது. மரக்குவளையில் வந்தது. பழரசம் உள்ளே இறங்குவது தகிப்பாய் தெரிந்தது. எதனாலேயோ தெற்கு நோக்கி காற்று வீச மரக்கலம் குலுங்கியது, கால்களை அகட்டி உறுதியாக வைக்க வேண்டியிருந்தது. முன்னும், பின்னும் ஒரு ஆள் உயரத்திற்கு ஆடியது, ஒரு பாய் மரம் போதும் என்று சொல்லப்பட்டது. அந்த நடுத்தண்டில் இரண்டு வீரர்களும் ஏற முன்னே இருந்த பாய்மரத்தை இராஜேந்திர சோழரே இழுத்து தடம் பார்த்து இறக்கினார். மடித்து முன்பக்கத்தூணில் கட்டினார். சுருக்கு போட்டார். அந்த மாலுமி சிரித்தார்.

''என்ன சிரிப்பு.'' மெல்லியதாக அதட்டினார்.

''வேலை கற்றுக்கொண்டு விட்டீர்களய்யா. துல்லியமாக இறக்குகிறீர்கள். சரியாக சுருக்கிடுகிறீர்கள்.''

''இல்லையெனில் சொச்ச நாட்களை எப்படியப்பா கழிப்பது.'' அவர் மறுபடியும் முன் பக்கம் வந்து நின்று கொண்டார். அவருக்கு கடல் பயணம் பிடித்திருந்தது.

உண்மையில் இந்த கடல் பயணம் ஒரு சாக்கு. அம்மங்கா தேவி ஒரு காரணம். தாரைவார்த்து கொடுத்தாகிவிட்டது. இனி அவள் பாடு. நரேந்திரன் பாடு. கீழை சாளுக்கியத்தில் மிகச் சிறந்த சோழர் படை இருக்கிறது. வடக்கே இருந்தோ, மேற்கே இருந்தோ பெரிய தொந்தரவு வராது. எல்லார் வலுவும் சிதறடிக்கப்பட்டு விட்டது. கீழை சாளுக்கியம் இப்பொழுது பத்திரமான இடம். அரையன் ராஜராஜன் அங்கு போய்விட்டால் இன்னும் வலுப்பெற்றதாகி விடும்.

மேலைசாளுக்கியத்தின் யோக்கியதை தெரியவில்லை. ஒற்றர்களை விட்டு விசாரிக்க வேண்டும். ஆனால் இந்த கடலுக்கு எப்படி செய்தி வரும். ஸ்ரீ விஜயம் போய் மீண்ட பிறகு தான் அதைப் பற்றி விசாரிக்க வேண்டும். மயிலை போய் விட்டு பிறகு புகார் திரும்பி நாகை போவதா. அல்லது கங்கை கொண்ட சோழபுரம் போய் விடைபெற்று வருவதா, அவர் தீவிரமாக யோசித்தார். போய் வருவதுதான் மரியாதை. இராஜாதி ராஜனை இன்னும் கௌரவப்படுத்த வேண்டும். தனக்குப் பிறகு அவன்தான் என்பதை எல்லா வகையினருக்கும் தெளிவு படுத்த வேண்டும். அவனுடைய சபை எப்படி இருக்கிறது என்று நாடி பிடித்து பார்க்க வேண்டும்.

இராஜாதி ராஜனை தவிர வேறு யார் அங்கு நிர்வாகம் கவனிக்க வேண்டும். முடிந்தால் சுந்தர சோழ பாண்டியனைக் கூட வரச் சொல்லலாம். எப்படி இருக்கிறது நிலைமை என்று பேசலாம். உடனே கடற்பயணம் என்ற ஆவல் இருந்தாலும் இந்த வேலையை செய்யாமல் போகக்கூடாது.

அம்மங்கையை பார்ப்பது மட்டுமல்ல. இராஜநரேந்திரனுக்கும் இது மரியாதை தரும் விஷயம். எனவே மயிலை பயணம் முக்கியமானது.

இன்னொன்று செய்யலாமா. தெற்கே கடற்பயணத்தை விட மயிலையிலிருந்து குதிரையில் கிளம்பி எசாளம், எண்ணாயிரம் வழியாக மீன்சுருட்டியை அடைந்து பிறகு கங்கை கொண்ட சோழபுரம் போகலாமா. அல்லது சற்று வளைந்து உடையார்குடிக்கு போய் அங்கே பொதுவாக நோட்டமிட்டு பிறகு புகார் வரலாமா. அல்லது புகாரே வராமல் நாகைபட்டிணம் போகலாமா, மயிலையில் எவ்வளவு நாள் தங்குவது.

கடல் அலுப்பு தீரும்வரை. ஒரு மூன்று நாள். நான்காம் நாள் கிளம்பி விட வேண்டும். அவர் வேகமாக திட்டமிட்டார்.

''இந்த சொகுசாக ஸ்ரீவிஜயம் போக முடியுமா.'' சட்டென்று அந்த மீகாமனை கேட்டார்.

''அப்போது தெற்கத்தி காற்று அய்யா. நாம் சற்று தெற்கு பக்கம் நகர்ந்து போய்விடலாம்.''

''தெற்கு பக்கமாக நகர்ந்தென்றால்.''

''இங்கிருந்து முல்லைத் தீவு. பிறகு இலங்கையின் கிழக்கு பக்கம். பிறகு இன்னும் சற்று நகர்ந்து தெற்கு பக்கம் போய் அங்கு இளைப்பாறி விட்டு பாய்மரம் விரித்தோம் என்றால் வடக்கத்தி காற்றாக இருந்தாலும் தெற்கத்தி காற்றாக இருந்தாலும் ஸ்ரீ விஜயம் நோக்கி போய்விட முடியும்.'' ஆனால் இராஜேந்திரர் எந்த முடிவுக்கும் வராமல் யோசிப்பிலேயே இருந்தார்.

விடியல் நேரம் கருங்கல் தளத்தில் அடுப்பு மூட்டி கோழி மாமிசத்தை வேக வைத்து உப்பும், மிளகும் இட்டு மண்டை போன்ற ஒரு ஈய பாத்திரத்தில் ரசமாகக் குடிக்கக் கொடுத்தார்கள்.

துணியால் பாத்திரத்தை பிடித்துக் கொண்டு சூடாக உறிஞ்சி குடித்தார். சுட்ட கோழி மாமிசத்தை கடித்து உறிஞ்சினார். விடியும் வேளையில் கடல் மல்லை கோபுரங்கள் கண்ணில் பட்டன. இரண்டு பனை உயரத்திற்கு வெய்யில் வந்த போது திருவான்மியூரில் மரக்கலத்தை நிறுத்தச் சொன்னார். படகில் ஏறி கரையை அடைந்தார். அரசர் மயிலை வருகிறார் என்று தரை வழியே செய்தி அனுப்பியிருந்ததால் மரக்கலத்தை பார்த்ததும் திருவான்மியூர் வரவேற்க தயாராய் இருந்தது.

குளித்து மருந்தீஸ்வரர் கோவிலுக்கு போய் வணங்கினார். வெளியே வந்து சுடு சோறும், குழம்பும், கத்தரிக்காய் கூட்டும், சிறிய துண்டுகளாக நறுக்கப்பட்ட மாமிசமும் கலந்து உண்டார். மோர் குடித்தார். குதிரைகள் அணிவகுத்து நின்றன. நல்ல குதிரையை அருகே கொண்டு வந்தார்கள். ஏறி அமர்ந்து கொண்டார். மயிலை நோக்கி தொண்டை தேசத்து படையோடு, கணவதியோடு சிவஸ்வாமியோடு அவர் பயணப்பட்டார்.

பெரிய தட்டை படகில் குதிரை நின்றது, அது சிறிய ஆறு. கடலில் கழிமுகம். ஆனால் ஆழம் இல்லாதது. அதைத் தாண்டி புல்வெளியில் ஏறினார். மந்தைகள் அந்த வெளியில் கூட்டம் கூட்டமாக மேய்ந்தன. பசுக்கள் உறுதியாக இருந்தன. அவரது படை விரைவாக மயிலையில் இறங்கியது. அம்மங்காதேவியின் மாளிகை அவருக்கு காட்டப்பட்டது.

முரசுகள் முழங்கின. எக்காளம் ஊதப்பட்டது. கட்டியக்காரன் அவர் புகழை கூறினான். ஜனங்கள் பெரிதாக கூடினார்கள். ஆரவாரம் செய்தார்கள். பூக்களை தூவினார்கள். திலகமிட வேண்டும் என்று தவித்தார்கள். ஆபத்துதவிகள் அவர்களை அடக்கினார்கள். இரண்டுமூன்று பெண்களையும், கிழவர் களையும் அவர் அனுமதிக்கச் சொன்னார், மரியாதைகளை ஏற்றுக் கொண்டார். அவர்களுக்கு பொற்கழஞ்சுகள் வழங்கப் பட்டன. படி ஏறினார். உள்ளேயிருந்து சர்வாலங்கார பூஷிதை யாய் அவர் மகள் துள்ளி ஓடி வந்தாள். 'என் மகளே' என்று விரித்த அவர் கைகளுக்குள் தஞ்சம் புகுந்தாள். அவர் அவளை இறுக அணைத்து நெற்றியில் முத்தமிட்டு, கன்னம் இழைத்து, முதுகு தடவி கொண்டாடினார். 'நலமா' என்று கேட்டார். அதில் பல அர்த்தங்கள் இருந்தன. அவள் தலைகுனிந்து நலம் என்று சொன்னாள்.

"ஏதேனும் விசேடம் உண்டா."

"ஆமாம் அப்பா. மாறுதல்கள் இருக்கின்றன. இன்னும் சில நாட்கள் போன பிறகுதான் உறுதியாகச் சொல்ல முடியும் என்று தாதிகள் சொல்லி விட்டார்கள்."

"சகலமும் நலமுடன் இருக்கிறதல்லவா."

"வெகுசிறப்பாக இருக்கிறதப்பா."

"உன் புருஷன் எப்படி நடந்து கொள்கிறார்." கைகட்டி, பணிவாக அவள் பதில் சொன்னதும் வாய்விட்டு சிரித்தார்.

"அதற்கு நான் காரணமா. நீ காரணமா."

"நீங்கள் காரணம் இல்லையப்பா. நான் அப்படி வைத்து இருக்கிறேன்."

"ஏன் அப்படி."

''உங்கள் பெயர் சொன்னால் கொஞ்சம் பொறாமை வருகிறது. என்னையும் சக்கரவர்த்தி என்று அழைப்பார்களா. நானும் இராஜேந்திரர் போல் ஆக முடியுமா என்ற கனவும் இருக் கிறது. கொஞ்சம் உளறலும் இருக்கிறது.''

''அடிப் பெண்ணே, இப்படியே உன் புருஷனிடம் பேசி விடாதடி.''

''இப்படி பேசவில்லை. ஆனால் மறைமுகமாக சொல்லி யிருக்கிறேன்.''

''என்னவென்று,''

''இராஜேந்திரர் போல் உங்களால் ஆக முடியாது, வீணாக பிரயத்தனப்படாதீர்கள் என்று சொல்லியிருக்கிறேன்.''

''ஏன் அப்படி சொல்கிறான்.''

''தவறு அவர் மீது இல்லையப்பா. இதையும் சொல்லி யிருக்கிறேன். தவறு அவர் தாய் மீது. அவர் வளர்ப்பு சரியில்லை. ஒரு உத்தம தலைவன் தன் வாழ்நாளில் ஆரம்பத்திலிருந்து மிகச் சரியாக, மிகத் தெளிவாக வளர்க்கப்பட வேண்டும். அந்த சூழ்நிலை அவனுக்கு ஏற்பட வேண்டும். தாய் சரியில்லை யெனினும், தந்தை சரியில்லையெனினும் அதையெல்லாம் தாண்டி யாருடைய தோளையோ பிடித்துக் கொண்டு அந்த மனிதன் ஐந்து வயதிலிருந்து வெளியே உலகம் பார்க்க வந்து விட வேண்டும். உலகம் பார்க்க சொல்லித் தர வேண்டும். இருபது வயதுவரை இவருக்கு யாரும் எதுவும் சொல்லித் தர வில்லை, தானே குதிரை ஏறவும் கற்றுக் கொண்டிருக்கிறார். நல்ல நூல்களை படிக்கவும் தானே முயற்சி செய்திருக்கிறார். மாந்தீரிகம் செய்யும் சாமியார்கள் பின்னே தாய் சொன்னதற் காக அலைந்திருக்கிறார். அறுபது பொன் கொடுத்து ஒரு சந்தன தைலம் வாங்கி அந்த சந்தனத் தைலத்தை ஒரு கோவேறு கழுத்தையில் தடவச் சொன்னாராம் ஒரு சாமியார். அப்படி தடவி இருக்கிறார். எதற்கு என்று இவர் கேட்கக் கூட இல்லை. அவர் பேசப் பேச எனக்கு கோபமும், அழுகையும் தான் வருகிறது, ஒரு பரிதாபம் எழுகிறது.

அதேசமயம் நான் சொல்லித்தருகிறேன் என்று ஆர்வ முடன் முன்வந்ததற்கு அவர் எந்த பதிலும் சொல்லவில்லை.

மனைவி சொல்லிக் கொடுத்து நான் புரிந்துகொள்கிறதா என்கிற மெல்லிய முட்டாள்தனம்தான் இருக்கிறது.''

''உன் வாழ்க்கை கஷ்டமாகி விட்டதோ. நான் தவறு செய்து விட்டேனோ,'' தழுதழுத்த குரலில் இராஜேந்திரர் பேசினார்.

''இல்லை அப்பா. என் வாழ்க்கை இப்பொழுதுதான் அர்த்தமாயிருக்கிறது, தடுமாறுகிறாரே தவிர இவர் நல்ல வித்து அப்பா. விமலாதித்தர் பற்றி நான் பலதும் கேள்விப்படுகிறேன். வஞ்சகரால் வீழ்த்தப்பட்டார். சொந்த தளபதிகளால் காட்டிக் கொடுக்கப்பட்டார். காலம் நரேந்திரனின் தந்தை விமலாதித்தரை ஏமாற்றி விட்டது. ஆனால் விமலாதித்தர் மிகச் சிறந்த அரசர் என்று மக்கள் சொல்லுகிறார்கள்.

மக்களை சந்திக்கும் போது குதிரையில் உட்காருவதில்லை, கீழ் இறங்கி வருவாராம். அருகே நின்று பேசுவாராம். வயதானர்களைக் கண்டால் அணைத்துக் கொள்வாராம். கைகளை வருடி என்ன அனுபவம் உனக்கு என்று கண்ணில் ஒற்றிக் கொள்வாராம். அந்தப் பெண்மணி இவருடைய சிற்றன்னை அவளை பற்றி விசாரித்தேன். தவறான பெண் என்கிறார்கள்.''

''என்ன தவறு.''

''இங்கு வரும்பொழுதே மேலை சாளுக்கியத்திலிருந்து ஒரு காதலனுடன் வந்திருக்கிறாள். மெய்க்காவல்படை என்று சொல்லியிருக்கிறாள். அரசன் இல்லாத நேரத்தில் அந்த மனிதரோடு படுத்திருக்கிறார். உங்கள் மருமகன் இராஜராஜ நரேந்திரனை திட்டமிட்டு அவமானப்படுத்தியிருக்கிறார். ஒரு பாடத்தை தன் மகனுக்கு பலமுறை சொல்லி கொடுத்துவிட்டு அதே பாடத்தை இவருக்கு ஒருமுறை அரையும் குறையுமாக சொல்லிக் கொடுத்துவிட்டு இரண்டு பேரையும் விமலாதித்தன் முன்பு உட்காரவைத்து கேள்வி கேட்டு, இவனுக்கு எதுவுமே தெரியவில்லை, என் பிள்ளை எப்படிபதில் சொல்கிறான் பார் என்று நாடகமாடியிருக்கிறார். விமலா தித்தருக்கு ஏதோ பொறி தட்ட அவர் தன் இளைய பிள்ளையை அழைத்து எத்தனை முறை சொல்லி கொடுத்தாள் எப்போது சொல்லிக் கொடுத்தாள் என்று கேட்க, அவன் ஆறேழு நாட்களாக

தினம் இந்த பாடம் தானே என்று சொல்லியிருக்கிறான். விமலாதித்தர் யாரையும் கண்டிக்காமல் போய்விட்டாராம். இவரை தனியே அழைத்து, உன்னுடைய நிலைமை மோச மானதற்கு நான் காரணம் அல்ல. உன் தலையெழுத்து காரணம். எப்படியாவது தப்பித்து பிழைத்துக் கொள். இராஜேந் திர சோழரை இறுக்க பிடித்துக் கொள். அவர் நினைவாகவே இரு. அவரே உனக்கு கடவுள் என்று சொல்லியிருக்கிறார். இவர் அவ்விதமே உங்கள் நினைவாகவே இருந்திருக்கிறார். ஒரு சமயம் பாவமாக இருக்கிறது. இன்னொரு சமயம் கோப மாக இருக்கிறது.''

''ஆக, பலியாடு நீ. என் மகள் அம்மங்காதேவி. இல் லையா.''

''ஏன் அலுத்துக் கொள்கிறீர்கள் அப்பா. இம்மாதிரியான விஷயங்களை நீங்கள் கையாண்டால் என்ன செய்வீர்கள். எப்படி எதிர்கொள்வீர்கள். அப்படி நானும் எதிர்கொள்வேன்.

கீழை சாளுக்கியத்தில் குழப்பம் என்றதும் எனக்கென்ன போயிற்று என்று இல்லாது உள்ளுக்குள்ளே புகுந்து சகலமும் சரிசெய்து என்னையும் அங்கு கொண்டு போய் நிறுத்தியிருக் கிறீர்களே. நம்மைவிட நமக்கு நம் தேசம் முக்கியம். நம் குடும் பத்தைவிட சோழம் முக்கியம். சோழ தேசத்திற்கு அப்பால்தான் நாம் எதைப் பற்றியும் சிந்திக்க முடியும். நீங்கள் செய்தது சரி யப்பா. சோழ தேசத்திற்காக கீழை சாளுக்கியத்தை வலுப் படுத்தியிருக்கிறீர்கள். என் வேலை என்ன என்பது எனக்கு தெரிந்துவிட்டது. என் வாழ்க்கை என்னவென்று எனக்கு தெரிந்துவிட்டது. வீரமாதேவி என்ற பெண்மணி உங்களைப் பற்றி முழுவதும் கேள்விப்பட்டு தன் வாழ்க்கை முழுவதும் உங்களுக்காக தத்தம் செய்யவில்லையா. பரவை என்ற பெண்மணி வெறுமே நடனமாடிக் கொண்டில்லாது வெறுமே தளிச்சேரி பெண்டிராக வாழ்க்கைபட்டிருக்காது ஒரு அரச னுக்கு வாழ்க்கைப்பட்டு அரச குடும்பத்தின் சுமையை சுமக்க வில்லையா. உங்களுடைய சோதனைகளை தங்களுடைய தோள்களில் தாங்கவில்லையா. உங்களுடைய அரசவையில் எவ்வளவு கம்பீரமான பெண்களை நான் பார்த்திருக்கிறேன்.

அப்பா, நான் பலியாடுயாகி விட்டேன் என்றெல்லாம் ஒருநாளும் கருதவில்லை. நீங்களும் அப்படி கருத வேண்டாம். நமக்கு பொறுப்புகள் இருக்கின்றன. சொந்த சுக, துக்கங்களை விட இந்த பொறுப்புகள் மிக முக்கியமானவை.

ஒரு குழந்தையாய் இருக்கின்ற என் புருஷனை இன்னும் கம்பீரமாக்கி காட்ட வேண்டிய கடமையும் என்னிடம் இருக்கிறது, ஏனெனில் இந்த மூன்று மாதத்தில் நான் அவரிடம் நிறைய பேசியிருக்கிறேன். நிறைய மாறுதல்கள் கொண்டு வந்திருக்கிறேன். நீங்கள் பேசிப் பார்க்கிறீர்களா.'' அவள் தாதியை விட்டு புருஷனை வரவழைக்கச் செய்தாள்.

தன் அறையில் இராஜேந்திரரை சந்திக்க தயாராய் இருந்த இராஜராஜ நரேந்திரன் துள்ளி குதித்து ஓடி வந்தான். உடைவாளை உருவி அவர் காலில் வைத்தான். கை கூப்பினான்.

''சக்ரவர்த்தி இராஜேந்திர சோழருக்கு அவர் மருமகனின் பணிவான வணக்கம். நீங்கள் சீரும், சிறப்புமாக இருக்க தினமும் கடவுளை பிரார்த்திக்கிறேன். கிழக்கு நோக்கி கடற் பயணம் துவங்கிவிட்டதாக செய்தி வர, நீங்கள் இங்கு வந்து இருப்பது பெருத்த சந்தோஷமாக இருக்கிறது. விடைபெற்று வரவில்லையே என்ற ஏக்கம் நீங்கிவிட்டது. உங்கள் கருணை அளப்பரியது. உங்கள் அன்பு பற்றி என் இனிய மனைவி நிறைய சொல்லியிருக்கிறாள். இதோ நான் நேரே பார்க்கிறேன்.

மாமா, எனக்கு ஒரு கர்வம் உண்டு, அதை நான் என் மனைவியிடம் பகிர்ந்து கொண்டேன். உனக்கு முன்னரே அதாவது, அம்மங்காவிற்கு முன்னரே எனக்கு இராஜேந்திர சோழரோடு நல்ல பழக்கம் உண்டு என்று சொன்னேன். அவள் வாய்விட்டு சிரிக்கிறாள். இது உண்மைதானே. அவள் பிறக்கும் முன்னரே நீங்கள் என்னை மடியில் எடுத்து வைத்துவிட்டீர்கள் அல்லவா. என்னை குதிரையில் ஏற்றி சுற்றினீர்கள் அல்லவா. கீழிருந்து உயரே தூக்கி யானைப் பாகனிடம் போட்டு அந்த முள்ளுமுள்ளான மத்தகத்தில் என்னை உட்கார வைத்தீர்கள் அல்லவா. ஓடுகின்ற காவிரி ஆற்றில் என்னை நீங்கள் குளிப்பாட்டியிருக்கிறீர்கள். எனக்கு உங்கள் மேல்துண்டால் தலை துவட்டி விட்டிருக்கிறீர்கள். பலதும் ஞாபகம் இருக்கிறது.

உங்களுக்கு எனது சிறிய வேண்டுகோள். என் தாயை உங்கள் தங்கை குந்தவையை நான் கங்கை கொண்ட சோழ புரத்திலேயே விட்டு விட்டு போகிறேன். அவளை தயவுசெய்து கண்ணும் கருத்துமாக பார்த்துக் கொள்ளுங்கள். அவள் மீது கோபப்படாதீர்கள். பல நிலக்கடலையில் ஒன்று மொழுக் கென்று இருந்தாலும் உள்ளே சொத்தையாக இருக்கும். அப்படி ஒரு சொத்தை நிலக்கடலையாக இவள் வடிவெடுத்துவிட் டாள். அதற்கு காரணம் இராஜராஜர் என்பது என் துணிவு அல்லது இராஜராஜர் மீது ஏற்பட்டுள்ள காதலால் உங்கள் தங்கையை நீங்கள் குறை சொல்லலாம். ஆனாலும் காரணம் என்று ஆராய்ந்தால் அது கடைசியில் மாமன்னர் இராஜ ராஜரையே போய் சேரும்.

விமலாதித்தருக்கு என் தாயை ஏமாற்றத் தெரியவில்லை. நீ மாதண்ட நாயகி என்று சொல்லி ஒரு கோல் கொடுத்திருந் தால் போதும். அதை வைத்துக் கொண்டு ஊரெல்லாம் வலம் வந்திருப்பாள். ஆடி கறக்க வேண்டிய மாட்டை ஆடி கறப்பது என்பது ஒரு நல்ல கலை. விமலாதித்தருக்கு அது தெரிய வில்லை, கடைசியில் அந்த சுழலில் சிக்கி சீரழிந்தது நானே. நான் கடவுளுக்கு நன்றி சொல்கிறேன். உங்களுக்கு மருமக னாக பிறந்ததற்கு அல்ல. எனக்கு நல்ல மனைவி கிடைத்திருக் கிறாள்.

இது அரசியல் சதுரங்கமா, அம்மங்கா அதில் நகர்த்தப் பட்ட காயா. எனக்கு தெரியாது, ஆனால் அவள் அற்புதமான மனைவி, விடியல் வேளையை நான் பார்த்ததே இல்லை. ஏனெனில் என் தாய் எழுந்திருந்ததே இல்லை, இப்பொழுது விடியும் முன்னரே எழுந்து விடுகிறேன். நாங்கள் இருவரும் யோகாசனம் செய்கிறோம். கீழை சாளுக்கியம் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். வெகு நிச்சயமாக அதை சீரும் சிறப்பு மாக ஆட்சி செய்வேன். உதவி வேண்டுமெனில் வெட்கமின்றி கேட்பேன்.

சோழ தேசத்திற்கு எதனால் எவ்விதம் கீழை சாளுக்கியம் முக்கியம் என்று எனக்குத் தெரியும். அந்த இடத்தில் உறுதியான மன்னனாக நான் இருப்பேன்.'' அவன் கை உயர்த்தி புஜம் காட்டினான்.

முக்காலியின் மீது பழரச கோப்பை வைக்கப்பட்டிருந்தது. சற்றுமுன் நசுக்கிய மாதுளம் பழத்தின் சாறு அங்கிருந்தது. மேல் துணியை வீசி மெல்ல ஒரு காலை சுற்றினார். நிமிர்ந்து தன் மகளை பார்த்தார். வெடுக்கென்று இழுத்தார். குவளை கீழே சாய்ந்து மாதுளம் கொட்டியது. மிகச் சாதாரணமாக துணியை தோளில் போட்டுக் கொண்டார். அவன் பதறி எழுந்தான். முக்காலியை நிமிர்த்தி வைத்தான். அவள் எழுந்து நின்று இரண்டு கைகளையும் தட்டி 'யாரெங்கே' என்று அதட்டினாள். அவனை உற்றுப் பார்த்தாள். அவனுக்கு புரிந்தது. இதை நான் செய்யக்கூடாது. நான் அரசன். பதறி அடித்துக் கொண்டு வேலையாட்களும், தாதிகளும் வந்தார்கள். அந்த இடம் வெகு சீக்கிரம் சுத்தம் செய்யப்பட்டது.

அவர் நிமிர்ந்து தன் மகளை பார்த்தார். போதவில்லை. பயிற்சியில்லை. இன்னும் வளர வேண்டும் என்னும் பல குறிப்புகள் அந்த கண் வழியே போயின. அவள் கண்கள் தடுமாறின. தலை குனிந்து கொண்டாள். நிமிர்ந்து பெருமூச்சு விட்டாள். உதறி எழுந்தாள். நான் செய்வேன். நான் மாற்றுவேன். என்னால் முடியும் ஏன்ற கம்பீரம் அதில் இருந்தது.

அந்த தகப்பன் மெல்ல எழுந்தார். தன்னுடைய குழந்தையை நெருங்கி மெல்ல அவள் முகத்தை தன்னுடைய மார்பில் வைத்துக் கொண்டார். தலையை தடவினார். நெற்றியில் முத்தமிட்டார். மெல்ல விலகி படி இறங்கிப் போனார். ''மாலை சந்திக்கலாம்'' என்று சொல்லி விட்டு நகர்ந்தார்,

''நான் ஏதேனும் தவறு செய்துவிட்டேனா அரசி.'' அடிக் குரலில் சன்னமாக அம்மங்காதேவியை நோக்கி இராஜராஜ நரேந்திரன் கேட்டான்.

''இல்லை, அரசே, ஒரு தவறும் செய்யவில்லை. மிக அழகாக பேசினீர்கள். மிகக் கம்பீரமாக பேசினீர்கள்.'' அவன் கைகளை பற்றிக் கொண்டாள். அவன் நெருங்கி அவள் இடுப்பில் தன் கைகளை கோர்த்துக் கொண்டான். இருவரும் தொலைவே நிதானமாக நடந்துபோகும் இராஜேந்திரரை கனிவோடு பார்த்தார்கள்.

மத்தியான வெளிச்சம் வெளியே தெரிய நிழலுருவாய் இராஜேந்திரர் நடந்து போய் வலப்பக்கம் திரும்பி குதிரையில் ஏறிக் கொள்வது உணரப்பட்டது.

பெண்ணை பெற்றெடுத்து திருமணம் செய்து புகுந்த வீட்டுக்கு அனுப்புவது பெரிய வேதனை. அந்த வேதனை புருஷன் சீராக இருந்தால் மறைந்து போகும். ஆனால் போது மான திறமை இல்லாத புருஷனுக்கு வாழ்க்கைப்பட்ட மகளை பற்றி நினைப்பது கூடுதலான வேதனையைத் தரும். ஒரு ஓரத்தில் இடையறாது இடையறாது அம்மங்கா அம்மங்கா என்று அலறும்.

அம்மங்காவை இந்த திருமணத்திற்கு கட்டாயப்படுத்தாது இருந்தால் இவள் நிச்சயம் அழகும், அறிவும், திறனும் நிறைந்த ஒரு ஆண்மகனை தேர்ந்தெடுத்திருப்பாள். சேர தேசத்து இளவரசன் பற்றி சோழ கேரளன் மூலமாக இரண்டு முறை செய்தி வந்தது. அம்மங்கைக்கும் போயிற்று. படங்கள் பரிமாறப் பட்டன. சோழ கேரளன் இறந்ததால் அது அப்படியே நின்று போயிற்று. விதி அம்மங்கையை வடகிழக்கு நோக்கி தள்ளி யது. இனி எதுவும் செய்ய இயலாது, அவர் குதிரை மயிலையை வலம் வந்தது, கோவில் நோக்கி போயிற்று, ஒரு தகப்பனின் மகள் பற்றிய கவலை எளிதில் மறையாது,

கடந்த மூன்று நாட்களாக மயிலையில் அற்புதமான உணவு, வான்கோழி கறி, வதக்கலும், குழம்பும், கடித்து கடித்து பற்கள் வலிக்கின்றன. கோழி கறிக்கு பத்து அசைவுகள் வாயில் தேவை இருந்தால் வான் கோழிக்கு கூடுதலாக ஐந்து அசைவு தேவைப்படுகிறது. ஆனால் அபார ருசி, அதிகம் சாப்பிடாதே. வயிற்று உப்பசம் வரும் என்று சொன்னார்கள். உப்பசம் நீங்கு வதற்கு மருந்து கொடுத்தார்கள். வான் கோழி கறி உடம்பு சூட்டை கிளறிவிட்டது. ஜீரணமாவதற்கு சிரமப்பட்டது. அந்த வீரன் காட்டாமணக்குக் கிளையை பிடித்துக் கொண்டு புதர் மறைவே உட்கார்ந்து கொண்டான். சற்று பள்ளமான இடம் போலிருக்கிறது, நான்கு பக்கத்திலிருந்தும் தண்ணீர் வந்து பாய நடுவே சதுப்புநிலம் இருக்கிறது. அங்கே புற்கள் நாணலைப் போல உயரே நிற்கின்றன. மழை நாட்களில் இந்த இடம் முழு வதும் நீராகிவிடும். பிறகு வெய்யில் வர மூன்று நாளில் காய்ந்து

விடும். நீர் எங்கேயோ வடிந்து விடும். ஈரமான இந்த தரையில் புற்களும், புதர் செடிகளும் அதிகம் இருந்தன. மாடுகள் மேயும் இடத்தில் புதர் வளர்ந்தால் வெட்டிவிடுகிறார்கள். இந்நிலம் இப்படியே வேண்டும் என்று இந்தப் பகுதியை வெட்டாமல் விட்டு விட்டார்கள். அடர்த்தியாக நீள வாட்டாக புதர்கள் இருந்தன. உட்கார்ந்து அதனோடு பேசியதில் வயிறு சிரமப் பட்டு வான்கோழியை வெளியேற்றியது.

அடேய், இந்த மாமிசத்தை காசு கொடுத்தாலும் இனிமேல் சாப்பிட மாட்டேன். அவன் மனதில் நினைத்துக் கொண்டான். எழுந்து நின்றான். வயிறு வலித்தது. யாரோ தொலைவில் உட்கார்ந்திருப்பது தெரிந்தது. ஆனால் அவர் உட்காரவில்லை, ஒரு வாத்து நடையாய் மெல்ல புதருக்குள் நகர்ந்து கொண் டிருந்தார். அவன் சட்டென்று உட்கார்ந்து கொண்டான்.

அந்தணர் போல் தெரிகிறானே. இந்த நேரத்தில் இந்த இடத்தில் அந்தணர் வரமாட்டாரே, வயிறு மறுபடியும் சலசலக்க மறுபடியும் உட்கார்ந்தான். வயிறு தன் வேலையை செய்தது, அவன் புதர்களூடே அந்த மனிதனைத் தேடினான். பாம்பி னுடைய சீறல் கேட்டது. பயந்து பிடித்துக் கொண்டான். இடுப்பு ஆடையிலிருந்து குத்து வாளை உருவிக் கொண்டான். எங்கே பாம்பு என்று தேடினான்.

★ ★ ★

அத்யாயம்

99

இவன் பாம்பாட்டியா. மகுடி காணோமே. கூடையோ, கோணிப்பையோ காணோமே. ஒரு அந்தணருக்கு பாம்போடு என்ன சண்டை. அவன் கூர்மையாக கவனித்தான். பாம்பு அரை ஆள் உயரத்திற்கு எழும்பி சரேர் என்று அவனை நோக்கி குறி வைத்து பாய்ந்தது. அவன் விலகிக் கொண்டான்.

இவன் அந்தணன் இல்லை. ஒரு அந்தணனால் இவ்வளவு வேகமாக நகர முடியாது. மல்யுத்த பயிற்சி செய்பவர்கள்தான் இப்படி உட்கார்ந்து எழுந்திருப்பார்கள். சட்டென்று பின்னடைவார்கள். பாம்பு இரண்டு முறை கொத்த முயன்று தோற்றது, படமெடுத்து அவனையே பார்த்துக் கொண்டிருந்தது. இந்த முறை தீர்த்து விடுகிறேன் என்ற எண்ணத்தோடு நாக்கை துருத்தி துருத்தி கூர்மையாக பார்த்துக் கொண்டிருந்தது. அவன் கையில் இருந்த கல்லை வெகு லாவகமாக பாம்பின் பின்புறம் எறிந்தான். பாம்பு பொத்தென்ற சத்தம் கேட்டு திரும்பியது. அந்த இடம் நோக்கி அரை ஆள் உயரத்தில் நகர்ந்தது. அவன் முன்னேறி சட்டென்று பாம்பின் தலையில் உள்ளங்கையால் அடித்தான். நல்ல பலமான அடி. பாம்பு திரும்பி சீறியது. அவன் நகர்ந்து கொண்டான். ஆனால் தளர்ந்து கீழிறங்கியது. பட்டென்று தரையில் அடித்தது. அந்த மனிதனுக்கு எதிர் திசையில் போயிற்று. அந்த மனிதனின் முகத்தில் சிரிப்பு தெரிந்தது. எந்த அந்தணனும் இவ்வளவு குரூரமாக சிரிக்க மாட்டான். அந்த பாம்பு நகர, அவனுக்கு அந்த அசைவு தேவைப்பட்டது போல காத்திருந்தான். பாம்பின் வாலை பிடித்து சட்டென்று தூக்கினான். தரையில் இருந்தபோது அரை ஆள் உயரத்தில் எழும்பிய பாம்பு வால் பிடித்து தூக்கியதும் ஒரு அடி உயரே எழாமல் முன்னும், பின்னும் ஆடியது. நாலாதிசையும் சீறியது. ஆனால் அவன் கைகளை தொலைவே வைத்து பாம்பின் அசைவை தன்மீது பாயாதிருக்கும்

படி வைத்துக் கொண்டான். அப்படி தொங்குவதில் பாம்பிற்கு சிரமம் இருந்திருக்கும் போலும். அசைந்து, துவண்டு தலை தொங்கியது, அவன் சட்டென்று பாம்பை உயரே தூக்கி அதன் கழுத்தில் கை வைத்தான். அழுத்தினான். பாம்பினுடைய வால் அவன் கையைச் சுற்றிக் கொண்டது. கழுத்துப் பகுதி அவன் கட்டை விரலுக்கும் ஆள்காட்டி விரலுக்கும் நடுவே அழுத்தமாக இருந்தது. அவன் மெல்ல நகர்ந்து போய் ஒரு மரத்தடிக்கு நகர்ந்து அங்கிருந்த துணி மூட்டையிலிருந்து ஒரு பீங்கான் கிண்ணம் எடுத்தான். மெல்ல பாம்புக்கு அருகே கொண்டு போனான். பாம்பு வாய் பிளந்தது. அது சீனத்து மண்பாண்டம். அந்த மண் பாண் டத்தில் அதன் இரண்டு பற்களையும் சொருக அதிலிருந்து நஞ்சு விழுந்திருக்க வேண்டும். ஒருவித கோதுமை வாசனை வேகமாக அடித்தது.

எதற்கு நஞ்சு எடுக்கிறான். ஒருவேளை வைத்தியனோ. பாம்பு நஞ்சு வைத்தியத்திற்கு உதவும் என்று சொல்வார்களே. அவன் அந்தப் பாம்பை தரையில் போட்டான். தன் வலக்காலால் அதன் தலையை அழுத்தி மிதித்தான். பாம்பு அதே இடத்தில் கழுத்து நசுங்கி வெந்தது. வால் துடித்துக் கொண்டிருந்தது. அதுவும் அமைதியாயிற்று.

அவன் பீங்கான் கிண்ணத்தில் தன் கொண்டையிலிருந்து ஒரு ஊசி எடுத்து மெல்ல துழாவினான். தன்னுடைய கைபடாது அந்த விஷயத்தை ஊசியில் ஏற்றுவது அந்த வீரனுக்கு புரிந்தது. இவன் விஷ ஊசி தயாரிக்கிறான். எதற்காக, யாரென்று கேட்டு விடுவோமா. சட்டென்று விஷ ஊசியை மேலே எறிந்தால் அறுபது நொடிகளில் மரணம் நிச்சயம். அவன் மெல்ல பின் வாங்கினான். அருகிலுள்ள குட்டைக்கு போய் சுத்தம் செய்து கொண்டான். மேலேறி அந்த மனிதரைத் தேடினான். அந்த மரத்தடியில் அந்த மனிதன் உட்கார்ந்து இன்னும் துழாவிக் கொண்டிருப்பது தெரிந் தது. என்ன செய்வது. அவன் மெல்ல ஓட்டம் எடுத்தான். மயிலை தெருக்களில் நடந்தான். உபதளபதிகள் யாரேனும் உண்டா என்று தேடினான்.

அரண்மனையில் கட்டுக் காவல் அதிகம் இருந்தது. ஓடிப் போய் உபதளபதிகள் யாரேனும் இருக்கிறார்களா என்று கேட்டான்.

"எதற்கு கேட்கிறாய்."

''அவசரம். ரகசியம்'' என்று அவன் சொல்ல, ஒரு உப தளபதியிடம் அழைத்துப் போனார்கள். உபதளபதி 'சற்று இரு' என்று கை காட்டி மேல மாடியை பார்த்துக் கொண்டிருந்தான். மாடியிலிருந்து ஒருவர் கீழிறங்கினார். அரையன் ராஜராஜன். அவனுக்கு சந்தோஷமாகிவிட்டது. விழுந்து வணங்கினான்.

''யார் இவன். என்ன கேட்கிறான்.'' அரையன் ராஜராஜன் யதேச்சையாக விசாரித்தார்.

''தெரியவில்லை. இப்பொழுதுதான் என்னை பார்க்க வந்திருக்கிறார். விஷயம் இனிமேல்தான் கேட்க வேண்டும்.''

''சரி கேள்.''

''அய்யா.'' அவன் பதட்டமாய் அரையன் ராஜராஜனை அழைத்தான். ஏன் அப்படி செய்தான் என்று அவனுக்குத் தெரிய வில்லை, அவர் திரும்பினார். என்ன என்பதுபோல் பார்த்தார்.

''ஒரு ஆள் விஷ ஊசி தயாரிக்கிறான். அந்தணன் போல் இருக்கிறான். ஆனால் பாம்போடு கை சண்டை போடுகிறான். பாம்பின் தலையில் தட்டி படுக்க வைத்து பிறகு விஷத்தை எடுத்து விட்டு நசுக்கி கொன்றுவிட்டான். எந்த ஒரு அந்தணனாலும் அப்படி கொல்ல முடியாது. தனியாக இருக்கின்ற வீரர் எவரேனும் தென்பட்டால் சொல்லும்படி செய்திருக்கிறீர்களே, இவன் தனி யாக இருக்கிறான். கழுத்து நிறைய ருத்ராட்ச மாலை. கைகளில் ருத்ராட்சம் போட்டிருக்கிறான். சிதம்பரம் தீட்சிதரைப் போல உருவம் இரும்பினும் அவன் தீட்சிதரே அல்ல, அவன் கையில் வெட்டு தழும்புகளெல்லாம் இருக்கின்றன. அவன் தோள்களில் கத்தி பாய்ந்த இடங்களெல்லாம் இருக்கின்றன. திடமான போர் வீரன் போல் இருக்கிறான். பீங்கான் கிண்ணத்தில் ஊசியை சுழற்றிச் சுழற்றி அதில் நஞ்சை ஏற்றிக் கொண்டிருக்கிறான்.''

அவர் சட்டென்று நின்றார்.

''எந்த இடத்தில்.''

''ஒரு மந்தைவெளி இருக்கிறது. புல்வெளி, ஆடுகள் மேய் கின்றன. அதற்கு பக்கத்தில் காட்டான் மணக்குச் செடிகள் இருக் கின்றன.''

''மயிலையிலிருந்து எவ்வளவு தொலைவு இருக்கும்.'' அவர் கேள்விக்கு வீரன் பதில் சொன்னான்.

"ஏய் கூப்பிடு. சகலரையும் கூப்பிடு. ஒரு இருநூறு பேரை உடனே தயார் செய். ரகசியமாகச் செய்." மடமடவென்று உத்தரவுகள் பறந்தன.

எது புல் மந்தைவெளி என்று அவர்கள் வரைபடத்தில் தேடினார்கள். இடதும் வலதுமாக வீரர்களை அனுப்பினார்கள். தனித் தனியாக சாதாரண வழி போக்கர் போல எங்கோ எவர் வீட்டுக்கோ நகர்வது போல தூதுவர்கள் போல அவர்கள் நகர்ந்தார்கள். மெல்ல அந்த புல் வெளியை அவர்கள் சுற்றிக் கொண்டார்கள். யார் நடந்து போனாலும் மடக்கி உட்கார வைக்க வேண்டும் என்ற உத்தரவு இருந்தது. எதிர்த்தால் மடக்கி வெட்டி போடும்படி அடுத்த உத்தரவு இருந்தது.

"ஒரு பொழுதும் எந்த நபரும் உங்களை விட்டு தாண்டி ஓடிவிடக் கூடாது. அப்படி நகர்ந்ததால் நான் கடுமையாக தண்டிப்பேன்." அரையன் ராஜராஜன் அடிக்குரலில் உறுமினார்.

மயிலை எதற்கு ஒரு பரபரப்பு நடக்கிறது என்று தெரியாமல் வேடிக்கைப் பார்த்துக்கொண்டே இடதும், வலதும் போயிற்று.

அரையன் ராஜராஜன் குதிரை ஏறினார். அவரின் மெய்க் காவல்படை அவரை சுற்றிக் கொண்டது. அந்த வீரனுக்கும் குதிரை தரப்பட்டது.

"அரையன் என்னை சந்திப்பதாகச் சொன்னாரே." இராஜேந்திர சோழர் கோவிலுக்கு பக்கத்தில் உள்ள மாளிகையில் கட்டிலில் சாய்ந்தபடி கேட்டார்.

"அரையர் மிக முக்கியமான ஒரு வேலைக்காக இருநூறு வீரர்களோடு தெற்கு பக்கம் போயிருக்கிறார்."

"என்ன வேலை." இராஜேந்திரர் எழுந்து உட்கார்ந்து கொண்டார்.

"யாரோ தவறான ஆட்கள் சுற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்ற செய்தி வந்தது."

"தவறான ஆட்கள் என்றால்."

"எங்களுக்கு தனியான ஒரு உத்தரவு உண்டு."

"என்ன உத்தரவு." தெரிந்த கைக்கோளப்படை தலைவனை அவர் உற்று நோக்கினார்.

''தனியாக எந்த வீரன் நடந்தாலும் மடக்கி விசாரிக்க வேண்டும் என்ற உத்தரவு இருந்தது.''

''ஏன்''

''மேலை சாளுக்கியத்து கங்கே யாதவ் கங்கை கொண்ட சோழபுரம் வரை வந்திருக்கிறான். பூம்புகார் வரை போயிருக்கிறான் என்ற செய்தி வந்தது. சல்லடை போட்டு சலித்துவிட்டோம். அப்படி யாரும் கிடைக்கவில்லை.''

''அது தெரியும். எனக்குத் தெரியாமல் இங்கென்ன பெரிய கூத்து.''

''உங்களுக்கு சொல்ல வேண்டாம் என்றும் சொல்லியிருக் கிறார்கள்.''

''யார்.''

''இராஜாதி ராஜனுடைய உத்தரவு. அவருடைய அமைச்சர் வாசுதேவ நாராயணனுடைய உத்தரவு. அதேவிதமாக ஒரு செய்தி அரையன் ராஜராஜனுக்கும். அருண்மொழிபட்டனுக்கும் சொல்லப் பட்டது.''

''அடேய், இன்னும் யாருக்கெல்லாம் தெரியும். என் மனைவி யருக்கு தெரியுமா, அந்த சேடிக்கு தெரியுமா, எனக்கு மட்டும் தெரியாமல் எல்லோருக்கும் தெரியுமா. எங்கே போயிருக்கிறார் அரையர்.'' அவர் கோபப்பட்டார். எழுந்து வந்தார். உடையை சீராக்கிக் கொண்டார். மேலே போர்வை போர்த்திக் கொண்டார். பாதரட்சை அணிந்துகொண்டார்.

''அய்யா. கொஞ்சம் அமைதியாக இருங்கள், நீங்கள் வெளியே வந்தால்,''

''நான் வெளியே வந்தால்,''

''பரபரப்பு அதிகமாகிவிடும்.''

''ஆனால் என்ன.''

''சம்பந்தப்பட்டவர் தப்பித்து விடலாம். மிக அமைதியாக இந்த தேடல் நடந்து கொண்டிருக்கிறது. தயவுசெய்து நீங்கள் இப்பொழுது வெளியே வரக்கூடாது. உங்கள் பாதுகாப்புக்கும் சரி. அவனை பிடிப்பதற்கும் சரி. உங்கள் அமைதிதான் உபயோகப் படும்.'' அவர் தயங்கினார்.

" நீ சொல்வது சரி." மறுபடி உள்ளே போனார். ஒரு ஈய பாத்திரத்தில் இருந்த கோழி ரசம் சூடுபண்ணி கொடுத்தார்கள். அதை சரக்கென்று உறிஞ்சி குடித்தார். தாம்பூலம் தரித்து யோசித் தார். கொல்லைப் புறம் திறந்து சாத்தப்பட்டது. அரசர் இயற்கை உபாதை கழிக்கப் போகிறார் என்று நினைத்தார்கள். அவர் தாண்டி பின்பக்க மதிலுக்கு போனார். செங்கல்லில் கால் வைத்து ஏறி னார். அடுத்த பக்கம் குதித்தார். ஒரு துணியை பின் பக்கத் திலிருந்து உருவி எடுத்தார். மேலே போர்த்திக் கொண்டார். ஒரு நோயாளி கிழவர் போல பஞ்சமர் வாழும் குடிசைக்கு நடுவே போனார். யாரய்யா நீ என்று கேட்டார்கள்.

'உடம்பு சுகமில்லை, மேலுக்கு தொந்தரவு' என்று சொல்ல, பார்த்துப்போம் பார்த்துப்போம் என்று அவர்கள் வழிவிட்டார்கள். பஞ்சமர்கள் இடத்தை உற்று உற்று நெருக்கமாக பார்த்துக் கொண்டார். பஞ்சமர்கள் மழைக்கு அணிந்து கொள்ளும் ஒரு ஓலை தடுக்கை எடுத்துக் கொண்டு மெல்ல நகர்ந்து போனார். அதை தன் தலையில் போர்த்திக் கொண்டார். தலைக்கு மேல் கூம்பாகவும், இரண்டு பக்கமும் சரிந்து இருந்த அதில் யாரும் அவரை கவனித்திருக்க முடியாது. மிக விரைவாக மயிலை வீதி களில் நடந்தார். பிறகு வேகமாக ஓடத் துவங்கினார்.

"ஏய் இருடா." யாரோ உயர்ஜாதி வணிகர் உரத்து கூவினார்.

"ஆடு தொலைந்துவிட்டதய்யா. அதைத்தேடி ஓடுகிறேன்."

"ஓடு, ஓடு மந்தை வெளியில் தான் இருக்கும். வேறு எங்கு இருக்கும் ஓடு." அவர் உத்தரவிட வேகமாகப் போனார்.

"அடேய், செருப்பை கழற்றி கையில் எடுத்துக் கொள். மறவர்கள் பார்த்தால் பின்னி விடுவார்கள்" என்று அந்த வணிகர் சொல்ல, செருப்பை கழற்றி கையில் எடுத்துக் கொண்டார். வேக மாக ஓடத் துவங்கினார்.

பஞ்சமர் வாழ்க்கை பற்றி அவருக்கு மறுபடியும் கேள்வி வந்தது. இவர்களுக்கு என்னால் ஏதும் செய்யலாகாதா, ஏன் இப்படி விதி முறைகள். யாரால் வகுக்கப்பட்டது. அவர் உள்ளுக் குள் ஓடிக்கொண்டிருக்க மறவர் இடம் வந்ததும் பஞ்சமர் போடும் கூரையை வைத்து விட்டு செருப்பை காலில் போட்டுக் கொண்டு மேலே துணியை போர்த்திக் கொண்டு வேகமாக நடந்தார்.

அது மறவர்கள் இடம். ஆனால் அவர்கள் மயிலாப்பூர் மறவர்கள். மயிலை திருவல்லிக்கேணியின் காவல் வீரர்கள். கடைசி வீட்டில் ஒரு பழுப்பு நிற குதிரை ஒரு கருப்பு நிற குதிரை கட்டப்பட்டிருந்தது. அதை நோக்கி போனார். பழுப்பு நிற குதிரையை அவிழ்த்தார். குதிரை அந்நியரை கண்டு எகிறியது. பளீரென்று கன்னத்தில் அறைந்தார். குதிரை அமைதியாகியது. சேணம் பூட்டப்படாமல் இருந்தது. கடிவாளம் மட்டுமே இருந்தது. தாவி குதிரையில் ஓடினார்.

'யேய் யேய்' என்று யாரோ கூவினார்கள். குதிரை வேகமாக பறந்தது. போவதற்கு முன் கருப்புநிற குதிரை கடிவாளத்தை அவிழ்த்து முதுகில் அடித்து துரத்தினார். அந்த குதிரை அவரை விட்டு வெகு தொலைவில் அடிதாங்காமல் ஓடிற்று. வீட்டி லிருந்து ஏக கூச்சலோடு ஆட்கள் வந்தார்கள். எங்கே குதிரை எங்கே குதிரை என்று தேடினார்கள். அவர் மயிலையை விட்டு பெரிய புன்னை மரத்தோப்புகளுக்குள் நுழைந்து கொண்டார். குதிரை கிளைகளை விலக்கி அவரை பத்திரமாக கூட்டிக் கொண்டு போயிற்று. அந்த இடமெல்லாம் தெரிந்த குதிரை யாக இருந்தது. சேணம் இல்லாததால் கால்களை இறுக்க குதிரையோடு பிணைத்துக் கொண் டிருந்தார். முதுகு தடவி, கழுத்து தடவி குதிரையோடு பேசிக் கொண்டே இருந்தார். அவர் குரல் குதிரைக்கு பிடித்திருந்தது. ஒரு துள்ளல் நடை யோடு புற்கள் மிகுந்திருக்கும் மந்தைகள் மேயும் இடத்திற்கு போயிற்று.

அரையன் ராஜராஜன் ஆட்கள் நாலு ஈட்டி தொலைவில் வரிசையாக நின்று ஒரு இடத்தை வளைத்துக் கொண்டு முன் னேறிக் கொண்டிருப்பது தெரிந்தது. அவர் குதிரையிலிருந்து ஏறி தொலை தூரம் பார்த்தார். அரையன் ராஜராஜன் புற்களுக்கு நடுவே நகர்வது தெரிந்தது.

கங்கே யாதவ் தனக்கு வரவிருக்கும் ஆபத்தை தெளிவாக உணர்ந்தான். தான் சூழப்பட்டு விட்டதை கண்டான். எப்படி ஏமாந்தோம் என்று தன்னை கடிந்து கொண்டான். விஷம் நன்றாக ஏறியிருப்பது தெரிந்தது. சட்டென்று குச்சியால் குழி பறித்து விஷத்தை கவிழ்த்தான். அந்த குப்பியை மூடினான். ஊசியை தடித்த இலைகளுக்குள் மடித்து வைத்துக் கொண்டான். நூற் கயிற்றால் இறுக்கிக் கொண்டான். வெளியே வராது இருக்க

அழுத்தமாக மடித்தான். இடுப்பில் சொருகிக் கொண்டான். தன்னுடைய தோள் மூட்டையை எடுத்துக் கொண்டான். இன்னும் உட்கார்ந்தவாறே அந்த புற்களுக்கு நடுவே போனான். புற்கள் அவன் தலைக்கு மேல் இருந்தன. மெல்ல தலையை எட்டி பார்த்தான். வட்டமாக ஆட்கள் சுற்றி இருந்தது தெரிந்தது. அரையன் ராஜராஜன் பக்கம்தான் காவல் பலவீனமாக இருந்தது. அவன் குத்திட்டு உட்கார்ந்தவாறே மிக வேகமாக அரையன் ராஜராஜனை நோக்கி நகர்ந்தான்.

உட்கார்ந்தபடி நடப்பது என்பது மிகக் கடினம். தொடை களில் மிகப் பெரிய வலி இருக்கும். இடையறாது உடற்பயிற்சி செய்தவர்கள் அப்படி உட்கார்ந்து நடக்க பழகியவர்கள் தான் செய்ய முடியும். மறைந்திருந்து தாக்குதல் என்ற பயிற்சியில் இந்த உட்கார்ந்து நடப்பது என்பது முக்கியமான விஷயம்.

அரையன் ராஜராஜன் மிக பதட்டமாக இருந்தார். மிக அருகி லேயே எதிரி இருப்பதாக உணர்ந்தார். குதிரை ஏறிக் கொண்டார். கொஞ்சம் வேகமாக அந்த வீரன் காட்டிய புதருக்கு போனார்.

அவன் சட்டென்று தரையோடு தரையாக படுத்துக் கொண் டான். புற்கள் அவனை மூடிக்கொண்டன. அவனுக்கு இரண்டு கை தூரத்தில் அரையன் ராஜராஜன் கடப்பது தெரிந்தது. மிக வேகமாக அவன் உட்கார்ந்தபடி நடந்தான். அரையன் ராஜராஜன் வெகு தொலைவு போனது தெரிந்தது. மேலே எழுந்து நின்றான். அந்தணர் போல தன்னை சரிப்படுத்திக் கொண்டான். நிதானமாக புல்வெளி தாண்டி மேடு ஏறினான்.

தொலைவில் மரத்தில் நின்றபடி வேடிக்கை பார்த்துக் கொண் டிருந்த இராஜேந்திரருக்கு அவனை தெளிவாகத் தெரிந்தது.

அடேய், படத்தில் பார்த்திருக்கிறேன். இவன் கங்கே யாதவ். வேஷம் போட்டிருக்கிறான். தீட்சிதர் போல வேஷம் போட்டிருக் கிறான். கங்கே யாதவ் அதே முகவெட்டு. முன் வழுக்கை, பெரிய புருவம், நல்ல உயரம், அகலமான தோள்கள். குறுகிய இடை. உட்கார்ந்தே வந்திருக்கிறான். அப்படியானால் இன்னும் களப் பணிகளில் கவனம் செலுத்தியிருக்கிறான். உடற்பயிற்சிகளில் கவனம் செலுத்தியிருக்கிறான். இன்னும் துள்ளலாக இருக்கிறான். வா. மகனே வா.

ஆட்கள் அதிகம் வேண்டாம் என்று அரையன் ராஜராஜன் ஒரு குழுவை தனியே நிற்க வைத்திருந்தார். அவன் வேகமாக அந்த குழுவை நோக்கி நகர, 'இரு, நில், நீ யார்' என்று அந்த குழுத் தலைவன் விசாரிக்க அவன் அவர்களுக்கு எதிரே போய் ஏதோ பேசினான்.

''இல்லை, உன்னை நம்பமுடியாது, உட்கார்.'' என்று அவர்கள் அவன் தோளைப் பிடித்து அழுத்த, அவன் திரும்பினான் அவர்கள் குதிரை ஒன்றை நெட்டித் தள்ளினான். குதிரை விலகிப் போயிற்று. எதிர்த்தவர்களை மிக வேகமாகத் தாக்கினான். குதிரை ஏறினான்.

மரத்திலிருந்த இராஜேந்திர சோழர் கீழே குதித்தார். குதிரை ஏறினார். எங்கே அவன் என்று அவனைத் தேடி ஓடினார்.

அரையன் ராஜராஜன் மிக வேகமாக திரும்பி புற்களுக்கு நடுவே குதிரை வீரர்களோடு வருவது தெரிந்தது. மறுபடியும் அவன் புன்னை மரத்தோப்புக்குள் மறைந்து கொண்டான். கங்கே யாதவ் காணாமல் போனான்,

மயிலையை சலித்து எடுத்தார்கள். ஆனால் செழுங்கழுநீர் ஓடை அருகே ஒரு பிள்ளையார் கோவில் இருந்தது. அது பூட்டப்பட்டு இருந்தது. வேறு கொண்டை ஊசியால் பூட்டை திறந்தான். உள்ளே போனான். கதவை சாத்திக் கொண்டான். உள்ளே இருந்த படி விரலால் அசைத்து நாதாங்கியை பூட்டின்மீது வைத்தான். பார்வைக்கு பூட்டு போட்டதுபோல் இருக்கும். அவள் பிள்ளையார் கோவில் கருவறைக்குள் நுழைந்தான். உட்கார்ந்து கொண்டான். மிகப் பெரிய அயற்சி அவனிடம் இருந்தது. அவன் மடியிலிருந்த விஷ ஊசியை முகர்ந்து பார்த்தான். ஓரமாக வைத்து விட்டான். கண்மூடி உட்கார்ந்து கொண்டான்.

வெளியே ஆட்கள் நடமாடுவது தெரிந்தது. யாரும் கோவிலுக்குள் வருவதுபோல் இல்லை என்று தெரிந்தது. அவன் நிம்மதியாக உறங்கினான். பசித்தது. ஆனால் புறக்கணித்தான்.

முதல் ஜாமத்தில் மெல்ல கதவு திறந்து வந்தான். இரண்டு அல்லது மூன்றாம் ஜாமத்தில் பிள்ளையார் கோவிலுக்கு வருவதற்கு ஆட்கள் உண்டு என்று தெரிந்தது, அவன் தன்னுடைய ருத்ராட்ச மாலையை பிள்ளையாருக்கு அணிவித்தான்.

செழுங்கழுநீர் ஓடை இறங்கினான். பரிசல் இருந்தது. அதைத் தள்ளி மூங்கிலால் ஊன்றி கடற்பக்கம் போனான். அவனுக்கு எளிதாக வெளியே உலர்த்தப்பட்ட செம்படவர்களின் உடை கிடைத்தது. மூன்று நிமிடங்களில் அவன் செம்படவனாக மாறினான். செம்படவர்கள் இவ்வளவு பெரிய குடுமி வைத்திருக்க மாட்டார்கள். என்ன செய்வது. யோசித்தான். கத்தியை எடுத்து கழுத்தளவுக்கு தன் குடுமியை நறுக்கிக் கொண்டான். இரண்டு முழ நீளமுள்ள தடித்த சற்று வெளுப்பு கலந்த அந்த குடுமியை ஆசையுடன் பார்த்தான். கடலில் எறிந்தான். கடலலை வாங்கிக் கொண்டது. மறுபடியும் கரைக்கு கொண்டு வந்து போட்டது.

''கோவில் திறந்திருக்கிறதய்யா.'' ஒரு உபதளபதிக்கு அந்த கோவில் அர்ச்சகர் சொன்னார். ''காலடி தடயங்கள் இருக்கின்றன. மருந்து வாசனை வீசுகிறது.''

தீப்பந்தத்தில் அந்த இடத்தை ஆராய்ந்தார்கள். இங்கு ஒளிந்திருக்கக் கூடும் என்று சந்தேகப்பட்டார்கள். எங்கு போயிருக் கக்கூடும், அவர்கள் செழுங்கழுநீர் ஓடை இறங்கினார்கள். பரிசல் காணோம் என்றதும், இன்னொரு பரிசல் எடுத்துக் கொண்டார்கள். குதிரைகள் ஓடை ஓரமாகவே போயின. பரிசலில் அப்படியே நடந்தார்கள். ஆறு கடலில் கலக்கும் இடம் நோக்கி போயிற்று. குதிரைகள் கடற்கரை நோக்கி நின்றன.

''அதோ பாருங்கள் பாம்பு.''

''இல்லை தலைமுடி.'' குனிந்து தலைமுடி எடுத்தான்.

''எவ்வளவு நீளம். இது சமீபத்தில் வெட்டிப் போட்டதாக இருக்கிறது. இன்னும் பின்னல்கூட பிரியவில்லை.

''அப்படியானால் யார் வெட்டிப் போட்டிருப்பார்கள்.'' உப தளபதி தளபதிக்கு போய் தளபதி அவருக்கு மேலே இருக்கின்ற தண்ட நாயக்கரிடம் போய் இது நிச்சயம் கங்கே யாதவ் என்று தெரிந்தது. அரையன் ராஜராஜனுக்கு செய்தி போயிற்று.

''அப்படியானால் செம்படவனாக மாறியிருக்கிறான். கடற் கரை பக்கம் ஒதுங்கியிருப்பான். ஏன் அவன் மரக்கலத்தில் கூட ஏறியிருக்கலாம். எனவே, மரக்கலத்தை சோதனையிடுங்கள். கடற்கரையை வேவு பாருங்கள். பதட்டப்படாதீர்கள். பெரிது படுத்தாதீர்கள். அமைதியாகச் செய்யுங்கள்'' என்று கட்டளை

யிட்டார். ஆனால் அரையன் ராஜராஜன் எல்லோரையும் விட பதட்டமாக இருந்தார்.

பொழுது விழுந்தது. காலை உணவை எடுத்துக் கொண்டபடியே அரையன் ராஜராஜன் தன்னுடைய தளபதிகளுடன் உப தளபதிகளுடனும் உரையாடினார்.

''கங்கே யாதவ் இங்குதான் இருக்கிறான். அவனுடைய நோக்கம் அரசரை நெருங்குவது. அதற்கு அனுமதிக்கக்கூடாது. பொதுமக்கள் அரசருக்கு அருகே வரக்கூடாது, வணிகர்கள் வரக் கூடாது. அம்மங்காதேவி, இராஜநரேந்திரன் தவிர வேறு எவரும் அருகே வரக்கூடாது, அதுவும் அவர்கள் மாளிகை வாசலில் நின்று கொள்ள வேண்டும். சுற்றி ஆபத்துதவிகள் நெருக்கமாக இருக்க வேண்டும். அரசரை அணைத்தபடி போக வேண்டும். கிழவனோ, இளைஞனோ, வயது முதிர்ந்த பெண்ணோ யாரா யினும் அருகே போகக் கூடாது. அரசர் மரக்கலம் ஏறும் வரை எவரும் அவரை நெருங்கக் கூடாது.

அரசர் மரக்கலத்தை சோதித்துவிட்டோம். கீழே அடிவாரம் கூட சோதித்துவிட்டோம். அடியில் நிற்கும் லாயத்தினுடைய பலகையை திறந்தால் கீழே கருங்கற்கள் போடப்பட்டிருக்கின்றன. அவையும் பார்த்து விட்டோம்.''

''எதற்கு மரக்கலத்தில் கருங்கற்கள்.'' அரையன் ராஜராஜனுக்கு மரக்கலன் பற்றி தெரியாது.

''இது வங்கம். நேராக நிற்பதற்காக போடப்பட்டிருக்கிறது. அப்பொழுதுதான் வங்கம் நீரில் மூழ்கும், நீரில் மூழ்கிய வங்கம் தான் கோணல் இல்லாது சரியாக இருக்கும். எனவே மரக்கலம் கட்டியவுடன் முதலில் கருங்கற்களைத்தான் அடிப்பக்கம் கனத் துக்காக ஏற்றுவார்கள்.''

''அந்த இடம் நன்றாக பார்த்துவிட்டீர்களா.''

''தீப்பந்தத்துடன் இரண்டு பக்கமும் போய் வந்துவிட்டோம். ஒரு எலிக் குஞ்சுகூட இல்லை.''

''நல்லது. கவனமாக இருங்கள். அரசர் நமது பொக்கிஷம். அவரை எவரும் தீண்டிவிடக் கூடாது. வந்தவன் விஷ அம்பை வைத்திருக்கிறான். விஷ அம்பு வில்லில் தொடுத்து படும்படியாக

இல்லை, ஊதுகுழல் மூலம் ஊதும்படியாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன். ஒரு மூங்கிலுக்குள் சூடு காய்ச்சி உள்ளே அனுப்பி சுத்தம் செய்து வழுவழுப்பாக ஏற்படுத்தி அதில் குப்பியில் போட்ட ஊசியை சொருகி பின்பக்க வழியாக பலமாக ஊதினால் நெட்டி ஊசியை தள்ளிக் கொண்டு போய் விழும். பத்து முழங்கை நீளத் திற்கு அவை போய் சேரலாம்.

எனவே, இதுதான் கொலை திட்டம் என்றால் அவன் அருகே வந்துதான் ஆக வேண்டும். அந்த விஷயத்தை முறியடிப்போம்.

மயிலையில் அதிகாரிச்சிகள் உண்டா.''

''உண்டு.''

''எத்தனை பேர் இருக்கிறார்கள்.''

''பதினைந்து, பதினாறு பேர் இருக்கிறார்கள்.''

''உடனே கூப்பிடு.'' அவர்கள் எழுப்பப்பட்டு வீட்டிலிருந்து வேகமாக அழைத்து வரப்பட்டார்கள். அரையன் ராஜராஜன் அவர்களை அழைத்து ''அரசரை கொல்ல முயற்சி நடக்கிறது. தனியாக ஒருவன் மீனவர் வேடத்திலோ அல்லது வேறு வேடத் திலோ அரசரை நெருங்கலாம். யாராவது தனியாக உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள் என்றால் தனியாக ஏதேனும் செய்து கொண் டிருந்தால் என்ன செய்கிறாய் என்று விசாரியுங்கள். சந்தேகம் இருப்பின் உடனே தெரிவியுங்கள்.''

கடல் மீன்கள் அந்த பெரும் மணல் வெளியில் உலரப் போடப்பட்டிருந்தன. மணல் வெளி பெரிதாகவும், தூய்மையான தாகவும் இருந்தது. அதற்கு காவல் இருப்பதுபோல் அவன் உட் கார்ந்து கொண்டான். மீன்களுக்கு சொந்தக்காரி என்ன என்று விசாரித்தாள்.

''திருவொற்றியூர். என் மரக்கலம் கடலுக்கு போய் இருக் கிறது, எனக்கு முடியவில்லை. அதனால் நான் இந்த பக்கம் இறங்கி நீந்தி வந்துவிட்டேன். நாளை என் படகு இங்கே வரும். அப்பொழுது அவர்களோடு ஏறி நான் திருவொற்றியூர் போய் விடுவேன்.'' அவள் 'சரி சரி' என்று பதில் சொன்னாள். குடிக்க ஏதேனும் வேண்டுமா என்று கேட்டாள். அவன் வேண்டாம் என்று மறுத்து விட்டான். வரும் வழியிலேயே கம்பங்கூழும், வதக்கிய

நெத்திலிமீனும் சாப்பிட்டிருந்தான். அந்த மீனின் காரம் இன்னும் நாக்கில் இருந்தது.

அந்த மீனவ குல பெண் காலி கூடையோடு சேரி நோக்கி நடந்தாள். யாரோ இறங்கி வருவது தெரிந்தது. ஒரு பெண்மணி கூடையோடு வருவது தெரிந்ததும் அவளை நோக்கி ஓடினாள்.

''வாருங்கள் அம்மா. மீன் வாங்க வந்திருக்கிறீர்களா. அரண் மனையா'' என்று கேட்டாள். வந்தவள் சற்று தயங்கினாள்.

''அங்கு உட்கார்ந்திருப்பது யார்.''

''தெரியவில்லை அம்மா. ஒரு படகோட்டி, திருவொற்றி யூரைச் சேர்ந்தவராம். அவர் உடம்பு சரியில்லை என்று பாதியில் இறங்கி இங்கே நீந்தி வந்துவிட்டாராம். படகு உள்ளே போயிருக் கிறதாம். நாளை வருமாம்.''

''செம்படவர் போலவா இருக்கிறார்.''

''ஆமாம் அம்மா. அதே ஓலை கூடை அணிந்திருக்கிறார். பக்கத்தில் துடுப்பு வைத்திருக்கிறார்.''

''ஆனால் கைகளில் வெட்டு காயங்கள் இருக்கின்றனவா. கவனித்தாயா.''

''இருக்கிறது. செம்படவருக்கும் இருக்குமே.''

''இருக்காது, கத்தியால் வெட்டப்பட்ட காயங்கள் இருந் தனவா.''

''அப்படித்தான் நினைக்கிறேன். ஏன் கேட்கிறீர்கள்.''

''இங்கேயே நில். அசையக்கூடாது. என்னை பார்த்துக் கொண்டிரு.'' அவள் கூடையை வாங்கிக் கொண்டு மெல்ல நகர்ந்தாள். அவளுடைய கூடைக்குள் மீன்கள் இருந்தன. அந்த மீன்கள் எடுத்து தரையில் பரப்பினாள். ஒவ்வொன்றாக வைத்துக் கொண்டே வந்தாள். ஓரக்கண்ணால் அவனைப் பார்த்தாள். அவன் கையில் வெட்டுத் தழும்புகள் இருந்தது. அகலமான தோள் கள். உறுதியான தொடைகள். முடி குச்சி குச்சியாய் நின்றது. முன்பக்கம் வழுக்கை இருந்தது. நாலைந்து நாள் ரோமம் முகத் தில் வளர்ந்திருந்தது. அவள் மீன்களை கால்களால் புரட்டிக் கொண்டே முன்னே போனாள். போய் அவளிடம் கூடையை கொடுத்தாள். சேரிக்குள் ஏறினாள், தடதடவென்று ஓடினாள்.



இதுதான் வங்கம் என்கிற வகை மரக்கலம். யானைகளும் குதிரைகளும் பயணம் செய்யும்.

மணலில் இறங்கின. அவன் கரை ஏறினான். தோப்புக்குள் நுழைந்தான்.

கங்கே யாதவ் பாம்படா, அதை பிடிக்க முடியாது என்று சிரித்தான். கிழவியிடம் கூடையை கொடுத்தான். தொப்பியை அணிந்து கொண்டான். நடந்தான். நடந்து கோவிலுக்குள் போனான். கோவிலுக்குள் போவதற்கு முன்பாக தொப்பியை யும், மடித்து கட்டிய வேட்டியையும் மாற்றி அந்த வேட்டியை தட்டு சுத்தாக சுற்றி இடுப்பில் துணியை அணிந்து வழியில் வந்த பெரியவரிடம் விபூதி கேட்டு வாங்கி நெற்றியில் இட்டுக் கொண்டான். கோவிலுக்குள் படியேறியபோது எக்காளம் கண் ணில் பட்டது. சுற்று முற்றும் பார்த்தான். எக்காளத்தை எடுத்துக் கொண்டான். தோளில் சாத்திக் கொண்டான்.

கோவிலிலிருந்து நேராக அரண்மனை இருந்தது. போகும் முன்பு சொல்லிக் கொண்டுதானே போவார். அங்கே பார்த்து விடலாம். அவன் எக்காளம் ஊதுபவனாக உள்ளே நுழைந்தான். தன் முகம் அதக்கிக் கொண்டான். தோள் பட்டைகளால் மாறி யிருந்தது. இதுவரை எக்காளம் ஊதியதில்லை. அவன் மரத் தடியில் நின்று எக்காளம் ஊதினான். முதலில் பிசிறு அடித்தது. பிறகு முழு பலத்தோடு காற்று செலுத்தியபோது அந்த எக்காளம் பிரம்மாண்டமாக முழங்கியது. சட்டென்று அதை இறக்கி தோளில் வைத்துக்கொண்டு நகர்ந்தான்.

யார் எக்காளம் ஊதுவது. சுற்று முற்று இடத்திலிருந்தும், கோவிலிலிருந்தும் எட்டிப் பார்த்தார்கள். ஊர் கொஞ்சம் பரபரப் பாக இருந்ததால் எந்த சத்தமும் எந்த அசைவும் கவனிக்கப் பட்டன. யார் எக்காளம் ஊதியது விசாரிக்கும்போது அவன் அம்மங்காவின் இடத்தை அடைந்திருந்தான். வீரர்களுக்கு சோறு போடும் வரிசையில் நின்றான். தாமரை இலையில் கலந்த சோறு வாங்கி ஓரமாக உட்கார்ந்து கொண்டான். உருட்டி விழுங் கினான். விக்கியது, யாரோ ஒரு வீரன் குவளையில் நீர் கொண்டு வந்து கொடுக்க அதை தூக்கி குடித்தான்.

''நீர் எந்தப் படை'' அந்த வீரனுக்கு சந்தேகம் வந்தது.

''இந்தப் படைதான்.''

''உன்னை பார்த்தது இல்லையே,''

"நேற்றுதானே இங்கு சேர்த்தார்கள்."

"அப்படியா. சரி." அந்த வீரன் உள்ளே போனான்,

"நேற்று யாரையேனும் எக்காளம் ஊதுபவரை சேர்த்தோமா."

"இல்லையே. நமக்கு எதற்கு எக்காளம்."

"ஒருவேளை இராஜேந்திரரோடு வந்திருப்பானோ."

"எதற்காக கேட்கிறாய்."

"எக்காளம் ஊதுபவன் புதிதாக இருக்கிறான்."

"விசாரி, விடாதே, விசாரி." வெளியே வந்து பார்த்தபோது எக்காளன் ஊதுபவன் இல்லை, அவன் உண்ட சோற்று இலை மட்டுமே இருந்தது.

சோழ தேசத்து அரிசி. சோழ தேசத்து பருப்பு. சோழ தேசத்து ஆட்டு மாமிசம். சரியான பக்குவம், உப்பும் உறைப்பும் மிக அழகான கலவை, கெட்டிமனான குழம்பு. விரலெல்லாம் ஒட்டிக் கொள்கிற குழம்பு. நாக்கில் சுவையோடு சேர்ந்து இரைப்பையில் கனமாக இறங்குகின்ற அரிசிச் சோறு. சோழ தேசத்தில் பிறக்காமல் போய் விட்டோமே. இந்த மயிலை எவ்வளவு அழகான நகரம், கிராமமாக இருந்ததாம். நகரமாக மாறி விட்டதாம், எல்லா குடியிருப்புகளும் பெருத்து விட்டதாம். பித்தளை பாத்திரங்கள் அற்புதமாக செய்கிறார்களாம். சோழ தேசம் முழுவதும் இவர்கள் பாத்திரங்கள்தான் வியாபாரமாம். ஒருமாதிரி எதிர்பக்கம் என் வருகையை புரிந்து கொண்டார்கள். விரைவாக வேலை முடித்து விட்டு நகர வேண்டும். எங்கு தங்கி இருப்பது. நாலு வீடுகள் தள்ளி அரையன் ராஜராஜன் இடம். அங்கு தங்குவோம். அங்கு தேடமாட்டார்கள்.

எக்காளத்தை மரம் ஏறி மாட்டினான், சற்று தள்ளி ஒரு கூடாரத்தில் யாரையோ தேடுவது போல் உள்ளே நுழைந்தான். யாரும் இல்லை. உடைவாட்கள் ஓரமாக வைக்கப்பட்டிருந்தன. ஒன்று எடுத்து இடுப்பில் சுற்றிக் கொண்டான். புலிச் சின்ன கொடி மஞ்சள் நிறத்தால் ஆனது வைக்கப்பட்டிருந்தது. அதை எடுத்து வேலில் கட்டிக் கொண்டான். தோளில் சாத்திக் கொண்டு தெருவில் கம்பீரமாக நடந்தான், யாரும் எதுவும் கேட்கவில்லை.

அரையன் ராஜராஜன் அரண்மனை வாசலுக்கு வந்தான். தடுத்து நிறுத்தப்பட்டான். ''அரையன் ராஜராஜனிடம் ஒரு விஷயம் சொல்லச் சொல்லி உத்தரவாகியிருக்கிறது.''

''யார்''

''சொல்வதற்கில்லை.''

''என்ன விஷயம்.''

''ஒற்றை ஆளாக ஒருவன் திரிகிறான். அவனைப் பற்றிய விஷயம்.''

''அப்படியா போ. உள்ளே இருக்கும் தளபதிகளிடம் சொல். அரையர் வெளியே போயிருக்கிறார். அந்த தளபதி உனக்கு வேண்டியவற்றை செய்வார்.''

''சரி அய்யா.'' அவன் உள்ளே போனான். கூடம் தாண்டி அடுத்த கட்டத்தில் பேச்சு குரல்கள் கேட்டன. ஆனால் உள்ளே போகவில்லை. படி ஏறினான். இரண்டு மாடிகள் தாண்டி மேல் மாடியில் நின்று கொண்டான். அங்கிருந்த மேடையில் ஏறி நின்று காவல் காப்பவன் போல் விரைப்பாக நின்றுகொண் டான். அங்கிருந்து மயிலை நன்கு தெரிந்தது.

ஒரு வேளை இங்கு யாரேனும் மடக்கினால் சண்டையிட வேண்டியதுதான். இடுப்பில் வாள் இருக்கிறது. கையில் வேல் இருக்கிறது. சுற்றி குதிரைகள் இருக்கின்றன. அடித்து நொறுக்கி விட்டு குதிரை ஏறி தப்பித்து விட வேண்டியதுதான்.

''எப்படி கோட்டை விட்டீர்கள். எப்படி கோட்டை விட்டீர் கள்.'' அரையன் ராஜராஜன் அலறினார்.

''கோவிலிலிருந்து எங்கே போயிருப்பான்.''

''எக்காளம் காணோமய்யா.''

பிடி. எக்காளம் எங்கு இருக்கிறது. பிடி பிடி எக்காளம் எங்கு வந்திருக்கும், அவன் சரியாக் அம்மங்காதேவியிடம் வந்து விட் டான்.

''எக்காளம் வாசிப்பவரை இங்கு யாரும் அனுப்பவில் லையே. ஆனால் விசாரணை நடந்து கொண்டிருக்கிறதே. அரையன் ராஜராஜனுக்கு எக்காளம் ஊதுபவன் உட்கார்ந்து

சாப்பிட்டான் என்று தெரிந்தது. இப்போது எங்கே, எக்காளம் ஊதுபவன் எங்கே.'' அவனை தேடினார்கள். எக்காளம் மரத்தின் மீது மாட்டியிருப்பதை கண்டு கொண்டார்கள். கீழே இறக்கி னார்கள்.

''அப்படியானால் வேறு எங்கே போயிருப்பான்.''

''கத்தியை காணோமய்யா. ஈட்டியை எடுத்திருக்கிறார் களய்யா.''

போர் வீரனாக இருக்கிறான். 'எங்கே போர் வீரன். யார் யார். நீ எங்கேயிருந்து வருகிறாய், உன்னுடைய இடம் எது. நீ யார். நீ யார்.' பரஸ்பரம் போர் வீரர்கள் ஒருவரை ஒருவர் கேட்டுக் கொண்டார்கள். சாட்சிகள் இல்லாதவர்கள் தடுத்து நிறுத்தப் பட்டார்கள்.

''உன்னை எனக்கு தெரியுமடா மடையா. ஆனால் தெளி வாகப் பேசு. விசாரித்தால் ஏன் குழறுகிறாய்.'' அரையன் ராஜ ராஜன் ஒரு வீரனை சத்தமிட்டார். மிகுந்த பதட்டத்திற்கு ஆளா னார்.

இராஜேந்திர சோழர் தன்னுடைய அரண்மனையில் வீரமா தேவியிடம் விசாரித்துக் கொண்டிருந்தார். வீரமாதேவி சகலமும் கேள்வி கேட்டு தெரிந்து கொண்டிருந்தாள்.

''அப்படியானால் நாளை புறப்படுவதற்கு பதிலாக இன்றே புறப்பட்டு விடலாமே. எதற்கு இந்த இடத்தில்'' என்று பதட்டப் பட்டாள்.

''அவனுக்கு பயந்து என் தேசத்திலிருந்து என்னை ஓடச் சொல்கிறாயா. என்ன முட்டாள்தனம் இது.''

''பிடிக்க முடியவில்லையே. தள்ளியிருப்பது நல்லதல் லவா. பாம்பின் விஷம் தோய்ந்த ஊசி என்றால் எந்த திசை யிலிருந்தும் எப்படி வேண்டுமானாலும் பாயுமே. பாய்ந்த சில நொடிகளுக்குள் மரணம் ஏற்படுமே.''

''என்ன செய்யச் சொல்கிறாய்.''

''கவசம் தரிக்கச் சொல்கிறேன்.''

''அப்படியா. அவனுக்கு பயந்தா.''

“ஆமாம், கவசம் தரித்து தோள்மீது சால்வை போர்த்திக் கொள்ளுங்கள்.”

“எல்லா இடங்களிலும் எல்லோரும் எல்லோரையும் விசாரிப்பது உச்சியிலிருந்து தெரிந்தது. அவன் உச்சியில் இருப்பது யாருக்கும் தெரியவில்லை.

இராஜேந்திர சோழர் கிளம்புகிறார் என்கிற செய்தி அரையன் ராஜராஜனிடம் வந்தது.

“ஏன் எதற்கு.”

“நான் கிளம்புகிறேன் என்றால் அவன் நெருங்குவான் அல்லவா. அப்போது எளிதல்லவா.” அவர் பேசினார்.

“ஆமாம் எளிதுதான். ஆனால் ஆபத்தை நோக்கி போகிறோமே.”

“இருக்கட்டும். அவனா, நானா பார்த்துவிடலாம். சோழ தேசத்திற்கு அதிர்ஷ்டம் இருக்கிறதா அல்லது அவனுக்கு இருக்கிறதா என்று சோதித்து விடுவோம்.” மேலே பட்டு சட்டை அணிந்து சங்கிலியால் பின்னப்பட்ட கவசத்தை மேலே அணிந்து அதற்கு மேலே சால்வை போர்த்தி கையிலே கடிவாளத்தை பிடித்துக் கொண்டு அவர் குதிரையை செலுத்தினார். வீரமாதேவி அருகிலேயே வந்தாள். சகலரையும் உற்று பார்த்தபடி வந்தாள். அவள் கையில் பிரம்பு இருந்தது.

கங்கே யாதவிடமிருந்தது பிரம்பு அல்ல ஊதுகுழல். அதிலும் உள்ளுக்குள்ளே ஊசி வைக்கப்பட்டிருந்தது. ஒன்றன் பின் ஒன்றாக மூன்று ஊசிகள் இருந்தன. மிகத் துடிப்போடு சுற்றி உள்ளவற்றை, மாளிகைகளை, மாளிகையின் உப்பரிகைகளை கவனித்தபடி வந்தாள். உப்பரிகைகளில் பெண்கள் எட்டி பார்த்தபோது உள்ளே போங்கள் என்று சொன்னாள். பெண்கள் கட்டுப்பட்டார்கள். பொதுமக்கள் அருகே வர முயற்சிக்க வீரர்கள் கடுமையாக பின்னே தள்ளினார்கள்.

அம்மங்காதேவியின் அரண்மனைக்கு இராஜேந்திர சோழர் வீரமாதேவியுடன் உள்ளே போனார். ஆபத்துதவிகள் வாசற் கதவை அடைத்துக் கொண்டார்கள். கருப்பு நிற உடை அணிந்த அவர்கள் அரையன் ராஜராஜன் தளபதிகளையும் உள்ளேவிட

மறுத்தார்கள். அவர்கள் முரண்டிய போது, 'உள்ளே நுழைந் தவனை பிடிக்க துப்பில்லை. எங்களிடம் ஏன் முரண்டுகிறாய்' என்று விலக்கப்பட்டார்கள்.

''வெளியே பார்த்தாயா மகளே. எதுவும் ஓயவில்லை. ஓயவும் ஓயாது. யுத்தம் நடந்து அமைதி திரும்பும் என்று நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம். அப்படியல்ல. யுத்தம் செய்த இடத்திலிருந்து மீண்டும் மீண்டும் கிளருவார்கள். இராஜநரேந் திரனை ஜாக்கிரதையாக இருக்கச் சொல்,

மருமகனே, உன்னுடைய மாற்றம் அற்புதமாக இருக்கிறது. உன்னுடைய வளர்ச்சி அற்புதமாக இருக்கிறது. அம்மங்காதேவி திறமையாக வளர்க்கப்பட்டவள். அவள் உதவியோடும் நீ சீரும், சிறப்புமாக அரசாட்சி செய்ய வேண்டும்.

அரையன் ராஜராஜன் உன்னை தொடருவார், உன்னிட மிருந்து சற்று விலகி, தனியாக வேளம் அமைத்து அங்கே தங்குவார். உன்னுடைய நிர்வாகத்தில் அவர் தலையிட மாட் டார். உனக்கு பாதுகாப்பாக, கீழை சாளுக்கியத்தின் எல்லையை பாதுகாப்பவராக அவர் இருப்பார். துவண்டு போன கீழை சாளுக்கியத்தின் விவசாயத்தை கவனி. அவர்களுடைய நல்ல துணிமணிகளை தொண்டை தேசத்திற்கு அனுப்பு. அங்கிருந்து அவை சோழ தேசத்திற்கு வரட்டும். நல்ல பசுக் களையும், எருதுகளையும் பேணி பாதுகாத்து வா. அவைகளும் சோழ தேசத்திற்கு உதவட்டும்.

ஜெய விஜயீ பவ. வாழ்த்துக்கள்.'' அவனுக்கு நெற்றியில் திலகமிட்டார். மகளின் கையில் பூக்களை கொடுத்தார். அதை வாங்கி அவள் கண்ணில் ஒற்றிக்கொண்டாள். அவள் நெற்றி யில் முத்தமிட்டார். மருமகனை அணைத்துக் கொண்டார். கீழிறங்கினார்.

வீரமாதேவி இடுப்பை அணைத்துக் கொண்டு அவள் கன்னத்தை அம்மங்காதேவி இழைந்தாள்.

''என்னடி.''

''ஏதோ ஒரு மாதிரியாக இருக்கிறது அம்மா.''

''மருத்துவர் என்ன சொல்கிறார்.''

''அடுத்த வாரம்தான்.''

"இல்லையடி. எனக்கு தெரிந்துவிட்டது."

"என்னம்மா,"

"நீ உண்டாகியிருக்கிறாய்,"

"எப்படி சொல்கிறீர்கள் அம்மா."

"ஒரு உள்ளுணர்வு,"

"இவ்வளவு சீக்கிரமா அம்மா."

"இதையெல்லாம் தடை செய்யாதே, நன்றாக சாப்பிடு. நன்றாக தூங்கு. அவ்வப்போது எல்லா பக்கத்திலிருந்தும் செய்திகள் வர ஏற்பாடு செய்கிறேன்." கட்டித் தழுவிக்கொண்டு விடைபெற்றாள்.

வீரமாதேவியும், இராஜேந்திரரும் வாசலுக்கு வந்தார்கள். அம்மங்காதேவி கையசைத்து விடை கொடுத்தாள்.

சிறிய படை மயிலை துறைமுகம் நோக்கி போனது.

அவன் கீழிறங்கினான். கொல்லைப்புறம் வழியாக அரையன் ராஜராஜன் இடம்விட்டு வெளியே வந்தான். நான்கு கொல்லைப்புறங்கள் தாவி, அம்மங்காதேவியின் அரண்மனை கொல்லைப்புறத்தில் நுழைந்தான். அம்மங்காதேவியின் ஆபத்துதவிகளுக்கும் கருப்பு உடைதான் இருந்தது. அவை பின்பக்க அறையில் உலரப் போடப்பட்டு இருந்தன. அவன் சட்டென்று மேல் அங்கியும் தலைப்பாகை துணியையும் உருவிக் கொண்டான். தலையில் சுற்றிக் கொண்டான். வாசலுக்கு வந்து அங்கு உள்ள குதிரையை அவிழ்த்து அதில் ஏறிக் கொண்டான்.

"அது என் குதிரை." ஒரு வணிகர் வந்தார்.

"அப்பாலே போ. என் குதிரையை போய் எடுத்துக் கொள்ளுங்கள்."

"எங்கே இருக்கிறது."

"போய் திரும்பினால் அரையன் ராஜராஜன் வீடு வரும். வாசலில் என் குதிரையை கட்டி வைத்திருக்கிறேன். இதில் அவசரமாக போக வேண்டியிருக்கிறது." நிதானமாக பதில் சொன்னான்.

அவர் சரியென்று ஒத்துக்கொண்டார். மயிலை பரபரப்பாக இருக்கிறது. போர் வீரர்கள் துடிப்பாக இருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டிருந்தது. எதிரிகள் நெருங்கிக் கொண்டிருக்கிறார் கள் என்பதையும் அவர் அறிந்திருந்தார். அதனால் அந்த வீர னுக்கு அவர் தடை சொல்லவில்லை.

அரையன் ராஜராஜன் இல்லத்திற்குப் போய் என்னுடைய குதிரை எங்கே என்று கேட்டார். ''எங்கிருந்தோ வந்து என் குதிரை எங்கே என்று கேட்டால் என்ன அர்த்தம்.''

''இல்லை. ஒரு ஆபத்துதவி படை வீரர் தன் குதிரையை இங்கு வைத்திருப்பதாகவும், என் குதிரையை அவசரத்திற்கு எடுத்துப் போவதாகவும் சொன்னார்.''

''யாரது.''

''ஆபத்துதவி படை வீரர்,''

''வலக்கை விரலில் அரசு மோதிரம் இருந்ததா.''

''இல்லை. பாத்ததாக நினைவு இல்லை,''

''கேட்க வேண்டாமா.''

''எங்களுக்கு அதெல்லாம் தெரியாதே,''

யாரோ ஓடி வந்தார்கள். ''என்னுடைய உடைகள் காணோம். என்னுடைய கருப்பு உடை காணோம். யாரோ எடுத் திருக்கிறார்கள்.''

அரையன் ராஜராஜன் இடத்திலிருந்த தளபதி தன்னோடு நான்கு தளபதிகளை சேர்த்துக் கொண்டான். போர் வீரர்கள் வேண்டாம் என்று சொன்னான்.

''தெளிவாக ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள். ஆபத் துதவிகளைத்தான் நாம் மடக்கப் போகிறோம். தாக்கப் போகி றோம்,'' அவர்கள் வேகமாக இராஜேந்திரர் போகின்ற பாதையை நோக்கி போனார்கள். விரைவாக குதிரை செலுத்தினார்கள். ஆபத்துதவியை தாண்டினார்கள். முன்பக்கம் போனார்கள். ஆபத்துதவிகள் ஓடி வந்து நின்றார்கள். கங்கே யாதவ் விழித்துக் கொண்டான். தன்னைத்தான் தேடுகிறார்கள் என்று தெரிந்து கொண்டான். இப்பொழுது இந்த இடத்தை விட்டு விலகி

னால் தனித்து விடப்படுவோம். தனித்து விட்டால் மடக்கி விடுவார்கள். என்ன செய்வது என்று யோசித்தான்.

அரையன் ராஜராஜனுக்கு செய்தி போயிற்று. அவர் வேறு ஒரு வழியில் மன்னரை சந்திக்க எண்ணம் கொண்டிருந்தார்.

''நல்லது. நான் மடக்கி விடுகிறேன். நீங்கள் போங்கள்.'' முன்னே தன்னுடைய தளபதிகள் வருவதை பார்த்தார். அவர்கள் அதிவேகமாக வந்து அருகே விஷயம் சொன்னார்கள்.

''மன்னரை தனியே பிரித்து விடுகிறேன், ஆபத்துதவி களை மடக்கி விடுவோம். நாம் மன்னரை பாதுகாப்போம்.'' மன்னரை வரவழைத்து அவருக்கு அருகே குதிரை செலுத் தினார். வீரமாதேவியை முன்னே போகச் சொன்னார். தளபதி கள் மன்னரை சூழ்ந்து கொண்டார்கள். ஆபத்துதவிகள் முரண்டு செய்தார்கள்.

''விலகிப் போங்கள்.'' கத்தியை எடுத்து அவர்களை நோக்கி வீசினார். அவர்கள் பயந்து பின்னடைந்தார்கள். அவ ருடைய இன்னொரு படை ஆபத்துதவிகளை பின்னே சூழ்ந்து கொண்டது,

''என்ன செய்கிறீர்கள் அரையன் ராஜராஜன்.''

''இங்கே யாரோ தவறாக இருக்கிறான். இங்கே யாரோ தவறாக இருக்கிறான்.''

ஆபத்துதவி படையில் இருந்த அவன் குழலை எடுத்தான். ஊசியை சொருகினான். விலகி போவது போல குதிரையை நகர்த்தினான். கட்டளைக்கு கீழ்படிவது போல அவன் நகர்ந் தான். சட்டென்று குதிரையை தட்டி விட்டான். குதிரை வேக மாக முன்னேறி ஓடிற்று. இராஜேந்திரரை நோக்கி ஓடும்போது தன்னுடைய குழலில் இருக்கின்ற தக்கையை நோக்கி பலமாக காற்று ஊதினான். அந்த தக்கை பீறிட்டுக் கொண்டு வெளியே வந்தது.

''அரசே,'' வீரமாதேவி கூவினாள். அவரை பின்னுக்கு தள்ளினாள். மூன்று கை தூரம் குதிரை பின்னே நகர்ந்தது. அந்த ஊசி குதிரையின் கழுத்தில் சொருகியது. அவர் குதிரை திகைத் தது. தள்ளாடியது.

''அவன்தான் அவன் தான் அவன் தான்'' என்று கத்த, சோழ தளபதிகள் நேரே போய் அவன் மீது தாவி அவனை கீழே அழுத்தினார்கள்.

''இன்னும் யாரேனும் தொடர்ந்து வரலாம். கங்கே யாதவ் வீரர்கள் வரலாம். இது யாரென்று தெரியவில்லை. அரசரை கடற்கரை நோக்கி அழைத்துச் செல்லுங்கள். இவனை நான் பார்த்துக் கொள்கிறேன்,'' மன்னர்படை வேகமாக கடற்கரை நோக்கி போயிற்று. அவரைச் சுற்றி இப்போது ஆபத்துதவி படைகள் சூழ்ந்து கொண்டன. தளபதிகள் சூழ்ந்து கொண்டார்கள்.

அவர் தட்டைப் படகில் ஏறிக் கொண்டார், கடலலையை தாண்டி நகர்ந்தார். நூல் ஏணியில் கால் வைத்து நங்கூரம் பாய்ச்சப்பட்டிருந்த வங்கத்தில் ஏறினார். உள்ளே போய் உட்கார்ந்து கொண்டார்,

''யாரது. ஏதாவது தெரிந்ததா.''

''பூம்புகாரில் உங்களுக்கு செய்தி சொல்லுகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள்.'' நங்கூரம் தூக்கப்பட்டது. வங்கம் நகர்த்தப்பட்டது. கரையை ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்தார்.

அரையன் ராஜராஜன் கங்கே யாதவின் இரண்டு கணுக்கால்களிலும் ஏறி நின்று கொண்டார். பிரம்பால் முகத்தில் அடித்தார்.

''பெயர் சொல்,'' அவன் பேசாது இருந்தான். மறுபடியும் ஒரு அடி கன்னத்தில் விழுந்தது, அவன் கைகளையும் வீரர்கள் மிதித்திருந்தார்கள். நெற்றியில் ஒரு அடி விழுந்தது, மூக்கில் பிரம்பு நுழைக்கப்பட்டு ஆட்டப்பட்டது. அவன் அலறினான். ''பெயர் சொல்.'' நெஞ்சில் அடி விழுந்தது. அவன் ''கங்கே யாதவ்'' என்று கத்தினான். அவர்கள் விலகினார்கள். அவன் தூக்கி நிறுத்தப்பட்டான். கைகள் பின்னுக்கு கட்டப்பட்டன. கால்களில் விலங்கு மாட்டப்பட்டது. கொண்டுபோய் அவனை மாட்டு வண்டியில் போட்டார்கள். காளைகள் குதித்து அரையன் ராஜராஜன் இடம் நோக்கி போயின. உள்ளுக்குள் இழுத்துக் கொண்டு போய் பின்பக்கம் இருக்கின்ற மாஞ்சோலையில் அவனை உட்கார வைத்தார்கள்.

அரையன் ராஜன் அருகே வந்து உற்று பார்த்தார்.

''கங்கே யாதவ்''

"என்னுடைய மூன்று தளபதிகளை தூங்கும்போது கொன்றாயல்லவா நீ."

"இல்லை. நான் இல்லை."

"எதற்கு இங்கு வந்திருக்கிறாய்."

"இராஜேந்திரரிடம் சேருவதற்கு."

"விஷ ஊசி ஊதி சேருவதற்கா."

"நான் எந்த ஊசியும் ஊதவில்லை. எனக்கு தெரியாது."

"நீ ஊதினாய். நான் கண்ணால் பார்த்தேன். ஏன் பொய் சொல்கிறாய். அடேய் குறடு எடுத்து வா." அடுத்த சில நிமிடங்களுக்கு மிகக் கடுமையான சித்ரவதைகள் நடந்தன. அவன் அலறினான். துடித்தான். ஏன் பிறந்தோம் என்று நொந்து கொண்டான். வலி காதுபக்கம் பிய்த்துக் கொண்டு வந்தது. கண்களை தாக்கியது. உடம்பு முழுவதும் பரவியது. அவனுக்கு பல இடங்களில் சூடு போட்டார்கள். தலையில் தண்ணீர் ஊற்றினார்கள். பிரம்பால் அடித்தார்கள். சூடு போட்ட இடத்தில் மதுவை சொட்டு சொட்டாக ஊற்றினார்கள். நெருப்பாக எரிந்தது. அவன் அலறினான். வாயில் துணி வைத்து அடைத்தார்கள்.

"கங்கே யாதவ் நீ இறக்கப் போகிறாய். உன்னை எப்படி செய்ய வேண்டும். பூமியில் அடக்கமா. தகனமா."

"தகனம் செய்து விடுங்கள். தொண்டை தேசத்தின் இந்தப் பகுதியில் நான் மறுபடியும் பிறக்கிறேன். சோழ தேசத்தவனாக பிறக்கிறேன், இந்த மயிலை கபாலியின் அர்ச்சகராக பிறக்கிறேன்." அவன் திணறித் திணறி பேசினான்.

"நல்லது. சக்கரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜேந்திரரின் ஆணைப்படி உன்னை அம்பினால் எய்து மரணதண்டனை கொடுக்க உத்தரவிடுகிறேன்."

பத்து வீரர்கள் வில்லெடுத்து நாண் தொடுத்து அவனை குறி பார்த்தார்கள்.

"ஏதேனும் சொல்ல விரும்புகிறாயா கங்கே யாதவ்." அரையன் கேட்டார்.

"நமச்சிவாயம். சிவாய நமஹ: நமச்சிவாயம். சிவாய நமஹ: நமச்சிவாயம் சிவாயநமஹ: நான் தயார். என்னை சிவன் ஏற்றுக்

கொள்வார்.'' என்று உரக்க கத்தினான். அரையன் துணியை உதறினார்.

அம்புகள் சீறி அவன் கழுத்தில், நெஞ்சில், இடது தோளில், வலது தோளில், மேல் வயிற்றில், அடி வயிற்றில், தொடையில் எல்லா பக்கமும் இறங்கின. கடைசி அம்பு வேக மாக வந்து அவன் நெற்றியில் அடித்து உடைந்தது. அவன் தலை சரிந்தது. கைகள் கட்டப்பட்ட வண்ணம் அந்த மாமரத் துக்கு கீழே கங்கே யாதவ் சரிந்து துவண்டு விழுந்தான்.

கங்கே யாதவ் என்கிற மேலை சாளுக்கிய தளபதியின் சரித்திரம் மயிலையில் முடிந்தது. அவன் உடலை கடற்கரைக்கு அருகே உள்ள சுடுகாட்டில் தகனம் செய்தார்கள். அவன் இடுப்பை சோதித்து அவன் முத்திரை மோதிரத்தை எடுத்துக் கொண்டார்கள். அவன் சிவலிங்கத்தை எடுத்துக் கொண்டார் கள். இதை இராஜேந்திரருக்கு அனுப்பினார்கள்.

இராஜேந்திரர் கடல் வழியாகப் போக, தரை வழியாக கங்கே யாதவின் சின்னங்கள் அவரை நோக்கி போயின. ஒரு எதிர்ப்பு சகாப்தம் சோழ தேசத்தில் சுருண்டு விழுந்து செத்துப் போனது.

★ ★ ★

அத்யாயம் 100

‘‘தவறு. தவறு. மிகப் பெரிய தவறு. கங்கே யாதவை பத்து பேர் சூழ்ந்து கொண்டு ஒரு வேல் நீள தூரத்தில் நின்று அவனை அம்பெய்து கொன்றது மிகப்பெரிய அபத்தம். கடும் சித்ரவதை. அவன் செய்ததை விட மிக இழிவான காரியம். ஒரு வீரனை பின் கை கட்டி நெஞ்சுக்கு அருகே அம்பெய்து கொல்வது வேதனை.

இதில் என்ன வீரம் இருக்கிறது. அறிவு கெட்டத்தனம்.’’ உரக்க கத்தினான். காலால்பூமியை உதைத்தான். அருண்மொழியின் இந்த கோபம் சோழ வீரர்களுக்கு புதிது.

‘‘அவனை நன்கு போஷாக்கி வளர்த்திருக்க வேண்டும். கட்டுக்காவல் பலமாக இருந்திருக்க வேண்டும். அவனோடு இதமாக தினம் தினம் பேசி அடுத்தபடி மேலை சாளுக்கியத்தின் திட்டம் என்ன என்று விசாரித்திருக்க வேண்டும். மேலை சாளுக்கியம் என்ன எண்ணத்தில் இருக்கிறது என்பதை சக்ரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜேந்திர தேவருக்கு சொல்லியிருக்க வேண்டும்.’’ பூம்புகார் துறைமுகத்தில் ஒரு மாளிகை வீட்டில் இருந்தபடி உரத்து கத்தினான்.

‘‘அரசியல் என்று வீரம் மிகுந்தது மட்டுமல்ல, சூழ்ச்சி மிகுந்தது. ஞானம் மிகுந்தது. யாரை எப்படி நடத்தப்பட வேண்டுமென்ற எழுதப்படாத விதிமுறைகள் உண்டு. அரையன் ராஜராஜன் வெறும் முரட்டு முட்டாள்.’’ இருபது வீரர்களுக்கு நடுவே குறுக்கும், நெடுக்கும் நடந்து உரக்க கத்தினான்.

‘‘ஜெயசிம்மனோடு முடிந்து போயிற்றா. இல்லையே. அவன் பிள்ளை ஆகமவல்லன் இருக்கிறானே. அவன்தானே அடுத்தபடி அரசாட்சிக்கு வரப்போகிறான். ஜெயசிம்மன் ஓய்ந்து விட்டானே. ஆகமவல்லன் எண்ணம் என்ன, அவனுக்கு யார்

தளபதிகள். என்ன விதமான உபதேசம் செய்கிறார்கள். ஆகம வல்லனுடைய மனோநிலைமை என்ன. அவனுடைய மனைவி யார் யார். அவனுக்கு குழந்தைகள் உண்டா, இப்பொழுது யார் யார் நிர்வாகம் செய்கிறார்கள். அத்தனையும் விசாரித்திருக்க வேண்டுமல்லவா. அப்படி அரையன் ராஜராஜன் விசாரித்தாரா,"

"இல்லை, விசாரித்ததுபோல் தெரியவில்லை," மயிலை யிலிருந்து வந்த வீரன் அருண்மொழிபட்டனுக்கு தெரிவித் தான். அருண்மொழிபட்டன் உரக்க கூறிய அத்தனை விஷயங் களும், அவன் கோபத்தின் எல்லா பரிமாணங்களும் மிக விரை வில் இராஜேந்திர சோழரை எட்டின. அவருடைய ஒற்றர்கள் யார் என்று எவராலும் கணிக்க முடியாது.

ஆனால் அரையன் ராஜன் மிகத் தந்திரமாக ஒரு வேலை செய்திருந்தார். ஆகமவல்லன் பற்றி மொத்த விஷயங்களையும் அவர் வெகு விரைவில் பல்வேறு பொய்கள் சொல்லி, சத்தி யங்கள் செய்து கங்கே யாதவிடமிருந்து வாங்கியிருந்தார்.

ஆகமவல்லனுக்கு சோழதேசத்தோடு போரிடுவது பிடிக்க வில்லை. சோழ தேசத்தால் கடும் அவமானங்களும், நஷ்டங் களும் ஏற்பட்டு விட்டன. மேலை சாளுக்கியம் குலைந்து போயிற்று, தன்னை விட வலிவுமிக்க சோழ தேசத்தோடு அன்பாகவும், நெருக்கமாகவும், பண்போடும் நடந்து கொள் ளாமல் அவர்கள் கோபத்தை தூண்டும் வண்ணம் நடந்து கொண்டது மிகப் பெரிய தவறு, காலம் காலமாக இது நடந்து வருகிறது. இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்பதுதான் அவன் ஆசை, இராஜேந்திர சோழருக்குப் பிறகு யார் வருகிறார்கள் என்று விசாரித்துக் கொண்டிருக்கிறான். இராஜாதிராஜனைப் பற்றி கேட்டுக் கொண்டிருக்கிறான். இராஜாதிராஜனுக்கு தன்னுடைய அன்பையும், நட்பையும் தெரி விக்க தூதுவர்களை அனுப்பும் எண்ணம் கொண்டிருக்கிறான். இதை சபையில் தெரிவித்தபோது சபை சீறி எழுந்தது. நீ எங்க ளுக்கு அரசனேயில்லை என்று புறம்தள்ளியது. ஆகமவல்லன் தான் அந்த எண்ணத்தை கைவிடுவதாக சொன்ன பிறகே சபை அமைதியாயிற்று.

ஆகமவல்லனை சோழதேசம் தந்திரமாக உபயோகப் படுத்திக் கொண்டால் கீழை சாளுக்கியத்தில் ஏற்பட்டது போல

ஒரு நல்ல பிணைப்பு ஏற்பட்டுவிடும் என்று கங்கே யாதவ் தெளிவாக பல காரணங்களோடு சொல்லியிருந்தான்.

''எங்கே தவறு ஆரம்பித்தது தெரியுமா. மேலை சாளுக்கியத்தில் அல்ல. மேலை சாளுக்கியத்திற்கும், கீழை சாளுக்கியத்திற்கும் இடையே ஏற்பட்ட பீமன் என்கிற ஒரு அரசன். அவன் மேலை சாளுக்கியத்தின் அரவணைப்பில் வாழ்கிறவன். கீழை சாளுக்கியத்தை தான் ஆளவேண்டும் என்று எண்ணுகிறவன். மேலை சாளுக்கியத்தின் மூலம் கீழை சாளுக்கியத்தை ஜெயித்து விட வேண்டும் என்று எண்ணியவன். இராஜராஜன் வல்லபன் என்கிற ஒரு போர் வீரனை தூதுவனாக அனுப்பியபோது பெரிய தடி கொண்டு அவனை பலமுறை அடித்து நடு சபையில் சாகடித்தான். வலி தாங்காமல் துடித்தபோது அவன் கேலி செய்தான். இராஜராஜனா, அழு, இராஜராஜன் அழுவது எனக்கு பிடித்திருக்கிறது என்று அவன் கொடூரமாக நடந்து கொண்டான். அவன் ஒரு முட்டாள். வெறும் முரடன். கைப்பாவை, குள்ளநரி, அவனால்தான் மேலை சாளுக்கியத்தின்மீது இராஜராஜருக்கு கோபம் வந்தது. அவனை தண்டிக்கத்தான் இராஜராஜர் கிளம்பினார். அதோடு அவனுக்கு ஆதரவாக இருந்த மேலைசாளுக்கியத்தையும் அவர் தகர்த்தெறிந்தார். தவறு செய்தது மேலைசாளுக்கியம் அல்ல. அந்த ஆந்திரத்து அரசன் பீமன்.''

அரையருக்கு புரிந்தது.

''ஆமாம். சரியாகச் சொல்கிறாய்.'' என்று அவனை தட்டி கொடுத்தார். அருமையான மாமிச உணவுகளை அவனுக்கு அவர் கையாலேயே பரிமாறினார். உணவு உண்ணும்போது கை விலங்கை அவிழ்த்தார். கால் விலங்கு இருக்க வேண்டும் என்று சொன்னார்,

இப்படி விலங்கோடு இருப்பதற்கு மன்னித்து விடு. உனக்கு ஒரு நேரம் வரும். அப்பொழுது உன்னை நிச்சயம் விடுதலை செய்கிறேன் என்று இனிமையாக பேசினார். ஆனால் மொத்த செய்தியும் வாங்கி விட்டோம் என்று தெரிந்த பிறகு அவனை கொன்றுவிட்டார்.

தொடர்ந்து போரே இல்லாமல் மிகச் சிறப்பாக இருக்க வேண்டிய பரதகண்டத்தின் தென்பகுதி இந்தச் செய்தி சரியான

நேரத்தில் சரியானபடி சரியானவருக்கு எட்டாததால் தொடர்ந்து கலவரங்கள் நிகழ்ந்தன. சண்டை செய்வது அரசர்கள் அல்ல. மறவர்களுக்கிடையே போர் நடக்கவில்லை. போர் என்பதை விதி ஏற்பாடு செய்கிறது. மக்களை முன்னும் பின்னும் அலைய வைத்து முட்ட விடுகிறது, சோழ தேசத்தினால் போரா, சாளுக் கியத்தினாலான கீழை சாளுக்கியம் காரணமா, பாண்டிய தேசமும், சேர தேசமும் காரணமா என்று ஆராய்ச்சி செய்வது மடமை. இவர்களுக்கெல்லாம் மேலே ஒரு சக்தி இருக்கிறது. அந்த விதிதான் இந்த சண்டையை இடையறாது நடத்திக் கொண்டிருக்கிறது. காலம் காலமாக, பரம்பரை பரம்பரையாக, வம்சம் வம்சமாக நிகழ்த்திக் கொண்டிருக்கிறது, நின்று போயிருக்க வேண்டிய ஒரு போர் விதியின் வசமாய் அரையன் ராஜராஜன் நெஞ்சில் தங்கிவிட்டது. தான் இந்தச் செய்தியை இராஜேந்திரருக்கு தெரிவிப்பதாக இல்லை என்று தீர்மானித்துக் கொண்டார், தான் அருண்மொழி பட்டனை விட மிகச் சிறந் தவன் என்று நிரூபிக்க ஒரு காரணம் வேண்டும் என்று யோசித்துக் கொண்டார். ஆகமவல்லனோடு நாம்போர் செய்ய வேண்டாம் என்று இராஜாதிராஜனுக்கு அறிவுரை சொல்லலாம். ஏனென்றால் மேலை சாளுக்கியத்தோடு மறுபடியும் போர் செய்ய சோழ தேசம் விரும்புகிறது. அந்த விருப்பத்திற்கு எதிரான குரலாக, மறுக்கும் குரலாக, ஒரே குரலாக அரையன் ராஜராஜனாக இருக்கும். எப்படி என்று கேட்க, நான் போய் ஆகம வல்லனை சந்தித்து வருகிறேன் என்று சொல்லி, அவன் நட்பை ஏற்படுத்தி சோழ தேசத்தில் மிக முக்கியமான ஒரு இடத்தை சரித்திரத்தில் மிக உயரமான ஒரு இடத்தை அவர் அடைய விரும்பினார். ஆனால் விதி அவரையும் ஒரு கைப்பாவையாக்கி அவர் நிலைமையையும் மோசமாக வைத்தது.

ஒருவேளை கங்கே யாதவை விசாரிக்கிறேன் என்று அருண்மொழிபட்டனோ, இராஜாதி ராஜனோ, அவன் சபையோ அல்லது இராஜேந்திர சோழரோ கூட கீழே இறங்கி வந்தால் அங்கு விசாரிப்பதற்கு ஒன்றும் இருக்கக் கூடாது. ஏன் கொன் றேன் என்று எவரும் கேட்க முடியாது. கேட்டால் அவனை என்ன மடியில் வைத்து சீராட்ட வேண்டுமா. அவன் தப்பிக்க முயற்சித்தான் என்று சொல்லி விட வேண்டும்.

உடம்பு முழுவதும் எட்டு அம்புகள் குத்தியிருக்க இறந்து போனான் என்ற செய்தி வருமே. அந்த கேள்விக்கும் சரியான பதிலை அவர் யோசித்து வைத்திருந்தார். நாலாபுறமும் நஞ்சு தோய்த்த அம்பையும், கூர் சக்கரத்தையும் வீசினான் என்ற பதிலையும் வைத்திருந்தார்.

போர் என்கிறபோது ஒரு தேசத்தின் வீரர்கள் ஒற்றுமையாக நின்று எதிர்ப்பார்கள். போர் அற்ற காலங்களில் தங்களுக்குள்ளேயே சண்டையிட்டுக் கொள்வார்கள். போர் இல்லாது அவர்களால் இருக்க முடியாது. போருக்கு அடிப்படையான பொறாமை இல்லாது அவர்களால் வாழ முடியாது. வீரம் என்பது ஒரு அமைதியின்மை. அந்த அமைதியின்மை எல்லா மறவர்களிடமும் இருக்கும். இது ஏதேனும் ஒரு வகையில் வெளிப்படும்.

அரையன் ராஜராஜன் நல்லவரா, கெட்டவரா.

அப்படி பார்க்கமுடியாது. வாழ்க்கை பயணத்தில் ஒருவரை ஒருவர் மிஞ்சுவதும், மற்றவரிடமிருந்து காயம் படாமல் தற்காப்போடு வாழ்வதும், உண்மை சொல்வதும், பொய் சொல்வதும் அரசாங்க அதிகாரிகளிடையே இடையறாது இருக்கும். உலகம் உள்ளவரையில் அரசாங்க அதிகாரிகளிடையே இம்மாதிரியான இரகசியங்கள் ஒளிந்து கொண்டுதான் இருக்கும். மரணத் தறுவாயிலும் இந்த விஷயத்தை அவர்கள் வெளிப்படுத்த மாட்டார்கள்.

''இவ்வளவு தொலைவு உள்ளே புகுந்துவிட்டானா. கங்கே யாதவா.'' இராஜாதிராஜன் தொடை தட்டினான். அவன் சபை அவனை ஆமோதித்தது.

''மிகச் சிறந்த ஒரு ஒற்றர்படையை தயார் செய்யுங்கள். ஏதேனும் ஒரு வேடத்தில் மேலைசாளுக்கியத்தினுள் போங்கள். மேலைசாளுக்கியம் எப்படி இருக்கிறது என்று எனக்கு தெரிவியுங்கள்.

நான்கு மாதத்திற்குள் எனக்கு மேலைசாளுக்கியத்தின் தலை நகரத்திலிருந்து அங்குள்ள அரசியல் நிலைமை பற்றி எனக்கு தெரிவிக்க வேண்டும்.'' அவன் கட்டளையிட்டு அனுப்பினான்.

சோழ வீரர்கள் கீழை சாளுக்கியம் வழியாக மேலை சாளுக்கியம் நோக்கி போனார்கள்.

அம்மங்காதேவி மயிலையை விட்டு தன் புருஷனோடு கீழை சாளுக்கியம் நோக்கி கிளம்பினாள். இரண்டு நாள் தொலைவில் அரையன் ராஜராஜன் அவளை பின்தொடர்ந்து குறிப்பிட்ட இடத்திற்கு பிறகு இடதுபக்கம் திரும்பி கீழை சாளுக்கியத்தின் எல்லையில் வரிசையாக பாடி வீடு அமைத்துக் கொண்டார். கிட்டத்தட்ட நூறு காத தூரத்திற்கு அவருடைய படைகள் கீழை சாளுக்கியத்தில் மேலை சாளுக்கியம் பார்த்து உட்கார்ந்திருந்தன.

படைவீரர்கள் தங்கிய கிராமங்கள் மெல்ல மெல்ல வளர்ந்த நகரங்கள் ஆவதற்கு வாய்ப்புகள் அதிகம் இருந்தன.

சக்கரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜேந்திர சோழர் பூம்புகார் கடற்கரைக்கு வந்திறங்கினார். அருண்மொழி கோபத்தில் கூவியது கேட்டார். கங்கே யாதவை அரையன் ராஜராஜன் அம்பெய்து கொன்றது கேட்டார். இது பற்றி செய்தி கொண்டு வந்தவனை அருகே அழைத்து கொன்றதற்கு என்ன காரணம் இருக்கும் என்று கேட்டார்.

''ஒரே ஒரு காரணம்தான். அவன் சிறிது இடைவெளி கொடுத்திருந்தாலும் ஏதோ ஒரு வகையில் தப்பித்துப் போய் இருப்பான். அவன் தப்பிப்பது என்பது நடக்கவே கூடாத ஒரு விஷயம் என்று அரையன் ராஜராஜன் நம்பினார். அது உங்களுக்கு ஆபத்தாகுமா என்பதைவிட இராஜாதிராஜன் தாக்கப் பட்டு விடக்கூடாது என்பதில் கவனமாக இருந்தார். அடுத்த தலைமுறையை அவன் ஆடவைப்பான் என்று கணக்கு போட்டார். அதனாலேயே அவனை நிற்க வைத்து கொன்றார்.'' இந்த பதில் இராஜேந்திரருக்கு போதுமானதாக இருந்தது. அருண்மொழிபட்டன் குதித்தது தவறோ என்ற எண்ணம் வந்தது.

அருண்மொழிபட்டனிடம் மரக்கலத்தில் ஏறி தனியே பேசினார். வீரமாதேவியை அருகே வைத்துக் கொண்டார்.

''எப்படி தப்பித்து போக முடியும். தப்பித்து போகும்படியாகவா நம்முடைய சிறைச்சாலைகள் இருக்கின்றன. கங்கே யாதவ்

ஒரு சிறையில் இருக்கிறான் என்றால், அந்த சிறையை சுற்றி ஆயிரம் பாதுகாப்பு வீரர்கள் இருக்க வேண்டாமா, அப்படி செய்ய முடியாதா. அதற்கு திறன் இல்லையா. கைகட்டி மண்டியிட்டவன் நெஞ்சிலே அம்பு விடுவது என்பது ஏதோ நாயை, பன்றியை கொல்வதுபோல இருக்கிறது.

கங்கே யாதவ் ஒரு தளபதி. ஒரு போர் வீரன். இப்படி கொன்றது ஒரு கேவலமான விஷயம். நல்ல வீரனுக்கு இது அடுக்காது, அரையன் ராஜராஜன் நல்ல வீரனல்ல.''

''கங்கே யாதவால் என்ன உபயோகம் என்று இப்படி கத்து கிறாய். அரையன் ராஜராஜன் மீது உனக்கு பொறாமை, போட்டி, அதை எல்லா விதத்திலும் காட்டிக் கொண்டிருக்கிறாயா.''

''சொல்லுங்கள், உங்கள் வாயார என்ன வேண்டுமானாலும் சொல்லுங்கள். என்னை இழிவுபடுத்துங்கள். அதற்காக நான் அஞ்சமாட்டேன். அரையன் ராஜராஜன் சரிதான் என்று கடைசி வரை ஒத்துக்கொள்ள மாட்டேன். அரையன் ராஜராஜன் தவறு என்று இறுதிவரை சொல்லிக் கொண்டிருப்பேன். இதை தடுத்தாலும், மறுத்தாலும் சரி. நீங்கள் என் பேச்சை கேட்க வேண்டிய அவசியம் இல்லை.

கங்கே யாதவ் இருந்தால் அடுத்த தலைமுறை அரசனான ஆகமவல்லனை நோக்கி நாம் நகர முடியும். ஜெயசிம்மன் ஒழிந்துவிட்டான் என்பது தெளிவாகத் தெரிகிறது, உங்களுக்குண்டான அகவைதான் அவனுக்கும். அறுபதில் இருப்பினும் அவனுக்கு ஆட்டம் அதிகம். மது குடிப்பதில் நாட்டம் அதிகம். அதனால் அவன் உடல் தளர்ந்துவிட்டது.

மேலை சாளுக்கியம் போரில் கடுமையாக தோற்கடிக்கப்பட்டிருக்கிறது. மிகப் பெரிய நஷ்டங்களை அனுபவித்திருக்கிறது. ஜனங்கள் குற்றுயிரும், குலை உயிருமாக வாழ்கிறார்கள். மிகப் பெரிய தலைவர்கள் எல்லாம் கொல்லப்பட்டு விட்டார்கள். வழி நடத்த யாருமே இல்லை என்கிற எண்ணம் மக்களிடையே வந்துவிட்டது. இந்த தோல்விக்கு என்ன காரணம் என்ற கேள்வி எழத்தானே செய்யும். அப்பொழுது யாரால் இந்த தோல்வி என்ற அலசல் நடக்கத்தானே செய்யும். இதைத் தொட்டு அதைத் தொட்டு அவரை தொட்டு இவரை தொட்டு

கடைசியில் ஜெயசிம்மன் தலையில்தானே விழும். ஜெய சிம்ம னுக்கு போதவில்லை. அவன் குடிவெறியன். கும்மாளக்காரன் என்றல்லவா பேச்சு விழும். இதே அவன் ஜெயித்திருந்தால் அந்த குடிவெறியும், கும்மாளமும் அங்கீகரித்திருப்பார்கள். தோற்றவுடன் அதை குற்றம் சொல்கிறார்கள். இப்படி நடக்கும் என்பது இயல்பல்லவா.

அப்படியானால் இதற்கு மாற்று என்ன என்று அங்குள் ளோர் நினைக்க மாட்டார்களா. அரசனும், அரசனுக்கு உதவி யான அந்த சபையும் சரியாக இல்லை. அவன் சேனாதிபதிகள் சரியாக இல்லை. மாராயாவும், புனித ராசாவும், கங்கே யாதவும் அரசனுக்கு தோல்வியை கொண்டு வந்து கொடுத்து விட்டார் கள் என்று பேச்சு எழுந்திருக்க கூடுமல்லவா. அப்பொழுது யார் சிறந்த அரசர். அடுத்தபடி யார் என்கிறபோது ஆகமவல்ல னும், ஆகம வல்லனுக்கு துணையாக இருக்கின்ற சபையும் பேசப்படும் அல்லவா.

ஜெயசிம்மனை நகர்ந்து கொள்ளச் சொல்லி மறைமுக மாக கனம் கொடுத்து ஆகமவல்லனை தூண்டி விடுவார்கள் அல்லவா. இது மேலை சாளுக்கியத்தில் இந்நேரம் நடந்திருக் குமே. ஆகமவல்லன் ஆட்சி வந்திருக்குமே.

அப்படி ஒரு ஆட்சி மாற்றம் ஏற்பட்டால், நிர்வாக மாற்றம் ஏற்பட்டால் யார் அந்த சபை, யார் ஆகமவல்லன். என்ன நடக் கிறது மேலை சாளுக்கியத்தில் என்ற விவரங்கள் நமக்கு வந்து இருந்தால் அது நம்மை விட நாளை முடிசூட்டப் போகும் இராஜாதிராஜனுக்கு மிக உதவியாக இருக்குமல்லவா. உங்கள் தந்தை இப்படித்தானே உங்களுக்கு பல உதவிகள் செய்து விட்டுப் போனார்.

கீழைசாளுக்கியத்தை, உறுதி செய்து கொள்ள மேலை சாளுக்கியத்தின் மீது படை எடுப்பது என்ற திட்டத்தை நிறை வேற்றினார். அப்பொழுது மேலை சாளுக்கியம் நோக்கி நாம் நகர வேண்டுமென்றால் பாண்டியர்களையும், சேரர்களையும் அடக்கி வைக்க வேண்டும் என்ற எண்ணத்தை ஏற்படுத்தி பல காதம் கடந்து சேரனை முதுகெலும்பு உடைத்தார். என்ன அருமையான திட்டம். பாண்டியர்களை சிதற அடித்தார். ஐந்து அரசர்களை உண்டாக்கினார். ஏற்கனவே சண்டையில் ஈடுபட்

டிருந்த பாண்டியர்கள் இப்பொழுது ஐந்து தலைவர்களுக்கு கீழே மாட்டிக் கொண்டு விழிக்கிறார்கள். வெல்வதற்கு எளிதாகி விட்டது.

திருமுனைப்பாடியும், கங்கநாடும், நடு நாடும், தொண்டை நாடும் நமக்கு சமாதானமாக, உறுதுணையாக இருக்க அவ ருடைய அரசியல் தந்திரமல்லவா காரணம். அதனாலல்லவா உங்களுக்கு வெற்றி எளிதாயிற்று. கங்க நாட்டை நாம் பகைத் திருந்தால் கூட நமக்கு பலவீனம் ஏற்பட்டிருக்குமே. கங்க தேசத்து அரசர்களை நமது படையில் மிகப் பெரிய பதவியில் அவர் அமர்த்தினாரே, சோழ தேசத்தின்மீது நல்ல எண்ணம் ஏற்படுத்தினாரே. மண வினைகள் நடத்தினாரே.

இதையெல்லாம் அரையன் ராஜராஜன் யோசித்திருப்பாரா. கங்கே யாதவ் ஒரு முக்கியமான விஷயம். இனிமேல் நீங்கள் உள்ளே ஆள் அனுப்பி, எவரையாவது பிடித்து பொன் கொடுத்து அங்கிருந்து விஷயங்கள் வாங்குவதை விட கங்கே யாதவோடு பேசி, பேசி மூளை சலவை செய்து அவனிடமிருந்து விஷ யங்கள் வாங்கியிருக்கலாம். நான் அந்த இடத்தில் இருந்தால் கடைசி வரை கங்கே யாதவை கொன்றிருக்க மாட்டேன். குறைந்த அளவு உணவு கொடுத்து உயிர் வாழ வைத்திருப் பேன். அவன் மெலியச் செய்திருப்பேன். பேசும் அளவிற்கே தெம்பு, வலிவு கொடுத்திருப்பேன். நம்முடைய மருத்துவர் களை விட்டு உடல் வலிவை குறைக்கக்கூடிய மருந்துகள் கொடுத்திருப்பேன். தப்பிக்க முடியாத, வெட்டினால் ஒழிய விலக்க முடியாத கால் விலங்கை அவனுக்கு பூட்டி வைத்திருப் பேன்.

சீனர்களிடமிருந்து நம்முடைய வணிகர்கள் கற்று வந்த பல்வேறு சித்ரவதைகள் உண்டு. அயர்ந்து தூங்கும்போது முகத் தில் குளிர்நீர் கொட்டி எழுப்புவது, உளர வைப்பது, கேள்வி கேட்பது. மறுபடியும் உளர வைப்பது பிறகு அவனை நீர் தொட் டிக்குள் பூட்டு போட்டு வைப்பது, கழுத்தளவு நீரில் அவன் இருப்பான். தூங்க முடியாது. தூங்க முடியாத நேரத்தில் தூங்கு வதற்கு விடு என்று அவன் கெஞ்சுகிற நேரத்தில் அவனோடு பேசி விஷயங்களை வரவழைப்பது.

எதற்கு அடிக்க வேண்டும். எதற்கு கொல்ல வேண்டும். ஒரு ஈட்டி தூரத்தில் நின்று கொல்வதா. ஆபாசம். ஆபாசம். வீரனை நடு அரச சபையில் இராஜராஜன் என்கிற தூதுவனை பீமன் என்கிற அரசன் அடித்து கொன்றபோது எப்படி துடித்துப் போனோம். எப்படி கோபப்பட்டோம். அந்த கோபம் இப்பொழுது ஆகமவல்லனுக்கு வராதா. எதற்கு தேவையில்லாத இந்த சீற்றத்தை ஏற்படுத்தினோம். இதனால் என்ன லாபம்.''

இராஜேந்திர சோழர் திகைத்தார். இவன் பக்கமும் சரியாக இருக்கிறதே என்று யோசித்தார். வீரமாதேவி புருவம் உயர்த்தினாள்.

அருமையான ஆட்களை வைத்திருக்கிறீர்கள், இது சோழ தேசத்திற்கு கிடைத்த வெகுமதி, என்னால், உங்களால் இங்கு புலிக் கொடி உயர்ந்து பறக்கிறது என்பதில் எனக்கு ஒப்புமை இல்லை, இப்படிப்பட்ட ஒரு சபை இராஜாதிராஜனுக்கு அமைய வேண்டுமே, அந்த வாசுதேவ் நாராயணனும், நீலகங்க யரும் இதைப்போல உதவ வேண்டுமே என்று எனக்கு ஏக்கமாக இருக்கிறது. இவர்கள் இவ்வளவு திறன் உள்ளவர்களா என்ற கேள்வி வருகிறது,

அருண்மொழிபட்டன் சொல்வதுபோல நாம் விதியின் கைப்பாவைகள். நாமா ஜெயிக்கிறோம். இல்லை என்பது தெள்ளத் தெளிவாகவே தெரிகிறது. இதை ஏற்றுக் கொள்ள மறுப்பது வெறும் கர்வம்தான்.

அவர்கள் மரக்கலம் விட்டு கீழிறங்கினார்கள். மரக்கலம் தயாரிப்பதை சக்கரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜேந்திர தேவர் பார்வையிட்டார். கொற்கையிலிருந்து* வந்த புதிய மரக்கலன் களில் ஏறி பார்த்தார். ஐநூறு பேர் கொண்ட வீரர்கள் உள்ளே பயணிக்க வேண்டும். ஏறுங்கள் ஐநூறு பேர் என்று ஐநூறு பேரை ஏற்றினார். தானே சுக்கானை பிடித்தார். குமட்டி வாந்தி எடுத்த வீரர்களை பிரித்தார். வயிறு சரி செய்யச் சொன்னார். உணவு கட்டுப்பாடுகளை விதித்தார். கலபதிகளை அவர் கூட்டத்திலிருந்து நியமித்தார். தரையில் இருப்பவர் தளபதி. கடலில் பயணிப்பவர் கலபதி+. அவருக்கு தனித்த கேயூரங்கள்

---

* கொற்கை: இன்று தூத்துக்குடி.

+ கலபதி : கலத்தின் நாயகன்.

செய்யப்பட்டன. குட்டன் கணவதி ஒரு கலபதி. சிவஸ்வாமி இன்னொரு கலபதி.

நூல் ஏணிகளை சாரம் அமைத்து உயரே கட்டச் சொல்லி வெகு விரைவில் அந்த நூல் ஏணியில் சோழ வீரர்களை ஏறி இறங்கச் சொன்னார். ஒரு சாரத்திலிருந்து இன்னொரு சாரத்திற்கு கயிறு வைத்து அதில் ஊஞ்சலாடி போய் இறங்கச் சொன்னார். உள்ளங்கைகள் உறுதியாக இருக்க மணலை பிடித்து கசக்கச் சொன்னார். மணலை அடித்து பயிற்சி செய்யச் சொன்னார். ஈழத்திலிருந்தும், சேர தேசத்திலிருந்தும் மரக்கலன்கள் நாகைக்கு வந்து சேர்ந்தன என்ற தகவல் வந்தது. அவர் நாகைக்கு பயணப்பட நாள் குறித்தார்.

பயம் உள்ளவர்களை படகில் ஏறி ஐந்துபேர் பத்து பேராக நாகைக்கு ஒற்றை பாய்மரம் விரித்து வரச் சொன்னார். பயம் போகட்டும் என்று வற்புறுத்தினார். அவரும், வீரமாதேவியும் புரவியில் ஏறி நாகைக்கு வந்தார்கள்.

நாகை பெரும் அமர்க்களமாய் இருந்தது. இரவு பகல் எந்நேரமும் உணவு கடைகள் திறந்திருந்தன. எல்லா இடங்களிலும் ஆட்டமும், பாட்டமும் நடந்து கொண்டிருந்தன. பொது மகளிர் கண் அசைந்து மறவர்களை வீட்டிற்கு வரச் சொன்னார்கள். அந்தணர்களால் நடத்தப்படும் சைவ உணவு விடுதியும் அதிகம் இருந்தன.

குதிரைகளை மிதவையில் ஏற்ற பழக்கப்படுத்தினார்கள். அலைகள் தாண்டி மிதவைகள் உள்ளே போக குதிரைகள் நான்கு கால்களையும் ஊன்றி உறுதியாக நின்றன. கயிறு கட்டி மரக்கலத்தில் தூங்கும்போது மிரண்டு கனைத்தன, இரண்டு, மூன்று முறை பழக்கப்படுத்திய பிறகு அமைதியாக இறங்கின.

இன்னொரு பக்கம் அக்கச்சாலை சிறிதாக இருந்ததைப் பெரிதாக மாற்றினார்கள் கரிய நிறத்து அக்கச்சாலை புகை ஊரை சுற்றி வந்தது. நாணயம் அடிக்கும் சத்தம் இரவு பகலாக கேட்டுக் கொண்டிருந்தது. மரக்கலத்தில் ஒருநாள் அமைதியாக நின்றிருந்த குதிரைகளை கால் உருவி வேகமாக ஓட்டுவதற்கு பயிற்சி கொடுத்தார்கள். அமைதியாகவும் இருக்க வேண்டும். ஓடும் நேரத்தில் ஓட்டமாகவும் இருக்க வேண்டும் என்று குதிரைகளோடு வீரர்கள் பேசினார்கள். மரத் தச்சர்களுக்கு

மிகப் பெரிய மரியாதை இருந்தது. கம்மாளர்களுடைய பூணூல் கூட வேலை நேரத்தில் கருப்பாகிவிட்டது, உடம்போடு உடம் பாக நிறமற்று இருந்தது. ஆனால் மரத்தச்சர்களுடைய பூணூல் வெள்ளை வெளேர் என்று முதுகில் தெரிந்தது. இது இராஜேந் திர சோழருடைய கொடை, அவர்கள் செருப்பணிந்து, மேல் துண்டு அணிந்து, தலைப்பாகை கட்டிக் கொண்டு, வாயில் வெற்றிலை பாக்கு போட்டு குதப்பிக் கொண்டு கடல் நோக்கி கம்பீரமாக நடந்தார்கள்.

மரக்கலன்கள் கட்டும் இடத்தில் சோதனைகளுக்கு பிறகு உள்ளே புகுந்தார்கள். பெரிய ஆதுரச்சாலை ஒன்று அவர்களுக் காகவே கட்டப்பட்டது, பொது மக்களும் வந்து உடம்புக்கு சரியில்லை என்றால் வைத்தியரிடம் கலந்தாலோசித்து விட்டு போனார்கள். இன்னும் சிலருக்கு நாட்டியம், நாடகம், கூத்து போன்றவற்றில் முதலிடம் ஒதுக்கப்பட்டது. தச்சர்கள் இல்லாத மரக்கலமா. மரக்கலம் இல்லாத போரா. போர் இல்லாத ஒரு வாழ்க்கையா என்று வீரர்கள் பேசிக்கொண்டார்கள்.

இரும்பு உருக்குவதும், நீண்ட ஆணிகள் செய்வதும், மரக்கலத்தை இணைக்கும் இரும்புப் பட்டைகள் செய்வதும், மரக்கலத்தின் முன் பக்கம் இடித்து சேதமடையாமல் இருக்க அங்கு இரும்பு சலாகை அடிப்பதும் நடந்தது. அதற்குண்டான கருவிகள் இரும்பு எந்திரங்கள் செய்யப்பட்டன. கிட்டத்தட்ட மூன்று ஆள் உயரத்திற்கு மரக்கலத்தின் முன் பகுதியில் லாடம் போல் அடிக்க ஒரு இரும்பு அரை வளையத்தை எடுத்துக் கொண்டார்கள். மரக்கலத்தில் ஏறி நின்று சாரம் கட்டி அதில் நின்றபடி ஊதற் காற்றுக்கு நடுவே அந்த இரும்பு சலாகையை மரக்கலத்தோடு பிணைந்தார்கள். அந்த மரக்கலன் நேரே போய் இன்னொரு மரக்கலத்தை முட்டுகிறது என்றால் முட்டிய மரக்கலம் சிதறிப் போகும். அவ்வளவு உறுதி, அவ்வளவு அழகான இணைப்பு அந்த இரும்பு சலாகையில் இருந்தது.

நாகையிலிருந்து உள்பக்கம் வெகு தொலைவே தென்னந் தோப்புகள் இருந்தன. தேங்காய்கள் உரிக்கப்பட்டு நார் பிரிக்கப் பட்டது, வெளி ஊரிலிருந்தும் நார் பொதிகள் வந்தன. நாகை யிலேயே கயிறு திரிக்கப்பட்டது, மரக்கலத்தின் முக்கிய அங்கம் கயிறு, மரம் முக்கியமென்றாலும், மரத்திற்கு அடுத்தபடி கயிறே

மரக்கலத்தை நிலை நிறுத்துகின்றன. ஆண்களும், பெண் களுமாய் கயிறு செய்யும் தொழிலில் ஈடுபட்டார்கள்.

நாகை தூங்கியது. விடிந்து வெய்யில் கிளம்பிய பிறகே எழுந்தது. கயிறு போதாது என்று கூக்குரல் ஏற்பட, அங்கங்கே நாடகங்கள் நிறுத்தப்பட்டன. தீப்பந்தங்கள் சொருகி கயிறு திரிக்கும் வேலை இரவு நேரமும் நடத்தினார்கள். கயிறு திரிக் கும் கிராமவாசிகளுக்கு வீரர்கள் உதவி செய்தார்கள். 'நீ ஏன் கயிறு எடுத்துக் கொண்டு வருகிறாய், நீ கயிறு திரித்துக் கொண் டிரு, எடுத்துப் போவதும், கொண்டு வருவதும் நாங்கள் செய் கிறோம்.' என்று ஏற்பாடுகளை மாற்றினார்கள். அதிகாரிகள் திட்ட மிட்டார்கள்.

மரப்பலகைகள் கயிறால் ஒன்றோடொன்று இறுக்கமாக பிணைக்கப்பட்டன. மரப் பிசின்கள் கூடை கூடையாக வெளி இடத்திலிருந்து உள்ளே வந்தன. அவைகளும் காய்ச்சப்பட் டன. கயிறுகள் இணைத்ததும் தடவப்பட்டன. சாரத்திலிருந்து நாகையை கவனித்த புலவருக்கு அந்த நாகை பெரும் போருக் குப் பிறகு இரவு நேரத்தில் சிதை அடுக்கி எரிவதுபோல் தோன் றியது. ஆனால் போர் இனிமேல் தான் துவங்கப் போகிறது. ஒரு பக்கம் அந்தணர் குடியிருப்பில் பாயஸம் கொதித்துக் கொண் டிருந்தது, இன்னொரு பக்கம் வேறொரு குடியிருப்பில் மாமி சங்கள் வெந்து கொண்டிருந்தது. இன்னொரு பக்கம் அக்கச் சாலையில் தங்க நாணயத்திலிருந்து பெரிய புகையோடு கூடிய தீ பரவியது. இரும்பு சலாகைகள் அமைக்க படேர் படேர் என்று நெருப்பு துகள்கள் வெடிக்க இன்னொரு தழல் எரிந்து கொண் டிருந்தது. தீப்பந்தங்கள் நட்டு கயிறு திரித்துக் கொண்டிருந் தார்கள். தீப்பந்தங்கள் ஒளியோடு வீரர்கள் நடந்து கொண் டிருந்தார்கள். வேறொரு பக்கம் பிசின்களை எரித்து காய்ச்சி அடித்துக் கொண்டிருந்தார்கள். இன்னொரு பக்கம் மரக்கிளை களை அடுக்கி அதன்மீது களிமண் பூசி உள்ளுக்குள் நெருப்பு வைத்தார்கள். மரக்கரி வேண்டும். அங்கிருந்தும் வெளிச்சமும், புகையும் வந்தன. ஒரு ஊரே சுடுகாடு போல காட்சியளிப்பது போல அந்தப் புலவருக்குத் தோன்றியது.

போருக்கு தயாராகும் முன்பும் அந்த இடம் மரணத்தின் வாசனையை பெற்றிருக்கிறது, போருக்கு பின்பும் அவ்வித

வாசனை அதற்கு இருக்கிறது. போர் என்றால் மரணம். மரணம் என்றால் போர் என்று அவர் கவிதை எழுதத் துவங்கினார்.

களிமண் பூசிய அந்த மரக்கட்டைகள் எரிந்து கரிக்கட்டைகள் ஆயின. அந்த கரிகட்டைகள் நீர் தெளித்து சூடு குறைக்கப்பட்டு மரக்கலன்களுக்கு எடுத்து போகப்பட்டன. பெரிய கட்டைகளை எரியவிடுவதை விட ஒரு இரும்பு சலாகையில் இப்படி கரித்துண்டுகளை போட்டு எரிப்பது நல்லது. மரக்கலனுக்கு தீங்கு நேராது இருக்கும் என்று சொல்லப்பட்டது.

சக்கரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜேந்திர தேவர் வந்து நாகைக்குள் குடியேறியதும் அந்த ஊரின் பரபரப்பு மேலும் அதிகரித்தது. இராஜேந்திர தேவரை பார்க்க மாளிகையைச் சுற்றி மக்கள் நின்றார்கள். அவ்வப்போது இராஜேந்திரசோழரும் வெளியே வந்து அவர்களிடம் பேசிவிட்டு போனார். ஆனால் கெடுபிடிகள் அதிகம் இருந்தன.

''பார்க்க விட மாட்டேன்கிறார்களய்யா.'' உரத்த குரலில் ஜனம் கூவியது. அவர் கீழிறங்கி வந்தார்.

''அவர்கள் அவர்கள் வேலையை செய்கிறார்கள். நாம் நம் வேலையை செய்வோம். உட்கார்ந்து பேசுவோம்'' என்று சில கிழவர்களை அருகே உட்கார்ந்து நாட்டு நலம் பேசினார். நாலு கிழவர் பேசினால் அந்த நகரமே பேசியது போல சந்தோஷம் அடைந்தது. அது மக்கள் இயல்பு.

அருண்மொழிபட்டனை அழைத்து ஒரு நாள் விடியலில் நாகப்பட்டிணத்திற்கு சற்று தள்ளியிருந்த ஆனைமங்கலம் என்ற கிராமத்தை பார்க்க வேண்டும் என்று இராஜேந்திர சோழர் ஆசைப்பட்டார். ஆனைமங்கலம் என்ற கிராமம் மாமன்னர் இராஜராஜரால் இராஜேந்திரசோழர் தந்தையால் ஒரு புத்த விகாரம் கட்ட தானமாக கொடுக்கப்பட்டிருந்தது. அந்த புத்த விகாரத்தில் புத்தர் வழிபாடு நடந்தது.

மூன்று மாடிகள் கொண்ட உயரமான ஒரு கோபுரம் போல அந்த விகாரம் இருந்தது. மிக அகலமான கூடங்களும், அந்த கூடங்களை ஒட்டி தனித்த அறைகளும் அந்த அறைகளுக்கு அப்பால் திறந்தவெளி நடைகளும் இருந்தன. ''அதுதான் படகு செலுத்துவதற்கு, வழி காட்டுவதற்கு தோதாக இருக்கிறது. அதை

நாங்கள் விகாரம் என்று சொல்வதில்லை. சீன கோபுரம் என்று சொல்கிறோம்.''

''சீனர்களா கட்டுகிறார்கள்.''

''இல்லை. சீனர்களின், கட்டிடம் போலத்தோற்றமளிக்கிறது. ஸ்ரீ விஜயத்து சிற்பிகள்தான் செய்கிறார்கள்.''

''வேலை முடிந்து விட்டதா.''

''இல்லை, போன வாரம் வரை நடந்து கொண்டிருந்தது. நீங்கள் இங்கு வருவது தெரிந்ததும் சிற்பிகள் மரக்கலம் ஏறி அவர்களுடைய இடத்திற்கு போய் விட்டார்கள்.''

''ஏன் நான் என்ன செய்யப் போகிறேன்.''

''ஒரு பயம்தான். இரண்டு தேசத்திற்கும் நடுவே பகை வந்துவிட்டது. நம்மை பார்த்தால் கொல்லாமல் போக மாட்டார் என்று அவர்கள் நடுங்கி மரக்கலம் ஏறிவிட்டார்கள்.''

''அடேய், அப்படி ஏதும் செய்யப்போவதில்லை. இப்பொழுது யார் இருக்கிறார்கள்.''

''புத்த பிட்சுகள். ஒரு நூறு பேர்க்கு மேல் இருக்கிறார்கள்.''

''அவர்களை பார்த்து வருவோம்.'' அருண்மொழிபட்டன் அவர் கிளம்பும் முன்பு அவர் காதோடு ஒரு விஷயம் சொன்னான்.

வேறு ஒரு அரண்மனையில் ஒரு அந்தணர் வசம் மிகப் பெரிய செப்பேடுகள் இருந்தன. அதை பார்ப்பதற்கு இராஜேந்திர சோழரை அழைத்துப் போனான்.

தடிமனான வளையத்தில் இராஜராஜரின் முத்திரையோடு செப்பேடுகள் இருந்தன. சோழர் குலத்தின் பரம்பரை என்ன என்பது வடமொழியிலும், தமிழிலும் எழுதப்பட்டிருந்தது.

ஆனை மங்கலம் என்கிற ஊரை சூடாமணிவர்மன் என்ற ஸ்ரீவிஜயத்து அரசன் தானமாகக் கேட்டுக் கொண்டதற்கு இணங்க புத்த விகாரம் கட்ட இராஜராஜர் ஓலை எழுதி கொடுத்திருக்கிறார். அவர் உத்தரவின் பேரில் பெண் யானையை அழைத்துக் கொண்டு போய் நிலம் அளந்து, நிலங்களின் எல்லைகளில் கல்லும், கள்ளியும் நாட்டி கல்லால் எல்லை வகுத்து கிட்டத்தட்ட தொன்னூற்றைந்து வேலிகளை, நிலத்தை அவர்

தானமாக கொடுத்திருந்தார். அந்த இடத்தில் உள்ள வரிகள் அத்தனையும் நீக்கியிருந்தார். ''அங்கு கட்டடம் கட்டவும், வாய்க்கால் மாற்றிக் கொள்ளவும், குடிசைகள் அமைத்துக் கொள்ளவும் இனிமேல் சோழ அரசரை கேட்க வேண்டிய தில்லை. புத்த விகாரத்தின் தலைமைப்படி அவை நடக்கப்பட வேண்டும், அது அவருக்கு சொந்தமான ஊர்' என்று ஓலை யில் எழுதி, அந்த ஓலையில் என்ன எழுதப்பட்டதோ அது செப்பு பட்டயத்தில், வடிக்கப்படலாம் என்றும் உத்தரவிட்டிருந்தார்.

ஓலை காணாமல் போகக்கூடும், ஒடிந்து விழுந்து விடக் கூடும், பொடிப் பொடியாக மாறி விடக்கூடும். சில வருடங் களில் அழிந்துவிடக்கூடும். ஆனால் தாமிரப்பட்டயம் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் இருக்கும். அதனாலேயே அந்த புத்த பிட்சுகளுக்காக, சோழ பண்டிதர்கள் ஓலையில் எழுதியதை பிரதி எடுத்து செம்பிலும் வெட்டச் சொன்னார்கள். இராஜேந் திரரின் உதவியை நாடினார்கள்.

சக்கரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜேந்திரதேவர் தனது ஆறாம் ஆட்சி ஆண்டில் அதற்கு உத்தரவாதம் கொடுத்தார். நாகையில் உள்ள பெரிய மனிதர்கள் முன்னிலையில் அது மிக கவனமாக உருவாக்கப்பட்டு சோழ அதிகாரிகளிடமே இருந்தது. புத்த பிட்சுக்களிடம் மூல ஓலை மட்டுமே இருந்தது.

''இதை நாம் வைத்துக் கொண்டு என்ன செய்வது. கொண்டு போய் புத்த விகாரத்தில் கொடுத்து விடு.''

''இப்பொழுது நிலைமை மோசமாக இருக்கிறதே.''

''என்ன மோசம்.''

''நமக்கும் ஸ்ரீ விஜயத்திற்கும் உறவுகள் சரியில்லையே.''

''அதனால் என்ன அருண்மொழி, கொடுத்த வாக்கு வாக்குதானே. வாக்கு கொடுத்தது என் தந்தையல்லவா, அதை நிறைவேற்ற வேண்டியது என் கடமை அல்லவா. தகப்பன் கொடுத்த வாக்கை இல்லை என்றா என்னை சொல்லச் சொல் கிறாயா. உறவுமுறை சரியாக இல்லையென்பதால் செய்து கொடுத்த சத்தியம் எழுதி கொடுத்த சாசனம் இல்லையென்று ஆகிவிடுமா. இது நம்முடைய சொத்து அல்ல. அருண்மொழி, ஆனை மங்கலம் கிராமம் புத்த துறவிகளுக்கே அந்த விகாரைக்கே

சொந்தமானது, அவர்கள் இந்த ஆனைமங்கலத்தை அனுபவிக் கலாம் என்று எழுதி கொடுக்கப்பட்ட சாசனம்.அவர்களிடம் தானே இருக்க வேண்டும், நம்மிடம் எதற்காக, கொண்டு போய் புத்த பிட்சுகளிடம் கொடுத்துவிடு, இது நம்மிடம் இருப்பது சரி யல்ல.''

அருண்மொழிபட்டனுக்கு அதிர்ச்சியாக இருந்தது.

ஏதோ ஒரு காலத்தில் நல்ல உறவுநிலை இருந்தபோது இப்பொழுது ஆண்ட மன்னனின் தந்தை எழுதிக் கொடுத்த சாசனம் அது, ஓலை தாமிரப் பட்டயத்தில் அடிக்க நாளாகியது. தாமிர பட்டயத்தில் அடிக்கச் சொன்னபோது உறவுமுறை நன்றாகத்தான் இருந்தது, ஆனால் இன்று சாசனம் எழுதி பல ஆண்டுகளுக்குப் பிறகு உறவுமுறை முற்றிலும் சேதமடைந்து வணிகர்கள் கையை அறுத்து ஒட்டவைத்து இப்படியே போய் கும்பிட்டுக் கொள் என்று இந்த மதத்தை இழிவுபடுத்தி, சோழ தேசத்தை அசிங்கப்படுத்தி, சோழ மரக்கலத்தை மடக்கி, சூறை யாடி அந்த மரக்கலன்களை எரியூட்டி, மரக்கலத்தில் உள்ள மாலுமிகளை வெட்டி கொன்று, இனி வியாபாரம் நடத்த முடி யாது. என்னிடம் கொண்டு வந்து விற்று விடு. நான் அதை சீனத்திற்கு விற்கிறேன் என்று அட்டூழியம் பேசி, அகந்தை யோடு நடந்து கொண்ட பிறகும் இந்த சாசனம் செல்லுபடி யாகும், இது அவர்கள் சொத்து என்று ஒரு அரசன் சொல்வானே யானால் அவன் அரசன் அல்ல தெய்வம். இப்படி ஒரு தர்மத் திற்கு அவன் கட்டுப்பட முடியுமென்றால் அவனுக்கு கடவுளின் துணை நிச்சயம் இருக்கும்.

''என்ன அதிசயமாக பார்க்கிறாய் அருண்மொழி.''

''இவ்வளவு மோசமான நிலைமை நமக்கும் அவர்களுக்கும் ஏற்பட்ட பிறகும் சாசனம் உண்மை என்கிறீர்களே அதுதான் ஆச்சரியமாக இருக்கிறது.''

''இது என் தந்தை செய்து கொடுத்த சத்தியம். நான் எப்படி மீறலாம். வேண்டுமென்றால்கூட இரண்டு வாக்கியங்களை சேர்க்கச் சொல். எனக்கு பின்னே வருகின்ற சந்ததிகள், சோழ அரசர்கள் இந்த சாசனத்தை நிறைவேற்றுவதே, இதை கடை பிடிப்பதே எனக்கு செய்யும் மரியாதை என்று எழுதிக் கொள்.'' அவர் உத்தரவிட்டார்.

முப்பத்தோரு செப்பு பட்டயங்கள் கொண்ட மிகப்பெரிய வளையத்தில் உள்ள அந்த தொகுப்பை மூன்று வீரர்கள் தூக்கிக் கொண்டு போனார்கள். அதற்கு மாலையிட்டு முரசு முழங்க, எக்காளம் ஊத, புலிக்கொடிகள் பிடித்து நடந்து போய் புத்த விகாரைக்குள் இறங்கினார்கள்,

அந்த விகாரையை தொலைவிலிருந்து இராஜேந்திரர் பார்த்தார்.

''இது என்ன. என்ன கலை இதில் இருக்கிறது, ஒரு மொட்டை கோபுரமாக மூன்றடுக்கு கோபுரமாக அல்லவா இருக்கிறது. செங்கல், சுதை மணல் அவ்வளவு தானே. ஏன் இவர்களுக்கு கற்றளிகள் செய்யத் தோன்றவில்லை. காலத்தால் அழிக்க முடியாதபடி ஒரு விஷயம் இருக்க வேண்டுமென்று ஏன் புத்த பிட்சுகளுக்கு தெரியவில்லை, உள்ளே தங்கத்தால் ஆன புத்தர், அதைத் தவிர மற்ற தேவதைகள் இவைகளை பாது காக்க சரியான கோட்டை வேண்டாமா.''

''புத்தர் பார்த்துக் கொள்வார் என்கிறார்கள்.''

''அதெப்படி புத்தர் பார்த்துக் கொள்ள முடியும், அலட்சிய மாக இருக்கிறார்கள் என்று அர்த்தம், காலத்தின் முன் இந்த கோபுரம் நிற்காது, தஞ்சை பெரிய கோவிலும், கங்கை கொண்ட சோழீஸ்வரமும் காலத்தால் அழியாது நிற்கும். இந்த சீன கோபுரம். ஏன் இதை சீன கோபுரம் என்று அழைக்கிறார்கள். சீனத்திலுள்ள கோபுரங்கள் மர வேலைகள் அமைந்ததாயிற்றே, இதற்குப் போய் அந்தப் பெயர் வைக்கலாமா. மொட்டைத் தலை உட்கார்ந்தது போல்தான் இந்த கோபுரம் இருக்கிறது. இது காலத்தால் அழியும். சுண்ணாம்பு கடற்கரையால் கரையும், மரங்கள் உளுத்துப் போகும்.

இவ்வளவு பெரிய நிலம் கொடுத்த பிறகும், இவ்வளவு சொத்துக்கள் இருந்த பிறகும் நல்ல வேலைப்பாடு இல்லாது, உறுதியான கற்கள் இல்லாது இத்தகைய உயரம் கட்டுவது வீண்.''

''ஆனால் உறுதியான சுவர்கள். மிகப்பெரிய செங்கற்கள் இரண்டு பக்கமாக வைத்து சுவர் எழுப்பியிருக்கிறார்கள்.''

''தாங்காது அருண்மொழி, கருங்கல்லின் கம்பீரம் இதில் வரவே வராது, ஏதோ செய்து கொள்ளட்டும். தலைமை புத்த பிட்சுவை வரச் சொல்.'' அவர் அரண்மனைக்கு போனார், தலைமை புத்த பிட்சுவுக்கு செய்தி போயிற்று.

''இந்த புத்த பிட்சு எப்படி.'' நாகையில் உள்ள அதிகாரி களை அருண்மொழிபட்டன் விசாரித்தான்.

''மிகத் தந்திரமானவர். அவர் புத்த பிட்சுவே அல்ல. ஒரு தளபதி போல நடந்து கொள்கிறார். கோபப்படுகிறார். அமைதி யாக இல்லாமல் நாலுபுறமும் அலைகிறார். அடிக்கடி உடம்பை சொறிந்து கொள்கிறார். ஏதேனும் சாப்பிடக் கொடுங்கள் என்று சாப்பிடுகிறார். பிறகு வாய்க்குள் விரல் வைத்து சுழற்றி வாந்தி எடுத்து விடுகிறார். படபடப்பாக இருப்பதால்தான் அவர் பற்களும், தாடைகளும் மென்று தின்பதற்கு அவஸ்தைப்படு கின்றன என்று சொல்கிறார்,

இவருடைய தூண்டுதல்தான் ஸ்ரீ விஜயத்தில் எதிர்ப்பாக கிளம்பி இருக்குமோ என்று தோன்றுகிறது,''

''இவரைப் பற்றி இன்னும் தெளிவாக நமக்கு சொல்வ தற்கு ஆனை மங்கலத்தில் யாரேனும் உண்டா.''

''உண்டு.''

''யாரது,''

''அரியன், சிறுகன் கடம்பன். அவன் ஆனைமங்கலத்தைச் சேர்ந்தவன், மூல ஓலை எழுதிய போதும், அதை பிரதி எடுத்த போதும் நேர் பார்த்தவர், பிறகு செப்பு பட்டயம் எழுதியபோதும் மூல ஓலையிலிருந்து செப்பு பட்டயத்திற்கு சரியாக எழுதப்பட் டிருக்கிறதா என்று சரி பார்த்தவர். கடம்பன் வேளாளன் என்றே அழைக்கப்படுகிறார்.''

''அவரை வரச் சொல்.''

ஐம்பது வயதுக்கு மேற்பட்ட ஒரு முதியவர் வந்து தன்னை கடம்பன் என்று அறிமுகப்படுத்திக் கொண்டார்.

''இந்த புத்த பிட்சுகளின் தலைவருக்கு குறைகள் ஏதே னும் உண்டா.'' அருண்மொழிபட்டன் நிதானமாக விசாரித் தான்.



இதுவும் வங்கம் என்கிற வகை மரக்கலம். யானைகளும் குதிரைகளும் பயணம் செய்யும்.

''உண்டு.''

''என்ன அது.''

''தன்னிடம் மிகப் பெரிய மரக்கலன்கள் இல்லை என்பது அவர் குறை. அவருடையது நாவாய்கள் போன்ற சிறிய மரக் கலன்களே, மூன்று பாய்மரம், இரண்டு தூண்கள் என்று இருப் பதே, அவைகளை செலுத்தக் கூடிய திறமையான் மாலுமி களும் அவருக்கு கிடைக்க வில்லை. ஸ்ரீ விஜயத்திலிருந்து வந்தவர்கள் அதிக நாட்கள் இங்கு தங்க மாட்டேன் என்கிறார் கள். ஸ்ரீ விஜயம் நோக்கி போவதிலேயே குறியாக இருக் கிறார்கள். தடுத்து இருக்கச் சொன்னால், ஒற்றை பாய்மரத்தில் துணிச்சலாகப் போய் இலங்கையின் தென் பகுதியில் திருக் கோவில் துறை என்ற இடத்தில் மரக்கலத்தில் காசு கொடுத்து ஏறி ஸ்ரீ விஜயம் போய் விடுகிறார்கள்.''

''இங்கு தங்காததற்கு என்ன காரணம்.''

''ஆட்டம், பாட்டங்கள் எதுவும் இல்லையே, இந்த ஆனை மங்கலம் முழுவதும் நாடகம், கூத்து, புலால் உண்ணுவதற்கு தடை செய்யப்பட்டு இருக்கிறதே, எல்லாவற்றுக்கும் நாகை போக வேண்டுமே. வாழ்க்கை சந்தோஷமாக இல்லையே என்பது தளபதிகளின், மாலுமிகளின் எண்ணம்.''

''புத்த பிட்சுக்களைத் தவிர, நமக்கு ஸ்ரீவிஜயம் பற்றி, ஸ்ரீ விஜயம் நிலைமை பற்றி பேசுபவர்கள் யாரேனும் உண்டா.''

''உண்டு. இப்பொழுது அவரிடம் இரண்டு தளபதிகள் இருக்கிறார்கள். நாற்பது பேர் கொண்ட மாலுமிகள் கூட்டமும் இருக்கிறது, அவர்கள் எல்லோருமே ஒரு குடுவை மதுவிற்கு எல்லாமும் பேசுபவர்கள்தான். ஆனால் ஸ்ரீ விஜயம் பற்றி அவர் களுக்கு என்ன தெரியும் என்பது கேள்விக்குறியாக இருக்கிறது.

''ஸ்ரீ விஜயம் விட்டு அவர்கள் வந்து நாளாகி விட்டதா?''

''இல்லை.''

''ஏன் நம் வணிகர்களை துன்புறுத்தினார்கள். ஏன் நமது வணிகர்களை அவர்களுக்கு பிடிக்கவில்லை.''

''இது நல்ல கேள்வி, அவர்களில் உளறக் கூடியவர்களை நான் நாகைக்கு அழைத்து வருகிறேன்.

நீங்கள் பேசுகிறீர்களா. அல்லது வேறு யாரேனும் பேசப் போகிறார்களா.''

''இல்லை, நான் பேசப் போவதில்லை. நான் கேட்கப் போகிறேன். அவர்களை அழைத்து வந்து பொதுமகளிர் இல்லத்தில் விருந்து கொடு. அவர்கள் பேசட்டும். நான் பணியாளனாக பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு, மயில் தோகை விசிறிக் கொண்டு அவன் பேசுவதை கேட்டுக்கொள்கிறேன்.''

''ஐயன், உங்களுக்கு எதற்கு சிரமம், நாங்கள் சகல ஏற்பாடும் செய்து விஷயங்களோடு வருகிறோம்.''

''வேண்டாம். நான் காதார கேட்க வேண்டும். அதையும் தவிர என்ன கேட்க வேண்டும் என்று உங்களுக்கு நான் அவ்வப்போது சொல்லியும் ஆக வேண்டும்.'' ஒரு நாடகம் நடத்த அருண்மொழிபட்டன் தயாரானான்.

வங்க தேசத்து நாவாய்கள் வந்து இறங்கின. அந்த நாவாய்களில் உடைந்துபோனால் தப்பித்துப் போகும் சிறு படகுகளும், மிதவைகளும் இருந்தன. இதுதவிர நாற்பது நாவாய்கள் சேர தேசத்தில் வந்து இறங்கின.

சேர தேசத்து இளவரசன் இரவிவர்மன் சோழ கேரளனின் நண்பன். ஒரு நாவாயிலிருந்து கீழ் இறங்கினான். இராஜேந்திர சோழனின் பாதம் தொட்டான்.

''நானும் உங்களோடு ஸ்ரீ விஜயம் வர அனுமதிக்க வேண்டும். சோழதேசத்தின் நல்ல நண்பனாக சேரதேசம் விளங்குகிறது, எனவே சோழப்படைகளோடு நாங்கள் கலந்து கொள்வதில் எங்களுக்கு விருப்பம் உண்டு. வில் வீரர்கள் இருநூறு பேர் என்னுடன் வந்திருக்கிறார்கள். விஷக் குப்பிகளும் இருக்கின்றன. எங்களை முன் அணியில் அனுப்பி ஸ்ரீவிஜயத்தை தாக்குவதற்கு பணிக்க வேண்டும்.

உங்களுக்கு அன்பாக மட்டுமல்ல. இறந்த என் நண்பர், என்னிடம் பிரியாவிடை பெற்றுக் கொண்டு போனவர் உங்கள் மகன் சோழ கேரளனின் நினைவாகவும் நான் சொல்கிறேன். ஒரு குறிப்பிட்ட ஹோரை முடிந்து போகலாம் என்றேன். அவர் காது கொடுத்து கேட்கவில்லை. ஒரு மோசமான ஓரையில்

பயணப்பட்டார். திரும்பி வராமலேயே சென்றார். நஞ்சு அம்பு களால் துளைக்கப்பட்டார் என்று கேள்விப்பட்டேன். நானும் உடன் வந்திருப்பின் விஷ முறிவு மருந்தை உடனடியாக செலுத்தியிருப்பேன். நடப்பதில், கை செயலிழப்பதில் போன் றவை பிரச்சனையாக இருந்தாலும் அவர் உயிரோடு இருப்பார். அவர் மரணம் என்னை உருக்குலைத்துவிட்டது. மிகப் பெரிய கனவானாக, கண்ணியமுள்ள புருஷனாக நடந்து கொண்டார்.

சேர தேசத்தில் பல செல்வங்கள் இருக்கின்றன. அதில் ஒன்று அழகிய பெண்கள். சோழவீரர்கள் யாரையுமே பெண் களிடம் அத்துமீற அவர் அனுமதித்ததேயில்லை, மேலைசாளுக் கியத்தில் சோழதேசம் எப்படிச் சித்ரவதை செய்தது என்பதை நாங்கள் நன்கு அறிவோம், ஆனால் அப்படி ஒரு நிகழ்ச்சி சேர தேசத்தில் நடைபெறவேயில்லை. போர் செய்ய வேண்டு மென்றால் வாள் பிடித்து வந்து போரிடு என்று தான் சகல தளபதிகளுக்கும் செய்தி அனுப்பினார். எல்லோருமே சரண் அடைந்து விட்டார்கள்.

சேர தேசத்தின் விளைச்சலை பெருக்கி, நாவாய் கட்டும் கலையை அதிகரித்து அமைதியான நிர்வாகத்தை உருவாக் கினார். உங்கள் கோவில்களை நீங்கள் பாதுகாத்துக் கொள் ளுங்கள். உங்கள் அரண்மனையை நீங்கள் சீர் செய்து கொள் ளுங்கள். உங்கள் படையை நீங்கள் நிர்வகித்துக் கொள்ளுங்கள், நான் எதிலும் குறுக்கிட மாட்டேன் என்று விலகி நின்றார். அதே சமயம் எங்கள் படையினுடைய நடமாட்டத்தை அவர்கள் கவனித்து வந்தார்கள். தேசம் பாழ்படவில்லை என்பதாலேயே நான் அவரை பணிந்து நடந்து கொண்டேன்.

எனது சிங்காசனத்தில் அவர் உட்காரவேயில்லை. என் குடையை அவர் பறிக்கவே இல்லை. என் கொடியை அவர் அவமானப் படுத்தவில்லை. எனக்கு அருகே ஏன் ஒரு சாண் கீழே ஆசனம் இட்டு அமர்ந்து கொண்டார். நானே அரசன் என்பதை மக்களுக்கு தெரியப்படுத்தினார். சேரதேசம் சோழ தேசத்தை கைப்பற்றியிருக்கிறது என்றே அவர் பேசினார்.

உங்களிடம் அவரைப் பற்றி துக்கம் விசாரிப்பதற்கும் எனக்கு இது ஒரு வாய்ப்பாக எடுத்துக் கொண்டேன். உங்கள் மகனின் நினைவை போற்றுகின்றேன்.''

இராஜேந்திர சோழருக்கு அடிவயிறு கலங்கியது, நெஞ்சு சுருங்கி விரிந்தது, மூச்சு திணறியது, கன்னங்கள் இறுகின. காது களில் எதுவுமே கேட்காத ஒரு ரீங்காரம் ஏற்பட்டது. மண்டை கனத்தது, அந்த இளைஞனை நோக்கி கைகூப்பினார்.

''வாழ்க நீ. சத்திய சந்தனாக பேசுகின்ற உன்னை என் மகனாகவே பார்க்கிறேன். நீயாக வந்து எங்களுடன் கலந்து கொண்டது சந்தோஷம், ஒரு பொழுது சோழத்திற்கு எதிராக இருந்துவிடாதே. இருக்க மாட்டேன் என்று சத்தியம் செய். கடல் தாண்டி போகிறபோது நான் ஜெயித்த உன்னை கூட அழைத்துப் போவது என்பது ஒரு வினோதமான காரியம். ஆபத்தான காரியம். அதை நான் செய்யத் தயாராக இருக்கிறேன்.

உன்னைப் பற்றி, சேரர் குணம் பற்றி என் மகன் சொல்லி யிருக்கிறான். எனவே உங்கள் சத்தியத்தை நம்பி உங்களை எங்களோடு சேர்த்துக் கொள்கிறேன்,''

தண்ணீர் கொண்டு வரப்பட்டது, இராஜேந்திர சோழர் தண்ணீர் எடுத்து அவன் கைகளில் ஊற்றினார். அவன் அதை தரையில் வழிய விட்டான். தன் ஈரக்கைகளால் அவர் புஜங் களை பற்றிக் கொண்டான்.

''நிற்கின்ற நிலத்தின் சாட்சியாக, தொட்டு குளிர்ந்த நீரின் சாட்சியாக, என் தந்தையின் சாட்சியாக, தாயின் சாட்சியாக, என் குலத்தின் சாட்சியாக ஸ்ரீஅனந்த பத்மநாபரின் சாட்சியாக உங்களுக்கு ஒருகாலும் துரோகம் இழைக்க மாட்டேன். இதை என் நண்பன் உங்கள் மகன் சோழ கேரளனின் சாட்சியாகவும் சொல்கிறேன்'' என்று உரக்க அறிவித்தான்.

வீரர்கள் ''சோழம் சோழம்'' என்று முழங்கினார்கள்.

★ ★ ★

அத்யாயம்

101

நாகையில் கரை இறங்கிய சக்கரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜேந்திர தேவருக்கு மிகப் பெரிய வரவேற்பு நாகை மக்களால் தரப்பட்டது. மயிலையிலிருந்து கடல்மல்லை வந்து அங்கு இரண்டு நாள் தங்கி, கடல் மல்லையிலிருந்து குலசேகர பட்டிணம் வந்து அங்கு ஒரு நாள் தங்கி அங்கிருந்து புகாருக்கு வந்து அங்கு வேண்டுமென்ற ஆயுதங்கள் சேகரித்துக்கொண்டு மூன்று நாள் தங்கி பிறகு அங்கிருந்து நாகைக்கு வந்து இறங்கி யிருக்கிறார்.

''நேரடியாக நாகை போயிருக்கலாமே. வீரர்கள் வங்கத் திலிருந்து கீழே இறங்கி படகுகளில் ஏறி கரை போய் மறுபடி யும் படகுகளில் ஏறி வங்கத்திற்கு வருவது அயற்சி அல்லவா.'' உடன் வந்த தளபதிகள் கேட்டார்கள்.

''அது அயற்சியாக இருக்கக்கூடாது என்பதற்குத் தான் இறங்கச் சொல்கிறேன். அது சாதாரணமாக வேண்டும். கரை ஏறுவது என்றால் ஒரு தேரிலிருந்து கீழே இறங்குவது போல் அல்லாது தொலைவிலே வங்கத்தை நிறுத்தி விட்டு, தோணி யிலே ஏறி இடுப்பு ஆழம் இறங்கி பிறகு நீர் சொட்டச் சொட்ட கரை ஏற வேண்டும். பொதிகளும் வரவேண்டும். நம்முடைய ஆயுதங்களும் வர வேண்டும். இவற்றை சுமந்து போகின்ற வலிவு கிழக்கு கடற்கரை ஓரம் இருக்கின்ற நம்முடைய வீரர் களுக்கு வர வேண்டும். மிகப் பெரிய அலைகள் உருட்டி அடித்துக் கொண்டு வரும், ஆயுதப் பெட்டியையும், நெல் மூட்டையை யும் எப்படி எடுத்து வருவது என்று தெரிய வேண்டும்.''

இராஜேந்திரர் பதில் சொல்ல தளபதிகள் புரிந்தது என்றார் கள்.

''இப்பொழுதே பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். எதிர் கிழக்கு கரைகளில் இறங்குவது சிரமம்.''

''ஆனால் நாம் மேற்கு கரைகளில் அல்லவா இறங்கப் போகிறோம்.'' ஒரு தளபதி குறுக்கிட்டு கேட்டார்.

''நம்முடைய கடற்கரை கிழக்கு என்றால் அவர்களை அடையும் இடம் மேற்குதானே.''

''உண்மை. நாகவெளி, தலை தக்கோலம் போன்றவை எல்லாம் மேற்கிலே இருக்கின்றன. ஆனால் நாம் மேற்கிலே இறங்கப் போகிறோம் என்று யார் சொன்னது.''

''அப்படியானால்.''

''நாம் சுற்றிக் கொண்டு கிழக்கே போகப் போகிறோம்.''

''ஏன். எதற்கு கீழ் திசை,''

''ஏனெனில் நாம் தாக்க வேண்டிய நகரங்கள் எல்லாம் கீழ் திசையில் இருக்கின்றன.''

''எனக்கு புரியவில்லையே.''

''உங்களுக்கு ஸ்ரீ விஜயத்தினுடைய வரைபடம் நாம் போரிடப்பட வேண்டிய நிலப்பரப்பு தெரியவில்லை. அதற்கான ஏற்பாடுகள் நாகையில் செய்திருக்கிறேன். சோழச் செட்டிகள் ஒரு பெரிய ஓலை கூடாரத்தில் அதற்குண்டான மாதிரியை செய்து வைத்திருக்கிறார்கள். அவர்கள் சொல்லும்போதே அந்த நிலப்பரப்பு எனக்கு புரிந்து விட்டது. உங்களுக்கு புரிய வேண்டு மல்லவா. அதனால் களிமண்ணால் மாதிரிகள் செய்யச் சொல்லி யிருக்கிறேன். முதலில் தளபதிகள் சூழ்ந்து பார்ப்பார்கள். பிறகு கடற்பயணம் மேற் கொள்கின்ற ஒவ்வொரு வீரனும் அதைப் பார்த்தே ஆக வேண்டும். மனதில் பதிந்து கொள்ள வேண்டும். மிகப் பெரிய மாதிரி அங்கு சொல்லப்பட்டிருக்கிறது.

அதே போல இரண்டு முழங்கை நீளமுள்ள மாதிரிகளை யும் செய்யச் சொல்லியிருக்கிறேன். எங்கு மலை, எங்கு ஆறு, எங்கு கானகம், எங்கு நிலப்பரப்பு, எங்கு கிராமம் என்று சகல மும் அதில் குறிப்பிடப்பட்டிருக்கும். இடம் தெரியாமல், தடம் தெரியாமல் நாம் இறங்கிவிடலாகாது.'' தளபதிகள் அவர் பேசு வதை வியப்போடு கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

"அப்படி நிலப்பரப்பை மாதிரியாக பார்த்த பிறகு நேரடியாக பார்க்கும்பொழுது நமக்கு குழப்பம் வரும். மலையில்லாத இடத்தை மலை என்றும், பள்ளத்தாக்கை சமதளம் என்றும் நாம் நினைத்துக் கொள்ள வாய்ப்பிருக்கிறது. மாதிரிகள் ஒரு அளவிற்கு உதவும். மிகத் துல்லியமாக இருக்காது.

சரிவு என்பதை ஒரு மாதிரியில் பார்க்கும்பொழுது சாதாரணமாக இருக்கும். ஆனால் வெகு உயரமான மலையிலிருந்து அந்த சரிவை பார்க்கும்பொழுது பயம் ஏற்படும். புல் நிறைந்த சரிவு. மரங்கள் அடர்ந்த சரிவு. புதர்கள் நிறைந்த சரிவு என்று பலதும் உண்டு. புதர் நிறைந்த சரிவில் நீ கால் வைத்தால் சில நிமிடங்களில் நீ கீழே போய் விடுவாய். உன் பிருஷ்டம், தலை எல்லாம் அடிபட்டு, உருண்டு ஒரு கந்தை துணியைப் போல விழுவாய். சரிவில் இறங்குவது நலலது எனினும், தேனீக் கூடுகளை கலைத்து விடுவதிலும், மிருகங்களை எதிர்கொள்வதிலும், பாம்புகள், விஷப்பூச்சிகள் போன்றவற்றை நேரடியாக சந்திப்பதிலும் தொந்தரவு வரும். எனவே, குத்துச் செடிகள் மிகுந்த சரிவுகள் உத்தமம். இப்படி பலநூறு விஷயங்கள் இருக்கின்றன.

ஒட்டதேசம் போல ஒரு காடு, பிறகு ஒரு பெரிய கட்டாந்தரை, பிறகு நிலப்பரப்பு, வயல்வெளி என்றெல்லாம் இருக்காது. கிராமம், நகரம் என்றெல்லாம் ஒரு சீர் இருக்காது. நாகரீகம் அடையாத தேசம். என் அபிப்ராயத்தில் அவர்களெல்லாம் சரியாக உடை உடுத்தாத காட்டுக் கூட்டம்."

"என்ன அப்படி சொல்கிறீர்கள்." அருண்மொழிபட்டன் வியப்போடு கேட்டான்.

அருண்மொழிபட்டனோடு, உதயன் திவாகரன், புவனராஜன், கங்கை கொண்ட உத்தம சோழ மிலாடுடையார், நீலன் வெண்காடன், கலபதியான குட்டன் கணவதி, சிவ ஸ்வாமி, கலபதி இடத்திற்கு உயர்த்தப்பட்ட மாணிக்க வாசகம், கடல் தெரிந்த கருமாணிக்கம், நாகையில் மரக்கலம் கட்டும் பணியை செய்த திருவாதிரையான், குணாளன், தாணுமாலையன் எல்லோரும் அமர்ந்திருந்தார்கள்.

இவை அனைவரோடும் பெரிய உபதளபதிகள் கூட்டம். அவர்கள் பின்னால் ஆவலோடு இராஜேந்திர சோழரை பார்த்துக்

கொண்டிருந்தார்கள். சாதாரண காலாட்படை, வெறுங்கை படை, குதிரைப் படை என்று சோழப் படையில் சேர்ந்த அவர்கள் கங்கை கரையில் திறம்பட போர் செய்ததால் உபதளபதி பட்டம் பெற்று இராஜேந்திர சோழரை அருகிலிருந்து பார்க்கின்ற பாக்கியம் பெற்றவர்களாய் இருந்தார்கள். அவர்களுக்கு அங்கு நடக்கும் எல்லா விஷயங்களும் வியப்பை கொடுத்தன. தேவையில்லாமல் பேச வேண்டாம் என்ற கட்டளை மிலாடுடையாரிடமிருந்து வந்திருந்தது. எனவே, கவனிப்பதில் நாட்டம் காட்டினார்கள்.

கூட்டம் முடிந்ததும் வெளியே வந்து இராஜேந்திர சோழரின் கடுக்கன் பார்த்தாயா, கை வளையம் பார்த்தாயா, இடுப்புத் துண்டு எத்தனை அழகாக இருக்கிறது அவருக்கு, மார்பில் அணிந்திருக்கின்ற அணியின் பேர் என்ன என்றெல்லாம் பல்வேறு விஷயங்களை பேசிக் கொண்டார்கள். இராஜேந்திர சோழர் பேசுவது அவர்களுக்கு புரிந்தது போலவும் இருந்தது. புரியாதது போலவும் இருந்தது. எனக்கு புரியவில்லையே மற்றவர்களிடம் கேட்டு தெரிந்து கொண்டார்கள். அவர்கள் தளபதிகளை நோக்கிப் போய் ஆவலோடு கேட்டார்கள்.

''வரைபட மாதிரி என்றால் என்ன.'' அசமஞ்சமான ஒரு படைவீரன் தளபதியை கேட்டான்.

''தெருவில் நடந்து போகிற ஒரு பெண் எப்படி இருக்கிறாள். குண்டாக இருக்கிறாள். பெருத்த முலை. அப்படியே அவளை ஒரு சிலை செய்தால் எப்படி இருக்கும்.''

''ஆஹா, அழகாக இருக்கும்.''

''அந்தப் பெண் நிஜம். இந்த சிலை மாதிரி. இந்த சிலையை காட்டி, இந்தப் பெண் அழகாக இருக்கிறாள். இத்தனை காசு. என்றால் என்ன செய்வாய்.''

''உடனடியாக வாங்கி விடுவேன்.''

''அதுதான். அந்த தேசம் ஒரு நிஜம். தரையிலே பொம்மை போல அந்த தேசத்தை வடிவமைத்து இருப்பார்கள். இங்கு ஆறு. இங்கு நகரம் என்று புள்ளி புள்ளியாய் குறித்திருப்பார்கள். இந்த ஊர் தாண்டி இந்த ஊர். இந்த ஊர் தாண்டி அந்த ஊர்

என்பதை மனதிலே நினைத்துக் கொண்டால் உனக்கு முன் னேறுவது எளிதாக இருக்கும். இடது பக்கம் போகாமல், வலது பக்கம் போகாமல் தெற்கு எது என்று தெரிந்து கொண்டு அந்த திசை நோக்கி போவாய்.''

''தெற்கு, வடக்கு என்று நடு கானகத்தில் எப்படி தெரிந்து கொள்வது.''

''அதற்கென்று காந்த ஊசி தருகிறார்கள். கடற்படையில் உள்ளோருக்கு அந்த காந்த ஊசி மிக முக்கியம்.''

''அது என்ன காந்த ஊசி.''

''அந்த ஊசியின் முனை எப்பொழுதும் வடக்கேயே இருக்கும். அப்படியானால் கிழக்கு எது, மேற்கு எது, வடக்கு எது, தெற்கு எது தெரிந்து விடும். இதை நீரில் விட்டு மிதக்க வைத்திருப்பார்கள். அது நாவாயில் இருக்கும். உங்களின் கையில் ஒரு பேழையில் வைத்து கொடுத்துவிடுவார்கள். அந்த பேழையை திறந்தால் அந்த ஊசி வடக்கு நோக்கியே நின்றிருக்கும் ஒரு குத்து கம்பியில் அந்த ஊசி மாட்டப்பட் டிருக்கும். நீ கவனமாக எந்த திசையில் திரும்பினாலும் அந்த பேழையினுடைய ஊசி வடக்கு நோக்கியே இருக்கும். அப்பொழுது உனக்கு திசை தெரிந்துவிடும்,''

''அடடா. புதிதாக இருக்கிறதே.''

''நிலப்பரப்பில் இது தேவை இல்லை. வானம் பார்த்தும் காற்று பார்த்தும் சொல்லிவிடலாம். ஆனால் மேக மூட்டமான வானத்தில் என்ன பார்ப்பது. எனவே, இந்த ஊசியை நம்பி நாம் பயணப்பட வேண்டும். ஒரு நூறு பேருக்கு ஒரு இரும்பு காந்த ஊசி என்ற கணக்கில் இந்த பேழைகள் நாகையில் பொன் தகட்டால் செய்யப்படுகிறது. விரைவில் வினியோக மாகும்.''

மிகப் பெரிய ஓலை கூடாரம் ஒன்றை எழுப்பி காற்று வேக மாக உள்ளே வராமல் தடுக்குகள் வேய்ந்து பக்கவாட்டில் உறுதி படுத்தி நடுவே வெளிச்சம் வரும் வண்ணம் கூரைகளை சற்றுத் திறந்து மிகப் பெரிய ஸ்ரீ விஜயத்தின் மாதிரி வணிகர் களால் செய்யப்பட்டிருந்தது. கடைசி நேர மாற்றங்கள் நடத்தப் பட்டிருந்தன. ஒரு விரல் நீள ஓலை துணுக்கு மேற்கு கடற்கரை

யிலிருந்து வைக்கப்பட்டிருந்தது. தலை தக்கோலம் என்று கடல்மீது எழுதப்பட்டிருந்தது. தலை தக்கோலத்திலிருந்து அந்த விரல் நீள அளவு பச்சை நிற மலைமீது பதிக்க வைக்கப் பட்டிருந்தது. விரல் நீளம் பத்து காதம்.

''அடேயப்பா. இவ்வளவு சிறிய ஓலை துணுக்கு பத்து காதமா.''

''ஆமாம். பத்து காதம் என்றால் ஒரே ஓட்டத்தில் முடித்து விடலாம் என்று நினைக்காதே. அது மலை, அடர்ந்த மரங்கள் உள்ள மலை, பத்து காதம் போவதற்கு அரைநாள் ஆகும்.

இரண்டு இடங்கள். ஸ்ரீ விஜயம் இருப்பது ஒரு தீவு. மிக நீண்ட தீவு. மாயிருடிகங்கமும், இலங்காசோகமும், தலை தக்கோலமும், மாடமா லிங்கமும் இருப்பது தீபகற்பம். மேற்கே விரிவடைந்து கொண்டே போகிறது. இராமயஞ்ஞும் என்ற மிகப் பெரிய புல்வெளி உள்ள தேசம் இருக்கிறது. வடக்கிழக்கில் காம்போஜம் என்கிற அழகிய நாடு இருக்கிறது, அது நாகரீமான நாடு. பெரும் தேசமான சீனத்தின் விளிம்பில் உள்ள நாடு, இராமயஞ்ஞுத்தின் மிக அழகான பகுதி இது. இதுதான் அது. இங்கு பெண்கள் ஜனத்தொகை அதிகம். எனவே ஒரு குடும் பத்தை, ஒரு நிர்வாகத்தை பெண்கள் கவனிக்கிறார்கள். படை வீரர்கள் குறைவு. ஆனால் இந்த இடத்திலிருந்து நமக்கு எந்த எதிர்ப்பு இல்லை. நம்மை அவர்கள் எதுவும் தொந்தரவு செய்வது இல்லை. மாறாக உதவி செய்கிறார்கள்.

எனவே இராமயஞ்ஞுத்தை (பர்மா) நாம் தாக்கப் போவ தில்லை. அவர்களும் நம்மை தொந்தரவு செய்யப் போவதில்லை.

நம்மை தொந்தரவு செய்யும் ஸ்ரீ விஜயம் இந்த நீளத் தீவி னுடைய அடிப்பாகத்தில் இருக்கிறது. இதோ இது முசி நதி. கிழக்கிலிருந்து பொங்கி கடல் நோக்கி ஓடுகிறது. மிக அழகான, மிக விரைவான நதி. கிழக்குக் கடற்கரையில் கலக்கிறது, இதுதான் ஸ்ரீவிஜயத்தின் உயிர்நாடி.

சுற்றியுள்ள வயல் வெளிகளை சதுப்பு நிலமாக்கி நிறைய நெல் விளையும் பூமியாக மாற்றுகிறது. நீங்கள் நாற்று எப்படி நடுவீர்கள். முழங்கால் சேற்றில் இறங்கி, முழங்கை வரை நாற்றை எடுத்து அமுத்தி வைப்பீர்கள் அல்லவா, ஆனால் இங்கு

அப்படி அல்ல. இந்த முசிநதி பொங்கி பிரவாகமாக நாலா பக்கமும் பரவுவதால் இது இடுப்பு உயரத்திற்கு ஜலம் தங்கும் இடமாக இருக்கும். பல வயல்வெளிகளில் நெஞ்சாழம் கூட நீர் இருக்கும்.

அப்பொழுது எப்படி நடுவது.

ஒரு குச்சியில் நாற்றெடுத்து அதன் அடிப்பக்கத்தில் சொருகி அதை நேரே மண்ணில் புதைப்பார்கள். நாற்று நீரில் மூழ்கியிருக்கும், பத்து, பதினைந்து நாட்களுக்குள் நாற்று வெளியே வந்துவிடும். சூரியனை உட்கொள்வதற்காக தழைத்து வளரும், நெல் பயிர் மூன்று முழங்கை ஆழத்திற்கு வேர் விட்டு இருக்கும். தண்டு வெளியே வந்து வளர்ந்து இன்னும் மூன்று கை உயரத்திற்கு கதிர் பாய்ச்சும். எனவே அறுவடை என்பதும் நாற்று நடுவது என்பதும் படகின் மூலம்தான் நடக்கும். சிறு சிறு பரிசல்களில் ஒருவர் உட்கார்ந்து மூங்கில் மூலம் ஒருவர் நட்டுக் கொண்டே போவார். மார்கழி முடிந்து தை ஆரம்பத்தில் அற்புதமாக கதிர்கள் வெளியே வந்து சூரிய ஒளியில் பிரகாசிக்கும். எங்கும் பச்சை நிறமாக இருக்கும்.''

*சேவூர் மணிநாகன் என்கிற கடாரம் கண்ட சோழ தேசத்துச் செட்டி அந்த கூடாரத்தில் அமர்ந்து சக்கரவர்த்தி இராஜேந்திர சோழருக்கும், மற்ற தளபதிகளுக்கும் மாதிரியை விளக்கிக் கொண்டிருந்தார். ஊசி விழும் சப்தம்கூட கேட்கின்ற அமைதி அங்கு நிலவியது. ஒரு மேடையில் நின்று மணிநாகன் விவரிக்க சந்திரன் தான தங்கன் என்கிற நடுநாட்டு மாயிலட்டி தனது நீண்ட பிரம்பின் மூலம் அவர் சொல்லும் இடங்களை சுட்டிக் காட்டிக் கொண்டிருந்தார். ஸ்ரீ விஜய மாதிரி மீது பச்சையும், மஞ்சளும், நீலமும், வெள்ளையுமாய் மலைகளும், நதிகளும், வயல்வெளிகளும், மணற்பாங்கும் காட்டப்பட்டிருந்தன.

''தொடர்ந்து பேசி கேள்வி கேட்காமல் அவ்வப்போது நான் சந்தேகங்கள் இருந்தால் கேட்கும்படி கேட்டுக்கொள்கிறேன். ஒரு குறிப்பிட்ட இடத்தில் நிறுத்தி ஏதேனும் சந்தேகம் உண்டா என்று கேட்கிறேன். சொல்லுங்கள். ஏதேனும் சந்தேகம்

* மணி நாகன் அடிக்கடி கடாரம் போய் வந்ததால் கடாரம் கண்ட என்று அழைத்து கொண்டார்.

உண்டா.'' மணிநாகன் உரக்க கேட்டார். ஐம்பது அகவைக்கு வாள் தரித்தவராக, தலைப்பாகையில் முத்துக்கள் கோர்த்த பதக்கம் அணிந்தவராக, கழுத்திலே பவழமாலை, முத்துமாலை கொண் டவராக ஒரு அரசு அலங்காரத்துடன் இருந்தார்.

சத்ரியர்களுக்கு உண்டான எல்லா அலங்காரங்களும் வணிகர்களுக்கும் பொருந்தும், வணிக மன்னர்கள் என்றும் அவர்கள் தங்களைச் சொல்லிக் கொண்டார்கள். அவர்களுடைய தயவு ஒரு தேசத்திற்கு தேவை என்பதால் யாரும் அதை எதிர்க்க வில்லை. சில சமயம் அரசாங்கத்திற்கே கடன் கொடுக்கின்ற வசதியில் இருந்தபடியால் அரசாங்கம் வணிகர்களை மரியாதை யாக நடத்தியது. அதேசமயம் நல்ல அரசாங்கம் இல்லையென் றால் வணிகர்களுக்கு எந்த மரியாதையும் இல்லை. ஒரு வியா பாரமும் செய்ய முடியாது, மறவர்களுடைய தேவை வணிகர் களுக்கு தேவை. இதை பரஸ்பரம் புரிந்து கொண்டு வணிகர் களும், சத்ரியர்களும் தோள்மீது தோள் போட்டு ஒற்றுமையாக வாழ்ந்தார்கள். பதில் மரியாதை செய்து கொண்டார்கள்.

'வணிகர்களே பவழ மாலை அணிந்து கொள்ளும்போது நான் அணிந்துகொள்ளக் கூடாதா' உபதளபதிகள் கேட்க, ''அணிந்துகொள்ளேன். ஒரு பவழ மாலை இருபது கழஞ்சு. இன்றே வாங்கிக் கொள். நாளை இருபத்தைந்து கழஞ்சாகிவிடும்.''

''அடேயப்பா. கூடுதலாக குட்டி போட்டு விடுமா. பவழங் கள் முளைத்து விடுமா. எப்படி இருபத்தைந்து கழஞ்சு ஆகும்.''

''அய்யா, ஆவல் அதிகமானால் விலை அதிகமாகும். இப்பொழுது நீர் போட்டுக் கொண்டிருக்கிற மாலையை பார்த்து இன்னும் நாலு தளபதிகள் பவழமாலை வேண்டுமென்றால் என்னிடம் இருப்பது பத்து மாலைதானே. அந்த பத்து மாலை யைத்தானே விற்க வேண்டும். அந்த பத்து மாலையை இருபத் தைந்துக்கு விற்பேன். ஒரு நாலுபேர் வாங்குவார்கள். அவர்கள் அணிந்திருப்பதை பார்த்து இன்னும் பலபேர் கேட்பார்கள். அப்பொழுது முப்பது கழஞ்சாக மாறும். தேவையை பொறுத்து விலை மதிப்பு கூடும். ச்சீ போ. எதற்கு பவழ மாலை. என்று நீ தூக்கி போட்டு விட்டேயானால் இது மூன்று கழஞ்சுக்கு போகும்.''

"கொள்ளை லாபமாகவே இருக்கிறதே."

"இல்லை. இதன் அடிப்படை விலை ஒரு கழஞ்சு, நான் சீர் செய்து தங்கத்தில் கோர்த்து கையில் வைத்திருக்கிறேன். கூடுதலாக இரண்டு கழஞ்சு. நான் இன்னும் இரண்டு கழஞ்சு வைத்து ஐந்து கழஞ்சுக்கு விற்கலாம். ஆனால் உன் குரலில் இருக்கின்ற ஆர்வம் இருபது கழஞ்சு என்று சொல்ல வைத்தது. நீயும் வாங்கிக் கொண்டாய். பதினைந்து கழஞ்சு லாபம். தவறு என்மீது எதுவும் இல்லையே. முடியாது போ என்று சொன்னால், உன்னை விடாது பின் துரத்தி பத்து கழஞ்சு என்று சொல் வேன். நீ அப்படியும் வேண்டாம் என்றால், வேண்டாமய்யா, உனக்கும் வேண்டாம் எனக்கும் வேண்டாம் ஏழு கழஞ்சு என்று சொல்வேன். நீ அப்படியும் உதறினீர் என்றால் ஐந்து கழஞ்சுக்கு கொடுத்துவிடுவேன். அதற்கு கீழே தரமாட்டேன். அது என்னிடம் பெட்டியில் எங்காவது இருக்கும். மறுபடியும் எப்போதாவது விலைமதிப்பு ஏற்படும்போது இருபது கழஞ்சுக்கு விற்கப்படும்."

"உங்களையெல்லாம் தூக்கிலிட வேண்டுமய்யா."

"ஏன். எல்லா வியாபாரமும் இப்படித்தான் நடைபெறு கிறது. அரிசி விளைச்சல் நன்றாக இருந்தால் விலை குறையும். அரிசி விளைச்சல் நன்றாக இருந்து ஆட்கள் அதிகமாக இருந் தால் விலை அதிகரிக்கும். அரிசி விளைச்சல் குறைந்து ஆட் களும் அதிகமாக இருந்தால் விலை கன்னாபின்னாவென்று போகும்.

போனமுறை ஒரு மரக்கால் அரை கழஞ்சுக்கு வாங்கி னாய். அதாவது ஒரு கழஞ்சுக்கு இரண்டு மரக்கால். இன்றைக்கு ஒரு கழஞ்சுக்கு ஒரு மரக்கால். என்ன ஆயிற்று. விளைச்சல் குறைவா. இல்லை, வருகை அதிகம். சோழ தேசத்து படை வீரர்கள் அங்கிருந்து ஆண்களையும், பெண்களையும் திரட்டி வந்து விட்டீர்கள். ஊர் முழுவதும் ஜனங்கள். அத்தனை பேருக் கும் இலைநிறைய சோறு வேண்டும். என்ன செய்வது. விளைச் சல் அதே அளவு. ஆட்கள் அதிகம். விலை ஏறிவிட்டது. ஆக, படையெடுப்பினுடைய பலன் என்னவென்றால் எளிதாக கிடைத்துக் கொண்டிருந்த அரிசி விலை அதிகமாயிற்று.

மறுபடியும் கிழக்கு நோக்கி ஸ்ரீ விஜயம் நோக்கி போகிறீர்கள். அப்பொழுது அரிசி விலை என்ன ஆகும்.''

''குறையும்.''

''எப்படி சொல்கிறாய்.''

''நாங்களெல்லாம் கடற்கரை நோக்கி போய்விட்டால் அங்கே தஞ்சையில் வாங்குவதற்கு யார் ஆள் இருக்கிறார்கள்.''

''தவறு. நீ தஞ்சையில் இல்லாவிட்டால் என்ன. உன்னைத் தேடி தஞ்சையிலிருந்து நெல் பின்னாலேயே மாட்டு வண்டியில் வரும். ஆக தஞ்சையில் உள்ள நெற்களம் காலியாக இருக்கும், நீதான் முக்கியம். நீ போரிட போகிறாய் அல்லவா. ஏற்று ஏற்று என்று நெல் கூடை கூடையாக ஏற்றி கடற்கரைக்குக் கொண்டுவந்து விடுவார்கள். இப்பொழுது அங்கு ஒரு மரக்கால் ஒன்றரை கழஞ்சு.''

''புரிகிறது. நீங்கள் கிழக்கே வெகுதூரம் பயணப்பட்டு ஸ்ரீவிஜயம் போன காரியம் என்ன. நெல் கொள்முதலா, பவழ மாலையா, முத்தா.''

''எல்லாமும்தான். ஏன் தேக்குமரங்கள், மதுவகைகள், லவங்கப்பட்டைகள், மூலிகைகள், லகுவான வேங்கை மரங்கள். தக்கோலத்திலிருந்தும் நேர் எதிர் கரையான மாயிருடி கங்கத்திலிருந்தும், இலங்கா சோகத்திலிருந்தும் நாங்கள் நாற்பது வேங்கை மரங்களை வெட்டி, கிளைகளை செதுக்கி, பெரிய மரத்துண்டுகளாக்கி அவைகளை இணைத்து பட்டையான பலகையாக செய்து மரக்கலத்தில் பிணைந்து இழுத்து வருவோம். நீரோட்டத்தில் சேர்ந்து கொள்வோம். அந்த நீரோட்டம் எங்களை நாகை துறைமுகத்திற்கு கொண்டு வரும். பாய்மர நாவாய்களில் உள்ள எல்லா பாய்மரங்களையும் விரித்து அந்த மரத்துண்டுகளை இணைத்து வருவோம். பெரிய பலகைகளாக அந்த மரத்துண்டுகள் வந்து சேரும், கரைக்கு கொண்டு வந்து பரதவர்கள் உதவியோடு போடுவோம். மரத்துண்டுகள் தான் நாவாய் கட்ட உதவும். படகுகள் கட்ட உதவும்.

ஒரு இடுப்பு வேட்டிக்கு ஒரு மரத்துண்டு, அதாவது இரண்டு கோல் அளவுள்ள (இருபத்தி நாலு அடி) விரல் தடி கட்டை ஒரு இடுப்பு வேட்டி என்ற மதிப்பில் விற்பனை செய்வோம்.

ஒரு பொன் கழஞ்சுக்கு இரண்டு மரக்கட்டைகள் வாங்கி விடுவோம். ஒரு கை ஏலக்காய்க்கு ஒரு மரத்துண்டு. தங்க நகைகள், பித்தளை பாத்திரங்கள், இரும்பு வாணலிகள், இரும்பு கரண்டிகள், மரச் சிற்பங்கள், மண்பானை, அகிற் தூள், மல்லி, முல்லை, பூச்செடிகள் இவைகளெல்லாமும் வாங்கிக் கொள் வார்கள்.''

''எதற்கு மல்லி, முல்லை பூச்செடிகள். அங்கு விளை யாதா.''

''காட்டு பூக்கள் விளைகின்றன. நறுமணங்கள் இல்லை. முல்லை பூக்களுக்கு மயங்கி போகிறார்கள். பிச்சிப்பூவிற்கு பைத்தியம் பிடித்தது போல் ஆகிறார்கள். அங்கு அடிக்கடி மழை பெய்கின்ற காலம். வெய்யில் குறைவு, இவைகள் வளருவ தில்லை. ஆனால் வளர்க்க முயற்சிக்கிறார்கள். பெண்களுக்கு பிடித்த விஷயமாக இருக்கிறது. பெண்களுக்கு பிடித்த விஷயம் வாங்குவது ஆண்களுக்கு சந்தோஷம்தானே.''

இராஜேந்திர சோழர் தன் படை தளபதிகளோடு அந்த மாதிரி குறித்து விவாதித்துக் கொண்டிருக்கையில் உபதளபதி களோடு மணிநாகன் பேசினார். சேவூர் மணிநாகனை வியப் போடு உபதளபதிகள் சூழ்ந்து கொண்டார்கள்.

உலகில் யார் உயர்வு. யார் தாழ்வு, மறவர்கள் போக முடி யாத இடங்களுக்கெல்லாம் இந்த வணிகர்கள் சிறுபடையோடு போய் வந்திருக்கிறார்களே. இப்போது இவர்கள் இல்லையெனில் இந்த ஸ்ரீ விஜயத்தை எப்படி எதிர்கொள்ள முடியும். எவ்வளவு விஷயங்கள் சொல்கிறார்கள். ஆச்சரியப்பட்டார்கள்.

''ஒற்றுமைதானய்யா உயர்வு. நீ உயர்வு. நான் உயர்வு என்றால் எல்லோரும் தாழ்ந்து போக வேண்டியதுதான். எங்களைத் துன்புறுத்திய அந்த ஸ்ரீ விஜயத்து புத்த பிட்சுக் களையும், வீரர்களையும் நீங்கள் அடித்து, உதைத்து அடக்கப் போகிறீர்கள். உங்கள் எல்லோர் கால்களையும் தொட்டு வணங்க வேண்டும் போல் ஒரு நெகிழ்வு ஏற்பட்டிருக்கிறது. உயிரை துச்சமாக மதித்து பெரிய கடல் தாண்டி அங்கே போகப் போகி றீர்கள். எங்களுக்காக போரிடப் போகிறீர்கள். அடர்த்தியான காடுகள் ஊடுபோய் நகரங்களை கைப்பற்றப் போகிறீர்கள்.

அந்த கடல் வழியே நாங்கள் சீனத்திற்கு எந்த தொந்தரவும் இல்லாமல் போகலாம்.''

''சீனம் எப்படிப்பட்ட தேசம்.'' ஒரு உபதளபதி கேள்வி எழுப்பினான்.

''அற்புதமான தேசம். மிகப்பெரிய நாகரீகம். நமக்கு இணையான நாகரீகம். கொஞ்சம் உண்மை சொல்வதென்றால் நம்மைவிட சிறப்பான நாகரீகம்.''

''சீனர்கள் எதில் சிறப்பு.''

''என்ன சொல்வது. வணிகத்தில் சிறப்பு. நிர்வாகத்தில் சிறப்பு, யுத்த களத்தில் சிறப்பு. யுத்த பயிற்சியில் சிறப்பு. கைத்தொழிலில் சிறப்பு. நெய்வதில் சிறப்பு. மண்பாண்டங்கள் செய்வதில் சிறப்பு. மருத்துவத்தில் சிறப்பு.''

''அடேயப்பா. மிக உயர்வாக பேசுகிறீர்களே.''

''வந்து பாருங்களய்யா.''

''எங்கே. சீனத்திற்கா.''

''இல்லை. ஸ்ரீ விஜயமே சீனத்தினுடைய நாகரீகத்தின் பெரும் பங்கு வகிக்கிறது. ஸ்ரீ விஜயத்தினுடைய நாகரீகத்திலேயே நீங்கள் திணறிவிடுவீர்கள்.''

''இன்னும் உதாரணமாகச் சொல்லுங்கள்.''

''சரி, இந்த கையில் வெட்டுபட்டு ரத்தம் வருகிறது. வெட்டு காயம் விரல் நீள அளவிற்கு இருக்கிறது. ஒரு நெல் அளவிற்கு ஆழம் இருக்கிறது. என்ன செய்தால் ஆறும்,''

''மருந்து போட்டு கட்டினால் ஆறும்,''

''எத்தனை நாளில்,''

''ஒரு வாரத்தில்,''

''இல்லை, ஒரே நாளில் ஆறும். அதற்கான மருந்துகள் இருக்கின்றன. தேள் கொட்டிவிட்டது. என்ன ஆகும்.''

''ஒரு நாள் வலிக்கும்,''

''இல்லை, ஓரிரு நிமிடங்கள் வலிக்கும். ஒரு மருந்து போட்டவுடன் உடனே சரியாகிவிடும், விஷம் கொப்பளித்து வெளியே வந்துவிடும். உடம்பில் கலக்காது.''

“மருத்துவம் மட்டும் சிறப்பா.”

“இல்லை. போர் முறை. உன்னிடம் நீண்ட வாள் இருக்கிறது. அவனிடம் ஒரு மூங்கில் கோல் இருக்கிறது. யார் ஜெயிப்பார்கள்.”

“நிச்சயம் வாள் வைத்திருப்பவன் தான், மூங்கிலை இரண்டு துண்டாக உடைத்து விட முடியுமே.”

“இல்லை, வேலை தெரிந்தவன் உன் வாளை தட்டி விட்டு உன் மார்பில் குத்தி உன் மண்டையில் அடிப்பான். உன்னுடைய வாள் வெட்டு அந்த மூங்கிலில் விழவே விழாது. வீசவும், தட்டவும் அவனுக்குத் தெரியும்.

தஞ்சை பெரிய கோபுரத்தின் மீது நீ உச்சியில் ஏற வேண்டு மென்றால் நீ எப்படி ஏறுவாய்,”

“சாரம் கட்டி ஏறுவேன்,”

“எத்தனை நாள் ஆகும்.”

“ஒரு மாதம் ஆகும்.”

“ஒரே நாளில் ஸ்ரீ விஜயத்து மனிதன் ஏறுவான்.”

“எப்படி.”

“இடுப்பிலே கயிறு கட்டியிருப்பான். அந்த கயிற்றிலே சாவி போல ஒரு கம்பி சேர்ந்திருப்பான். அதை வைத்துக் கொண்டு மேலே ஏறுவான். அங்கங்கே பிடிமானங்களை பார்த்துக் கொண்டு ஏறுவான். எங்கு பிடிமானம் நழுவுமோ அந்த இடத்தில் கம்பி எடுத்து அந்த பாறை இடுக்கில் சொருகி விடுவான். கீழே சறுக்கி விழுந்தால் அந்த கம்பி தாங்கிக்கொள் ளும். சட்டென்று வேறு ஒரு இடத்தை பிடித்துக் கொள்வான், இடுப்பிலே கயிறு, கயிறின் நுனியிலே கம்பி, பாறையிலே சொருகி சொருகி பெரிய மலை உச்சிகளிலும் அவர்கள் ஏறி விடுகிறார்கள். கம்பி தாங்கி நழுவி வருகின்ற அந்த நேரத்தில் மற்றொரு இடத்தை இறுக பிடித்துக் கொள்கிறார்கள். மலை ஏறு வதில் மிகவும் சாமர்த்தியசாலிகள்.

அங்கே நீண்ட வாள் படையினர் இருக்கிறார்கள். சமுராயர் கள் என்று பெயர்.”

“நம்மிடமும் இருக்கிறதே இப்படை.”

''இது வேறு விதம். பதினாறு வாழைமரங்களை ஒரே வீச்சில் அறுக்கின்ற வலிமை.''

''தடியனோ என்னவோ.''

''இல்லை, மெல்லியனாகத்தான் இருப்பான். வாள் அவ்வளவு உறுதியானது. மிகச் சிறந்த உலோகக் கலவை கலந்தது. மிகக் கூர்மையானது, இதைச் செய்பவர்கள் யார் தெரியுமா.''

''தெரியவில்லையே.''

''புத்தபிட்சுக்கள். மாதக் கணக்கில் அதற்கு மெருகேற்றி, கூர்மை ஏற்றி சரியான உறை தயார் செய்து புத்த பகவானிடம் வைத்துக் கொடுப்பார்கள்.''

''புத்த பகவான் வழி அஹிம்சையல்லவா.''

''அஹிம்சைதான். தற்காப்பும் ஒருவித அஹிம்சைதான். தாக்க வரும்போதுதான் அவர்கள் யுத்தம் செய்வார்கள். தகராறு வந்தால்தான் அவர்கள் களத்தில் இறங்குவார்கள்.''

''நீங்கள் ஸ்ரீ விஜயத்தை சொல்கிறீர்களா. சீனத்தை சொல்கிறீர்களா.''

''சீனர்களை சொல்கிறேன். ஆனால் சீனர்களிடமிருந்து ஸ்ரீ விஜயம் பாடம் கற்றுக் கொண்டிருக்கிறது. முதுவதுமாக அல்ல. அரைகுறையாக.''

''இம்மாதிரி வீரர்கள் அங்கும் இருப்பார்களோ.''

''நிச்சயம் இருப்பார்கள். ஆனால் ஒரு படையாக அல்ல. தனித்தனியாக.''

''ஏன்.''

''அந்த வீரர்கள் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்காதவர்கள். அனுசரித்துப் போகாதவர்கள். ஒருவேளை சோறு கொடுத்தால் போதும் உங்களை தனியே நின்று பாதுகாப்பார்கள். ஒட்டுமொத்த படையாக இருப்பதில் ஒருவருக்கொருவர் அடிமையாக இருப்பது வரும். அது அவர்களுக்குப் பிடிப்பதில்லை.''

''யுத்தம் என்று வந்தால்.''

''ஒட்டுமொத்தமாகி விடுவார்கள்.''

''அவர்களை சமாளிப்பது கடினமோ.''

''மிக மிகக் கடினம்.''

''என்ன செய்யப் போகிறார் இராஜேந்திரர்.''

''இராஜேந்திரருக்கு தெரியாதது எதுவும் இல்லை. அவர் நிச்சயம் இதற்கு மாற்று ஏற்பாடு செய்வார்.''

''அந்த படைவீரர்களுக்கு என்ன பெயர் சொன்னார்கள்.''

''சமுராயர்கள்* என்று பெயர்.''

அருண்மொழிபட்டன் ஸ்ரீவிஜய தீவையும் ஒரு இடை வெளிக்கு அப்பால் இருந்த இலங்காசோகம், மாயிருடிகங்கம், தலை தக்கோலம் போன்ற தீபகற்பத்தை மாறி மாறி பார்த்தான்.

''இங்கிருக்கும் ஸ்ரீவிஜயமா இத்தனை தேசத்தையும் ஆட்சி செய்து கொண்டிருக்கிறது.''

''ஆமாம் எங்கோ இருக்கின்ற கங்கை கொண்ட சோழபுரம் தெற்கே குமரிமுனையிலிருந்து வடக்கே கீழை சாளுக்கியத் தின் வடக்கு எல்லை வரை நீண்டிருப்பதில்லையா. பாண்டியர் களிடமும், சேரர்களிடமும் தன் பலத்தை நிரூபித்து அவர்களை சேர்த்து கொள்ளவில்லையா. இப்படி ஸ்ரீவிஜயம் தன் பலத்தை நிரூபித்து அவர்களை அதட்டிக் கொண்டிருக்கிறது.

இவர்கள் அத்தனை நாகரீகமாக வந்தவர்கள் அல்ல. ஆனால் ஸ்ரீவிஜயம் படிப்பிலும், பண்பிலும் தேர்ந்தது. நல்ல நிர்வாகம் கொண்டது. முதுகுவாள் படை கொண்டது. இந்தப் பகுதியில் குதிரையில் போகின்ற நிலப்பரப்பு குறைவு. எனவே குதிரை களெல்லாம் வண்டிகள் இழுக்க பயன்படுகின்றன. அரசரும், அவரின் சிறு கூட்டமும் குதிரைகளில் பயணிக்கிறார்கள். ஆனால் மாட மாலிங்கத்தில் மாயிருடிகங்கத்தில், இலங்கா சோகத்தில் பெரிய நிலப்பரப்பு இருப்பதால் அங்கு குதிரைகள் உதவி செய்கின்றன. இவர்களை படைகளை நடத்துவதற்கு அந்த அரசாங்கம் பயிற்சி அளிக்கவில்லை. அதுவும் தவிர பெரும் போருக்கு அவர்கள் எப்போதுமே தயாராக இருப்ப தில்லை. காரணம் எவர் வந்தாலும் வரவேற்கின்ற இயல்பு. எதற்கு சண்டை என்கிற மனோபாவம். புத்த பிட்சுகளின் ஆளுமை இங்கு அதிகம். மக்கள் அமைதியாக வாழ ஆசைப்படுகிறார்கள்.

---

* சமுராயர்: சாம்ராய். ஜப்பானில் அதிகம் உள்ளவர்கள். இக்கலை சீனத்தின் கொடை.

எனவே ஸ்ரீவிஜயம் இதை சாதகமாக பயன்படுத்திக் கொண் டது. ஸ்ரீ விஜயத்தின் தந்திரம் இந்த இடங்களில் செல்லுபடி யாகி இருக்கிறது.''

''ஸ்ரீவிஜயம் தந்திரமாக இருப்பதற்கு என்ன காரணமாக இருக்க முடியும்.''

''நம்மவர்கள்தான் காரணம்.''

''நம்மவர்கள் என்றால்.''

''சோழ தேசத்து வணிகர்கள்தான் காரணம்.''

''எதனால்.''

''இவர்களுடைய தந்திரம் அவர்களுக்குப் புரிய நூறு வருடங்கள் ஆயிற்று. பல்வேறுவிதமாக ஸ்ரீ விஜயத்தில் இறங்கி கடல் வழியாக முசி நதிக்கரையில் நுழைந்து அங்குள்ள கிராமங்களில் வியாபாரம் செய்து ஒரு செம்பு காசுக்கு ஒரு ஜாடி தேன் வாங்கி, பத்திரப்படுத்தி மிகுந்த லாபம் சம்பாதித் தார்கள். மெல்ல மெல்ல சோழர்களை புரிந்தது. தானும் தந்திர மாகவும், மிரட்டலாகவும் இருக்க வேண்டும் என்று தீர்மானித் தது. இதை அங்குள்ள புத்த பிட்சுகளே தீர்மானித்தார்கள்.

சோழர்கள் இங்கு நுழைவதற்கு என்ன காரணம் என்று அவர்கள் யோசித்தார்கள். சாவகத் தீவிலுள்ள இந்துக்கள், சன்னகர்கள் என்ற ஜாதியினர் என்று புரிந்து கொண்டார்கள். ஏமாற்றப்படுகிறோம் என்பதை உணர்ந்தார்கள். சுதாரித்துக் கொண்டார்கள். பதிலுக்கு படுவேகமாக ஏமாற்றினார்கள்.''

''ஒரு உதாரணம் சொல்ல முடியுமா.''

''மரப்பட்டைகளில் பதினெட்டு முழ துணி என்று சோழ தேசத்து காழகத்தை அங்கு விற்பனை செய்தார்கள். பெட்டியை திறந்தால் பத்து முழம்தான் இருக்கும். வாக்குவாதம் செய்யும் பொழுது, நான் பதினெட்டு முழம் என்று சொல்லவேயில் லையே. ஒரு பெட்டி என்றுதானே சொன்னேன் என்று பதில் சொன்னார்கள். கணக்கு பதினெட்டு முழத்திற்கு இருந்தது. அவர்கள் ஒரு ஜாடி நிறைய தேன் கொடுத்தார்கள். ஆனால் ஜாடி யின் பாதி பகுதியில் தடுப்பு ஏற்படுத்தி முழு ஜாடி என்று கட்டி னார்கள். இப்படித்தான் பரஸ்பரம் ஏமாற்றும் விதமாக பொரு ளீட்டல் நடந்தது.

இந்த ஏமாற்றும் வேலையை திறம்பட செய்ய நிர்வாகம் கற்றுக் கொண்டது. அந்த நிர்வாகத்திற்கு துணையாக நீண்ட வாள் படையினர் அதாவது சாமுராய்கள் முன் வந்தார்கள். சாமுராய்களை ஒன்று திரட்டி தனித்தனியாக சம்பளம் கொடுத்து அந்த தேசத்து நிர்வாகம் அருகே வைத்துக் கொண்டது. சோழர்கள் வாள் உருவும்பொழுதே முழங்கையில் அடித்து தட்டிப் போட்டது. பிறகு அவர்களிடம் அநியாயம் செய்ய ஆரம்பித்தார்கள்.''

''எவர்கள்.''

''ஸ்ரீ விஜயத்தினர். யார் சோழர்களுக்கு துணை போவது. சாவகத் தீவு சன்னகர்கள் என்றவுடன் அந்த இந்துக்களை அடக்கி ஒடுக்கினார்கள். புத்த மதத்தை அங்கு பரப்பி மேற்கு திசையை ஆக்கிரமித்துக் கொண்டார்கள். சாவகத் தீவில் மேற்கு கரையில் புத்தர்களும், மேலே உள்ள மலை உச்சியில் காட்டுவாசிகளும், கீழே கிழக்கு கரையில் இந்துக்களும் இருந்தார்கள். இப்போது மோதல் இந்துக்களுக்கும் புத்த பிட்சுக்களுக்கும் என்று வந்துவிட்டது.''

''பெரும் காலப்போக்கில் நடந்த மாற்றமா?''

''ஆமாம். நூறு வருடங்களில் நடந்த மாற்றம். அமைதியானவர்கள் மட்டுமே புத்த பிட்சுக்கள் என்பது அந்த மடங்களில் மாறியது. வலிமையுள்ள, திறமையுள்ள இளைஞர்களை புத்த பிட்சுக்களாக்கியது.

புத்த பிட்சு என்பது உயர்ந்த பதவி. அதே நேரம் நல்ல பயிற்சி, கட்டுப்பாடு, புத்தி வளர்த்தல் என்ற பல விஷயங்கள் நடந்தன. மடாலயங்கள் தந்திரங்கள் சொல்லித் தருகின்ற பாடசாலைகளாக மாறின. ஆனால் புத்த பிட்சுக்களின் கட்டுப்பாடுகளும் தளர்ந்தன.''

''என்ன கட்டுப்பாடுகள்.''

''பெண்களோடு கூடக்கூடாது என்பது இருந்தது.''

''ஆமாம். புத்த பிட்சுக்களின் அடிப்படை கொள்கை ஆயிற்றே.''

''இல்லை. இரவு நேரம் யாரும் பிரம்மச்சாரிகள் இல்லை.

அவர்கள் பொது மகளிர் வீட்டிற்கு போவார்கள். மரியாதையாக வரவேற்கப்பட்டார்கள்.''

''அடடே, என்ன கோலம் இது.''

''புத்த பிட்சுவும் மனிதன்தானே என்கிற நியமம். என்னுடைய வேலை நல்ல நிர்வாகம்தானே என்கிற எண்ணம், ஆக, இது வேறுவிதமான புத்த மடாலயமாக மாறிவிட்டது. பதவியில் ஈடுபடாதது பைத்தியம் பிடிக்க வைத்தது. மது அருந்தாதது முரட்டுத்தனம் கொடுத்தது. எனவே, மிதமாக மது அருந்துதலும், மிதமாக கலவியில் ஈடுபடுதலும் புத்த பிட்சுக்களுக்கு அனுமதிக்கப்பட்டன. அவர்கள் வலிமை உள்ளவர்களாக ஆனார்கள். அவர்கள் யுத்த பயிற்சியும் பெற்றார்கள். நீண்ட வாள் படையினரிடம் சேர்ந்து அந்த படைத்திறத்தை தங்களுடைய கெட்டிக்காரத்தனத்தினால் அதிகப்படுத்தினார்கள். சாமுராய் தனியாகவும் இருப்பான். கூட்டமாகவும் போரிடுவான்.

தீவாக இருப்பதால் ஒரு தேசத்தின் உயிர்நாடி விவசாயம் மட்டுமல்ல. கடற்பயணம், கடல் உணவு என்பதை தெரிந்து கொண்டிருக்கிறார்கள். எனவே, புத்த பிட்சுக்களும் கடல் உணவு சாப்பிடுவார்கள்.''

''அடிசக்கை. மாமிசமும் உண்டா.''

''உண்டு. எனவே, சாதாரண மக்களோடு உண்டு, அவர்கள் உணவை பங்கிட்டுக் கொண்டு புத்த பிட்சுக்கள் நெருக்கமானார்கள். கடலோர பரதவர்களும், வலிமைமிக்க வீரர்களும் அவர்களுக்கு தோழமையானார்கள். இதனால் கொள்ளைக் கூட்டம் அதிகரித்தது.

சீனர்களை எதிர்க்க துணிவில்லை. சீனர்கள் கடுமையாக தண்டிப்பார்கள். இரவு நேரம் வந்து கடற்கரை கிராமங்களை தாக்குவார்கள் என்று புரிந்ததால் சோழர்களிடம் மட்டுமே தங்களுடைய வீரத்தை காட்டினார்கள். கொள்ளையடித்தார்கள். அந்த கொள்ளையினுடைய உக்கிரம்தான் உள்ளங்கையை தேய்த்து புண் ஏற்படுத்தி அதை சேர்த்துக் கட்டிகும்பிடச் சொல்வது. கைகளை பிரிக்காமல் வைப்பது. கொடூரமான தண்டனைகள் இவர்களுக்கு கிடைக்கும்.''

''வேறென்ன கொடூரம்.''

''படுக்க வைத்து உள்ளங்காலில் மாறி மாறி அடிப்பார்கள். பிறகு சட்டென்று நிமிர்த்துவார்கள். அடித்த அடியில் ரத்தம் தலைக்கு ஏறி நிற்க வைத்ததில் தலை சுழலும். கிட்டத்தட்ட பைத்தியம் பிடித்தது போல் ஆகும். அடித்த காயமே இருக்காது. ஆனால் உடம்பு முழுவதும் வலி பரவும். தலை சுற்றும். உளர ஆரம்பித்து விடுவான். எல்லா விஷயங்களையும் கக்கிவிடுவான். இது மிகக் கொடுமையான தண்டனை.''

''பிறகு.''

''இரண்டு பக்கமும் மூங்கில்களை வளைத்து கால்களை கட்டி பிறகு வளைந்த மூங்கிலின் கயிறுகளை துண்டித்து விடுவார்கள். உடம்பு இரண்டாக கிழியும்.''

''கடவுளே. வெட்டி கொல்லலாமே.''

''இல்லை. அவர்கள் அப்படி செய்வதில்லை. ஒரு மரணம் மற்றவர்களுக்கு பாடமாகஇருக்க வேண்டுமென்றே நினைக்கிறார்கள். அதனால் இந்தவிதமான தண்டனைகள் நிறைவேற்றுவதில் சீனர்களும், ஸ்ரீவிஜயத்தினரும் சிறந்தவர்கள். அதில் உச்சபட்ச தண்டனை.''

''என்ன.''

''வணிகர்களை அவர்கள் தாக்குவதில்லை. மாறாக...''

''மாறாக.''

''அவர்களை ஒரு சிறு மர கூண்டில் அடைத்து அதை நடுக்கடலிலே தள்ளிவிடுவார்கள். மர கூண்டு மிதக்கும். உள்ளுக்குள்ளே ஒரு ஆள் உட்கார இடம் இருக்கும். அவன் கடலில் கிடைக்கும் மீன்களை தின்று உயிர் வாழ வேண்டியதுதான். கடவுள் அருள் இருப்பின் கரை சேர முடியும். ஏதாவது நாவாய் காப்பாற்றும். இல்லையெனில் அவன் அப்படியே இறந்து போக வேண்டியதுதான். உடல் அழுகி மீன்களுக்கு உணவாகும். அப்படி வருடக் கணக்கில் இருந்து உயிர் பிழைத்தவர்களும் உண்டு. ஆனால் அவர்களால் நிமிர முடியாது.''

''ஏன்.''

''ஒரு வருடம் உட்கார்ந்து கொண்டேயிருந்தவன் நடக்கச் சொன்னால் எப்படி நடப்பான்.''

உப தளபதிகள் வாயடைத்துப் போனார்கள்.

''உங்களில் யார் யாருக்கு மர கூண்டு கிடைக்குமோ தெரியவில்லை.'' வணிகர் வேண்டுமென்றே சொல்லி முகம் பார்த்தார்.

''இந்த தந்திரம்தானய்யா உங்களை செருப்படி வாங்க வைத்தது.'' உப தளபதி அவருக்கு பதில் சொன்னான். கூட்டம் ஆரவாரித்தது.

சக்கரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜேந்திர தேவர் கைதட்டி வணிகர்களை அழைத்தார். வணிகர்கள் சூழ்ந்து கொண்டார்கள்.

''நான் ஒரு திட்டம் வகுத்திருக்கிறேன். சரியா என்று நீங்கள் அபிப்ராயம் சொல்லுங்கள்.''

''எங்களுக்கு போர் பற்றி என்ன தெரியும் மன்னா.''

''தெரிந்தவரை சொல்லுங்கள்.'' இராஜேந்திரர் அழுத்தம் திருத்தமாகச் சொன்னார். வணிகர்கள் வாய்பொத்திக் கொண் டார்கள். தங்களிடம் அலட்டிய வணிகர்கள் வாய் பொத்தி குழைந்திருப்பது பார்த்து உபதளபதிகள் சந்தோஷப்பட்டார்கள்.

'குரங்கு போலவே நிற்கிறான் பார்' என்று அபிப்ராயம் சொன்னார்கள்.

''நான் எடுத்தவுடன் ஸ்ரீ விஜயத்தை தாக்கப் போவதில்லை. ஏனெனில் ஸ்ரீ விஜயம் பலமான மூங்கில் கோட்டைகளையும், போர் வீரர்களையும், நல்ல நகரங்களையும் அதிகமான மக்கள் தொகையையும் கொண்டது. நடுவே நீர் இருப்பதால் அந்த நதியில் பாலங்கள் இருப்பதால் வடப்பக்கம் தாக்கினால் தெற்கு பக்கம் போகவும் தெற்கிலிருந்து சாவகத் தீவிற்கு தப்பிக்கவும் வழி உண்டு. அதே நேரம் ஸ்ரீ விஜயத்திற்கு ஆபத்து என்றால் அதன் வடக்கிலிருந்து அந்த தீவிலிருந்து பல தேசங்கள் ஒன்றாக திரண்டு அதாவது கடாரம் வழியாக பண்ணை வந்து பண்ணையிலிருந்து மலயூர் வந்து மலயூரிலிருந்து ஸ்ரீவிஜயம் நோக்கி வந்துவிடும்.

இங்கே பாதைகள் அவர்கள் போக்குவரத்திற்காக செம்மை யாக போட்டிருக்கிறார்கள். குதிரைகளில் விரைவாக வந்து விடுவார்கள். நாள் முழுவதும் ஓடுகின்ற படைகளும் அவர்களிடம்

உண்டு. எனவே அலை அலையாக எதிரிகளை நாம் சமாளிக்க வேண்டியிருக்கும். ஒரு ஆயிரம் பேர் வந்து விழுந்து நாம் நிமிருவதற்குள் இன்னொரு ஆயிரம் வந்து நிற்கும். அது முடிந்த பிறகு இன்னொரு ஆயிரம் நிற்கும். நாம் சோர்ந்து போவோம். எனவே, எங்கிருந்து அவர்களுக்கு உதவி வருகிறதோ அங்கு நாம் உள்ளே நுழைய வேண்டும்."

"சுற்றிக் கொண்டு இலங்கா சோகம் போகப் போகிறீர்களா."

"இல்லை. சோழக் கடற்படை நக்கவரம் வழியாக நடுவிலே உள்ள தீவுகளைத் தாண்டி சாவகத் தீவிற்கும் ஸ்ரீவிஜயத்திற்கும் நடுவே உள்ள கணவாய் வழியாக நகரும். சாவகத் தீவிலுள்ள மன்னனைச் சந்தித்து, சன்னகர் படையோடு ஸ்ரீ விஜயத்தைத் தாக்கும். ஸ்ரீ விஜயத்தை நாம் கைகொண்ட பின் அங்கு படைகள் நிறுவ வேண்டுமல்லவா. அதை சாவகத்தீவு மன்னர்கள் பார்த்துக் கொள்வார்கள்.

"கிழக்கே படை எடுப்பது எப்போது இதற்குப் பிறகா."

"இல்லை. நாம் நேரே தலை தக்கோலம் போகிறோம்."

"தலை தக்கோலம் மேற்கே இருக்கிறதே. இலங்கா சோகம், மாயிருடி கங்கம் இவையெல்லாம் கிழக்கே இருக்கின்றனவே. நடுவே காடுகள் இருக்கின்றனவே."

"அந்த காடுகள் ஊடறுத்து நாம் போவோம்."

"எவ்வளவு தூரம்."

"இருநூறு காதம்."

"எத்தனை நாள் பயணம்."

"ஆறு நாள் பயணம்."

"கடினமாக இருக்கும் அல்லவா."

"ஆமாம். ஆரம்பத்தில் கடினமாக இருக்கும். பிறகு சரிவு. நல்ல வெளி. வேகமாக உள்ளே புகுந்து விடலாம்."

"ஏன் தலை தக்கோலத்தை தேர்ந்தெடுத்தீர்கள்."

"அங்கிருந்து நிலப்பரப்பு குறைவு. மற்ற இடங்களில் அகலம்."

"தலை தக்கோலத்திலிருந்து எங்கே போவோம்."

"தலை தக்கோலத்திலிருந்து, இரண்டாக பிரிவோம். ஒன்று மாடமாலிங்கத்திலிருந்து மாயிருடிகங்கம். இன்னொரு பிரிவு தலை தக்கோலத்திலிருந்து இலங்கா சோகம் போவோம். மாயிருடியிலிருந்து ஒரு படை இலங்கோ சோகம் அங்கிருந்து தெற்கு நோக்கி நாகவெளிக்கு வரும். ஒரு கடற்படை நாக வெளிக்கும் போகும். ஆகவே, ஒட்டுமொத்தமாக போய் தாக்காமல் பிரிந்து பிரிந்து போய் தாக்கிக் கொண்டிருப்போம். திரும்பவும் சொல்கிறேன். தலை தக்கோலத்தில் நின்று இறங்கி ஒரு கடற்படை நாகவெளிக்கு போய், ஒரு காலாட்படை மாடமாலிங்கத்திற்கு போய் அங்கிருந்து அவை மாயிருடி கங்கம் நகரும். தலை தக்கோலத்திலிருந்து ஒரு படை நல்ல பாதை வழியாக இலங்காசோகம் வரும். மாயிருடி கங்கத்திலும் இலங்கா சோகத்திலிருந்தும் நாகவெளிக்கு நகரும். இது பெரும் பயணம். நாகவெளியிலிருந்து தீவிற்குள் நுழையும். பண்ணை, பண்ணையிலிருந்து மலையூர். மலையூரிலிருந்து ஸ்ரீவிஜயம். ஸ்ரீவிஜயத்தின் அடியில் உள்ள வங்கம் என்ற இடத்திலும் நம் கடற்படை போய் தங்கி அங்கிருந்து முசி நதி வழியாக ஸ்ரீவிஜயத்தை தாக்கும். வடக்கிலிருந்தும், கிழக்கிலிருந்தும் தாக்குதல் ஸ்ரீவிஜயம் நோக்கி நடைபெறும்."

"இதில் எது மிகக் கடினம்." புவனராஜன் கேட்டான்.

"முதன் முதலாக தலை தக்கோலத்திலிருந்து மலை ஏறி, இறங்கி மாடமாலிங்கத்தை தாக்கப் போகிறோமே இதுதான் கடுமையான படையாக இருக்க வேண்டும். நடந்து பழக்கப் பட்ட இடமாக இருக்க வேண்டும்."

"காடுகள் என்று சொல்கிறார்களே. வழி தெரியுமா."

"நன்கு வழி தெரிந்த வணிகருடைய வீரவாள் படை நமக்கு முன்னே போகும்."

"வீரவாள் படை நம்மோடு வருகிறதா."

"நம்மோடு பதினைந்து பேர் வருகிறார்கள்."

"ஒரு படை நடத்த இதுபோதுமா."

"இல்லை. வீரவாள் படையினர் தக்கோலத்தில் தங்கியிருக்கிறார்கள். மறைந்திருக்கிறார்கள். தக்கோலத்தில் அவர்களுக்கு

பெரிய எதிர்ப்பு இல்லை. இவர்கள் சண்டை செய்யவில்லையே என்று அமைதியாக இருக்கிறார்கள்.

நாம் இறங்கி செய்தி கிடைத்ததும் நம்மோடு சேர்ந்து கொள்வார்கள். தலைதக்கோலத்தை தாக்குவார்கள்.''

''அதாவது நமக்கு முன்னே ஒரு படை அங்கு காத்திருக் கிறது.''

''ஆமாம்.''

''நாகவெளி ஏன் முக்கியம். சுற்றி வந்து ஸ்ரீ விஜயத்தை தாக்கலாமே.''

''இல்லை. நாகவெளி மிகப் பெரிய நகரம். கற்கோட்டைகள் உள்ள இடம். இந்த இடத்தை நாம் தகர்க்க வேண்டும். அப்போது தான் ஸ்ரீ விஜயம் பலவீனப்படும். நாகவெளியிலிருந்து ஒரே நாளில் ஒரு குதிரைப்படை ஸ்ரீவிஜயத்தை அடைந்துவிடும். அந்த பாதை தடுக்கப்பட வேண்டும்.

நாகவெளியில் கடற்கரையில் நகரம் இல்லை. மலை உச்சி யில் இருக்கிறது. அந்த மலைச்சரிவிலிருந்து நேராக ஸ்ரீவிஜயம் போய்விடுவார்கள். நாம் நாகவெளியை தாக்க வேண்டுமென் றால் மேலேற வேண்டும். அவர்கள் மேலிருந்து அடிப்பார்கள். இந்த இடமும் கடினம்.''

''வேறு ஏதேனும் காரணம் இருக்கிறதா இந்த போர் திட் டத்திற்கு.'' அருண்மொழிபட்டன் கேட்டான். அவனைப் பார்த்து இராஜேந்திர சோழர் மெலிதாக சிரித்தார்.

''ஆமாம். மாடமாலிங்கம் என்ற இடத்தில் சீனர்களுடைய எரி அம்புகள் தயார் செய்யப்படுகின்றன. காம்போஜத்திலிருந்து எரி மருந்து கொண்டு வரப்படுகின்றன. ஆனால் அதையும் தடுத்து நிறுத்துவதற்கு அந்த எரி அம்புகளை நாம் வாங்கு வதற்கு ஒரு காரியம் நடந்து கொண்டிருக்கிறது.''

''என்ன அது.''

''ஸ்ரீ விஜயத்திற்கு அடிபணிந்து இலங்காசோகம், மாயிருடி கங்கம், மாடமாலிங்கம், நாகவெளி, தலை தக்கோலம் இருந் தாலும் காம்போஜத்தின் மன்னன் அவர்களுக்கு எதிராக இருக் கிறான். அவனுக்கு சூரிய குமாரன் என்று பெயர்.''

"இந்து மதமா."

"ஆமாம் இந்து மதம். புத்த மதத்தை அவனுக்கு பிடிக்காது. அவனை சூர்யவர்மன் என்றும் அழைக்கிறார்கள்."

"வர்மன் என்பது வடமொழி பெயராக இருக்கிறதே."

"ஆமாம். வங்கத்திலிருந்து சென்ற சந்ததியினர் அவர்கள். காளி உபாசகர்கள். பெண் தெய்வத்தை வழிபடுகிறார்கள். உல்லாசிகள். புத்த பிட்சுகளில் மொட்டை தலையை வெறுக்கிறார்கள். ஆனாலும் காம்போஜத்தில் புத்த பிட்சுக்களின் ஊடுருவல் இருக்கத்தான் செய்கிறது."

"சூர்ய குமாரன் அதாவது சூர்யவர்மன் நமக்கு உதவுவாரா."

"உதவச் சொல்லி வணிகர்களை அனுப்பியிருக்கிறேன்."

"அவர்களின் படைஉதவி தேவைதானா."

"இல்லை. படை உதவி தேவையில்லை. ஆனால் வடக்கிலிருந்து அவர்கள் நம்மை தாக்காமல் இருந்தாலே சிறப்பானது.

இதற்கு முன்னே இருந்த வணிகர்கள் அபிப்ராயம் கேட்டபோது மிகுந்த மரியாதையுடன் சூர்யவர்மன் அரசாங்கம் அவர்களை நடத்தும் என்றும் துணிமணிகளுக்கு மிகப்பெரிய பொருள் கொடுப்பார்கள் என்றும் சொல்லப்பட்டு இருக்கிறது. பித்தளை கிரீடங்கள் மீதும், பாத்திரங்கள் மீதும் அவர்களுக்கு சொல்லொண்ணா வியப்பு இருக்கிறது. நல்ல விவசாயம், கரும்பு, பருப்பு வகைகள் என்று பலதும் உற்பத்தி ஆகின்றன. அதைத் தவிர கடல் உணவுகள் மிகச் சிறப்பான வரவேற்பை பெறுகின்றன. எதில் நல்ல சக்தி இருக்கிறது என்று அவர்கள் தெரிந்து வைத்திருக்கிறார்கள். அந்த உணவுகளையே உண்ணுகிறார்கள். உரமாக இருக்கிறார்கள்.

உதாரணத்திற்கு அவர்கள் நண்டுகளையும், வண்டுகளையும், வெட்டுக்கிளியையும் பிடித்து சாப்பிடுகிறார்கள். ஆமாம். தென்னை மரத்து வண்டுகள் அவர்களுக்கு மிகவும் பிடிக்கும். பொறித்து சாப்பிடுகிறார்கள். வெட்டுக்கிளிகளும், நீண்ட தண்ணீர் 'பாம்புகளும் மிளகுத்தூள் தூவி சாப்பிடுகிறார்கள்."

"மிளகு இருக்கிறதா."

"இல்லை. அதைத்தான் நம்மிடம் வாங்குகிறார்கள். லேசாக உப்பிட்டு நீர் பாம்புகளை மிளகு தூவி சுவையாக உண்கிறார்கள். மிளகு பொதிகளுக்காக ஆவலோடு காத்திருக்கிறார்கள்."

"அடே, சேர தேசத்து மிளகு பொதிகளுக்கு அங்கு அவ்வளவு மதிப்பு இருக்கிறதா."

சேர மன்னன் வீர கேரளன் வாய் விட்டுச் சிரித்தான்.

"ஆமாம். மிளகு வறுத்து, அரைத்து நீரில் கலந்து அந்த நீரை பூச்சிகள் மீதும், பாம்புகள் மீதும் தடவி காரசாரமாக உண்ணு கிறார்கள். கரும்பு வெல்லத்தினாலான இனிப்பும் உண்ணுகிறார் கள். சுவைக்கு அடிமையான மக்கள், நல்லவர்கள், வல்ல வர்கள்."

"காம்போஜத்திடம் உதவி கேட்கப் போகிறோமா."

"இல்லை. படைக்கலன்கள் கேட்போம்."

"அதாவது எரி அம்புகளா."

"ஆமாம். அதற்குத் தகுந்த வில்லும், அம்புகளும், அங்கிருந்து கொண்டு வந்த ஒரு மருந்து பொடியை துணியில் சுற்றி பற்ற வைத்து வேகமாக அம்புவிட அது எரிந்து கொண்டு உன்மீது வரும்போது ப்டேர் என்று பெரிய புகையோடு சீறும். உன் மீது தைத்த அம்பை பிடித்து எறிவதற்குள் உன் முகமும், கையும் வெந்துவிடும். யானை மீதும், குதிரை மீதும் விழுந்தால் அவை இந்த வலியை தாங்காது.

இந்த விஷயங்களை ஸ்ரீவிஜயம் தன்னிடம் கொண்டிருக் கிறது. எனவே நாம் தற்காத்துக் கொள்வது முக்கியம்."

"எப்படி தற்காத்துக் கொள்வது."

"கவச உடைதான் தற்காப்பு. வங்க தேசத்திலிருந்து கொண்டு வந்த தோல் ஆடைகள் இப்பொழுது உதவும். மெல் லிய இரும்பு கம்பியினால் செய்த மேலைசாளுக்கியத்து சங்கிலிக் கவசங்கள் உதவும். கழுத்திலே அந்த கவசங்களை மாட்டிக் கொண்டால் முதுகும், மார்பும் அந்த மெல்லிய கம்பி களால் பாதுகாக்கப்படும். அம்பு தைக்காது. அம்பு தைத்தாலும் பிடுங்கி எறிந்துவிடலாம்."

"கவசங்கள் இல்லாதவர்கள்..."

''பாக்கு மட்டைகளை உடம்பில் பொருத்தி இறுக்கி கட்டிக் கொள்ள வேண்டும். உடம்பில் தைக்காத இந்த எரி அம்புகளை பாதுகாத்துக் கொள்ளலாம்.''

''நம்மிடம் எரி அம்புகள் இருக்கின்றனவா.''

''இல்லை. ஆனால் இருக்கின்றன.''

''என்ன சொல்லுகிறீர்கள்.''

''நக்கவரம் தீவுகளில் இந்த எரி அம்புகள் கிடைக்கின்றன.''

''யார் விற்கிறார்கள்.''

''கடற் கொள்ளையர்கள்.'' இராஜேந்திர சோழர் சொல்ல, அவர்கள் திடுக்கிட்டார்கள்.

''அவர்களை எப்படி நமக்குத் தெரியும்.''

''வணிகர் உதவியால்தான். வணிகர் சொல்வதைத்தான் கேட்க வேண்டியிருக்கிறது'' என்று திரும்பி சேவூர் மணிநாகனை பார்க்க, மணிநாகன் மேடை ஏறி பேச ஆரம்பித்தார்.

''இந்த எரி அம்புகள்தான் கடற் கொள்ளையர்களின் அடிப் படை விஷயங்கள். கடற் கொள்ளையர்கள் எந்த நியமத்திற்கும் கட்டுப்படாதவர்கள். பல ஊர்களில் கைதியாக இருந்தவர்கள். அவர்கள் ஒன்றாக சேர்ந்து மரக்கலத்தை கொள்ளை அடித்து இந்த மாதிரியான அம்புகளை வாங்கி சேகரித்து வைத்திருப் பார்கள். வணிகர் மரக்கலத்தின் மீது இந்த எரி அம்புகளை செலுத்துவார்கள். பாய்மரங்களை கொளுத்துவார்கள். மரத்தின் மீதும் எரி அம்புகள் விழுந்து எரிந்து கொண்டிருக்கும். மரக் கலம் சேதமாகும். நீங்கள் தீயை அணைப்பீர்களா, போரிடு வீர்களா. இரண்டும் செய்ய வேண்டியிருக்கும்.

இந்த கடற்கொள்ளை கூட்டம் நக்கவரம் தீவுகளில் பல்வேறு சந்து பொந்துகளில் பதுங்கி இருப்பார்கள். ஒரு பெரிய பழைய மரக்கலம் நின்றிருப்பது தெரியவே தெரியாது. ஒரு வளைவில், நதியின் முகத்துவாரத்தில் அவை கட்டப் பட்டு இருக்கும். மேலே செடி, கொடிகளை வெட்டி போட் டிருப்பார்கள். தூரத்திலிருந்து பார்க்க தீவோடு தீவாக காட்சி யளிக்கும். வெட்டிப் போட்ட மரங்களை தள்ளிவிட்டு சில நிமி டங்களில் அவை கிளம்பிவிடும். அரை நாழிகையில் நடுகடல்

வந்துவிடும். பாய்மரம் விரித்துவிடும். பிறகு அருகே வந்து எரி அம்புகளைச் செலுத்தினால் வணிகர் ஆட்டம் காண வேண்டியதுதான். இப்படி பலமுறை அவஸ்தைப்பட்டிருக்கிறோம். காசு கொடுத்துவிட்டு உயிரோடு திரும்பியிருக்கிறோம்.''

''அந்த எரி அம்புகளை எது கொடுத்து வாங்குவார்கள்.''

''துணிகளுக்கும், மது ஜாடிகளுக்கும் வாங்குவார்கள். சோழ தேசத்து மாம்பழம் மிகவும் பிடித்தம்.''

''நல்லது. எவ்வளவு கிடைக்கும்.''

''பயமுறுத்துகின்ற அளவுக்கு கிடைக்கும். அட, சோழப் படையில் எரி அம்புகள் இருக்கின்றனவே என்று திகைக்கக் கூடிய அளவிற்கு கிடைக்கும். தலை தக்கோலம் போய்விட்டால் இன்னும் அதிகம் கிடைக்கும். காடு கடந்து மாடமாலிங்கம் போய் விட்டால் இன்னும் அதிக அளவு கிடைக்கும். சூர்யவர்மன் மனம் வைத்தால் மரக்கலன்கள் கொள்ளும் அளவிற்கு கிடைக்கும்.''

''எரி அம்புகளைப் பற்றி சொல்லுங்கள்.''' ஒரு எரி அம்பு காட்டப்பட்டது.

''இதோ. இது கூர்முனை. பிறகு இரும்பு அடிபாகம். பிறகு பிரம்பில் ஆணி அடிக்கின்ற ஓட்டைகள். இங்கு ஆணி அடித்து ஓட்டைகள் செய்வார்கள். இந்த அடிபாகத்தில் இதோ ஒரு அரை விரல் ஆழக் குழி இருக்கிறது பார்த்தீரா. இதில் அந்த மாவை நிரப்புவார்கள். நெருப்பு பற்ற வைப்பார்கள். இதோ நெருப்பு பற்ற வைக்கச் சொல்கிறேன்.''

தீபத்தில் காட்டிவிட்டு அந்த அம்பை எரிக்க சர் என்று அந்த மாவு பற்றிக் கொண்டு சீறியது. கடும் நெடி அடித்தது. நீலமும், சிகப்பும், மஞ்சளுமாய் எரிந்தது. அறுபது நொடிகளுக்கு அவை தீர்க்கமாய் எரிந்தன. பிறகு மெல்ல எரிந்தன. தொன்னூறு நொடிகளுக்குப் பின் அணைந்தன.

''இதற்குள் இந்த அம்பு உன் நெஞ்சில் சொருகியிருக்கும். உன் பாய்மரத்தில் படர்ந்திருக்கும். ஒரே நேரத்தில் ஐம்பது அம்புகள் பாய்மரத்தில் விழுந்தால் பாய்மரம் பஸ்பமாவது உறுதி.''

''என்ன செய்யலாம்.''

''அதற்கு ஒரு வழி இருக்கிறது.''

''என்ன வழி.''

''கம்பத்தில் ஏறி பாய்மரத்தை ஈரம் செய்துவிடுவது. ஈரம் செய்த பாய்மரம் எளிதில் எரியாது. ஓட்டையாகும்.''

''எப்படி பாய்மரங்களை ஈரம் செய்வது?''

''நடுகம்பத்தினூடே சிலர் ஏறி நிற்க வேண்டும். பாய் மரத்தின் குறுக்கு கட்டைகளுக்கு அருகே பெரிய மரப்பெட்டி களில் கடல்நீர் நிரப்பி உயரே இழுபட வேண்டும். உச்சிக்கு போன அந்த நீர் தொட்டி தாமிரக் குழாய்கள் வழியாக பாய்மரத் தின் மீது கட்டப்படும். பாய்மரம் சொட்ட சொட்ட ஈரமாகும். பிறகு, மரத்தொட்டி கீழே இழுக்கப்பட்டு மறுபடியும் நீர் இறைக் கப்பட்டு மறுபடியும் நனைக்கப்படும். இப்பொழுது எரி அம்பு கள் வந்தாலும் அவை நீரால் அணைக்கப்படுமே அன்றி தொடர்ந்து எரியாது.''

''அடே, வல்லவனுக்கு வல்லவன் இப்பூவுலகில் உண்டு.''

★ ★ ★

காஞ்சிபுரத்துக்கு அருகே உள்ள பிரம்ம தேச சந்திர மௌலீஸ்வரர் கோவில். இதற்கு அருகே தான் முதலாம் இராஜேந்திரன் மரணமடைந்தான். அவன் மைத்துனன், வீரமாதேவி சகோதரன் நீர் பந்தல் வைத்த இடம்.

அத்யாயம்

102

கிழக்கு பக்கம் மந்தாரமாக இருந்தது. சூரிய கதிர்கள் நிலத்தில் படாவண்ணம் வெளிச்சத்தை மட்டும் வானில் உமிழ்ந்து கொண்டிருந்தன. கடற்கரை காற்று சிலுசிலுவென அடித்தது. போர்த்திக் கொள்ள வேண்டும் போல் இருந்தது. நிறைய வீரர்கள் முதுகையும், மார்பையும் மறைத்து மேல் துணியை சுற்றி கடல் மணலில் வேலை ஊன்றி நின்றிருந்தார்கள். வேல் தவிர, அவர்கள் முதுகில் அம்புறாத் துணியும், தோளில் வில்லும் இருந்தன. இடுப்பில் இறுக்கமான கயிறோ அல்லது தோல் பட்டையோ கட்டி அதில் நீண்ட உடைவாளை, குத்து கத்தியை வட்ட வடிவமான பற் சக்கரத்தை சொருகியிருந்தார்கள்.

தாக்கு என்றால் உடனே விதம் விதமான தாக்குதலுக்கு தயாராக இருந்தார்கள். உற்று கவனித்தால் எல்லார் முகத்திலும் கொஞ்சம் கவலையிருந்தது. ஆரவாரமான முழக்கங்களால் அந்த கவலையை மறக்க முயன்று கொண்டிருந்தார்கள். 'கடல் என்ன கடல். கடைசியில் அது நம்மை மூழ்கடித்துவிட்டு கரையில்தானே கொண்டு வந்து சேர்க்கும். இந்த பக்கம்தானே தகனம் செய்வார்கள்'' என்று ஒரு மத்திம வயதுக்காரன் சொன்னான்.

''அடேய், இரண்டு பெண்டாட்டிக்காரா, உடனே சாவு பற்றின பயமா. சுறா கடித்து விழுங்கி உன்னை மலமாக துப்பிவிடாதா. அப்படியும் சாவு வருமடா.''

''அப்படியானால் இந்த மூங்கில் வேல்கம்பு என்ன ஆகும்.''

''அதுவும் வெளியே வந்து விழும்.''

''இந்த மூங்கில் வேல் கம்பாவது வந்து விழுமல்லவா.''

வீரர்கள் தலையில் அடித்துக் கொண்டார்கள்.

''இவ்வளவு பயம் இருக்கிறவனுக்கு கடல் பயணம் எதற்கு. கடற்போர் எதற்கு.'' வேறொரு வயோதிகன் கேட்டான்.

''நான் மரணத்தைக் கண்டு பயப்படவில்லை. அது நிச்சயம் வரும் என்று தெரியும். மரணம் வருகின்ற முறை ஒன்று இருக்கிறதல்லவா. ஊரார் சுற்றி ஒப்பாரி வைக்க, பல்லக்கு ஏறி பூமாலையோடு தகனம் செய்ய வேண்டுமல்லவா. இந்த கடற் பயணத்தில் அது கிடைக்காதோ என்று பயப்படுகிறேன்.''

''அடேய், யார் அங்கே. ஒரு பூமாலை கையோடு வாங்கி வந்துவிடுங்கள். இவன் இறந்தால் இவன்மீது போட்டு அனுப் பலாம்.'' வாலிப கூட்டம் வெறியாகச் சிரித்தது. ஆனால் எல்லோ ருக்கும் அந்த கவலை இருந்தது.

கடலில் மரணம் என்றால் உன் உடம்பின் கதி என்ன. நாவாய் மேல் நின்று வேல் வீசிக் கொண்டிருக்கும்போது எதிரே இருந்து ஒரு அம்பு வந்து நெஞ்சை துளைக்கும். இருதயம் வரைக்கும் பாயும். ரத்தம் பீறிடும். பற்கள் கிட்டிக்கும். வலி பொறுக்காது கத்த நேரிடும். கத்தும்போது தொண்டை முறுக்கிக் கொள்ளும். கடுமையாக மண்டை உச்சி வலிக்கும். கைகள் இழுக்கும். வயிறு குழையும். மரணம் வந்தது மனதிற்கு தெரிந்து விடும். ரத்த ஓட்டத்தை நிறுத்த முடியாது. அல்லது நிறுத்த யாரும் இருக்க மாட்டார்கள். கண்கள் சொருகும். வானம் தெரி யும். பூமியை முதுகு உணரும். பிறகு மெல்ல மெல்ல மரணம் ஏற்படும். உயிர் பிரிந்து உடலை பார்த்து கதறி அழும். போய் விட்டாயே என்று கதறும். மறுபடியும் உள்ளே புக முயற்சிக்கும். அடே கோவிந்தா இறந்து போனாயே என்று அந்த போர் நின்ற பிறகு அழுவார்கள். தூக்கிக் கொண்டு வருவார்கள். மூங்கிலிலே படுக்க வைத்து மரக்கட்டைகள் அடுக்கி, நெஞ்சை கீறி தகனம் செய்வார்கள். வெற்றி வேல் வீர வேல் என்று கத்து வார்கள்.

''கடலில் அப்படி சாவு உண்டா. மரணம் அப்படி நேருமா.'' அவன் கவலையானான்.

அவன் கற்பனை உள்ளவன். அதனால் அவனுக்கு அந்த கவலை இருந்தது. கற்பனையை அதிகம் ஓட்டாதவர்கள் வெறுமே உட்கார்ந்திருந்தார்கள். அவர்கள் முகத்தில் நடப்பது நடக் கட்டும் என்ற எண்ணம் இருந்தது.

அவர்களெல்லாம் சோழப் படையின் மிகச் சிறந்த வீரர்கள்தான். ஆனாலும் மனிதர்கள். மரணபயம் அவர்களையும் வாட்டியது. எதனாலேயோ காட்டு வழி நடக்கும்போது, மலை ஏறும்போது சரிவில் நடுங்கி இறங்குகின்றபோது ஆற்றோடு போகிறபோது இல்லாத பயம் இந்த கடற்பரப்பில் வந்தது. அது மட்டுமில்லாது ஒரு காரியம் துவங்குகிறபோது ஏற்படுகின்ற இயல்பான மனக்கவலை அவர்களுக்கு இருந்தது. இப்பொழுது எப்படி தாண்டப் போகிறோம் என்று நினைத்தால் உள்ளே நடுங்குகிறது. ஆனால் தாண்டி, போராடி, ஜெயித்து பெரும் பொருளோடு வருகிறபொழுது இதே கடற்கரை மணற் பரப்பில் எப்படி நடப்போம் என்றும் அவர்கள் கற்பனை செய்து கொண்டார்கள்.

பெண்கள் குலவை இடுவார்கள். பெரும் கொடிகளை வீசி வரவேற்பார்கள். மலர்கள் தூவுவார்கள். குடிக்க நீரும், மோரும் தருவார்கள். உப்பிட்ட உணவு கொடுப்பார்கள். தீபங்களை ஏற்றுவார்கள். தீப்பந்தத்தை திருஷ்டி போல சுற்றி கழித்து ஏற்றி இறக்கி மண்ணில் புதைப்பார்கள். பெரிய புடவையை மணலில் விரிந்து அதன் மீது நடந்து வரச் சொல்வார்கள்.

மணல் தாண்டி கிராமச் சாலைக்கு போனதும் மது கிடைக்கும். ஆனால் நோயுள்ளவர்கள் அருந்தலாம். மற்றவர்கள் திருநீறு பூசிக் கொண்டு சிவாய நமஹ: என்று சொல்லி அங்கு உள்ள விநாயகருக்கு, சிவலிங்கத்திற்கு, அங்குள்ள காளி கோவிலுக்கு சென்று விழுந்து தொடர்ந்து குதிரை ஏறி கங்கை கொண்ட சோழபுரம் நோக்கி பயணிக்க வேண்டியதுதான்.

அற்புதமான ஒரு காரியமல்லவா. பின்னால் பொதிப் பொதியாக தங்க நகைகளும், தாமிர பண்டங்களும், அங்கு கண்ட வித்தியாசமான விஷயங்களும் வரும்.

''அப்பா, தவறாக நினைக்கவில்லையென்றால் எனக்காக கடாரத்திலிருந்து ஒன்று வாங்கி வர முடியுமா'' என்று ஒரு தந்தையின் பருவப் பெண் கேட்டாள்.

''என்னம்மா. உனக்கு இல்லாததா. சொல், பெரிய ஆரம் எடுத்து வரட்டுமா.''

''இல்லை அப்பா. நகைகள் அலுத்துவிட்டன. கடாரத்தில் பல வர்ண கிளிகள் கிடைக்கின்றனவாம். உடம்பு முழுவதும் சிகப்பு, பச்சை, மஞ்சள், நீலம் என்று சிறகுகள் இருக்குமாம். கீச்சென்று கத்தாதாம். நம்முடைய கிளிகள் போல உட்காராதாம். பெரிய கிளிகளாம். ஒரு கோழி அளவிற்கு இருக்குமாம். கராக் என்று கத்துமாம். அந்தவிதமான கிளிகள் நமக்கு வேண்டு மென்று தோன்றுகிறதப்பா. பெரிய கூண்டுகள் செய்துவிடு கிறேன். அதற்குள் அவை இருக்கட்டும்.''

''எவ்வளவு பெரிய கூண்டு செய்வாய்.''

''ஆளுயர கூண்டு. இரண்டு கை அகலம்.'' அந்த பெண் பிள்ளை கைவிரித்து காட்டியது.

''போதாது.''

''பிறகு.''

''அம்மாதிரி கிளிகளுக்கு பெரும் பரப்பு தேவை. எனவே, நம் வீட்டினுடைய முன் தோட்டத்தில் ஆரம்பித்து கொல்லைப் புறத்தில் முடியும் வரை பெரிய கூண்டு செய். நான் கிளிகள் கொண்டு வருகிறேன்.''

குழந்தைகள் எகிறி குதித்தார்கள். பெண்கள் வாய் பிளந்து கேட்டார்கள்.

''கூண்டா, அல்லது தொழுவமா.''

''அந்த கிளிகள் மிக வேகமாக பறக்கக்கூடியவை. அந்த கிளிகளை நான் கடற்கரை ஓரமாக பார்த்திருக்கிறேன். அறுபது, எழுபது பஞ்ச வர்ண கிளிகள் மிக வேகமாக கிழக்கே இருந்து நமது ஊருக்குள் நுழையும். வயல்களில் அவை விழாமல் இருக்க கடுமையாக கவண் கல் எறிவார்கள். தானியத்தில் விழுந்தால் உச்சிக்குள் மொத்த தானியத்தையும் அறுத்து எடுத்து விடும். தின்பது கொஞ்சம்தான். வெட்டுவது அதிகம். நாசக்கார கிளிகள்.''

''மிகுந்த அழகாமே.''

''ஆமாம். வர்ணங்கள் அப்படி இருக்கும். குரல் சகிக்காது. இரவு கத்த துவங்கினால் உன்னால் தூங்க முடியாது. நீயே அதன் கழுத்தை திருகி கொன்றுவிடுவாய்'' என்று சொல்லி, அவன் உரக்க சிரித்தான்.

வீடு ஒரு சின்ன பயத்தோடு அவனை பார்த்தது.

''நம்மூர் கிளிகள் போல உள்ளங்கையில் உட்கார்ந்து கொண்டும், தோளில் உட்கார்ந்து கொண்டும் காதை முத்த மிடும் என்றெல்லாம் நினைக்காதே. ஒரே கொத்து. விரல் துண் டாக விழுந்துவிடும்.''

''ஏனப்பா அப்படி.''

''காட்டு கிளிகள். மாமிசம் தின்று வளர்ந்தவை. மாமிசம் தின்று, கொழுத்த செடியினுடைய பழங்களை தின்பவை. அவை அப்படித்தான் இருக்கும்.''

ஒவ்வொரு ஊரில் ஒவ்வொரு வீட்டில் ஒவ்வொரு வித மாக விடைபெறும் காட்சி நடைபெற்றது.

குடும்பம் மாட்டு வண்டியில் ஏறி புருஷனை பின்தொடர்ந் தது. நாகை கடற்கரை மணலில் தேடியது. காயா ரோஹணர் கோவில் வாசலில் நில். நான் வந்து சந்திக்கிறேன் என்று அவன் சொல்லியிருந்தான். குடும்பம் காயா ரோஹணர் கோவில் வாசலில் அவன் சந்திப்புக்காக காத்திருந்தது.

ஆறு நாள் கடும் பயிற்சியை முடித்துவிட்டு அவன் காயா ரோஹணர் நோக்கி ஓடி வந்தான். குழந்தைகளோடும், இரண்டு மனைவியரோடும் கோவிலுக்குள் நுழைந்தான். வட்ட வடிவ மான அரை கழஞ்சு காசை கோவிலுள்ள அந்தணர் கையில் அவன் மனைவி கொடுத்தாள். ஒரு சீப்பு வாழைப்பழங்கள், வெற்றிலை பாக்கோடு அந்த அரை கழஞ்சு காசு நடுவில் இருந்தது.

''என்னுடைய புருஷன் ஊத்தை அடையாமல் திரும்பி வரவேண்டும் என்று நீங்கள் ஆசீர்வதிக்க வேண்டும்.''

''நிச்சயம் அவர் ஊத்தை அடையாமல் திரும்பி வருவார். உடம்பில் காயங்கள் இருக்கும். கவலைப்படாதே. ஆறிவிடும். மிகப் பெரிய செல்வத்தோடு உன் புருஷன் திரும்பி வருவார். பெரிய கதைகள் சொல்வார். எல்லோரும் வாய் பிளந்து கேட் பார்கள். அவருக்கு அரசாங்க பதவி உயர்வு உண்டு.''

''எப்படி சொல்கிறீர்கள்.''

''நெற்றியில் உள்ள கோடுகள் வைத்து சொல்கிறேன்.

அருகே நிற்கும்போது அவருடைய வெப்பம் என்னை தாக்கு கிறது. அது சொல்லும் செய்தியை வைத்து சொல்கிறேன்.''

''அய்யா. மிக நல்ல வார்த்தை சொன்னீர்கள். உங்களுக்கு நான் என்ன தர வேண்டும். தரப் பிரியப்படுகிறோம்.'' அவனுடைய இரண்டாவது மனைவி துள்ளியபடிச் சொன்னாள்.

''எனக்கு நல்ல எட்டு முழக் காழகம் கொடும்மா. மேல் துண்டும், காழகமும் கொடுத்தால் என்னால் மனமுருக தினந் தோறும் உன்னுடைய புருஷன் காரிசடையனுக்காக பிரார்த் தனை செய்வேன். நமச்சிவாய மந்திரம் சொல்வேன்.''

அந்த குடும்பம் கிறுகிறுத்துப் போனது. காரியின் கண் களில் கண்ணீர் ததும்பியது.

''உங்களை சந்தித்தது என் பாக்கியம்.''

''இல்லை அய்யா. கடவுள் அப்படித்தான் சிலரை சந்திக்க வைப்பார். உங்களுக்கு ஒன்று சொல்கிறேன். உங்கள் மனை விக்கு தெரியாமல் காதை கொடுங்கள்.'' அவன் காது கொடுக்க அவனிடம் பேசினார்.

''கடுமையான காயங்கள் ஏற்படும். இரத்தப்போக்கு இருக் கும். திரும்பி வருவதற்கு முன்பு தாக்கப்பட்டு உங்கள் நிலைமை கவலைக்கிடமாகும். பயப்பட வேண்டாம். காயாரோஹணர் அவர் இருக்கிறார். அவரை நினைத்துக் கொள்ளுங்கள். நமச் சிவாய நமச்சிவாய என்று சொல்லுங்கள். மருந்து வேலை செய்யும். நல்ல நேரத்தில் நல்ல மருந்து கிடைக்கும். திரும்பி வரும்போது ஏழெட்டு நாட்கள் ஓய்வு கொடுத்தால் குண மடைந்து கீழே இறங்கி கால் பதிப்பீர்கள். கோல் ஊன்றி வர வேண்டி இருக்கும்.'' அவன் வெளிறினான். ஆயினும் நன்றி சொன்னான்.

அவனுக்கு இருபத்தியோரு வயது. அவளுக்கு பதினேழு வயது. ''மரக்கலம் ஏறும் முன்பு கடைசி முறையாக உன்னைப் புணர விரும்புகின்றேன்.'' அவன் வாய்விட்டு சொன்னான். அவள் வாயைப் பொத்திக் கொண்டாள்.

''என்ன இது. கடைசி முறையாக.''

''இல்லையடி. கிளம்புவதற்கு முன் கடைசி முறையாக.''

''அப்படி தோன்றவில்லை. தவறாக பேசுகிறீர்கள். விட்டேன் என்று சொல்லுங்கள்.'' அவன் விட்டேன் என்று சொன்னான். ஆனால் அது விடாது ஒட்டிக்கொண்டது.

இரவு நேரத்தில் சத்திரத்தில் ஒரு அறையை வாடகைக்கு வாங்கி உள்ளே புகுந்தார்கள்.

மூர்க்கமாக அவளோடு முயங்கினான். என்ன சொன்னாலும் சரி. எப்படி சொன்னாலும் சரி என்று அவள் அவனுக்கு ஈடுகொடுத்தாள். ஆனால் கடைசி முறையாக என்ற வார்த்தை அவளை கொன்று கொண்டே இருந்தது. அயர்ந்து கால் அகட்டி, வாய் பிளந்து தூங்குகிறவனை ஆவலோடு பார்த்தாள். சிறு அகல் விளக்கின் ஒளியில் அவன் கன்னங்களை, முதுகை வருடினாள். முத்தமிட்டாள். இன்னும் அவன் ஆண்மை தவித்துக் கொண்டிருப்பதை உணர்ந்தாள். தூக்கத்திலும் உடம்பு விழித்துக் கொண்டிருந்தது. அவன் ஆனந்தப்படட்டும் என்று அவளே கூடினாள். அவன் தூக்கத்திலேயே சந்தோஷமாக சிரித்தான்.

விடிந்து எழுந்து வெளியே வந்து குளித்தார்கள். காயா ரோஹணர் கோவிலை வ்லம் வந்தார்கள். அந்த ஊர் எல்லை காளியை விழுந்து கும்பிட்டார்கள்.

''வருகிறேனடி.'' கோவில் வாசலில் இறுக்கி அணைத்துக் கொண்டான். பிரிந்தான்.

கடற்கரை மணலில் இறங்கி அந்த பெரும் கூட்டத்தோடு கலந்து கொண்டான். அவன் எங்கிருக்கிறான் என்று அதற்குப் பிறகு அவளால் கண்டுபிடிக்க முடியவில்லை. அவள் சோர்வோடு கங்கை கொண்ட சோழபுரம் நோக்கி நடக்கத் துவங்கினாள். மாட்டு வண்டிகள் திரும்பிக் கொண்டிருந்தன. ஒரு வண்டி ஓட்டி அவள் நடந்து போவதைப் பார்த்து, 'வாம்மா. வந்து ஏறிக்கொள்' என்று விளித்தான். அவள் வண்டியில் ஏறிக்கொண்டு இரவு நடந்த கூடலை நினைத்துக் கொண்டு நல்லபடி வரவேண்டுமே என்ற துக்கத்தோடு கண்ணில் நீர் பெருகி அழுது கொண்டு அவள் ஊர் திரும்பினாள். அவளை முகம் அறியாத பலபேர் சமாதானப்படுத்தினார்கள்.

"அழுது ஒரு புண்ணியமும் இல்லை தாயே. இது மறவர் வாழ்க்கை. மறவனுக்கு வாழ்க்கைப்பட்ட எல்லா பெண்களும் இந்தவிதமான ஒரு சூழ்நிலையை சந்தித்துதான் ஆக வேண்டும்" என்று சமாதானம் சொன்னார்கள். அவள் மனம் தேறினாள்.

நேற்றைய இரவு நேர விளையாட்டால் சூலுற்றுவிடுவோம் என்று அவளுக்கு தோன்றியது. அவளுடைய அடிவயிறு அப்படி ஏதோ ஒரு செய்தியை சொன்னது. பெண்களுக்கு மட்டுமே இதை தெளிவாக உணர்ந்து கொள்ள முடியும். மறுபடியும் வயிற்றில் கவனம் செலுத்தினாள். 'ஆமாம் சூலுற்றுவிட்டோம்' என்று சொல்லிக்கொண்டாள்.

எதிரே தேர்ந்த புரவிப்படை போனது. எத்தனை கணவர்களோ, எத்தனை மனைவியர்களோ, எத்தனை நாள் பிரிவோ என்று அவள் ஏக்கமடைந்தாள். சட்டை உடுத்தி, தலைப்பாகை கட்டி போகின்ற அத்தனை போர்வீரர்களும் அவளுக்கு அவன் புருஷன் போலவே தோற்றமளித்தார்கள்.

பிரிவு என்பது மிகப்பெரிய கொடுமை.

'பொருள் வழி பிரிவோர் பிரிவோராக.
மடவமாக. மடந்தை நாமே.'

எப்பொழுதோ படித்த பாட்டு ஞாபகம் வந்தது. ஆண்கள் பிரிவார்கள். பெண்கள் காத்துக் கொண்டிருக்க வேண்டும். ஏங்கிக் கொண்டிருக்க வேண்டும். பொருள் குறித்தோ, போர் குறித்தோ வீடு விட்டு போய் வருகிறேன் என்று கிளம்புவார்கள். எப்போது எப்போது எப்போது என்று காத்திருக்க வேண்டும். பெண் இனத்தின் மிகப் பெரிய வேதனை இது என்று நினைத்துக் கொண்டாள். இன்னொரு புரவிப் படை தாண்டிப் போயிற்று. இந்த முறை அந்த புரவிப் படையை பார்க்கக்கூட அவளுக்கு திராணி இல்லை. கண்கள் மூடிக் கொண்டாள். மூடிய கண்களுக்குள் அவன் வேகமாக முயங்குவதே தெரிந்தது.

ஆறு நாட்கள் விதம் விதமான படையோடு, விதம் விதமான குழுக்களோடு இராஜேந்திரர் இரவு நேரம் பெரிய உரை நிகழ்த்தினார். கடலோரம் நின்று கொண்டார். மேடை அமர்த்தியிருந்தது. எதிரே வீரர் கூட்டம் இருந்தது. கடற்காற்று இரவு

நேரம் உள்ளே நுழைந்தது. அவர் பேசுவது துல்லியமாக கேட்டது.

“நான் பேசுவது கேட்கிறதா.” உரத்த குரலில் கத்தினார்.

மிகத் தொலைவில் உள்ள ஒரு வீரன் ஈட்டியை உயர்த்தினான். இரண்டு தட்டுக்குப் பிறகு அவர் பேச்சு அவன் காதில் விழுந்தது.

“என் உயிரினும் மேலான சோழப் படை வீரர்களே, நான் மிகுந்த நம்பிக்கை வைத்திருக்கின்ற தெரிஞ்ச கைக்கோளப் படை வீரர்களே, பெருங்கூட்டமாய் கங்கையில் கால் வைத்த சிங்க குட்டிகளே, சோழ தேசத்து சிறுத்தைகளே, உங்கள் அனைவருக்கும் என் வணக்கம்.” கை கூப்பினார். கூட்டம் பேய் போல ஆரவாரித்தது.

“இந்த கூட்டத்திலுள்ள மிகச் சிறந்த வீரர்களை நான் தெளிவாக, தனியாக அடையாளம் கண்டு கொண்டிருக்கிறேன்.” சொல்லிவிட்டு நிறுத்தினார்.

ஒவ்வொரு வீரனும் தன்னை நினைத்துக் கொண்டான்.

“ஒரு நாளைக்கு பத்து காதம் ஊடுருவி போக வேண்டும் என்று சொன்னால் இருபது காத தூரம் ஓடிப்போய் நிற்கின்ற உங்களுடைய திறமை, திடம் எனக்குத் தெரியும்.” மறுபடியும் கூட்டம் ஆரவாரம் செய்தது.

“மலை ஏறுவோமே. தெரிஞ்ச கைக்கோளப்படைதான் வர வேண்டும். மலை இறங்க வேண்டுமே. தெரிஞ்ச கைக்கோளப்படை தான் இறங்க வேண்டும். ஆறு தாண்ட வேண்டும். தெரிஞ்ச கைக்கோளப் படைதான் நீந்த வேண்டும். அப்படி ஒரு முதன்மை ஸ்தானம் சோழ தேசத்தில் உங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.

தெரிஞ்ச கைக்கோளப்படை என்றால் என்ன? என்ன விஷயம் தெரிஞ்ச கைக்கோளப்படை. வேலை தெரிந்த கைக்கோளப்படை.” அவர் சொல்ல, பேயாய் கத்தினார்கள்.

“வெறும் வேலை செய்வது மட்டுமல்ல. மிகத் திறமையாக வேலை செய்வது, மிக திடமாக வேலை செய்வது. எதிரியை முதன் முதலில் சந்தித்து அவர்களை நடுங்க வைக்கின்ற ஒரு

படை. என்னுடைய இந்த தெரிஞ்ச கைக்கோள சோழப்படை.'' கூட்டத்திற்கு பித்து பிடித்தது போல் ஆயிற்று.

இப்படி எல்லா படையினரிடமும் இராஜேந்திர சோழர் பேசுவார் என்று பின்னால் நின்ற தளபதிகள் தெரிந்து வைத்து இருப்பார்கள்.

''என் நண்பர்களே.'' கூட்டம் பல் தெரிய சிரித்தது. மாமன்னர் நண்பர் என்று அழைக்கிறார் என்று பெருமிதப்பட்டது.

''இதுவரை செய்யாத ஒரு போரை நாம் செய்யப் போகிறோம். நமக்கு காடு தெரியும், மேடு தெரியும், மலை தெரியும், பள்ளத்தாக்கு தெரியும், அருவி தெரியும், ஆறு தெரியும். ஆனால் கடல் தெரியாது. கற்றுக் கொண்டு விட்டோம். முதலில் கடினமோ என்று தோன்றும். நாவாய் ஏறி நாவாயில் நிற்பதற்கு தெரிந்து கொண்டு கடற் காற்றை ஆழ சுவாசித்தால் அந்த தூய்மையை உணர்ந்தால் உள்ளே பலம் கூடும். உறுதி கூடும். நீங்கள் எதில் கடல் தாண்டப் போகிறீர்கள். நீந்தியா, மரத்தூண்டிலா. இல்லை. சிறிய படகா. இல்லை. வங்கமா இல்லை. தோணியா இல்லை. பெரும் படகா இல்லை. நாவாயா. ஆனால் பெரும்பான்மையோர் வங்கத்தில்தான் பயணம் செய்யப் போகிறீர்கள். குதிரைகள் நாவாயில் வரும். மரக்கலன்களில் வரும் வீரர்கள் அக்ரமந்தரம் என்று சொல்லப்படுகின்ற அதோ அந்த நாவாயில் வருவீர்கள். இடது நுனியிலிருந்து வலது நுனி வரை உங்களுக்கு மரத்தால் இரண்டடுக்கு மாளிகைகள் செய்யப்பட்டு இருக்கிறது. உள்ளே சில அறைகளும், பெரும் கூடமும் இருக்கும். நீங்கள் வரிசையாக படுத்துக் கொண்டால் எளிதாக அதில் ஆயிரம் பேர் பயணம் செய்துவிடலாம். உட்கார்ந்து கொண்டால் இன்னும் பயணம் எளிதாக இருக்கும். படுத்துக் கொள்ளும்போது மனைவியின் நினைப்பில் அடுத்தவன் மீது காலை போட்டு விடாதீர்கள். அது வம்பில் முடியும். ஏனெனில் கூதற் காற்று உங்களை அப்படி செய்ய வைக்கும்.''

கூட்டம் இடியென நகைத்தது.

''உடம்பு உஷ்ணத்திற்கு ஏங்கும். அதற்கு கணப்புகளும், பெரிய குமட்டிகளும் உங்களுக்கு தரப்படும். கதவுகளை இறுக்க

மூடுகிறபோது கூதற்காற்று அதிகம் தாக்காது. ஆனால் கூதற் காற்றுக்கு நீங்கள் பழக்கப்பட வேண்டும். குமட்டி அருகிலேயே உட்கார்ந்து கொண்டிருக்கக் கூடாது. ஏனெனில் போர் அறைக் குள் நடக்காது. வெளியே திறந்தவெளியில் மரப்பலகையின் மீது, மரக்கலத்தின் விளிம்பின் மீது நடக்கும்."

"ஒரு மரக்கலம் எத்தனை வேகத்தில் போகும்." அவரே கேட்டார். அவரே பேசினார்.

"அது காற்றின் நிலைமையை பொறுத்தது. நல்லபடி காற்று வீசி பாய்மரங்களை உப்பினால் ஓட்ட நடையாக ஒரு குதிரையை தரையிலே செலுத்திக் கொண்டு போகும் வேகத் தில் போகும்.

நாலுகால் பாய்ச்சலில் குதிரை போகுமே. இங்கிருந்து; ஒரு நாழிகையில் கங்கை கொண்ட சோழபுரத்தை அடைந்துவிடு வோமே. அப்படி போகாதா."

"இல்லை. போகாது. புயல் காற்று வீசும் போதுதான் அப்படி போகும். புயல் காற்று வீசாதது நமக்கு நல்லது. பயணம் சிறப் பாக இருக்கும். எப்பொழுது வேகம் இருக்கிறதோ அப்பொழுது மரக்கலத்தின் ஆட்டமும் அதிகமாக இருக்கும். இந்த சீரான ஓட்டம் அமைதியான பயணத்தைத் தரும்.

ஒன்றல்ல இரண்டல்ல. இருபத்தியோரு சர்வ மந்திர வங்கங்கள் இருக்கின்றன. அதற்கு அடுத்தபடியான மத்ய மந்தரம் என்று சொல்லப்படுகின்ற நடுவிலே மட்டும் அறைகள் அமைத்து இரண்டு பக்கமும் பெரிய தளங்களோடு கூடிய வங்கம் இருக்கிறது. அடுத்தபடியாக, கிட்டத்தட்ட அறுபது அக்ர மந்தர கலன்கள் இருக்கின்றன. இரண்டு முனைகளிலும் அவைகள் கூடங்களைக் கொண்டிருக்கும். நடுவே பெரும் தளம் இருக்கும். இவை வேகமான படகுகள். மேலே இருக் கின்ற உயர்ந்த மரத்தூணில் கட்டப்பட்டிருக்கின்ற பாய்மரங்கள் எடை குறைவானபடியால் இவைகளை விரைவில் செலுத்தும். வில்லாளிகள் எல்லோரும் இந்த அக்ரமந்ர மரக்கலத்தில்தான் இருப்பார்கள்.

சர்வ மந்தர மரக்கலங்களில் நான்கு யானைகளும், நாற்பது குதிரைகளும், போர்வீரர்களும் வருவார்கள். யானைகளுக்கு கீழ் அறை, அடுத்தது குதிரைகளுக்குண்டான லாயம். மேலே

வீரர்கள் தங்கும் இடம். பராமரிக்கும் வீரர்கள் மட்டுமே இருப்பார் கள். சர்வ மந்திர மரக்கலன்களில் வீரர்கள் நிறைந்து காணப் படுவார்கள். கரை இறங்கியதும் சர்வ மந்திர மரக்கலனில் இருந்த படைவீரர்கள் கிளம்பி, குதிரைகளையும், யானைகளையும் சம்பாதித்துக் கொண்டு உள்ளே போவார்கள். இதற்கான பயிற்சி உங்களுக்கு கொடுக்கப்பட்டு இருக்கிறது.

இந்த வங்கங்களை சுற்றி நாவாய்கள் வரும். மரக்கலன் கள் வரும். தோணி வரும். வெறும் மரக்கலனைச் சுற்றி இத்தனை. சர்வ மந்திரத்தை சுற்றி இத்தனை. அக்ர மந்திர வங்கத்தை சுற்றி இத்தனை என்று நாவாய்கள் கணக்கிடப் பட்டு வைத்திருக்கின்றன. அவைகள் சூழ்ந்து கொண்டுதான் வரும். உங்களை தாக்குவதற்கு முன்பு அவைகளை தாக்கி விட்டுத்தான் வர வேண்டும்.

கடற்போர் நூற்றுக்கு தொண்ணூறு சதவீதம் கடலில் நடக் காது. கரையில் நடக்கும். நான் பேசுவது கேட்கிறதா." "கேட் கிறது." தொலைதூரத்திலிருந்து குரல் வந்தது. கூட்டம் சலசலக் காது அவர் பேச்சை கேட்டுக்கொண்டிருந்தது.

"எனவே போர் என்பது அந்த தேசத்தை ஊடுருவி போகும் போதுதான் நடப்பதற்கு வாய்ப்பிருக்கிறது. நடுவே கடற் கொள்ளைக்காரர்களை நாம் சந்திக்க நேரலாம். அந்தப் போர் கடல்மீது நடைபெறும். கடற் கொள்ளைக்காரர்கள் கடல் பற்றி தெரிந்தவர்கள். மரக்கலன் பற்றி நன்கு அறிந்தவர்கள். அவர்கள் கரையில் எதிரியை சந்திக்க மாட்டார்கள். நடுக்கடலில் பய முறுத்த முயற்சிப்பார்கள். கூட்டமாக இருக்க மாட்டார்கள். ஒன்று இரண்டு மரக்கலன்களாக அல்லது வங்கங்களாக இருக் கலாம். அவைகளை நாம் சுற்றி சூழ்ந்து அடித்துவிட முடியும். நம்முடைய பெரும் கூட்டத்தை பார்த்தாலே அவர்கள் பயந்து ஓடிவிடுவார்கள். அவர்களை மடக்கி பிடிப்பது நம்முடைய முக்கியமான வேலை என்று உங்களுக்கு தெரிவித்துக் கொள் கிறேன். எதிரிகளைக் கூட மன்னித்து விடலாம். ஆனால் கடற் கொள்ளையர்களை மன்னிக்க இயலாது. அவர்களை தாக்கி கொன்று மரக்கலன்களையும், அவர்களுடைய பொருள்களை யும் கையகப்படுத்துவதே நம்முடைய வேலை. ஈவு, இரக்கம் இல்லாமல் அடித்து கொல்லுங்கள். பெரிய மூர்க்கமாக போர் செய்யுங்கள்.

அவர்களிடமிருந்து எந்தவிதமான ஆயுதங்கள் வரும். எரி அம்புகள் வரும். எரி அம்புகளை எதிர் கொள்ளவும் உங்களுக்கு பயிற்சி தரப்பட்டு இருக்கிறது. நாவாய் மீது நாவாயை இடித்து நாவாயை நாசம் செய்து உள்ளே குதித்து போர் செய்வார்கள். அவர்கள் உள்ளே இறங்கியவுடன்தான் நம்முடைய வலிமை, நம்முடைய வாள் வீச்சு, நம்முடைய யுத்த பயிற்சி என்ன என்பது அவர்களுக்கு தெரியவரும். உறுதியான மெல்லிய கத்திகளால் உடம்பில் காயமும், குத்தியும் முகத்தில் அடித்தும் போர் செய்வதில் வல்லவர்கள். ஒரே வீச்சில் அவர்கள் வாட்களை நாம் துண்டு செய்துவிடலாம். உள்ளே அடிபட்டவர்களை கடலில் போட்டு மேலே இருந்து அம்பு செலுத்தி கொல்லுங்கள். மரக்கலத்தில் கொல்வதை விட கடலில் கொல்வதே சிறந்தது. மரக்கலத்தை ஏன் ரத்த மயமாக்க வேண்டும்'' என்று சொல்ல, மறுபடியும் கூட்டம் ஆரவாரித்தது.

''வா மகனே வா'' என்று பல் கடித்தது.

''எதற்கு இப்பொழுது இந்த போர் இதுதான் முக்கியமான கேள்வி. தெற்கு கடல் தாண்டி சோழப்படை ஸ்ரீவிஜயம், கடாரம் நோக்கி போக வேண்டும். கங்கையை வெற்றி கொண்டது போதாதா. குலுத்த நாடு போய் அங்கே மீனும், புலியும் செதுக்கி விட்டு வந்தது போதாதா. எல்லா நேரமும் மழை பெய்கின்ற அந்த ஊரில் தோலால் ஆடை செய்து கொண்டு துவம்சம் செய்தது போதாதா. எவ்வளவு செல்வங்கள் கொண்டு வந்து சோழ தேசத்தை செழிப்படையச் செய்திருக்கிறோம். இந்த கடற் பயணம் எதற்கு, கொள்ளை கொள்ளவா, இல்லை. இதற்கு மேல் பொருள் ஒன்றும் நமக்குத் தேவையில்லை. நாம் பழி வாங்கப் போகின்றோம். பதிலுக்கு பதில். அடிக்கு அடி, குத்துக்கு குத்து. வெட்டுக்கு வெட்டு என்று பழிதீர்க்கப் போகிறோம்.'' பல்லை கடித்துக் கொண்டு இராஜேந்திர சோழர் பேசினார்.

'மறுபடியும்' என்று குரல் கேட்டது.

மறுபடியும் அதே உரத்தக் குரலில் அவர் முழங்கினார்.

''சோழ தேசத்து வணிகர்கள் நேற்று உங்களை சந்தித்து இருப்பார்களே. உள்ளங்கையை பிரித்து காண்பித்திருப்பார்களே. ஒரு விரலைக் கூட மடக்க முடியாமல், சோறு பிசைய முடியாமல், குடிநீர் குடிக்க குவளையை பிடிக்க முடியாமல் அந்த

உள்ளங் கைகள் சிதைக்கப்பட்டு ஒன்றோடொன்று ஒட்டப் பட்டு துண்டால் சுற்றி இறுக்க கட்டப்பட்டு இருபது நாட்கள் சிறையில் வைக்கப்பட்டு இனி பிரிக்கவே முடியாது என்ற நிலை யில் அறுத்துதான் அறுவை சிகிச்சை செய்துதான் சல்லியக் கிரிசை (அறுவை சிகிச்சை) செய்வானோடு உதவியால்தான் கையை பிரிக்க முடியும் என்ற நிலைமை உண்டாகி நம் முடைய மருத்துவர்கள் அதைச் சரியாக செய்து ஓரளவு காப்பாற்றியிருக்கிறார்கள். கடாரத்தில் புத்த பிட்சு சொன்னா னாம். போய் சிவலிங்கத்தை கும்பிட்டுக் கொண்டே இரு. கும்பிடுவதற்குத்தானே சிவலிங்கம் வைத்திருக்கிறாய். ஆணும், பெண்ணும் புணர்வதை காட்டியிருக்கிறாய். போய் புணர்வதையே கும்பிட்டுக் கொண்டிரு என்று சொன்னானாம். சிவ மதத்தின் உயர்ந்த தத்துவத்தை புரிந்து கொள்ளாத அந்த பேடி, பெட்டை நாய், மொட்டைத் தலையன், கோமணம் கட்டாத சாக்குத்துணி நம்முடைய மதத்தை, வணிகர்களை கேலி செய்திருக்கிறான். அபிப்ராயத்தை சொல்லிவிட்டுப் போ. என் சிவ மதம் உன்னை விட மிகப் பெரியது. ஆனால் எதற்கு சிதைத்தாய். எதற்கு வதைத்தாய். இதைச் சொல்லவா இப்படி தண்டனை. மரக்கலன்களை கொள்ளை அடித்தால் எடுத்துக் கொண்டு போ. ஆனால் அந்த பொருள்களை கொள்ளையடித்து உன்னுடைய பொருள்கள் என்று சீனத்தில் விற்க முயற்சி செய்தாயே, விடுவேனா உன்னை. என் வீரர் களை தொட்ட உன்னை விடுவேனா.

சீனப் பயணம் எங்களுக்கு தேவை, அந்த நாகரீகம் நாங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். சீனத்து பொருள்கள் சோழ தேசத்திற்கு வர வேண்டும். சோழ தேசத்து தந்தமும், ஏலக்காயும், சந்தனக்கட்டையும், வாசனைப் பொருள்களும் சீனத்திற்கு போக வேண்டும். மிக உயர்ந்த நாகரீகம் கொண்ட அந்த வம்சத்தாரோடு நாம் நல்லுறவு ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். உலகம் மிகப் பெரியது. அதில் எங்கும் எவரும் போவதற்கு உரிமை உண்டு. அதை தடுத்து அற்பத்தனமாக சீனர்களுக்கு கூட்டிக் கொடுக்கின்ற விதமாக உன்னுடைய பெண்களை விலைக்கு விற்று பிறகு எங்கள் பொருள்களை விற்க முயற்சிக்கிறாய். என் வணிகரை நாங்கள் காப்பாற்று வோம்.

பாண்டிய தேசத்திலிருந்து படைகள் கிளம்பி சோழ தேசத்தின் எல்லையில் ஊடுருவி ஊர்களை எரித்தால் சும்மா விடுவோமா. பாண்டியன் முதுகெலும்பை முறித்தோம். சேர தேசத்து அந்தணன் தந்திரம் செய்து திருமுனைப்பாடி நாட்டில் உள்ளே புகுந்தால் விடுவோமா. சுழற்றி சுழற்றி துரத்தி துரத்தி அடித்தோம். மேற்கு கடற்கரை ஓரம் உன்னை நிற்க வைத்து அங்கிருந்து தப்பித்து போக வைத்தோம். மேலைசாளுக்கியம் நம்மிடம் பட்டபாடு உலகம் அறியும். இனி படையெடுப்பு என்று வரின் தவழ்ந்துதான் போக வேண்டும். எங்களிடம் நட்பாக இருந்த கீழை சாளுக்கியத்தை நாங்கள் வளம்பெற வைத்தோம். கங்கைக்கு போவதை தடை செய்த அத்தனை அரசனையும் மண்டி போட வைத்தோம். சோழ வீரம் மிகப் பெரியது, அவர்கள் கம்பீரர்கள். நாங்கள் வலுச்சண்டைக்கு போனதேயில்லை. நீ தொண்டை நாடு வரை படையெடுத்து வர முடியுமென்றால் நாங்கள் மேலை சாளுக்கியத்தின் மத்திமம் வரை வந்து நிற்போம். இன்னும் துரத்துவோம். எங்கள் வீரம் கடல் தாண்டி போகுமென்பது உனக்கு எட்டவில்லை. எட்டு கின்ற நேரம் வந்துவிட்டது. சிறிய வீரவாள் படையோடு இருக் கின்ற வணிகன்தானே என்று பொருளை பிடுங்கிக் கொண்டு கன்னத்தில் அடிக்கிறாய். எட்டி உதைத்து பேசுகிறாயா. உன் காலை உடைப்பேன். அவன் என் வணிகன். என் தேசத்தவன். சோழ தேசத்தின் முதுகெலும்பு அவன். அவனை தொட விட மாட்டேன்.

தேசம் வளமாக இருக்க வணிகர்களே காரணம். வணிகர் இல்லையெனில் அரசு இல்லை. அரசரும் இல்லை. வணிகர் களின் பெருமை சொல்லற்கரியது. பல நேரத்தில் வணிகர்கள் அரசாங்கத்திற்கு பொருள் கொடுத்து உதவியிருக்கிறார்கள். இன்னும் வணிகர்கள், வணிகர்களுக்கு துணை போன வீரவாள் படையினர் பலநூறு பேர் அங்கே கைது செய்யப்பட்டு அடிமை களாக வைக்கப்பட்டிருக்கிறார்கள். நினைக்க நினைக்க நெஞ்சம் எரிகிறது. சோழ தேசத்தவன் அடிமையா. கூலி வேலை செய்வதா. ஆறு மாளிகைக்கு சொந்தக்காரன். மிகப் பெரிய வணிகன். அரச குலத்தோரின் துணிகளை துவைத்து காயப்போட்டுக் கொண்டிருக்கிறான். ஏய், நாயே உன்னை விட மாட்டேன். உன்னை விட மாட்டேன். என் குல மதிப்பை

ஒருநாளும் இழக்க மாட்டேன்.'' அவர் பல் கடித்துக் கொண்டு கத்த, கூட்டம் பெரும் கூச்சல் எழுப்பியது. அடங்க சற்று நேரம் ஆனது.

''அந்த கடாரத்தவன் நன்றி கெட்டவன். எச்சிலை சோறு தின்பவன். இப்பொழுது அங்கு மன்னனாக இருக்கின்ற சங்கர ராம விஜயோத்துங்கனுடைய தகப்பன் சூடாமணிவர்மன் என் தந்தை இராஜராஜ சோழனை அணுகி, காலில் விழுந்து தன் கிரீடத்தை கழற்றி அவர் மடியிலே வைத்து கைகூப்பி, எனக்கு புத்த விகாரம் கட்ட இடம் வேண்டும் என்று கெஞ்சினான். ஆனைமங்கலம் என்ற மிகப் பெரிய கிராமத்தையே அவனுக்கு எழுதி வைத்தார். இதோ செப்பு பட்டயம். ஏழு நாட்களுக்கு முன்பு அந்த புத்த பிட்சுவுக்கு அனுப்பினேன். என் தகப்பன் கொடுத்த அந்த தானத்தை ஒருபோதும் நான் பிடுங்கிக் கொள்ள மாட்டேன். முழுவதுமாக மதிப்பேன் என்று செப்பு பட்டயம் அங்கு போயிருக்கிறது. ஆனைமங்கலத்து புத்த பிட்சுக்கள் வெட்கி தலைகுனிந்து நின்றார்கள். இந்த நேரத் திலும் இப்படி நடந்து கொள்வீர்களோ என்றார்கள். அதுதான் சோழன் புத்தி. அதுதான் சோழன் வாழ்க்கை. அதுதான் சோழ ருடைய தர்மம். சொன்ன வாக்கை மீற மாட்டோம். என் தகப்பன் சாசனம் செய்து கொடுத்திருக்கின்ற நிலம் உங்க ளுக்குச் சொந்தம். அதில் நான் கை வைக்க மாட்டேன். ஆனால் என்னுடைய வணிகர்கள் மீது கை வைத்தால் உடைப்பேன். அடிப்பேன். கொல்லுவேன். பரத கண்டத்திற்கே சொந்தமான வேதம் இருக்கிறது. அந்த வேதங்கள் சொல்கின்ற தர்மம் இருக் கின்றது. அதை குமரி முனையிலிருந்து இமயம் வரை கடைப் பிடிக்கிறோம்.

உங்களுக்கு ஒரு தர்மமும் இல்லை. விபச்சார விடுதி நடத்துகின்ற மன்னன் நீ. சீனர்களுக்கு பெண்களை விலைக்கு விற்கின்ற மன்னன் நீ. பிறந்த பத்து வயது குழந்தையை, தாய் தந்தையை பிரித்து வணிக மரக்கலத்தில் ஏற்றி போகத்திற்கு அனுப்புகின்ற அற்பன் நீ. சதை வியாபாரத்தைத் தவிர வேறு ஒன்றும் தெரியாது கடாரத்திற்கும், ஸ்ரீவிஜயத்திற்கும். உங்களை ஒழித்துக் கட்டுவேன். எனவே, நல்ல நாள் குறித்து சொல்வார் கள். நாம் கிழக்கு நோக்கி கிளம்புகிறோம். மிக பத்திரமாக

கரையில் இறங்குவோம். மிகக் கடுமையாக போரிடுவோம். அடித்து முதுகெலும்பை உடைப்போம். உங்களுடைய விற்களை சமாளிப்பது எப்படி என்று எங்களுக்குத் தெரியும். உங்களுடையது கற்கோட்டை அல்ல. தஞ்சை பெரிய கோவிலைப் போல ஒன்றை உன்னால் மனதாலும் நினைக்க முடியாது. சுண்ணாம்பால் சூடாமணி விகாரம் கட்டிக் கொண்டிருக்கிறாய். மூன்றடுக்கு செங்கல் மாளிகை கட்டிவிட்டு இது மிகப் பெரிய கோபுரம் என்கிறாய். கங்கை கொண்ட சோழபுரம் நீ பார்த்தது இல்லை. கல்லிலே களிமண்ணை போல பொம்மை செய்வதில் வல்லவர்கள் நாங்கள் என்பது உனக்கு தெரியவில்லை. எங்கள் நாகரீகத்தின் உச்சி உனக்கு புரியவில்லை. நாங்கள் தர்மப்படி வாழ்ந்து எங்கள் நாகரீகத்தை வளர்த்துக் கொண்டிருக்கிறோம். நீ வெறும் குப்பை. தூசு. கடல்தான் உன்னை காப்பாற்றிக் கொண்டிருக்கிறது. இதோ அந்த கடலை வென்று அதைத் தாண்டி உன்னிடம் இறங்குகின்றோம். அப்பொழுது பதில் சொல். ஜெயவிஜயீபவ.'' உரக்க கத்தினார். வீரர் கூட்டம் எதிரொலித்தது.

காலையும், உச்சி நேரமும், மாலையுமாக பல கூட்டங்களில் இராஜேந்திர சோழர் பேசினார். வீரர்களுக்கு ஏற்படும் சந்தேகங்களை தளபதிகளும், உபதளபதிகளும் விளக்கினார்கள். எல்லா வீரர்களையும் வரைபட மாதிரியை பார்க்க வேண்டும் என்று கட்டளையிட்டார்கள். பலமுறை பலமுறை அவர்களுக்கு ஊரும், ஆறும், மலையும், புல்வெளியும் காட்டப்பட்டன. அந்த மாதிரி போல உண்டானதை வரைபடமாக வரைந்து எல்லா மரக்கலன்களிலும் தொங்கவிட்டிருந்தார்கள். துணிச் சீலையில் கருப்பு மையால் வரையப்பட்டு இடங்கள் எழுதப்பட்டு காட்டப்பட்டிருந்தன. எழுத, படிக்க தெரியாத வீரர்களுக்கு இடங்களில் வித்தியாசம் காட்டியிருந்தார்கள். நகரங்கள் இருக்கும் இடத்தை கூம்பு கூம்பாக காட்டி இருந்தார்கள். ஏன் மலை உச்சிக்கு ஏற வேண்டும். இந்த இரண்டு மலைக்கும் நடுவே இடம் இருக்கிறதே.

''இருக்கிறது, ஆனால் அங்கு அருவி இருக்கிறது. அந்த அருவியில் கால் வைத்தால் நீ உயிரோடு போய் சேர முடியாது. எனவே, அந்த இரண்டு மலைகளுக்கு நடுவே உள்ள இடத்தை

விட்டு விட்டு மலை உச்சிக்கு போய் அங்கிருந்து சரிவில் இறங்கி ஆற்றோடு நீ புல்வெளிக்கு போக வேண்டும்'' என்று சொல்ல, புரிந்து கொண்டார்கள்.

''புத்த பிட்சுக்கள் கருணையைப் பற்றி பேசுகின்றவர் களாயிற்றே. ஏன் இப்படி கொடூரமாக மாறியிருக்கிறார்கள்.''

''போலி புத்த பிட்சுக்கள். சீனத்து புத்த பிட்சுக்களிட மிருந்து இங்கு வந்து தங்களுடைய அரசாங்கத்தை மன்னர் களின் துணை கொண்டு நிறுவி இருக்கிறார்கள். சீனத்து பௌத்த மடாலயங்களிலிருந்து தப்பித்து ஓடிவந்து இங்கு பெரிய புத்த பிட்சுவாக காட்டிக் கொண்டு இங்குள்ள பெண் களை புணர்வதும், அப்படி புணர்ந்தால் அது நல்லது என்று சொல்வதுமாய் போலி வாழ்க்கை ஆரம்பித்துவிட்டார்கள். சாவகத் தீவிலுள்ள இந்துக்களை எதிர்த்தார்கள். ஸ்ரீ விஜயத் திலுள்ள இந்துக்களை அடித்து புத்த மதத்திற்கு மாற்றினார் கள்.''

''சண்டை போடப்போவது மன்னர்களோடா, புத்த பிட்சுக் களோடா.''

''மன்னர்களோடுதான் சண்டை இருக்கும். ஆனால் முதன் மையாக புத்த பிட்சுக்கள் தண்டிக்கப்படுவார்கள். குரூரமாக அங்கு கொல்லப்படுவார்கள். சைவ மதத்தை அங்கு ஸ்தா பிக்கும்படியாக நாம் இந்த படையெடுப்பை நடத்தப் போகி றோம்.''

''இருந்து செய்துவிட்டு வரப்போகிறோமா.''

''இல்லை. களையை எடுத்துவிட்டால் நெல் தானாக வளரும் அல்லவா. புத்த பிட்சுக்களை அழித்துவிட்டால் வளர் வது சைவ மதம்தானே'' என்று சொல்லப்பட்டது.

வீரர்கள் புரிந்து கொண்டார்கள்.

''நமக்கு துணையாக ஒரு தேசம் இருக்கிறது.'' தளபதிகள் ஆரம்பித்தார்கள்.

''காம்போஜம் என்று அதற்குப் பெயர். கலைகளில் சிறந்த நாடு. கட்டிடக் கலையில் சிறந்த நாடு. நடனம், பாட்டு என்று நடந்த நாடு. வங்க தேசத்திலிருந்து மன்னர்கள் அங்கு போய்

இராமாயண, மகாபாரதம் போன்ற இதிகாசங்களை வர்ணாசிரம தர்மங்கள் பரவிய போது செழித்த நாடு. அங்குள்ளவர்கள் இராமாயண நாடகம் போடுகிறார்கள். ஆனால் அது வேறுவித மாக இருக்கும்."

"வேறுவிதமாக என்றால்... இராமருக்கு மனைவி சீதை தானே."

"ஆமாம். இராமருக்கு மனைவி சீதைதான். இராமர் ஏக பத்தினி விரதன்தான். ஆனால் இன்னும் மிருதுவாக ஆடு வார்கள். துரிதம் குறைவாக இருக்கும். அந்த மக்களுடைய நடவடிக்கைகளே மிருதுவாக இருக்கும். சோம்பலாக இருக்கும். அந்த சூழ்நிலை அப்படி. நம்மிடம் இருக்கும் விறுவிறுப்பு, வேகம், கத்தல், கூச்சல் அங்கு இருக்காது, நம்முடையது வெய்யில் தேசம். அங்கு கொஞ்சம் குளிர்காற்றும், பனியும் அதிகம். அதற்கேற்றபடிதான் அவர்கள் இருப்பார்கள்.

காம்போஜத்தினுடைய மன்னர் சூர்யவர்மன் இளவரசன் புத்திவர்மன் ஆகியோர் நமக்கு உதவி செய்வதாக வணிகர் களிடையே வாய் வார்த்தையாக சொல்லியிருக்கிறார்கள். போனால்தான் தெரியும் நிலைமை. ஆனால் அங்கு எதிர்ப்பு இருக்காது. அவர்கள் எரி அம்புகள் கொடுத்து உதவினால் நமது வேலை எளிதாக முடியும். கொடுக்கவில்லையென்றால் பறித்துக் கொள்ளவும் திட்டமிட்டிருக்கிறது."

"எரி அம்புகள் என்றால்."

"அம்பின் நுனியில் ஒரு குழி செய்து அதில் மருந்து அடைத்து வைத்திருப்பார்கள். பிறகு தொடுத்து தயாராக வைத்திருப்பார்கள். மருந்தின் மீது தீபத்தை வைப்பார்கள். மருந்து பற்றி எரியும். இப்பொழுது கணையை விடுவார்கள். கணை சீறிப் பாய்ந்து நெருப்போடும், புகையோடும் போய் அடுத்தவர் மீது வந்து விழும். சில சமயம் பட்டென்று வெடிக் கும். அது கூரை மீதோ, மூங்கிலின் மீதோ, அல்லது பாய் மரத்தின் மீதோ, மரக்கலத்தின் மீதோ விழுந்தால் அது அந்த இடத்தை நாசமாக்கும்."

"இந்த மருந்து எங்கு இருக்கிறது."

''சீனர்களிடம் இருக்கிறது. சீனர்கள் கண்டுபிடித்த வித்தை அது. உண்மையில் சீனத்து புத்த பிட்சுக்கள் கண்டு பிடித்த வித்தை அது.''

''இந்த மருந்தை அவர்கள் தயாரிக்கிறார்கள்.''

''இல்லை. தரையில் கிடக்கிறது. கந்தகம் என்று பெயர். மஞ்சள் நிறப் பொடியாக, மலை மலையாக, மண்ணாக கிடக் கிறது. எடுத்து ஈரம் உலர்த்தி மரப் பேழைகளில் போட்டு வைத்திருக்கிறார்கள். தரையில் இருப்பது பற்றிக் கொள்ளாது. மரக் குப்பியில் இருப்பது உலர்ந்தது, பற்றிக்கொள்ளும். அதை ஈரப்பதம் அடையாமல் மிக கவனமாக பாதுகாக்க வேண்டும். அதற்கும் உங்களுக்கு பயிற்சி தரப்படும்.

இந்த மருந்தை ஏற்றும்போது வெடித்துவிடவோ, கைகளில் நெருப்பு பீய்ச்சிடவோ வாய்ப்பிருக்கிறது. அதைத் தாண்டிதான் நாம் செய்ய வேண்டும். மிக கவனமாக இயங்க வேண்டும்.

எதிரிகள் மீது குறி தவறாது பாய வேண்டும் என்பது அல்ல. அந்த பக்கம் போய் விழுந்தால் போதும் என்று அடிக்க வேண்டும். உதாரணமாக, ஸ்ரீ விஜயத்து அரசன் ஸ்ரீ சங்கரராம விஜயோத்துங்கனின் அரண்மனை மூன்றடுக்கு மாளிகை யால் ஆனது. அவனது வீடுகளும், மாளிகைகளும் மரத்தால் ஆனவை. கற்களால் ஆனவைகள் அங்கு இல்லை. பாறைகள் வைத்துக் கட்டினால் குளிர் தாங்காது. வெய்யில் நேரத்தில் உள்ளுக்குள் குளிராக இருக்குமே தவிர, குளிர் காலத்தில் உள்ளுக்குள்ளே நடுங்க ஆரம்பித்துவிடும். எனவே, குளிர் தாங்கக்கூடிய மரத்தாலேயே அவர்கள் வீடுகள் கட்டிக்கொள் கிறார்கள். கூரைகள் அமைத்துக் கொள்கிறார்கள். கூரைகளில் மர ஓடுகள் வேய்ந்து அந்த மர ஓடுகள் மீது பொன்னும் வெள்ளியுமாக வரைந்திருக்கிறார்கள். எதனாலேயோ யாளி யின் சிலைகள் அவர்களிடம் அதிகம் இருக்கின்றன. அரண் மனையின் எல்லா கூரைகளிலும் யாளிகள் சிங்க முகங்கள் இருக்கும்.''

''பெண்கள் கிடைப்பது எளிதா.''

''ம். மிக முக்கியமான கேள்வி, இருந்தாலும் பதில் சொல் கிறேன். ஒரு திராட்சைப் பழ குலை போல ஒரு வீட்டு வாசலில் இருபது, முப்பது பெண்கள் இருப்பார்கள். அது பொதுமகளிர் இல்லம். வரச்சொல்லி கூப்பிடுவார்கள். வரிசையாக கட்டில்கள் இருக்கும்.''

''பார்த்தது போல் சொல்கிறீரே.''

''வணிகர்கள் சொன்னதை உங்களுக்குச் சொல்கிறேன். நான் எங்கே பார்த்திருக்கிறேன். இனிமேல்தான் பார்த்து வர வேண்டும்'' என்று சொல்ல, தளபதியை நோக்கி கூட்டம் சிரித்தது.

''பெண்கள் அதிகம். போகத்திற்குத்தான் பெண்கள் என்ற ஒரு எண்ணம் இருக்கிறது. பெண்களை மதிப்பதில்லை. ஆண்கள் ஆளப் பிறந்தவர்கள். பெண்கள் அவர்களுக்கு சுகம் தர வேண்டும் என்ற திமிர் இருக்கிறது. வீட்டு வேலை தவிர, வயல்வேலை எல்லாம் பெண்கள்தான் செய்வார்கள். மூங்கில் அறுப்பது, வீடு கட்டுவது, சுவர் அமைப்பது, மாவு அரைப்பது, குழந்தைகளை பேணுவது, ஆடு, மாடு வளர்ப்பது எல்லாமே பெண்கள் செய்கிறார்கள். இரவு நேரம் ஆண்களுக்கு படுக் கைக்கு வந்துவிட வேண்டும்.''

''ஐயோ பாவம்.''

''இது ஒரு மோசமான தர்மம். இதையும் நாம் அடித்து குலைக்க வேண்டும். சோழ வணிகர்கள் வந்தால் அந்த பெண் கள் கையெடுத்து கும்பிடுவார்களாம். சோழ வணிகர்கள் மிக மரியாதையாக நடத்துவதில் சந்தோஷம் அடைந்துவிடுவார் களாம். ஏனெனில் தெருவில் போகின்ற பெண்ணின் தலை முடியை பிடித்து இழுத்துக் கொண்டு போய் புணருகின்ற அற்பர்கள்தான் அங்கு அதிகம். அது ஒரு தரம் கெட்ட நாடு.'' திரும்பத் திரும்ப ஏற்றி ஏற்றி சோழ வீரர்களுக்கு வெறுப்பு உண் டாகும் வண்ணம் சொல்லப்பட்டது. பெரிய வேட்டை இருக் கிறது என்ற எண்ணமும் வளர்க்கப்பட்டது.

ஒரு படையில் இம்மாதிரியான போதனைகளெல்லாம் அன்றிலிருந்து இன்றுவரை நடந்து கொண்டுதான் இருக் கின்றன. இல்லையெனில் போர் சுவாரஸ்யமாக இருக்காது. மூர்க்கமாக இருக்காது.

நாள் குறிக்கப்பட்டது. தை மாத வளர்பிறை பஞ்சமி என்று சொல்லப்பட்டது. காலை நேரம் பூமியின் காற்று கடல் நோக்கி போகும்போது மரக்கலன்கள் பாய் விரித்து புறப்படும் என்று விளக்கப்பட்டது.

''அரசர் படகில் ஏறி வங்கம் போகும்போது யாரும் விழுந்து வணங்கக்கூடாது, இது முக்கியமான விஷயம். அது மிகத் தவறானது. தர்மத்திற்கு எதிரானது. ஒருவர் வீட்டை விட்டோ, மாளிகை விட்டோ, கோட்டையை விட்டோ, கடற் கரையிலிருந்து கரையை விட்டோ கிளம்புகிறபோது விழுந்து வணங்கினால் அதுவே கடைசி வணக்கம். அவர் திரும்ப மாட்டார் என்று அச்சான்யமாக நடைபெறுகின்ற விஷயம் அது. எனவே மறந்து போயும் கீழே விழுந்து வணங்கி விடாதீர் கள். புரிந்துகொள்ளுங்கள்.'' அந்தணர்கள் உரத்த குரலில் அறிவித்தார்கள்.

''ஏ, மனிதனே இந்த பூமிதான் கடலை தாங்கிக் கொண் டிருக்கிறது. எனவே இந்த பூமிதான் உனக்கு சொந்தமானது. இந்த மண்ணிலிருந்துதான் நீ வந்திருக்கிறாய். நீரும், காற்றும், வெப்பமும் சேர வளர்ந்திருக்கிறாய். ஆழ்கடல் பூமிக்கு அந்நிய மானது அல்ல. நீ எங்கு போயினும் இந்த பூமிக்குத்தான் வந்து சேருவாய். எனவே, பிருதிவியே, பூமியே, உன்னை நமஸ்கரிக்கிறேன். உனக்கு நெல் விதைத்தும், பால் ஊற்றியும் உன்னை வழிபடுகிறேன்'' என்று வடமொழி மந்திரம் சொல்லப் பட்டது. அரசர் உள்ளங்கையில் பால் ஏந்தி, நெல் வைத்து தரையில் வார்த்தார். முளைவிட்ட விதைகளை வயல்வெளி களில் தெளித்தார். புதிய சட்டிகளில் முலைவிட்ட பயிர்கள் எடுத்துக் கொண்டு கிராமத்திலிருந்து வெகுதூரம் போய் விதைக்கப்பட்டன. தென்னங் கன்றுகள் அரசருடைய கைகளில் வாங்கி தரப்பட்டன. அவற்றை கிராமத்து மக்கள் மரியாதை யாக வாங்கிக் கொண்டு தலையில் வைத்தபடி ஊருக்குள் ஓடி னார்கள். அவர் நினைவாக எங்கேனும் நட வேண்டும் என்று தீர்மானித்தார்கள், ஆலம் செடிகளும், வேலம் செடிகளும், தென்னங் கன்றுகளும் எடுத்துப் போகப்பட்டன. அரச மரம் மட்டும் தவிர்க்கப்பட்டது. அரசம் புத்தர்களுடைய மரம். அவர் களுடைய சின்னம். அது அவர்கள் மரம். அது இங்கு வேண்டாம்

என்று தவிர்க்கப்பட்டது. பிட்சுக்களுக்கு விருப்பமான அரச மரத்தை சோழர்கள் தவிர்த்தார்கள்.

மல்லிகை செடிகளும், முல்லை கொடிகளும் தொலை தூரம் கொண்டு போய் நடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

''இப்பொழுது தானம் கொடுக்கின்ற நேரம்.'' சர்வசிவ பண்டிதரின் தலைமை குருக்கள் அரசரிடம் சொன்னார். தொலை வில் அமர்ந்தபடி சர்வசிவ பண்டிதர் இவைகளை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்.''

''சொல்லுங்கள் என்ன செய்ய வேண்டும்.''

''நாங்கள் பொன்னால் செய்த பசு கன்று சேர்ந்த பிரதிமைகளை கொண்டு வந்திருக்கிறோம்.''

''மிக்க சந்தோஷம்.''

''இவைகளை இங்கு வந்திருக்கின்ற பிராமணர்களுக்கு நீங்கள் தானம் கொடுக்க வேண்டும். பசுவும், கன்றும் உயி ரோடு தானம் கொடுப்பதற்கு பதிலாக, பிரதியாக இதை செய் கிறீர்கள். பசுவிற்கும், கன்றுக்கும் காலகட்டம் உண்டு. ஆனால் இந்த பொன்னுக்கு கால கட்டம் இல்லை. எந்த நேரமும் இவை விற்பனையாகும். நெல்லாக மாறும். அதனால் தான் பொன் பிரதிமை கொண்டு வந்திருக்கிறோம்.''

அவர் கூடையை பிரித்தார். உள்ளே நூற்றுக்கணக்கில் விரல் அங்குல உயரமுள்ள கனமான தங்க பசுமாடு கன்றோடு இருக்கின்ற பிரதிமைகள் இருந்தன.

அந்தணர்கள் ஒரே குரலில் ஆரம்பித்தார்கள்.

''ஹே ராஜனே நீ வாழ்க. உன் குலம் வாழ்க. உன் குடும்பம் வாழ்க. உன் மக்கள் வளர்க. உன் பரம்பரை செழித்தோங்க. உன் வீரம் வளர்க. உன் விவேகம் அதிகமாக, சூரியனுக்கு ஒத்தான திறமை உள்ள நீ உலகம் முழுவதும் சுற்றி வர வேண்டும். உன் னுடைய கொடி எல்லா இடங்களிலும் பறக்க வேண்டும்'' என்றெல்லாம் வாழ்த்துக்கள் தொடர்ச்சியாக சொல்லப்பட்டன.

சொல்லிக்கொண்டே அருகில் வந்த அந்தணர்களுக்கு உள்ளங்கையில் அந்த பிரதிமைகளை வைத்து நீர் வார்த்தார். கங்கையிலிருந்து கொண்டு வந்த ஒரு பெரும் குடத்து நீரை

அவர் உள்ளங்கையில் அள்ளி அந்த அந்தணர் கையில் கொடுத்தார்.

''ஒரு விண்ணப்பம்.'' அருகிலுள்ள தளபதி ஜனன்னாதன் குனிந்து அரசரிடம் பேசினான்.

''என்ன.''

''சோழ தேசத்து சைவ வேதியர்களுக்கும், சிவாச்சாரியார் களுக்கும் இந்த தங்கப் பிரதிமை தரப்பட்டது.''

''ஆமாம்.''

''வைணவர்களும் தங்களுக்கு ஏதேனும் தானம் கொடுக் கும்படி கேட்கிறார்கள்.''

''இங்கு எல்லாவற்றையும் கொடுத்தாகி விட்டதே. நான் என்ன தருவது. பிரதிமைகளை செய்யச் சொல்லலாமா.''

''இல்லை.''

''வெறும் பொன் தரட்டுமா.''

''அது தேவையில்லை என்று சொல்கிறார்கள்.''

''என்ன.''

''அந்தணர்கள் என்ன விரும்புகிறார்களோ அது கொடுப் பதுதான் சிறந்த தானம்.''

''உண்மை. நான் மறுக்கவில்லை.''

''பத்து வருடங்களாக யாழ்ப்பாணத்தில் நான் தளபதியாக இருந்தேன். இங்கு சோழ தேசத்திற்கு இந்த படையெடுப்பின் காரணமாக வந்தேன். வந்த இடத்தில் வைணவர்கள் ஒன்று சேர்ந்து எனக்கு ஒரு விண்ணப்பம் வைத்தார்கள். நான் வைணவன் என்பதால் அந்த விண்ணப்பத்தை என்னிடம் சொன்னார்கள்.''

''சொல்லுங்கள் என்ன விண்ணப்பம்.''

''வைணவர்களுக்கு நீங்கள் நிலதானம் செய்ய வேண்டும்.''

''ஏன் நிலதானம்.''

''இந்த பொன் பொருள்கள் கூட காலப்போக்கிலே துண்டு துண்டாக அறுக்கப்பட்டோ, அல்லது மொத்தமாக விற்கப்

பட்டோ மறைந்துவிடும். ஆனால் நிலத்தை நீங்கள் தானம் செய்தால் பரம்பரை பரம்பரையாக அது தொடர்ந்து வரும். நிலங்கள் எங்கும் போகாது.''

''நன்றாக இருக்கிறதே இந்த யோசனை. எந்த நிலம் வேண்டும்.''

''தஞ்சையினுடைய காவேரி பாய்ச்சலில் உள்ள வளமான ஒரு இடத்தை அவர்கள் தேர்ந்தெடுக்கிறார்கள். ஐம்பத்தி நாலு கிராமங்கள் ஒன்று சூழ்ந்த ஒரு இடத்தை அவர்கள் அளந்து வைத்திருக்கிறார்கள்.''

''அடேயப்பா. அத்தனை முன்னேற்பாடா.''

''ஆமாம். முன்னேற்பாடு என்றால் இவர்களுடைய தந்தையின் காலத்தில் ஏற்பட்ட முன்னேற்பாடு. இராஜராஜ சோழரிடம் விண்ணப்பிக்க வேண்டும் என்று நினைத்து அது சரியாக வராது போய்விட்டது. ஏதோ பல வேலைகளில் இராஜராஜர் அதை செயல்படுத்த முனையவேயில்லை. ஒருவேளை அதற்கு காரணம் சைவ வேதியர்களாக இருக்கலாம் என்று அவர்கள் நினைக்கிறார்கள்.

இந்த நேரத்தில் நீங்கள் பயணப்படும்போது இதை கேட்டால் நீங்கள் நிச்சயம் தருவீர்கள் என்று இப்போது கேட்கிறார்கள்.''

''நீர் வைணவரோ.''

''ஆமாம். திருமால் என் துணைவர். திருப்பதி வேங்கடாஜலபதி என் குல தெய்வம். கீழை சாளுக்கியத்தின் எல்லையிலிருந்து நான் சோழ தேசத்திற்கு குடிபெயர்ந்து அங்கிருந்து உங்கள் உத்தரவின்படி நான் ஜெகன்னாதபுரம் போனேன். யாழ்ப்பாணத்தில் என் கோட்டையை நிறுவினேன்.''

''தெரியும். நீங்கள் திறம்பட செய்த வேலை அது. தெற்கே ரோஹணத்திற்கு அவர்களை அருமையாக விரட்டிவிட்டீர்கள்.''

''ஆமாம். உங்களாலும் எனக்கு ஒரு காரியம் ஆக வேண்டும். நான் உங்கள் அடிமை. நீங்கள் என்ன சொன்னாலும் செய்வேன். உங்கள் எண்ணம் எப்படி ஓடுகிறது என்பதையும் என்னால் யூகிக்க முடியும்.''

''சொல்லுங்கள். பார்க்கலாம்.''

''நீங்கள் நேரடியாக தலை தக்கோலம் போகப் போவ தில்லை.''

''பிறகு.''

''நீங்கள் இலங்கையின் வடகரையை அங்குள்ள தீவு களை பார்ப்பீர்கள். கடற்கொள்ளையர்கள் அங்கு இருக்கிறார் கள் என்று உங்களுக்கு செய்தி தெரியும். விசாரித்திருக்கிறீர் கள். நீங்கள் விசாரித்தது எல்லாம் என்னுடைய படைவீரர்கள். அங்கிருந்து முல்லைத்தீவும், முல்லைத்தீவிலிருந்து திருக் கோவில் பட்டிணமும், திருக்கோவில் பட்டிணத்திலிருந்து தெற்கே உள்ள ரோஹணமும் நீங்கள் போக மனதிற்குள் திட்டம் வைத்திருக்கிறீர்கள்.''

''அடேய், உனக்கு எப்படி தெரிந்தது.''

''நீங்கள் விசாரித்ததில் நான் ஒருவாறு கணக்கிட்டு வைத்துக் கொண்டேன். உங்களுடைய திட்டம் மிகச் சரியானது.

ரோஹணத்திலிருந்து பயணப்படும்போது காற்று மிகத் துணையாக இருக்கும். அது தவிர சமீபத்திய செய்தி ஒன்று, ரோஹணத்தில் பல புரவிகள் இறங்கியிருக்கின்றன. அரேபியர் கள் இங்கு வராது அங்கேயே புரவிகளை விற்று விட்டு போய் இருக்கிறார்கள். அந்த புரவிகள் சங்கரராம விஜயோத்துங் கனால் வாங்கப்பட்டவை. மரக்கலன்களுக்காக காத்திருக்கிறான்.

நீங்கள் படையெடுத்து வருவதை கேட்டு பயந்து வராது இருக்கிறான். குதிரைகள் அங்கு வளர்கின்றன. குதிரைகள் வந்து இறங்கி ஆறு மாதங்கள் ஆகிவிட்டது.''

''அற்புதம் ஜனன்னாதா. உன்னைப் போல ஒரு தளபதி இருக்கும்போது எந்த அரசன் எதை ஜெயிக்க மாட்டான்.''

''இதெல்லாம் உங்களுடைய ஆசி, உங்களுடைய அன்பு.''

''சொல் ஜனன்னாதா. உன் துணை தேவைப்படுகிறதா லேயே நீ சொல்வதை கேட்கிறேன். எந்த நிலம், எந்த இடம்.''

ஜனன்னாதன் படம் போட்டு விவரித்தான்.

''வந்திருக்கிறார்களா.'' அரசர் கேட்டார்.

பதினைந்து அந்தணர்கள் முன்னே வந்தார்கள். உடம்பெல்லாம் திருமண் இட்டு கொண்டிருந்தார்கள். விஷ்ணுவை குறித்த வேத வாக்கியங்களை சொன்னார்கள்.

''ஒப்பில்லாதவன், உணர முடியாதவன், இந்த பூமியினுடைய காவலன். அடிமுடி காணாத பெரியோன்'' என்று வர்ணித்தார்கள்.

எங்கும் நீக்கமற இருக்கும் சக்தி ஒன்று பள்ளி கொண்டிருக்கிறது. அமைதியாக அழிக்கும் சக்தியான சிவனை பூஜை செய்து கொண்டிருக்கிறது. அதன் காலடியில் பெரும் செல்வம் உட்கார்ந்து அதை தூங்கச் செய்து கொண்டிருக்கிறது. அது யோக நித்திரை. அசைகின்ற பாம்போடு, அலைகின்ற கடலோடு மெத்து மெத்தென்ற சயனத்தில் அது அமைதியாக இருக்கிறது. அதற்குப் பெயர் 'விஷ்ணு' என்று சொன்னார்கள்.

வடமொழி நன்கு அறிந்த இராஜேந்திர சோழர் அதை செவிமடுத்து கேட்டார். அந்த அந்தணர்களை சோதித்து பார்க்க விரும்பினார்.

''இதை விளக்கிச் சொல்லுங்கள்.''

''இந்த பிரபஞ்சம் மிகப் பெரிய ஒரு சக்தியால் இழுக்கப்பட்டு எல்லா கிரகங்களும் அமைதியாக அதனதன் வேலையை செய்து கொண்டிருக்கின்றன. ஒன்றின் மீது ஒன்று மோதாமல் இருக்கின்றன. அந்த இருக்கின்ற சக்தி ஒரு கரும் துளை போன்றது. வெற்றிடம் கொண்டது. அந்த வெற்றிடத்தில் மிக மெல்லிய சலனம் இருக்கிறது. அந்த வெற்றிடத்தின் இருப்பில் தான் இந்த பூமியும், இந்த பூமியை விட பெரிய கிரகங்களும் சுற்றிக் கொண்டிருக்கின்றன. நட்சத்திர மண்டலங்கள் உலவிக் கொண்டிருக்கின்றன. அந்த கரிய சக்திதான் திருமால். திருமால் ஏன் கரிய வண்ணம் என்றால் அந்த கருப்புத்துளை கரிய வண்ணம் கொண்டது. அதை உவமையாக செய்திருக்கிறார்கள். அது அதிகம் அசைவில்லாதது. எனவே உறங்குவதாக காட்டியிருக்கிறார்கள். அது மெல்லியதாக அசைவது. அதனால் மூச்சு விடுகின்ற பாம்பினுடைய அசைவு போல இருப்பது என்று சொல்லியிருக்கிறார்கள். பிரபஞ்சத்தினுடைய அசைவும் அதை தாக்குகிறது. எனவே, அலைகடலில் பாம்பு படுக்கையில் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள்.

பிரபஞ்சத்தினுடைய அசைவில் கருந்துளையினுடைய மூச்சில் அது உறங்கிக் கொண்டிருக்கிறது. அதே நேரம் இந்த பிரபஞ்சம் அழியும் என்று அழிக்கின்ற சக்தியையும் போற்றி பாதுகாத்துக் கொண்டிருக்கிறது.

அழியும் சக்தி சிவன். அடங்கி, உறங்கிக் கொண்டிருக் கின்ற சக்தி விஷ்ணு. விஷ்ணு என்பவன்தான் அந்த கரும் துளை. விஷ்ணு என்பவன்தான் இந்த பிரபஞ்சத்தின் மையம். இந்த பிரபஞ்சத்தை இயக்குவது விஷ்ணுவே. வேறு எதுவும் இல்லை. விஷ்ணு எழுந்து நிற்க பிரளயம் ஏற்படும். உலகம் அழியும்.

பலமுறை இந்த உலகம் அழிந்து பிறந்திருக்கிறது.'' ஒரு தலைமை வைணவர் சொல்ல, இராஜேந்திரர் கைதட்டினார்.

''அருமை. நீங்கள் சொல்லுகின்ற ஐம்பத்தாறு கிராமங் களையும் நான் தத்தம் செய்கிறேன்.'' அத்தனை பேரும் கைநீட்ட கங்கை ஜலத்தால் அவர்களுக்கு நீர்வார்த்து கொடுத்தார்.

ஜனன்னாதன் மகிழ்ந்தான்.

''இந்த கிராமங்களை இவர்களுக்கு பிரம்மதேயமாக கொடுக்க உங்களுக்கு உத்தரவிடுகிறேன். பிடி, பிடாகை சூழ்ந்து கள்ளி கல் நட்டு என் தாயார் பெயரில் திருபுவன மாதேவி மங்கலமாக இந்த கிராமங்கள் இவர்களுக்கு தரப்படும். இது என்னுடைய வாக்கு. என் சத்தியம். இதை ஓலையில் எழுத இப்பொழுது நேரமில்லை. இதை செப்பு பட்டயத்தில் பொறிக்க நேரமில்லை, இவைகளை பிற்பாடு பார்த்துக் கொள்ளலாம். ஊருக்கு வந்து இதை ஏற்பாடு செய்யலாம்.

நான் ஊருக்கு ஊத்தையடையாமல் திரும்ப நீங்கள் ஆசீர்வதிக்க வேண்டும்.''

''எப்பொழுது இந்த தானம் கொடுத்துவிட்டீர்களோ அப்பொழுது உங்களுக்கு மரணம் இல்லை, நீங்கள் வாழ் வாங்கு வாழ்வீர்கள்.'' அந்தணர்கள் உரத்த குரலில் முழங்கி னார்கள். அவர் வாழ்வதற்குண்டான வாக்கியங்களை சொன் னார்கள்.

மேலே பருந்து வட்டமிட்டது. எல்லோரும் நிமிர்ந்து கன்னத்தில் போட்டுக் கொண்டார்கள். பருந்து தாழ பறந்து வந்து

அந்த இடத்தை வட்டமிட்டு மறுபடியும் மேலே போயிற்று. காணாமல் போனது. மிகச் சிறந்த சகுனம் ஏற்பட்டுவிட்டது என்று கூவினார்கள்.

மூக்கு திமிலங்கள் கரையோரம் வந்து நின்றன. கீச்சிட்டு கத்தின. எல்லோரும் வேடிக்கை பார்த்தார்கள். மறுபடியும் துள்ளி கடலில் மறைந்தன. திமிலங்கள் இப்படி வருவது வழக்கம்தான். ஆனால் இதுவும் நல்ல சகுனமாக ஏற்கப்பட்டது.

''உங்களை கடலுக்குள் இந்த மூக்கு திமிலங்கள் வர வேற்கின்றன. இவைகள் குழந்தை போல் உள்ளவை. இவைகள் பாலூட்டிகள்'' என்று பரதவர்கள் சொன்னார்கள்.

அரிதாகத்தான் வரும். வந்திருப்பது நல்ல சகுனம். நாங்கள் இதை கொல்ல மாட்டோம் என்று விவரித்தார்கள். இராஜேந்திர சோழர் சந்தோஷமானார்.

வங்கம் பாய்மரங்களை விரித்தது. இராஜேந்திர சோழர் கடல் நீரில் வலது கால் வைத்தார். பொங்கி முழங்கால் வரை நனைத்தது.

★ ★ ★

அத்யாயம்

103

ஒற்றை பாய்மர நாவாயில் மூன்று தளபதிகள் துணையோடு சக்கரவர்த்தி ஸ்ரீ இராஜேந்திர தேவர் ஏறினார். நெஞ்சு ஆழத்திற்கு படகை பரதவர்கள் பத்து பேர் ஊன்றி தள்ளினார்கள். துள்ளிவரும் கடல் அலையை தாண்டினார்கள். கடல் பெரிய அலைகள் இல்லாது அமைதியாக இருந்தது. அமாவாசையின் போதும், முழுநிலவின் போதும் ஆர்பரிக்கும் கடல் பஞ்சமியில் சுருள் சுருளாக வந்தது. பாய்மர மரக்கலம் எளிதாக அலைகளை தாண்டியது. உள்ளே போனதும் பாய்மரம் உதறி சரியாக விரிக்கப்பட்டது. வேகமாக படகு நகர்ந்து மரக்கலம் நோக்கி போயிற்று. நூல் ஏணியில் சக்கரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜேந்திர சோழர் மேலறுவது தெரிந்தது. பெண்கள் அழுதார்கள். குலவையிட்டார்கள். அந்த குலவைச் சத்தம் இராஜேந்திரருக்கு கேட்டது. திரும்பி பார்த்து ஒரு கையால் நூல் ஏணியை பிடித்துக் கொண்டு மறுகையால் விசிறி காண்பித்தார். போய் வருகிறேன் என்று அந்த சைகை சொல்லியது. ஜனங்களும் மேல் துணியை உயரே தூக்கிப் போட்டும், கை ஆட்டியும் அவருக்கு விடை கொடுத்தார்கள். மரக்கலத்தின் தளத்தில் ஏறி மறைந்து போனார். சில வினாடிகளில் மரக்கலத்தின் உச்சியில் நின்று கொண்டார். அவர் கையில் குவளை இருந்தது. ஏதோ குடித்தபடி ஜனங்களை பார்த்துக் கொண்டிருந்தார். உற்று கவனிக்க அவர் சிரிப்பது தெரிந்தது.

‘‘போய் வாரும் அரசே, போய் வாரும், வெற்றியோடு வாரும். சோழப்புலிக் கொடியை எல்லா இடங்களிலும் நாட்டி விட்டு வாரும். மகத்தான ஒரு மனிதனுடைய காலகட்டத்தில் நாங்கள் இருக்கிறோம். செயற்கரிய செயல்களை செய்யக்கூடிய ஒரு வீரன் துணையில் நிற்கிறோம். பகீரதனை கேலி செய்தவாறு கங்கை நீரை கொண்டு வந்தவரல்லவா. பல வருடங்கள்

தவம் செய்து பகீரதன் கங்கையை கொண்டு வந்தான். நான் சில மாதங்களிலேயே கொண்டு வந்து விட்டேனே என்று சொன்னவரல்லவா. உங்களுக்கு இனி எது பெரிய விஷயம். எது முடியாத காரியம். போய் வாரும். நலமாக வாரும் உடம்பில் ஒரு கீறல் கூட படாது உம்மை நம் சோழ வீரர்கள் காப்பாற் றட்டும். நம் சோழ வீரர்கள் அனைவரும் ஊத்தையடையாது திரும்பட்டும். அப்படி ஊத்தையடையாது திரும்பினால் ஆடும், மாடும் பலி கொடுக்கிறோம். சூரியனுக்கு பொங்கலிடுகிறோம். சமுத்திர ராஜனுக்கு படையல் இடுகிறோம்'' என்றெல்லாம் விதம்விதமாக கரையோரம் ஜனங்கள் ஆயிரக்கணக்கில் நின்று வேண்டிக் கொண்டார்கள்.

தொடர்ந்து படகுகள் கிளம்பின. வீரர்கள் ஏறினார்கள். அருண்மொழிபட்டன் கரையிலிருந்து விரைவாக செயல்பட் டான். அடுத்தது நீ. அடுத்தது நீ. அந்த மரக்கலம் நீ. அந்த நாவாய் நீ. இந்த வங்கம் நீ என்று விடை கொடுத்தான். இரண்டு வீரர்கள் அருண்மொழிபட்டன் காலை தொட்டு கண் ணில் ஒற்றிக் கொண்டார்கள்.

''கும்பிடக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள் அல்லவா.'' அருண்மொழிபட்டன் சீறினான்.

''நீங்கள் கிளம்பும் போதுதான் கும்பிடக்கூடாது. நீங்கள் கரையில் இருக்கிறீர்கள். நாங்கள் போகிறோம். எங்களை ஆசிர் வதியுங்கள்.'' என்று வீரர்கள் வணங்க, அவன் சிரித்தபடி அந்த இரண்டு வீரர்களையும் தழுவிக் கொண்டான். தொடர்ந்து வந்த மற்ற வீரர்கள் தழுவிக் கொள்ளச் சொன்னார்கள். சிரசில் கை வைக்கச் சொன்னார்கள். அவர்கள் விருப்பப்படி அவன் கட்டித் தழுவியும், சிரசில் கை வைத்தும் வாழ்த்துக்கள் சொன்னான். அன்று இரவு மனைவியாடு கூடிய வீரன் துள்ளலோடு வர, அவனை இறுக்க அணைத்து அவன் நெற்றியில் முத்தமிட்டான்.

''தீர்காயுஷ்மான் பவ.'' என்று சொன்னான். கால் தொட்டு வணங்கிவிட்டு அவன் படகு நோக்கி ஓடினான். அலைகளில் இறங்கி படகில் தாவி ஏறினான். கை வழுக்கி கடலில் விழுந் தான். மறுபடியும் கை கொடுத்து அவனை ஏற்றிவிட்டார்கள். சொட்ட சொட்ட நனைந்தும் புன்னகை செய்வது தெரிந்தது.

உள்ளுக்குள்ளே ஏனோ இது அச்சான்யமான விஷயம் என்று அருண்மொழிபட்டனுக்கு தெரிந்தது. அந்த படகு நகர்ந்தது.

அக்ர மந்திரங்கள் நிறைந்தன. மத்திம மந்திரங்கள் நிறைந் தன. சர்வ மந்திரமும் நிறைந்தது. அருண்மொழிபட்டன் திரும்பி சர்வசிவ பண்டிதரின் காலை தொட்டு வணங்கினான்.

''நான் அந்தணன். ஆனால் கடல் கடந்து போகிறேன். நான் ஏதேனும் செய்ய வேண்டிய சடங்குகள் உள்ளனவா'' என்று கைகூப்பி கேட்டான்.

''உன்னை அந்தணன் என்று சொல்வதற்கில்லை. நீ மறவன். வெட்டி வீழ்த்தியிருக்கிறாய். பல போர்கள் பார்த்திருக் கிறாய். பிறப்பால் நீ அந்தணனே தவிர உன் வாழ்க்கை மறவர் வாழ்க்கை. எனினும் உன் பிறப்பை தவிர்க்க முடியாது. அந்தணன் என்பதை மறுக்க முடியாது. சைவ வழியில் இல்லை. வைணவ வழியில் இருக்கிறாய். ஆனால் திருமால் கோவிலுக் கும் நீ போவதில்லை. எனவே, உன்னுடைய தர்மப்படி நீ வாழ்தல் சிறப்பு. இந்த வெற்றிக்கு நீ பிடாரிக்கு காணிக்கை செலுத்த வேண்டும். பிடாரிக்கு என்ன காணிக்கை செலுத்து வாய். வெறும் பலியிடுதல் போதாது. எங்கேனும் ஒரு இடத்தில், மிகச் சிறந்த முறையில் பிடாரிக்கான கோவில் கட்டு. ப்ரத்தி யங்கரா மந்திரத்தை எந்திரத்தில் எழுதி, அதன் மீது சிலை நிறுவி உக்கிரமான பூஜைகள் செய்கின்ற இடமாக அதை பராமரித்துவா. இது மறவர்களுக்கும் உதவும். மற்றவர்களுக்கும் உதவும்.

பல இடங்களிலிருந்து அஷ்ட, தச, புஜ காளிகளை நீ பெயர்த்து வந்திருக்கிறாய். அரசருக்கு பரிசாக கொடுத்திருக் கிறாய். அதற்கு பரிகாரமாகவும் இந்த பிடாரி கோவில் அமை யட்டும்.

கருப்பான பூமியில், உஷ்ணமான இடத்தில் அந்த பிடாரி கோவில் அமையட்டும். ஆடுகள் பலி கொடுக்கின்ற இடமாக திகழட்டும். இந்த சங்கல்பத்தை இங்கே என் எதிரே செய்து கொள்.''

''இப்படி ஒரு எண்ணம் எனக்கு இருந்தது பண்டிதரே.'' அருண்மொழிபட்டன் மரியாதையாக பதில் சொன்னான்.

இது பிரம்மதேசம். காஞ்சி. ராஜா சமாதி என்கிறார்கள். கோவில் சிதிலமடைந்திருக்கிறது. இராஜேந்திரன் கோவிலா தெரியவில்லை. பாக்யலக்ஷ்மி வழிபாடு செய்கிறார். ஏதோ எங்களால் ஆனது.

''ஆமாம். இதுபற்றி நீ விசாரித்ததாகவும் எனது மாணவர்கள் சொன்னார்கள். இந்த கோவிலுக்கு முன்பணமாக, சிலை செய்வதற்கு என்னிடம் நூறு கழஞ்சுகள் கொடுத்து விட்டு போ. நீ வருவதற்குள் சிலைகள் தயாராக இருக்கும்.

காளி. சிம்மம், நடுகல், ஸ்தம்பம், கருவறைப்படி, சிலை நடும் குழி, என்று எல்லாம் மிக அம்சமாக செய்யப்பட்டு இருக்கும். உன்னுடைய வெற்றிக்கு மட்டுமல்லாமல் சோழ தேசத்து வெற்றிக்காகவும் இதை நான் செயல்படுத்தப் போகிறேன்.

இதற்கெல்லாம் நூறு கழஞ்சு போதாது. ஆயினும் இது முன்பணம். அங்கிருந்து தங்கம் கொண்டு வா. பிடாரிக்கென்று எடுத்து வா'' என்று சொன்னார். ஏதோ ஒரு மந்திரம் அடிக்கடி சொல்கிறாயாமே. என்ன மந்திரம் அது.''

''நான் ப்ரத்தியங்கிராவை சொல்கிறேன்.''

''அடே, சிங்க முகத்தாளை சொல்கிறாயா, தொடர்ந்து சொல். ஆனால் பிடாரி என்பவள் சிங்க முகத்தாளாக இருக்க முடியாது. ஆனால் பிடாரி என்று பேச ஆரம்பித்து விட்டோம். மாற்ற இயலாது. சிரிப்பான உதடுகளுடன், கோபமான கண்களுடன், போரிடுகின்ற வேகத்துடன், சிம்மத்தை காலடியில் துணைக்கு வைத்து அவள் இருப்பாள். அந்த சிங்கத்தின் மீதும் மந்திரம் ஏற்றப்பட்டு இருக்கும். பிரத்தியங்கிரா மந்திரத்தை அங்கு எந்திரமாகவும், சிம்மமாகவும் நான் ஸ்தாபிக்கிறேன். சோழ தேசத்தின் வெற்றிக்கு ப்ரத்தியங்கிரா துணை வருவாள். வெகுநிச்சயம் நீ திரும்பி வருவாய். மிக நீண்ட காலம் வாழ்வாய். கோவில் எழுப்பி பலி, பூஜைகள் செய்வாய்.

எந்த இடத்தில் செய்வதாக உத்தேசம் உனக்கு.'' அவர் ஆழ்ந்து அவனை நோக்கினார்.

''மேலைசாளுக்கியத்தின் மீது படையெடுத்த போது ஒரு உயரமான குன்று இருந்தது. மற்ற எல்லா இடங்களை விடவும் உக்கிரம் அங்கு தாக்கியது. தரையில் உட்கார்ந்தால் உடம்பில் சூடு ஏறியது. அங்கு ப்ரத்யங்கிரா மந்திரம் சொன்னபோது உடம்பு முழுவதும் ஒரு ஆவேசம் ஏற்பட்டது. அந்த ஆவேசத்தின்

துணையோடே நான் மேலை சாளுக்கியத்தை ஊடறுத்து போனேன். நான் அவ்விதம் போனது அரசருக்கு உவப்பாக வும், உதவியாகவும் இருந்தது. எனவே, அந்த இடமே ப்ரத்தியங் கிராவின் இடம் என்று எனக்குத் தோன்றியது, நீங்கள் எங்கு சொல்கிறீர்களோ அங்கு வைக்கிறேன்.''

''நீ சொன்ன இடமே சரி, உட்கார்ந்தால் பூமி உஷ்ண மாகின்ற இடமே ப்ரத்தியங்கிராவின் இடம்.

வெளி தேசத்தில் நான் செய்யக் கூடியது ஏதேனும் உண்டா.''

''உண்டு. ஸ்ரீ விஜயத்தின் தெற்கே சாவகத்தீவில் உள்ள அரசனையும், வடக்கே காம்போஜத்தில் உள்ள அரசனையும் நீ ஆதரிக்க வேண்டும். அவர்கள் மூலம் சனாதன தர்மம் செழிப் பதற்கு உதவி செய்ய வேண்டும். அந்த இடத்தில் கொள்ளை அடிக்காமல், கொள்ளை அடித்த பொருட்களில் ஒரு பங்கு அவர்களுக்கு கொடுத்துவிட்டு வரவேண்டும். உங்கள் மரக் கலத்தில் ஏற்றமுடியாத குதிரைகளை அவர்கள் பாதுகாப்பிற்கு கொடுத்து விட்டு வர வேண்டும். பிறகு புத்த மதத்தினரால் தொந்தரவு ஏற்படாது இருக்க அவர்களுக்கு தற்காப்பு உதவிகள் செய்ய வேண்டும்.

கடல் ஊடறுத்துப் போகின்ற வழியை சோழ தேசத்து படைகள் காக்க வேண்டும். வணிகரின் வீரவாள் படையை அங்கு நிலைநிறுத்த வேண்டும். கருங்கல் கிடைக்காவிட்டால் செங்கல்லால் ஆன உயரமான மாளிகைகளை கட்டித் தர வேண்டும். எளிதில் நுழைய முடியாதபடி அவை இருக்க வேண் டும். ஒரு கோட்டை வட்ட வடிவமாக இருந்தால் வாயிற்கதவுப் பக்கம், வெளியே வெட்ட வெளியாக இருக்கமல்லவா. அங்கு இரண்டு யானைகள் முன்னும், பின்னும் போகின்ற வண்ணம் வசதியாக வழி அமைத்து அங்கே ஒரு மதிற் சுவர் கட்டு. அதாவது வட்டத்தில் ஒரு கால் வட்டம் ஏற்படுத்து நேரடியாக உள்ளே நுழையாமல் அந்த மதில் சந்து வழியாக நுழைய வேண்டும். அந்த மதில் சந்து வழியாக நுழையும்போது, மேலே இருந்து சட்டியில் எண்ணெய் காய்ச்சி ஊற்றுகின்ற இடங்களை அமைக்க வேண்டும், விறகுகளும், அடுப்புகளும், எண்ணெய் சட்டிகளும் தயார் நிலையில் இருக்க வேண்டும். அங்கிருந்து

.அம்பும், வேலும், கற்களும் எறிந்து எதிரிகள் உள்ளே புகா வண்ணம் தாக்க வேண்டும். இப்படிப்பட்ட இடம் கட்டுவதற்கு அங்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

இது கோவில் கட்டுவதைவிட மிகச் சிறப்பானது.'' அவர் மணலில் படம் வரைந்து காட்டினார்.

அருண்மொழிபட்டன் திகைத்துப் போனான்.

வேதம் மட்டுமே ஓதத் தெரியும் என்கிற அந்தணருக்கு எப்பேர்பட்ட விஷயங்கள் தெரிந்திருக்கின்றன. எவ்வளவு தந்திரம் அது. ''கோட்டைவாசலுக்கு எதிரே இரண்டு யானைகள் வளைவாக போகும் இடத்தில் வளைவாக இன்னொரு பெரிய மதில் சுவர். உள்புறமதில் சுவர், வெளிப்புற மதில் சுவர் என்று இரண்டு மதில்சுவர். அதற்கு நடுவேதான் படைகள் வர வேண்டும். படைகள் உள்ளே நுழைவதற்குள் நாசம் செய்து விடுவார்கள். அந்த வெளிப்புற மதில் சுவருக்கு மேலேயும் படை வீரர்கள் இருப்பதற்கு ஏற்பாடு செய்தாக வேண்டும். எனவே நான்மாடக்கூடம் அமைக்க வேண்டும். அந்த நான்காவது மாடத்திலிருந்து கரையும், கடலும் தெரிய வேண்டும்.'' அவன் வியப்போடு அவரை பார்த்தான்.

''எப்படி இந்த பார்ப்பனனுக்குத் தெரிந்தது என்ற பார்க்கிறாயா. வேதத்தில் இதுவும் ஒரு அங்கம். இதுவும் ஒரு படிப்பு, மூன்று மாதங்கள் இதை படித்து பல மாதிரிகள் செய்திருக்கிறேன். களிமண்ணால் செய்து அழித்திருக்கிறேன். இது எனக்கு கைவந்த கலை, எனக்கு பிடித்த விஷயம்.

சக்கரவர்த்தி இராஜேந்திர சோழருக்கு என் மூலமும், என் குருநாதர் மூலமும் இது தெளிவாக சொல்லப்பட்டு இருக்கிறது. படை வியூகங்கள் அவருக்கு பாடம் நடத்தியிருக்கிறேன். நீ பெரிய மனிதன். தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என்று அவர் காலடியின் கீழ் வீழ்ந்து எங்களையெல்லாம் புறக்கணித்து விட்டாய்.''

''இல்லை, அப்படி சொல்லாதீர்கள். ஒருபோதும் நான் உங்களை குறைவாக மதிப்பிடவில்லை. நீங்கள் மிகப் பெரியவர் என்று தெரியும். இத்தனை உயரம் என்று தெரியாது. அதற்கு மன்னிப்பு கோருகிறேன். இங்கு கிடைத்த வெற்றி

எல்லாவற்றுக்கும் துணைபுரிந்த பஞ்சமர்கள் காரணம். சோழ தேசத்தின் ஒவ்வொரு மனிதனும், ஒவ்வொரு குடும்பமும், ஒவ்வொரு குலமும் அதன் புகழை பரப்பிக் கொண்டிருக் கின்றன. நான் மட்டுமே உயர்வு என்கிற எண்ணம் எனக்கு இன்றோடு போயிற்று.'' அவரை விழுந்து வணங்கினான். எழுந்து நின்றான். தலைகுனிந்து வணக்கம் சொன்னான். பின் பக்கமாக நடந்தான். திரும்பினான். தன்னுடைய படகு நோக்கி நடந்தான்.

மிகப் பெரியவர்கள், ஆசிர்வதிக்கப்பட்டவருக்கு தெரியும் படி ஆசிர்வதிக்க மாட்டார்கள். அவர்கள் மனம் மறைமுகமாக ஆசிர்வதிக்கும்.

கரையில் பரதவர்களின் படகுகளில் வீரர்கள் ஏறி அவரவர் மரக்கலன்களுக்கு போனார்கள். நாவாய்கள் நிரம்பின. குதிரைகள் ஏற்றப்பட்டன. வங்கத்தின் அடிப்புற கதவுகள் திறக்கப்பட்டு மிதவைகளில் போன யானைகள் மெல்ல உள்ளே போயின. நாற்பது நாற்பது குதிரைகளாக பதினைந்து வங்கங்களில் குதிரைகள் ஏற்றப்பட்டன. ஒரு வங்கத்திற்கு நாலு யானையாக யானைகள் ஏற்றப்பட்டன. முன்னே இரண்டு ஆண் யானைகளும் பிடிவாதம் செய்யாத பெண் யானைகளும் நாவாயில் இணைந்து கொண்டன. உள்ளே நுழைந்ததும் அவை அமைதியாவதற்கு தீனிகள் தரப்பட்டன. முதுகையும், கன்னத்தையும் மாவுத்தர்கள் தடவிக் கொண்டே இருந்தார்கள். தும்பிக்கையில் சுற்றிக்கொண்டு ஊஞ்சலாடினார்கள். 'என்னடி என்னடி' என்று காமவசனம் பேசினார்கள். கெட்டக் கெட்ட வார்த்தைகளில் கொஞ்சினார்கள்.யானைகள் அந்த பேச்சிற்கு சந்தோஷமாயின. மொழி புரியாவிட்டாலும் அந்த குரலில் இருக்கின்ற கோபக் கொஞ்சலை புரிந்து கொண்டு மாவுத்தர் களை இறுக்க தழுவிக் கொண்டன. மரக்கலத்தோடு வைத்து அழுத்தின. 'என்னடி தேவடியாளே' என்று அவன் கன்னத்தில் அறைந்தான். யானை பின் வாங்கியது. துதிக்கையை தூக்கி பிளிறியது. முகத்தில் காற்றை பீய்ச்சி அடித்தது. எப்படி நகர்ந் தாலும் துதிக்கையால் மறைத்துக் கொண்டது.

மரக்கலன்கள் நடுக்கடலுக்குள் நுழையும் வரை அந்த மாவுத்தர்கள் யானைகளோடு விளையாடினார்கள்.

குதிரைகள் பெரிதும் அவஸ்தைப்பட்டன. கடிவாளத்தால் அவைகள் முகத்தை இறுக்க பிடித்துக் கொண்டார்கள். கண்ணை பார்த்து பேசினார்கள்.

''அடேய் எதற்கு பயப்படுகிறாய், சும்மா இரு.'' ஒருவன் பேசிக் கொண்டிருக்கும்பொழுது இரண்டு பேர் முதுகில் வைக்கோல் பிரி வைத்து நீளமாக தடவினார்கள். அடி வயிறை வருடினார்கள். முகவாயை தடவி கொடுத்தார்கள். பிறகு பிடியை தளர விட்டார்கள். ஊற வைத்த கொள்ளு தீவனத்தை உருட்டி வாயில் திணித்தார்கள். வாயில் நீர் ஒழுக அந்த கொள்ளை குதிரைகள் சுவைத்து அரைத்தன. மரக்கலத்தில் இருக்கிறோம் என்று அந்த குதிரைகளுக்கு மறந்து போயிற்று. ஏதோ ஒரு தளத்தில் இருக்கிறோம், தளம் லேசாக ஆடுகிறது என்றுதான் அவைகள் நினைத்துக் கொண்டிருந்தன. உள்ளே காற்று வருவதற்கு சிறிய துளைகள் இருந்தது. அந்த துளைகள் வழியே அவைகளுக்கு சமுத்திரம் பார்க்க தெரியவில்லை.

ஆனால் மூன்றாவது அடுக்கில் கதவுகளுக்கு வழியே காற்று உள்ளே புகுந்து குளிர வைத்தது. வீரர்கள் போர்த்திக் கொண்டு கடலை பார்த்தார்கள். இடப்பக்கம் கடலை பார்த்து விட்டு குறுக்கே நடந்து வலப்பக்கம் கடலை பார்த்தார்கள். நடக்கும் போது கொஞ்சம் காலை பரப்பி கோமாளியைப் போல நடந்தார்கள். அதில் ஒரு வீரன் குமட்டல் எடுத்தான். 'போ போ. மேலே போ.' என்று சொன்னார்கள். தள்ளாடி அந்த வீரன் படியேறி மேல் தளத்திற்கு வந்தான். ஓரமாக போய் நின்று கொண்டான். வாந்தி எடுத்தான்.

''கிளம்பும்போதே சொன்னேன். கொட்டிக் கொள்ளாதே என்று, பெண்டாட்டி ஊட்டிவிட்டாள் என்று வயிறு முழுவதும் நிரப்பிக் கொண்டு இப்பொழுது பார். அத்தனையும் புரட்டிக் கொண்டு வருகிறது.''

''பசிக்கிறதே. எப்பொழுது சாப்பிடுவது.''

''கடலில் ஏறி நீர் குடித்து நீர் குடித்து வயிறு நிரம்பிய பிறகு மெல்ல பழச்சாறு, அதற்குப் பிறகு உணவு என்று எடுத்துக் கொண்டால் வயிறு சரியாகிவிடும். கடலுக்கு பழக்கப்பட்டு விடும்.''

வீரர்கள் அவ்விதமே செய்தார்கள்.

மிகப் பெரிய தொட்டியில் யானைக்கும், குதிரைக்கும் வீரர்களுக்குமான சுத்த நீர் நிரப்பப்பட்டிருந்தது. அது மரக்கலத் திற்கு நடுவே இறுக்கமாக கட்டப்பட்டு ஓட்டைகளெல்லாம் கடும் பிசின்களால் அடைக்கப்பட்டு சிறிது கூட நீர் கசியாத வண்ணம் வைக்கப்பட்டன. மரத்தால் ஆன மூடிகள் இருந்தன.

குளிப்பது கடல் நீரிலும், உடம்பை துடைத்துக் கொள்ள நன்னீரும் தரப்பட்டன. ஒரு நாளைக்கு இவ்வளவு குடிநீர் என்றுதான் வரையறுக்கப்பட்டது. குதிரைகளுக்கும், யானை களுக்கும் அளவாக நீர் தரப்பட்டன.

இங்கிருந்து நக்கவரம் போகின்ற வரையில் தான் பிரச் சனை. அதாவது நான்கு நாள் தண்ணீர் இருந்தால் போது மானது. ஐந்தாம் நாள் நக்கவரம் தொட்டு விடுவோம். நக்க வரத்தில் புல்லும், இளநீரும், நல்லநீரும், தென்னை மட்டை களும், மூலிகைகளும், பழமரங்களும் இருக்கும். அவைகளி லிருந்து வேண்டுபவை எடுத்துக் கொள்ளலாம். நக்கவரத்தில் ஒரு சிறியபடை வணிகருடையது கோட்டை கட்டி காத்திருக் கும். அவர்கள் வேண்டுமென்ற உதவி செய்வார்கள். காடு களுக்குள்ளே போய் விடக் கூடாது. அங்கு காட்டுவாசிகள் நம்மை கண்டு பயந்து விடுவார்கள். நிர்வாணமாக திரிகின்ற அவர்கள் குள்ளமாக இருப்பார்கள். கருப்பாக, தடித்த உதட் டோடும், பெரிய மூக்கோடும் இருப்பார்கள். இவர்கள் மொழி புரியாது. ஆனால் அவர்களிடம் கூரிய விஷ அம்புகள் உள்ளன. நாம் நெருங்காதவரை அவர்கள் தொந்தரவு செய்ய மாட்டார் கள். இப்பொழுதெல்லாம் அருகே வந்து உதவி செய்கிறார்கள் என்றும் சொல்லப்படுகிறது, எனவே, நான்கு நாள் சிக்கனமாக நீரையும், உணவையம் பயன்படுத்துங்கள் என்று சொல்லப் பட்டிருந்தது.

மணல் குவியலில் கரி எரித்து தணல் எழுப்பி, மீன் சுட்டுக் குழம்பாக்கி, சோறு ஆக்கி கொடுத்தார்கள். பதட்டத்தால் ஏற் பட்ட பசி நீக்க அந்த உணவு சரியாக இருந்தது.

மரக்கலன்கள் கடலுக்குள் நுழைந்தன. இராஜேந்திர சோழர் மரக்கலம் கிழக்கு நோக்கி போகாமல் தெற்கு நோக்கி

திரும்பியது. பின்னே வரச் சொல்லி சிகப்பு கொடி அசைந்தது. மற்ற மரக்கலன்கள் கேள்வியோடு அவரை பின்பற்றின. அருண்மொழிபட்டன் புரிந்து கொண்டான். ரோஹணை தாக்குதல் நடக்கும். இதை சர்வ சிவ பண்டிதர் சொல்லியிருப்பார் என்று நினைத்துக் கொண்டான். ஒரே நாளில் வடக்கு துறை முகத்தில் மரக்கலன்கள் நின்றன. வீரர்கள் அடித்து விரட்டியது போல மரக்கலத்திலிருந்து நீரில் குதித்து நீந்தி கரையோரம் போய் நின்றார்கள்.

பெரிய நாவாய்கள் கடலினுடைய உப்பங்கழிகளுக்கு ஊடே போய் யானைகளை இறக்கின. யானைகள் இறங்கி புல்வெளிக்கு நகர்ந்தன. தென்னை மட்டைகளை முறித்து தின்றன. மரக்கலத்திற்கு பத்து வீரர்கள் தவிர மற்ற எல்லோரும் கீழே இறங்கினார்கள். மணற்பரப்பு புல்வெளியும், தென்னையும் நிறைந்த ஆளில்லாத அந்த த்வை சுற்றி வந்தார்கள். எதற்கு தெற்கே வந்திருக்கிறோம் என்று வீரர்கள் கேள்வி கேட்டார்கள்.

ரோஹணத்தை தாக்கப் போகிறோம் என்று தளபதிகள் பதில் சொன்னார்கள்.

"இதற்கு அடுத்தபடி ரோஹணம் தானா."

"இல்லை, முல்லைத் தீவு."

"பிறகு"

"திருமலைப் பட்டிணம்."

"பிறகு"

"ரோஹணம்"

"அதாவது மூன்று முறை நிலப்பரப்பை பார்க்கப் போகிறோமா."

"ஆமாம். கடல் வழியே போகும் முன்பு உங்களுக்கு பயிற்சி ஏற்படுத்த வேண்டும் என்றும், நீங்கள் கலவரப்படக்கூடாது என்றும் இப்படி தங்கி தங்கி போகிறோம்" என்று சொல்ல வீரர்கள் சந்தோஷப்பட்டார்கள்.

தலை தக்கோலம் வரை வா என்று சொன்னால் என்ன

செய்ய முடியும். ஆனால் இராஜேந்திரர் கருணை உள்ளவர். மறவனின் வேதனை தெரிந்தவர் என்று பேசிக் கொண்டார்கள்.

யானைகள் சிறிய சண்டித்தனம் கூட செய்யாமல் மரக் கலத்திற்குள் ஏறின. குதிரைகள் மறுபடியும் திண்டாடின. கட லலையை பார்த்து பின்னால் ஓடின. சில குதிரைகளுக்கு நின்று வந்ததே பெரிய வேதனையாக இருக்கும் போலிருக் கிறது. அவைகள் தலைதெறிக்க ஓடின. திரும்ப அருகே வந்தன. மறுபடியும் ஓடின. ஓடட்டும் என்று வீரர்கள் விட்டார் கள். பிறகு நைச்சியமாக குரல் கொடுத்து பேசினார்கள், அருகே வந்ததும் தடவிக் கொடுத்தார்கள். பிறகு மெல்ல கடி வாளத்தை பிடித்துக் கொண்டு சேணம் பூட்டி ஏறினார்கள். அவைகளை புற்களூடே நடத்தினார்கள். தோப்புகளூடே நடந் தார்கள். மறுபடியும் கடற்கரைக்கு கொண்டு வந்தார்கள். இப் பொழுது அவைகள் சமாதானம் ஆயின. ஆயினும் சிலது பயம் அடங்காமல் எகிறின. சவுக்கால் விளாறியும், இறுக பிடித்தும் குதிரைகளை மரக்கலத்தில் செலுத்தி முதல் தளத்திற்கு எடுத்துக் கொண்டு போனார்கள். மறுபடி வேகவைத்தக் கொள்ளு கொடுத்தார்கள். வடக்குத் துறையில் கிடைத்த புற்கள் அவைகளுக்கு நல்ல உணவாக ஆயின. நிறைய லத்தி கள் போட்டன. அவைகளை வாரி வெளியே கொட்டுவதே பெரிய வேலையாக இருந்தது. பெரிய மரப்பாத்திரங்களில் கடல் நீர் கொண்டு வந்து ஊற்றி, கழுவி சுத்தம் செய்தார்கள். நறுமண புகை போட்டார்கள்.

மரக்கலன்கள் மறுபடியும் பாய் விரித்தன. முல்லைத்தீவு இறங்கின. முல்லை தீவு மக்கள் ஓடி வந்து வரவேற்றார்கள். அங்கிருந்த மரக்கலன்களை இராஜேந்திர சோழர் பார்வை யிட்டார். அங்கிருந்து முப்பது நாவாய்கள் படையில் சேர்ந்து கொண்டன. வங்கம் என்ற பெரும் நாவாய் செய்ய முடிய வில்லை என்று தாணுமாலையன் கை விரித்தான்.

“வங்கம் செய்வதற்கு ஒரு பெரிய பிரச்சனை இருக்கிறது. அடிபாகத்தில் கற்கள் நிரப்ப வேண்டும். அப்படிப்பட்ட கற்கள் இந்த முல்லைத்தீவில் கிடைக்கவில்லை. பெரிய பாறைகளை கொண்டு வந்து அடியிலே நிரப்பினால்தான் வங்கம் அடியிலே கனத்து நிற்கும். ஆடாமல் இருக்கும். அப்படிப் பட்ட பாறைகள்

பெரிதாக இருககின்றன. உருட்டிக்கொண்டு வந்து ஏற்ற முடிய வில்லை, செதுக்குவதற்கு சிற்பிகள் இல்லை, அதனால்தான் அவ்விதம் செய்யாமல் இருக்கிறேன்.

மற்ற நாவாய்களுக்கு மணல் கொண்டு வந்து போட்டு அழுத்தி விடுகிறேன். அவை நிற்கின்றன. ஆனால் வங்கத் திற்கு பாறைகள் தேவை, அவை இல்லை.'' என்று கை விரித் தான். இராஜேந்திர சோழர் புரிந்து கொண்டார்.

''போர் வீரர்கள் நெருக்கியடித்துதான் வருகிறார்கள். அது வேதனையாக இருக்கிறது. நக்கவரம் பயணத்திற்கு கிட்டத் தட்ட ஏழெட்டு நாட்களுக்கு இப்படி குத்திட்டு வர வேண்டு மென்றால் அது பெரிய வேதனை. வங்கம் கிடைத்தால் பேர் பாதி வீரர்களை பிரித்து அனுப்பிவிடலாம். அதே போல குதிரை களும் இடித்து நெருக்கிக் கொண்டு வருகின்றன. முதுகோடு முதுகு உரசி புண்கள் ஏற்படுகின்றன. யானைகள் பரவா யில்லை. அவைகளுக்கு பெரிய தொந்தரவு இல்லை. ஆனால் அதிகம் யானைகளும் ஏற்ற முடியாது. இன்னும் இருபது, முப்பது யானைகள் இருந்தால் தாக்குதலுக்கு சரியாக இருக்கும். மலைச்சரிவில் உள்ளே புக அவைகள் உதவி செய்யும். மரங் களை இழுத்துப் போடும். பாறைகளை சரிப்படுத்தும்'' என்றெல் லாம் பேசப்பட்டன.

''ஆக. நமக்கு வங்கம் வேண்டும். கிளம்புவோம்.'' முல்லைத் தீவில் ஆட்டு மாமிசமும், அரிசி சோறும், கோழி துவையலும் கொடுக்கப் பட்டன. இங்கு மட்டும் கள் குடித்துக் கொள்ளலாம் என்று சொல்லப்பட்டது. ஆனால் கள்ளை கவன மாக குடித்தார்கள். நிரம்ப சாப்பிட்டார்கள். ஓய்வெடுத்தார்கள். தூங்கினார்கள். வயிறை சுத்தம் செய்தார்கள். நீராகாரம் அருந் தியபடியே அரிசிக் கஞ்சியும், பருப்பு துவையலும், மீன் வறு வலும் சாப்பிட்டபடி மரக்கலன்களில் ஏறினார்கள்.

பாய்மரங்கள் 'டொப்' என்ற சத்தத்தோடு விரிந்தன.

''இந்த சத்தம்தான் நமக்கு உயிர் நாடி.'' குட்டன் கணவதி வீரர்களிடம் சொன்னான்,

''என்ன அது''

''ஒரு மரக்கலப்பாய் 'டொப்' என்று விரிந்தால் முழுவதுமாக விரிந்துவிட்டது. அது மிகச் சரியாக காற்றை உள் வாங்கி நகர்ந்து கொண்டிருக்கிறது என்று தெரிந்து கொள்ளலாம். டபக், டுபக் என்று சத்தம் வந்தால் அவை சரியாக உப்பவில்லை. வேகம் போதாது என்று தெரியும். வடக்கத்தி காற்று முழுவதுமாக வாங்கிக் கொள்கிறது பாருங்கள். எல்லா பாய்மரங்களையும் பிரியுங்கள்.''

சலசலவென்று பாய்மரங்கள் பிரிக்கப்பட்டன. ஆறு பாய்மரங்கள் பிரிக்கப்பட்டதும் கணவதியின் அக்ரமந்திர மரக்கலம் மிக வேகமாக இராஜேந்திரருடைய சர்வமந்திர மரக்கலத்தை தாண்டியது. வீரர்கள் பரஸ்பரம் எதிரெதிர் மரக்கலனிலிருந்து உரத்து கூச்சலிட்டார்கள். இராஜேந்திர சோழர் வாய் விட்டு சிரித்தார். எல்லோருக்கும் சந்தோஷமாக இருந்தது.

முல்லைத் தீவிலிருந்து சோழர்கள் ஆட்சி செய்யும் திருமலைப்பட்டிணம் வந்தது. நல்ல அழகான ஒரு துறைமுகம். மரப்பலகையால் பாலம் போல ஒரு அமைப்பு கட்டப்பட்டிருந்தது.

நாவாய்கள் ஒதுங்கின. குதிரைகள் எளிதில் இறங்கின. வங்கம் மட்டும் தொலைதூரத்தில் நங்கூரம் போட்டு நிறுத்தப் பட்டிருந்தது. வங்கத்திலிருந்து படகு இறங்கி அந்த பாலத்திற்கு அருகே படகு வந்ததும், இராஜேந்திரசோழர் படிகட்டுகள் ஏறி பாலத்தில் நடந்து ஊருக்குள் வந்தார். குதிரைகள் தரப்பட்டன. ஏறி கடற்கரை தாண்டி, தோப்புகள் தாண்டி, திருமலை பட்டிணம் என்ற மிகப்பெரிய கிராமத்திற்கு அருகே வந்து நின்றார்.

கல்லால் ஆன மிகப்பெரிய மாளிகை அவருக்கு ஒழித்து கொடுக்கப்பட்டு இருந்தது, ஜனங்கள் அவரை பார்க்க அலை மோதினார்கள். வீரர்கள் தடுத்தார்கள்.

அடுத்து அடர்ந்த வனப்பகுதி என்பதால் நாவாய்களுக்கான மரங்கள் வெட்டிக் கொண்டு வந்து கடற்கரையோரம் நூற்றுக்கணக்கில் அடுக்கப்பட்டு இருந்தன. மேற்பட்டைகளை செதுக்கிக் கொண்டிருந்தார்கள். வேங்கை மரங்களை ஆணி அடித்து காட்டினார்கள். மிருதுவாகவும், உறுதியாகவும் அந்த பலகைகள் இருந்தன.

''நீங்கள் காட்டிய விரைவு போதாது. இங்கு துரிதமாக வேலை செய்ய உங்களுக்கு ஏன் முடியவில்லை என்று தெரிய வில்லை. தொலைதூரம் இருக்கிறோமே அரசர் உத்தரவு வர வில்லையே என்று அமைதியாக இருந்து விட்டீர்கள் போலும். காலையில் இரண்டு பன்ன உயரத்திற்கு சூரியன் வந்த பிறகு தான் வேலைக்கு வருகிறீர்கள். அது தவறு. சூரிய வெளிச்சம் வந்தவுடனே வேலை துவங்கிவிட வேண்டும். உச்சியில் ஓய் வெடுத்துக் கொண்ட பிறகு சூரியன் சரிந்ததும் நீங்கள் வேலை துவங்க வேண்டும். இந்த மரக்கலன்கள் எனக்கு போதாது. இப்பொழுது போய் மறுபடி மீண்டு வரும்போது இங்கு வணிகர்களுக்கான நாவாய்கள் நீங்கள் தயார் செய்ய வேண் டும். குதிரைகளை கொண்டு போகின்ற நாவாய்களை தயார் செய்ய வேண்டும்.

அரபு தேசத்தவர்கள் தங்கள் குதிரைகளோடு ஸ்ரீ விஜயம் போகலாகாது. அவர்களுடைய வங்கங்கள் இங்கு பறிக்கப்படும். இந்த நாவாய்களில் அவர்கள் குதிரைகள் ஏற்றி நாம் ஸ்ரீ விஜ யத்தில் குதிரை வியாபாரம் செய்வோம். அரபு வீரர்கள் செய்ய மாட்டார்கள். வியாபாரம் நம் கையில் இருக்க வேண்டுமென் றால் குதிரைகள் ஏற்றிப் போகும் மூன்று தண்டு, ஆறு பாய்மர அக்ரமந்திர கலன்கள் தேவை, உங்களுடைய அன்பை, நன்றியை தயவு செய்து வேலையில் காட்டுங்கள். என்ன தேவை என்று சொல்லுங்கள். ஆணிகள் குறைவாக இருக்கின் றன என்பது வெறும் பேச்சு. இரும்புகளோடு இங்கு வந்து இந்த இடத்தில் உலைக்களம் வைத்து இங்கேயே அச்சுகளில் ஆணி கள் ஊற்றி இந்த இடத்திலேயே பட்டைகளும், ஆணிகளும் உங்க ளுக்கு தரச் சொல்கிறேன். சோழ தேசத்திலிருந்தும், பாண்டிய தேசத்திலிருந்தும் இங்கே வீரர்கள் வருவார்கள்.''

''பாண்டிய வீரர்கள் வந்து கொண்டு தான் இருக்கிறார் களய்யா,''

''என்ன''

''குமரி முனையிலிருந்தும், நாஞ்சில் நாட்டிலிருந்தும் பாண்டிய வீரர்கள் பாண்டிய படகுகளில் ஏறி ஒற்றை பாய்மர படகில் வந்து இறங்கி எங்களோடு வியாபாரம் பேசிவிட்டுத் தான் போகிறார்கள். மரக்கலன்கள் செய்ய முடியுமா என்ற

கேட்கிறார்கள். எங்களிடம் உள்ள மட்ட குதிரைகளை வாங்கிக் கொண்டுதான் போகிறார்கள். வாங்கிய உடனே ரோஹணத் திற்கு வழி சொல்' என்று சொல்லுகிறார்கள். ஏதேனும் படகு வந்தால் வீட்டு பெண்களெல்லாம் மறைந்து கொள்கிறார்கள். வந்தவர் சோழரா, பாண்டியரா என்று தெரியவில்லை. அவர்கள் கொடி ஏற்றி வருவதில்லை.''

''புரிகிறது. என்னுடைய மரக்கலத்தில் ஒரு மரக்கலம் இங்கு காவலிற்கு நிற்கும். வீரர்கள் இங்கு காவலுக்கு இருப் பார்கள். சோழ தேசத்திலிருந்து தானியங்கள் தனி மரக்கலத் தில் உங்களுக்கு வந்து சேரும். கன்னார்களும், மரத்தச்சர்களும் வருவார்கள். உங்களுக்கு வீடு கட்டி கொடுக்கக்கூடிய இடங் களையும் தேர்ந்தெடுத்து அதற்குரிய கொத்தனார்களும் வரு வார்கள். இந்த திருக்கோவில் பட்டிணம் உண்மையிலேயே மிகப் பெரிய பட்டிணமாக மாறும், கவலை வேண்டாம். சோழ தேசம் உங்களை காக்கும். இது உறுதி,'' என்று நெஞ்சில் கை வைத்து கூறினார்.

விடியல் நேரத்தில் வங்கம் ஏறினார். வங்கம் பெரிய பாய் மரம் விரித்து முன்னே போயிற்று. நிதானமாக வரச்சொல்லி சைகைகள் செய்தார்.

''இன்று காலை கிளம்பினோம். மறுநாள் காலை ரோஹணம் போய்விட முடியும். ஆனால் ரோஹணம் போகக் கூடாது. ஒரு மரக்கலம் முன்னே போய் ரோஹணத்திற்கு எச்ச ரிக்கை செய்து வரட்டும்.''

''இது கடற்கொள்ளை தாக்குதலல்லவா. எதற்கு எச்ச ரிக்கை.''

''அது தர்மமாகாது, ரோஹணத்திற்கு நாம் வருகிறோம் என்று சொல்வது தான் சரி. அப்பொழுதுதான் எல்லா பக்கத் திலிருந்தும் வீரர்கள் ஒன்று கூடுவார்கள். எங்கெங்கு இருந்து வீரர்கள் வருகிறார்கள் என்பதையும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும். ரோஹணத்தில் பலம் புரிந்து கொள்வதற்கு அறி விப்பு விட்டு செய்வதுதான் நல்லது.

ரோஹணம் குதிரைகள் கொண்டது. அந்த குதிரைகள் யார் எப்படி பயன்படுத்துகிறார்கள் என்பதும் நமக்கு தெரிய

வேண்டும். அரேபிய குதிரைகள் வாங்குவதற்கு செல்வம் இருக்கிறது என்றால் செல்வம் எங்கிருக்கிறது என்று தெரிய வேண்டும். வேறு என்ன பலம் இருக்கிறது என்றும் தெரிய வேண்டும்.

ஆகவே, நாளை விடியற்காலையில் அங்கு தாக்குதல் நடத்தாது பிற்பகலில் நான் கரை ஒதுங்குவேன். இரவு நெருங்க நான் ஊருக்குள் இறங்குவேன். யுத்தம் இரவில் நடைபெறும். ரோஹணம் கொள்ளையடிக்கப்படும்.

அங்கு மரக்கலன்கள் இருந்தால் அந்த மரக்கலன்கள் வேண்டும். அங்கு குதிரைகள் இருந்தால் குதிரைகள் வேண்டும். பொன், பொருள் முக்கியமில்லை. தானியங்கள் இருந்தால் வாரிக் கொள்ளலாம். யானைகளுக்கு தென்னை மட்டைகளும், கரும்புகளும் ஏற்றிக் கொள்ளலாம். யானைகள் இருந்தாலும் ஏற்றிக் கொள்ளலாம். மற்றபடி ஊரை தீயிட்டு கொளுத்துங்கள். வாழ்வுக்கு இடமில்லாத இடமாக ரோஹணத்தை மாற்றுங்கள். ஜனங்கள் கதறட்டும்.

பாண்டியர்கள் ரோஹண தேசத்தின் உதவியை நாடியிருக்கிறார்கள். அங்கு இருக்கின்ற மன்னன் மானாபரணன் பாண்டியர்களை சுற்றி வைத்துக் கொண்டு பெரிய சக்கரவர்த்தி போல் நீட்டி முழக்கி கொண்டிருக்கிறான். சோழத்தை கொல்வோம். அறுப்போம் என்று சொல்கிறான். அந்த சிறு கூட்டம் என்ன செய்துவிட முடியும்.

நாம் கடற்படையில் வருகிறோம் என்றால் நாலு மரக்கலன் என்று நினைத்திருப்பான். இவை மொத்தமும் வந்து நின்று வரிசையாக்கினால் பயந்து நடுங்குவான். அத்தனை பேரும் உள்ளே இறங்கி அடித்து நொறுக்குவோம். நம்முடைய முதற்போர் ரோஹணம்.” அவர் உரக்க முழங்கினார்.

படகுகள் மூலம் உபதளபதிகள் மற்ற மரக்கலன்களில் ஏறி இந்தச் செய்தியை சொன்னார்கள். வீரர்கள் உற்சாகமானார்கள்.

ஏற்கனவே உதைபட்ட தேசமல்லவா அது, சூழ்ச்சி மிகுந்த நாய்களல்லவா அவர்கள், சோழப்படையை இரவு நேரம் தாக்கியிருக்கிறார்களே, பாண்டியருக்கு ஆள்படை அனுப்பி மதுரையில் வந்து அங்கு உல்லாசமாக இருந்து அங்கிருந்து சோழ தேச கிராமங்களை எரியூட்டியவர்களாயிற்றே மறப்போமே.

மன்னிப்போமா. அடி, கொல்லு, குத்து, நெருப்பில் வாட்டி எடுத்து விட மாட்டோமா'' என்று சூளுரை செய்தார்கள்.

மூன்று நாள் பயணம் செய்த அந்த படைக்கு அந்த உரம் மிகுந்த உற்சாகம் தேவையாக இருந்தது. போருக்கு போவதற்கு முன்பு மது அருந்துவது போல இந்த யுத்தம் அவர்களுக்கு இருக்கும் என்று தளபதிகளுக்கு தெள்ளத் தெளிவாக தெரிந்தது.

ரோஹணத்தில் தசமியில் தரை இறங்கினார்கள். உச்சிக்கு வந்த சூரியன் சரியத் துவங்கியதும் கரையில் இறங்கினார்கள். வேல் ஊன்றி கரை ஏறினார்கள். எதிரே ரோஹண கூட்டம் ஆரவாரித்தது. ஒரு எக்காள ஊதலில் சோழ வீரர்கள் வரிசை யானார்கள்.

உயரமான இடத்தில் முரசு அடிப்பவன் நின்றுகொண் டான். டமடமடம என்று முரசு அடித்தான். அவனுடைய ஒலிக்கு ஏற்ப வீரர்கள் வரிசையாக, ஆறு ஆறு வரிசையாக நின்றார்கள். தனித்தனி குழுவாக நின்றார்கள். வேறு ஒரு பறை முழங்க வில் வீரர்கள் ஓடி வந்து முன்னே நின்று கொண்டார்கள். மண்டியிட்டார்கள். வளைத்து அம்புகளை எதிர்பக்கம் வீசி னார்கள். கேடயங்களால் அவை தடுக்கப்பட்டன. எதிரே நல்ல புரவிகளில் அங்குள்ள தளபதிகள் அலைவது தெரிந்தது.

இராஜேந்திரசோழர் வங்கத்தின் உச்சியிலிருந்து கூர்ந்து கவனித்தார். அருமையான புரவிகள் என்பது தெரிந்தது. அவரும் படகில் இறங்கி கரைக்கு வந்தார். வங்கத்தில் புரவிகள் கீழே இறக்கப்பட்டன. அருண்மொழிபட்டனும், நீலன்வெண்காட னும் கீழிறங்கினார்கள். குதிரையில் ஏறிக் கொண்டார்கள். நீலன் வெண்காடன் இடப்பக்கம் இருந்த ஆறு வரிசை படையை, இருநூறு பேர் கொண்ட வாள் வீரர்களை முன்னே அழைத்துக் கொண்டு போனான். மணலில் மிதித்துக்கொண்டு அவர்கள் மேலே ஏறிப் போனார்கள். இடது பக்கத்திலிருந்து அருண்மொழிபட்டன் இன்னொரு அறுநூறு வீரர்களை அழைத்துக் கொண்டு போனான். நடுவில் இருந்த படை அவர்களுக்கு பின்னே நின்று கொண்டது. வில் வீரர்கள் தனித் தனி வரிசையாகி அந்த இரண்டு படைகளுக்கும் ஓரமாக நின்று கொண்டார்கள். மரக்கலன்களிலிருந்து மீண்டும் வீரர்கள் இறங்கினார்கள். எதிரே கரை உயரத்தில் இருந்தவர்கள்

இறங்குகின்ற வீரர்களை பார்த்து பயந்தார்கள். அரை நாழிகை யில் ஒரு லட்சம் வீரர்கள் கொண்ட படை. மரக்கலன்களி லிருந்து இறங்கி ஈரம் சொட்டச் சொட்ட கரை ஏறியது,

முன்பக்கம் வந்த படையை தாக்க ரோஹண வீரர்கள் முயற்சி செய்தார்கள். படை இறங்குவதை பார்த்து தளபதிகள் பின்வாங்கினார்கள். பல படைவீரர்கள் அவர்களுக்கு முன் னேயே ஓடிவிட்டார்கள். காடுகளில் புகுந்து விடத் தொடங்கி னார்கள்.

நீலன் வெண்காடன் படை ரோஹணப் படையை துரத்திக் கொண்டு முன்னேறியது. ஊருக்குள் போகும் பாதையை கைப்பற்றியது. இடதும், வலதும் உள்ள ரோஹண வீரர்களை அடித்து விரட்டியது, முடமாக்கியது. கத்தியை நெஞ்சில் சொருகியது. தானியங்கள் ஒதுக்கப்பட்ட கிடங்குகளை கைப்பற் றிக் கொண்டார்கள். மூட்டைகளை வீரர்கள் சுமந்து கொண்டு கடல் நோக்கி ஓடினார்கள். காலியான கிடங்கிற்கு தீ வைத்தார் கள். அதற்குப் பிறகு மூங்கில் சுவரை அடித்து உடைத்தார்கள். நெருப்பு பந்தங்களை குடிசைகள் நோக்கி வீசினார்கள். அந்தி சரிந்து இருள் துவங்கியபோது ரோஹணம் எரியத் துவங்கி யிருந்தது.

பெண்கள், குழந்தைகளைத் தவிர கிழவர்களையும் அடித்து மடக்கி வைத்தார்கள். மண்டிபோட்ட வீரனை நெஞ்சில் குத்தி கொன்றார்கள். புத்த விகாரை நோக்கி ஒரு படை ஓடிற்று. கை கூப்பி தடுக்க முயன்ற புத்த பிட்சுகளை வெட்டி வீழ்த்தி னார்கள். பெரும் மரக்கதவுகள் மிகுந்த மாளிகைக்குள் ஓடி னார்கள். எதிர்பட்ட அத்தனை பேரையும் அடித்தார்கள். புத்த ருடைய விளக்குளை அடித்து நொறுக்கினார்கள். தீப்பந்தங் களை சொருகினார்கள். தகதகவென்று தீப்பந்தமும், புகையும் சூழ்ந்தன. மிக உயரமான புத்தர் சிலை இருந்தது. ஆள் உயர புத்தர் சிலையை என்ன செய்வது என்று அருண்மொழிபட்டன் இராஜேந்திரரை கேட்டான்.

"என்ன உலோகம் அது."

"சொக்கத் தங்கம்."

"பிடுங்கி கொண்டு போய் சோழ தேசத்திற்கு அனுப்பு." கயிறு கட்டி இழுத்தார்கள். பீடம் உடைந்தது. பீடத்தை கடப்பாறையால் பிளந்தார்கள். புத்தர் சிலை குப்புற சாய்ந்தது. அப்படியே மூங்கிலில் ஏந்திக் கொண்டார்கள். தூளி கட்டினார் கள். தபதபவென்று எடுத்து ரோஹணை வீதிகளில் நடந்தார் கள். ஜனங்கள் வாய்விட்டு அழுதார்கள். அழுதவர்களை அடித் தார்கள். புத்தர் சிலை மரக்கலத்தில் ஏற்றப்பட்டது. மரக்கலம் கனம் தாங்காமல் தடுமாறியது.

"உடனே கிளம்பு. நாகை போய் சேர், அங்கிருந்து இது கங்கை கொண்ட சோழபுரம் போகட்டும். உடனே உருக்கி அழித்து விடு." என்று உத்தரவிடப்பட்டது. உத்தரவிடப்பட்ட ஓலையை தளபதிகள் எடுத்துக் கொண்டு போனார்கள்.

புத்தரோடு ஒரு அக்ர மந்திர மரக்கலம் கிளம்பி துடுப் புகள் வலிக்கப்பட்டு நாகை துறைமுகம் நோக்கி நகர்ந்தது. அதில் பதினைந்து வீரர்கள் இருந்தார்கள். புத்தர் ரோஹ ணத்தை பார்த்தபடி மெல்ல பிரிந்து மேல் தளத்தில் அமர்ந்த படி சோழ தேசத்தை நோக்கி விடை பெற்றார்.

மிகச் சிறந்த கொள்ளை அது என்று அருண்மொழிபட்ட னுக்கு தோன்றியது. கிட்டத்தட்ட ஒரு லட்சம் கழஞ்சுகள் புத்தர் சிலை உருக்கி அடிக்கலாம் என்று தோன்றியது. சோழதேசம் பொற்காசுகள் வைத்து பல்லாங்குழி ஆடப்போகிறது என்று நினைத்துக் கொண்டான். சிரித்தான்.

விடியும்போது ரோஹணத்து புரவிகள் திரட்டப்பட்டன. இறுக்கி இழுத்து அடக்கப்பட்டன. கடற்கரையோரம் கொண்டு போய் சேர்க்கப்பட்டன. ஊருக்குள் நுழைந்து அடுத்த ஊர் அதற்கு அடுத்த ஊர் என்று பல கிராமங்களை தீயிட்டு கொளுத்தினார்கள். ரோஹணமும், ரோஹணத்தை சுற்றி யுள்ள கிராமங்களும் அழிந்தன. வயல் பரப்பில் அவர்கள் தேசத்து யானைகளையே கொண்டு போய் விட்டு பயிர்களை அழித்தார்கள். யானைகள் பயிர்களை தின்றன. மேயவிட்டு மிரட்டினார்கள். அந்த மாவுத்தர்களை கத்தியால் குத்தி கொன் றார்கள். சோழ தேசத்து மாவுத்தர்கள் யானைகளை இழுத்து அடக்கினார்கள். சேர தேசத்து பாஷையை அந்த யானைகள் தெரிந்து கொண்டிருந்தன. சோழ தேசத்து மாவுத்தர்களுக்கும்

சேர தேசத்து யானை பாஷை தெரியும். அந்த யானைகள் சேர தேசத்திலிருந்து வந்தவை என்று எளிதில் புரிந்துபோயிற்று. ரோஹணத்து அரண்மனை முற்றிலும் நாசமாகியது.

ஒரு நாள் முழுவதும் அங்கு தங்கி இரவு நேரம் குதிரை களை பெரிய மிதவை போன்ற தளங்களில் ஏற்றி மரக்கலன் களுக்கு கொண்டு போனார்கள். பத்து பத்து குதிரைகளாக பிரித்து அனுப்பப்பட்டன. குதிரைகள் அதிகம் ஆடின. அடிபட் டன.

கடற்கரையில் இருந்த அரபு வியாபாரி பதறினான். 'அடிக் காதே அடிக்காதே' என்று கெஞ்சினான்.

"வேறு என்ன செய்ய."

அங்குள்ள அரபு வியாபாரிகள் கூட்டமாய் குதிரைகளுக் கருகே போனார்கள். குதிரைக்கு அருகே போய் குதிரையை தடவி கொடுத்தார்கள். அவை அமைதியாக மரக்கலத்தில் ஏறின.

"என்ன சொல்கிறீர்கள்."

"ஒன்றுமில்லை. உன் பாஷையில் பேசு, கோபப்படாதே என்று சொல். தானாகக் கேட்கும், நீ சொல்கின்ற குரலில், அந்த சொல்லில் வன்மையை வைத்துக் கொள், கோபப் படாதே கோபப்படாதே என்று உரக்க கத்தாதே. மிருதுவாக சொல். கோபப்படு என்பதைக் கூட மிருதுவாக சொன்னால் கோபப்படாதே என்று அர்த்தத்தை இந்த குதிரை ஏற்றுக் கொள்ளும். உன்னுடைய த்வனியில் தான் குதிரை உன்னை புரிந்து கொள்கிறது,"

மிகப் பெரிய பாடத்தை அங்குள்ள அரபு வியாபாரிகள் சோழவீரர்களுக்கு சொல்லிக் கொடுத்தார்கள்.

அந்த குதிரைகள் ஏறின. அரபு வியாபாரிகள் வங்கமும் சேர்க்கப்பட்டது. பல நாவாய்கள் இழுக்கப்பட்டன.

நூற்று அறுபது மரக்கலன்கள் ஒட்டு மொத்தமாக கிழக்கு நோக்கி பயணித்தன. சோழ தேசத்து வீரர்கள் உல்லாசமாக வங்கத்தில் பயணித்தார்கள். அரபு தேசத்து குதிரைகள் அவர் களுக்கு துணை வந்தன. இருபத்தியாறு யானைகள் மரக்கலன் ஏறின. ஒரு வீடு விடாமல் புகுந்து தானியங்களையும், உணவுப்

பொருள்களையும் அள்ளிக் கொண்டு மரக்கலன்களில் நிரப்பிக் கொண்டார்கள்.

சமைத்த உணவை உடனே உண்டார்கள். கோழிகளை கூண்டுகளில் அடைத்து ஏற்றினார்கள்.

''வாத்துகளையும் ஏற்றிக் கொள்ளுங்கள்.'' குட்டன் கணவதி உரக்கச் சொன்னான்.

''வாத்துகள் எதற்கய்யா. வாயுவாயிற்றே.''

''உங்களுக்கல்ல. மூக்குத் திமிலங்களுக்கு.''

''ஏன் மூக்குத் திமிலங்களுக்கு,''

''அவை நமக்கு வழிகாட்டும். கூட துணையாக வரும். ஒருவேளை நீங்கள் விழுந்துவிட்டால் அது உங்களை ஏற்றி படகுகளில் கொண்டு போய் சேர்க்கும். எனவே மூக்கு திமிலங்களுக்கு உணவாக இதை கொடுப்போம்'' என்று சொன்னார்கள்.

நூறு வாத்துகள் பெட்டிகளில் ஏற்றி நெருக்கமாக அடைக்கப்பட்டு மரக்கலன்களில் ஏற்றப்பட்டன. கிழக்கு நோக்கி போகிறபோது தொலைவில் ரோஹணம் இருந்த இடத்திலிருந்து கரும்புகை எரிந்து கொண்டிருப்பது தெரிந்தது. இராஜேந்திர சோழர் எக்களித்தார்.

''அற்புதமான போர் நம்மில் எத்தனை பேர் மரணமடைந்தார்கள்.''

''ஒருவர்கூட இல்லை,''

''ஆஹா ஆஹா அபாரம் இதுதான் போர்'' என்று உரக்கச் சொன்னார்.

''இந்த நிலைமைதான், இந்த நியதிதான் நாம் கடாரத்திலும் கடைபிடிக்க வேண்டும்'' என்று கட்டளையிட்டார்.

ரோஹணம் வலிவு குன்றிய தேசம், கடாரம் அப்படி இல்லை. ஒரு மாதம் முன்பு கிளம்பிய வணிகர் கூட்டம் ஸ்ரீ விஜயத்தை சுற்றி நடுகடல் வழியாக காம்போஜம் போய் நின்று காம்போஜத்தின் மன்னனான சூரியவர்மனை பார்த்து வணங்கி நின்றது.

''என்ன செய்தி''

''சோழ மகாராஜா சக்கரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜேந்திர தேவர் படையெடுத்து வருகிறார்.''

''என்னிடமா.''

''இல்லை. நீங்கள் நட்பு நாடு என்று தெரியும். நீங்கள் கொடுத்த தேரை மிக பத்திரமாக வைத்திருக்கிறார். உங்கள் நட்பை விரும்புகிறார்.''

''பிறகு, படையெடுப்பதாக வந்து சொல்கிறீர்களே,

''கடாரத்தின் மீதும், ஸ்ரீ விஜயத்தின் மீதும் அவர்கள் பழிதீர்க்க படையெடுத்து வருகிறார்கள்.''

''நல்லது. இது நடக்கும் என்று நான் எதிர்பார்த்தேன். எதற்காக என்னிடம் தூது.'' சூரியவர்மன் விசாரித்தான்.

''எரி அம்புகள் வேண்டும்.'' அவர்கள் வேண்டுகோளை வைத்தார்கள். விலை பேசினார்கள்.

ஒரு அம்பு ஒரு கழஞ்சு என்று விலை பேசப்பட்டது. சோழ வணிகர்கள் தயங்கினார்கள். இது சரியில்லையே. கொஞ்சம் பார்த்து கொடுங்கள் என்று கெஞ்சினார்கள். ஒரு பொன் கழஞ்சுக்கு மூன்று மருந்திட்ட அம்புகள் என்று தரப்பட்டன. ஜாடிகளில் ஏற்றிய மருந்துகள் கொடுக்கப்பட்டன. பெரும் தொகை கைமாறியது,

நசுக்கினால் நெளியக்கூடிய தாமிரம் கலக்காத கெட்டியான தங்க நாணங்களை வாங்கி பரிசோதித்து தன்னுடைய பொக்கிஷத்தில் சூர்யவர்மன் சேர்த்துக் கொண்டான்.

''ஸ்ரீ விஜயத்தை என்ன செய்வதாக உத்தேசம்.''

''முற்றிலும் அழிப்பதாக உத்தேசம்.''

''முற்றிலும் அழித்துவிட்டு புலிக்கொடி அங்கு பறக்குமா. சோழ தேசத்தின் பகுதியாக மாறுமா.''

''அனேகமாக இருக்காது.''

''ஏன் அப்படி சொல்கிறீர்கள்.''

''எங்களுடைய இடம் வேறு. அந்த இடத்திற்கு போகத்

தான் பிரியப்படுவார்கள். உங்களிடம் இருக்க விருப்பப்பட மாட்டார்கள்.''

''இலங்கையில் குடியிருக்கிறீர்களே.''

''அது மிக அருகே இருக்கின்ற தேசம். ஒரே நாளில் வந்து விட முடியும். கீழை சாளுக்கியத்தில் இருக்கிறோம். மேலை சாளுக்கியத்தில் பாதி இறக்கி இருக்கிறோம். கேரளத்திலும், பாண்டிய தேசத்திலும் எங்களுடைய கொடியே பறந்து கொண்டிருக்கிறது. இவையெல்லாம் ஒரு நாள், இரண்டு நாள் பயணங்களில் உள்ளவை.''

''ஆனால் கிழக்கே குமரிமுனை பக்கமும், நாஞ்சில் நாடு பக்கமும் பாண்டியர்கள் பலமாக இருப்பதாக என் வணிகர்கள் சொல்கிறார்களே.'' சூரியவர்மன் வினவினான்.

''ஆமாம் அவர்களை ஒழிக்க தனி திட்டம் இருக்கிறதே, ரோஹணத்தை தாக்கிவிட்டு இராஜேந்திர சோழர் இங்கு வருவார். ரோஹணத்தை தாக்கினாலே பாண்டியர்கள் மடிந்து விடுவார்கள்.''

''ஆமாம். ரோஹணமும், பாண்டியர்களும் ஒன்றல்லவா. மானாபரணன் ஏதோ ஒரு பாண்டியனோடு நெருக்கமாக இருக்கிறான் என்று கேள்விப் படுகிறேன்.''

''சரி, அம்புகளை எடுத்துச் செல்லுங்கள்.'' அந்த வணிகர்களுடைய மரக்கலம் முழுவதும் எரி அம்புகள் அடுக்கப்பட்டன. ஜாடி ஜாடியாக திருகு மூடிகளோடு மஞ்சள் மருந்து ஏற்றப்பட்டது.

''நூறு எரி அம்புகள் வந்தால் என்ன செய்வீர்கள்.'' ஒரு படைத்தளபதி கேட்டான்.

''அம்பினாலேயே தகர்ப்போம்.''

''இல்லை. அது முடியாது. நூறு அம்புகளில் மூன்று அம்புகளாவது உங்கள் பாய்மரத்தில் விழும். கடற்காற்றில் பாய்மரம் பற்றிக் கொள்ளும். வேறு ஒரு உபாயம் இருக்கின்றது.''

''என்ன''

''இம்மாதிரியான மர பீப்பாய்களை எடுத்துக் கொள்ளுங்கள். கப்பி கட்டி மேலே ஏற்றுங்கள். மேலே உள்ள தண்டில்

ஒரு ஆள் நிற்கக்கூடிய இடம் வைத்துக் கொள்ளுங்கள். இந்த பீப்பாயை இழுத்து மரக்கலனில் உள்ள பாய்மரத்தின் மீது இவைகளை வீசுங்கள். அந்த பாய்மரம் ஈரத்தில் நனைந்தால் எளிதில் தீ பிடிக்காது. அதைத் தாண்டியும் தீ பிடிக்க வாய்ப்பு இருக்கிறது,''

''எரியம்பு தளத்தில் விழுந்தால் என்ன செய்வது தெரியுமா.'' இன்னொரு தளபதி கேட்டான்.

''தெரியவில்லை.''

''தளத்தில் மரத்தால் இப்படி ஒரு தொட்டி போல அமைத்து விடுங்கள். ஒரு ஜாண் உயரத்திற்கு நீர் தேக்கி வையுங்கள். மரக்கலத்தில் வந்து எரி அம்பு விழுந்தால் அந்த தண்ணீரில் விழும். உடனே அணைந்து போகும். நெருப்புக்கு நீர் பகை. இது விதி.''

காம்போஜத்திலிருந்து விடை பெற்றுக் கொண்டு அந்த வணிகர் கூட்டம் மாயிருடி கங்கத்திற்கு தொலைவே நங்கூரம் இட்டு நின்றது. சோழப்படைக்கு காத்திருந்தது.

இந்நேரம் ரோஹணம் அடிபட்டு இருக்கும். தசமியிலிருந்து கிளம்பினால்... கணக்குப் போட்டது. சுக்லபட்சம் முடிந்து பௌர்ணமியில் வந்து பௌர்ணமி முடிந்து கிருஷ்ண பட்சத்தில் மூன்றாம் நாளோ, நான்காம் நாளோ தலைதக்கோலம் இறங்கி அங்கிருந்து மாயிருடி கங்கம், மாடமாலிங்கம் வந்து சேர்ந்துவிடும்.

உண்டு தூங்கி அந்த எரி அம்புகள் நிறைந்த வணிக நாவாய்கள் காத்திருந்தன.

நக்கவரம் தீவுகள் சோழப்படை ஒன்று குடி இருந்த அந்த தீவை நோக்கி மரக்கலன்கள் சுற்றி நின்றுகொண்டன. கீழே இறங்கி இளைப்பாறின. யானைகளை இறக்கி நடை காட்டினார்கள். குதிரைகள் துள்ளி குதித்தன. போர் வீரர்கள் இறங்கி இளநீரும், மாம்பழங்களையும் உண்டார்கள். பப்பாளி பழங்கள் கிடைத்தன.

நூறு பேர் கொண்ட ஒரு அம்மணமான காட்டு கூட்டம் அவர்களை பார்த்தது, கை அசைத்ததும் ஓடி பதுங்கிகொண்டது.

அவர்களை தொந்தரவு செய்ய வேண்டாம் என்று சொல்லப் பட, வீரர்கள் தங்களுடைய வேலைகளை கவனித்தார்கள்.

அடுத்தடுத்த தீவுகளில் நாவாய் கொள்ளையர்கள் இருக் கிறார்கள் என்று கேள்விப்பட்டு ஆறு மரக்கலன்கள் கிளம்பின. மறு நாளே இரண்டு நாவாய்களை கொண்டு வந்தன. அவை அக்ர மந்திர நாவாய்களாக இருந்தனர். நாவாயில் பல சொகுசு அறைகள் இருந்தன. கடற் கொள்ளையர்களை பின் கைகட்டி குப்புறப் படுக்க வைத்திருந்தார்கள். இராஜேந்தி சோழரிடம் கொண்டு வந்து இறக்கி காட்டினார்கள்.

''சுடுமணலில் குப்புற போட்டு பிரம்பால் முதுகில் அடி,'' இராஜேந்திர சோழர் கட்டளையிட்டார். அவ்விதமே வீரர்கள் பிரம்பால் விளாறினார்கள். முதுகில் உப்புநீர் தெளித்தார்கள். அவர்களை கதற கதற மேலும் அடித்தார்கள்.

''என்ன வேண்டும். எதற்கு அடிக்கிறீர்கள்.''

''கொலை செய்வதற்கு,''

''கொன்றுவிடுங்களேன். ஏன் அடித்து கொலை செய் கிறீர்கள்.''

''அடித்து ஒரு வார்த்தை பேசுவோம். ஒப்புக்கொண்டால் விட்டு விடுவோம். இல்லையென்றால் கொலை செய்து விடு வோம்.''

''என்ன வேண்டும் உங்களுக்கு.''

''எங்களுக்கு துணை வேண்டும். சத்தியம் செய்ய வேண் டும். கிழக்கு பக்கம் போவதற்கு உதவி செய்ய வேண்டும். மாயிருடிகங்கம், இலங்கா சோகம் போன்ற இடங்களை இனம் காட்ட வேண்டும். வளைபந்தூரு என்ன என்று சொல்ல வேண்டும். ஸ்ரீ விஜயத்தின் உள்ளே போவதற்கு உதவி செய்ய வேண்டும்.''

''மறுத்தால்.'' ஒருவன் கேட்டான்.

அவனை உடனே மண்டிபோட்டு உட்கார வைத்தார்கள். தலையை பலகையில் வைத்தார்கள். ஒரே வீச்சில் கழுத்தை துண்டாடினார்கள். முண்டம் வேறு. உடல் வேறாய் அவன் விழுந்தான். மற்ற வீரர்கள் வாய்விட்டு கதறினார்கள்.

''மறித்தால் என்று கேட்டாலே மரணம்தான், மேற் கொண்டு ஏதேனும் பேச விரும்புகிறீர்களா.''

''உதவி செய்கிறோம்.'' எல்லோரும் சொல்ல, எழுந்து நிற்க வைக்கப்பட்டார்கள். பின் கை கட்டப்பட்டார்கள். கழுத்தில் பின்னலிட்ட கருப்பு கயிறு இருந்தது. அந்த கருப்பு கயிறுக்கு நடுவே சங்கு இருந்தது. அங்கு சங்குக்கு கூர்முனை கழுத்தில் இருந்தது, கழுத்து சுற்றி பல சங்குகள் கூர்முனை பதிக்கப் பட்டு இருந்தன. அதிகம் எகிறாதபடி அவை காத்தன. ஒரு இழுப்பு இழுத்தால் சங்கு தொண்டைக்குள் போய்விடும். உடனே மரணம் சம்பவிக்கும், அவர்கள் உடனே கைகட்டை அவிழ்த்துவிட்டார்கள். சங்கு தொண்டையை நெருடியது,

''இது உங்களை அடையாளம் காட்டும். உங்களை ஒரே இறுக்கில் இறுப்பதற்கும் உதவி செய்யும்.

இவர்களுக்கு அரை வயிறு சோறு மட்டும் போடு'' என்று உத்தரவிட்டார்.

அவர்கள் கடல் பகுதியின் கீழ் பகுதியில் துடுப்பு வலிக்க பயணப்பட்டார்கள். இடுப்பில் கோமணம் மட்டுமே தரிக்க அனுமதிக்கப் பட்டார்கள். ஒரு குவளை நீரும், ஒரு குவளை சோறும் தரப்பட்டன. மீன் துண்டுகள் கொடுக்கப்பட்டன. துடுப்பு போடாத நேரங்களில் துவண்டு துடுப்பின் மீதே படுத்துக் கொண்டிருந்தார்கள். துடுப்பு போடும் நேரத்தில் சவுக்கால் விளாறப்பட்டார்கள். மிகப் பெரிய அடிமை கூட்டம் ஒன்று சோழ தேசத்திற்கு கிடைத்தது,

குட்டன் கணவதி போய் தந்திரமாக பேசினான்.

''எதற்கு துடுப்பு போட்டு அடிபடுகிறீர்கள். துடுப்பு போட வேண்டிய அவசியமே இல்லை, காற்று சரியாக இருக்கிறது. மேலே வந்து தளத்தில் இளைப்பாறுங்கள்'' என்று சிலரை அழைத்துக் கொண்டு போனான். இன்னொரு குவளை நீர் கொடுத்தான். உண்ண பழங்களும், இனிப்புகளும் கொடுத் தான். அவர்கள் குட்டன் கணவதியை நம்பிக்கையோடும், நன்றியோடும் வணங்கினார்கள்.

''எடுத்த உடன் ஸ்ரீ விஜயத்தை தாக்காதீர்கள். சுற்றி தலைத் தக்கோலம் போய் அங்கிருந்து கடாரத்தின் நுனியில்

இருக்கின்ற துமதித் தீவிற்கு போய் விடுவோம். அங்கிருந்து கடாரத்தை சுற்றிக் கொண்டு வளைப்பந்துரு போவோம். அது ஒரு தனி தேசம், வலைப் பந்தூருலிருந்து சுற்றிக் கொண்டு இலங்கா சோகம் போவோம். அது ஒரு தனி தேசம். இலங்கா சோகத்திலிருந்து மாயிருடி கங்கம் போவோம். அது ஒரு தனி தேசம். பிறகு மாடமாலிங்கம் போய் விடுவோம்.''

''ஏன் அப்படி சொல்கிறாய். தலையை சுற்றி ஏன் மூக்கை தொடுகிறாய்.'' இராஜேந்திர சோழர் கேட்டார்.

''இல்லையெனில் நீங்கள் முசி நதி வழியாக நுழைந்து ஸ்ரீ விஜயத்தை தாக்குகிறபோது வடக்கிலிருந்து ஸ்ரீ விஜயத் திற்கு கட்டுப்பட்ட இந்த படைகள் ஒன்று திரண்டு நாகவெளி என்ற இடத்தில் படகு ஏறி பண்ணை என்ற ஊர் வழியாக ஸ்ரீ விஜயம் நோக்கி வந்துவிடும்.

நன்றாக புரிந்து கொள்ளுங்கள். ஸ்ரீ விஜயம் ஒரு தீவு. கடாரம் ஒரு தீபகற்பம். கடாரத்தின் வடக்கே காம்போஜம் இருக் கிறது, காம்போஜம் உங்களுக்கு நட்பு நாடு என்று சொல்லு கிறீர்கள். காம்போஜத்திலிருந்து வீரர்கள் உங்களை தாக்க வர மாட்டார்கள். ஆனால் மாடமா லிங்கமும், மாயிருடி கங்கமும் ஸ்ரீ விஜய படைகளால் கட்டுப்படுத்தப்பட்டவை. அவை களுடைய துணையோடு தான் சங்க ராம விஜயோதுங்கன் ஸ்ரீ விஜயத்தில் சௌகரியமாக நின்று கொண்டிருக்கிறான். அங்கிருந்து மன்னர்கள் கடல் கடந்து ஸ்ரீ விஜயத்தில் வந்து இறங்கினால் உங்கள் பாடு திண்டாட்டம். வடக்கிலிருந்தும், தெற்கிலிருந்தும், மேற்கிலிருந்தும் தாக்கப்படுவீர்கள். ஸ்ரீவிஜயம் பரந்து பட்டதேசம், சாவகத்தீவு மேற்கு பக்கம் இருக்கிறது. சாவகத் தீவின் கிழக்கு பக்கம் சன்னகர் என்ற ஜாதியர் உங்களுக்கு உதவியாக இருப்பார்கள். அவர்கள் உங்கள் மதத்தை சார்ந்தவர்கள்,''

''உங்களுடைய மதம் எது.''

''எனக்கு மதமும் இல்லை, கடவுள் நம்பிக்கையும் இல்லை,''

''பிறகு,''

''கடல் காப்பாற்றினால் வாழ்வோம். கடல் கைவிட்டால் சாவோம். இதுதான் கடற் கொள்ளையனின் வாழ்க்கை. என்னை

கடல் எப்பொழுதும் கை விடாது. நான் முதுமைவரை இருப் பேன்.''

''எப்படி அவ்வளவு திடமாகச் சொல்கிறாய்.''

''மூக்குத் திமிங்கிலங்கள் சொல்லியிருக்கின்றன.''

''ஜோசியம் சொல்லுமா.''

''சொல்லும். அவைகளோடு பேசத் தெரிந்து கொள்ள வேண்டும்.'' கடற்கொள்ளை தலைவன் விரிவாக விவரித்தான்.

திரைச்சீலையில் புள்ளியிட்டு எப்படி போக வேண்டும் என்று பாதையும் காட்டினான்.

''நண்பனே உன்னுடைய திட்டம் என்ன.''

''தலை தக்கோலத்திலிருந்து நீங்கள் மாடமா லிங்கத்தை தாக்கிவிடுங்கள். பிறகு தெற்கே நகர்ந்து மாயிருடி கங்கத்தை கைப்பற்றிக் கொள்ளுங்கள். இவை இரண்டும் அழிந்தாலே ஸ்ரீ விஜயம் பாதி செத்துப்போகும். காம்போஜத்தைத் தடுத்து நிறுத்துவதே இந்த இரண்டு படைகள்தான். இவர்கள் இருப் பதாலேயே அவன் தைரியமாக இருக்கிறான். இவை இரண்டும் தகர்க்கப்பட்டால் காம்போஜத்தின் மன்னன் சூர்யவர்மன். அவ னுடைய மகன் புத்திவர்மன் உள்ளே நுழைந்து விடுவான். அவர்கள் வசம் இந்த நகரம் போனால் கடாரத்தில் இவன் ஆட்டம் செல்லுபடியாகாது. வலைப்பந்தூரு எல்லாம் வணிகர் துறைமுகமே தவிர, வேறு எதுவும் இல்லை. இலங்கா சோகம் மிகச் சிறந்த பட்டிணம். அதிகம் பொது மக்கள் தான் இருக்கிறார் கள். வீரர்கள் குறைவு.''

''வீரர்கள் அதிகம் இருக்கும் இடம்.''

''நாகவெளி. தலை தக்கோலத்திலிருந்து தெற்கே இருக் கிறது. அதாவது கடாரத் தீவின் மேற்கே இருக்கிறது. அங்கிருந்து காடுகளூடே ஸ்ரீ விஜயம் வந்து விட முடியும்.''

''உனக்கு என்ன வேண்டும்.'' இராஜேந்திர சோழர் திருப்தி அடைந்தவராக அவனைப் பார்த்து கேட்டார்.

''உயிர் பிச்சை.''

''பிறகு''

"மரியாதை."

"பிறகு"

"கொள்ளையடித்து பிழைப்பது எனக்கு பிடிக்கவில்லை. நாகவெளியை எனக்கு கொடுத்துவிடுங்கள். தலை தக்கோலத்தை நீங்கள் தக்க வைத்துக் கொள்ளுங்கள்." தளபதிகள் புன்முறுவல் செய்தார்கள். அவன் கோரிக்கை நியாயமாக இருந்தது,

எதிரே உள்ள பாத்திரத்தில் நீர் நிரப்பி, கை நனைத்து, நனைத்த கையை ஒருவரை ஒருவர் பற்றி "எல்லாம் வல்ல இறைவன் சாட்சியாக கடல் அரசனின் சாட்சியாக ஒருவருக்கொருவர் நட்பாக இருப்போம். ஒருபொழுதும் துரோகம் செய்ய மாட்டோம்" என்று சத்தியம் செய்து கொண்டார்கள்.

"நாகவெளி உனக்கு சொந்தம்." என்று இராஜேந்திர சோழர் சொல்ல, அவன் எழுந்து மண்டியிட்டு நமஸ்கரித்தான். அவனுக்கு உடைவாள் தரப்பட்டது.

இருநூறு புரவிகள், மரக்கலம் நிறைய தானியங்கள், தென்னை மட்டைகள் குதிரைக்கான புற்கள், வழிகாட்ட கடற் கொள்ளை கூட்டம், பௌர்ணமி நெருங்கும் நேரத்தில் நக்கவரத்திலிருந்து அத்தனை மரக்கலன்களும் ஒன்றாக தலைதக் கோலம் நோக்கிப் போயின. தலை தக்கோலம் கண்ணுக்கு தெரிந்த நேரத்தில் மூன்று தளபதிகளை இராஜேந்திர சோழர் மரக்கலன்களுக்கு செய்தி சொல்லும்படி அனுப்பினார்.

தலை தக்கோலத்திலிருந்து நாகவெளி நோக்கி நாற்பது மரக்கலன்கள், இரண்டு வங்கங்கள் போக வேண்டும். அக்ர மந்த்ர, மத்தியமந்த்ர, சர்வ மந்த்ர மரக்கலன்கள் அங்கு நிறைந் திருக்க வேண்டும். நாகவெளியில் கடலிலேயே காத்திருக்க வேண்டும். பிறகு தலை தக்கோலத்திலிருந்து செய்தி வந்தவுடன் நாகவெளியின் கரைகளில் இறங்க வேண்டும். நாக வெளியை அடித்து விட்டு பிறகு தெற்கு நோக்கி, ஸ்ரீ விஜயம் நோக்கி அவர்கள் போக வேண்டும். அதுவரை நாகவெளியை கைப்பற்றி குடியமர்ந்து கொள்ள வேண்டும்.

தலை தக்கோலத்திலிருந்தும் ஒரு படை நாகவெளி நோக்கி தரை மார்க்கமாக வரும், அந்தப் படையினுடைய செய்தியின்

பேரில் நாகவெளியில் இருந்த படை ஸ்ரீ விஜயம் நோக்கி போக வேண்டும். நாங்கள் வலைபந்தூரு வழியாக ஸ்ரீ விஜயத்தை தாக்குவோம். பத்து நாட்கள் இவை நடக்கும் என்று திட்டமிடப்பட்டு, வேலைகள் குறிக்கப்பட்டு, ஓலைகள் எழுதப் பட்டு அங்கே பலருக்கும் தரப்பட்டன. யார் யார் நாகவெளிக்கு திரும்ப வேண்டும் என்ற செய்தியும் போயிற்று. மரக்கலன்கள் இரண்டாக பிரிந்தன. மிகப்பெரிய படை தலை தக்கோலத்தை நோக்கி போக நாற்பத்தியோரு மரக்கலன்கள் கொண்ட ஒரு படை நாகவெளி நோக்கி பயணம் துவக்கியது,

ஒரு சிறிய படகில் மணிநாகன் செட்டியும், சந்திரன் தான தொங்க செட்டியும் தலைத் தக்கோலக் கரை நோக்கிப் போனார்கள்.

★ ★ ★

அத்யாயம்

104

ரோஹணத்து குதிரைகள் மரக்கலம் ஏறியவுடன் அந்த மரக்கலத்தில் ஏறிக்கொண்ட சக்கரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜேந்திர தேவர் குதிரைகளை தடவித் தடவி பார்த்தார்.

“இந்த குதிரைகள் நமக்கு வேண்டுமா.”

“இல்லை, அதிகம் தேவைப்படாது. தலை தக்கோலத்தில் இறங்கி மலைஏறி சரிகின்றோம் என்றால் இந்த குதிரைகள் உதவாது. அங்கே பொதி சுமக்கின்ற குட்டி குதிரைகளும், கோவேறு கழுதைகளும் இருக்கின்றன. இவைகளை நாகை துறைமுகத்திற்கோ, கொற்கைக்கோ அனுப்பி விடுதல் நல்லது. கொற்கையில் இந்த குதிரைகள் இறக்கப்பட்டு சோழ சுந்தர பாண்டியனிடம் கொடுத்தால் இவைகளை நன்றாக பயன்படுத்துவார் என்பது எங்கள் எண்ணம்.” சோழ செட்டிகள் அவருக்கு பதில் சொன்னார்கள்.

அருண்மொழிபட்டனோடும், மற்றவர்களோடும் விவாதித்து விட்டு அந்த குதிரைகள் உள்ள மரக்கலம் திருகோவில் பட்டிணம் போய் அங்கிருந்து முல்லைதீவு போய் அங்கிருந்து கொற்கை நோக்கி பயணித்தன. இரண்டு குதிரைகளாவது எடுத்துக் கொள்ளலாமா என்று இராஜேந்திரர் நினைத்தார்.

பழக்கப்படாத குதிரைகள். இவைகளை நம்பி எங்கு எடுத்துப் போவது. நம்மிடம் இருக்கின்ற குதிரைகள் பழக்கப்பட்டவை. அவைகள் மலையை தாண்டுவதே பெரிய ரண களமாகப் போகிறது. உச்சியில் ஏறுவதும், சரிவில் இறங்குவதும், ஆற்றோரம் நடப்பதுமே மிகக் கடினமாக இருக்கும். வணிகர்கள் சொன்னார்கள்.

எல்லாவற்றையும் கவனத்தில் நிறுத்தி, தலை தக்கோலத்தில் நேரே போய் எக்காளத்தோடு இறங்குகிற போது தலை

தக்கோலம் அவஸ்தைபட்டது. ஆனால் குதிரைகளை மலை நோக்கி நடத்துவதில் இராஜேந்திரர் குறியாக இருந்தார். தலை தக்கோலம் அடிபட்டது, வெறும் கோவணத்தோடும், அதன்மீது இடுப்பு துண்டோடும் படைவீரர்கள் இருந்தார்கள். கடற் சிப்பி களால் செய்த மணிகளையும், சங்குகளால் செய்த கேயூரம் போன்றவற்றை தவிர அவர்களிடம் பெரிய சொத்து என்று எதுவும் இல்லை. பெண்கள் இடுப்பு துணியோடு மட்டுமே நின்றார்கள். திறந்த மாரோடுதான் ஓடினார்கள். அங்கு துணி நெய்தல் இல்லாத விஷயம். காழகம் மரக்கலத்தில் தான் வர வேண்டும். எப்பொழுதுமே ஈரப்பதமாக இருக்கின்ற தேசம். இரவு, பகல், காலை, மாலை ஆணி, ஆவணி, ஆடி எந்த மாத மாயினும் மழை பெய்யும் என்பதால் நெசவு அங்கு நடத்தப்பட வில்லை. தலைதக்கோலத்தின் அரசன் யார் என்றே தெரிய வில்லை. அவன் காடுகளில் ஒளிந்து கொண்டு விட்டான். அரைநாள் பொழுதில் வெறும் மூங்கில் கோட்டையான அந்த தலை தக்கோலம் வசப்பட்டது.

அரண்மனை என்பது மூங்கில் சுவர்களாலும், உள்ளே கட்டிடம் என்பது மரப்பலகைகளாலும் ஆனது. சீனர்களுடைய வீடு போல சுருண்டு வளைந்த கூரை. அதன் மேற்பக்கம் சிம்மம், சிவப்பு வர்ணங்கள் அதிகம் அடிக்கப்பட்டு இருந்தன.

''வீரர்கள் பிடிபட்டிருக்கிறார்கள். என்ன செய்ய,''

''பின் கை கட்டி உட்கார வை, பெண்களை சோறு கொடுக்கச் சொல், தலை தக்கோலத்தில் இருக்க வேண்டிய அவசியம் இல்லை. முக்கியமான பண்டகசாலை போன்ற வற்றை பயமுறுத்தி எரித்து விடு. வீடுகளை ஒன்றும் செய் யாதே. இது ஒரு தேசமாகவே எனக்கு தெரியவில்லை. ஒரு பெரிய கிராம குடியிருப்பாக இருக்கிறது. நம்முடைய வேடு வர்களை ஒத்த உடையும், பாஷையும் தான் இவர்களிடம் உள்ளது. காட்டுவாசிகள் என்ற இடத்திலிருந்து இவர்கள் வெளியே வரவில்லை. எனவே, அதிகம் துன்புறுத்த வேண்டாம்.

ஒருநாள் இங்கு தங்கி உடனடியாக நாம் மாடமாலிங்கம் போவோம்.''

''அதற்குள் அங்கு செய்தி போய்விடாதா.''

அத்யாயம்

104

ரோஹணத்து குதிரைகள் மரக்கலம் ஏறியவுடன் அந்த மரக்கலத்தில் ஏறிக்கொண்ட சக்கரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜேந்திர தேவர் குதிரைகளை தடவித் தடவி பார்த்தார்.

“இந்த குதிரைகள் நமக்கு வேண்டுமா.”

“இல்லை, அதிகம் தேவைப்படாது. தலை தக்கோலத்தில் இறங்கி மலைஏறி சரிகின்றோம் என்றால் இந்த குதிரைகள் உதவாது. அங்கே பொதி சுமக்கின்ற குட்டி குதிரைகளும், கோவேறு கழுதைகளும் இருக்கின்றன. இவைகளை நாகை துறைமுகத்திற்கோ, கொற்கைக்கோ அனுப்பி விடுதல் நல்லது. கொற்கையில் இந்த குதிரைகள் இறக்கப்பட்டு சோழ சுந்தர பாண்டியனிடம் கொடுத்தால் இவைகளை நன்றாக பயன்படுத்துவார் என்பது எங்கள் எண்ணம்.” சோழ செட்டிகள் அவருக்கு பதில் சொன்னார்கள்.

அருண்மொழிபட்டனோடும், மற்றவர்களோடும் விவாதித்து விட்டு அந்த குதிரைகள் உள்ள மரக்கலம் திருகோவில் பட்டிணம் போய் அங்கிருந்து முல்லைதீவு போய் அங்கிருந்து கொற்கை நோக்கி பயணித்தன. இரண்டு குதிரைகளாவது எடுத்துக் கொள்ளலாமா என்று இராஜேந்திரர் நினைத்தார்.

பழக்கப்படாத குதிரைகள். இவைகளை நம்பி எங்கு எடுத்துப் போவது. நம்மிடம் இருக்கின்ற குதிரைகள் பழக்கப் பட்டவை. அவைகள் மலையை தாண்டுவதே பெரிய ரண களமாகப் போகிறது. உச்சியில் ஏறுவதும், சரிவில் இறங்குவதும், ஆற்றோரம் நடப்பதுமே மிகக் கடினமாக இருக்கும். வணிகர்கள் சொன்னார்கள்.

எல்லாவற்றையும் கவனத்தில் நிறுத்தி, தலை தக்கோலத்தில் நேரே போய் எக்காளத்தோடு இறங்குகிற போது தலை

தக்கோலம் அவஸ்தைபட்டது. ஆனால் குதிரைகளை மலை நோக்கி நடத்துவதில் இராஜேந்திரர் குறியாக இருந்தார். தலை தக்கோலம் அடிபட்டது, வெறும் கோவணத்தோடும், அதன்மீது இடுப்பு துண்டோடும் படைவீரர்கள் இருந்தார்கள். கடற் சிப்பி களால் செய்த மணிகளையும், சங்குகளால் செய்த கேயூரம் போன்றவற்றை தவிர அவர்களிடம் பெரிய சொத்து என்று எதுவும் இல்லை. பெண்கள் இடுப்பு துணியோடு மட்டுமே நின்றார்கள். திறந்த மாரோடுதான் ஓடினார்கள். அங்கு துணி நெய்தல் இல்லாத விஷயம். காழகம் மரக்கலத்தில் தான் வர வேண்டும். எப்பொழுதுமே ஈரப்பதமாக இருக்கின்ற தேசம். இரவு, பகல், காலை, மாலை ஆணி, ஆவணி, ஆடி எந்த மாத மாயினும் மழை பெய்யும் என்பதால் நெசவு அங்கு நடத்தப்பட வில்லை. தலைதக்கோலத்தின் அரசன் யார் என்றே தெரிய வில்லை. அவன் காடுகளில் ஒளிந்து கொண்டு விட்டான். அரைநாள் பொழுதில் வெறும் மூங்கில் கோட்டையான அந்த தலை தக்கோலம் வசப்பட்டது.

அரண்மனை என்பது மூங்கில் சுவர்களாலும், உள்ளே கட்டிடம் என்பது மரப்பலகைகளாலும் ஆனது. சீனர்களுடைய வீடு போல சுருண்டு வளைந்த கூரை. அதன் மேற்பக்கம் சிம்மம், சிவப்பு வர்ணங்கள் அதிகம் அடிக்கப்பட்டு இருந்தன.

''வீரர்கள் பிடிபட்டிருக்கிறார்கள். என்ன செய்ய,''

''பின் கை கட்டி உட்கார வை, பெண்களை சோறு கொடுக்கச் சொல், தலை தக்கோலத்தில் இருக்க வேண்டிய அவசியம் இல்லை. முக்கியமான பண்டகசாலை போன்ற வற்றை பயமுறுத்தி எரித்து விடு. வீடுகளை ஒன்றும் செய் யாதே. இது ஒரு தேசமாகவே எனக்கு தெரியவில்லை. ஒரு பெரிய கிராம குடியிருப்பாக இருக்கிறது. நம்முடைய வேடு வர்களை ஒத்த உடையும், பாஷையும் தான் இவர்களிடம் உள்ளது. காட்டுவாசிகள் என்ற இடத்திலிருந்து இவர்கள் வெளியே வரவில்லை. எனவே, அதிகம் துன்புறுத்த வேண்டாம்.

ஒருநாள் இங்கு தங்கி உடனடியாக நாம் மாடமாலிங்கம் போவோம்.''

''அதற்குள் அங்கு செய்தி போய்விடாதா.''

''போக வேண்டுமய்யா. எதிர்ப்பு இல்லாமல் எப்படி. கொள்ளைக்காரர்கள்தான். ஆனால் திருடர்கள் அல்லவே, இரவில் பதுங்கி பதுங்கியா நுழையப் போகிறோம். அல்ல. வருகிறோம் என்று சொல்லிவிட்டு செய்வோம். கொஞ்சமும் கவலை வேண்டாம். என் கவலை, எப்பொழுது குதிரை களோடும், யானைகளோடும் மலையில் ஏறப்போகிறோம். எப்படி சரிவில் இறங்கப் போகிறோம்.

மலையிலிருந்து சரிகின்ற நீர் வழியாக பாதை இருக் கிறது என்று சொல்லுகிறார்கள். ஒரு இடத்தில் நீர் வீழ்ச்சி நெட்டு குத்தாக விழுகிறது. நீர் தன் பாதையைத் தேடிக் கொண்டுவிட்டது. நாம் நம் பாதையை தேடிக் கொள்ள வேண் டும். இது இங்குள்ள வீரவாள் படையினருக்கு தெரியும்.'' அவர் சொல்ல, வீரவாள் படையினர் ஆமோதித்தார்கள்.

''இந்த இடத்தினுடைய எல்லா விஷயமும் தெரியும். இந்த பக்கத்துமக்கள் அமைதியானவர்கள். ஸ்ரீ விஜயத்து மன்னன் இந்த மக்களை அதிகம் சித்ரவதை செய்திருக்கிறான். இங்கு இருந்து பெண்டுகளை அழைத்துப்போய் பெண்டாளவும், வீட்டு வேலைக்கும் அடிமையாக வைத்திருக்கிறான். ஸ்ரீ விஜயம் என்றாலே நடுங்குவார்கள். நம்மிடம் பேசுகிறார்கள். அடிக்க வேண்டாம் என்று கெஞ்சுகிறார்கள். நான் அவர்கள் குழந் தையை வாங்கிக் கொண்டு அந்த குழந்தைக்கு இனிப்பு வெல்லம் கொடுத்தேன். கட்டிக் கொண்டு முத்தமிடுகிறான். என் வீடு ஞாபகம் வந்துவிட்டது. அப்படி குழந்தையை கொஞ்சிய தாலேயே அந்த ஊரும், அந்த ஊர் மக்களும் வந்திருக்கிறார்கள்.

ஊர் பெரியவர்கள் எதற்காக இந்த தாக்குதல் என்று வருத் தமாக கேட்டார்கள். தலை தக்கோலத்தை அழிப்பதற்கு வர வில்லை, ஸ்ரீ விஜயத்தை பெயர்ப்பதற்கு வந்திருக்கிறோம். ஸ்ரீ விஜயம் சோழ தேசத்து வணிகர்களை தொந்தரவு செய்தது என்று ஒரு வீரவாள் படையோடு வணிகர் படையோடு நான் அவரிடம் சொன்னேன். உண்மையில் அவர்களுக்கு பெரும் சிரிப்பு.

ஸ்ரீ விஜயத்தை அழிக்கப் போகிறீர்களா. நிஜமாகவா. எப்போது, எப்படி என்றெல்லாம் கேட்கிறார்கள். ஸ்ரீ விஜயம் அழி வதில் இவர்களுக்கு ஒரு சந்தோஷம் இருக்கிறது, தங்களை பழிவாங்கிய ஸ்ரீ விஜயத்தை நாம் பழிவாங்கப் போகிறோம்

என்ற ஆனந்தம் இருக்கிறது. ஆனால் ஸ்ரீ விஜயம் ஒழிக என்று சொல்லவில்லை. நம்மை வாழ்க என்று சொல்லவில்லை. ஏதோ செய்துவிட்டு போங்கள் என்று ஒதுங்கி இருக்கிறார்கள்.''

''நல்லது. நாம் ஒருபடி மேலே போவோம். இவர்களுக்கு என்ன வேண்டும் என்று கேட்போம். அதைத் தருவோம்.''

''காழகத்திற்குத்தான் ஏங்குகிறார்கள்.''

''அப்படியா, துணியா. தரலாமே. நம்மிடம் இருக்கிறதா.''

''ஆமாம். நம்மிடம் மாற்று உடைக்காக வைக்கப்பட்டு இருக்கிறது.''

''அதைக் கொடுத்து விடுங்கள். ஒரு எட்டு முழ புடவை நூறு கொடுங்கள். அவர்கள் அதை அறுத்து அணிந்து கொள்ளட்டும்.'' ஒரு சிறிய கூட்டம் நடந்து அருகேவர சபை காழகத்தை அவர்கள் கையில் கொடுத்தது. வாழ்க என்று சொன்னது. மொத்த தலை தக்கோலமும் இராஜேந்திரரின் காலில் விழுந்து வணங்கியது.

ஆனால் அங்கிருந்து செய்தி மாடமாலிங்கத்திற்கு போய்விட்டது. மாயிருடி கங்கத்திற்கு போய்விட்டது என்ற உண்மையும் சொன்னார்கள். அப்படி போவதற்காக, எவரேனும் தாக்கினால் செய்தி சொல்வதற்காக அவர்கள் ஆட்கள் அமைத்திருந்தார்களாம். வெகுவிரைவில் ஓடிப்போய் சொல்லி விடுவார்களாம். இப்போது கிளம்பினால் ஒரு தனிமனிதன் அங்கு ஓடிப்போய் சேர இரண்டு நாள் ஆகும். ஒரு படை போக வேண்டும் என்றால் மூன்று நாள் ஆகும்.

மலை இறங்கும்வரை தான் வழுக்கலும், சறுக்கலும். இறங்கிய பிறகு அற்புதமான புல்வெளி, காட்டெருமைகள் கொஞ்சம் கலவரப்படுத்தும். குறுக்கு நெடுக்காக கரடிகள் ஓடும். பாம்புகள் அதிகம் என்று எச்சரிக்கை செய்தார்கள்.

சோழப்படை தலை தக்கோலத்தை வென்று கிளம்பியது. இருபத்தைந்து நாவாய்கள் கடற்கரையில் இருந்தன. அதன் வீரர்கள் தலை தக்கோலத்தை காவல் காத்தார்கள். அவர்களுக்கு நல்ல உணவு கிடைத்தது. பெண்களும் கிடைத்தார்கள்.

இராஜேந்திர சோழரின் படை மலை மீது ஏற, கடலில் பிரிந்த படை இன்னொன்று நாகவெளிக்கு போயிற்று, நாக

வெளியில் ஆழமான நாவாய்கள் தங்கும் இடங்கள் இருந்தன. அவை இயற்கை துறைமுகமாக பயணபட்டன. நாவாயிலிருந்து நூல் ஏணி இறக்கி கரையில் இறங்கிவிடலாம். மிதவை தேவை யில்லை.

நாகவெளியில் புவனராஜன் கீழிறங்கினான். நீலன் வெண் காடன் யானைகளை இறக்கினான்.

அந்த பகுதியும் மலைதான். ஆனால் ஏறமுடியாத மலை அல்ல. ஒரு பெரிய மேட்டில் ஏறுவது போல அகலமான பாதை கள் இருந்தன. ஸ்ரீ விஜயம் போவதற்கு கடாரத்தின் எல்லா பகுதியில் இருந்தும் நாகவெளிக்கு வந்தார்கள். நாகவெளி யிலிருந்து தென் மேற்கே பயணப்பட்டு ஸ்ரீ விஜயத்தை அடைந்தார்கள். ஸ்ரீ விஜயத்தை அடைவதற்காகவே அங்கு பல வசதிகள் செய்யப்பட்டிருந்தன. அந்த பட்டிணம் பலமான தாகவும், செங்கல் வீடுகள் நிறைந்ததாகவும் இருந்தது.

புவனராஜன், இறங்கியதும் அங்குள்ள மக்கள் அந்த இருபத்தைந்தாயிரம் வீரர்களை கண்டு திகைத்தார்கள். என்ன செய்வது என்று தள்ளாடினார்கள். முன்னேறி வந்த வீரர்கள் தெரிஞ்ச கைக்காளப் படையினரிடம் சங்கிலியாலும், இரும்பு தடியாலும் அடிப்பட்டார்கள். அவர்கள் அடிபடுகின்ற வேகத்தை பார்த்து, மற்ற வீரர்கள் வில் வாட்களை கீழே வைத்தார்கள். கையை உயரே தூக்கி நின்றார்கள். அவர்களுக்கும் ஆடைகள் குறைவாகவே இருந்தன. பெண்கள் மணிமாலைகளாலேயே தங்களுடைய இடுப்பையும், மார்பையும் மறைத்திருந்தார்கள். பல குழந்தைகள் அம்மணமாகவே இருந்தார்கள்.

கோட்டை கதவு திறந்தது. உள்ளே வரவேற்கப்பட்டார் கள். கோட்டைக்குள் இருக்கின்ற அத்தனைபேரையும் புவன ராஜன் வெளியேற்றினான்.

நினைத்ததைவிட எளிதாக இருக்கிறதே போர் என்று ஆச்சரியப்பட்டான். வணிகர்களுடன் அமர்ந்து அவர்களிடம் நிறைய கேள்விகள் கேட்டான். ''நாகவெளியிலிருந்து எத்தனை தூரம் கடல் பயணம். எத்தனை வேகத்தில் போக முடியும்.'' கேட்டான்.

''தரை மார்க்கமாக போவதென்றால் மூன்று நாட்கள்

சென்னை அருங்காட்சியகத்தின் செப்பேடுகள் திருவாலங்காடு, திரு இந்தளூர் என்று பலதும் உண்டு. ஆயிரம் வருஷத்துப் பொக்கிஷம் சோழ தேசத்து செப்புப் பட்டயங்கள். படத்தில் நானும் என் உதவியாளர் பாக்யலஷ்மி சேகரும்.

.ஆகும். சுற்றிக் கொண்டு போவதென்றால் இரண்டு நாட்கள் .ஆகும். நல்ல காற்று வீசிடின் ஒன்றரை நாட்கள் ஆகும். முசி நதியில் நுழைந்துவிட்டால் நடுவில் இருக்கின்ற ஸ்ரீ விஜயம் அடைவது எளிது.''

ஆயிரம் பேர் கொண்ட சோழப்படை அரண்மனையில் புகுந்து பூட்டிக் கொண்டது. என்ன தொந்தரவுகள் செய்தாலும் வீடுகள் எரியூட்டப்படும் என்று சொல்லப்பட்டது. வெகு வேக மாக எரியூட்டி சில வீடுகளை அழித்தார்கள். ஜனங்கள் அலறி னார்கள். நாகவெளியை ஒரு படை காக்க, இருபதாயிரம் வீரர்கள் கொண்ட ஒரு படை குன்றின் மீது ஏறி பள்ளத்தாக்கில் இறங்கி ஸ்ரீ விஜயம் நோக்கி போயிற்று. செய்தி வரும் வரை காடுகளில், வயல் பக்கம் இருக்கின்ற கிராமங்களில் தங்கி இருக்க தீர்மானமாயிற்று.

அவ்வப்போது பலத்த மழை பெய்ய சோழ வீரர்கள் அதற்கு ஆயத்தமாக இருந்தார்கள். எந்நேரமும் தோலாடை யோடு இருந்தார்கள். மழை வந்தால் தங்குவதற்கென்று விரை வாக தென்னோலைகளை வேய்ந்து கூடாரம் கட்டிக்கொண் டார்கள். கிராமங்களில் உள்ள குடிசைகளை பயன்படுத்திக் கொண்டார்கள். குதிரைகள்தான் அவஸ்தைப்பட்டன. யானை களுக்கு மிகச் சுவையான தென்னை ஓலைகளும், பசும் புற் களும் கிடைத்தன.

நாகவெளியை ஜெயித்துவிட்டு சோழப்படை ஒரு மலைச் சரிவில் காத்திருந்தது, அவர்கள் வந்துவிட்டார்கள் என்று செய்தி ஸ்ரீ விஜயத்திற்கு ஓடிப்போயிற்று.

எங்கு கால் வைத்தாலும் பதினைந்து அடி கீழே சறுக்கித் தான் விழுந்து நிற்க வேண்டும். அல்லது இன்னும் வேகமாகப் போய் எதிலாவது முட்டிக்கொண்டு கை,கால் முறிய அவஸ்தை பட வேண்டும். ஐம்பதாயிரம் பேர் கொண்ட படை மாடமா லிங்கத்திற்குப் போக வீரர்கள் தட்டுத்தடுமாறி மேலே ஏற சரிவுதான் பிராண அவஸ்தையாக இருந்தது, ஒருவர் மீது ஒருவர் முட்டிக்கொண்டு நிற்க வேண்டியிருந்தது, சரிவில் இறங்கி தூங்கி ஓய்வு எடுத்தது. மழை பெய்து குடிசைகளுக்குள் சாரல் அடித்தாலும் எழுந்திருக்க முடியாமல் தூக்கம் வந்தது.

''ஒரு நாளைக்கு இருபது காதம், முப்பது காதம் நடப்போம், ஐந்து காதம் இறங்குவதற்குள் உயிர் போய் உயிர் வந்து விட்டதய்யா.'' வீரர்கள் அலுத்துக் கொண்டார்கள். ஒற்றையடிப் பாதையில் கிளைகளை பற்றிக் கொண்டும், தடி ஊன்றிக் கொண்டும், ஓரத்தில் அமைத்த வேலிகள் அமைத்துக் கொண்டும் தரை இறங்கினார்கள். சரிவை கண்டதும் குதிரைகள் எகிறி குதித்தன. மலை உச்சிக்குப் போய் திரும்பி மறுபக்க சரிவை பார்த்து அமைதியாக வந்தன. குதிரைகளை அதிகம் விரட்டாமல் நிதானமாகவே கூட்டிக் கொண்டு போனார்கள். அங்கும் மழை அவ்வப்போது பெய்தது. பல ஆறுகள் ஒன்று சேர்ந்து பெரிய நீர்வீழ்ச்சி இருந்தது. அந்த மலையடிவாரத்தில் இருந்த கிராமங்களை சோழப்படையினர் சுற்றிக் கொண்டனர். சின்னஞ்சிறு சண்டைகள் இருந்தன. கத்தி ஏந்தி வந்தவனை கையால் தடுத்து ஒரே குத்தில் அவனுக்கு மரணத்தை சோழ தெரிஞ்ச கைக்கோளப்படை தளபதி நடத்தினான். முதல் பலி அங்கு நடந்தது.

வீரர்கள் மண்டியிட்டு எதிரே புல்வெளியில் இருந்த படை வீரர்களை நோக்கி இடையறாது அம்பு எய்தது. அந்தப் படை சிதறி ஓடியது. குதிரையில் ஏறி அந்தப் படையை துரத்தினார்கள். ஓடுகினற மனிதனின் பின்பக்கத்தில் கத்தியின் பட்டையால் ஓங்கி அடித்தார்கள். துடித்து அவன் விழுந்த போது மறுபடி சுற்றி வந்து அவன் நெஞ்சில் வேல் பாய்ச்சினார்கள். கிராமத்தை பயமுறுத்த அவர்களே வெட்டிக் கொன்ற நாற்பத்தியேழு பேரை கொண்டு வந்து தெருவில் படுக்க வைத்தார்கள். ஊர் அலறியது. குதிரைக்கு முன்னால் வந்து வணங்கியது.

இராஜேந்திர சோழர் தான் அரசன் என்று காட்டாது சாதாரண போர் வீரன் உடையில் குதிரையில் உட்கார்ந்திருந்தார். படைத்தளபதிகளை மன்னர் என்று நினைத்து அந்த கூட்டம் அழுது தொழுதது. இராஜேந்திர சோழரை சுற்றி மெய்க் காவல் படை பலமாக இருந்தது. ஒரு இரவு ஓய்வுக்கு பிறகு மலைச்சரிவின் அடியிலிருந்த கிராமத்திலிருந்து கிளம்பி சற்று வட கிழக்காக சோழர் படை போயிற்று, கண்ணுக்கு எட்டிய வரையில் புல்வெளி. சில இடங்களில் வயல்வெளி. சில இடங்களில் பழந்தோட்டம். சில இடங்களில் தென்னந்தோப்பு. ஒரு

புல்லை புடுங்கி கையில் வைத்தால் முழங்கை உயரம் புல் இருந்தது. கடித்து உறிஞ்சினான். சாறு இருந்தது.

'அருகம்புல் அய்யா. எவ்வளவு உயரம் வளர்ந்திருக்கிறது. நம்மிடம் அருகம்புல் படர்ந்திருக்கும். மிஞ்சினால் நாலு விரல் கடடை உயரம் இருக்கும். முழங்கை உயரத்திற்கு அருகம்புல் படர்ந்திருக்கிறது' என்று ஆச்சரியப்பட்டார்கள்.

வழியில் உள்ள கிராமங்களில் தானியங்களை மிரட்டி வாங்கி வந்தார்கள். தர மறுத்தவர்களை இல்லை என்று பொய் சொன்னவர்களை குனியவைத்து முதுகில் பிரம்பால் விளாறி னார்கள். வீட்டு கதவுகளை குதிரைகட்டி இழுத்து போட்டு உடைத்தார்கள். மண் சுவர்களை உடைத்தார்கள். மிரட்டலான, அலற வைக்கும் செய்கைகளை செய்தார்கள். மரக்குதிர்கள் திறக்கப்பட்டு தரமான நெல் கொண்டு வரப்பட்டன. ஆடும், கோழியுமாய் சமைத்து உண்டார்கள். கிராம மக்களை வெளியே இருக்க வேண்டும் என்று சொல்லி விட்டார்கள். கிராமத்தின் எல்லையில் பிச்சைக்கார கூட்டம் போல ஜனங்கள் அமர்ந்திருக் கும் காட்சி வேதனையாக இருந்தது.

"என்ன தைரியத்தில இவர்கள் எல்லோரும் சோழ தேசத்து வணிகர்களை ஏய்க்கிறார்கள்."

"இல்லை அய்யா. இவர்கள் நல்ல மக்கள். செய்தது மொத்தமும் ஸ்ரீ விஜயத்து புத்த பிட்சுக்கள். இவர்கள் எல்லாம் போன தலைமுறையில்கூட இந்துவாக இருந்தவர்கள். சனாதன தர்மம் கடைபிடித்தவர்கள். புத்தரின் போதனைகள் இப்பொழுது தான் இவர்களை எட்டியிருக்கின்றன. மாயிருடி கங்கத்தின் கட்டுப்பாட்டில்தான் இவையெல்லாம் இருக்கின்றன. மாயிருடி கங்கமும், மாடமாலிங்கமும், வலையூருபந்தும். ஸ்ரீ விஜயத்தை நம்பியிருக்கின்றன. சண்டை போடத் தெரியாத அப்பாவியான விவசாயிகளான இந்த மக்களை மிரட்டி தன் பக்கம் பொரு ளாதார வசதிகளை பெருக்கிக் கொண்டு, கூலி வேலைக்கு இங்கிருந்தே ஆட்களை அழைத்துக் கொண்டு போய் பிறகு விடுவிப்பதுதான் ஸ்ரீ விஜயத்தினரின் வழக்கம். என் தகப்பன் கூட ஸ்ரீ விஜயத்தோடு நல்ல முறையில் வாணிபம் செய்திருக் கிறார். ஸ்ரீ விஜயத்து மக்கள் இனிமையாக வரவேற்பார்கள். நாவாயிலிருந்து இறங்கியதும் அவர்கள் பெண்களை முன்னே

அனுப்பி நடனமாடி, பூக்களை மேலே சொரிந்து, கைகளில் கொடுத்து வரவேற்பார்கள் என்று என் தந்தையார் சொல்வார். பூரணகும்பம் கொடுக்கின்ற வசதி இல்லை. ஆனால் ஒரு மண் சட்டி நிறைய சோறும், மீன் குழம்பும் கொடுப்பார்கள். அதுதான் வரவேற்பு.''

நாகவெளி சிறு குன்றாக இருந்தது. எனவே சோழப் படைகள் வேகமாக முன்னேறின. யானைகள் கீழே இறக்கப்பட்டன. புவனராஜன் யானையில் ஏறிக் கொண்டு நாகவெளி துறை முகத்தை தாக்கினான். தீக்கிரையாக்கினான். இன்னும் உள்ளே நகர்ந்து மரத்தால் செய்யப்பட்டிருந்த மிகப் பெரிய மாளிகையை தீக்கிரையாக்கினான்.

நாகவெளியில் வணிகர்களுக்கு என்று தெருக்கள் இருந்தன. சோழ வணிகர்கள் பல தெருக்களை விலைக்கு வாங்கி தங்களுடைய பாதுகாப்பான வீரவாள் படையோடு தங்கியிருந்தார்கள். தங்கியிருந்த வீரவாள் படையினர் ஆரவாரத்தோடு சேர்ந்து கொண்டார்கள். தாக்க வேண்டிய இடங்களை காட்டி கொடுத்தார்கள்.

கொள்ளையடிப்பது போன்ற ஒரு போர்தான் நடைபெற்றது. அரை நாழிகையில் துவம்சம் செய்யப்பட்டது. அரண்மனையின் வாசலில் கயிறு கட்டி கதவை இழுத்து உடைத்தார்கள். வீடுகளில் நிலைக்கதவுகளை சேதப்படுத்தினார்கள். கூரை போட்ட வீட்டையெல்லாம் தீயிட்டு எரித்தார்கள். கிராமங்களில் உள்ள அத்தனை மக்களையும் குதிரையில் ஏறி துரத்தி அடித்து வெளியேற்றினார்கள். சோழப் படைகள் அந்த நகரத்தை ஆக்ரமித்துக் கொண்டன.

இளநீரில் கள் ஊற்றி குடித்து அமைதியாக தூங்கினர். பலத்த மழை பெய்தது. ஊர்மக்கள் நகரத்திற்கு வெளியே நனைந்தபடி உட்கார்ந்திருந்தார்கள். அங்கங்கே குத்துப்பட்டு இறந்தவர்களையெல்லாம் கொண்டுவந்து நகரத்தின் விளிம்பில் போட்டார்கள். நாற்பத்தியேழு உடல்கள் அந்த மக்களால் எடுத்துக் கொண்டுபோய் புதைக்கப்பட்டன. இந்த நடவடிக்கைகளை சோழ வீரர்கள் கவனமாக பார்த்துக் கொண்டிருந்தார்கள். காட்டுக்குள் ஒரு படை ஒளிந்திருக்கிறது என்றும்

உள்ளே நுழைய கடுமையாக தண்டிக்கப்படுவார்கள் என்றும், பிரம்படிக்கு பயந்து ஒரு இளைஞன் சொன்னான்.

''என்னவிதமான தொந்தரவுகள் வரும்'' மேலும் அடித்து கேட்டார்கள்.

''கண்ணிகள் இருக்கும்,''

''கண்ணிகள் என்றால்''

''நீங்கள் போகின்ற வழியில் குதிரையில் வருவீர்கள் என்று தெரிந்து குழிபறித்து அதன் மீது மூங்கில் போட்டு புற்களை வைத்து விடுவார்கள். தரை போல தெரியும் அந்த இடத்தில் குதிரை போனால் தடுமாறி விழுந்து கால் உடைத்துக் கொள்ளும். கால் உடைந்த குதிரை எதற்கும் உதவாது. அது மட்டுமல்ல.''

''பிறகு''

''மர உருளையில் மூங்கில் கொம்புகள் நட்டு அதை சீவி வைத்திருப்பார்கள். போகிற வழியில் ஒரு கயிறை அறுத்தால் இரண்டு பக்கமும் கயிறில் கட்டி தொங்கவிடப்பட்டிருக்கின்ற அந்த மரம் வேகமாக வந்து ஒரு இருபது பேரை குத்தி தூக்கி எரியும். அடியில் வெட்டப்பட்ட மரம் நீங்கள் கடக்கும்பொழுது கயிறால் இழுக்கப்பட்டு உங்கள் மீது விழும். கிளைகள் உள்ள அந்த மரங்களுக்கு கீழ் இருபது வீரர்கள் மாட்டிக் கொள்வார்கள். இப்படி பல்வேறு உத்திகளில் உங்கள் வழிப் பயணம் தடை செய்யப்படும். பாறைகளை உருட்டி விடுவார்கள். வழிகளை அடைத்துவிடுவார்கள். இருபதடி அகலத்திற்கு மரங்களை வெட்டி வெட்டி கனமான மரங்களை குறுக்கே சாய்த்து மேற்கொண்டு நடக்க முடியாதபடி செய்து விடுவார்கள்'' என்றெல்லாம் சொல்லப்பட்டது.

கண்ணிகளை அகற்றும் முறை தங்களுக்கு தெரியும் என்று வணிகர்களின் வீரவாள் படை சோழர்களுக்கு தைரியம் கொடுத்தது.

தொண்டையில் அம்பு குத்திய வீரன் இறந்து போனான். அவனுக்கு உயர சிதை வைத்து நெஞ்சை அறுத்து, சோழம், சோழம் என்று சொல்லி எரியூட்டினார்கள். அவ்வன் யார் என்று குறித்துக் கொண்டார்கள். அவனுடைய உடை வாளையும்,

கழுத்திலே இருந்த வெள்ளி நகையையும், மோதிரங்களை யும் எடுத்து பத்திரப்படுத்தினார்கள். சோழ தேசத்தில் அவன் ஊருக்கு அனுப்புவதற்கு ஏற்பாடுகள் நடந்தன.

நாகவெளியில் இருந்து மலைச்சரிவில் இறங்கிய அந்தப் படை ஒரு பெரிய கிராமத்தில் குடியமர்ந்தது. அந்த கிராமத்து மக்களும் அடித்து விரட்டப்பட்டு மொத்த கிராமத்தையும் சோழர்கள் தங்குவதற்கு இடமாக கொடுத்தார்கள். காடுகளூடே போய் அமர்ந்து கொண்டார்கள். மூன்று நாளைக்குப் பிறகு பசிக்கிறது சோறு வேண்டும், பால் வேண்டும் என்று கேட் டார்கள். அவர்களுக்கு அவை தாராளமாக வழங்கப்பட்டன.

மரத்தால் செய்த ஆசனங்கள், பொன்னால் ஆன புத்தர் சிலைகள், முத்து மாலைகள், சங்கு வளையல்கள் என்பவை தவிர, அங்கு கொள்ளையடிப்பதற்கு எதுவும் இல்லை, தேன் ஜாடிகள் கயிறால் சுற்றப்பட்டு மரக்கலன்களுக்கு அனுப்பப் பட்டன. பத்திரப்படுத்தப்பட்டன. கடும் ஜலதோஷம், தலை வலிக்கு உண்டான தைலங்களும், வயிற்றுப்போக்கை சரி யாக்குகின்ற குளிகைகளும் சோழர் மரக்கலன்களுக்கு அனுப் பப்பட்டன. ஸ்ரீ விஜயம் போவதற்கு உத்தரவு வர வேண்டும் என்று அவர்கள் காத்திருந்தார்கள்.

“ஒரு வேளை ஸ்ரீ விஜயம் நம்மை நோக்கி வந்தால்.”

அதே கண்ணிகள் ஸ்ரீ விஜயத்திற்கு எதிராக பயன்படும். காடுகளின் ஊடே போய் அந்த ஊர் மக்களின் துணையோடு ஸ்ரீவிஜயம் வருகின்ற படை நோக்கி அனுப்புகின்ற மர கண்ணி களாக, கூர்மையான மூங்கில் கூடுகளாக செய்யப்பட்டன. ஒரே வெட்டில் அவை எப்படி வேகமாகப் போய் எதிரே தாக்கு மென்று நிகழ்த்தி காட்டப்பட்டது. மரக்கிளையில் மறைந் திருக்க வேண்டுமென்று சொல்லப்பட்டது. அதே போல பெரிய குழி நோண்டி அதன் மீது மூங்கில் குச்சிகளை வைத்து மேலே மண்போட்டு, புல்போட்டு பாதை செய்தார்கள். உற்று கவனித்த ாலொழிய அவை தெரியாது.

ஆனால் நமது குதிரைகள் போக வேண்டுமே என்ன செய்வது, நகரத்தின் ஓரம் பெரும் பலகைகள் இருந்தன. அரண் மனை சுவற்றிலிருந்து பிடுங்கப்பட்டன. அந்த பலகைகளை உடனடியாக குறுக்கே போடுவதற்காக சேமித்து வைத்தார்கள்.

எதிரிகள் நுழைந்தால் பள்ளம். நாம் தாண்ட வேண்டுமென்றால் பலகை. சோழர்கள் தெளிவாக இருந்தார்கள்.

மாடமா லிங்கம் காத்திருந்தது. மாடமா லிங்கத்தை சுற்றி சூழ சோழ வீரர்கள் புரவிகளிலும், குள்ளமான குதிரைகளோடும், கோவேறு கழுதைகளோடும் காத்திருந்தார்கள். சரிவில் இறங்கிய பிறகு வயல்வெளிகளும், புல்வெளிகளும் தாண்டி போவது சந்தோஷமாக இருந்தது. விதம் விதமான இறைச்சி உணவுகளை கிராமங்களிலிருந்து அடித்து பெறப்பட்டன. எதிர்த்தவர் குத்தி கொல்லப்பட்டார்கள். கிராமங்கள் அடித்து விரட்டப்பட்டன. எல்லோர் வீட்டிலும் விஷம் தோய்த்த அம்புகள் இருப்பதை சோழ வீரர்கள் குறித்துக் கொண்டார்கள்.

இராஜேந்திர சோழர் எந்த அலங்காரமும் இல்லாது சாதாரண படை வீரர் போலவே குதிரையில் பயணித்தார். அவருடைய குதிரை துள்ளலுடன் நடந்தது. முன்னே ஆயிரம் வீரர்கள் போக, பிறகு மெய்க்காவல்படை வர, நடுவே இராஜேந்திரசோழர் கும்பலோடு கும்பலாக மாடமா லிங்கம் நோக்கி முன்னேறினார்.

ஏன் சூர்யவர்மனிடமிருந்து செய்தி வரவில்லை, ஏன் காம்போஜத்திலிருந்து ஓலை எதுவும் காணோம், ஒருவேளை ஒத்துழைக்கவில்லையா. முடியாது என்று மறுத்து விட்டானா. மறுபடி அங்கு ஒரு யுத்தம் நடத்த வேண்டியிருக்குமா. அல்லது அவனே முன்வந்து மாடமா லிங்கத்தை கைப்பற்றிக் கொண்டு நம்மை தாக்குவானா என்றெல்லாம் சிந்தனைகள் எழுந்தன. அரைநாள் தாமதத்தில் காம்போஜம் காட்டுக் கரையோரம் வணிகரின் கலன்கள் ஒதுங்கி எரி அம்புகள் தலைச்சுமையாக கொண்டுவரப்பட்டன. அங்கும் பலமாக மழை இருந்தது. பாக்கு மட்டைகள் சுற்றப்பட்டு நீரிலிருந்து காப்பாற்றப்பட்டு எரி அம்புகள் இராஜேந்திரரிடம் வந்து சேர்ந்தன. கூர்மையான ஒரு அம்பு, சற்று நீளமான பின்புறம், நடுவே ஒரு குழி, இன்னும் இரும்பு நீண்டு இரண்டு துளைகளோடு இருந்தன. அந்த துளைகள் பிரம்பின் நுனியில் அடிக்கப்பட்டு இருந்தன. விரல் நக நீளம் உள்ள அந்த துளையில் மஞ்சள் மருந்து அழுத்தப்பட்டு இருந்தது. அது எப்படி வேலை செய்கிறது என்பதை இராஜேந்திரர் பார்த்தார். அதன் மீது கங்கு வைக்கப்பட்டதும் அந்த

மஞ்சள் பொடி எரிந்தது. மிக வேகமாக சீறிற்று. விலகி பிடித்த வண்ணம் அதை பார்த்திருந்தார். முப்பது விநாடி மஞ்சள், சிகப்பு, நீலமுமாக தொட்டால் கை கொப்பளமாகி விடும் சூடாக அந்த எரி அம்பு இருந்தது.

''இது அங்கு போய் விழுந்து என்ன செய்யும். ஒரு ஆளை குத்தி கொல்வதற்கு இந்த மருந்து எதற்கு தேவை,''

''இல்லையய்யா. இது பாய்மரத்தில் விழுவதற்கு.''

''இங்கு எதிரே எங்கே பாய்மரம் இருக்கிறது. மண் கோட்டையல்லவா வைத்திருக்கிறான். பெரிய கதவுகள் இருக்கின்றன. அங்கங்கே மரங்கள் இருக்கின்றன. அந்த மதில் சுவர் மாடங்களிலிருந்து ஈட்டியோடும், அம்புகளோடும் காத்திருக்கிறார்கள். அவர்களை இது எப்படி கலவரப்படுத்தும், துணி சுற்றுங்கள். கிராமங்களுக்கு போய் எல்லார் வீட்டிலும் உருவி வாருங்கள்'' என்று இராஜேந்திரர் கட்டளையிட்டார்.

துணி சுற்றப்பட்டது. அதில் எண்ணெய் ஊற்றப்பட்டது. கற்பூர தைலம் வைக்கப்பட்டது. இப்பொழுது அம்பின் நுனியில் உள்ள மருந்தில் கங்கு வைக்கவும் ஒருவன் தயாரானான். ஒரு வீரன் அதை வளைத்து பிடித்தான்.

''முன்னே கனம் அதிகம். அம்பு தொலைவே போக வேண்டுமென்றால் காது வரை நாண் இழுத்து விடு. லேசாக விடாதே. இழுத்து பலம் கொண்ட மட்டும் செய்'' என்று சொல்ல, அவன் வளைத்து இழுத்தான். கங்கு வைக்கப்பட்டது. நெருப்பு சீறிற்று. உடனே விடுவித்தான். நெருப்பு துணியில் பற்றிக் கொண்டது. கற்பூர தைலம் உதவி செய்தது, அது வெகுவேகமாகப் போய் அந்த மதில் சுவரை தாக்கியது.

இராஜேந்திரர் வாய்விட்டு சிரித்தார். தளபதிகள் புரிந்து கொண்டார்கள், ''அற்புதமான யோசனை'' என்றார்கள்.

நூறு எரி அம்புகளுக்கு துணி சுற்றி தைலம் தோய்த்து பிறகு கற்பூர தைலமும் வைக்கப்பட்டது. வீரர்கள் முன்னேறினார்கள். அங்கிருந்து அம்பு மழை பொழிந்தது. கேடயத்தால் ஒரு வீரன் தடுக்க. வில் வீரன் மண்டியிட அவர்கள் அம்பு தடுக்கப்பட்டது. இங்கிருந்து எரி அம்புகள் குபீரென்று அங்கு போய் விழுந்தன. அங்கு போய் விழுந்து சிதறின. நெருப்பு

ங்கு எல்லா பக்கமும் பரவ அங்கு கலவரம் ஏற்படுவது இங்கிருந்தே காண முடிந்தது,

"ஆனால் இதுவும் வேலைக்கு ஆகாது. தோழர்களே, அம்புகளை தடுத்தவாறு, ஈட்டிகளை தடுத்தவாறு முன்னேறி மதில் சுவர் வழியாக ஏணி போட்டு ஏறி வாசற் கதவை உடைத்து போக வேண்டும். தயாராக இருங்கள்."

அவர் குதிரையிலிருந்து யானையின் காலில் கால் ஊன்றி காது பிடித்து ஏறி அமர்ந்தார். உள்ளுக்குள் அம்பாரியில் ஏறி உட்கார்ந்தார். அவருக்கு எரி அம்புகள் கொடுக்கப்பட்டன. குத்து வாட்கள் அந்த அம்பாரியில் சொருகப்பட்டிருந்தன. இரும்பு சக்கரங்கள் கூர்மையாய் பல் முனையுடையது வைக்கப் பட்டிருந்தன. அவர் உற்று கவனித்தார். பிற்பகல் நேரம் உணவு உண்டு முடித்திருப்பார்கள் என்பது போல தெரிந்தது. கையை மதில் சுவர் வழியாக கழுவிக் கொண்டிருப்பது தெரிந்தது,

"இன்னும் கால், அரைக்கால் நாழிகை பார்ப்போம். உண்ட களைப்பு தொண்டனுக்கும் உண்டு. அவர்கள் சோர்ந்திருப் பார்கள். நடை பயில்வது நின்றிருக்கும். நம்மை யாரோ சிலபேர் தான் என்றிருக்கும்" என்று சொல்ல,

சோழப்படை குதிரையை விட்டு இறங்கி நீரும், பானகமும், அரிசிக்கஞ்சியும் குடித்தன. அரைவயிறு நிரம்பிய நிலையில் நின்றன. எதிரே பிற்பகல் நேர ஆரவாரம் அடங்கியபோது, யானையை செலுத்தியவாறு வேகமாக கோட்டையை நோக்கி முன்னேறினார். யானைப் பாகன் கையிலே கேடயத்தோடு அம்புகளை தடுத்தவாறு யானையை விரட்டினான்.

வீரர்கள் குதிரையைவிட்டு இறங்கி கோட்டையை நோக்கி ஓடினார்கள். ஏணிகளை சாத்தினார்கள். மேலிருந்து விழும் அம்புகளை தடுத்து நிறுத்தினார்கள். ஆனாலும் ஏணியில் ஏறிய முதல் வீரன் குத்துபட்டு கீழே விழுவது தெரிந்தது. அம்புகள் பலரை துளைத்தன. வீரர்கள் கீழே விழுந்தார்கள். புரவிகள் அலைந்தன. ஆனால் பெரும்பான்மையான வீரர்கள் மதில்சுவர் உச்சியில் ஏறி உடும்பை வீசி போட்டார்கள். கயிறு பிடித்து ஏறினார்கள். சட்டென்று உள்ளே குதித்தார்கள்.

இராஜேந்திர சோழர் மிக வேகமாக யானையை நடத்திக் கொண்டுபோய் கதவை முட்டினார். ஆறு முட்டுகளில் கதவு பெயர்ந்தது, உள்ளே பெரும் கூட்டம் காத்திருந்தது, இராஜேந் திர சோழர் குத்துவாட்களை சரசரவென்று வீசினார். பின்னால் வருகின்ற யானையிலிருந்து அம்புகள் அடிக்கப்பட்டன. கூட்டம் சிதறி ஓடியது. தீப்பந்தத்தில் மருந்து வைத்து நாலா புறமும் வீசப்பட்டது.

தீப்பந்தமாக கட்டைகள் வந்து விழ, அங்குள்ள குதிரை கள் மிரண்டன. பெரும் குழப்பத்தை ஏற்படுத்தின. கோட் டையின் உயரத்திலிருந்து தாக்குதல் நடந்தது. உள்ளுக்குள் ஓடிப்போய் எதிர்பட்டவரை வெட்டி கொன்று மாடிகளுக்கு சோழவீரர்கள் ஓடினார்கள். அங்கு நின்றவர்களை அப்படியே பிடித்து தள்ளி விட்டார்கள். நெட்டு குத்தலாய் விழுந்து அடிபட்டு மாடமாலிங்க வீரர்கள் இறந்து போனார்கள்.

முக்கால் நாழிகை உக்கிரமான போர் நடந்தது. அறுப துக்கும் மேற்பட்ட சோழவீரர்கள் பலியானார்கள். முன்னூறுக் கும் மேற்பட்டவர்கள் படுகாயம் அடைந்தார்கள்.

மாடமா லிங்கத்திலிருந்து கடற்கரை ஓரமாக மாயிருடி கங்கம் நோக்கி எதிரிகளின் ஒரு படை தப்பித்து போயிற்று. மாடமா லிங்கம் பிடிபட்டது. கோட்டை வாசலில் புலிக்கொடி ஏற்றப்பட்டது. அரண்மனை வாசலில் புலிச் சின்னம் பதிக்கப் பட்டது.

வீடு வீடாக சூறையாடினார்கள். வயதானவர்களை கன்னத்தில் அடித்தார்கள். பெண்கள் தலைமுடியை பிடித்து இழுத்து வந்து நடுத்தெருவில் நிறுத்தினார்கள். எந்த வீட்டி லும் யாரும் பதுங்கியிருக்கா வண்ணம் சோதனை செய்யப் பட்டது, சோழ வீரர்கள் பல பேர் இறந்துபோனது சோழ வீரர் களுக்கு ஆத்திரம் கொடுத்தது. தொடர்ந்து மாயிருடி கங்கம் போகலாம். அவர்கள் போன வழியே போகலாம் என்று துடித் தார்கள்.

மண்ணால் ஆன அழகிய வீடுகள் கொண்ட அந்த மாடமா லிங்கத்தை தீயிட்டார்கள். நாசமாக்கினார்கள். புத்தர் சிலை களையும், தங்க நாணயங்களையும், நகைகளையும், அரச

மகளிருடைய ஆபரணங்களையும், நிறைய துணிகளையும் கொள்ளையடித்தார்கள். குட்டி குதிரைகளிலும், கோவேறு கழுதைகளிலும் அவை கட்டி ஏற்றப்பட்டன. சோழப்படை ஒரு இரவு தங்கி மறுநாள் விடியலில் மாயிருடிகங்கம் நோக்கி திரும்பியது.

மாயிருடி கங்கத்தின் அரசன் ஜெயசிம்மன் திகைத்துப் போனான். பத்து வீரர்களோடு மாட மாளிகை நகரம் என்று அழைக்கப்படுகின்ற மாடமாலிங்கத்திலிருந்து அந்த அரசன் வஜ்ரபாலன் மாயிருடி கங்கம் நோக்கி விடியற்காலை வந்ததும் தரையில் விழுந்து அழுது புலம்பியதும் அவனுக்கு அதிர்ச்சியாக இருந்தன. தலை தக்கோலத்தை ஜெயித்து விட்டார்கள் என்பது ஒரு செய்தியே அல்ல. கடாரம் என்ற இந்த தீபகற்பத்தில் தலை தக்கோலம் ஒரு வணிகர் கூடம். வணிகர்களுக்கு வசதி செய்து தரும் இடம். அங்கே நல்ல குடிநீரும், பழ வகைகளும், ஆடுகளும், அரிசி சோறும், பறவை இனங்களும் உண்ண கிடைக்கும் என்பதால் அங்கு இரண்டு நாள் தங்கி ஏழு நாள் எட்டு நாள் நெடிய பயணத்தை சோழ வணிகர்கள் அங்கே தீர்த்துக் கொள்வார்கள். அங்கிருந்து நாகவெளியும், நாகவெளியிலிருந்து ஸ்ரீவிஜயமும் போவார்கள்.

மாடமாலிங்கம் என்கிற ஸ்ரீதர்மலிங்கத்திற்கு அவர்கள் எப்போதேனும் வருவார்கள். அதுவும் கடல் வழியாகத்தான் வருவார்கள். பழக்கப்பட்டவர்களுக்குக்கூட வழி தடுமாறுகின்ற அந்த கானகத்தின் ஊடே இராஜேந்திரசோழர் வந்திருக்கிறார் என்றால் அது எப்பேர்பட்ட சாமர்த்தியம். சோழனுக்கு எப்படி தெரிந்தது. அந்த சரிவில் அவன் குதிரைகள் எப்படி இறங்க முடிந்தது, இருபத்தைந்தாயிரம் வீரர்கள் ஒன்று சேர ஒரு சேதமும் இல்லாமல் மலை இறங்கி ஆற்றோரம் நடந்து மாயிருடி கங்கம் நோக்கிக் கூட வராமல் இன்னும் மேலே மாடமாலிங்கத்தை எப்படி தாக்க முடிந்தது.

ஆனால் வஜ்ரபாலன் கோழை, காம்போஜத்தின் சூர்யவர்மன், புத்திவர்மனுக்கே பயந்து தொலைகிறவன். புத்திவர்மனை மாடமாலிங்கத்திற்கு அரசனாக்குகிறேன் என்று சூரியவர்மன் சபதம் செய்ததும், வடக்கிலிருந்து தான் தனக்கு எதிர்ப்பு வரும் என்று பூஜைகள் செய்து கொண்டிருந்தவன்

கிழக்கிலிருந்து காடுகளூடே சோழப்படை வந்து தாக்கும் என்பதை கனவிலும் நினைக்கவில்லை. படையெடுப்பு பற்றிய செய்தி கசிந்ததும் அது அவனுக்கும் போயிற்று. ஆனால் வஜ்ர பாலன் தன்னுடைய மூங்கில் கோட்டையை அரணை கடற் கரையோரம் நிறுவிக் கொண்டான், கிழக்கு கடற்கரையோரம் உள்ளே குதிரைகள் புகாவண்ணம், யானைகள் வராவண்ணம் மூங்கில்களை கூராக்கி நட்டு தடைகளை ஏற்படுத்தி இருந் தால், இப்பொழுது அதற்கெல்லாம் அர்த்தம் இல்லாமல் போயிற்று, வடக்கிலிருந்து காம்போஜத்தின் மன்னன் சூர்ய வர்மன் தாக்கக்கூடும் என்று அந்த பக்கம் காவல் நிறுத்தி இருந் தான். கிழக்கே அரண்கள், வடக்கே காவலாட்கள் ஆனால் மேற்கிலிருந்து தாக்குதல் வந்துவிட்டது. அடித்து அரைநாளில் நொறுக்கி விட்டார்கள். நகரம் சேதமாவதைப் பார்த்து நின்றால் கொன்று விடுவார்கள் என்று பயந்து இங்கு வந்து சரணடைந்து விட்டான்.

''ஜெயசிம்மரே, நமக்கு நம் சக்கரவர்த்தி சங்கரராம விஜயோத்துங்கன் மீது கோபம் இருந்தது. எங்கேயோ ஸ்ரீ விஜ யத்தில் ஒரு தீவில் அமர்ந்து கொண்டு அந்த இடம் வரைக்கும் ஆட்சி செய்கிறாரே, காம்போஜம் வரைக்கும் வந்துவிட்டாரே, காம்போஜத்தில் சூர்யவர்மனால் தடுக்கப்பட்டாரே, நடுவே இருந்த இலங்காசோகம், மாயிருடிகங்கம், மாடமாலிங்கம், நாகவெளி, தலைதக்கோலம் எல்லாவற்றையும் தன்னுடைய கட்டுப்பாட்டுக்கு கொண்டுவந்து விட்டாரே இது தவறு என்று தோன்றியது. ஆனால் சாமர்த்தியமாக பேசி நம்முடைய தற்காப் புக்காக ஒன்று செய்கிறோம். உன்னுடைய அரசு, அரசு விவ காரங்களில் நான் தலையிடவில்லை. எனக்கு வேண்டிய வற்றை நீ கப்பம் கட்டு. எனக்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்று ஒப்பந்தம் செய்து கொண்டார். மிகச் சிறந்த படை வீரரான அவருக்கு துணை இருப்பது நல்லதுதானே என்று நான் நினைத்திருந்தேன்.

ஒரு கூப்பிட்ட குரலுக்கு சூர்யவர்மனை எதிர்ப்பதற்காக எனக்கு படை அனுப்புவார், உன்னை துணை அனுப்புவார் என்று நினைத்திருந்தேன். அதற்காகவே ஸ்ரீசங்கரராம விஜயோத் துங்கரை நான் ஆதரித்தேன், நாம் எல்லோரும் ஒரேவிதமான

மக்கள். சிறிய உருவமும், சிறிய கண்களும், மெல்லிய உதடும், மஞ்சள் நிறமும் கொண்ட ஒரே நிற மக்கள். சீனத்திலிருந்த பிரிந்த பழங்குடிகள்.

தொலைதூரம் கடல் கடந்து பரத கண்டத்தின் எந்த மன்னன் வருவான் அதுவும் சோழன் எப்படி வருவான். பாண்டியர் சில பேர் வந்து போயிருக்கிறார்கள். கருத்த உடம்பும், முரட்டு உடலும், எண்ணெய் காணாது பழுப்பேறிய தலை முடியும், முறுக்கிய மீசையுமாய் அவர்கள் வந்து இறங்கி இங்கு உள்ள பெண்டுகளை ஆண்டுவிட்டு போவார்கள். ஆனால் இந்த சோழ வீரர்கள் வேறுவிதமாக இருக்கிறார்கள் ஜெய சிம்மரே. நல்ல உயரம், மெல்லிய உடல்வாகு. பிசாசாய் ஓடு கிறார்கள். ஒரு எல்லையிலிருந்து காத்திருந்து மிக வேகமாக கோட்டை சுவரில் ஏணி வைத்து ஏறுகிறார்கள். அடுத்து தாக்கு கிறார்கள். தீப்பந்துகளை வீசுகிறார்கள். சூர்யவர்மனிடமிருந்து வாங்கிவந்த எரி அம்புகளை அடித்து கலவரப்படுத்தினார்கள். இப்பொழுது உங்களை நோக்கி வந்திருக்கிறார்கள்.

இந்த இடம் அந்த சோழப்படையை நிச்சயம் தாக்கு பிடிக் காது. மிக முரட்டு, மிக குரூரமான படை அது. இடுப்புத் துணி அவிழ்ந்தால் நிறுத்த வேண்டும் என்பது நம்முடைய கொள்கை யல்லவா. இல்லை, எது அவிழ்ந்தால் என்ன என்று அடிக்கத் துவங்குகிறார்கள். பேயடி, நாயடி, பெண்களையும் துன்புறுத்து கிறார்கள். கிழவர்களை கொல்கிறார்கள். காட்டுமிராண்டிகள் போல இந்த சோழ வீரர்கள் எனக்கு காட்சியளிக்கிறார்கள். நம் முடைய மெல்லிய நடனம், அடிக்குரல் பாட்டு, முணுமுணுப் பான மொழி, சித்திரம் வரைவதில் ஆர்வம் அவர்களுக்கு இல்லை. அவர்கள் கட்டுக் கோப்பான படையினர். மிகப்பெரிய தந்திரசாலிகள்.

சோழர்கள் அந்த இடத்தை விட்டு அகன்றதும் வெகு நிச்சயமாய் சூர்யவர்மன் அங்கு வந்து தங்கிக் கொள்வான்.

இன்னொரு செய்தியும் வந்தது. தலைத்தக்கோலத்தி லிருந்து நாகவெளி நோக்கி இன்னும் இருபத்தைந்தாயிரம் பேர் கொண்ட படை வந்து இறங்கியிருக்கிறது என்று கேள்விப் படுகிறேன். இருபத்தைந்தோ, முப்பதோ, ஐம்பதோ தெரிய வில்லை. ஆனால் மிகப்பெரிய மரக்கலன்களோடு கூடிய

படைகள் குதிரைகளோடும், யானைகளோடும் தரை இறங்கி ஸ்ரீ விஜயம் தாக்கத் தயாராக இருக்கின்றன என்று சோழ வணி கர்கள் சொன்னார்கள். சோழ வணிகர்களை தூதுவர்கள் போல அவர் அனுப்பியிருக்கிறார், தெற்கிலிருந்து தாக்குதல் வரும், சாவகத்தீவு படைகள் வரும் கிழக்கிலிருந்து தாக்குதல் வரும் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். மேற்கே கவனிக்கவே இல்லை. வாசல் திறந்துவிட்டது போல, கொல்லைப்புறத்தில் நுழைந்தது போல அவன் உள்ளே நுழைந்துவிட்டான்.''

ஜெய சிம்மன் சகலமும் கேட்டுக் கொண்டு போருக்கு தயாராக இருந்தபோது மாயிருடி கங்கம் என்ற ஜெயசிம்மனின் தேசம் சோழ வீரர்களால் உருக்குலைந்தது.

மாயிருடி கங்கத்திற்கும் பிறகு இலங்காசோகம், இலங்கா சோகத்திலிருந்து வலைப்பந்தூர், வலைப்பந்தூரிலிருந்து துமசித் தீவு, கடாரத்தின் எல்லை அதோடு முடிகிறது, துமசித் தீவிலிருந்து வெகு விரைவாக அவன் ஸ்ரீ விஜயம் நோக்கி போய்விடுவான். துமசித்தீவிலிருந்து நாவாய்கள் சம்பாதித்துக் கொள்வான்.

நாம் என்ன செய்யமுடியும். சங்கரராம விஜயோத்துங்கர் கடாரத் தலைவர் என்று பெயர் பெற்றவர். ஆனால் கடாரத்தை அம்போ என்று விட்டு விட்டு ஸ்ரீ விஜயத்தில் போய் உட் கார்ந்து கொண்டார். மிகுந்த பாதுகாப்பாக அந்த தீவின் நடு பகுதியில், ஒரு ஆற்றங்கரையில் பெரிய கற்கோட்டையை அமைத்துக் கொண்டு பத்திரமாக இருந்துவிட்டார். காரணம் கேட்டதற்கு ஒரு தேசத்தின் அரசன் அந்த தேசத்தின் மத்தியில் இருப்பது நல்லது. நீங்களெல்லாம் எனக்கு துணையிருக்கும் பொழுது கடாரத்தை உங்கள் கையில் வைத்துவிட்டு எனக்கு எதிர்ப்பாக இருக்கின்ற சாவகத்தீவை எதிர்கொள்ளும் வண்ணம் அந்த வழியாக வருகின்ற வணிக கலன்களை நோட்டமிடும் வண்ணம் நான் நடுவே தங்கியிருக்கிறேன் என்று பதில் சொன்னார். அந்த நேரம் அந்த பதில் சரியாக இருந்தது.

நூற்றுக்கும் மேற்பட்ட மரக்கலன்களை அவர் கொண்டிருப் பதால் அவருக்கும், நமக்கும் தொடர்புகள் தினந்தோறும் இடை யறாது நடந்து கொண்டிருந்தன. கிழக்குப்பக்கம் வழியாக வராமல் துமிசித்தீவிலிருந்து, வலைப்பந்தூரிலிருந்தும், இலங்கா

சோகமும், மாயிருடி கங்கமும் அவர் பயணம் செய்து குசலம் விசாரிப்பார். இப்பொழுது இப்படி ஒரு அடி விழுந்திருக்கும் என்று அவருக்கு தெரிந்திருக்குமா. மிகப்பெரிய ராஜதந்திரி என்று சொல்லியிருக்கிறாரே அது அவருக்கு உகந்ததுதானா. அடிபட்டு நகரம் சீரழியும் வண்ணம் செய்துவிட்டாரே, என்ன செய்வது.'' அவன் அழுதான்.

இராஜேந்திரர் தன் படையோடு உள்ளே நுழைந்தார். மாயிருடி கங்கமும் தவிடு பொடியாயிற்று, குதிரைகளை சம்பாதித்துக் கொண்டார்கள். ஒரு கோவேறு கழுதைகூட இல்லாது எல்லாவற்றையும் பறித்துக் கொண்டார்கள். ஊர் விட்டு எங்காவது போக வேண்டும் என்றால் மரக்கலன்கள் ஊடுதான் போக வேண்டும். காம்போஜம் போய் தான் குதிரை கள் வாங்க வேண்டும். ஆனால் தங்கம் கொள்ளையடிக்கப் பட்டு விட்டது. பொக்கிஷங்கள் பறிக்கப்பட்டு விட்டன.

★ ★ ★

அத்யாயம் 105

நுங்கும், நுரையுமாக மூசி நதி ஓடிக்கொண்டிருந்தது. மலையில் உள்ள வண்டல் மண்களை மூலிகை சாறோடும், புற்களோடும், மரக்கிளைகளோடும் இழுத்து வந்து ஸ்ரீ விஜயத்தின் வயல்வெளிகளை செழிப்பாக்கிக் கொண்டிருந்தது. பழ மரங்களை பலப்படுத்திக் கொண்டிருந்தது. அந்த நதியிலிருந்து பல கிளைகள் பிரிந்து வயல்களூடேயும், கானகத்தூடேயும் ஸ்ரீ விஜயம் என்கிற அந்த கோட்டையை சுற்றியும் சலசலத்து ஓடிக் கொண்டிருந்தது, நடுநடுவே மதகுகள் கட்டி, அடைத்தும், திறந்தும் நீரை அந்த தேசத்து விவசாயிகள் நன்கு பயன்படுத்திக் கொண்டிருந்தார்கள். நதியிலிருந்து திரும்பி கால்வாய்க்கு, கால்வாயிலிருந்து திரும்பி வயல்களுக்கு ஊடே போகும்போது அந்த நதி ஓரம் மீன்களும் போயின. நதியின் வேகத்திற்கு ஈடுகொடுத்த மீன்கள் சிறு கால்வாய்களில் தேங்கி நின்றன. மிகப்பெரிய நாரைகள், குளிர் மிகுந்த வனப்பக்கத்திலிருந்து திரும்பி இந்த வயல்வெளிகளிலிருந்து கரையோரம் துடிக்கின்ற கொழுத்த மீன்களை குத்தி தின்றன. அடர்ந்த கானகத்திற்கு எடுத்துப் போயின. அங்கு கூடுகட்டி முட்டையிட்டு, குஞ்சுகள் பொறித்து அவைகளுக்கு வாயில் மென்று மசித்து ஊட்டின. காடு முழுவதும் இடையறாது பறவை சத்தங்கள் கேட்டுக் கொண்டிருந்தன.

தண்ணீருக்கு பஞ்சமே இல்லை. வறண்ட இடம் என்ற கையகல இடம் கூட இல்லை. தென்கிழக்கு பருவ மழை கேரளத்து கடற்கரையை தாக்கி குமரிமுனை வழியாக வேகமாக முன்னேறி கடலிலிருந்து, நீராவியாய் பொங்கி எழும் மேகங்களை அணைத்துக் கொண்டு வெய்யில்பட்ட ஸ்ரீ விஜயத்தை தாண்டும்போது, கடாரத்தை கடக்கும்போது மழையாக பொழிந்து நனைத்தது. மழை நேரம் என்று இல்லவே. இல்லை.

மழைக்காலம் என்று ஒன்று கிடையவே கிடையாது. அடிக்கடி மழை பெய்யும். அநேகமாய் மாலைகளில் தான் மழை பெய்யும். காலை மேகம் இல்லாது வானம் நிர்மலமாய் இருக்கும்.

விடியலில் எழுந்த மக்கள் துணிகளை தோய்த்து உலர்த்தி, வயல் வேலைகளில் வேகமாக ஈடுபடுவார்கள். பிற்பகல் நேரத்தில் சோறு உண்ண வயல்வெளிகளில் நிற்காமல் வீடுகளுக்கு வந்துவிடுவார்கள். வீடுகளில் தஞ்சம் புகுந்து உணவு உண்டு வெளியே எட்டி பார்க்க மேகம் கருத்திருக்கும். அந்தி சாயும் நேரத்தில் அடித்து பெய்யும். அநேகமாக ஒவ்வொரு நாளும் இது நடக்கும். நான்கு நாட்கள் சேர்ந்து மழை இல்லையென்றால் ஸ்ரீ விஜயத்து மக்கள் நடுங்கி விடுவார்கள். தவித்துப் போவார்கள். புத்தம் சரணம் கச்சாமி என்று கோவிலுக்கு போய் வாசனை புகை போட்டு மழை வேண்டுமய்யா என்று கெஞ்சுவார்கள். எப்பொழுதும் மழை மிகுந்த தேசம் என்பதால் பேச்சில் ஒரு கொணகொணப்பு அதிகம் இருந்தது. 'வொய்ங் வொய்ங்' என்ற சத்தம் அதிகம் இருந்தது. தமிழில் உள்ள கனமான வார்த்தைகள் அவர்களுக்கு ஆச்சரியத்தை கொடுத்தது. தகரமும், ககரமும் ழகரமும் அவர்களுக்கு வியப்படையச் செய்தன.

பேசுவது உன் காதுக்கு கேட்க வேண்டும். ஏன் அடிக்குரலிலிருந்து கத்துகிறாய் என்று சோழ வணிகர்களை அந்த தேசத்து வணிகர்கள் கேலி செய்வது வழக்கம். சோழ வணிகர்கள் போல பேசி நடிப்பதில் பெரும் சிரிப்பு. அவர்கள் அனைவரும் அனேகமாக குழந்தையிலிருந்து வயதானவர்வரை எல்லா பெண்டிரும் ஓலை தொப்பிகளை அணிவார்கள். தலை முடியை ஒட்ட வெட்டிக் கொள்வார்கள். பெண்களும் நீண்ட கேசம் வளர்க்காமல் குறுகலாய் குதிரை வாலாய் வைத்திருப்பார்கள். அடிக்கடி ஈரமாகிவிடும் என்பதால் மார்பில் ஒரு துண்டு, இடுப்பில் ஒரு துண்டு என்பதுதான் பெண்களின் உடை, முழங்காலுக்கு சற்று கீழே ஒரு உடை தொங்கும். புரளுகின்ற உடை ஸ்ரீ விஜயத்தில் ஆகாது. சேறாகிவிடும். அட்டை கருப்பு என்பது இல்லை. வெளுப்பும் கிடையாது. ஒரு அழகிய மஞ்சள் நிறம் அவர்களி[illegible] இருந்தது. நீரை எடுத்து உடம்பை துடைத்துக் கொ[illegible]ாலும், அந்த நீரினால் உடம்பு உலர்ந்து போகாமல் இரு[illegible]ணய்கள் பூசிக்

கொள்வதால் அவர்கள் பளபளப்பாக இருந்தார்கள். சீனத்து வம்சாவளி என்பதால் சிறிய உருவம். விரைவு நடை, ஒரு பயந்த பறவை போல நாலாபக்கமும் சரக் சரக்கென்று பார்ப்பது அவர்கள் இயல்பாக இருந்தன. நரம்பு வாத்தியமான யாழ் பிரபலம். நிதானமான நடனம் அழகு.

பல்வேறு தேசங்களுக்கு ஸ்ரீ விஜயத்து மன்னர் படையெடுத்து ஜெயித்ததால் பொன் பொருளுக்கு கவலையே இல்லை, அற்புதமான தேக்கு மரங்கள் இருந்ததால் அறுத்து, பிளந்து பலகையாக்கி, இழைத்து எல்லார் வீட்டிலும் மர ஆசனங்கள்தான் இருக்கும். தரையில் உட்கார்ந்து சாப்பிடுவதோ, தரையில் படுப்பதோ இயலாது. பூமி குளுமையாக இருப்பதால் மர கட்டில்கள் இல்லாத வீடே இல்லை. பாய்விரித்து படுப்பது என்பது புத்த பிட்சுக்கள் மட்டுமே செய்வார்கள்.

வர்ண பிரிவு இல்லை. பணக்காரன், ஏழை என்ற பிரிவு மட்டுமே உண்டு. சேறான பூமி என்பதால் எல்லோருமே பாதரட்சை அணிந்திருப்பார்கள். வீட்டுக்குள்ளும், கோவிலுக்கு போகும்போது மட்டும் வாசலில் அவிழ்த்து விட்டு கால்களை தொட்டியிலிருந்து நீர் இறைத்து கழுவிக் கொண்டு உள்ளே நுழைவார்கள்.

நல்ல சந்தன மரங்கள் இருந்தன. அறுத்து, உலர்த்தி, பொடியாக்கி சிறுதுண்டுகளாக கட்டைகளை எரிப்பதும், பொடியை தூவுவதும் அவர்களுக்கு பிடித்தமான விஷயங்களாக இருந்தன. அரண்மனை சுற்றிலுமுள்ள தெருக்களில் எல்லாம் இந்த சந்தன புகையும், வேறு சில மூலிகைகளின் வாசனையும் நிரம்பியிருக்கும். எந்த நேரமும் சளி, இருமல் தொல்லை வரும் என்பதால் இருமல் இருக்கிறதோ இல்லையோ அதற்கான மருந்தை அவர்கள் எடுத்துக் கொள்வார்கள். தினசரி உணவில் அந்த பக்குவம் இருக்கும். மீன்கள் குளுமையாக இருக்கும். பறவை மாமிசங்கள் உடம்பிற்கு சூடு தருபவை. எனவே, அரிசி சோறும், கோழி கறியும் மிக நேர்த்தியாக செய்வார்கள். அதே நேரம் உடம்பிற்கு கொழுப்பு தேவை என்று தேங்காய்கள் துருவி விதம் விதமான பண்டங்கள் செய்வார்கள். வெள்ளைக் கரும்புகளிலிருந்து இனிப்ப சாறு எடுப்பார்கள். பழங்களை

கொதிக்க வைத்து சாறு இறுக்கி சுடச் சுட குடிப்பார்கள். ஜில் லென்ற பழரசம் அவர்களுக்கு ஆகாது.

வெகு நாளைக்கு முன்பு இந்து மதத்தின் சாயல் அவர்களிடம் இருந்தது. ஆனால் இந்தியாவிலிருந்து கிளம்பிய புத்த பிட்சுக்கள் சீனத்திற்கு குடியேறி அங்குள்ள போர் வீரர்களுக்கு தியான பயிற்சி அளித்து, அங்கு மதம் நிறுவி, அந்த மதத்திலிருந்து ஆட்கள் காம்போஜத்திற்கும், இராமயஞ்ஞு தேசத்திற்கும் குடி புகுந்தார்கள். இராம யஞ்ஞுத்திலிருந்து புத்த மதம் மாடமாலிங்கம், மாயிருடி கங்கம், இலங்கா சோகம் என்று கடாரம் முழுவதும் பரவி, கடாரத்திலிருந்து கடல் தாண்டி ஸ்ரீ விஜயத்திற்குள்ளும் நுழைந்தது. பல நூறு ஆண்டுகளாக மெல்ல மெல்ல புத்த பிட்சுக்கள் அரசருக்கு நெருங்கி நின்று ஆலோசனைகள் கூறி, வைத்தியம் செய்து, நன்கு புணருவதற்கான குளிகைகள் கொடுத்து, உற்சாகப்படுத்தி தங்களை நிலை நிறுத்திக் கொண்டார்கள். சீனத்து மதங்களில் பல, புத்த மதம் உள்பட நல்ல மனிதர்களால் சீராகப் பரவியது.

நான் துறவி என்பதால் உனக்கு யுத்தத்தில் உதவ மாட்டேன் என்கிறாயா. நீ பிச்சை போடுகிறாய். எப்படி இன்னொரு தேசத்தை வென்று, ஆட்களை கொண்டு வந்து உழுது பயிரிட்டு எனக்கு சோறு கொடுக்கிறாய், நீ கொடுக்கிற சோறுக்கு நான் நன்றி சொல்ல வேண்டாமா. அப்படியானால் நான் உனக்கு யுத்தப் பயிற்சி அளிக்கிறேன். யுத்தம் செய்வதற்கு அடிப்படை தேவை என்ன. ஆயுதங்களா. இல்லை. தடிமனான உடல் வலிவா. இல்லை, மாமிச உணவா. அறவே இல்லை. மனம் ஒருநிலைப்படுத்தல், இதுவே, எல்லா காரியங்களிலும் வெற்றியை தரும். யுத்தத்தில் நிச்சய வெற்றிக்கு பதட்டமடையாமல் இருக்க வேண்டும். பதட்டம் உள்ளவன் ஒரு பொழுதும் எதிலும் ஜெயிக்க முடியாது, போரில் தோல்வி நிச்சயம்.

''இது என்ன வாள். இது பரத கண்டத்திலிருந்து வந்ததா.''

''இது மரம் வெட்டுவதற்கய்யா. இது அரிவாள் என்று பெயர். இதை கத்தி என்று சொல்லாதே. அது ஆபாசம், நான் உனக்கு கத்தி செய்து தருகிறேன்.''

புத்த பிட்சுக்கள் உலைக்களம் அமைத்தார்கள். இரும்பு காய்ச்சி ஊற்றினார்கள். பக்குவமாய் எடுத்து வந்தார்கள். நீரில் முக்கியும், எண்ணையில் முக்கியும் பலமுறை செந்தழல் பட்டையாக செய்து அந்த இரும்பு பட்டைக்கு வலிவு ஏற்றினார்கள். பிறகு கூழாங்கல்லால் மிக நிதானமாக அந்த கூர்மையை சரி செய்தார்கள். ஒரு நூல் இழை கூட பிசிறு வராமல் ஒரு வாளினுடைய உட்புறமும், வெளிப்புறமும் அவர்கள் செப்பனிட்டு கொடுத்தார்கள். மெருகேற்றினார்கள். பளபளப்பாக்கினார்கள். வாள் இடது தோளிலிருந்து வலது விரல் நுனிவரை இருந்தது. அந்தப் பிடி அரை முழம் இருந்தது. அரை முழ பிடி, மிக நீண்ட வாள் உறையில் போட்டு தரப்பட்டது.

எதிரியை கவனி. ஒரு எதிரியின் எந்த பாகத்தை கவனிப்பாய். கண்களை கவனி. கண்களை உற்றுப்பார். அதுவே அவனை பயமுறுத்தும். அடுத்தபடி கால்களை உற்றுப் பார். அதுவே அவன் அசைவை கட்டுப்படுத்தும், அடுத்தபடி அவன் மூச்சு விடுவதை கவனித்துக் கொள், அவன் பதட்டம் உனக்கு புரியவரும். கடைசியாக அவன் ஆயுதம் தாங்கும் விதத்தையும், என்ன செய்யப் போகிறான் என்பதையும் எளிதாக கண்டு கொள். அவன் செய்கின்ற விஷயத்தை அப்படியே செய்ய விடு. அதாவது ஒரு வீச்சு உன் இடப்பக்கத்திலிருந்து வலப் பக்கம் வந்தது என்றால் வலப்பக்கம் வழி விடு. வலப்பக்கம் போகின்ற வாளை ஓங்கி பின்னால் அடி. அவன் வீச்சோடு உன் வீச்சும் சேர்ந்து வீச்சு இரண்டு மடங்காகி அந்த வாள் எகிறி விழும்.

இதை எதிரி கற்றுக்கொண்டால் என்ன செய்வது. அதே போல அவன் வாள் உன்னை தட்டிவிட்டால் என்ன செய்வது. எனவே நீ வாள் வீசுகிறபோது எதிரியினுடைய கழுத்துக்கு கொண்டுவந்து பிறகு அப்படியே கீழே இறக்கி விடு. அதாவது உன் வலப்பக்கத்திலிருந்து கிளம்பி உச்சிக்கு அடைந்து சரட்டென்று கீழே கொண்டு வந்து விடு. அதாவது கத்தியை பூமிக்கு கொண்டு வா. அப்படி ஒரு அடி விழும் என்ற எண்ணத்தோடு உறுதியாகப் பிடி.

புத்த பிட்சுக்கள் அரசாங்கத்தில் நுழைந்தது யுத்தம் சொல்லி கொடுப்பதின் மூலமாகத்தான் நடந்தது

''புணர்தல் என்ற விஷயத்தை புத்த பிட்சுக்களிடம் கேட்கக்கூடாதா, அவனுக்கு அதுபற்றி தெரியாதா.''

''அப்படி ஒன்றும் இல்லை, உடம்பு பற்றி தெரிகிறபோது உடம்பினுடைய முக்கியமான விஷயமான புணர்தல் பற்றியும் தெரியும்.

மூலாதாரத்தில் பலம் ஏற்றிக் கொள்ள கூடலுக்கு முன்பே மூலாதாரத்தை விழிப்படையச் செய்ய கூடல் மிகச் சிறப்பாக இருக்கும். உடல்சூடு இரத்த சூட்டை ஏற்படுத்தும். தகிக்கிற பொழுது அதாவது அடிவயிறு கனக்கிற பொழுது அந்த இடத்தில் அந்த சூட்டை மத்திமப்படுத்து. அதன் மீது மனம் வைத்து உன்னுடைய மனதை ஒருநிலைப்படுத்து. உன் விரைகளையும், அடிவயிற்றையும் கவனித்துக் கொள். ஆண்குறியின் அடிபாகத்தையும் கவனித்துக் கொள். தொப்புளிலிருந்து கீழே இறங்கு. அந்த இடம் முழுவதையும், அந்த இடம் முழுவதையும் உன மனதால் தடவு. பிறகு அந்தப்புரம் போ. அவளை தொட்டும், தடவியும், பேசியும், அவளை மிகவும் மதிப்பது போல அளவளாவியும், வருடி கொடுத்தும் தயார் செய். அந்த நேரத்தில் உன்னுடைய ஆண்மையும் விழிப்படையும். கூடலின் ஆரம்பத்தில் யோனிக்குள் ஆண்குறி செலுத்தும் நேரத்தில் சட்டென்று மனம் முழுவதும் கொண்டு வந்து உன்னுடைய அடிவயிற்றில் கனமாக அழுத்துவதுபோல் பிடித்து கொள். இது மனம் செய்யும் வித்தை, அங்கு உன்மனம் முழுவதும் வைத்து நீ வேகமாக இயங்கு. நீ இந்த விஷயத்தை புத்திக்கு கொண்டு போனால் புத்தி மனதிற்கு கொண்டு போய் உன்னுடைய உணர்ச்சி தகிப்பை அதிகப்படுத்தும். உன் மனதை புத்திக்கு எடுத்துப் போகாது அடி வயிற்றுக்கு எடுத்துப் போனால் நெடு நேரம் கூடல் நடக்கும்.''

''நீங்கள் கூடியது உண்டா.''

''இல்லை, நான் கூடியதே இல்லை. நான் நைஷ்டிக பிரம்மச்சாரி.''

''பிறகு எப்படி இதை தெரிந்து கொண்டீர்கள்.''

''கூடுபவனை பார்த்திருக்கிறேன். அவன் தவறு செய்கிறான் என்று தெரிந்து சிரித்துவிட்டு வந்திருக்கிறேன்.''

"அப்படி பார்க்கும்பொழுது உங்களுக்கு அந்த ஆவல் தோன்றாதா."

"நான் என் மனதை வெளி விஷயங்களில் படர விடுவ தில்லை. நான் பார்க்கிறேன் என்பதை என் மனம் பார்க்கும். நான் எதை கவனிக்கிறேன் என்பதை என் மனம் கூர்மையாக கவனிக்கும். எனவே, நான் மனதை தளரவிட்டு விஷயங் களில் கலக்காது என் மனம் என்ன பார்க்கிறது என்பதை என் மனம் கவனிக்கும், மனதை மனதால் கவனிக்கும் பொழுது எதிரே நடக்கின்ற விஷயம் சாதாரணமாக இருக்கும்.

ஒருவர் சோறு உண்ணுவதும், கூடலில் ஈடுபடுவதும், மலம் கழிப்பதும், ஆடுவதும், போர் புரிவதையும் நான் அவ் விதமே கவனிக்கிறேன். இப்படிப்பட்ட பயிற்சிகள் சொல்லப் பட்டு இருக்கின்றன.

எங்களுக்கு மூலாதாரம் மட்டுமல்ல, மூளைக்கு நடுவே இருக்கின்ற நந்தியும் விழித்துக் கொண்டு இருக்கிறது. சஹஸ் ராரம் மலர்ந்துவிட்டது. எனவே, நான் பூமியில் இருந்தாலும் பூமியோடு சம்மந்தப்படவில்லை. நான் பூமியிலிருந்து ஒரு அடி உயரத்தில் வாழ்கிறேன். இது சொன்னால் புரியாது. வாழ்ந் தால்தான் உணர முடியும்."

சத்ரியர்கள் திகைத்துப் போனார்கள். வேளாளர்கள் வியந்து போற்றினார்கள். வணிகர்கள் வாரி கொடுத்தார்கள்.

"உங்களுக்கு என்ன வேண்டும்."

"இடுப்பிலும், மேலும் போர்த்திக் கொள்கிற துறவற ஆடை."

"அடடே, வேறு ஏதேனும் கேளுங்கள்."

"நாங்கள் அமைதியாக உட்கார்ந்து தியானம் செய்ய உயர்ந்த தளம் உள்ள புத்த விகாரங்கள். இடையறாது நறுமண பொருள்கள். தங்கத்தினால் ஆன புத்தர் சிலைகள். தங்கத்தில் புத்தர் இருப்பது எங்களுக்காக அல்ல. உங்களுக்காக,

உங்களுக்கு தங்கத்தின் மீது நாட்டம், நீங்கள் உயர்வு என்று கருதும் பொருளில் புத்தர் வைப்பது எங்களுக்கு விருப்பம். இந்த புத்தர் சிலை சொக்கத் தங்கம் என்றால் புத்தரை கவனிப்பாய் அல்லவா. மற்றபடி புத்தர் கற்சிலையானாலும், மரச்சிலையாக

இருந்தாலும் எங்களுக்கு சந்தோஷம். புத்தம் வெளியில் இல்லை. உள்ளே இருக்கிறது.

புத்தம் சரணம் கச்சாமி. நான் வெளியே சரணமடைய வில்லை. உள்ளே எனக்குள் என் மனதிற்கு முன்பு சரணடைந்து விட்டிருக்கிறேன். என்னுடைய எல்லா ஆசாபாசங்களையும் என்னுடைய மனதிற்கு முன்னே கிடத்திவிட்டேன். சங்கம் சரணம் கச்சாமி. என்னை இந்த நிலையிலே தொடர்ந்து ஈடுபடுத்த எனக்கு ஒரு சத்சங்கம் வேண்டும். அந்த சங்கம் மிக உயர்வானது. அந்த சங்கம்தான் என்னை தாங்கி பிடிக்கிறது. நான் தவறு செய்யாமல் இருக்க உதவுகிறது. பரஸ்பரம் நாங்கள் ஒருவரை ஒருவர் உறுதி படுத்திக் கொள்கிறோம். தர்மம், சரணம் கச்சாமி.

இந்த உலகத்திற்கு ஒரு தர்மம் இருக்கிறது. இந்த உலகம் இரண்டானது. இந்த இரண்டான விஷயங்களை நான் புரிந்து கொள்ள வேண்டும். இந்த தர்மத்தை அனுசரிக்க வேண்டும். வேறு கிரகங்களில் வேறு தர்மம். ஆனால் இந்த பூமியில் எதிர் எதிரான விஷயங்கள் ஒன்றாக நிற்கின்றன. எதிர் எதிரான விஷயங் களை ஒன்றாகவே ஸ்வீகரிப்பதுதான் தர்மம்.

இரவும், பகலும், நீரும், நெருப்பும், மண்ணும், கடலும் என்று பிளவுபட்டு இருக்கின்றன. இந்த பிளவிற்கு நடுவே நிற்பதே தர்மம். இரண்டையும் உபயோகப்படுத்துதலே தர்மம்.

இவ்வளவு பெரிய விஷயத்தை கண்டுபிடித்த பரத கண்டத் திலே ஏன் புத்த மதம் செல்லுபடியாகவில்லை.

முதல் காரணம் பரத கண்டத்தின் தொன்மை. புத்தருக்கு முன்பு, பல ஆயிரம் வருடங்களுக்கு முன்பே அங்கு நாகரீகம் நிலைத்து, உயர்ந்து மதங்கள் பல தோன்றிவிட்டன. உருவ வழிபாடும், உயிர் பலிகளும் அவர்களுக்குள்ளே புகுந்துவிட்டன. மரணம் என்பது என்ன, மரணத்திற்கு அப்பால் என்ன. உடம்பு என்பது என்ன. உயிர் என்பது என்ன. என்ன நடக்கிறது இந்த பிரபஞ்சத்தில் என்பதை சனாதன தர்மம் மிக அழகாக கற்றுக் கொண்டு இருக்கிறது.

ஆனால், அவர்களுக்குள்ளேயே பிளவுகள் ஏற்படுத்தி, சத்ரியன், பிராமணன், வணிகன், வேளாளன், பஞ்சமன் என்று

பிரித்துக் கொண்டிருக்கிறார்கள். பிளவு அவர்களுக்கு பலம். பலவீனம். இந்த பிளவினால் அவர்களுக்குண்டான வேலைகளை கூர்மையாக செய்து முடித்தார்கள். பிரிந்ததால் மிக வேகமாக வளர்ந்தார்கள். வணிகர்களுடைய பொருள் ஈட்டினால் நான்காவது வருணத்தினருடைய கடும் உழைப்பினால் அங்கு உடை உடுத்தலும், பாத்திரங்கள் செய்தலும், மற்ற வேலைகளும், கோட்டை கட்டுதலும் நடந்தன. அந்த கோட்டைக்கு வெளியேயும், உள்ளேயும் பாதுகாக்க சத்திரியர்கள் கடுமையான பயிற்சியை மேற்கொண்டார்கள்.

காடுகளை அழித்து நாடாக்கினார்கள். பிராமணர்கள் பருவநிலை தெரிந்தும், கிரக நிலை தெரிந்தும், காற்று நடப்பு தெரிந்தும் அவர்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்ன செய்யக்கூடாது என்று உபதேசித்தார்கள். யுத்தம் கற்று கொடுத்தார்கள். வணிகம் கற்று கொடுத்தார்கள். செய்தொழில் கற்று கொடுத்தார்கள். இவையெல்லாம் கற்றுக் கொடுக்கும் ஆசானாக அவர்கள் இருந்தார்கள். கற்றுக் கொண்டவர்களாக மற்ற ஜனங்கள் இருந்தார்கள். ஒட்டுமொத்தமாக வளர்ந்தார்கள்.

பிரிவினுடைய உயர்வு, தாழ்வு இல்லை, பரஸ்பரம் மதித்தார்கள். ஆனால் பிற்காலங்களில் பிராமணர்களுடைய அயோக்கியத்தனம் வளர்ந்தது. அந்த நேரத்தில்தான் புத்தர் தோன்றினார். உயிர் பலியும், அட்டகாசமான பிராமணருடைய அகம்பாவமும் பொய். அது இறைமைக்கு எதிரானது என்று வாதிட்டார்.

தன்னறிவு இல்லாது, தன்னை புரிந்து கொள்ளாது வேதம் சொல்லுகிறது வெறும் வெற்று வேலை. வேஷதாரிகள் என்று பரிந்துரைத்தார். மக்களில் பிரிவு எதற்கு. உயர்வு, தாழ்வு எப்படி என்று கேள்வி கேட்டார். அந்த இடத்திலே அவரை இருக்க விடவில்லை. அந்த புத்த பிட்சுக்களை அப்படி கேட்டவர்களை அவர்கள் துன்புறுத்தினார்கள். ஒழித்துக் கட்ட வேண்டும் என்று செய்தார்கள்.

அங்கு அரசருடைய ஆதரவு இருந்தாலும், எதிர்ப்பு அதிகம் இருந்ததால் புத்த பிட்சுக்கள் ஒன்று கூடி பட்டு நூல் வணிகர்களோடு இமயமலை ஏறி, இறங்கி சீனத்திற்கு குடியேறினார்கள். சீன தேசம் இனிமையான ஜனங்களை கொண்டு வளர்ந்தது.

அவர்கள் பல்வேறு மதங்களை கொண்டிருந்தாலும் இந்த விவகாரங்கள் அவர்களுக்குப் பிடித்துப் போயின. மற்ற மதங்கள் பலம் குறைந்தன. சீனத்தில் பௌத்தம் பரவியது. அதற்கு காரணம் சீனத்து அரசர்கள்.

புத்த பிட்சுக்கள் என்றால் பிச்சைக்காரர்கள் என்று நினைக்காதே. காற்றை நிறுத்தக்கூடிய, கடலலையை சுருளக்கூடிய, மலையை நகர்த்தக்கூடிய, மண்ணை பிளக்கக்கூடிய வல்லமை உடைய புத்த பிட்சுக்கள் எல்லாம் இருந்திருக்கிறார்கள். மிகப் பெரிய குருமார்களாக இருந்து பல்வேறு இடங்களில், பல்வேறு சங்கங்கள் அமைத்து சீனம் முழுவதும் நூற்றுக்கணக்கான பள்ளிகளை நடத்தினார்கள். அந்த பள்ளிகள் மூலம் புத்தருடைய செய்தி மக்களுக்கு பரவியது.''

''மாமிசம் உண்ணாதே என்பது புத்தருடைய கொள்கையா.''

''இல்லையே. உணவுக்காக கொலை செய். துன்புறுத்தல் செய்யாதே.''

''ஏன்.''

''அது வாழ்ந்துவிட்டு போகட்டுமே. நீ யாகம் வளர்க்க வேண்டும் என்று ஒரே யாக குண்டத்தில் நூறு ஆடுகளை வெட்டிப் போடுகிறாயே. யார் உண்பதற்கு. அதை இந்திரன் உண்கிறான். வருணன் உண்கிறான் என்று சொல்கிறாயே. எப்படிப்பட்ட பொய். வருணனுக்கும், இந்திரனுக்கும், எமனுக்கும் எதற்கு மாமிசங்கள். உன்னை முன்னிலைப்படுத்திக் கொள்ள செய்யப்பட்ட அகங்காரங்கள் இவை.''

''அப்படியானால் போர் தவறா.''

''இல்லை. போர் என்பது தற்காப்புக்காக செய்யப்படுகிறது. புலி வருகிறது என்றால் மரத்தில் ஏறு. முடியாவிட்டால் வாளை உருவி புலியை தாக்கத் தயாராக இரு. அந்த புலியை தாக்குவது யுத்தம் என்றால் யுத்தம் சரி. பௌத்தம் அதற்கு எதிரானது அல்ல. ஆனால் போர் இல்லாத வாழ்க்கை உன்னதமானது.

புத்தரின் போதனைகளை மட்டுமே பரப்புவது தன் வாழ் நாளின் குறிக்கோள் என்ற உத்தம புத்த குருமார்கள் தலைமுறை தலைமுறையாக வந்தார்கள். ஒரு மதத்தை பரப்புவதற்கு மக்களிடம் நேரடியாக போகாமல், மன்னரை முன் வைத்து மக்களை

தொடர்பு கொண்டார்கள். மன்னர்களின் ஆதரவு மட்டுமல் லாமல் மன்னர்களுக்கு அருகே இருப்பதில் மக்கள் கூட்டம் வந்து சாயும் என்பதை புரிந்து கொண்டார்கள். அரசாங்கத்தி னுடைய முக்கியமான பொறுப்புகளை பற்றி, நடவடிக்கை களைப் பற்றி அவர்களிடம் விவாதம் நடத்தப்பட்டது. எல்லை களை பாதுகாக்கவும், படைத்தளங்களை ஏற்படுத்தவும், நிதி நிலைமையை சரி செய்வதற்கு உண்டான போராட்டங் களும் அவர்களால் உபதேசிக்கப்பட்டன. மழை, வெள்ளம் போன்ற இயற்கை உபாதைகளிலிருந்து காப்பாற்றிக் கொள்ள அவர்களுக்கு பிரார்த்தனைகளும், சொற்களும் உதவின.

சீன தேசத்தில் கடுமையாக உழைக்கின்ற மக்களால் அரசாங்கம் பலப்பட்டது. அதிகாரிகளை நன்கு பழக்கியதால் நிர்வாகம் சிறப்பாக நடந்தது. அதேபோல ஸ்ரீ விஜயம் என்கிற அற்புதமான தேசமும் புத்த பிட்சுக்களின் ஆதரவால், அர வணைப்பால் வெகு பலமாக வளர்ந்தது.

இந்த வளர்ச்சியின் வேகத்தில் ஸ்ரீ விஜயத்தில் சிதறி இருந்த இந்துக்கள் பாதிக்கப்பட்டார்கள். புத்த பிட்சுக்கள் தங்களை வளர்த்துக் கொள்ள வாலிபர்களுக்கு நடுவே பேசி னார்கள். அந்த வாலிபர்கள் உற்சாக மிகுதியால் இந்துக்களை தொந்தரவு செய்தார்கள். பட்டை திருநீரும், சந்தனப் பொட்டும், வெள்ளை சட்டையும், மேலே அங்கவஸ்திரமும், இடுப்பில் ஆறு முழ காழகமும் அணிந்து வந்த சோழ வர்த்தகர்கள் கேலிக்கு உள்ளாயினர். அவர்களுடைய பண்டங்கள் எதுவும் ஸ்ரீ விஜயத்திற்கு தேவையாக இல்லை.

எதற்கு இவ்வளவு துணி என்று புத்த பிட்சுக்கள் கேட்க, ஸ்ரீ விஜயம் துணி வாங்கவில்லை. ஆனால் சீனத்து வியா பாரிகள் இதை பயன்படுத்திக் கொண்டார்கள். பலநாள் பிர யாணம் செய்து, சீனம் வருவதற்கு பதிலாக, சீனத்து வர்த்தக மரக்கலம் கிளம்பி ஸ்ரீ விஜயம் வந்துவிட, ஸ்ரீ விஜயத்தை சுற்றிக் கொண்டு சோழ வணிகர்கள் பெரிய மரக்கலத்தில் வந்து இறங்க ஸ்ரீ விஜய பூமியில், அந்த கடற்கரையில், முசி நதிக் கரையில் மிகப் பெருத்த பண்டமாற்ற வியாபாரம் நடந்தது. சீன நாவாயிலிருந்து பல்வேறு விஷயங்கள், சோழ நாவாய்களுக்குப் போயின. சோழ நாவாய்களின் யானை

தந்தமும், காண்டாமிருக கொம்பும், பச்சிலைகளும், பட்டைகளும், ஏலக்காயும், கிராம்பும், புனுகும், ஜவ்வாதும், அகிற்துகளும், சந்தனக் கட்டைகளும் தரப்பட்டன. நாவாய் கட்டுவதற்குண்டான வேங்கை மரங்கள் தரப்பட்டன. பல்வேறு விதமான பண்ட மாற்றங்கள் மிக அருமையாக நடந்தன. புத்த பிட்சுக்கள் சீனத்திலிருந்து ஸ்ரீ விஜயம் வரை வந்துவிட்டோம். பல இடங்களில் நம்முடைய சங்கத்தை நிறுவிவிட்டோம். தொடர்ந்து கணவாய் தாண்டி சாவகத் தீவு பக்கம் போக வேண்டும் என்று தீர்மானித்தார்கள்.

ஆனால் சாவகத் தீவில் சன்னகர் என்ற சைவக் கூட்டம் இருந்தது. சன்னகம் என்று தங்கள் மதத்தை அவர்கள் அழைத்துக் கொண்டார்கள். அந்த சன்னக கூட்டத்தினரிடம் புத்த பிட்சுக்களின் ஜம்பம் பலிக்கவில்லை. சனாதன தர்மத்தின் ஒரு நல்ல கிளையாக அந்த சன்னக அமைப்பு இருந்தது. புத்த பிட்சுக்களை கேலி செய்தார்கள். இரகசியமாக பெண்களிடம் போகிறவர்கள்தானே என்றார்கள். துறவி என்று சொன்ன பிறகு உனக்கு அரசியல் எதற்கு என்று கேட்டார்கள். உருவ வழிபாடு கூடாது என்கிறாய். ஆனால் புத்தரை உருவமாக வைத்திருக்கிறாயே. இது உருவ வழிபாடு இல்லையா என்று எதிர்வாதம் செய்தார்கள்.

சாவகத் தீவின் மேற்கு கரையோரம் உயர்ந்த மலைகள் இருந்தன. அங்குள்ள காட்டுவாசிகளுக்கு புத்த பிட்சுக்கள் தேவைப்படவில்லை. அவர்களின் எளிமையான வாழ்க்கைக்கு புத்த பிட்சுக்களின் தத்துவம் புரியவில்லை. அந்த தீவின் மேற்குப் பகுதியில் உள்ள கிராமங்களில் புத்த பிட்சுக்கள் நடமாடினார்கள். ஆனால் அங்கேயும் மரியாதை இல்லாமல் நடத்தப்பட்டார்கள்.

அரசாங்கம் ஆதரிக்கவில்லை. அதனால்தான் புத்த மதம் பரவவில்லை என்று புத்த பிட்சுக்களுக்கு கோபம் வந்தது. தத்துவ ரீதியாக மிகச் சரியான முறையில் புத்த மதம் அங்கு மறுக்கப்பட்டதை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. இத்தனை தூரம் பரவி இருக்கிறோம். இந்த இடத்தில் எதிர்ப்பா என்ற ஆத்திரமே மேலோங்கியது. எனவே, சங்கரராம விஜயோத்துங்கனை தூண்டி சாவகத் தீவின் மீது படையெடுக்க வைப்பது

நல்லது என்று தீர்மானித்தார்கள். அதற்கான காரணங்களை செய்தார்கள்.

சாவகத்தீவு சோழர்களை வரவேற்றுள்ளது. சனாதன தர்மம் பற்றி கேட்டுக் கொண்டது. சிவலிங்கம் கொண்டு வரச் சொன்னது, செப்பு சிலைகளை வாங்கியது, சோழ வணிகர்களுக்கு அங்கு மிகப் பெரிய மரியாதை இருந்தது. அங்கும் நல்ல பொருள்களை விற்று சீனத்திற்கு வேண்டிய விஷயங்களையும் ஸ்ரீவிஜயத்தில் விற்று கொழிக்கின்ற சோழ தேசத்து வணிகர்களை கண்டு பொறாமை ஏற்பட்டது. சாவகத் தீவில் சன்னக மதம் வளர்வதற்கு சோழ தேசத்தின் திருநீறு பூசிய வியாபாரிகளும் காரணம் என்று எண்ணியது. சோழர்களை வதைக்க முடிவு செய்தது. ஸ்ரீ விஜயத்தின் பெரும்படை சாவகத் தீவிற்கும், ஸ்ரீ விஜயத்திற்கும் நடுவே உள்ள சிறிய கணவாயில் நிரம்பியது. அந்த இடம் தாண்ட வேண்டுமென்றால் வரி கட்டி ஆக வேண்டும் என்று சொன்னது. வரி கட்டிய பிறகு சோதனையிட வேண்டும் என்று படியேறியது. சோதனையிட்ட பிறகு எங்களுக்கு இவைகளை கொடுத்துவிடு என்று வலுக் கட்டாயமாக பல்வேறு விஷயங்களை வாங்கிக் கொண்டது. இந்த அடாவடியான நடவடிக்கைகளை எதிர்த்து வணிகர்களின் வீரவாள் சோழப்படை தாக்கியதும் இதை பெரிது படுத்தி விஜயோத்துங்கனிடம் சொல்லி, நம்முடைய இடத்திற்கு வந்து நம்முடைய வீரர்களை வெட்டுவதென்றால் அவர்கள் எவ்வளவு பெரிய ஆட்களாக இருக்க வேண்டும். நாம் என்ன பேடிகளா என்று தூண்டிவிட்டது. அரசரை மட்டும் தூண்டிவிடவில்லை. அந்த கரையோர பரதவர்களையும், அங்கு குடியிருந்த காவலர்களையும் உசுப்பேற்றியது.

இராஜராஜ சோழன் தன் தந்தைக்கு நல்ல நட்பு கொண்டு ஆனைமங்கலம் என்று சோழ தேசத்தில் ஒரு கிராமத்தில் புத்த வி.காரை அமைக்க இடம் கொடுத்ததை தெரிந்து கொண்டிருந்தாலும், அங்குள்ள தளபதிகளும், கன்மிகளும் (தூதுவர்கள்) கற்சிலை செய்து சோழ தேசத்து கோவிலுக்கு கொடுப்பதை தெரிந்து வைத்திருந்தும் சங்கரராம விஜயோத்துங்கவர்மன் இதற்கு துணை போனான்.

கடாரம்தான் அவன் ஊர். கடாரத்து அரையன்தான் அவன் பெயர். கடாரம் முழுவதும் அவன் வசப்பட்டிருந்தாலும் சரியாக தங்குமிடம் ஸ்ரீ விஜயம்தான் என்று தெரிந்து வைத்திருந்தான். சாவகத் தீவிலும் ஸ்ரீ விஜயத்தின் மகரக் கொடி பறக்க வேண்டும் என்று புத்த பிட்சுக்கள் தூபம் போட்டார்கள். தினவெடுத்த நல்ல அரசாங்கமாய் அமைந்த சங்கரராம விஜயோத்துங்கனுக்கு இந்த விஷயம் இனித்தது. அவன் அந்த கடல் பகுதியை முழு வதுமாக ஆக்ரமித்தான். சீனர்களை எதிர்ப்பதற்கு அவனுக்கு பயமாக இருந்தது. சீனர்கள் காம்போஜம் வழியாக மாடமாலிங் கமும், மாயிருடிகங்கமும், இலங்கா சோகமும் வந்தால் கடாரம் அவர்கள் வசப்படும். அது தனக்கு ஆபத்தாக முடியும் என்பதால் சீன மரக்கலன்களை அதிகம் கண்டுகொள்ளாது வரி வசூல் மட்டும் செய்துவிட்டு, சோழ வணிகர்களை சித்ரவதை செய்யத் துவங்கினான்.

சோழ மரக்கலன்களை கொள்ளையாட முயற்சிக்கும் போது இருபது ஸ்ரீ விஜயத்து வீரர்கள் அம்பெடுத்து கொல்லப் பட்டார்கள். இதைச் செய்த அந்த மரக்கலம் அடித்து நொறுக் கப்பட்டது. எரியூட்டப்பட்டது. அத்தனை மரக்கலன்களும், அத்தனை வீரர்களும் கத்தியால் குத்தப்பட்டு சாகடிக்கப்பட் டார்கள். அதில் உள்ள பொருள்கள் எல்லாம் ஸ்ரீ விஜயம் நோக்கி வந்தது.

இது எங்கள் பகுதி. சோழ மரக்கலன்கள், வங்கங்கள் சோதனைக்கு பிறகே போக வேண்டும் என்று உத்தரவிடப் பட்டது. அந்த சோதனைக்கு உட்பட்டாலும் சீன தேசத்து பண்டங்களை ஏற்றி காம்போஜத்திலிருந்து வந்தாலும் அவை மடக்கப்பட்டு சீனத்துப் பொருட்கள் அத்தனையும் இங்கு வந்து சேர்ந்தன. சோழ தேசத்து மரக்கலன்களும் கொள்ளை யடிக்கப்பட்டன. சீனப் பொருட்களை ஏற்றிய சோழ தேசத்து மரக்கலன்களும் கொள்ளையடிக்கப்பட்டன. சீனர்களை கண்டு கொள்ளாமல் விட்டுவிட்டு சோழர்களை கடுமையாக எதிர்த் தார்கள். பதினாறு மரக்கலம் பாழாகின. அந்த கொடுமையும் தாண்டி, சைவ சமயத்தை, இந்து மதத்தை சனாதன தர்மத்தை கேலி செய்யும் வண்ணமாக எதிர்த்து பேசிய, வாதாடிய கை உயர்த்திய வணிகர்களை அழைத்து உள்ளங்கைகளை சீவி

ஒன்றாக வைத்து கட்டி சிறையில் அடைக்கப்பட்டார்கள். முப்பது நாட்களுக்கு பிறகு விடுவிக்கப்பட்டார்கள். இந்த குரூரமான தண்டனை புத்த பிட்சுக்களின் யோசனையாக இருந்தது. வெளிப்பார்வைக்கு அமைதியாக இருந்தாலும் சரியான புத்த பிட்சுக்கள் வளர்க்கப்படாது குரூரமான, தந்திரம் மிக்க ஸ்ரீவிஜயத்தார்கள் புத்த குருமார்களானார்கள். இரவு நேரம் பொது மகளிர்களிடம் போனார்கள். விகாரத்திற்கு மகளிர்களை கொண்டு வந்து அனுபவித்தார்கள். அந்த உத்தமமான குருமார் களால் வளர்க்கப்பட்ட ஸ்ரீ விஜயத்து புத்த மதம் கெட்டுப் போயின. மடங்கள் கெட்டுப் போயின.

ஸ்ரீ விஜயத்து ஜனங்களிடம் வரி வசூலிக்கின்ற உரிமை யும் புத்த பிட்சுக்கள் பெற்றார்கள். உன்னைப் போல பல முள்ளவன் யார். வடக்கே எங்கிருக்கிறது காம்போஜம். அந்த காம்போஜத்திலிருந்து ஆரம்பித்து தெற்கே சாவகத் தீவு வரை உன் கொடிதானே. உன்னை விட பேரரசன் உண்டா. சோழ மன்னனை ஏன் உயர்த்தி சொல்கிறார்கள். அவனுடைய தேசம் கையகலம் அல்லவா. உன்னோடு ஒப்பிட்டு பார்க்கும்போது அவனுக்கு கடல் தெரியுமா. நாவாய் தெரியுமா. அல்லது குதிரைப் படைதான் உண்டா. நீ மிகச் சிறந்த வீரன் என்று தூபம் போட் டார்கள்.

இராஜேந்திர சோழன் என்கிற மாமன்னன் பற்றி கேள்விப் பட்டார்கள்.

சோழர் படையெடுப்பா. எப்படி. குதிரையிலா, யானை யிலா. ஒட்ட தேசம் என்னவாயிற்று. தட்சிணலாடமும், உத்திர லாடமும், கோசல தேசமும் என்ன ஆயிற்று. அவ்வளவு தொலைவு போய், அதைத் தாண்டியும் போய் அவன் புலிச் சின்னம் பொறித்துவிட்டு வருகிறான் என்றால் அவன் சாதா ரணமாக இருக்க மாட்டானே. எவ்வளவு திரண்ட செல்வங் கள் திரட்டியிருப்பான். அந்த செல்வங்களை விற்பதற்கு சோழ வணிகர்கள் வந்துதானே ஆக வேண்டும். சோழ வணிகர்கள் வந்தார்கள். கொடுமைப்படுத்தப்பட்டார்கள்.

அவ்வளவு தொலைவு தாண்டி இராஜேந்திர சோழன் படையெடுத்து எப்படி வருவான். அப்படி படையெடுத்தால் என்ன. பத்தாயிரம் வீரர்கள், இருபதாயிரம் வீரர்கள்தானே

வங்கத்திலும், நாவாயிலும் வர முடியும். இருபதாயிரம் வீரர்களை சங்கரராம விஜயோத்துங்கன் பந்தாடி விடமாட்டானா என்று கணக்கு போட்டார்கள்.

மனப்பக்குவம் இல்லாத குருமார்கள் அதிகம் தோன்றி ஸ்ரீ விஜயத்து மக்களை தவறாக தூண்டிவிட்டார்கள். இராஜேந்திர சோழர் பெரும்படையோடு தலைதக்கோலம் வருவார் என்றோ, தலைதக்கோலத்திலிருந்து பெரும் காட்டை தாண்டி, மலை ஏறி இறங்கி, மாடமாலிங்கத்தையும், மாயிருடி கங்கத்தையும் இலங்காசோகத்தையும் தாக்குவார் என்று அவர்கள் கற்பனையிலும் நினைத்ததில்லை. நாகவெளி கைப்பற்றப்பட்டது என்பதை நம்பவே முடியவில்லை.

இரண்டு லட்சம் படைவீரர்கள், நூற்று அறுபது மரக்கலன்கள் என்றதும் மூச்சடைத்து போயிற்று. சங்கரராம விஜயோத்துங்கன் பதறினான்.

எதற்கு பயப்படுகிறாய். உன்னுடைய தந்தையின் எண்ணம் என்ன. சோழனோடு நட்பு கொள்வதா. இல்லை. ஆனைமங்கலம் என்ற ஊரை வாங்கி, அங்கு புத்த விகாரை நிறுவி அங்கே தன்னுடைய படைகளை ஊடுருவ விட்டு, அந்தப் படைகள் மூலம் சோழ தேசத்தை தாக்குவதற்கும், அங்கு கொள்ளையடிப்பதற்கும் தான் திட்டமிட்டான். அதை நீ நிறைவேற்ற வேண்டாமா என்று தவறாக எடுத்துக் கூறினார்கள்.

சீன தேசத்து நாவாய்கள் முசி நதிக்கரையில் வந்து காத்திருந்தன. சோழ வீரர்கள் வர மாட்டார்கள் என்றதும் பத்திரமாக திரும்பிப் போயின. நஷ்டம் எங்களுக்கு இல்லை. உங்களுக்குத்தான் என்று இடித்துரைத்தன. ஸ்ரீ விஜயத்து மக்கள் திண்டாடினார்கள். அரசியல் வல்லுநர்கள் புத்த பிட்சுக்கள் தவறு என்று வாதிட்டார்கள். ஆனால் புத்த பிட்சுக்கள் அவர்கள் குரலை மீறி தங்கள் குரலை ஒலிக்க வைத்தார்கள்.

‘படையெடு. சாவகத் தீவை கைப்பற்று. அடித்து நொறுக்கு. அங்கு சைவ சமயத்தை கிழித்தெறி. உள்ளுக்குள்ளே சோழ தேசத்து மரக்கலன்கள் வரக்கூடாது என்று சொல். நமக்கு வேண்டியவை நம்முடைய நாட்டிலேயே இருக்கின்றன. சீனத்து துணிகளை காசு கொடுத்து வாங்கிக் கொள்வோம்.

வடக்கே காம்போஜத்தின் மீது படையெடுப்போம். சூர்ய வர்மனை கொல்வோம். புத்திவர்மனை அடிப்போம்,' என்றெல் லாம் திட்டம் வகுத்தார்கள். அத்தனையும் மண்ணாயின என்று தெரிந்தபோது பயந்தார்கள். சுருண்டார்கள்.

''இனி என்ன வழி.''

''போர் ஒன்றே வழி.'' சங்கரராம விஜயோத்துங்கனை சந்தியில் நிறுத்தினார்கள்.

அடுத்தபடி இராஜேந்திர சோழன் என்ன செய்வான் என்று ஒருவருக்கும் தெரியவில்லை. கடல் வழி தாக்குதலா. காடு களூடே வருவானா. குதிரைகளோடு வருவானா. காலாட் படையா. யானைகள் உள்ளே நுழையுமா. மன்னன் யார் பக்கம் இருப்பான். வஜ்ரபாலன் தப்பித்து வந்து கொண்டிருக்கிறான். ஜெயசிம்மன் கைது செய்யப்பட்டு, கசையால் அடிக்கப்பட்டு சிறையில் கிடக்கிறான். நாகவெளியின் துறைமுகம் முற்றிலும் எரிந்து போயிற்று. எந்தப் படை, எந்தவிதமாக வரும் என்று தெரியவில்லை.

இலங்கா சோகத்திலிருந்து வலையூருபந்து, வலையூருபந் திலிருந்து துமிசித் தீவு. துமிசித் தீவிலிருந்து கடல் வழியாக முசி நதிக்கரைக்கு வந்து சேருவான். அங்கிருந்து ஒரு நாள் பயணத்தில் ஸ்ரீ விஜய நகரத்திற்கு வந்துவிடுவான் என்று பல தளபதிகள் சொன்னார்கள். ஆனால் இலங்கா சோகத்திலிருந்து நேரே கிழித்தது போல இருக்கின்ற பாதையில் இராஜேந்திர சோழரின் படைகள் கடாரத்தை ஊடறுத்து வந்துநின்றது. வழி யில் உள்ள கிராமங்களை எரியூட்டியது. எல்லா வீரர்களுக்கும் குதிரை கிடைத்தது. இலங்கா சோகம் சூறையாடப்பட்டது.

காம்போஜத்திலிருந்து சூர்யவர்மன் கிளம்பி பல மரக் கலங்களில் இலங்கா சோகத்தில் வந்து இறங்கினான். இலங்கா சோகத்தை அவர்கள் எடுத்துக் கொள்ளலாம் என்று இராஜேந்திர சோழர் அன்பளிப்பாக கொடுத்தார். ஆயிரக்கணக்கான எரி அம்புகள் இராஜேந்திர சோழருக்கு கிடைத்தன. இலங்கா சோகம் சூர்யவர்மனின் இடமாக மாறிற்று. ஸ்ரீவிஜயத்தினுடைய முக்கிய எதிரியான சூர்யவர்மன் இராஜேந்திர சோழனின் படையெடுப்பை மிக நன்றாக பயன்படுத்திக் கொண்டான். நாகவெளி பெரும் வீரர்களால் நிறைந்தது.

கடாரத்தின் மேற்கு கரையில் இருந்த நாகவெளியி லிருந்து கிழக்கு கரையிலிருந்த ஸ்ரீ விஜயத்தின் பண்ணை நகருக்கு இராஜேந்திரர் நகர்வதாக செய்தி வந்தது.

அது மட்டுமில்லை. சோழர்களின் கடற்படை இரண்டாக பிரிந்து நாற்பது போர் நாவாய்கள் இலாமுரி தேசத்தில் நுழைந்து அங்கு வந்த அரசன் சரண் அடைந்ததும் அவனிடமிருந்து பொருட்களை கவர்ந்து கொண்டு இலாமுரி தேசத்தை தாண்டி வாருசகம் என்கிற கடல் உள்ளடங்கி வருகின்ற இடத்திற்கு வந்தது. மரக்கலன்கள் மிக பத்திரமாக வாருசகத்தில் நின்றன. மேற்கு கடல் என்பதால் கடல் கொந்தளிப்பு இல்லாமல் அமைதி யாக இருந்தது. படகுகள் எந்த சேதமும் இல்லாமல் கரையோரம் நிறுத்தப்பட்டன. வீரர்கள் குதிரைகளோடும், யானைகளோடும் கீழிறங்கினார்கள். வாருசகத்திலிருந்து ஸ்ரீவிஜயத்தை தாக்கு வதற்கு நடந்து வந்தார்கள்.

அப்போது வடமேற்கிலிருந்தும் எதிரி வருகிறான். வட கிழக்கிலிருந்தும் எதிரி வருகிறான். உள்ளே நுழைந்து ஸ்ரீ விஜ யத்தை ஆக்கிரமிக்கும்போது வணிகக் கலன்களோடு இன்னும் இருபது கலன்கள் ஸ்ரீ விஜயத்தை சுற்றிக் கொண்டு மேவிளி டங்கம் என்ற தீவில் வந்து நின்றது. அரைநாள் பொழுதில் இவை அத்தனையும் ஸ்ரீவிஜயத்தை தாக்கிவிடும் என்று தெள்ளத் தெளிவாக தெரிந்தது.

இரண்டரை லட்சம் படைவீரர்களில் மிகக் குறைவான வர்களே மரணமடைந்தார்கள். மிகுந்த பலத்தோடு ஸ்ரீவிஜ யத்தை நோக்கி இராஜேந்திர சோழர் நகரத் தொடங்கினார். கிழக்கு கடற்கரையில் இறங்கி பண்ணை நகரை தாக்கி, மிகுந்த சந்தோஷத்தோடு ஸ்ரீ விஜயத்தின் செழிப்பை அனுபவித்த வாறு நடந்தார். கண்கொள்ளா பசுமை, எல்லா இடங்களிலும் நதிகள், குளங்கள். சோழர்களின் மூர்க்கத்தனத்தைக் கண்டு ஸ்ரீ விஜயத்தினர் பயந்தார்கள். பேசிக் கொண்டிருக்கும்போதே கத்தியால் குத்தி சாய்ப்பதும், வீடுகளை தரைமட்டமாக்குவதும், மாடு, கன்றுகளை காடுகள் நோக்கி விரட்டுவதும், புத்த விகா ரங்களை எரியூட்டுவதும், தங்கச் சிலைகளை பறித்துக்கொள் வதும் பார்த்து பயந்தார்கள். வேண்டுமென்றே அரச மரங்களெல் லாம் தறிக்கப்பட்டன. அரச மரம் தறிக்கப்பட்டபோது புத்த

மதத்தினர் வாய்விட்டு அலறினார்கள். அதை மட்டும் விட்டு விடு என்று கெஞ்சினார்கள். கெஞ்சியவர்கள் குத்தி கொல்லப் பட்டார்கள்.

''என்னடா புத்தம். என்ன அரச மரம். என்ன போதி. என்ன ஞானம். இரண்டு கைகளையும் சீவி கைகளைக் கட்டி சிவ லிங்கத்தை கும்பிடு என்று சொன்ன ஒரு கூட்டத்தை இப்படித் தான் தண்டிப்போம்.' கெஞ்சியவனுக்கு கன்னத்தில் அறை விழுந்தது. அவனை விகாரத்தின் வாசலில் தூக்கிலிட்டு கொன் றார்கள்.

''இது அரசர்களுக்குண்டான சண்டையா அல்லது மதப் பிரிவினையால் சண்டையா.''

இரண்டும்தான். ஸ்ரீ விஜயம் தன் அழிவுக்காக காத்து இருந்தது. சங்கரராம விஜயோத்துங்கவர்மன் சமாதானம் செய்து கொள்ளலாமா என்று யோசிக்கத் துவங்கினான். அப்படி சமா தானம் செய்து கொள்ளும்படி அவனை அவன் தளபதிகள் தூண்டினார்கள். அடிபட்டுச் சரணடைந்த வஜ்ரபாலனும், கடுமையாய் தாக்கப்பட்ட பண்ணை தேசத்து மன்னனும் அதையே வலியுறுத்தினார்கள். சங்கரராம விஜயோத்துங்கன் யோசித்தான்.

சமாதானமாகப் போனாலும், சண்டையிட்டாலும் ஸ்ரீ விஜ யத்தின் அழிவு நிச்சயம். ஸ்ரீ விஜயத்தினுடைய தலையெழுத்து இப்பொழுது இராஜேந்திர சோழரிடம் இருக்கிறது. இராஜேந்திர சோழன் படையெடுத்து என்னை சீரழித்தால் உள்ளுக்குள்ளே சூரியவர்மன் வந்துவிடுவான். சைலேந்திர வம்சத்தில் பிறந்த அவன் காம்போஜத்தில் போய் குடியேறி அங்கு பெரிய நகரம் ஸ்தாபித்து தன்னுடைய நாகரீகத்தை சனாதன தர்மத்தை வளர்த்தான். பல நீண்ட முரட்டுத்தனமான போர்களில் அவனை ஜெயித்து ஓரம் கட்டியாகிவிட்டது. இப்பொழுது அவனுடைய காலம் அவன் இராஜேந்திர சோழரை பின்பற்றி இங்கே வந்து விடுவான். ஸ்ரீ விஜயத்தில் தன் கொடியை பறக்கவிடுவான். இன்றைய மகரக் கொடியை கிழித்தெறிவான்.

இந்த போருக்கு காரணம் புத்த பிட்சுக்களின் முரட்டுத் தனம். தகப்பனுக்கு கிடைத்தது போல ஒரு தெளிவான குரு

தனக்கு கிடைக்கவில்லை. சூழ்ச்சியும், வஞ்சனையுமாய் அரசியல் செய்ய இந்த புத்த பிட்சு குழு ஒன்று கூடி என்னை ஏமாற்றிவிட்டன.

சோழ தேசத்து நாவாய்கள் சாவகத் தீவுக்கு நடுவே புகுந்து ஸ்ரீ விஜயம் வந்து கடை விரிக்கவும், சீன தேசத்து நாவாய்கள் ஸ்ரீ விஜயத்திற்கு வந்து கடைவிரிக்கவும், முசி நதிக் கரையில் இளைப்பாறவும் அருமையான வசதிகள் தகப்பன் செய்து கொடுத்திருந்தான். அதற்காக இராஜராஜ சோழரிடம் நன்றியாக இருந்தார். சீன தேசத்து சாங் வம்சத்து அரசர்களும் ஸ்ரீ விஜயத்தின் மீது அன்பு பாராட்டினார்கள். எரி அம்புகள் கொடுத்தார்கள். இரண்டு பக்கமும் வரி வசூலித்து கோட்டை கட்டி, உள்ளே தங்கும் இடம் கொடுத்து பண்டக மாற்றங்கள் ஏற்பாடு செய்து ஸ்ரீ விஜயம் அமைதியாகத்தான் இருந்தது. சாவகர் தீவை பிடிக்க வேண்டும் என்று எகிறி அங்குள்ள சிற்றரசர்களை நோக்கி பயணப்பட்டு அங்கே உள்ள ஏரலங் கனின் கோபத்தை சம்பாதித்துக் கொண்டாகிவிட்டது.

ஏரலங்கன் சைவன். யாழ்ப்பாணத்துக்காரன். மானாபர ணுக்கு எதிரி. அவனுடைய இடத்தை பிடிக்க முடியாமல் சாவகத் தீவின் கிழக்குப் பகுதியை தங்களுடைய செல்வாக்கை நடத்த முடியாமல் புத்த பிட்சுக்கள் தேவையில்லாமல் இந்த வியா பாரத்தில் பிரச்சினை உண்டாக்கினார்கள். இதில் மிகக் கொடூரம் கைகளை சீவி ஒன்றாக கட்டி அனுப்பியது. யார் அதை பார்த் தாலும் நடுங்குவார்கள். இதை ஒரு புத்த பிட்சு முன் நின்று செய்திருக்கிறார். கூர்மையான கத்தியால் உள்ளங்கையை செதுக்கியிருக்கிறார். அலற அலற வெட்டியிருக்கிறார். அழுத்தி கட்டியிருக்கிறார். புத்த பிட்சுக்களுக்குத்தான் இந்த மாதிரி குரூரங்கள் வரும். கையில் வாள் கொடுத்து வா. ஒன்று நீ அல்லது நான் என்று போரிடுகின்ற வித்தையை புத்த பிட்சுக் கள் செய்ததே இல்லை. நான் மாட்டிக் கொண்டு விட்டேன். இது மிகப் பெரிய வெஞ்சினத்தை ஏற்படுத்தும் என்று தெரியாமல் போய்விட்டது.

இவ்வளவு தொலைவு வங்கத்தில் வர முடியுமா. எத்தனை வீரர்கள் வர முடியும் என்று நினைத்தேன். ஆனால் திட்டமிட்டு கங்கை கரையோரம் படையெடுத்து போய் அங்கு வங்கங்கள்

எடுத்து அதேவிதமான வங்கங்கள் தானும் செய்து மானா பரணனிடமும் கொள்ளையடித்து, பாண்டியர்களிடமும் எடுத்து, சேரர்களிடமும் எடுத்து நூற்று அறுபது கலன்கள் வந்துவிட்டன என்று சொல்லுகிறார்கள். இரண்டரை லட்சம் வீரர்கள். எப்படி ஜெயிக்க முடியும். நாற்பதாயிரம் வீரர்களை வைத்துக் கொண்டு என்ன செய்ய முடியும். என்ன போர் நடத்துவது.

ஆனால் போரிடாது போனால் ஏரலங்கன் வழித்துக் கொண்டு சிரிப்பான். கடாரத்து அரசர்கள் அத்தனை பேரும் காலில் விழுந்து கெஞ்சிக் கொண்டு இருந்தார்கள். உள்ளங் கால்களை தடவி, தைலம் போட்டு சுத்தம் செய்வார்கள். அவர் களெல்லாம் சிரிப்பார்கள். ஸ்ரீ விஜயத்திலும் மானம் போயிற்று. கடாரத்திலும் மானம் போயிற்று. தாண்டி சாவகத் தீவிலும் இழிவு ஏற்பட்டு விட்டது. எனவே, போரிடுவது தவிர வேறு வழி இல்லை. போர் என்ற விஷயமாவது நாம் திருத்தமாகச் செய் வோம்.

அவன் தன் சபையை கூட்டினான். புத்த பிட்சுக்கள் வந்தார்கள். வெளியே தள்ளி கதவை சாத்தினான். எப்படி எதிர் கொள்வது என்று கேட்க, அவர்கள் சமாதானம் என்று சொன் னார்கள். இல்லை. போரிடப் போகிறோம் என்று அவன் தீர்மான மாக இருந்தான். எல்லா பக்கங்களிலும் வளைத்துக் கொண்டு அவர்களை தாக்க வேண்டுமென்றான்.

புத்த பிட்சுக்கள் அவன் திட்டத்தை ரகசியமாகத் தெரிந்து கொண்டு தேர்களில் ஏறி, ஸ்ரீ விஜயத்திலிருந்து முசி நதி தாண்டி தெற்கு முனைக்கு போய், அங்கிருந்து ஏரலங்காவோடு சமாதானம் செய்து கொள்ளலாம் என்று போனார்கள்.

ஒரு பீடை ஒழிந்தது. எதிரியை எதிர்கொள்வது தான் பாக்கி. அவன் வீரர்களிடம் உற்சாகமாகப் பேசினான். ஆவேச மாகச் சொன்னான். என்னிடமிருந்து வியாபாரம் செய்துவிட்டு என்னையே தாக்க வருகிறாயா என்று எகிறினான். ஆனால் வீரர்களுக்குள்ளே நெருப்பு எரியவில்லை. கொஞ்சம் தழல் சூடு போலத்தான் அவர்கள் இருந்தார்கள்.

இராஜேந்திரர் சோழர் உடனடியாக ஸ்ரீ விஜயத்தின் மீது படையெடுக்கவில்லை. காடுகளூடே தன் படைகளை நிற்க வைத்து காத்திருந்தார்.

முதல் தளபதி ஸ்ரீ விஜயம் படைக்கு விசுவாசமாக இல்லாது பத்து வீரர்களோடு இராஜேந்திர சோழரை நோக்கி சமாதானம் பேசப் போனான். இராஜேந்திர சோழரிடம் அறிமுகப் படுத்தப்பட்டான். அவர் அவனை அருகே அழைத்து கைகளை பற்றிக் கொண்டார். 'இவன் துரோகி' சினந்தார்.

''என்னுடைய வணிகர்களுடைய கைகளை இப்படித் தானே இழுத்து பிடித்து அறுத்தீர்கள்'' என்று உறுதியாக தளபதி யின் கைகளை பற்றிக் கொண்டார்கள். இரண்டு வீரர்கள் முன் னேறி அந்த தளபதியின் கைளை சீவினார்கள். உள்ளங் கைகளை அறுத்தார்கள். அழுத்தினார்கள். இறுக்க கட்டு போட் டார்கள். கால்களை சங்கிலியால் பிணைத்தார்கள். கூப்பிய வண்ணமே தத்தி தத்தி அந்த தளபதி தேரில் ஏறி உட்கார்ந்து, அழுதபடியே சங்கரராம விஜயோத்துங்கனிடம் போய் சேர்ந் தான்.

போர் நிச்சயம் என்றாகிவிட்டது. உறுதியாகிவிட்டது. சங்கர ராம விஜயோத்துங்கன் ஒரு தவறு செய்தான். அவன் காத்திருக் கலாம். காத்திராமல் காடுகளூடே இருக்கின்ற சோழப் படையை நோக்கி, தன் படையை பிரித்து அனுப்பினான். ஸ்ரீ விஜயப் படை ஒற்றுமையாக, உறுதியாக பல நாட்கள் கோட்டைக்குள் இருந் திருந்தால் சோழ வீரர்கள் சோர்ந்து இருப்பார்கள். ஊர் திரும்ப ஆவேசப்பட்டு இருப்பார்கள். ஆனால் அந்த முட்டாள் சோழ வீரர் களைத் தாக்க வர, இராஜேந்திர சோழர் சிரித்துக் கொண்டார்.

கொஞ்சம் கூட அறிவில்லாத ஒரு யுத்தத்தை நடத்து கிறானே என்று தளபதிகளிடம் கேலி பேசினார். வெகு எளிதில் ஸ்ரீ விஜயப்படை அடிபட்டது. குற்றுயிரும், குலை உயிருமாய் ஓடியது.

ஒரு சிறிய இரக்கம் கூட வேண்டாம். எவனுக்கும் தர வேண்டாம். அத்தனை பேரையும் அடித்து நொறுக்குங்கள். கை கூப்பினாலும் அடியுங்கள். காலில் விழுந்தாலும் மிதி யுங்கள். ஒன்று கொல்லுங்கள் அல்லது முடமாக்குங்கள். மறுபடி யும் போர் என்ற இடத்திற்கு வராதபடி செய்யுங்கள்'' என்று இராஜேந்திரர் ஆவேசமாக கட்டளையிட்டார்.

நம்முடைய வணிகர்களின் கை ஞாபகம் இருக்கிறதா என்று தூண்டிவிட்டார். வெறி பிடித்தது போல இருந்த சோழப்படை மெல்ல மெல்ல முன்னேறி ஸ்ரீ விஜய கோட்டையை சுற்றிக் கொண்டது. கல்லாலும், மூங்கில்களாலும், பெரிய மரத் தடுப்பு களாலும் ஆன அந்த நகரத்தை அவர்கள் சூழ்ந்து கொண்டார் கள்.

''எரி அம்புகளை விடலாமா.''

''வேண்டாம். இந்த இடம் வேண்டும். இதையும் நாம் சூர்ய வர்மனுக்கு பரிசளிப்போம் அல்லது நாம் குடியிருப்போம்'' என்று அவர் சொன்னார். எனவே, கோட்டையை அழிக்காமல் காப்பாற்றினார்கள்.

கோட்டைக்கு உள்ளிருந்து ஆறு நாட்கள் சங்கரராம விஜயோத்துங்கன் தவித்தபடி இருந்தான். ஒரு அம்புகூட உள்ளே வரவில்லை. ஒருவரைக் கூட உள்ளே அனுமதிக்க வில்லை. சோழர் பொறுமை அவனுக்கு ஆச்சரியமூட்டியது.

புத்த பிட்சுக்களால் எப்பொழுதுமே பதட்டம் நிறைந்தவ னாக வளர்க்கப்பட்ட அந்த அரசன் பொறுமை தாங்காமல் கதவை உடைத்துக் கொண்டு வெளியே வந்து கத்தியை உயரே தூக்கி, நூறு வீரர்களோடு இராஜேந்திர சோழரை நோக்கி வந்தான். மடக்கப்பட்டான். கடுமையாக தாக்கப்பட்டான். அவனை பளிச்சென்று ஓரம் கட்டி, குதிரையிலிருந்து கீழே தள்ளி, முழங்கால் இடரச் செய்து மற்ற வீரர்களையும் தாக்கி னார்கள். குதிரைகளை பறித்துக் கொண்டார்கள்.

ஒரு பரந்த புல்வெளியில் ஒரு சிறிய ஓடையின் பக்கம் அவன் பின் கை கட்டி உட்கார வைக்கப்பட்டான். பலமுறை கன்னத்தில் அடிக்கப்பட்டான். கன்னத்தில் கத்தியால் கீறி னார்கள். விரல்களுக்கு இடையே குச்சியை கொடுத்து, அழுத்தி கதற வைத்தார்கள். கால் விரலை அழுத்தி மிதித்து வீங்க வைத்தார்கள். உடைகளை உருவி கோமணத்தோடு நிறக வைத்து பிருஷ்டத்தில் பிரம்பால் பலமுறை அடித்தார்கள். அவன் மண்ணில் விழுந்து புரண்டு கண்ணீர் வழிய கதறி னான்.

'என்னை விட்டு விடுங்கள். அல்லது கொன்றுவிடுங்கள்' என்று கெஞ்சினான். இராஜேந்திர சோழர் வீரர்களை அமைதியடையச் சொன்னார்.

அவன் கையில் விலங்கு பூட்டப்பட்டது. தலைமயிரை பிடித்து இழுத்துக் கொண்டு வந்து முன் பக்கம் சிரைக்க வைத்து முகத்தில் கரும்பும், வெள்ளையுமாக வண்ணம் எழுதி, கோவேறுக் கழுதையில் ஏற்றி இழுத்துக் கொண்டு வந்தார்கள்.

★ ★ ★

அத்யாயம்

106

எல்லா திக்கிலிருந்தும் படைவீரர்கள் வந்து இறங்கினார்கள். சாவகத் தீவின் நடுவே உள்ள கடல் வழியாக பெரிய மரக்கலன்கள் வீரர்களோடு வந்தன. அருகில் உள்ள தீவுகளில் இறங்கின. ஓய்வெடுத்தன. ஒன்றன் பின் ஒன்றாய் முசி நதிக் கரையைத் தொட்டன. அதிலிருந்து வீரர்களும், யானைகளும், குதிரைகளும் இறக்கப்பட்டார்கள்.

குதிரைகள் ஆரோஹணித்து சோழ வீரர்கள் முசி நதி கரை வழியாக ஒருநாள் பயணமாக ஸ்ரீ விஜயம் நோக்கி புறப்பட்டார்கள். சாவகத் தீவின் அரசன் ஏரலங்கன் ஒரு படையோடு சோழ தளபதியின் உத்தரவு பெற்று இராஜேந்திர சோழரை வரவேற்க வந்திருக்கிறேன் என்று சொல்லி, முசி நதிக்கரையில் அவனுடைய மஞ்சள் நிறக் கொடி பறக்க இறங்கினான்.

அரசனாக இருந்தாலும் தழைய தழைய பஞ்சகச்சம் கட்டாது, முழங்காலுக்கு மேல் இறுக்கி அணிந்து அதைச் சுற்றி மரப்பட்டையில் காழகத்தின் மீது பட்டை அணிந்து, தோல் கவசம் பூண்டு, சாய்ந்த கொண்டையுடன், கொண்டையில் சுற்றிய மணி மாலையுடன் கிளிஞ்சல்கள் நிரம்பிய மலைகளோடும், சங்கு வளையல்களோடும், புஜங்களில் இறுக்கி கட்டிய பித்தளை கேயூரங்களோடும், குறுகிய கத்திகளோடும் கரை இறங்கினான்.

சாதாரண சோழ தளபதிக்கும் வணக்கம் சொன்னான். தன்னைத் தானே வலிய வந்து அறிமுகப்படுத்திக் கொண்டான். தன்னுடையது இந்து சாம்ராஜ்யம் ஏன்று பெருமைபட கூறினான். சிவன் கோவில் பிரசாதம் என்று குவித்து வைத்த விபூதி தட்டை நீட்டினான். சோழ வீரர்கள் பயபக்தியுடன் அதை எடுத்துக் கொண்டார்கள். நம்மவன் சைவன் என்று ஆனந்தப்

பட்டார்கள். அந்த பரிமாற்றம் நன்றாக இருந்தது. பதிலுக்கு சோழ வீரர்கள் இளநீரும், தேனும், சோழ தேசத்து அப்பமும், அரிசியும் கொடுத்தார்கள். துவரை கொடுத்தார்கள். வாங்கி கண்ணில் ஒற்றிக் கொண்டான்.

சோழப்படைகளின் பாதுகாப்போடு ஸ்ரீ விஜயம் நோக்கி வந்து எல்லையில் சக்கரவர்த்தி இராஜேந்திர சோழரின் கட்டளைக்காக காத்திருந்தான். அவனுடைய எல்லா செயல் களும் தன்மையாக இருந்தன. மிருதுவாக இருந்தன. அவன் போர்வீரர்கள் கூட வேகம் இல்லாதவர்களாகவும், துடிதுடிப்பு இல்லாதவர்களாகவும் இருந்தார்கள். வெறுமே காட்டுவாசிகள் போல இருந்தார்கள். ஆனால் அவன் படைவீரர்கள் அவனுக்கு மிகப் பெரிய மரியாதை கொடுத்தார்கள். அவன் எழுந்திரு என்று சொன்னாலும் எழுந்திருக்காமல் மண்டியிட்டு பெண் பிள்ளை போல வணங்கியே கிடந்தார்கள். அவன் உணவு உண்ணும்போது விக்கினால் அத்தனை பேரும் எழுந்து நின்றார் கள். அவன் தண்ணீர் குடித்து விக்கலை சரி செய்த பிறகு அவனை நோக்கி வணங்கி, பிறகு சாப்பிடத் துவங்கினார் கள். அந்த மரியாதையெல்லாம் சோழ வீரர்களுக்கு வியப்பாக இருந்தது.

அரசன் என்பவன் விஷ்ணுவின் அம்சம். கடவுளின் ரூபம் என்று அவர்கள் சொல்ல ஆமாம் என்று தலையாட்டினார் கள். ஆனால் இவ்வளவு பணிவு வேண்டுமா என்று மனதிற் குள் நினைத்துக் கொண்டார்கள்.

கோட்டை வாசலில் வெளியே வந்து ஏரலங்கன் என்ற அந்த சாவகத் தீவு அரசனை இராஜேந்திர சோழர் சந்தித்தார். இறுக கைகளை பிடித்துக் கொண்டார். மார்போடு தழுவிக் கொண்டார்.

“நீங்கள் மிகப் பெரிய உதவிகள் செய்ததாக என் வணிகர் கள் சொல்லியிருக்கிறார்கள். உங்களுடைய தேசங்கள் பல துண்டு தேசங்களாக பல மன்னர்களால் ஆட்சி செய்யப்பட்டு கொண்டிருப்பினும் நீங்களே முதன்மையானவர். நல்ல துறை முகம் வசதிகள் செய்து கொடுக்கிறவர் என்று சொன்னார்கள். சோழ வணிகர்களின் சார்பில், சோழ அரசன் என்ற பெயரில்

உங்களுக்கு என் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள் கிறேன்.'' இராஜேந்திர சோழர் கைகளை கூப்பினார்.

அவன் மண்டியிட்டான். அவர் முழங்காலை முத்தமிட்டான்.

''நான் உங்கள் தளபதியினும் கீழான சாதாரண தகுதிகள் உடையவன். என் ஜனங்கள் என்னை ஆராதிக்கிறார்கள். மற்றபடி உங்களின் வலிமையோ, திறமையோ எனக்கு இல்லை. நீங்கள் என்னோடு நல்ல நண்பராக இருக்க வேண்டும் என்பதுதான் என் பெருத்த ஆசை. உங்களுடைய மரக்கலன் கள் இங்கு வந்து தங்கி எங்களை மேன்மைப்படுத்த வேண் டும் என்பதுதான் என் விருப்பம். உங்களுடைய உடைகள்தான் எங்களுக்கு மானம் காக்கிறது. பெருத்த அளவில் வியாபாரம் செய்ய முடியவில்லை எனினும், சீனர்கள் நல்ல காசு கொடுக் கிறார்கள் என்பதாலும் அவர்களோடு போட்டியிட முடியாது என்பதாலும் நாங்கள் குறைந்த அளவே பொருளை வாங்கு கிறோம். நீங்கள் எங்களுக்கு அன்போடு, ஆதரவோடு நிறைய பொருட்களை இறக்குமதி செய்ய வேண்டும். நல்ல உடைகள் தான், நல்ல பாத்திரத்தில் சமைப்பதுதான் ஒரு சமூகத்தின் நாகரீகத்தை உயர்த்தும். நல்ல பண்டிதர்களை எங்களுக்கு அனுப்ப வேண்டும். கடல் கடந்து பண்டிதர்கள் இங்கு வரமாட் டேன் என்கிறார்கள். பூசாரிகள் மட்டுமே வருகிறார்கள். அதுவும் இலங்கை மண்ணைச் சார்ந்த தமிழ் பூசாரிகள் மட்டுமே இருக் கிறார்கள்.

பௌத்தத்தை தடுத்து நிறுத்த எங்களால் ஆனதை செய் கிறோம். பௌத்தமாய் மாறிவிடுமோ என் தேசம் என்கிற பயம் இருந்தது. ஆனால் உங்கள் வருகையால் அது தீர்ந்தது. உங்க ளுக்கு இணையான நாகரீகத்தை நாங்கள் பெற வேண்டும் என்று விரும்பி, உங்கள் தயவை நாங்கள் கைகூப்பி வேண்டி கேட்டுக்கொள்கிறோம்.''

அவன் சுத்தமான சமஸ்கிருத மொழியில் திறமையாக, கோர்வையாக, கவனமாக பேசினான். அவன் முகபாவங்களும், பேச்சு த்வனியும் இறைஞ்சுகின்ற விஷயமும் இராஜேந்திரரை மெல்ல நெகிழ்த்தின. ஆனால் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

''உங்கள் விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும். உங்க ளுடைய இடத்தில் நாங்கள் துறைமுகங்கள் கட்டிக்கொள்ளவும்,

பண்டகசாலை அமைத்துக் கொள்ளவும், அக்கசாலை வைத்துக் கொள்ளவும், கோவில்கள் கட்டிக் கொள்ளவும் நீங்கள் அனு மதிக்க வேண்டும்.

நாங்கள் ஆனைமங்கலம் என்ற ஒரு தீவை ஸ்ரீ விஜயத் திற்காக கொடுத்திருக்கிறோம். அதேபோல சாவகத் தீவில் எங்க ளுடைய நன்மைக்காகவும், உங்களுடைய வளர்ச்சிக்காகவும் நான் நல்லவை பலதும் செய்வேன். உங்களைத் தேடி பூசாரிகள் மட்டுமல்ல, பண்டிதர்களும் வருவார்கள். சிற்பிகள் வருவார் கள். நல்ல மரக்கோட்டை அமைத்துத் தருகின்ற தச்சர்கள் வரு வார்கள். உங்களுடைய அன்பும், அமைதியும் எங்களுக்கு பிடித்திருக்கின்றன. நாம் இருவரும் கைகோர்த்து நல்ல மக்களை வளர்ப்போம். நல்ல நாகரீகம் வளர்ப்போம். சைவ சம யத்தை உயர்த்துவோம். வாருங்கள் உணவு அருந்தலாம்'' என்று அழைத்துக் கொண்டு போய் எதிரே அமர்த்தி ஒன்றாக சாப்பிட் டார்.

சாவக மன்னன் ஏரலங்கன் திணறிப் போனான்.

ஸ்ரீ விஜயமன்னர் சங்கரராம விஜயோத்துங்கனை என்ன செய்வது என்று கேட்டார். ஏரலங்கன் மனம் அறியவே அந்த கேள்வி அவரிடமிருந்து வந்தது.

''அவனை என்னிடம் ஒப்படைத்துவிடுங்கள்.''

''ஏன்.''

''அவனோடு சிலவற்றை பேச வேண்டியது இருக்கிறது. புத்த பிட்சுக்களை கிழக்கே அனுப்பி எங்கள் மக்களை தொந்தரவு செய்தான். எங்கள் பண்டகசாலையை ஆட்கள் அமைத்து தீயூட்டினான். கடற்கொள்ளைக்காரர்களுக்கு காசு கொடுத்து எங்கள் மீது படையெடுக்க வைத்தான். நாங்கள் மடக்கி, அடித்து கேட்டபோது, சங்கரராம விஜயோத்துங் கனைப் பற்றி அவர்கள் சகலமும் சொன்னார்கள்.

தன்னுடைய படைகள் எதற்கு சாக வேண்டும். ஏரலங்கனை கொல்ல கடற்கொள்ளைக்காரர்கள் போதுமே என்று ஏரலங்கன் வளர்த்த கடற்கொள்ளைக்காரர்கள்தான் அரேபிய கலன்களுக் கும், ஸ்ரீ விஜய கலன்களுக்கும், சோழ கலன்களுக்கும், வங்க

தேசத்திலிருந்தும், ஒட்ட தேசத்திலிருந்தும் வந்த கலன்களுக்கும் மிகப் பெரிய தொந்தரவாக இருந்தார்கள்.

இந்த கடற்கொள்ளைக்காரர்கள் எங்களுடைய கொடியை ஏற்றிக் கொண்டு போய் எங்களுடைய மன்னன் ஏரலங்கன் உத்தரவு என்று சொல்லி, வங்கத்தின் மரக்கலன்களை சிதற அடித்திருக்கிறார்கள். இதனால் எந்த தேவையும் இல்லாமல் நாங்கள் பலமுறை வங்க வீரர்களாலும், ஒட்டதேசத்து வீரர் களாலும் நடுவழியில் தாக்கப்பட்டோம். எதற்கு தாக்குகிறார்கள் என்று தெரியாமல் அவஸ்தைப்பட்டோம். அவர்களை தாக்கிய கடற் கொள்ளையர்கள் எங்கள் தேசத்தைப் பற்றி பொய் சொல்லி விவரித்திருக்கின்றார்கள்.

இது ஒரு நம்பிக்கை துரோகம். பித்தலாட்டம். அயோக் கியத்தனம். இதற்கு எங்கள் மக்கள் பலியானார்கள். எங்கள் வீரர்கள் அடித்து நொறுக்கப்பட்டார்கள்.

சங்கரராம விஜயோத்துங்கனை நான் அழைத்துக் கொண்டு போய் என் மக்களுக்கு நடுவே கொடுத்துவிடுவேன். அவர்கள் தங்கள் கைகளால் அவனை பழிதீர்த்துக் கொள்வார் கள்.''

''அப்படியென்றால், என்ன புரியவில்லையே.''

''எதிரியை அழிக்க நாங்கள் ஒரு புதிய முறையை கையாள்வோம். எல்லோருக்கும் இரண்டு சாண் நீள குச்சியை கொடுத்துவிடுவோம். பெண்களுக்குக் கூட அவை வழங்கப் படும். உன் புருஷனை கொன்றது இவன்தான் என்று கடற் கொள்ளையனை காட்டினால் பின்கை கட்டப்பட்டிருக்கின்ற கடற் கொள்ளையனை நோக்கி அவள் குச்சியால் அடிப்பாள். குத்துவாள். தொண்டையில், காதில், கன்னத்தில், கண்களில், நெற்றியில், பின் பக்கத்தில், பிருஷ்டத்தில், ஆசனவாயில், ஆண்குறியில் அந்த குச்சியால் அவர்கள் தாக்குவார்கள். ஒன்றி ரண்டு பெண்கள் அல்ல. ஒரு நூறு பெண்கள் ஒன்றுகூடி அடித்து, சில நிமிடங்களிலேயே மரணமடையச் செய்துவிடு வார்கள். இந்த மரணம் மெல்ல நடைபெறும். ஒரு ஆயிரம் அடிகளுக்குப் பிறகுதான் அந்த மரணம் நடைபெறும். அப்படி நிதானமாக அவர்கள் தண்டனை தருவார்கள்.''

''அடேயப்பா. கடும் சித்ரவதையாக இருக்கிறதே. ஒரே வீச்சில் கழுத்தை வெட்டி விட்டு போகலாமே.''

''அவன் அப்படி செய்யவில்லையே. துடிக்க வைத்தானே. திணற வைத்தானே. அந்த அவஸ்தையை அவன் பட வேண்டாமா. வெறும் மீனவர் படகுகளில் கூட உள்ளே குதித்து மீன்களை வாரிக் கொண்டு போவான். கேவலமானவன். அவர்கள் கதறி அழுதபோதும் சொல்லாமல், கொள்ளாமல் மரக்கூண்டுக்குள் வைத்து கடலில் தள்ளிவிடுவான்.''

''என்ன அது.''

''இடுப்பு உயர மரக்கூண்டு இருக்கும். அந்த மரக்கூண்டு நீரில் மிதக்கும். ஒருவனை உள்ளே உட்கார வைத்து, அதன் மீது பலகையால் குறுக்கும் நெடுக்கும் ஆணிகள் அடித்து அந்த கூண்டை தண்ணீரில் போட்டுவிடுவார்கள். தகர்க்க முடியாதபடி மிக உறுதியாக அந்த மரக்கூண்டு இருக்கும். கடும் தேக்கில் செய்யப்பட்டு இருக்கும். அவனுக்கு அதுதான் தண்டனை. கடவுள் அருள் இருப்பின், கடவுள் மன்னித்துவிட்டால் அவன் எவ்விதமாவது கரை சேருவான். அல்லது காப்பாற்றப்படுவான். அப்படி இல்லையெனில் பசியால் வாடி, நீரில்லாமல் அவஸ்தைப்பட்டு மெல்ல மெல்ல சாவான். மழை நீரும், கடல் நீருமே அவனை காப்பாற்றும். சில சமயம் சுறாக்களால் அந்த கூண்டுகள் பந்தாடப்பட்டு மரண பயத்தோடு மரணமடைவதும் உண்டு.''

''இது அதைவிட கொடுமையாக இருக்கிறதே.'' இராஜேந்திர சோழர் வியந்தார்.

''இது சீனர்களுடைய முறை. சட்டென்று கொல்வதற்கும் நாங்கள் திட்டங்கள் வைத்திருக்கிறோம். உபாயங்கள் வைத்திருக்கிறோம்.''

''என்ன அது.''

''மூங்கிலை வளைத்து கை, கால்களை பிணைத்துவிடுவோம். வளைந்த மூங்கிலை கயிறு போட்டு இறுக்கி இருப்போம். கயிறுகளை துண்டித்துவிட மூங்கில்கள் வேகமாக நகரும். உடம்பு இரண்டாக கிழியும். தசையும், உதிரமும்

புல்வெளியில் சிதறும். காக்கைகளும், கழுதைகளும், நாய்களும், நரிகளும், எலிகளும் அந்த உடம்பை உண்ணும்.''

''அடேய், ஏரலங்கா. சோழர்கள் உத்தமர்களய்யா. அம்பு அடித்து கொல்லுவோம். சிரச்சேதமும் செய்வோம். அவசிய மெனில் யானையால் தலை நசுக்குவோம். யானையால் நசுக் குவது என்பதே அபூர்வம். நீங்கள் சொல்லுகிற விஷயங்களெல் லாம் வயிறு கலக்குகின்ற, கோரமான, மனிதத்தின் குரூரமான விஷயங்களாக இருக்கின்றன.

எனக்கு சங்கரராம விஜயோத்துங்கன் வேண்டாம். அவனை நீயே வைத்துக் கொள்.'' நகர்ந்து போய் சங்கர ராமனை கைப்பிடியாய் இழுத்து வந்து ஏரலங்கனின் காலில் விழ வைத்தார்.

அவன் நிமிர்ந்து பார்த்து இராஜேந்திரரை நோக்கி அலறி னான்.

''என்னை சோழ தேசம் கொண்டு போய் விடுங்கள். அங்கு சிறையில் அடையுங்கள். இவனிடம் ஒப்படைக்காதீர் கள்'' என்று கெஞ்சி கேட்டுக் கொண்டான். பலமுறை கால் களை தொட்டு அழுதான்.

''இல்லை. உன்னுடைய முடிவு ஏரலங்கன் கையில்.'' இராஜேந்திர சோழர் சொல்லிவிட்டு அரண்மனைக்குள் போனார்.

ஏரலங்கன் சங்கரராம விஜயோத்துங்கனை தலைமுடி பற்றி இழுத்துக் கொண்டு வந்து கழுதையில் ஏற்றி தன் னுடைய ஊருக்கு கொண்டு போனான். வழிநெடுக ஸ்ரீ விஜ யத்து மக்கள் தங்கள் அரசனை ஏரலங்கன் இழுத்துப் போவதை பார்த்து வாய் பொத்தி அதிகம் சப்தம் எழாமல் அழுதார்கள். இனி தங்கள் கதி என்ன என்று தவித்தார்கள்.

ஸ்ரீவிஜயத்தின் மணற்பாங்கான பொன்னிற மணல்களை கொண்ட கடற்கரை தவிர, அங்குள்ள கிடங்குகளைத் தவிர, கொஞ்சம் கிராமத்திற்கு உள்ளே இருக்கின்ற பெரிய பண்டகச் சாலைகளைத் தவிர, மற்ற எல்லா இடங்களும் தீக்கிரையாக கப்பட்டன. இடித்து தள்ளப்பட்டன. புத்த விகாரைகளை தரை மட்டமாக்கினார்கள். ஒரு புத்த பிட்சு திணறினார். திமிறினார்.

''ஒரு இந்துவாய் என்னை கொல்கிறாயா. அல்லது சோழ தேசத்து வீரனாக என்னைக் கொல்கிறாயா'' என்று கேட்டார்.

''உங்களுக்கு எது சௌகரியமோ அப்படி'' என்று அருண் மொழிபட்டன் பதில் சொன்னான்.

''இந்துவாய் என்னை கொல்ல உன்னால் முடியாது. சோழ தேசத்து எருமை என்று நான் உன்னை நினைத்துக் கொள் வேன். என்னை இந்துவாக கொல்ல வேண்டுமென்றால் என்னோடு வாதில் ஜெயிக்க வேண்டும். வாதில் நான் ஜெயித் தால் என்னை விடுதலை செய்ய வேண்டும்.''

அருண்மொழிபட்டன் முன்னேறி பளார் என்று அவன் கன்னத்தில் அடித்தான்.

''நீ புத்த பிட்சு அல்ல. ஸ்ரீ விஜயத்தின் கைதி. சோழ தேசத் தின் எதிரி.'' மறுபடியும் அடித்தான். புத்த பிட்சு தரையில் துவண்டு விழுந்தான்.

''ஆயினும் புத்தத்திற்கு எதிராக உனக்கு நான் பதில் சொல்ல முடியும்.'' பிட்சுவை எட்டி உதைத்து உட்கார வைத்தான். பேசத் துவங்கினான்.

''உலகம் அநித்யமானது என்பதாலேயே அது நித்ய வஸ்து அல்ல என்று சொல்வதற்கில்லை. நித்ய வஸ்துவின் சாயலை அநித்யமாக கொண்டிருக்கிறது. காற்று என்கிற நித்யமான விஷயத்தை நீர்க்குமிழ் என்கிற வஸ்து தாங்கிக் கொண்டிருப்பது போல, நெருப்பு என்ற நித்யமான விஷயத்தை சூரியன் என்கிற அநித்யமான விஷயம் தாங்கிக் கொண்டிருப்பது போல, நீர் என்கிற நித்யமான விஷயத்தை உலகிலுள்ள அத்தனை உயிர் களும் தாங்கிக் கொண்டிருப்பது போல, நித்யமான, மிகப் பிரகாச மான, மிக அடர்த்தியான 'அது' என்று வேதங்கள் குறிப்பிடுகின்ற ஒரு சத்தியத்தை எல்லா உயிரும் கொண்டிருக்கின்றன.

எனவே, இது நித்யமா, அநித்யமா என்ற பேச்சுக்கே இடம் இல்லை.

அநித்யம் என்ற பேச்சு வரும்போதுதான் இந்த உலகத் தினுடைய வாழ்க்கை அதன் ஆசாபாசங்கள், இல்லறம், அர சாட்சி, போர், சமாதானம் எல்லாம் கேள்விக்குறியாகின்றன. உண்மையில் இவை எல்லாம் அநித்ய சாயல் கொண்டிருப்பினும்

இதற்குள்ளே இருக்கின்ற உக்ரம், உணவு செரிக்கும்போது ஏற்படுகின்ற உக்ரம், கூடும்போது ஏற்படுகின்ற உக்ரம், போர் செய்யும்போது ஏற்படுகின்ற உக்ரம் மிக மிக நிரந்தரமானது. இந்த உக்ரம் மனிதருடைய யோசிப்பிலும், அவன் வெளிப் படுத்தும் மொழியிலும் கூட இருக்கிறது. எனவே உக்ரம் நித்ய மான வஸ்து. உலகம் அநித்யமான வஸ்து.

இந்த உக்ரம்தான் பூமியை சுழல வைக்கிறது. இந்த சுழல் உக்ரத்தை அதிகப்படுத்துகிறது. எது சுழல்கிறதோ அதுவே மற்ற வற்றையும் சுழல வைக்கிறது.''

''ஒரு மனிதன் வாழ்வை எப்படி புரிந்து கொள்ள வேண் டும்.''

''நித்யமான வஸ்து உள்ளே இருக்கிறது. அநித்யமான வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எனவே வாழ்வின் அநித்யத்தை அலட்சியம் செய்யாமல் ஒரு நித்ய வஸ்து வாழ் கிறது என்பதையும், அந்த நித்ய வஸ்து ஒரு அநித்ய உரு வத்தை கொண்டிருக்கிறது என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும். இதுவே சனாதன தர்மம்.''

''நான் நித்ய வஸ்துவா. அநித்யமா.''

''இரண்டும்தான். நான் உயிரோடு உன்னிடம் பேசிக் கொண்டிருக்கிறேனே இது அநித்யம். நான் இறந்து போய் மறுபடியும் பிறக்கப் போகிறேனே அது நித்யம். பல பிறவிகள் எடுக்கப் போகிறேனே அது நித்யம். இதை உங்கள் போதி சத் துவர் கதை கூட சொல்கிறது.

மறுபிறவி என்பது ஒரு உக்ரத்தால் ஏற்படுவது. உக்ரம் என்பதை பல்வேறுவிதமாக நாம் விவரிக்க முடியும். நான் இரண்டு அறை விட்டேனே. அது உக்ரம். பசிக்கிறது என்கிற போது உங்களுக்கு சோறு கொண்டு வைத்து பக்கத்தில் வெஞ்சினம் வைக்கப் போகிறேனே அதுவும் உக்ரம். என் னுடைய பசி எனக்கு தெரிந்ததால் என்னுடைய பசியின் உக்ரம் நான் அனுபவித்ததால் அந்த உக்ரம் கொடுத்த பாடத்திலிருந்து உன்னுடைய உக்ரம் தவிர்க்க, உம்முடைய பசியை தவிர்க்க, நான் உணவு ஏற்பாடு செய்கிறேன். நான் சொல்வது புரிகிறதா.

எனக்கு ஏற்பட்ட வலி உனக்கு ஏற்படுகிறபோது உன்னை புரிந்து கொண்டு உனக்கு சோறிடுகிறேன். ஆக, என்னுடைய



கங்கை கொண்ட சோழீஸ்வரர் கோவிலுக்கு அருகே வசிக்கும் கோமகன். அவர் வீட்டில் அந்த ஊர் வரைபடம் விரித்து வாழ்ந்த விவரம் சொல்கிறார்.

சோறிடுதலுக்கும் என் கருணைக்கும் என்னுடைய உக்ரம் என்னுடைய பசிதான் காரணம். அது உன்னை கொன்றுவிடும் என்று எனக்குத் தெரியும். அதில் நான் தவித்திருத்திருக்கிறேன் என்பதை அனுபவப்பூர்வமாக உணர்கிறேன். உக்ரம் இல்லாது வாழ்வு இல்லை. அதற்கே சத்தியம் என்று பெயர். அந்த உக்ரத்தின் உச்சியில் இருப்பவனே குரு என்று கூப்பிடப்படுவான். அந்த உக்ரத்தை புரிந்து கொண்டவனே மகான் என்று அழைக்கப்படுவான். அந்த உக்ரத்திற்கு இயற்கை என்று பெயர். எனவே, குரு, மகான், இயற்கை, கடவுள் எல்லாம் ஒன்றே. உக்கிரமே. உக்கிரமே சத்தியம்.''

தொலைவில் உட்கார்ந்து கொண்டிருந்த இராஜேந்திர சோழர் அருகில் வந்து உட்கார்ந்து கொண்டார். வியப்போடு அருண்மொழிபட்டனை பார்த்தார்.

அவன் அந்த புத்த பிட்சுவுக்கு சோறு கொடுக்கச் சொன்னான். வெஞ்சினம் அவனே பரிமாறினான்.

''உண்ணுங்களய்யா. நீங்கள் தோற்றது ஏற்றுக்கொண்டால் உண்ணுங்கள். இல்லையெனில் ஜெயித்தேன் என்று உணவை புறக்கணித்துவிட்டு உயிர் துறந்து போங்கள்'' என்று சொன்னான்.

சக்கரவர்த்தி இராஜேந்திரர் துறவியை பார்த்தார். துறவி கண்மூடிஉட்கார்ந்திருந்தான். மெல்ல கண் விழித்தான். உணவு தட்டை அருகே இழுத்துக் கொண்டான். இராஜேந்திர சோழர் கைதட்டினார்.

''என்ன அற்புதம். படைத்தளபதியாடா நீ. போர்வீரனா நீ. எவ்வளவு பெரிய தத்துவத்தை எவ்வளவு எளிதாகச் சொல்லுகிறாய். இந்து மதத்தின் சாறை பிழிந்தல்லவா கொடுத்திருக்கிறாய். அடேயப்பா. இந்த சோழ தேசம் என்ன புண்ணியம் செய்ததடா. இந்த சோழ தேசத்து நாகரீகம் எவ்வளவு உயர்வு. இந்த சனாதன தர்மம் எத்தனை உயர்வு. இந்த பரத கண்டம் என்ன அற்புதம். மனிதருடைய சிந்தனை கரைசலை, அதனுடைய வெண்ணெய் தேடலை, அந்த அமிர்தத்தை உலகமெங்கும் பரவி இருக்கின்ற சத்தியத்தின் பாற்பட்டு வெளிக் கொண்டு வந்திருக்கிறது. சத்தியத்தை நிலைநாட்ட பலதும் சொல்லியிருக்கிறது.

புத்தம் தவறு. அதனால்தான் இல்லறத்திற்கு எதிராக இருக்கிறது. புத்தம் தவறு. அதனால் தான் துறவறம் உயர்வு என்று சொல்கிறது. பெண்ணோடு காமுறுதலும், திருமணம் செய்து கொள்ளுதலும், குழந்தை பெறுவதாலும், வம்சாவளி பெருக்குதலும், வம்சத்தை பெருக்குவதன் மூலம் நாகரீகம் வளர்ப்பதிலும் பரத கண்டம் முன்னோடியாக இருக்கிறது. இது அழியவே அழியாது. நானும், நீயும் அழிந்துபோவோம் அருண்மொழி. நீ சொல்லச் சொல்ல எனக்கு புரிகிறது. உனக்கு என் வந்தனங்களை தெரிவித்துக் கொள்கிறேன்.''

சக்கரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜேந்திர தேவர் அந்த அந்தணனை நோக்கி, அந்தணத் தேவனை நோக்கி, அந்தண படைத்தளபதியை நோக்கி கைகூப்பி குனிந்து வணங்கினார்.

அருண்மொழிபட்டன் அருகே வந்தான். அவரை நிமிர்த்தினான். இறுக அணைத்துக் கொண்டான்.

''இப்படிப்பட்ட ஒரு மன்னன் கிடைத்ததால்தான் இந்த தத்துவம் வெளியே வந்தது. ஒரு தேசத்திற்கு துறவியும், தத்துவ ஞானிகளும் போதாது. அவர்களால் இதை உணர முடியுமே தவிர, மற்றவர்களுக்கு உணர்த்த முடியாது, ஒரு அரசனின் ஆதரவு இல்லாமல் மக்களை நெருங்க முடியாது. ஒரு கூட்டத்தை சேர்க்க முடியாது. சகல நாகரீகத்தோடு ஒரு அரசன் குடியிருக்க, அந்த கூட்டத்திற்கு ஞானிகள் இந்த தத்துவத்தை சொல்லிவிடுவார்கள். ஞானிகள் அரசனால் போற்றப்பட வேண்டும். அரசனை ஞானிகள் போற்ற வேண்டும். இது நடக்கின்ற இடமெல்லாம் நாகரீகச் செழிப்பும், செல்வச் செழிப்பும், மனிதகுல சிந்தனையின் செழிப்பும் இருக்கும். நீங்கள் மாவீரர். ஞானிகளை போற்றும் மனிதர். தத்துவத்தில் நாட்டம் கொண்டவர். எதிரிகளை துவம்சம் செய்பவர். நீங்கள் கடவுள். நீங்கள் விஷ்ணு. உங்களால் கண்ணனைப் போல அருளுரையும் செய்ய முடியும், கதையால் அழித்து நசுக்கவும் செய்ய முடியும். வெற்றி என்று சங்கொலி ஊதிக்கொள்ளவும் முடியும். சக்கரத்தால் வீழ்த்தவும் முடியும். வலிவும், குணமும் கொண்ட ஒரு அம்சம் மனிதத்தில் அரசன் என்று அழைக்கப்படுகிறான். அரசன் ஞானமும், வலிவும் கொண்டு விட்டால் அந்த தேசம் சிறப்பாவது உறுதி.''

''மாமன்னர் உடையார் சக்கரவர்த்தி ஸ்ரீ இராஜேந்திர சோழர்'', என்று அவன் சொல்ல, எழுந்து நின்று அனைவரும் வாழ்க என்று சொன்னார்கள். 'ஜெயவிஜயீபவ' என்று கூச்ச லிட்டார்கள். 'திருமன்னி வளர' என்று அரசனின் புகழ் பாடி னார்கள்.

ஸ்ரீ விஜயம் வெறும் மண்மேடாய் வாடும்படி இடித்து நசுக்கி விட்டு, ஜனங்களை காட்டுக்கு துரத்திவிட்டு, சோழப்படை இரண்டரை லட்ச வீரர்களுடன் ஸ்ரீ விஜயத்தின் கடற்கரை பகுதிக்கு வந்தது. முசி நதியின் முகத்துவாரத்துக் கடல் சங்க மிக்கும் இடத்திற்கு வந்தது. அங்கே வீரர்களால் கிடங்குகள் கட்டப்பட்டன. மூவாயிரம் பேர் கொண்ட ஒரு படை குதிரை களோடு நிறுத்தப்பட்டது. யானைகளையும் கொண்டு வந்தார் கள்.

அங்கு காத்திருந்த ஏரலங்கன் வணங்கி விடைபெற்றுப் போனான். கடைசியாக ஒரு மரக்கூண்டும் அவன் மரக்கலத் தில் ஏற்றப்பட்டது.

''என்ன அது'' அருண்மொழிபட்டன் கேட்டான்.

★ ★ ★

அத்யாயம்

107

"**எ**தற்கு எந்த மரக்கூண்டு" அருண்மொழிபட்டன் ஆவலோடு கேட்டான். மற்ற தளபதிகளோடு பேசிக் கொண்டிருந்த சக்கரவர்த்தியும், அருண்மொழிபட்டன் சுட்டிக் காட்டுவதைப் பார்த்துவிட்டு அந்த மரக்கூண்டை கவனித்தார். அவர் கவனிப்பதை பார்த்து ஏரலங்கன் மரியாதையுடன் முன்னேறினான்.

"அருண்மொழியார் மரக்கூண்டை விசாரிக்கிறார். அந்த மரக்கூண்டு சங்கரராம விஜயோத்துங்க வர்மனுக்கு. என்னுடைய தேசத்து மக்களை தூண்டிவிட்டு குச்சியால் குத்தச் சொல்லி, இவன் மரணமடைய எனக்கு விருப்பமில்லை. இரண்டு நாள் யோசித்ததில் இவன் விதியை கடவுள் தீர்மானம் செய்யட்டும். புத்த மதத்தைச் சார்ந்த இவனை சித்ரவதை செய்து கொல்லுவது தவறு என்று எனக்குத் தோன்றியது. புத்தர் கருணையே வடிவானவர். அன்பை போதித்தவர். எப்படி ஒரு அரசன் இதைக் கைக்கொள்ள முடியும் என்று கேட்டதற்குத்தான் புத்த பிட்சுக்களால் என் நாடு தாக்கப்பட்டது. ஆனால் நான் கடவுள் நம்பிக்கை உள்ளவன். உன்னை நான் ஏன் கொல்ல வேண்டும். நீ தவறென்றால் உன்னை கடவுள் கொல்லட்டும் என்று நான் தீர்மானம் செய்தேன். என் மக்களுக்கு இந்த பழி பாவம் வரவேண்டாம் என்று தீர்மானம் செய்தேன். என் மக்களுக்கு முன்னே தலை சிரைத்து, முகம் மழித்து, இடுப்பில் கோமணம் மட்டுமே கட்டி ஊர்வலமாக அழைத்துப் போய், நம்மை கடித்த நாய் இதோ வருகிறது என்று பெரிய மூங்கில் கூண்டில் ஏற்றி விலங்குபோல் அழைத்துப் போய் நான் வேடிக்கை காட்டுவேன். என் மக்கள் சபிப்பார்கள். கணவனை இழந்தவர்களும், மகனை இழந்தவர்களும், காதலரை இழந்தவர்களும், அண்ணனை இழந்தவர்களும் மண்வாரி தூற்றுவார்கள்.

இந்த புத்த மதத்தைச் சார்ந்தவன் அப்பொழுது எவ்வளவு பொறுமையாக இருக்கிறான் அல்லது எவ்வளவு சீறுகிறான் என்பதையும் நான் வேடிக்கை பார்க்க வேண்டும். சூடு, சுரணை உள்ளவன் வேடிக்கை பார்த்திருப்பானா. சீறத்தான் செய்வான். அப்பொழுது எதிர்ப்பு குரல்கள் அதிகமாகும். தூற்றல் கள் அதிகம். சங்கரராம விஜயோத்துங்கன் மனைவியை அவன் தளபதிகள் காட்டிற்கு அழைத்துப் போய் விட்டார்க்ள். என்ன கதியானாளோ? பாவம். அதில் வேறு மனம் வெதும்பியிருக் கிறான்.''

''கூண்டை உடைத்துத் திறக்க முடியாதா.''

''ஒருகாலும் முடியாது. அதுவும் கடலிலே நீர் இன்றியும், உணவு இன்றியும் இருப்பவன் ஒன்றும் செய்ய முடியாது. இந்த கூண்டுக்குள் கடல் நீர் வரும். நனைக்கும். காலை அரிக்கும். கணுக்கணுவாய் வலிக்கும். நல்ல நீரோட்டத்தில் இவனுடைய கூண்டு மாட்டிக் கொண்டு விட்டால், கரை சேர்ந்துவிடும்.''

''எந்த கரைக்குப் போகும்.''

''காம்போஜம் போகலாம். அல்லது சீனத்திற்கும் போக லாம். தொலைதூரத்திலும் இந்த கூண்டு தெரியும்படியாக வெள்ளை அடித்து, எங்களின் மஞ்சள் நிற கொடி நட்டு, அதில் இவன் யார் என்று ஒரு பலகையில் எழுதி அனுப்பிவிடுவோம். வரும் பெளர்ணமியில் அந்த விழா சிறப்போடு நிகழும்.'' கூண்டு படகில் ஏறி மரக்கலம் நோக்கி போயிற்று.

ஏரலங்கன் தலைகுனிந்து வணங்கினான். விடைபெற்றான்.

''தேவைதானா இது. இரண்டு பக்கமும் அழகாக காசு வாங்கிக்கொண்டு வரி வசூலித்துக் கொண்டு, நல்ல திடமான ஒரு பண்டகசாலை அமைத்து இருவருக்கும் உதவி செய்திருக் கலாமே. நன்கு செழித்து வளர்ந்திருக்கலாமே. நம்முடைய பண்டங்களை வாங்கியும், சீனத்து விஷயங்களை வாங்கியும் ஸ்ரீ விஜயத்தை வளர்த்திருக்கலாமே. எவ்வளவு முட்டாள்தன மாக எதை நம்பி இப்படி சகதியில் மாட்டிக் கொண்டான்.'' சக்கரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜேந்திரதேவர் வாய்விட்டு கேட்டார்.

''விதி. விதி புத்த பிட்சுக்களின் ரூபமாக வந்தது. கடல் தாண்டி வலைபந்தூரையும், மாயிருடி கங்கத்தையும், இலங்கா

சோகத்தையும், மாடமாலிங்கம் ஜெயித்துவிட்டதால் சோழர் களையும் ஜெயித்து விடலாம். உன்னைப் போல் மாவீரன் உண்டா என்று ஏற்றி கவிழ்த்து விட்டார்கள். புத்த பிட்சுக் களின் கேவலமான செய்கை அது. புத்த பிட்சுக்களை ஏற்க மறுத்த ஏரலங்கன் இன்று செழிப்பாக இருக்கிறான். இன்னும் செழிப்பாகப் போகிறான். இன்னும் அதிகமான வசதிகளை சோழ வணிகர்களுக்கு செய்து தரப்போகிறான்.

இனி ஸ்ரீ விஜயம் நோக்கிக் கூட சீன நாவாய்கள் வர வேண்டாம். சாவகத்தீவின் விளிம்பில் வந்து நின்று, உள்ளுக் குள்ளே கணவாயில் புகுந்து அங்கு இறங்கி வியாபாரம் செய் யலாம். கரையின் ஓரத்தில் நீண்ட பாலங்கள் அமைத்து நாவாய்களை நங்கூரம் இடச் செய்து விடலாம். சோழ வீரர்கள் பெரிதும் உதவுவார்கள். சாவகத்தீவு மக்களுக்கும் அந்த ஆவல் வந்துவிட்டது.''

ஏரலங்கன், சங்கரராம விஜயோத்துங்கனை நெட்டிப் படகில் தள்ளுவது தெரிந்தது.

தொலைவிலிருந்தபடியே சங்கரராம விஜயோத்துங்கன் கட்டப்பட்ட கைகளோடு கைகளை உயர்த்தி சக்கரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜேந்திர சோழரை தலைக்கு மேல் கைகூப்பி வணங்கினான். இராஜேந்திர சோழர் ஆசிர்வதித்தார்.

''முடிந்தது. ஒரு சாம்ராஜ்ஜியம் பணிந்தது. இனி நமது வேலை என்ன அருண்மொழி.'' அருண்மொழி வாயெடுக்கும் முன்பு புவனராஜன் குறுக்கிட்டான்.

''நான் இந்த இடத்தில் இருக்க விரும்புகின்றேன் மன்னரே. மூவாயிரம் வீரர்களும், குதிரைகளும் வேண்டும். அவைகளை வைத்துக்கொண்டு நான் இந்த மூசி நதிக் கரையை பாதுகாப்பேன். சாவகத் தீவிற்கும் போய் வருவேன். அங்கும் ஆயிரம் பேர் கொண்ட ஒரு படை இருக்கும். நமது வணிகர்களை வரவேற்றும், சீனர்களை வரவேற்றும், வசதி செய்து கொடுத்தும் மிகச் சிறந்த வியாபார தலமாக மாற்றுவேன்.

ஆறு மாதங்களுக்குப் பிறகு மறுபடியும் இங்கிருந்து சீனத்து பொருள்களோடு வங்கம் ஏறி நாகைக்கு வருவேன். அங்கிருந்து ஒரு படை தயாராகி ஸ்ரீ விஜயத்தை நோக்கி

வந்தால் நலமாக இருக்கும். இது பாழ்ப்பட்ட இடமாக இல்லாது சோழ தேசத்து கொடி பறக்கின்ற துறைமுகமாக இருப்பது நல்லது. சாவகத் தீவை விட, ஸ்ரீ விஜய கடற்கரை நன்னீர் மிக்கது. கடலிலும் போக முடியும். நன்னீரும் கிடைக்கும். எல்லா விளைபொருட்களும் இருக்கின்ற சுபீட்சமான இடம் அது. மிகச் சிறந்த ஸ்வர்ண பூமி இது. என்னை இங்கு இருக்க அனுமதியுங்கள்'' என்று கேட்டான்.

இராஜேந்திர சோழர் சந்தோஷமாக அனுமதித்தார். ''ஆமாம் இதை ஸ்வர்ணபூமி என்றுதான் அழைக்கிறார்கள்'' என்றார்.

''எப்பொழுது புறப்படலாம்.''

அருண்மொழிபட்டன் நாட்களை கணக்கிட்டான்.

''பௌர்ணமியில் புறப்படலாம். அலைகளின் ஆட்டம் அதிகம் இருக்கும். ஆனால் படகில் துடுப்பு போடாது வெறுமே மரக்கலன்களை பாய் விரித்து காத்திருப்போம். மறுநாள் பிரதமை. அலைகள் ஆட்டம் உடனே குறைந்து விடும். அப் பொழுது சரியான திசையில் பாய்மரங்களை திருப்பி துடுப்பு போட்டால் ஸ்ரீ விஜய்த்திற்கும், சாவகத்தீவிற்கும் நடுவே உள்ள கடற்கணவாயில் நுழைந்து விடலாம். அந்த கண வாயைத் தாண்டினோம் என்றால் மிகப் பெரிய ஆறு நாட்கள் பயணம் உள்ள பெருங்கடல் காத்திருக்கிறது. மார்கழி முடிந்து தை மாதம் ஆரம்பிக்கிறபடியால் காற்றின் திசை மாறும். அல்லது இரண்டு பக்கமும் இருக்கும். வடக்கு நோக்கி காற்று திசை மாறும்போது துடுப்பு போட்டு நிதானமாக வந்து சேர லாம். ஐந்து நாட்களில் வரும்போது நக்கவரம் தீவுகளை அடைந்தது போலல்லாது ஆறு அல்லது ஏழு நாட்களில் முல்லைத்தீவு போய்விட முடியும். முல்லைத் தீவிலிருந்து ஒரே நாளில் நாகைக்கு வந்துவிட முடியும். அதற்குள் காற்று திசை மாறினால் முல்லைத் தீவு தொடாமலேயே நாகையில் இறங்கிவிடலாம். கொற்கையிலும் கால் பதித்து விட்டு போக லாம்.''

மரக்கலன்கள் பௌர்ணமியில் கிளம்பின. கடல் ஆர்ப் பரித்து இருந்தது. பௌர்ணமி நிலவு பிரகாசமாய் ஜொலித்தது.

எப்பேர்பட்ட வெற்றி. என்னவிதமான போர். எப்பேர்ப் பட்ட நிலம். என்னவிதமான மக்கள். பெண்களின் அழகு எப்படி. குழந்தைகள் எவ்வளவு அழகாக இருந்தன. என்ன செழுமையான ஊர். விதம் விதமாக வீரர்கள் மேல் தளத்தில் உட்கார்ந்து இராஜேந்திர சோழரோடு அளவளாவிக் கொண்டு வந்தார்கள். பல வீரர்கள் பெயர் இராஜேந்திர சோழர் மனதில் பதிந்தது.

''ஏய் மடையா, பெண்டாட்டிக்கு என்ன வாங்கிக் கொண்டு போகிறாய்.''

''சங்கரராம விஜயோத்துங்கனின் மனைவியின் இடுப்பு சங்கிலி அறுத்துக் கொண்டு வந்து விட்டேன்.''

"அவளை வேறு என்னடா செய்தாய்."

''ஒன்றும் செய்யவில்லை அய்யா. புட்டத்தில் ஒரு அடி கொடுத்து அனுப்பிவிட்டேன். எனக்கு எதற்கு மாற்றான் பெண்டாட்டி. எனக்கு என் மனைவி போதும்.'' அவர்கள் மது குடித்தார்கள். பெண்களைப் பற்றி பேசினார்கள்.

கொள்ளையடித்த கனமான விற் பொறிகளை ஏற்றி யிருந்தார்கள். அதை மரத்தளத்தில் நிறுத்தி எரி அம்புகள் வைத்து பொறிகளை விடுவித்து பார்த்தார்கள். வளைத்து இழுத்து பொறி ஆறு அம்புகளை ஒரே நேரத்தில் வேகமாக விட்டது.

''அடே, இதை நித்த வினோதப் பெருந்தச்சன் முன்னமே செய்திருக்கிறானே.''

''ஆமாம். ஆனால் அது கொஞ்சம் கடினமாக இருந்தது. இரண்டு மூன்று பேர் பொறிகளை அழுத்த வேண்டியிருந்தது. இது ஒருவரே அழுத்தி, அம்புகளை சொருகி எரியூட்டி ஒருவரே இதை விடுதலை செய்யலாம். மிக துரிதமாக வேலை செய் யலாம். அறுபது நொடிகளில் பதினெட்டு அம்புகள் எய்துவிட முடியும்.''

"எத்தனை பொறிகள் வைத்திருக்கிறீர்கள்."

"இருபது பொறிகள்தான் ஏற்ற முடிந்தது. அவ்வளவுதான் இடம் இருந்தது."

''போதும். போதும். இனி பொறிகளெல்லாம் தேவைப் படாது.''

''அவ்வளவுதானா போர்.''

''இல்லை. பாண்டியர்களை அடக்க வேண்டும். கொற்கை துறைமுகம் இறங்கி ஐந்து பாண்டியர்களை ஒரு கை பார்க்க லாமா என்று நினைக்கிறேன்.''

''பார்க்கலாம். பார்க்கலாம்'' வீரர்கள் ஆரவாரித்தார்கள். அருண்மொழிபட்டன் கனைத்தான். எல்லோரும் திரும்பினார்கள்.

''நாம் போவதற்கு முன்பே அங்கு கதை முடிந்துவிட் டிருக்கும்.''

''என்ன''

''சுந்தர சோழ பாண்டியனை சாதாரணமாக நினைத்து விடாதீர்கள். இராஜாதிராஜனை விட, இராஜேந்திரரின் சாயல் அவருக்கு அதிகம் உண்டு. மிகக் கடுமையான பணியை ஏற்றுக் கொண்டிருக்கிறோம் என்று தெரிந்து செய்திருக்கிறார். சோழ தேசத்தில் இருப்பதை விட, சோழ தேசத்திற்கு காவலாக பாண்டிய தேசத்தில் இருக்கிறார். அந்த மக்களோடு பழகுகிறார்.

நாஞ்சில் நாட்டில் காட்டில் தஞ்சம் புகுந்த அந்த ஐந்து பேரும் இந்நேரம் சிதைந்து போயிருப்பார்கள். ஏனெனில் அவர்களுக்கு பின்புலமாக இருந்த ரோஹணத்தை நாம் அடித்து நொறுக்கி விட்டோம். இது இராஜேந்திரருடைய தந்திரம். யாருடைய தயவால் ஜெயிக்கலாம் என்று இருந்தார் களோ அவரே அடிபட்டு வீழ்ந்த பிறகு இந்த பாண்டியர்கள் உட்கார்ந்து பல்லாங்குழி ஆட வேண்டியதுதான். சோழ தேசத் திற்கு எதிர்ப்பு என்பது தெற்கிலிருந்து இல்லை. மேலை சாளுக் கியம் மறுபடியும் தலை தூக்கலாம்.

இராஜாதிராஜனுக்கு மேலை சாளுக்கியம் மீதுதான் கண் இருக்க வேண்டும். சேர தேசத்து நம்பூதிரிகள் மேலை சாளுக் கியத்தை தூண்டாமல் இருக்க வேண்டும். கங்கே யாதவ் இறந்து போனாலும் மாரகேசி என்பவன் அங்கு இருக்கிறான். அவன் வெஞ்சினம் மிக்கவன். அவன் ஆட்சி செய்ய வேண் டும் என்ற ஆவலுடன் இருக்கிறவன். இப்போது பதவி ஏற்று இருக்கின்ற இளவரசனாக இருக்கின்ற, மாதண்ட நாயகனாக இருக்கின்ற ஆகமவல்லனை அவன் தூண்டிவிடலாம். அவனை முன்னே அனுப்பி சாகடித்து தான் ஆளலாம் என்ற

எண்ணமும் அங்கு இருக்கிறது. கீழை சாளுக்கியம் வலிமை யாக இருப்பதால் மேலை சாளுக்கியம் போரில் மறுபடியும் அடிபடும். இனி நம்முடைய வேலையெல்லாம் சேர தேசத்தை போஷாக்காக மாற்றுவதும், சோழ தேசத்தில் கொள்ளையடித்த பொருள்களை சேர தேசத்திற்கும், பாண்டிய தேசத்திற்கும் அனுப்ப வேண்டும். பாத்திரங்களை, மரச் சாமான்களை பகிர்ந்து கொள்ள வேண்டும். சோழ தேசம் சிறப்பாக ஆட்சி செய்கிறது என்று பாண்டிய மக்கள் நம்ப வேண்டும். இந்த கொள்ளை பொருள்கள் நமக்கு என்று நினைத்துக் கொள்ளக் கூடாது. பெரும் பகுதியினர் நம்முடைய எதிரிகளுக்கு போக வேண்டும். கீழை சாளுக்கியம், பாண்டிய தேசமும், சேர தேச மும் நம்மோடு ஒற்றுமையாக இருப்பின் மேலை சாளுக் கியத்தை மறுபடியும் வேரறுக்கலாம்.'' அருண்மொழிபட்டன் உரத்து சொல்ல, இராஜேந்திர சோழர் தீர்க்கமான புன்னகை யுடன் அவனை ஆசிர்வதித்தார்.

''அரையன் ராஜராஜன் எங்கு இருக்க வேண்டும் அருண் மொழி.''

''கீழை சாளுக்கியத்தில்தான் இருக்க வேண்டும். உடனடி யாக உதவி செய்கின்ற இடத்தில் இருக்க வேண்டும். இராஜ நரேந்திரனுக்கும், உங்கள் மகளுக்கும் உறுதுணையாக இருக்க வேண்டும். தொண்டை தேசத்திற்கு பாதுகாப்பாக இருக்க வேண்டும். தொண்டை தேசம் பலவீனமானது. வணிகர்களால் பேணப்பட்டு வருவது. நடுநாடு தன்னை கவனித்துக் கொள் ளும். திருமுனைப்பாடி நாடும் திமிர் உள்ளது. இவைகளைத் தாண்டி சோழ தேசத்திற்கு வந்தால் நாம் புரட்டி எடுத்து விடு வோம். எனவே, அடுத்த இருபது வருடங்களுக்கு இராஜேந்திர சோழருக்கு எந்த கவலையும் இல்லை என்பது என் அபிப்ராயம். அவ்வப்பொழுது தோன்றும் கலவரங்களை படைகளை அனுப்பி சரி செய்து கொள்ளலாம்.''

''ஒட்ட தேசத்தையும், வங்க தேசத்தையும் என்ன செய்ய, உத்திரலாடம், தட்சிணலாடம் மறுபடியும் விஜயம் செய்ய வேண்டுமா.''

''வேண்டாம். நமக்கும் அவர்களுக்கும் சம்பந்தமே இல்லை. அந்த இடங்கள் அவர்கள் தடி ஊன்றி எழுந்திருக்க இன்னும்

பத்து வருடங்கள் ஆகும். அதற்குப் பிறகு ஏதேனும் எகிறலாம். ஆனாலும் அவர்களுக்குள்ளேயே அடித்துக் கொள்வார்களே தவிர, உன்னால் நான் கெட்டேன். என்னால் நீ கெட்டாய் என்று சொல்லிக் கொள்வார்களே தவிர, கீழை சாளுக்கியம் வர மாட்டார்கள். வந்தால் சோழதேசம் பின்னி எடுக்கும் என்று அவர்களுக்குத் தெரியும், நம்முடைய கடல் வேகமும் அவர்களுக்கு தெரிந்துவிட்டது. மூன்று நாளில் ஒட்டதேசத்தில் கரை இறங்குவார்கள் என்று தெரிந்துவிட்டது. எனவே, ஒரு போரை ஒட்டதேசம் அனுமதிக்காது. இந்திரதத்தனை நாம் கொண்டு வந்ததும் ஒட்ட தேசத்து மக்களுக்கு புரிந்து போயிற்று. உண்மையில் இந்திரதத்தனை ஒட்டதேசத்திற்கு நாம் திருப்பி அனுப்பலாம்.'' இராஜேந்திர சோழர் அருண்மொழியை பார்த்து தலையசைத்தார்.

''என் மனதில் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறேனோ அதை அழகாக பேசுகிறாய் அருண்மொழி. இதைத் தாண்டி ஒரு விஷயம் நீ சொல்வாய் என்று எதிர்பார்த்தேன். இப்பொழுது நான் சொல்கிறேன்.

மேலை சாளுக்கியத்தின் மீது வேண்டுமென்றே போர் தொடுக்க வேண்டும். இந்த போர் முகம் ஓயக் கூடாது. சோழ வீரர்கள் போர் இல்லாமல் இருக்கக்கூடாது. சகல இடங்களையும் ஜெயித்து விட்டோம் என்று கால் பரப்பி கள் குடிக்கக் கூடாது. மாமிசத்தை சுட்டு வாயில் ஊட்டிவிட வேண்டுமென்று நினைக்கக் கூடாது. உள்ளுக்குள்ளே இந்த ஓட்டம் நடந்து கொண்டே இருக்க வேண்டும். கீழை சாளுக்கியமும், பாண்டிய தேசமும், சேர தேசமும் நட்பு என்பதால், ரோஹணமும் அழிந்துவிட்டது என்பதால், எட்ட இருக்கும் ஸ்ரீ விஜயத்தையும் நொறுக்கி விட்டோம் என்பதால் வீரர்கள் உட்கார்ந்து விடக்கூடாது. அடுத்த இருபது வருடங்களுக்கு என்ன செய்வதற்கும் இல்லை என்று சொன்னாயே தவறு. குடகு மலை வரை போய்வர வேண்டும், பரத கண்டத்தின் மத்திமம் வரை நமது படைகள் போய்வர வேண்டும். எதிர்ப்பு இருந்தால் அடித்து நொறுக்க வேண்டும். மேலை சாளுக்கியத்தை வம்பு இழுத்து அந்த தேசத்தின் முதுகெலும்பை உடைக்க வேண்டும். அங்கு சரியான அரசாங்கம் இருக்க முடியாதபடி செய்ய

வேண்டும். நம்முடைய ஒற்றர்கள் அங்கு பரவி இருக்க வேண்டும். மேலை சாளுக்கியம் தாண்டி பராமரர்கள் வரை போய் பயமுறுத்தி விட்டு வரவேண்டும். போர் நிற்கக் கூடாது அருண்மொழி. மூன்று வருடத்திற்கு ஒருமுறையாவது போர் நடக்க வேண்டும். ஒரு வருடம் கூட ஒரு போர்வீரன் ஒரு இடத்தில் இருக்கக் கூடாது. அவன் இடம் மாறிக் கொண்டே இருக்க வேண்டும். இது என் ஆணை. குறித்துக் கொள்.

எல்லா தளபதிகளும் கேட்டுக் கொள்ளுங்கள். சுகமாக இருப்பதற்காக போர் செய்யவில்லை. நம்முடைய இடத்தை தக்க வைப்பதற்காக போர் செய்கிறோம். இது மறுபடி மறுபடி நாம் புதுப்பித்துக் கொள்ள வேண்டிய அவசியம்.'' இராஜேந்திர சோழர் சொல்ல, எல்லோரும் 'ஹா' என்று சொன்னார்கள்.

தங்களுடைய மன்னன் எவ்வளவு கூர்மையுடைய அறிவுடையவன், எவ்வளவு தொலைநோக்கு பார்வையுடையவன் என்று சந்தோஷப்பட்டார்கள்.

சாவகத்தீவின் கரையை தொட்டுவிட்டு கணவாய்க்குள் உள்ளே நுழையும்போது மர கூண்டு ஒன்று கடலில் மிதந்து கொண்டிருந்தது. ஒற்றைப் பாய்மரக் கப்பலில் பிணைக்கப் பட்டு இழுத்து கொண்டு போவதை பலரும் பார்த்தார்கள். ''காப்பாற்றி விடலாமா'' என்று அருண்மொழியை இராஜேந்திர சோழர் கேட்டார். அவருடைய குரலில் கவலை இருந்தது.

''இல்லை, உள்ளங்கை செதுக்கியதை மறந்துவிடாதீர்கள். வணிகர்களை பிரம்பால் அடித்ததை மறந்து விடாதீர்கள். அவன் தண்டிக்கப்பட வேண்டியவன். ஏரலங்கன் சொன்னது போல அவன் முடிவு கடவுள் கையில் இருக்கட்டும். நாம் ஏன் அதை எடுத்துக் கொள்வானேன். தெருவில் போகிற சனியனை விலைக்கு வாங்குவானேன். விட்டு விடுங்கள்.'' அன்று முழுவதும் ஏனோ இராஜேந்திர சோழர் பேசவில்லை.

''என்ன ஆயிற்று.'' அருண்மொழி கேட்டான்.

''அந்த கூண்டுக்குள் நான் இருப்பது போல கனவு வந்தது. அதுதான் ஒருமாதிரி கலவரம் ஆகிவிட்டது.''

''மறந்துபோங்கள் மன்னா. வீரமாதேவியோடு சந்தோஷமாக இருங்கள். உங்களுக்காக காத்திருக்கின்ற பரவை நாச்சியாரைப்

பற்றி நினைத்துக் கொண்டு வாருங்கள். நம்முடைய வீரர் களுக்கு நாம் நாகை போய் சேருவதற்கு முன்னாலேயே என்னென்ன பரிசு தரவேண்டும் என்று அறிவித்து விடுங்கள். அத்தனை பேரையும் படகு மாற்றி வரச் சொல்லி நீங்களே ஓலை துணுக்கில் எழுதி கொடுத்து விடுங்கள்.'' அடுத்த மூன்று நாளும் ஒரு லட்சம் பேருக்கு பல தளபதிகள் பதவிகள் வழங்கினார்கள். கூட்டம் கூட்டமாக சாதாரண காவற்படை, வில்படை, வாள் படையினருக்கும் மரியாதை கொடுத்து நீங்கள் அனைவரும் உபதளபதிகள் என்று சொன்னார். கரை இறங்கியதும் ஒருவருக்கு நாற்பது கழஞ்சு என்று அறிவித்தார். அவரவர் அடித்த கொள்ளையை அவரவரே வைத்துக் கொள்ள லாம் என்று அனுமதித்தார். வீரர்கள் கூத்தாடினார்கள்.

நாகை நெருங்கியது. நாகை நெருங்குவதற்கு முன்பு ஒற்றை பாய்மரக்கலம் விரைந்து கரையை தொட்டது.

நாளை காலை இராஜேந்திரர் கரை இறங்குவார் என்று சொல்லப்பட்டது. நாகை பைத்தியக்காரத்தனமாக ஆட்டம் போட்டது.

எங்கோ இருக்கிற இராஜேந்திர சோழருக்கு கேட்க வேண்டும் என்பது போல முரசுகளை முழங்கினார்கள். எக்கா ளங்களை பலமாய் ஊதி ஒலிக்கச் செய்தார்கள். சோற்று மூட்டையோடு கடற்கரையில் குடும்பம் குடும்பமாக காத்திருந் தார்கள். உச்சி வெய்யில் நேரத்தில் தை மாதம் முடிந்து மாசி மாத இரண்டாம் நாளில் அவர் கரை ஒதுங்கினார். கீழ் இறங்கினார்.

ஜனங்கள் ஆனந்த கூத்தாடினார்கள். இராஜாதிராஜன் விசும்பலோடு ஓ'ந்து அவரை தழுவிக் கொண்டான்.

''அந்த வைஷ்ணவ அந்தணர்களுக்கு தானம் கொடுத் தாகி விட்டதா. பிடி, பிடாகையோடு கல் நட்டாகி விட்டதா.'' இதைத் தான் முதலில் விசாரித்தார். ஜனன்னாதன் வந்து பணிந்தான்.

''அந்த வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆயி ரத்து இருபது வைஷ்ணவர்களுக்கு அந்த நிலங்கள் பிரித்து கொடுக்கப்பட்டு விட்டன. எழுதி தரப்பட்டு விட்டன. அவை களை மொத்தமாக அளவிடும் பணி நடந்து கொண்டிருக்கிறது. ஓரிரு மாதத்தில் அது நிறைவேற்றப்பட்டு விடும்.''

''ஓலையில் இருப்பதும் வெகு நிச்சயம் செப்பு பட்டயத்தில் எழுதப்பட வேண்டும். அந்த அந்தணர்கள் கேட்டு கொடுத்ததாலோ என்னவோ அதிகம் உயிர்சேதம் இல்லாமல் நாங்கள் கம்பீரமாக உயிர் திரும்பி வந்திருக்கிறோம். எடுத்த காரியத்தை முடித்திருக்கிறோம். சோழ தேசம் பொருட்டு அவர்கள் வேதம் ஓதுதலிலும், பிரார்த்தனை செய்வதிலும் யக்ஞங்கள் வளர்ப்பதிலும் ஈடுபட வேண்டுமெனச் சொல். இடையறாது நடக்க வேண்டும் என்று சொல்.

விஷ்ணுவிற்கு இராஜேந்திரனின் வணக்கத்தை, பிரார்த் தனையை செய்யச் சொல். எல்லா வைஷ்ணவ கோவில்களுக் கும் தங்க நகைகளும், பாத்திரங்களும் கொடு.''

இராஜாதிராஜனை அணைத்துக் கொண்ட பிறகு, ஜனன் னாதன் நகர்ந்த பிறகு சுந்தரசோழ பாண்டியன் வந்து பணிந் தான். கழுத்தில் மாலையிட்டான். கன்னங்களில் முத்தமிட் டான். அவனை இறுக்க முரட்டுத்தனமாய் தழுவிக் கொண்டார். 'ஏதேனும் தொந்தரவு உண்டா' என்று கேட்டார்.

''நீங்கள் ரோஹணத்தை அடித்து வீழ்த்துவீர்கள் என்று எனக்குத் தெரியும். ரோஹணம் வீழ்ந்தவுடன் இவர்கள் அனை வருமே படகில் ஏறி காடுகளூடாக ரோஹணத்திற்கு போய் விட்டார்கள். ரோஹணம் இப்பொழுது பாண்டியர் வசம் இருக்கிறது. அவர்கள் ஐந்து பேருக்குள்ளும் அபிப்ராய பேதங் கள் இருக்கின்றன. பயந்து வந்துவிட்டோம் என்றும், நாஞ்சில் நாட்டை கைப்பற்ற முடியவில்லை என்றும் அவர்கள் வேதனைப்படுகிறார்கள். சேரர்களுக்கு இரகசியமாய் தூது போய் தோல்வியுற்று திரும்பினார்கள். வீர கேரளனின் சபை எந்த உதவியும் செய்ய முடியாது. மீறி கேட்டால் தண்டிக்கப் படுவீர்கள் என்று சொல்லி விட்டது.

வெறுமே அகதிகளாய், அனாதைகளாய் ரோஹணத்தில் உணவுகூட இன்றி பாண்டியர்கள் சுற்றிக் கொண்டிருப்பதாக செய்தி. சிங்களத்து ஜனங்களுடைய சோற்றை பிடுங்கித் தின்பதாகச் செய்தி'' என்று சொல்ல, அவர் வாய்விட்டு சிரித்தார்.

''குதிரைகள் கொண்டு வந்திருக்கிறேன் பார்'' என்று ஒரு மரக்கலத்தை சுட்டிக் காட்டினார். அவன் அந்த மரக்கலம் வரும் இடம் நோக்கி போனான்.

சக்கரவர்த்தி உள்ளே தங்க மிகப் பெரிய கூடாரம் அமைந் திருந்தது. கூடாரத்து வாசலில் ஆரத்தி காட்டப்பட்டது. பேரிகை கள் முழங்க, சங்கு ஊத, எக்காளம் முழங்க உள்ளே புகுந்தார் கள். உள்ளே அவருடைய அரசியர்கள் எல்லோரும் காத்திருந் தார்கள். வீரமாதேவி தொலைவில் நிற்க, அவளை அருகே அழைத்து, அணைத்து தன்னுடைய அரசிகளை பார்த்தார். மிகப் பெரிய புன்சிரிப்பும், மலர்ச்சியும் அவர் முகத்தில் இருந்தது.

'குட்டிகளா எப்படி இருக்கிறீர்கள்' என்று அவர் கேட்க, அவர்கள் ஓடிவந்து அவரை அணைத்துக் கொண்டார்கள். வீரமாதேவியையும் தழுவிக் கொண்டார்கள்.

அங்கே ஒரு யுத்தம் துவங்கியது. அவர்கள் ஆறு பேரும் ஒரு எதிரியோடு கடுமையாக மோதினார்கள். அந்த ஆறு பேரையும் அந்த எதிரி திறம்பட சமாளித்தான்.

பழரசத்துக்கும் உணவுக்கும் அதிகாரிச்சிகள் பறந்தார்கள். வெந்நீரில் குளித்துவிட்டு சூடான குழம்பு சோறு பிசைந்து சாப்பிட்டபோது 'சொர்க்கம் சொர்க்கம்' என்று இராஜேந்திரர் கூவினார்.

''எது சொர்க்கம், நானா, குழம்பா'' பரவை உடம்பை சிலிர்த்துக் கொண்டு கேட்க, இரண்டும் தானடி என்று அவர் இழுத்துக் கொண்டார்.

மூன்று நாள் நாகையில் பல்வேறு சிற்றரசர்கள் வந்து சந்தித்தார்கள். நடுநாடும், தொண்டை நாடும் ஓடிவந்தது. கீழை சாளுக்கியத்தில் செய்தி சொல்ல, நாகையில் மரக்கலம் போயிற்று. தரை வழியே அரையன் ராஜராஜனுக்கு செய்தி சொல்ல ஒரு குதிரைப்படை போயிற்று.

அரையன் ராஜராஜனுக்கு கவனத்தோடு பரிசுகள் அனுப் பினார். பெரிய முத்து மாலையும், சங்கு மாலையும், சங்கு வளையல்களும் கொடுத்தார். ஒரு கூடை நிறைய சங்கு வளை யல்கள் அரையன் ராஜராஜனை சேர்ந்த பெண்டிருக்கு அனுப் பப்பட்டது. வீரமாதேவி ஒரு ஓலை நறுக்கில் என் அன்பளிப்பு என்று சொல்லியிருந்தாள்.

தொண்டை நாட்டு வேளாளர்களுக்கு பப்பாளி கன்றுகள் போயின. நூதனமான தென்னை மர கன்றுகள் போயின. நடு நாட்டு வீரர்களுக்கு இரும்பு சலாகைகள் அனுப்பப்பட்டன. பாத்திரம், பண்டங்கள் அங்கு அதிகம் அனுப்பப்பட்டது. புரவிகள் அங்கு பதினைந்து போயின.

சுந்தர சோழ பாண்டியன் நாற்பது புரவிகளை தனக்கு வேண்டும் என்று தேர்வு செய்து எடுத்துக்கொண்டான். இராஜாதிராஜன் மிகச் சிறந்த புரவியை தனக்கென்று வாங்கிக் கொண்டு மற்றவற்றை தன் படை தளபதிகளுக்கு வினியோ கித்தான்.

''தந்தையே, எப்படி வருகிறீர்கள்.''

''நான் தேர் ஏறி வருகிறேன். நடுவே யானைக்கு மாறிக் கொள்கிறேன். அரசியர்களோடு இருக்கவே நான் பிரியப்படு கிறேன்'' என்று சொன்னார்.

அரசியர் மூவரோடு தேரிலும், மற்ற மூவரோடு அம்பாரி யிலும் அவர் அரை உறக்கத்தில் வந்தார்.

''என்ன அக்கா, இப்படி தூங்குகிறார்'' என்று பரவை கவலையோடு கேட்டார்.

''வயதடி, வயதாகி விட்டது. திரும்ப மீண்டது ஈசன் செயல். எல்லா கோவில்களுக்கும் நாம் நிறைய செய்ய வேண்டும். கடவுள் அருள்தான். எத்தனை அம்புகள், எத்தனை வேகம். எத்தனை நெருப்பு கங்குகள். ஒன்றுகூட மேலே படாமல் அருமையாக வந்திருக்கிறார். நம் சோழ வீரர்கள் குறிப்பாக மெய்க்காவல் படையினர் அவரை அப்படி காப்பாற் றினார்கள். தலை உச்சியில் நெருப்பு கங்கு பற்றி எரிந்தது ஒருவனுக்கு, ஓடிப்போய் நான்தான் அணைத்தேன். தலை சொட்டையாகி விட்டது. அவனுக்கு தகுந்த மரியாதை செய்ய வேண்டும்.''

''வேறு ஏதேனும் நோய் வந்ததா.''

''எதுவும் இல்லை. ஆனால் தளர்ச்சி வந்து விட்டது.''

''அறுபது வயதில் தளர்ச்சியா, இதென்ன என் தகப்பனார் எண்பது வயது வரை திமிரோடு அல்லவா இருந்தார்.'' பஞ்சவன் மாதேவி கேட்டாள்.

''உன் தகப்பனார் எத்தனை போருக்கு போயிருக்கிறார். இளவரசன் காலத்திலிருந்து, தந்தையினுடைய காலத்தி லிருந்து இடைவிடாது எத்தனையோ, எத்தனைக் கலவரங்கள் எத்தனை பயணங்கள். இனிமேல் இவர் பயணப்படக் கூடாது என்று வைத்துவிட வேண்டும்.

என்றைக்கு நம் பேச்சை கேட்டிருக்கிறார். நான் சொல் வதற்கு எதிர்ப்பு சொல்வதுதானே இவர் வாழ்க்கை,

இனி அந்த ஆட்டமெல்லாம் ஆகாது, நாம் உரத்து கண் டிப்பாகச் சொல்ல வேண்டும். நீங்கள் இனிமேல் போர் செய்ய போகக்கூடாது. அது இராஜாதி ராஜனுடைய வேலை,

உண்மையில் இவர் அரசராக இருந்தாலும் எல்லா பொறுப்புகளும் இராஜாதிராஜனிடம்தான் தரப்பட வேண்டும். சிறிய விஷயம்கூட இவருக்கு காதில் வரக்கூடாது. நம்மோடு பேசுவது மட்டும்தான் இவருக்கு ராஜாங்க ஆலோசனை.'' வீரமாதேவி உரத்த குரலில் சொல்ல, மற்ற அரசிகள் ஆமோ தித்தார்கள்.

கங்கை கொண்ட சோழபுரம் மக்கள் கூட்டத்தால் திண றியது. பிரகதீஸ்வரருக்கு விசேஷ ஆராதனைகள் நடந்தன. குதிரை ஏறி சோழ கங்கம் என்ற அந்த ஏரியை இராஜேந்திரர் சுற்றிப் பார்த்து வந்தார். மிகப் பெரிய சந்தோஷமடைந்தார்.

''வரும் தென்மேற்கு பருவமழை உதவி செய்யுமா.'' என்று அந்தணர்களை கேட்டார்.

''இது நல்ல வருடம். நல்லவிதமாக மழை பெய்யும். தென்மேற்கு பருவமழையை விட வடகிழக்கு பருவமழை இந்த ஏரியை நிரப்பிவிடும்'' என்று சொன்னார்கள்.

கங்கை கொண்ட சோழபுரம் பசுமையாகி விட்டது. தெருக் கள் சுத்தமாக வைக்கப்பட்டிருந்தன. அதிகாரிகளின் அதட்டல்

குரல் கேட்டுக் கொண்டே இருந்தது. கால்நடைகளை அதிகம் தெருவில் நடமாட விடாது கவனமாக பார்த்துக் கொண்டார்கள்.

அருகே இருந்த பெரும் புல்வெளிக்கு விடியற்காலை யிலேயே ஒட்டிக் கொண்டு போனார்கள். பிறகு தெருவை சுத்தம் செய்தார்கள். கால்நடைகள் திரும்ப மறுபடியும் தெருக்கள் சுத்தம் செய்யப்பட்டன. ஜனங்கள் வரிசையாக இராஜேந்திர சோழரை தரிசித்த வண்ணம் நகர்ந்தார்கள்.

பல இடங்களில் இலவசமாக சோறு வழங்கப்பட்டது. வந்தியத் தேவரும், சேனாதிபதி கிருஷ்ணன் ராமனும், உத்தம சோழ மிலாடுடையாரும் இன்னும் பலரும் அரண்மனையில் வந்து தங்கி அரசரை சந்தித்துவிட்டு போனார்கள். சர்வசிவ பண்டிதர் தனியான ஊர்வலமாய் வேத கோஷ்டியோடு வந்தார். அந்த குழந்தைகள் அரசரை சுற்றிக் கொண்டு வாழ்க வாழ்க என்று வாழ்த்து பாடின. வேதம் முழக்கின. அவர் அரண்மனை சுத்தமாகியது.

ஞானசம்பந்தன் அவன் ஆதூரச் சாலைக்கு வரும்படி கேட்டுக் கொண்டான். தான் கொண்டு வந்திருந்த மூலிகை களை காட்டினான். தேன் குடுவைகளை காட்டினான். அவர் அந்த ஆதூரச் சாலையை பூஜை செய்து முழு வேகத்துடன் இயங்க வேண்டும் என்று ஆசிர்வதித்தார்.

தொண்டை தேசத்திலிருந்து அந்தணர்களும், தாதிகளும் அந்த மருத்துவமனையை சீராக கவனித்துக் கொண்டார்கள். இதுவரை பதினாறு பிரசவம் ஆகியிருக்கிறது என்றும் அதில் ஒன்பது பேர் ஆண்குழந்தைகள் என்றும் அத்தனை பேருக்கும் இராஜேந்திரர் என்று பெயரிட்டதாகவும் சொன்னான்.

''என்னடா இது. இராஜேந்திரன் என்று சொன்னால் ஒரு ஊரே திரும்பி பார்க்குமே. என்ன செய்வீர்கள்.''

''இல்லை, பல்வேறு விதமாக அந்த இராஜேந்திர சோழர் மாறுவார்.''

''எப்படி''

நெட்டை இராஜேந்திரன், குட்டை இராஜேந்திரன், பழுப்பு இராஜேந்திரன், சிகப்பு இராஜேந்திரன், பல் துருத்தி

இராஜேந்திரன் என்று பல்வேறு விதமாக இருப்பார்கள் என்று சொல்ல, இடி இடி என்று அவர் சிரிக்க, மற்ற கூட்டமும் சிரித்தது. குதூகலமாய் சோழதேசம் இருந்தது.

அடுத்த ஒரு வருடம் வரை இராஜேந்திர சோழர் எங்கும் போகவில்லை, குடந்தைக்கு ஒரு விஜயம், சர்வ சிவ பண்டிதரான தன்னுடைய சற்குருவிற்கு சன்மானம் வழங்க ஒரு விஜயம், உடையார்குடியில் கோவிலுக்காக ஒரு விஜயம் என்று அரைநாள் பயணங்கள் மட்டும் மேற் கொண்டார்.

★ ★ ★

அத்யாயம்

108

மழை மார்கழியிலும் பெய்தது. ஆனால் இது தை மாதம். மார்கழியில் பெய்த மழையால் சிலுசிலுவென்று ஊர் முழுவதும் காற்று வீசியது, போர்த்திக் கொண்டு, வாயை பொத்திக் கொண்டு கூனி, குறுக ஜனங்கள் நடந்தார்கள்.

இன்ன தேதியில் நல்ல முகூர்த்தம் என்று அந்தணர்கள் சொல்ல, அந்த தேதியில் கங்கை கொண்ட சோழபுரத்தில் இருநூற்றி இருபத்தெட்டு திருமணங்கள் இருந்தன. இப்படி ஒரு வீட்டில் திருமணம் நிச்சயிக்கப்பட்டால் அந்த திருமணத்தை பற்றி அரசாங்கத்திற்கு தெரிவிக்க வேண்டும். அதாவது முதல் ஓலை பிரகதீஸ்வரருக்கும், இரண்டாம் ஓலை மஞ்சள் தடவி அரசருக்கும் அனுப்ப வேண்டும்.

அரசருக்கு அனுப்பும் ஓலை அரசருக்கா போகும். அதிகாரிகள் வாங்கி வைத்துக் கொள்வார்கள். திருமணத்திற்கு முன்னேயோ அல்லது திருமணத்தன்றோ எந்த இடத்தில் திருமணம் நடக்கிறதோ அங்கு வந்து அரை பொன் வரி வசூலிப்பார்கள். ஜனங்கள் முரண்டு செய்தாலும் விடாது வரி வசூலித்தார்கள்.

''இது என்னய்யா. அநியாயமாக இருக்கிறதே, இராஜராஜர் காலத்தில்கூட இல்லையே. என் வீட்டு திருமணம். நான் எதற்கு அரை பணம் அரசாங்கத்திற்கு கொடுக்க வேண்டும்.''

''சம்பாதித்தாய் அல்லவா. கொடு.''

''என்ன சம்பாதித்தேன்.''

''கங்கை வரை போய் கொள்ளையடித்து வந்திருக்கிறாய். இடுப்பு முழுவதும் நகைகள் சுருட்டி வந்திருக்கிறாய். அதில் அரை பொன் அரசாங்கத்திற்கு அளிப்பதா கஷ்டம்.''

''அரசாங்கம் கூடத்தான் வாரிக் கொண்டு வந்திருக்கிறது.''

'அதை நீ கேட்கக் கூடாது. நீ வாரிக் கொண்டு வந்ததில் அரை பொன் கொடு. நல்லதிற்காக கொடு என்று கேட்கிறோம்.'

"என்ன நல்லது."

"கட்டை விரல் நசுங்கித்தானே வந்தாய், ஆதூரச்சாலையில் உட்கார வைத்து சோறு போட்டு சரி செய்தார்களல்லவா. இப்பொழுது கட்டை விரல் உறுதியாகிவிட்டதல்லவா. கங்கை கொண்ட சோழபுரத்தின் தெருக்களை பார். இப்படி ஓரம் செங்கல் அடுக்கி, நடக்க பாதை செய்து, நடுவே மண் சாலை அமைத்து, குதிரைகளும், யானைகளும் போக வழி செய்து, அங்கங்கே தங்க நிழல் தரும் மரங்கள் வளர்த்து, தண்ணீர் பந்தல் அமைத்து, சுத்தமாக எவ்வளவு அழகாக வைத்திருக்கிறார்கள். இது குடியிருப்பதற்கு எவ்வளவு சௌகரியமாக இருக்கிறது. இதெல்லாம் எப்படி செய்வது. உன்னிடம் வரி வசூலித்தால்தான் செய்ய முடியும். உனக்கும் இதில் பங்கிருக்கிறது என்று தெரிய வேண்டும்.

திருமணம் நடத்துவது பெரிதல்ல. இந்த இடத்தை மிகச் சுத்தமாக வைத்துவிட்டு போக வேண்டும். குப்பை இருப்பின் மறுபடியும் ஒரு அரை பொன் வசூலிக்கப்படும்."

கூட்டம் வாயடைத்துக் கொண்டு நின்றது. சரி, தவறு என்று பேசியது.

"நீங்கள் என்ன சரி, தவறு என்று பேசுவது. அவன் கேட்கிறான். கொடுத்துதானே ஆக வேண்டும். அவனாகவா கேட்கிறான். அரசருடைய கட்டளையல்லவா. எப்படி எதிர்ப்பீர்கள்" என்று பெரியவர்கள் பேச, வாய்மூடி பணம் கொடுத்தது.

ஆனால் இதற்கெல்லாம் ஜனங்கள் அஞ்சவில்லை. ஊரே களைகட்டி இருந்தது. எங்கு போனாலும் சோறு. ஏதாவது கூத்து. ஏதாவது பாட்டு. எங்கேயாவது நாலு முழத் துணி என்று கொடுத்துக் கொண்டே இருந்தார்கள். நடந்து கொண்டேயிருந்தது. ஜனங்கள் நெஞ்சு நிமிர்த்தி வாங்கிக் கொண்டார்கள். வாழ்க்கையை அனுபவித்தார்கள். பெண்ணுக்கு சீர்வரிசை என்று பறை முழக்கத்தோடு ஊர்வலமாக போனார்கள். எக்காளம் ஊதி பிள்ளைக்கு சீர்வரிசை என்று பெண் வீட்டார் கொண்டு

வந்து இறக்கினார்கள். மூன்று இனிப்பு வகைகள். ஒவ்வொன் றிலும் நூற்றியெட்டு. உரக்க கணக்கு சொன்னார்கள்.

'உங்கள் வீட்டு கல்யாணம் அப்படியா. எங்கள் வீட்டு கல்யாணம் இன்னும் பெரிசு. பழக்கூடையே பதினாறு. கனிந்த கொய்யாவும், நீண்ட வாழைப்பழமும் வேண்டுமென்பது எடுத்து வந்திருக்கிறோம்' என்று பெருமை பேசினார்கள்.

வசதி இருப்பதாலேயே வாய் பேச்சு அதிகரித்தது. அலட் டல் அதிகமாயிற்று.

'மரத்தடியில் நின்று தாலி கட்டுவோம். சோறும், குழம்பும் சாப்பிடுவோம். வழக்கமாகக் கொடுக்கும் நாலு வெற்றிலைக்கு பதிலாக பத்து இருபது இலைகள் பாக்கு வைத்து கொடுப்பார் கள். அன்றெல்லாம் தாம்பூலம் தரித்து கிடப்போம். இதுதான் எங்கள் கல்யாணம். இதென்ன நூற்றியெட்டு இனிப்பு. கூடை கூடையாய் பழங்கள். வீண் செலவு செய்கிறீர்கள்.' பெரிய வர்கள் கடிந்து கொண்டார்கள். ஆனால் மற்றவர்கள் விட வில்லை. செலவழித்தார்கள்.

நீர் வரி உண்டாமே. ஏரிக்கரை வெட்டி அதிலிருந்து மதகு கட்டி, அந்த மதகை ஊர் பக்கம் திருப்பி இருக்கிறார் களே. கடும் ஆற்று ஓடையிலிருந்து நீர் வந்து கங்கை கொண்ட சோழபுரத்தை செழிப்பாக்குகிறதே, உள்ளங்கை நீள செண்பக பூக்கள். ஒரு கொண்டையை மறைக்கும் அளவுக்கு செம்பருத்திப் பூ. பிச்சியும், மல்லியும் பறிக்க முடியாமல் கிடக் கின்றன. கூடை முழுக்க பரங்கி. தரை முழுக்க பூசணி. எல்லார் தென்னை மரத்திலும் கொத்து கொத்தாய் இளநீர். இரண்டு வீட்டு கொல்லைக்கு நடுவே ஓடை. மொண்டு வந்து என் மனைவி தென்னை மரத்திற்கு நாலு குடம் ஊற்றுகிறாள். இளநீர் அவ்வளவு ருசி. உள்ளே பருப்பு கட்டை விரல் அகலம் இருக்கிறது.

தலைக்கு தேங்காய் எண்ணெய். உடம்புக்கு எள் எண் ணெய். அடி வயிற்றுக்கு விளக்கெண்ணெய் என்று விதம் விதமாக என் வீட்டு பெண்கள் தடவிக் கொள்கிறார்கள். மினு மினுப்பாக இருக்கிறார்கள்.

அதுசரி. மஞ்சள் என்ன விதமாக விளைகிறதய்யா. ஒரு செப்பு காசுக்கு இரண்டு கை விரல் மஞ்சள் அள்ளி கொடுக்கிறார்கள். மஞ்சளை உரசி பெண்கள் முகத்திற்கு தடவிக் கொண்டு கால்வாய் நீரில் குளித்து எழுந்திருக்கிறார்கள். என் மனைவிக்கு நாற்பது அகவை. மினு மினுப்பாக இருக்கிறாள். எண்ணெய் மினு மினுப்பும், மஞ்சள் நிறமும் கலந்த முகம். அவள் கருப்பே உதிர்ந்து காணாமல் போய்விட்டது. முன்பெல்லாம் நெஞ்சுத் துணி போட மாட்டாள். இப்பொழுது காழகம் கிடைக்கிறதல்லவா. இடுப்பை சுற்றி, நெஞ்சு இறுக்க இடுப்பில் சொருகிக் கொள்கிறாள். பார்ப்பதற்கே ஒயிலாக இருக்கிறது. நீண்ட தலைமுடி. நெற்றி நிறைய குங்குமம். வாயில் வெற்றிலை. கழுத்தில் காரை, ஆரம், கயிறு, பொன் வளையல்கள். உருட்டு மோதிரம், காலில் கொலுசு. அல்லது கெட்டி கழல். யாரைப் பார்த்தாலும் கடவுள் அம்சமாக தெரிகிறார்கள். செழிப்பு. செழிப்பு.

இராஜேந்திர சோழரால் சோழதேசம் முழுவதும் செழிப்பாக இருக்கிறது. திருமணம் செய்த இரண்டாம் நாளே இரண்டு வீட்டிலும் விருந்து சாப்பிட்டுவிட்டு, மாட்டு வண்டி கட்டிக் கொண்டு புகாருக்கு தம்பதிகள் கிளம்பி விடுகிறார்கள். நிறைய பணம் எடுத்துப் போய் புகாரில் செலவழித்து விட்டுத் தான் வருகிறார்கள். இரண்டு பேருமே சமுத்திரம் பார்த்ததில்லை. ஓடிப்போய் 'ஹா' என்று பார்க்கிறார்கள்.

சோழ தேசத்து மக்களுக்கு சமுத்திரம் பார்க்கும் ஆசையை ஊட்டிவிட்டதே இராஜேந்திரர் தான். எது நாவாய். எது மரக்கலம். எது வங்கம் என்று கேட்டு தெரிந்து கொள்கிறார்கள். எல்லாம் தெரிந்தது போலவும் பேசுகிறார்கள்.

''மணமகனார் என்ன பிரிவு.''

''சீர்புலியார்.''

''மணமகள்?''

''வீர முகுந்தர்.''

''அவர்கள் உள்ளுக்குள்ளேயே கட்டிக் கொடுப்பார்களே.''

''இல்லை, இப்பொழுது தள்ளியும் உறவு வைக்கிறார்கள். சரியான வயது இருக்க வேண்டும் என்று எண்ணுகிறார்கள்.

முன்பெல்லாம் பெண்ணுக்கு கூடுதலாக வயது இருந்தாலும் திருமணம் நடக்கும். இப்பொழுதெல்லாம் அப்படி இல்லை. பருவம் அடையாது பெண்ணை கட்டி கொடுப்பதில்லை.''

''மணமகனுக்கு எங்கு வேலை.''

''சீர் புலியார் அல்லவா. அதனால் கோட்டை, கோவில், அரண்மனை பாதுகாப்பு. மணமகன் கோவில் பொக்கிஷத்தில் இருக்கிறார்.''

''கோவிலுக்குள் சன்னதி பார்த்திருக்கிறேன். பொக்கிஷம் எங்கு இருக்கிறது.''

''உம்மை பார்க்க அனுமதிக்க மாட்டார்கள். கோவில் விமானத்தில் மூன்று அந்தராளங்கள் இருக்கின்றன. மூன்று சுற்றுகள் இருக்கின்றன. மிகக் குளுமையான இடம். வெய்யில் காலத்தில் குளுமையாகவும், குளுமையான இந்த மாதங்களில் வெது வெதுப்பாகவும் அந்த இடம் இருக்கும். இரண்டாவது, மூன்றாவது அந்தராளத்தில் அனேக அறைகள் இருக்கின்றன. ஆயுதங்கள் வைத்திருக்கிறார்கள். பொன், செம்பு, வெள்ளி போன்ற உலோக பட்டைகளையும், பாத்திரங்களையும், நகை களையும் அடுக்கி வைத்திருக்கிறார்கள். புத்தர் பதுமைகள் வைத்திருக்கிறார்கள். அவ்வப்போது எடுத்து உருக்கி அடித்துக் கொள்கிறார்கள். அக்கச்சாலை எல்லா நாளும் இயங்கிக் கொண்டுதான் இருக்கிறது.''

''கோவில் பாதுகாப்பானது என்று அங்கே பொக்கிஷம் வைத்திருக்கிறார்களா.''

''இல்லை. அந்த கூம்பான விமானத்திற்குள்ளே உலோ கங்கள் வைத்தால் உலோகங்கள் துருபிடிப்பதில்லை. கெட்டுப் போவதில்லை. ஏன். பழங்கள் கூட அங்கு பத்து நாள் இருக்கும். அங்கு கட்டுக்காவல் அதிகம். மூன்று பேர் மூன்று சாவி போட்டால் தான் அம்மாதிரியான அறைகளை திறக்க முடியும். இன்ன தேதியில், இன்னார், திறந்தார். இதற்காக என்று எழுதி வைத்து விட்டுத்தான் திறக்க வேண்டும்.''

''சோழ தேசம் நல்ல நிர்வாகமாக இருக்கிறதல்லவா.''

''ஆமாம். அதுதானே இந்த தேசத்தின் சிறப்பு. மறுபடியும் நிலம் அளந்து விட்டார்களே. வெறும் கட்டாந்தரைக்கு நீர்

இழுத்துக் கொண்டு வந்து அந்நிய வீரர்களின் உதவியோடு உழுது, விதைத்து அறுத்துவிட்டார்கள். நல்ல அறுவடை. சிறப்பான விளைச்சல்.

புது பூமி அல்லவா. கொஞ்சம் தண்ணீர் காட்டினாலும் பொத்துக் கொண்டு வருகிறது.

தண்ணீருக்கும் கவலை இல்லையே. எவ்வளவு பெரிய ஏரி சோழ கங்கம். நீந்தி மாளாது. நீந்தக்கூடாது என்று கட்டளை. அது வெறும் ஏரியா. கங்கை நதி அல்லவா. மரியாதையான விஷயம் அல்லவா. படைகள் மட்டும் பயணப்படலாம். கடும் ஆறு கால்வாயில் குளிக்கலாம்.''

ஆனால் ஜனங்கள் கருவாட்டு ஆறு என்று அழைக்கிறார் களே?

கருவாடும் கிடையாது, கண்ணாடி மீனும் கிடையாது. கடும் ஆறு ஓடை கலுங்கத்திலிருந்து சீறிப் பாய்ந்து வந்து சோழ கங்கம் நிரப்பி, மழையாலும் நான்கு பக்கத்திலிருந்தும் ஜலம் ஓடி வந்து தளும்ப தளும்ப நிரம்பி, எல்லா மதகுகளை யும் திறந்து விட, கால்வாயில் நதியைப் போல சீறி ஜலம் போகிறது. தப்பித்தவறி பாத்திரத்தை போட்டால் பிடுங்கிக் கொண்டு போகிறது. அரைக்காதம் போய்தான் மூங்கில் வேலி யில் பாத்திரத்தை பிடிக்க முடியும். கங்கை கொண்ட சோழபுரத் தின் அழகே இந்த கடும் ஆற்று கால்வாய்தான்.

எப்படி பொக்கிஷங்களுக்கு போக முடியாதோ அதே போல அரண்மனைக்கு அருகிலும் போக முடியாது.

போகலாம். அவசியம் வந்தால், அழைப்பு வந்தால் போக லாம். கொடுங்கை வீரர்களை தாண்டித்தானே போக வேண்டும்.''

''கொடுங்கை என்றால் மண்டபத்தில் இருக்குமே அந்த கொடுங்கையா. அதற்கும் அவர்களுக்கும் என்ன சம்மந்தம்.''

''கொடும் கை அய்யா. அடித்தால் மரணம் தான். அப்பேர்ப் பட்ட கையை உடையவர்கள். அவ்வளவு முரட்டுத்தனமாக மடக்கி நிறுத்துபவர்கள். அவர்களைத் தாண்டி ஒரு துரும்பு அரண்மனைக்குள் போக முடியாது.''

''மெய்க்காவல் படையினரை விட முக்கியமானவர்களா.''

''மெய்க்காவல் படை ஊர்களுக்கு போகும்போது சுற்றிக் கொள்ளும். கொடுங்கை வீரர்கள் அரண்மனையை எந்நேரமும் காவல் காப்பார்கள். உள்ளே அரச குடும்பம் இருக்கிறதல்லவா.''

''மெய்க்காவல் படைக்கு தனியே ஊர் அமைத்து விட்டார்களாமே.''

''ஆமாம். மெய்க்காவல் புத்தூர் என்று பெயர். இரண்டு திண்ணை வைத்துள்ள வீடு. வளைவு வீடு. எழுநூறு வீடுகளுக்கு மேல் இருக்கிறது. இன்னும் கட்டிக் கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் கோட்டையின் பின்பக்கம் அதாவது மேற்கு பக்கம் மிக பலமான காவலாக இருக்கிறார்கள்.''

''அட, இது யார் திருமணம். அலங்காரம் மிக அழகாக இருக்கிறதே.'' நடந்து கொண்டே இரண்டு கிழவர்களும் நின்று கவனித்தார்கள்.

''அடடா, இவர்களா, இவர்கள் முனை திரியார்கள். மாமுனை திரியார்கள் வீட்டு பெண்களை மணக்கிறார்கள்.

''முனைதிரியார்கள் என்றால்''

''படையின் முனைக்கு போகிறவர்கள். போனால் திரும்பி வரமாட்டார்கள். மரணம் நிச்சயம் என்றபடி போகிறவர்கள்.''

''மாமுனை திரியார்கள் என்றால்''

''அவர்களுக்கு அடுத்தபடி மிக வேகமாகவும், முனை திரியார்களுக்கு உதவியாகவும் போகிறார்கள். ஒருவருக்கொருவர் கொள்வினை, கொடுப்பினை உண்டு. இங்கு வேறு எங்கும் பெண் கொடுக்க பயப்படுவார்கள்.''

''ஏன் அப்படி.''

''சாவதற்கு போகிறேன் என்றபடி படையின் முன் வரிசையில் போகிறவனுக்கு பெண் கிடைக்குமா. அடுத்தபடி போகின்ற மாமுனைதிரியார்கள் தான் பெண் கொடுப்பார்கள். இரண்டு பேரும் ஒருவருக்கொருவர் புரிந்து வைத்து வாழ்க்கை நடத்துகிறார்கள்.''

''கோட்டை முழுவதும் படைவீரர்கள் தான் அல்லவா.''

''அந்தணர்களுக்கென்று ஒரு சிறிய குடியிருப்பு. வணிகர்களுக்கென்று வியாபாரம் செய்கின்ற பெரிய கூடம். வணிகளின்

வீரவாள் வீரர்களுக்கென்று தனி இடம். யானைப்பாகர் தெரு. குதிரை பேணுவார் தெரு என்று பலதும் இருக்கின்றது. ஆனால் நீங்கள் சொன்னதுபோல் சகலரும் போரோடு சம்பந்தப்பட்டவர்கள்.

கம்மாளர்கள், மரத்தச்சர்கள், வேளாளர்கள், பொற்கொல்லர்கள் போன்றோரெல்லாம் கோட்டைக்கு வெளியே இருந்துதான் வரவேண்டும்.''

''அவர்கள் முக்கியம் இல்லையா.''

''அப்படி அல்ல. நகரம் இரவில் அமைதியாக இருக்க வேண்டுமல்லவா. இரவு, பகலாக இவர்கள் உழைக்க வேண்டியிருக்கிறதல்லவா, அதனால் சத்தம் எழாமல் இருக்கவும், புகை மூட்டம் இல்லாமல் இருக்கவும் அவர்களை கோட்டையின் இடதுபக்கமும், வலதுபக்கமும் வைத்திருக்கிறார்கள்.

வேளாளர்கள் நிலத்திற்கு அருகே இருந்தால்தானே அழகு. கோட்டைக்குள் இருந்தால் வேலையாகுமா. ஆனால் காலை கோட்டைக் கதவு திறந்தால் எவரும் உள்ளே போகலாம். இரவு அனுமதி பெற்றால் தங்கலாம்.''

''நிர்வாகம். நிர்வாகம். சோழதேசத்தின் சிறப்பே நிர்வாகம். இல்லையா.''

''இல்லையென்றால் இத்தனை ஜனங்களுக்கு சோறு இடமுடியுமா. இத்தனை தொலைவு போய் ஜெயித்துவிட்டு வர முடியுமா. ஒருமுறை புகாருக்கு போய் வா. என்னென்ன மரக்கலன்கள். எத்தனை விதமான மரக்கலன்கள். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் இரவு எரி அம்பு எய்து வித்தை காட்டுகிறார்கள். கூட்டம் 'ஓ'வென்று அலறுகிறது.''

''இன்றைக்கு இராஜராஜரைப் பற்றிய நாடகம் ஆறேழு இடத்தில் நடக்கிறதாமே.''

''ஆமாம். ஆனால் அதில் இராஜேந்திரரை பற்றித் தான் உயர்வாக பேசுகிறார்கள். கங்கை கரை வெற்றியை சிலாகிக்கிறார்கள். விதூஷகர்கள் இரண்டு பேரை வைத்து எப்படி கங்கை கரை இருக்கிறதென்று கேலியாக நடித்து விவரமாக சொல்கிறார்கள். போய் வர வேண்டும் என்ற ஆவலை தூண்டுகிறார்கள்.''

''இராஜேந்திரரை கொல்ல சதி நடந்ததாமே. அதையும் நடித்து காண்பிக்கிறார்களாமே. கூட்டம் வெறிபிடித்து கத்து கிறதாமே.''

''ஆமாம். சாளுக்கியர்கள் மீது இருக்கின்ற வன்மம் குறையக்கூடாது என்று தூண்டி விடுகிறார்கள். கீழை சாளுக் கியத்தில் அரசருக்கு பேரப்பிள்ளை பிறந்திருக்கிறான் என்று சொல்லி, அதற்காக கண்ணேறு கழித்து சாக்கை கூத்தாடு கிறார்கள்.''

''ஆமாம். நானும் கேள்விப்பட்டேன். குலோத்துங்கன் என்ற பெயராமே.''

''ஆமாம். மேடையில் ஒரு ஐந்து வயது குழந்தை. அரச உடை உடுத்தி ஆடியும், பாடியும் வரும்போது ஜனங்கள் கை நீட்டி, நெட்டி முறிக்கிறார்கள்.''

''நாமும் கங்கை கரை வரை போய் வர வேண்டுமய்யா.''

''நாம் வேளாளர்கள். அவ்வளவுதூரம் உம்மாலும், என்னா லும் போய் வர முடியுமா. தெரியவில்லை. குறைந்தபட்சம் தொண்டை நாடாவது போய்வர வேண்டும். திருவொற்றியூர் போய் சுவாமி தரிசனம் செய்ய வேண்டும்.''

''என்ன விசேஷம்.''

''நம்முடைய நித்த வினோதக பெருந்தச்சன் இரவி அங்கு இருக்கிறான். அரசருடைய கட்டளையின் பேரில் அந்த கோவிலை கற்றளியாக மாற்றி மிகப் பெரிய வசந்த மண்டபம் கட்டி கொண்டிருக்கிறான். அரசருக்கு மிகவும் பிடித்த இடம். சிவனடியார் சுந்தரர் வாழ்ந்த இடமல்லவா. சங்கிலியாரை சுந்தரர் மணந்த இடமல்லவா. வழி நெடுக சிவதரிசனம் செய்து கொண்டே போகலாம்.''

''விருத்தகிரீஸ்வரர் மிக அற்புதமான ஆலயமாமே.''

''ஆமாம். அடுத்து பெண்ணாடத்திலும் மிக நல்ல ஆலயம் இருக்கிறது. அதை விடும். தாதாபுரத்தில் குந்தவை தேவி, வந்திய தேவரின் மனைவி மூன்று ஆலயங்கள் எழுப்பி இருக்கிறார்கள். ஒன்று சிவ ஆலயம். ஒன்று வைஷ்ணவ ஆலயம். இன்னொன்று ஜைன மத ஆலயம்.''

''அட, அந்த பெண்மணியின் சிந்தனையே சிந்தனை. கடவுள்தான் முக்கியம். மதமல்ல என்று சொல்லுகின்ற திற னுடையவர். தெளிவானவர். சோழ தேசத்து பெண்களுக்கு எடுத்துக்காட்டு.''

''சரியாகச் சொன்னீர். குமரிமுனை வரை பல்வேறு தேசங்கள் சிற்றரசுகள் இருக்கின்றன. ஆனால் சோழ தேசத்து பெண்களின் உடை உடுத்துதல், பேசுதல், சமைத்தல், பொது அறிவு இவையெல்லாம் மேம்பட்டவையாக இருக்கின்றன. சுமாரான பெண் கூட சரியாக அலங்கரித்து கண்ணை கவரு கிறாள். இவை சோழ தேசத்து பெண்களின் திறமை.

நன்கு வெந்த மாமிசம், பொல பொலவென்று பூத்த அரிசி சாதம். பலகாய்கள் போட்ட குழம்பு. கெட்டித் தயிர். நாக்கில் ஒட்டும் மோர். உண்டு முடித்து விட்டு உள்ளங்கை அகல வெல்ல அப்பம் தின்பது. அப்பம் தின்ற தித்திப்பு வாயோடு வெற்றிலை பாக்கு போடுவது. சுகமய்யா சுகம். இராஜேந்திரருடைய வீரம் கொடுத்த சுகம். அப்படியே போய் பிற்பகலில் எங்கேனும் திண்ணையில், புல்வெளியில், மரத் தடியில் பெரிய துண்டு விரித்து படுத்தோம் என்றால் இரண் டரை நாழிகை அசையாத தூக்கம். எழுந்தால் சுறுசுறுப்பு தானாய் வரும்.

நீர் எந்த பிரிவு.''

''நான் வீர முகுந்தர் பிரிவு. குதிரை ஏற்றம் மிக முக்கியம் எங்களுக்கு. கடலுக்கும் எங்களில் பலபேர் போய் வந்திருக் கிறார்கள்.''

''ஆமாம். உங்கள் பிரிவைப் பற்றி கேள்விப் பட்டிருக் கிறேன்.

நாகையில் சீனர்கள் வந்து இறங்கியிருக்கிறார்களாமே. பெரிய கும்பலாய் வந்து ஊர் சுற்றி பார்க்கிறார்களாமே. சோழ சிற்பங்களை பார்த்து வியந்து போகிறார்களாமே. நறுமண தைலங்கள், ஜலதோஷம், தலைவலி மருந்தெல்லாம் கொண்டு வந்திருக்கிறார்களாம். நூற்றுக் கணக்கான பளபளப்பான மண் குப்பிகளாம்.

கங்கை கொண்ட சோழபுரத்திலேயே அவையெல்லாம் கிடைக்கின்றன. விலை கொஞ்சம் அதிகம். இப்பொழுது உன்னுடைய உழுகலப்பை காயம் எப்படி இருக்கிறது.''

''முற்றிலும் சரியாகி விட்டதய்யா. ஞானசம்பந்தன் வித்தைக்காரர். இரண்டு வேளை மருந்தில் வலியை குறைத்து விடுகிறார். எண்ணெய் போட்டு உருவச் சொல்கிறார். கீழை சாளுக்கியத்து பெண்கள் அந்த நரம்பு வேலையை கற்றுக் கொண்டு உதவி செய்கிறார்கள். ஒட்ட தேசத்து பெண்கள் அறுவை சிகிச்சைக்கு உடனேயே நிற்கிறார்கள். பயம் அறியாதவர்கள். ஐம்பது கிராமங்களுக்கு ஒரு வைத்தியர் இருப்பார். இப்பொழுது சொன்னால் ஆறேழு நாட்களுக்குப் பிறகு வருவார். அதுவரை நாமாக கை வைத்தியம் செய்து கொள்ள வேண்டியதுதான். ஆனால் இப்பொழுது எவ்வளவு பெரிய ஆதுரச்சாலை. எத்தனை பணியாட்கள். குடந்தைக்கு, தஞ்சைக்கு, எசாளத்திற்கு, எண்ணாயிரத்திற்கு என்று கிளை கிளையாக ஆதுரச் சாலைகள் திறக்கப்பட்டிருக்கின்றனவே.

இது இராஜேந்திர சோழரின் அன்பு. அருண்மொழிபட்டரின் திறமை. அவர் புத்திமான். பத்து வருடங்களுக்குப் பிறகு எது வேண்டும் என்று யோசிக்கின்ற திறமை உள்ளவர்.''

''இப்பொழுது இளவரசராக உள்ள இராஜாதிராஜருக்கும் நல்ல சபை அமைந்துவிட்டதாமே. வாசுதேவ நாராயணன் பார்த்திருக்கிறாயா.''

''எளிமையிலும் எளிமை. தேர்விட்டு இறங்கி வந்து பேசுகிறார்.''

''நீ கங்கை கரை வரை போய் வந்தவனல்லவா. உனக்கு அந்த மரியாதை கொடுத்துதானே ஆக வேண்டும்.''

''ஏன் கடாரமும்தான் போய் வந்து விட்டேன், அந்த கதையை மறந்துவிட்டீரா.''

''அதெப்படி மறக்க முடியும். கங்கைக்கும் போய் கடாரத்திற்கும் போய் தோளிலே கேயூரம் மின்ன, கழுத்திலே தங்க நகை மின்ன, தோளில் துண்டும், காலில் செருப்புமாய் இருக்கிற உன்னை கண்டால் எல்லோருக்கும் மதிப்பு வரத்தானே செய்யும்.''

''உலகம் சுற்றி பார்த்து விட்டேனடா தம்பி. அதுதான் சந்தோஷமாக இருக்கிறது. இராஜேந்திரர் தயவில் கடல் தாண்டி விட்டேன். ஒருமுறை சீனத்திற்கும் போய் வரவேண்டும் என்ற ஆசை இருக்கிறது. ஆனால் கங்கை கொண்ட சோழபுரம் கட்டி இழுக்கிறது.''

''இனிமேல் எதற்கு பயணப்பட வேண்டும். அப்படி பயணப்பட்டாலும் நீங்கள் சோழ தேசத்திற்குள்ளேயே சுற்றி வாருங்கள். பெருவுடையார் கோவில், குடந்தை நாகேஸ்வரர், கங்கை கொண்ட சோழீஸ்வரர், விருத்தகிரீஸ்வரர். திருமுனைப் பாடியிலும், நடுநாட்டிலும் ஏகப்பட்ட சிவன் கோவில்கள் தாண்டி மயிலை வரை போய் வாரும். திருவொற்றியூர் தரிசனம் செய்யுங்கள். அதைத் தாண்டி போக வேண்டாம். திரும்ப திரும்ப எத்தனை சுற்றினாலும் இந்த சோழ தேசத்தின் அழகு வேறு எங்கும் வராது.''

''ஆமாம். இப்பொழுது நினைத்து பார்த்தாலும், ஸ்ரீ விஜ யத்து மக்களை, அந்த மூங்கில் குடிசைகளை யோசித்து பார்த் தால் பரிதாபமாக இருக்கிறது. சாவகத்தீவு, கிட்டத்தட்ட காடு, காட்டுவாசிகள். ஆனால் அவர்கள் வாழ்க்கையெல்லாம் வெகு வாக மாறிவிட்டது.

''ஆமாம், இராஜேந்திரர் காரணம், அவர் சபை காரணம்.'

''மறுபடியும் படையெடுப்பு இருக்குமா.''

''படையெடுப்பு இல்லாது இருக்குமா. அதிகம் மிஞ்சிப் போனால் மூன்று வருடங்கள் சாளுக்கியர்கள் அமைதியாக இருப்பார்கள். பிறகு மறுபடியும் கிளர்ந்து எழுவார்கள், ஒன்றாவார்கள்.''

''பாண்டியர்களால் கிளர்ந்து எழ முடியவில்லையே.''

''அதற்கு சுந்தர சோழர் காரணம். ரோஹணத்தை சர்வ நாசம் செய்த இராஜேந்திரர் காரணம். முதுகெலும்பை உடைத்து விட்டார்கள் அல்லவா. அப்படி சாளுக்கியத்தை தகர்க்க முடிய வில்லையே. சில இடங்களை எரியூட்டினோம் அவ்வளவே.''

''ஆக, மறுபடியும் போர் வரும். வழக்கம் போல கீழை சாளுக்கியம் தகர்க்கப்படும் இல்லையா.''

''இல்லை. கீழை சாளுக்கியத்தை தகர்க்க முடியாது. அரையன் ராஜராஜன் அங்கு குடியிருக்கிறார். எனவே அப்படி போகாமல் மேலே திருவொற்றியூர் வழியாக தொண்டை நாட்டு மயிலை, திருவல்லிக்கேணியை முன்பு தாக்கியது போல மறுபடியும் தாக்குவார்கள்.''

''இத்தனை அடிவாங்கியும் அறிவில்லையே.''

''மக்கள் தூற்றுவார்கள் அல்லவா. அரசரை தூண்டி விடு வார்கள் அல்லவா. சோழன் என் தாலியை அறுத்தான். நீ போய் அவன் கழுத்தை அறு என்று பெண்கள் கத்துவார்கள் அல்லவா. அரசன் படையெடுத்தே தீர வேண்டும்.''

''சேரர்கள் அடங்கியிருக்கிறார்களா.''

''அடங்கிதான் இருக்கிறார்கள். ஆனால் சேர தேசத்து நம்பூதிரிகள் அடங்கி இல்லை. அவர்கள் பாண்டியர்களை தூண்டிவிட்டு முடியாத காரணத்தால் இப்பொழுது மேலை சாளுக்கியம் போயிருக்கிறார்கள். அங்கு பயிற்சி தருகிறார்கள்.''

''இந்த பார்ப்பனர்களுக்கு அப்படி என்ன வெஞ்சினம்.''

''சத்திரியர்கள் ஆளக்கூடாது. பார்ப்பனர்கள் ஆள வேண் டும் என்ற எண்ணம்.''

''அது நடக்குமா.''

''நடந்ததே, உத்தம சோழன் காலத்தில் ஆட்சி செய்தது யார். பாண்டிய தேசத்து ஆபத்துதவிகள். அந்த அந்தணர்கள் அல்லவா. இரவிதாஸனும், பரமேஸ்வரனும் தானே அங்கு வைத்தது சட்டமாக இருந்தது.''

''கொடும் காலமய்யா அது. தஞ்சை அந்தணர்களெல்லாம் தலை சுற்றி ஆடிய காலம்.''

''என்ன தலைசுற்றி ஆட்டம், சேர தேசத்து அந்தணர்கள், முன்குடுமி சோழியர்கள் தஞ்சை அந்தணர்களை மதித்ததே இல்லை. வேலை தெரியாத வைதீகர்கள் என்றல்லவா பேச்சு இருந்தது. ஹா இராஜராஜர் துரத்தி துரத்தி அடித்தாரய்யா. அந்த துரோகிகளின் எல்லா சொத்தையும் பிடுங்கிக் கொண்டு, குடும்பத்தோடு நாடு கடத்தி அவர்கள் காந்தளூர் சாலை

முதலாம் இராஜேந்திர சோழனின் எசாலம் செப்பேடு. அவன் குரு, எசாலம் கோயிலுக்கு நில தானம் கொடுத்ததை தெரிவிக்கிறது. இதில்தான் இராஜேந்திரன் கங்கை கொண்ட சோழபுரத்தில் கோவில் கட்டியது குறிப்பிடப்பட்டிருக்கிறது. கோவிலின் குறிப்பு இல்லை.

போனதும் அடுத்த மாதமே படையெடுத்து மொத்த காந்தளூர் சாலையையும் தீக்கிரையாக்கினார்.

உண்மையில் எனக்கு அதுதான் முதற்போர்.'' அந்த கிழவன் நெஞ்சு நிமிர்த்தினான்.

உடம்பில் பல தழும்புகளும், முகத்தில் வீரலட்சுமியின் களையும் கொண்ட அந்த வீரர்கள் தங்கள் வாழ்நாளின் எல்லா பகுதிகளைப் பற்றியும் பேசி அசை போட்டார்கள். வாயில் வெற்றிலையும் மணத்தது.

''மேலை சாளுக்கியத்திலிருந்து தூதுவர்கள் வந்திருக் கிறார்கள்.''

''அப்படியா.'' இராஜேந்திரர் அரிசி கஞ்சியை சூடாக குடித்த வண்ணமே கேட்டார்.

''யார் அந்த தளபதிகள்.''

''தளபதிகள் அல்ல,''

''பிறகு.''

''அந்தணர்கள் ஆறு பேர்.''

''அந்தணர்களையா அரசியல் தூது அனுப்புகிறார்கள்.''

''ஆமாம்.''

''சண்டைக்கு வரவில்லையாமா.'' சிரித்தார்.

''எப்படி அவ்வளவு தெளிவாக சொல்லுகிறீர்.''

''தளபதிகளை அனுப்பினால் சண்டை. அந்தணர்களை அனுப்பினால் சமாதானம். இது வழக்கம்தானே. ஒற்றுமையாக இருக்கலாம் என்று கெஞ்சுகிறானா.''

''ஆமாம். பல்வேறு விதமான பரிசுகள் அனுப்பியிருக் கிறார். பருப்பு வகைகள் கூடை கூடையாக இறங்கிக் கொண்டிருக் கின்றன.''

''இராஜாதிராஜன் என்ன சொல்கிறான்.''

''சபை கூடி பேசிக்கொண்டு இருக்கிறது.''

''அருண்மொழிபட்டரே நீர் என்ன நினைக்கிறீர்.'' கஞ்சி கலயத்தை கீழே வைத்துவிட்டு அருண்மொழி பக்கம் திரும் பினார்.

அருண்மொழி பசும்பால் குடித்துக் கொண்டிருந்தவன் தன் பாத்திரத்தை கீழே வைத்தான்.

''ஏற்றுக் கொள்ள வேண்டும்.''

''ஏன்''

''நமக்கும் ஓய்வு வேண்டுமல்லவா. படைகள் திரும்பவும் கிருஷ்ணை வரை போய்வர வேண்டுமென்றால் கடினமல்லவா.''

''அவன் கீழை சாளுக்கியம் திரும்பினால்.''

''திரும்பமாட்டான் சக்கரவர்த்தி, அரையன் ராஜராஜன் அங்கு இருக்கும்வரை எந்த கவலையும் இல்லை. அரையன் ராஜனை கண்டால் அவர்களுக்கு கொலை நடுக்கம். அரையன் ராஜன் வேண்டுமென்றே மேலை சாளுக்கியத்தில் பல காத தூரம் உள்ளே நுழைந்து வெறுமே மிரட்டி விட்டு திரும்புகிறார். சாளுக்கியத்தின் எல்லை படைகளை பின்னோக்கி விரட்டுகிறார். பிறகு வந்து தன்னுடைய பாடி காவல் வந்து உட்கார்ந்து கொண்டு பாட்டுகள் கேட்கிறார். தப்பித் தவறி ஒரு இடையன் எல்லை தாண்டி வந்தாலும் பிடித்து உள்ளே உட்கார வைத்து விடுகிறார். நான்கு மாதம் ஐந்து மாதம் கழித்துதான் அனுப்புகிறார். எனவே, எல்லை மிக பலமாக இருக்கிறது.''

''அளவுக்கு அதிகமாக சோழ தேசத்திற்கு ஓய்வு கொடுத்து விட்டோமோ என்று தோன்றுகிறது அருண்மொழி.''

''உண்மை சக்கரவர்த்தி. நீங்கள் பேசுவது தவறல்ல. ஆனால் இந்த உழைப்புக்கு இன்னும் கூட ஓய்வு கொடுக்கலாம். இரண்டு வருடங்கள் வடக்கே போனது அரிதினும் அரிதான செயல். அதில் ஓய்வு கொள்ளலாம்.''

''ஆனால் பயிற்சிகள் நடக்கின்றனவா.''

''எல்லோருக்கும் பயிற்சிகள் இல்லை. மெய்க்காவல் படையினர். தெரிஞ்ச கைக்கோள படையினர். வலங்கை, இடங்கை படையினர். கொடுங்கை படையினர், வீரவாள் படையினர் என்று சில குழுக்களுக்கே பயிற்சிகள் இருக்கின்றன. கொடுங்கை படையினர்தான் மிகக் கடுமையான பயிற்சிகளை கைக்கொள்கிறார்கள் மெய்க்காவல் படையினர் குதிரை

ஓட்டத்தில் நாட்டம் செலுத்துகிறார்கள். மக்களின் கவனம் வேறு பக்கம் திரும்பிவிட்டது,''

''எந்த பக்கம்''

''கடற்பயணம்.''

''அப்படியா.'' இராஜேந்திரர் வியந்தார்.

''ஆமாம், நாம் கடாரத்திற்கு போய் வந்த பிறகு கிட்டத் தட்ட முப்பது குழுக்கள் வணிகர்கள் ஸ்ரீ விஜயம் நோக்கி போய் வந்து விட்டார்கள். இரண்டு மாதம், மூன்று மாதம் தங்கி விட்டு வருகிறார்கள். இரண்டு குழுக்கள் சீனத்திற்கும் விஜயம் செய்திருக்கிறார்கள். மூன்று நாவாய்கள் காம்போஜத்தில் தங்கி விட்டு வந்திருக்கின்றன. சாவகத் தீவில் வணிகர்களுக்கு மன்னருக்குரிய வரவேற்பாம். பெரிய கொண்டாட்டமாம். இடுப்பு வேட்டிக்கு உயிரையே விடுகிறார்களாம்.''

இராஜேந்திரர் வாய்விட்டு சிரித்தார்.

''வளரட்டும், அவர்களும் வளரட்டும். மூன்று வருடங் களுக்கு மேல் ஆகிவிட்டதல்லவா. கடாரம் போய் வந்து,''

''ஆமாம். உங்களுக்கு அறுபத்தி நான்கு வயதாகி விட் டது,''

''அடேய், ஏனடா வயதை ஞாபகப்படுத்துகிறாய்.'' இரா ஜேந்திரர் சிடுசிடுத்தார். ஆனால் முன்போல் முடியவில்லை என்பதை புரிந்து கொண்டிருந்தார். மனைவியரிடம் வாய் விட்டும் சொன்னார்.

மூன்று வயது குலோத்துங்க சோழன் அம்மங்காவுடன் தந்தை இராஜராஜ நரேந்திரனுடன் கங்கை கொண்ட சோழபுரம் வந்து இறங்கினான். தாத்தாவை பார்த்து விழுந்து வணங் கினான். பிளிறினார்கள். சோழம் சோழம் என்றார்கள். குழந் தையின் மீது பூக்களை வாரி இறைத்தார்கள். வில்வ மாலை சாத்தினார்கள். நடைபாவாடை விரித்தார்கள்.

குங்கும திலகமும், சந்தன மார்பும், இடுப்பில் தங்க ஒட்டி யாணமும், பட்டு வேட்டியும், கழுத்தில் ஆரங்களும் அணிந்து யானையின் மீது நின்ற வண்ணம் ஊர் பார்த்து வந்த சிறுவனை வியந்து வாழ்த்தினார்கள்.

''அடாடா. சிறு வயது இராஜராஜரை பார்ப்பது போலவே இருக்கிறது'' என்று வியந்தார்கள்.

''நீ எப்பொழுது பார்த்தாய் இராஜராஜரை சிறுவயதில்.''

''படம் இருக்கிறதய்யா. அரண்மனையில் படம் பார்த்திருக் கிறேன்'' என்று ஒரு கிழவர் சொல்ல, அவரை தட்டிக் கொடுத் தார்கள். 'இராஜ களை. இப்படித்தான் இருக்கும் போல', பெண்கள் வியந்தார்கள்.

பிள்ளை யானைப் பாகனை இறங்கச் சொல்லியது. அம்பாரியை அகற்றச் சொல்லியது. கால்களை யானையின் கழுத்து மணியில் உள்ள கயிறில் சொருகிக் கொண்டு, கையில் மெல்லிய பிரம்போடு யானையை ஓட்டமாக விரட்டியது. ஊர் மக்கள் ஒதுங்கினார்கள். வீரர்கள் பின்னாலேயே கவலை யோடு ஓடினார்கள். அரண்மனையிலிருந்து கோட்டை வாசல் வரை போய்விட்டு, அங்கிருந்து இன்னும் விரைவாக அவன் மட்டுமே தனியாக யானையை செலுத்தினான்.

''நல்ல வார்த்தை சொல்லி இறக்கி விடம்மா. எனக்கு பயமாக இருக்கிறது.'' இராஜேந்திர சோழர் அலறினார்.

''அடேய் கிழவா. என்ன கத்துகிறாய்.'' தாவி இராஜேந்திர சோழர் மடியில் ஏறிக் கொண்டது. முகத்தை அழுத்தி கிள்ளி யது. நெஞ்சில் அடித்தது. இடுப்பில் கை ஊன்றி தோளில் கால் வைத்து, கழுத்தில் இரண்டு கால்களையும் போட்டு அமர்ந்து கொண்டது. ''நீ யானை. நான் அரசன். ம் ஓடு.'' என்று விரட்டியது. அந்த யானையும் வேறு வழியின்றி ஓடியது.

அந்த குழந்தை மறுபடியும் வேங்கிக்கு திரும்பிய பொழுது ஊரே அழுதது.

''இவ்வளவு பாசம் நான் இராஜாதிராஜன் மீதோ, வீர இராஜேந்திரன் மீதோ, இளவல் இராஜேந்திரன் மீதோ வைத்ததே இல்லையே. இந்த பிள்ளை மட்டும் ஏன் என் மனதை கொள்ளை கொண்டு விட்டு போகிறான். இதற்கு காரணம் பிள்ளையா. அல்லது என் வயதா.''

''இரண்டும்தான்.'' வீரமாதேவி பதில் சொன்னாள். இராஜேந் திரர் ஆம் என்று தலையசைத்தார். முதுமையை அனுபவிக்கத் துவங்கினார்.

இடரினும் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உன்கழல் தொழுதெழுவேன்

ஓதுவாரை பாடச் சொல்லி, கண்ணில் நீர் பனிக்க கங்கை கொண்ட சோழீஸ்வரரையே பார்த்துக் கொண்டிருந்தார். குதிரை ஏறி குடந்தை பக்கம் போனார். எல்லா கோவில்களுக்கும் நிவந்தம் கொடுத்தார். இன்னும் தாண்டி தஞ்சைக்கு போனார். பெருவுடையாரை தரிசித்தார்.

''தஞ்சை பெருவுடையார் கோவில் மூளியாக இருக்கிறது.''

''என்னை என்ன செய்யச் சொல்கிறீர்கள். குஞ்சரமல்லன் செத்துப்போய் விட்டானே. இராஜராஜர் பார்க்காத ஒரு சிறபத்தை நான் செய்ய மாட்டேன் என்று சொல்லி குஞ்சர மல்லன் மூச்சு நிறுத்தி விட்டானே. அவன் சொல்லை எந்த சிற்பிகள் மீறுவார்கள். மீறச் சொல்லி நான் எப்படி சொல்வது. மூளியாகவே இருக்கட்டும். காலம் ஏன் என்று கேட்டால் பதில் சொல்ல வேண்டுமல்லவா. ஒரு பெரிய சரித்திரம் சொல்ல வேண்டுமல்லவா.

ஒரு பெரிய வீடு கட்டுகிறோம். வாசல் பக்கம் மட்டும் சுவர் எழுப்பி கதவு போடுகிறோம். கொல்லைப்புறம் வெறும் வேலியாக இருக்கிறது. சுவர் எழுப்பவில்லை. மேல் தளத்தில் சாளரத்திற்கு கம்பி வைக்கவில்லை. வெறுமே திறந்து இருக்கிறது. வாழாத வீடு என்று சொல்லிவிடுவோமா. நாலு கம்பு நட்டு, குடிசை போட்டு உள்ளுக்குள்ளே ஒரு சிவலிங்கம் ஸ்தாபித்து விட்டால் அது கோவில். இங்கே மூளி என்ற வார்த்தையே வராது. வரக்கூடாது. ஓலைக்கூரை என்பதால் மூளி என்றாகி விடுமா. உள்ளே சிவலிங்கம் தான் முக்கியம். அற்புதமாக சிவலிங்கம் ஸ்தாபிக்கப்பட்டு இருக்கிறது. எனவே, மற்ற குறைகளை பாராட்டாது கோவிலுக்கு உண்டானதை செய்யுங்கள்.''

''தேவரடியார்கள் எல்லாம் கங்கை கொண்ட சோழபுரம் போய்விட்டார்களய்யா.''

''இதிலும் என்னால் தவறு செய்ய முடியவில்லை. எங்கு ஜனங்கள் இருக்கிறார்களோ அங்குதான் நாடகமும், நாட்டியமும். எங்கு நாட்டியம் பார்க்கிறார்களோ அங்குதான்

தேவரடியார்கள் வருவார்கள். தஞ்சை பெரிய கோவிலுக்கு அதிகம் மக்கள் வருவதில்லை. அங்கு நாட்டியம் ஆடு என்றா கட்டளை இட முடியும். கலைஞரை அப்படி துன்புறுத்த என்னால் இயலாது.''

''தஞ்சை சோபிதமாக இல்லை ஐயா.''

''அதற்காக...? பழையாறை சோபிதமாக இருக்கிறதா. பழையாறை விட்டு தஞ்சைக்கு வந்தீர்களே. பழையாறை என்னவாக இருக்கும் என்று யோசித்தீர்களா. அப்படித்தானய்யா. இது கால மாற்றம். பழையாறை விட்டு தஞ்சை, தஞ்சை விட்டு கங்கை கொண்ட சோழபுரம். கங்கை கொண்ட சோழபுரம் விட்டு என்னுடைய பேரன்களோ, வேறு யாரோ வேறு எங்காவது போவார்கள். அப்பொழுது கங்கை கொண்ட சோழபுரமும் சோபிதம் இல்லாததாக இருக்கும். காலத்தின் நியதியை மனிதர்கள் எதிர்க்க முடியாது.''

''இங்கு நடனமாட ஆட்கள் இல்லாததால் நீங்கள் கொடுத்த நிவந்தங்களை என்ன செய்வது என்று தெரியவில்லை,''

''எங்கு இருக்கிறார்களோ அங்கு கொடுங்கள். தலைக்கோலி எச்சுமண்டை கங்கை கொண்ட சோழபுரம் வந்து விட்டாள். அதனால் தஞ்சையிலிருந்து நெல் வண்டி அவளுக்கு போகட்டும். அது எப்படி பங்கு இல்லை என்று சொல்வது. அவர்கள் எங்கு ஆடுகிறார்களோ அங்கு பங்கு போகட்டும்.''

''அதாவது தஞ்சைக்கு அளக்க வேண்டிய நெல்லை திருப்பி கங்கை கொண்ட சோழபுரம் அனுப்பச் சொல்கிறீர்களா,''

''ஆள் இல்லாத இடத்தில் நெல் கொடுத்து யாரய்யா சாப்பிடுவது. அவித்து மாடுகளுக்கு போடுவீர்களா. என்ன வேடிக்கையாக இருக்கிறதே.'' ஜனங்கள் வாய் பொத்திக் கொண்டார்கள். தஞ்சை மேலும் சோபை இழந்தது.

இது வெறியா. வேண்டுமென்று செய்ததா. கிராமத்திலிருந்து நகரத்திற்கு குடிபெயர்ந்த கூட்டம் கிராமத்து வீடுக்கு வெள்ளை அடிக்குமோ, உத்திரக்கட்டையை தூக்கி நிறுத்திடுமோ. அப்படியே இருக்கட்டும் என்றுதான் விலகி நிற்கும்.

சோழர்கள் கங்கை கொண்ட சோழபுரத்தை மொய்த்துக் கொண்டார்கள். தஞ்சை தானாக புறக்கணிக்கப்பட்டது.

குடந்தை நெற்களஞ்சியமாக இருந்ததால் வணிகர்களால் சிறந்து இருந்தது. ஆனால் கங்கை கொண்ட சோழபுரத்திலிருந்து திருமயிலை வரை உள்ள எல்லா இடங்களும் செழிப்பாக மாறின. வீரர்கள் நிறைந்த நடுநாடும், அறிஞர்கள் நிறைந்த தொண்டைநாடும், நல்லோர்கள் நிறைந்த திருமுனைப்பாடி நாடும் மிகச் சிறப்பாக விளங்கின.

''எனக்கு இன்னும் ஐம்பது வருடம் ஆயுள் இருக்கிறது என்றால் நான் திருமயிலையை என் தலைநகராகக் கொள்வேன். மயிலை, அல்லிக்கேணியை நான் பெரிதுபடுத்துவேன். கோட்டை சூழ்ந்த அந்த கோவிலை நான் செப்பனிடுவேன். அங்கு கற்பாறைகள் போட்டு நாவாய்கள் நிற்கும் துறைமுகம் செய்வேன். மயிலையின் வட பக்கம் இருக்கின்ற ஆற்றை ஆழப் படுத்தி மரக்கலன்கள் அங்கு வந்து தங்கும்படி செய்வேன்.

கடல் வாணிபத்திற்கும், நெல் விளைச்சலுக்கும், வாழை, கரும்பு போன்ற பயிர்களுக்கும், வெற்றிலை தோட்டத்திற்கும் மயிலை சிறப்பான ஊர். நன்செய், புன்செய் நிறைந்த ஊர். ஆளுடை பிள்ளை உல்விய ஊர். அந்தணர்களும், வணிகர்களும் சமமாக இருக்கின்றஊர். வேளாளர்கள் தலைசிறந்து வாழ்ந்த ஊர். புல்வெளி இருக்கிறது. அங்கு படை வீடு இறக்கி விடுவேன்.

மயிலையில் அரண்மனைகள் கட்டுவேன். வடக்கே அல்லிக்கேணியில் படைவீடுகளை நிறுத்துவேன். பாடி எல்லா இடங்களிலும் காவலை பலப்படுத்துவேன். மேலை சாளுக்கியத்தை மிரட்டிக் கொண்டே இருப்பேன்.'' ஒருநாள் அவர் வாய்விட்டு சொன்னார்.

அந்தப்புரம் அவருடைய எண்ணங்கள் கண்டு வியந்தது.

ஆனால் இன்னும் ஐம்பது வயது அவருக்கு இருக்காது. இந்த திட்டம் நடக்காது என்றும் தெரிந்தது.

சீராளன் நிதானமாக நடப்பதற்கு பழகிக் கொண்டான். கோல் ஊன்றி, கண் இடுக்கி, தரை பார்த்து அமைதியாக நடந்தான்,

''இன்னும் என்னைத் துன்புறுத்திக் கொண்டிருக்கிறாயா. எப்பொழுது என்னை அழைத்துக் கொள்ளப் போகிறாய்'' என்று கை கூப்பி மனைவியின் நடுகல் முன்பு அழுதான். மெல்ல தெற்கு பக்கம் நடந்து அங்குள்ள தோப்பில் குடிசை போட்டுக் கொண்டு மனைவியின் சிலைக்கு ஒரு கோவில் அமைத்துக் கொண்டு, தான் இறந்தால் நிறுவ வேண்டும் என்று ஒரு சிவ லிங்கம் செய்து வைத்துக் கொண்டு அமைதியாக வாழ்ந்தான்.

'மயிலை, திருவல்லிக்கேணிக்கு ஒரு தனித்த முகம் உண்டு. அது பண்டித முகம். ஆனால் சோழருடைய வீரம் இங்கு கலக்க வேண்டும். இது மிகச் சரியான எல்லையாக இருக்க வேண்டும். வேளாளர்களை போற்றுவது மட்டும் இல்லாமல் சத்திரிய குடியிருப்புகள் வேண்டும்'' என்று வணிகர்களிடம் பேசினான்.

வணிகருடைய வீரவாள் படையினர் அதிகரித்தார்கள். திருவொற்றியூர் தாண்டி வீரவாள் படையினர் பாடி அமைத்தார் கள். மேல்பாடி என்று அதை அழைத்தார்கள்.

தெற்கு பக்கம் கடலின் கழிமுகத்தில் திருவான்மியூருக்கு அருகே இன்னொரு காவல் படை அமைத்தார்கள். மயிலை நல்ல காவலுக்கு இடையே கன ஜோராக அமைந்திருந்தது. வியாபாரம் பெருகிக் கொண்டே இருந்தது.

காசியிலிருந்து கங்கை கரை ஓரமாக ஒட்டதேசம் வந்து, ஒட்ட தேசத்திலிருந்து கீழை சாளுக்கியம் நகர்ந்து, கீழை சாளுக்கியத்திலிருந்து மயிலையை தொட்டு, இங்கிருந்து கடற் கரை ஓரமாகவே வட இந்திய சாதுக்கள் இராமேஸ்வரம் நோக்கி போனார்கள்.

புகாரிலிருந்து உள்ளுக்குள்ளே கங்கை கொண்ட சோழ புரமும், தஞ்சையும் பார்த்து விட்டு அப்படியே திருச்சிராப் பள்ளி அடைந்து அப்படியே மதுரைக்கு போய் அங்கேயும் ஸ்வாமி தரிசனம் செய்து கொண்டு மதுரையிலிருந்து இராமேஸ் வரம் நுழைந்தார்கள். யாத்ரீகர்கள் வருகை அதிகமாக இருந்தது. மயிலை பெரிய உணவுக் கூடமாக மாறியது.

சீராளன் வடக்கு இருக்க முடிவு செய்தான். மெல்ல மெல்ல உணவு குறைத்தான். இடையறாது தியானத்தில் இருந்தான்.

உடம்பு வற்றிப் போனான். பிறகு நீர்மட்டும் அருந்தினான். ஊரார் அவனை இப்படி செய்ய வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார்கள். ஆனால் சிரித்து மறுத்து விட்டான்.

“இது கெடுதல் அல்ல. இப்படி வடக்கிருத்தல் ஒரு நல்ல விதமான சாவு. உடம்பு அநித்யமானது என்பதை புரிந்து கொண்ட பிறகுதான் இதில் ஒருவர் ஈடுபட முடியும். இதில் வன்முறை இல்லை. ஆத்மாவில் கவனம் வந்து விட்ட பிறகு உடம்பு பேணுவதில் அர்த்தமில்லை. எனவே, உடம்பை மெல்ல அமைதிபடுத்தி விடுதலை பெறுவது என்பது ஒரு உயரிய விஷயம். அதைத்தான் செய்து கொண்டிருக்கிறேன்.

நீங்கள் எல்லோரும் ஒருநாள் மரணமடையப் போகிறீர் கள். அதோ அந்த கைக்குழந்தையும் ஒருநாள் இறக்கப் போகி றது. ஆனால் மரணம் என்றால் என்ன என்று தெரியாமல் சாகப் போகிறீர்கள். நான் அணு அணுவாக விரற்கடை விரற்கடை யாக மரணத்தை அனுபவித்துவிட்டு மரணத்தை புரிந்து கொண்டு விட்டு மரணிக்கப் போகிறேன். இது ஒருவித தவம்” என்று ஆற்றுப்படுத்தினான்.

ஜனங்கள் திகைத்தார்கள். அந்தணர்களும் அவன் முன்பு நெடுஞ்சாண்கிடையாக விழுந்து வணங்கினார்கள்.

சமாதி பற்றி தெள்ளத் தெளிவாகபடம் வரைந்து காட்டி னான். விரளி மஞ்சள் சேமித்து வைத்தான். தன் மரணத்திற்கு நாள் குறித்தான். ஊர் பசுஞ் சாணத்தில் விரட்டியாக தட்டி விபூதி தயாரித்தது. கூடை கூடையாக சேமித்துக் கொண்டது.

அவன் சொன்ன நாள், சொன்ன நேரத்தில் கைகூப்பி எல்லோரையும் பார்த்து விட்டு கண்கள் மூடிக் கொண்டான். அடுத்த அரைகால் நாழிகையில் அவன் உடம்பு வலப்பக்கம் சரிந்தது. தலை துவண்டது. உடம்பிலிருந்து உயிர் போவதை அங்குள்ள அத்தனை பேரும் உணர்ந்தார்கள். சகலரையும் தழுவிக் கொண்டு அந்த உயிர் பிரிந்தது. ஜனங்கள் விசும்பி அழுதார்கள். அவனை குழியில் இறக்கி, மஞ்சளும், விபூதியும், உப்பும் கொட்டி கற்பலகை வைத்து மூடினார்கள். அதன் மீது அவன் சொன்ன சிவ லிங்கத்தை ஸ்தாபித்தார்கள்.

இவன் தர்மவான். இவன் தர்மவான். ஞானத்தை மயிலைக்கு தர்மமாக வழங்கியவன் என்று பாராட்டினார்கள். தர்மராஜன் என்று அந்த சிவலிங்கத்தை அழைத்தார்கள். அவன் வணங்கிய பெண் தெய்வத்தை திரௌபதி என்றார்கள். கருங்கல் கோவில் கட்டினார்கள். அது உக்கிரம் நிறைந்த இடமாக இருந்தது.

அருண்மொழிபட்டன் அந்த கோவில்களுக்கு பொற்காசுகள் அனுப்பினான். சிறப்பாக வைக்கச் சொன்னான். இராஜேந்திரருக்கும் விவரம் சொன்னான். இராஜேந்திரருக்கு மயிலைக்கு போக வேண்டும் என்ற ஆசை இருந்தது. ஆனால் உடல்நலம் இடம் கொடுக்கவில்லை.

குளிர்காலம் போய் வெய்யில் காலம் வந்தது. வெய்யில் காலம் போய் மழைக்காலம் வந்தது. மழைக்காலம் போய் குளிர் காலம் வந்தது. ருதுக்கள் மாறின. பிஞ்சுகள் புதிதாய் தோன்றின. தோன்றியவை பழுத்தன. பழுத்தவை உதிர்ந்தன.

ஆகமவல்லன் மறுபடியும் சமாதானத்திற்கு ஆள் அனுப்பினான். இராஜாதிராஜன் அடியோடு மறுத்து விட்டான். வீர இராஜேந்திரனும், இளவல் இராஜேந்திரனும் மூத்த சகோதரனான இராஜாதிராஜனை ஆதரித்தார்கள். இராஜேந்திர சோழரை கலக்காமலேயே முடிவுகள் செய்தார்கள்.

''மறுபடியும் இரத்தம் சிந்த வேண்டுமா. இன்னொரு போர் தேவையா. சமாதானம் செய்து கொள்ளுங்கள்.'' என்று தானே வலிய போய் சொல்ல, எல்லோரும் அமைதியாக கைகட்டி நின்றிருந்தார்கள். அவர்கள் நின்ற விதத்தில் அவர் பேச்சை ஏற்பதாக முகபாவம் காட்டவில்லை.

''நான் உத்தரவிட்டாலும் செய்ய மாட்டீர்களோ'' என்று இராஜேந்திரர் கொஞ்சம் உரத்து கேட்க, இராஜாதிராஜன் அருகே வந்தான்.

''தயவுசெய்து அப்படியெல்லாம் உத்தரவு இடாதீர்கள். ஆகமவல்லன் இங்கு சமாதானம் அனுப்பிவிட்டு தன் இடத்தில் படை திரட்டிக் கொண்டிருக்கிறான். சேர தேசத்து அந்தணர்களை வைத்துக்கொண்டு விற்பயிற்சி செய்து கொண்டிருக்கிறான். வடக்கிலிருந்து வரும் துருக்கியர்களை மடக்கி

குதிரைகளை வாங்கிக் கொண்டிருக்கிறான். காடுகளிலிருந்து யானைகள் பிடித்து வந்து கடும் பயிற்சி கொடுத்துக் கொண் டிருக்கிறான்.

இந்த முறை அவன் படையின் முன்னணியில் யானைகள் தான் இருக்கும். கிட்டத்தட்ட அறுநூறு யானைகள் அவன் தலை நகரிலேயே இருக்கின்றன. அவன் தாக்குதல் மயிலையின் மீதுதான் தொடங்கும். யானையினாலேயே மயிலை இடித்து அழிக்கப்படும். யானைகளின் கையில் தடிமனான மரக்கட்டை களை கொடுத்து அவைகளை வீசி எறியவும், எதிர்த்து தாக்க வும் பயிற்சி செய்கிறான். முன்னணியில் வருகின்ற யானைகள் அறுபது அறுபதாக முன்னேறும், கையிலுள்ள கட்டைகளை வீசி எறியும், அப்படி எறிந்த ஒரு கட்டை ஒரே நேரத்தில் மூன்று வீரர்களை அழிக்கும். முன்னணி வீரர்களை இப்படி கட்டை யால் அடித்தால் படையினுடைய முன்னேற்றம் சேதப்படும்.

எனவே, ஆகமவல்லனோடு சமாதானம் என்ற பேச்சிற்கே இடமில்லை, நீங்கள் இரக்கம் காட்டுவதாகச் செய்தி அங்கு போயிருக்கிறது. உங்களிடம் மட்டும் பேசுவதற்காக சில அந்த ணர்கள் இங்கு வந்து தங்க அவர்கள் பேச்சின் மூலம் அதை அறிந்து கொண்டு நாங்கள் அவர்களை நாடு கடத்திவிட் டோம். எனவே, தவறான எந்த முடிவிற்கும் வந்து விடாதீர்கள்'' என்று பதில் சொன்னான்.

''என்னை சந்திக்க அவர்களை அனுமதிக்கவில்லையா.''

''இல்லை.''

''என்னை சந்தித்த பிறகு நாடு கடத்தி இருக்கலாமே.''

''ஒருவேளை நீங்கள் மனம் மாறி சமாதானத்திற்கு தயார் என்று சொல்லிவிட்டால். அந்த எண்ணத்தில்தான் அவர்கள் வந்திருக்கிறார்கள். இராஜேந்திரர் இளகி இருக்கிறார். அவரை சந்திப்போம் என்று திட்டமிட்டு வந்திருக்கிறார்கள். எங்களுக்கு இளக விருப்பமில்லை.''

''ஆக, என்னை சந்திக்க வந்தவர்களை நீங்கள் அனு மதிக்கவில்லை.''

''ஆமாம்.''

''நல்லது. இனி நான் உங்கள் யாரையும் சந்திக்க பிரியப் படவில்லை.'' அவர் சபையை விட்டு கீழ் இறங்கினார். எல்லோ ருக்கும் வணக்கம் சொன்னார். மெல்ல வாசற்படி இறங்கினார். திரும்பினார்.

''இராஜாதிராஜா, இனி சகலமும் உன் பொறுப்பு. நீயே கவனித்துக் கொள். என்னிடம் எந்த அரசாங்க செய்தியும் வர வேண்டாம். நீ சொல்வது சரி. நான் தளர்ந்து விட்டேன். மன தளர்ச்சியால், உடல் தளர்ச்சியால் என் முடிவுகள் உங்களை ஒத்த முடிவுகளாக இல்லாது போகும். ஆனால் சோழ தேசத் தில் யாராவது ஒருவர் முடிவு செய்வது நல்லதாக இருக்கும். நீயே முடிவு செய். எனக்கு விடை கொடு.'' அவர் அவனை நோக்கி கும்பிட்டார்.

இராஜாதிராஜன் கண்ணில் நீர் பெருக்க நின்றான். மன்னிப்பு கேட்கலாமா என்று முன்னேற வாசுதேவ நாராயணன் வேண்டாம் என்று சொல்லிவிட்டார். அங்கேயே அசையாமல் நின்றார்.

இராஜேந்திரர் வாசுதேவ நாராயணனை உற்றுப் பார்த்தார். ''ம் ம்... உம் வேலையா இது'' என்று உறுமினார்.

சரி. எனக்கு ஒரு அருண்மொழிபட்டன், என் அப்பனிட மிருந்து என்னை பிரித்து வந்தவன். இராஜாதி இராஜனுக்கு ஒரு வாசுதேவ நாராயணன். என்னிடமிருந்து அகற்றிப் போகி றவன். ஹா. என் தகப்பனுக்கு நான் என்ன வேதனை கொடுத் தேனோ அதை என் பிள்ளை கொடுத்துதானே ஆக வேண்டும். அதை நான் அனுபவித்துத்தானே ஆக வேண்டும். அவர் வாய் விட்டு சிரித்தார். அரச சபை விட்டு வெளியேறினார்.

அதற்குப் பிறகு கங்கை கொண்ட சோழபுரத்தில் அந்த அரசவையில் அவர் உள்ளே நுழையவே இல்லை. அவருடைய அந்தப்புரத்திலும், மற்ற சேனாதிபதிகளின் அரண்மனைகளி லும், சுற்றியுள்ள கிராமங்களிலும் தங்கி இருந்தார். வருடங்கள் கடந்தன.

அத்யாயம்

109

உயிர் என்பது வசிக்கின்ற கூடுதான் உடம்பு. எங்கும் பரவி இருக்கின்ற சக்தி ஒரு இடத்தில் நிலைகொண்டு நிற்பது தான் உயிரினங்கள். அந்த உயிருக்கு மாற்றமில்லை. வளர்ச்சி யில்லை. தேய்வு இல்லை. உணர்வு இல்லை. ஆனால் இவை யெல்லாம் அதை தாங்கிய உடம்புக்கு இருக்கிறது. இந்த பூமி யின் மிகப் பெரிய விசித்திரம் உடம்பு எடுத்த இந்த படைப்பு தான். புழுவாகி, பூண்டாகி, புல்லாகி, மரமாகி என்று பல்வேறு தாவர சங்கமத்தின் அலையல்கள்தான். இது மிகப் பெரிய அதிசயம். எதற்கு உயிர் இப்படி இருக்கிறது. ஏன் சிறைபட்டது என்ற கேள்விக்கு எவரும் பதில் சொல்ல முடியவில்லை. பல லீலா விநோதங்களில் இது ஒன்று என்று தப்பித்துக் கொள் கிறார்கள்.

இந்த பிரபஞ்சத்தில் ஏதோ ஒரு கிரகம் இயங்காது இருக்க வேண்டும். ஏதோ ஒன்று அரைகுறையாக இயங்க வேண்டும். ஏதோ ஒன்று வெப்ப சலனமாக இருக்க வேண்டும். ஏதோ ஒன்று குளிர் குவியலாய் இருக்க வேண்டும். ஏதோ ஒரு கிரகம் வாழ்ந்து கொண்டிருக்க வேண்டும். பூமி அப்படிப்பட்ட கிரகம். சுற்றியுள்ள சக்தி சட்டென்று பிரிந்து கருவிற்குள் நுழைந்து விடுகிறது. எந்த உயிர் எந்த கருவிற்குள் யார் தீர்மானிப்பது. அந்த உயிர் தீர்மானிக்கிறது. அது விருப்பு வெறுப்பு இல்லாத தாயிற்றே. ஆமாம் அதற்கு விருப்பு, வெறுப்பு இல்லையெனி னும் விதி இருக்கிறது. இந்த பூமியை சுற்றியுள்ள சக்தியிலிருந்து ஒரு துளி அந்த சக்தியை அரவணைத்துப் போக அந்த சக்தியே, அந்த ஒரு துளியே தன்னிலிருந்து பிரித்து கருவிற்குள் தள்ளு கிறது. அந்த சக்தி தீர்மானிக்கிறது. நீ இங்கிருந்து வந்தாயல் லவா. இங்கேயே போ. இதற்கு முன் இப்படி இருந்தாய் அல்லவா. இப்பொழுது இப்படி இரு என்று ஒரு கணக்கு போடுகிறது.

பிறகு பெண் வயிற்றுக்குள் வளர்ந்து வெளியே வந்து மூச்சு திணறி அழுது, கண்கள் திறந்து, ஒளி கூச கண்கள் மூடி, பழைய நினைப்பில் தூங்குகிறது. பிறகு மெல்ல மெல்ல பழையன போக, புதியன ஆக்ரமிக்க தள்ளாட்டமான ஓட்டமும், தளர்நடையும், சிரிப்பும், அழுகையுமாய் குழந்தை வளர்கிறது.

போன ஜென்மத்தில் எங்கு என்னவாய் பிறந்தேனோ தெரியவில்லை. மிகுந்த வலிவு உள்ளவனாய் பிறந்திருப்பேன் என்று தோன்றுகிறது. மனம் அந்த வலிவு கொண்டு அலை கிறது. உடம்புதான் துவண்டு போய் விடுகிறது. ஓட வேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது. கால் ஒத்துழைக்க மறுக்கிறது.

மலைப் படிகளில் ஏற வேண்டுமென்ற ஆவல் இருக் கிறது. கால் ஒத்துழைக்க மறுக்கிறது. கூடலுக்கு மனம் விழை கிறது. உடம்பு அட, சும்மா இருடா என்று அலுத்து கிடக்கிறது. கைகளால் தொட்டும், அணைத்தும், முத்தமிட்டும் பாதி கூடல் நடைபெறுகிறது. என்ன ஆச்சரியம் இராஜேந்திர சோழர் வியந்தார்.

மரணம் பற்றிய இந்த நினைப்பெல்லாம் சாளுக்கிய தேசத்தின் படையெடுப்பின்போது இல்லையே. கேரளத்தை நோக்கி போகும்போது இல்லையே. பாண்டியனை கதற அடித்த போது இல்லையே. கங்கையை நோக்கி போன போதும், கடற் பயணம் போன போதும் வரவில்லையே. இப்பொழுது நடக்க முடியாமல் மெத்தை தைத்த ஆசனத்தில் சாய்ந்து கிடக்கிற போது உயிர், உடம்பு, வாழ்க்கை, மரணம் என்றெல்லாம் சிந்திக்க தோன்றுகிறது. இதுதான் முதுமையின் அடையாளமா. உடம்பு மறுத்து விட்டதால் புத்தி அதிகம் அலைகிறதா. புத்தியை சிறு வயதிலேயே அடக்க தெரிந்திருந்தால் உடம்பும் அலைந் திருக்காது. புத்தியும் இப்பொழுது போல் அலையாது. எல்லாவற் றையும் விட்டு விட்டு பேயாட்டம் ஆடிவிட்டோம்.

தசை கொழுப்பாலும், மன கொழுப்பாலும் நான் தண் டிப்பேன் என்று சூளுரைத்து, சாளுக்கியத்தின் ஊடறுத்து போய் அடித்து நொறுக்கி விட்டு வந்தோம். விதவையானோர் எத்தனை. தகப்பனை இழந்தோர் எத்தனை. அடிபட்ட கிழவர் களும், வாலிபர்களும் எத்தனை. அவர் நெடுமூச்சு விட்டார். செத்துப் போவதற்கு முன்பு திகைத்துப் போன கண்கள் பலதும் பார்த்திருக்கிறார். அடிபட்டு இரத்த விளாறாய் கிடந்தபோது

குத்திகொன்று விடுங்கள் என்று கதறியவனை, கத்தியை உயரே தூக்கியவுடன் வேண்டாம் என்று கண்கள் கெஞ்ச அழுதவனை நெஞ்சில் இறக்கியதும், நிம்மதியாக கண் மூடியவனை பார்த்திருக்கிறார்.

குதிரை மிதித்து இறந்தவன், யானை மிதித்து இறந்தவன், வேலால் குத்துப்பட்டு இறந்தவன், வாளால் அறுபட்டு இறந்தவன் என்று பலதும் பார்த்தாகி விட்டது.

'ஆறு யானைகளும் ஒன்றாக வருகின்றன. மதம் பிடித்து வருகின்றன. என்ன செய்ய.'

''மண்டியிட்டு இடையறாது அம்பு எறியுங்கள். யானை நிற்கும் வரை நகராதீர்கள். தொடர்ந்து அம்பு அடியுங்கள்'' என்று கட்டளை இட, பதினைந்து வீரர்கள் மண்டியிட்டார்கள். இடையறாது அம்புகள் தொடுத்து ஆறு யானைகளை மறித்தார்கள். ஐந்தை சுழல வைத்தார்கள். ஆறாவது முன்னேறி கையில் இருக்கிற உருளை கட்டையால் மண்டியிட்டு அம்பு எய்கிறவன் மண்டையில் ஓங்கி அடித்தது. கபாலம் சிதறியது. மூளை வழிந்தது. இரத்தம் பீறிட்டது. அவன் அசரவே இல்லை. மண்டியிட்டபடியே இறந்து போனான். யானை மீதிருந்து கண் எதிரே பார்த்த கொடூரம் அது. தன்னுடைய யானையை வேகமாக செலுத்தி, அடித்து கொன்ற யானை மீது முட்டச் செய்து, தாவி அந்த யானை மீது ஏறி, அந்த யானைப் பாகனை எட்டி மிதித்து கழுத்தை உடைத்து, யானைக்கு பின்னால் இருந்த தளபதியை நெஞ்சில் குத்தி, முகத்தை உடைத்து, உச்சியிலிருந்து கீழே வீசி, மற்ற யானைகள் மிதித்து கூழாக்க, மேலும் தொடர்ந்து போரிட்ட வீர கணங்கள் ஞாபகம் வந்தன.

இது வீரமா, விவேகமா, அல்லது வெறும் கோப விளையாட்டா. அவர் கொஞ்சம் சுருண்டு படுத்துக் கொண்டு யோசித்தார். வீரமாதேவி அருகே வந்து, "என்ன, என்ன அயற்சி." என்று நெற்றியில் கை வைத்தாள். அவள் கை சுட்டது. தூக்கம் இல்லாதவள் போல் தெரிந்தாள். அவர் விலகி, எழுந்து, உதறிக் கொண்டு வேறுபக்கம் நடந்தார். யாரும் கொஞ்சினாலோ, உயர்த்தி பேசினாலோ பிடிக்கவில்லை. பலமுறை தன் புகழ் பாடும் மெய்கீர்த்தியை பாதியிலேயே நிறுத்தியிருக்கிறார்.

எழுபத்தைந்து அகவை ஆகிவிட்டது. இராஜாதிராஜன் இரண்டு முறை சாளுக்கியத்தின் மீது படையெடுத்து ஆகமவல்லனை இன்னும் வடக்கே துரத்திவிட்டு வந்தான். சேர தேசத்து வழியாக ஊடறுத்து போய், தென் குமரியிலிருந்து பாண்டியர்களை விரட்டினான். மதுரையில் இருந்த சுந்தர சோழ பாண்டியன் முன்னேறி தாக்க, பாண்டியர்கள் சிதறி ஓடினார்கள்.

'நான் அரசன் இல்லை. அரண்மனை சேவகன்' என்று சொல்லிவிட்டு ஒரு பாண்டியன் தப்பித்து போனான். சுந்தர சோழன் அவனை மறித்து, நிறுத்தி, "நீ யார் என்று அறிவேன். போ. போய் நல்ல இடத்தில் பெண் எடுத்து திருமணம் செய்து கொண்டு, பிள்ளை பெற்று, அவனை என்னிடம் பயிற்சிக்கு அனுப்பு." என்று சொல்லி திருப்பினான். பாண்டிய தேசத்து மக்கள் வெட்கி தலைகுனிந்தார்கள். மானஸ்தர்கள். கோபம் உள்ளவர்கள். சோழர்களோடு போரும் இல்லை. வாழ்வும் இல்லை என்று விலகி இருந்தார்கள். சோழ தளபதிகளைக் கண்டால் எழுந்து நின்றார்கள். தலைகுனிந்து நின்றார்கள். அரைகுறையாய் கேட்டுக் கொண்டார்கள். எந்த ஆதரவும் தராது, எந்த வாழ்த்தொலியும் எழுப்பாது கைகட்டி அமைதியாய் இருந்தார்கள். இன்றைக்கு அடிமை. நாளைக்கு என்று அவர்கள் கண்கள் கேள்வி கேட்டன. இருட்டு வந்துவிட்டது. விடியாமலா போகும் என்ற நம்பிக்கை முகத்தில் இருந்தது.

குறி கேட்டார்கள். ஜோசியம் கேட்டார்கள். இன்னும் முன்னூறு வருடங்களுக்கு விடிவு இல்லை என்று சொன்னதும் திகைத்துப் போனார்கள். அப்படித்தான் தெரிகிறது என்று ஏற்றுக் கொண்டார்கள்.

ஒருவருக்கும் படை பயிற்சி தர முடியவில்லையே. ஒரு இடத்திலும் ஒன்று கூட முடியவில்லையே. சகல இடமும் அல்லவா அவர்கள் வசம் இருக்கிறது. சின்னதாய் மரக்கத்தி வைத்திருந்தால் கூட பிடுங்கி போட்டு விடுகிறார்களே. வெறும் கைக்கோலும் அரிவாளும் தானே தருகிறார்கள், அதுவும் கதிர் அறுக்கும் அரிவாள் தானே தருகிறார்கள். கட்டை வெட்டும் அரிவாள் வேண்டும் என்றால் அந்த அரிவாளில் சோழ இலச்சினை பொறிக்கப்பட்டு இருக்க வேண்டும். அப்பொழுது தான் அனுமதி கிடைக்கும். பாண்டிய மறவர்களுக்கு ஆயுதம்

வைத்துக் கொள்ளவே அனுமதி இல்லை. பிறகு போரிடுவது எப்படி.

சேர தேசத்து சத்திரியர்கள்தான் அமைதியாக இருந்தார்கள். சோழர்களுக்கு ஆதரவாக இருந்தார்கள். ஆனால் அந்தணர்கள் அமைதியாக இல்லை. அவர்கள் கடல் வழியாக சாளுக்கியம் இறங்கி ஊடறுத்து போய் சாளுக்கியர்களிடம் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டு தாங்கள் கற்ற வித்தைகளை வேடிக்கை காண்பித்து அவர்களுக்கு ஆசானாய் மாறினார்கள். கலக்காமல் தனியே குடியிருப்பு ஏற்படுத்தி அமைதியாய் வாழ்ந்தார்கள்.

''நான் ஆயுதம் தரிக்கமாட்டேன். நான் ஆயுதம் தரித்தால் சோழன் இங்கு வந்து உங்கள் தேசத்தை பாழாக்குவான். எனவே, உங்களுக்கு ஆயுதம் பற்றி சொல்லித் தருகிறேன்'' என்று போதனை செய்தார்கள். ஆகமவல்லன் இரண்டு முறை படை திரட்டவும் அவர்களே காரணமாக இருந்தார்கள். படை திரட்டுகிறான் என்றதுமே இராஜாதிராஜன் ஓடிவந்து உருக்குலைத்தான். சேர தேசத்து நம்பூதிரிகளை சிதற அடித்தான். கீழை சாளுக்கியம் பக்கம் நுழையவே முடியாதபடி கட்டுக்காவல் வைத்தான். பரத கண்டத்தின் தெற்குப் பகுதி முழுவதும் அவன் வசம் இருந்தது. ஒட்டர்கள் கீழை சாளுக்கியத்தோடு மிக மரியாதையாகவும், உண்மையாகவும் நடந்து கொண்டார்கள். காழகம் கொடுத்து அரிசி வாங்கினார்கள். பழங்கள் கொடுத்து மாடுகள் வாங்கினார்கள். பொற்காசுகள் கொடுத்து எருமைகள் வாங்கினார்கள்.

சிறிய படையோடு வந்த தட்சிணலாடத்தை பார்த்து சிரித்தார்கள். வழி விடுகிறோம் அப்படியே கீழை சாளுக்கியம் போ. அப்படியே சோறு சாப்பிட்டு விட்டு பிறகு தொண்டை தேசம் போ. முடிந்தால் திரும்பி வா என்று வழிவிட்டார்கள்.

ஆனால் தட்சிணலாடம் ஒட்ட தேசத்தை தாண்டாமல் திரும்பி போய் விட்டது. கிருஷ்ணாவில் குளிக்க வந்தது போல நீராடி ஸ்வாமி கும்பிட்டுவிட்டு திரும்பிவிட்டது. சோழர்களை தாக்க முடியாது என்று தெளிவாக புரிந்துகொண்டது.

புதிய அரசர்கள், புதிய மந்திரி சபை, புதிய படைவீரர்கள் ஆயினும் இந்த பதினைந்து வருடத்தில் எதிரியை எதிர்கொள் ளுகின்ற வலு வடக்கே எந்த தேசத்திற்கும் வரவில்லை.

ஸ்ரீ விஜயம் மறுபடியும் துளிர்கின்றது என்று வணிகர்கள் சொல்ல, இராஜாதிராஜன் அறுபது மரக்கலன்களோடு அங்கு போய் இறங்கினான். கடாரம் சார்ந்த ஊர்களை மிரட்டி விட்டு வந்தான். குடிசை கட்டிக் கொள். கோட்டை கட்டக்கூடாது என்று இடித்து, எரித்து விட்டு வந்தான். சோழ தேசத்து வணிகர்கள் வந்தால் மணலில் விழுந்து வணங்க வேண்டும், அவர்கள் சொல்லும் வரை எழுந்திருக்கக் கூடாது என்று கட்டளை போட் டான்.

மரக்கலம் நுழைய முன்பெல்லாம் ஸ்ரீ விஜயம் வரி வசூ லித்தது. இப்பொழுது மரக்கலம் நுழைய வேண்டுமென்றால் ஸ்ரீ விஜயம் காசு தரவேண்டும். சோறு போட வேண்டும். வேறு வழியில்லாமல் ஸ்ரீ விஜயம் சோழ தேசத்திலிருந்து வருகின்ற துணிகளுக்காகவும், பாத்திர பண்டங்களுக்காகவும், மிளகுக் காகவும், ஏலக்காயிற்காகவும், அரிசி கொடுத்து, பொற் கட்டிகள் கொடுத்து தாழ்ந்து போயிற்று.

குடகுமலை போக வேண்டும் என்று ஆசைப்பட்டு இராஜாதிராஜன் போக, அம்மங்காவின் மகன் குலோத்துங் கன் அவனோடு சேர்ந்து கொண்டான். பதினாறு வயது மீசை முளைத்து விட்டதாம். பெரிய சிரிப்பாம். அதீத ஓட்டமாம். குதிரையில் நின்று கொண்டு தான் போகிறானாம். படையின் முன்பக்கம் முனைத் திரிவாரோடு நடக்கிறானாம்.

ஒரு அரசன் படையின் முனைப்பக்கம் போகக் கூடாது என்று இராஜாதிராஜன் கட்டளை இட, இவர்களெல்லாம் மனிதர்கள் தானே. எனக்காக இவர்கள் முன்னால் போகும் போது, இவர்களுக்கருகே நான் போகக் கூடாதா. நான் முனைத் திரிவாரோடு போவேன். மாமுனைத் திரிவாரோடு போவேன் என்று அவர்களோடு கையில் வேல் ஏந்தி, 'ஹா, ஹா, ஹா' என்று கத்தி, ஓட்டமும், நடையுமாக சாளுக்கியத்தின் மேடு களை கடந்து இருக்கிறான். மிக உரமாக இருக்கிறான் என்று கேள்விப்பட்டு இராஜேந்திரர் சந்தோஷமானார். பார்க்க வேண் டுமே என்று பதை பதைத்தார்.

பதினாறு வயது பிள்ளை, போர் முனைக்கு போய் கங்கை கொண்ட சோழபுரம் வந்து நின்றது. இழுத்து அணைத்துக் கொண்டார். முகத்தை கையில் ஏந்தி பார்த்தார்.

என்ன சோதனை, இனி இவன்தானா. இனி சோழ தேசம் பெண் வயிற்று புத்திரனால் ஆளப்படுமா. ஆமாம் என்று கணித்து சொல்கிறார்களே. விஸ்வநாத ஸ்ரௌதிகள் அடித்து சொல்கிறாரே. "வீர இராஜேந்திரனுக்கும், இளவல் இராஜேந்திர னுக்கும் நிச்சயம் பிள்ளைகள் இல்லை. பெண்களே உண்டு. இராஜாதிராஜனுக்கு பிள்ளை இருப்பினும் அவ்வளவு கூர்மை யாக இராது. அதுவும் தவிர,"

"என்ன"

"இராஜாதி ராஜனுக்கு கண்டம் இருக்கிறது" என்று சொல்லி முடிக்க, அதிர்ந்து போனார்.

யார். யார் அடுத்த அரசர். யார் இளவரசர். இராஜாதிராஜன் வீர இராஜேந்திரனை இளவரசனாக்கினான். இளவல் இராஜேந் திரன் அந்த பொறுப்பு தனக்கு வேண்டாம் என்று சொல்லி விட்டான். ஆனால் படையெடுப்பு முழுவதையும் பார்த்துக் கொண்டான்.

அவர்களின் மூன்று பேரின் மனைவியரும் குலோத்துங் கனை பொறாமையோடு பார்த்தார்கள். அதிசயத்தோடு பார்த் தார்கள். அம்மங்காவின் பிள்ளைக்கு அடித்தது அதிர்ஷ்டம் என்று பேசிக் கொண்டார்கள்.

அம்மங்கா எப்பொழுது கங்கை கொண்ட சோழபுரத்தில் நுழையலாம் என்ற எண்ணத்தில் இருந்தாள். நீங்கள் வேண்டு மென்றால் வேறு திருமணம் செய்து கொள்ளுங்களேன் என்று நரேந்திரனை தூண்டிவிட, நரேந்திரன் இராஜேந்திரனுக்கு பயந்து இல்லை என்று சொல்லிவிட்டான். இருந்தாலும் அவ னுக்கென்ற தேவரடியார்களுடன் ஆட்டம் போட்டான்.

அம்மங்கா குலோத்துங்கனை கண்ணும் கருத்துமாக வளர்த்தாள். வடமொழி பயிற்றுவித்தாள். தமிழ் எழுத, படிக்கச் சொன்னாள். தமிழிலே பேசு என்று கட்டளை இட்டாள். தெலுங்கு மொழியும் அவன் சரளமாக உரையாடினான். ஒன்றல்ல மூன்று மொழி கற்றவன். ஒட்ட தேசத்து மொழியும்

பேசுவான் என்று சொன்னபோது இராஜேந்திரர் திகைத்துப் போனார்.

யானையில் இருந்தபடியும், குதிரையில் இருந்தபடியும், வாள் சுழற்றுவதும், வேல் வீசுவதும் கண்கொள்ளா காட்சி யாக இருந்தன. ஓடுகின்ற யானைமீது தாவி ஏற முடியுமா. என்னமோ சமிக்ஞை யானைக்கும் அவனுக்கும் அவ்வளவு ஒற்றுமை. யானை ஓடிக்கொண்டே கால் தூக்க, சட்டென்று காலைப் பற்றி, காது பற்றி மேலே ஏறி உட்கார்ந்து கொள் கிறான். அதே வேகத்தில் கீழே இறங்குகிறான். எப்பொழுது ஏறினான். எப்பொழுது இறங்கினான் என்று தெரியவே இல்லை. ஆயிரம் பேர் கொண்ட படையை நடத்திக் கொண்டு போய் முற்பகுதியிலிருந்து சில வினாடிகளில் பின் பகுதிக்கு ஓடிப் போய் சில வினாடிகள் மறுபடியும் முற்பகுதிக்கு ஓடிவந்து பெரும் ஆட்டம் காட்டினான். போர் செய்யவே பிறந்தவன் என்று தெரிந்தது.

அம்பு அவனோடு வசனம் பேசியது. நீண்டவாள் கவிதை எழுதியது. மூன்று நாளில் கங்கை கொண்ட சோழபுரத்தை கைப்பற்றி காட்டட்டுமா என்று சூளுரைத்தான். இளவல் இராஜேந்திரனுக்கும், வீர இராஜேந்திரனுக்கும் கோபம் வந்து விட்டது. விளையாடாதே என்று சீறினார்கள். இராஜேந்திர சோழர் வாய்விட்டு சிரித்தார்.

''எப்படி'' என்று கேட்டார்.

அவன் வரைபடைத்தை விரித்து எங்கெல்லாம் பலவீனம் என்று காட்டினான். மறுநாளே வீர இராஜேந்திரன் அந்த இடத்தை பலப்படுத்தினான்.

எவ்வளவு பயம் இருக்கிறது உங்களுக்கு என்று கண் சிமிட்டினான். குலோத்துங்கனை கங்கை கொண்ட சோழ புரத்து மக்கள் கொண்டாடினார்கள். இராஜாதிராஜனை விட அவனுக்கு அதிக அளவில் வரவேற்பு இருந்தது.

அம்மங்கா குலோத்துங்கனுக்காக பல இடங்களில் பூஜை கள் செய்தாள். அந்தணருக்கு வாரி வழங்கினாள். கீழை சாளுக் கியத்திலிருந்தா கொண்டு வந்தாள். 'இங்குள்ள பொருளை எடுத்து இங்குள்ளவர்களுக்கு தானம் செய்ய இவள் எதற்கு'

அரசிகளிடையே முணுமுணுப்புகள் வந்தன. இராஜேந்திர ருக்கு எட்டின. அம்மங்காவின் காதில் விழ, பிய்த்து எறிந்து விடுவேன் என்று சீறினாள். அவள் கோபத்திற்கு இராஜநரேந்திரனும் பயந்தான். குலோத்துங்கன் கை கட்டி இருந்தான். அவளுடைய சகோதரர்கள் அதிகம் எதிர்க்காமல் இருந்தார்கள்.

வாசுதேவ நாராயணன், ''தாயே, உங்கள் கோபம் தவறு. இந்த இடத்தின் அமைதியை உங்கள் பேச்சு குலைக்கிறது. அமைதியாக பேசுங்கள்'' என்று வேண்டுகோள் சொல்ல,

''ஆக, சோழ தேசத்தின் சக்கரவர்த்தி இப்பொழுது நீங்கள் தானா. உங்கள் திட்டங்கள்தான் இங்கு நடைபெறுகின்றனவா. ஒரு உதவி செய்யுங்களேன். என்னோடு கீழைசாளுக்கியம் வந்து என் புருஷனுக்கு உதவியாக இருங்களேன். இங்கு மக்கள் நிம்மதியாக இருக்கட்டும்.'' என்று பதிலுக்கு ஏகடியம் செய்தாள். வாசுதேவ நாராயணன் தலைகுனிந்து கொண்டார். மறுநாளே இராமேஸ்வரம் போய் விடுவதாக விடை பெற்றார்.

''தயவு செய்து உடனே திரும்பி வாருங்கள்.''

''நிச்சயம் வருவேன். அம்மங்காதேவி அவர்கள் கீழை சாளுக்கியம் போக வேண்டுமல்லவா. அவர் போன ஓரிரு நாட்களில் நான் இங்கு வந்துவிடுவேன்'' என்று தெளிவாக சொல்லிவிட்டுப் போனார்.

இளவல் இராஜேந்திரன் மனைவிக்கும், அம்மங்காவிற்கும் நேரடியான வாய் பேச்சு சண்டை நடந்தது. கங்கை கொண்ட சோழபுரத்தில் இருப்பதற்கில்லை என்று அவளும் விடை பெற்றுப் போனாள். இராஜேந்திர சோழருக்கு விஷயம் வந்தது, ''தாராளமாக போகட்டும். கங்கை கொண்ட சோழபுரம் அம்மங்காவின் இடம். அவள் பிறந்த வீடு. அவளுக்கு இல்லாத உரிமை வேறு எவருக்கும் இல்லை. இருந்து பிள்ளை பெற்றுத் தர வக்கில்லை. எங்கு போகிறாள்.'' என்று எடுத்தெறிந்து பேசினார். இனி கங்கை கொண்ட சோழபுரம் வரவே மாட்டேன் என்று அவள் ஓலை அனுப்பினாள்.

என்னடா, அப்படியா செய்தி என்று இளவல் இராஜேந்திரனிடம் இராஜேந்திரர் கேட்க, ஆமாம் அப்பா. அப்படித்தான்

செய்தி. உங்களுக்கு என் மனமார்ந்த நன்றி என்று அவன் பதில் சொன்னான்.

மெல்ல மெல்ல குடும்பத்தில் விரிசல்கள் தோன்றின.

இராஜேந்திரர் மகள் வயிற்றுப் பேரன் ஆள்வதற்கு வாய்ப்புகள் இருக்கின்றது என்று ஒரு ஜோசியர் சொன்னதும் ஊர் முழுவதும் பரவியது. இராஜாதிராஜன் கொஞ்சம் குலைந்து போனான். என்ன பாவம் செய்தேன் என்று திகைத்துப் போனான். அவனை விட சக்கரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜேந்திரதேவர் அதிகம் கவலைப்பட்டார். எனக்கு எத்தனை பிள்ளைகள். எவ்வளவு இடங்களில் அவர்களுக்கு எவ்வளவு வேலைகள். இவர்களுக்கு அப்படி இல்லையே, இது என் மகன்கள் செய்த பாவம் அல்ல. நான் செய்த பாவம். சிறு குழந்தைகளையும், கிழவர்களையும், பெண்களையும் வெட்டிக் கொன்ற பாவம். குளத்தில் விஷம் கலந்து சோழ வீரர்கள் இறந்தார்கள் என்று தாங்காது எல்லா ஜனங்களையும் சவுக்கால் அடித்து கொன்ற பாவம், பெரிய பரம்பரை இப்படித்தான் அடங்குமா. கடைசியில் வீரம் என்பது மனிதனை மனிதன் வெற்றி கொள்ளுவது அல்ல. வம்ச விருத்தி என்பது ஆயிற்றே. வம்ச விருத்தி இல்லாது யாரை கொன்று என்ன பயன். எதற்காக கொல்ல வேண்டும். இந்த சோழ தேசம் இனி யார் கையில். சாளுக்கியரிடமா. சேரரிடமா. பாண்டியரிடமா. அல்லது இலங்கையிலிருந்து வருவார்களா. ஒன்றும் புரியவில்லை.

கீழை சாளுக்கியத்து இளவரசன் இங்கு கொடி ஏற்றுவான் என்றால் அது ஒரு மாற்று குறைவுதான். என் இனிய அம்மங்காவிற்கு அது உயர்வு என்றாலும் என் பிள்ளைகளுக்கு தலைகுனிவு அல்லவா. வேறு என்ன வழி. அவர் உள்ளுக்குள்ளே புழுங்கினார்.

உயிர் உடல் கூட்டுக்குள்ளே இருக்கிறது, உயிரும், உடலும் மட்டுமே அல்ல, இந்த உயிருக்கும், உடலுக்கும் நடுவே மனம் என்று ஒன்று வளர்கிறது. எதனாலேயோ, எவராலேயோ மெல்ல மெல்ல பலப்படுகிறது. கோபமும், அன்பும், நல்லவையும், கெட்டவையும், ஆத்திரமும், வள்ளல் தன்மையும் மாறி மாறி இருக்கின்றன. வெய்யிலும், குளிரும் போல, நிழலும், இருட்டும் போல உடம்பு இந்த துவந்தத்தில் மாட்டிக்

கொண்டு உணர்ச்சி குழப்பத்தினால் அலைமோதி அவஸ்தை படுகிறது. உடம்பு இந்த துவந்தத்தால் சீரழிகிறது.

இந்த உடம்பு இன்னொரு உடம்பை உற்பத்தி செய்தால் தான் வளர்ச்சி. அதுதான் பரம்பரை. குழந்தை கருவுக்குள் நுழை வதற்கும், வளர்வதற்கும், வெளியே வந்து ஆரோக்கியமாக வாழ்வதற்கும் மிகப் பெரிய புண்ணியம் செய்திருக்க வேண்டி யிருக்கிறது.

என் தந்தை செய்திருக்கிறார். அவருக்கு நான் மகனாக பிறந்தேன். நான் வேண்டுமென்ற புண்ணியம் செய்திருக் கிறேன். என் தந்தையின் மனக்கேதம் தீர்க்கும் பொருட்டு தில தர்பணம் செய்தேன். மிகப் பெரிய எள் மலை எழுப்பி அதனூடே நானும் என் மனைவியும் புகுந்து வெளியே வந்தோம். சொர்ணப் பசு பரிசு அளித்தோம். ஊரில் உள்ள அத்தனை மக்களுக்கும் தானம் வழங்கினோம். நீத்தார் கடன் சரியாக செய்ததின் விளைவோ என்னவோ எல்லா அரசிகளுக்கும் ஆண் குழந்தை கள். மிகச் சிறப்பாக வாழ்ந்தார்கள். வளர்ந்தார்கள். அவரவர் பணியை செவ்வனே செய்தார்கள்.

சுந்தர சோழ பாண்டியனுக்குக் கூட வாரிசு இல்லை. பெண் மக்கள் இருக்கிறார்கள். பெண் மக்களை போருக்கு அனுப்ப முடியாது. போருக்கு அனுப்ப முடியாதவர் அரண் மனைக்குள் அரியணை ஏற முடியாது.

விஸ்வநாத ஸ்ரெளதிகளிடம் என்ன செய்யலாம் என்று கேட்டபோது அவர் சிரித்தார். ''அவரவர் மனம் திருப்தியடைய ஏதேனும் செய்யச் சொல்லுங்கள். ஆனால் நான் சொன்னதே நடக்கும். சோழ தேசத்தின் ஆண் வாரிசு உங்கள் மகன்களோடு முற்றுப் பெறுகிறது. பெண் வாரிசுதான் வரும். உம்மை விட சீரும், சிறப்புமாக குலோத்துங்கன் ஆட்சி செய்வான்.

இது இராஜராஜ நரேந்திரன் செய்த புண்ணியமல்ல. அவன் தந்தை விமலாதித்தன் செய்த புண்ணியம். அவன் ஏக்கம். இங்கு அவனே குலோத்துங்கனாக பிறந்திருக்கிறான். எந்த இராஜேந்திரரிடம் விமலாதித்தன் தஞ்சமாக வந்தானோ அந்த இராஜேந்திரனுடைய அரியணையில் ஏறப் போகிறான். விமலாதித்தனாக அல்ல. குலோத்துங்கனாக. இது நிச்சயம்

நடக்கும். வெளியே சொல்லி, விஷயத்தை பெரிது படுத்தாதீர்கள். அமைதியாக ஏற்றுக்கொள்ளுங்கள்.

கங்கை கொண்ட சோழபுரத்தில் எதிர்ப்பு இருக்கிறது. யாருக்கேனும் கிறுக்கு பிடித்து யாரையேனும் தூண்டிவிட்டு குலோத்துங்கனுக்கு ஆபத்து நேர்ந்தால் இருக்கின்ற ஒரு வாரிசும் பிடுங்கிக்கொண்டு போகும். சோழதேசம் அனாதையாகும். கீழை சாளுக்கியம் தன்னை சுயமான தேசம் என்று அறிவிக்கும். மேலை சாளுக்கியம் தொண்டை நாடு நோக்கி படையெடுத்து வரும். பாண்டியர்கள் சேரர்களோடு கை கோர்த்துக் கொண்டு கிளர்ந்து எழுவார்கள். சோழ தேசம் நாலா பக்கமும் நெருக்கடியில் சிக்கி தவிக்கும். ஏன் கடாரத்திலிருந்தும் படைகள் இறங்கி உங்கள் கடற்கரை நகரங்களில் கொள்ளையடிக்கலாம்.

எனவே, குலோத்துங்கனை அடிக்கடி இங்கு வர வேண்டாம் என்று விலகியே இருக்கச் சொல்லுங்கள். அது உங்களுக்கு நல்லது. உங்கள் வம்சத்திற்கு நல்லது.''

இராஜேந்திரர் மனதை கல்லாக்கிக் கொண்டு அம்மங்காவை இங்கு வராதே என்று கட்டளையிட்டார். அம்மங்கா அழுதாள். தலை நிமிர்ந்தாள். புரிந்து கொண்டாள்.

''நீங்கள் என்ன கட்டளையிட்டாலும் அதை நிச்சயம் செய்வேன் அப்பா. நீங்கள் யார் என்று எனக்கு தெரியும். உங்கள் மனம் எனக்கு புரியும். உங்களுக்கு இணையான வலிவு இன்னொரு அரசனுக்கு இல்லை. நீங்கள் சோழ தேசத்தின் மாணிக்கம். சக்கரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜராஜரைவிட நீங்கள் உயர்வானவர். உங்களுக்கு இணையாக குலோத்துங்கன் வருவான் என்று விஸ்வநாத ஸ்ரௌதிகள் சொன்னதை நான் ஏற்கவில்லை. உங்களுக்கு நெருக்கமாய் இருப்பானே தவிர, உங்களுக்கு இணையாக, உங்களை தாண்டி என்றெல்லாம் இனி எவருமே இல்லை.

பரதகண்டத்திலிருந்து வேறு தேசம் போய் தாக்கி, கவர்ந்து பொருள்களோடு சோழ தேசத்தில் நுழைந்து அதை செழிப்பாக்கிய ஒரே மன்னன் நீங்களே. பரத கண்டத்தின் தனித்த மன்னர் நீங்களே. அப்பா, நீங்கள் இன்னும் வடக்கே போயிருக்க

வேண்டும் என்பது என் ஆசை, துருக்கர்கள் வருகிறார்களாம். அவர்களை வரவொட்டாமல் சீவி எறிந்திருக்க வேண்டியது உங்கள் கடமை. நீங்கள் ஏனோ கங்கையை தாண்டாமல் போய் விட்டீர்கள். எனக்காக மடங்கிவிட்டீர்கள். அதில் எனக்கு விருப்பமில்லை. உங்களோடு நானும் இராஜ நரேந்திரனும், என் ஒருவயது மகனும் அங்கு வந்திருக்க வேண்டும். மிகப் பெரிய தவறு நடந்து விட்டது.

ஆயினும், கீழை சாளுக்கியத்தை வலிவு ஏற்படுத்தவோ, மேலை சாளுக்கியத்தை எச்சரிக்கை படுத்தவும், தென் திசை யெல்லாம் நாடாளவும் என் மகனை ஊக்குவிப்பேன். உலகம் பற்றி அவனுக்கு சொல்லித் தருவேன். கடல் கடந்து போ என்று கட்டளையிடுவேன். சோழதேசம்தான் உன் தேசம் என்று நெஞ்சிலே ஏற்றுவேன்.

கீழை சாளுக்கியம் அப்பாவினுடையது. சோழதேசம் அம்மாவினுடையது. சோழ தேசத்தில் வாள் ஊன்றி, வடக்கே கண் வைத்து இரு. தெற்கே சோழ மக்கள் பார்த்துக் கொள் வார்கள் என்று தெளிவாக விளக்குவேன். அவன் மிகப் பெரிய வீரனப்பா. நாலா திசையும் அலைவான். உங்கள் பெயரை காப்பாற்றுவான. குலோத்துங்கன் தான் சோழதேசம் என்று ஆகிவிட்டால் அவன்தான் உங்கள் வாரிசு என்று ஆகிவிட் டால், அவன்தான் உங்களுக்கு அடுத்தபடி சிறந்து இருக்கப் போகிறான் என்று தெரிந்துவிட்டால் அப்பா நான் அதற்கு முழு தகுதியுள்ளவனாக அவனை மாற்றுவேன். உங்கள் மகளாக நான் இதைத் தவிர வேறு எதுவும் செய்ய முடியாது.

நான் இனிமேல் கங்கை கொண்ட சோழபுரம் வர மாட் டேன் அப்பா. அந்த கோட்டையை மிதிக்க மாட்டேன். எனக்கு அதைவிட மயிலை, திருவல்லிக்கேணி பிடித்திருக்கிறது. அடாடா, என்ன கூட்டம். என்ன அறிவார்ந்த மக்கள் எவ்வளவு தெளிவான பெண்கள். சோழ தேசத்து பெண்களைப் போல கர்விகளும், பொறாமை மிக்கவர்களும் இல்லை. மிக இனிமை யானவர்கள். சிவநெறிச் செல்வர்கள். அந்த பெண்களின் வளர்ச் சியால்தான் மயிலை திருவல்லிக்கேணி மலர்ந்து நிற்கிறது.

மயிலை கபாலீஸ்வரர் கோவிலில் வெகு சீக்கிரம் காம கோட்டம் வந்து விடுமப்பா, இங்கு, அங்கே அந்த இடத்தில்

என்று இப்போதெல்லாம் சைவக் கோவில்களில் காம கோட்டம் வந்துவிடுகிறது. சாக்த உபாஸகம் பெருகி வருகிறது. அதற்கு என்ன காரணம் சொல்லுங்கள்.'' அம்மங்கா கேட்டாள். இரா ஜேந்திரர் யோசித்துப் பார்த்தார்.

''நானே சொல்லுகிறேன். விதவைகள் அதிகமப்பா. அதுதான் காரணம். சோழ தேசத்தின் கால் பங்கு ஆண்கள் இறந்து போனார்கள். எனவே விதவைகள் குழந்தைகளை வளர்க்கிறார்கள். அரசாங்கம் உதவுகிறது. உறவினர்கள் ஆதரிக் கிறார்கள். இருந்தாலும் சொல்லிக் கொடுக்க தந்தை இல் லையே. அதனால் ஆண்கள் தாயின் ஆதரவில் நிற்கிறார்கள். தாயினுடைய அன்பால் வளர்கிறார்கள். எனவே தாயை வணங் குவது என்பது காமகோட்ட வழக்கமாக மாறி வருகிறது. சாக்த உபாஸகமாக திரும்பி வருகிறது. தாய் வழிபாடு அதிகமாயிற்று. காபாலிகமும், காளா முகமும் சுடுகாட்டு பிணத்தின் மீது நின்று கொண்டு கொக்கரிக்கின்ற வேறு வீர சைவமோ இங்கு இல்லை. இங்குள்ளவர்கள் எல்லோரும் அமைதியானவர்கள்.

மயிலையில் காமகோட்டம் அமைந்துவிட்டால் கற்பகம் என்னும் தாய் நின்றுவிட்டால் மயிலை இன்னும் செழிப்பாகி விடும். இன்னும் வியாபாரம் பெரிதாகும். மிக அழகிய நகரமாக மாறும். எனவே, உங்களை பார்க்க வேண்டும் என்று ஆசைப் பட்டால் நான் மயிலை திருவல்லிக்கேணி வந்துவிடுகிறேன். நீங்களும் அங்கே வந்து விடுங்கள். அங்கே சந்திப்போம். அங்கே குலோத்துங்கனோடு பேசுங்கள். உங்களுக்கு பிடித் தமான திருவொற்றியூரில் இருங்கள். உங்களுக்காக ஆதிபுரீஸ் வரருக்கு வேண்டுவோம். மருந்தீஸ்வரருக்கு மரியாதை செய் வோம்.

அப்பா, அதிகம் அலையாமல் நன்கு ஓய்வு எடுத்துக் கொண்டு வடக்கே வாருங்கள். கீழைச்சாளுக்கியத் தொலைவு வர முடியாதப்பா. நீங்கள் வர வேண்டும். இது என் வேண்டு கோள்.''

பிரிய என்னடா சாக்கு என்று நினைத்துக் கொண்டிருந்த இராஜேந்திரருக்கு அம்மங்காவின் பேச்சு உவப்பாக இருந்தது. தனக்கென்று வீரர்களை தயார் செய்தார். இளம் வயது வீரர்கள்

நூறு பேரை மட்டுமே எடுத்துக் கொண்டார். மற்றவர்களெல்லாம் மத்திம வயது வீரர்கள்.

''அப்பா, ஏன் தனியாக படை தேர்ந்தெடுக்கிறீர்கள்,'' இராஜாதிராஜன் வந்து கேட்டான். வாசுதேவ நாராயணன் அவனுக்கு பின்னே கை கட்டி நின்றிருந்தார்.

தகவல் அவர் தந்திருக்க வேண்டும். காரணம் இல்லாமல் வாசுதேவ நாராயணன் மீது கோபம் வந்தது.

''என்னை வேவு பார்க்கிறார்களய்யா. அதனால் விலக முடிவு செய்துவிட்டேன்.'' மெல்ல இராஜேந்திரர் பேசினார். இராஜாதிராஜன் திரும்பி பார்த்தான்.

''இது வழக்கம்தானே அப்பா. நீங்கள் வாசுதேவ நாராயணரை கோபமாக பார்க்க வேண்டாம். என் கட்டளையின் பேரில்தான் அவர் செயல்படுகிறார். நீங்கள் படை திரட்டுகிறீர் என்ற செய்தி எப்படி இரகசியமாக இருக்க முடியும். எனக்கு தெரியாமல் எதுவும் அசையாது.''

''அசையக்கூடாது இராஜாதிராஜா. நீ இவ்வளவு கூர்மையாக இருக்கிறாய் என்பது சந்தோஷமாக இருக்கிறது. ஒரு அரசனுக்குரிய முழு தகுதியும் பெற்றுவிட்டாய் என்பது தெரிகிறது.

நண்பனே, நான் விடை பெறுகிறேன். நீ நல்ல இளவரசனாக திகழ்கிறாய் என்பது மிகப் பெரிய சிறப்பு. சிறுவயது முதலே உனக்கு அந்தப் பொறுப்பை கொடுத்ததால் இப்பொழுது திறம்பட செயல்படுகிறாய். எனக்கு அது சந்தோஷம், ஆனால் இரண்டு வாட்கள் ஒரு உறையில் இருப்பது நல்லதல்ல என்பது போல, ஒரே ஒரு பானையில் இரண்டு வித மது கொள்ளாது என்பது போல நான் இங்கு இருப்பின் என் முகம் பார்த்து நீ பலதும் செய்ய வேண்டி இருக்கிறது. நான் கங்கை கொண்ட சோழபுரம் விட்டு வடக்கே எங்கேனும் குடியிருக்கலாம் என்று நினைக்கிறேன். குறிப்பாக கோவில்கள் நிறைந்த காஞ்சி. அந்த பழைய நகரம். என்னை மிகவும் கவர்கிறது. காஞ்சிபுரத்து மாளிகை பெரிது. உயர்ந்தது. பலமானது. நான் அங்கு குடியிருக்க முடிவு செய்திருக்கிறேன்.

விஸ்வநாத ஸ்ரௌதிகள் நேரம் குறித்து தருவதாக சொல்லியிருக்கிறார். நான் வெகு விரைவில் கிளம்புவேன். நீ நீடுழி வாழ வேண்டும். சபைக்கு நடுவே எனக்குப் பிறகு இராஜாதிராஜன்தான் அரசன் என்பதை பட்டவர்த்தமாக சொல்லி விடுவேன்'' என்று சொல்லிவிட்டு எழுந்தார்.

சபை கூடியது, விவரித்தார். சபை இராஜாதிராஜனை வாழ்த்தியது. அவன் தந்தையின் கால்களை பற்றிக் கொண்டு மெல்ல கண்ணீர் விட்டான். இழுத்து அணைத்துக் கொண்டார்.

''நீயும் அடுத்த இளவரசனை தேர்ந்தெடுத்து விட்டாய் என்பது அற்புதமான காரியம். வீர இராஜேந்திரன் மிகவும் சரி யானவன்.'' வெளிப்பார்வைக்கு விவேகமாக பேசினாலும், வயதின் காரணமாக சக்கரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜேந்திர தேவருக்கு குழப்பம் அதிகமாக இருந்தது,

''கண்மூடி தியானம் கற்றுக் கொள்ளுங்கள்.'' ஒரு அந்தணச் சிறுவன் சொன்னான்.

''அடப் போடா. கண்ணை மூடினால் தலையில்லாத முண்டங்களாகத்தான் வருகின்றன.''

''வேத விஷயங்களை கற்றுக் கொள்ளுங்களேன். உங்க ளுக்கு வடமொழி பரிச்சயம் அல்லவா.''

''இல்லை, கால்நாழிகைக்கு பிறகு மனம் ஒருமைப்பட வில்லை. வேதச்சொற்கள் காதில் ஒலித்துக் கொண்டிருக்கும் போது மனம் ஒரு படையெடுப்பை நடத்திக் கொண்டிருக் கிறது. கடல் தாண்டி போய்க் கொண்டிருக்கிறது.

காம்போஜத்திற்கு அப்பால் சீன தேசத்திற்கு எப்போது போகலாம். ஏன் போகாமல் வந்துவிட்டோம் என்று ஏக்கம் வருகிறது, இறந்த காலமும், எதிர்காலமுமாக பயணப்பட்டுக் கொண்டிருக்கிறேன். நிகழ்காலத்தில் நிற்கவே முடியவில்லை. மனம் ஒருமைப்படவில்லை.'' அவர் தன் தவிப்பு சொன்னார்.

''எனக்கு புரிகிறது சக்கரவர்த்தி. ஆனாலும் வேத விஷயங் களை ஆழ்ந்து கேளுங்கள். ஏன் தேவார, திருவாசகங்களைக் கூட நீங்கள் கேட்கலாமே. பல பிரதிகள் எடுத்து பல ஊர் களுக்கு அவை நம்பியாண்டார் நம்பி மூலமாக அனுப்பப் பட்டு விட்டன. அவருடைய சீடர்கள் தொடர்ந்து இந்த

அற்புத பணியை செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இராஜேந்திரர் கொடுத்த நிலங்கள் மூலம் நல்ல வருவாய் வருகிறது. பரம்பரையாக ஓலைப்படிகள் எடுப்பதுதான் வேலை பாக அவர்கள் உட்கார்ந்து இருக்கிறார்கள். கங்கை கொண்ட சோழபுரத்திலேயே பத்துப் பதினைந்து ஓலைச் சுவடிகள் இருக்கின்றன.

அவைகளை மனனம் செய்யலாம் அல்லவா.'' அவர் முயற் சித்தபோது அது இன்னும் ஆழ்ந்த துக்கத்தை கொடுத்தது.

வைணவப் பெரியார்களின் வாழ்க்கை சரிதம் கேட்டார். பாதியில் தூக்கம் வந்தது. பாசுரங்களை ஒருங்கிணைத்து வரு கிறார்கள் என்று சிலர் பாட கேட்டார். நன்றாக இருந்தது. ஆனா லும் உள்ளே மாற்றம் ஏற்படுத்தவில்லை.

இறைவன் என்று ஒருவனை நம்பி அவனை இறுக பிடித்துக் கொள். எல்லாம் அவன் செயல் என்று இரு என்று எழுபத்தைந்து வயதுக்கு மேல் இருக்க முடியவில்லை. விதம் விதமாய் வேடம் அணிந்துவிட்டு இப்பொழுது வெறுமே இரு என்றால் இருக்க முடியவில்லை, பற்றற்று இரு என்றால் புரிய வில்லை. பற்று இல்லாமலா இத்தனை பெரிய விமானம் எழுந்தது. இவ்வளவு பெரிய நகரம் வளர்ந்தது. இத்தனை சிறந்த படைகளும், நாகரிகமும் வளர்ந்தன. வெறும் படையெடுப்பா நடந்தது. இல்லையே. ஒரு தமிழ் கலாச்சாரமல்லவா நடந்தது. வடக்கே வெகுதூரம் வரை தமிழ் பேசுகிற மன்னர்கள், தளபதி கள் வாழ்கிறார்களே. தமிழ் நாலாதிசையும் பரவி இருக்கிறதே. இது சிறப்பில்லையா என்று எதிர்கேள்வி எழுந்தது.

பற்று உண்டானதால்தானே தமிழ் மீதும் தமிழ் கலாசாரத் தின் மீதும், சிற்பத்தின் மீதும், ஓவியத்தின் மீதும், சனாதன தர்மத் தின் மீதும் பிரியம் ஏற்பட்டதால் தானே இத்தனை பெரிய மாற்றம் தோன்றியது. கடல் கடந்து சிற்பிகள் போயிருக்கிறார்கள். அங்கும் சனாதன தர்மம் பரவியிருக்கிறதே. கோவில்கள் உரு வாகிக் கொண்டிருக்கின்றனவே,

எதன் மீது பற்று இல்லாமல் இருப்பது, ஏன் பற்று இல்லாது இருப்பது. கேள்வி வந்தது.

''பற்று வை. ஆனால் பற்று அறு,'' யாரோ சொன்னார்கள்.

''அடப்போடா, இனி இந்த மாதிரி கூட்டங்கள் எனக்கு வேண்டாம்'' என்று துரத்தி விட்டார். வீரமாதேவி வாய்விட்டு சிரித்தாள்.

''நடக்க வேண்டியதெதுவோ அதுவே நடக்கும். சிறப்பான விஷயம் என்ன தெரியுமா.''

''என்ன''

''இராஜராஜ சோழர் நாடகம். அதே போல இராஜேந்திரர் நாடகம் தயார் செய்ய வேண்டும்.''

''செய்யேன்.'' அவரே பேச்சு தொடர்ந்தார்.

''பாணர்களுக்கு நடுவேதான் நாம் வாழ வேண்டும். நம்முடைய புகழையும், நம் மூத்தோர் புகழையும், நம்முடைய கலாசாரத்தின் புகழையும், தமிழ் குடிமக்களின் பெருமையும் அவர்கள் பாட கேட்க வேண்டும். பறையொலி எழுப்ப வேண்டும். அந்த பறையொலியில் நான் தூங்க வேண்டும். எக்காளமும், சங்க நாதமும் தினமும் கேட்க வேண்டும்.''

''வெறும் தாளக்கட்டோடும், தம்பூர் ஸ்ருதியோடும் பாடுகின்ற விஷயங்கள் எனக்கு ஒப்புமையாக இல்லை. மரண பரியந்தமும் நான் துள்ளிக் கொண்டுதான் இருப்பேன்.

உடம்பு துள்ளாவிட்டால் என்ன. மனம் துள்ளுமல்லவா. விரல்கள் தாளம் போடும் அல்லவா.

மீளா அடிமை உமக்கே ஆளாய் பிறரை வேண்டாதே
மூளா தீ போல் உள்ளே கனன்று முகத்தால் மிகவாடி
ஆளா யிருக்கும் அடியார் தங்கள் அல்லல் சொன்னக் கால்
வாளா ங்கிருப் பீர் திருவாரூரிர் வாழ்ந்தே போம் நீரே

என்று பாடினால், என்ன மனம் வருகிறது, ஒரு அயற்சி. ஒரு துக்கம். ஒரு கோபம், இதுதானே. எதற்கு இது. பேசாமல் வில்லுப் பாட்டு வைத்து விட்டால். பாணர்களை அழைத்து பாடுங்கள் என்று சொல்லிவிட்டால்,

தந்தணத்தோம் என்று சொல்லியே, வில்லினிற் பாட என்று ஆரம்பித்துவிட்டால், எழுந்து ஆடத் தோன்றுகிறது அல்லவா. இறுக்கி முடிந்து கொண்டு கும்மாளமிடத் தோன்று கிறது அல்லவா. நமக்கு அதுதான் சரி. மரண பரியந்தமும்

வில்லுப்பாட்டும், பறையொலியும், பாணர்களின் நாடகமும், நாட்டியமும்தான் சரி.'' என்று சொல்ல, அவர் சபையில் அம் மாதிரி விஷயங்கள் நடந்தன.

அவர் நகர, அவர் பின்னே பாணர்களும் நகர்ந்தார்கள்.

''உங்கள் நட்சத்திரம் அப்பா. உங்களுக்கு இன்று பிறந்த நாள். எண்பதாவது பிறந்த நாள்.'' அவன் உரத்த குரலில் சொன்னான்.

''எனக்கா. எண்பதா.'' பாதி தூக்கத்தில் எழுந்ததாலும், வயது மூப்பினாலும் மூச்சிரைத்தது. வாயிலிருந்து எச்சல் ஒழுகியது. வீரமாதேவி கண் காட்ட, ஒரு அதிகாரிச்சி முன்னே வந்து வாய் துடைத்தாள். ஈரத்துணியால் முகம் துடைத்தாள். முதுகு துடைத்தாள். குடிக்க ஜலம் கொடுத்து கொப்பளிக்கச் சொன்னாள். மெல்ல எழுப்பி வேறு ஆசனத்தில் அமரச் சொன்னாள்.

அவர் அமர்ந்து நெட்டி முறித்தார்.

''யாருக்கு பிறந்த நாள்'' என்று ஆவலாக இராஜாதிராஜனிடம் கேட்டார்.

''உங்களுக்கு அப்பா. உங்களுடைய பிறந்த நாள். ஊரே கொண்டாடிக் கொண்டிருக்கிறது.

''எந்த ஊர்'' அடித் தொண்டையில் கேட்டார். அவன் திகைத்துக் கிடந்தான். ஒன்றுமே புரியவில்லையா என்பது போல் வீரமாதேவியை பார்த்தான்.

''சொல்லடா. எந்த ஊர்.''

''மொத்த சோழதேசமும் பாண்டிய தேசமும், சேர தேசமும், நடு நாடும், தொண்டை நாடும்.''

''அட, நான் எந்த ஊரிலே இருக்கிறேன்.''

''காஞ்சியில் இருக்கிறீர்கள் அப்பா. வெளியே பறை சத்தம் கேட்கவில்லை.''

''பறை சத்தம் கேட்கவில்லையே.''

காது தொட்டு வீரமாதேவி கை விரித்தாள்.

''கேட்காது. எப்போதாவது கேட்கிறது. அனேகமாக கேட்காது'' என்றாள். இராஜாதிராஜன் கவலைப்பட்டான். அவர் எழுந்து நின்றார். அதிகாரிச்சி தோளை பிடித்துக் கொண்டார். மெல்ல நடந்தார். ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தார். பெரும் திரளாக ஜனங்கள் கூடியிருந்தார்கள். பறை ஒலிக்கு ஆடிக் கொண்டிருந்தார்கள். வாய் விட்டுச் சிரித்தார்.

''இராஜாதிராஜா இன்று என் பிறந்த நாளடா தெரியுமா.'' சற்று முன் பேசியது தெரியவில்லை.

''அப்பா இன்று திருவாதிரை.'' விடியலில் இராஜாதிராஜன் முகம் தடவி, தலை தடவி எழுப்பினான். மறுநாளும் அவர் நட்சத்திரம் இருந்தது.

''என்ன யாருக்கு திருவாதிரை, சிவனே போற்றி என்ன சொல்கிறாய்'' தடுமாறினார்.

★ ★ ★



சோழர் கால நாணயங்கள்.

அத்யாயம்

110

"எல்லா அரசிகளுக்கும் சொல்ல வேண்டாம், உடனே சொன்ன செய்தி, கோட்டை வாசற் கதவு வரை தெரிந்து விடு கிறது. நிச்சயம் அது அரண்மனையிலிருந்து தான் வெளி யாகிறது. பரவை போய் தன்னுடைய அதிகாரிச்சியிடம் புலம்ப, அதிகாரிச்சி சேடிப் பெண்ணிடம் அலட்டிக் கொள்ள, சேடிப் பெண் அரண்மனை வாசற் காவலிடம் விளக்கம் சொல்ல, வாசற் காவல் கொடுங்கை வீரருக்கு விவரம் கொடுக்க, அந்த விவரம் பல தலைகள் மீது கால் வைத்து நடந்து கங்கை கொண்ட சோழபுரத்திற்கு அப்பாலும் போய் சேர்ந்து விடுகிறது.

எனவே, நீ மட்டும் புரிந்து கொள். என்னால் இனி கங்கை கொண்ட சோழபுரத்தில் இருக்க முடியாது. இதை கட்டும்போதே கூட இதை நான் எனக்கு என்று கூட செய்யவில்லை. இதை கட்டும் போது என் மகன் பிறந்து விட்டான். அவனுக்கு இது மிகச் சௌகரியமாக இருக்கும் என்று நினைத்து பல சோழ மன்னர்கள் இங்கு வாழ வேண்டும் என்று தீர்மானம் செய்து இதை கட்டினேன்."

குதிரையில் ஏறி ஒரு இரவு நேரம் மெய்க் காவல் விலகி வர, வீரமாதேவியோடு அவர் கோட்டையை சுற்றி வந்தார். பல தெருக்களில் திரும்பினார். யாரோ போர் வீரர்கள் போகிறார் கள் என்றுதான் மக்கள் நினைத்தார்கள்.தலைப்பாகை கட்டிக் கொண்டிருக்கின்ற வீரமாதேவியும் ஆண்பிள்ளைப் போலத் தான் இருந்தாள்.

"இதை விட்டு விலகுவதற்கு காரணம் இதை இராஜாதி ராஜனுக்கு கொடுக்க வேண்டும் என்பதா அல்லது வேறு ஏதே னும் கோபம் காரணமா."

"கோபம் இருக்கிறது என்பது உண்மை. ஆனால் என்

கோபம் விசாரித்தால் நியாயம் இல்லாமல் போகிறது. மிகச் சிறந்த இடத்தை அவனுக்கு செய்து கொடுத்துவிட்டு இளவரசன் பதவியும் கொடுத்து விட்டு நான் குறுக்கே நின்றால் என்ன அபத்தம். இது பெரிய பிணக்கை கொண்டு வந்துவிடும் அல்லவா?''

இராஜாதிராஜன் கொஞ்சம் அறிவு மட்டமாக இருந்தால் நான் உள்ளே புகுந்திருப்பேன். வேறு ஆள் தேர்ந்தெடுத்திருப்பேன். இராஜாதிராஜன் அப்படி அல்ல. கூரிய புத்தி கொண்டவன். அவன் சபை அவனை விழுங்காது இருக்க வேண்டுமே என்ற கவலை உண்டு. ஆனால் சபை என்பது சில சமயம் அத்துமீறும். என்னுடைய சபையும் அத்து மீறியிருக்கிறது. அருண்மொழி தனக்கு பிடித்ததை செய்வதற்கு முயற்சிப்பான். அரையன் ராஜராஜன் என்னிடம் கேட்காமல் செய்துவிட்டு நீங்கள் அனுமதிப்பீர்கள் என்று செய்து விட்டேன் என்று சொல்வார். சில சமயம் சினந்தது உண்டு. பல சமயம் விட்டுவிடுவேன். இதுதான் இராஜாதிராஜனுக்கும் ஏற்பட்டு இருக்கிறது.

எனவே, நானும், அவனும், அவன் சபையும் முட்டிக் கொள்ளாதிருக்க வழி இந்த இடம் விட்டு விலகி இருப்பது தான். ஆனால் மிகப் பெரிய வருத்தமெல்லாம் இல்லை. ஏனெனில் தெற்கே குடந்தையும், வடக்கே காஞ்சிபுரமும் எனக்கு பிடித்த விஷயம். ஆனால் குடந்தை மிக நெரிசலாக இருக்கிறது. தஞ்சைக்கும், குடந்தைக்கும் இடையே பெரிய போக்குவரத்து இருக்கிறது. நான் குடந்தையில் இருந்தால் தஞ்சையிலிருந்து மக்கள் வந்துகொண்டே இருப்பார்கள். அதனால் தள்ளி வடக்கே போய் விட்டால் தான் இராஜாதிராஜனுக்கு தொந்தரவு இல்லாது இருக்கும். இல்லையென்றால் குடந்தையில் இவர் என்ன செய்கிறாரோ என்று மனம் குலைந்து கிடப்பான்.

கங்கை கொண்ட சோழபுரத்தை விட்டு வெளியே போய் வசிக்க வேண்டுமென்றால் ஒன்று பூம்புகார். இல்லை காஞ்சிபுரம், காஞ்சிபுரம் அகலமான தெருக்களையும் நல்ல வீடுகளையும், புலவர்களையும் கொண்டது. ஞானிகள் வசிக்கும் பிரதேசம் அது. ஒரு அரசனுக்கு என்ன தேவையோ அதாவது வயதான அரசனுக்கு என்ன தேவையோ அது காஞ்சிபுரத்தில் கிடைக்கும். புகார் கூட போர் வீரர்கள் நடமாட்டம் உள்ளது.

அவர்கள் தொந்தரவு வந்தால் எனக்கு உள்ளுக்குள் சீறும். மறுபடியும் வாள் பிடிக்க ஆசை வரும். இடுப்பில் வாள் தரிக்கவே எனக்கு பிடிக்கவில்லை, கனக்கிறது. கால் இடருகிறது. எனக்கே சிரிப்பாக இருக்கிறது. என்னடா இன்னும் இதைச் சுமந்து கொண்டு இருக்கிறோம் என்று தோன்றுகிறது. வாள் இல்லாமல் மேல் துண்டோடு அலைவதற்கே நான் விரும்புகிறேன்.

வீரமாதேவி, உனக்கு காஞ்சிபுரம் பிடிக்குமா.''

''இதென்ன கேள்வி. இராமர் இருக்கும் இடமே அயோத்தி.''

''அடே, எதற்கு இந்த வசனம். உனக்கு பிடித்ததைச் சொல்.''

''எனக்கு பிடித்த தேசம் என்றால் அது என்னுடைய ஊர். பழுவூர் அடுத்தது பிடித்த இடம் என்றால் குடகு. குடகு தேசம். அந்த குளுமை எனக்கு பிடிக்கும். எல்லா நேரமும் மார்கழியாக இருக்கும். மார்கழியில் கொல்லும் குளிர். பேய் மழை என்றெல்லாம் அமர்க்களப்படும். ஏனோ குடகின் மலைச் சரிவுகள் எனக்கு பிடிக்கின்றன.'' வீரமாதேவி ஏக்கத்துடன் சொன்னாள்.

''அங்கே போய் விடலாமே.'' அவர் அவசரப்பட்டார்.

''இதென்ன, நாம் அங்கு போய் என்ன செய்வது.'' அங்கிருந்து மேற்கில் மரக்கலம் ஏறி யவனர்களுடைய இடத்திற்கு போகலாமா. எங்கே துருக்கியர்கள் குதிரைகளை பழக்கப் படுத்துகிறார்களோ அங்கு போவதற்கு உண்டான வழியாக.''

''வேண்டாம். நம்முடைய இடம் காஞ்சிபுரம்தான். பெரிய கோவில்களும், நிறைய தடாகங்களும், அருமையான மக்கள் வசிக்கின்ற இடம் அது. என்ன குதிரையில் போகும்போது கொஞ்சம் பார்த்து போக வேண்டும்.'' அவர் யோசித்தார்.

''இல்லையே, தெருக்கள் அகலமாயிற்றே.''

''தெருக்கள் அகலம்தான். ஆனால் முழுக்க முழுக்க அந்த தெருக்கள் சாலியர்களால் (சாலியர்கள்; நெசவாளர்கள்) நிறைந்திருக்கிறது. துணி நெசவுக்கு பாவு போட்டிருப்பார்கள். நாம் கொஞ்சம் வேகமாகப் போனாலும் பாவின் மீது தூசு படிந்து விடும் என்று பயந்துவிடுவார்கள். தெரு முனையிலேயே மெல்ல போங்கள் என்று எச்சரிப்பார்கள்.''

''ஆமாம். அப்பொழுது காஞ்சிபுரம் வேண்டாம்.''

''அட, அது ஒரு விஷயமா. நாம் அங்கு போனால் மாட வீதிகளில்தான் நடக்கப் போகிறோம். சாலியர் வசிக்கும் கிராமங்களுக்கு போவோமா. இல்லையே.'' அவர் சமாதானம் சொன்னார்.

கோவில் நோக்கி குதிரை திரும்பியது. ''இந்த நேரத்தில் உள்ளே போக வேண்டுமா. கருவறை பூட்டி இருப்பார்களே. திறக்கச் சொல்லவா.''

''அடே, அது தவறு. இறைவன் அயர்ந்து தூங்கும்போது திறப்பது தவறு என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன்.''

''எந்த இறைவனுக்கு தூக்கம். தூங்குபவன் எப்படி இறைவனாக முடியும். அதெல்லாம் நமக்குத்தான்.'' வீரமாதேவி சொன்னாள். அவர் அதை காதில் ஏற்றுக்கொள்ளவில்லை. இதை பேசி வளர்த்தால் மறுபடி வேறுவிதமாக அவள் பேசுவாள் என்று அவருக்குத் தெரியும். அவர் குதிரையை விட்டு கீழ் இறங்கினார். படிகளில் ஏறினார். தீப்பந்தங்கள் விரைவாக கொளுத்தப்பட்டன. விளக்குகள் தூண்டப்பட்டன. ஒரே நேரத்தில் மடமடவென்று இருபது தீப்பந்தங்கள் எரிந்தன. புகை உச்சியில் போய் இடித்து நழுவி வெளியே மறைந்தது.

தீப்பந்தங்கள் வெளிச்சத்தில் நிதானமாக நடந்துபோனார். கருவறை கதவை தொட்டு கண்ணில் ஒற்றிக் கொண்டார். இடப்பக்கம் இறங்கினார். அந்த படிகளின் வாசலில் சண்டேஸ்வர நாயனார் சிற்பம் இருந்தது.

''ஓ, இதை பார்க்கத்தான் ஆசைப்பட்டீர்களா.'' அவள் வியந்தாள்.

''ஆமாம். எத்தனை முறை பார்த்தாலும் எனக்கு இந்த சண்டேஸ்வர நாயனாரை வியக்காமல் இருக்க முடியவில்லை.''

''இது ஒரு சிற்பி செய்ததா.''

''இல்லையென்று சொல்கிறான் நித்த வினோதக பெருந்தச்சன் இரவி. இந்த அளவிற்கு மிகச் சரியாக படம் வரைந்து ஒரே பாறையை எடுத்து அந்த ஒரே பாறையில் எதையெல்லாம் நீக்க வேண்டும் என்று தீர்மானித்து அதை முக்கோண

பட்டையாக மாற்றி, அதாவது முகம் இல்லாது ஒரு முக்கோணம். மார்பு இல்லாது ஒரு முக்கோணம். கை நீளத்திற்கு கை முக்கோணம் என்று வரைந்து அதை செதுக்கி எடுத்த பிறகு முகத்துக்கு உருவம் கொடுக்கக் கூடிய இன்னொரு சிற்பி வந்து உட்கார்ந்து செய்வானாம். அந்த சிற்பி, கை, கால், முகம், கழுத்து, மார்பு என்று பிரிப்பானாம். அப்போதும் கூட அது ஒரு தடிமனான களிமண்ணில் செய்த ஒரு சிலை போல எந்த அலங்காரமும் இல்லாமல் எந்த பாவமும் இல்லாமல் இருக்குமாம். பிறகு மெல்ல மெல்ல வேறு சிற்பிகள் வருவார்களாம். முகம் மட்டுமே செய்ய ஒருவன் வருவானாம். கை, கால், நகைகள் செய்ய ஒருவன் வருவானாம். இடுப்பு வேட்டி என்று இன்னொருவன் வருவானாம். அப்படி பலபேர் கை வைப்பார்களாம். ஒரு ஆள் முடித்து விட்டு இன்னொரு ஆள் நகர்வானாம். சில சமயம் இரண்டு ஆட்களும் செய்வார்களாம். சிவனை ஒருவர் செய்ய பார்வதியை ஒருவர் செய்வாராம். பார்வதிக்கு கீழே உள்ள விஷயங்களை இன்னொருவர் கவனித்துக் கொள்வாராம். கல்லை அசையாது நிற்க வைத்துவிட்டு மேலே கூரை போட்டு உள்ளே அடித்து நிறுத்துவார்களாம். பிறகு தூக்குவார்களாம். கயிறு கட்டி தூக்கி மேலே போய் விமானத்தில் நின்று இந்த பலகையை இழுப்பார்களாம். பலகையில் புடைப்பு சிற்பமாக இருக்கின்ற இந்த சிற்பம் மேலேறுமாம். அப்படியே உள்ளே வைத்து அழுத்துவார்களாம். சாந்து பூசுவார்களாம். பிரிக்க வொட்டாது இறுக்கமாய் செய்து விடுவார்களாம்.

எனக்கு அவன் இன்னும் விளக்கிச் சொன்னான்.

இதுவே எனக்கு கனவாக இருக்கிறது. எப்பேர்பட்ட வேலை. அந்த சிரிப்பை பார்த்தாயா. சண்டேஸ்வரர் முகத்தில் தழும்பை பார்த்தாயா. அந்த தாயாரின் முகத்தில் எவ்வளவு திருப்தி. இது செய்ய வேண்டியதுதான் என்ற நிறைவல்லவா அவர் முகத்தில் இருக்கிறது. அவர் சண்டேஸ்வரருக்கு இடம் விட்டு சற்று கோணலாக பின்னே நகர்ந்து அவன் மண்டியிட வழி செய்திருக்கிறார். இறை தன்னை நேசித்தவர்களை நெருக்கமாக அனுமதிக்கிறது என்றுதான் இந்த காட்சி சொல்கிறது.

நெருக்கமாக அனுமதிப்பது மட்டுமில்லை. சுற்றி பரிவட்டம் கட்டுகிறார். எதில் பரிவட்டம். காழகத்தில் அல்ல. நெசவு

நூலில் அல்ல. அவர் கட்டியது மலர் பரிவட்டம். வாடாத மலர். அவர் கைபட்ட மலர் அல்லவா. பெரிய மலர் கிரீடம் சாத்துகிறார். அந்த மலர் கிரீடம் சண்டீஸ்வரரை கம்பீரமாக காட்டுகிறது. இந்த சண்டீஸ்வரர் எழுந்து அந்த மலர் கிரீடத்தோடு நின்றால் சில சமயம் இறைவனைவிட உயரமாக இருப்பாரோ என்று எனக்குத் தோன்றும். இந்த சண்டீஸ்வரரை மனதில் எழுப்பி நிற்க வைத்து பார்த்திருக்கிறாயா. பார். நிற்கட்டும். இப்பொழுது சிவனை அருகே நிற்க வை. இரண்டு பிடி சிவபெருமான் சண்டேஸ்வரரை விட குள்ளமாகத்தான் இருப்பார்.

இறைவனை விட இறைவனுடைய அடியார்கள் உயர மானவர்கள். எதனால்...? இறைவனால்.'' அவர் சொல்ல, வீரமா தேவி அப்படியே பார்த்து திகைத்துப் போனாள். பெரிதாய் பல் தெரிய சிரித்து அவர் புஜத்தை பிடித்துக் கொண்டாள்.

''அடேயப்பா. எப்படியெல்லாம் பார்க்கிறீர்கள். நான் மண்டியிட்ட கோலத்தை மாற்றவே இல்லை. நீங்கள் எப்படி எழுந்து நிற்க வைத்தீர்கள்.''

''அப்படித்தான் சிற்பத்தை பார்க்க வேண்டும்.'' இராஜேந் திர சோழர் அருகே போய் சண்டேஸ்வரரை தடவினார்.

''ஒரு கேள்வி''

வீரமாதேவி நெஞ்சுக்கு குறுக்கே கைகளை கட்டிக் கொண்டு ஒரு படியில் காலை கீழே வைத்து இன்னொரு படி யில் காலை மேலே வைத்து ஒயிலாக நின்றிருந்தாள். மெய்க் காவல் படையினர் கீழே இருந்தார்கள்.

''எதற்காக சண்டேஸ்வரரை இங்கு வைக்கச் சொன் னீர்கள். சண்டேஸ்வரப்பதம் என்று ஏன் விரும்பிக் கேட்டீர் கள்.'' அங்கே நிசப்தம் நிலவியது.

இராஜேந்திர சோழர் பதிலுக்கு யோசிக்கத் துவங்கினார்.

''நான் சொல்லவா.'' பின்னால் குரல் கேட்டது. இருவரும் திரும்பிப் பார்த்தார்கள். அனிச்சையாக இராஜேந்திர சோழரின் கை அவர் வாள் மீது சென்றது.

அருண்மொழி பட்டன் படியேறினான். நிதானமாக நடந்து அருகே வந்து இராஜேந்திர சோழரின் கால்களை தொட்டு

கண்ணில் ஒற்றிக் கொண்டான் குனிந்து வீரமாதேவியை வணங்கினான்.

"சொல், என்ன காரணம்," என்று வீரமாதேவி கேட்டாள்.

"எனக்கு தெரிந்ததைச் சொல்கிறேன்."

"நீ வம்பன். உன்னை பேசவிடக் கூடாது. எதற்கு சொன்னோம் என்று எனக்கு மறந்து விட்டது."

"எனக்கு மறக்கவில்லை."

"ஏய், உன்னிடம் இதைப் பற்றி நான் பேசியதே இல்லை."

"நீங்கள் பேசாவிட்டால் என்ன. உங்கள் முகம் பேசி இருக்கிறது. உங்கள் மனம் பேசியிருக்கிறது."

"என்னடா கதை அடிக்கிறாய். நான் எங்கு உன்னிடம் மனதால் பேசினேன்."

"எனக்கு இதை ஏன் நீங்கள் வைத்தீர்கள் என்று ஒரு அபிப்ராயம் இருக்கிறது. அதைப் பற்றிச் சொல்லப் போகிறேன்."

"சொல் சொல்." என்று வீரமாதேவி பரபரத்தாள்.

இவன் என்னடா இந்த நேரத்தில் என்று இராஜேந்திர சோழர் முகம் திருப்பிக் கொண்டார்.

"உங்கள் தனிமையை கெடுத்துவிட்டேன் என்றால் நான் இப்போதே பின்னடைகிறேன்."

"வந்து கெடுத்துவிட்டு என்ன பின்னடைவு, சொல்லித் தொலை." அவர் ஒரு சீறலாகச் சொன்னார். ஆனால் அதில் அன்பு கலந்திருந்தது. நட்பு கலந்திருந்தது.

"சண்டேஸ்வரருக்கு அவர் அப்பாவை பிடிக்காது. நம்முடைய இராஜேந்திரருக்கும்....."

"வந்துவிட்டதா வம்பு. இதற்குத்தானா. இதற்குத்தானா ஆசைப்பட்டாய் வீரமாதேவி." வீரமாதேவி வாய்விட்டு சிரித்தாள்.

"பிறகு. நன்றாக இருக்கிறது. நீர் பேசுவது பேசும்"

"சண்டேஸ்வரர் தன்னுடைய சிவ பூஜையை கெடுத்த அப்பாவின் காலை மழுவால் வெட்டினார்."

"அடப்பாவி. நான் என் தந்தையை கடிந்து கொண்டிருக்கிறேனே தவிர, கையை கூட உயர்த்தியது இல்லையடா."

"நீங்கள் உயர்த்தவில்லை. உங்கள் மனம் உயர்த்தி இருக்கும். இராஜராஜரின் சில விஷயங்கள் உங்களுக்கு அறவே பிடிக்காது. வெட்டி வீழ்த்திவிட்டால் என்ன என்ற கோபத்தை நான் உங்களிடம் பார்த்திருக்கிறேன்"

"நீ ஒருவன் போதும். இராஜேந்திர சோழனின் பேரை நிலை குலைக்க. நீ ஒருவன் போதும். நான் இறந்த பிறகு என்னைப் பற்றி என்னவெல்லாம் பேசப் போகிறாயோ தெரிய வில்லை."

"சும்மா இருங்கள். அச்சானியமாகப் பேசிக் கொண்டு" வீரமாதேவி அதட்டினாள். அரசர் முகம் திருப்பிக் கொண்டார்.

"இது உடல் ரீதியான கோபம் அல்ல, உளரீதியான கோபம். மனோரீதியான மறுதலிப்பு. சண்டேஸ்வரர் தந்தைக்கு எதிரான வர் அல்ல. தந்தை சொல் மீறுபவர் அல்ல. ஆனால் இறை வழிபாடு என்று வந்த பிறகு அந்த இறைவழிபாட்டில் தான் மட்டுமே ஈடுபட்டு வேறு எவரையும் உள்ளே சேர்க்காமல் இருந்தார். ஒரு இறைவழிபாடு அப்படித்தான் செய்யப்பட வேண்டும்.

இறைவன் என்பது ஒருவருக்கொருவர் பேசி பகிர்ந்து கொள்வது அல்ல. இறைவழிபாடு கூட்டாக செய்வதை விட தனியாக செய்யும் பொழுது முழு நிறைவடைகிறது. கூட்டாக செய்யும்பொழுது நாடகம் நடைபெறுகிறது. சண்டேஸ்வரர் தன் இறைவழிபாட்டை பசுக்களுக்கு நடுவே, காடுகளுக்கு இடையே ஒரு சிவலிங்கத்தை ஸ்தாபித்து அதற்கு வில்வத் தால் அர்ச்சனை செய்து மனதால் விதம் விதமான பூஜைகள் செய்து தன்னையே இறைவனிடம் ஒப்படைத்துக் கொண் டிருந்தார். அரிதிலும் அரிதான தவம் அது. ஊர் செய்யும் பூஜை களை விட மிகச் சரியான பூஜை அந்த சிறுவன் செய்து வந்தான். ஆனால் எல்லாம் அறிந்தவர்கள் அங்கு வந்து பார்த்து இது என்ன அநியாயம் என்று கூவ, விசாரதர்மர் முன்னே வந்து அந்த பிள்ளையை அடித்தார். அந்த பிள்ளைக்கு உறைக்கவே இல்லை. மனம் சிவத்தில் ஒன்றி இருந்தது. பிள்ளையை அடித் தது மட்டுமல்ல. விசாரதர்மர் வேறு ஒரு அநியாயம் செய்தார். மணலால் செய்த லிங்கத்தை எட்டி உதைத்தார். லிங்கம் சிதறியது.

தன்னை அடித்ததை பொருட்படுத்தாத அந்த குழந்தை கைக்கோலை எடுத்தது. ஓங்கி காலில் போட்டது. கோல் காலை துண்டாக்குமா. இல்லை. கோல் மழுவாகியது. மழு காலை துண்டித்தது. துண்டாகி தனியே வந்து விழுந்தது. கோல் எப்படி மழுவாயிற்று. அது இறைவன் திருஉள்ளம்.

அதாவது, அந்த காலை துண்டித்தது சண்டேஸ்வரர் அல்ல. இறைவன். தன்னை எட்டி உதைத்த கால்லை தன் பக்த னுக்கு முன்னே தன் பக்தன் செய்துவந்த தவத்தை கலைத்த கோபம் அந்த கோல் மழுவாக மாறியது. மாற்றியது சிவம்.

ஒரு இறைவழிபாட்டை எவர் தடுத்தாலும் அவர் கடுமை யாக இறைவனால் தண்டிக்கப்படுவார். இது தன்னை வழிபடு கின்ற பக்தனுக்கு இறைவன் செய்கின்ற மரியாதை.

சோழ தேசத்தின் வளர்ச்சிக்காக மனம் ஒன்றி இராஜேந்திர சோழர் ஈடுபட்டபோது அது முரட்டுத்தனம் என்றும், வேகம் அதிகம் என்றும், மனிதநேயம் குறைவு என்றும் இராஜராஜர் முன்வந்து கண்டிக்க, இராஜேந்திரருக்கு அது இடைஞ்சலாக இருந்தது. தஞ்சையில் இருக்க முடியாது என்று நகர்ந்து விட்டார். சண்டேஸ்வரர் காடுகளுக்கு நடுவே போனது போல, வெறும் வெட்டவெளியாகக் கிடந்த இந்த ஜெயம்கொண்டம் ஏரிக்கரையில் பெரிய குடிசை இட்டு அமர்ந்திருந்தார்.

உங்களுக்கு நினைவு இருக்கிறதா வீரமாதேவி. கிட்டத் தட்ட ஆயிரம் வீரர்கள்தான் அவருக்கு அருகே இருந்தார்கள். ஆயிரம் வீரர்களோடு பாடி இறங்கிய இடம், இந்த கங்கை கொண்ட சோழபுரம். இன்று எவ்வளவு பெரிய நகரம். எத்தனை தழல் விளக்குகள். சுற்றி எத்தனை தெரு விளக்குகள். எத்தனை தீப்பந்தங்கள். எவ்வளவு கட்டுக்காவல், எவ்வளவு பெரிய கோட்டை. என்ன அழகான ஒரு வாசல். என்ன உயிருள்ள ஒரு கோவில். சிவனின் சாநித்யம் அதிரடிக்கிறது. இதற்கு என்ன காரணம். அறிவு, யாருடைய அறிவு. இராஜேந்திர சோழருடைய அறிவு.''

''அடேய், போதுமடா. அலுப்பாக இருக்கிறது.'' இராஜேந் திர சோழர் சொல்ல, அவன் அவரை கவனிக்கவே இல்லை.

''அரசியாரே, நேர் எதிரே பார்த்தீர்களா. கலை மகளுடைய சிற்பம். சரஸ்வதி. சோழ தேசத்தினுடைய அடிப்படை விஷயம்

புத்தி. புத்தி கூர்மை. காவிரியுனுடைய விளைச்சல் எது. நெல்லா. இல்லை. மனிதனுடைய புத்தி கூர்மை. அது எந்த ஜாதியின ராயினும், எந்த குலத்தோன் ஆயினும், என்ன தொழில் செய் யினும் அவன் அந்த தொழிலில் மிகச்சிறப்பாக இருப்பான்.

இங்குள்ள நான்காம் வர்ணத்தினருடைய திறமை வேறு எங்கும் வராது. பரத கண்டத்தை சுற்றிப் பார்த்த திமிரிலே பேசு கிறேன்.

அரசியாரே, எங்கோ குலுத்த நாட்டில் மலை உச்சியில் நின்று நான் யோசித்ததைச் சொல்கிறேன். காட்டுவாசிகள் போல ஜனங்கள் இருக்க, இந்த சோழ தேசத்தில் மட்டும் மடி யான காழகத்தை உடுத்திக்கொண்டு நீவி மேலே துண்டு போட்டுக் கொண்டு, குடுமியை அழகாக முடிந்து கொண்டு, நெற்றியில் திருமண் இட்டு அல்லது விபூதி தரித்து, கழுத்தில் மாலைகளுடனும், காலில் பாத ரட்சையுடனும் எல்லா ஜாதி யினரும் வலம் வருகிறார்கள்.

வடக்கே பஞ்சமர்களுக்கு மரியாதையே இல்லை. நான்காம் வர்ணத்தினரை யாரும் அருகே அழைத்து பேசுவ தில்லை. தொலைவில் நின்று கட்டளையிடுகிறார்கள். ஆனால், இந்த ஒரு தேசத்தில்தான் இராஜேந்திரரால்தான் இந்த இணக் கம் ஏற்பட்டது. இதற்கு காரணம் புத்தி. தஞ்சையினுடைய அடிப்படை விஷயம் புத்தி.

எனவேதான் இறை வணக்கத்திற்கு எதிரே இருப்பது புத்தி என்று இங்கே கலைமகளை ஸ்தாபித்து இருக்கிறது.

யாருக்கு கூரிய புத்தியும், யாருக்கு இறை வழிபாடும் இருக்கிறதோ அந்த மனிதர் சிறப்படைவார். இராஜேந்திர சோழர் இந்த இரண்டையும் பெற்றவர். இராஜேந்திர சோழர் மட்டுமல்ல. மொத்த சோழ தேசமும் புத்தியும், இறை வழி பாடும் கொண்டது. அதாவது புத்தியும், பணிவும் கொண்டது. புத்தியின் எல்லை ஒரு அளவுக்குத்தான் என்பதை தெரிந்து பணிவை மேற் கொள்கிறது. இது சோழ தேசத்தின் சொத்து. சோழ தேசத்தின் இந்த அடிப்படையான விஷயத்தைத்தான் இங்கே சிற்பமாக வடித்திருக்கிறார்கள்.''

வீரமாதேவி கை கொட்டினாள். தன்னுடைய கை வளையல்களை கழற்றி 'இதை உன் மனைவியிடம் கொடு' என்று சொன்னாள். அவன் வாங்கி கண்ணில் ஒற்றிக் கொண்டு இடுப்பில் சொருகிக் கொண்டான்.

''ஏய், வீரமாதேவி இது நான் உனக்கு பரிசு அளித்தது.''

''அதனால்தான் அருண்மொழிக்கு பரிசளிக்கிறேன். இது இராஜேந்திர சோழர் எனக்கு ஆசையாக கொடுத்தது. அவருடைய நினைவாக இதை வைத்துக் கொள் என்று கொடுக்கிறேன்'' என்று சொல்ல, அவன் மறுபடியும் எடுத்து கண்ணில் ஒற்றிக் கொண்டு இடுப்பில் சொருகிக் கொண்டான்.

''வீடு திரும்பலாமா.'' அருண்மொழிபட்டன் மெல்ல கேட்டான்.

''ஆக, எங்களை வீட்டிற்கு அனுப்பத்தான் வந்திருக்கிறாயா. விலகிப் போ.'' என்ற சொல்லி கீழ் இறங்கினார். வலம் வந்தார். குதிரை ஏறினார். கோவிலுக்கு வெளியே வந்து கோவிலின் விமானத்தை பார்த்தார்.

இரண்டு அந்தராளங்களிலும் விளக்கு எரிவது தெரிந்தது. வீரர்கள் நடமாட்டம் தெரிந்தது. திருப்தியாக அவர் கோட்டைக்கு வெளியே வந்தார்.

நகர் எல்லைகளைப் பார்க்க வேண்டும் என்று சொல்ல, மெய்க்காவல் படையினர் இரண்டாகப் பிரிந்து முன்னே ஒரு குழு போயிற்று. குதிரையின் குளம்படிகேட்டு பூச்சி, புட்டுகள் ஒதுங்கிவிடும். நடுவே வராது என்று முன்னே போயிற்று.

வடகிழக்கு எல்லையில் பெரிய குடிசை போட்டு ஒரு காளி சிலை இருந்தது.

''இது கலிங்கமல்லவா.'' அவர் குனிந்து விளக்கொளியில் பார்த்து கேட்டார்.

''ஆமாம். கலிங்கம்தான்.'' அவர் கால் தொட்டார். கண்ணில் ஒற்றிக் கொண்டார்.

*''அம்மா. என் தேசத்தை பாதுகாத்து வை, என் அரண்மனையை பாதுகாத்து வை. என் குழந்தைகளுக்கு துணையாக

---

* வீராரெட்டித் தெரு கோவில்.

இரு.'' கைகூப்பி வேண்டினார். பூசாரி ஓடிவந்து ஜலம் கொடுத்தார், மெல்ல தண்ணீர் ஊற்றி முகத்தை, உடம்பை கழுவினார். சந்தனமும், குங்குமமும் மேலே அப்பினார். வணங்கினார். விடை பெற்றார்

*அடுத்தபடியாக தெற்கே இருந்த கோவிலை அடைந்தார். மிகப் பெரிய கோட்டை இருந்தது.

இங்கேயும் மகிஷாசுரமர்த்தினி. சூலத்தால் மகிஷனுடைய கழுத்தில் அழுத்தி வைத்து எல்லா கைகளும் அவனை தாக்க தயாராக இருந்தது. ஆனால் முகத்தில் சாந்தம் இருந்தது. அந்த இரவில் அந்த சிலைக்கும் தண்ணீர் ஊற்றி கழுவி சந்தன குங்குமம் இட்டு மாலைகள் சாத்தினார். மெல்ல வெளியே வந்தார்.

''எதற்கும் கவனமாக இரு அம்மா. என்னுடைய குழந்தைகளுக்கு பலமாக இரு.'' வலமாகத் திரும்பி மேற்கு கரையோரம் போனார்.

தென்மேற்கு மூலையில் உள்ள கன்னி கணபதியின் சிலையை அடைந்தார். மூச்சு இழுத்து விட்டார். சுவரில் கணக்கு கணபதி என்று எழுதி இருந்தது.

''கன்னிமூலை கணபதிதானே. கணக்கு கணபதி என்று யார் எழுதி இருக்கிறார்கள்.'' விசாரித்தார்.

''ஒரு வேடிக்கை நடந்தது. உங்களுக்குத் தெரியாதா.''

''இல்லையே, இங்கு என்ன வேடிக்கை நடந்தது என்று எனக்கு யாரும் சொல்லவில்லையே.''

''இங்குள்ள கணக்கனை கோவில் கட்ட எவ்வளவு செலவாகியது என்று நீங்கள் கேட்டீர்கள்.''

''ஆமாம். குள்ளமாய், தடிமனாய் ஒரு அந்தணச் சிறுவன் உண்டு.''

''ஆமாம். அப்பொழுது சிறுவன். இப்பொழுது நல்ல வயதாகி விட்டது. பேரன், பேத்தி பார்த்து விட்டான்.''

''சொல். என்ன நடந்தது.''

---

* மண் மேடு காளி கோவில்

''அவன் சரியாக கணக்கு வைக்கவில்லை, அல்லது த்திருந்ததை சொல்லத் தெரியவில்லை. அவன் தடுமாறி ான். எட்டு நூறுகணக்கு மூவாயிரம் என்றான். எட்டு நூறு ன்று தான் சொன்னான். எட்டு நூறு கணக்கு. கிட்டத்தட்ட ண்பது லட்சத்து மூவாயிரம் என்று பொருள் கொண்ட வார்த்தை அது, நீங்கள் அந்த நூறு என்பதை நூல் என்று வாங்கிக் கொண்டீர்கள். எட்டு நூல் கணக்கு என்று சொன்னீர் கள்.

மேலே நின்று கீழே பம்பரம் வைத்து அதை சரசரவென்று கீழே விடுவார்கள். இப்பொழுது எத்தனை நூல் உயரம் வந்து இருக்கிறோம் என்று அந்த நூல் சொல்லிவிடும், தரையை இரும்பு பம்பரம் தொட்டவுடன் கையில் இருக்கின்ற முடிச்சை எண்ணி பார்ப்பார்கள். இத்தனை உயரத்திற்கு வந்திருக்கிறோம் என்று அந்த நூல் கணக்கு சொல்லும்.

வெறுமே நூல் வாங்கிய கணக்கே மூவாயிரம் பொன்னா. சரி. சரி. இதற்கு மேல் சொல்லாதே என்று சொல்லிவிட்டீர் கள். அவன் நிம்மதி ஆனான். அவனை காப்பாற்றியது இந்த கணபதி என்பதால் இதற்கு கணக்கு கணபதி என்று பெயர் வந்துவிட்டது.''

''ஆனால் எவ்வளவு செலவாயிற்று அருண்மொழி.'' வீரமாதேவி கேட்டாள்.

''யாருக்கும் தெரியாதம்மா. அப்படி ஒரு கணக்கு வைக்கப் படவே இல்லை. வைத்தால் இந்த கோவில் கட்டி இருக்கவே முடியாது. பாதியில் நின்றிருக்கும். கணக்கு வழக்கு பார்க்காது கட்டிய கோவில் இது.''

அரசனும், அரசியும் திகைத்தார்கள். வெளியே வந்து அங்கிருந்தபடி விமானத்தை பார்த்தார்கள். அவர்களுக்கு ஆச்ச ரியமாக இருந்தது.

''நாமா செய்தோம், நம்முடைய கணக்கா. நம்முடைய வழக்கா. இல்லையே. இறைவன் தன்னைத்தானே இங்கு குடி அமர்த்தினான். இங்கு வந்து உட்கார்ந்து கொண்டான். இதில் என்ன கணக்கு கேட்பது.''

அவர்கள் இரண்டு பேரும் குதிரை ஏறினார்கள். மேற்கு பக்கம் உள்ள எல்லை காளி கோவிலுக்கு வந்தார்கள்.

சிறிய உருவம். ஆனால் அழகிய வதனம். புடைப்பு சிற்பம். தடவித் தடவி சந்தோஷப்பட்டார்கள். அந்த இடம் அதிர்ந்தது. மிகப் பெரிய உயிர் துடிப்பு இருந்தது. வலம் வந்தார்கள்.

வடக்கு பக்கம் உள்ள காளியிடம் போனார்கள். அங்கு நமஸ்கரித்தார்கள். அங்கிருந்து கோட்டை வாசலுக்கு வந்தார்கள். காவலர்கள் வணக்கம் சொல்ல ஏற்றுக்கொண்டார்கள். கோட்டை வாசலுக்கு அப்பால் நகர்ந்தார்கள். வெளியே ஒரு விஷ்ணு கோவில் உருவாகிக் கொண்டிருந்தது.

''யாருடைய கோவில் இது.'' வியந்தார்.

''மறந்துவிட்டதா. அருண்மொழி கேட்டுத்தானே செய்தான். அருண்மொழி எழுப்புகின்ற விஷ்ணுகோவில் இது.''

''அழகு. மிக அழகு.'' அவர் சிலைக்கு அருகே போய் வியந்தார்.

''இன்னும் குடமுழுக்கு ஆகவில்லையா.''

*''இல்லை. அடுத்த மாதத்தில் நாள் குறித்திருக்கிறார்கள். பணிகள் வேகமாக நடந்து கொண்டிருக்கின்றன.''

''இந்த விஷ்ணு கோவிலும் நமக்கு வேண்டியது தானே. இந்த இடத்தில் இருப்பது சிறப்பாக இருக்கிறது. தீப்பந்தம் கொண்டு வா.'' தீப்பந்தத்தை அருகே கொண்டு வந்தார்கள். இப்பொழுது வெள்ளை பலகை வைத்து பெருமாளை தீப்பந்த வெளிச்சத்தில் காட்டினார்கள். தீப்பந்த வெளிச்சம் வெள்ளை பலகையில் பட்டு பெருமாள் முகத்தில் விழுந்தது. பெருமாள் சிரிப்பாக இருந்தார். கண்கள் சிரித்தன. புருவம் சிரித்தது. மூக்கு, முகவாய், உதடுகள் சகலமும் சிரித்தன. காதோரம் குழைகள் சிரித்தன.

என்ன இவ்வளவு ரம்மியமாக இருக்கிறதே ஆச்சரியப் பட்டார். சௌலப்யன் அல்லவா. அதனால்தான் இவ்வளவு

---

* புதையுண்ட இந்த விஷ்ணுவை எடுத்து ராஜாராம் கோமகன் மறுபடி இதை சீர்செய்திருக்கிறார். கொள்ளை அழகு பெருமாள்.

அழகு. பூதேவி, ஸ்ரீதேவி மிக வாளிப்பாகவும், மிக ஒயிலாகவும், மிக நிறைவாகவும் இருந்தார்கள். நல்ல புருஷனை அடைந்தோம் என்ற நிம்மதி அவர்கள் முகத்தில் இருந்தது. வீரமாதேவி வாய்விட்டு சொன்னாள்.

''ஆமாம்'' என்று அவர் தலையசைத்தார்.

''யார் செய்தது.''

''இது சந்திரசேகரன்''

''நான் பார்த்தது இல்லையே,''

''பார்த்திருக்கிறீர்கள். மனதில் பதிந்து கொள்ளவில்லை. நம்முடைய நித்த வினோதக பெருந்தச்சன் இரவியினுடைய மகன் சந்திரசேகரன்.''

''நாளைக்கு அவனை வரச் சொல். அவனுக்கு என் கையால் சன்மானம் தர விரும்புகின்றேன். மிக உயிர்ப்புள்ள சிலையை நான் இப்பொழுதுதான் பார்க்கிறேன். சண்டேஸ் வரர் சிலையில் ஒரு கம்பீரம் இருந்தது. இது வா வா என்று அழைக்கிறதே'' என்று வியந்தார்.

''சோழ சிற்பிகளுடைய மேன்மைக்கு காரணம் என்ன'' அருண்மொழிபட்டனை வினவினார்.

''சோழ தேசத்தின் எல்லா விஷயத்திலும் மேன்மைக்கு காரணம் காவிரி நதி. காவிரியால் தான் சோழ தேசம் மிகப் பெரிய ஒரு ஆளுமையை கொண்டிருக்கிறது. சரியான நேரத்தில், சரியான விதத்தில் காவிரி பாய்கிறது. குடகு எனக்கு பிடித்தது என்று சொல்கிறார்களே. அந்த குடகில் பிறந்தது இந்த காவிரிப் பெண்.

அவள் பொங்கி வந்து மேலை சாளுக்கியத்தை வளமாக்கி அங்கு இருக்க முடியாது இருக்க பிடிக்காது மிக வேகமாக புருஷனைத் தேடி வருகின்ற பெண் போல இந்த தமிழகம் நோக்கி வருகிறாள். மேலை சாளுக்கியத்தின் பல இடங்களில் பாறைகள். நல்ல வண்டல் மண் இங்கே கங்கதேசம் வந்த பிறகு ஏற்பட்டு விடுகிறது. கங்க தேசத்தின் வழியாக அவள் சோழ தேசத்தில் பாய்கிறாள். சோழ தேசத்தின் எல்லா வயல் களுக்கும் அவள் புகுந்து புறப்பட்டு போகிறாள்.

குடகில் பேய்மழை, மக்களுக்கு திண்டாட்டம், வெளியே வரவேமுடியவில்லை. ஆனால் இங்கு சோழ தேசத்தில் அது கொண்டாட்டமாக மாறுகிறது. ஆடி மாதம் பதினெட்டாம் பெருக்கு இங்கு எல்லோருக்கும் சந்தோஷமான நாள். மிகச் சிறந்த பண்டிகை. காவிரி சுழித்துக் கொண்டு ஓடுகிறது.

எல்லா நாகரீகமும் நதிக்கரையை ஒட்டித்தான் இருக்கின்றன. நதிக்கரை ஓரத்தில் நல்ல விளைச்சல். நல்ல விளைச்சல் இருக்கும் இடத்தில் நல்ல குடியிருப்பு. நல்ல குடியிருப்பு இருக்கும் இடத்தில் நல்லவிதமான கலைஞர்கள். நல்ல விதமான அரசாட்சி. உங்கள் அரசும், உங்கள் குடிமக்களும், இந்த கலைஞர்களும், புலவர்களும் வளர்ந்து நிற்பது இந்த காவிரியால்தான். காவிரி பொய்த்தால் நாம் கதறுகிறோம். காவிரி பொய்க்கக்கூடாது என்று சொல்கிறோம். வானம் பொய்த்தாலும் காவிரி பொய்க்காது என்று நம்புகின்றோம். சோழ தேசம் ஒரு நதிக்கரை நாகரீகம்.''

''ஆம்'' என்று அவர் அருண்மொழிபட்டனுக்கு பதில் சொன்னார்.

கொள்ளிடம் இருந்த இடத்தை நோக்கி கைகூப்பி வணங்கினார். கோட்டைக்கு திரும்பினார். அரண்மனைக்குள் நுழைந்தார். கதவுகள் சாத்திக் கொண்டன.

அருண்மொழிபட்டன் மெல்ல குதிரையிலிருந்து இறங்கி ஒரு மரத்தின் கீழ் இருந்த ஆசனத்தில் அமர்ந்துகொண்டான். வெற்றிலை பாக்கு வேண்டுமடா என்று கேட்டான். அவன் மெய்க்காவல் வீரர்கள் வெற்றிலை பாக்கு கொண்டுவந்து துடைத்து கொடுத்தார்கள்.

மெல்ல பிரித்து, கிழித்து போட்டுக் கொண்டான்.

அரசர் ஊர் விட்டு போனால் நாம் என்ன செய்வது. இராஜாதிராஜனோடு தங்கவா. அரசரோடு நகரவா. அல்லது எங்கே இருப்பது. அவன் மனம் அல்லாடிற்று. இவர் நகரப் போகிறார் என்று தெள்ளத் தெளிவாகத் தெரிந்து விட்டது. நாம் என்ன செய்ய முடியும். நமக்கு என்ன வலிவு இருக்கிறது. மெல்ல யோசித்தான்.

அரையன் ராஜராஜன் தன்னுடைய விருப்ப இடமான கீழைசாளுக்கியம் போய் விட்டார். என்னுடைய விருப்ப இடம் எது. தஞ்சை, தஞ்சையை நோக்கி போய்விட வேண்டும். அது இரண்டு விதத்தில் பயன் அளிக்கும். பாண்டியர்களுக்கு எதிராக இருக்கும், சுந்தர சோழ பாண்டியனுக்கு உதவியாக அங்கு இருக்க முடியும். அதுதான் நல்லது. இவரோடு போவது என்பதை மெல்ல மெல்ல மறக்க வேண்டும். இவர் அழைத்தாலும் புறக் கணிக்க வேண்டும். தீர்மானித்தான்.

சண்டேஸ்வரர் யார் இராஜேந்திர சோழரா. ஆம். இறைவ னுக்கு முன்னால் இராஜேந்திர சோழர் சண்டேஸ்வரர். ஆனால் இராஜேந்திர சோழருக்கு முன்னால் நான் சண்டேஸ்வரர். எனக்கு பெரிய பட்டம் கொடுத்து அருகே அழைத்து உட்காரந் திருக்கிறார். அரையன் ராஜராஜன் என்னைவிட மூத்த தளபதி தான். ஆனால் என்மீது என்ன பிரியம். அவருடைய அரண் மனைக்குள் நான் மட்டும்தானே நுழைய முடியும். புருஷனும், மனைவியும் பேசிக் கொள்ளும்போது நான்தானே அருகே இருக்க முடியும்.

மன்னரே, இந்த இடத்தை விட்டு நீர் நகர்ந்தால் நான் என்ன செய்வேன். நீர் இன்றி நான் எப்படி வாழ்வேன். ஆனால் வாழ்ந்தாக வேண்டும். இந்த வாழ்க்கை இதுவரை இராஜேந் திரருக்கு அர்ப்பணித்தது போதும். இனிநான் இறைபணி மேற் கொள்ள வேண்டும். என்னுடைய இடத்தில் நான் நிற்க வேண்டும். என்னுடைய இடம் நிச்சயம் இதுவல்ல, குடந் தையும் அல்ல. என்னுடைய இடம் தஞ்சை. அந்த இடத்தில் தான் நான் பிறந்தேன், வளர்ந்தேன். நான் வளர்ந்த இடத்திற்கு நான் போக வேண்டும். தஞ்சை அரண்மனையில் கூட இல்லாது தஞ்சைக்கும் குடந்தைக்கும் நடுவே இருக்கின்ற ஏதாவது ஊரில் அமர்ந்துவிட வேண்டும். ஆனால் அப்பா கிருஷ்ணன் இராமன் எங்கு அழைப்பார் என்று தெரியும். அமண்குடிக்கு வரச் சொல்லுவார். அந்த வீட்டை பாதுகாக்கச் சொல்லுவார். அந்த அக்ரஹாரத்தை மேம்படுத்தச் சொல்லுவார். என்னுடைய இடம் தஞ்சையா. அமண்குடியா. நான் தீர்மானிக்க வேண்டும்.

தஞ்சை சிவஸ்தலம். அமண்குடி, நாம் அதை சாக்த உபா ஸகமாக வைத்திருக்கிறோம். நாம் போனால் சாக்த உபாஸகம்

பரவும், பரவினால் என்ன. அவனுக்கு அமண்குடிக்கு போக வேண்டும் என்று தோன்றியது.

பெரிய சாம்ராஜ்ஜியத்தின் தூண்கள் மெல்ல மெல்ல வெவ்வேறு திசை நோக்கி நகர்ந்தன.

சோழதேசம் இந்த மாற்றத்தை ஊர் முழுவதும் பரப்பி நினைத்து நினைத்து வருந்தியது. அவர் மாதிரி வருமா என்று பேசியது. ஒவ்வொரு ஆட்சி மாற்றத்தின் போதும், ஒவ்வொரு தலைமையின் நகர்வின் போது இப்படி பேச்சுக்கள் வரும். அவர் மாதிரி வருமா என்ற பேச்சு வரத்தான் செய்யும். இது உலக வழக்கம்.

''சந்திரசேகரனை அழைத்தீர்களாமே, வந்திருக்கிறான்.'' மறுநாள் காலை விடிந்து வெளிச்சம் பரவி, கறவைகள் எல்லாம் புல்வெளிக்கு போனபிறகு கோட்டைக் கதவுகள் சாத்தப்பட்டு வருபவர்கள் திட்டி வாசல் வழியாக விடப்பட்டு அரண்மனை வாசல்கள் அகல திறக்கப்பட்டு வணிகர்களும், மற்றவர்களும் அரசரை பார்க்க அனுமதிக்கப்பட்டார்கள். அரண் மனை கதவுகள் திறக்கும் பொழுது வாசற் கதவு மூடியிருக்க வேண்டும் என்பது நிரந்தர கட்டளை. திட்டி வாசல் வழியாக ஒவ்வொருவரையும் சோதித்து அனுப்ப வேண்டும் என்பது மாற்றப்படாத நியதி.

வணிகர்களும், வேளாளர்களும், தொழில் விற்பன்னர் களும், புலவர்களும், வைதீகம் செய்கின்ற அந்தணர்களும் அரண்மனை வாசலில் நிறைந்திருந்தார்கள்.

சிற்பி சந்திரசேகரன் உள்ளே நுழைந்தான். வணக்கம் சொன்னான். நித்த வினோதக பெருந்தச்சன் இரவியின் சாயலே அவனிடம் இருந்தது. ஆனால் உயரமாகவும் இளமையாகவும் இருந்தான்.

''அடே, நீதானா அது. உன்னை சந்தித்த நினைவே இல்லை. வா. அருகே வா. இன்னும் உற்று பார்க்கிறேன்.'' அவர் உற்று பார்த்தார். மெல்ல அவன் கை விரல்களை தூக்கிப் பார்த் தார்.

''வேலை தெரிந்து கொண்டிருக்கிறாயா.''

''தெரிந்து கொண்டிருக்கிறேன்.''

''அந்த சிலையை பார்த்தேன். மிக அற்புதமாக இருந்தது. மிக உன்னதமான ஒரு முகத்தை நான் முதன் முதலில் சிலையில் பார்க்கிறேன் என்று எனக்கு தோன்றியது. விஷ்ணுவை இவ்வளவு அழகாக கல்லில் வடித்தவர் எனக்கு தெரிந்து வேறு எவரும் இல்லை. வேறு எந்த கோவிலிலும் இத்தனை சுகமாக நான் பார்த்தது இல்லை. உனக்கு என் வாழ்த்துக்கள்.'' வீரமாதேவி தயாராக வைத்திருந்த பொற் பையை அவரிடம் நீட்ட, அவர் அதை அவன் கையில் கொடுத்தார். நீண்டநெடுநாள் திடமோடு வாழ்க என்று வாழ்த்தினார். அவன் மண்டியிட்டு வணங்கி அவர் கால்களை பிடித்துக்கொண்டு விரல்களை முத்தமிட்டு எழுந்தான். அவன் கண்கள் கலங்கி இருந்தன.

''நான் காஞ்சிபுரம் போவேன். அங்கு குடியிருப்பேன்.''

அவன் கைகட்டி பேசாது இருந்தான்.

''காஞ்சிபுரத்திற்கு அருகே ஒரு கற்றளி எழுப்ப வேண்டும். சிறியதாக இருந்தாலும் சிறப்பாக இருக்க வேண்டும். அதற்கான ஒரு முன்பணம்.'' அவர் மறுபடியும் வீரமாதேவியை திரும்பி பார்த்தார். வீரமாதேவி இன்னொரு பையை கொடுக்க அதை அவரிடம் நீட்டினாள். முன்னதை விட பின்னது கனமாக இருந்தது.

''இடம் நீ தேர்ந்தெடுத்துக் கொள். நீர் வசதி இருக்க வேண்டும். நல்ல கிராமம் இருக்க வேண்டும். மக்கள் வசிக்கின்ற இடமாக அதேநேரம் மக்களுக்கு நடுவே இல்லாது சற்று தொலைவாக நடந்து போகும் வண்ணம் இருக்க வேண்டும். பார்த்து செய். உனக்கு தெரியாதது அல்ல.'' என்று சொல்லி விடை கொடுத்தார்.

பலமுறை விழுந்த வணங்கி சந்திரசேகரன் என்ற அந்த இளைஞன் விடை பெற்றான். அவன் மனம் ஏற்கனவே குறித்து வைத்திருந்த ஏரிக்கரை திடல் நினைவுக்கு வந்தது.

''சாளுக்கிய தேசத்திலிருந்து அந்தணர்கள் வந்திருக்கிறார்கள். உங்களை சந்திக்க வேண்டும் என்றும் சொல்லுகிறார்கள்.''

''நான் இப்பொழுது பொறுப்பில் இல்லையே. இராஜாதிராஜனை அல்லவா சந்திக்க வேண்டும்.''

''இராஜாதி ராஜனை சந்தித்து விட்டார்கள். உங்களை சந்திக்க வேண்டுமென்று வந்திருக்கிறார்கள்.''

''வரச்சொல்.'' அவர்கள் வந்தார்கள். வணங்கினார்கள். விபூதி பிரசாதம் கொடுத்தார்கள்.

''நாங்கள் அரசு தூதராக வரவில்லை. அரசியல் காரணத் திற்காக வரவில்லை. மேலை சாளுக்கியத்தில் கொத்தகரே என்ற இடத்தில் நீங்கள் ஒரு அழகான கோவில் கட்டச் சொல்லி உத்தரவிட்டீர்கள். கோவில் கட்டி முடித்து கும்பாபிஷேகமும் ஆயிற்று. அங்குள்ள சோழ தளபதிகள் பங்கேற்றார்கள். அந்த கும்பாபிஷேக பிரசாதம் இது.

அங்கே இரண்டு ஏரி வெட்டியிருக்கிறீர்கள். அதில் ஒரு ஏரிக்கு இராஜேந்திர சோழ ஏரி என்று பெயர். அதில் நீர் நிறைந்து காணப்படுகிறது. அந்த ஏரியின் நீர் எடுத்து சிவனுக்கு அபி ஷேகம் செய்த தீர்த்த பிரசாதம் இது.'' அதை அவர் தலையில் தெளித்துக் கொண்டார். வீரமாதேவிக்கும் தெளித்தார். 'தொடர்ந்து பூஜைகள் நடக்க வேண்டும். ஜெயசிம்மனின் வாரிசான ஆகம வல்லனை கேட்க பயமாக இருக்கிறது. புறக்கணித்து விடு வானோ. மூடு என்று சொல்லி விடுவானோ என்று பயமாக இருக்கிறது. அதனால் அவர் காதிற்கு இந்த விஷயத்தை கொண்டே போகவில்லை. நீங்கள் கட்டியது என்பதால் உங்களை நோக்கி வந்திருக்கிறோம். நீங்கள் என்ன சொல்வீர் கள் என்ற பயம் இருந்தாலும், சிவன் கோவில் உதாசினப் படுத்த மாட்டீர்கள் என்று நினைக்கிறோம். அந்த நம்பிக்கை யில் வந்திருகிறோம்.''

''மூன்று வேளை பூஜை. இரண்டு வருடத்திற்கு என்ன செலவாகும்.'' அருகில் இருந்த ஓலை நாயகம் வேகமாக கணக்கு போட்டார். ஒரு கணக்கு சொன்னார்.

''அதை இரண்டு மடங்கு ஆக்கி அவரிடம் கொடுங்கள்'' என்று இராஜேந்திர சோழர் சொல்ல, ஒரு மரப்பெட்டி நிறைய தங்க காசுகள் வந்தன. இரண்டு பேர் பல்லக்கு போல தூக்கி வந்தார்கள். சபையில் இறக்கினார்கள்.

''எடுத்துக் கொள்ளுங்கள்,'' அந்தணர்கள் தள்ளாடினார்கள்.

''இவ்வளவு கேட்கவில்லை. கை நிறைய பொன் கொடுத்தால் போதும் என்று நினைத்தோம்.''

''இல்லை. மறுபடியும் அந்த கோவிலுக்கு தானம் கேட்டு எவரிடமும் போகலாகாது. இதை வட்டிக்கு விட்டு சம்பாதித்து இந்த வட்டியிலிருந்து பூஜை செய்யுங்கள். அதற்காகத்தான் பெரும் பணம் கொடுத்திருக்கிறேன். எடுத்துப் போங்கள்.'' அந்த காசுகள் வெளியே எடுத்து போகப்பட்டன. அரண்மனைக்கு வெளியே அந்தணர்கள் கீழே இறக்கினார்கள். மெல்ல பெட்டியை திறந்து காசுகளை எடுத்து பார்த்தார்கள். அதில் சாளுக்கிய வராக முத்திரை குத்தப்பட்டிருந்தது.

எங்கிருந்து பிடுங்கப்பட்டதோ அங்கேயே அது கொடுக்கப்பட்டிருப்பது தெரிந்தது.

*நுளம்பத்திலிருந்து இராஜ சிம்மன் என்ற சிற்றரசன் ஒரு சபையை அனுப்பி இருக்கிறார். அந்தணரும், வேளாளரும் கலந்த சபை வந்து வணங்கியது. சேலத்து ஏலக்காய்களும், கிராம்புகளும் பரிசு அளித்தனர். கிராம்பு இரண்டு எடுத்துக் கொண்டு ஒன்றை வீரமாதேவியிடம் கொடுத்துவிட்டு மற்றொன்றை தான் சாப்பிட்டார். ஒரு கைப்பிடி எடுத்து அதிகாரிச்சியை அழைத்து அந்தப்புரத்திற்கு அனுப்பு என்று சொன்னார். ஏலக்காயை நசுக்கி முகர்ந்து பார்த்தார். அதையும் வாயில் போட்டுக் கொண்டார்.

''என்ன வேண்டும் சொல்லுங்கள்.''

''ஒரு விண்ணகரம் எழுப்ப வேண்டும். சேர தேசம் வைணவ சம்பிரதாயத்தை அதிகம் பின்பற்றும் இடம். அதற்கருகே உள்ள நுளம்பத்தில் ஒரு சிறந்த விண்ணகரம் உங்களால் எழுப்பப்பட்ட வேண்டும். அதற்கு நிதி உதவி வேண்டும்.''

''இராஜசிம்மன் எத்தனையாவது இளவரசன்.''

''இரண்டாவது இளவரசர். இவருக்கு மூத்தவர் ஒருவர் இருக்கிறார். அவர் படைகளை கவனித்துக் கொள்கிறார். அரசருக்கு உதவியாக இருந்த இராஜசிம்மன் நிர்வாகம் கவனித்துக்

---

* நுளம்பம் பாடி: சேலம் சுற்றுப்புரம்

கொள்கிறார். ஒரு விண்ணகரத்திற்கு கற்றளியாக ஏற்படுத்த உதவி செய்ய வேண்டும் என்று கேட்கிறார்.

சிற்பிகளும், கட்டட வேலை செய்பவர்களும், பதுமை செய்கின்ற ஆச்சாரியர்களும் எங்களுக்குத் தேவை. நீங்கள் யாரையேனும் அனுப்புங்கள் என்று விண்ணப்பிக்கிறோம்.''

வேகமாக உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன. இராஜேந்திர சோழ விண்ணகரம் என்று அதற்கு பெயர் சூட்டுவதாய் அவர்கள் சத்தியம் செய்திருந்தார்கள்.

''அடுத்தது யார்.''

''செங்கல்பேட்டைக்கு அருகே தண்டலம் என்ற ஊர் இருக்கிறது. அங்கிருந்து அதிகாரிகள் நான்கு பேர் வந்திருக்கிறார்கள்.'' முன்னே வந்தார்கள். வணங்கினார்கள். அவர்களும் ஒரு குடுவை நிறைய விபூதி பிரசாதம் கொடுத்தார்கள். இராஜேந்திர சோழர் நெற்றி நிறைய இட்டுக் கொண்டார்.

''என்ன விசேஷம்.''

''உங்களுடைய நான்காவது ஆட்சி ஆண்டில் நீங்கள் இராஜேந்திர சோழீஸ்வரம் என்று கோவிலை எழுப்பச் சொன்னீர்கள். அந்த கோவிலை நாங்கள் மூவரும் எழுப்பினோம். ஊர் மக்கள் உதவி செய்தார்கள். இப்பொழுது இன்னும் கோவிலை செவ்வனே ஏற்படுத்த, சுற்றி சுவர் எழுப்பி மற்ற கோஷ்டங்கள் எழுப்ப உங்கள் உதவி வேண்டும்.''

''நிச்சயம் செய்கிறேன்.'' அவர் திரும்பி பார்த்து மூன்று கை பொன் நாணயங்களை மூவருக்கும் கொடுத்தார்.

''இந்த மூன்றும் உங்களுக்கு. கோவிலுக்குண்டான பணிகளை செய்ய இதோ.'' ஒரு கூடை கொண்டுவரப்பட்டது. அந்த கூடையில் கலிங்கத்தில் கொள்ளையடிக்கப்பட பொற்காசுகள் தரப்பட்டன.

''இவர்கள் யார்''

''செங்குன்றம் என்ற ஊரிலிருந்து வருகிறார்கள். மயிலையிலிருந்து சற்று தொலைவே இருக்கிறது. அந்த செங்குன்றத்தில் உங்கள் தந்தையின் நினைவாக ஒரு சிவன் கோவில் கட்டப்பட்டுள்ளது. அந்த கோவிலுக்கு நிதி உதவி கேட்டு

வந்திருக்கிறார்கள். அந்த கோவிலுக்கும் பெயர் ஜெயம் கொண்ட சோழீஸ்வரம்.''

''அடாடா. என் தந்தையின் நினைவாக என்று சொல்லி விட்டு என் ஊர் பெயரை வைத்திருக்கிறீர்களே. நன்றாக இருக் கிறது. இராஜராஜர் கோபித்துக் கொள்ளப் போகிறார். என்ன வேண்டும்.''

அவர்கள் விவரம் சொன்னார்கள். கோவிலை செம்மை படுத்தவும், திருவிழாக்கள் நடத்தவும் உதவி வேண்டும் என்றார் கள். வாரி வழங்கப்பட்டது. மிகப் பெரிய மகிழ்ச்சியோடு அவர்கள் திரும்பி போனார்கள்.

''இவர்கள் யார்.''

''பழையாறை நண்பர்கள்.''

''அடாடா. ஞாபகம் இருக்கிறது. இவர் எனக்கு மாமன் முறைதானே. வருக வருக. மாமா வருக.'' என்று அழைக்க ஒரு கிழவர் தள்ளாடி வந்து இராஜேந்திர சோழர் தாள் பணிந்தார். இராஜேந்திர சோழர் வயதில் சிறியவர் என்றாலும் அரசர் என்ப தால் அவர் மண்டியிட்டார்.

''என்ன விஷயம்.' பழையாறை எப்படி இருக்கிறது.''

''மிகச் சிறப்பாக இருக்கிறது. செல்வத்தில் திளைக்கிறது. இளைஞர்களும், யுவதிகளும் ஆட்டம் போட்டுக் கொண்டிருக் கிறார்கள்.''

''அப்படி செய்ய வேண்டும் என்பது தானே என் விருப்பம்.''

''ஆனால் கொஞ்சம் கோவில்களுக்கு வருவதில்லை. அது வருத்தமாக இருக்கிறது. வயதானவர்கள்தான் வருகிறார்கள்.''

''அப்படித்தான் இருக்கும். வயதானவர்களாவது வருகிறார் களல்லவா.''

''அதுவும் குறைவாகத்தான் இருக்கிறது.''

''எந்த கோவில்''

''உங்கள் தாயின் நினைவாக, இராஜராஜரின் அனுக்கி பஞ்சவன் மாதேவியின் நினைவாக ஒரு பள்ளிப்படை கோவில் நிறுவினீர்கள் அல்லவா.''

''ஆமாம். மிகச் சிறப்பான வேலை ஆயிற்றே. பழுவேட்டரையர்கள் பெரிதாக பரிசு அளித்தார்களே. அந்த நந்தியும், துவார பாலகர்களும் பழுவேட்டரையர்கள் கொடுத்தது ஆயிற்றே. என்ன அதற்கு.''

''கோவிலில் ஆட்கள் குறைவாக வருகிறார்கள்.''

''எதனால்''

''பள்ளிப்படை என்று பயப்படுகிறார்கள்.''

''ஏன்''

''கொஞ்சம் நடமாட்டம் இருக்கிறது.''

''என்ன நடமாட்டம்.''

''சொல்ல தயக்கமாக இருக்கிறது. பஞ்சவன் மாதேவி குடியிருக்கிறாரோ என்று தோன்றுகிறது.''

''அப்படியா. அப்படியா.''

''ஆமாம். இரவு நடந்து போகும் சப்தமும், தண்டைஒலி, சிரிப்பு ஒலி கேட்கிறது. இராஜராஜரும் இருக்கிறாரோ என்று தோன்றுகிறது. கோவில் கதவு திறந்து காலையில் உள்ளே நுழையும்போது பலபேர் எங்களை இடித்துக்கொண்டு வெளியே போகிறார்கள்.''

''என்னய்யா கதை சொல்கிறீர்கள்.''

''உண்மையிலேயே அப்படி இருக்கிறது.''

''சரி. நான் என்ன செய்ய வேண்டும்.''

''அதனால் ஆட்கள் வர பயப்படுகிறார்கள்.''

''புரிகிறது. என்ன செய்ய வேண்டும் என்று சொல்லுங்கள்.''

''இங்கே திருவிழாக்கள் நடந்தால் ஆட்கள் வருவார்கள். இந்த கோவிலை ஒட்டி திருவிழாக்கள் நடத்தபட வேண்டும். எப்பொழுதும் தீபங்கள் எரிய வேண்டும். அந்த தீபங்கள் எரிவது குறைவாகவும், திருவிழாக்கள் நடை பெறாமல் இருப்பதால் ஆட்கள் வருவது குறைவாக இருக்கிறது என்று தோன்றுகிறது. ஆட்கள் வருவதற்கு...''

''புரிகிறது'' அவர் திரும்பி ஓலை நாயகத்தை பார்க்க, எழுந்து நின்று அவர் இரகசியமாக பேசினார். ஒரு கணக்கு

சொன்னார். அந்த கணக்கை விட அரைமடங்கு அதிகம் அவர்களுக்கு தரப்பட்டது.

''வீரமாதேவி, நாம் பழையாறை போய் அந்த பள்ளிப் படையை பார்க்கலாமா.''

''வேண்டாம்.''

''ஏன்''

''அது லகுலீச பண்டிதரிடம் இருக்கிறது. லகுலீசப் பண்டிதர் இவர்களை அனுப்பியிருக்கிறார், ஆனால் உங்களை வரச் சொல்லவில்லை. லகுலீசப் பண்டிதர் அம்மாதிரியான சூட்சம விஷயங்களை நிறுவுவதில் தேர்ந்தவர். அவசியம் இருப்பின் உங்களை வரச்சொல்லி இருப்பார். இவர்களை அனுப்பி இருப்பதின் மூலம் திருவிழாக்கள் நடக்க வேண்டும் என்பதே அவரின் விருப்பமாக இருக்கிறது.''

''நல்லது. நன்கு திருவிழாக்கள் நடைபெறட்டும். அங்கு உள்ள தளபதிகளுக்கு என் உத்தரவைச் சொல்.'' ஓலைநாயகம் குறித்துக் கொண்டார்.

பட்ட மகிஷியார் தன் தோழிகளுடன் உள்ளே வந்தார். முக்கோ கிழானடிகள் அருகே வர, அரசர் அவர் கைபிடித்து அருகே அமர்ந்து கொண்டார்.

''என்ன விஷயம். அம்மையார் எதற்கு அரசவை வந்திருக்கிறீர்கள்.'' எகத்தாளமாகக் கேட்டார்.

''திருவையாறு கோவில் திருப்பணி முடிந்துவிட்டது, திருவையாறு கோவில் தென் கயிலாயம். நுளம்ப தூண்களை கொண்டு எழுப்பியிருக்கிறேன். அந்த திருப்பணி. முடிந்து கும்பாபிஷேகம் நடக்க வேண்டும். நீங்கள் வர வேண்டும்.''

''இல்லை. நான் தெற்கே பயணப்படுவதாக இல்லை. வடக்கே பயணப்பட இருக்கிறேன். உனக்கு என்ன வேண்டுமோ கேள். அத்தனையும் செய்து தருகிறேன். மிகச் சிறப்பாக கும்பாபிஷேகம் நடைபெறட்டும். கும்பாபிஷேக நேரத்தில் என்னை நினைத்துக் கொள். நீ அங்கு இரு. அது உன்னுடைய இடம். உன்னுடைய ஊர். அதை சிறப்பாக கவனித்தபடி இரு. வட கயிலாயம் தென் கயிலாயம், நடுவே உள்ள ஐயாரப்பன்

கோவில் சகலத்தையும் நிர்வாகம் செய்.'' என்று சொல்ல, அவள் குனிந்து வணங்கினாள்.

அவளிடம் ஒரு ஓலை தரப்பட்டது. அந்த ஓலையிலுள்ள தங்க காசுகளின் எண்ணிக்கை அவளை வியப்படைய வைத்தது. ஓலையை கண்களில் ஒற்றிக் கொண்டாள்.

''சந்தோஷமாக போய் வா,'' அவளை தழுவி கன்னத்தில் முத்தமிட்டார். பட்டமகிஷி இறங்கி வெளியே நடந்தாள்.

''இவர் யார்.''

''வைதும்ப இளவரசர்.''

''ஆமாம். ஆமாம், போரிலும் கூட இருந்தாரல்லவா.''

''ஆமாம்.''

''யாரிடம் இருந்தார், அருண்மொழியிடம் அல்லவா.''

''ஆமாம்.''

''நீங்களும் கங்கையை கடந்தீர்களா.''

''குலுத்த நாடுவரை போய் வந்தேன். பிரம்ம புத்ராவின் அழகையும் ரசித்தேன்.''

''மிக்க சந்தோஷம், என்ன வேண்டும்,''

''என்னுடைய ஊர் திருவல்லம். அந்த ஊரில் வில்வ வனேஸ்வரர் என்ற கோவில் இருக்கிறது. அந்த ஊரின் தென் பகுதியில் திருவையை ஈஸ்வரம் என்ற கோவில் நான் கட்டி யிருக்கிறேன். வல்லவரையர் வந்திய தேவரின் ஊர் அது. வந்தியதேவர் என்குலம். வைதும்ப வம்சம். உங்களுக்கு மரி யாதை செய்யும்விதமாக அந்த கோவில் நான் ஏற்படுத்தியிருக் கிறேன். மக்களும் பங்கு பெற்று இருக்கிறார்கள். தொடர்ந்து சிறப்பாக வழிபாடு நடத்த உங்கள் உதவி வேண்டும். நீங்களும் அதில் பங்குபெற வேண்டும் என்பது திருவல்ல மக்களின் ஆசை.''

''நிச்சயம் செய்வோம். வந்தியதேவர் அங்கு வந்திருக் கிறாரா.''

''பலமுறை வந்திருக்கிறார். மிகச் சிறப்பாக இருக்கிறது என்று பாராட்டியிருக்கிறார். திரு வல்லம் நீங்களும் வர வேண்டும்.''

''நிச்சயம் வருகிறேன்.'' அவன் பெரும் பொருள் வாங்கிக் கொண்டு நகர்ந்தான்.

''இதை வந்தியத்தேவர் வந்து சொல்லக்கூடாதா.'' வீரமா தேவியை நோக்கி குனிந்து கேட்டார்.

''வரமாட்டார்.''

''ஏன் வீரமாதேவி''

''தொண்டு கிழம். வயதாகி விட்டது. இனி மேலும் கையேந்திக் கொண்டு வரவேண்டுமா. என்ன ஆசை உங்க ளுக்கு.''

''அடேயப்பா. வயதானவர்கள் கையேந்தக் கூடாதா.''

''தேவையில்லை. அவர் ஆள் அனுப்பினாலே கைஏந்திய தாகத்தான் அர்த்தம். வயதானவர்களை மதிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும்.''

''எனக்கு வயதானால் இப்படி மதிப்பார்கள் என்று நினைக் கிறாயா.''

''இந்த கேள்விக்கெல்லாம் நான் பதில் சொல்ல முடி யாது.'' அவள் முகத்தை திருப்பிக் கொண்டாள்.

''நீங்கள் யார்.''

''நாங்கள் திருமுனைப்பாடி நாட்டிலிருந்து வருகிறோம். அங்கு வைத்தியநாத ஸ்வாமி கோவில் இருக்கிறது. அவர் உடல் நலம் தருவதில் வல்லவர். உடல்நோய் நீக்குவதில் உதவி செய்பவர். மக்கள் மிக நம்பிக்கையோடு அவரை வந்து தொழு கிறார்கள். எல்லாவிதமான சௌகரியங்களும் இருக்கின்றன. ஆனால் கோவிலுக்கு இரண்டாவது கும்பாபிஷேகம் நடந்து புதுப்பிக்கப்பட வேண்டிய அவசியத்தில் இருக்கிறது. மேற்கூரை கள் பெயர்ந்து விழுகின்றன. எனவே, எங்களுக்கு சிற்பிகளும், செப்பனிட கொஞ்சம் உதவியும் தேவைப்படுகிறது.''

''கொஞ்சம் என்ன, நிறைய தருகிறேன். என்னுடைய சார்பாக எடுத்துக் கொள்ளுங்கள். எனக்கு உடல்நலம் வேண் டும் என்று அவரிடம் வேண்டிக் கொள்ளுங்கள். என்னுடைய நட்சத்திரம்.''

''தெரியுமய்யா. திருவாதிரை நாள் மட்டுமல்ல. தினம் தினம் உங்களுக்காக ஒரு அஷ்டோத்ரம் சொல்லப்படுகிறது. இது சத்தியம்.''

''அடே, பெரிய வார்த்தை வேண்டாமடா.'' அவர் அவனை விலக்கினார்,

காமரசவல்லி, காட்டுகோடீஸ்வரர் கோவிலிலிருந்து பொது மக்கள் வந்திருந்தார்கள். வாரி கொடுத்தார்.

திருவாலங்காடு சிவாச்சாரியர்கள் வந்திருந்தார்கள். மறுபடியும் திருவாலங்காடு கதையை கேட்டு கூடுதலாகக் கொடுத்தார்.

வேம்பத்தூர் பொது மக்களும், அந்தணர்களும் ஒருசேர வர அவர்கள் ஒற்றுமையை பார்த்து பாராட்டினார். திருப்பாம்புரம் போர் வீரர்கள் வந்திருந்தார்கள். அவர்கள் சிவாலயம் என்று சொன்னவுடன் தன்னுடைய அரசியர்களையும் காசு கொடுக்கச் சொன்னார். சர்வ சிவ பண்டிதர் வந்திருக்கிறார். என்று கேள்விப்பட்டு எழுந்து நின்றார். படி இறங்கினார். அவரை எதிர்கொள்ளக் காத்திருந்தார்.

சர்வசிவ பண்டிதருக்கு தள்ளாமை அதிகமிருந்தது தெரிந்தது. மெல்ல தடி ஊன்றி நடுங்கியவாறே வருவதைப் பார்த்து முன்னேறி கைலாகுக் கொடுத்தார். அரசருடைய கையை பிடித்துக் கொண்டு சிங்காசன படியில் ஏற சர்வசிவ பண்டிதர் முயற்சித்தார். முடியவில்லை.

என் குருநாதர் என்னை மன்னிக்க வேண்டும் என்று சொல்லி அவரை அள்ளி வாரிக் கொண்டார். சிங்காசனத்தில் ஏறி அவரை அடுத்த ஆசனத்தில் அமர்த்தினார்.

''ஹா. அள்ளி தூக்கிவிட்டாய். ஆனால் உனக்கும் மூச்சு இரைக்கிறது' என்று வேடிக்கையாகச் சொல்ல, சபை மெல்லியதாகச் சிரித்தது.

''ஆமாம். பழைய நினைப்பில் தூக்கி விட்டேன், நீங்கள் கனம் குறைவாக இருந்தாலும் என் தோளில் வலு குறைவாக இருக்கிறது.''

''அடேய், உனக்கு வலிவு குறைவு என்பதே வராது. தீர்காயுஷ்மான் பவ.'' ஆசிர்வதித்தார்.

''என்ன வேண்டும். சொல்லுங்கள் குரு,''

''கூழாம்பந்தலில் உன் நினைவாக உன் பெயரில் ஒரு சிவாலயம் எழுப்பியிருக்கிறேன். சிறியதுதான். ஆனால் அற்புத மான இடம், வேளாளர்களும், அந்தணர்களும் ஒன்றாக வசிக் கின்ற இடம்.''

''உங்களுடைய இடம் எசாளம் தெரியும். கூழாம்பந்தல் எங்கே.''

''இது ஜெயங்கொண்ட சோழபுரம் மண்டலத்து காளியூர் கோட்டத்து திருவல நாட்டு ஆதுரம்பாக்கம் என்ற கிராமத்தில் இருக்கிறது. அந்த ஆதுரம்பாக்கத்தில் ஒரு தெரு அந்தணர் தெரு. ஒரு தெரு வேளாளர் தெரு. அவர்கள் கோவிலை நன்கு நிர்வகிக்கிறார்கள். அந்த இடம் முழுவதும் செழுமையாக இருக் கிறது. வானம் பார்த்த பூமிதான். ஏரிப்பாசனம்தான், ஆனால் அதுவே இரண்டு போகம் கிடைக்கிறது, கிணறுகள் மழை நாட்களில் நிரம்பிவிடுகின்றன. ஏற்றம் இறைத்து ஓட்டுகிறார் கள். உறுதியான ஏற்றங்கள் செய்திருக்கிறார்கள். பொதுமக்கள் கூட போட்டி போட்டுக் கொண்டு ஏற்றம் இரைக்கிறார்கள். காலைமாலை இரு வேளையிலும் நீர் இறைப்பதால் பயிர்கள் செழுமையாக வளர்கின்றன. ஊடு பயிரும் போட்டிருக்கிறார் கள். கரும்பு தோட்டம், வாழை தோட்டம், பருப்பு பயிர்கள் என்று விதம்விதமாக வளர்கின்றன. ஊர் செழிப்பாக இருக்கிறது.

அந்த சிவன் கோவிலுக்கு நான் கங்கை கொண்ட சோழீஸ்வரம் என்று பெயர் மாற்றி விட்டேன். உன்னுடைய நினைவாக கட்டியிருக்கிறேன். கோவிலுக்கு சுற்றுச்சுவர் அமைக்க வேண்டும். ஊருக்குள் திருவிழாக்கள் நடத்தி மரியாதைகள் செய்ய வேண்டும். உணவு போட வேண்டும். உன்னுடைய தயவை நாடி வந்திருக்கிறேன்.''

''நான் தரமாட்டேன்.'' அடிக்குரலில் சொல்ல, சர்வசிவ பண்டிதர் திகைத்தார். அவர் முகத்தை பார்த்து சிரித்தார்.

''எடுத்துக்கொள் என்கிறாயா. நான் பெரும் பேராசைக் காரன்.

''உங்கள் பேராசையெல்லாம் இங்கு பலிக்காது. கொஞ்சமா கொண்டு வந்து இருக்கிறேன். கதவை திறந்து பார்த்தால் மயக்க மடைந்து விடுவீர்கள். எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு

எடுத்துக் கொள்ளுங்கள். மறுபடியும் அவ்வளவு தொலைவு நடந்து வராமல் இருமுறை என்று வாங்கிக் கொள்ளுங்கள்.

நான் மட்டுமே கொடுத்ததாக இருக்கக் கூடாது. இரு முறைக்கு அப்பால் மூன்றாவது முறை நீங்கள் இராஜாதி ராஜனை நோக்கி வரவேண்டும். அல்லது உங்களது சீடர்கள் வரவேண்டும். கங்கை கொண்ட சோழீஸ்வரர் அவர்களுக்கு என் நமஸ்காரம்." கை கூப்பினார். பெரும் பொருள் கை மாறிற்று.

பின்னாலேயே இராஜேந்திர சோழர் ஓலை அனுப்பினார்.

அந்த ஊர் எல்லா நிலங்களும் வேளான் வகை நிலங் களாக மாற்றி, அந்த நிலங்களிலிருந்து அரசுக்கு தர வேண்டிய வருவாய் அத்தனையும் நீக்கப்பட்டு அந்த வருவாய் கூழாம் பந்தல் சோழீஸ்வரருக்கு கொடுக்கப்பட வேண்டும். அதை நிர்வகிக்கின்ற சர்வசிவ பண்டிதரின் மடத்திற்கு கணக்கு காட்ட வேண்டும் என்று எழுதப் பட்டிருந்தது. அதை அந்த ஊர் தளபதிக்கும், நாயகத்திற்கும், சர்வசிவ பண்டிதருக்கும் தனித்தனியாக ஓலை அனுப்பி முத்திரையிடப்பட்டிருந்தது.

சர்வசிவ பண்டிதர் கிளம்புவதற்கு முன்பு அந்த ஓலை அவருக்கு தரப்பட்டது. சர்வசிவ பண்டிதர் கண்களில் நீர் வழிய அந்த ஓலையை சிரசில் வைத்துக் கொண்டார்.

இனி யாரிடமும் கை ஏந்த அவசியம் இல்லை. கூழாம் பந்தல் கங்கை கொண்ட சோழீஸ்வரர் சிறப்பாக இருப்பார். நிறைவாக வாழ்வார். இன்னும் பல தலைமுறைகளுக்கு இந்த கோவில் சிறப்பாக இருக்கும் என்று தோன்றியது.

"இன்னும் யாரேனும் இருக்கிறார்களா."

"இருக்கிறார்களய்யா."

"யார்"

"சாக்கை மாராயன் விக்கிரம சோழன் வந்திருக்கிறார். தொடர்ந்து சாக்கை கூத்து பல ஊர்களில் நடைபெறுகின்றன. சோழ தேசத்தின் எல்லா பகுதிகளிலும் அவனுக்கு சீடர்கள் இருந்து சாக்கை கூத்து ஆடிக் கொண்டிருக்கிறார்கள். சாக்கை மாராயன் இன்னும் மாணவர்கள் சேர்க்க பொருள் கேட்கிறான்."

"கொடு. வேண்டுவது கொடு."

''காசு மட்டுமல்ல. குடந்தைக்கு அருகில் நிலம் கேட்கிறான்.''

''காசு கொடுத்து நிலம் வாங்கி மாராயன் பெயரில் சாசனம் செய். குடந்தையில் சாக்கை கூத்து தொடர்ந்து நடைபெற வேண்டும் என்று சொல்.'' அவர் கட்டளையிட்டார்.

சாசனங்கள் எழுதப்பட்டன. மாராயன் விக்கிரமசோழன் கீழே விழுந்தவன் எழுந்திருக்கவேயில்லை. அழுத கண்ணாக இருந்தவனை தூக்கி நிறுத்தி அப்புறப்படுத்தினார்கள்.

''என் பெயர் நாராயண பட்டாரீஸ்வர்ணன்.''

''வருக, என்ன வேண்டும் பட்டரே,''

''நான் வடமொழியும், தமிழ் மொழியும் படித்தவன்,''

''நல்லது. முகம் சொல்கிறது,''

''நான் காலையில் வேத விஷயம் தவிர, இராஜராஜ விஜயம் என்ற நூலை தொடர்ந்து படித்துக் கொண்டு வருகிறேன். வேதம் சொல்லும்போது சிலர் வருகிறார்கள். ஆனால் நல்ல உச்சி வெய்யிலில் ஆலமரத்தடியில், அல்லது மண்டபத்தில் இராஜராஜ விஜயம் செய்யும்போது ஊர் மக்கள் கூடி விடுகிறார்கள். தொடர்ந்து படிக்க நீங்கள் உதவ வேண்டும்.''

''என்ன வேண்டுமோ கேட்டு வாங்கிக் கொள். விடாது படி, பல இடங்களில் படிப்பதற்கு ஏற்பாடு செய். என் தந்தையின் புகழ் எங்கும் பரவ வேண்டும். எங்கும் அவரைப் பற்றி பேச வேண்டும்.''

''நான் உங்களை பற்றியும் பேசுகிறேன் மன்னரே.''

''அவசியமில்லை பட்டரே. இராஜராஜரை பற்றி மட்டும் பேசுங்கள். போதும், நீங்கள் போய் வரலாம்.''

''மன்னரே,''

''என்ன''

''இன்று இளவரசு பட்டம் கட்டிய நாள்,''

''யாருக்கு''

''என்ன கேள்வி இது, இராஜாதிராஜனுக்கு உங்களுடைய எட்டாம் ஆட்சி ஆண்டில் இளவரசு பட்டம் கட்டிய நாள் இது. அந்த நாளை கொண்டாட வேண்டாமா.''

''இன்றா நாளையா.''

''அந்த சந்தேகம் இருக்கிறது. திதி இரவுதான் ஆரம்பிக் கிறது.''

''அப்படியென்றால் நாளைதான். நாளை இதை கொண் டாடுவோம், இராஜாதிராஜனை மற்ற குழந்தைகளை அழைத்து வா.'' அவர் அரியாசனத்திலிருந்து எழுந்தார். தூக்கம் வந்தது. உணவு எடுத்துக் கொண்டார். மெல்ல படுக்கையில் சாய்ந் தார். உறங்கிப் போனார். ஏதோ ஒரு இனம்புரியாத நிம்மதி அவ ருக்குள் இருந்தது. ஊரை விட்டு நகரப்போகிறோம் என்ற சந்தோஷம் இருந்தது.

இராஜாதிராஜன், இளவல் இராஜேந்திரன், வீர இராஜேந் திரன் மூன்று பேரும் அவர் கட்டிலுக்கு எதிரே அமர்ந்திருந் தார்கள்.

அவர் எழுந்து உட்கார்ந்ததும், எழுந்து நின்றார்கள். கால் தொட்டு கும்பிட்டார்கள். அரசியர்கள் அனைவரும் பின்னால் வந்து நிற்க, அவர்களையும் கைகூப்பி வணங்கினார்கள்.

இராஜாதிராஜன் வீரமாதேவியை நோக்கி தலைகுனிந்து வணங்கினான். வீரமாதேவி கட்டிலை சுற்றி வந்து அரசருக்கு அருகே உட்கார்ந்து கொண்டாள். மற்ற அரசியர்களும் நெருங்கி வர, வலப்பக்கம் பட்ட மகிஷி, கட்டிலின் பின்பக்கம் பரவை யும், பஞ்சவன் மாதேவியும் அமர்ந்து கொண்டார்கள். அந்த கட்டில் முழுவதும் இந்திரனுடைய சபை போல, வர்ண புடவை களால் நிறைந்த அரசியர்களால் குழுமி இருந்தது. பார்ப்பதற்கே சந்தோஷமாக இருந்தது.

அதிகாரிச்சிகளும், சேடிகளும், ஒரே கட்டிலில் அத்தனை அரசிகளும் உட்கார்ந்திருப்பதை ஓடி ஓடி வந்து பார்த்துவிட்டு வாய் பொத்தி பின்னடைந்தார்கள். வீரமாதேவி வர வேண்டாம் என்று சைகை செய்தாள். அவர்கள் வெளியே நகர்ந்தார்கள்.

''உங்கள் மூவருக்கும் இந்த இராஜேந்திர சோழன் ஒரு விண்ணப்பம் செய்வதற்காக இங்கு அழைத்திருக்கிறான். என் அழைப்பை ஏற்று நீங்கள் வந்தது மிகுந்த சந்தோஷம்.



சோழர் கால உலோகப் பாத்திரங்கள். வலது மேலே இரு நாழி.
எண்ணை அளக்க.

வழக்கத்திற்கு மாறாக அமைதியாக பேசுகிறானே, பெரிதாக அடிபோடுகிறானே என்று நினைக்கிறீர்கள். நான் கங்கை கொண்ட சோழபுரத்தை விட்டு கிளம்புகிறேன் என்று ஏற்கனவே தெரிவித்து விட்டேன். சர்வ சிவ பண்டிதரின் அனுமதிக்காக காத்திருந்தேன். குருநாதர் சரி என்று சொல்லி விட்டார். நாளும் குறித்து விட்டார். அடுத்த வாரம் நகரப் போகி றேன். அதற்கு முன்பு உங்களிடம் பேசப் போகிறேன்.

உங்களுக்கு புரிகிறதா என்று தெரியவில்லை. ஒரு இக்கட் டான நிலையில் சோழதேசம் இருக்கிறது. ஆண் வாரிசு வேண் டும் என்றுதான் அத்தனை பேரும் ஆசைப்படுவார்கள். இறை வன் சோதனை செய்கிறான். உங்கள் மூவருக்குமே ஆண்வாரிசு இல்லை, இது வருத்தத்திற்குரிய விஷயம் என்றாலும் நான் மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்கிறேன்.

என் குழந்தைகளே மிகப் பெரிய துன்பங்களை ஏற்று பல வீரர்களை பலி கொடுத்து, பல வேதனைகளை சகித்துக் கொண்டு கங்கை வரை போய் சோழ தேசத்தின் பெருமையை நாட்டியிருக்கிறேன். என் தகப்பன் எதற்கு ஆசைப்பட்டானோ அதை நான் செய்திருக்கிறேன். என் தகப்பன் சொன்னது போல சாளுக்கிய தேசத்தை அடித்து நொறுக்கியிருக்கிறேன். முட மாக்கியிருக்கிறேன். இவையெல்லாம் நான் என் தகப்பனுக் காக செய்தது. கீழை சாளுக்கியத்திற்கு இனி தொந்தரவு வரவே கூடாது என்பதற்காக மணவினை ஏற்படுத்தியது இராஜராஜ சோழன். அந்த மணவினையை நான் தொடர்ந்து செய்திருக் கிறேன். இப்பொழுது அம்மங்கா கீழை சாளுக்கியத்தில். இது அரசியல், இது ஒரு பாதுகாப்பு. தொண்டை நாடு கீழை சாளுக் கியத்தால் பாதுகாக்கப்படும். தொண்டைநாடு தாண்டி நடுநாடு கவனமாக இருக்கும். நடு நாடு தாண்டி திருமுனைப்பாடி நாடும், சோழ தேசம் பாதுகாப்பாக இருக்கும். மேலை சாளுக் கியம் துள்ளி எழாது.

தெற்கே சுந்தர சோழ பாண்டியன் அற்புதமாக ஆட்சி செய் கிறான். ஆனால் அவனுக்கும் பெண் குழந்தைகள் தான் இருக் கின்றன.

இளவரசர்களே, சோழ தேசத்தின்குலக் கொழுந்துகளே, நீங்கள் மூவரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும். உங்களுக்குள்

எந்த பிணக்கும் ஏற்படக்கூடாது, உங்களுக்குள் பிணக்கு ஏற்பட்டு சாளுக்கியமோ, பாண்டியமோ, சேர தேசமோ, இலங்கையோ துள்ளி எழுந்தால் அது எனக்கு அவமானம். நான் வெற்றி பெற்றதெல்லாம் வீண் என்று ஆகும். இராஜேந்திர சோழனுடைய எல்லா முயற்சிகளும் தோல்வி பெற்றது போல் ஆகும். என்னுடைய முயற்சிகள் வெற்றி பெற வேண்டுமெனில் தொடர்ந்து சோழதேசம் தலைமை வகிக்க வேண்டும். தென்பகுதி எல்லாம் புலிக்கொடியே பறக்க வேண்டும். பறக்கும்படி நீங்கள் காக்க வேண்டும்.

மூன்று குழந்தைகள் எனக்கு இருக்கிறார்கள் என்பதும் அதுவும் சோழ தேசத்திலியே இருக்கிறார்கள் என்பதும், என்னுடைய இன்னொரு மகனான சுந்தரசோழன் தெற்கே பாதுகாக்கிறான் என்பதும் மிக கம்பீரமான விஷயம். என்னை குதூகலமடையச் செய்யும் விஷயம். ஒருவருக்கு மரணம் ஏற்படும் பொழுது தனக்குப் பின்னே மிக பலமான தலைமுறை இருக்கிறது என்று தெரிந்தால் அவன் மரணம் நிம்மதியாக இருக்கும். நான் எங்கு மரணமடையினும் நிம்மதியாக மரணமடைவேன்.

அய்யோ இதை செய்யாமல் போகிறேனே, அதை முடிக்காமல் போகிறேனே என்ற வேதனை எனக்கு இல்லை. வராது. அது இறைவன் சித்தம். அவன் கருணை.

குழந்தைகளே, இராஜாதிராஜனுடைய கூர்ந்த அறிவும், திறமையும் எனக்கு மிகுந்த நம்பிக்கையை தருகின்றன. இளவல் இராஜேந்திரன் நகர்ந்து வீர இராஜேந்திரன் இராஜாதிராஜனுக்கு துணையாக இருப்பதும், இளவல் இராஜேந்திரன் நிர்வாகத்தை கவனித்துக் கொள்வதும் மிகச் செழிப்பான, சிறப்பான விஷயம். சோழ தேசம் நல்ல நிர்வாகத்தாலும், பலமான படையாலும் வளர்ச்சி அடையும்.

ஆனால் எதன் பொருட்டும் உங்களுக்குள் ஒற்றுமை குறையக் கூடாது என்று மன்றாடி கேட்டுக் கொள்கிறேன். நம்முடைய குலம் அழிய வேண்டும் என்றால் அது நம்மால்தான் அழியும். நாம் நம்மையே அழித்துக் கொள்ளக் கூடாது. எனவே, என் வலக்கையை நீட்டுகிறேன், அதில் உங்கள் கையை வைத்து, எங்களுக்குள் போட்டி, பொறாமை வராது. சோழ தேசத்தை காப்போம் என்ற நீங்கள் உறுதி அளிக்க வேண்டும்.''

அவர் வலக்கையை நீட்ட, இராஜாதிராஜன் அதை தொட, அதன்மீது இளவல் இராஜேந்திரன் கை வைக்க, அதன்மீது வீர இராஜேந்திரன் வைத்தான்.

''அடியே, அடியே, யாரையாவது கூப்பிட்டு இதை ஓவியம் வரைய வேண்டுமடி'' என்று வீரமாதேவி பரபரத்தாள். எங்கு ஓடுவது. எல்லோரும் அமைதியாக இருந்தார்கள்.

இராஜேந்திர சோழர் எழுந்தார். மெல்ல தடுமாறினார். அவர்கள் பிடித்துக் கொண்டார்கள். ஒவ்வொருவராக தழுவிக் கொண்டார், கன்னத்தில் முத்தமிட்டார்.

''கங்கை கொண்ட சோழபுரம் விட்டு சண்டையிட்டு சென்றுவிடுவேனோ என்ற பயம் இருந்தது, இப்போது இல்லை, நான் இந்த இடம் விட்டு நகர்வதுதான் உங்களுக்கு நல்லது, முழு வீச்சில் உங்களுடைய அரசாட்சி நடத்தப்பட வேண்டும். எப்போதாவது அவசியம் ஏற்பட்டால் காஞ்சிபுரம் வாருங்கள். இரண்டு, மூன்று நாட்கள் தங்கி உல்லாசமாக இருந்துவிட்டு செல்லுங்கள்.

எனக்குப் பாணர்களை பிடித்திருக்கிறது. பாணர்களுடைய ஆட்டமும், பேச்சும் சந்தோஷப்படுத்துகிறது. எனவே நான் பண்டிதர்களுக்கு நடுவேயும், பாணர்களுக்கு நடுவேயும் தான் இருப்பேன். அரசியல் விஷயங்களை தகவல்களாக கேட்டுக் கொள்வேன். அபிப்ராயம் சொல்வதற்குக் கூட எனக்கு மனம் வராது. என்னைப் பற்றி நெல்முனையளவும் கவலைப் படாது, இராஜேந்திரன் என்ன நினைத்துக் கொள்வானோ என்று அச்சப்படாமல் முழு வீச்சில் உங்கள் சிந்தனையை நீங்கள் செலுத்த வேண்டும். சோழ தேசத்தை அமைதியாக காப்பாற்ற வேண்டும். வாழ்க சோழம். வாழ்க இராஜராஜர். வாழ்க கங்கை கொண்ட சோழீஸ்வரம், வாழ்க சோழ கங்கம். வாழ்க சோழ தேசம், வாழ்க தமிழ், வாழ்க திராவிடம். வாழ்க ஆரியம். வாழ்க மனித குலம்,'' அவர் கைகூப்பினார். பிரார்த்தனை போல அவர் சொன்னதை அவர்கள் செவிமடுத்து கைகூப்பினார்கள்.

தலைகுனிந்து விடைபெற்றார்கள்.

வீரமாதேவியின் காதில் இராஜேந்திரர் மெல்ல முணு முணுத்தார். வீரமாதேவி 'அய்யோ' என்று அலுத்துக் கொண்டாள்.

இராஜேந்திர சோழர் எழுந்து கூடத்திற்கு நடுவே போக, அவர் போவதையே கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

பரவை துள்ளி எழுந்து வீரமாதேவியிடம் ஓடினாள்.

"என்ன சொன்னார் அக்கா,"

"அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்று உளவு அறிய வேண்டுமாம். இந்த புத்தி எப்படி போகும். இவர் எப்படி இவர்களை சும்மாவிடுவார். ஹா வெறும் பேச்சுதான். அரசராகவே இருப்பதற்கு பிறந்திருக்கிறார். அரசர்ராகத்தான் கடைசிவரை இருப்பார்" என்று சொன்னாள்.

"ஏன் அதில் என்ன தவறு."

"எதற்கு உளவு அறிவது. அவனிடம் கொடுத்தாகி விட்டது. அவன் பார்த்துக் கொள்வான்."

"அவர்கள் என்ன பேசிக் கொள்கிறார்கள் என்று தெரிய வேண்டாமா."

"எதற்கு தெரிய வேண்டும். இது தான் தவறு, இவர் செய்கிற மிகப் பெரிய தவறு. இவரால் சும்மா இருக்க முடியாது. அப்படிப்பட்ட புத்தி,"

"நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்."

"ஏற்பாடு செய்யப் போகிறேன்." பரவையை பிரிந்து வீரமாதேவி ஒற்றர்களை தேடிப் போனாள். ஒற்றர்களோடு வீரமாதேவி பேசியது அந்த ஒற்றர்கள் வரும் முன்பு இராஜாதிராஜனுக்கு அவன் ஒற்றர்களால் சொல்லப்பட்டு விட்டது.

ஒரு மன்னனின் சமூகம், வாழ்க்கை, குடும்ப சூழல் இப்படித்தான் இருக்கும். இதிலிருந்து ஒருகாலும் மன்னர்கள் மாறிவிட முடியாது. இது அவர்கள் இரத்தத்தில் ஊறிய விஷயம்.

இராஜேந்திர சோழர் நல்ல நாளில் கங்கை கொண்ட சோழபுரத்து பொது மக்களிடம் விடைபெற்று குதிரை ஏறினார். வாசல் கடந்தார். கோட்டை வாசலிலிருந்து கங்கை கொண்ட சோழபுரத்தை வணங்கினார். விமானத்தை விழுந்து கும்பிட்டார். எழுந்து நின்று மணல் தட்டி மறுபடியும் குதிரை ஏறி கோட்டை கதவு தாண்டினார். நேரே உடையார் குடி போனார். உடையார்குடியில் மூன்றுநாள் தங்கினார். பிறகு அங்கிருந்து

வடக்கு நோக்கி திரும்பினார். தாதாபுரத்தில் குந்தவை கோவிலுக்கு அழைத்தார்கள். குந்தவை கட்டிய இராஜராஜன் பெயரில் கட்டிய கோவிலை போய் பார்த்தார். விஷ்ணுவிற்கான கோவிலையும், சமணருக்கான கோவிலையும் தரிசித்தார். எசாளம் போய் இறங்கினார். அங்கு ஒரு மாதம் தங்கியிருந்தார். இடையறாது வேத கோஷம் கேட்டார். படைகளை ஊருக்குள் வராது வெளியே நிற்க வைத்தார். சாதாரண மனிதரைப் போல செருப்பு இல்லாது ஆற்று மணல் பரப்பிய பாதை மீது பஞ்சகச்ச வேட்டியும், மேல் துண்டும், குளித்து ஈரமான தலையுமாக அலைந்தார். விசிறுவதற்கு மாணாக்கர்கள் முன்வர, வேண்டாம் என்று சொல்லி, தன்னுடைய ஆட்களையே விசிறச் சொன்னார். வேத பாடசாலையின் ஓரத்தில் படுத்து தூங்கினார்.

சர்வசிவ பண்டிதரிடம் கடவுள் வழிபாடு ஏன் என்று கேட்டு அவர் விளக்கத்தை தெரிந்து கொண்டார். பிறகு ஒரு நல்ல நாள் பார்த்து எசாளம் எண்ணாயிரம் வழியே நகர்ந்தார். பிரம்மதேசத்திற்கு நன் கொடைகள் கொடுத்தார். அங்கிருந்து காஞ்சிபுரம் வந்தார்.

ஒருமுறை விருத்தகிரீஸ்வரர் கோவிலுக்கும் பெண்ணாடம் சிவன் கோவிலுக்கும் போய் வந்தார். காஞ்சிபுரத்திற்கு குடியேறுவதற்கு முன்பு சுற்றியுள்ள கிராமங்களை பார்வையிட்டார். எல்லா சிவன் கோவிலும் ஏறி இறங்கினார்.

காஞ்சிபுரத்தில் மிகப் பெரிய மாளிகையில் முதல் மாடியில் நடு கூடத்தில் பெரிய கட்டில் போட்டு ஆழ்ந்து தூங்கினார். நன்றாக சாப்பிட்டார். இரவு நெருங்கியதும் பாணர்களை கூப்பிட்டு பாடச் சொன்னார். பகலில் புலவர்களோடு பேசினார். பிற்பகலில் வேத பண்டிதர்களோடு அளாவளாவினார். மாலை நேரம் இரவு நெருங்குவதற்கு முன்பு பொது மக்களோடு உரையாடினார்.

அன்று ஒரு வீட்டு குழந்தையின் காது குத்திற்கு போய் பரிசளித்துவிட்டு வந்தார். எப்பொழுது வேண்டுமானாலும் வருவேன். எங்கு வேண்டுமானாலும் வருவேன் என்று எச்சரித்தார். காஞ்சிபுரம் அவர் வருகையால் பரபரப்பாயிற்று.

மயிலையிலிருந்தும், திருவல்லிக்கேணியிலிருந்தும், பூவிருந்தவல்லியிலிருந்தும், திருவொற்றியூரிலிருந்தும், கடல் மல்லையிலிருந்தும் ஜனங்கள் வந்து தரிசித்துவிட்டு போனார்கள்.

இராஜாதிராஜன் பல நல்ல குதிரைகளை பரிசாக தந்திருந் தான். அவைகளை தடவி பார்த்துவிட்டு படை தளபதிகளுக்கு கொடுத்து விட்டார்.

மேலை சாளுக்கியம் மறுபடியும் கிளர்ந்தது. இராஜாதி ராஜன் போனதும், வெற்றி பெற்றதும் அவருக்கு செய்தியாய் வந்து கொண்டிருந்தன. அவர் மௌனமாக கேட்டுக்கொண் டார். ''பாவம். என்னை விட தொந்தரவு அவனுக்கு'' என்று வருத்தப்பட்டார்.

பருவங்கள் மாறிக் கொண்டிருந்தன. வருடங்கள் உருண்டுக் கொண்டிருந்தன, அவருக்கு தள்ளாமை அதிகரித் தது. ஆள்பிடித்து தான் நடக்க வேண்டும், தடி ஊன்றித்தான் நகர வேண்டும். படிஏறுதல் இயலாது என்ற நிலை வந்தது. தன் படுக்கையை கீழ் தளத்திற்கு மாற்றினார். கொசுக்கள் உள்ளே வராது இருக்க மெல்லிய வெள்ளைத் துணிகளை சாளரங் களில் சிறிய ஆணி கொண்டு அடித்தார்கள். பெரிய விசிறி களை எப்பொழுதும் மாற்றி மாற்றி இயக்கினார்கள். மாலை நேரங்களில் தூபப் புகை போட்டு கொசுக்களின் கூட்டத்தை குறைத்தார்கள்.

கைலாச நாதர் கோவிலின் தனிச் சுற்றுக்கு போக வேண் டும் என்று ஆசைப்பட்டார். வீரமாதேவி, 'குனிந்து படுத்து திரும்பி எழுந்திருக்க முடியாது. எனவே போகக் கூடாது' என்று தடுத்துவிட்டாள். தொலைவிலிருந்து கைலாசநாதர் கோவிலை பார்த்துவிட்டு, வாயிலில் நின்று சிவனை தரிசனம் செய்து விட்டு திரும்பி விட்டார்.

''மிகக் கொடுமைக்காரியாக மாறிவிட்டாய் வீரமாதேவி'' என்று கடிந்து கொண்டார்.

''அப்படியே இருக்கட்டும். நான் கொடுமைக்காரிதான்'' என்று திட்டவட்டமாக அவள் சொல்ல, அவருக்கு பதில் சொல்லத் தெரியவில்லை, பதில் சொல்ல பிரியமில்லை.

நிறைய நேரம் மௌனமாக இருப்பதே அவளுக்கு பிடித்ததாக இருந்தது.

காஞ்சிபுரம் மாளிகை வாசலில் மக்கள் கூட்டம் நெரிந்தது.

''அடேய், அங்கே போக வேண்டுமே.'' நாற்காலியில் உட்கார வைத்தார்கள், கட்டைகளை வீரர்கள் தூக்கிக் கொள்ள சிறிய பல்லக்கு போல அதில் அமர்ந்து அவர் படிகள் விட்டு கீழ் இறங்கி வாசலுக்கு வந்தார். கூட்டம் பேயாய் ஆரவாரித்தது. அருகே நெருங்க முண்டியது, வீரர்கள் தடுத்தார்கள்.

வீரமாதேவி தள்ளாடி நிதானமாக படி இறங்கினாள். மூப்பு என்றால் என்ன என்பது அவளுக்கும் தெரிந்திருந்தது. முழங்கால் வலித்தன. மாதவிலக்கு நின்றுபோய் முகம் சிவந்து இரத்தம் ஊறி உதடு தடித்து, முதுகு வலித்து விதம் விதமான வேதனைகளை உடல் அனுபவித்தது.

கூடலுக்கு மட்டுமில்லை, கொஞ்சிப் பேசவும் லாயக்கு இல்லை என்பது போல அவள் உணர, எதற்கு வாழ்க்கை என்று வேதனைப்பட்டாள். மனமும், உடம்பும் இடையறாது தொந்தரவு செய்தது.

''எல்லா பெண்களுக்கும் ஏற்படுகின்ற தொந்தரவு தானம்மா உங்களுக்கு அதிகமாக இருக்கிறது.''

உடம்பு கணுக்கணுவாக வலித்தது. படுத்துக் கொள்ளத் தோன்றியது, படுத்தால் உட்கார்ந்து கொள்ள எண்ணம் ஏற்பட்டது. நடக்க வேண்டும் என்பது போல் தோன்றியது. நடந்தால் மூச்சு வாங்கியது.

''என்ன கருமம் இது. செத்துப்போய் விடலாமா.''

''அம்மா. மாதவிலக்கு நிற்பது இப்படித்தான் தொந்தரவு செய்யும். ஒரு வருடம், பிறகு மறுபடியும் உடம்பு சில்லென்று ஆகிவிடும். சாதாரணமாக இருப்பீர்கள். கருப்பை சுருங்கும் வரைதான் இந்த கஷ்டம்.'' நாகரத்தினம் நாடி பார்த்து மருந்து கொடுத்தாள்.

பதினைந்து நாள். இருவேளை மருந்தில் உடம்பு திடப்பட்டது.

வீரர்களை சக்கரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜேந்திரதேவர் விலகிப் போகச் சொன்னார். மக்களை அருகே வரச் சொன்னார்.

வைத்தியர் முன்னேறி, "இது வேண்டாம், மக்களுக்குண்டான ஜுரம், தலைவலி போன்றவை அல்லது நுரையீரல் தொற்று போன்றவை உங்களை தொற்றிக் கொள்ளும். எனவே, அவர்கள் விலகியும், தொடாமலும் இருப்பது நல்லது."

ஆனால் இராஜேந்திரர் மறுதலித்தார்.

"இவர்களுக்காகத்தானே வாழ்ந்தேன். இவர்களுக்காகத் தானே போர். இந்த வேளாளர்களுக்குத்தானே சகலமும்," அவர் எழுந்து நின்றார். வேளாளர் ஜனங்கள் காலில் விழுந்தார்கள். தள்ளாடினார். ஒரு வீரன் அருகே வந்து தோள் பிடித்தான் அவனை நெட்டித் தள்ளி ஒரு வேளாள இளைஞனை அருகே அழைத்து அவன் தோளிலே கை வைத்துக் கொண்டார்.

"எப்படி இருக்கிறது. காஞ்சிபுரத்து பயிர் பச்சை எந்த ஏரிப் பாசனம், எவ்வளவு நாள் செய்கிறீர்கள். நெடும் பயிர் எவ்வளவு, குறும்பயிர் எவ்வளவு. துவரை உண்டா. கடலை போடுகிறீர் களா. எத்தனை எண்ணெய் செக்குகள். மாடுகள் எங்கே மேய் கின்றன" என்றெல்லாம் கேட்க, கூட்டம் சுற்றிக் கொண்டு பதில் சொல்லியது. பெண்கள் இருக்கும் இடம் நோக்கிப் போனார். குலவையிட்டது, மக்கள் நெடி மூக்கை நிமிண்டியது. விளக்கெண்ணையும், வியர்வை நெடியும் கலந்த வீச்சம், உழைப்பாளிகள் நெடி அப்படித்தான் இருக்கும் என்று சமா தானம் செய்து கொண்டார்.

ஒரு மரத்தடியில் மேடையில் உட்கார, அவருக்கு விசிறி னார்கள். புழுதி கிளம்பியது. மயிற் தோகைக் கொண்டு விசிறி னார்கள். இன்னும் புழுதி கிளம்பியது, இளநீர் பருகிவிட்டு அரண்மனைக்கு வந்தார், மறுபடியும் தூக்கம் வந்தது. பசித்தது. சோறும், குழம்பும் பிசைந்து சாப்பிடார், தூங்கிப் போனார்.

நுரையீரலில் மெல்ல மெல்ல சளி கோர்த்துக் கொண்டது, நடு தூக்கத்தில் இருமத் தொடங்கினார். நெஞ்சு தடவி களிம்பு சாற்றினார்கள். புகை போட்டார்கள். குடிக்க வெந்நீர் கொடுத் தார்கள். கோழையாகத் துப்பினார். சூடாக பால் குடித்துவிட்டு மறுபடியும் தூங்கினார். தூக்கத்தில் பிதற்றினார்.

இரண்டு நாட்கள் காத்திருந்து இராஜாதிராஜன் இரவோடு இரவாக காஞ்சிபுரம் விட்டு கங்கை கொண்ட சோழபுரம் பயணப்

பட்டான். அவனுக்கு கொஞ்சம் ஏமாற்றமாக இருந்தது. தந்தை சரியாக பேசவில்லையே என்ற வருத்தம் இருந்தது.

ஆனால் பேசினோமா, பேசவில்லையா என்று சக்கரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜேந்திர தேவருக்கு நினைவில் இல்லை.

"உங்கள் மகன் இராஜாதிராஜன் வந்த போது நீங்கள் ஏன் பேசவில்லை." வீரமாதேவி கடிந்து கொண்டாள்.

"இராஜாதி ராஜனா. எப்போது வந்தான்." அவர் பதில் கேள்வி கேட்டார். அத்தோடு பேச்சு முடிந்து போயிற்று, இனி மேல் அப்படித்தான் என்று வீரமாதேவிக்கு தெளிவாகத் தெரிந்தது.

உப்பரிகையில் நின்று வெட்டவெளியைப் பார்த்து தனக்குத்தானே பேசிக் கொண்டிருப்பவரை பார்த்து மனம் அழுதது. இன்னும் மோசமாகுமோ என்ற கவலை வந்தது. விஸ்வநாத ஸ்ரௌதிகளுக்கு சொல்லி அனுப்பினாள். அவர் இறந்து விட்டார் என்ற செய்தி வந்தது, மன்னரிடம் தெரிவித் தாள்.

"யார் விஸ்வநாதன். ஆமாம். கருப்பாக ஒரு அந்தணன். ஒல்லியாக, உயரமாக பெரிய சிரிப்பாக இருப்பான். போய் சேர்ந்துவிட்டானா. நல்லது. எதற்கு இப்போது அவனை அழைக் கிறாய்." வீரமாதேவி பதில் சொல்லவில்லை.

இரண்டு நாள் கழித்து விஸ்வநாத ஸ்ரௌதிகளின் மகன் ஓலைச் சுவடிகளோடு வந்தான். தன் தகப்பன் செய்த வேலையை தான் செய்ய முடியும் என்று சொன்னான். அவனிடம் வீரமா தேவி இராஜேந்திரரின் ஜாதகத்தை கொடுத்தாள்.

"இது என்னிடம் இருக்கிறது அம்மா, ஏற்கனவே கணக்கு போட்டு வைத்து விட்டேன்."

"அப்படியா. ஆயுசு என்ன."

"சில வருடங்கள்,"

"சரியாகச் சொல்லுங்கள்."

"இன்னும் நான்கு வருடங்கள், மூன்றாவது வருடத்தி லேயே ஒரு கண்டம் இருக்கிறது."

"எப்படி மரணம் வரும், படையெடுப்பிலா,"

"இல்லை, நோய்வாய்ப்படுவார். சந்திரனுடைய குளிர்ச்சி இவர் நுரையீரலை தாக்கும். சிறுநீரகம் செயலிழக்கும். அதனால் மார்பு அடைக்கும். இவரை கவனமாக பார்த்துக் கொள்ள வேண்டும். தினமும் நடக்க வேண்டும்."

"எனக்கு நீர் வைத்தியம் சொல்ல வேண்டாம். எதிர்காலம் பற்றிச் சொல்லும். இதில் எப்படி தப்பிக்கலாம்."

"தப்பித்தல் எளிதல்ல,"

"வழி இருக்குமே."

"உண்டு"

"சொல்லும்."

"தீர்க்க சுமங்கலியான ஒரு பெண்ணை தேர்ந்தெடுத்து அவளை இவருக்கு திருமணம் செய்து கொடுத்தால் இன்னும் பத்து வருடங்கள் இவர் நிச்சயம் உயிரோடு இருப்பார்."

"பத்து வருடங்களா. அடேயப்பா. அப்பொழுது தொண்ணூறு வயது ஆகிவிடுமே. நல்லது, நிச்சயம் இது நடக்குமா."

"தேடிப் பார்க்கலாம்."

"உங்களுக்கு தெரிந்த ஜாதகம் சொல்லுங்களேன்."

"என்னிடம் அந்தண ஜாதகங்கள் தான் உண்டு. காஞ்சிபுரத்திலுள்ள மறவர் ஜாதகங்கள் என்னிடம் இல்லை," அவர் தப்பித்து போல விலகிப் போனார். அந்தணர்கள் அவரை சூழ்ந்து கொண்டார்கள்.

"என்ன பேசினீர். இராஜேந்திர சோழர் என்ன சொன்னார்."

"அவரை பார்க்கவேயில்லை. வீரமாதேவிதான் பேசினார்."

"என்னவாம்,"

"அரசரின் ஆயுள் பற்றி பேசினார்,"

"சொன்னீரா,"

"விளக்கினேன், பரிகாரம் உண்டா என்று கேட்டார்,"

"எதற்கு பரிகாரம்,"

"சொன்னேனே."

''என்ன''

''தீர்க்க சுமங்கலியான பெண்ணின் ஜாதகம் என்று சொன் னேன்,''

''அடே, எண்பது வயதிலா திருமணம் செய்து கொள்ளப் போகிறார். அவர் ஒப்புக்கொள்ள மாட்டார்.''

''இல்லை, வீரமாதேவி என்ன வேண்டுமானாலும் செய் வார். திருமணம் நடக்கும்.''

''அப்படி திருமணம் நடந்தால் குழந்தை பிறக்குமா, அடுத்த வாரிசு உண்டாகுமா. இராஜாதிராஜனுக்கும், இளவல் இராஜேந்திரனுக்கும் நிச்சயம் வாரிசு இல்லை, சுந்தர சோழ ருக்கு பெண்கள்தான் உண்டு. சோழ கேரளனது நல்ல ஜாதகம், ஆனால் போய் சேர்ந்துவிட்டான். இனி சோழ தேசத்திற்கு வாரிசு இல்லாத நிலைமை உண்டாகும்.''

''யார் காப்பாற்றுவார்.''

''குலோத்துங்கன் தான் வழி. குலோத்துங்கன் தான் நின்று தேசத்தை காப்பாற்ற முடியும்,''

''இதற்கு நம்மால் பரிகாரங்கள் எதுவும் செய்ய முடியாதா,''

''ருத்ரம், சமகம்... இல்லை, அது முடிந்து போயிற்று, இனி சாக்த உபாஸகம்தான் வழி,''

''ஏன்.''

''சோழ தேசத்தைச் சுற்றி சூட்சமமாக உலவும் உருவங் களுக்கு தீனி போட சாக்த உபாஸகம் எளிதில் வழி சொல் கிறது. அதர்வணவேதம் வழி வகுக்கிறது, எனவே, அங்கங்கே காளி சிலைகள் நிறுவி சாக்த உபாஸகம் வளர்த்தால் சோழ தேசத்தின் சூறாவளியை நாம் தடுத்து நிறுத்தலாம்?

''காளிச் சிலைகள் குப்புற கிடக்கின்றனவே,''

''எடுத்து நிறுத்த வேண்டும். மக்களிடம் அதை பரப்ப வேண்டும். இதற்கு இன்னொரு காரணம் இருக்கிறது,''

''என்ன''

''சோழ தேசத்தில் விதவைகள் அதிகம், விதவைகள்

வளர்த்த பிள்ளைகள் அதிகம். அடுத்த தலைமுறை விதவைகளால் விதவைகள் வளர்த்த பிள்ளைகளால் வளரப் போகிறது, அவர்கள் மெல்லிய மனதோடு, துள்ளல் இல்லாத நடையோடு இருப்பார்கள். சாக்த உபாஸகம் அவர்கள் செய்தால் பெரிய வலிவு பெறுவார்கள்.''

''அதாவது முன்பு போல கோரமான யுத்தம் நடைபெறாது என்று சொல்கிறாயா,''

''ஓரளவு நடைபெறும், இராஜேந்திர சோழரைப் போல மிக முரட்டுத்தனமாக, வேகமாக, அழிக்கும் சூலாயுதமாக, சிவ தாண்டவமாக இருக்காது. கொற்றவையின் கூத்தாக இருக்கும்,''

''ஒரு நல்லகாலம் முடிந்து விட்டதய்யா.'' ஒரு அந்தணர் வாய்மொழி கூற,

''ஆமாம், இராஜேந்திர சோழரோடு சோழ தேசம் உச்சி தொட்டாகி விட்டது,''

★ ★ ★

அத்யாயம்

111

"இனி என்ன ஆகும்." அந்த அந்தணர் வற்புறுத்தினார்.

"இனி மெல்ல மெல்ல சரிவுதான். ஒவ்வொரு அரசராக வலிவு இழப்பார். தள்ளாடுவார். அந்நியர் படையெடுப்பு அதிகரிக்கும். இழந்த இடங்களை சாளுக்கியம் திரும்பப் பெறும். ஆகமவல்லன் ஜாதகம் நன்றாக இருக்கிறது. அவன் வெற்றி பெறுவான். இராஜாதி ராஜன் மரணமடைவார்."

"எத்தனை வருடங்கள் சோழ சாம்ராஜ்ஜியம் நீடிக்கும்."

"இன்னும் இருநூற்று ஐம்பது வருடங்கள்."

"பிறகு."

"பாண்டியர்கள் ஆட்சி செய்வார்கள்."

"சேரர்கள் வர மாட்டார்களோ."

"இல்லை. சேரர்களுக்கு இன்னும் ஆயிரம் வருடங்களுக்கு விடிவு இல்லை. அவர்கள் இப்படியே வர்மக் கலையும், வைத்தியமும் பார்த்துக் கொண்டு இருக்க வேண்டியதுதான். மறுபடியும் காந்தளூர்சாலை வரவே வராது. வீர கேரளம் இருக்காது."

"அப்பொழுது வேறு யார் வருவார்கள் சாளுக்கியர்களா."

"இல்லை."

"கீழை சாளுக்கியமா."

"இல்லை."

"ஒட்டம், கலிங்கமா."

"இல்லை."

"என்ன சொல்கிறீர்கள்."

''சூரியன் ஆட்சி மறைந்து சந்திரனும், கேதுவும் உள்ளே நுழைகிறது.''

''என்ன புரியவில்லையே.''

''துருக்கர்கள் வந்து நம்முடைய தேசங்களை கபளீகரம் செய்வார்கள். நம் தர்மத்தைக் குலைப்பார்கள்.''

''எப்போது.''

''முன்னூறு ஆண்டுகளுக்கு பிறகு வெகுநாள் மொத்த பரத கண்டமும் துருக்கர்களுக்கு அடிமைப்பட்டுக் கிடப்போம்.''

''போதும். போதும். இதற்கு மேல் ஜாதகம் சொல்லாதீர்கள்.'' பலர் எழுந்து நின்று கதறினார்கள். தலையில் துண்டு போட்டுக் கொண்டு காஞ்சியிலிருந்து அழுதபடியே கங்கை கொண்ட சோழபுரம் நோக்கி மாட்டு வண்டிகளிலும், மட்ட குதிரைகளிலும் நகர்ந்தார்கள். எல்லா இடங்களும் அந்த படித்த அந்தணர்களுக்கு இருட்டாகவே தெரிந்தன.

பாணர்களின் குதியல் பாட்டு சந்தோஷமாக இருந்தது. காதல் பாட்டுகளும், காமப் பாட்டுகளும் அவரை கிளர்ச்சியுறச் செய்தன. கிளர்ச்சி நன்கு தூங்க உதவி செய்தது.

வீரமாதேவி நாலாபுறமும் ஆட்கள் விட்டு க்ஷத்திரிய வம்சத்து பெண் வேண்டும் என்று தேடினாள். சிற்றரசர்களின் மகள் இருக்கிறாளா என்று அலசினாள்.

எண்பத்தொன்றாவது அகவை வந்தது. எண்பது முடிந்து எண்பத்தொன்று, ஊர் சிறப்பாக கொண்டாடியது. அந்தணர்கள் ஒன்று கூடி ஆயுஷ் ஹோமமும், ஆவக சந்தி ஹோமமும், ம்ருத்யுஞ்சய ஹோமமும் நிகழ்த்தினார்கள். காளி கோவில்களில் ஆடுகள் வெட்டப்பட்டன. விருந்து வைக்கப்பட்டது.

இந்த முறை இராஜாதி ராஜன் வரவில்லை. மாறாக, கீழை சாளுக்கியத்திலிருந்து அம்மங்காவும், இராஜ நரேந்திரனும், குலோத்துங்கனும் இரண்டு நாள் முன்னதாகவே வந்திருந்தார்கள்.

குலோத்துங்கன் தொலைவே நின்று கொண்டான். அரச சபையில் இராஜேந்திரன் உட்கார்ந்திருக்க மெல்ல முன்னேறி

சற்று வலப்பக்கம் போய் ஒரு சாதாரண வீரன் போல் தலை குனிந்து வணங்கினான்.

"வாழ்க, என்னப்பா வேண்டும்." கண் பார்வை மங்கலாக இருந்ததால் யாரோ வணக்கம் சொன்னதாகத்தான் தெரிந்தது. வேறு அடையாளம் தெரியவில்லை. அதுதவிர, குலோத்துங் கனின் முகம் மனதுக்குள் சரியாகப் பதியவில்லை. மூன்றாம் வயதில் ஒரு மாதிரியும், பத்தாம் வயதில் ஒரு மாதிரியும், பதி னைந்தாம் வயதில் வேறு ஒரு மாதிரியும் இருந்தான். இப்பொழுது அவன் முற்றிலும் மாறியிருந்தான்.

அடர்த்தியான மீசை. சின்ன குறுந்தாடி. அகலமான தோள் கள். இறுகிய பட்டாடை. முத்து ஆரம். எல்லாம் அவனை வேறு விதமாக காட்டியது.

"நீ தூதுவனா" என்று கேட்டார்.

"இல்லை அரசே. நான் தூதுவன் இல்லை."

"எங்கேயோ கேட்ட குரலாக இருக்கிறதே. அருகே வா."

"நான் கீழை சாளுக்கியத்திலிருந்து வருகிறேன் மன்னா. இராஜ நரேந்திரருடைய மெய்க்காவல் படையில் இருக்கிறேன். பட்டமகிஷியார் அம்மங்காதேவியின் மெய்க்காவல் படை யில் தலைவனாக இருக்கிறேன். அவர் போகும் இடமெல்லாம் போகிறேன்."

"அட, அப்படியா. அம்மங்காதேவி வருவதாகச் சொன் னாளே. ஏன் இன்னும் வரவில்லை."

"வந்து கொண்டிருக்கிறார் மன்னா."

"அதனால்தான் நீ தூதுவனா என்று கேட்டேன்."

"நான் தூதுவன் அல்ல. அந்த நாட்டின் இளவரசன்."

"இளவரசனா. சரி."

இளவரசன் என்ற விஷயம் நெஞ்சில் பதியவில்லை. புத்தி புரிந்து கொள்ளவில்லை. ஏதோ ஒரு படைத்தலைவன் என்பது போல நினைத்துக் கொண்டார். அல்லது காதில் விழாது போல அமர்ந்திருந்தார்.

அவன் அருகே போனான். அவன் கண்கள் கலங்கின. மெல்ல அவர் பாதம் தொட்டு கண்ணில் ஒற்றிக் கொண்டான்.

''தீர்காயுஷ்மான் பவ. நீ தொடும்போது சந்தோஷமாக இருக்கிறது. அம்மங்காதேவியை கவனமாக பார்த்துக் கொள் எய்யா. அவள் எனக்கு உயிர். அவள் இல்லையென்றால் எனக்கு வாழ்க்கையே இல்லை. எந்நேரமும் அம்மங்காதேவியின் நினைவுதான். எந்த கெடுதலும் அம்மங்காவை நெருங்காமல் இருக்க நீ முன் நிற்க வேண்டும்.''

''அப்படியே செய்கிறேன் சக்கரவர்த்தி.''

''அடே, இந்த குரல் எனக்கு பரிச்சயமான குரலாக இருக் கிறதே.'' அவர் கண்ணை இடுக்கிக் கொண்டு பார்த்தார். எழுந்து நின்றார். தள்ளாடினார். அடுத்த படி இருக்கிறது என்று தெரியாமல் காலை சமதளத்தில் வைப்பது போல நீட்டினார். அவன் சட்டென்று ஓடி அவர் தோளை பிடித்துக் கொண்டான். அவன் மீது அவர் சாய்ந்தார். இறுக தழுவிக் கொண்டான்.

''ஏய், நீ குலோத்துங்கன் அல்லவா.'' அவர் உரக்க கத்தி னார். இறுக்க அணைத்துக் கொண்டார். முடியைப் பிடித்து உலுக் கினார். கன்னத்தில் அடித்தார். நெற்றியில், உதட்டில், கன்னத் தில் முத்தமிட்டார். இறுக தழுவிக் கொண்டார்.

''என் அப்பா. என் அப்பா. என் குலோத்துங்கா. என் பேரப் பிள்ளையே. என் வாரிசே. சோழ தேசத்தின் சிறந்த மன்னனே. வாழ்க. ஏனடா இந்த கிழவனோடு ஏமாற்றி விளையாடுகிறாய். எனக்கு வயதாகிவிட்டதடா. கண் தெரியவில்லையடா. என் னால் நிற்க முடியவில்லையடா. கால்கள் துவளுகின்றன.

குலோத்துங்கா, என்னை அப்படியே அணைத்துக் கொள். என்னை அப்படியே எங்காவது உட்கார வை.''

குலோத்துங்கன் அழுதான். அவன் கண்ணிலிருந்து நீர் பெருகியது. சபை விசும்பத் துவங்கியது. வீரமாதேவி இடி விழுந்தது போல அமைதியாய் இருந்தாள். அவளுக்கு அருகே அம்மங்கா நின்றிருந்தாள். வீரமாதேவி அழுகின்ற அம்மங்காதேவி யின் கையைத் தடவிக் கொடுத்தாள்.

''முதுமை கொடியது. மிகக் கொடியது அம்மங்காதேவி. நோய்வாய்ப்பட்டு இறப்பதும், போரில் மரணமடைவதும் மிக உத்தமம். வயதாகி வயதாகி வாழ்வது என்பது மிகக் கொடுமை.''

தாத்தாவும், பேரனும் ஒரே சிங்காசனத்தில் உட்கார்ந்து கொண்டு உரத்த குரலில் பேசிக் கொண்டிருந்தார்கள்.

"அடேய், வெற்றிலை கொண்டா. சந்தோஷமாக இருக்கிறது." அவர் கூவினார். குலோத்துங்கன் வெற்றிலையை கிழித்து, மெல்லியதாய் சுண்ணம் தடவி, துளித் துளியாய் பாக்கு நறுக்கி அதை அதக்கி சுருட்டி கொடுத்தான்.

"நீ அரசனா. அடைப்பக்காரனா. உனக்கு எதற்கடா இந்த வேலை."

"மக்களுக்கு அரசன். உங்களுக்கு அடைப்பக்காரன்" என்று சந்தோஷமாக குலோத்துங்கன் பதில் சொன்னான். அவர் வாயில் வெற்றிலையை அதக்கிக் கொண்டார். அழுத்தி கடித்தார். பற்கள் வலித்தன.

"இன்னும் ஒரு சுருள் கொடு." அவர் கேட்டார். "போதும். இது குளுமை." வீரமாதேவி தடுத்தாள். ஆனால் அவர் பிடிவாதம் பிடித்தார். குலோத்துங்கன் இன்னொரு வெற்றிலையை கிழித்து அதேவிதமாக சுருட்டிக் கொடுத்தான். இரண்டு பக்கமும் வெற்றிலை அசைந்து நீர் ஊற, அவர் ஏதேதோ பேசத் துவங்கினார். அவர் பேசுவது அவருக்கே விளங்கவில்லை.

"விஷயம் கேள்விப்பட்டேனே." அம்மங்காதேவி வீரமாதேவியிடம் பேசினாள்.

"என்ன."

"திருமணம் செய்யப் போகிறீர்களாமே சக்கரவர்த்திக்கு."

"ஆமாம். அப்படி ஒரு எண்ணம் இருக்கிறது. ஒரு பெண் கிடைத்திருக்கிறாள்."

"இதெல்லாம் சரியா. எந்த அந்தணர் சொன்னார் என்று இப்படி செய்கிறீர்கள். எனக்கு அந்தணர்களைப் பிடிப்பதில்லை. நான் அவர்களை அதிகம் ஆதரிப்பதில்லை. மறவர்களுடைய ஆதரவால்தான் ஒரு தேசம் இருக்கிறதே தவிர, அந்தணர்களின் ஆலோசனையால் இல்லை. அவர்கள் சுயநலவாதிகளாக இருக்கிறார்கள். இது என்னுடைய எண்ணம்."

"அப்படி சொல்வதற்கில்லை. ஏதேனும் ஒரு வாய்ப்பு இருக்கிறதா என்று நான்தான் வற்புறுத்தினேன். இப்படி ஒரு

வாய்ப்பு இருக்கிறது. செய்து பார்க்கலாம். பலிக்குமா என்று தெரியவில்லை என்றுதான் சொன்னார். பலித்துவிட்டால் என்ற எண்ணத்தினால்தான் ஏற்பாடு செய்தேன்.''

''யார் அந்த பாபி.''

''திருமுனைப்பாடி நாட்டிலிருந்து வருகிறாள். சிறிய சிற்றரசருக்கு மகளாக இருக்கிறாள். பதினான்கு வயதுதான் ஆகிறது. நல்ல திமிசு கட்டையாக இருக்கிறாள்.''

''என்னம்மா இப்படி பேசுகிறீர்கள். என் மகனுக்கே பதினேழு வயது ஆகிவிட்டதே. அவனிலும் சிறிய ஒரு பெண்ணை அரசருக்கு மணமுடிப்பது நியாயமா. இது தவறல்லவா. நீங்கள் ஏன் யோசிக்க மாட்டேன் என்கிறீர்கள்.''

''அடியே, அவளை திருமணம் செய்து இன்னும் பத்து ஆண்டுகள் இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்.''

''என்ன நன்றாக இருக்கும். என்ன பேசுகிறோம் என்று தெரியவில்லை. நடக்க முடியவில்லை. மூச்சு விட முடியவில்லை. என்ன அவஸ்தையோடு வாழ வேண்டும். தினம் தினம் வைத்தியமல்லவா பார்க்க வேண்டியிருக்கிறது. எவ்வளவு மருந்துகள் சாப்பிடுவார். எனக்கு பயமாக இருக்கிறது அம்மா. உங்களை நினைத்தாலும் கவலையாக இருக்கிறது, நீங்களும் தள்ளாடுகிறீர்கள்.''

''எல்லோருக்கும் அப்படித்தானடி வாழ்க்கை. வயதானால் நீயும்தான் தள்ளாடுவாய். ஆனால் குலோத்துங்கன் ஆட்சி செய்வதை இராஜேந்திரர் பார்த்துவிட்டு போகலாம் அல்லவா. அவன் பட்டாபிஷேகத்தை அவர் நடத்திவிட்டு போகலாம் அல்லவா.''

''போதும். இந்த நேரத்தில் நீங்கள் இப்படி பேசுவது கேட்டால் இராஜாதி ராஜனுக்கு கவலையாக இருக்கும். சீரும், சிறப்புமாக தொண்ணூறு வயது வரை தான் ஆட்சி செய்ய வேண்டும் என்று அவன் ஆசைப்பட்டிருக்க மாட்டானா. அதற்குப் போய் இடைஞ்சலாக இப்படி பேசலாமா. தயவு செய்து இப்படி பேசாதீர்கள். குலோத்துங்கனுக்கு சோழ தேச அரியணை ஒன்றும் தேவையில்லை. கீழை சாளுக்கியம் அவனுக்கு போதும்.''

''ஏன் புரியாது பேசுகிறாய் அம்மங்கா. இராஜாதிராஜ னுக்குப் பிறகு யார் அரசாள்வார். யாருக்குமே ஆண் வாரிசு இல்லையே. பெண் மக்களல்லவா பெற்றிருக்கிறார்கள். மாப்பிள் ளைக்கா நாடு கொடுப்பது. அதற்கு உன்னுடைய மகன் ஆள லாமே. அவன் வந்து நிற்கலாமே. இராஜேந்திர சோழர் இருக்கும் பொழுதே அவனுக்கு இளவரசன் பட்டம் கட்டலாமே.''

''இல்லை. அரசியல் தகராறு வரும். போன தலைமுறை யில் அரசியல் தகராறு ஏற்பட்டு நாடு சீரழிந்தது போதாதா. உத்தம சோழர் காலத்தில் இதே பிரச்சினை அல்லவா வந்தது. மறுபடியும் அது வரவேண்டாம். குலோத்துங்கனால் ஏற்பட வேண்டாம். எங்களுக்கு கீழை சாளுக்கியம் போதும். இதனால் தான் நான் கங்கை கொண்ட சோழபுரம் வர மறுக்கிறேன். நான் வந்தால் அவர்கள் பயப்படுகிறார்கள். இப்போது மயிலை வருவதும், காஞ்சியை நோக்கி வருவதும் எனக்கு பயமாக இருக் கிறது.

கீழை சாளுக்கியத்தை ஒழுங்காக கட்டி காப்பாற்றினால் போதும். மேலை சாளுக்கியத்தில் மறுபடியும் தொந்தரவு துவங்கி விட்டது. மக்கள் அரசனிடம் கோபமாக இருக்கிறார்கள். சோழ தேசத்தை கருவறுக்காமல் இருக்கிறாயே என்று ஆத்திரப் படுகிறார்கள். இதற்கு அங்குள்ள வீர சைவர்கள் லிங்கம் கட்டி கள் தூண்டிவிடுகிறார்கள். மதம் எல்லா அரசியலிலும் கலந்து அதை உத்வேகப்படுத்திக் கொண்டு இருக்கிறது.

அரசு சாராத மதம் இல்லை. மதம் இல்லாது அரசு இல்லை. இதுதான் விதியாக இருக்கிறது.

ஆமாம். அந்த திருமுனைப்பாடி நாட்டு பெண்ணுக்கு என்ன பெயர்.''

''பேரா முக்கியம். பெண்தானே முக்கியம்.'' வீரமாதேவி அலட்சியமாக சொன்னாள். அம்மங்காதேவிக்கு கோபம் வந்தது.

அரசாங்கம் என்பது சூழ்ச்சி நிறைந்தது. பொதுமக்களை பாதுகாக்கிறேன் என்ற போர்வையில் அவர்களை ஏய்த்து பிழைப் பது, தன் வசம் இழுத்து பலி கொள்வது என்பது உண்மை யாயினும் இது மிகப் பெரிய நரபலியாக, சொல்ல முடியாத

அநியாயமாக அம்மங்காதேவிக்கு தோன்றியது. குலோத்துங்க னிடம் புலம்பினாள். பொருமினாள்.

''இதில் தலையிடாதே அம்மா. மிகப் பெரிய தவறுதான். ஆனால் இதை இப்பொழுது சொன்னால் இராஜேந்திரர் சீக்கிரம் இறந்து போகட்டும் என்று நீ நினைப்பதாக வரும். இதில் கை வைக்காதே.''

பத்து நாட்கள் தாத்தாவோடு குலோத்துங்கன் ஊர் சுற்றி னான். கைலாசநாதர் கோவிலில் உட்கார்ந்து சாளுக்கிய படை எடுப்பை பற்றி கேள்வி கேட்டான்.

'எப்படி துங்கபத்ராவை தாண்டினீர்கள். எதிர் கரையில் என்ன இருந்தது'' என்று கேள்வி மேல் கேள்வி கேட்டான். பலதும் அவர் பதில் சொன்னார். பல சமயம் தடுமாறினார். வீரமா தேவி எடுத்துக் கொடுக்க, போர் பற்றி மீண்டும் பேசினார். குலோத்துங்கன் மடியில் படுத்து உறங்கினார்.

'எப்பேர்பட்ட ஜீவன் இது. எல்லாம் செய்துவிட்டு எதுவும் அறியாத குழந்தை போல எப்படி தூங்குகிறது. கால் வலிக்கும் போலிருக்கிறது. மாற்றி மாற்றி போட்டுக் கொள்கிறது. அதிகாரிச் சியின் பேர் சொல்லி அடியே என்று கூவுகிறது. அதிகாரிச்சி அழுத்தி பிடித்துவிட அயர்ந்து தூங்குகிறது. மறுபடியும் புரண்டு இந்தக் கால் என்கிறது, தோள் பட்டை பிடித்து விடச் சொல் கிறது. உடம்பு எல்லாமுமா வலிக்கிறது. இதென்ன மூப்பு. இதென்ன வயோதிகம். ஆனால் விடிந்து எழுந்ததும் மறுபடி யும் குதூகலச் சிரிப்பு. அரிசி கஞ்சி குடித்ததும் பெரிய ஆர்ப்பாட் டங்கள்.

''உன் மணிமுடி எப்படி இருக்க வேண்டும் தெரியுமா.'' பொற் கொல்லரை வரவழைத்து படம் போடச் சொல்லி, மாற்றங்கள் சொல்லி, அரக்கில் ஒரு மாதிரி செய்து வரச் சொல்லி, அதை அவன் தலையில் வைத்து அழகு பார்த்தார்.

''அங்கிருந்து நடந்து வா. இங்கிருந்து நடந்து வா. இப்படி நடந்து கொள்'' என்றெல்லாம் கட்டளையிட்டார். தாத்தா என்ன சொன்னாலும் பேரப்பிள்ளை தட்டாது செய்தான். இது குழந்தை விளையாட்டு என்று தெரிந்தும் அவருக்கு ஈடு கொடுத்தான்.

தாத்தா தூங்கியதும் படிகளில் வேகமாக இறங்கி தன்னுடைய சபையோடு கூடி உட்கார்ந்து கொண்டான். எந்தெந்த இடங்களில் என்னென்ன நிலைமை என்று ஒற்றர்களோடும், தூதுவர்களோடும் பேசினான்.

''இராஜாதிராஜனை ஒற்றறியச் செய்கிறாயா.'' வீரமாதேவி ஆச்சரியப்பட்டாள்.

''இது ஒற்று அல்ல. என்ன நடக்கிறது என்று எனக்கு தெரிய வேண்டுமல்லவா. ஒருவேளை இந்த ஆள் அவரிடம் மாட்டிக் கொண்டால் நான் எழுதிக் கொடுத்த இரகசிய ஓலையைக் காட்டுவான். நான்தான் தகவல் சேகரிக்க அவனை அனுப்பினேன் என்று அதில் எழுதியிருக்கிறேன். இவனை உடனடியாக விடுதலை செய்துவிடுவார்.'' அவன் அமைதியாகப் பேசினான்.

''மாறாய் தண்டித்தால்.''

''என் கோபத்திற்கு ஆளாவார்கள்.''

''யார்.''

''அந்த மூன்று சகோதரர்களுமே ஆளாவார்கள். அவருடைய சபையை நான் கலைப்பேன்.''

''அவர்கள் உனக்குப் பங்காளிகள் இல்லையடா. உன் மாமன்கள்.''

''அதனால் என்ன. என் வீரன் மீது கை வைக்க எவருக்கு துணிச்சல் உண்டு.''

வீரமாதேவி ஆச்சரியத்துடன் அவனை பார்த்தாள்.

''பாட்டி பயப்படாதீர்கள். அப்படியெல்லாம் நேராது. அவர்களை அழிக்கவா தகவல் சேகரிக்கிறேன். ஒரு தேசத்தில் என்ன நடக்கிறது என்று அடுத்த தேசத்தில் உள்ள அரசனுக்கு தெரிய வேண்டுமல்லவா. சோழர்கள் உறுதியாகவும், அமைதியாகவும் இருக்கிறார்களா என்று எனக்கு தெரிய வேண்டுமல்லவா. அவ்வளவே. பயப்படாதீர்கள்.'' ஆனால் வீரமாதேவிக்கு பயமாகத்தான் இருந்தது.

கிளம்புகிற நேரத்தில் இராஜேந்திர சோழர் அவனை தழுவிக் கொண்டார்.

''குலோத்துங்கா, இந்த கிழவனிடமிருந்து உனக்கு ஒரு விண்ணப்பம்.''

''கட்டளை என்று சொல்லுங்கள்.''

''இல்லையடா. விண்ணப்பம்.''

''என்ன தாத்தா. என்ன வேண்டும் உங்களுக்கு.''

''அடிக்கடி காஞ்சிபுரம் வராதே.''

''ஏன் தாத்தா.'' அவனுக்கு வியப்பாக இருந்தது.

''இராஜாதிராஜனுக்கு கஷ்டமாக இருக்கும். நீயும், நானும் கூடி கூடி பேசுகிறோம். கொஞ்சி குலாவுகிறோம். இதனால் சோழ தேசத்திற்கு நன்மையா, தீமையா என்று அவன் பதட்டப் பட ஆரம்பித்து விடுவான்.

ஒரு அரசனுக்கு இந்த மாதிரி பதட்டங்கள் தேவை யில்லை. தெற்கிலிருந்தும், சாளுக்கிய தேசத்திலிருந்தும் அவ னுக்கு தொந்தரவுகள் வந்து கொண்டிருக்கின்றன. கீழை சாளுக்கியத்திலிருந்தும் அவனுக்கு தொந்தரவு வரும் என்று அவன் நினைக்க வேண்டாம். உன்னை அவன் பகைவனாக கருதக்கூடாது. அதனால் எனக்கு உன்னை பார்க்க ஆசை இருப்பின் இங்கு வராது இருப்பதே நல்லது. இன்னொரு விண்ணப்பம். தயவு செய்து மறுக்காமல் நிறைவேற்று.''

''என்ன தாத்தா. என்ன வேண்டும்.''

''என்னை இறுக்க ஒருமுறை தழுவிக் கொள்ளடா. இறுக்க தழுவிக் கொள்ள வேண்டும். எலும்பு நொறுங்கும்படியாக தழுவிக் கொள்ள வேண்டும். எனக்குள் புகுந்து விடும்படியாக தழுவிக் கொள்ள வேண்டும். என் தாத்தா. என் தாத்தா என்று தழுவிக் கொள்ள வேண்டும். என் சக்தி அனைத்தையும் நீ வாங்கிக்கொள்ள வேண்டும். நான் என் சக்தியை உனக்கு தரப் போறேனடா. என் உள்ளுக்குள் இருக்கின்ற என்னுடைய உணர்வு மொத்தமும் திரட்டி உனக்குள்ளே அனுப்பப் போகி றேன். நான் நீயாகப் போகிறேன். என்னை உன்னுள் செலுத்தப் போகிறேன். உன்னை இன்னொரு இராஜேந்திரனாக மாற்றப போகிறேன். இறுக்க தழுவிக் கொள். எந்த இடைவெளியும் இல்லாது தழுவிக் கொள்.'' அவன் அவரை ஆவலோடு பார்த் தான். சிரித்தான்.

இறுக்கத் தழுவினான். நெஞ்சாரத் தழுவினான். தலையை தடவினான். கன்னங்களை தடவினான். நெற்றியில் முத்த மிட்டான். தோளோடு தோள் பிணைத்துக் கொண்டான். இறுக்க அணைத்துக் கொண்டான். அவர் மூச்சு திணறியது. ஹா. ஹா. என்று பெருமூச்சு விட, மெல்ல தளர்த்தினான். அரியாசனத்தில் அமர்த்தினான். புன்னகைத்தான். குனிந்து வணக்கம் சொன்னான். வாளை உருவினான்.

''கீழை சாளுக்கியத்தின் சகல வீரர்களும், அரசாங்க அதிகாரிகளும், பொது மக்களும், மற்ற எல்லா உயிரினங்களும் சோழ தேசத்தின் சக்கரவர்த்தியான உடையார் ஸ்ரீ இராஜேந்திர தேவர் முன்பு மண்டியிடுகிறது.'' கத்தியை நிலத்தில் ஊன்றி மண்டியிட்டான்.

அவர் வாய்விட்டு அழுதார். வயதானவர்களுக்கு அழத் தான் தெரியும்.

இராஜேந்திரர் சக்கரவர்த்தியாக இருந்தாலும், மிகப் பெரிய சாதனைகள் செய்திருந்தாலும், மிக உயரமான கற்றளி எழுப்பி இருந்தாலும், கங்கை வரை போய் படையெடுத்து மிகப் பெரிய ஏரியை சோழ கங்கத்தை ஸ்தாபித்து இருந்தாலும், மூப்பின் காரணமாக, உடல் தளர்ச்சியின் காரணமாக, பாசத்தின் காரண மாக கொஞ்சம் வாய் கோணி, கண்ணில் ஜலம் விட்டு அரியணை யில் சாய்ந்தபடி அழுதார். அவரை சமாதானப்படுத்த அதிகாரிச் சிகள் நடந்தபோது வீரமாதேவி தடுத்துவிட்டாள்.

''கிழவர் அழட்டும். வேறு என்ன வழி. அவர் அழுவதை யாவது முழுமையாகச் செய்யட்டும்'' என்று விலக்கினாள்.

குலோத்துங்கன் பின்னடைந்தான். குதிரை ஏறினான். அவர் அரியணையில் சாய்ந்தபடியே தூங்கிப் போனார்.

கண் விழித்து எழுந்ததும் ஏதாவது பாடுங்கள் என்று கட்டளையிட்டார். அதிகாரிச்சிகளில் நல்ல குரல் உடையவள் மெல்ல பாடினாள்.

இடரினும், தளரினும் எனதுறு நோய் என்று பாடினாள்.

இந்த பிரபஞ்சத்தின் சௌக்கியத்திற்காக எல்லாம் வல்ல சிவபெருமான் பொங்கி கிளம்பிய ஆலகால விஷத்தை சுருட்டி விழுங்கிவிட்டார். புருஷனை பாதிக்காது இருக்க பார்வதி

தடுத்துவிட்டாள். சிவந்த மேனியன். கழுத்து கருப்பாயிற்று. சிவ பெருமான் ஆலகால விஷத்தை உண்ணவில்லையென்றால் இந்த பூவுலகிற்கு மரியாதை இருக்காது. அழிந்து போயிருக்கும்.

இந்த தமிழ் கூறும் நல்லுலகம் வாழ இந்த இராஜேந்திரன் ஏகப்பட்ட வேதனைகள் விழுங்கியிருக்கிறான். அடி வாங்கி, அடி வாங்கி, ஆடி, ஓடி, பல பாவங்கள் செய்து தமிழை வாழ வைத்திருக்கிறான். தமிழ் மண்ணை வாழ வைத்திருக்கிறான். அவன் உடம்பு முழுவதும் விஷம் பரவி இருக்கிறது. ஒவ்வொரு கணுவும் வலிக்கிறது.

வேறு வழியில்லை இராஜேந்திரா. அனுபவி. அனுபவியடா. வேறு வழியில்லையடா. தமிழ் முக்கியமல்லவா. தமிழ் தேசம் முக்கியமல்லவா. சோழம் முக்கியமல்லவா. பாண்டியனும், சேரனும் முக்கியமல்லவா. இந்தப் பகுதி முக்கியமல்லவா. அடேய் இராஜேந்திரா. அதற்காக உழைத்த உழைப்புதானே. என்ன வருத்தம். என்ன அழுகை. இனிமேல் நீ அழலாகாது. இதை ஏற்றுக்கொள் இராஜேந்திரா. அவர் மறுபடி மறுபடி 'இடரி னும் தளரினும்' பாடச் சொன்னார். தானும் பாடினார்.

எண்பத்திரெண்டாவது அகவையும் கொண்டாடப்பட்டது.

அரையன் ராஜராஜன் கால் தடுக்கி, தலையில் அடிபட்டு நெஞ்சில் செங்கல் முனை குத்தி இறந்து போனார் என்று செய்தி வந்தது. ஏதோ கோபத்தில் நடந்தவர் கால் தடுமாறி விழுந்துவிட்டார். அடுத்த மூன்று நிமிடங்களில் இறந்துவிட் டார் என்று சொல்லப்பட்டது.

இராஜேந்திரர் திகைத்தார். தலைக்கு குளித்தார்.

''போய் வா அரையனே போய் வா, எனக்காக காத்திரு. ஒரு அரண்மனையைச் சுத்தம் செய்து வை. நானும் வந்துவிடு வேனடா. எத்தனை காலம் இங்கு வாழ்வது. எனக்கு விட்டுப் போயிற்று. அரையனே நான் வரும்பொழுது எக்காளம் ஊதப் பட வேண்டும். இராஜராஜர் கொடுத்த சிவபாத சேகரம் என்ற எக்காளம் ஊதப்பட வேண்டும். முரசுகள் முழங்க வேண்டும். பறையொலி கேட்க வேண்டும். திருமன்னி வளர என்று நீயே வாய் திறந்து என்னை வாழ்த்த வேண்டும். போய் வா.'' குழந்தை போல பிதற்றினார்.

''நீங்கள் அதிகம் பேசுவதால் தான் குலைந்து போகிறீர் கள். உடல் தளர்ந்து போகிறது.'' வீரமாதேவி கண்டித்தாள்.

''இப்பொழுது என்னால் செய்ய முடிந்தது பிதற்றல் மட்டுமே. என்னால் ஓட முடியாது. ஆட முடியாது. பாட முடியாது. போரிட முடியாது. தீர்ப்பு சொல்ல முடியாது. கேட்க முடியுாது. பார்க்க முடியாது. என்னால் முடிந்தது பிதற்றுவதே. பிதற்றிவிட்டு போகிறேனே. ஏன் தடை செய்கிறாய்.'' வீரமா தேவிக்கு நியாயமாகப் பட்டது.

''சரி, உங்கள் இஷ்டம்'' என்று சொல்லி கண்களை துடைத்துக் கொண்டாள்.

''நாளை நல்ல முகூர்த்தம்.'' பேசினாள்.

''அப்படியா. சரி.''

''உங்களுக்கு திருமணம் செய்யலாம் என்று நினைக் கிறேன்.''

''ஹா. இனி அது ஒன்றுதான் குறை. கயிறு கொண்டு வா. தாலி கயிறு எடுத்து வா. உனக்கு மங்கல நாண் பூட்டுகிறேன். மோதிரமும், மெட்டியும் அணிவிக்கிறேன் கொண்டு வா. எண்பது வயதில் ஒரு திருமணம் நடத்தலாம் அல்லவா. எண்பத் திரண்டு வயதில் நடந்துவிட்டு போகிறது. செய்வோம் வா.''

''இல்லை. என்னோடு இல்லை.''

''பிறகு.''

''திருமுனைப்பாடி நாட்டிலிருந்து ஒரு பெண் வந்திருக் கிறாள். நரசிங்க முனையரின் வழிவந்த பதினாறு வயது பெண்.''

''என்ன.''

''பதினாறு வயது பெண்.'' அந்தப் பெண் அழைத்து வரப் பட்டாள்.

''இவளை பார்த்திருக்கிறேனே. முன்னும், பின்னும் அலைவாளே. இரண்டு, மூன்று முறை குடிக்க நீர் கொடுத்திருக் கிறாளே.''

''இரண்டு வருடமாக என்னோடு தான் இருக்கிறாள். ஆனால் எனக்குதான் கொஞ்சம் தயக்கமாக இருந்தது.''

''எதற்கு.''

''உங்களுக்கு திருமணம் செய்வதற்கு.''

''முட்டாளா நீ. குழந்தையல்லவா இவள். இவளை கொண்டு வந்து எதற்கு எனக்கு திருமணம். என்ன செய்ய முடியும். அந்த ஆட்டமெல்லாம் முடிந்து போயிற்றே. எனக்கும் முடிந்தது. உனக்கும் முடிந்தது. இந்த பெண்ணை ஏன் சித்ர வதை செய்கிறாய். அறிவில்லை உனக்கு.'' சீறி எழுந்தார். எழுந்திருக்கும்போது தடுமாறினார். அந்தப் பெண் ஓடிவந்து பிடித்துக் கொண்டது. கட்டிலில் உட்கார வைத்தது, காலை தூக்கி இழுத்து படுக்க வைத்தது, கணுக்காலை பிடித்துவிட்டது.

''வேண்டாமம்மா. நீ ஊருக்கு போ. நீ இங்கு இருக்காதே. இந்த சண்டாளி ஏதேனும் செய்துவிடுவாள். போ. நீ ஊருக்கு போ.''

''இல்லை. நான் ஊருக்குப் போனால் ஏற்க மாட்டார்கள்.''

''ஏன்''

''உங்களுக்கு தத்தம் கொடுத்துவிட்டார்கள். என்னை நீர் வார்த்து வீரமாதேவி கையில் ஒப்படைத்து விட்டார்கள். இனி எனக்கு இதுதான் தேசம். நீங்கள் இருக்கும் இடம்தான் எனக்கு அயோத்தி. நான் இங்குதான் இருப்பேன்.''

''பைத்தியமா உனக்கு. ஏனடி, மகாபாவி. இந்த குழந் தையை உயிரோடு புதைக்கிறாயே. நியாயமா இது.''

வீரமாதேவி, 'ம்' என்று ஒரு அதட்டல் போட, அவள் எழுந்து நின்றாள். துணிகளை விலக்கினாள். அவர் எதிரே நிர்வாணமாக நின்றாள்.

''கடவுளே, கடவுளே, கைலாசநாதனே, தென்னாடுடைய சிவனே, இது என்ன. எதற்கு இது. எனக்கு எந்த உணர்வும் வர வில்லை. நெஞ்சு வலிக்கிறது அவ்வளவே. இதை என்னால் ஏற்க முடியவில்லை. எனக்கு மண்டை பரபரக்கிறது. உச்சந் தலை வலிக்கிறது. தயவு செய்து விட்டுவிடு. இப்படியெல்லாம் நிற்க வைக்காதே. இது என்னை மயக்காது.''

''உங்கள் மீது உயிரையே வைத்திருக்கிறாள்.''

''எதற்கடி. சரியான இடத்தில் திருமணம் செய்து கொள். நல்ல பிள்ளைகள் பெற்று வாழட்டும்.''

''அரசர்கள் வயோதிகத்தில் திருமணம் செய்து கொள்வது உண்டு.''

''எதற்காக. வாரிசு பெறுவதற்காகவா. அதற்கு இயலாதே. நடக்கவே முடியவில்லை. நான் என்ன வாரிசு பெறப் போகி றேன்.''

''இவள் ஜாதகம் நல்ல ஜாதகம். இவளை திருமணம் செய்து கொண்டால் நீங்கள் இன்னும் நெடுநாள் நீண்டு வாழ் வீர்கள்.''

''எவன் சொன்னான். கொன்றுவிடுவேன்.'' அவர் வாளைத் தேடினார். வாள் இல்லை. கைத்தடியை உருவிக் கொண்டார். உயரே பிடித்தார்.

''என்ன செய்வேன் என்று எனக்குத் தெரியாது வீரமா தேவி. இத்தனை வயதுக்குப் பிறகு என்னிடம் அடி வாங்காதே. விலகிப் போ. இது மகாபாவம். ஒரு பெண்ணின் வாழ்க்கையை பாழடிக்காதே. நான் செய்த பாவங்கள் போதும். அந்த பாவங் களினால் தான் எனக்கு வாரிசு இல்லாத ஒரு வேதனையை தந்திருக்கிறது. இந்த பெண்ணினுடைய வாழ்க்கையை எதற்கு சூறையாடுகிறாய்.''

''இல்லை. இந்த பெண்ணை நீங்கள் திருமணம் செய் தால் இன்னும் பத்து வருடம் நிச்சயம் வாழ்வீர்கள் என்று எனக்கு சொல்லப்பட்டது.''

''எந்த மடையன் சொன்னான். இப்படி பத்து வருடத்திற்கு ஒரு திருமணம் செய்து கொண்டே போவாயா. அறிவில்லை உனக்கு. குழந்தை முகமடி. நல்லது கெட்டதே தெரியாத கண் கள். இவளைப் போய் என்னிடம் அனுப்புகிறாய். போ. விலகிப் போ. உன்னை பார்க்க நான் விருப்பப்படவில்லை.''

வீரமாதேவி அந்த பெண்ணிடம் கண் காட்டினாள். அந்தப் பெண் அவருக்கு நெருங்கி வந்தாள். நிர்வாணமாக நின்ற படிக்கு அவரையே வைத்த கண் வாங்காமல் பார்த்தாள். பிறகு மெல்ல தலை குனிந்து கொண்டாள்.

''என்ன செய்கிறாயடி. இதனால் நான் பாதிக்கப்படு வேனா. இது எனக்கு கிளர்ச்சியை கொடுக்குமா. இதனால் நல்லது நடக்குமா. என்ன அபத்தம் இது. உட்காரும்போதே மூச்சு வாங்குகிறது. நடக்க முடியவில்லை. இந்த குழந்தையை நான் என்ன செய்வேன். அடிப் பாதகி. உடுத்திக் கொள்ளச் சொல். எனக்கு தூக்கம் வருகிறது. நெஞ்சு அடைக்கிறது.'' அவர் சாய்ந்து கொள்ள, வீரமாதேவி உதவி செய் என்று உத்தர விட்டாள். பின்னடைந்தாள்.

அந்தப் பெண் விரைவாக உடுத்திக் கொண்டது. அவர் காலை தூக்கி படுக்கையில் போட்டது. கணுக்காலை, ஆடு கால் தசையை தொடையை பிடித்துவிட்டது. அருகே உட் கார்ந்து நெஞ்சை தடவிவிட்டது.

''நான் தூங்கிக் கொள்கிறேன் பெண்ணே. உன் பெய ரென்ன.'' ஏதோ சொல்லியது. அவருக்கு காது கேட்கவில்லை. சட்டென்று காது கேட்பதும், சட்டென்று காது கேட்காததும் அவருக்கு ஏற்பட்டன. அவர் ஒரு வேதனையான முகத்தோடு தூங்கிப் போனார்.

அந்தப் பெண் எழுந்து, அவரை விழுந்து நமஸ்கரித்தது. அதிகாரிச்சிகள் உள்ளே வந்து விசிறத் துவங்கினார்கள். அந்தப் பெண் இறங்கி நந்தவனத்து மேடையில் அமர்ந்து கொண்டது.

என்ன நடக்கிறது தனக்கு. இது சரியா தவறா. நான் இங்கு இருப்பதா. வெளியேறுவதா. யோசிக்கத் தெரியாது, யோசிக்க கற்றுக் கொள்ளாது வளர்ந்த பிள்ளை தவித்தது.

வீரமாதேவி அருகே வந்தாள்.

''எப்பொழுது அவர் முன் நிர்வாணமாக நின்றுவிட் டாயோ, எப்பொழுது அவர் உன் உடம்பை முழுவதும் பார்த்து விட்டாரோ பிறகு எப்படி இன்னொரு ஆள் உன் வாழ்க்கை யில் வர முடியும். எத்தனை பேர் முன் இப்படி நிற்பாய். முதலும், கடைசியும் இவரே. எனவே, நீ இவருக்கு மனைவி என்பதை புரிந்து கொள். வீணான கற்பனைக்கு இடம் கொடுக்காதே. உன் புருஷன் சக்ரவர்த்தி இராஜேந்திரர்,'' என்று அதட்டினாள்.

அந்தப் பெண் எழுந்து நின்று 'சரி'' என்று சொன்னாள்.

இன்னும் பத்து வருடம். இன்னும் பத்து வருடம் வாழ்ந்து விட்டால் குலோத்துங்கனுக்கு இவர் பட்டம் கட்டிவிடுவார் என்று வீரமாதேவி வேகமாக கணக்கு போட்டாள். விதி வேறு விதமாக யோசித்து வைத்திருந்தது.

எண்பத்து மூன்றாவது அகவை கொண்டாடப்பட்டது. கங்கை கொண்ட சோழபுரத்தில் அதிகம் கொண்டாட்டம் இல்லை. காஞ்சிபுரத்தில் தான் கொண்டாட்டம். பாணர்கள் கூட்டம் கூட்டமாக வந்தார்கள். விதம் விதமாக பாடினார்கள். சகலருக்கும் வாரி இராஜேந்திரர் வழங்கினார்.

மறுபடியும் பொதுமக்களோடு அருகே உட்கார்ந்து பேசினார். உச்சி வெய்யிலில் வியர்த்து மூச்சு திணறியபோது அரண்மனைக்குள் வந்தார். இருமத் துவங்கினார். உள்ளுக்குள் மருந்து சாப்பிட்டதும், களிம்பு தடவியதும் இருமல் நின்றது. ஆனாலும் மூச்சு வாங்குவது அதிகரித்திருந்தது.

'தை மாதம் மகர சங்கராந்திக்குப் பிறகு ஒரு நல்ல முகூர்த்தத்தில் மிகப் பெரிய சண்டி ஹோமம் செய்வதாக தீர்மானித்திருக்கிறோம்.'' காஞ்சிபுரத்திற்கு அடுத்து உள்ள பிரம்மதேசத்திலிருந்து அந்தணர்கள் வந்தார்கள்.

மிகப் பெரிய நிலப்பரப்பு அவர்களுக்கு சொந்தமாக இருந்தது. ''ஏரிப் பாசனம். வானம் பார்த்த பூமி. ஆனால் நிலத்தடி நீர் அருமையாக இருக்கிறது. ஏற்றம் கட்டி உழுகிறார்கள். கீழை சாளுக்கியத்து வீரர்களால், ஒட்ட தேசத்து வீரர்களாலும் நில வேலைகள் நன்கு நடைபெறுகின்றன. பயிர் வகைகள் மிகச் செழிப்பாக வளர்கின்றன. எருதுகள் கீழை சாளுக்கியத்திலிருந்து வந்து உழுவதற்கு உதவியாக இருக்கின்றன. இரண்டு போகம் நிச்சயம். மூன்றாவதில் துவரையோ, மல்லாட்டை பயிரோ போட்டு விடுகிறோம். காய்கறிகள் பயிரிட்டு பறித்துக் கொண்டு அங்கேயே செடிகளை வெட்டி உரமாக போட்டு விடுகிறோம். மரத் தழையாலும், ஆடுகளின் புழுக்கையாலும், மாடுகளின் சாணத்தால், நல்ல உரம் கலந்து போடப்பட்டு செழிப்பாக பயிர்கள் வளர்கின்றன.

கீழை சாளுக்கியத்து மரக் கன்றுகள், மாமரக் கன்றுகள் கொண்டு வரப்பட்டு நடப்பட்டு மிக அற்புதமாக வளர்ந்து

கனி கொடுக்க துவங்கிவிட்டன. மாந்தோப்பு, பனந்தோப்பு, வேப்பஞ்சோலை என்று பலதும் பிரம்மதேசத்தில் இருக்கின்றன.

அரசர் வந்து கலந்து கொண்டால் சந்தோஷமடைவோம்.'' அந்தணர்கள் வந்து அழைத்தார்கள்.

''வரலாமே.'' வீரமாதேவி யோசித்தாள்.

''இந்த சண்டிஹோமம் எதற்காக செய்யப்படுகிறது.'' வினவினாள்.

''அரசருக்காக. அரசருடைய நலனுக்காக. அவர் ஆரோக்கியத்திற்காக. சோழ தேசத்திற்காக செய்யப்படுகிறது.'' வற்புறுத்தி அழைத்தார்கள்.

''அடியே, அருகே இருக்கிறது என்று சொன்னாய். இவ்வளவு தொலைவா.'' யானையில் ஆடிக்கொண்டு வந்த சக்கரவர்த்தி கேட்டார். அவருக்கு இறங்கி நடந்தால் தேவலாம் என்று இருந்தது.

வீரமாதேவிக்கும் புரியவில்லை. அருகே அருகே என்று சொன்னார்கள். இவ்வளவு தொலைவா. ஊர் தாண்டி வயல் வெளிகளுக்கு நடுவே ஒரு அழகிய கோவில் இருந்தது.

''இது பல்லவர் கால கற்றளி. உள்ளே வாருங்கள்.'' சிவாச்சாரியார் அழைத்தார்கள்.

''இங்கே காம கோட்டம் இல்லை. சிவன் மட்டுமே. காமக் கோட்டம் வேண்டும் என்று வைதீகர்கள் சொல்கிறார்கள். சிவாச்சாரியாரான நாங்கள் ஒத்துக் கொள்ளவில்லை. சிவன் மட்டுமே முக்கியம் என்று அவருக்கு ஆறு வேளை பூஜை செய்கிறோம்.

வயல்களில் பெரும் பரப்பு எங்களுக்குச் சொந்தம். நீங்கள் வந்து தரிசித்து விட்டு போக வேண்டும்.''

இருட்டில் இராஜேந்திரர் தடுமாறினார். ஒரு குறுஞ்சுவர் ஏறி நாலுபேர் துணையோடு இறங்கினார். கோவிலைச் சுற்றி வந்தார்.

''அட, என்ன சிற்பம் அது,'' என்று விமானத்தை பார்த்தார்.

''சிவன் நந்திக்கு புல் கொடுத்து கொண்டிருக்கிறார்.''

''அற்புதம். இப்படி ஒரு சிற்பம் நான் பார்த்ததே இல்லையே. அழகாக இருக்கிறது. இது என்ன.''

''பூதகியின் மார்பில் கிருஷ்ணர் பால் உறிஞ்சி குடிக் கிறார்.''

''ஆமாம். தெரிகிறது. பூதகி அலறுகிறாள் அல்லவா.''

''ஆமாம்.''

''இது என்ன நடனப் பெண்மணி.''

''பானை மீது நடனமாடுகிறாள்.''

''அப்படி ஆடுவது உண்டா.''

''இந்த பக்கத்தில் தேவரடியார்கள் அப்படி தாம்பாளத் தட்டிலும், பானை மீதும் நடனமாடுவார்கள்.''

''இன்று இரவு பார்க்கலாமா.'' ஆவலாகக் கேட்டார். அவரை அழைத்துக் கொண்டு பந்தலுக்கு போய் உட்கார வைத்தார்கள். காற்று சுழன்று அடித்தது. அவர் கையால் நெருப்பு வாங்கி, நெய் தடவிய வறட்டியின் மீது வைத்தார்கள். விசிறினார்கள். மெல்ல தழல் பற்றிக் கொண்டது. சிறாய்களை அடுக்கினார்கள். கட்டைகளை போட்டார்கள். நெய் வளர்த் தார்கள். மிகச் சிறந்த ம்முறையில் ஹோமம் நடத்தினார்கள். புகை சுற்றி சுற்றி கிளம்பியது. இராஜேந்திரர் முகத்தை தாக்கியது. பத்து நிமிடத்திற்கு மேல் அங்கு இருக்க முடியவில்லை. மூச்சு திணறுகிறது என்று சொல்ல, வெளியே ஆசனம் கொண்டு வந்து போட்டார்கள். வெளியே இரட்டை ஆசனம் போடப் பட்டது. வீரமாதேவியும், இராஜேந்திரரும் அமர்ந்து கொண் டார்கள்.

அவருக்கு முதல் பிரசாதமாக சக்கரைப் பொங்கலும், புளியோதரையும் தீர்த்தமும் தரப்பட்டன. பசித்ததால் இன்னும் கூட சக்கரைப் பொங்கல் கேட்டு வாங்கிக் கொண்டார். கொஞ்சம் தெளிந்தாற் போல் இருந்தது. அவரைச் சுற்றி கிராமத்து மக்கள் சூழ்ந்து கொண்டார்கள்.

''அட, எந்த ஊர் நீங்கள்.''

''நாங்களும் பிரம்மதேயம் அய்யா. மறவர் குடியிருப்பு.''

''அப்படியா. அருகே வாருங்கள்.'' ஒவ்வொருவரையும் உற்றுப் பார்த்தார்.

''இவ்வளவு அருகில் உங்களை பார்ப்போம் என்று நாங்கள் நினைக்கவே இல்லை. குலை நடுங்குகிறது அய்யா.'' பலபேர் அவர் காலை தொட்டு வணங்கினார்கள். அவர் அனுமதித்தார்.

கூட்டம் பொங்கி பொங்கி ஓடிவந்தது. கூட்டத்தை தடுத்து நிறுத்தி, அவரை கோவிலுக்கு அருகே உள்ள விநாயகர் மண்டபத்திற்கு அழைத்துப் போனார்கள். அங்கு நார்கட்டிலில் படுத்து தூங்கினார். போர்த்தி விட்டார்கள். குபீரென்று வியர்த்தது.

''என்னமோ சங்கடமாக இருக்கிறது. மூச்சு சரியாக விட முடியவில்லை. படுத்தால் மூச்சு அடைக்கிறது.'' எழுந்து உட்கார்ந்து பெருமூச்சு விட்டார். மெல்ல நின்றார். தூணை பிடித்துக் கொண்டார். இருமினார். சளி துப்பினார். மறுபடியும் வியர்த்தது. உடம்பு துடைத்து விட்டார்கள். மெல்ல கோவிலிலிருந்து விலகி நடந்தார். இரண்டு அதிகாரிச்சிகள் அவருக்கு அருகே வந்து அணைத்துக் கொண்டார்கள். அவர்கள் தோளில் கை வைத்தபடி அந்த கோவில் நந்தவனத்தை தாண்டி வெளியே வந்தார்.

தள்ளாட்டம் அதிகமாக இருந்தது.

''ஹோமத்தை நீங்கள் முடியுங்கள். நான் மாளிகைக்கு திரும்புகிறேன்.'' யானையின் மீது கால் வைத்து மெல்ல ஏறினார். ஏறி உச்சியில் அழுத்தி உட்கார வேண்டியவர் சட்டென்று உடம்பை தளர விட்டார். யானையிலிருந்து வேகமாக சரிந்து, யானையின் காலில் விழுந்து தரையில் மோதினார்.

ஊர் அலறியது. அதிகாரிச்சிகள் ஒருவரை ஒருவர் கடிந்து கொண்டார்கள். அணைத்து வாரினார்கள். உடம்பு துடைத்தார்கள். பின்னந் தலையில் அடிபட்டது போல் வலித்தது.

''என்னடி விட்டு விட்டீர்கள்'' என்று மெல்லியதாக சிணுங்கினார். யானை வேண்டாம். குதிரை என்று சொன்னார். குதிரையில் ஏற முடியாது என்று தெரிந்தது. பல்லக்கு வந்தது. பல்லக்கில் ஏறி உட்கார்ந்து கொண்டார். வீரமாதேவி முன்பக்கம் அமர்ந்து கொண்டாள்.

திறந்த பல்லக்கு முன்னும் பின்னுமாக நாலு நாலு பேர் தூக்கினார்கள். அழகாக நடை போட்டார்கள். நான்கு தூண் பல்லக்கு என்பதால் நடுவே ஒருவன் குடைபிடித்து வந்தான். இருந்தாலும் அவ்வப்போது முகத்தில் வெய்யில் அடித்தது.

''ஹோமத்திற்கு குலோத்துங்கன் வந்திருக்கிறானா'' என்று திடீரென்று கேட்டார்.

''இல்லையே. அவர்களுக்கு சொல்லி அனுப்பவே இல் லையே.''

''நான் பார்த்தது போல் இருந்ததே. குலோத்துங்கன் அங்கு நின்றிருந்தானே. திருப்பு. ஹோமத்திற்குப் போகலாம் திருப்பு. குலோத்துங்கன் அங்கு இருக்கிறான்.'' உளறினார்.

வீரமாதேவி தொடர்ந்து போகும்படி சைகை செய்தாள். அவர்கள் தொடர்ந்து நடந்தார்கள்.

''திருப்பச் சொன்னேனே.''

''திரும்பித்தான் போகிறோம். ஹோமத்திற்குத்தான் போகி றோம்.'' வீரமாதேவி பொய் சொன்னாள். அவர் கண்கள் மூடிக் கொண்டார். மூச்சிரைத்தது. நெஞ்சு வலித்தது. முகவாய் வலித்தது. தாடையின் கீழ் இறுக்க முறுக்கியது போல் இருந்தது. இடது கையிலிருந்து மின்னல் வெட்டு போல் ஒரு வலி விரலில் பரவியது. மார்பின் இடப்பக்கம், கீழே சுருக் சுருக் கென்று குத்தியது. நடு மார்பில் ஒரு வேதனை இருந்தது.

''வீரமாதேவி, வீரமாதேவி'' என்று அவர் அழைத்தார்.

''என்ன.''

''ஏதோ செய்கிறது. பல்லக்கு அசைவு தாங்கவில்லை. இறக்கச் சொல்.'' அவர்கள் கம்பு போட்டு இறக்கினார்கள். மர நிழலில் உட்கார வைத்தார்கள்.

''வீரமாதேவி.''

''என்ன ஆயிற்று.''

''முடிந்து போயிற்று.''

''என்ன சொல்கிறீர்கள்.''

"என் தகப்பன் இராஜராஜன் வந்துவிட்டார். வீர கேரளன் இருக்கிறான். எல்லோரும் வந்திருக்கிறார்கள். அரையன் அரையன், வாருங்கள் அரையன்."

"எங்கு இருக்கிறார்."

அவர் உளறினார். உடம்பு தூக்கி தூக்கி போட்டது. அவள் அருகே போய் அணைத்துக் கொண்டாள். எல்லோரும் போய் எட்டி பார்த்தார்கள். விசிறினார்கள். அதிகாரிச்சிகள் அருகே வந்து ஈரத்துணியை முகத்தில் துடைத்தார்கள்.

"நன்றி. மிக்க நன்றி. இதுதான் சரியான உதவி. இறக்கும் நேரத்தில் குளுமையாக இறக்க வேண்டும். இறக்கும் நேரத்தில் தாகம் தீர வேண்டும். தாகம். தாகம்" என்றார். அவருக்கு குடிக்க நீர் கொடுத்தார்கள்.

தொண்டையில் பட்டு உணவுக் குழாயில் இறங்கி, இரைப் பையை சில்லென்று ஜலம் அடைந்தது. அந்த அழுத்தத்தை உடம்பு தாங்காமல் தவித்தது. அந்த நீர் வேகத்தை நுரையீரல் தாங்கவில்லை. மடமடவென்று எல்லா குமிழிகளும் அடை பட்டன. மிகப் பெரிய இருமலும், பெருமூச்சும் விட்டார். மார்பு அதிகமாக துடித்தது. வியர்த்தது. மறுபடியும் துடைத்துவிட்டார் கள். வைத்தியர் ஓடி வந்தார். நாடி பார்த்தார்.

"கடவுளே கடவுளே" என்று கதறினார். பிறகு நெற்றி யில் வேகமாக பற்று போட்டார். துணியை பற்ற வைத்து புகை போட்டார். இழுக்கச் சொன்னார். ஆனால் அவரால் மூச்சு இழுக்க முடியவில்லை. விடவும் முடியவில்லை. திணறியது.

"பாடு. பாடு. ஏதாவது பாடு. பாணர்களெல்லாம் எங்கே. ஓம் நமச்சிவாயா சொல்."

"நமச்சிவாய வாழ்க. நாதன் தாள் வாழ்க.
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க.
ஏகன் அனேகன் இறைவனடி வாழ்க."

அவர்கள் பாடினார்கள். அவரும் உடன் பாடினார். சட் டென்று உடம்பு குலுங்கி கண் மூடிக் கொண்டார். மெல்ல கண் திறந்து வீரமாதேவியைப் பார்த்தார்.

''வருகிறேன், வருகிறேன். சோழம். சோழம். சோழம்.'' மெல்ல கண்மூடிக் கொண்டார். காலை நீட்டிக் கொண்டார். நெஞ்சு அடைத்தது. மூச்சு இழுக்க முடியாமல் திணறியது. கை, கால்கள் முறுக்கின. உடம்பு முறுக்கினார். 'ப்ளக்' என்று ஒரு சத்தம் கேட்டது. நுரையீரலிலிருந்து ஒரு கொத்து சளி பிரிந்து தொண்டைக்கு வந்தது. அந்த வேகத்தில் இருதயம் சட்டென்று தாறுமாறாக துடித்து பளிச்சென்று நின்றது.

உயிர் துடித்தது. இருதயம் நின்று போக, நுரையீரல் செய லிழக்க, நாடி நரம்புகளெல்லாம் ஆயிரம் தேள்கள் கொட்டியது போல வலித்தது. விரல் நுனியெல்லாம் வலித்தது. எத்தனை வெட்டு, எத்தனை குத்து, எத்தனை வேல், எத்தனை கத்தி, எத்தனை யானை, எத்தனை குதிரை, எல்லா வலியும் இப்படித் தானே. இப்படித்தானே. எல்லா மரணமும் இப்படித்தானே.

''நமச்சிவாய வாழ்க. நாதன் தாள் வாழ்க.
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான்
தாள் வாழ்க''

உயிர் பிரிந்தது. மரத்தின் உச்சியில் சீறிப் போயிற்று. வெட்ட வெளியைக் கண்டது. அங்கிருந்து கீழே பார்த்தது.

அட, அங்கே பார் படுத்திருக்கிறான் இராஜேந்திரன். உயிர், உடம்பு தேடி வந்தது. பல்லக்கு அருகே நின்று கொண்டது.

இதான் இராஜேந்திரனா. அட இராஜேந்திரா. இறந்து போனாயே. எல்லாம் விட்டுவிட்டு போனாயே. என்ன செய்யப் போகிறாய். எங்கு தங்கப் போகிறாய். உன்னைச் சுற்றி பறை யொலி கேட்கின்றனவா. நீ வெட்டியவர்களெல்லாம் வந்திருக் கிறார்களே. பார்க்கிறாயா. அவர்களை பார்த்து விட்டு வா. இது முடிந்து போயிற்று. இந்த இராஜேந்திரன் இதோடு முடிந்து போனான்.

அவரைச் சுற்றி வெள்ளையான உருவங்கள் வந்தன. சக்கரவர்த்தி உடையார் ஸ்ரீ இராஜேந்திர தேவர் வாழ்க. பழக்கப் பட்ட குரல்கள். வெறும் குரல்கள்.

''யார் இராஜாதிராஜ பிரம்மராயனா. உத்தம சோழ மிலா டுடையனா. உத்தம சோழக் கோனா. எல்லாரும் போரில் இறந் தீர்களா. இப்பொழுது வந்தீர்களா. அரையன் எங்கே.'' அவர் அவர்கள்

கை பிடித்தபடி இருந்தார். அவர்கள் அவரை எங்கோ கூட்டிப் போனார்கள்.

அந்த இரண்டடுக்கு மாளிகையின் முன்னே உயரமாக சவுக்கு கட்டைகளும், சந்தன மரங்களும், கருங்காலி மரங்களும் அடுக்கப்பட அவர் கிடத்தப்பட்டார். சண்டி ஹோமம் பாதியில் நின்றது.

அந்த பிரம்மதேயத்தில் இருந்த ஒரே மாளிகையின் முன்பு வந்து குவிந்தார்கள். காஞ்சிபுரத்திலிருந்து படைகள் கிளம்பி வந்தன.

இராஜாதி ராஜனுக்கும், சுந்தர சோழனுக்கும் செய்திகள் போயின. அவர் இரண்டு நாட்கள் கட்டைகளின் மேலே கிடந்தார். உடம்பு ஊதியது. வேறு ஒரு வாயு உள்ளே புகுந்து கொண்டு அவரை வீங்க வைத்தது. இந்த வாயுவிற்கு தனஞ் செயன் என்று பெயர். இந்த வாயு அதிகரித்தால் உடம்பு தானாகவே பட்டென்று பிரியும். அந்தணர்கள் எச்சரித்தார்கள்.

''அது அவ்வளவு நன்றாக இருக்காது,'' என்று தாழ்ந்த குரலில் சொன்னார்கள். இராஜாதிராஜன் வந்ததும் மடமட வென்று காரியங்கள் நடைபெற்றன. தோளில் குடம் சுமந்து அவன் சுற்றினான். அந்த பானை குடத்தை உடைத்து போட்டான். கையில் தீப்பந்தம் ஏந்தினான்.

அரசியர்கள் அலறினார்கள். வீரமாதேவி இடி விழுந்தது போல் இருந்தாள். மக்கள் நெஞ்சில் அடித்துக் கொண்டும், தரையில் புரண்டும் அழுதார்கள். வீரர்கள் வேலையும், வாளையும் நெஞ்சில் அடித்துக் கொண்டு கதறினார்கள்.

இராஜாதிராஜன் சிதையில் ஏறி தன் வாளால் அவர் நெஞ்சு கிழித்தான். 'சோழம் சோழம்' என்று கூவினான். கீழ் இறங்கினான். தீப்பந்தம் வாங்கி சிதைக்கு அடியே உள்ள வழியில் சொருகினான். இளவல் இராஜேந்திரனும், வீர இராஜேந்திரனும் தீ வைத்தார்கள். மடமடவென்று காற்று வீச தீப்பற்றி உயரே எரிந்தது. பல்வேறு கட்டைகள் உடம்பின் மீது வேகமாக அடுக்கப்பட, அவர் முகம் மறைந்தது. நெருப்பு சுழன்று எரிந்தது. தீத்தழல் உயரமாக எழுந்தன.

இரண்டாம் மாடி கடைசியில் வீரமாதேவி இருந்தாள். நெருப்பில் இடப்படுவதை பார்க்க விரும்பாமல் இருந்தாள்.

'என்ன இது. என்னை விட்டு எங்கு போவீர். எங்கே போக முடியும். நீர் இல்லாத இடத்தில் நான் எப்படி இருப்பேன். என்னால் இங்கு இருக்க முடியாது.' அவள் திரும்பி பார்க்க, அந்தப் பெண் அவளையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

''என்னை மன்னித்துக் கொள்ளடி. நான் தவறு செய்து விட்டேன். உன்னை திருமணம் செய்து கொண்டால் தீர்க்க சுமங்கலியாய் இருப்பாய் என்று நினைத்து உனக்கு வஞ்சனை இழைத்து விட்டேன். நான் பாவி. ஒரு ஆணாலும் தீண்டப் படாத அளவுக்கு உன் வாழ்க்கை அமைய வேண்டுமா. அதற்கு நான் காரணமா. என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. என் புருஷனை எப்படி அனுபவித்து இருக்கிறேன். அந்த நினைவு களெல்லாம் இருக்கும்பொழுது நீ ஒன்றுமே இல்லாமல் இருக் கிறாயே. எனக்கு வயிறு குழைகிறது. என்னை மன்னித்து கொள்ளடி.'' மண்டியிட்டு அவள் கால்களை பிடித்துக் கொண் டாள்.

அந்தப் பெண் விலகி ஓடிற்று. எங்கோ போய் உரத்த குரலில் அழுதது. சுவரில் முட்டிக் கொண்டது.

வீரமாதேவி எழுந்தாள். வெள்ளைத் துணி எடுத்தாள். மஞ்சளில் தோய்த்து எடுத்தாள். மேலே போர்த்திக் கொண் டாள். நகைகளை கழற்றினாள். தலைமயிரை பிரித்தாள். நெத்திச் சுட்டியும், சந்திர பிரபையும், சூரிய பிரபையும், வங்கி யும், இடுப்பில் உள்ள குரங்கு செறியும் அவளிடமிருந்து விலகின. ஒரு துணியில் கட்டிக் கொண்டாள். அந்தப் பெண் அழுது கொண்டிருந்த இடத்தில் வீரமாதேவி அதை போட்டாள்.

அந்தப் பெண் நிமிர்ந்து மஞ்சள் துணியோடு இருக்கின்ற வீரமாதேவியைப் பார்த்து திகைத்தது. என்ன என்று புரியாமல் விழித்தது. ''அய்யோ'' என்று ஒரு அதிகாரிச்சி அலறினாள். ''அம்மா வேண்டாம் வேண்டாம் உடன்கட்டை வேண்டாம்'' என்று அலற, அந்தப் பெண்ணும் அலறியது.

''உடன்கட்டையா. தீயில் குதிக்கப் போகிறாளா'' என்று அலறியது. ''அம்மா, வேண்டாம் போகாதீர்கள். எனக்கு துணை யாக இருங்கள்'' என்று அவளை தடுத்தது. வீரமாதேவி உதறி னாள். வேகமாக ஓடினாள். மாளிகையின் முன்பக்கம் மேல்

மாடியில் நின்றாள். அங்கிருந்து தீ பரவி, சிதை பெரிதாய் எரிவது பார்த்தாள். கைப்பிடி சுவற்றில் ஏறி நின்றாள். சோழம் சோழம் சோழம் என்று கத்தினாள். எகிறி அந்த சிதை மீது விழுந்தாள். அவளை சிதை கனம் தாங்காமல் உடைந்து உள்ளே வாங்கிக் கொண்டது. பெரிய அலறல் அவளிடமிருந்து எழுந்தது. அவள் அந்த சிதைக்குள் சில விநாடிகளில் கருகிப் போனாள்.

அந்தப் பெண் வீரமாதேவி கொடுத்த மூட்டையோடு தன்னுடைய ஊருக்கு மாட்டு வண்டியில் நகர்ந்து போனாள்.

குலோத்துங்கன் ஓடிவந்து சிதையை சுற்றி சுற்றி வந்து அழுதான். சிதை அமைதியாயிற்று. கவனமாய் பிரித்து எலும்பு களை எடுத்தான். பானையில் சேகரித்தான். மற்றவர்களும் உதவி செய்ய, இராஜாதி ராஜனும், வீர இ்ராஜேந்திரனும், இளவல் இராஜேந்திரனும், சுந்தர சோழ பாண்டியனும், குலோத் துங்கனும் ஆளுக்கு ஒரு பித்தளை பாத்திரத்தில் அஸ்தியை எடுத்துக் கொண்டு போய் காவிரியில் கரைத்தார்கள்.

குலோத்துங்கன் அதிகம் பேசாது கீழை சாளுக்கியம் திரும் பினான். சோழ தேசம் துக்கப்பட்டது. ஆனாலும் தொடர்ந்து இயங்கியது.

''தந்தனத்தோம் சொல்லியே, வில்லினில் பாட, ஆமாம் வில்லினில் பாட'' பாணர்கள் இராஜேந்திர சோழரின் புகழை சோழ தேசம் எங்கும் பாடிக் கொண்டு போனார்கள்.

அருண்மொழி பட்டன் வாளை அவிழ்த்து தன் மகனிடம் கொடுத்துவிட்டு, தஞ்சையில் வசிக்கப் போகிறேன் என்று நகர்ந்து விட்டான். கிருஷ்ணன் இராமனான தகப்பனிடம் போய் கேயூரங்கள் இல்லாமல், பட்டம் பதவிகள் இல்லாமல் வெறும் குடுமி வைணவனாக தொடர்ந்து வாழ்ந்தான்.

''சண்டி ஹோமம் பாதியில் நிறுத்தியது தவறு. மறுபடியும் ஆரம்பிக்க வேண்டும்.'' சிவாச்சாரியார்களை புறக்கணித்து விட்டு வைதீக பிராமணர்கள் சண்டி ஹோமம் பல இடங்களில் துவக்கினார்கள்.

உக்கிரமான காளிகளை பெயர்த்து எடுத்து வந்துவிட்டோ மல்லவா. அந்த கோபம் இருக்கத்தானே செய்யும். அவளை

சாந்தப்படுத்த வேண்டும் என்று யாகம் வளர்த்தார்கள். தாயே தெய்வம். இறை பெண் ரூபம். மகிஷாசுரமர்த்தினி அவள் துர்க்கை என்றெல்லாம் சொல்லி சோழ தேசம் தன் பாதையை மாற்றியது. சிவனுடைய உக்ரம் காபாலிக, காளாமுக வெஞ் சினம் குறைந்தது. பெண் மக்கள் வளர்த்த பெண் தன்மை மிக்க வீரர்கள் வளர்ந்தார்கள். கவிஞர்கள் அதிகரித்தார்கள். கலைஞர்கள் இன்னும் சிறப்பானார்கள். போர் வீரர்களுக்கு மெல்ல மெல்ல மரியாதை குறைந்தது.

போர் நேரத்தில் போர் செய். மற்ற நேரத்தில் கல் தூக்கு. எடுபிடியாக இரு என்று கலைஞர்கள் சொல்ல, அவர்கள் செய்வதறியாது திகைத்தார்கள். அந்த உக்ர நடனம் இனி ஆட முடியாது என்பதை புரிந்து கொண்டார்கள். சோழ தேசம் ஆண்மையிலிருந்து விடுபட்டு பெண்மையாக தன்னை மாற்றிக் கொண்டது.

நிறைய ஆண்கள் இறந்து போய் விதவைகள் வளர்த்த பிள்ளைகளால் சூடு தணிந்தது. அடுத்த அடுத்து வந்த அரசர் கள் முட்டி மோதி பார்த்தாலும் இராஜேந்திர சோழரிடம் இருந்த வெறியும், இராஜராஜரிடம் இருந்த தந்திரமும் இல்லை.

எது உயர்ந்தாலும் அது தாழும். எது தாழ்ந்தாலும் அது உயரும். இது உலகத்தின் நியதி.

சோழ தேசத்தின் உச்சி வெய்யில் மெல்ல சரியத் துவங் கியது. அது முற்றிலும் மறைய இருநூற்றி ஐம்பது வருடங்கள் ஆயின. பாண்டியர்கள் உள்ளே நுழைந்து சோழ தேசத்தில் ஒரு தூணும் நிற்கவொட்டாது இடித்து, கோவேறு கழுதை பூட்டி உழுது, பேய் கடுகு விதைத்தார்கள். வயல்களை பாழாக் கினார்கள்.

நானூறு வருட வெஞ்சினத்தை தமிழ் பேசும் பாண்டி யர்கள் தமிழ் பேசும் சோழர்களை அழித்தார்கள். ஒரு இனம் மற்ற இனத்தால் அழிபடுவதில்லை. தன்னைத் தானே தான் அந்த இனம் பிரித்து அழித்துக் கொள்கிறது என்பது மிகப் பெரிய சரித்திர உண்மை.

அத்யாயம் 112

அதே இடம். தாவரங்கள் இன்னும் செழித்து வளர்ந் திருந்தன. காட்டுக்கு நடுவே திடீரென்று ஒரு மாளிகை பரப் பளவில் உண்டான திடல் கொஞ்சமும் மாறாமல் இருந்தது. தீ மூட்டப்பட்ட அக்னி தடமே இல்லாமல் இருந்தது. ஆனால் தொலைவிலிருந்து பார்க்கும்பொழுது மண் மேடிட்டிருப்பது தெரிந்தது. ஒருவேளை இந்த மண்ணை கிளறினால் எலும்புக் கூடுகள் கிடைக்கக் கூடும்.

அவன் அருகே வந்து அந்த மண்ணைத் தொட்டு நெற்றி யில் இட்டுக் கொண்டான். நடக்க முடியாதவனாக, மிகவும் தளர்ந்தவனாக, உடம்பு அசதியில் தவிப்பவனாக இருந்தான். கையில் கோலூன்றி இருந்தான். இடுப்பில் கோவணமும், தலையில் தலைப்பாகையும் தரித்து இருந்தான். கால்களில் தோல் செருப்பு இருந்தது. அவன் மெல்ல அந்த மேட்டுக்கு அருகே உட்கார்ந்து கொண்டான்.

ஒரு வயதாளியை தடவுவது போல அந்த மண் மேட்டைத் தடவினான். பின்னால் ஆலமரம் நின்றது. வலப்பக்கம் அரசமரம் தெரிந்தது. எதிரே சில மரங்கள் சரிந்திருக்கக் கூடும். வேறு மரங்கள் முளைத்திருந்தன. இடதுபக்கம் நீர் சுனைக்கு போகும் பாதை இருந்தது. அவன் இந்த இடம்தான் என்பதை தெளிவு படுத்திக் கொண்டான். பலமுறை சுற்றிப் பார்த்து உறுதி செய்து கொண்டான். சிரித்தான். மெல்ல அந்த மேட்டின் மீது சாய்ந்து அழ ஆரம்பித்தான். அழுகை அலறலாயிற்று.

இந்த மேட்டின் மீதுதானே நீ இறங்கினாய். இதில்தானே நெருப்பு வளர்த்து உன்னை பலியாக்கிக் கொண்டாய். உனக்கு ஒரு சந்தோஷச் செய்தி கொண்டு வந்து இருக்கிறேன். இராஜேந் திர சோழன் இறந்து விட்டான். அவன் மரணமடைந்து விட்டான்.

சோழ சாம்ராஜ்ஜியத்தின் வீர்யம் சரியத் துவங்கி விட்டது. பாண்டிய தேசத்து ஆபத்துதவிகள் ஒன்றாக இருக்கின்றார்கள். ரோஹணத்தில் வளர்கின்றார்கள். நாம் ஜெயிப்போம். நாம் ஜெயிப்போம். இந்த போர் முடியாது. இந்த போர் முடியாது, நாம் ஜெயிப்போம்.''

அவன் தன் பிரம்பு குச்சியை மேட்டில் அடித்தான். ஊன்றி எழுந்தான். இடுப்பிலிருந்து கற்களை எடுத்து சத்தைகளை திரட்டி வேகமாக நெருப்பு பற்ற வைத்தான். நெருப்பு குச்சி களில் பரவி, குச்சிகளிலிருந்து பெரிய மரக்கட்டைகளில் பரவி, பெரிய மரக் கட்டைகளிலிருந்து காய்ந்த அடிமரங்களில் பரவி தகதகவென்று எரிந்தது,

''இந்த சந்தோஷமான விஷயத்தை உனக்கு சொல்லத் தான் வந்தேன். பாண்டியர்கள் ஜெயிப்பார்கள். சோழர்கள் அழி வார்கள்.

அப்பா, என் தந்தையே, உனக்கு கேட்கிறதா உனக்கு இன்று நூற்று சொச்ச வயது, என்னால் எண்ணக்கூட முடியவில்லை. சோழர்கள் சரிய வேண்டும் என்றுதானே உன் உயிரை தியாகம் செய்தாய். சரிந்து விட்டார்கள். வம்சம் இல்லை, வம்சம் இல்லை, வம்சம் இல்லை.'' அவன் சந்தோஷமாக கத்தினான். நெருப்பு சுற்றி நடனமாடினான்.

''பெண் வயிற்று ஆண் வரப்போகிறான், வந்து கொண் டிருக்கிறான். மற்றவர்கள் எல்லோரும் நின்று போனார்கள். நம்முடைய வயிற்று எரிச்சல் அவர்கள் வம்சத்தை அழித்தது. ஆண் வாரிசு இல்லாது செய்தது. ஆக, பெண் வயிற்று மகவு ஒரு மாற்றுக் குறைவு. மிகப் பெரிய சோழ சாம்ராஜ்ஜியம், பாண்டியர்களை பதற அடித்த சோழ சாம்ராஜ்ஜியம், பாண்டிய பெண்களை மானபங்கப்படுத்திய சோழ சாம்ராஜ்ஜியம், பாண்டிய மாளிகைகளை இடித்து நாசம் செய்த அந்த சோழ சாம்ராஜ்ஜியம் இதோடு நின்று போயிற்று. இனி எவன் பிறந் தாலும் அவன் சோழன் அல்ல. அவ்வளவுதான்.'' அவன் அழுகை யும், சிரிப்புமாய் கூத்தாடினான்.

இதை உனக்கு சொல்லத்தான் வந்தேன். இந்த சொச்ச நாய்களும் அடிபட வேண்டும். இந்த குலோத்துங்கனும் வேரறுபட

வேண்டும். இவனால் இவன் பின் வருகின்ற பரம்பரையும் அழிந்தொழிய வேண்டும். மதுரையிலிருந்து மிகப் பெரும் படை கிளம்பி சோழ தேசத்தை ஊடுறுத்து அங்கு ஒரு மாளிகைத் தூணும் நிற்கவொட்டாது இடித்து சாய்க்க வேண்டும்.

கங்கை கொண்ட சோழபுரம் என்ற மிகப் பெரிய பட்டிணத்தை நிறுவி இருக்கிறான். தேவர்களுடைய சாம்ராஜ்யம் போல் இருக்கிறது. இருட்டில் ஒளிர்கிறது. பகலில் பார்க்க பரவசமாக இருக்கிறது. மனிதர்கள் மிக சுகமாக வாழ்கிறார்கள். ஊர் முழுவதும் கொள்ளையடித்து ஒரு கும்பலுக்கு தீனி போட்டுக் கொண்டிருக்கின்ற அயோக்கியத்தனம் நடைபெறுகிறது. அடிமைகளாய் ஜனங்களை இழுத்துவந்து பெண்களை போகத்திற்காகவும், ஆண்களை கூலி வேலைக்காகவும் சோழ சாம்ராஜ்ஜியம் பயன்படுத்திக் கொண்டிருக்கிறது. இதை அழிக்க வேண்டும். இந்த இடத்தில் மதுரை போய் அமர வேண்டும். இந்த இடத்தில் பாண்டிய ஜனங்கள் போய் ஆட்சி செய்ய வேண்டும். மொத்த சோழ சாம்ராஜ்ஜியத்தையும் இடித்து அங்கிருந்து அடிமைகளை கொண்டு வந்து பாண்டிய மண்ணில் நிரப்ப வேண்டும். பாண்டிய தேசத்தில் மாளிகைகள் எழுப்ப வேண்டும். இது நடக்க வேண்டும். நீ நினைத்தால் முடியும். உன் உயிர் துடித்தால் முடியும். நீ அங்கிருந்து கீழ் இறங்கினால் முடியும்.

சொல். சொல். வந்து சொல். எனக்கு பதில் சொல். மதுரை இனி முன்னேறுமா, பாண்டியர்கள் ஜெயிப்பார்களா. சொல்.''

மேலே காற்றால் உடைபட்டு வேறு மரக்கிளையில் தொடங்கிக் கொண்டிருந்த காய்ந்த கிளை ஒன்று சரட்டென்று நகர்ந்து அந்த தீயினுடைய புகை தாங்காமல் கீழே விழுந்து அந்த தீயில் பொசுங்கத் துவங்கியது.

அடே, அடே இறங்கி வந்துவிட்டாயா. இறங்கி பூமிக்கு சூட்சுமமாக வந்துவிட்டாயா. மிகுந்த சந்தோஷம். மிகுந்த சந்தோஷம். என்ன செய்ய வேண்டும். உனக்கு என்ன வேண்டும். உனக்கு என்ன வேண்டும். ம்.. எரி, எரி,'' அவன் இன்னும் செத்தைகளையும், மரக்கிளைகளையும் வாரிப் போட்டான்.

''போதுமா, என் அப்பனே. இது ஒருயாகத் தீ. இது ஒரு வேள்வி, இடையறாது இடையறாது பாண்டியர்களுடைய

வயிற்றிலே எரிகின்ற நெருப்பு இது. அந்த பாண்டிய மக்களுடைய நெருப்பு சோழ தேசத்தை பொசுக்க வேண்டும்.

இறக்க முடியவில்லை. மரணம் வரவில்லை. நான் கத்தி எடுத்ததே இல்லை. நான் சண்டை போட்டதேயில்லை. நான் வெறும் கூலிக்காரனாக சோழ தேசத்தின் மண்கீறி உழுதுண்டு வாழ்பவனாக இருக்கிறேன். ஆனால் எனக்கு அங்கே இருக்க பிடிக்கவில்லை. அங்கிருந்து வந்துவிட்டேன். இதோ, இந்தச் செய்தியை உன்னிடம் சொல்லியாயிற்று.

இராஜேந்திர சோழன் இறந்தான் என்றவுடன் ஊரே அழுதது. நான் சிரித்தேன், கும்மாளமிட்டேன். தரையில் உருண்டு புரண்டேன். ஆனால் அங்குள்ளவர்கள் தாங்குவார்களா. சந்தேகமாக பார்த்தார்கள். தப்பித்தோம் பிழைத்தோம் என்று பாண்டிய தேசத்தின் இந்த கடை கோடிக்கு வந்து விட்டேன். இனி யார் என்று தேடுவார்கள்.

வாய்விட்டு சிரிப்பேன். ஆனந்தமாகச் சிரிப்பேன். அற்புதமாக சிரிப்பேன். சிரித்துக் கொண்டே இருப்பேன். இராஜேந்திர சோழன் இறந்தான். சோழ வம்சம் முடிந்தது.'' அவன் எரியும் தழலையே பார்த்தான். புகை வெகுதூரம் உயர்ந்தது. அவன் கை கூப்பினான்.

எனக்கு வாழ பிடிக்கவில்லை. நானும் உன்னோடு வருகிறேன். இங்கிருந்து தீ பாய்ந்து உன்னை தழுவி உன்னோடு சேர்ந்து சோழ தேசத்தை நிலைகுலையும் வண்ணம் பல்வேறு செயல்கள் சூட்சமமாக செய்ய வருகிறேன்.

ஏகப்பட்ட தவறுகள் செய்திருக்கிறார்கள். அந்த தவறுகளெல்லாம் அவர்களை நோக்கி திரும்பும்படி நீயும், நானும் செய்வோம்.

என் தகப்பனே, என் தகப்பனே, என்னை அள்ளி எடுத்துக் கொள். என்னை வாரிக் கொள். நானும் வருகிறேன். பாண்டிய தேசத்தில் துடித்துக் கொண்டிருக்கும் ஒவ்வொரு உயிரும் பிராணத் தியாகம் செய்யட்டும். அப்பொழுது தான் சோழ தேசத்தை அழிக்க முடியும். எது உயர்ந்ததோ அது தாழும் என்றால் எது தாழ்ந்ததோ அது உயரும் அல்லவா. பாண்டிய தேசம் உயர வேண்டும். மீன் கொடி எங்கும் பட்டொளி வீசி பறக்க வேண்டும்.

அது என் ஆசை. அது என் கனவு. அதுதானே உன்னுடைய ஆசையும் அல்லவா. நான் இருவரும் இணைந்து பணியாற்றுவோம். தனியாக சோழ தேசத்தில் இருக்க என்னால் முடியவில்லை, அங்கு என்னால் சிரிக்க முடியவில்லை, நான் சிரித்தபடி உன்னிடம் வருகிறேன். என்னை ஏற்றுக் கொள்.''

அவன் வாய் விட்டு சிரித்தான். ஒரு எகிறு எகிறி நெருப்புக்குள்ளே விழுந்தான். அவனிடமிருந்து பெரிய அலறல் புறப்பட்டது. அவன் சில வினாடிகளில் பஸ்பமானான். தீ எதனாலேயோ வேகமாக உள்ளிழுத்து அணையத் துவங்கியது. மரங்களெல்லாம் சாட்சியாக நின்றன.

ஒரு இனம் மற்ற இனத்தால் அழிவதை விட, ஒரு இனம் தன்னைத் தானே அழித்துக் கொள்வதுதான் அதிகமாக இருக்கிறது. தமிழ் தெரிந்த பாண்டியரும் தமிழ் தெரிந்த சோழரும் பரத கண்டத்தின் தென் பகுதியை ஆண்டு உச்ச நாகரீகம் தொட்டார்கள். அவர்களே அந்த நாகரீகத்தை சண்டையிட்டு போட்டி போட்டு அழித்தார்கள். அவர்கள் இருவரும் ஒற்றுமையாக இருந்திருந்தால் ஒருவேளை இந்த பரத கண்டத்தின் தென் பிரிவு வெகு நிச்சயமாய் உலகை ஆண்டிருக்கும்.

ஆனால் எதனாலேயோ இரண்டு தேசங்களும் எரிந்து நாலாபக்கமும் வலிமை அற்று சாம்பலாய் பரவி விட்டது. இது விதி, இது விதி, இது விதி.

(முற்றும்)

★ ★ ★

நான் உபயோகித்த புத்தகங்கள்

சோழர்கள் பாகம் 1
பாகம் 2 - திரு. கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி

இராஜேந்திர சோழன் - இராசராச தங்கமணி

இராஜேந்திர சோழரின் செய்திக் கோவை - தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

நாகை மாவட்ட தொல்லியல் கையேடு - நாகை மாவட்ட தொல்லியல் துறை

மேல்பாடி - முனைவர் ஸ்ரீ. ஸ்ரீதர், தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

எசாளம் வரலாற்றுப் புதையல் - சந்திரமூர்த்தி, M.A. கிருஷ்ணமூர்த்தி, M.A.

சோழர் வரலாறு - டாக்டர் மா. இராசமாணிக்கனார்

காலாண்டிதழ் கல்வெட்டு பல புத்தகங்கள் - தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

சோழர் சமுதாயம் - தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

கடல்வழி வணிகம் - நரசய்யா

சோழர் செப்பேடுகள் - 19 - நடன காசிநாதன்

இராஜேந்திரர் வெளியிட்ட எசாளம் செப்பேடுகள் - சா. கிருஷ்ணமூர்த்தி, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்

பழங்கால தமிழர் வாணிபம் - மயிலை சீனி. வேங்கடசாமி

வேதாரண்யம் - இரா. ப. கருணாகரன், தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

நெல்லை துறைமுகங்கள் - முத்தாலங் குறிச்சி, காமராசு

கடற் கொள்ளையர்கள் - ப. முருகானந்தம்

சோழ கங்கம்	-	சக்திஸ்ரீ (வானதி பதிப்பகம்)
கடாரம்	-	மாயா, வானதி பதிப்பகம்
சோழ மண்டலத்து வரலாற்று நாயகர்களின் சிற்பங்களும் ஓவியங்களும்	-	முனைவர் குடவாயில் பாலசுப்பிரமணியம், தஞ்சாவூர் பல்கலைக் கழகம்
மரக்காணம்	-	முனைவர் சீதாராம் குருமூர்த்தி, இ.ஆ.ப. தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
History of Ganga's	-	S.N. Raja Guru
தமிழக வரலாறும், பண்பாடும்	-	டாக்டர் மா. இராசமாணிக்கனார்
தஞ்சை பெரிய கோவில் சோழர் கால ஓவியங்கள்	-	டாக்டர் நாகசாமி
ஓவியப் பாவை	-	முனைவர் இரா. நாகசாமி தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
நாவாய்	-	நா. அதியமான் ஆ. துளசி இராஜேந்திரன் தமிழ்ப் பல்கலைக்கழகம்
திருப்புறம்பியம், காவிரிபூம் பட்டிணம், செம்பியன் மாதேவி தல வரலாறு	-	ஆராய்ச்சி பேரறிஞர் சதாசிவ பண்டாரத்தார்
சோழர் கால செப்பேடுகள்	-	டாக்டர் மு. இராஜேந்திரன்
சோழர் கால வரலாறு	-	பேராசிரியர் சி. கோவிந்த இராசனார் முனைவர் சி.கோ. தெய்வநாயகம்
சோழர் கால உற்பத்திமுறை	-	ஆய்வு வட்ட வெளியீடு
சோழர் காலத்து கோவிலும், சமூகமும்	-	வள்ளிபுரம் மகேஸ்வரன்
தென்னாட்டுப் போர்க்களங்கள்	-	பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை
தமிழ்நாட்டு வரலாறு	-	டாக்டர் ஏ. சுவாமிநாதன்

இராஜராஜ சோழன் - ச.ந. கண்ணன்

சோழர் சரித்திரம் - நா.மு. வேங்கடசாமி நாடார்

ஜம்பை ஓர் ஆய்வு - ஸ்ரீ. ஸ்ரீதர், இ.ஆ.ப.,

தஞ்சை பெருவுடையார் கல்வெட்டுகள் - டாக்டர் இரா. நாகசாமி

நெஞ்சை அள்ளும் தஞ்சை - நா. எத்திராஜ்

இராஜேந்திர விண்ணகர் - ஆர். திருமலை

வரலாறு விஜயாலய சோழீஸ் வரம் பற்றிய புத்தகம் - இரா. கலைக்கோவன்

பொய்யில் மாலை - டாக்டர் இரா. நாகசாமி

முதலாம் இராஜராஜ சோழன் - கா.தா. திருநாவுக்கரசு

சோழர் கால சமயம் - டாக்டர் ஆ. பத்மாவதி

நம் நாட்டு கப்பற் கலை நூற் களஞ்சியம் - சாத்தன்குளம் ஆர். இராகவன்

தமிழ்நாட்டு வரலாறு சோழ பெருவேந்தர் காலம் - தமிழ் வளர்ச்சி இயக்கம்

ஆய்வில் பூத்த மலர்கள் - அ. அப்துல் மஜீத்

ஆரூர் ஆழித்தேர் - திருவாரூர் தியாகராஜர் ஸ்வாமி வெளியீடு

இராஜேந்திர சோழன் அகழ் வைப்பகம் - தி.ஸ்ரீ. ஸ்ரீதர், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

குடந்தை சீதாராமன் அனுப்பிய கூகுள் தகவல்கள், வரைபடங்கள்.